Accn. No. 13428

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



ஸ்ரீ விஷ்ணுசித்த விஜயம்

இரண்டாமத்தியாயம் – முதல் பாகம்

(இரண்டாம் அத்தியாயம் — முதல் பாதம்)

[ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம் வெளியீடு]

இயற்றியவர் :-

ஸ்ரீ உ. வே. S. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
அட்வகேட்,
'ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்,
3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி 17.

ஸ்ரீ ரா. ஸ்ரீ. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் குடும்ப
தர்ம சொத்துக்களின் ஆதரவில் வெளியிடப்பெற்றது.

ட்ரஸ்டிகள் :-

S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், M.A.B.L., அட்வகேட்,
S. ராம ஐயங்கார், B.Sc.,B.L., அட்வகேட்.

விலை ரூ. 16.00] **[தபால் 2.00.**

ஸ்ரீநிவாஸம் பிரஸ், 3, புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620017.

http://acharya.org

முன்னுரை

ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனத்தில் சிறிதுசிறிதாக 33-வருடங்களாக வெளிவரும் விஷ்ணுசித்தவிஜயம் என்னும் மஹாக்ரந்தம் (1948) ஸர்வஜித் வருஷம் தை மாதத்தில் தொடங்கப்பெற்றது. இதுவரையில் இரண்டாயிரம் பக்கங்கள் வெளிவந்துள்ளது. மேலும் பல்லாயிரம் பக்கங்கள் வெளிவரவேண்டியுள்ளது. பெரியாழ்வார் பாண்டிய ஸதஸ்ஸில் பரதத்வநிர்ணயம் செய்ததை அடியொற்றி, இக்காலத்தில் உள்ளவர்களுக்குப் புரியும்படி எளிய இனிய தமிழ் உரை நடையில் ப்ரமாணங்களை விளக்கித் திருமாலின் பரத்துவத்தை நிலை நாட்டுவதாகையாலே, இதற்கு "விஷ்ணுசித்தவிஜயம்" என்னும் பெயர் கீர்த்திமூர்த்தியான எந்தையாரராம் ஸ்ரீ உ.வே. கி. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமியால் 33-வருடங்களுக்கு முன் சூட்டப்பெற்றது.

வைணவத்திற்காகத் தம் உடல், பொருள், ஆவி ஆகிய அனைத்தையும் பயன்படுத்திய அப்பெருந்தகை (சுமார் 500 பக்கமுள்ள) இந்நூலின் முதல் அத்தியாயத்தின் முதற் பகுதியைத் தாமே எழுதி அச்சிட்டு, விஜயவைகாசியில் திருநாட்டை அடைந்தபோது எஞ்சிய பகுதிகளை எழுதி அச்சிடுமாறு அடியேனை நியமித்தருளினார். அவ்வண்ணமே வேதவேதாந்தநிர்ணயம் எனும் முதலத்தியாயத்தின் இரண்டாம் பகுதி சுமார் 13-வருடங்களில் நிறைவுபடுத்தப்பெற்று பராபவ வைகுண்ட ஏகாதசியன்று வெளியிடப்பெற்றது. பதினாலு வருடங்களுக்குப்பின் 'ஸ்ம்ருதிநிர்ணயம்' என்னும் இப்பகுதி (இந்நூலின் இரண்டாம் அத்தியாயத்தின் முதல் பாதமாய் அமைந்தது) ரௌத்ரி வைகுண்ட ஏகாதசியான இன்று வெளியிடப்பெறுகிறது. இதில் இப்போது அச்சிடப்பெற்று நமக்குக் கிடைத்துள்ள எல்லா ஸ்ம்ருதிகளையும் ஆராய்ந்து, ஸ்ரீமந்நாராயணனே அவற்றில் பரம்பொருளாக நிலைநிறுத்தப் பட்டுள்ளான் என நிரூபிக்கப்பட்டுள்ளது.

http://acharya.org

இனி இவ்வத்தியாயத்தின் இரண்டாம் பாதத்தில் இதிஹாஸ ச்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தைக்கொண்டும், மூன்றாம் பாதத்தில் ஐந்தாம் வேதமான பாரதத்தைக்கொண்டும், நாலாம் பாதத்தில் பாரதசேஷமான ஹரிவம்சத்தைக் கொண்டும், மூன்றாம் அத்தியாயத்தின் நாலு பாதங்களில் முறையே ஸாத்விக ராஜஸ தாமஸ மஹாபுராணங்கள், உபபுராணங்கள் ஆகியவற்றைக் கொண்டும், நாலாம் அத்தியாயத்தில் முறையே விசிஷ்டாத்வைதி, த்வைதி, அத்வைதி, கவிகள் எனும் வைதிகர்களின் கிரந்தங்களைக்கொண்டும் நாராயண பரத்வத்தை நிலைநாட்டி இந்நூல் இனிதே நிறைவடையும்படி எம்பெருமான் திருவருள்புரிவாராக.

ஸநாதனதர்மத்தின் அடிப்படைகளான வேதவேதாந்தங்கள், ஸ்ம்ருதிகள், இதிஹாஸபுராணங்கள், வைதிகர்களுடைய நூல்கள் ஆகிய அனைத்தின் உட்பொருளையும் வெளியிடுவதாய், ஒரு தனி மனிதனால் ஒரு புருஷாயுஸ்ஸில் நிறைவு செய்ய அரிதான இந்த மஹாக்ரந்தத்தை, எந்தையாரைப் போலே அடியேனும் நிறைவுபடுத்த முடியாவிடினும், நிறைவு படுத்த வல்லவர்களையும் ப்ரயோஜக கர்த்தாவான அப்பரம புருஷனே தோற்றுவிப்பாராக.

ரௌத்ரி-ஸூ
வைகுண்ட ஏகாதசி
(18—12—80)

தாஸன்,
ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்,
'ஸ்ரீவைஷ்ணவ ஸுதர்சனம்' ஆசிரியர்.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஆழ்வாராசார்யர்களின் அருளிச்செயல்களுக்கு எளிய தமிழ்
விரிவுரைகளுடன் வெளிவரும் சிறந்த

—ஸ்ரீ வைஷ்ணவ மாதப்பத்திரிகை—

ஸ்ரீ வைஷ்ணவ ஸுதர்சனம்

ஆழ்வார்களுடைய திவ்யப் பிரபந்தங்களுக்குப் பெரியவாச்சான்பிள்ளை முதலான ஆசாரியர்கள் அருளிச்செய்த மணிப்ரவாளநடை வியாக்கியானங்களை எளிய தமிழ்நடை விவரணங்களோடு வெளியிடுவதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு இப்பத்திரிகை கடந்த முப்பத்துமூன்று வருடங்களாக நடைபெற்று வருகின்றது. தற்போது திருமாலை நாச்சியார்திருமொழி வியாக்கியானங்கள் விவரணத்தோடு தொடர்ந்து அச்சிடப்படுகின்றன. இது தவிர, ஸ்ரீமந்நாராயணனின் பரத்வத்தை விளக்கும் விஷ்ணுசித்தவிஜயம என்னும் கிரந்தமும், விரிவான கீதா வ்யாக்யானமும். ஆழ்வாராசார்யர்களின் சரித்ரத்தை விரிவாக விளக்கும் (தமிழ் விவரணத்தோடு கூடிய) பிரபந்நாம்ருதமும். ஸ்ரீபாஷ்யஸாரமான (தமிழ் விவரணத்தோடு கூடிய) சாரீரககாரிகாவளியும் விவரணத்தோடு கூடிய வார்த்தாமாலையும், அன்பர்களின் கேள்விகளுக்கு பதிலளிக்கும் ஸுதர்சனர்பதிலும், மற்றும் பல கட்டுரைகளும், கிரந்தங்களும் புத்தகமாக்கிக் கொள்ளலாம்படி தனித்தனி பாரங்களாகத் தொடர்ந்து வருகின்றன. விளம்பரமேயில்லாமல் நல்ல காகிதத்தில் ஒவ்வொரு மாதமும் சுமார் எழுபது பக்கங்களுக்குக் குறையாமல் தரமான விஷயங்களைக்கொண்டு வெளிவருவது இப்பத்திரிகையின் தனிச்சிறப்பாகும். இப்பத்திரிகையில் வெளிவந்த நூல்களில் தற்போது கிடைப்பவை அடுத்துள்ள பக்கங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்:

ஸ்ரீ. S. கிருஷ்ணஸ்வாமி ஐய்யங்கார், அட்வகேட்,

3 புத்தூர் அக்ரஹாரம், திருச்சி-620 017.

வருடச்சந்தா ரூ. 12.

தனிப்பிரதி ரூ. 1. —●— ஆயுள் சந்தா ரூ 100.

ஸர்வஜித் மார்கழி 28-உ (12-1-1948) முதல்
தொடர்ந்து வெளிவருகிறது.

பழைய பிரதிகள் கிடைக்கமாட்டா.

http://acharya.org

ஆழ்வார் அருளிச்செயல்களுக்குப் பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்கள்

(பதவுரை அரும்பதவுரை ப்ரமாணத்திரட்டுகளோடு கூடியவை)

க்ரந்தங்கள்	விலை	தபால்
1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	1-50	-40
2. முதல் திருவந்தாதி வ்யாக்யானம்	1-88	-50
3. திருப்பள்ளியெழுச்சி வ்யாக்யானம்	1-00	-20
4. பகவத்விஷயம் *I* (முதலிரண்டு திருவாய்மொழிகள்)	25-00	5.00
டை *II* பாகம் (முதற்பத்து 3-10 திருவாய்மொழிகள்)	28-00	5.50
டை *III* பாகம் (இரண்டாம்பத்து முழுவதும்)	35-00	6.50

ஆழ்வார்களின் அருளிச்செயல்களுக்கு எளியநடை விவரணத்துடன் கூடிய பூர்வாசார்யர்களின் வ்யாக்யானங்கள்

1 சிறியதிருமடல் வ்யாக்யானம்	3-00	65
2. பெரியதிருமடல் வ்யாக்யானம்	5-00	-75
3. இரண்டாந்திருவந்தாதி வ்யாக்யானம்	4-00	-85
4. மூன்றாந்திருவந்தாதி வ்யாக்யானம்	4-00	-85
5. நான்முகன் திருவந்தாதி வ்யாக்யானம்	5-00	-85
6. திருவெழுகூற்றிருக்கை வ்யாக்யானம்	1-00	-35

அருளிச்செயல்களுக்கு எளியநடை விவரணம் மாத்திரம்

1. திருப்பல்லாண்டு வ்யாக்யானம்	2-00	-50
2. திருப்பாவை வ்யாக்யானம்	4-00	-75

நமது மற்ற வெளியீடுகள்

1 ஸ்தோத்ரரத்நசதுஃச்லோகீ ஜிதந்தே வ்யாக்யானங்கள்	8-00	1-00
2. சதுஃச்லோகீ வ்யாக்யானம் [நாயனாராச்சான்பிள்ளை]	2-50	.50
3. கத்ய வ்யாக்யானங்கள்	4-50	-50
4. ஸ்ரீராமாயண தனிச்லோகம் [விவரணத்துடன்] *part I*	3-50	-75
டை இரண்டாம் பாகம் [விவரணத்துடன்]	7-00	1-10
5. பாசுரப்படி ராமாயணம்	0-25	—
6. முமுக்ஷுப்படி வ்யாக்யானம்	3-00	-65
7. ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவம் முதலியவை	12-00	1-50
8. ஸ்ரீவசநபூஷண வ்யாக்யானம் 4-அரும்பதவுரைகளுடன் முதல் பாகம்	6-00	1-00
9. சாரீரகசாரிகாவளீ [இரண்டாம் பாகம்]	5-00	-75
10. கைசிகபுராணம்	1-00	-25
11. உபயவேதாந்த ஐககண்ட்யம்	2-00	-50
12. வடுகநம்பிஅருளிய யதிராஜவைபவம் [விவரணத்துடன்]	1-00	.20
13. நாலாயிர திவ்யப்ரபந்தம் [முதலாயிரம்]	7-00	1-00
,, [இரண்டாமாயிரம்]	8.00	1.00
,, [மூன்று நாலாமாயிரம்]	12-00	1-50

P. T. O.

http://acharya.org

14. திருக்குறள் ஸம்ஸ்க்ருதஶ்லோக மொழிபெயர்ப்புடன்	10-00	2.00
15. [போதாயந] ஸந்த்யாவந்தநம் பதவுரையுடன்	0-50	-20
16. [போதாயந] உபாகர்மவிதி	0-50	-20
17. அருளிச்செயல் ரஹஸ்யம் [வரதாசார்ய ஸ்வாமி தொகுத்த பூ4ஷணத்துடன்]	2.50	-65
18. புருஷஸூக்த வ்யாக்யானம்	1-50	-40
19. நாராயணஸூக்த வ்யாக்யானம்	0.75	-25
20. ஸ்ரீஸூக்த வ்யாக்யானம்	2-00	-40
21. பூ4நீளா விஷ்ணுஸூக்த வ்யாக்யானங்கள்	1-75	-40
22. தே3ஹளீஶ ஸுப்ரப4ாதம்	0-25	-15
23. சாதிமத ஆராய்ச்சி [முதல்பாகம்]	4-00	-75
24. ஸ்ரீலக்ஷ்மீ ந்ருஸிம்ஹஸ்தவம்	0-50	-20
25. விஷ்ணுசித்தவிஜயம் [முதல் பாகம்]	5-00	1-00
ஷை [இரண்டாம் பாகம்]	7-00	1-50
ஷை [இரண்டாமத்தியாயம்-முதல்பாகம்]	16.00	2.00
26. ஸாத்விகவிஜய ஸர்வஸ்வம்	0-75	-25
27. ஸந்த்4யாவந்த3நப4ாஷ்யம்	3-00	-75
28. மகரநெடுங்குழைக்காதர் பாமாலையந்தாதி	1-50	-40
29. ஸ்ரீகேசவமணிமாலை	0-75	-25
30. மாமுனிகள் அறுநூறாவது ஆண்டு மலர்	1-50	-40
31. சங்கரரும் வைணவமும்	0-75	-25
32. ஸித்3தோ4பாய விஜயம் & [ஸ்ரீரங்கராஜ விஜயம்]	3-00	-75
33. திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி மூலம் மட்டும்	0-25	-10
34. க3த்3யத்ரயம் மூலம் மட்டும்	0-25	-10
35. திருவாய்மொழி நூற்றந்தாதி—மூலம் மட்டும்	0-25	.10
36. கீ3தா வ்யாக்2யானம் முதல்பாகம் (ஆறு அத்தியாயம்)	10-00	1-50
ஷை இரண்டாவது பாகம் (7,8 அத்தியாயம்)	8-00	1.50
37. அக்3நிஹோத்ரியும் வைணவமும்	2-50	-65
38. காட்டுமன்னார்கோவில் வீரநாராயணப்பெருமாள், நாதமுனிகள், ஆளவந்தார் வைபவம்	0-50	-20
39. சோலைமலைக்குறவஞ்சி	3-50	.75
40. ஸ்ரீவைஷ்ணவ மகாநாடு மலர்	1-00	-25
41. ஸுதர்சனர் பதில் (மூன்று ஶதகங்கள்)	6-00	1-00
42. What is Visishtadvaita System of Philosophy? (English)	1-00	-30
43. பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்திரம்	3-00	-50
44. பொன்விழா மலர் (ஆழ்வாராசார்யர்கள் வைபவமடங்கியது)	8-00	1-00
45. இராமலிங்க ப்ரதிஷ்டை	0-50	
46. ஆண்டாள் சந்திரகலாமாலை	2-00	-40
47. யதீந்த்ரமததீபிகை—ஸந்மதகாரிகாவளீ	7-00	1.00

கிடைக்குமிடம் :—

S. கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், அட்வகேட்,
3, புத்தூர் அக்ரஹாரம்,
திருச்சி-620 017.

http://acharya.org

ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயம் — விஷயஸூசிகை

(இரண்டாமத்தியாயம்—முதற்பாத₃ம்) பக்கம்

அவதாரிகை	1—8
ஸ்மிருதிவிசாரம்	9—16
மநுஸ்மிருதி நிர்ணயம்	17—48
அத்ரிஸ்மிருதி நிர்ணயம்	49—50
விஷ்ணுஸ்மிருதிவிநிர்ணயம்	50—82
ஹாரீதஸ்மிருதிநிஷ்கர்ஷம்	82—90
ஸங்க₂ஸ்மிருதி நிர்ணயம்	91—95
ஸங்க₂லிகி₂தஸ்மிருதி நிர்ணயம்	96
த₃க்ஷஸ்மிருதி தாத்பர்யம்	97—102
ஶாதாதபஸ்மிருதி நிர்ணயம்	103—106
வஸிஷ்ட₂ஸ்மிருதி விநிர்ணயம்	107
ஔஶநஸஸ்மிருதியில் ஶிவாக₃மாபகர்ஷமும் வைஷ்ணவாக₃மோத்கர்ஷமும்	108—109
ப்₃ருஹஸ்பதிஸ்மிருதி நிர்ணயம்	109—114
ஶௌநகஸ்மிருதி நிர்ணயம்	114—139
யோக₃யாஜ்ஞவல்க்யஸ்மிருதி நிர்ணயம்	140—152
வ்ருத்₃த₄ஹாரீதஸ்மிருதி நிர்ணயம்	153—476
ஶாண்டி₃ல்யஸ்மிருதி நிர்ணயம்	476—532
பராஶரவிஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரம்	533—668
லகு₄வ்யாஸஸம்ஹிதா நிர்ணயம்	669—673
வ்ருத்₃த₄கௌ₃தமஸ்மிருதி நிர்ணயம்	673—702
அருணஸ்மிருதி நிர்ணயம்	702—703
வஸிஷ்ட₂ஸ்மிருதி நிர்ணயம்	703—746
ஸ்ரீப்₃ருஹத்₃யோக₃யாஜ்ஞவல்க்யஸ்மிருதிநிர்ணயம்	747—794
ப்₃ருஹந்மோக்ஷயாஜ்ஞவல்கஸம்ஹிதாநிர்ணயம்	794—800
வ்யாக்₄ரபாத₃ஸ்மிருதி நிர்ணயம்	800—801
கபிலஸ்மிருதி நிர்ணயம்	801—805
தா₃ல்ப்₄யஸ்மிருதிவிநிர்ணயம்	806—811
விஶ்வாமித்ரஸ்மிருதி நிர்ணயம்	811—814
நாராயணஸ்மிருதி நிர்ணயம்	814—815
கண்வஸ்மிருதி நிர்ணயம்	815—822
தா₃ல்ப்₄யஸ்மிருதியில் த்ரித₃ண்ட₃ம்	822
ஆங்கீ₃ரஸஸ்மிருதி நிர்ணயம்	822—825
ப₄ரத்₃வாஜஸ்மிருதி நிர்ணயம்	825—826
முடிவுரை	827—828

http://acharya.org

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீவிஷ்ணுசித்த விஜயம்

இரண்டாமத்தியாயம்
ஸ்ம்ருதீதிஹாஸ நிர்ணயம்
முதற்பாதம் - ஸ்ம்ருதி நிர்ணயம்

[ஸுதர்சனம் ஆசிரியர் ஸ்ரீ. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார்]

அவதாரிகை

ஸ்ரீவிஷ்ணுசித்த விஜயம் என்னும் பகவத்பரத்வத்தை நிலை நாட்டும் கிரந்தத்தில், வேதவேதாந்த நிர்ணயமாகிய முதலத்தியாயத்தில் பூர்வபாகம் என்றும், உத்தரபாகம் (உபனிஷத்துக்கள்) என்றும் பெயர்பெற்ற இருபகுதிகளையுடைய ஶ்ருதியில் பரம் பொருளாகச் சொல்லப்படுபவன் நாராயணனே என்று பரபக்ஷ நிரஸன பூர்வகமாகவும், எதிரிடமுற்பட்டவர்கள் வாய்திறக்க முடியாதபடியும் நிலைநாட்டப்பட்டது. அதன் அனுபந்தத்தில், உபனிஷத்துக்கள் நூற்றெட்டு என்னும் கற்பனையின் பொய்ம்மை நிரூபிக்கப்பட்டு, தற்போது வழங்குகின்றவற்றில் உண்மையான உபனிஷத்துக்கள் யாவையென்றும் காட்டப்பட்டது. இதுவே போதுமாயிருக்க, மற்ற மூன்று அத்தியாயங்கள் எதற்காக என்னும் ஐயம் எழக்கூடும். முதலில் இவ்வையத்தைத் தெளிவிப்போம்.

"அநந்தா வை வேதா:" என்று வேதத்திலேயே சொல்லிய படியே வேதங்கள் அளவிடமுடியாதவை. அவ்வேதக்கடலின் ஒரு சில திவலைகளே இப்போது வழங்கிவரும் நாலு வேதங்களும், உபனிஷத்துக்களும். அதனாலேயே இப்போது நாம் காணும் இவ்வேதங்களிலும், உபனிஷத்துக்களிலும் அநந்தனான பரம புருஷனுடைய ஸ்வரூபரூபகுணவிபூதிகளில் பல விஷயங்கள் மந்த

http://acharya.org

மதிகளான நமக்குப் புரியும்படியாக விளக்கப்பட்டிருக்கவில்லை. உதா3ஹரணமாகப் பரமபத3நிலயனான பரமபுருஷன் ஶங்க2சக்ராதி3களான பஞ்சாயுத4ங்களையும், ஸ்ரீகௌஸ்துப4ம் முதலான பல பல திவ்யாப4ரணங்களையும், அநந்தக3ருட4விஷ்வக்ஸேநாதி3 பரிஜனங்களையும உடையவனாயிருக்கிறான என்பதும், ராமகிருஷ்ணாத்3யவதாரங்களில் அவன செய்த திவ்யசேஷ்டிதங்களும் வேத3வேதா3ந்தங்களில் தெளிவாக விளக்கப்பட்டிருப்பதைக் காண்கின்றிலோம். ஆகையால் இக்குறையைத் தீர்க்கவேண்டியது அவசியமாயிருக்கிறது. இதை எப்படித் தீர்ப்பது எனில்: நாம் காணாத வேதவேதா3ந்தபா4க3ங்களைத் தம் ஞானக்கண்ணாலே கண்ட மஹர்ஷிகள், அந்த வேத3வேதா3ந்த பா4க3ங்களில் சொல்லப்பட்ட அர்த்தங்களையும் பெய்து இயற்றியிருக்கும் ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களைக் கொண்டே இக்குறையைத் தீர்த்துக்கொள்ளவேண்டியுள்ளது. இப்படி வழக்கொழிந்த மூலஶ்ருதியைத் தம் தவவலிமையால் ஸ்மரித்து, அவற்றில் சொல்லப்பெற்ற அர்த்தங்களையும் பெய்து இயற்றப்பெற்றவையாகையாலேயே ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்கள் அனைத்துமே ஸ்ம்ருதிகள் எனப்பெயர்பெற்றன.

இங்கு, ஒரு விஷயத்தை முக்கியமாகக் குறிக்கொள்ளவேண்டும். ஸர்வேஶ்வரனையுள்ளிட்ட எந்தச் சேதநனாலும் இயற்றப்படாததாய், அதனாலேயே அபௌருஷேயமென்றும், நித்யமென்றும் புகழ்பெற்றதான வேதம், இப்படி அபௌருஷேயமாயிருக்கும் காரணத்தாலேயே இருள் துயக்கு மயக்கு மறப்புக்களுக்கு இடமில்லாததாய், ஸ்வத: (இயற்கையிலேயே) பிரமாணமாயிருக்கிறது. ஸ்ம்ருதிகளோவெனில், ஒரு புருஷனால் இயற்றப்பெற்றவையாகையாலே இருள் துயக்கு மயக்கு மறப்புக்களுக்கு இடமேற்படக்கூடியவை. ஸர்வேஶ்வரனே இயற்றிய ஸ்ம்ருதியானாலும், புத்தாவதாரம் முதலானவற்றிற்போலே அஸுரராக்ஷஸர்களை மயக்கும் வார்த்தையாயிருப்பதற்கு இடமுண்டு. ஆகையாலே அவை ஸ்வத: (இயற்கையிலேயே) பிரமாணமாயில்லை. ஒரு மூலஶ்ருதியை அனுமானம் செய்வதன் மூலமே ப்ரமாணமாகின்றன. அதனாலேயே ஸ்ம்ருதிகள் அனுமானமென்றும் வழங்கப்படுகின்றன. இக்காரணத்தாலேயே, ‘ப்ரத்யக்ஷமாகக் காணப்படும் தெளிவான பொருளையுடைய ஶ்ருதிக்கு நேரே முரண்பட்ட ஸ்ம்ருதியானது தள்ளத்தக்கதே. அதைக்கொண்டு, மூலமான வேதவாக்யத்தை அனுமானம் செய்யலாகாது’ என்று மீமாம்ஸகர்கள் அறுதியிட்டனர்.

http://acharya.org

''விரோதே$_4$ த்வநபேக்ஷம ஸ்யாத; அஸதி ஹி அநுமாநம்

[ஜைமிநிஸூத்ரம் 1-3-3]

[வேததேதாடு விரோதிக்குமாகில, (ஸ்மருதி) கைவிடத்தகுந்தே; விரோதமிலலாவிடிலனறே மூலவேதத்தை அனுமானம் செயவது] எனறு பூர்வமீமாமஸாஸூத்ரகாரரான ஜைமிநி மஹர்ஷி உத்கோஷித்தார். உத்தரமீமாம்ஸையான ப்ரஹமஸூத்ரத்தின இரண்டாவது அததியாயம முதல் அதிகரணமான ஸ்ம்ருதயதி,கரணத்திலும இவ்விஷயம வலியுறுத்தப்படடது ஆக, ''பரத்யக்ஷ ஶ்ருதிககு நேரே விருத்தமாயிராத ஸ்மருதிகளைக் கொண்டு. பரத்யக்ஷஶ்ருதிகளில தெளிவாயிராத அம்ஶஙகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும்'' என்றதாயிற்று. இவ்வர்த்தங்கள், ''இதிஹாஸ புராணம பஞ்சமம்'' [ப$_3$ருஹ 4-4] [இதிஹாஸபுராணஙகள ஐந்தாம வேதமாகும்]

''ஶ்ருதி: ஸ்மருதிர் மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க$_4$ய வர்த்ததே।
ஆஜ்ஞாசசே$_2$தீ$_3$ மம த்$_3$ரோஹீ மத$_3$ப$_4$க்தோऽபி ந வைஷ்ணவ ||

[விஷ்ணுதாமம 6-31]

[வேதமும், ஸ்மருதிகளும் என் ஆணைகளே; எவன இவற்றை மீறி நடககிறானே, அவன் என ஆணையை மீறி நடக்கையால் எனககு துரோகம செய்கிறான்; அவன் என பக்தனாயிருந்தபோதிலும வைஷ்ணவனாகமாட்டான.]

''இதிஹாஸபுராணாப்$_4$யாம் வேத$_3$ம் ஸமுபப்$_3$ரும்ஹயேத்।
பி$_3$பே$_4$தயல்பஶ்ருதாத்$_3$வேத$_3$: மாமயம் ப்ரதரிஷ்யதி||''

[பாரதம்; ப்ருஹஸ்பதிஸ்மருதி]

[இதிஹாஸபுராணங்களைக்கொண்டு வேதத்தை விளக்கவேண்டும; வேதபாகங்களில் சிலவற்றை அத்யயனம் செய்துவிட்டு, தான அத்யயனம செய்யாத மற்ற வேதபாகங்களின் பொருளைச்சொல்லும் இதிஹாஸபுராணங்களைக் கேளாதவனைக்கண்டு 'இவன என்னைக் கலககிவிடுவானே' என்று வேதம பயப்படுகிறது.]

''ஶ்ருதிஸ்ம்ருதிவிரோதே$_4$ து ஶ்ருதிரேவ க$_3$ரீயஸீ''

[ஜாபாலஸ்ம்ருதி]

[ஶ்ருதிக்கும், ஸ்ம்ருதிக்கும முரண்பாடு ஏற்படடால் ஶ்ருதியே பலமுள்ளது.]

''ஶ்ருதயா ஸஹ விரோதே$_4$ து ப$_3$ாத்$_4$யதே விஷயம் விநா''

[ப$_4$விஷ்யத்புராணம]

http://acharya.org

[ஶ்ருதியோடு விரோதம் ஏற்பட்டால், ஸ்ம்ருதியானது பொருளற்றதாகித் தள்ளப்படும்.] என்று சாஸ்திரங்களில் கோஷிக்கப்பட்டன. இக்காரணத்தாலேயே வைதிகர்கள் அனைவரும், மநு, அத்ரி, விஷ்ணு, ஹாரீதர், யாஜ்ஞவல்க்யர், பராசரர் முதலான மஹர்ஷிகள் வேதத்தை ஓட்டியியற்றிய ஸ்ம்ருதிகளையும், ஶ்ரீராமாயண மஹாபாரதங்களாகிற இதிஹாஸங்களையும், புராணங்களில் ஸாத்விகப்பகுதிகளையும் ஆதரிக்கிறார்கள்; கபிலர், கணாதர், அக்ஷபாதர் முதலானோர் இயற்றிய வேதவிருத்தமான ஸ்ம்ருதிகளையும், புராணங்களில் ராஜஸதாமஸப் பகுதிகளையும் அநாதரிக்கிறார்கள். வேதத்தை உபப்ரும்ஹணம் செய்வதற்கு ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களில் ஏதேனும் ஒன்று போராதோ? மூன்றும் வேண்டுமோ? என்னில்: வேதமானது பகவானுக்கு ஆராதனமான கர்மங்களைச் சொல்லும் பூர்வபாகமென்றும், ஆராதிக்கப்படும் அவனைச் சொல்லும் உத்தரபாகமாகிற உபநிஷத்துக்களென்றும் இருவகைப்பட்டிருக்கிறது. வேதத்தின் இவ்விருபகுதிகளையும்

"ப்ராயேண பூர்வபாகார்த்தபூரணம் தர்மஶாஸ்த்ரத:।
இதிஹாஸபுராணாப்யாம் வேதாந்தார்த்த: ப்ரகாஶ்யதே ॥"

[பெரும்பாலும் தர்மஶாஸ்திரங்களைக்கொண்டு வேதத்தின் பூர்வபாகத்தில் தெளிவாயிராத அர்த்தங்கள் தெளிவுபடுத்தப்படுகின்றன. உத்தரபாகமான வேதாந்தங்களின் அர்த்தம் இதிஹாஸ புராணங்களைக்கொண்டு தெளிவுபடுத்தப்படுகின்றது.] என்கிறபடியே (முறையே) ஸ்ம்ருதிகளும், இதிஹாஸபுராணங்களும் விவரிக்கிறபடியால் இவையனைத்தும் வேண்டியிருக்கிறது. உத்தரபாகத்தை விவரிக்க இதிஹாஸபுராணங்கள் இரண்டும் வேணடுமோ? ஒன்று போராதா என்னில்: இரண்டிலும் ஒவ்வொரு குறையிருக்கையாலும், ஒன்றிலுள்ள குறை மற்றொன்றிலில்லாமையாலும் இரண்டும வேண்டும். அதாவது:—

"ஸங்கீர்ணாஸ்தாமஸாஶ்சைவ ராஜஸாஸ ஸாத்விகாஸ ததா।
கல்பாஶ்சதுர்விதா: ப்ரோக்தா ப்ரஹ்மணோ திவஸாத்யயே ॥
யஸ்மிந் கல்பே து யத் ப்ரோக்தம் புராணம் ப்ரஹ்மணா புரா।
தஸ்ய தஸ்ய து மாஹாத்ம்யம் தத்ஸ்வரூபேண வர்ண்யதே ॥
அக்நே: ஶிவஸ்ய மாஹாத்ம்யம் தாமஸேஷு ப்ரகீர்த்யதே।
ராஜஸேஷு ச கல்பேஷு அதிகம் ப்ரஹ்மணோ விது: ॥

ஸங்கீர்ணேஷு ஸரஸ்வத்யா: பித்ரூணாஞ்ச நிகத்யதே ।
ஸாத்விகேஷ்வத கல்பேஷு மாஹாத்ம்யமதிகம் ஹரே: ॥
தேஷ்வேவ யோகஸம்ஸித்தா கமிஷ்யந்தி பராம கதிம் ॥''
[மாதஸ்யம்290]

[பிரமனுக்கு ஒவ்வொரு நாள் முடிந்தவுடனும் ஸங்கீர்ணங்கள், தாமஸங்கள, ராஜஸங்கள், ஸாத்விகங்கள என்று நான்குவிதமான கல்ப(கால)ங்கள் சொல்லப்படுகின்றன. ஆதிகாலத்தில் எநதக் கல்பத்தில் எந்தப் புராணம் பிரமனால் உபதேசிக்கப்பட்டதோ, அந்தப்புராணததின்மாஹாத்ம்யம் அநதக் கலபத்தின ஸ்வரூபத்தை யொட்டிச் சொல்லப்படுகிறது. அகனியுடையவும், சிவனுடையவும் பெருமை தாமஸகல்பங்களிலே சொல்லப்பட்டது. ராஜஸகல்பஙகளில் பிரமனுடைய பெருமை சொல்லப்பட்டதாக (அறிவாளிகள) அறிகின்றனர்; ஸங்கீர்ண(மிச்ர) கல்பஙகளில் ஸரஸ்வதிக்கும் பித்ருக்களுக்கும பெருமை சொல்லப்படுகிறது. ஸாத்விககல்பஙகளில் பகவான ஹரிககு அதிகமான பெருமை சொல்லப்படுகிறது. அவற்றைப்பற்றிநின்றே யோகிகள் பரமபதமடைகினறனர்.] என்று மாதஸ்யபுராணத்திலும,

''நாத்ரியேத புராணேஷு ராஜஸாந் தாமஸாம்ஸ்ததா ।
அநீசாநாம் பரேசத்வம் வ்ருதா யத்ரோபவர்ண்யதே ॥''

[ராஜஸதாமஸ புராணங்களை ஆதரிக்கக்கூடாது; ஏனெனில்; ஈச்வரரல்லாத ப்ரஹ்மருதராதிகளை வீணாக அவற்றில் பரமாத்மாவாகச் சொலலப்படுகிறதனறோ] என்று ஸமருதியிலும் சொன்னபடியே புராணஙகளில் பெரும்பகுதி ராஜஸதாமஸஙகளாயிருக்கையாகிற குறை புராணஙகளுககு உண்டு. இக்குறை இதிஹாஸங்களுக்கு இலலை. கதைகளையும், (ஸாமாந்ய) தர்மார்த்தகாம புருஷார்த்தங்களையும் விரிவாகச்சொல்லி, அவற்றினிடையே ஒரு சில இடஙகளிலேயே பரமதத்துவமான பகவத்ஸ்வரூபத்தையும், பரமஹிதமான பக்திப்ரபத்திகளையும், பரமபுருஷார்த்தமான மோக்ஷத்தையும் தெளிவுபடுத்துகையாலே, பரமதத்வஹித புருஷார்த்தஙகளை ப்ரதாநப்ரமேயமாகக் கொண்டிராமலிருக்கையாகிற குறை இதிஹாஸங்களுக்கு உணடு. பரமதததவஹித புருஷார்ததஙகளையே ப்ரதாநப்ரமேயமாகக்கொண்ட புராணங்களுக்கு இக்குறையில்லை. ஆகையாலே வேதாந்தார்த்தததை விளக்க இரண்டும வேணடும். இப்படி இரண்டும் வேண்டுமாயினும் இவ்

http://acharya.org

விரண்டினுள்ளும், பரிக்ரஹாதிசயம் (சாஸ்திரங்களாலும் சான்றோர்களாலும் விசேஷமாகக் கொண்டாடப்படுகை), நடுநிலைமை, இயற்றியவர்கள் பரமாப்தர்களாயிருக்கை முதலான பல காரணங்களாலே இதிஹாஸங்கள் புராணங்களைக் காட்டிலும் ப்ரபலமாகவுமிருக்கின்றன. இவ்வர்த்தங்களையே "வேதார்த்தமறுதியிடுவது ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களாலே, ஸ்ம்ருதியாலே பூர்வபாகத்தில் அர்த்தம் அறுதியிடக்கடவது; மற்றையிரண்டாலும் உத்தரபாகத்தில் அர்த்தம அறுதியிடக்கடவது; இவையிரண்டிலும் வைத்துக்கொண்டு இதிஹாஸம் ப்ரபலம். அத்தாலே அது முற்பட்டது" என்று ஸ்ரீவசநபூஷணத்தின் தொடக்கத்தில் பிள்ளைலோகாசார்யரும், அதன் வியாக்கியானத்தில் மணவாளமாமுனிகளும் தெளிவாக அருளிச்செய்தனர்.

வேதத்தின் பூர்வபாகத்தை விவரிக்கவந்த ஸ்ம்ருதிகளில் பெரும்பாலும் பகவதாராதனமான கர்மங்களைப் பற்றியே பேசியிருந்தாலும், ஆராதிக்கப்படும் பகவத்ஸ்வரூபத்தைப்பற்றியும் ஆங்காங்கு பேசியிருக்கிறதாகையாலே, பகவத் பரத்வத்தை நிலைநாட்டவந்த விஷ்ணுசித்தவிஜயமெனனும் இந்நூலில் இவ்வத்தியாயத்தின் முதல் பாதத்தில் ஸ்ம்ருதிகளின நிர்ணயம் விவரிக்கபபடுகிறது. மேல் பாதங்களில், உத்தரபாகத்தை விவரிக்கும் இதிஹாஸ புராணங்களுக்குள் ப்ரபலமான இதிஹாஸங்களின நிர்ணயம் காட்டப்படும். அவ்விதிஹாஸங்களுள் ஸ்ரேஷ்டமான ஸ்ரீராமாயணத்தின் நிர்ணயம இரண்டாம்பாதத்திலும், மற்ற இதிஹாஸமான மஹாபாரதத்தின நிர்ணயம் மூன்றும்பாதத்திலும மஹாபாரத சேஷமான ஹரிவமசத்தின் நிர்ணயம் கடைசிபாதத்திலும் காட்டப்படும், மூன்றுமத்தியாயத்தின் நான்கு பாதங்களிலும் இதிஹாஸங்களுக்கு அடுத்தபடி ப்ரமாணமான புராணங்களின நிர்ணயம் காட்டப்படும். அவற்றிற்குள்ளும்,

"வைஷ்ணவம் நாரதீயஞ்ச ததா பாகவதம் சுபம்।
காருடஞ்ச ததா பாத்மம் வாராஹம் சுபதர்சநே।
ஸாத்விகாநி புராணாநி விஜ்ஞேயாநி சுபாநி வை॥"
[பாத்ம-உத்தர 263-83]

[(1) வைஷ்ணவம், (2) நாரதீயம், (3) பாகவதம் (4) காருடம் (5) பாத்மம (6) வாராஹம் என்னும் ஆறு அழகிய புராணங்களும ஸாத்விக புராணங்களாகையாலே மோக்ஷமளிப்பவை.] முதலான ப்ரமாணங்களிற் சொல்லியபடியே ஸத்வகுணப்ரதானங்களாகையாலே முழுவதும் ஆதரிக்கத்தக்க ஆறு புராணங்களின் நிர்ணயம் முதற்பாதத்திலும்,

http://acharya.org

"ப்₃ரஹ்மாண்ட₃ம் ப்₃ரஹ்மவைவர்த்தம் மார்க்கண்டேயம் ததை₂வ ச |
ப₄விஷ்யம் வாமநம் ப₃ராஹ்மம் ராஜஸாநி நிபோ₃த₄ மே ||"
[பாத்ம-உத்தர 263-84]

[(1) ப்ரஹ்மாண்டம் (2) ப்ரஹ்மவைவர்த்தம் (3) மார்க்கண்டே₃யம (4) பவிஷ்யம் (5) வாமனம (6) ப₃ராஹ்மம என்னும ஆறு புராணங்களும ராஜஸங்களென்று அறிவாயாக] முதலான ப்ரமாணங்களிற் சொல்லியபடியே ரஜோகுணப்ரத₄ானமான ஆறு புராணங்களின நிர்ணயம் இரண்டாம் பாதத்திலும,

"மாத்ஸ்யம் கௌர்மம் ததா₂ லைங்க₃ம் சைவம் ஸ்காந்த₃ம் ததை₂வ ச |
ஆக்₃நேயஞ்ச ஷடே₃தாநி தாமஸாநி நிபோ₃த₄ மே ||"
[பாத்ம-உத்தர 263-81]

[(1)மாத்யஸ்யம் (2)கௌாமம் (3) லைங்கம் (4) சைவம் (5) ஸ்காந்த₃ம் (6) ஆக்₃நேயம் என்னும் ஆறு புராணங்களையும் தாமஸ புரணங்களாக அறிவாயாக] முதலான பரமாணஙகளிற் சொல்லியபடியே தமோகு₃ணப்ரத₄ாநமான தாமஸபுராணங்களின நிர்ணயம் மூனறும் பாதத்திலும காட்டப்படும.

"ஸாத்விகா மோக்ஷதா₃: ப்ரோக்தா ராஜஸா: ஸ்வர்க்₃க₃தா: ஶுபா₄: |
ததை₂வ தாமஸா தே₃வி நிரயப்ராப்திஹேதவ: ||"
[பாத்ம-உத்தர 263-85]

[ஸாத்விக புராணங்கள மோக்ஷத்தையும், ராஜஸ புராணங்கள ஸ்வர்க்கத்தையும், தாமஸ புராணங்கள் நரகத்தையும அளிக்கும்.] என்று இமமூவகைப் புராணஙகளின பலமும் சொலலபபட்டது. ருத்₃ராதி₃பக்தர்கள் அந்தந்த தெய்வங்களிடமே ஈடுபடுவதற்காக அநதந்த தேவாந்தரஙகளுககுப் பெரும்பாலும் பரத்வஞ் சொல்லிய போதிலும், இந்த ராஜஸ தாமஸ புராணஙகளிலும, உண்மையை அடியோடு மறைக்கமுடியாமல், ஆங்காங்கு நாராயணபரத்வமே கோஷிக்கப்பட்டிருக்கிறது என்னும் பரமார்த்தம் இவ்விருபாதங்களிலும் விளககப்படும. இப்படிப் பதினெட்டு மஹாபுராணங்களின் நிர்ணயத்தையும் முதல மூன்று பாதங்களிலும் காட்டியபின்பு, பரிக்₃ரஹாதிஶயமினமை முதலானவற்றுலே மஹாபுராணங்களைக் காட்டிலும் து₃ர்ப்ப₃லமான உபபுராணங்களின் நிர்ணயம் நாலாவது (கடைசிப்) பாதத்தில காட்டப்படும்.

இப்படி மூன்று அத்தியாயங்களாலே ஶ்ருதிஸ்ம்ருதீதிஹாஸ புராண நிர்ணயங்களைக் காட்டியபின்பு. வைதிகநிர்ணயமாகிற

http://acharya.org

நாலாவது அத்தியாயம் எதற்கெனில்: "ஶ்ருதி: ஸ்ம்ருதி: ஸதா₃சார:" [யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி 1-7] முதலான ப்ரமாணங்களில், ஶ்ருதி ஸ்ம்ருதிகளுக்கு அடுத்தபடியாக அந்த ஶ்ருதிஸ்ம்ருதிகளை அறிந்த நல்லோர்களின் அனுஷ்டானமும் ப்ரமாணமாக எடுக்கப்படுகிறது. அந்த ஶ்ருதிஸ்ம்ருதிகளும், "ப்₃ரஹ்மவாதி₃நோ வத₃ந்தி" முதலான விடங்களில் தத்வதர்ஶிகளின் வாக்கைத் தாம் சொன்ன அர்த்தத்துக்கு ஸம்வாத ப்ரமாணமாக எடுக்கின்றன. மேலும், கலியின் கோலாஹலத்தாலே ஶ்ருதிஸ்ம்ருதிகளில் பல இடைச்செருகல் எறிதல்கள் ஏற்பட்டிருப்பதைப் பார்க்கிறோம். உபனிஷத்துக்களிலேயே பல மாறுபாடுகள் விளைக்கப்பட்டிருப்பதையும், எவரும் தொட்டறியாத பல உபனிஷத்துக்கள் ஐந்நூறு வருடங்கட்குள் கற்பிக்கப் பட்டிருப்பதையும் காண்கிறோம். இவற்றில் எது உண்மை எது பொய் என்று வைதி₃கர்களான பண்டைச் சான்றோர்களின் வாக்கைக்கொண்டே நிர்ணயிக்கவேண்டியிருக்கிறது. சிவபரத்துவத்தைக் காட்டும் அடிமுடிதேடியகதை முதலானவை பண்டைச் சான்றோர்கள் பலரால் ஆதரிக்கப்படவில்லையென்பதைக்கொண்டே அவை பொய்யானவை என்று அறுதியிடவேண்டியுள்ளது. இதற்காகவே ஶ்ருதிஸ்ம்ருதிஹ்ராஸ நிர்ணயங்களுக்குப் பின் கடைசியான நாலாவது அத்தியாயத்தில் வைதிகநிர்ணயம் வெளியிடப்படும்.

இவ்வைதிகர்களில் தலைசிறந்தவர்களாய், பரதத்வபரமஹித பரமபுருஷார்த்தங்களை உள்ளபடி ஸாக்ஷாத்கரித்தவர்களான ஆழ்வார்களும், ஆசார்யர்களுமடங்கிய விசிஷ்டாத்வைதிகளின் நிர்ணயம் முதற்பாதத்திலும், இவர்களுக்கு மிக நெருங்கிய த்வைதிகளின் நிர்ணயம் இரண்டாம பாதத்திலும், ஆராய்ச்சியின்மையாலே பல அபார்த்தங்களைச் சொன்னபோதிலும், தம் காலத்திலும் மறுக்கவொண்ணாதபடி ஸம்ப்ரஸித்தமாயிருந்த நாராயணபரத்வத்தைத் தம் நூல்களில் கல்வெட்டாகப் பொறித்துவைத்திருக்கும் ஆதிசங்கரர் முதலான ப்ராசீநாத்வைதாசார்யர்களின் நிர்ணயம் மூன்றாம் பாதத்திலும், இப்படி மத ப்ரவர்த்தகர்களாயிராதபோதிலும், அந்தந்தக் காலத்திலிருந்த சான்றோர்களின் கருத்தைக் காட்டும் காவியங்களை எழுதிவைத்துள்ள கவிகளின் நிர்ணயம் கடைசியான நாலாம் பாதத்திலும் காட்டப்பெற்று உத்தரமீமாம்ஸா ஶாஸ்திரத்தைப்போலே நாலு அத்தியாயமும், பதினாறு பாதங்களும் கொண்ட இந்நூல் இனிது நிறைவுபெறும். தன்பெருமையைப் பேசவென்றே ஏற்பட்ட இந்நூலை ஸத்யஸங்கல்பனான பரமபுருஷன் குறைவறத் தலைக்கட்டிவைப்பானாக. இனி, இவ்விரண்டாமத்தியாயத்தின் முதற்பாதத்தில் ஸ்ம்ருதிகளின் நிர்ணயத்தைக் காட்டுவோம்.

அவதாரிகை முற்றிற்று.

http://acharya.org

ஸ்ம்ருதிவிசாரம்

மந்வாதி₃ஸ்ம்ருதிகள் என்றும், ஶ்ரௌத ஸூத்ரங்கள் என்றும், த₄ர்மஸூத்ரங்கள் என்றும், க₃ருஹ்யஸூத்ரங்கள் என்றும், பரமைகாந்திகளின் த₄ர்மங்களை விவரிக்கும் பரமத₄ர்மஶாஸ்த்ரங்கள் என்றும் ஸ்ம்ருதிகள் பல வகைப்படும். இவற்றில் பரம்பொருளைப்பற்றிய நிர்ணயம் முதலிற்சொன்ன மந்வாதி₃ஸ்ம்ருதிகளிலும், கடைசியிற் சொன்ன பரமத₄ர்மஶாஸ்திரங்களிலுமே விசேஷமாகக் காணப்படுகிறது. இவ்விரண்டினிடையேயும ஸாமாந்ய த₄ர்மங்களைப் பரக்கப் பேசும் மநவாதி₃ஸ்ம்ருதிகளே நெடுங்காலமாகப் பல ஸ்ம்ருதி புராணங்களிலும், பற்பல மதத்தைச் சேர்ந்த பண்டைச் சான்றோர்கள் பலராலும் எடுத்துக் கையாளப்பட்டிருக்கிறபடியால அவற்றுக்குப் பரிக்₃ரஹாதிஶயம் உண்டு. பரமைகாந்திகளின் விஶேஷத₄ர்மங்களை விளக்கும் பரமத₄ர்மஶாஸ்திரங்களுக்கு அத்தகைய பரிக₃ரஹாதிஶயம் இல்லாவிடினும பூர்வாசார்யர்களாலும், த₄ர்மஶாஸ்திரவிசாரத்தைச் செய்யும நிப₃ந்த₄காரர்களாலும் அவை எடுக்கப்பட்டிருக்கையாலே அவற்றுக்கும ப்ராமாண்யமுண்டு. ஆகையால் மந்வாதி ஸ்ம்ருதிநிர்ணயத்துக்குப் பின் அவற்றிலுள்ள விஶேஷதர்மங்களும இங்கு எடுத்துக்காட்டப்படும். முதலில பரிக₃ரஹாதிஶயத்தையுடைய மந்வாதிஸ்ம்ருதிகளைக் கொண்டு பரதத்வநிஷ்கர்ஷத்தைச் செய்யக் கடவோம். அந்த ஸ்ம்ருதிகள்தான யாவை? என்னும கேள்வி முதலில் எழுகின்றது. யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியின தொடக்கத்தில் (1-4, 5)

"மந்வத்ரி விஷ்ணு ஹாரீத யாஜ்ஞவல்க்யோஶநாங்கி₃ரா: |
யமாபஸ்தம்ப₃ஸம்வர்த்தா: காத்யாயநப்₃ருஹஸ்பதீ ||
பராஶரவ்யாஸ ஶங்க₂லிகி₂தா த₃க்ஷகௌ₃தமௌ |
ஶாதாதபோ வஸிஷ்ட₂ஶ்ச த₄ர்மஶாஸ்த்ரப்ரயோஜகா: ||"

[(1) மனு (2) அத்ரி (3) விஷ்ணு (4) ஹாரீதர் (5) யாஜ்ஞவல்க்யர் (6) உஶநா (7) அங்கி₃ரா (8) யமர் (9) ஆபஸ்தம்பர் (10) ஸம்வர்த்தர் (11) காத்யாயனா (12) ப்₃ருஹஸ்பதி (13) பராஶரர் (14) வ்யாஸர் (15) ஶங்க₂ர் (16) லிகி₂தர் (17) த₃க்ஷர் (18) கௌ₃தமர் (19) ஶாதாதபா (20) வஸிஷ்டர் என்னும இருபது பேர் த₄ர்மஶாஸ்திரம் எழுதியவர்கள.] என்று பெயரிட்டு இருபது ஸ்ம்ருதிகள எடுக்கப்பட்டன. அபரார்க்கர் என்னும

http://acharya.org

நிப₃ந்த₄காரர் எடுத்த கௌ₃தமஸூத்ரத்திலும், வீரமித்ரோத₃யம் என்னும் நிப₃ந்த₄க்ரந்தத்தில் எடுக்கப்பட்ட ஶங்க₂லிகி₂தஸூத்ரத்திலும், பராஶரஸ்ம்ருதியிலும் (1-1-13, 14, 15) இந்த ஸ்ம்ருதிகளில் பெரும்பான்மையானவை எடுக்கப்பட்டன. காருடபுராணத்தில் (93-4, 5, 6 ஜீவாநந்தர்பதிப்பு 223-ம் பக்கம்.)

''வக்தாரோ த₄ர்மஶாஸ்த்ராணாம் மநுர் விஷ்ணுர்
யமோ Sங்கி₃ரா: ।
வஸிஷ்ட₂த₃க்ஷஸம்வர்த்த ஶாதாதப பராஶரா: ।
ஆபஸ்தம்போ₃ஶநோவ்யாஸா: காத்யாயநப்₃ருஹஸ்பதீ ॥
கௌ₃தம: ஶங்க₂லிகி₂தௌ ஹாரீதோத்ரிரஹம் ததா₂ ।
ஏதே விஷ்ணும் ஸமாராத்₄ய ஜாதா த₄ர்மோபதே₃ஶகா: ॥''

என்று இந்த ஸ்ம்ருதிகர்த்தாக்களின் பெயர்கள் எடுக்கப்பட்டு, இவர்கள் "பரமபுருஷனை விஷ்ணுவை ஆராதித்தமையாலேயே த₄ர்மஶாஸ்திரம் செய்ய வல்லவரானார்கள் என்று கூறப்பட்டது. இந்த ஸ்ம்ருதிகள் அனைத்திலும் பரம்பொருளைப்பற்றிய பேச்சில்லை; சிலவற்றிலேயே பரதத்வநிஷ்கர்ஷமுள்ளது. இதற்குக் காரணம் புராணங்களிற்போலே ஸ்ம்ருதிகளிலும் ஸாத்விகராஜஸ தாமஸப் பிரிவுகள் இருக்கையே என்று பாத்மபுராணத்தில் விளக்கப்பட்டது. அப்புராணத்தில் (பூனா ஆநந்தாஶ்ரமப்பதிப்பில் உத்தரகண்டம் 263 ம் அத்தியாயத்தில்) ஓர் அழகான விருத்தாந்தம் விவரிக்கப் படுகிறது:— பார்வதீ தேவியானவள், சிவப்பிரானைப்பார்த்து, "பாஷண்டர்களோடு பேசவே கூடாதென்று நீர் சொன்னீர்; அப்பாஷண்டர்களின் லக்ஷணம் என்ன" என்று கேட்டாள்; "நாராயணனைக்காட்டிலும் வேறான ஒரு தேவனைப் பரமாத்மாவாக யார் கூறுகிறார்களோ, அவனோடு ஸமமாக ப்₃ரஹ்மருத்ராதி₃ தேவதைகளை யார் சொல்லுகிறார்களோ, கபாலம், ப₄ஸ்மம (சாம்பல்), எலும்பு முதலான அவைதிகமான அடையாளங்களை யார் தரிக்கிறார்களோ, ஸந்யாஸாஶ்ரமத்துக்குத்தகுதியில்லாமலே சடை மரவுரிகளை யார் தரிக்கிறார்களோ, அவைதிகமான பல செயல்களை யார் செய்கிறார்களோ அவர்கள் பாஷண்டிகள்" என்று தொடங்கி விரிவாகப் பாஷண்டிகளின் அடையாளங்களைச் சொன்னார் சிவன். இதைக்கேட்ட பார்வதி, "இதுவே பாஷண்டிகளின் லக்ஷணமாகில், 'நீர் ஏன் கபாலம், பஸ்மம, எலும்பு முதலான அந்த வேதநிந்திதமான அடையாளங்களை தரிக்கிறீர்' என்று கேட்டாள்; இப்படிக்

http://acharya.org

கேட்கப்பட்ட முக்கட்பிரான் ஒருவருமில்லாத இடத்திற்குப் பார்வதியை அழைத்துச்சென்று, 'நீ இதை எவரிடமும் சொல்லாதே' என்று ஆணையிட்டு "முற்காலத்தில் நமுசி முதலான அஸுரர்கள் வேததர்ம நிஷ்டர்களாய்; விஷ்ணு பக்தர்களாயிருந்தமையாலே வெல்லவரிய ப$_{3}$ல வீர்யங்களை உடையவர்களாயிருந்தனர். அவர்களால் அடக்கபபெற்ற தேவர்கள் பரமபுருஷனை விஷ்ணுவிடம முறையிட்டனர். விஷ்ணுவானவர் என்னைப் பார்தது, 'தேவத்வேஷிகளான இவ்வஸுரர் அவைதிகர்களாய், எனனிடம் பகதியற்றவர்களாகி பலஙகுறைந்தவர்களாவதற்காக நீ நேரேயும், பல அந்தணர்களை ஆவேசித்து நின்றும, பல பாஷணட ஶாஸ்திரங்களையும், தாமஸபுராணஙகளையும் செய்து, அவற்றில கபால ப$_{4}$ஸ்மாஸ்தி$_{2}$த$_{4}$ாரணம முதலான பாஷண்ட$_{3}$த$_{4}$ர்மங்களை அவர்களுக்கு உபதேசிபபாயாக' எனறு நியமிக்க, 'இதனல் எனக்குப் பெரும பாவம வநதுசேருமே' எனறு நான் நடுஙக, 'தேவதைகளின் நலத்துக்கும, பாவிகளான அஸுராகள் அழிவதற்கும நீ இப்படிச் செய்தே தீரவேண்டும. ஆயினும், இதற்கு ப்ராயச்சித்தமாக எனனை நெஞசில தியானித்து. எனனுடைய தாரக மநதிரததை ஜபித்துககொணடேயிருநதால உனனிடம் பாபம ஒட்டாது' எனறு நியமிததார் நானும அபபடியே செய்தேன" எனறு கூறினா சிவன இதை கேடட பார்வதீதேவியால்,

"தாமஸாநி ச ஶாஸ்த்ராணி ஸமாசக்ஷ்வ மமாநக$_{4}$ |
ஸம்பரோக்தாநி ச யைர் விபரைர் ப$_{4}$க$_{3}$வத்$_{3}$ப$_{4}$க்திவர்ஜிதை: ||
தேஷாம நாமாநி க்ரமஶ. ஸமாசக்ஷ்வ ஸுரேஶவர ||"

[குறறமற்ற தேவா தலைவனே! பகவதபக்தியற்ற அந்தணாகளாலே சொலலப்பெற்ற தாமஸ ஶாஸதிரஙகளை வரிசையாயப பெயரிட்டு எனக்குச் சொல்லுவீராக.] என்று பிரார்த்திககப்பட்ட முக்கட்பிரான,

"ஶ்ருணு தே$_{3}$வி ப்ரவக்ஷ்யாமி தாமஸாநி யத$_{2}$ாக்ரமம் |
யேஷாம் ஸமரணமாதரேண பாதித்யம ஜ்ஞாநிநாமபி ||
ப்ரத$_{2}$மம ஹி மயா சோக்தம் ஶைவம் பாஶுபதாதி$_{3}$கம் |
மச்ச$_{2}$க்த்யாவேஶிதைர் விப்ரை: ப்ரோக்தாநி ச தத: ஶ்ருணு||
கணாதே$_{3}$ந ச ஸம்ப்ரோக்தம் ஶாஸ்த்ரம வைஶேஷிகம் மஹத|
கெள$_{3}$தமேந தத$_{2}$ா ந்யாயம ஸாங்க்$_{2}$யம து கபிலேந வை ||

http://acharya.org

தி4ஷணேன தத2ா ப்ரோக்தம் சார்வாகமதிக3ர்ஹிதம்।
தை3த்யாநாம் நாஶநார்த்த2ாய விஷ்ணுநா பு3த்3த4ரூபிணா॥
பௌ3த்3த4 ஶாஸ்த்ரமஸத் ப்ரோக்தம் நக்3நநீலபடாதி3கம்।
மாயாவாத3மஸச்ச2ாஸ்த்ரம் ப்ரச்ச2ந்நம் பௌ3த்3த4முச்யதே॥
மயைவ கதி2தம் தே3வி கலௌ ப்3ராஹ்மணரூபிணா।
அபார்த்த2ம் ஶ்ருதிவாக்யாநாம் த3ர்ஶயல் லோகக3ர்ஹிதம்॥
கர்மஸ்வரூபத்யாஜ்யத்வமத்ர வை ப்ரதிபாத்3யதே।
ஸர்வகர்மபரிப்4ரஷ்டம் வைத4ர்ம்யத்வம் தது3ச்யதே॥
பரேஶஜீவயோரைக்யம் மயா து ப்ரதிபாத்3யதே।
ப்3ரஹ்மணோ஽பி ஸ்வயம் ரூபம் நிர்கு3ணம் வக்ஷ்யதே மயா॥
ஸர்வஸ்ய ஜக3தோ஽ப்யத்ர மோஹநார்த்த2ம் கலௌ யுகே3।
வேதா3ர்த்த2வந்மஹாஶாஸ்த்ரம் மாயயா யத3வைதி3கம்॥
மயைவ ரக்ஷ்யதே தே3வி ஜக3தாம் நாஶகாரணாத்।
த்3விஜந்மநா ஜைமிநிநா பூர்வம் வேத3மபார்த்த2கம்॥
நிரீஶ்வரேண வாதே3ந க்ருதம் ஶாஸ்த்ரம் மஹத்தரம।

[தேவியே! தாமஸஶாஸ்திரங்களை முறைப்படி சொல்லுகிறேன் கேளாய்! இந்தத் தாமஸஶாஸ்திரங்களை (ஆநுகூல்யபு3த்தி4யோடு) நினைத்தால்கூட அறிவாளிகளுக்கும் பதிதத்தன்மை ஏற்படும். முதன் முதலில் பாசுபதம் முதலான சைவாகமங்கள் என்னால் நேரே சொல்லப்பட்டன. என் சக்தியால் ஆவேசிக்கப்பட்ட அந்தணர்களாலே உபதேசிக்கப்பட்ட தாமஸ சாஸ்திரங்களை அடுத்தபடி கூறுகிறேன் கேளாய்! வைஶேஷிகம் என்னும் பெரிய ஶாஸ்திரம கணாத3ராலே கூறப்பட்டது; கௌதமராலே ந்யாயஶாஸ்திரம கூறப்பட்டது (இவ்விரண்டும் பரமாணுவை ஜகத்காரணமாகச் சொல்கின்றவை.) கபிலரால் (மூலப்ரக்ருதியை ஜகத்காரணமாகச் சொல்லும்) ஸாங்க்2யஶாஸ்திரம் செய்யப்பட்டது. தேவகுருவான பிருஹஸ்பதியால் மிகத்தாழ்ந்ததான சார்வாக ஶாஸ்திரம் இயற்றப்பட்டது. திரிபுராசுரர்களை அழிப்பதற்காக புத்தாவதாரம் எடுத்த விஷ்ணுவாலே நக்3னம் நீலபடம முதலான பிரிவுகளையுடைய பௌத்தம் என்னும் தீய சாஸ்திரம் உபதேசிக்கப்பட்டது. மாயாவாதம் என்னும் தீய ஶாஸ்திரம மறைந்துநிற்கும் பௌ3த்3த4மதம் எனப்படுகிறது. கலியுகத்தில் அந்தணவுருக்கொண்ட என்னாலேயே அது சொல்லப்பட்டது. வேதவாக்யங்களுக்கு அனைவரும் இகழத்தக்க அவப்பொருள்களை அந்த மாயாவாதம் காட்டும். 'அந்த

http://acharya.org

மதத்தில் கர்மதத்திற்கு ஸ்வரூபத்யாகமே சொல்லப்படும். அதில், எல்லாக் கர்மங்களினின்றும் நீங்கிய ஸந்யாஸாஶ்ரமம் சொல்லப் படும். அதில் ஜீவாத்மாவுக்கும் பரமாத்மாவுக்கும் என்றுல் ஸ்வ ரூபைக்யம் கூறப்படுகிறது. ப்ரஹ்மத்திற்கு நிர்க்குணஸ்வரூபமும் என்றுல் சொல்லப்படுகிறது. கலியுகத்தில தீயவர்கள் அனைவரும மயங்குவதற்காக அவைதிகமான இந்தப பெரிய ஶாஸ்திரம வேதார்ததம் போலே என்றுல் வஞ்சனையால் அவர்களை அழிபப தற்காக ரக்ஷிக்கப்படப்போகிறது. ஜைமிநியெனனும அந்தணராலே வேதத்தின பூர்வபாகமாகிற பெரிய சாஸ்திரம் நிரீஶ்வரவாதம செய்யப்பெற்று அவபபொருளுடையதாகச் செய்யப்பட்டது.] என்று தொடங்கிப் பாவிகளை அழிப்பதற்காக சைவாகமம மாயாவாத ஶாஸ்திரம முதலான அஸச்சாஸ்திரங்களைத்தான் நேரேயும், பல அந்தணர்களின உட்புகுந்தும் இயற்றியிருப்பதை ரஹஸ்யமாகப் பார்வதிக்குச் சொல்லி, * பதினெட்டு மஹாபுராணங்களில் ஸாத்விக ராஜஸதாமஸப்பிரிவைச் சொல்லி

''வாஸிஷ்டஞ்சைவ ஹாரீதம் வ்யாஸம் பாராஶரம் ததா ।
பாரத்வாஜம் காஶ்யபம ச ஸாத்விகா முக்திதா: ஶுபா: ॥
யாஜ்ஞவல்க்யம ததாऽऽத்ரேயம் தைத்திரம் தாக்ஷமேவ ச ।
காத்யாயநம் வைஷ்ணவம ச ராஜஸா: ஸ்வர்க்கதா: ஶுபா: ॥
கௌதமம பார்ஹஸ்பதயஞ்ச ஸாமவர்த்தம் ச யமம ஸ்ம்ருதம் ।
ஶங்கம் சௌஶநஸம்தேவி தாமஸா நிரயப்ரதா: ॥
கிமத்ர பஹுநோக்தேந புராணேஷு ஸ்ம்ருதிஷ்வபி ।
தாமஸா நரகாயைவ வர்ஜயேத் தாந விசக்ஷண: ॥

[(1) வாஸிஷ்டம், (2) ஹாரீதம, (3) வ்யாஸம, (4) பாராஶரம (5) பாரத்வாஜம, (6) காஶ்யபம் எனனும் ஆறு ஸ்ம்ருதிகளும ஸ்தவகுணப்ரதானரால இயற்றப்பெற்றவை; (அதனலேயே) சுபமானவையாய், பின்பற்றுகிறவர்களுக்கு முக்தியளிபபவையா யிருப்பவை. (1) யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி (2) அத்ரிஸ்ம்ருதி (3) தைத்திரஸ்ம்ருதி (4) தக்ஷஸ்ம்ருதி (5) காத்யாயனஸ்ம்ருதி (6) விஷ்ணுஸ்ம்ருதி எனனும ஆறும் ரஜோகுணப்ரதானரால் இயற்றப் பெற்றவையாகையாலே பின பற்றுகிறவர்களுக்கு ஸ்வர்க்கமளிப

* புராணங்களில ஸாத்விக ராஜஸ தாமஸங்கள எவை எனபதைக் காட்டும ஶ்லோகங்கள் அவதாரிகையில் எடுக்கப்பட்டன.

http://acharya.org

பவையாயிருப்பவை. (1) கௌதமஸ்ம்ருதி (2) ப்ருஹஸ்பதிஸ்ம்ருதி (3) ஸம்வர்த்தஸ்ம்ருதி (4) யமஸ்ம்ருதி (5) ஶங்கஸ்ம்ருதி (6) ஔஶநஸஸ்ம்ருதி என்னும் ஆறும தமோகுணப்ரத₄ானர்களால் இயற்றப்பெற்றவையாகையாலே பின்பற்றுகிறவர்களுக்கு நரகத்தை அளிப்பவையாயிருப்பவை பல சொல்லி என? புராணங்களிலும்; ஸ்ம்ருதிகளிலும் தாமஸங்கள் தம்மைப் பின்பற்றுவார்க்கு நரகத்தையே அளிக்குமாகையால், அறிவாளியாயிருப்பவன் அவற்றை விலக்கவேண்டும்.] என்று ஸ்ம்ருதிகளிலும் ஸாத்விக ராஜஸதாமஸப்பிரிவைச் சொல்லி, தாமஸஸ்ம்ருதிகளும் அடியோடு விலக்கத்தக்கவை என்று உத்கோஷித்தார்.

யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதியில் எடுக்கப்பட்ட இருபது ஸ்ம்ருதிகளும், "மன்மதநாத₂தத்தர் (ஶாஸ்திரி) M. A." என்பவரால் இந்த நூற்றாண்டின தொடக்கத்தில் ஆங்கில மொழிபெயர்ப்போடு கல்கத்தாவில் அச்சிடப்பெற்றிருக்கின்றன. இவற்றில் பெரும்பான்மையான ஸ்ம்ருதிகள் பம்பாய் வெங்கடேஶ்வர ஸ்டீம் பிரஸ்ஸிலும், பூனா ஆநந்தாஶ்ரமத்தில், ஸ்ம்ருதிஸமுச்சயம்" என்னும் பெயரிலும் அச்சிடப்பெற்றுள்ளன. மாக்ஸ் முல்லர் என்னும் ஐரோப்பியர் இந்த ஸ்ம்ருதிகளில் பலவற்றை "The Sacred books of the east" என்னும் வரிசையில், ஜூலியஸ் ஜாலி, ஜார்ஜ் பூ₄லர் முதலான ஐரோப்பிய அறிஞர்கள் பலரைக்கொண்டு சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஆங்கிலத்தில் மொழிபெயர்ந்து வெளியிட்டிருக்கிறார். நிற்க, ஸூத்ரஶைலியில் அமைந்த ஶங்க₂லிகித ஸ்ம்ருதியொன்று இருந்ததாகப் பழைய நிப₃ந்த₄நூல்களிலிருந்து தெரிகிறது. இப்போது அச்சிடப்பட்டிருக்கும் ஶ்லோகரூபமான ஶங்கலிகிதஸ்ம்ருதிகள் அதிலும் வேறுபட்டவையென்று அறியத்தக்கது. ஶ்லோகரூபமான ஶங்கஸ்ம்ருதியில் வேதவிருத்தமான பகுதிகள் யாதொன்றும் இல்லாமையாலும், வேதத்தோடு அது மிகவும் ஒத்திருக்கையாலும், கீழே எடுத்த பாத்மபுராணஶ்லோகத்தில் தாமஸம் என்று கழிக்கப்பட்டது ஸூத்ரஶைலியில் அமைந்திருந்த ஶங்கஸ்ம்ருதியே என்று அறியத்தக்கது. இவ்வண்ணமே ப்ருஹஸ்பதிஸ்ம்ருதியும் ஸூத்ரசைலியில் ஒன்று அமைந்திருந்ததாகத் தெரிகிறது. அதுவே சார்வகமதத்தை உபதேசிப்பது; "அத₂ லோகயுதம், ப்ருதி₂வ்யாபஸ் தேஜோவாயுரிதி தத்த்வானி, தேப்₄யஶ் சைதந்யம் கிண்வாதி₃ப்₄யோ மத₃ஶக்திவத்" [இனி, லோகயாத மதம் விவரிக்கப்படுகிறது. பூமி, ஜலம், அக்னி, வாயு என்று

நாலு பொருள்களே உள்ளன. கள் முதலான திரவியங்களில் மத₃சக்தி உண்டாவதுபோலே இந்த நாலு பூதங்களுடைய சேர்த்தியிலே அறிவு என்று ஒரு தன்மை பிறக்கிறது.] என்று தொடங்குவதாக ஏட்டின் ப்ரமாணத்திரட்டு முதலான ப்ராசீனநூல்களிலே எடுக்கப்பட்ட அந்த நாஸ்திகநூலே பாத்மபுராணத்தில தாமஸமாகக் கழிக்கப்பட்டதென்று உணரத்தக்கது. மந்மதநாதத்தர் முதலானோரால் அச்சிடப்பெற்ற இருபது ஸ்ம்ருதிகளில் சேர்ந்த ஶ்லோகரூபமான ப்₃ருஹஸ்பதிஸ்மருதியும், பல பூர்வாசார்யர்களாலும், ப்ராசீநநிப₃ந்த₄காரர்களாலும் கையாளப்பட்டதும், இப்போது லுப்தமாயிருப்பதும் 'பரோடா ஓரியண்டல் இன்ஸ்டிட்யூட்' என்னும் ஸ்தாபனத்தால காசி ஹிந்து ஸர்வகலாசாலைப்பேராசிரியர் ஸ்ரீ. K. V. ரங்கசாமி அய்யங்காரைக்கொண்டு புநருத்₃த₄ாரணம் செய்யப்பெற்று (GAEKWAD'S ORIENTAL SERIES. VOLUME LXXXV) பதிப்பிக்கப்பெற்றிருப்பதுமான ஶ்லோகரூபமான ப்₃ருஹஸ்பதிஸ்மருதியும் வேதத்தையொட்டியிருக்கையாலே கைக்கொள்ளத்தக்கவையே. மற்றும் பாத்மபுராணத்தில தாமஸமென்று கழிக்கப்பட்ட கௌதம ஸமவாதத யம ஔஶநஸஸ்ம்ருதிகள பரதத்துவத்தைப் பற்றிப் பேசாமலே செல்கின்றனவாகையாலே தாமஸமென்று கழிக்கப்பெற்றனவென்று கொள்ளத்தக்கது.

இங்கு, ஓர் ஐயம் எழக்கூடும். ஶ்ருதிஸ்மருதீதிஹாஸபுராணங்கள் என்று, முன் எடுக்கப்பட்ட ஸம்ருதிவசனத்தைப் பின் எடுக்கப்பட்ட புராணவசனத்தைக்கொண்டு தள்ளுவது தகுமோ எனில்: இதிஹாஸபுராணங்களைக்காட்டிலும் ப்ரப₃லம் என்னும் காரணத்தாலே ஸமருதியானது முதலில எடுக்கப்படவில்லையாகையாலும், ஶ்ருதியின் பூர்வபா₄க₃ விவரணமாகையாலே ஶ்ருதிக்கடுத்தபடி ஸமருதியும், உத்தரபா₄க₃ விவரணமாகையாலேயே ஸ்மருதிக்கடுத்தபடி இதிஹாஸபுராணங்களும் எடுக்கப்பட்டனவாகையாலும் இதிஹாஸ புராணவாக்கியங்களைக்கொண்டு ஸ்மருதிவாக்யங்களைக் கழிக்கத் தட்டில்லை. உண்மையை ஆராயப்புகில, ஶ்ருதிவிருத்தமாயிருக்கையாலேயே ப்₃ருஹஸ்பதிஸூத்ரம் முதலான ஸ்மருதிகள் கைவிடப்படுகின்றன என்றும், ஶ்ருதியை ஓட்டியிருக்கையாலே பாத்மம் முதலான ஸாத்விகபுராணங்களும், இதிஹாஸங்களும் கைக்கொள்ளப்படுகின்றன என்றும் விளங்கும். ஆகையாலே, பாத்மபுராணவசனத்தைக்கொண்டு சில ஸம்ருதிகளைத் தாமஸமென்று கழித்ததில் எக்குறையுமில்லை.

http://acharya.org

இனி, இப்போது அச்சிடப்பெற்றிருப்பவையாக முன் எடுத்த இருபது ஸ்ம்ருதிகளில் மநுஸ்ம்ருதி, ஹாரீதஸ்ம்ருதி, விஷ்ணு ஸ்ம்ருதி, ஶங்க₂ஸ்ம்ருதி, ஶாதாதபஸ்ம்ருதி, வஸிஷ்டஸ்ம்ருதி, அத்ரி ஸ்ம்ருதி என்னும் இவற்றிலும், புநருக்₃த₄ாரணம் செய்யப்பெற்ற ப்₃ருஹஸ்பதிஸ்ம்ருதியிலுமே கர்மாராத்₄யனை பரம்பொருளைப் பற்றி விசேஷமாகப் பேசப்பட்டிருக்கிறதாகையாலே, அவற்றைக் கொண்டும், ப்ராசீனர்களால் கையாளப்பட்ட யோக₃யாஜ்ஞ வல்க்யம் முதலான மற்ற சில ஸ்ம்ருதிகளைக்கொண்டும் பரம்பொருள் எந்த தேவதை என்பதைக் காட்டிவிட்டு, வ்ருத்₃த₄ஹாரீத ஸ்ம்ருதி முதலான பரமத₄ர்மஶாஸ்திரங்களின்மூலம் பரதேவதாநிஷ்கர்ஷமும், விஶிஷ்ட பரமைகாந்திகளின் ஆசாரநிர்ணயத்தையும் செய்வோம் இப்பாதத்தில்.

இந்த ஸ்ம்ருதிகள் எல்லாவற்றிலும் பல காரணங்களால் மநு ஸ்ம்ருதியே மிகச்சிறந்ததாகப் பல்லாயிரம் வருடங்களாகப் பல சான்றோர்களால் கொண்டாடப்படுகிறது. "யத்₃வை கிஞ்ச மநுரவத₃த் தத்₃பே₄ஷஜம்" [யஜு-அஷ்ட 3.2-11] [மனு சொன்னது அனைத்தும் மருந்தாகும்] என்று மனுவினுடைய வார்த்தை ஸம்ஸார நோயால் அவதிப்படுகின்றவர்கள் அனைவருக்கும் மருந்தென்று வேதத்தில் கொண்டாடப்பட்டது.

"வேதா₃ர்த்தோ₂ப்ரதிப₃த்₃த₄த்வாத் ப்ராமாண்யம் து மநோ: ஸ்ம்ருதம் ।
மந்வார்த்த₂விபரீதா து யா ஸ்ம்ருதி: ஸா ந ஶஸ்யதே"

[வேதார்த்தங்களையே உட்பொதிந்து கொண்டிருக்கையால் மநு ஸ்ம்ருதியே மிகச்சிறந்த ப்ரமாணமாகக் கொள்ளப்படுகிறது. மனு சொன்ன வார்த்தைக்கு முரண்பட்ட எந்த ஸ்ம்ருதியும் கொண்டாடப் படுவதில்லை.] என்று ப₃ார்ஹஸ்பத்யஸ்ம்ருதியிலும்

"வேதே₃ஷு பௌருஷம் ஸூக்தம் த₄ர்மஶாஸ்த்ரேஷு மாநவம்।
பா₄ரதே ப₄கவத்₃கீ₃தா புராணேஷு ச வைஷ்ணவம்॥

[வேதத்தில் புருஷஸூக்தமும், தர்மஶாஸ்திரங்களில் மனுஸ்ம்ருதி யும், பாரதத்தில் பகவத்கீதையும், புராணங்களில் விஷ்ணுபுராணமும் சிறந்தவை] என்று புராணங்களிலும் மிகச்சிறந்த ஸ்ம்ருதியாகக் கொண்டாடப்படுவது மநுஸ்ம்ருதியேயாகும். ஆகையாலே, முதலில் அதைக்கொண்டு பரதத்வநிஷ்கர்ஷத்தைச் செய்வோம்.

http://acharya.org

மநுஸ்ம்ருதி நிர்ணயம்

இந்த மநுஸம்ருதியின் தொடக்கத்தில் மநுவானவர் பரமாத்ம தியானத்தோடு எழுந்தருளியிருந்தபோது மஹர்ஷிகள் பலர் அவரை அடிபணிந்து, 'எல்லா வர்ணங்களுடைய தர்மங்களையும் எமக்குச் சொல்லவேண்டும்' என்று கேட்க, முதலத்தியாயத்தில் ஐந்தாவது ஸ்லோகத்திலிருந்து தொடங்கி ஜகத்காரணமான பரமாத்மாவையும் அவர் ஸ்ருஷ்டி செய்த முறையையும் பற்றிப் பேசுகிறார். 'ஒன்றைக்கேட்க, மற்றொன்றைச் சொல்லுவதுபோலே யிருக்கிறதே இது' என்னில்: வர்ணதர்மங்களெல்லாம் பரமாத்மாவுக்கு ஆராதனமாகவேயிருக்கையாலே, ஆராத்₄யனான அவனுடைய ஸ்வரூபத்தைப்பற்றித் தெளிவுபடுத்திவிட்டு, அதன் பிறகு, அவனுக்கு ஆராதனமான வர்ணதர்மங்களைப் பற்றிப் பேசுகிறாராகையாலே இந்த தோஷமில்லை. அவனுக்கு ஆராதனமாயிருப்பவை என்று அறியாமல் செய்யப்படும் தர்மாநுஷ்டானத்தால் ஒரு பயனுமில்லாமையாலேயன்றோ ஸாத்விகஸம்ருதிகள் அனைத்திலும் முதன்முதலில் அவனைப்பற்றிப் பேசப்படுகிறது. அவ்வணணமே பரமஸத்வநிஷ்டரான மனுவும் முதலில் ஜகத்காரணப் பொருளைப்பற்றிப் பேசுகிறார். அந்த ஸ்லோகங்களில் முக்கியமானவையான ஏழு ஸ்லோகங்கள் ப்ரஹ்மஸூத்ர ஸம்ருத்யதிகரணத்தின் (2-1-1) ஸ்ருதப்ரகாசிகையில் எடுத்து வியாக்கியானம் செய்யப்பெற்றிருக்கின்றன. அதைப் பின்பற்றி அவற்றின் பொருளைக் காண்போமினி.

1. **ஆஸீதி₃த₃ம் தமோபூ₄தமப்ரஜ்ஞாதமலக்ஷணம் |**
அப்ரதாக்யமவிஜ்ஞேயம் ப்ரஸுப்தமிவ ஸர்வத: ||

இத₃ம்—*இவ்வுலகமானது,* **தமோபூ₄தம்**—*தமஸ் என்னும் நிலையை அடைந்ததாய்,* **அப்ரஜ்ஞாதம்**—*ப்ரத்யக்ஷஜ்ஞானத்தால் அறியமுடியாததாய்.* **அலக்ஷணம்**—*(ரூபம் முதலான) அடையாளங்களற்றதாய்,* **அப்ரதர்க்யம்**—*அனுமானத்தாலும் அறியப்படாததாய்,* **அவிஜ்ஞேயம்**—*(பரம்பொருளைவிட்டுப் பிரித்து) அறியமுடியாததாய்,* **ஸர்வத: ப்ரஸுப்தம் இவ**—*எல்லாப்படியாலும் தூங்கும் நிலையை அடைந்தது போலிருப்பதாய்,* **ஆஸீத்**—*(ப்ரளயகாலத்தில்) இருந்தது.*

http://acharya.org

இந்த ஶ்லோகத்தில் ப்ரளயகாலத்தில் இவ்வுலகம் பரமாத்மாவோடு ஒன்றி இருந்த நிலையைச் சொல்லுகிறார். இதைச் சொல்லுவானேன்? எனில: மேலத்தியாயங்களில் அக்னி இந்திரன் முதலிய பல தேவதைகளைப்பற்றிய பல கர்மங்கள் சொல்லப்படப் போகின்றன. அந்த தேவதைகள் அனைவரும் பரமகாரணமான பரமாத்மாவோடு ஒன்றியிருந்தவர்களாகையாலே சரீரமான அவர்களைப்பற்றிய கர்மங்களனைத்தும் சரீரியான அவனுக்கு முற்கூறிய முறையில் ஆராதனமாயிருப்பவையே என்று காட்டுவதற்காக அந்நிலையைச் சொல்லுகிறார். மேலும், "காரணம் து த்4யேய:" [அதர்வசிகை] [ஜகத்காரணப்பொருளே தியானிக்கத்தக்கது] என்று ஜகத்காரணவஸ்துவே உபாஸ்யமாக வேதாந்தங்களில் எடுக்கப்படுகையாலும், இங்கு சொல்லப்படும் கர்மங்கள் உபாஸநாங்கமாகையாலும், "யதோ வா இமானி பூ4தானி ஜாயந்தே யேந ஜாதானி ஜீவந்தி யத்ப்ரயந்த்யபி4ஸம்விஶந்தி, தத்விஜிஜ்ஞாஸஸ்வ தத்3 ப்3ரஹ்மேதி" என்கிறபடியே உலகைப்படைத்து அளித்து அழிப்பதே அந்தக் கர்ம ஸமாராத்யனான பரமனுக்கு லக்ஷணமென்று காட்டிக் கொண்டு வேதாந்தங்களில ப்ரளயத்தை முதலிற்சொல்லி, அதற்குப் பின் ஸ்ருஷ்டியைச் சொல்லும் வழக்கத்தையொட்டி முதலில் 'ப்ரளய தசையைச்' சொல்லுகிறார். அதில், இங்கு ஸுபா3லோபநிஷத்தின் பொருள் உபப்3ரும்ஹணம் செய்யப்படுகிறது. அவ்வுபநிஷத்தில் இரண்டாவது கண்டத்தில் "ப்ருதி2வ்யப்ஸு ப்ரலீயதே" என்று தொடங்கி பூமி நீரிலும், நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று ஆகாசத்திலும், ஆகாசம் அஹங்காரத்திலும், அஹங்காரம் மஹானிலும், மஹான அவ்யக்தத்திலும், அவ்யக்தம் அக்ஷரத்திலும, அக்ஷரம் தமஸ்ஸிலும் லயிப்பதாகச் சொல்லி, "தம: பரே தே3வ ஏகீபூ4வதி" [தமஸ்ஸானது பரமாத்மாவிடம் ஒன்றுகிறது.] என்று 'தமஸ்' எனப்படும் மூலப்ரக்ருதியானது பரம்பொருளிடம் பிரித்துப் புணர்க்க முடியாதபடி ஒன்றுவதாகிற ப்ரளயம் கூறப்பட்டது. அவ்விஷயமே இங்கு 'தமோபூ4தம்' என்னும் பதத்தால் காட்டப்படுகிறது. (இதம் தமோபூ4தம் ஆஸீத்) ப்ரத்யக்ஷமாகக் காணப்படும இவ்வுலகம் 'தமஸ்' என்னும் நிலையையுடையதாயிருந்தது. ஸுபாலோபநிஷத்தில் 'ப்ருதிவீமுதலானவை தம் தம் காரணங்களில் லயமடைந்தன' என்று 'லயமடையும் பதார்த்தத்தை முதல் வேற்றுமையிலும், காரணத்தை ஏழாம் வேற்றுமையிலுமிட்டுப் பேசிற்று. இப்படிப் பேசும்போது 'முன் இருந்த கார்யப்பொருள் லயகாலத்தில் அழிந்து விடுகிறதோ' என்னும் ஐயம் ஏற்படக்கூடும்.

http://acharya.org

அஸத்கார்யவாதிகள் இப்படியே கூறுகிறார்கள். இவ்வையம தவிரப் பெறறு, ஏற்கனவே இருந்த கார்யப்பொருள் மற்றொரு நிலையை அடைகிறதேயொழிய அழிவதில்லை என்று தெளிவுபெறும்படியாக 'இவ்வுலகம தமஸ்ஸாகவே ப்ரளயகாலததில் இருந்தது' என்று ஸமாநாதிகரணமாக (ஒரே வேற்றுமையில) கூறப்படுகிறது இங்கு; இதுவே ஸத்கார்யவாதம எனப்படும்.

''ததேதத்க்ஷயம் நித்யம் ஜகந்முநிவராகிலம் ।
ஆவிர்பாவதிரோபாவ ஜந்மநாஶவிகல்பவத் ॥''

[வி-பு 1-22-60]

[முனிவாதலைவரே! தோற்றமும், மறைவுமாகிற பிறப்பழிவுப் பிரிவுகளையுடைய இவ்வனைத்துலகும என்றும குறையாததாகவும, நித்யமாகவுமிருப்பது] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணததிலும் உலகை நித்யமெனக்கூறுவதனமூலம் ஸத்கார்யவாதமே ஆதரிக்கப்பட்டதன்றோ. (தமோபூதம) இங்கு'தமஸ' எனப்படுவது மூலப்ரக்ருதியின பரமஸூக்ஷ்ம நிலையாகும. ஸாத்த்வதத்ரவ்யமும ஸத்வகுணமுடையதாயிருக்கையாலே, ரஜஸ்ஸும தமஸ்ஸுமே மூலப்ரக்ருதிக்குத தனிக்குணங்கள் எனறும கருததாலே ''ரஜஸ: பராகே'' முதலான விடங்களில் 'ரஜஸ' எனறும ஶப்தத்தாலும, ''தமஸ: பாஸதாத'' முதலானவிடங்களில 'தமஸ' எனறும ஶபதத்தாலும வேதங்களில குறிககபபடுகிறதன்றோ மூலப்ரக்ருதி. (தமோபூதம் ஆஸீத) தமஸ் எனனும் நிலையை உடையதாயிருந்தது. ''தமஸி லீயதே'' [தமஸ்ஸில லயமடைகிறது] என்று ஸுபாலோபனிஷத்தில 'கார்யமானது காரணமான தமஸ்ஸில் லயிக்கிறது' என்று சொனனதற்கு 'கார்யநிலையிலிருந்தபொருள காரணநிலையிலிருககும தமஸ்ஸாக ஆயிற்று' என்றே கருத்து என்று காட்டுகிறது. ஸ்ரீவிஷ்ணுபுராணததில், ''அக்நயவஸ்தே ச ஸலிலே வாய்வவஸ்தே ச தேஜஸி'' [(கார்யமான) ஜலமானது அக்னியெனனும (காரண) நிலையை அடைந்தவளவில; (கார்யமான) அக்னியானது வாயுவெனனும (காரண) நிலையை அடைந்தவளவில்] என்று கார்யப பொருள காரணததில லயிபபதாவது காரணநிலையை அடைவதேயாகும எனக்காட்டினரன்றோ வியாஸரின தந்தையான ஸ்ரீபராசரபகவான்.

இனி, ''இவ்வுலகமானது 'தமஸ' எனனும நிலையை அடைநதிருநததாகில், அது நமது புலன்களுககுப் புலப்பட

http://acharya.org

வேண்டாமோ? அப்படிப்புலப்படாததிலிருந்தே அப்படியொரு நிலை இல்லையென்று * அநுபலப்₃தி₄ப்ரமாணத்தாலே நிர்ணயிக்கலாமே'' என்னும ஐயத்தைத் தவிர்க்கிறது அடுத்தபடியாக: (அப்ரஜ்ஞாதம்) ப்ரக்ருஷ்டமான (சிறந்ததான) ப்ரத்யக்ஷ ஜ்ஞாநம் ப்ரஜ்ஞானம் எனப்படுகிறது. அந்த ப்ரஜ்ஞானத்தால் அறியத்தகாதது 'அப்ர ஜ்ஞாதம்' ஆகிறது. இந்தத் தமோநிலையானது அதிஸூக்ஷ்ம மானதாகையாலே ப்ரத்யக்ஷத்தால் அறிய யோக்₃யதையே அற்றது. அறிவதற்கு யோக்₃யதை (தகுதி) உள்ள பொருள் அறியப்படாம லிருந்தால்தான் அதை * அநுபலப்தி ப்ரமாணத்தாலே இல்லை செய்யமுடியும். இத்தமஸ்ஸோ வெனில் ப்ரத்யக்ஷத்தால் அறிய யோக்₃யதையே இல்லாததாகையாலே இதை அநுபலப்₃தி₄ப்ர மாணத்தால் இல்லைசெய்யமுடியாது என்று கருத்து.

இனி, ப்ரத்யக்ஷத்தால் அறியப்படாமலிருக்கைக்குக் காரணத்தைக் காட்டுகிறது அடுத்தபடியாக,— (அலக்ஷணம்) '' ஶப்₃த₃ஸ்பர்ஶவிஹீநம் தத்₃ரூபாதி₃பி₄ரஸம்யுதம் '' [(மூலப்ரக்ருதி யானது) ஶப்தஸ்பர்ஶங்களற்றது; ரூபம் ரஸம் கந்தம் என்னும் குணங்களோடு சேராதது.] என்கிறபடியே ரூபம் முதலிய லக்ஷணங்கள் (அடையாளங்கள்) அற்றதாகையாலே, ப்ரத்யக்ஷத் தால் அறியமுடியாதது என்று கருத்து.

இனி, ''கார்யங்களாகிற பஞ்சபூதங்களில் ஶப்தம் முதலான குணங்கள் காணப்படுகையால், காரணமான தமஸ்ஸிலும் அவை யிருக்கவேண்டுமே; இப்படி ஶப்தாதி லக்ஷணமுடையதானபின்பு, ப்ரத்யக்ஷத்தால் அறியத்தக்கதாகி, * அநுபலப்₃தி₄ப்ரமாணத்தால் இல்லைசெய்யக்கூடியதாகாதோ ?'' என்னும் ஐயம் தவிர்க்கப்படு கிறது அடுத்தபடியாக,— (அப்ரதர்க்யம்) சாஸ்திரங்கொண்டே அறியத்தக்கதான இத்தமஸ்ஸின் விஷயத்தில் சாஸ்திரத்திற்குப் புறம்பான முற்கூறிய தர்க்கங்கள் விலைசெல்லமாட்டா என்கிறது.

---

* ஆகாயத்தாமரை போனறதொரு பொருள் இருந்ததாகில், அது எவருக்காவது காணப்படும். அப்படி எவர்க்கும் காணப் படாமையாலே அப்படியொரு பொருள் இல்லை என்று நிரூபிக்கும ப்ரமாணம் 'அநுபலப்₃தி₄' எனப்படும். இந்திரியங்களால் அறியத் தக்க பொருள்களையே இப்ரமாணத்தால் இல்லைசெய்யமுடியும். அதீந்திரியமான பொருள்களை இதுகொண்டு இல்லைசெய்ய முடியாது. அதனாலேயே இது 'யோக்₃யாநுபலப்₃தி₄' என்றும் கூறப்படும்.

http://acharya.org

அந்தத் தர்க்கங்கள் சாஸ்திரவசனங்களாலே பாதிக்கப்படுகின்றன என்று கருத்து. அன்றிககே, 'அப்ரஜ்ஞாதமலக்ஷணம்' என்று ப்ரத்யக்ஷாதிலக்ஷணமின்மையாலே ப்ரத்யக்ஷங்கொண்டு அறியமுடியாது என்று கூறி, 'அலக்ஷணமப்ரதர்க்யம்' என்று நெருப்பை ஸாதிக்கும் தூமாதிகளைப்போலே லிங்கங்கள் (அடையாளங்கள்) ஒன்றுமில்லாமையால, இத்தமஸ்ஸானது அநுமானத்தாலும் அறிய இயலாதது என்று கூறுகிறதாகவுமாம். ஆக, இது சாஸ்திரங்கொண்டே அறியத்தக்கது என்றதாயிற்று.

இனி, "தம: பரே தே₃வ ஏகீப₄வதி" [தமஸ்ஸானது பரமாத்மாவிடம் ஒன்றுகிறது] என்று ஸுபாலோபநிஷத்தில 'தமஸ்ஸானது பரமாத்மாவிடம் பிரித்தறிய முடியாதபடி ஒன்றுகிறது' என்று கூறப்பட்ட அர்த்தத்தைக் காட்டுகிறது அடுத்தபடியாக,—(அவிஜ்ஞேயம்) விஜ்ஞாநமாவது,—விப₄ாகம் செய்து அறிதல். அதாவது—பரமனைவிட்டுப் பிரித்து அறிதல்; அப்படி அறியமுடியாதபடி, பாலில் நீர்போலே கலந்திருப்பது அவிஜ்ஞேயம் எனப்படுகிறது. கார்யநிலையில பரமனைவிட்டுப் பிரித்து நமபோல்வாரால அறியலாமபடியிருந்த இது, காரணநிலையில அப்படி அறியமுடியாததாயிற்று என்று கருத்து.

அப்படியானால், ப்ரஹ்மஸ்வரூபமும் இதுவும் ஒன்றேயாயிற்றோ? எனில்: (ப்ரஸுப்தமிவ) தூங்கும நிலையில ஜீவன் பரமாத்மாவோடு ஒன்றுமபோது, அவரைவிட்டுப் பிரிததுப்பார்க்க முடியாத நிலையையடைகிறானேயொழிய அவரோடு ஸ்வரூபைக்யமடைவதில்லை. அப்படியே இதுவும் பரமனைவிட்டுப் பிரித்துப் பார்க்கமுடியாதபடி ஒன்றிநிற்கிறதேயொழிய ஸ்வரூபைக்யமடைவதில்லை என்று கருத்து. 'தூங்கும் நிலையில் ஜீவனுடைய ப்ராணன்கள லயிப்பதில்லை; அதுபோல் இங்கும் ஏகதே₃ஶலயமதானே?' எனில்: (ஸர்வத: ப்ரஸுப்தமிவ) எல்லாப்படியாலும தூங்குவது போலிருப்பது; அங்கு போல ஏகதேஶலயமன்று. ஸர்வப்ரகாரலயம இது என்று கருத்து. ஆக, சேதநாசேதனங்கள் பரமனிடம ஒன்றியிருந்தபடியைப் பேசிற்று. அன்றிக்கே, 'அவிஜ்ஞேயம' என்பதிற்க அசேதநமாத்தின லயமும, 'ப்ரஸுப்தமிவ ஸர்வத:' என்று சேதனாகளின் ஸர்வப்ரகாரலயமும பேசப்படுகிறதாகவுமாம். முதல பக்ஷத்தில இத₂மப்தத்தாலே அசேதநங்களோடு கூடிய சேதனங்களையெடுக்கிறது; இரண்டாம பக்ஷத்தில் அசேதனமாத்திரத்தையெடுக்கிறது.

http://acharya.org

2. தத: ஸ்வயம்பூ₄ர் ப₄க₃வாநவ்யக்தோ வ்யஞ்ஜயந்நிதம் ।
மஹாபூ₄தாதி₃வ்ருத்தௌஜா: ப்ராது₃ராஸீத் தமோநுத₃: ॥

தத:—ப்ரளயத்திற்குப் பிற்பட்ட ஸ்ருஷ்டிகாலத்தில், ஸ்வயம்பூ₄:ப₄க₃வாந்—(தனக்கொரு காரணமற்றவனாய்த்) தானேயுண்டான பரமபுருஷன். இத₃ம் வ்யஞ்ஜயந்–(வ்யஷ்டி ரூபமான) இக்கார்யப்பொருள்களை வெளிப்படுத்துவதற்காக. மஹாபூ₄தாதி₃வ்ருத்தௌஜா:-ஐம்பெரும்பூதங்கள். (அவற்றுக் குக்காரணமான) மஹத₃ஹங்காரங்கள் ஆகியவற்றைத் தூண்டும் (ஸங்கல்பரூபஜ்ஞானமாகிற) தேஜஸ்ஸையுடைய வனுவதற்காக, தமோநுத₃:-(கண்ணைவிட்டுப் பிரித்துப்பார்க்கக் கூடிய) தமஸ்ஸை சரீரமாகக்கொண்டவனாகி. அவ்யக்த:–(அதற்குப்பின்) அவ்யக்த நிலையையடைந்த மூலப்ரக்ருதியை சரீரமாகக்கொண்டவனாகி. ப்ராது₃ராஸீத்–தோன்றினான்.

இந்த ச்லோகத்தில், பகவான் ஸ்ருஷ்டி செய்யத்தொடங்கிய ப்ரகாரம் விவரிக்கப்படுகிறது. (தத:) "ப்ரதா₄நபுருஷௌ சாபி ப்ரவிச்யாத்மேச்ச₂யா ஹரி:। க்ஷோபயாமாஸ ஸம்ப்ராப்தே ஸர்க்க₃காலே வ்யயாவ்யயௌ॥" [வி-பு 1-2-29] [விகாரமுள்ள ப்ரக்ருதியையும், விகாரமற்ற புருஷனையும். ஹரியானவர் ஸ்ருஷ்டிகாலம்வந்தவளவில் தன் ஸங்கல்பத்தாலே உள்நுழைந்து (ஸ்ருஷ்டியின் பொருட்டுத்) தூண்டினார்.] என்கிறபடியே ப்ரளயத்திற்குப் பிற்பட்ட ஸ்ருஷ்டி காலம் வந்தவளவில். இவர் பல பொருள்களைப் படைப்பதுபோலே, இவரைப்படைத்தார் யாரேனுமுண்டோ? எனில்: (ஸ்வயம்பூ₄:) தானேயிருப்பவராகையாலே இவரைப்படைத்தவர் எவருமிலர் என்று கருத்து. 'ஸ்வயம்பூ₄:' என்னும் சப்தம் பிரமனைக்குறித் தன்றோ சாஸ்திரங்களில் பிரயோகிக்கப்படுகிறது? எனில்; பரம காரணத்தைக்கூறும் இந்த 'ஸ்வயம்பூ₄:' என்னும் பதம், அப்பிர மனையும் படைத்த நாராயணனிடமே மிகப்பொருந்தி நிற்கும். அவனைக்குறித்து பாரதாதிகளில பிரயோகிக்கப்படுவதையும் பார்க் கிறோம். ஸபாபர்வத்தில் "அவ்யக்தோவ்யக்தலிங்க₃ஸ்தோ ய ஏஷ ப₄க₃வாந் ப்ரபு₄:। புரோ நாராயணோ தே₃வ: ஸ்வயம்பூ₄: ப்ரபிதாமஹ:॥" [அனுவிட்டு அறியப்படாதவராய், அறியப்படும் அடையாளங்களிலு மிருப்பவராய், பகவானாய், தலைவனாய், தேவனாய், தானேயுண்டான வராய், பிதாமஹனான பிரமனுக்கும் தந்தையாயிருந்தார் நாராயணன்.] என்று தொடங்கி "தத: ஸ ப₄க₃வாம்ஸ்தோயே

http://acharya.org

ப்₃ரஹ்மாணமஸ்ருஜத் ஸ்வயம்'' [அதற்குப்பின் நீரிலிருந்த அந்த பகவானே, பிரமனைப்படைத்தார்.] எனப்பிரமனையும் படைத்த நாராயணனிடம ஸ்வயம்பூ₄ ஶப்தம பிரயோகிக்கப்பட்டது. மோக்ஷ தர்மத்திலும ''நாராயணோ ஜக₃ந்மூர்த்தி:'' என்று தொடங்கி, ''ததஸ் தேஜோமயம் தி₃வ்யம் பத்₃மம் ஸ்ருஷ்டம ஸ்வயம்பு₄வா! தஸ்மாத் பத்₃மாத ஸமப₄வத் ப்₃ரஹ்மா வேத₃மயோ நிதி₄:!!'' [அதற்குப்பின் தேஜோமயமாய, திவ்யமானதான தாமரை தானேயுண்டான பகவானுல படைக்கப்பட்டது; வேதமயநிதிபோன்றவனுன பிரமன் அந்தாமரையில தோன்றினுன] என்று பிரமனைப்படைத்த நாரணனைக்குறித்து ஸ்வயம்பூ₄ஶப்தம வழங்கப்பட்டது. ''விஷ்ணு ரேவாதி₃ ஸர்கேஷு ஸ்வயம்பூ₄ர் ப₄வதி ப்ரபு₄:'' [ஆதிஸ்ருஷ்டி காலங்களில் தலைவரான விஷ்ணுவே 'ஸ்வயம்பூ₄:' எனப்படுகிறுர்.] என்று ஆஶ்வமேதிகபர்வத்திலும் ஆதிஸ்ருஷ்டியைச் சொல்லும் போது விஷ்ணுவே 'ஸ்வயம்பூ₄:' எனப்படுகிறுா என்று கூறப்பட்டது. இந்த மநுஸ்ம்ருதியிலும ஆதிஸ்ருஷ்டியே கூறப்படுகையாலும், பிரமனைப்படைத்ததாக மேலே கூறுகையாலும, பகவானென்றும், நாராயணனென்றும இந்த ஸ்வயம்புவை விஶேஷிக்கையாலும், மற்ற ஶ்ருதி ஸ்ம்ருதிவாக்யங்களிலும நாராயணனே பிரமனைப் படைத்தவனென்றும் தானேயுண்டானவனென்றும கூறுகையாலும் இங்கு, 'ஸ்வயம்பூ₄:' என்னும் ஶப்தம் பகவானுன நாராயணனையே குறிக்கக்கடவது.

பகவானுன நாராயணனே இவன் என்று காட்டுவதற்காகவும், ஸ்ருஷ்டிக்குறுப்பான குணங்கள இவனிடம் நிறைந்திருக்கின்றன என்பதை உணர்த்துவதற்காகவும ப₄க₃வச்ச₂ப்₃த₃த்தைப பிரயோகிக்கிறது அடுத்தபடியாக,— (ப₄க₃வாந)

''ப₄க₃வாநிதி ஶப்₃தோ₃(அ)யம ததா₂ புருஷ இத்யபி।
நிருபாதீ₄ ச வர்த்தேதே வாஸுதே₃வே ஸநாதநே ||''

[பகவான் என்னும் சப்தமும, புருஷன் என்னும் சப்தமும், இயற்கையாகவே ஸநாதனனுன வாஸுதேவனிடத்திலேயே பொருந்துகின்றன.] என்று வராஹபுராணத்திலும,

''ஶுத்₃தே₄ மஹாவிபூ₄த்யாக்₂யே பரே ப்₃ரஹ்மணி ஶப்₃த₃யதே।
மைத்ரேய! ப₄க₃வச்ச₂ப்த₃ஸ் ஸர்வகாரணகாரணே ||
ஸம்ப₄ர்த்தேதி ததா₂ ப₄ர்த்தா ப₄காரோ(அ)ர்த்தத₂த்₃வயாந்வித:।
நேதா க₃மயிதா ஸ்ரஷ்டா க₃காரார்த்த₂ஸ் தத: ஸ்ம்ருத: ||

http://acharya.org

ஐஶ்வர்யஸ்ய ஸமக்₃ரஸ்ய வீர்யஸ்ய யஶஸ: ஶ்ரிய:।
ஜ்ஞாந வைராக்₃யயோஶ்சைவ ஷண்ணாம் ப₄க₃ இதீரணா॥
வஸந்தி தத்ர பூ₄தாநி பூ₄தாத்மந்யகி₂லாத்மநி।
ஸ ச பூ₄தேஷ்வஶேஷேஷு வகாரார்த்த₂ஸ் ததோऽவ்யய:॥
ஜ்ஞாநஶக்தி ப₃லைஶ்வர்ய வீர்யதேஜாம்ஸ்யஶேஷத:।
ப₄க₃வச்ச₂ப்₃த₃வாச்யாநி விநா ஹேயைர் கு₃ணாதி₃பி₄:॥
ஏவமேஷ மஹாஶப்₃தோ₃ மைத்ரேய ப₄க₃வாநிதி।
பரமப்₃ரஹ்மபூ₄தஸ்ய வாஸுதே₃வஸ்ய நாந்யக₃:॥
தத்ர பூஜ்ய பதா₃ர்த்தோ₂க்தி பரிபா₄ஷா ஸமந்வித:।
ஶப்₃தோ₃ऽயம் நோபசாரேண அந்யத்ர ஹ்யுபசாரத:॥"

[வி-பு 6-5]

[*மைத்ரேயரே! சுத்தமானதும், 'மஹாவிபூதி' என்னும் பெயரையுடையதும், காரணபுருஷர்களுக்கெல்லாம் காரணமாயிருப்பதுமான பரப்ரஹ்மத்தினிடத்தில் பகவச்சப்தம் சொல்லப்படுகிறது. '(ப்ரக்ருதியை) கார்யதசை அடையச்செய்பவன், 'ஸ்வாமி' என்னும் இரண்டு பொருள்களுடன கூடியது ப₄காரம். அப்படியே 'ரக்ஷிப்பவன், ஸம்ஹரிப்பவன, ஸ்ருஷ்டிப்பவன்' எனபவை 'க₃' என்னுமெழுத்தின் அர்த்தமென்று சொல்லப்படுகிறது. ஸம்பூர்ணமான ஐச்வர்யம், வீர்யம், கீர்த்தி, செல்வம், ஜ்ஞானம், வைராக்யம் என்னும் இந்த ஆறு குணங்களுக்கும் 'ப₄க₃' என்னும் பதம் வாசகமாயிருக்கிறது. பூதங்களை சரீரமாகக்கொண்டவனும், எல்லாவற்றுக்கும் ஆத்மாவாயிருப்பவனுமான அவனிடத்தில் பூதங்கள் வஸிக்கின்றன. அவனும் எல்லா பூதங்களிலும் வஸிக்கிறான். ஆகையால் அழிவற்றவனை பகவான் வகாரத்துக்கு அர்த்தமாகிறான். கீழானவையான முக்குணங்கள் முதலியவற்றுடன் சேராத 'ஜ்ஞானம், சக்தி, பலம், ஐச்வர்யம், வீர்யம், தேஜஸ்' என்னும் எல்லாக்குணங்களும் 'பகவான்' என்னும் சப்தத்தினால் சொல்லப்படுகின்றன. மைத்ரேயரே! இம்மாதிரியாக பகவான் என்ற இந்த மஹாசப்தம் பரப்ரஹ்மமான வாஸுதேவனுக்கே உரியது. வேறொருவரையும் குறிக்காது. பூஜிக்கத்தக்க பொருளைக்குறிப்பதாகிய இந்த சப்தம் அவன் விஷயத்தில் ஔபசாரிகமாகச் சொல்லப்படுவதில்லை. மற்றவர்கள் விஷயத்தில்தான் ஔபசாரிகமாக (அமுக்கியமாகச்) சொல்லப்படுகிறது.*] என்று விஷ்ணுபுராணத்திலும் பகவச்ச₂ப்தம் ஸகலகல்யாணகுணங்களையுமுடைய நாரணனையே முக்கியமாகக்குறிக்கும் என்று காட்டப்பட்டதன்றோ.

http://acharya.org

(இத₃ம் வ்யஞ்ஜயந்) இப்போது, நாம் கண்ணுல் காணும் வ்யஷ்டி ரூபமான கார்யப்பொருள்களை வெளிப்படுத்துவதற்காக. 'ப்ராது₃ராஸீத்' [தோனறினுன்] என்று மேலே கூட்டிக்கொள்வது. ''லக்ஷணஹேத்வோ: க்ரியாயா:'' என்னும் வியாகரண ஸூத்ரபபடி 'வ்யஞ்ஜயந' என்றவிடததில் ஶதருப்ரத்யயம் 'ஹேது' எனனும பொருளையுடையது. இவனுடைய தோற்றம இப்போது நாம் காணும கார்யப்பொருள்களை வெளிபடுத்துவதற்கு ஹேதுவாகவேயானது எனறு கருத்து.

இனி, இந்த வ்யஷ்டிப்பொருள்களுக்கு முன் நிலைகளைக கூறுகிறது.— (மஹாபூ₄தாதி₃வ்ருததௌஜா:) ப்ருதி₂வீ(பூமி), அப்பு (ஜலம்), தேஜஸ்ஸு(தீ), வாயு(காறறு), ஆகாஶம்(வெளி) எனனும் ஐந்து மஹாபூ₄தஙகளையும, அவற்றுக்கு மூல காரணமான மஹாந, அஹங்காரம என்னும தத்துவங்களையும குறித்து ப்ரவ்ருத்தமான ஸங்கலபரூபஜ்ஞாநமாகிற தேஜஸ்ஸை உடையவன. மஹாபூ₄த ஶபதம ஐமபெருமபூதஙகளைக் குறிக்கிறது இது ஐந்து தந்மாதரைகளுக்கும, பதினெரு இந்திரியங்களுக்கும உபலக்ஷணம. ஆதி₃ ஶப்தத்தாலே இவற்றுககுக்காரணமான மஹததத்வமும், அஹஙகார தத்துவமும உபாத்தப்படுகிறேன. 'வருதத' எனறது ப்ரவ்ருத்தமான எனறபடி இவற்றை ஸ்ருஷ்டிப்பதில் ஈடுப்பட்ட எனறபடி. 'ஓஜ:' என்னும ஶபதம இவற்றை ஸ்ருஷ்டிப்பதில ஈடுபட்ட ஸஙகல்பரூ''ஜ்ஞானமாகிற தேஜஸ்ஸைக குறிககிறது. இப்படிப்பட்ட ஸங்கல்பத்தை உடையவனுவதறகாக எனறு இங்கும கொள்ளவேண்டும.

மஹானுக்கும் முன் நிலையைச் சொல்லுகிறது,— (அவ்யக்த: ப்ராது₃ராஸீத) அவ்யக்த நிலையையடைநத மூலப்ரக்ருதியை ஶரீரமாகக் கொண்டவனுகித் தோன்றினுன். இது இதற்கும முன் நிலையான அக்ஷரம் எனனும நிலையையடைந்த மூலபரக்ருதியை சரீரமாகக் கொணடமைக்கும உபலக்ஷணம். ''மஹாநவ்யக்தே லீயதே: அவ்யக்தமக்ஷரே லீயதே'' [ஸுபால] [மஹத்தத்வம் அவ்யக்தத்தில் லயிக்கிறது; அவ்யக்தம அக்ஷரத்தில லயிககிறது] என்று வேதம் அவ்யக்தநிலைக்கும் முன் நிலையாக அக்ஷரநிலையைக் கூறுகினறனரே.

இதற்கும் முன் நிலையைக் கூறுகிறது,—(தமோநுத₃:) ''ஆஸீதி₃த₃ம் தமோபூ₄தம'' என்று முன ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட அவிப₄கதமான (பரமனிடமிருந்து பிரித்துப்பார்க்கமுடியாத) தமஸ்ஸை

http://acharya.org

ஶரீரமாகக்கொண்டிருந்தவன், அதற்கடுத்தபடியாக விப$_4$க்தமான (பிரித்துப் பார்க்கக்கூடிய) தமஸ்ஸை ஶரீரமாக உடையவனுக ஆகி, மூற்கூறியபடி அக்ஷர நிலையையும் அவ்யக்த நிலையையும் அடைந்த ப்ரக்ருதியை சரீரமாகக் கொண்டவனுகித் தோன்றினன். இப்படித் தோன்றியது மஹதஹங்காரங்களைப்படைத்து, இந்திரியங்களையும் தந்மாத்ரங்களையும பஞ்சபூதங்களையும் அவற்ருலுண்டான மற்ற (வ்யஷ்டி)கார்யப்பொருள்களையும் படைப்பதற்காக என்று ஶ்லோகத்தின் திரண்ட பொருள். "அக்ஷரம் தமஸி லீயதே" [ஸுபால] என்று ஶ்ருதிசொல்லுகையாலே, இங்கு தமஶ் ஶப்$_3$த$_3$ம் விப$_4$க்தமான தமஸ்ஸைச் சொல்லுகிறது; "ஆஸீதி$_3$த$_3$ம் தமோபூ$_4$தம்" என்ற முன் ஶ்லோகத்தில் "தம: பரேதே$_3$வ ஏகீப$_4$வதி" [ஸுபால] [தமஸ்ஸு பரதெய்வத்திடம ஒன்றுகிறது] என்று ஶ்ருதியில் சொல்லப்பட்ட அவிப$_4$க்ததமஸ்ஸு சொல்லப்பட்டது என்று அறியத்தக்கது.

இங்கு சைவர்கள் ஓர் ஆக்ஷேபம் செய்யக்கூடும்:—'தமோநுத$_3$:' என்னும் பதத்தை 'தமோநுத்' என்னும் த$_3$காராந்த ஶப்தத்தின் ஐந்தாவது வேற்றுமையாகக்கொண்டு, "யதா$_3$ தமஸ் தந்ந தி$_3$வா ந ராத்ரி: ந ஸந்ந சாஸத் ஶிவ ஏவ கேவல:" [ஶ்வே] என்கிற ஶ்ருதியையொட்டித் தமஸ்ஸைத்தூண்டுபவனுய் நிமித்தகாரணமான சிவனிடமிருந்து அவ்யக்தத்தை அதி$_4$ஷ்டிக்கும் உபாதானகாரணமான நாராயணன் உண்டானுன் என்று பொருள்கொள்ளவேண்டாமோ? என்பதே அவ்வாக்ஷேபம். இதற்கு ஸமாதா$_4$நம் பின்வருமாறு: "யத$_3$ா தம:" என்னும வாக்யம் 'யதா$_3$' [எப்பொழுது] என்னும் பதத்தோடு கூடியிருக்கையாலே, வேறொரு ப்ரஸித்தமான ஶ்ருதி வாக்கியத்திற்கு அநுவாதம் என்று தெளிவாகிறது. அந்தப் புரோவாத$_3$வாக்யம் எது என்னும் கேள்வி பிறந்தவளவில் "ப்ருதிவ்யப்ஸு ப்ரலீயதே" (பூமி ஜலத்தில்லயிக்கிறது) என்று தொடங்கி, "அக்ஷரம் தமஸிலீயதே தம: பரே தே$_3$வ ஏகீப$_4$வதி. பரஸ்தாந் ந ஸந்நாஸந் ந ஸத$_3$ஸத்" [அக்ஷரம் தமஸ்ஸில் லயிக்கிறது; தமஸ் பரமாத்மாவிடம் ஒன்றுகிறது. அதற்குபின் ஸத்துமில்லை; அஸத்துமில்லை; ஸத$_3$ஸத்துக்களுமில்லை] என்பதிருசப்படிக்கப்படும் ஸுபாலோபனிஷத்வாக்யமே புரோவாதம் என்னத்தகுந்தது என்று விளங்கும். அவ்வுபனிஷத்திலேயே மேலே "நைவேஹ கிஞ்சந அக்$_3$ர ஆஸீத்$_3$ தி$_3$வ்யோ தே$_3$வ ஏகோ நாராயண:" [முதலில் இங்கு ஒன்றுமில்லை; பரமபத நிலயனுன நாராயணனுகிற தேவன் ஒருவனே இருந்தான்.] என்று நாராயணனையே ஸகலஜகத்காரணனுகச் சொல்லுகையாலும், "யஸ்

http://acharya.org

யாவ்யக்தம் ஶரீரம், யஸ்யாக்ஷரம் ஶரீரம், யஸ்ய ம்ருத்யு ஶரீரம்...... ஏஷ ஸர்வபூ₄தாந்தராத்மா அபஹத பாப்மா தி₃வ்யோ தே₃வ ஏகோ நாராயண:'' [எவனுக்கு அவ்யக்தம் ஶரீரமோ, எவனுக்கு அக்ஷரம் ஶரீரமோ, எவனுக்கு ம்ருத்யு எனப்படும் தமஸ் சரீரமோ, அவன் ஸர்வபூதங்களுக்கும் அந்தராத்மாவாய், பாபமற்றவனாய், பரமபதத்தில் எழுந்தருளியிருக்கும் நாராயணனாகிற தேவன் ஒருவனே.] என்று தமஸ்ஸை அதி₄ஷ்டித்திருப்பவன் நாராயணனே என்று சொல்லுகையாலும், இந்த மநுஸ்ம்ருதியிலும் ''தேந நாராயண: ஸ்ம்ருத:'' என்று மேலே இவனை நாராயணனாகவே எடுக்கையாலும், வேதாந்தங்கள் ஒருமிடருக நிமித்தகாரணமும், உபாதான காரணமும் ஒருவனே என்று கோஷிக்கையாலும், ஶ்வேதாஶ்வதரத்தில் தமஸ்ஸை அதி₄ஷ்டிப்பவனாய் சிவஶப்தத்தால் சொல்லப்பட்டவன் நாராயணனே என விளங்குகிறது. சாஸ்திரங்களில் பரம்பொருளைப் பற்றிப் பலவிடங்களில் படிக்கப்படும் ஶிவாதி ஶப்தங்கள் நாராயணனையே கூறும் என்பதை ''ஶாஶ்வதம் ஶிவமச்யுதம் நாராயணம்'' என்று நாராயணவல்லியும், ''ஸர்வ ஶர்வ: ஶிவ: ஸ்தா₂ணு:'' என்று ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ர நாமமும் காட்டித்தருகின்றன. ஆகையால் முற்கூறிய ஆக்ஷேபத்திற்கு இடமில்லை.

3. யோ௨ஸாவதீந்த்₃ரியக்₃ராஹ்யஸ் ஸூக்ஷ்மோ௨வ்யக்த: ஸநாதந: |
ஸர்வபூ₄தமயோ௨சிந்த்ய: ஸ ஏவ ஸ்வயமுத்₃ப₃பௌ₄ ||

ய: அஸௌ–எந்தப்பரமபுருஷன், அதீந்த்₃ரியக்₃ராஹ்ய:- இந்திரியங்களால் அறியத்தக்கவற்றைக் கடந்திருக்கிறானோ, ஸூக்ஷ்ம:– நுண்ணியவனாயிருக்கிறானோ, அவ்யக்த:—(அதனாலேயே) தெளிவாக அறியப்படாதவனாயிருக்கிறானோ, ஸநாதந:—எப்போதும் நழுவாத தன்மைகளையுடையவனாயிருக்கிறானோ, ஸ ஏஷ:–அந்தப் பரமபுருஷனே, அசிந்த்ய:– (ச்ருதி தவிர்ந்த ப்ரமாணங்களால்) நினைத்தற்கரியவனாயிருக்கையாலே, ஸ்வயம்–தானே நிமித்தகாரணமாயிருந்துகொண்டு, ஸர்வபூ₄தமய: உத்₃ப₃பௌ₄ — எல்லா ஸமஷ்டிவ்யஷ்டிப் பொருள்களாகவுமிருப்பவனாய் வெளிப்பட்டான்.

இந்த மூன்றும் ஶ்லோகத்தில், முன் ஶ்லோகத்தில் சொன்ன அவ்யக்த சப்தத்தை விவரித்துக்கொண்டு அவ்யக்த நிலைக்கு அடுத்த

http://acharya.org

படி நடந்த ஸமஷ்டி வ்யஷ்டி ஸ்ருஷ்டிகளைச் சுருக்கமாகக் கூறுகிறார். (ய: அஸௌ) முன் ஶ்லோகத்தில் சொல்லப்பட்ட எந்தப் பரம புருஷன். இவனை அறியவுதவும் பிரமாணம் எது? எனில்: அதீந்த்$_3$ரியக்$_3$ராஹ்ய:) அதீந்த்$_3$ரியமான சாஸ்திரத்தால் கிரஹிக்கத்தக்கவன். இந்திரியங்களால் அறியமுடியாத பொருள்கள்விஷயத்திலேயே ப்ரமாணமான சாஸ்திரத்தாலேயே அறியத்தக்கவன் என்றபடி. அன்றிக்கே, இந்திரியங்களால் அறியப்படுகின்ற பொருள்களைக் கடந்து நிற்பவன் எனறுமாம். இந்திரியங்களால் அறியப்படும் பொருள்களைக் கடந்துநிற்கும் தன்மை ஆகாசத்தாமரை முதலான இல்லாப்பொருளுக்கும் உண்டே; இங்கும் அப்படியோ? எனில்: அப்படியல்ல; மிக நுண்ணியவனாயிருக்கையாலேயே இந்த்$_3$ரியக்$_3$ராஹ்யங்களைக் கடந்து நிற்கிறான் என்கிறது அடுத்தபடியாக,— (ஸூக்ஷ்ம:)முற்கூறியபடி அவ்யக்தசரீரகனாயிருக்கும்போது ஸூக்ஷ்மமான நிலையிலிருக்கிறான். (அவ்யக்த:) அதனாலேயே, அந்நிலையில் தெளிவாக அறியப்படாதவன் எனப்படுகிறான். அசேதனமாய், தோஷங்களுக்கு இருப்பிடமான இந்த அவ்யக்தத்தை சரீரமாகக் கொண்டவனாகில், தோஷங்களுக்கு எதிர்த்தட்டாயிருக்கும் தன் தன்மையை இழந்துவிடுவானே? எனில்: (ஸநாதந:) எப்போதும் தன் தன்மையை இழக்காதவன் என்கிறார். (ஸ ஏஷ:) அப்படிப்பட்டவனே இப்படிகார்யமானான். இதனால் முன் சொல்லப்பட்ட காரணப் பொருளும் இனிச் சொல்லப்போகும் கார்யப்பொருளும் ஒரே திரவியமே என உணர்த்தப்படுகிறது. மண்ணையும் மண்குடத்தையும் போலக் காரணமும் கார்யமும் ஒன்றாகில், குயவனைப்போலே மற்றொரு நிமித்தகாரணம்வேண்டுமே? எனில்.-(ஸ்வயம்) தானே நிமித்த காரணமாகவுமிருக்கிறான் என்கிறது. உபாதானமான மண்ணானது குடமாம்போது குயவனாகிற வேறொரு நிமித்தகாரணம் தேவைப்படுவதைப்பார்க்கிறோம்; இங்கு நிமித்தோபாதனங்கள் இரண்டும் ஒன்றாயிருப்பது எப்படி ஒட்டும்? எனில்:(அசிந்த்ய:)ச்ருதிதவிர வேறு ப்ரமாணங்களால் நினைத்தற்கரியவனாயிருக்கையாலே ஒட்டும் என்கிறது. வேதம் இவன் இருவிதமான காரணமாகவும் ஆவதாகக் கூறுகையாலே, அதற்கு முரணான தர்க்கங்கள் இவன் விஷயத்தில் பயன்படமாட்டா என்று கருத்து. (ஸர்வபூ$_4$தமய: உத்$_3$ப$_3$பௌ$_4$) இப்படிப்பட்டவனாயிருக்கையாலே, இவனே எல்லா ஸமஷ்டிவ்யஷ்டிப் பொருள்களாகவும் வெளிப்பட்டான்; மண்ணும் குடமும்போல காரணமும் கார்யமும் ஒரே திரவியமாகில், அவ்விடத்தில் நிலைகளில் வேற்றுமையிருப்பதுபோலே இங்கும் இருக்கவேண்டுமே; இங்கு அவ்வேற்றுமை யாது; எனில்; (ஸூக்ஷ்ம: உத்$_3$ப$_3$பௌ$_4$)

அவ்யக்த ஶரீரகனுயிருந்தபோது ஸூக்ஷ்மநிலையிலிருந்தவன், இப்போது ஸ்தூலநிலையை அடைந்தவனாஆனுன. ஆகையால், ஸூக்ஷ்மமாகவும், ஸ்தூலமாகவுமிருக்கும் நிலைகளிலேயே வேற்றுமையேயொழிய, காரணமும, கார்யமும் வெவ்வேறு திரவியங்களல்ல என்றதாயிற்று. இங்கு காரணநிலையில் ஸூக்ஷ்மமாயிருந்தவன் கார்யநிலையில் ஸ்தூலமானுன் என்று கூறுகையால், 'ப்ரஹ்மம் நிர்விகாரம்' என்னும ஶ்ருதிகளுக்கு விரோதம் வாராதோ? எனில்.— ஸூக்ஷ்மமாயிருந்து, ஸ்தூலமாகையாகிற விகாரம் ப்ரஹ்மத்தின் சரீரமான சேதநாசேதனங்களிடம் நேரேயிருந்துகொண்டு, அவற்றை சரீரமாகக்கொண்டவனுயிருப்பதையிட்டு இவனிடம் உள்ளதாகையாலே, 'இவனுடைய ஸ்வரூபம் நிர்விகாரம்' என்று கூறும ஶ்ருதிகளுக்கு விரோதமில்லை. இப்படி நேரே விகாரமில்லையானுலும், காரணநிலையில ஸூக்ஷ்மப்பொருள்களை நியமிப்பவனுயிருந்து, கார்யநிலையில் ஸ்தூலபபொருள்களை நியமிப்பவனுகையாகிற விகாரம் இவனுக்கு நேரே ஏற்படுகையால் நிர்விகார ஶ்ருதி விரோதம் வருமே எனில் இவனுக்குத்தாழ்வைதரும் விகாரங்களில்லையென்று கூறுவதிலேயே நிர்விகாரஶ்ருதிகளுககு நோக்கேயொழிய, பெருமையைத்தரும் முற்கூறிய விகாரஙகள இல்லையென்று கூறுவதில் கருத்தில்லை. 'விகாத்தா' [ஸுபாலஉபனிஷத்) முதலான ஶ்ருதிவாக்யஙகள இத்தகைய பெருமையைத்தரும விகாரங்கள இவனுக்கு உணடென்று உணர்ததின. ஆகையால் நிர்விகார ஶ்ருதிவிரோதமில்லை.

4. ஸோऽபி4த்4யாய ஶரீராத் ஸ்வாத் ஸிஸ்ருக்ஷுர் விவித4ா: ப்ரஜா: |
அப ஏவ ஸஸர்ஜாதௌ3 தாஸு வீர்யமபாஸ்ருஜத் ||

ஸ:—அப்பரமபுருஷன், **அபி4த்4யாய**—ஸங்கல்பம் செய்து, **ஸ்வாத் ஶரீராத்**—தன் சரீரத்தினின்றும், **விவித4ா: ப்ரஜா:**—பலவிதமான வ்யஷ்டிப் பொருள்களை, **ஸிஸ்ருக்ஷு:**—ஸ்ருஷ்டிக்க விரும்பியவனுய், **அப ஏவ**—(அண்டகாரணமான) ஜலம் முதலானவற்றையே, **ஆதௌ3**—முதலில், **ஸஸர்ஜ**—படைத்தான; **தாஸு**—அவற்றில், **வீர்யம**—சக்தியை, **அபாஸ்ருஜத்**—ஏற்படுத்தினுன.

முன் ஶ்லோகத்தில் சுருக்கமாகச் சொல்லப்பட்ட ஸமஷ்டி வ்யஷ்டிஸ்ருஷ்டிகளில் ஸமஷ்டிஸ்ருஷ்டியை இந்த ஶ்லோகத்திலும வ்யஷ்டிஸ்ருஷ்டியை அடுத்த ஶ்லோகத்திலும் விவரிக்கிருன.

http://acharya.org

(ஸ) அந்தப் பரமபுருஷன். (அபி4த்4யாய) ஸங்கல்பம் செய்து. "ஸ ஏவ ஸ்வயமுத்ப5பெ4ள" என்று சென்ற ஶ்லோகத்தில் சொன்ன ரீதியில் தானே எல்லா தோஷங்களுக்கும இருப்பிடமான ஸமஷ்டி வ்யஷ்டிப்பொருள்களாக ஆனுனகில், 'ப4க3வாந்' என்றவிடத்தில் சொல்லப்பட்ட தோஷமற்றவனுயிருக்கும் தனமையும், கல்யாண குணங்களுக்கும் இருபபிடமாயிருக்கும் தன்மையும் முரண் படுமே? என்னும் ஆஶங்கையெழ, 'இவன் தானே ஸமஷ்டிவ்யஷ்டிப் பொருள்களாக ஆகவில்லை; தன் சரீரத்தையே அவையாக ஆக்கினுன்; ஆகையால் இந்த தோஷமில்லை' என்று காட்டுவதன்மூலம் சென்ற ஶ்லோகத்தை விவரிக்கிருர்,-(ஶரீராத் ஸ்வாத்) தன் ஶரீரத்தினின்றும் படைத்தான் என்று மேலோடே கூட்டிப் பொருள்கொள்வது. இங்கு சரீரசப்தத்தாலே 'தமஸ்' 'அவ்யக்தம்' என்னும் நிலைகளையுடையதாய் சேதனப் பொருள்களோடு கலசியதான அசேதனப் பொருள் கூறப் படுகிறது. 'தன் ஶரீரத்தினின்றும் ஸங்கல்பத்தாலே படைத்தான்' என்று கூறுகையாலே, மநுவுக்கு ஸாங்க்யமதம், அத்வைத ஸித்தாந் தம முதலிய கொள்கைகள் அநிஷ்டமென்றும், விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே இஷ்டமென்றும விளங்குகிறது. இது நாம் சொல்லு வதன்று; ப4ாஸ்கரமதத்தைச் சேர்ந்தவரான மநுஸ்ம்ருதிவ்யாக் யாதாவான குல்லூகபட்டர் பொறித்து வைத்ததாகும். "அபி4த்4யாந பூர்விகாம் ஸ்ருஷ்டிம் வத3தோ மநோ: ப்ரக்ருதிரேவாசேதநா ஸ்வதந்த்ரா பரிணமதே—இத்யயம் பக்ஷோ ந ஸம்மத:। கிந்து ப்3ரஹ்மைவ அவ்யாக்ருத ஶக்த்யாத்மநா ஜக3த்காரணம் இதி த்ரித3ண்டி3வேதா3ந்த ஸித்3தா4ந்த ஏவாபி4மத: ப்ரதிபா4தி" [ஸங்கல்பத்தை முன்னிட்ட ஸ்ருஷ்டியைச் சொல்லும் மனுவுக்கு, 'அசேதனமாய், ஸ்வதந்த்ர மான (ப்ரஹ்மாத்மகமல்லாத) மூலப்ரக்ருதியே உலகாகப் பரிணா மிக்கிறது' என்னும் பக்ஷம் இஷ்டமன்று; 'ப்ரஹ்மமே அவ்யாக்ருத மான (ஶரீர) ஶக்தியைக்கொண்டு ஜகத்காரணமாகிறது' என்னும் த்ரித3ண்டி (ராமாநுஜ) வேதாந்த ஸித்தாந்தமே இஷ்டமானது என்று விளங்குகிறது" என்று கல்வெட்டைப்போலே காட்டினுரன்ருே குல் லூக பட்டர். இத்தகைய ப்ராமாணிகத்வத்தை வேறு எந்தப் பிற மதச்சான்ருேரிடமும் நாம் காண்கின்றிலோம்.

(ஸிஸ்ருக்ஷுர் விவித4ா: ப்ரஜா:) விதவிதமான வ்யஷ்டிப்பொருள் களை ஸ்ருஷ்டிக்க விரும்பியவனுய்; அடுத்த ஶ்லோகத்தில் சொல்லப் படும் அண்டம் பிரமன் முதலான வ்யஷ்டிப் பொருள்களே இங்கு 'விதவிதமான பிரஜைகள்' என்று கூறப்படுவதாகக் கொள்வதே உசிதமன்ருே.(அபி4த்4யாய ஶரீராத் ஸ்வாத்...)"ஸோऽகாமயத ப3ஹு

http://acharya.org

ஸ்யாம் ப்ரஜாயேய'' ['நானே பலவாகக்கடவேன்' என்று அப்பரம்பொருள் ஸங்கல்பித்தது] என்ற ஶ்ருதியை இங்கு விவரிக்கிறது. (அப: ஸஸர்ஜ) ஜலத்தைப் படைத்தான். ''தானோர் பெரு நீர் தன்னுள்ளே தோற்றி அதனுள் கண்வளரும் வானோர் பெருமான் மாமாயன் வைகுந்தன் எம்பெருமானே' [திருவாய் 1-5-4] என்றார் ஆழ்வாரும். இங்கு ஜலம் என்றது அண்டகாரணமான பஞ்சமஹாபூ₄தங்கள் முதலான எல்லா ஸமஷ்டிப் பொருள்களுக்கும் உபலக்ஷணம். 'மஹாபூ₄தாதி₃வ்ருத்தௌஜா:' என்றவிடத்தில இவ்வர்த்தம் விளக்கப்பட்டது. ஐம்பெரும்பூதங்கள் முதலானவற்றை ஜலத்தையிட்டு உபலக்ஷிக்கக் காரணமென? எனில்,—''தா இமா ஆப: ததௌ₃ஹிரண்யமண்ட₃மப₄வத்'' [அப்படிப்பட்ட இந்த ஜலங்களே பொன்மயமான அண்டமாயிற்று] என்று ஶ்ருதி சொன்ன ரீதியிலே ப்ருதி₂வீபா₄கத்தை அதிகமாகக்கொண்ட அண்டத்திற்கு இடையிடாத காரணம் ஜலமேயாகையாலே, அதையிட்டுத் தீ முதலான முற்பட்ட காரணப்பொருள்களை உபலக்ஷிக்கிறது. இந்த ஶ்ருதியிலுள்ள 'ஆப:' என்னும் ஶப்தத்தை நினைவுறுத்துவதற்காகவே 'அப ஏவ' என்கிறார்.

(ஆதௌ₃ ஸஸர்ஜ) அண்டம் முதலான வ்யஷ்டிப்பொருள்களைப் படைக்குமுன் நீரைப்படைத்தான் (அப ஏவ ஆதௌ₃ ஸஸர்ஜ) த்ரிவ்ருத்கரணம் செய்யப்படாத நீரையே முதலில் படைத்தான். மேலே 'தாஸு வீர்யம் அபாஸ்ருஜத்' என்று த்ரிவ்ருத்கரணம் சொல்லப்படப் போகிறதாகையாலே, இங்கு 'ஏவ'காரத்தாலே அப்படி த்ரிவ்ருத்கரணம் செய்யப்படாத பூதங்களை ஸ்ருஷ்டித்தமையைக் காட்டுகிறது. த்ரிவ்ருத்கரணமாவது,—ஒன்றுக்கொன்று கலசாமல் தனித்தனியே நிற்கும் தீ, நீர், பூமி என்னும் மூன்று பூதங்களில் ஒவ்வொன்றிலும் பாதிபாகத்தையும் மற்றையிரண்டில் கால் கால் பாகங்களையும் சேர்த்து, ஒன்றொடொன்று கலசியதாக இப்போது நாம் காணும் தீ, நீர், பூமி என்னும் பூதங்களை உண்டாக்குகை. ஒன்றுக்கொன்று கலசாமல், தனியே நின்ற ஐம்பெரும் பூதங்களையும் எடுத்துக்கொண்டு அவை ஒவ்வொன்றிலும் பாதி பாகத்தையும் மற்றை நான்கில் அரைக்கால் அரைக்கால் பாகங்களையும் சேர்த்து ஒன்றொடொன்று கலசியதாக இப்போது நாம் அறியும் ஐம்பெரும் பூதங்களைப் படைக்கை பஞ்சீகரணம் எனப்படும். ''ஸேயம் தே₃வதைக்ஷத, ஹந்தாஹமிமாஸ் திஸ்ரோ தே₃வதா அநேந ஜீவேநாத்மநாऽநுப்ரவிஶ்ய நாமரூபே வ்யாகரவாணி, தாஸாம் த்ரிவ்ருதம் த்ரிவ்ருதம் ஏகை

http://acharya.org

காம் கரவாணி'' [சாந் 6-5-2] [இந்த ஜீவனை சரீரமாகக்கொண்ட நான் தீ, நீர், பூமி எனனும் இம மூன்றையும் வியாபித்து நாமரூபங் களைச் செய்யக்கடவேன; த்ரிவருத்காரணம் செய்யக் டவேன] என்று த்ரிவ்ருத்கரணம் சொல்லுமிடங்களில் பஞ்சீகரணமே உபலக்ஷிக்கப் படுகிறது. இப்படி ப்ருதிவீ முதலான ஒவ்வொரு பூதத்திலும் மற்ற பூதங்களின் பகுதிகள் கலசியிருந்தபோதிலும, அவற்றில் பிருதிவி முதலானவற்றின்பாகமே அதிகமாகவும், மற்றபூதங்களின்பாகம குறைவாகவுமிருப்பதாலேயே அவற்றை 'பிருதிவீ' முதலான சப்தங்க ளால் வழங்கவுபதட்டில்லை என்பதை ப்ரஹ்ம ஸூத்ரத்தின் இரண்டா மத்தியாயத்தின் கடைசி ஸூத்ரத்திலே ''வைஶேஷ்யாத் து தத்₃வா த₃ஸ் தத்₃வாத₃:'' என்று வேத₃வ்யாஸர் காட்டினர்.

(தாஸூ) இப்படி த்ரிவ்ருத்கரணம் செய்யப்பெருமையாலே ஒன்றேடொன்று கலசி அண்டத்தை உண்டாக்க முடியாமலிருந்த அந்த நீர் முதலானவற்றில். (வீர்யமபாஸ்ருஜத்) த்ரிவ்ருத்கரணம் செய்து, அதனுல் ஏற்பட்ட, அண்டத்தை உண்டாக்கவல்ல சகதி யைப் படைத்தான் என்கிறது.

''நாநாவீர்யா: ப்ருத₂க்₃பூ₄தாஸ் ததஸ்தே ஸம்ஹதிம் விநா।
நாஶக்நுவந் ப்ரஜா: ஸ்ரஷ்டும் அஸமாக₃ம்ய க்ருத்ஸ்நஶ:॥
ஸமேத்யாந்யோந்ய ஸம்யோக₃ம் பரஸ்பரஸமாஶ்ரயா:।
ஏகஸங்கா₄தலக்ஷ்யாஶ்ச ஸம்ப்ராப்யைக்யமஶேஷத:॥
புருஷாதி₄ஷ்டி₂தத்வாச்ச அவ்யக்தாநுக்₃ரஹேண ச।
மஹதா₃த்₃யா விஶேஷாந்தா ஹ்யண்ட₃முத்பாத₃யந்தி தே॥''
[வி பு 1-2-52, 53, 54]

[மிகவும் திரவமாயிருக்கை, மிகவும் கடினமாயிருக்கை முதலான விதவிதமான சக்தியை உடையவையாய், தனித்தனியேயிருந்த அந்த ஸமஷ்டிப் பொருள்கள், (பஞ்சீகரணத்தாலே) ஒன்றேடொன்று கலந்து ஒன்ருகாமல், அண்டம் முதலான வ்யஷ்டிப் பொருள்களைப் படைக்க வல்லமையற்றவையாயிருந்தன. (பஞ்சீகரணத்தாலே) ஒன்றெழியாமல் ஒன்றேடொன்று கலந்து ஒன்றுன அண்டத்தைப் படைப்பதற்காக ஒன்ருகி, ஜீவனுல் அதி₄ஷ்டிக்கப்பட்டிருக்கை யாலும், மூலப்ரக்ருதியால் வியாபிக்கப்பெற்றிருக்கையாலும் மஹான் தொடங்கிப் பஞ்ச பூதங்களீருகவுள்ள எல்லாத்தத்துவங்களும் அண்டத்தை உண்டாக்குகின்றன.] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் சொல்லப்பட்டது இங்கு அனுஸந்திக்கத்தக்கது.

http://acharya.org

5. ததண்ட₃மப₄வத்₃தை₄மம் ஸஹஸ்ராம்ஶு ஸமப்ரப₄ம் ।
தஸ்மின் ஜஜ்ஞே ஸ்வயம் ப்₃ரஹ்மா ஸர்வலோகபிதாமஹ: ॥

தத்—*அண்டத்துக்குக் காரணமான ஜலம் முதலானவை,* **ஹைமம்**—*பொன்மயமானதாய்,* **ஸஹஸ்ராம்ஶுஸமப்ரப₄ம்**—*சூரியனையொத்த ஒளியுள்ளதான,* **அண்ட₃ம்**—*அண்டமாக,* **அப₄வத்**—*ஆயிற்று;* **தஸ்மின்**—*அவ்வண்டத்தில்,* **ஸ்வயம்**—*நாராயணனே தானே,* **ஸர்வலோகபிதாமஹ: ப்₃ரஹ்மா**—*எல்லா உலகிற்கும் பிதாமஹனை பிரமனாக,* **ஜஜ்ஞே**—*பிறந்தான்.*

முன் ச்லோகத்தில ஸமஷ்டிஸ்ருஷ்டியைச் சொல்லிவிட்டபடியாலே, அதற்குப்பின ஏற்பட்ட வ்யஷ்டிஸ்ருஷ்டியை விவரிக்கிறார் இங்கு. (தத்) முற்கூறியபடி த்ரிவ்ருத்கரணம் செய்யப்பெற்று, அண்டத்தை உண்டாக்கவல்ல சக்தியைப் பரமனிடமிருந்து பெற்றவையான பூ₄மி பாயந்தமான தத்துவ ஸமூஹம். (அண்ட₃ம் அப₄வத்) அண்டமாக ஆயிற்று. மஹான தொடங்கி பூமியளவான தத்துவங்கள் பரமபுருஷனுடைய ஸங்கல்பத்தாலே அண்டமாகப் பரிணமித்தன என்று கருத்து. 'ததண்ட₃ம் ஸமப₄வத்' என்று ஸுபா₃லோபனிஷத்தின் முதல் கண்டத்தில படித்ததையும், "மஹதா₃த்₃யா விசேஷாந்தா ஹ்யண்ட₃முத்பாத₃யந்தி தே" [வி-பு 1-2-54] [மஹான் தொடங்கிப் பஞ்ச பூதங்களீருக்கவுள்ள எல்லாத் தத்துவங்களும் அண்டத்தை உண்டாக்குகின்றன.] என்று ஸ்ரீ விஷ்ணு புராணத்தில் உபப்₃ருமஹணம் செய்ததையும் காண்பது. (ஹைமம் அண்ட₃ம்) பொன்மயமான அண்டம்; பொனபோலே ஆதரிக்கப்படத்தக்க அண்டம் என்று கருத்து; 'தா இமா ஆப: தத்₃திரண்யமண்ட₃மப₄வத்' [அப்படிப்பட்ட இந்த ஜலங்களே பொன்மயமான அண்டமாயிற்று.] என்னும் ச்ருதியின் அர்த்தம் உபப்₃ருமஹணம் செய்யப்படுகிறது. (ஸஹஸ்ராம்ஶு ஸமப்ரப₄ம் அண்ட₃ம்) நாம் காணும் தாழ்ந்த அண்டங்களன்று; சூரியனைப்போலே பேரொளி படைத்ததாயிருந்தது பரமனால படைக்கப்பெற்ற இவ்வண்டம் என்று கருத்து. (ஸஹஸ்ராம்ஶு ஸமப்ரப₄ம் ஹைமம் அண்ட₃ம்) "தத் தேஜோ ஹிரண்யமண்ட₃ம்" என்னும் மஹோபனிஷத்வாக்யம் உபப்₃ரும்ஹணம் செய்யப்பட்டதாயிற்று. அண்ட ஸ்ருஷ்டியைச் சொன்னபின்பு "தத்ர ப்₃ரஹ்மா சதுர்முகோ₂ ஜாயத"

http://acharya.org

[மஹோபனிஷத்] 'மத்₄யே புருஷோ தி₃வ்ய:' [ஸுபால] என்று ப்ரஹ்ம ஸ்ருஷ்டியை ஸுபாலமஹோபனிஷத்துக்களிற் சொன்னதை யொட்டி, அவ்வண்டத்தினுள் ப்ரஹ்மாவின் ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறார் அடுத்தபடியாக,— (தஸ்மிந்) அவ்வண்டத்தில். (ஸ்வயம் ப்₃ரஹ்மா ஜஜ்ஞே) முற்கூறிய பரமபுருஷன் தானே பிரமனாகப் பிறந்தார். 'தஸ்ய ப்₃ரஹ்மா பி₃பீ₄தே' [அந்த ம்ருத்யுவைக்கண்டு பிரமன் பயந்தான்] என்று ஸுபாலோபனிஷத்தில் பிரமனை ம்ருத்யுவைக்கண்டு பயப்படும் ஜீவனாகச் சொல்லுகையாலும், இங்கும்மேலே 'தத்விஸ்ருஷ்ட: ப்₃ரஹ்மா' என்று பிரமனை நாராயணனால் படைக்கப்பட்டவனாகச் சொல்லுகையாலும் இங்கு பரமபுருஷனுக்கும் பிரமனுக்கும் ஸ்வரூபைக்யம் சொல்லுவது பொருந்தாது. ஆகையால், 'ஸ ஏவ ஸ்வயமுத்₃ப₄பௌ₄' என்ற மூன்றும் ம்லோகத்திற்போலே இங்கும் பிரமனுக்குப் பரமபுருஷன் சரீரியாயிருப்பதைக் கருதியே இருவரையும் ஒன்றாகப் படிக்கிற தென்று கொள்ளவேண்டும். "விஷ்ணுர் ப்₃ரஹ்மஸ்வரூபேண ஸ்வய மேவ வ்யவஸ்தி₂த:" [விஷ்ணுவானவர் ப்ரஹ்மாவைத் தன் உருவாகக்கொண்டு தானே நிற்கிறார்.] என்று சொல்லப்பட்டதன்றோ. இக்கருத்தாலேயேயன்றோ 'ஸ ப்₃ரஹ்மா ஸ ம்ிவ:' 'ப்₃ரஹ்மா நாராயண: ம்ிவம்ச நாராயண:' என்று உபனிஷத்துக்களும், 'சிவனாய் அயனாய்' என்று வேதம் தமிழ் செய்த மாறனும் ப்ரஹ்மருத்ரர்களை நாராயணனாகவே உத்கோஷித்தனர். (ஸர்வ லோகபிதாமஹ: ப்₃ரஹ்மா ஜஜ்ஞே) எல்லாவுலகிற்கும் பாட்டனான பிரமனாக, அவனையும் படைத்த முப்பாட்டனான நாராயணனே பிறந்தான். தேவமனுஷ்யதிர்யக்ஸ்தா₂வரங்களான ஜீவராசிகளை த₃க்ஷன் முதலான ப்ரஜாபதிகள் படைக்கிறார்களாகையால், அவர்களையும் படைக்கும் பிரமன் ஜீவராசிகளுக்குப் பாட்டனாகிறான் என்று கருத்து. இதிலிருந்து, அண்டத்திற்குள்ளிருக்கும் பொருள்களை ஸர்வேம்வரன பிரமன் முதலானோர்க்கு அந்தர்யாமியாயிருந்தே படைக்கிறான என்று விளங்குகிறது.

6. ஆபோ நாரா இதி ப்ரோக்தா ஆபோ வை நரஸூநவ:|
தா யத₃ஸ்யாயநம் பும்ஸஸ் தேந நாராயண: ஸ்ம்ருத:||

ஆப:—(அண்டகாரணமான) ஜலம் முதலான தத்துவங்கள். நாரா:—நாரங்கள். இதி—என்று, ப்ரோக்தா:—சொல்லப்படுகின்றன; ஆப:—அந்த ஜலம் முதலானவை.

http://acharya.org

நரஸூநவ: வை—அழியாதவனுகையால நரன் எனப்படும் பரமாத்மாவிடமிருந்து பிறந்தவையன்றோ. யத்-எக்காரணத்திஞல. தா:-அந்த ஜலம் முதலானவை. அஸ்ய பும்ஸ:- இந்தப் பரமபுருஷனுக்கு. அயநம்-இருப்பிடமாயிருக்கின்றனவோ. தேந-அக்காரணத்திஞல். நாராயண. ஸ்ம்ருத:- (இவன்) நாராயணன் எனபபடுகிறுன்.

முற் கூறியபடி எல்லா ஸமஷ்டிவ்யஷ்டிப பொருள்களையும முறையே நேரேயும், மற்றவர்களையிடையிட்டும படைத்தவன நாராயணனே என்று காட்டுகிருர் இந்த ஶ்லோகத்தில். ஸுபாலோபனிஷத்தில ஏழாவது கண்டத்தின தொடக்கத்தில 'அஜ ஏகோ நித்ய:' என்று தொடங்கிப் பரபொருள விகாரமற்றதாகவும, ஜகத்காரணமாகவும, உலகிற்கு அந்தராத்மாவாகவும இருப்பது என்று கூறி, அதற்கு முனனும பினனும் இம்மூனறு தனமைகளையும விரிவாக விளக்கி நாராயணசப்தமும் பலகால் படிக்கப்பட்டது. ஆகையால விகாரமற்றதாயிருக்கை முதலான இம மூனறு தனமைகளும நாராயண ஶபதத்தின அவயவார்த்தங்கள் எனபதே ஶ்ருதியின கருத்து என்று எண்ணி இம மூனறு தனமைகளையும விளக்கும நாராயண சபதமே பரமகாரணனுக்கு வாசகம் என்று காட்டுகிருர: (ஆப:) முன ஶ்லோகங்களில் கூறியபடி சேதனப்பொருளகளோடு கூடியவையான அணடகாரணமான ஜலம முதலான தத்துவங்களைக் குறிக்கிறது. (நாரா இதி ப்ரோக்தா:)நாரஙகள எனப்படுகினறன இவை நாரங்கள எனபபடுவதற்குக் காரணத்தைக காட்டுகிறது அடுத்த பாதம: (ஆபோ வை நரஸூநவ.) இந்த ஜலம முதலானவை நரனிடமிருந்து பிறநதவையனறே; அதனுலேயே நாரஙகள் எனப்படுகினறன எனறு கருத்து.'ரீங்க்ஷயே'என்னும் தாதுவிலிருநது தோனறிய 'ர:' என்னும பதம அழிவுள்ளதைக காட்டுகிறது. 'நர:' என்று அழியாததான பரபொருளைக்காட்டுகிறது. 'ஜந்ஹுர் நாராயணோ நர' என்று ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்திலும நரஶப்தம பரம புருஷனின பெயராகப படிக்கப்பட்டதன்றே. நரனுகிற அவனிடமிருந்து தோனறியவை நாரஙகளாகினறன என்றபடி. இனி, நாராயண ஶப்தத்துககு வ்யுதபத்தியைக் காட்டுகிறது உததரார்த்தம: (தா யத்ஸ்யாயநம புமஸஸ் தேந நாராயண. ஸ்ம்ருத) இவ்வண்ணமாக நாரங்கள எனபபடும ஜலம முதலானவை இப்பரம புருஷனுக்கு அயநமாக-இருப்பிடமாக-இருககையால, இவன நாராயணன என்ப்படுகிருன். ஆக, 'நர' ஶபதம அழியாத பரம

http://acharya.org

பொருளைக்காட்டுகையாலே விகாரமற்றவனாயிருக்கையும். நார ஶப்தத்தாலே ஸகலதத்துவங்களும் நரனிடமிருந்து பிறந்தவையென்று காட்டுகையாலே ஜகத்காரணத்வமும், நாராயண ஶப்தத்தாலே எல்லாப் பொருள்களும் தனக்கு இருப்பிடம் என்னலாம்படி இவன் அனைத்திலும் உள் நுழைந்திருப்பதைக் காட்டுகையாலே உலகிற்கு அந்தராத்மாவாயிருக்கும் தன்மையும் ஆக இம் மூன்றும் நாராயண ஶப்தத்தின பொருள் என்று காட்டுவதன் மூலம் 'அஜ ஏகோ நித்ய:' என்னும் ஸுபாலோபநிஷத் வாக்யமும், ஆறுவது ஏழாவது கண்டங்களின் பொருளும் உபப்₃ரும்ஹணம் செய்யப்பட்டதாயிற்று. இங்கு ஓராக்ஷேபம் எழுகிறது. முன் ஶ்லோகத்தில் ப்ரஹ்மாவைப் பற்றியே பேசியிருக்கையால், 'அஸ்ய' என்று இந்த ஶ்லோகத்தில் அவனை எடுப்பதே உசிதமேயொழிய, அதற்கு முன் ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட பரமபுருஷனை எடுப்பது உசிதமல்லவே என்பது அவ்வாக்ஷேபம். முன ஶ்லோகத்தில் 'ஸ்வயம்' என்று பரமபுருஷனையே எடுத்து அவனே பிரமனாகப்பிறந்தான் என்று கூறியிருக்கிறபடியால், அப்பரமபுருஷனையே இங்கு 'அஸ்ய' என்னும் ஸர்வநாமஶப்₃தத்தாலே எடுத்து அவனுக்கு வாசகமாக நாராயண ஶப்த்தைக கூறுகிறது எனறு கொள்ளக் குறையில்லை—என்பது இவ்வாக்ஷேபத்திற்கு ஸமாத₄ானம். 'ப்ரஹ்மா' எனனும் ஶப்தத்திற்கு நான்முகனுக்கு அந்தர்யாமியான பகவான் எனறு பொருள் கொள்ளாத மற்றும சில வ்யாக்யாதாக்கள், ஸர்வநாமஶப்₃தம் ப்ரத₄ானமாயிருப்பதையே காட்டுமாகையாலும், ஶாப்₃த₃ப்ராத₄ாந்யமும் முதல் வேற்றுமையில் படிக்கப்பட்ட ப்ரஹ்மாவுக்கேயாகையாலும், அவனே நாராயணன் எனப்படுகிறான் எனறு ஆஶங்கித்துக் கொண்டு, அப்படிக் கொணடால் பல வேதசாஸ்திர வாக்கிய விரோதஙகள் வருமாகையாலும, மேல் ஶ்லோகத்தில் பரமபுருஷனிடமிருந்து பிரமன் உண்டானான் என்று கூறுகையாலும் பரமபுருஷனே இங்கு நாராயண ஶப்தத்தாலே சொல்லப்படுகிறான் என்று கொள்ளவேண்டும் என்று பரிஹாரமுரைத்தார்கள். இப்படிக் கொண்டாலும் விரோதமில்லை.

7. யத் தத் காரணமவ்யக்தம் நித்யம் ஸத₃ஸத₃ாத்மகம் ।
தத₃விஸ்ருஷ்ட: ஸ புருஷோ லோகே ப்₃ரஹ்மேதி கீர்த்யதே ॥

யத் தத் காரணம்—*யாதொன்று ஸர்வகாரணமாயிருக்கிறதோ.* **அவ்யக்தம்**—*அவ்யக்தத்தை சரீரமாகக் கொண்டதாயிருக்கிறதோ,* **நித்யம்**—*எப்போதும்.* **ஸத₃ஸத₃ாத்மகம்**—

http://acharya.org

சேதநாசேதநப்பொருள்களை சரீரமாகக் கொண்டதாயிருக்கிறதோ, தத3விஸ்ருஷ்ட:—அந்தப் பொருளாலே நேரே பிறப்பிக்கப்பட்டவனை, புருஷ:—ஜீவனை, லோகே—உலகில், ப்3ரஹ்மா இதி—பிரமனென்று, கீர்த்யதே—கூறப்படுகிறான்.

முன் ஶ்லோகத்தில் ஸர்வகாரணனாகக் கூறப்பட்ட நாராயணனை பிரமனல்லன் என்று காட்டுவதன் மூலம் பிரமனும் பிரமனால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட மற்ற தேவதைகளும் பரமபொருளல்லர் என்று நிலைநிறுத்துவதற்காக பிரமன் ஸர்வகாரணனான நாராயணனால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவன் என்று கூறுகிறார் இந்த ஶ்லோகத்தில்; (யத் தத் காரணம்) 'ஆஸீதி3த3ம' என்று தொடங்கி, 'தேந நாராயண: ஸ்மருத:' என்பதிறுக ஸர்வகாரணப்பொருளாகக் கூறப்பட்ட நாராயணனைப் பூர்வார்த்த4த்தாலே அநுவதி3க்கிறார். (அவ்யக்தம்) 'அவ்யக்த: வ்யஞ்ஜயந்நித3ம' என்று சேதநாசேதந ஸமுதா3யமாயிருக்கும் அவ்யக்தத்தை சரீரமாகக்கொண்டிருந்த நிலையைக் காட்டுகிறார். (நித்யம ஸத3ஸதா3த்மகம) முற்கூறியபடி காரணநிலையில அவ்யக்த ஶரீரகனாயிருந்தவனே கார்யநிலையிலும சேதநாசேதந ஶரீரகனாயிருந்தவன என்று காட்டுகிறார். 'ஸத்' 'அஸத்' என்று உள்ளதென்றும, இல்லதென்றும் வழங்கப்படும சேதநாசேதனங்களைக் குறிக்கிறது. 'ஸத3ஸதா3த்மகம' என்று வஸ்து பரிச்சே2த3மின்மையைக் கூறுகிறதாகையாலே, 'நித்யம்' என்று காலபரிச்சே2த3மின்மையைக் கூறுகிறதாகவுமாம. இது தே3ஶபரிச்சே2த3மின்மைக்கும் உபலக்ஷணம். (தத்3விஸ்ருஷ்ட: ஸ புருஷ: லோகே ப்3ரஹ்மேதி கீர்த்யதே) அந்த நாராயணனாலே நேரே படைக்கப்பட்டவனான ஜீவனே உலகில் பிரமன் என்று கீர்த்திக்கப்படுகிறான். மற்ற ஜீவர்களை நாராயணன பிரமன் முதலான ஜீவர்களுக்கு அந்தர்யாமியாயிருந்துகொண்டு அவர்கள் மூலம ஸங்கல்பாதிகளைச்செய்து படைக்கிறான்; பிரமனை நேரே படைக்கிறான் என்னும வாசியைக் காட்டுகிறது 'தத்3விஸ்ருஷ்ட:' என்பதில் 'வி' என்னும் உபஸர்க்கம. (லோகே) லோக ப்ரஸித்3தியைக் கூறுகிறதாகவுமாம: "ஸ ப்3ரஹ்மா" [தை-நா] "ப்3ரஹ்மா நாராயண:" [ஸுபால] ப்3ரஹ்மா ஶிவ:3 ... ப்3ரஹ்மா தே3வானாம ப்ரத2ம ஸம்ப3பூ4வ" [முண்டக] "ப்3ரஹ்மா தே3வானாம் பத3வீ: கவீநாம" [...] "நாராயணாத் ப்3ரஹ்மா ஜாயதே" [நாராயண] "ந ப்3ரஹ்மா நேஶாந:" [மஹோபநிஷத்] "தத்ர ப்3ரஹ்மா சதுர்முகோ ஜாயத" [மஹோபநிஷத்] முதலான வேதப்ரஸித்3தியைக்

http://acharya.org

கூறுகிறதாகவுமாம். ஆக, இந்த ஶ்லோகத்தில், பிரமனும் நாராயணனால் படைக்கப்பட்ட ஜீவனேயொழிய ஸர்வகாரணப்பொருளல்ல என்றும் பிரமனைப்படைத்த நாராயணனே ஸர்வகாரணன் என்றும் கூறினராயிற்று. மும்மூர்த்திகளும் ஸமம், மூவருமே ஒருவரே, மூன்றிலும் மேலானதொன்றே பரபொருள் என்னும் துர்வாதங்கள் இங்கு மனுவினாலே தொலைக்கப்பட்டன என்று அறியத்தக்கது. ஸுபாலோபனிஷத்தையே இவ்வேழு ஶ்லோகங்களும் வெளிப்படையாக உபப்ருஹ்மணம் செய்திருப்பதாலும் மஹோபனிஷத்தையும், நாராயணோபனிஷத்தையும ஆங்காங்கு உபப்ருஹ்மணம் செய்திருக்கையாலும் இவ் வுபநிஷத்துக்கள் உபனிஷத்தே அல்லவோ என்னும் நவீனர்களின் சங்கையும்தகாக்கப்படுகிறது.

இப்படி ஸ்ம்ருதியின ஆதியில் பரதத்துவநிஷ்கர்ஷம செய்த மனு, நடுவிலும் முடிவிலும் பரதத்துவநிஷ்கர்ஷம் செய்தபடியைக் காண்போம் இனி. எட்டாமத்தியாயத்தில் ஸாக்ஷிப்ரஶ்னப்ரகரணத்தில் ஓரழகிய ஶ்லோகம் உள்ளது; அதை திவ்யப்ரபந்த வயாக்யானங்களில் நம் பூர்வாசார்யர்கள் பலகால எடுத்துச் சுவை சொட்ட வியாக்கியானம் செய்துள்ளனர். அதைக் காணபோமினி.

யமோ வைவஸ்வதோ ராஜா யஸ்தவைஷ ஹ்ருதி₃ ஸ்தி₂த:।
தேந சேத₃விவாத₃ஸ்தே மா க₃ங்கா₃ம் மா குரூந் க₃ம:॥

யம:—நியமனத்தைச் செய்பவனாய், **வைவஸ்வத:**—ஸூர்யனின் நடுவிலிருப்பவனாய். **ராஜா**—இனியவனாய். **ய: ஏஷ:**—எவனொருவன். **தவ**—உன்னுடைய. **ஹ்ருதி₃**—நெஞ்சில், **ஸ்தி₂த:**—இருக்கிறானோ, **தேந**—அவனோடு. **தே**—உனக்கு. **அவிவாத₃: சேத்**—விவாதமில்லையானால். **மா க₃ங்கா₃ம் க₃ம:**—கங்கைக்கும் நீ போகவேண்டாம்; **மா குரூந் க₃ம:**—குருக்ஷேத்திரத்திற்கும் போகவேண்டாம்.

ஸர்வேஶ்வரனோடு விவாதமிலலையாகில், புண்ணியங்களை ஸம்பாதிக்கத் தேவையிலலை என்கிறார் இந்த ஶ்லோகத்தில்.

(யம:) சிலரை நியமிக்கும் அந்த யமனன்று கிமர்!

"அஹமமரவரார்ச்சிதேந தா₄த்ரா
யம இதி லோகஹிதாஹிதே நியுக்த:।
ஹரிகு₃ருவஶகோ₃ஸ்மி ந ஸ்வதந்த்ர:
ப்ரப₄வதி ஸம்யமநே மமாபி விஷ்ணு:॥" [வி-பு3-7-13]

http://acharya.org

[தேவர் தலைவர்களால் அர்ச்சிக்கப்படும ஸர்வேஸ்வரனாலே ஜனங்களுக்கு நன்மை செய்யவும், தீமையை விலக்கவும 'யமன்' என்று பெயர் கொடுக்கப்பெற்று நியமிக்கப்பட்டிருக்கிறேன. பெரியோனான ஹரிக்கு வசப்பட்டவனே நான். சுதந்திரமானவனல்லன; என்னையும நியமிப்பதில் விஷ்ணுவே சக்தியுள்ளவர்.] என்று யமன தானே சொல்லியபடி அவனையும நியமிக்கும யமனன்றோ இவன. (வைவஸ்வத:) விவஸ்வானான ஸூரியனுடைய பிள்ளையான யமனன்று கிடீர்!

> "த்யேய: ஸதா ஸவித்ருமண்டலமத்யவர்த்தீ
> நாராயண ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: |
> கேயூரவாந் மகரகுண்டலவாந கிரீடீ
> ஹாரீ ஹிரண்மயவபு: த்ருதசங்கசக்ர:||"

[ஸூரியமண்டலத்தின நடுவிலிருப்பவனாய், பத்மாஸனத்தில வீற்றிருப்பவனாய், தோள்வளை, மகரநெடுங்குழை, கிரீடம, ஹாரம் முதலான திவ்யாபரணங்களை உடையவனாய், பொனமயமான திருமேனியை உடையவனாய் சங்கசக்கரங்களை தரித்தவனான நாராயணன எப்போதும தியானிக்கத்தக்கவன.] என்கிறபடியே, அந்த ஸூர்யனுக்கும அந்தர்யாமியாயிருப்பவன கிடீர்! அன்றிக்கே, அந்த யமனையும நியமிப்பவனாயிருந்தும, ஸூர்யகுலத்திலே உலகுய்ய ராமனாக அவதரித்தவனகிடீர்! என்றும பொருள் கொள்ளலாம. ஆக, இவ்விரண்டுபொருள்களாலும நாராயணனே இங்கு சொல்லப்படுபவன என்று விளங்குகிறது. (ராஜா) தர்மராஜாவான அவனைப்போலே நரகத்திலேயிட்டுச் சுடுபவனாயிராமல், அனைவர்க்கும இனியவனாயிருப்பவன் கிடீர்! "ரஞ்ஜயதீதி ராஜா" [அனைவரையும ரஞ்ஜிப்பவனாகையாலே ராஜா எனப்படுகிறான.] "தேவ:" என்று குல்லூகபட்டர் பாடம, அப்போது திவுதாதுவின் எல்லாப் பொருளும இயற்கையாகப் பொருந்தியிருக்கப்பெற்றவன் என்று பொருளாகிறது. இதுவரை படிக்கப்பட்ட இம் மூன்று பெயர்களும் லோகப்ரஸித்தனான யமனையும குறிக்கலாமாகையாலே, அவனைத் தவிர்ப்பதற்காக நாராயணனுக்கேயுள்ள தனிப் பெருமையைப் படிக்கிறார் அடுத்தபடியாக,—(யஸ் தவைஷ ஹ்ருதி ஸ்தித:) அவனைத் தேடி நீ எங்கும போகவேண்டா; வெகுதூரத்திலிருந்து கொண்டு உலகை ஆளவதைக்காட்டிலும, உன்னோடு கூடியிருந்து உன்னைத்திருத்துவது நன்றென்று உன நெஞ்சிலேயே எழுந்தருளியிருப்பவனன்றோ இவன. இதிலிருந்து, இவன் லோகப்ரஸித்த யமன அன்றென்றும, ஶ்ருதிப்ரஸித்த ஸர்வாந்தர்யாமியான நாராயணனே என்றும விளங்குகிறது. (தேந தே அவிவாதஸ்

http://acharya.org

சேத்) அவனோடு உனக்கு விவாதமில்லையாகில். உடையவனுன அவன் உடைமையான உன்னை 'த்வம மே' [நீ என்னுடையவன] என்று கூறினுல், அதை மறுத்து 'அஹம மே' [நான் என்னுடைய வன] என்று கூருமலிருந்தாயாகில். இதுவேயன்றே ப்ரபனன னிருக்கவேண்டிய நிலை.

"யோऽந்யதா² ஸந்தமாத்மாநமந்யதா² ப்ரதிபத்³யதே।
கிம் தேந ந க்ருதம் பாபம சோரேணாத்மாபஹாரிணா॥"

[பகவானுடைய உடைமையாயிருக்கும் ஆத்மாவை எவன ஸ்வதந்த்ரமாக மயங்குகிருனே. ஆத்மாவையே திருடும் அவனுலே செய்யப்படாத பாபம் எது?] என்கிறபடியே ஆத்மாபஹாரமாகிற பாபத்தை நீ செய்யாமலிருந்தாயாகில், ஒரு பாபப்ராயச்சித்தத்திற்காக நீ புண்யதீர்த்தங்களுக்கோ, புண்யஸ்தலங்களுக்கோ செல்ல வேண்டாம் என்கிருர் மேலே.— (மா க³ங்க³ாம் மா குரூந் க³ம) கங்கைக்கும் போகவேண்டாம்; குருக்ஷேத்ரததிற்கும செலல வேண்டாம். இது ஸகலபுண்யதீர்த்தங்களுக்கும், ஸகலபுண்ய க்ஷேத்ரங்களுக்கும் உபலக்ஷணம. ஆத்மாபஹாரமாகிற பெரும பாவததைச் செய்யாமல், பரமாத்மாவோடு விவாதமில்லாமலிருந்தாயானுல், அதனுலேயே ஸர்வபாபஙகளும் நீஙகுமாகையால். பாப ப்ராயஶ்சித்தத்திற்காக நீ ஒரு காரியம செய்யவேண்டாம்; பரமாத்மாவிடம் விவாதமுள்ளவனுய், ஆத்மாபஹாரம் செய்பவனுயிருந்தாயாகில, "கிம தேந ந கருதம் பாபம" என்கிறபடியே நீ என்ன ப்ராயச்சித்தம செய்தாலும அது தீராது. ஆகையால் ஸ்வயம் ப்ரயோஜன புத்தியுடன புண்யதீர்த்த புண்யஸ்தலங்களை அனுபவிக்கலாமேயொழிய உபாயபுத்தியுடன அவற்றில் இழிய இடமே இல்லை என்று கருத்து. "உம்முயிர் வீடுடையானிடை வீடுசெய்ம்மினே" [திருவாய் 1–2–1] என்னும் பாசுரத்தின ஈட்டில இந்த ஶ்லோகததை வியாக்கியாநம செய்து, "அஹங்காரமமகாரங்கள் கிடக்க ப்ராயஶ்சித்தம பண்ணுகையாவது–நிஷித்தத்ரவ்யத்தை உளளே வைதது மெழுகூட்டினவோபாதியிறே. உடையவனுக்கும் உடைமைக்கும தகுபடியிறே ப்ராயஶ்சித்தமும்; உடையவன ஸர்வேஶ்வரன்; த்³ரவ்யங்களில் ப்ரத²ாநமான ஆத்ம த்³ரவ்யத்தையிறே அபஹரிததது. அபஹரித்த த்³ரவ்யத்தைப் பொகட்டு, ப்ராயஶ்சித்தம பண்ணவேணுமே; பொகடுகிற த்³ரவ்யம தானுகையாலே, ப்ராயஶ்சித்தம் பண்ணுகைக்கு வேறு அதி⁴காரியுமில்லையே; ஆகையாலே, நீஙகளும உடையவன பக்கலிலே வீடுசெயம்மினே" என்று அருளியிருக்கும் அமுதன்ன அருளிச்செயல்கள் இங்கு அனுஸந்திக்கத்தக்கன.

http://acharya.org

இனி, மநுஸ்ம்ருதியின் கடைசியிலுள்ள சில ஸ்லோகங்களில் பரதத்துவ நிஷ்கர்ஷம் செய்திருக்கும் பெற்றியைக் காண்போம். பனிரண்டு அத்தியாயங்களில் அங்கமான கர்மத்தை விவரித்து விட்டு, கடைசி அத்தியாயமான பனிரண்டாமத்தியாயத்தில் 122-வது ஸ்லோகம் தொடங்கி நாலு ஸ்லோகங்களில், அங்கி1யான ப்1ரஹ்ம3வஸ்து1பாஸனத்தை விதிக்கிறார் மனு. அந்த ஸ்லோகங்களை விவரிப்போமினி.

ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸமணீயஸாம்।
ருக்மாப4ம் ஸ்வப்நதீ4க3ம்யம் வித்3யாத் தம் புருஷம் பரம்॥

ஸர்வேஷாம்—*அனைவர்க்கும்*, **ப்ரஶாஸிதாரம்**—*நியமனத்தைச் செய்பவனும்*, **அணீயஸாம்**—*அணுஸ்வரூபமான ஜீவர்களைக் காட்டிலும்*, **அணீயாம்ஸம்**—*அணுவாயிருப்பவனும்*, **ருக்மாப4ம்**—*பொன்போன்ற ஒளியுடைய திருமேனியுடையவனும்*, **ஸ்வப்நதீ4க3ம்யம்**—*கனவு போன்ற மானஸ ஜ்ஞானத்தாலே அறியப்படுபவனுமான*, **தம் பரம் புருஷம்**—*அந்தப் பரமபுருஷனை*, **வித்3யாத்**—*உபாஸிக்கக்கடவன்*.

பரமபுருஷோபாஸனத்தை விதிக்கிறார்.

(ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம்) அனைவரையும் எவன் நியமிக்கிறானோ அவனையே உபாஸிக்கவேண்டும். உலகில் சிலரை நியமிப்பவனை ஆஸ்ரயித்தால் அல்பபலன் கிடைப்பதையும், பலரை நியமிப்பவரான அரசன் முதலானோரை ஆஸ்ரயித்தால் அதி4கப2லன் கிடைப்பதையும் காண்கிறோம். இதே நியாயப்படி பார்த்தால் சேதனரனைவரையும் நியமிக்கும் பரமபுருஷனை ஆஸ்ரயித்தால்தான் மிகச்சிறந்த பலனான மோக்ஷம் கிடைக்கும் என்று கருத்து. 'ஶாஸிதாரம்' என்னுமல், 'ப்ரஶாஸிதாரம்' என்கையாலே, அரசன் முதலானோருடைய நியமனத்தைக் காட்டிலும் இவனுடைய நியமனத்தின் சிறப்பு பேசப்படுகிறது. அவர்களைப் போலல்லாமல், எல்லா ஜீவர்களையும் உள்நுழைந்து நியமிப்பவனன்றோ இவன். ஜீவர்கள் அணுஸ்வரூபர்களாயிற்றே; அவர்களை எப்படி உள் நுழைந்து நியமிக்கமுடியும்? எனில்: (அணீயாம்ஸமணீயஸாம்) அசேதனங்களைக் காட்டிலும் அணுவான ஜீவர்களைக் காட்டிலும் அணுவாகவல்லவனாகையாலே ஜீவர்கள் அனைவரையும் இவன் உள்நுழைந்து நிய

http://acharya.org

மிக்கத்தட்டில்லை என்று கருத்து. ஆக, இவ்வளவால், "அந்த: ப்ரவிஷ்ட: ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா" [தை-ஆர 3-11] [ஸர்வாந்தர்யாமியான நாராயணன் ஜனங்களை உள்நுழைந்து நியமிக்கிறான்.] "அந்தர் ப,ஹிஶ்ச தத் ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தி₂த:" [தை-நா] [உலகத்தையும் உள்ளும புறமும் வியாபித்து விளங்குகிறான நாராயணன்] முதலான ஶ்ருதிகளின் பொருள் விளக்கப்பட்டது. இனி, இப்படி மனத்தால் தியானிக்கமுடியாத படி பரமஸூக்ஷ்மப் பொருளாயிருப்பானாகில், இவனை எப்படி உபாஸிப்பது என்னும் கேள்வியெழுமாகையாலே, தியானிக்கத்தக்க ஶுபா₄ஶ்ரயமான திவ்யமங்களவிக்₃ரஹம் இவனுக்கு உண்டு என்று உணர்த்துகிறார்,— (ருக்மாப₄ம) பொனபோன்ற ஒளியுடைய திருமேனியையுடையவன. "அஶப்₃த₃மஸ்பர்ஶமரூபமவ்யயம்" முதலான உபநிஷத்வாக்கியங்கள் பரமாத்மாவுக்கு உருவமில்லையென்று கூறுகினறனவே எனில்: "புருஷம் மஹாந்தம் ஆதி₃த்யவர்ணம்" [பு. ஸூ] [சூரியன்போன்ற ஒளியையுடைய மஹாபுருஷனை] "வித்₃யுத: புருஷாத்" [தை-நா] [மினனொளியுள்ள புருஷனிடமிருந்து] "நீலதோயத₃ மத்₄யஸ்த₂ா வித்₃யுல்லேகே_வ பா₄ஸ்வரா" [தை-நா] [நீலமேகம நடுவுள்ள மின்கொடிபோல் ஒளிவிடுவது] முதலான பல வேதவாக்கியங்களும், ஸ்ம்ருதிவசனஙகளும், பரமாதமாவுக்குத் தன இச்சையால் எடுத்துக்கொளளப்படுவதாய், ப₃ந்த₄கமல்லாத அப்ராக்ருதத் திருமேனி உண்டெனறு கூறுகையாலே, "அரூபம்" முதலான வசனங்கள், கர்மத்தால ஏற்படுவதாய், பந்த₄கமான ப்ராக்ருதசரீரம் இவனுக்கு இல்லை எனனும் கருத்துடையவை என்று கொளளவேண்டும். 'சுட்டுரைத்த நனபொன் உள திருமேனி ஒளி ஒவ்வாது' [திருவாய் 3-1-2] என்கிறபடியே சுட்டுரைத்த நலல பொன்னும் இவனுடைய திருமேனியின் ஒளிக்குஒப்பாகாதாயினும்,உலகில் சுத்தமான ஒளியுடைய பொருள்களில் பொன்னே சிறந்ததாகக் காண்கையாலே 'ருக்மாப₄ம்' என்கிறார். "ஹேமாபா₄மாந வர்ணம்" என்று ஸ்ரீ ராமாயணத்தில் பிராட்டியும் பேசினாளனறோ. இப்படிப்பட்ட உருவுடையவனாகில், உருவுடைய மற்றபொருளகளைப்போலேநமமால் கண்ணால் காணத்தக்கவனாயிருப்பானோ? எனில், யோகிகளால் நெஞ்சாலேயே காணததக்கவனாயிருப்பவனிவன் எனகிறார் மேலே,— (ஸ்வப்நதீ₄க₃மயம்)ஸ்வப்னத்திற்போலே மாநஸஜ்ஞானத்தாலே உபாஸகர்களால்அறியத்தக்கவனை. ஒளிமயமான சூரியனுக்கு த₄ர்மமாயிருக்கும் ஒளிமயமான கிரணம்போலே ஜ்ஞாநஸ்வரூபமான ஆத்மாவுக்கு எப்போதும் த₄ர்மமாயிருப்பதொரு ஞானம், தனக்கு ஆனையடி (க₃வாக்ஷம்) போலே ப்ரஸரத்₃வாரமாயிருககும் மனத்திலிருந்து

புறப்பட்டுக் கண் முதலான வெளியிந்திரியங்கள் வழியாக விஷயங்களிற் பாய்ந்து அவற்றை அறிவது இந்த்3ரியங்களாலுண்டாகும் காண்பது முதலான அறிவாகும். கனவில் ஜீவன் இப்படி இந்திரியங்கள் வழியாகப் பொருள்களை அறியாமல் மனத்தாலேயே அறிகிறான். யோகிகளும், ஆழ்வார்களும் தங்கள் நெஞ்சிலிருக்கும் அந்தர்யாமியான பகவானை இப்படிக் கனவிற்போலே வெளியிந்திரியங்களை எதிர்பாராமல் மனத்தாலேயே காண்கிறார்கள். இக்காட்சியே, இங்கு 'ஸ்வப்நதீ1க3ம்யம்' [ஸ்வப்னத்திற்போலே மானஸ ஜ்ஞானத்தாலே அறியத்தக்கவனை] என்று சொல்லப்படுகிறது. இக்காட்சியானது கனவுபோலே மனத்தால் காணும் காட்சியாயிருப்பது என்பதையும், கனவைக் காட்டிலும் தெளிவாயிருப்பது என்பதையும் "கண்டேன் திருமேனி யான் கனவில், ஆங்கவனைக் கண்டேன் கனவும் சுடராழி" [இர-திருவ 67] "பகற் கண்டேன் நாரணனைக் கண்டேன் கனவில் மிகக் கண்டேன் மீண்டவனை மெய்யே" [இர-திருவ 81] என்று பூதத்தாழ்வார் அருளிச்செய்தாரன்றே. (ஸ்வப்நதீ1க3ம்யம்) உபாஸகர்களால் ஸ்வப்னம் போலே மானஸமான பக்திரூபஜ்ஞானத்தாலே அடையப்படுபவன் என்று வேதா3ர்த்த2 ஸங்க்3ரஹத்தில் ஸ்ரீபாஷ்யகாரர் பொருள் அருளினார். (வித்3யாத்) இப்படிப்பட்டவனை அறியக் கடவன். வேதாந்தங்களில் "மநோ ப்3ரஹ்மேத்யுபாஸீத" [சாந் 3-18-1] என்று தொடங்கி "ய ஏவம் வேத3" என்று முடிக்கையாலும், "ந ஸ வேத3" [ப்3ருஹ 3-4-7] என்று தொடங்கி "ஆத்மேத்யேவோபாஸீத" என்று முடிக்கையாலும், "யஸ்தத்3வேத3" [சாந் 4-1-4] என்று தொடங்கி, "யாம் தே3வதாமுபாஸ்ஸே" [சாந் 4-2-2] என்று முடிக்கையாலும், இங்குச் சொல்லப்படும் வேத3னம் (அறிவு) உபாஸனரூபமானதேயாகும். அதனாலேயே வாக்யகாரரும் "வேத3நமுபாஸநம் ஸ்யாத் தத்3விஷயே ஸ்ரவணாத்" [வேத3நம் (அறிதல்) உபாஸனமேயாகும்; உபாஸநவிஷயத்தில் வேத3நஸப்3த3த்தை வேதாந்தங்கள் படிக்கையால்] என்றார். இப்படி உபாஸிக்கத்தக்கவன் யார் எனில்: (தம் புருஷம் பரம்) "வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம்" [பு ஸூ] என்று புருஷஸூக்தம் முதலானவற்றில் உபாஸிக்கத்தக்கவனாகப் பிரஸித்தி பெற்ற பரமபுருஷனே அவன் என்கிறார். ஸ்ம்ருதியின் தொடக்கத்தில் ப4க3வச்ச2ப்3த3த்தையும், நாராயணஸப்3த3த்தையுமிட்டுப் பரதத்வநிர்ணயம் செய்தவர், முடிவில் புருஷஸப்தத்தையிட்டுப் பரதத்துவ நிர்த்தாரணம் செய்கிறார்.

"ப4க3வாநிதி ஸப்3தோ3ऽயம் ததா2 புருஷ இத்யபி।
நிருபாதீ4 ச வர்த்தேதே வாஸுதே3வே ஸநாதநே॥"

http://acharya.org

[பகவான் என்னும் ஶப்தமும், அவ்வண்ணமே புருஷஶப்தமும், பழையோனான வாஸுதேவனிடமே இயற்கையாகப் பொருந்தி நிற்கின்றன.] என்று சொல்லப்பட்டதன்றோ. ஶ்ருதிஸ்ம்ருதிகளில் நூற்றுக்கணக்கானவிடங்களில் புருஷஶப்தமும், மஹாபுருஷஶப்தமும், பரமபுருஷஶப்தமும், புருஷோத்தமஶப்தமும் நாராயணனைக் குறித்தே ப்ரயோகிக்கப்பட்டிருக்கின்றனவென்று இந்நூலின் முதலத்தியாயத்தில் விரிவாக நிலைநாட்டப்பட்டது இங்கு அநுஸந்திக்கத்தக்கது. இனி, அடுத்த ஶ்லோகத்தைக் காண்போம்.

ஏதமேகே வத₃ந்த்யக்₃நிம் மநுமந்யே ப்ரஜாபதிம்।
இந்த்₃ரமேகே பரே ப்ராணம் அபரே ப்₃ரஹ்ம ஶாஶ்வதம்॥

ஏதம்—இப்பரமபுருஷனையே, **ஏகே**—சில வேதபாகங்கள். **அக்₃நிம் வத₃ந்தி**—அக்னியென்று கூறுகின்றன; **அந்யே**—மற்றும் சில வேதபாகங்கள், **மநும் ப்ரஜாபதிம் (வதந்தி)**-ஸ்ருஷ்டிக்கும் ப்ரஜாபதியாகக்கூறுகின்றன; **ஏகே**-வேறு சில வேதபாகங்கள், **இந்த்₃ரம் (வத₃ந்தி)**—இந்திரன் எனக் கூறுகின்றன; **பரே**—பிறிது சில வேதபாகங்கள், **ப்ராணம் (வத₃ந்தி)**-பிராணன் என்று கூறுகின்றன; **அபரே**—பிறபல வேதபாகங்கள், **ஶாஶ்வதம் ப்₃ரஹ்ம**—எப்போதுமிருக்கும் ப்ரஹ்மமென்று கூறுகின்றன.

முன் ஶ்லோகத்தில், புருஷஶப்தத்தால் சொல்லப்படும நாராயணனே உபாஸிக்கத்தக்கவன் என்று நிர்ணயிக்கப்பட்டது; மற்றும் பல வேதவாக்கியங்கள் உபாஸிக்கத்தக்க பரம்பொருளை அக்னியென்றும், மனுவென்றும், ப்ரஜாபதியென்றும், இந்த்ரனென்றும், ப்ராணனென்றும், ப்ரஹ்மமென்றும் மற்றும பல சப்தங்களாலும கூறுகின்றனவே; இந்த சப்தங்களால் குறிக்கப்படும் பலரும் உபாஸிக்கத்தக்க பரம்பொருளோ? என்னும் கேள்வியெழ, அந்த எல்லா ஶப்தங்களாலும் குறிக்கப்படுபவன் ஸர்வஶப்₃த₃வாச்யனான இப்பரமபுருஷனே என்கிறார் இந்த ஶ்லோகத்தில். "ஏகம் ஸத் விப்ரா ப₃ஹுதா₄ வத₃ந்தி" [பரம்பொருள் ஒன்றே; வேதாந்திகள் பல பெயரால் அதை அழைக்கின்றனர்.] என்ற ஶ்ருதிக்கு உபப்₃ரும்ஹணமாயிருக்கிறது இந்த ஶ்லோகம்.

(ஏதமேகே வத₃ந்த்யக்₃நிம்) "தத₃ாத்மந்யேவ ஹ்ருத₃யேऽக்₃நௌ வைஶ்வாநரே ப்ராஸ்யத்" [யஜு-அஷ்டக-3-11-8] "ஸ ஏஷ வைஶ்

http://acharya.org

வாநரோ விஶ்வரூப. ப்ராஜ்ஞேக்₃ஙிருத₃ச்யதே'' [ப்ரஶ்ந 1-7] ''ஏ ஏஷோ ऽக்₃நிர் வைஶ்வாநரோ யத்புருஷ:'' ''ஸ யோ ஹைதமேவமக்₃நிம வைஶ்வாநரம புருஷேऽந்த: ப்ரதிஷ்டி₂தம் வேத₃'' முதலான வேதபாகங்கள இப்பரமபுருஷனையே அகனியெனறு கூறுகின்றன. ''ஸாக்ஷாத₃ப்யவிரோத₄ம் ஜைமிநி:'' [ப்ரஹ்ம ஸூத்ரம 1-2-29] எனகிற ப்ரஹ்மஸூத்ரததிற் சொன்னபடி அக்₃ரநயனத்தை (உயர்கதிககு அழைத்துச்செலவதை) செய்பவனானையாலே பரமபுருஷன் அக்னியெனப்படுகிறான என்றே, அக்னியை சரீரமாகக்கொண்ட பரம புருஷன் இஙகு அக்னியெனப்படுகிறானெனறே கொள்ளவேண்டும. இப்படிக்கொள்ளாமல லோகப்ரஸித்த அக்னியோடு பரமாத்மாவுக்கு ஸ்வரூபைகயம சொல்லப்படுவதாகக் கொண்டால், 'பீ₄ஷாऽஸமாத₃க்₃நிஶ் சேந்த₃ரஶ்ச'' [தை-ஆந] முதலான வேதவாக்யஙகளில் அவ்வக்னி பரமாத்மாவிடம் பயத்தாலே தொழில புரிவதாகக கூறுவது ஒட்டாமற் போய்விடும. இநத நியாயமே மேலே 'மநு' முதலான ஶபதங்களுக்கும் பொருந்தும். (அந்யே மநும ப்ரஜாபதிம வத₃ந்தி) ''ப்ரஜாபதிஶ் சரதி க₃ர்ப்பே₄ऽந்த:'' முதலான மற்றும் சில வேதபாகங்கள இவனையே ஸ்ருஷ்டிக்கும பிரஜாபதியெனறு கூறுகினறன. 'மநு' என்று மனததால் ஸருஷ்டிக்கும் ஸ்ரஷ்டாவைக் கூறுகிறதாய், ப்ரஜாபதிஶப்தததிற்கு விஶேஷணமாகிறது அனறிக்கே, 'மநும' எனபதைத்தனிபபதமாகக்கொண்டு, ''அஹம் மநுரப₄வம'' [ப்ருஹ 5-4-10] என்ற வாக்யத்தில் மநுஶப்தத்தாலே பரமாத்மாவைக் குறித்ததைக் கூறுகிறதாகவுமாம். 'மருதோऽந்யே'' [சில வேத பாகங்கள இவனை மருத்துக்களாகக் கூறுகினறன] என்றும் பாடமுள்ளது. (இந்த்₃ரமந்யே) ''இந்த்₃ரோ மாயாபி₄: புருரூப ஈயதே'' முதலான வேதபாகங்கள் ''இதி₃ பரமைஶ்வர்யே'' என்னும் தாதுவிலிருந்து தோனறிய இந்த₃ரஶப்தத்தாலே இயறகையான பரமைஶ்வர்யத்தையுடைய இப்பரமபுருஷனையே உத்கோஷிததன. (பரே ப்ராணம்)''ஸர்வாணி ஹவா இமாநி பூ₄தாநிப்ராணமேவாபி₄ஸம்விஶந்தி ப்ராணமப்₄யுஜ்ஜிஹதே'' [சாத்1-11-5] முதலான வேதபாகங்கள் இவனையே ஜகத்காரணமானப்ராணனாகஉத்கோஷிததன. ஆக,இதுவரையில மற்றவர்களையும குறிக்கக்கூடிய அக்னி,மநு, பரஜாபதி, இநதிரன, ப்ராணன் என்னும் பதங்களாலே பல விடங்களில வேதா[illegible] குறிக்கப்படுபவன இப்பரமபுருஷனே என்று கூறப்பட்டது. அகனி முதலான இவ்வைந்து ஶப்தங்களும் ஶிவன, ஶம்பு₄, ஹிரண்யக₃ர்ப்ப₄ன முதலான மற்ற பல ஶப்தஙகளுககும் உபலக்ஷணம். இத்தால் ''ந ஸந்ந சாஸச் சி₂வ ஏவ கேவல:'' [ஶ்வே] ஶிவ ஏகோ த₄யேய: ஶமபு₄ராகாஶ மத்₄யே த்₄யேய'' [அத₂ர்வஶிகை] ''ஹிர

http://acharya.org

ண்யகர்ப்ப: ஸமவர்த்ததாக்ரே" [தை-ஸம்.4-1] முதலான ஶ்ருதிகளில் சிவனென்றும, ஶம்புவென்றும். ஹிரண்யகர்ப்பனென்றும் படிக்கப்பட்டவன் ஶாஶ்வத ஶிவனுய், பிரமனையும் படைத்தவனை இந்த நாராயணனே என்று உணர்த்தப்பட்டது. ஆக, இதுவரையில் உலகில் மற்றவர்களைக் குறிக்கும பதங்களாலும், ஸர்வஶப்தவாச்யனை பரமபுருஷனே வேதாந்தங்களில் குறிக்கப்படுகிருன் என்று உணர்த்தி, இனி, அவனுக்கேயுரிய ஶப்தங்களாலும் பல வேதவாக்யங்களில அவன் குறிக்கப்படுகிருன் என்று காட்டுகிருர் கடைசியாக.—(அபரே ப்ரஹ்ம ஶாஶ்வதம்) "ப்ரஹ்ம வா இதமக்ர ஆஸீத்" "ஶாஶ்வதம் ஶிவமச்யுதம்...நாராயணபரம் ப்ரஹ்ம" [தை-நா] முதலான பல வேதபாகங்கள் என்றுமிருக்கும் ப்ரஹ்மமாக இவனையே உத்கோஷிக்கின்றன. ப்ரஹ்மஶப்தத்தை மாத்திரமிட்டால், அது ஔபசாரிகமாகப் பிரகிருதி, ஜீவன முதலான மற்ற தத்துவங்களையும குறிக்கக்கூடுமாகையால், ஶாஶ்வதஶப்தத்தாலே அதை விஶேஷிக்கிருர். இது, "ஏகோ ஹ வை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஶாந:" [மஹோபனிஷத்] "விஶ்வம் நாராயணம் ஹரிம்" [தை-நா] முதலான வாக்யங்களில் படிக்கப்படும் நாராயணன, ஹரி முதலான அவனையே குறிக்கக்கூடிய ஶப்தங்களுக்கு உபலக்ஷணம். ஆக, வேதாந்தவாக்யங்களில் பரமபொருளைக் குறிக்கும் ஸாதாரண ஶப்தங்களோடு, அஸாதாரண ஶப்தங்களோடு வாசியற எல்லா சப்தங்களும நாராயணனென்றும், பகவானென்றும் இங்கு கூறப்பட்ட இப்பரமபுருஷனையே கூறுகின்றன என்று நிர்த்தாரணம் செய்தாராயிற்று. "ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸமணீயஸாம்" என்று எல்லா ஆத்மாக்களைக்காட்டிலும் அணுவாகவும், அனைவரையும் நியமிப்பவனுகவுமிருப்பதாகக்கூறுகையாலே ஏகாத்மவாதமாகிற அத்வைதமதம் மனுவுக்கு உடன்பாடன்று என்று காட்டப்பட்டது. பரம்பொருளைக் குறிக்கத் தொடக்கத்தில் பகவச்சப்தத்தையும், நாராயணஶப்தத்தையும இட்டதிலிருந்தும், முடிவில் புருஷஶப்தத்தையிட்டதிலிருந்தும, தொடக்கத்தில் நாராயணனிடமிருந்து பிறந்தவன் பிரமன் என்று காட்டியதிலிருந்தும் "ஏதமேகே" என்னும் இந்த ஶ்லோகத்திலிருந்தும் திரிமூர்த்திஸாம்யவாதம, ஐக்யவாதம், சிவபரத்வவாதம், சதுர்முகபரத்வவாதம், துரீயப்ரஹ்மவாதம் முதலான அஸத்வாதங்கள் மனு இசைந்ததன்று என்றும், நாராயணனே ஸகலஜகத்காரணன் என்னும் பரமவைதிகஸித்தாந்தமே மனு இசைந்ததென்றும் தேறுகிறது. இனி, அடுத்த ஶ்லோகத்தைக் காண்போம்.

http://acharya.org

ஏஷ ஸர்வாணி பூ₄தாநி பஞ்சபி₄ர் வ்யாப்ய மூர்த்திபி₄: ।
ஜந்மவ்ருத்₃தி₄க்ஷயைர் நித்யம் ஸம்ஸாரயதி சக்ரவத் ॥

ஏஷ:—இப்பரமபுருஷன். ஸர்வாணி பூ₄தாநி—எல்லா ஜீவராசிகளையும். பஞ்சபி₄: மூர்த்திபி₄: வ்யாப்ய—தன் சரீரமான ஐந்து பூதங்களாலாகிய சரீரங்களாலே சூழ்ந்து நின்று, ஜந்ம வ்ருத்₃தி₄க்ஷயை:—பிறப்பு வளர்ச்சி, தேய்வு முதலான ஆறு விகாரங்களுக்கு உட்படுத்தி. சக்ரவத்—சுழன்று சுழன்று வரும் சக்கரம்போலே. நித்யம்—எப்போதும், ஸம்ஸாரயதி—ஸம்ஸாரத்தில உழலச்செய்கிறான்.

இப்பரமபுருஷனே பிரமன் முதல் புல்லெறும்பு வரையிலுள்ள எல்லா ஜீவர்களையும் இந்த ஸம்ஸாரசக்ரத்திலே சுழலவைக்கிறான் என்கிறார் இந்த ஶ்லோகத்தில்.

(ஏஷ:) இப்பரமபுருஷனான நாராயணனே. (ஸர்வாணி பூ₄தாநி) தன்னால் படைக்கப்பட்ட பிரமன் முதல் எறும்பு வரையிலுள்ள எல்லா ஜீவராசிகளையும். (பஞ்சபி₄: மூர்த்திபி₄: வ்யாப்ய) "ஶரீராத ஸ்வாத்" என்று முதலிலே சொன்னபடி தனக்கு சரீரமாயிருக்கும் ஐந்து பூதங்களாலே சூழ்ந்து நின்று; ஐந்து பூதங்களாலான சரீரங்களாலே கட்டுப்படுத்தி என்று கருத்து. (ஜந்ம வ்ருத்₃தி₄க்ஷயை:) "அபக்ஷய விநாஶாப்₄யாம பரிணமர்ததி₄ ஜந்மபி₄:" [வி-பு1-2-11] என்கிறபடியே (1) இருக்கிறான் (2) பிறக்கிறான் (3) வளர்கிறான் (4) தேய்கிறான் (5) பரிணமிக்கிறான் (6) அழிகிறான் என்னும் ஆறு விகாரங்களுக்கும் இந்த ஜீவராசிகளை உட்படுத்தி. இங்கு ஜந்மவ்ருத்தி க்ஷயங்களாகிற மூன்று விகாரங்களைச் சொன்னது மற்ற மூன்று விகாரங்களுக்கும் உபலக்ஷணம். (சக்ரவத்) சுழன்று சுழன்று வரும் சக்கரம்போலே, "புநரபி ஜநநம் புநரபி மரணம் புநரபி ஜநநீஜட₂ரே ஶயநம்" என்கிறபடியே பிறப்பிறப்பாகிற ஸம்ஸாரசக்கரத்திலே சுழலச் செய்கிறான் பரமபுருஷன் என்று கருத்து. (நித்யம் ஸம்ஸாரயதி) எப்போதுமே இப்படி ஜீவர்களை ஸம்ஸாரசக்கரத்திலே சுழலச் செய்கிறான்

இத்தால் பிரமன் முதலான எல்லா ஜீவர்களும ஸம்ஸாரி ஜீவர்களே என்றும் நாராயணன் ஒருவனே அவர்களை ஆட்டி வைப்பவன் என்றும் சொல்லப்பட்டதாயிற்று. இனி, அடுத்த ஶ்லோகத்தைக் காண்போம்.

ஏவம் ய: ஸர்வபூ₄தேஷு பஶ்யத்யாத்மாநமாத்மநா ।
ஸ ஸர்வஸமதாமேத்ய ப்₃ரஹ்மாப்யேதி பரம் பத₃ம் ॥

http://acharya.org

ஏவம்—இவ்வண்ணமாய், **ய:**—எவனொருவன், **ஆத்மநா**—தன் நெஞ்சால், **ஸர்வபூ₁தேஷு**—எல்லா பூதங்களிலும், **ஆத்மாநம் பஶ்யதி**—பரமாத்மாவைக் காண்கிருனே, **ஸ:**—அவன், **ஸர்வஸமதாம் ஏத்ய**—எல்லா ஜீவராசிகளிடமும் ஸாம்யபுத்தியை அடைந்து, **பரம் பத₃ம்**—பரமப்ராப்யமான, **ப்₃ரஹ்ம**—பரம்பொருளை, **அப்யேதி**—அடைகிறான்.

பரமாத்மோபாஸனத்துக்குப் பலன் பரமாத்மப்ராப்தியாகிற மோக்ஷமே என்று கூறுகிருர்.

(ஏவம்) "ஸர்வபூ₁தேஷு சாத்மாநம் ஸர்வபூத₁ாநி சாத்மநி। ஸமம் பஶ்யந்" [மநு 12-91] [எல்லா பூதங்களிலும் பரமாத்மாவையும், எல்லா பூதங்களையும் பரமாத்மாவிலும் ஒருபடியாகக் காண்பவன்] "ஸர்வமாத்மநி ஸம்பஶ்யேத் ஸச்சாஸச்ச ஸமாஹித:" [மநு 12-118] [சேதநாசேதனங்களாகிற எல்லாப் பொருள்களையும் ஸமாதிநிலையில் பரமாதமாவிடம் காணக்கடவன்.] என்று கூறப்பட்ட வழியில். (ஆத்மநா) நெஞ்சாலே; 'ஸ்வப்நதீ₄க₃ம்யம்' என்கிற படியே மனத்திலுண்டாகும் அறிவாலே என்றுமாம். ஆத்மஶப்தம் நெஞ்சையும் அறிவையும் காட்டும். (ஆத்மாநம ஸர்வபூ₁தேஷு ய: பஶ்யதி) பரமாத்மாவை எவன எல்லா ஜீவராசிகளினுள்ளும் காண்கிருனே. 'ப்ரஶாஸிதாரம்' என்ற ஶ்லோகத்தில் சொல்லப்பட்டபடியே எல்லா ஜீவராசிகளையும உள்நுழைந்து நியமிப்பவனுகக் காண்கிருனே என்று கருத்து. (ஸ:) அவ்வுபாஸகன (ஸர்வஸமதாம் ஏத்ய) எல்லா ஜீவராசிகளும் எம்பெருமான் குடியிருக்கும் கோயிலே எனனும் ஸாமயபுத்தியை அடைந்து (பரம பத₃ம் ப்₃ரஹ்ம அப்யேதி) "தத்₃விஷ்ணோ: பரமம பத₃ம" என்று வேதாந்தங்களில் பரம ப்ராப்யமாக ஓதப்படும் விஷ்ணுவாகிற பரஹ்மத்தை அடைகிருன. யதோ₂பாஸநம் ப₂லமாகையாலே, ப்ரஹ்மத்தை உபாஸிப்பவன் ப்ரஹ்மத்தையே அடைகிருன் என்று கருத்து. 'ப்ரஹ்மத்தை அடைகிருன்' என்கையாலே, மோக்ஷநிலையில் ப்₃ரஹ்மமாகவே ஆகிருன எனனும் அத்வைதமதம் தள்ளப்பட்டது.

ஆக, ஸர்வஶரீரியான நாராயணனே உலகிற்கு நிமித்தோபாத₃ாநமாகும் பரதத்துவமென்றும், அவன் விஷயமான பக்தி ப்ரபத்திகளே பரமஹிதமென்றும் அவனையடைவதே பரமபுருஷார்த்தமென்றும் கூறும் வேதஸித்தாந்தத்தை நிலைநாட்டி, வேத₃பா₃ஹ்யகுத்₃ருஷ்டி மதங்களை நிரஸித்தாராயிற்று.

மநுஸ்ம்ருதி நிர்ணயம் முற்றிற்று.

http://acharya.org

அத்ரிஸ்ம்ருதி நிர்ணயம்

"மந்வத்ரிவிஷ்ணுஹாரீத" என்று யாஜ்ஞவல்கயரால எடுக்கப்பட்ட ஸ்மருதிகளில் மநுஸ்மருதியில பரதத்வநிஷகர்ஷம செய்யப்பட்டபடியை இதுவரை கண்டோம். இனி, அடுத்ததான அதரிஸ்மருதியில பரதேவதாநிஷ்கர்ஷம செய்திருக்கிறபடியைக் காண்போம். பூனா ஆநந்தாஶ்ரமமுதராணாலயததில் அச்சிடப்பெற்ற ஸமருதி ஸமுச்சயத்தில நானூறு ஶ்லோகஙகொணட அதரிஸம்ஹிதையொன்றும், ஒன்பது அத்தியாயஙகொணட அத்ரிஸ்மருதியொனறும் அச்சிடபபெற்றுள்ளது. இவற்றில் அதரிஸமஹிதையில பரம்பொருளைப்பற்றிய குறிப்புகள யாதுமில்லை. அதரிஸ்மருதியின கடைசியான ஒனபதாவது அத்தியாயம பரமபொருளைபபற்றிப பேசுகிறது. அதைக் காண்போமினி

யோ த்₄யாதா யச்ச யத்₃த்₄யாநம் யத்₃த்₄யேயம் யத்
ப்ரயோஜநம்।
ஸர்வாண்யேதானி யோ வேத்தி ஸ யோகஂம் யோக்துமர்ஹதி॥
ஆத்மா த்₄யாதா மநோ த்₄யாநம் த்₄யேய: ஸூக்ஷ்மோ
மஹேஶ்வர:।
யத பராபரமைஶ்வர்யம் ஏதத்₃த்₄யாநப்ரயோஜநம்॥
விதி₃த்வா ஸர்வஸூக்ஷ்மாணி ஷட₃ங்க₃ம் ச மஹேஶ்வரம்।
பரத₄ாநகு₃ணதத்வஜ்ஞ: பரம் ப₃ரஹ்மாதி₄க₃ச்ச₂தி॥
வித்₃வேஷாத₃பி கோ₃விந்த₃ம் த₃ம கோ₄ஷாதமஜ: ஸ்மரந்।
ஶிஶுபாலோ க₃த: ஸ்வர்க்கம் கிமுதஸ்தத்பராயண:॥

[(1) தியானம செய்கிறவன (2) தியானிப்பதற்கு உபகரணமான த்₄யானம் (3) தியானிக்கப்படும பொருள் (4) தியானிப்பதின் பயன என்னும இவையனைததையும அறிகின்றவன யோகம செய்யததகுந்தவன. (1) ஜீவாத்மாவே தியானம் செய்கிறவன. (2) மனமே தியானிப்பதற்கு உபகரணமான தியானமாகும. (3) அறிய அரியவனான மஹேஶ்வரனே தியானிக்கப்படும பொருள். (4) மேலான செல்வமான மோக்ஷமும, தாழ்நத செல்வமான ஸாமஸாரிகச செலவமும தியானிப்பதின பயனாகும. இவைபற்றிய ஸூக்ஷமங்கள அனைத்தையும அறிநது, ஆறு அஙகமுள்ள யோகத்தையும, தியானிககப்படும் மஹேஶ்வரனையும அறிநது, மூலப்ரக்ருதி, அதன குணஙகள ஆகியவற்றின தாழ்வையுமறிநதவன பரம

http://acharya.org

பொருளை அடைகிறான். கோவிந்தனை மிகுந்த துவேஷத்தோடு நினைத்த போதிலும், தமகோஷனின் பிள்ளையான சிசுபாலன் பேரின்பத்தை அடைந்தான். அந்த கோவிந்தனையே மேலான ப்ராப்யப்ராபகங்களாகக் கொண்டவன் மோக்ஷமடையச் சொல்லவேணுமோ?]

இங்கு, தியானிக்கப்படும் பொருள் மஹேஶ்வரஶப்தத்தால் கூறப்பட்டது. "யத்வேதாதௌ ஸ்வர:" என்று தொடங்கும் தைத்திரீய நாராயண வல்லி மந்திரம் ஓங்காரத்தின் காரணமான அகாரத்தின் பொருளான நாராயணனே மஹேஶ்வரனெனப்படுபவன் என்று நிர்ணயித்திருப்பது இந்நூலின் முதலத்தியாயத்தில இரண்டாம்பாதத்தின் தசோபனிஷத்விசாரத்தில் தைத்திரீய உபனிஷத்தின தேவதா நிர்ணயம என்னும் தலைப்பில் (இரண்டாம் பதிப்பு பக்கம் 313முதல் 316வரை) நிலைநாட்டப்பட்டது. இந்த போதிலும் மஹேஶ்வர ஶப்தத்தால் குறிக்கப்படுபவன் சிவனே என்று சில மந்தமதிகள் மயங்குவாரகள் என்று நினைத்து, நாலாவது சுலோகததில், தனனை துவேஷித்த சிசுபாலனுக்கும் பரமபதமளித்த கோவிந்தனே இநத மஹேஶ்வரன் என்று அத்ரி மஹரிஷி தெளிவுபடுத்துகிறார். ஸ்வர்க்கஶப்தம் இயல்பாக மோக்ஷத்தையே குறிக்கும் என்பது உபனிஷத்துக்களில் பிரஸித்தம். ஆக, அத்ரிஸ்ம்ருதியிலும் பரமபுருஷனான நாராயணனே பரம்பொருள் என்று நிஸ்ஸந்தேஹமாக நிலைநாட்டப்பட்டதாயிற்று.

அத்ரிஸம்ருதிநிர்ணயம முற்றிற்று.

விஷ்ணுஸ்ம்ருதிநிர்ணயம்

"மந்வத்ரிவிஷ்ணுஹாரீத" என்று படிக்கப்பட்டவற்றில் மூன்றாவதான விஷ்ணுஸ்ம்ருதியில் பரதத்வநிஷ்கர்ஷம் செய்திருக்கும படியை இனிக்காண்போம். இந்த ஸ்மருதி மந்மதநாததத்தால கல்கத்தாவில் ஆங்கிலமொழி பெயர்ப்புடன அச்சிடப்பெற்ற இருபது தர்மஶாஸ்திரங்களில் ஒன்றாகக் காண்கிறது. இது நூறு அத்தியாயங்கள கொண்டது. பம்பாய் வேங்கடேஶ்வர ஸ்டீம் பிரஸ்ஸில், 'விஷ்ணுஸ்மருதி' என்னும் பெயரிலும் பூனா ஆநந்தாஶ்ரமத்தில் 'லகு விஷ்ணுஸ்ம்ருதி' என்னும் பெயரிலும் அச்சிடப்பட்டிருக்கும் ஐந்து அத்தியாயஙகொண்ட ஸ்ம்ருதி இதனிலும் வேறுபட்டது. (அதில் பரம்பொருளைப் பற்றிய பேச்சில்லை.) இந்த ஸ்ம்ருதியில் பரம்பொருளைப் பற்றி விஸ்தாரமாகப் பேசப்பட்டிருக்கிறது. அப்பகுதிகளைக் காண்போம.

http://acharya.org

இதில 62 ஶ்லோகங்கொண்ட முதலத்தியாயத்தில் நைமித்திக ப்ரளய ஸ்ருஷ்டிக்ரமமும, வராஹப பெருமானுக்கும் பூமிதேவிக்கும நடநத ஸமவாதமும விரிவாக வர்ணிக்கப்பட்டிருககிறது. இதில் ஒவ்வொரு ஶ்லோகமும பரமபொருள் யாரென்பதைக் கையிலஙகு கனியாகக காட்டித்தருகினறதாகையாலே, இவ்வத்தியாயம முழு வதையும பகுதி பகுதியாக எடுத்து விவரித்து, அதிலுள்ள முககிய மான விஷயஙகளை எடுத்துக் காட்டுவோம்.

ப்₃ரஹ்மராத்ர்யாம் வ்யதீதாயாம் ப்ரபு₃த்₃தே₄ பத்₃ம ஸம்ப₄வே |
விஷ்ணு: ஸிஸ்ருக்ஷு: பூ₄தாநி ஜ்ஞாத்வா பூ₄மிம் ஜலாநுகா₃ம் ||
ஜலக்ரீடா₃ருசி ஶுப₄ம் கல்பாதி₃ஷு யதா₂ புரா |
வாராஹ மாஸ்தி₂தோ ரூபம் உஜ்ஜஹார வஸுந்த₄ராம் ||
வேத₃பாதோ₃ யூபத₃ம்ஷ்ட்ர: க்ரதுத₃ந்தஶ்சிதீமுக₂: |
அக்₃நிஜிஹ்வோ த₃ர்ப₄ரோமா ப்₃ரஹ்மஶீர்ஷோ மஹாதபா: ||
அஹோராத்ரேக்ஷணோ தி₃வ்ய: வேதா₃ங்க₃ஶ்ருதிபூ₄ஷண: |
ஆஜ்யநாஸ: ஸ்ருவாதுண்ட₃: ஸாமகோ₄ஷமஹாஸ்வந: ||
த₃ர்மஸத்யமய: ஶ்ரீமாந் க்ரமவிக்ரமஸத்க்ருத: |
ப்ராயஶ்சித்தமயோ வீர: பஶுஜாநு: மஹாவ்ருஷ: ||
உத்₃கா₃த்ராந்த்ரோ ஹோமலிங்க₃: பீ₃ஜௌஷதி₄மஹாபல: |
வேத₄யந்தராத்மா மந்த்ரஸ்பி₂க₃விக்ருத: ஸோமஶோணித: ||
வேதி₃ஸ்கந்தோ₄ ஹவிர்க₃ந்தோ₄ ஹவ்யகவ்யாதி₃வேக₃வாந் |
ப்ராக₃வம்ஶகாயோ த்₃யுதிமாந் நாநாதீ₃க்ஷாபி₄ரந்வித: ||
த₃க்ஷிணாஹ்ருத₃யோ யோக₃மஹாமந்த்ரமயோ மஹாந் |
உபாகர்மோஷ்ட₂ருசிர: ப்ரவர்க்₃யாவர்த்தபூ₄ஷண: ||
நாநாச்ச₂ந்தோ₃கதிபதோ₂ கு₃ஹ்யோபநிஷதா₃ஸந: |
சா₂யாபத்நீஸஹாயோ ऽஸௌ மணிஶ்ருங்க₃ இவோதி₃த: ||

[பிரமனின் இரவுநேரம் முடிந்தபின், உநதித்தாமரையில் பிறநத பிரமன் கண் விழித்தபின் விஷ்ணுவானவா ஜீவராசிகளை ஸ்ருஷ்டி செயய விருப்பஙகொண்டார்; பூமி ஜலத்திலுள் அமிழ்நதிருபப தைக கண்டு, முன் கலபதிற்போலே நீர் விளையாட்டில விருபபங கொண்ட மங்கள கரமான வராஹவுருவை எடுத்துககொண்டவராய் பூமியைத் தூக்கியெடுததார். அவர் நாலு வேதங்களையும நாலு

கால்களாகக் கொண்டிருந்தார்; யாகத்தில் நாட்டப்படும் யூப ஸ்தபம்பத்தை தந்தமாகக்கொண்டிருந்தார். யாகங்களே அவருடைய பற்களாயிருந்தன. யாகத்தில் உள்ள சிதியையே முகமாகக் கொண்டிருந்தார். யாகாக்னியை நாவாகவும், தர்ப்பங்களை ரோமங்களாகவும் மறைமுடிகளான உபனிஷத்துக்களைத் தலையாகவும் கொண்டு பெரிய ஸங்கல்பத்தை உடையவராயிருந்தார். அப்ராக்ருதரான அவர் இரவு பகல்களையே கண்களாகவும், வேதாங்கங்களையே காதணிகளாகவும், (யாக) நெய்யையே மூக்காகவும், ஸ்ருவத்தையே முகமாகவும். ஸாமகோஷத்தையே பெரிய முழக்கமாகவும் கொண்டிருந்தார். ஸ்ரீமானாய், தர்மஸத்யமயராய், முன்னும் பின்னும அழகாக அசைபவராய், ஸர்வப்ராயச்சித்தங்களையும் தன்னுட்கொண்டவராய், வீரராய், யாகபசுவையே முழங்காலாகக்கொண்டவராய் விளங்கினார். அந்த மஹாவராஹப்பெருமாள் உத்காதாவைக் குடலாகவும், ஹோமத்தை ஆண்குறியாகவும், விதைகளையும், பெரும்பழங்களையும் பீஜங்களாகவும், யாகவேதியை உயிராகவும் மந்திரங்களை இடுப்பாகவும், ஸோமரஸத்தை ரத்தமாகவும கொண்டிருந்தார் மஹாவேதியைத் தோள்களாகவும், ஹவிஸ்ஸைத் தன் திருமேனியின நறுமணமாகவும், (தேவர்கட்கும் பித்ருக்களுக்கும் யாகத்தில் அளிக்கப்படும்) ஹவ்யகவ்யங்களை வேகமாகவும், யாகத்திலுள்ள ப்ராக்₃வம்ஶமெனும் ஸ்தானத்தை அழகிய திருமேனியாகவும கொண்டவராய், ஒளி நிறைந்தவராய், பல தீக்ஷைகளோடு கூடியவராயிருந்தார் அவர். யாகதக்ஷிணையையே ஹ்ருதயமாகக்கொண்டவராய், யோகமஹாமந்த்ரமயமாயிருப்பவராய், பெரியவராய், உபாகர்மமாகிற உதடுகளால் அழகியவராய், ப்ரவர்க்₃யாவர்த்தங்களை ஆபரணங்களாக உடையவராயிருந்தார் அவர். காயத்ரீமுதலான பலச்சந்தஸ்ஸுக்களையும நடக்குமிடமாகவும், ரஹஸ்யமான உபனிஷத்துக்களை ஆஸனமாகவும், நிழலையே பத்னியாகவும் கொண்ட வரான அவர் மணிமயமான மலைமுடிபோலே விளங்கினார்.]

இவ்வொன்பது ஶ்லோகங்களும் யஜ்ஞவராஹ மூர்த்தியின் வடிவில் ஒவ்வொரு பகுதியும் யஜ்ஞஸம்பந்தமுள்ளவையாகவே யிருந்தது என்று காட்டுவதன் மூலம் "யஜ்ஞோ வை விஷ்ணு:" [யஜுகா 1-7; 6-1; சதபத 1-7-4; 3-5-2] என்னும் வேதவாக்யம் உபப்₃ரும்ஹணம செய்யப்படுகிறது. விஷ்ணுவே வராஹவுருவெடுத்து பூமியை நீரிலிருந்து தூக்கியெடுத்தார் என்று கூறுவதன் மூலம், "தாம் வராஹோ பூ₄த்வா அஹரத்" [யஜு-ஸம் 7-1-5] "உத்₃த்₄ருதாஸி வராஹேண க்ருஷ்ணேந ஶதபா₃ஹுநா" [தை-நா]

http://acharya.org

"இயதீ ஹ வா இயமக்₃ரே ப்ருதி₂வ்யாஸ ப்ராதே₃ஶமாத்ரீ। தாம் ஏமூஷ இதி வராஹ உஜ்ஜக₄ாந। ஸோऽஸ்யா: பதி: ப்ரஜாபதி." [சதபத 14-1-2] என்னும் ஶ்ருதிவாக்யங்கள உபப்₃ருமஹணம செய்யப் பட்டன. இந்த ஶ்ருதிவாக்யங்கள் இந நூலின முதலத்தியாயத்தின மூனறும் பாததததில அவதாரப பெருமை எனும தலைப்பினகீழ் விளக்கப்பட்டன. இவறறிலிருந்து அனைத்துலகையும படைத்து ரக்ஷிக்கும யஜ்ஞஸ்வருபியான பரமபொருள விஷ்ணுவேயென விளஙகுகிறது.

மஹீம் ஸாக₃ரபர்யந்தாம் ஸஶைலவநகாநநாம் ।
ஏகார்ணவஜலப்₄ரஷ்டாம் ஏகார்ணவ க₃த: ப்ரபு₄: ॥
த₃ம்ஷ்ட்ராக்₃ரேண ஸமுத்₃த்₄ருத்ய லோகாநாம் ஹித காமயயா ।
ஆதி₃தே₃வோ மஹாயோகீ₃ சகார ஜக₃தீம் புந: ॥
ஏவம யஜ்ஞவராஹேண பூ₄த்வா பூ₄தஹிதார்த்தி₂நா ।
உத்₃த்₄ருதா ப்ருதி₂வீ ஸர்வா ரஸாதலக₃தா புரா ॥
உத்₃த்₄ருதய நிமசலே ஸ்தா₂நே ஸ்த₂ாபிதா ச தத₂ா ஸ்வகே।
யதா₂ஸ்தா₂நம் விபு₄ஜ்யாப: தத்₃க₃தா மது₄ஸூத₃ந: ॥
ஸாமுத்₃ராஶ்ச ஸமுத்₃ரேஷு நாதே₃யாஶ்ச நதீ₃ஷு ச ।
பல்வலேஷு ச பால்வல்ய: ஸரஸ்ஸு ச ஸரோவரா: ॥
பாதாலஸப்தகம சக்ரே லோகாநாம் ஸப்தகம் தத₂ா ।
த்₃வீபாநாமுத₃தீ₄நாம் ச ஸ்தா₂நாநி விவிதா₄நி ச ॥
ஸ்தா₂நபாலாந் லோகபாலாந் நதீ₃ஶைலவநஸ்பதீந் ।
ருஷீம்ஶ்ச ஸப்த த₄ர்மஜ்ஞாந் வேதாந் ஸாங்கா₃ந் ஸுராஸுராந் ॥
பிஶாசோரக₃க₃ந்த₄ர்வயக்ஷராக்ஷஸமாநுஷாந் ।
பஶுபக்ஷிம்ருக₃ாத்₃யாமஶ்ச பூ₄தக்₃ராமம் சதுர்வித₄ம் ॥
மேகே₄ந்த்₃ரசாபஶமபாத்₃யாந் யஜ்ஞாம்ஶ்ச விவிதா₄ம்ஸ் தத₂ா ।
ஏவம் வராஹோ ப₄க₃வாந் க்ருத்வேத₃ம் ஸசராசரம் ॥
ஜக₃ஜ்ஜக₃ாம லோகாநாம் அவிஜ்ஞாதாம தத₂ா க₃திம் ॥

[ஆதிதேவராய், பெரிய ஸங்கல்பத்தையுடையவராய், லோகநாத ரான அவர், கடலை எல்லையாகக்கொண்டதாய், மலை, தோட்டம,

காடு நிறைந்ததாய் ப்ரளயஜலத்தில் மூழ்கியதான பூமியை உயிர்களுக்கு நன்மை செய்வதற்காக ப்ரளயஜலத்தில் தானும் மூழ்கி தந்தத்தின் நுனியால் எடுத்து, மறுபடியும் பழைய உலகமாக ஆக்கினார். இவ்வண்ணமாக உயிர்களுக்கு நன்மையை விரும்பிய யஜ்ஞவராஹப் பெருமானாலே ரஸாதலத்தில் அமிழ்ந்திருந்த பூமி முழுவதும் தூக்கி எடுக்கப்பட்டது. தூக்கி எடுத்தபின் தனக்குரிய ஸ்தானத்தில் அசையாதபடி நிலைநிறுத்தப்பட்டது. அதற்குப்பின் மதுஸூதனனான பகவான் அதிலுள்ள நீரைப் பல வகையாகப் பிரித்துக் கடல் நீரைக் கடலிலும், ஆற்று நீரை ஆறுகளிலும், ஏரி நீரை ஏரிகளிலும், குளத்து நீரைக் குளங்களிலும் சேர்த்தார். கீழுலகம் ஏழையும், மேலுலகம் ஏழையும் படைத்தார். தீவுகளுக்கும், கடல்களுக்கும் உரிய பல வகையான ஸ்தானங்களையும் கல்பித்தார். நதிகளையும், மலைகளையும், மரங்களையும், அரசர்களையும், லோக பாலர்களையும் ஏழு ரிஷிகளையும், தர்மமறிந்தவர்களையும், அங்கங்களோடு கூடிய வேதங்களையும், தேவாஸுரர்களையும், பிசாசங்களையும், பாம்புகளையும், கந்தருவர்களையும் யக்ஷராக்ஷஸர்களையும் மனிதர்களையும், பசு, பக்ஷி, மிருகம் முதலானவற்றையும், (தேவர், திர்யக், மனுஷ்யர், ஸ்தாவரம் எனும்) நாலு வகை ஜீவராசிகளையும், மேகம், வானவில், மின்னல் முதலானவற்றையும், பல விதமான யாகங்களையும் உண்டாக்கி, இவ்வண்ணமாக அசைவனவும், அசையாதனவுமடங்கிய உலகைப்படைத்துவிட்டு, வராஹப்பெருமான் உலகில் எவருமறியாத ஓரிடத்திற்குப் போய்விட்டார்.]

இந்த ஶ்லோகங்களிருந்து, மஹாப்ரளயத்திற்குப்பின் ஸமஷ்டி ஸ்ருஷ்டியைத் தானே செய்வதுபோலே, பிரமனின் இரவாகிற நைமித்திகப்ரளயத்திற்குப் பினனும் வராஹரூபியாகிப் பலவிதமான ஸ்ருஷ்டிகளைத்தான் நேரே செய்தான் பகவான் என்றுவிளங்குகிறது. இந்த ஶ்லோகங்களிலும், பின் வரும ஶ்லோகங்களிலும் பரம்பொருளுக்கேயுரிய அடைமொழிகளை வராஹப்பெருமானுக்கு இட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

அவிஜ்ஞாதாம் க₃திம் யாதே தே₃வதே₃வே ஜநார்த₃நே ।
வஸுதா₄ சிந்தயாமாஸ கா த்₄ருதிர்மே ப₄விஷ்யதி ॥
ப்ருச்ச₂ாமி கஶ்யபம் க₃த்வா ஸ மே வக்ஷ்யத்யஸம்ஶயம் ।
மதீ₃யாம் வஹதே சிந்தாம் நித்யமேவ மஹாமுநி: ॥
ஏவம் ஸா நிஶ்சயம் க்ருத்வா தே₃வீ ஸ்த்ரீரூபதா₄ரிணீ ।
ஜகா₃ம கஶ்யபம் த்₃ரஷ்டும் த்₃ருஷ்டவாந் தாம் ச கஶ்யப: ॥

http://acharya.org

நீலபங்கஜபத்ராக்ஷீம் ஶாரதே3ந்து3நிபா4நநாம் |
அலிஸங்கா4லகாம் ஶுப்4ராம் ப3ந்து4ஜீவாத4ராம் ஶுபா4ம் ||
ஸுப்4ரூம் ஸுஸூக்ஷ்மத3ஶநாம் சாருநாஸாம் நதப்4ருவம் |
கம்பு3கண்ட2ம் ஸம்ஹதோரும் பீநோருஜக4நஸ்த2லீம் ||
விரேஜதுஸ்ஸ்தநௌ யஸ்யா: ஸமௌ பீநௌ நிரந்தரௌ |
ஶக்ரேப4கும்ப4ஸங்காஶௌ ஶாதகும்ப4ஸமத்3யுதீ ||
ம்ருணாளகோமளௌ பா3ஹூ கரௌ கிஸலயோபமௌ |
ருக்மஸ்தம்ப4நிபா4வூரூ கூ3டே4 ஶ்லிஷ்டே ச ஜாநுநீ ||
ஜங்கே4 விரோமே ஸுஷமே பாதா3வதிமநோரமௌ |
ஜக4நம் ச க4நம் மத்4யம் யதா2 கேஸரிண: ஶிஶோ: ||
பராப4யுதா நகா2ஸ்தாம்ரா: ரூபம் ஸர்வமநோஹரம் |
குர்வாணாம் வீக்ஷிதைர் நித்யம் நீலோத்பலயுதா தி3ஶ: ||
குர்வாணாம் ப்ரபயா தே3வீம் ததா2 விதிமிரா தி3ஶ: |
ஸுஸூக்ஷ்மாகலவஸநாம் ரத்நோத்தமவிபூ4ஷிதாம் ||
பத3ந்யாஸைர் வஸுமதீம் ஸபத்3மாமிவ குர்வதீம் |
ரூபயௌவநஸம்பந்நாம விநீதவது3பஸ்தி2தாம் ||
ஸமீபமாக3தாம் த்3ருஷ்ட்வா பூஜயாமாஸ கஶ்யப: |
உவாச தாம் வராரோஹே விஜ்ஞாதம் ஹ்ருத்3க3தம் மயா ||
த4ரே தவ விஶாலாக்ஷி க3ச்ச2 தே3வி ஜநார்த3நம் |
ஸ தே வக்ஷ்யத்யஶேஷேண பா4விநீ தே யதா2 ஸ்தி2தி: ||
க்ஷீரோதே3 வஸதிஸ்தஸ்ய மயா ஜ்ஞாதா ஶுபா4நநே |
த்4யாநயோகே3ந சார்வங்கி3 தஜ்ஜ்ஞாநம் தத்ப்ரஸாத3ஜ: ||

[தேவதேவனை ஜனார்த்தனன் எவருமறியாத இடத்திற்கு மறைந்த வுடன, 'எனக்கு த4ாரகமாயிருக்கக்கூடியாது எது' என்று பூமி சிந்திக்கத் தொடஙகினுள். 'கஶ்யபமஹர்ஷியிடம் சென்று இதைக் கேட்கக்கடவேன; அவர் ஐயமற இதைக் கூறுவார்; அந்த மஹா முனிவர் எனனைபபறறியே எப்போதும் கவலைப்படுகிருரன்றே.' என்று பூமிதேவியானவள் நிச்சயித்து, பெண்ணுருக்கொண்ட வளாய்க் கஶ்யபரை அடைந்தாள். கஶ்யபரும் அவளைக் கண்டார். கருநெயதலிதழ்போன்ற கண், ஶரத்கால சந்திரனைப்போனற முகம், வண்டுகளினகூட்டமபோனற திருக்குழற்கற்றைகள்,வெளளை நிறம், ப3ந்து4ஜீவ (உச்சித்திலக) மரத்தின் பூப்போன்ற உதடுகள் ஆகிய வற்றையுடையவளும, அழகியவளும், அழகிய புருவம், மெல்லிய

http://acharya.org

பற்கள், அழகிய மூக்கு, வளைந்த புருவங்கள், சங்குபோன்ற கழுத்து. இணைந்த துடைகள், பருத்தபெரிய அல்குல், ஸமமானவையாய், இந்திரனின யானையின மத்தகங்கள போனறவையாய், பொன்போன்று ஒளிவீசுகின்றவையாய், பருத்து இடைவெளியற்று விளங்கும் திருமுலைத்தடங்கள், தாமரைத்தண்டுபோல அழகிய திருக்கைகள், கொழுந்திலைபோன்ற திருக்கைத்தலங்கள், பொனதூண்போன்ற துடைகள், சதைப்பற்றுள்ள இணைந்த முழந்தாள்கள், மயிரற்ற உருண்ட திருக்கால்கள, மிகவழகிய திருவடித்தலங்கள், உறுதியுள்ள அல்குல், சிங்கக்குட்டியினுடையதுபோன்று சிறுத்த இடை, தாமிர நிறமுடைய ஒளியுள்ள நகங்கள், அனைவருடைய நெஞ்சையும் ஈர்க்கும் உருவம், தன கடாக்ஷங்களாலே திக்குகளனைத்தையும் நீலோத்பலம் நிறைந்தவையாகச் செய்யும் திருக்கண்கள், அவ்வண்ணமே திக்குகளை இருளற்றதாக்கும் திருமேனியொளி, மெல்லிய வெண்ணிற ஆடை, சிறந்த ரத்தினாபரணங்கள், அடிச்சுவடுகளைத் தாமரைகளாக்கும் அடிவைப்புகள் ஆகியவற்றையுடையவளும், ரூபமும், யௌவநமும் நிறைந்தவளும், அடக்கத்தோடு அருகில் வந்து நிற்பவளுமான பூதேவியைக்கண்டு கஶ்யபர் அவளைப்பூஜித்தார். இனியவளே! உன் திருவுள்ளத்தில் உள்ளதை அறிந்தேன்; தடங்கணணியான பூதேவியே! தேவனான ஜனார்த்தனனிடம் செல்வாயாக; அப்பெருமான் உனக்கு தாரகமாயிருப்பதைக் குறையறச் சொல்லுவார். அழகிய முகத்தவளே! அழகிய அங்கங்களை உடையவளே! அப்பெருமானின் இருப்பிடம் திருப்பாற்கடல என்று எனனால் தியானத்தின் மூலம் அறியப்பட்டது. அவருடைய அருளாலேயே அவரைப்பற்றிய அறிவு ஏற்படும்.]

இப்பதினைறு ஶ்லோகங்களிலும் பரமபுருஷனின் பத்தினியான பூதேவியின் வடிவழகு விரிவாக விவரிக்கப்பட்டிருக்கின்றது. உத்தம நாயகிக்குஇருக்கவேணடிய லக்ஷணஙகள்எல்லாம் பூமிப்பிராட்டிக்கு உள்ளதாக இங்கு வருணிக்கப்பட்டிருப்பது குறிக்கொள்ளத் தக்கது. இந்நூலின் முதலத்தியாயத்தில் நமமால் விவரிக்கப்பட்ட பூஸூக்தத்திற்கு இந்த ஶ்லோகங்கள் முழுவதும் உபப்ருமஹணங்களாகும். பரமபுருஷனான ஜனார்த்தனனே பூமியை ரக்ஷிக்கவல்லவர் என்றும், அவருடைய அருளாலேயே அவரைப்பற்றிய அறிவு ஏற்படும் என்றும கஶ்யபர் கூறியதிலிருந்து நாராயணனே பரம்பொருள் என்றும், அவனருளே அவனைப்பெற உபாயம் என்றும் விளங்குகிறது.

http://acharya.org

இத்யேவமுக்தா ஸம்பூஜ்ய கஶ்யபாக்3 வஸுதா4 தத: |
ப்ரயயௌ கேஶவம் த்3ரஷ்டும் க்ஷீரோத3மத2 ஸாக3ரம் ||
ஸா த3த3ர்ஶாऽம்ருதநிதி4ம் சந்த்3ரரஶ்மிமநோஹரம் |
பவநக்ஷோப4ஸஞ்ஜாதவீசிஶதஸமாகுலம் ||
ஹிமவச்ச2கஸங்காஶம் பூ4மண்ட3லமிவாபரம் |
வீசிஹஸ்தை: த4வளிதை: ஆஹ்வயாநமிவ க்ஷிதிம் ||
தைரேவ ஶாஶ்வ4ரதாம சந்த்3ரே வித3த4ாநமிவாऽநிஶம் |
அந்தரஸ்தே2ந ஹரிணா விக3தாஶேஷகல்மஷம் ||
யஸ்மாத் தஸ்மாத் து பீ3ப4ரந்தம் ஸுஶுப்4ராம் தநுமூர்ஜி
தாம் |
பாண்டு3ரம் க2க2மாக3மமதே4 பு4வநவர்த்திநம் ||
இந்த்3ரநீலகடா3ராட்4யம் விபரீதமிவாம்ப3ரம் ||
பே2ணாவளீஸமுத்3பூ4தவநலேங்க4ஸமாஸிதம் |
நிர்மோகமிவ ஶேஷாஹே: விஸ்தீர்ணம் தமதீவ ஹி ||
தம த்3ருஷ்ட்வா தத்ர மத்4யஸ்த2ம் த3த்3ருஶே கேஶவாலயம் |
அநிர்தே3ஶ்யபரிமாணம் அநிர்தே3ஶ்யர்த்3தி4ஸம்யுதம் ||

[இவ்வண்ணமாகக் கஶ்யபரால் பூஜித்து உரைக்கப்பெற்ற பூதேவி அவரிடமிருந்து அகன்று கேசவனைக் காணப் பாற்கடலுக்குச் சென்றாள். அமுதங்களுக்கெல்லாம இருப்பிடமாய், சந்திரகிரணங்களைப் போல அழகியதாய், காற்றடிப்பதால உண்டாகும நூற்றுக்கணக்கான அலைகளால பொருந்தியதாய், நூறு இமயமலைகளைப்போல பரந்ததாய், மறறொரு பூமண்டலம் போனறதாய், வெளுதத அலைகளாகிற கைகளாலே பூதேவியை அழைப்பதுபோலிருப்பதாய், அக கைகளாலேயே சந்திரனுக்கு எபபோதும வெண்மையை அளிப்பது போலிருப்பதாய், உள்ளேயிருக்கும் ஹரியினால் பாபஙகள அனைததும் நீங்கப்பெற்றதாய, அதனாலேயே மிகவெளுதத பெரிய உடலையுடையதாய், வெளுத்ததாய், பறவைகளாலும் அடையமுடியாததாய், கீழுலகிலிருபபதாய், பலவகை ரத்தினங்கள் நிறைநததாய, ஆகாயததைக் கீழ்நோக்கிக் கவிழ்த்தது போலிருப்பதாய், அலைநுரைகளாகிற மரக்கூட்டததிலே உரிக்கப்பெற்ற ஆதிசேஷனின மிகபபெரிய சட்டையைப்போலேயிருப்பதான அததிருப்பாற்கடலைப் பாாத்து, அதன நடுவிலிருப்பதாய், அளவிட முடியாத பரப்பையுடையதாய், அளவற்ற செலவத்தையுடையதான கேசவனின் கோயிலைக்கணடாள.]

http://acharya.org

இவ்வேழு ஶ்லோகங்களும், "அம்பஸ்யபாரே" "யமந்தஸ் ஸமுத்ரே கவயோவயந்தி" "ஸமுத்ரேந்தம் நாராயணம்" என்று நாராயணவல்லியில் நாராயணனுக்கு இருப்பிடமாக ஓதப்பட்ட திருப்பாற்கடலை விவரிப்பதன்மூலம இந்த ஶ்ருதிகளுக்கு உபப்ரும்ஹணமாகின்றன. திருப்பாற்கடல் கீழுலகங்களில் இருப்பது என்றும், அதிலுள்ள கேசவனின் கோயில் அளவற்ற செல்வத்தையுடையது என்றும இங்கு கூறப்பட்டுள்ளது காணத்தக்கது. இனி, பரமபுருஷனின் திருமேனியை வருணிக்கும் அடுத்த பகுதியைக் காண்போம.

ஶேஷபர்யங்ககம் தஸ்மிந் ததர்ஶ மதுஸூதநம் |
ஶேஷாஹிபணரத்நாம்ஶுதுர்விபாவ்யமுகாம்புஜம் ||
ஶஶாங்கஶதஸங்காஶம் ஸூர்யாயுதஸமப்ரபம் |
பீதவாஸஸமக்ஷோபம் ஸர்வரத்நவிபூஷிதம் ||
ஸூர்யகோடிநிபைர்தீப்தம் குண்டலாப்யாம் விராஜிதம் |
ஸமவாஹ்யமாநாங்க்ரியுகம லக்ஷ்ம்யா: கரதலை: ஶுபை: ||
ஶரீரதாரிபி: ஶஸ்த்ரை: ஸேவ்யமாநம் ஸமந்தத: ||
தம் த்ருஷ்ட்வா புண்டரீகாக்ஷம் வவந்தே மதுஸூதநம் |
ஜாநுப்யாமவநீம் க்ருத்வா விஜ்ஞாபயதி சாப்யதோ ||

[அந்தக் கோயிலில் மதுஸூதனனைக் கண்டாள் பூதேவி. ஆதிசேஷனாகிற படுக்கையில சயனித்திருப்பவனும், ஆதிசேஷனின பணா மண்டலங்களிலுள்ள ரத்தினங்களின் ஒளியாலே காணா அரிதாயிருக்கும் முகத்தாமரையை உடையவனும, நூறு சந்திரர்களைப் போல் குளிர்ந்தவனாயிருப்பவனும, பதினாயிரம ஸூர்யர்களைப போல் ஒளியுள்ளவனும, பீதாம்பரத்தையணிந்தவனும், கலக்கமற்றவனும, எல்லா ரத்னங்களாலும அலங்கரிக்கப் பெற்றவனும், ஸூர்யன்போல் ஒளியுள்ள கிரீடத்தாலும், குண்டலங்களாலும பிரகாசிப்பவனும, ஸ்ரீதேவியின் மங்களமான கரதலங்களாலே பிடிக்கப்படும் திருவடியிணையை உடையவனும், சரீரமுடைய சங்கம, சக்ரம முதலான திவ்யாயுதங்களால் சுற்றிலும ஸேவிக்கப் படுபவனும, தாமரைக்கண்ணனுமான அந்த மதுஸூதனனைக்கண்டு முழந்தாள்கள் தரைப்பட வணங்கினாள் பூதேவி. பினவருமாறு விண்ணப்பிக்கவும் செய்தாள.]

இவ்வைந்து ஶ்லோகங்களும், "ஆதித்யவர்ணம்" "வித்யுத: புருஷாத்" "நீலதோயதமத்யஸ்தா வித்யுல்லேகேவ பாஸ்வரா"

http://acharya.org

என்று புருஷஸூக்தம் நாராயணவல்லி முதலான வேதவாக்யங்களில் வருணிக்கப்படும் பரமபுருஷனின் அப்ராக்ருதத்திருமேனியை வர்ணிப்பதன்மூலம் பரமபொருளுக்கு உருவமில்லையென்று கூறுகின்றவர்களையும், பிரமன், சிவன் முதலான மற்ற தெய்வங்களைப் பரமபொருளாகக் கூறுகின்றவர்களையும் நிரஸிக்கின்றன. வடிவிணையில்லா மலர் மகளும் பரமபுருஷனின் திருவடியைப் பிடித்துக் கொண்டிருக்கிறாள் என்று கூறும் வாக்யம் "ஸ்ரீருபஸ்பர்ஹணம்" [ஸ்ரீதேவி காலுக்கு அணையாகிறாள்] என்னும் கௌஷீதகி வாக்கியத்திற்கு உபப்ருஹ்மணமாயிருந்துகொண்டு, ஸ்ரீதேவியும் எம்பெருமானைப்போலே பரப்ரஹ்ம கோடியைச் சேர்ந்தவளே என்பதைத் தருகின்றது. இனி, முதலத்தியாயத்தின் எஞ்சிய பகுதியில் உள்ள பூமி விஷ்ணு ஸம்வாதத்தையும், பூமியினால் செய்யப்பட்ட விஷ்ணுஸ்துதியையும் காண்போம்.

உத்3த்3ருதாSஹம் த்வயா தே3வ ரஸாதலதலம் க3தா |
ஸ்வே ஸ்தா2னே ஸ்தா2பிதா விஷ்ணோ லோகானாம் ஹிதகாம்யயா ||

தத்ராSது4னா மே தே3வேஶ கா த்4ருதிர்வை ப4விஷ்யதி |
ஏவமுக்தஸ் ததா3 தே3வ்யா தே3வோ வசனமப்3ரவீத் ||
வர்ணாஶ்ரமாசாரரதா: ஶாஸ்த்ரைகதத்பராயணா: |
த்வாம் த4ரே தா4ரயிஷ்யந்தி தேஷாம் த்வத்3பா4ர ஆஹித: ||
ஏவமுக்தா வஸுமதீ தே3வதே3வமபா4ஷத |
வர்ணாஶ்ரமாணாம் ச த4ர்மான் வத3 ஸனாதனான் ||
த்வத்தோSஹம் ஶ்ரோதுமிச்சா2மி த்வம் ஹி மே பரமா க3தி: ||
நமஸ்தே தே3வதே3வேஶ தே3வாரிப3லஸூத3ன |
நாராயண ஜக3ந்நாத2 ஶங்க2சக்ரக3தா3த4ர ||
பத்3மநாப4 ஹ்ருஷீகேஶ மஹாப3லபராக்ரம |
அதீந்த்3ரிய ஸுது3ஷ்பார தே3வ ஶார்ங்க3த4னுர்த4ர ||
வராஹ பீ4ம கோ3விந்த3 புராண புருஷோத்தம |
ஹிரண்யகேஶ விஶ்வாக்ஷ யஜ்ஞமூர்த்தே நிரஞ்ஜன ||
க்ஷேத்ர க்ஷேத்ரஜ்ஞ லோகேஶ ஸலிலாந்தரஶாயக |
மந்த்ர மந்த்ரவஹாSசிந்த்ய வேத3வேதா3ங்க3விக்3ரஹ ||
ஜக3தோSஸ்ய ஸமக்3ரஸ்ய ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரக |
ஸர்வத4ர்மஜ்ஞ த4ர்மாங்க3 தா4மயோகே வரப்ரத3 ||

http://acharya.org

விஷ்வக்ஸேநாऽம்ருத வ்யோம மது₄கைடப₄ஸூத₃ந।
ப்₃ருஹதாம் ப்₄ரும்ஹணோऽஜ்ஞேய ஸர்வ ஸர்வாப₄யப்ரத₃ ||
ஹிரண்யாऽநக₄ ஜீமூதாऽவ்யய நிர்வாணகாரக।
ஆப்யாயந அபாம்ஸ்த₂ாந சைதந்யாத₄ார நிஷ்க்ரிய ||
ஸப்தஶீர்ஷாऽத்₄வரகு₃ரோ புராண புருஷோத்தம।
த்₄ருவாக்ஷர ஸூக்ஷ்மோ ப₄க்தவத்ஸல பாவந।
த்வம் க₃தி: ஸர்வதே₃வாநாம் த்வம் க₃திர்ப்₃ரஹ்மவாதி₃நாம்||
ததா₂ விதி₃தவேத்₃யாநாம் க₃திஸ்த்வம் புருஷோத்தம।
ப்ரபந்நாஸ்மி ஜக₃ந்நாத₂ த்₄ருவம் வாசஸ்பதிம் ப்ரபு₄ம் ||
ஸுப்₃ரஹ்மண்யமநாத்₄ருஷ்டம் வஸுதே₃வம் வஸுப்ரத₃ம்।
மஹாயோக₃ப₃லோபேதம் ப்ருஶ்நிக₃ர்ப₄ம த்₄ருதார்ச்சிஷம்||
வாஸுதே₃வம் மஹாத்மாநம் புண்ட₃ரீகாக்ஷமச்யுதம்।
ஸுராஸுரகு₃ரும் தே₃வம் விபு₄ம் பூ₄கமஹேஶ்வரம்||
ஏகவ்யூஹம் சதுர்பா₃ஹும் ஜக₃த்காரணகாரணம்।
ப்₃ரூஹி மே ப₄க₃வந் த₄ர்மாந் சாதுர்வர்ண்யஸ்ய ஶாஶ்வதாந்||
ஆஶ்ரமாசாரஸம்யுக்தாந் ஸரஹஸ்யாந் ஸஸங்க்₃ரஹாந் ||
ஏவமுக்தஸ்து தே₃வேஶ: புந: க்ஷௌணீம்ப₄ாஷத।
ஶ்ருணு தே₃வி த₄ரே த₄ர்மாந் சாதுர்வர்ண்யஸ்ய ஶாஶ்வதாந்।
ஆஶ்ரமாசாரஸம்யுக்தாந் ஸரஹஸ்யாந் ஸஸங்க்₃ரஹாந்।
யே து த்வாம் த₄ாரயிஷ்யந்தி ஸந்தஸ்தேஷாம் பராயணாந் ||
நிஷண்ணா ப₄வ வாமோரு காஞ்சநேऽஸ்மிந் வராஸநே।
ஸுக₂ாஸீநா நிபோ₃த₄ த்வம த₄ர்மாந் நிக₃த₃தோ மம ||
ஶுஶ்ரூஷே வைஷ்ணவாந் த₄ர்மாந் ஸுக₂ாஸீநா த₄ரா தத₃ா||

||இதி வைஷ்ணவே த₄ர்மஶாஸ்த்ரே ப்ரத₂மோऽத்₄யாய: ||

['விஷ்ணுவெனும் தேவனே! ரஸாதலத்தில் அமிழ்ந்த நான் சேதனர் உய்யும்பொருட்டு உன்னாலேயே உயரத் தூக்கி உரிய இடத்தில் நிலை நிறுத்தப்பட்டேன். தேவர் தலைவனே! இப்போது எனக்கு த₄ாரகமாயிருக்கக்கூடியது எது' என்று பூதேவியால் கேட்கப்பட்ட பகவான் பின் வருமாறு அருளினார்.— 'பூதேவியே! வர்ணாஶ்ரமாசாரங்களில் ஈடுபட்டவர்களாய், ஶாஸ்திரங்களையே மேலான ப்ரமாணங்களாகக் கொண்டவர்களாயிருப்பவர்கள் உன்னை தரித்து நிற்பார்கள்; அவர்களிடம் உன் பாரம் வைக்கப்படும்' என்று

http://acharya.org

இவ்வண்ணமாகக் கூறப்பட்ட பூதேவி தேவதேவனைக் குறித்துப் பின்வருமாறு கூறலுற்றாள்.— "வர்ணாச்ரமங்களுடைய தர்மங்களை உம்மிடமிருந்து கேட்கவிரும்புகிறேன்; பழையவரான அந்த தர்மங்களைக் கூறுவீராக; நீரேயன்றோ எனக்குப் பரமப்ராப்யமாயிருப்பவர். தேவதேவர் தலைவனே! தேவர்க்கு எதிரிகளான அஸுரர்களின் வலிமையை அழிப்பவனே! நாராயணனே! ஜகந்நாதனே! சங்கசக்ரகதாதரனே! பத்மநாபனே! இந்த்ரியங்களுக்கு ஈசனே! பெரும் பலபராக்ரமங்களை உடையவனே! இந்த்ரியங்களால் அறிய அரியவனே! கரை காணமுடியாதவனாயிருப்பவனே! தேவனே! சார்ங்கமென்னும் வில்லாண்டவனே! வராஹப்பெருமானே! பயங்கரனே! கோவிந்தனே! பழையவனே! புருஷோத்தமனே! பொன்போன்ற மயிர்முடிகளை உடையவனே! எங்கும் கண்களையுடையவனே! யஜ்ஞமூர்த்தியே! குற்றமற்றவனே! க்ஷேத்ரமான சரீரமாகவும், க்ஷேத்ரஜ்ஞனான ஜீவனாகவுமிருப்பவனே! (சரீராத்மாக்களிரண்டுக்கும் அந்தர்யாமியே! என்றபடி) லோகநாதனே! நீரின் நடுவில் சயனிப்பவனே! மந்த்ரமாயிருப்பவனே! மந்த்ரங்களை அளிப்பவனே! அறிதற்கரியவனே! வேதங்களையும், வேதாங்கங்களையும் சரீரமாகக்கொண்டிருப்பவனே! இவ்வனைத்துலகையும் படைத்து அழிப்பவனே! எல்லா தர்மங்களையும் அறிந்தவனே! தர்மங்களுக்குப் பலனையளிப்பவனே! தர்மகாரணமாயிருப்பவனே! வரமளிப்பவனே! எல்லாவுலகிலும் சேனைகளையுடையவனே! அழிவற்ற பரமாகாசம் எனப்படும் பரமபதத்தையுடையவனே! மதுகைடபர்களை அழித்தவனே! பெரிய பொருள்களைப் பெரிதாக்கியவனே! எவராலும் (முழுதும்) அறிய முடியாதவனே! எல்லாமாயிருப்பவனே! அனைவர்க்கும் அபயமளிப்பவனே! ஆசைப்படத்தக்கவனே! குற்றமற்றவனே! மேகம்போன்றவனே! அழிவற்றவனே! மோக்ஷமளிப்பவனே! அனைவரையும் போஷிப்பவனே! நீர் முதலான பூதங்கள் சேருமிடமாயிருப்பவனே! ஜ்ஞாநத்திற்கு ஆதாரமாயிருப்பவனே! (தாழ்ந்த) செயல்களற்றவனே! (யாகத்தில்?) ஏழு தலைகளையுடையவனே! யாகத்திற்குத் தலைவனே! பழையோனே! புருஷோத்தமனே! உறுதியான ப்ரண[illegible]யிருப்பவனே! மிக நுண்ணியவற்றையும் நியமிப்பவனே! [illegible] மங்கலனே! பரிசுத்தப்படுத்துபவனே! உனக்கு நமஸ்காரம். புருஷோத்தமனே! எல்லா தேவர்களுக்கும், ப்ரஹ்மஜ்ஞானிகளுக்கும் [illegible]களுக்கும் நீயே ப்ராப்யப்ராபகங்களாயிருக்கிறாய். ஜகந்நாதனே! நிலையானவனும், லோகங்களுக்குத் தலைவனும், ஸர்வஜ்ஞனும், [illegible] ப்ரஹ்மஸ்வரூபியாயிருப்பவனும், எவராலும

http://acharya.org

நிலைகுலைக்கமுடியாதவனும், ஐஸ்வர்யங்களைக்கொண்டு விளையாடுபவனும், ஐஸ்வர்யங்களை அளிப்பவனும, பெருத்த ஜ்ஞான பலங்களையுடையவனும், ஆகாயத்தைத்தன்னுள் அடக்கியவனும, சோதிகளைதரித்து நிற்பவனும, வாஸுதேவனும, மஹாதமாவும, தாமரைக் கண்ணனும், அச்யுதனும, தேவாஸுரர்க்குத தலைவனும, தேவனும், ஸர்வவ்யாபியும், பூதங்களுக்குப் பெரிய ஈஸ்வரனும், வ்யூஹ வாஸுதேவமூர்த்தியாகிற ஒரு வியூஹத்தையுடையவனும், நான்கு திருக்கைகளை உடையவனும, ஜகத்காரணமாயிருக்கும் பொருள்களுக்கெல்லாம் காரணமாயிருப்பவனுமான உன்னைச் சரணடைந்தேன். சதுர்வர்ணங்களுடைய ஶாஸ்வதமான தர்மங்களையும், நாலு ஆஶ்ரமங்களுடைய தர்மங்களையும ரஹஸ்யமான தர்மங்களையும், ஸங்க்ரஹமான தர்மங்களையும எனக்குக் கூறுவீர்' என்று இவ்வண்ணமாகப் பிரார்த்திக்கப்பட்ட தேவர்தலைவன் மறுபடியும பூமியைப் பார்த்துப் பினவருமாறு அருளினன,— "பூதேவியே! நாலு ஆஶ்ரமாசாரஙகளோடு கூடிய நாலு வர்ணங்களின நிலையான தர்மங்களையும, ரஹஸ்யதர்மஙகளையும், ஸங்க்ரஹதர்மங்களையும கேட்பாயாக. உன்னை (தர்மானுஷ்டானத்தின மூலம) தரிக்கச் செய்யும் நலமேலார்களுககு மேலான கதியாயிருப்பவை இந்த தாமஙகள். அழகிய துடையை உடையவளே! பொனமயமான இநதச் சிறந்த ஆஸனத்தில அமருவாய்; நனகு அமர்ந்து நான சொல்லும் தர்மங்களைக் கேட்பாய்" என்று. அவ்வண்ணமே பூமி தேவியானவள் நனகு அமர்நது, விஷ்ணுவினுல சொலலப்பட்ட தர்மங்களைக கேட்கலுற்றுள.]

இவ்விருபது ஶ்லோகங்களில் பரம்பொருளுக்குரிய எல்லாத் தனமைகளும் விஷ்ணுவுக்கு உள்ளன எனறு தெளிவாகக் காட்டப்பட்டது. இங்கு எமபெருமானுக்கு பூதேவியால் இடப்பட்ட திருநாமஙகளுககு வியாக்கியானமெழுதப்புகில், அதுவே ஒரு பாரதமாய் விரியும். ஸாரமாகச் சொன்னுல, அவனே தேவர்களுக்கும தேவாகளான ப்ரஹ்மருத்ரேந்த்ராதிகளுக்கும் ஈஶ்வரன என்றும், அனைவருடைய இந்திரியங்களையும நியமிப்பவன என்றும், எவராலும அறியமுடியாதவனென்றும், தேசகாலவஸ்துக்களால் அளவிடமுடியாதவனென்றும. வேதசாஸ்திரங்களின உட்பொருளாயிருபபவனென்றும அனைத்துலகையும் படைத்தளித்து அழிக்கும மூவகைக்காரணமான ஆதிமூலபபொருளென்றும், ஸர்வாந்தர்யாமியென்றும், அனைவர்க்கும ப்ராப்யப்ராபகங்களாயிருபபவனென றும, அப்ராக்ருதமான உலகத்தையும், திருமேனிகளையும், அவ

http://acharya.org

தாரங்களையும் உடையவனென்றும், அநந்தமான திவ்யாத்ம விக்ரஹகுணங்களை உடையவனென்றும் இங்கு உத்கோஷிக்கப் படுகிறது. முதலத்தியாயத்தில நம்மால் எடுக்கப்பட்ட எல்லா ஸ்ருதிவாக்யங்களும இங்கு உபப்ப்ரும்ஹணம செய்யப்பெற்றன. இத்தால, ஸாங்க்யம, யோகமதம, தார்க்கிகமதம சைவமதம, அத்வைதமதம் முதலான வேதபாஹ்யகுத்ருஷ்டி மதங்களெல்லாம் அடியறுக்கப்பட்டு,

''யா வேதபாஹ்யா: ஸ்ம்ருதய: யாஶ்ச காஶ்ச குத்ருஷ்டய:|
ஸர்வாஸ் தா நிஷ்பலா: ப்ரேத்ய தமோநிஷ்டா ஹி தா:
ஸ்ம்ருதா:||
[மநு 12-95]

[வேதத்துக்குப் புறமபான சாஸ்திரங்களும, வேதத்திற்கு அவப பொருள கூறும சாஸ்திரங்களும இறந்தபின் சேதனனுக்கு எப் பயனையும அளிக்கமாட்டா. தமோகுணம விஞ்சியவர்களுக்காக ஏற்பட்டவையன்றோ அவை] என்னும மநுஸ்ம்ருதிவசனத்துக்கு இலக்கானவையென்று நிஷ்கர்ஷிக்கப்பட்டதாயிற்று. நிற்க; வர்ண ஸ்ரமாசாராநுஷ்டானமே பூமியை தரிக்கச் செய்வது என்று எம பெருமான இங்கு கூறியிருப்பதும குறிக்கொள்ளத்தக்கது. இந்த வர்ணாஶ்ரமதர்மங்களை எமபெருமான பூமிதேவிக்கு விஸ்தாரமாகத் தொண்ணூறுக்கு மேற்பட்ட அத்தியாயங்களில உபதேசிக்கிறான். அவற்றின் இடையிடையில பரமபுருஷனே பரமபொருள என்பதும், பிரமன உருத்திரன முதலான எல்லா தேவர்களும ஜீவர்களே என்ப தும வலியுறுத்தப்படுகின்றன. அப்பகுதிகளைக் காண்போமினி.

ஐங்காயா: ஷிகதா க்ரூரா: யதா வர்ஷதி வாஸவே|
பக்யா கணயிதும் லோகே ந வ்யதீதா: பிதாமஹா:||
சதுர்தஶ விநஶ்யந்தி கல்பே கல்பே ஸுரேஶ்வரா:|
ஸர்வலோகப்ரதாநாஶ்ச மநவஶ்ச சதுர்தஶ||
பஹூநீந்த்ரஸஹஸ்ராணி தைத்யேந்த்ரநியுதாநி ச|
விநிஷ்டாநி ஹ காலேந மநுஜேஷ்வத கா கதா||
ராஜர்ஷயஶ்ச பஹவ: ஸர்வே ஸமுதிதா குணை:|
தேவா ப்ரஹ்மாதயஶ்சைவ காலேந நிதநம் கதா:||
யே ஸமர்த்தா ஜகத்யஸ்மிந் ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரிண:|
தேऽபி காலேந நீயந்தே காலோ ஹி பலவத்தர:||

http://acharya.org

[உலகில் இந்திரன் மழைபொழியும் பொழுது கங்கையின் மணல்கள் எப்படி எண்ணமுடியாதவையோ, அப்படியே கழிந்துபோன ப்ரஹ்மாக்களும எண்ணமுடியாதவர்களாவர். ஒவ்வொருகல்பத்திலும், பிரமன, உருத்திரன, இநதிரன முதலான பதினலு தேவர்தலைவர்களும், பதினலு மனுக்களும் அழிந்துபோகிருர்கள். பல்லாயிரம் இந்திரர்களும், பல லக்ஷம அஸுரர்தலைவர்களும் காலப்போக்கில் அழிந்து விட்டனர். மனிதர்களைப் பற்றிச சொல்லவும் வேண்டுமோ? எல்லா குணங்களும நிறைந்த ராஜரிஷிகளும், தேவர்களும், ப்ரஹ்மரிஷிகளும காலத்திஞல் இறந்துபட்டனர், இவ்வுலகில் ஸ்ருஷ்டிஸம்ஹாரங்களைச் செய்யவல்ல பிரமன், சிவன் முதலாஞரும் காலத்திஞல் அழிந்து போயினர். காலமே மிகவும் வலிதன்ரு] என்று இந்த ஸ்மருதியின் இருபதாவது அத்தியாயத்தில கோஷிக்கப்படுகிறது. இதிலிருந்து பிரமன் உருத்திரன் முதலான தேவர்களனைவரும ஜீவர்களே என்று விளங்குகிறது. "ஏகோ ஹவை நாராயண ஆஸீத் ந ப்ரஹ்மா நேஶாந:" என்று தொடங்கும் மஹோபனிஷத் வாக்யத்திற்கு இவை உபப்ருமஹணமாயிருக்கின்றன. "நினைப்பான்புகில் கடல் எக்கலில் நுண்மணலிற்பலர் எனைத்தோருகங்களும் இவ்வுலகாண்டு கழிந்தவர் பனைப்பால் மருங்கறமாய் தலல்லால் மற்றுக்கண்டிலம் பனைத்தாள் மதகளிறு அட்டவன் பாதம்பணிமினே' [திருவாய் 4-1-4] என்று நம்மாழ்வார் இந்த ஸ்மருதிவாக்யததையே தமிழ்ப்படுத்திஞர். இப்பாசுரத்தின் வியாக்கியானத்தில் இநத ஸ்ம்ருதிவாக்யம ப்ரமாணமாகக்காட்டப்பட்டிருப்பது குறிக்கொளளத்தக்கது. 'ந ப்₃ரஹ்மா நேஶாந:' என்று ஶ்ருதியும் 'ந வ்யதீதா: பிதாமஹா:' என்று ஸ்மருதியும் உத்கோஷிக்கையில், சிவனை நித்யனுகவும், நாராயணனை அழிபவனுகவும கூறும் சைவமதம் ஶ்ருதிஸ்ம்ருதிவிருததம் என விளங்குகிறது.

வ்ரதமேதத் புரா பூ₄மி க்ருத்வா ஸப்தர்ஷயோऽமலா: |
ப்ராப்தவந்த: பரம் ஸ்தா₂நம் ப்₃ரஹ்மா ருத்₃ரஸ்ததை₂வ ச ||

[பூமிதேவியே! இந்த விரதத்தை அனுஷ்டித்து, குற்றமற்றவர்களான ஸப்தரிஷிகளும, பிரமனும், உருத்திரனும் மேலான தம் ஸ்தா₂னத்தை அடைந்தனர்.] என்று நாற்பத்தேழாம் அத்தியாயத்தில் சாந்த்₃ராயணவ்ரதாநுஷ்டானத்தாலேயே பிரமன், உருத்திரன் முதலாஞரும தம் சிறந்த பதவியை அடைந்தனர் என்று கூறுகையால், ப்₃ரஹ்மருத்₃ராதி₃கள் கர்மத்திற்கு வசப்பட்ட ஜீவர்களே யென்பது வலியுறுத்தப்படுகிறது.

http://acharya.org

மார்க₃ஶீர்ஷஶுக்லைகாத₃ஶ்யாமுபோஷிதோ த்₃வா-த₃ஶ்யாம் ப₄க₃வந்தம் வாஸுதே₃வம் அர்ச்சயேத்। புஷ்ப-தூ₄பாநுலேபநதீ₃பநைவேத்₃யை:ப்₃ராஹ்மணதர்ப்பணைஶ்ச। வ்ரதமேதத் ஸம்வத்ஸரம் க்ருத்வா பாபேப்₄ய: பூதோ ப₄வதி। யாவஜ்ஜீவம் க்ருத்வா ஶ்வேதத்₃வீபமாப்நோதி। உப₄ய-பக்ஷத்₃வாத₃ஶீஷ்வேவம் ஸ்வர்க₃ம் ப்ராப்நோதி। யாவஜ்ஜீவம் க்ருத்வா விஷ்ணோர்லோகமாப்நோதி ஏவமேவ பஞ்ச-த₃ஶீஷ்வபி।

ப்₃ரஹ்மபூ₄தமமாவாஸ்யாம் பௌர்ணமாஸ்யாம் ததை₂வ ச। யோக₃பூ₄தம் பரிசரந் கேஶவம் மஹதா₃ப்நுயாத்॥

[மார்கழிமாதத்து ஶுக்லபக்ஷ ஏகாதசியில் (அதாவது ஸ்ரீவைகுண்ட ஏகாதசியில) உபவாஸமிருந்து, துவாதசியில் பகவானை வாஸு தேவனைப் புஷ்பம், தூ₄பம, சந்தனம், தீபம, நிவேத₃னம் ஆகிய வற்ருல், வழிபடுவதனமூலமும் பிராஹமணர்களைத் திருப்தி செய் விப்பதன் மூலமும் ஆராதிக்கவேண்டும். இந்த விரதத்தை ஒரு வருஷம் அனுஷ்டித்தால் பாபங்களினின்றும் விடுபடுகிறுன். உயி ருள்ளவரையில் அனுஷ்டித்தால பகவான வாழும் ஶ்வேதத்விபத்தை அடைகிருன். மார்கழி மாதத்தின் இரண்டு பக்ஷத்தின் ஏகாதசி த்வாதசிகளிலும் இப்படி விரதமிருந்தால் சுவர்க்கத்தை அடைகிருன. உயிருள்ளவரையில் இந்த விரதத்தை அநுஷ்டித்தால் விஷ்ணுவின உலகை அடைகிருன. பக்ஷங்களின் பதினைந்தாவது நாட்களில் இப்படி விரதமிருந்தாலும் இப்பலன்களை அடைகிருன. அமாவாஸ் யையில ப்ரஹ்மஸ்வரூபியாகக் கேசவனை உபாஸிப்பதாலும, பௌர்ணமாஸ்யையில யோக ஸ்வரூபியாக அவனை உபாஸிபப தாலும் பெரியோனை அவனையே அடைவான்.] என்று நாற்பத் தொன்பதாம் அத்தியாயத்தில வைகுண்ட ஏகாதசீவ்ரதம முதலான விரதங்களினுல் சிறந்த பலனுண்டு என்று பேசப்பட்டது. 'கேஶ வம் மஹத' என்றதால், 'க' என்னும எழுத்துககுப் பொருளான பிரமனுககும், ஈஶனெனப்படும் சிவனுக்கும காரணனை கேசவனை மிகப்பெரியவன் என்று உணர்த்தப்படுகிறது.

விஶேஷத: ஸாவித்ரீம் த்₃வயம் ஜபேத்। புருஷ ஸூக்தம் ச॥ நைதாப்₄யாமதி₄கமஸ்தி॥

http://acharya.org

[விசேஷித்து காயத்ரியை அவசியம் ஜபிக்கவேண்டும்; புருஷ ஸூக்தத்தையும் ஜபிக்கவேண்டும். இவ்விரண்டைக்காட்டிலும் மேலானதில்லை.] என்று அறுபத்திஞலாம் அத்தியாயத்தில் காயத்ரியும் புருஷஸூக்தமும் மிகச்சிறந்த வேதபாகங்கள் எனக்காட்டப் பட்டது. அடுத்ததான அறுபத்தைந்தாமத்தியாயத்தில்

அத₂த: ஸுஸ்நாத: ஸுப்ரக்ஷாளிதபாணிபாத₃: ஸ்வாசாந்த: தே₃வதார்ச்சாயாம் ஸ்த₂லே வா ப₄க₃வந்தமநாதி₃நித₄நம் வாஸுதே₃வம் அப்₄யர்ச்சயேத் ।

[நனகு குளித்து, கால்கைகளை நன்கு கழுவிக்கொண்டு, நன்கு ஆசமனம் செய்து, பகவான் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கும் அர்ச்சாமூர்த்தியிலாவது, கும்ப₄ஜலத்திலாவது, ஆதியந்தமற்றவனும் பகவானுன வாஸுதேவனைப் பூஜிக்கவேண்டியது.] என்று தொடங்கி,

சாமரம் வ்யஜநம் மாத்ரம் ச₂த்ரம் பாநாஸநே தத₂ா ।
ஸாவித்ரேணைவ தத் ஸர்வம் தே₃வாய விநிவேத₃யேத் ॥
ஏவமப்₄யர்ச்ய ச ஜபேத் ஸூக்தம் வை பௌருஷம் தத: ।
தேநைவ ஜுஹுயாத₃ாஜ்யம் ய இச்சே₂த் ஶாஶ்வதம் பத₃ம் ॥

[சாமரம், விசிறி, கண்ணுடி, குடை, நீர், ஆஸனம் ஆகிய அனைத்தையும் காயத்ரியைக்கொண்டே தேவனுக்கு ஸமர்ப்பிக்கவேண்டியது. இப்படிப் பூஜித்துப் புருஷஸூக்தததை ஜபிக்கவேண்டியது. அப்புருஷஸூக்தத்தாலேயே நெய்யைக்கொண்டு ஹோமம் செய்ய வேண்டியது. இப்படி செய்பவன் நிலையான பரமபதத்தை அடைவான்.] என்பதிருகப் பரமபுருஷனின் அர்ச்சா திருமேனியை ஆராதிக்கும் வழி காட்டப்பட்டது. வாஸுதேவன் ஆதியந்தமற்றவனென்றும், புருஷஸூக்தம் அவனுக்குரியதென்றும், அவனை ஆராதிப்பவன் நிலையான பதத்தைப் பெறுவானென்றும் கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

இத₃ம் ஶரீரம் வஸுதே₄ க்ஷேத்ரமித்யபி₄தீ₄யதே ।
ஏதத்₃யோ வேத்தி தம் ப்ராஹு: க்ஷேத்ரஜ்ஞ இதி தத்₃வித₃: ॥
க்ஷேத்ரஜ்ஞமேவ மாம் வித்₃தி₄ ஸர்வக்ஷேத்ரேஷு பா₄ரதி ।
க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிஜ்ஞாநம் ஜ்ஞேயம் நித்யம் முமுக்ஷுணா ॥

[பூமியே! இந்த சரீரமானது க்ஷேத்ரம் என்று கூறப்படுகிறது. இதை அறிந்தவனை க்ஷேத்ரஜ்ஞனென்று அறிவாளிகள் கூறுகின்ற

http://acharya.org

ளர். எல்லா க்ஷேத்ரங்களிலுமிருக்கும க்ஷேத்ரஜ்ஞனும் நானென்றே அறிவாயாக. மோக்ஷமடைய விரும்பும் மனிதன் க்ஷேத்ரத்தைப்பற்றியும, க்ஷேத்ரஜ்ஞனைப்பற்றியும தெளிந்தறியவேண்டும.] என்று படிக்கப்பட்டது. இவ்விரண்டு ஶ்லோகங்களும கீதையில் பதின்மூன்றுமத்தியாயத்தில் கண்ணனாலே அர்ஜுனனுக்கு உபதேசிக்கப்பட்டு, அவ்வத்தியாயம் முழுவதும் விவரிக்கப்பட்டன. அவ்வத்தியாயத்தின்ஸ்ரீராமாநுஜகீதாபாஷ்யதாத்பர்யசந்த்ரிகைகளிலிருந்து இங்கு ஜீவபர ஸ்வரூபைக்யம சொல்லுவது பொருந்தாதென்றும, ஶரீரஶரீரி பாவத்தினலே சேதநாசேதனங்களுக்கும் பரனுக்கும உண்டான ஐக்யமே இங்கு கூறப்படுகின்றது என்றும விளங்கும். இனி, அடுத்ததான தொண்ணூற்றேழாமத்தியாயத்தில, இந்த க்ஷேத்ரக்ஷேத்ரஜ்ஞவிபாகத்தையும விவரித்துக்கொண்டு, பகவத்தியானமாகிற பக்தியோகமவிளக்கப்படுகிறது. அதைக்காண்போமினி.

97-வது அத்தியாயம்

ஊருஸ்தே2த்த2நசரண: வ்யோமகரேகாமிதரமங்யஸ்யதாலுஸ்தாசலஜிஹ்வோ த3ந்தை: த3ந்தாநஸம்ஸ்ப்ருஶந் ஸ்வம் நாஸிகாக்3ரம் பஶ்யந் திஶஶ்சாநவலோகயந் விபீ4: ப்ரஶாந்தாத்மா சதுர்விம்ஶத்யா தத்த்வை: வ்யதீதம் சிந்தயேத்। நித்யமதீந்த்3ரியமகு3ணம் ஶப்3த3ஸ்பர்ஶரஸரூபக3ந்தா4தீதம் ஸர்வஜ்ஞமதிஸ்தூ2லம ஸர்வக3மதிஸூக்ஷ்மம்। ஸர்வத: பாணிபாத3ம் ஸர்வதோக்ஷிஶிரோமுக2ம் ஸர்வத: ஸர்வேந்த்3ரியாகதிம்। ஏவம் த்4யாயேத்। த்4யாநிரதஸ்ய ச ஸமவதஸரேண யோக3ாவிர்பா4வோ ப4வதி। அத2 நிராகாரே லக்ஷ்யப3ந்த4ம் கர்த்தும் ந ஶக்நோதி தத3ா ப்ருதி2வ்யப்தேஜோவாய்வாகாஶமநோபு3த்3த்4யாத்மாவ்யக்தபுருஷாணும் பூர்வம் பூர்வம் த்4யாத்வா தத்ர லப்3த4லக்ஷ்ய: தத்தத் பரித்யஜ்ய அபரமபரம் த்4யாயேத்। ஏவம் புருஷத்4யாநமாரபே4த। அத்ராப்யஸமர்த2: ஸ்வஹ்ருத3யபத்3மஸ்யாவாங்முக2ஸ்ய மத்4யே தீபவத் புருஷம் த்4யாயேத; தத்ராப்யஸமர்தே2ா ப4க3வந்தம் வாஸுதே3வம கிரீடிநம் குண்ட3லிநம் அங்க3தி3நம் ஸ்ரீவத்ஸாங்கம் வநமாலாவிபூ4ஷிதோரஸ்கம் ஸௌம்யரூபம் சதுர்பு4ஜம் ஶங்க2சக்ர க3த3ா

http://acharya.org

பத்3மத4ரம் சரணமத்4யக3தபு4வம் த்4யாயேத்| யத் த்4யாயதி தத3ாப்நோதி த்4யாந கு3ஹ்யம்| தஸ்மாத் ஸர்வமேவ க்ஷரம் த்யக்த்வா அக்ஷரமேவ த்4யாயேத் ந ச புருஷம் விநா கிஞ்சித்3ப்யக்ஷரமஸ்தி| தம் ப்ராப்ய முக்தோ ப4வதி ||

[இரு துடைகளிலும் இரு பாதங்களையும் (பத்மாஸனமாக) இட்டுக்கொண்டு, இடது கையில் வலது கையை வைத்துக்கொண்டு, நாவைத் தாடையில அசையாமல் பொருத்திக்கொண்டு, மேல் வரிசைப பற்களைக் கொண்டு கீழ்வரிசைப் பற்களைத் தொடாமல், கண்களால் மூக்கின் நுனியையே பார்த்துக்கொண்டு, வேறு திசைகளில் கண் செலுத்தாமல், பயமற்றவனுய், அமைதியான மனத்தையுடையவனுய், இருபத்துநாலு தத்துவங்களுக்கும் (அவுற்ருேடு கலந்த ஜீவஸமஷ்டிக்கும்) மேற்பட்ட பரமபுருஷனை தியானிக்கவேண்டும். நித்யமானதும் இந்திரியங்கட்கு எட்டாததும், (ஸத்வரஜஸ்தமோ) குணமற்றதும், ஶப்3த3ம், ஸ்பர்ஶம், ரூபம், ரஸம், கந்தம் ஆகிய (ப்ராக்ருத)குணங்களைக் கடந்திருப்பதும், எல்லாமறிந்ததும், மிகுந்த பலமுள்ளதாகையாலே அதிஸ்தூ2லமானதும், எங்கும் வியாபித்திருப்பதும், (புலன்களால் காண்பரியதாகையாலே) மிக நுண்ணியதாயிருப்பதும், எங்கும் கைகால்களையுடையதும், எங்கும் கண்கள், தலைகள், முகங்களையுடையதும், (அதாவது இந்த அவயவங்களால் செய்யக்கூடியகாரியங்களை எங்கும் செய்யவல்லதும்) எல்லா இடத்திலும எல்லா இந்திரியங்களின் சக்தியையுமுடையதுமான பரமாத்மஸ்வரூபத்தை இவ்வண்ணமாக தியானிக்கவேண்டும். இப்படி தியானிப்பதில் ஈடுபட்டவனுக்கு ஒரு வருடத்தில் பரமாத்மஸ்வரூபஜ்ஞானம் ஏற்படும் (இது முதல் முறை.) இவ்வண்ணமாக உருவமற்ற பரமாத்மஸ்வரூபத்தில் தன் மனத்தை நிலைநிறுத்த முடியாதவனுகில், அப்போது பூமி, ஜலம, தீ, வாயு, ஆகாசம், மனம் முதலான இந்திரியங்களுக்குக் காரணமான அஹங்காரம், புத்தியெனப்படும் மஹான், ஜீவஸமஷ்டியோடு கலந்த அக்ஷரம் எனனும் பிரகிருதி நிலை—'அவ்யக்தம்' 'தமஸ்' எனப்படும் மூலப்ரக்ருதியின் பரமகாரணநிலை ஆகிய பாமாத்மசரீரமான ஒவ்வொன்றிலும் ஸ்தூலமான முன் முன் தத்துவங்களை சரீரமாகக்கொண்ட பரமபுருஷனை தியானித்து அதில் நிலைபெறறவுடன், அந்த தியானத்தைவிட்டு ஸூக்ஷ்மமான பின பின் தத்துவங்களை சரீரமாகக் கொண்ட பரமபுருஷனை தியானிக்கவேண்டும். இவ்வண்ணமாக அதிஸூக்ஷ்மமான மூலப்ரக்ருதியை சரீரமாகக்கொண்ட பரமபுருஷத்யானம் கைவந்தபின், முதலிற்கூறிய உருவமற்ற (நிஷ்க்ருஷ்ட) பரமாத்ம

http://acharya.org

ஸ்வரூபத்யானத்தைத் தொடங்கவேணும். இவ்விரண்டாவது முறையிலும் தியானிக்க வல்லமையற்றவன தலைகீழாயிருக்கும தாமரை போன்ற தன இருதயத்தின் நடுவில் விளக்கொளிபோலேயுளள பரமாத்மஸ்வரூபத்தை தியானிக்கவேணடும். இமமூன்ருவது முறையிலும் தியானிக்க வல்லமையற்றவன, பரமபுருஷனை வாஸுதேவனை கிரிடம, குண்டலங்கள், தோளவளைகள முதலிய ஆபரணஙகளையுடையவனுய், ஸ்ரீவதஸம் என்னும் மறுவை (திருமார்பில்) உடையவனுய், வனமாலையால விளங்கும் திருமார்பை உடையவனுய், அழகிய உருவையுடையவனுய், நானகு திருக்கைகளிலும் சங்கசக்ரகதாபத்மஙகளை தரிப்பவனுய், தன் இரு திருவடிகளின் இடையேயுமிருக்கும பூதேவியை உடையவனுகப் பரமபுருஷனை தியானிககவேணடும். வேதாந்தரஹஸ்யமாய் தியானிக்கத்தகககதான இப்பரமாத்ம ஸ்வரூபததை தியானிததாலுகில் இதையே அடைகிருன. ஆகையால அழியக்கூடிய எல்லாப்பொருள்களையும் கைவிட்டு அழியாத பொருளையே தியானிககவேண்டும் பரமபுருஷனை இவனைத்தவிர வேறு அழியாபபொருள இலலை (முறகூறியபடி உபாஸிப்பவன்) அவனையே அடைநது முகதியடைகிருன.] எனறு இவவத்தியாயத்திலுளள முதல மஹாவாககியம பரமாத்மதியானத்தில மூனறு முறைகளை விவரிக்கிறது. (நிஷ்க்ருஷ்டமான) ரூபமறற பரமாதமஸ்வரூபதயானம முதல் முறை. இது அனைவர்க்கும கைவருவது மிக அரியது. பராகருதமான தத்துவங்களில ஸதூலதத்வசரீரகனுகப் பரமாத்மாவை உபாஸிக்கத்தொடஙகிப் படிப்படியாக ஸூக்ஷ்மதத்வசரீரகனுகப பரமாதமாவை உபாஸித்துககடைசியில் நிஷ்க்ருஷ்டமான பரமாத்ம ஸ்வரூபத்தை உபாஸிபபது இரண்டாவது முறை. இதுவும பலர்க்கு அரிதேயாகும. பரமமஙகளமான அப்ராக்ருத திவயமங்களவிக்ரஹத்தோடு கூடிய பரமாத்மஸ்வரூபததை உபாஸிபபது மூனருவது முறை. இதுவே அனைவரும கைக்கொளளக் கூடிய எளியமுறை. இஙகு பரமாத்மாவை பகவான் வாஸுதேவனெனறு குறித்து, அவனுடைய திருமேனிக்குத திருமாலினுடையவையாகப பிரஸித்தமான லக்ஷணஙகளையே கூறியிருப்பது குறிக்கொளளததக்கது. மற்ற தெயவஙகளின் பெயர்களையும இங்கு இடவில்லை. அவர்களுடைய லக்ஷணஙகளையும கூறவில்லை. இவற்றிலிருந்து வாஸுதேவனே பரமாத்மா எனறும், பிரமன் உருத்திரன முதலானுர் பரமாத்மாவல்லர் எனறும் தெளிவாக விளஙகுகிறது. இவ்வத்தியாயத்தில இமமஹாவாகயத்திற்கு மேலேயுளள ஸ்லோகங்களிலும் புருஷஸூகதநிர்வசனம் செய்து, இப்பரமபுருஷனையே

http://acharya.org

விஷ்ணுசப்தத்தால் எடுத்து, அவனைத் தமஸ்ஸுக்கு மேற்பட்டவனுகச் சொல்லி, அவனையே தியானிக்கவேண்டும் என்று விதித்ததிலிருந்தும் இவ்விஷயமே வலியுறுத்தப்படுகிறது. அந்தஸ்லோகங்களாவன:-

புரமாக்ரம்ய ஸகலம் ஶேதே யஸ்மாந் மஹாப்ரபு₄: |
தஸ்மாத் புருஷ இத்யேவம் ப்ரோச்யதே தத்வசிந்தகை: ||
ப்ராக்₃ராத்ராபரராத்ரேஷு யோகீ₃ நியமதந்த்₃ரித: |
த்₄யாயதே புருஷம் விஷ்ணும் நிர்கு₃ணம் பஞ்சவிம்ஶகம் ||
தத்த்வாத்மாநமகு₃ம்யம் ச ஸர்வதத்த்வவிவர்ஜிதம் |
அஸக்தம் ஸர்வப்₄ருச்சைவ நிர்கு₃ணம் கு₃ணபோ₄க்த்ரு ச ||
ப₃ஹிரந்தஶ்ச பூ₄தாநாம் அசரம் சரமேவ ச |
ஸூக்ஷ்மத்வாத் தத₃விஜ்ஞேயம் தூ₃ரஸ்த₂ம் சாந்திகே ச தத் ||
அவிப₄க்தம் ச பூ₄தேந விப₄க்தமிவ ச ஸ்தி₂தம் |
பூ₄தப₄வ்யப₄வத்₃ரூபம் க்₃ரஸிஷ்ணு ப்ரப₄விஷ்ணு ச ||
ஜ்யோதிஷாமபி தத் ஜ்யோதி: தமஸ: பரமுச்யதே |
ஜ்ஞாநம் ஜ்ஞேயம் ஜ்ஞாநக₃ம்யம் ஹ்ருதி₃ ஸர்வஸ்ய
திஷ்டி₂தம் ||
இதி க்ஷேத்ரம் ததா₂ ஜ்ஞாநம் ஜ்ஞேயம் சோக்தம் ஸமாஸத: |
மத்₃ப₄க்த ஏதத் விஜ்ஞாய மத்₃பா₄வாயோபபத்₃யதே ||
|| இதிஸப்தநவதிதமோऽத்₄யாய: ||

[புரங்கள் எனப்படும் எல்லாப்பொருள்களையும் வியாபித்து மஹாப்ரபுவான இவன அவற்றில் வாழ்கிருனகையாலே, தத்வஜ்ஞானிகளால் இவன் புருஷன் எனப்படுகிறுன். (ப்ராக்ருத) குணமற்றவனுய், இருபத்தைந்தாவது தத்துவமாய், மற்ற தத்துவங்களுக்கு ஆதமாவாய், அவற்ருேடு ஒட்டற்றவனுய், எவராலும் அறியப்படாதவனுய், புருஷன் எனப்படும் விஷ்ணுவை, யோகியானவன் சோம்பலில்லாதவனுய் முன்பின்னிரவுகளிலே எப்போதும் தியானிக்கிருன். இப்பரமபொருள் சிதசித்துக்களின் தோஷங்களால் தொடப்பெருதது. அனைத்தையும தரிபபது; (தாழ்ந்த) குணங்களற்றது. (கல்யாண) குணங்களை அனுபவிப்பது. பொருள்களின் உள்ளும புறமுமிப்பது. (ஸ்வரூபததால்) அசையாததாகவும், (ப்ரகாரங்களால்) அசைவதாகவுமிருப்பது. மிகநுண்ணியதாகையாலே அது அறிவரியது; (விபு₄வாகையாலே) தூரத்திலுமிருப்பது; அருகிலுமிருப்பது. பிரிவற்றது. சரீரமாயிருக்கும் பொருள்களால் பிரிவுடைய

http://acharya.org

தாகவுமுள்ளது. முக்தகாலத்திலுமுள்ள எல்லாப்பொருள்களையும் உருவமாகக்கொண்டது. அனைத்தையும் தன்பால் இழுப்பது; ஆட்டி வைப்பது. சோதிகளுக்கெல்லாம சோதியாயிருப்பது. தமஸ்ஸுக்கு மேற்பட்டதெனக் கூறப்படுவது. அறிவுமயமாகவும், அறியத்தக்கதாகவும, (யோகிகளின்) அறிவுக்கு எட்டுவதாகவுமிருப்பது. அனைவருடைய இருதயத்திலும் விளங்குவது. இவ்வண்ணமாக க்ஷேத்ரமும, ஞானமும, ஜ்ஞேயமும சுருக்கமாகச் சொல்லப்பட்டது. என் பக்தன் இதையறிந்து என்னையடைதலுறுகிறான்.]

தொண்ணூற்றேழாவது அத்தியாயம் முற்றிற்று.

இங்கு வாஸுதேவனான விஷ்ணுவே பரம் பொருள் என்று காட்டப்பட்டது; முன்னும் பின்னும் ஏராளமான கல்யாண குணங்களைப்படித்து இடையே 'குணமற்றவன்' என்று படிக்கையாலே உத்ஸர்க்க அபவாத ந்யாயத்தாலே பரம்பொருளான வாஸுதேவனுக்குத் தாழ்ந்த குணங்களே கிடையாதென்றும், கல்யாண குணங்களுக்கெல்லாம் கொள்கலமாயிருப்பவன் அவனென்றும் விளங்குகிறது. அனைத்தையும் உள்ளும் புறமும் வியாபித்து தரிப்பவனென்றும, சோதிகளுக்கெல்லாம சோதியென்றும கூறுவதிலிருந்தும், முக்திதசையிலும ஜீவனுக்குப் பரஸாம்யத்தையே சொல்லுவதிலிருந்தும அத்வைதஸித்தாந்தம அவைதிகமென்றும, விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே வேதாந்த விழுப்பொருளென்றும் விளங்குகிறது. தமஸ்ஸுக்கு மேற்பட்டவனாக விஷ்ணுவைக் கூறுகையால் விஷ்ணுவுக்குத் தமோகுணத்தைக்கூறும குத்ருஷ்டிகள் தள்ளப்பட்டனர். இனி, அடுத்ததான தொண்ணூற்றெட்டாமத்தியாயத்தைக் காண்போம.

98-வது அத்தியாயம்

இத்யேவமுக்தா வஸுமதீ ஜாநுப்4யாம் ஶிரஸா ச நமஸ்காரம் சகார் வேவாவாச। ப4க3வந் த்வத்ஸமீபே ஸததமேவம் சத்வாரி மஹாபூ4தாநி க்ருதாலயாநி। ஆகாஶ: ஶங்க2ரூபீ வாயு: சக்ரரூபீ தேஜஶ்ச க3தா3ரூபீ அம்பே4ாऽம்பே4ாருஹரூபீ அஹமப்யமேநைவ ரூபேண ப4க3வத்பாத3மத்4யபரிவர்த்திநீ ப4விஷ்யாமிச்ச2ாமி। இத்யேவமுக்தோ ப4க3வாந் தமேதத்யுவாச। ஸத்யமேதத் ஸத்3த்4ருமா ததா2 சகரே। தே3வதே3வம் ச [illegible]டாவ ॥

[இவ்வாறு எம்பெருமானால் உபதேசிக்கப்பெற்ற பூதேவி முழந்தாள்களாலும் தலையாலும் வணங்கி, எம்பெருமானைக் குறித்துப் பின்வருமாறு கூறலுற்றாள்.- "பகவானே! உனக்கருகில் எப்போதுமே நாலு மஹாபூதங்களும் பின்வருமாறு இடம் பெற்றுள்ளன. ஆகாசமானது (பாஞ்சசன்னியமாகிற) சங்கரூபமாகவும், வாயுவானது (ஸுதர்சனமென்னும) சக்கரமாகவும், தேஜஸ்தத்துவமானது (கௌமோத3கீ எனும்) கதாரூபியாகவும், ஜலமானது உன் திருக்கையிலுள்ள தாமரையுருவமாகவும் உள்ளன. (ஐந்தாவது பூதமான ப்ருதிவியின் அபிமானி தேவதையான) நானும இவ்வுருவுடனே பகவானான உன் திருவடிகளின் நடுவிலேயே ஸஞ்சரிப்பவளாய் வாழ ஆசைப்படுகிறேன்." இப்படிக் கூறப்பட்ட பகவான் 'அப்படியே ஆகுக' என்றான. பூமியும் தன விருப்பம் நிறைவேறப்பெற்றவளாய் அவன் திருவடிகளின நடுவிடத்தை அடைந்தாள். தேவதேவனான பகவானையும் துதித்தாள்.]

இங்கு நாலு பூதங்களும் சங்கசக்ரகதாபத்மங்களாயிருந்ததாகக் கூறியது, சங்கம் முதலானவை ஆகாசம் முதலானவற்றுக்கு அபிமானிகளாயிருப்பதைப்பற்றவாகும. இது ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் அஸ்த்ரபூஷணாத்யாயத்தில் விசேஷமாக விவரிக்கப்பட்டது. இனி அடுத்தபடியாக ஸகலவேதாந்தார்த்தங்களையும் பொதிந்துகொண்டிருக்கும பூமியின் பரமபுருஷஸ்துதியைக் காண்போம்.

ஓம் நமஸ்தே தே3வ தே3வ வாஸுதே3வ ஆதி3தே3வ காமதே3வ காமபால மஹீபால அநாதி3மத்4யநித4ந ப்ரஜாபதே ஸுப்ரஜாபதே மஹாப்ரஜாபதே ஊர்ஜஸ்பதே வாசஸ்பதே ஜக3த்பதே தி3வஸ்பதே வநஸ்பதே பயஸ்பதே ப்ருதி2வீபதே ஸலிலபதே தி3க்பதே மஹத்பதே மருத்பதே லக்ஷ்மீபதே ப்3ரஹ்மரூப ப்3ராஹ்மணப்ரிய ஸர்வக3 அசிந்த்ய ஜ்ஞாநக3ம்ய புருஹூத புருஷ்டுத ப்3ரஹ்மண்ய ப்3ரஹ்மப்ரிய ப்3ரஹ்மகாயிக மஹாகாயிக மஹாராஜிக சதுர்மஹாராஜிக ப4ாஸ்வர மஹாப4ாஸ்வர ஸப்த மஹாப4ாக3 ஸ்வர துஷித மஹாதுஷித ப்ரதர்த்த3ந பரிநிர்மித அபரிநிர்மித வசவர்த்திந் யஜ்ஞ மஹாயஜ்ஞ யஜ்ஞயோக3 யஜ்ஞக3ம்ய யஜ்ஞநித4ந அஜித வைகுண்ட2 அபார பர புராண லேக்2ய ப்ரஜாத4ர சித்ர ஶிக2ண்ட3த4ர யஜ்ஞப4ாக3ஹர புரோட3ாஶஹர விஶ்வேஶ்வர விஶ்வத4ர ஶுசிஶ்ரவ: அச்யுதார்ச்சந க்4ருதார்ச்சி:

http://acharya.org

குண்டரீகபரமோபதத்மநாப பத்மதர பத்மதராதர ஹ்ருஷீகேஸ ஏகஸ்ருங்க மஹாவராஹ த்ருஹிண அச்யுத அநந்த புருஷ மஹாபுருஷ கபில ஸாங்க்யாசார்ய விஷ்வக்ஸேந தர்ம தர்மத தர்மாங்க தர்மவஸுப்ரத நரப்ரத விஷ்ணோ ஜிஷ்ணோ ஸஹிஷ்ணோ க்ருஷ்ண புண்டரீகாக்ஷ நாராயண பராயண ஜகத்பராயண நமோநம இதி |

ஸ்துத்வா த்வேவம் ப்ரஸந்நேந மநஸா ப்ருதிவீ ததா |
உவாச ஸம்முகம் தேவம் லப்த காமா வஸுந்தரா ||

[''ஓம் தேவர்களுக்கும தேவனே! வாஸுதேவனே! ஆதிதேவனே! காமங்களை அளிக்கும் தேவனே! காமங்களைக் காப்பவனே! உலகைக காப்பவனே! முதலும், நடுவும, முடிவுமில்லாதவனே! படைககப்பட்ட பிரஜைகளுக்குபபதியே! நல்ல பிரஜைகளை விசேஷித்து ரக்ஷிப்பவனே! பிரஜைகளின் தலைவர்களுக்கும் தலைவனாயிருப்பவனே! செல்வத்துக்குத் தலைவனே? வாக்தேவிககுப் பதியாயிருப்பவனே! பூதேவிககுப பதியாயிருப்பவனே! தேவருலகிற்குப பதியாயிருபபவனே! வநஙகளுக்குத் தலைவனே! பாலிற்குத்தலைவனே! பிருதிவி என்னும பூதத்திற்குத்தலைவனே! ஜலமெனும பூதத்திற்குத தலைவனே! திக்குகளுக்கு ஸ்வாமியே! மஹானுக்குத் தலைவனே! மருததுக்களுக்குத் தலைவனே! லக்ஷ்மிதேவிக்குத் தலைவனே! ப்ரஹ்மஸ்வரூபியாயிருபபவனே! அநதணர் அன்பனே! ஸர்வவ்யாபியே! நினைத்தற்கரியவனே! பேரறிவாளர்களின அறிவினால் அறியப்படுபவனே! யாகங்களில் அதிகமாக அழைககப்படுபவனே! அதிகமாகத்துதிக்கப்படுபவனே! அந்தணர் மாட்டுரும தெய்வமே! வேதத்திற்கு இனியவனே! வேதசரீரகனே! பெரிய மேனியனே! பேரரசனே! படைத்தழித்து அளித்து முக்தியளிக்கும ராஜாதிராஜனே! ஒளியுடையவனே! பேரொளியுடையவனே! ஏழு கிரணஙகளையுடைய சூரியனே! பெரியபாக்கியமாயிருப்பவனே! இசையானவனே! திருப்திபெற்றவனே! மிகவும் திருபதிபெற்றவனே! அனைத்தையுமழிக்கும் ப்ரதாத்தனனே! (அவதார நிலையில) மிகச்சிறந்தவனுகப படைக்கபபடுபவனே! (தானுன தனமையில்) படைககப்படாதவனே! அடியார்கு வசப்பட்டிருபபவனே! யாகமாயிருபபவனே! பெரு மஹாயஜ்ஞங்களானவனே! யாகச்சேர்கையாயிருப்பவனே! யாகததில் (ஆராத்யனுக) அறியப்படுபவனே!

http://acharya.org

(தவறுன) யாகத்தை அழிப்பவனே! ஜயிக்கப்படாதவனே! வைகுண்டனே! எல்லையற்றவனே! மேலானவனே! பழையோனே! எழுதத் தக்கவனே! பிரஜைகளை தரிப்பவனே! பல வர்ணமுடைய மயில்தோகையணிந்தவனே! யஜ்ஞபாகத்தை ஏற்பவனே! புரோடாஸமெனும் யஜ்ஞஹவிஸ்ஸை ஏற்பவனே! உலகை நியமிப்பவனே! உலகை தரிபபவனே! பரிசுத்தமான கீர்த்தியை உடையவனே! அழியாத அர்ச்சனத்தை உடையவனே! நெய்யினுல் எரியும் யாகாக்னியே! எதிரிகளை அழிக்கும் பரசுவெனும் ஆயுதத்தை உடையவனே! தாமரையுந்தியானே! தாமரையைக் கையில் தரிப்பவனே! செந்தாமரைத்தடங்கண்செங்கனிவாய் செங்கமலம்செந்தாமரை அடிகள்திருக்கைகள் ஆகவிப்படிச்செந்தாமரைக் குவியலை தரிப்பவனே! இந்திரியங்களுக்கு ஈசனே! ஒற்றைக்கொம்பையுடைய மஹா வராஹப் பெருமானே! பிரமனுயிருப்பவனே! அடியவரை நழுவவிடாத அச்சுதனே! மூவகை அளவுமற்ற அநந்தனே! பெரும்பலனை அளிக்கும் புருஷனே! மஹாபுருஷனே! கபிலமஹர்ஷியாய் அவதரித்தவனே! ஸாங்க்யமதததைப் பரப்பியவனே! எங்கும் பரவிய ஸேனையையுடைய விஷ்வக்ஸேனனே! தர்மஸ்வரூபியே! தர்மத்தை அளிப்பவனே! தர்மத்தை அங்கமாகக் கொண்டவனே! ஸாதனமான செல்வத்தை அளிப்பவனே! மனிதர்களை அளிப்பவனே! ஸர்வவ்யாபியான விஷ்ணுவே! அனைத்தையும வெல்லும ஜிஷ்ணுவே! அனைத்தையும் பொறுக்கும் ஸஹிஷ்ணுவே! கிருஷ்ணனே! தாமரைக் கண்ணனே! நாராயணனே! மேலான உபாயமான பராயணமே! உலகிற்கு மேலான ப்ராப்யமாயிருப்பவனே! உனக்குப் பலகால் வணக்கம்" என்று (பூதேவி துதித்தாள்.) தெளிந்த மனத்தால் இவ்வண்ணமாகத் துதித்த பூதேவி, தன் விருப்பம் நிறைவேறப் பெற்றவளாய், தேவனைப் பார்த்து உரைத்தாள்.]

தொண்ணூற்றெட்டாமத்தியாயம் முற்றிற்று.

இங்கு, வாஸுதேவன, வைகுண்டன், அச்யுதன், அநந்தன், புருஷன், மஹாபுருஷன், விஷ்ணு, கிருஷ்ணன், புண்டரீகாக்ஷன, நாராயணன் என்னும் திருநாமங்களால் பிரஸித்திபெற்றவனுய், ஸ்ரீ பூமிநாதனுன பரமபுருஷனே பரம்பொருளுக்குரிய எல்லாத் தன்மைகளையும் உடையவன் என்று காட்டியது காணத்தக்கது. முக்கியமாக இவனை தேவதேவனென்றும், ஆதிதேவனென்றும், முதலும், நடுவும், முடிவுமில்லாதவனென்றும் ப்ரஹ்மஸ்வரூபியாயிருப்பவனென்றும், ஸர்வவ்யாபியென்றும், எல்லையற்றவனென்

http://acharya.org

னும், அளவற்றவனென்றும், உலகிற்கு மேலான ப்ராப்யப்ராபகமா யிருப்பவனென்றும் கூறியது குறிக்கொள்ளத்தக்கது. ‘அசிந்த்ய’ [நினைக்கமுடியாதவனே] என்றவுடன், ‘ஜ்ஞாநகம்ய’ [(அறிவாளி களின்) அறிவினால் அறியப்படுபவனே] என்று கூறியதால், பரம்பொருள் எல்லாப்படியாலும் அறியவே முடியாத வஸ்து என்று அத்வைதிகள் கூறுவது தவறென்றும், அதை அளவிட்டு அறிய முடியாதேயொழிய, அறிவாளிகளின் அறிவுக்கு ஓரளவுக்கு விஷய மாவதே அது என்றும் விசிஷ்டாத்வைதஸித்தாந்தமே சரியான தென்றும் காட்டப்படுகிறது. இனி, அடுத்ததான தொண்ணூற் றொன்பதாமத்தியாயத்தில் உள்ள ஸ்ரீபூமிஸம்வாதத்தில் ஸ்ரீதேவியின் பெருமை விசேஷமாக விளக்கப்படுகிறது. அதைக் காண்போமினி.

99-வது அத்தியாயம்

த்$_3$ருஷ்ட்வா ஶ்ரியம் தே$_3$வதே$_3$வஸ்ய விஷ்ணோ:
க்$_3$ருஹீதபாத$_3$ாம் தபஸா ஜ்வலந்தீம் ।
ஸா தபஜாயபூ$_3$நத$_4$ சாருவர்ணாம்
பப்ரச்ச$_2$ தே$_3$வீம் வஸுதா$_4$ ப்ரஹ்ருஷ்டா ॥
உந்நித்$_3$ரகோகநத$_3$சாருகரே வரேண்யே
உந்நித்$_3$ரகோகநத$_3$நாபி$_4$க்$_3$ருஹீதபாதே$_3$ ।
உந்நித்$_3$ரகோகநத$_3$ஸத்$_3$மஸதா$_3$ஸ்தி$_2$தே
உந்நித்$_3$ரகோகநத$_3$ மத்$_4$யஸமாநவர்ணே ॥
நீலாப்$_3$ஜநேத்ரே தபநீயவர்ணே
ஶோகலாம்ப$_3$ரே ரத்நவிபூ$_4$ஷிதாங்கி$_3$ ।
சந்த்$_3$ராநநே ஸூர்யஸமாநபா$_4$ஸே
மஹாப்ரபா$_4$வே ஜக$_3$த: ப்ரதா$_4$நே ॥
த்வமேவ நித்$_3$ரா ஜக$_3$த: ப்ரதா$_4$நா
லக்ஷ்மீர்த்$_4$ருதி: ஸ்ரீர்விரதிர்ஜயா ச ।
காந்தி: ப்ரஜ்ஞா கீர்திரதே$_2$ா விபூ$_4$தி:
ஸரஸ்வதீ வாக$_3$க$_3$ பாவநீ ச ॥
ஸ்வதா$_4$ திதிக்ஷா வஸுதா$_4$ ப்ரதிஷ்டா$_2$
ஸ்தி$_2$தி: ஸுதீ$_3$க்ஷா ச ததா$_2$ ஶாந்தி: ।
க்$_3$யாதிர்விஶாலா ச ததா$_2$ऽநஸூயா
ஸ்வாஹா ச மேதா$_4$ ச ததை$_2$வ பு$_3$த்$_3$தி$_4$: ॥

http://acharya.org

ஆக்ரம்ய ஸர்வாம் து யதா2 த்ரிலோகீம்
திஷ்டத்3யயம் தே3வவரோ஽ஸிதாக்ஷி |
ததா2 ஸ்தி2தா த்வம் வரதே3 ததா2பி
ப்ருச்சா2ம்யஹம் தே வஸதிம் விபூ4திம் ||
இத்யேவ முக்தா வஸுதா4ம் ப3பா4ஷே
லக்ஷ்மீஸ்ததா3 தே3வவராக்3ரதஸ்ஸ்தா2 |
ஸதா3 ஸ்தி2தா஽ஹம் மது4ஸூத3நஸ்ய
தே3வஸ்ய பார்ஶ்வே தபநீயவர்ணா ||
அஸ்யாஜ்ஞயா யம் மநஸா ஸ்மராமி
ஶ்ரியா யுதம் தம் ப்ரவத3ந்தி ஸந்த: |
ஸம்ஸ்மாரணே வாப்யத2 தத்ர சாஹம்
ஸ்தி2தா ஸதா3 தத் ஶ்ருணு லோகதா4த்ரி ||
வஸாம்யதா2஽ர்க்கே ச நிஶாகரே ச
தாரா க3ணாட்4யே க3க3நே விமேகே4 |
மேகே4 ததா2லம்ப3பயோத4ரே ச
ஶக்ராயுதா4ட்4யே ச தடி3த்ப்ரகாஶே ||
ததா2 ஸுவர்ணே விமலே ச ரூப்யே
ரத்நேஷு வஸ்த்ரேஷ்வமலேஷு பூ4மே |
ப்ராஸாத3மாலாஸு ச பாண்டு3ராஸு
தே3வாலயேஷு த்4வஜபூ4ஷிதேஷு ||
ஸத்3ய: க்ருதே சாப்யத2 கோ3மயே ச
மத்தே க3ஜேந்த்3ரே துரகே3 ப்ரஹ்ருஷ்டே |
வ்ருஷே ததா2 த3ர்ப்பஸமந்விதே ச
விப்ரே ததை2வாத்4யயநப்ரபந்நே ||
ஸிம்ஹாஸநே சாமலகே ச பி3ல்வே
ச2த்ரே ச ஶங்கே2 ச ததை2வ பத்3மே |
தீ3ப்தே ஹுதாஶே விமலே ச க2ட்3கே3
ஆத3ர்ஶபி3ம்பே3 ச ததா2 ஸ்தி2தாஹம் ||
பூர்ணோத3கும்பே4ஷு ஸசாமரேஷு
ஸதாலவ்ருந்தேஷு விபூ4ஷிதேஷு |
ப்4ருங்கா3ரபாத்ரேஷு மநோஹரேஷு
ம்ருதி3 ஸ்தி2தாஹம் ச நவோத்3த்4ருதாயாம் ||

http://acharya.org

க்ஷீரே ததா2 ஸர்பிஷி ஶாத்3வலே ச
 க்ஷௌத்3ரே ததா2 த3த்4னி புரந்த்4ரிகா3த்ரே |
தே3ஹே குமார்யாஶ்ச ததா2 ஸுராணாம்
 தபஸ்விநாம் யஜ்ஞஹுதாம் ச தே3ஹே ||
ஶூரே ச ஸங்க்3ராமவிநிர்க3தே ச
 ஸதி2தௌ ம்ருதே ஸ்வர்க3ஸத்3:ப்ரயாதே |
வேத3த்4வனௌ வாப்யத2 ஶங்க2ஶப்3தே3
 ஸ்வாஹாஸ்வதா4யாம் அத2 வாத்3யஶப்3தே3 ||
ராஜாபி4ஷேகே ச ததா2 விவாஹே
 யஜ்ஞே வரே ஸ்நாதஶிரஸ்யதா2பி |
புஷ்பேஷு ஶுக்லேஷு ச பர்வதேஷு
 ப2லேஷு ரம்யேஷு ஸரித்3வராஸு ||
ஸரஸ்ஸு பூர்ணேஷு ததா2 ஜலேஷு
 ஸஶாத்3வலாயாம் பு4வி பத்3மக2ண்டே3 |
வத்ஸே ச வத்ஸே ச ஶிஶௌ ப்ரஹ்ருஷ்டே
 ஸாதௌ4 நரே த4ர்மபராயணே ச ||
ஆசாரஸேவிந்யத2 ஶாஸ்த்ரநித்யே
 விநீதவேஷே ச ததா2 ஸுவேஷே |
ஸுஶுத்3த4க3ாத்ரே மலவர்ஜிதே ச
 ம்ருஷ்டாஶநே சாதி2பூஜகே ச ||
ஸ்வதா3ரதுஷ்டே நிரதே ச த4ர்மே
 த4ர்மோத்கடே சாத்யஶநாத்3 விரக்தே |
ஸதா3 ஸபுஷ்பே ச ஸுக3ந்தி4கா3த்ரே
 ஸுக3ந்த4லிப்தே ச விபூ4ஷிதே ச ||
ஸத்யஸ்தி2தே பூ4தஹிதே நிவிஷ்டே
 க்ஷமாஞ்சிதே க்ரோத4விவர்ஜிதே ச |
ஸ்வகார்யத3க்ஷே பரகார்யத3க்ஷே
 கல்யாணசித்தே ச ஸதா3 விநீதே ||
நாரீஷு நித்யம் ஸுவிபூ4ஷிதாஸு
 பதிவ்ரதாஸு ப்ரியவாதி3நீஷு |
அமுக்தஹஸ்தாஸு ஸுதாந்விதாஸு
 ஸுகு3ப்தப4ாண்டா3ஸு ப3லிப்ரியாஸு ||

http://acharya.org

ஸம்ம்ருஷ்டவேஶ்மாஸு ஜிதேந்த்₃ரியாஸு
 கவிவ்யபேதாஸு பதி₂ ஸ்தி₂தாஸு ।
த₄ர்மவ்யபேக்ஷாஸு த₃யாந்விதாஸு
 ஸ்தி₂தா ஸத₃ாऽஹம் மது₄ஸூத₃நே து ॥

[உகப்படைநதவளான பூமிதேவி, தேவதேவனுன விஷ்ணுவின் திருவடியைப் பிடிப்பவளும், பாதிவ்ரத்யதபஸ்ஸிஞல் ஒளிவீசுகின்ற வளும, உருகக்காய்ச்சிய பொனபோல் அழகிய நிறத்தை உடைய வளுமான ஸ்ரீதேவியைக் கண்டு, பினவருமாறு கேட்டாள்:— "மலரும் செந்தாமரைபோனறு அழகிய திருக்கைகளை உடையவளே! அனைவராலும (புருஷகாரமாக) வரிக்கத்த தந்தவளே! மலர்ந்த செந்தாமரையுந்தியானுடைய திருவடியைப் பிடிப்பவளே! மலர்ந்த செந்தாமரையாகிற இருப்பிடத்தில் எப்போதும் இருப்பவளே! மலர்ந்த செந்தாமரையின் நடுப்பாகத்தைப்போன்ற நிறத்தை யுடையவளே! கருநெய்தல்போன்ற கண்ணையுடையவளே! பொன் போன்ற நிறத்தாளே! வெள்ளைக்கலையுடுத்தவளே! இரத்தினங் களால் அலஙகரிககப்பெற்றவளே! சந்திரன போனற முகத்தாளே! ஸூர்யனையொதத ஒளியுடையவளே! பெரும பெருமையுடையவளே! உலகிற்கு நாயகியே! லக்ஷ்மீ தேவியே! உலகிற்கு நாயகியான நீயே நித்ரை, தைர்யம், செல்வம், வைராக்யம், வெற்றி, அழகு, ஸந்ததி, புகழ், ஐஸ்வர்யம் ஆகியவற்றுக்கு அதிதேவதைகளாக வும், கல்விக்கு அதிதேவதையான ஸரஸ்வதீ தேவியாகவும், (ஹயகரீவபத்னியாய்) அனைவரையும் பரிசுத்தப்படுத்தும் வாக் தேவியாகவுமிருப்பவள். ஸ்வத₄ா, திதிக்ஷா (பொறுமை), பூமி. ப்ரதிஷ்டை (புகழ்), ஸ்தி₂தி (நல்லநிலை), நல்ல தீ₃க்ஷை, நல்ல நீதி, கியாதி, பரப்பு, பொறுமையின்மை, ஸ்வாஹா, மேதை₄, அறிவு ஆகியவற்றுக்கு அதிதேவதைகளாகவுமிருப்பவள். வரந்தரும் கருங்கண்ணியே! தேவர்தலைவனுன இந்த பகவான எப்படி எல்லா உலகையும் வியாபித்து விளங்குகிருனே, அப்படியே நீயும் விளங்குகிருய். அப்படியிருந்தபோதிலும் உனக்கு விசேஷித்து இருப்பிடமாயிருப்பவற்றையும, உன அபிமானத்திற்கு விஷயமான செல்வங்களையும கேட்கவிருமபுகிறேன்." இவ்வண்ணமாகக் கேட்கப் பெற்றவளாய், தேவர் தலைவனின் முன்னிலையிலிருப்பவளான லக்ஷ்மீ தேவி பூமிதேவியைக் குறித்துப் பினவருமாறு கூறலானுள்;— "பொன்நிறமுடைய யான் மதுவெனும் அசுரனை அழித்த தேவனின் அருகில் எப்போதுமிருக்கிறேன. இவனுடைய ஆணையாலே, எவனை நான மனத்தால நினைக்கிறேனே, அவனையே நல்லோர்கள்

செல்வமுடையவன் என்கிறார்கள். (முக்தியளிக்கத்தக்க சேதனர்களை எம்பெருமானுக்கு) நினைவு படுத்துவதற்காகவே, அப்பரமபுருஷனிடம் எப்போதும் வாழ்கிறேன், என இருப்பிடங்களையும், செல்வங்களையும் கேட்பாயாக. பூமியே! சூரியனிடமும், நட்சத்திரக்கூட்டத்தால் சூழப்பெற்ற சந்திரனிடமும். மேகமற்ற (நிர்மலமான) ஆகாயத்திலும், வானவில்லிலும் மின்னலிலும் விளங்கப்பெற்று நீருண்டு தாழ்ந்து செல்லும் மேகத்திலும், பரிசுத்தமான பொன்னிலும், வெள்ளியிலும், இரத்தினங்களிலும், குற்றமற்ற ஆடைகளிலும், வெள்ளை நிறமுடைய (பரிசுத்தமான) மாளிகைகளிலும், கொடிமரம் விளங்கும் தேவாலயங்களிலும், புதிதான பசுஞ்சாணியிலும், மதங்கொண்ட யானையிடமும், உகப்படைந்த குதிரையிடமும், கர்வங்கொண்ட எருதினிடமும், வேதமோதும் அந்தணனிடமும், (அரசன் அமரும்) ஸிம்ஹாஸனத்திலும், நெல்லிக்கனியிலும், பில்வமரத்திலும், கொற்றக்குடையிலும், சங்கத்திலும், தாமரையிலும், கொழுந்து விட்டெரியும் அக்னியிலும், பரிசுத்தமான கத்தியிலும், தெளிந்த கண்ணாடியிலும், விசிறிசாமரங்களோடுகூடிய அலங்கரிக்கப்பெற்ற பூர்ணகும்பங்களிலும், நெருசையிர்க்கும் தங்கப்பாத்திரங்களிலும், புதிதாக எடுக்கப்பட்ட மண்ணிலும், பாலிலும், வெள்ளையிலும், புல்தரையிலும், தேனிலும், தயிரிலும், அழகிய பெண்களின் மேனியிலும், கன்னிகைகளின் உடம்பிலும், தேவர்கள், தபஸ்விகள், யஜ்ஞம் செய்பவர்கள் ஆகியவர்களின் சரீரத்திலும், அடிபிலும் போரில் வெற்றியுடன் திரும்பிய வீரனிடமும், போரில் உறுதியுடன் நின்று வீரஸ்வர்க்கமடைந்தவனின் சரீரத்திலும், வேதவொலியிலும், மங்கமுழக்கத்திலும், 'ஸ்வாஹா' 'ஸ்வதா' என்னும் சப்தங்களிலும், வாத்யத்வனிகளிலும், அரசனின் பட்டாபிஷேகத்திலும், விவாஹத்திலும், யஜ்ஞத்திலும், மாப்பிள்ளையிடமும், குளித்த தலையையுடையவர்களிடமும், புஷ்பங்களிலும், வெளுத்த பொருள்களிலும், மலைகளிலும், அழகிய பொருள்களிலும், சிறந்த நதிகளிலும், நீர் நிறைந்த குளங்களிலும், நீரிலும், பயிர் நிறைந்த பூமியிலும், தாமரையிலும், காட்டிலும், கன்றிலும், சிரிக்கும் குழந்தையிடமும், அறத்திலீடுபட்ட நல்ல மனிதனிடமும், நல்லொழுக்கமுடையவனிடமும், சாஸ்திரத்தில் ஈடுபட்டவனிடமும், அடக்கமுடைய வேஷத்தையுடையவனிடமும், அழகிய வேஷமுடையவனிடமும், புலனடங்கப்பெற்ற பரிசுத்தனிடமும், அழுக்கற்றவனிடமும், நல்ல உணவு உண்பவனிடமும், விருந்தோம்புகின்றவனிடமும் தன் மனைவியிடமே இன்புறுகின்றவனிடமும், அறத்தில் ஈடுபட்ட

http://acharya.org

வனிடமும், அறத்தைக் குறிக்கொண்டு நோக்குகின்றவனிடமும், பெருந்தீனி தின்னாதவனிடமும், புஷ்பம், சந்தனம் முதலானவற்றினால் மணம் வீசும் உடம்பையுடையவனிடமும், ஆபரணங்களால் அலங்கரிக்கப்பெற்றவனிடமும், உண்மையில் ஊன்றி நிற்பவனிடமும், ஜீவராசிகளுக்கு நன்மையே செய்பவனிடமும, பொறுமையால் பிரகாசிப்பவனிடமும், கோபமற்றவனிடமும், தன் காரியத்தை நிறைவேற்றுபவனிடமும, பிறர் கார்யத்தை நிறைவேற்றுபவனிடமும, மங்களமான நெஞ்சுடையவனிடமும், எப்போதும் அடக்கமுள்ளவனிடமும், எப்போதும்நனகு அலங்கரிக்கப்பெற்றவர்களாய், பதிவ்ரதைகளாய் இன்சொற்பேசுகின்றவர்களாய், கையில் சிக்கனமுடையவர்களாய், பிள்ளைகள் பெற்றவர்களாய், நன்குரக்ஷிக்கப் பெற்றபாத்திரங்களை உடையவர்களாய், தேவதாராதனத்தில் ஈடுபட்டவர்களாய், வீட்டைப்பரிசுத்தமாக வைத்துக்கொள்கின்றவர்களாய், புலனடக்கமுள்ளவர்களாய், கலியால் கெடுக்கப்பெறாதவர்களாய், நல்வழியில் நடப்பவர்களாய், அறத்தில் நிற்பவர்களாய், கருணையுள்ளவர்களான பெண்களிடமும் நான் வாழ்கிறேன். மதுஸூதனனிடமோவெனில எப்போதும் வாழ்கிறேன.]

தொண்ணூற்றேன்பதாம் அத்தியாயம் முற்றிற்று.

இவ்வத்தியாயத்தில், லக்ஷ்மீதேவியின் பெருமைகள் பேசப்படுகின்றனவாகையாலே, இது ஸ்ரீஸூக்தத்திற்கு உபப்ருஹ்மணமாகக் கொள்ளத்தக்கது. இதன் தொடக்கத்திலேயே ஸ்ரீதேவியானவள் கேசவநம்பியைக் கால்பிடிக்கும் பேற்றை உடையவளென்கையாலும், பிராட்டி ஐச்வர்யங்களை அளிப்பதும் எம்பெருமானுடைய ஆணையாலேயே என்று கூறுகையாலும் அவளுக்கு பகவச்சேஷத்வமே ஸ்வரூபமென்று விளங்குகிறது. அவளுடைய சேஷித்வம் அவளுடைய இச்சையாலேயே ஏற்படுவது என்றும், பாரப்ரஹ்மத்வமே அவளுடைய ஸ்வரூபமென்றும் கூறும் பக்ஷம் அப்பிராட்டியும அவளுக்கு உயிர்போன்ற பூமிப்பிராட்டியும் உகந்ததன்று எனவும் விளங்குகிறது. பிராட்டிக்குக் கூறப்படும் ஸர்வ வ்யாபகத்வத்தை ஆசார்யர்கள எப்படி நிர்வஹிக்கிறார்கள் என்பதை ஸ்ரீஸூக்த வ்யாக்யானத்தில் விரிவாகக் காட்டினோம். அங்கு கண்டுகொள்வது. ஸ்ரீதேவியானவள் தானுகந்த பொருள்களைக் கூறியிருப்பதிலிருந்து, நல்லவர்கள் எப்படியிருக்கவேண்டும், எப்பொருள்களை ஆதரிக்கவேண்டும் என்று காட்டப்படுகிறது. தர்மசாஸ்த்ரஸாரத்தை உள்ளடக்கியது இவ்வத்தியாயம். இனி, பலஸ்ருதியைக்கூறும் கடைசி அத்தியாயத்தைக்காண்போம்.

http://acharya.org

100-வது அத்யாயம்

த4ர்மஶாஸ்த்ரமித3ம் ஶ்ரேஷ்ட2ம் ஸ்வயம் தே3வேந
பா4ஷிதம் |
யே த்3விஜா தா4ரயிஷ்யந்தி தேஷாம் ஸ்வர்க்கே3 க3தி: பரா ||
இத3ம் பவித்ரம் மாங்க3ல்யம் ஸ்வர்க்3யமாயுஷ்யமேவ ச |
ஜ்ஞாநம் சைவ யஶஸ்யம் ச த4நஸௌபா4க்3யவர்த்த4நம் ||
அத்4யேதவ்யம் தா4ரணீயம் ஶ்ராவ்யம் ஶ்ரோதவ்யமேவ ச |
ஶ்ராத்3தே4ஷு ஶ்ராவணீயம் ச பூ4திகாமைர் நரை: ஸதா3 ||
இத3ம் ரஹஸ்யம் பரமம் கதி2தம் வஸுதே4 தவ ||
மயா ப்ரஸங்கேந ஜக3த்3தி4தார்த்த2ம் ஸௌபா4க்3யமேதத்
பரமம் ரஹஸ்யம் |
து:ஸ்வப்நநாஶம் ப3ஹுபுண்யயுக்தம், ஶிவாலயம்
ஶாஶ்வததா4ர்மஶாஸ்த்ரம் ||
|| வைஷ்ணவஸம்ஹிதா ஸமாப்தா ||

[சிறந்ததான இந்த திவ்யசாஸ்திரம நிருபாதி4கதே3வனுன நாராயணன தனனுலேயே உபதேசிக்கப்பட்டது இருபிறப்பாளர்களான எவர்கள இதை தரிக்கிருர்களோ, அவர்களுககு மேலான மோக்ஷவுலகமே கிடைக்கும. இந்த ஸ்மருதி பரிசுததமானது; பரமமங்களமானது; மோக்ஷததையும, நீணட ஆயுளேயும அளிப்பது. அறிவையும, புகழையும், பொருளேயும், ஸௌபாக்யஙகளேயும் வளரச்செய்வது. செவிககினிய இந்த ஸ்மருதி சிறப்பை விரும்பும அனேவராலும அத்யயனம செய்யத்தககது; தரிககததககது; கேட்கத்தககது; ஶ்ராத்தங்களில் அனேவராலும் கேட்பிக்கத்தக்கது. பூமியே! மேலான இந்த ரஹஸ்யததை உனக்குக கூறிவிட்டேன. ஸௌபாக்3யமே வடிவெடுத்ததும, மேலான ரஹஸ்யமும, துஸ்ஸ்வப்னஙகளேப் போக்குவதும, பல புண்யங்களோடு கூடியதும, மஙகளத்திறகு இருப்பிடமும, நிலேயானதுமான இந்த தாம ஶாஸதரம உகப்படைந்த என்னுல உபதேசிக்கப்பட்டது.]

இப்பலஶ்ருதியில் இந்த த4ர்மஶாஸ்திரத்தைப் படிபபது, கேட்பது முதலானவற்ருல மோக்ஷமுளளிட்ட எல்லாப் புருஷார்த்தஙகளேயும அடையலாம் எனறு கூறபபட்டது. இநத ஸமருதியின தொடக்கத்திலிருந்து முடிவு வரையில ஸ்ரீவைஷ்ணவ விசிஷ்டாத்

http://acharya.org

வைத ஸித்தாந்தக்கொள்கைகளே ஆதரிக்கப்பட்டிருப்பதும், சைவ மதம், அத்வைதமதம் முதலானவற்றின் கொள்கைகள் சிறிதும் ஆதரிக்கப்படாமலிருப்பதும் நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இனி, ஹாரீதஸ்ம்ருதியில் பரதத்வநிஷ்கர்ஷம் செய்திருக்கிற படியைக் காண்போம்.

விஷ்ணுஸ்ம்ருதிவிநிர்ணயம் முற்றிற்று.

ஹாரீதஸ்ம்ருதிநிஷ்கர்ஷம்.

"**மந்வத்ரிவிஷ்ணு ஹாரீத**"[1-4]என்றுதொடங்கும் யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதி வசனத்தில் விஷ்ணுஸ்ம்ருதிக்கு அடுத்தபடி எடுக்கப்பட்டுள்ள ஹாரீதஸ்ம்ருதியில் ஆங்காங்கு பரம்பொருள் எந்த தேவதை என்று காட்டப்பட்டுள்ளது. அவ்வாக்கியங்களிலிருந்து ஹாரீத ஸ்ம்ருதியின் நிஷ்கர்ஷத்தைக் காண்போமினி. இந்த ஸ்ம்ருதியின் தொடக்கத்தில்இரண்டு ஶ்லோகங்களாலே மார்க்கண்டேய மஹர்ஷியைக குறித்து மற்ற மஹர்ஷிகள் 'வர்ணாஶ்ரம த₄ர்மங்களைக் கூறுவீராக' என்று கேட்கிறார்கள்.

யே வர்ணாஶ்ரமத₄ர்மஸ்த₂ா: தே ப₄க்தா: கேஶவம் ப்ரதி।
இதி பூர்வம் த்வயா ப்ரோக்தம் பூ₄ர்பு₄வ:ஸ்வர்
த்₃விஜோத்தமா: ॥
வர்ணாநாமாஶ்ரமாணாம் ச த₄ர்மாந் நோ ப்₃ரூஹி ஸத்தம।
யேந ஸந்துஷ்யதே தே₃வ: நாரஸிம்ஹ: ஸநாதந: ॥

[பூ₄ர்பு₄வஸ்ஸுவர்லோகங்களிலிருப்பவர்களான இருபிறப்பாளர் தலைவராய், வர்ணாஶ்ரமத₄ர்மங்களில் நிலைநிற்பவர்களான நல்லோர்கள் கேசவனிடம் பக்தியுளளவர்களாகவேயிருப்பார்கள் என்று முன்னமே உம்மால் சொல்லப்பட்டது. பெரியோரே! பழையோனான நரசிங்கனை உகப்படையச் செய்யும் வர்ணாஶ்ரமத₄ர்மங்களை எங்களுக்குக் கூறுவீராக.] என்பவை அவ்விரண்டு ஶ்லோகங்கள். இவற்றிலிருந்து வர்ணாஶ்ரமத₄ர்மங்களால் ஆராதிக்கப்படும் பரம்பொருள் நரசிங்கனான கேசவனே என்பதே மார்க்கண்டேயரின் ஸித்தாந்தம் என்று தெளிவாக விளங்குகிறது. முதலில் சிவபக்தராயிருந்த மார்க்கண்டேயர் பிறகு நெடுங்காலம் விஷ்ணுபக்தராயிருந்தே மோக்ஷமடைந்தார் என்று இதிஹாஸபுராணங்களில் சொல்லப்படுவதை இது வலியுறுத்துகிறது, இனி, மார்க்கண்டேயரின் பதிலுரையில், ஹாரீதருக்கும் மற்ற மஹர்ஷிகளுக்கும் ஸம்வாத

http://acharya.org

மான இந்தஹாரீதஸ்ம்ருதி விரித்துரைக்கப்படுகிறது. அதில் பல விடங்களில பரம்பொருள நாராயணனே என்று காட்டியிருப பதை இனிக் காண்போம்.

|| மார்க்கண்டே3ய: ||

அதராஹம் கத2யிஷ்யாமி புராவ்ருத்தமநுத்தமம் |
ருஷிபி4ஸ்ஸஹ ஸம்வாத3ம் ஹாரீதஸ்ய மஹாத்மந: ||
ஹாரீதம ஸர்வத4ர்மஜ்ஞம் ஆஸீநமிவ பாவகம் |
ப்ரணிபத்யாப்3ருவந் ஸர்வே முநயோ த4ர்மகாங்க்ஷிண: ||
ப4க3வந ஸர்வத4ர்மஜ்ஞ ஸர்வத4ர்மப்ரவர்த்தக |
வர்ணாநாமாஶ்ரமாணாம் ச த4ர்மாந் நோ ப்3ரூஹி பா4ர்க்க3வ ||
ஸமாஸாத்3யோக3ஶாஸ்த்ரம் ச விஷ்ணுப4க்திகரம் பரம் |
ஏதச்சாந்யச்ச ப4க3வந் ப்3ரூஹி ந: பரமோ கு3ரு: ||
ஹாரீதஸ்தாநுவாசாऽத2 தைரேவம் சோதி3தோ முநி: |
ஶ்ருண்வந்து முநயஸ்ஸர்வே த4ர்மாந் வக்ஷ்யாமி ஶாஶ்வதாந் |
வர்ணாநாமாஶ்ரமாணாம் ச யோக3ஶாஸ்த்ரம் ச ஸத்தமா: |
ஸந்தா4ர்ய முச்யதே மர்த்ய: ஜந்மஸம்ஸாரப3ந்த4நாத் ||
புரா தே3வோ ஜக3த்ஸ்ரஷ்டா பரமாத்மா ஜலோபரி |
ஸுஷ்வாப போ4கி3பர்யங்கே ஶயநே து ஶ்ரியா ஸஹ ||
தஸ்ய ஸுப்தஸ்ய நாபௌ4 து மஹத் பத்3மமபூ4த் கில |
பத்3மமத்4யேऽப4வத் ப்3ரஹ்மா வேத3வேதா3ங்க3பூ4ஷண: ||
ஸ சோக்தோ தே3வதே3வேந ஜக3த் ஸ்ருஜ புந: புந: |
ஸோபி ஸ்ருஷ்ட்வா ஜக3த் ஸர்வம் ஸதே3வாஸுரமாநுஷம் ||
யஜ்ஞஸித்3த்4யர்த்த2மநகா4ந் ப்3ராஹ்மணாந் முக2தோऽ-
ஸ்ருஜத் |
அஸ்ருஜத் க்ஷத்ரியாந் பா3ஹ்வோ: வைஶ்யாநப்யூருதே3ஶத: ||
ஶூத்3ராம்ஶ்ச பாத3யோ: ஸ்ருஷ்ட்வா தேஷாம் சைவாநு
பூர்வஶ: |
கத2ம் ப்ரோவாச ப4க3வாந் ப்3ரஹ்மயோநி: பிதாமஹ: ||
தத்3வச: ஸம்ப்ரவக்ஷ்யாமி ஶ்ருணுத த்3விஜஸத்தமா: |
த4ந்யம் யஶஸ்யமாயுஷ்யம் ஸ்வர்க்3யம் மோக்ஷப2லப்ரத3ம் ||

http://acharya.org

[மார்க்கண்டேயர் கூறினர்:- மஹாத்மாவான ஹாரீதருக்கும் மற்ற பல ரிஷிகளுக்கும் முன்னொரு காலத்தில் நடந்த மிகச்சிறந்த ஸம்வாதத்தைச் சொல்லுகிறேன் கேட்பீர்களாக: எல்லா தர்மங்களையுமறிந்தவரும, நெருப்பே ஓருருக்கொண்டதுபோல் அமர்ந்திருப்பவருமான ஹாரீதரை, தர்மத்தை அறிய விரும்பிய எல்லா முனிவர்களும் நன்கு வணங்கிப் பினவருமாறு கேட்டனர்:— "எல்லா தர்மங்களையுமறிந்த பகவானே! எல்லா தர்மங்களையும் பரவச் செய்பவரே! பிருகுகுலத்துதித்தவரே! வர்ணங்களுக்கும், ஆஶ்ரமங்களுக்குமுரிய தர்மங்களை எமக்குச் சொல்லுவீராக. விஷ்ணுவிடம் பக்தியை விளைப்பதாய் மேலானதான (கர்ம) யோக ஶாஸ்திரத்தையும், மற்றும் அறியவேண்டிய பல விஷயங்களையும எங்களுக்குக் கூறுவீராக. நீர் எங்களுககு மேலான ஆசார்யரா யிருக்கிறீர்" என்று இவ்வண்ணமாக அவர்களால் பிரார்த்திக்கப் பட்ட ஹாரீதர் பின்வருமாறு கூறலுற்றுர்,— நல்லோர்களான எல்லா முனிவர்களும் கேட்பீர்களாக; வர்ணங்களுக்கும், ஆஶ்ரமங்களுக்குமுரிய நிலையான தர்மங்களையும் யோகஶாஸ்த்ரத்தையும் கூறுகிறேன். இவற்றை ஒரு மனிதன் தரித்து நின்றுலே ஜன்மஸம்ஸாரக்கட்டினின்றும் விடுபடுவான். முன்னொரு காலத்தில் உலகனைத்தையும் படைத்த பரமாத்மா ஜலத்தின்மேல், திருவனந்தாழ்வனுகிற மெத்தென்ற பஞ்சசயனத்தில் ஸ்ரீதேவியோடு கூடத் தூங்கினுர். தூங்கும் அவருடைய திருநாபியில் பெரிய தாமரை தோன்றிற்றன்றே. வேதங்களையும், வேதாங்கங்களையும் ஆபரண மாகக் கொண்ட பிரமன் அத்தாமரையின் நடுவே உண்டானுன். தேவதேவனுன பரமாத்மாவாலே, 'உலகை மறுபடியும் மறுபடியும் படைப்பாயாக' என்று அப்பிரமன் சொல்லப்பட்டான். அப்பிரமனும, தேவர், அஸுரர், மனிதர் ஆகியவர்களோடு கூடிய உலகனைத்தையும் படைத்து, (பகவதாராதனமான) யஜ்ஞம் ஸித்திக்கும் பொருட்டுக் குற்றமற்றவர்களான ப்ராஹ்மணர்களை முகத்தினின்று படைத்தான். இரு கைகளினின்றும் க்ஷத்ரியர்களைப் படைத்தான். தொடையினின்றும் வைஶ்யர்களையும்,கால்களினின்றும் சூத்ரர்களையும் படைத்தான. படைத்தவுடன், ப்ரஹ்மத்திடமிருந்து பிறந்த பகவானுன பிதாமஹன் அவர்களைக்குறித்துக் கிரமமாகக் கூறிய வார்த்தையையும் கூறுகிறேன் கேட்பீர்களாக; அவ்வார்த்தை தனத்தையும், புகழையும், ஆயுளையும், சுவர்க்கத்தையும், மோக்ஷ பலனையும் அளிக்கவல்லது.] என்பவை ஹாரீதருக்கும் மற்ற மஹர்ஷிகளுக்கும் நடந்த ஸம்வாதத்தின் தொடக்கப்பகுதி. இதில்,

http://acharya.org

திருவனந்தாழ்வானமேலே ஸ்ரீதேவியோடு கூட எழுந்தருளியிருப்பவனே அனைத்தையும் படைத்த பரமாத்மாவென்றும், அவனால் உந்திததாமரையில் படைக்கப்பெற்றவனே பிரமன என்றும, அவனால் படைக்கப்பட்டவர்களே மற்ற தேவர் முதலான எல்லா உயிர்களுமென்றும மிகத்தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது. "அஜஸ்யநாப்4யாவத்4யேகமர்பிதம்" "ஸ ப்ரஜாபதிரேக: புஷ்கரபர்ணே ஸமப4வத" "நாராயணாத்3 ப்3ரஹ்மா ஜாயதே" முதலான வேதவாக்யங்களுக்கு உபப்3ருமஹணமாயிருக்கையாலே இவை பரம ப்ரமாணமாயிருப்பவை என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இத்தால ஶைவமதம முதலானவை வேதவிருத்தமென்பதும் தெளிவாகும். இந்த ஸ்மருதியில சொல்லப்படும் கர்மயோக ஶாஸ்த்ரம, பக்தியோகத்தை விளைப்பது என்றும, அதனால மோக்ஷம ஏற்படும் என்றும கூறுவது விஶிஷ்டாத்வைத மதத்திற்கே பொருந்துவது என்பதும் குறிக்கொள்ளத்தக்கது. புருஷஸூக்தமும இப்பகுதியால் உபப்3ரும்ஹணம செய்யப்பட்டிருப்பதால் புருஷஸூக்தமும் பகவத்பரமே என்பதை அறியலாம். நிற்க: இந்த ஸ்மருதியின இரண்டாமத்தியாயத்தில, ஒன்பதாவது ஶ்லோகத்தில்,

யஜ்ஞாத்4யயநதா3நாநி குர்யாத் நித்யமதந்த்3ரித: |
பித்ருகார்யபரஶ்சைவ நரஸிம்ஹார்ச்சநாபர: ||

[யஜ்ஞம, வேதாத்யயனம், தானம ஆகியவற்றை தினந்தோறும் சோமபலில்லாமல செய்யக்கடவன; பித்ருகாரியத்திலும, நரசிங்கனை அர்ச்சனம் செய்வதிலும் ஈடுபடவேண்டும்.] என்று தினந்தோறும நரசிங்கனான நாராயணனை ஆராதிக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டது. நான்காமத்தியாயத்தில இருபத்தெட்டாவது ஶ்லோகத்திலிருந்து தொடங்கி ஸ்நாநம் செய்யும்போது ஹரிஸ்மரணம் செய்யவேண்டுமென்று விதிக்கப்பட்டது. அதாவது:—

ஶோऽந்தர்ஜலம் ப்ரவிஶ்யாऽத2 வாக்3யதோ நியமேந ஹி |
ஹரிம் ஸம்ஸ்ம்ருத்ய மநஸா மஜ்ஜயேச்சுருமஜ்ஜலே ||
ததஸ்தீரம் ஸமாஸாத்3ய ஆசம்யாऽப: ஸமந்த்ரத: |
ப்ரோக்ஷயேத் வாருணைர் மந்த்ரை: பாவமாநீபி4ரேவ ச ||
குஶாக்3ரக்ருததோயேந ப்ரோக்ஷ்யாத்மாநம் ப்ரயத்நத: |
ஸ்யோநா ப்ருதி2வீதி ம்ருத்3கா3த்ரே இத3ம் விஷ்ணுரிதி த்3விஜா: ||

ததோ நாராயணம் தே₃வம் ஸம்ஸ்மரேத் ப்ரதிமஜ்ஜநம் |
நிமஜ்ஜ்யாந்தர்ஜலே ஸம்யக் க்ரியதே சாக₄மர்ஷணம் ||

[அவன் மௌனத்துடன கூடியவனாய் ஜலத்தினுள் நுழைந்து ஹரியையே மனத்தால் நினைத்துத் தொடையளவு ஆழத்தில மூழ்க வேண்டும். அதற்குப்பின் கரைசேர்ந்து மந்திரத்துடன் ஜலத்தை ஆசமனம்செய்து, வருண மந்திரத்தாலும், பவமான மந்திரங்களாலும் புரோக்ஷணம் செய்துகொள்ளவேண்டியது. தர்ப்பையின நுனியிலெடுத்த ஜலத்தால் முயன்று தன்னைப் புரோக்ஷணம் செய்து கொண்டு, 'ஸ்யோநா ப்ருதி₂வீ' 'இத₃ம் விஷ்ணு:' என்றுதொடங்கும் மந்திரங்களால் மண்ணை மேனியில் இட்டுக்கொள்ளவேண்டும். அதற்குப்பின் மறுபடியும் ஜலத்தில் முழுகும்போது, ஒவ்வொரு தடவையும் தேவனை நாராயணனை நன்கு நினைக்கவேண்டும். (அதன் பின) ஜலத்தில் நன்கு மூழ்கிநின்று அக₄மர்ஷணஜபத்தைச் செய்ய வேணடும.] என்பது ஹாரீதஸ்ம்ருதியிலுள்ள ஸ்நாநவிதி. இதில் ஸ்நாநம செய்யும்போது ஜலத்தில் மூழ்கும் ஒவ்வொரு தடவையும நாராயணனை நினைக்கவேண்டும் எனறு விதத்திருப்பதைக் காண வேண்டும். வைதிகர்களான ஸ்மார்த்தர்கள் கூட இன்றளவும் ஹரி ஸ்மரணத்தோடேயே ஸ்நாநம செய்வதும் காணத்தக்கது. இதே நாலாமத்தியாயத்தில ஐம்பத்து நாலாவது ஶ்லோகத்தில்,

ததோ தே₃வம் நமஸ்க்ருத்ய க்₃ருஹம் க₃ச்சே₂த் தத: புந: |
விதி₄நா புருஷஸூக்தஸ்ய க₃த்வா விஷ்ணும் ஸமர்ச்சயேத் ||

[அதற்குப்பின் (விஷ்ணுவாகிற) தேவனை நமஸ்கரித்து வீட்டிற்குச் செல்லவேண்டும்; வீட்டிற்குச் சென்றபின் புருஷஸூக்தவிதியாலே விஷ்ணுவை அர்ச்சனம் செய்யவேண்டியது.] என்று, புருஷஸூக்தத்தாலே விஷ்ணுவை அர்ச்சனம் செய்யவேண்டும் என்று விதிக்கப் பட்டது. அதனால் விஷ்ணுவே அனைவராலும் அர்ச்சிக்கத்தக்கவன் என்பதும், புருஷஸூக்தம் அவனையே சொல்லுவது என்பதும் நிலைநாட்டப்பட்டது. புருஷஸூக்தம் சிவனைச் சொல்லுவதாக ஹரதத்தர், அப்பயதீக்ஷிதர் முதலானோர் கூறுவது "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" என்று அந்த ஸூக்தத்திலேயே பரம புருஷனை பூமிலக்ஷ்மீபதியாகச் சொல்லியிருப்பதற்கு விருத்தமா யிருப்பதோடன்றியில், ஶ்ருத்யர்த்தத்தை ஸாக்ஷாத்கரித்தவர்களான ஹாரீதர் முதலானோருடைய ஸ்ம்ருதிகளுக்கும் விருத்தமானது என்பது குறிக்கொள்ளத்தக்கது. இதே நாலாமத்தியாயத்தின கடைசியில் உள்ள இரண்டு ஶ்லோகங்களில,

http://acharya.org

ஜ்ஞாநோத்கர்ஷஶ்ச தஸ்ய ஸ்யாத் நாரஸிம்ஹப்ரஸாதத:।
தஸ்மாந்முக்திமவாப்நோதி ப்ராஹ்மணோ த்விஜஸத்தமா:॥
ஏவம் ஹி விப்ரா: கதிதோ மயா வ
ஸமாஸத: ஶாஶ்வததர்மராஶி:।
க்ருஹீ க்ருஹஸ்தஸ்ய ஸதோ ஹி தர்மம்
குர்வந் ப்ரயத்நாத் ஹரிமேதி யுக்தம॥

[அந்தணர் தலைவர்களே! நரசிங்கனுடைய அருளாலே அந்த அந்தணனுக்கு ஞானச்சிறப்பு உண்டாகும. அவன் அநத நரசிங்கனிட மிருந்து மோக்ஷத்தை அடைகிருன். அந்தணர்களே! நிலையான தர்மங்கள் இவ்வண்ணமாக என்றல் உங்களுககுச் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. நல்ல கிருஹஸ்தனுக்குரிய இந்த தர்மங்களை முயனறு அனுஷ்டிக்கும் கருஹஸ்தன, (குணவிபூதிகளோடு) கூடிய ஹரியை அடைகிருன்.] என்று முறகூறியபடி பகவதாராதனத் தைச் செய்பவன நரசிங்கனிடமிருநது மோக்ஷத்தை அடைகிருன என்றும், குணவிபூதிகளோடு சேர்ந்த ஹரியை அடைவதே அந்த மோக்ஷம என்றும் நிலைநிறுத்தபபட்டது. "உதாம்ருதத்வ ஸயேஶாந:" [பு-ஸூ] முதலான வேதவாக்யஙகளுக்கு உபப்ரும் ஹணமாயிருப்பவை இவ்வசனஙகள்; இவற்றிலிருந்து சிவனே மோக்ஷமளிப்பவன என்று கூறும் சைவமதமும, ப்ரஹ்மமாவதே மோக்ஷம எனறு கூறும் அத்வைதமதமும் ஶ்ருதிஸ்ம்ருதி விருத்தம் எனறு விளங்குகிறது. ஐந்தாமத்தியாயத்தின் கடைசியில,

தபோ ஹி ய: ஸேவதி வந்யவாஸ:
ஸமாதியுக்த: ப்ரயதாந்தராத்மா।
விமுக்தபாபோ விமல: ப்ரஶாந்த:
ஸ யாதி திவ்யம் புருஷம் புராணம்॥

[வனத்தில் வஸிக்கும் எவனொருவன் ஸமாதியுடன் கூடியவனுய் மனத்தையடக்கித் தவம்புரிகிருனே, அவன் பாபமற்றவனுய், அழுக்கற்றவனுய், ஊர்மிகளற்றவனுய், பழையோனுன திவ்ய புருஷனை அடைகிருன்.] என்று திவ்யபுருஷனை அடைவதே மோக்ஷ நிலை எனறு கூறுமிடத்திலும் இவ்விஷயம் வலியுறுத்தப்படுகிறது. யதிகளின (ஸந்யாஸிகளின்) தர்மத்தை விவரிக்கும் ஆருமத்தி யாயத்தில், ஆரும் ஶ்லோகத்தில,

த்ரிதண்டம் வைஷ்ணவம் ஸம்யக் ஸந்ததம் ஸமபர்வகம்

http://acharya.org

[ஸமமான கணுக்களையுடையதாய், விஷ்ணுவினுடையதான த்ரிதூண்டமானது (யதிகளின் பரிசுத்தியின் பொருட்டு தரிக்கத் தக்கது.)] என்று ஸந்யாஸிகளுக்கு வைஷ்ணவமான த்ரிதண்ட தாரணத்தை விதித்து, அவ்வத்தியாயத்திலேயே கடைசி ஶ்லோகத்தில்,

த்ரிதண்டப்ருத் யோ ஹி ப்ருதக் ஸமாசரேத்
ஶனைஶ்ஶனைர் யஸ்து பஹிர்முகாக்ஷ: ।
ஸம்முச்ய ஸம்ஸாரஸமஸ்தபந்தநாத்
ஸ யாதி விஷ்ணோ: அம்ருதாத்மந: பதம் ॥

[திரிதண்டத்தை தரித்தவனாய், சிறிது சிறிதாக வெளிவிஷயங்களிலிருந்து இந்திரியங்களை விலக்கிய ஸந்யாஸி, ஸம்ஸாரக்கட்டுகள் அனைத்தினின்றும் விடுபட்டு அழியாதவனான விஷ்ணுவின பரம பதத்தை அடைகிறான்.] என்று த்ரிதண்டத்தை தரித்த ஸந்யாஸிக்கு விஷ்ணுவின் பரமபதத்தை அடைவதாகிற மோக்ஷம் சொல்லப்பட்டது. இதிலிருந்து த்ரிதண்டத்தை தரிக்கும் ஆசாரத்தை யுடையதாய், விஷ்ணுபரத்வத்தை ஒப்புக்கொள்வதான விஶிஷ்டாத வைத மதமே ப்ராசீனமான ஸ்ம்ருதிகளில் ஆதரிக்கப்பட்டது என்பதும், இவற்றை ஒப்புக்கொள்ளாத அத்வைதம், சைவம் முதலான மதங்கள் ஶ்ருதிஸ்ம்ருதி விருத்தம் என்றும், நவீனமானவை என்றும் விளங்குகிறது. தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களிலும் முக்கோல் தரிக்கும் ஆசாரமே ஸந்யாஸிகளுக்குக் கூறப்பட்டிருப்பது இதையே வலியுறுத்தும். "தத் விஷ்ணோ: பரமம் பரமம் பதம்" என்னும் ஶ்ருதி இவ்வாக்யத்தில் விளக்கப்படுவதும், விஷ்ணுவின் பரமபதத்தை அடைவதே மோக்ஷம என்று உத்கோஷிக்கப்படுவதும் காணத்தக்கது. கடைசியான ஏழாமத்தியாயத்தில் ஐந்தாம் ஶ்லோகத்திலிருந்து தொடங்கி,

ஏகாக்ஷரமநா மந்த்ரம் புருஷமநாமயம் ।
ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதரம் த்யாயேத் ஜகதாதாரமுச்யதே ॥
ஆத்மாநம் பஹிரந்த:ஸ்தம் ஶுத்தசாமீகரப்ரபம் ।
ரஹஸ்யேகாந்தமாஸீநோ த்யாயேதாமரணாந்திகம் ॥
யத் ஸர்வப்ராணிஹ்ருதயம் ஸர்வேஷாம் ச ஹ்ருதிஸ்திதம் ।
யச்ச ஸர்வஜநை: ஜ்ஞேயம் ஸோऽஹமஸ்மீதி சிந்தயேத் ॥

http://acharya.org

[ஞானிகளை சரீரமாகக் கொண்டவனும், தோஷமற்றவனும், நுண்ணியதைக் காட்டிலும் நுண்ணியவனும், உலகிற்கு ஆதாரமானவனும், அனைத்தின் உள்ளும் புறமுமிருப்பவனும், சுத்தமான பொன்போன்ற ஒளியுள்ளவனுமான பரமாத்மாவைத் தனியிடத்தில் ரஹஸ்யமாயிருந்துகொண்டு சிறிது சிறிதாக மரணம் வரையில் தியானிக்கக்கடவன். எந்தப் பரமபொருள் எல்லாவுயிர்களையும் தன்னுள் தரித்திருக்கிறதோ, அனைவரின் இருதயத்திலுமிருக்கிறதோ எது அனைவராலும் அறியத்தக்கதோ அதுவே நானாகிறேன் என்று சிந்திக்கக்கடவன்.] என்னும் மூன்று ச்லோகங்களாலே பரமபொருளுக்கும், மற்றவற்றுக்கும் உள்ள வேற்றுமைகளைப் பலவாறு விளக்கிவிட்டு, அதைத் தானாகச் சிந்திக்கவேண்டும் என்று கூறியிருப்பது 'தனக்கு அந்தர்யாமியாகச் சிந்திக்கவேண்டும்' என்னும் கருத்தையே உடையது என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். இவ்விடத்தில் அத்வைதம் சொல்லப்பட்டிருப்பதாகக் கூறுவது இந்த ச்லோகங்களுக்கும், முன்பின் பிரகரணங்களுக்கும் முரண்படும். குணமில்லை, ரூபமில்லை, விபூதியில்லை என்று கூறும் அத்வைதிகளின் மதம் குணரூபவிபூதிகளைச் சொல்லும் இந்த ச்லோகங்களில் அடியோடு நிரஸிக்கப்படுகிறது என்பதும் காணத்தக்கது. இவ்வத்தியாயத்திலேயே பத்தாம் ச்லோகத்தில்,

"உபாப்யாமபி பக்ஷாப்யாம் யதா2 கே2 பக்ஷிணாம் க3தி: |
ததை2வ ஜ்ஞாநகர்மப்4யாம் ப்ராப்யதே ப்3ரஹ்மஶாஸ்வதம் ||"

[இருசிறகுகளாலேயே ஆகாயத்தில் பக்ஷிகள் பறப்பதுபோல், ஜ்ஞாநம், கர்மம் இரண்டாலுமே நிலையான ப்ரஹ்மம் அடையப்படுகிறது.] என்று கூறுவதன்மூலம் ஞானமொன்றே மோக்ஷஸாதனமென்றும், ப்ரஹ்மமாவதே மோக்ஷம் என்றும் கூறும் அத்வைத மதம் தள்ளப்படுகிறது என்பதும் அறியத்தக்கது.

ஸ்வதர்4மேண யதா2 ந்ருணாம் நாரஸிம்ஹ: ப்ரஸீத3தி |
ந துஷ்யதி ததா2ந்யேந கர்மணா மது4ஸூத3ந: ||
அத: குர்வந் நிஜம் கர்ம யதா2காலமதந்த்3ரித: |
ஸஹஸ்ராநீகதே3வேஶம் நாரஸிம்ஹம ச ஸாலயம் ||

http://acharya.org

உத்பந்நவைராக்₃யப₃லோ யோகீ₃
த்₄யாயேத் பரம் ப்₃ரஹ்ம ஸதா₃க்ரியாவாந் |
ஸத்யம் ஸுக₂ம் ரூபமநந்தமாத்₃யம்
விஹாய தே₃ஹம் பத₃மேதி விஷ்ணோ: ||

[மனுஷ்யர்கள் தம் வர்ணாஶ்ரமத₄ர்மங்களை அநுஷ்டிப்பதால் மதுஸூதனனை நரசிங்கப்பெருமானை திருப்தியடைவதுபோலே வேறு செயல்களால் திருப்தியடைவதில்லை. ஆகையால் தன் கருமத்தைக் காலந்தவருமல் சோம்பலின்றியே எவனொருவன் அநுஷ்டிக்கிறானோ, அவன் கணக்கற்ற லோகங்களையுடைய தேவரான விஷ்வக்ஸேனருக்கும் ஈஶ்வரனாய், பரமபதத்திலிருப்பவனான நரசிங்கப் பெருமானை அடைகிறான். உபாஸகன எப்போதும் கர்மத்தை அநுஷ்டிப்பவனாய், அதனால் உண்டான வைராக்யத்தின் பலத்தால் பரப்ரஹ்மத்தை தியானிக்கக்கடவன்; (அப்படி தியானித்தால்) தேஹத்தைவிட்டு ஸத்யமாய், ஆநந்தமாய், அநந்தமாய், ஆதிகாரணமாய் ப்ராப்யமான **விஷ்ணுவின்** ஸ்வரூபத்தை அடைகிறான்.] என்று ஹாரீதஸ்ம்ருதியின் கடைசியில் உள்ள ஶ்லோகங்களிலிருந்து விஷ்ணுவெனனும் பெயரையுடையவனும், நரசிங்கனாய் அவதரித்தவனுமான தேவனே முமுக்ஷுக்களால் உபாஸிக்கப்படுவதாய், முக்திப்ராப்யமாய், ஜகத்காரணமான பரப்ரஹ்மம் என்று உத்கோஷிக்கப்படுகிறது. முமுக்ஷுவானவன் கர்மாநுஷ்டானத்தினால் மனத்தில் வைராக்யமுண்டாகி, அதனால் தியானமாகிற பக்தியோகம் கைவரப்பெற்று அதனால் விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறான் என்னும் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தமே இந்த ஹாரீதஸ்ம்ருதியில் ஆதரிக்கப்பட்டிருக்கிறதென்பதும், சைவம், அத்வைதம் முதலான மதங்கள் இதில் அநாதரிக்கப்பட்டிருக்கின்றன என்பதும நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். தொடக்கத்தில் '**நாரஸிம்ஹ: ஸநாதந:**' என்று நரசிங்கப்பெருமானை என்றுமிருப்பவனாகக்கூறி, அவனே ஜகத்காரணனாய், முமுக்ஷுபாஸ்யனாய், முக்தப்ராப்யனான பரம்பொருள் என்று கடைசியிலும் கூறும் இந்த ஸ்ம்ருதி ந்ருஸிம்ஹதாபநீய உபநிஷத், நாராயணோபநிஷத் முதலானவற்றுக்கு உபப்₃ரும்ஹணமாயிருக்கிறது. இவற்றுக்கு முரணாகப்பேசும் ஶரபோ₄பனிஷத் முதலானவை இவ்வண்ணமாக எந்த ஸ்ம்ருதியிலும் ஆதரிக்கப்படாததிலிருந்தே அவை ஸமீபகாலத்தில் கற்பிக்கப்பட்டவை என்பதும்கையிலங்குகனியாக விளங்குகிறது.

ஹாரீதஸ்ம்ருதிநிஷ்கர்ஷம் முற்றிற்று.

http://acharya.org

ஶங்க₂ஸ்ம்ருதி நிர்ணயம்

"மந்வத்ரி விஷ்ணு ஹாரீத" [1-4] என்று தொடங்கும் யாஜ்ஞ வல்க்யஸ்ம்ருதியின் வசனத்தில் ஹாரீதஸ்ம்ருதியை அடுத்து எடுக்கப்படும் யாஜ்ஞவல்க்யர், உஶநஸ், அங்கி₃ரஸ், யமர், ஆபஸ்தம்பர், ஸம்வர்த்தர், காத்யாயநர், ப்₃ருஹஸ்பதி, பராஶரர், வ்யாஸர் ஆகியவர்களுடைய ஸ்ம்ருதிகளில் (கல்கத்தா, பம்பாய், பூனா பதிப்புக்களில்) பரமபொருளைப்பற்றிய குறிப்புகள் இல்லையாகை யால், அவற்றை விடுத்து அக்குறிப்புகளுள்ள ஶங்க₂ஸ்ம்ருதியை அடுத்தபடி காணபோம்.

"ஸ்வயம்பு₄வே நமஸ்க்ருத்ய ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரிணே।
சாதுர்வர்ண்ய ஹிதார்த்தா₂ய ஶங்க₂: ஶாஸ்த்ரமதா₂கரோத்॥"

[உலகைப் படைத்தலையும் அழித்தலையும் செய்யும் ஸ்வயம்பு₄வான (தனக்குத் தானே காரணமான) பரமாத்மாவுக்கு நமஸ்காரம் செய்து நாலு வர்ணங்களின் நன்மையின் பொருட்டு ஶங்க₂ர் இந்த ஶாஸ்திரத்தைச் செய்தார்.] என்று தொடங்குகிறது இந்த ஸ்ம்ருதி. இவ்விடத்தில் பொதுவான ஸ்வயம்பூ₄ஶப்தத்தைப் பரம பொருளைக்குறித்துப் பிரயோகித்திருந்தபோதிலும் மேலத்தியாயத்தி லிருந்து இவர் கருதும் பரமபொருள் விஷ்ணுவே என்பது விளங்கும். ஸ்வயம்பூ₄ஶப்தம் நாராயணனைக் குறித்தும் ஶாஸ்திரங் களில் பலவிடங்களில் பிரயோகிக்கப்பட்டிருப்பதை விஷ்ணுசித்த விஜயம் முதலத்தியாயத்தில் காட்டியிருக்கிறோம். நிற்க; இந்த ஸ்ம்ருதியின் ஏழாமத்தியாயத்தில் பரமாத்ம த்₄யானத்தை விவரிக் கும் ப்ரகரணத்தில் பற்பல ஶ்ருதிவாக்யங்களை உபப்₃ருமஹணம் செய்யும் பின்வரும் ஶ்லோகங்கள் உள்ளன.

ஹ்ருத₃யஸ்த₂ஸ்ய யோகே₃ந தே₃வதே₃வஸ்ய த₃ர்ஶநம்।
த்₄யாநம் ப்ரோக்தம் ப்ரவக்ஷ்யாமி ஸர்வஸ்மாத் யோக₃த:
ஶுப₄ம்॥

ஹ்ருதி₃ஸ்தா₂ தே₃வதாஸ்ஸர்வா ஹ்ருதி₃ ப்ராணா:
ப்ரதிஷ்டி₂தா:।
ஹ்ருதி₃ ஜ்யோதீம்ஷி பூ₄யஶ்ச ஹ்ருதி₃ ஸர்வம் ப்ரதிஷ்டி₂தம்॥
ஸ்வதே₃ஹமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம்।
த்₄யாநநிர்மத₂நாப்₄யாம் து விஷ்ணும் பஶ்யேத் ஹ்ருதி₃
ஸம்ஸ்தி₂தம்॥

http://acharya.org

ஹ்ருத்4யர்க்க: சந்த்3ரமா: ஸூர்ய: ஸோமோ மத்4யே ஹுதாஶந: |
தேஜோமத்4யே ஸ்தி2தம் ஸத்த்வம் ஸத்த்வமத்4யே ஸ்தி2தோऽச்யுத: ||

அணோரணீயாந் மஹதோ மஹீயாந்
ஆத்மாஸ்ய ஜந்தோ: நிஹிதோ கு3ஹாயாம் |
தேஜோமயம் பஶ்யதி வீதஶோக:
தா4து: ப்ரஸாதா3ந் மஹிமாநமாத்மந: ||

வாஸுதே3வஸ்தமோऽந்த4காநாம் ப்ரத்யக்ஷோ நைவ ஜாயதே|
அஜ்ஞாநபடஸம்வீதை: இந்த்3ரியைர் விஷயேப்ஸுபி4: ||
ஏஷ வை புருஷோ விஷ்ணு: வ்யக்தாऽவ்யக்த: ஸநாதந: |
ஏஷ தா4தா விதா4தா ச புராணோ நிஷ்கல: ஶிவ: ||

வேதா3ஹமேதம் புருஷம் மஹாந்தம்
ஆதி3த்யவர்ணம் தமஸ: பரஸ்தாத் |
மந்த்ரைர்விதி3த்வா ந பி3பே4தி ம்ருத்யோ:
நாந்ய: பந்தா2 வித்3யதேऽயநாய ||

ப்ருதி2வ்யாபஸ்ததா2 தேஜோ வாயுராகாஶமேவ ச |
பஞ்சைதாநி விஜாநீயாத் மஹாபூ4தாநி பண்டி3த: ||
சக்ஷு: ஶ்ரோத்ரே ஸ்பர்ஶநம் ச ரஸநா க்4ராணமேவ ச |
பு3த்3தீ4ந்த்3ரியாணி ஜாநீயாத் பஞ்சைதாநி ஶரீரகே ||
ஶப்3தோ3 ரூபம் ததா2 ஸ்பர்ஶோ ரஸோ க3ந்த4ஸ்ததை2வ ச|
இந்த்3ரியஸ்தா2ந் விஜாநீயாத் பஞ்சைவ விஷயாந் பு3த4: ||
ஹஸ்தௌ பாதா3வுபஸ்த2ம் ச ஜிஹ்வா பாயுஸ்ததை2வ ச |
கர்மேந்த்3ரியாணி பஞ்சைவ நித்யம் ஸந்தி ஶரீரகே ||
மநோ பு3த்3தி4ஸ்ததை2வாத்மா வ்யக்தாऽவ்யக்தம் ததை2வ ச|
இந்த்3ரியேப்4ய: பராணீஹ சத்வாரி ப்ரவராணி ச ||
ததா2ऽऽத்மாநம் தத்3வ்யதீதம் புருஷம் பஞ்சவிம்ஶகம் |
தம் து ஜ்ஞாத்வா விமுச்யந்தே யே ஜநா: ஸாது4வ்ருத்தய: ||
இத3ம் து பரமம் ஶுத்3தம் ஏதத3க்ஷர முத்தமம் |
அஶப்3த3ரஸமஸ்பர்ஶமரூபம் க3ந்த4வர்ஜிதம் ||
நிர்து3:க2மஸுக2ம் ஶுத்3த4ம் தத்3விஷ்ணோ: பரமம் பத3ம் ||

http://acharya.org

விஜ்ஞாநஸாரதிர்யஸ்து மந:ப்ரக்₃ரஹவாந்நர: ।
ஸோऽத்₄வந: பாரமாப்நோதி தத்₃விஷ்ணோ: பரமம் பத₃ம் ॥
வாலாக்₃ரஶததபா₄க₃: கல்பிதஸ்து ஸஹஸ்ரதா₄ ।
தஸ்யாபி ஶததமோ பா₄கா₃த் ஜீவ: ஸூக்ஷ்ம உதா₃ஹ்ருத: ॥
மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத புருஷ: பர: ।
புருஷாந்ந பரம் கிஞ்சித் ஸா காஷ்டா₂ ஸா பரா க₃தி: ॥
ஏஷு ஸர்வேஷு பூ₄தேஷு திஷ்ட₂த்யவிரல: ஸதா₃ ।
த்₃ருஶ்யதே த்வக்₃ர்யயா பு₃த்₃த்₄யா ஸூக்ஷ்மயா
ஸூக்ஷ்மத₃ர்ஶிபி₄: ॥

[இருதயத்தில் எழுந்தருளியிருக்கும் தேவதேவனை (பக்தி) யோகத்தால் காண்பதே தியானம் எனப்படுகிறது. மற்ற எல்லா யோகங்களைக் காட்டிலும் மங்களமான இந்த பக்தியோகத்தைக் கூறுகிறேன். எல்லா தேவதைகளும இருதயத்தில் நிற்கின்றனர்; இருதயத்திலேயே பிராணன்கள் நிலைபெறுகின்றன. இருதயத்திலேயே எல்லாச்சோதிகளும் நிலைநிற்கின்றன. இருதயத்தில் எல்லாமே நிலைநிறுத்தப்பட்டுள்ளன. தன தேஹத்தைக் கீழேயுள்ள அரணிககட்டையாகவும், பரணவத்தை மேலேயுள்ள அரணிக் கட்டையாகவும் செய்து, தியானத்தாலே இரணடையும் கடைந்தால், இருதயத்திலுள்ள விஷ்ணுவைக் காணலாம். இருதயத்திலேயே அர்க்கனும, சந்திரனும், ஸூர்யனும், நடுவில் அக்னியும் உள்ளனர். தேஜஸ்ஸின் நடுவில் ஸதவமிருக்கிறது; ஸத்வத்தின் நடுவில் அச்யுதனிருக்கிறான். அவன் அணுவைக்காட்டிலும் அணுவாகவும, பெரியதைக்காட்டிலும் பெரிதாகவும் இந்த மனிதனின இருதயகுஹையில் ஆத்மாவாயிருககிறான. ஜகத்காரணனான அவனுடைய அருளாலே சோதியுருவான அவனைக்கண்டு சோகமற்றவனாய், அபபரமாதமாவினுடைய பெருமையைக்காணகிறான். வாஸுதேவன் தமோகுணத்தால் குருடாகியிருப்பவர்களுடைய அஞ்ஞானத்தால மறைககப்பட்ட விஷயப்ரவணங்களான இந்திரியங்களாலே ஒருபோதும் காணப்படமாட்டான்; இவனே புருஷன் என்றும் விஷ்ணு என்றும் சொல்லப்படுபவன்; (கார்யநிலையில்) வ்யக்தமாகவும், (காரண நிலையில்) அவ்யக்தமாகவுமிருப்பவன், பழையோனுயிருப்பவன், இவனே தா₄ரகனாகவும, படைப்பவனாகவும், பழையோனாயிருந்துகொண்டே புதியோனாகவும், பிராகிருதமான அவயவங்களற்றவனாகவும, மங்களமானவனாகவுமிருப்பவன. பிராகிருதமான தேஹமற்றவனாகவும், சூரியன்போன்ற ஒளிமயமான உருவை உடையவனாகவும், தமஸ்ஸுககு மேறபட்ட

http://acharya.org

வனாகவும், பெரியோனாகவுமுள்ள இப்புருஷனை வேதமந்திரங்களாலே அறிந்தவன் ஸம்ஸாரத்தைக்கண்டு பயப்படமாட்டான். இவனை அடைய இஃதொழிய வேறு மார்க்கமில்லை. பூமி, நீர், தீ, காற்று, ஆகாயம் என்னும் இவ்வைந்தையும் அறிவாளியாயிருப்பவன் மஹாபூ$_4$தங்கள் என அறியக்கடவன். சரீரத்திலுள்ள காணும் கண், கேட்கும காது, தொடும் தோல், சுவைக்கும் நாக்கு, முகரும் மூக்கு என்னும் இவ்வைந்தையும் ஞானேந்திரியங்கள் என்று அறியக்கடவன். ஶப்தம், ரூபம, ஸ்பர்ஶம், ரஸம், கந்தம் என்னும் இவ்வைந்தையும் ஐந்து ஞானேந்திரியங்களாலும் அறியப்படும ஐந்து விஷயங்கள் (புலனகள்) எனறு அறியக்கடவன. (எடுக்கும்) கைகள், (நடக்கும்) கால்கள், (இன்புறும்) ஆண்குறி (அல்லது பெண்குறி), (பேசும) நாவோடுகூடிய வாய் (மலவிஸர்ஜனம் செய்யும்) பாயு என்னும் இவ்வைந்து கர்மேந்திரியங்களும் சரீரத்தில் அது உள்ளவரையிலிருக்கின்றன (என்று அறியக்கடவன்.) மனம் எனப்படும் அஹங்காரம், பு$_3$த்தி எனப்படும மஹான், ஆத்மா எனப்படும் அக்ஷரம், வ்யக்தமாக இருப்பவற்றுக்கெல்லாம் லயஸ்த$_2$ானமாய் அவ்யக்தம் எனப்படும் மூலப்ரக்ருதி ஆகிய நான்கும் முற்கூறிய இந்திரியங்களுக்கும் மேன்மேலே உத்பத்திலயஸ்த$_2$ானங்களாயிருக்கையால் உயர்ந்தவை. இந்த ஐம்பெரும்பூதங்கள், ஐமபுலன்களால் உபலக்ஷிக்கப்பட்ட ஐந்து தந்மாத்ரைகள், ஐந்து ஞானேந்திரியங்கள், ஐந்து கர்மேந்திரியங்கள், மனம் (அஹங்காரம்), பு$_3$த்$_3$தி$_3$ (மஹான்), ஆத்மா, (அக்ஷரம), அவ்யக்தம (மூலப்ரக்ருதி) என்னும் இருபத்துநாலு அசேதனதத்துவங்களையும் கடந்திருப்பவனாய், இருபத்தைந்தாவது தத்துவமான புருஷன் எனப்படும் ஜீவாத்மாவை அறிபவர்களாய், நல்லொழுக்கமுடையவர்களாயிருப்பவர்கள் (ஆத்மாநுப$_4$வமாகிற) (கைவல்ய) மோக்ஷத்தை அடைகிறார்கள். இவ்வாத்மாவிலும் மேலானதாய், பரமபரிசுத்தமாய், அழியாததாய், மிகச்சிறந்ததாய், ஶப்$_3$த$_3$ ஸ்பர்ஶரூபரஸகந்தங்களற்றதாய், ஸுக$_2$து$_3$க்கங்களற்றுப் பரிசுத்தமாயிருப்பது விஷ்ணுவின் பரமப்ராப்யமான ஸ்வரூபம். அறிவைத் தேர்ப்பாகனாகவும், மனத்தைக்கடிவாளமாகவும் கொண்டு (இந்திரியங்களாகிற குதிரைகள் பூட்டிய சரீரமாகிற தேரைச் செலுத்தும்) ஜீவன விஷ்ணுவின் பரமபதத்தை அடைகிறான். நெல்நுனியின் நூறு நூறாயிரத்தில ஒரு பங்கிலும் ஸூக்ஷ்மமானவனாகச் சொல்லப்படுகிறான ஜீவன. (வசீகரிக்கத்தக்கவைகளுள்) பெரியோனான ஜீவனைக் காட்டிலும் அவ்யக்தமாகிற மூலப்ரக்ருதியிலிருந்துண்டான அவனுடைய சரீரம் சிறந்தது. அந்த சரீரத்தைக்காட்டிலும் புருஷன்

http://acharya.org

எனப்படும் பரமாத்மா சிறந்தவன், அப்பரமாத்மாவைக்காட்டிலும் சிறந்த தொன்றுமில்லை; அவனே மேலான உபாயமாகவும ப்ராப்யமாகவுமிருப்ப வன். அவன இந்த பூ4தங்கள் அனைத்திலும் எபபோதும் நெருஙகி நிற்கிருன். நுண்ணறிவாளர்களாலே தம சிறந்தநுண்ணறிவால் காணப்படுகிருன அவன.] எனனும அந்த ஶ்லோகஙகளில பரமாத்மாவைப்புருஷன் என்றும் விஷ்ணுவென றும், வாஸுதேவனென்றும கூறி அவனுக்குப் பரமபொருளுக்ஷேத்ரியனவாகப் பறபல உப னிஷத்துக்களில படிக்கப்படும பெருமைகளனைததும் உதகோஷிக்கப் பட்டன. "அத்ர ஹி ஸௌர ஸௌம்ய ஆக்3நேய ஸாத்விகமண்ட3லாநி பி4த்வா தத: ஶுத்3த4ஸத்வாந்தராவஸ்தி2தம அசலமமரம் அச்யுதம் த்4ருவம் விஷ்ணுஸம்ஜ்ஞம...பஶ்யதி" [மைத்ராயணீயம 6] [இஙகு ஸூர்ய ஸோம அக்னி ஸத்வமண்டலங்களைப் பிளந்துகொண்டு போய, அதற்குப்பின ஶுத்தஸத்வத்தின உளளிருப்பதாய், அசை யாததாய், (அடியார்களை) நழுவவிடாத அசயுதனெனப்படுவதாய், விஷ்ணுவென்னும பெயரை உடையதான பரமபொருளைப் பார்க்கிருன்.] என்னும் மைத்ராயணீயஶ்ருதி இஙகு உபப்3ரும்ஹணம செய்யப் பட்டிருப்பதிலிருந்து, நூற்றெட்டுச சுவடியில சிலர் அப்பகுதியை எடுத்துவிட்டு அச்சிட்டது க்ருத்ரிமமானது என விளஙகுகிறது. பரம புருஷனுய், விஷ்ணுவெனபபடும் வாஸுதேவனை இஙகு தமஸ்ஸுக்கு மேற்பட்டவனென்று கோஷிததிருபபது நமது ஸாத்விகவிஜயத்தைப் பூணகட்டித்தருகிறது. மற்றும கடோ2பனிஷத் ஶ்வேதாஶ்வதரோப னிஷத் முதலான பல உபனிஷத்துக்களை இங்கு விஷ்ணுபரமாக உபப்3ருமஹணம் செய்திருப்பதும், ஜீவனைக்காட்டிலும வேறுபட்ட வனுய், சிறந்தவனுகப் பரமாத்மாவைப் பேசியிருப்பதும், பக்தி யோகமே காமஜ்ஞான யோகங்களைக்காட்டிலும் சிறநததெனபபேசி யிருப்பதும விசிஷ்டாத்வைத வைஷ்ணவமதமே ஶங்க2மஹர்ஷியின ஸித்தாந்தம என்பதையும், அத்வைத சைவமதங்கள் அவரால் ஆதரிக்கப்படவில்லையென்பதையும தெளிவுபடுததுகின்றன. "தமோ குணத்தால் குருடாகியிருப்பவர்களுடைய இந்திரியங்களாலே வாஸு தேவன் ஒருபோதும காணப்படமாட்டான்" என்று இங்கு ஶங்க2 மஹர்ஷி கூறியதையே "தவாம் ஶீலரூபசரிதை. பரமப்ரக்ருஷ்ட ஸத த்வேந ஸாத்விகதயா ப்ரப3லைஶ்சஶாஸ்த்ரை:ப்ரக்2யாததைவபரமார்த்த2 விதா3ம் மதைஶ்ச நைவாஸுரப்ரக்ருதய: ப்ரப4வநதி போ3த்3து4ம் ||" [ஸ்தோ-ர 15] [குணங்கள், உருவங்கள், சரிதங்கள் ஆகியவற்று னும, மிகவுயர்ந்த ஸத்வத்தாலும், ஸாத்விகங்களாகையாலே வலிமை மிக்க சாஸ்திரங்களாலும், தேவிற்சிறந்தவன யார் என்பதை அறிந்த மஹானகளின்முடிவைக்கொண்டும் ஆஸுரப்ரக்ருதிகள் உன்னை ஒரு போதும் அறியமாட்டார்கள] என்று ஆளவந்தார் உத்கோஷித்தார்.

ஶங்க2ஸ்ம்ருதிநிர்ணயம் முற்றிற்று.

http://acharya.org

ஶங்க₂லிகி₂தஸ்ம்ருதி நிர்ணயம்

"மந்வத்ரி விஷ்ணு" என்று தொடங்கி யாஜ்ஞவல்க்யரால் படிக்கப்பட்ட வசனத்தில் "பராஶரவ்யாஸ ஶங்க₂லிகி₂தா:" என்னும் க்ரமத்தில் ஸ்ம்ருதிகள் படிக்கப்பட்டன. அதில் ஶங்க₂ஸ்ம்ருதி என்றும், லிகி₂தஸ்ம்ருதி என்றும் தனித்தனி ஸ்ம்ருதிகள் எல்லாப் பதிப்புகளிலும் காணப்படுகின்றன. அவற்றில் ஶங்க₂ஸ்ம்ருதியில் பரதத்வநிஷ்கர்ஷம் செய்தபடியைச் சற்றுமுன் பார்த்தோம். லிகி₂தஸ்ம்ருதியில் எப்பதிப்பிலும் பரம்பொருளைப்பற்றிய குறிப் பில்லை; பூனா ஆனந்தாஶ்ரமப் பதிப்பில் ஶங்க₂லிகி₂தஸ்ம்ருதி என்று 32 ஶ்லோகங்கள்கொண்ட ஒரு ஸ்ம்ருதி காணப்படுகிறது. அதனுடைய தொடக்கத்தில்,

"வாஸுதே₃வம் நமஸ்க்ருத்ய ஶங்க₂ஸ்ய லிகி₂தஸ்ய ச ।
த₄ர்மஶாஸ்த்ரம் ப்ரவக்ஷ்யாமி த₃த்₄நி சைவ க்₄ருதம் யதா₂ ॥"

[வாஸுதேவனை நமஸ்கரித்து ஶங்கரும் லிகிதரும் சேர்ந்து தயிரில் நெய்யெடுப்பதுபோல் செய்த த₄ர்மஶாஸ்திரத்தைக் கூறுகிறேன்.] என்று வாஸுதேவனின் நமஸ்காரத்துடன் தொடங்குகிறது இந்த ஸ்ம்ருதி.

"த₃ஹத்யக்₃நிஸ் தேஜஸா ச ஸூர்யோ த₃ஹதி ரஶ்மிநா ।
ராஜா த₃ஹதி த₃ண்டே₃ந விப்ரோ த₃ஹதி மந்யுநா ॥
மந்யுப்ரஹரணா விப்ராஶ் சக்ரப்ரஹரணோ ஹரி: ।
சக்ராத் தீக்ஷ்ணதரோ மந்யுஸ் தஸ்மாத்₃விப்ராந்ந கோபயேத் ॥
அக்₃நித₃க்₃த₄ம் ப்ரரோஹேத ஸூர்யத₃க்₃த₄ம் ததை₂வ ச ।
த₃ண்ட₃யஸ்து ஸம்ப்ரரோஹேத ப்₃ரஹ்மஶாபஹதோ ஹத: ॥"

[அக்னி தன் உஷ்ணத்தால் சுடுகிறது; ஸூர்யன் கிரணங்களால் சுடுகிறது. அரசன் தண்டனையால் சுடுகிறான். அந்தணன் கோபத்தால் சுடுகிறான். அந்தணர்கள் கோபத்தையே ஆயுத மாகக் கொண்டவர்கள். பகவான் ஹரி சக்ராயுதத்தை ஆயுத மாகக்கொண்டவன். ஹரியின் சக்ரத்தைக் காட்டிலும் அந்தணனின் கோபம் கடுமையானது. ஆகையால் அந்தணரைக் கோபமுறச் செய்யலாகாது. நெருப்பினால் எரிக்கப்பட்டதும் ஸூர்யனால் சுடப் பட்டதும் மறுபடி முளைக்கும். அரசனால் தண்டிக்கப்பட்டவன் மறுபடியும் கிளர்ந்தெழக்கூடும் ப்ராஹ்மணனின் சாபத்திற்கு இலக்கானவன் தொலைந்தொழிவான்.] என்னும் கடைசி ஶ்லோகங் களில் அச்யுதனுக்கு இனியவர்களான அந்தணர்களின் கோபத் திற்கு அடுத்தபடி ஹரியின் சக்ராயுதத்தை எடுத்திருப்பது காணத் தக்கது. இதிலிருந்து தெய்வங்களில் வாஸுதேவனான ஹரியும், ஆயுதங்களில் ஸுதர்ஶனமுமே சிறந்தவை என விளங்குகிறது.

ஶங்க₂லிகி₂தஸ்ம்ருதி நிர்ணயம் முற்றிற்று.

http://acharya.org

தக்ஷஸ்ம்ருதி தாத்பர்யம்

"மந்வத்ரி விஷ்ணு" என்று தொடங்கும் யாஜ்ஞவல்க்ய வசனத்தில் ஸங்க2லிகிதஸ்ம்ருதிகளுக்கு அடுத்தபடி த3க்ஷஸ்ம்ருதி படிக்கப்பட்டது. அதில் ஏழாம் அத்தியாயத்தில் பரமபொருளைப்பற்றியும், யோகத்தைப்பற்றியும், யதிதர்மத்தைப்பற்றியும், த்3வைதாத்3வைதங்களைப்பற்றியும் சில குறிப்புகள் காணப்படுகின்றன. பம்பாய் பதிப்பில் மூன்றாவது ச்லோகத்தில் "ப்ரஹ்மலோகம் நயத்யாசு" என்று யோகமானது ஜீவனை ப்ரஹ்மலோகத்தை விரைவில் அடைவிக்கும் என்று கூறுகையாலே, ஒரு லோகவிசேஷத்தை அடைவதே மோக்ஷம் என்று தேறுவதால் இவ்வுலகிலேயே ப்ரஹ்மமாவதே மோக்ஷம் என்று கூறும் அத்வைதமதம் தள்ளப்படுகிறது. இனி, இவ்வுலகிலேயே சிலர் முக்தியடைவதாகக் கூறுவது எப்படி என்னும் கேள்விக்கு பதிலை,

"அத்ராத்ம வ்யதிரேகேண த்3விதீயம் நைவ பச்யதி|
ப்3ரஹ்மபூ4த: ஸ ஏவேஹ த3க்ஷபக்ஷ உதா3ஹ்ருத:||"

[பரமாத்மாவைத்தவிர வேறொன்றை (யோகநிலையில் உபாஸகன்) காணவே மாட்டான். அத்தகையவனே இவ்வுலகிலேயே மோக்ஷமடைந்தவனாகக் கூறப்படுகிறான் என்பது தக்ஷரின் பக்ஷம்] என்று பனிரண்டாம் ச்லோகத்தில் உரைத்தார் தக்ஷமஹர்ஷி. ஆக, யோக நிலையில் உபாஸகன் ப்ரஹ்மத்தைத்தவிர வேறொன்றைக் காணாமலிருக்கும் நிலையானது மோக்ஷதுல்யமானதாகையாலே, அவனை இவ்வுலகிலேயே ப்ரஹ்மமாக (முக்தனாக) ஆனவனாகக் கூறப்படுகிறான் என்றதாயிற்று. 'இரண்டாவதொன்றைக் காண்பதில்லை' என்று கூறப்பட்டதேயொழிய, இரண்டாவதொன்றே இல்லை என்றே கூறப்படவில்லை என்பது குறிக்கொள்ளத்தக்கது. இதற்கு மூலமான ச்ருதியிலும், 'இதர இதரம் பச்யதி' 'கேந கம் பச்யேத்' என்றே கூறப்பட்டதன்றோ.' 'ப்3ரஹ்மலோகம் நயதி' என்றதற்கு அநுகுணமாகப் பொருள் கொள்ளும்போது, 'ப்3ரஹ்மபூ4த:' என்றதற்கு ப்ரஹ்மஸாத்3ருச்யனாக அதாவது முக்தனாக ஆனவன் என்றே பொருள் கொள்ளவேண்டும். ஆகையால், இங்கு அத்வைதத்திற்குச் சிறிதும் இடமில்லை.

"த்ரித3ண்ட3வ்யபதே3சேந ஜீவந்தி ப3ஹவோ நரா:|
யஸ்து ப்3ரஹ்ம ந ஜாநாதி ந த்ரித3ண்டீ3 ஹி ஸ ஸ்ம்ருத:||"

http://acharya.org

[த்ரிதண்டத்தை தரித்த ஸந்யாஸியாயிருக்கும் வியாஜத்தினால் பல மனிதர்கள் வாழ்க்கை நடத்துகிறார்கள். ப்ரஹ்மத்தை அறியாதவன் த்ரிதண்டியாக மாட்டான.] என்பது இப்ரகரணத்தில் எல்லாப் பதிப்பிலுமுள்ளதொரு ஶ்லோகம். இதிலிருந்து ப்ரஹ்மஜ்ஞானிகளான ஸந்யாஸிகளுக்கு த்ரிதண்ட தாரணமே உரியதென்று விளங்குகிறது. தொல்காப்பியம் முதலிய பண்டைத் தமிழிலக்கியங்களிலும் 'முக்கோல்......அந்தணர்க்குரிய' 'முக்கோற்பகவர்' என்று த்ரிதண்டதாரிகளான வைஷ்ணவஸந்யாஸிகள் குறிக்கப்படுவதும் இங்கு குறிக்கொள்ளத்தக்கது. பூனா பதிப்பில் இந்த ஶ்லோகத்திற்கு முன்.

"வைணவேந த்ரிதண்டேந ந த்ரிதண்டீதி கத்யதே|
அத்யாத்மதண்டயுக்தோ ய: ஸ த்ரிதண்டீதி கத்யதே||
வாக்தண்டோऽத மநோதண்ட: கர்மதண்டஶ்ச
தே த்ரய:|
யஸ்யைதே து த்ரயோ தண்டா ஸ த்ரிதண்டீதி
கத்யதே||"

[மூங்கிலாலான த்ரிதண்டத்தை தரித்ததனால் மாத்திரம் த்ரிதண்டி என்று சொல்லப்படமாட்டான். ஆத்மஸம்பந்தமான (மூன்று) தண்டங்களோடு (நியமனங்களோடு) கூடியவனே உண்மையான த்ரிதண்டியாவான. (1) வாக்கை நியமிப்பதாகிற வாக்தண்டம் (2) மனத்தை அடக்குவதாகிற மநோதண்டம் (3) செயல்களை நியமிப்பதாகிற கர்மதண்டம் ஆகிய இம்மூன்று நியமனங்களும் எவனிடம் உள்ளனவோ அவனே உண்மையான த்ரிதண்டியெனப் படுகிறான்.] என்று படிக்கப்பட்ட ஶ்லோகங்களில் த்ரிதண்டங்களை ஸந்யாஸி தரிப்பதன கருத்து விளக்கப்பட்டது.

"மேகலாஜிந தண்டைஶ்ச ப்ரஹ்மசாரீதி லக்ஷ்யதே|
க்ருஹஸ்தோ தாநவேதாத்யைர் நகலோமைர்
வநாஶ்ரமீ||
த்ரிதண்டேந யதிஶ்சைவ லக்ஷணைர் ப்ருதக் ப்ருதக்||"

[மேகலை, மான்தோல், தண்டம் ஆகியவற்றால் ப்ரஹ்மசாரியென அறியப்படுகிறான்; தானம், வேதம் முதலானவற்றைக்கொண்டு க்ருஹஸ்தன் என அறியப்படுகிறான்; நகம், ரோமம் ஆகியவற்றைக் கொண்டு வானப்ரஸ்தன் என அறியப்படுகிறான்; த்ரிதண்டத்

தைக்கொண்டு ஸந்யாஸியென அறியப்படுகிறான். இவை அந்தந்த ஆஸ்ரமங்கட்குரிய தனித்தனி அடையாளங்கள்.] என்று முதல் அத்தியாயத்திலேயே ஸந்யாஸிக்குரியது த்ரிதண்டமே என்று கோஷிக்கப்படுவதிலிருந்தும், ஏகதண்டத்தை தரிக்கும் அத்வைதிகளின் அநுஷ்டானம் ரிஷிகள் உகந்ததன்று என விளங்குகிறது. நிற்க; இவ்வேழாமத்தியாயத்தின் கடைசியில் த்வைதாத்வைதங்களைப்பற்றிச் சில ஸ்லோகங்கள் காணப்படுகின்றன. அவை பின்வருமாறு:—

த்₃வைதம் சைவ தத₂ாऽத்₃வைதம் த்₃வைதாத்₃வைதம்
ததை₂வ ச ।
ந த்₃வைதம் நாபி சாத்₃வைதமித்யேதத்பாரமார்த்தி₂கம் ॥
நாஹம் நைவாந்யஸம்ப₃ந்த₄: ப்₃ரஹ்மபா₄வேந பா₄வித: ।
ஏத₃ரு₃ஶாயாமவஸ்த₂ாயாம் அவாப்யம் பரமம் பத₃ம் ॥
த்₃வைதபக்ஷஸமாஸ்த₂ா யே அத்₃வைதே து வ்யவஸ்தி₂தா: ।
அத்₃வைதிநாம் ப்ரவக்ஷ்யாமி யத₂ா த₄ர்ம: ஸுநிஶ்சித: ॥
தத்ராத்மவ்யதிரேகேண த்₃விதீயம் யதி₃ பஶ்யதி ।
தத: ஶாஸ்த்ராண்யதீ₄யந்தே ஶ்ருயந்தே க்₃ரந்த₂ஸஞ்சயா: ॥
யோக₃மப்₄யஸமாநஸ்ய த்₄ருவம் கஶ்சிது₃பத்₃ரவ: ।
வித்₃யா வா யதி₃ வாऽவித்₃யா ஶரணம் து ஜநார்த்த₃ந: ॥

இந்த ஸ்லோகங்களில் கடைசி ஸ்லோகம் சில சுவடிகளில் உள்ளதாகப் பூர்வ பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த ஸ்லோகங்களின் பொருளைக் காண்போமினி. ப்ரஹ்மத்திற்கும், உலகிற்கும் வேறுபாடு உள்ளதா, இல்லையா என்னும் கேள்விக்கு பதில் உரைக்கப்படுகிறது இந்த ஸ்லோகங்களில்: (த்₃வைதம் சைவ பாரமார்த்தி₂கம்) ப்ரஹ்மத்திற்கும், உலகிற்கும் ஸ்வரூபபே₄த₃மில்லாமையாலே, அவையிரண்டிற்கும் வேறுபாடு உள்ளது என்பதும் உண்மையே. இதனால் ஜகத்ப்ரஹ்மங்களுக்கு ஸ்வரூபைக்யத்தைச் சொல்லும் பக்ஷங்கள் அடிபட்டுப்போயின. (தத₂ா அத்₃வைதம் பாரமார்த்தி₂கம்) இப்படி ஸ்வரூபபே₄த₃மிலலாவிடினும், ப்ரஹ்மம் ஆத்மாவாகவும், உலகம் சரீரமாகவும் ஒன்றியிருக்கையாலே (விசிஷ்டமான) அத்வைதமே தத்துவம் என்று கூறுவதும் உண்மையே. இதனால் அத்யந்தபே₄த₃த்தைக் கூறும் மதங்கள் தள்ளப்பட்டவையாயின. (ததை₂வ த்₃வைதாத்₃வைதம் ச பாரமார்த்தி₂கம்) இப்படி ஸ்வரூபத்தில் பிரிந்தும்,

http://acharya.org

ப்ரகாரி ஒன்றாயிருக்கையாலே ஒன்றாகவுமிருக்கையாலே பேதமுள்ளதாகவும், பே$_4$தமற்றதாகவுமே உள்ளது ப்ரஹ்மம் என்று கூறும் விசிஷ்டாத்வைதமதமே உண்மையானது. இதனால் பே$_4$த$_3$த்தையோ, அபே$_4$த$_3$த்தையோ ஔபாதி$_4$கமாக ஒப்புக்கொள்ளும் பக்ஷங்கள் நிராகரிக்கப்படுகின்றன. இப்படிப் பூர்வார்த்த$_4$த்தில் அந்வயமுக$_2$மாகச் சொன்னதை வ்யதிரேகமுக$_2$மாகவும் ஸாதிக்கிறார் உத்தரார்த்த$_4$த்தில்: (ந த்$_3$வைதம் பாரமார்த்தி$_2$கம்) ப்ரஹ்மத்திற்கும் உலகிற்கும் அத்யந்த பே$_4$த$_3$த்தைச் சொல்லும த்$_3$வைதபக்ஷம் உண்மையல்ல. (நாபி சாத்$_3$வைதம் பாரமார்த்தி$_2$கம்) ப்ரஹ்மத்திற்கும் உலகிற்கும் ஸ்வரூபைக்யத்தைச் சொல்லும் (சங்கர், பாஸ்கரர், யாத$_3$வ ப்ரகாசர் முதலானோருடைய) மதங்களும் உண்மையல்ல. (இத்யேதத் பாரமார்த்தி$_2$கம்) இவ்வண்ணமாக பே$_4$த$_3$ஶ்ருதிகளுக்கும், அபே$_4$த ஶ்ருதிகளுக்கும், க$_4$டகஶ்ருதிகளுக்கும் முக்$_2$யார்த்த$_2$த்தைக்கூறும் விஶிஷ்டாத்வைதபக்ஷமே உண்மையானது. இனி, இரண்டாம் ஶ்லோகத்தாலே சேதனனுக்கு எவ்விதமான மனநிலையிருந்தால் பரமபதம் கிடைக்கும் என்பதைக் காட்டுகிறார். (நாஹம்) நான் எனக்கு உபாயமோ உபேயமோ ஆகமாட்டேன். (நைவ அந்ய ஸம்ப$_3$ந்த$_4$:) உபாயரூபமாகவோ, உபேயரூபமாகவோ எனக்கு வேறு எப்பொருளோடும் ஸம்பந்தம் கிடையாது. அப்படியானால், உபாயமாகவும் உபேயமாகவும் எதை அறிவது எனில்: (ப்$_3$ரஹ்ம பூ$_4$ரவேந பூ$_4$ராவித:) ப்ரஹ்மமே உபேயமாகவும் (அடையத்தக்கதாகவும்), உபாயமாகவும் (தன்னையடைய வழியாகவும்) உள்ளது என்னும் நினைவோடு இருப்பவன் நான். (ஈத்$_3$ருஶாயாம் அவஸ்த$_2$ாயாம்) இம்மாதிரியான ஶரணாகதி மனநிலை ஒருவனுக்கு இருந்ததாகில். (அவாப்யம் பரமம் பத$_3$ம்) பரமப்ராப்யமாகவும் ப்ராபகமாகவும் இருக்கும் ப்ரஹ்மமானது அவனாலே மிக எளிதில் அடையத்தக்கதாகிறது. இனி, பக்தியோகத்தை உபதேசிக்கத்தொடங்கி, இரண்டு ஶ்லோகங்களாலே பே$_4$த$_3$த்தையும், அபே$_4$த$_3$த்தையும் ஒப்புக்கொள்ளும் விசிஷ்டாத்வைதிகளான அதிகாரிகளில், நிற்கின்றதெல்லாம் நெடுமால் என்று காணமாட்டாத ஸாமாந்யாதி$_4$காரிகளுக்குக் கர்மத்தை உபதேசிக்கும் சாஸ்திரங்களும் நூல்களுமே புகல் என்கிறார். (த்$_3$வைத பக்ஷே ஸமாஸ்த$_2$ா யே) ப்ரஹ்மத்திற்கும் உலகிற்கும் அத்யந்த பேதம் இல்லை என்னும் கருத்திற்போலே, அவற்றிடையே ஸ்வரூபபே$_4$த$_3$ம் உண்டு என்னும் கருத்திலும் ஸமமான ஆஸ்தை$_2$யை (விருப்பத்தை) எவர்கள் உடையவர்களோ,

http://acharya.org

(அத்₃வைதே து வ்யவஸ்தி₂தா:) நிற்கின்றதையெல்லாம நெடு மாலாகவே காணவேணும் என்னும் உறுதியை எவர்கள் உடையவர் களோ இதனால் பக்தியோகம கைவரப்பெருதவர்கள் இவர்கள் என்று உணர்த்தப்படுகிறது. (அத₃வைதிநாம்) இப்படிப்பட்ட விசிஷ்டத்தின் அபே₄தத்தை அறியும அதி₄காரிகளுக்கு (யதா₂ த₄ர்ம: ஸுநிஸ்சித: (தத்) பரவக்ஷ்யாமி) யாதொரு தர்மம் உறுதி யாக நல்வழி காட்டுவதோ அதைக் கூறுகிறேன். (தத்ர ஆத்ம வ்யதிரேகேண த்₃விதீயம் ந தி₃ப்யதி) உலகிலே பரமாத்மாவைத் தவிரவேறொருபொருளை ஓரதிகாரி கண்டானாகில்."யத்ரத்வஸ்ய ஸர்வ மாத் மைவாபூத் தத் கேந கம் பஸ்யேத்" [எந்நிலையில இவ்வுபாஸ கனுக்கு நிற்கினறதெல்லாம் நெடுமாலாகினறதோ, அப்போது எதைக்கொண்டு வேறு எப்பொருளைக் காண்பானிவன்?] என்று உபனிஷத் உத்கோஷித்தபடியே, எங்கும பரமாத்மாவையே காணும பக்தியோகம கைவரபபெற்ற அதி₄காரிககு பகதிக்கு அங்க மான கர்மயோகம் முதலானவற்றை உபதேசிககும் சாஸ்திரங்களும் நூல்களும் தேவையிலலை என றதாயிற்று. "ஸாத்₄யாபா₄வே மஹா பா₃தேஹா ஸாத₄நை' கிம் ப்ரயோஜநம்" [ஸாதனங்களாலே ஸாதிக்கப் படவேண்டியது ஒன்று இல்லையாகில் ஸாத₄னங்கள பயனறறவை யாகினறன.] என்று சொலலப்படுகிறதன்றோ, (தத:...ஸஞ்சயா:) இபபடி பரமாத்மாவைத தவிர்ந்த பொருள்களைக் காணும நிலையி லுள்ள விசிஷ்டாதவைதிகளுககு பக்தியோகத்திற்கு அஙகமான கர்மயோகம முதலானவற்றைக கூறும் சாஸ்திரஙகளும் நூல்களும் கற்கததக்கவையாகினறன. அவற்றைக்கறறு அநுஷ்டித்து பக்தி யோகம கைவரபபெற்று முக்தியடையவேண்டும் எனறு கருதது. இனி, கடைசி ஸ்லோகத்தாலே, பரமாதமாவோடு சேரவிருமபுகிற வனுக்குத் தடை ஏற்பட்டதாகில், அத்தடையை அகற்ற அவனே உபாயமாகிறுன எனகிறுர். (யோக₃மப்₄யஸமாநஸ்ய) பரமாத்மா வோடு சேரவிருமபுகிறவனுக்கு, முன் ஸ்லோகங்களிற் சொனன ப₄க்தி நிஷ்டனையும், ப்ரபந்நனையும சேர்த்துச் சொல்லுகிறுர். (த்₄ருவம கஸ்சிது₃பத்₃ரவ:) ஏதாவதொரு தடை வநதே தீரும. அதி₄காரிக்கு அநுகுணமாக அத்தடை யாதெனக்காட்டுகிறுர் மேலே.—(வித்₄யா வா) அவனே உபயாம எனனும ப்ரபததிநிஷ்டையிலே ஊனறி யிருபபவனுக்கு ப₄க்தியோக₃ம முதலான உபாயங்களே தடையா யிருக்கும். (பதி₄ வா அவித்₃யா) உபாயாநதர நிஷடனுககு அவ் வுபாயாந்தரங்களுக்கு விரோதிகளான பாபங்களே தடையாயிருக் கும. இபபடி இருவகையான அதி₄காரிகளுககும தடைகளை நீககு

http://acharya.org

வதற்கு உபாயம் என்னவெனில்: (ஶரணம் து ஜநார்த்தநः) ஜநார்த்தனனான பகவானே இத்தடைகளைப்போக்கும் உபாய மாவான். ப்ரபன்னருக்கு,

"உபாயாபாயஸமயோகே நிஷ்டயா ஹீயதேऽநயா"

[லக்ஷ்மீதந்த்ரம்]

[கர்மயோகம் முதலான உபாயந்தரங்களோடும், பகவதாஜ்ஞையை மீறுவதாகிற அபாயத்தோடும் ஸம்பந்தம் இவனுக்கு ஏற்பட்டதாகில் ப்ரபத்திநிஷ்டை நழுவும்]

"காலேஷ்வபி ச ஸர்வேஷு திக்ஷு ஸர்வாஸு சாச்யுத।
ஶரீரே ச கதௌ சாபி வர்த்ததே மே மஹத் பயம்॥"

[ஜிதந்தே 1-9]

[அடியவர்களை நழுவவிடாதவனே! எல்லாப் புண்யகாலங்களிலும், எல்லாதிசைகளிலுமுள்ள புண்யக்ஷேத்ரங்களிலும், தர்மஸாதனமான சரீரத்திலும், சரீராந்தரத்திலும் அடியேனுக்குப் பெரும் பயம உள்ளது] என்று நெறிகாட்டி நீக்குகையாலே தடையாகச் சொல்லப்படுகிற உபாயாந்தரங்களினால் ஏற்படும் பயத்தையும் போக்க ஜநார்த்தனனே புகலாவான். உபாயாந்தரநிஷ்டர்களுக்கு அந்தந்த உபாயாந்தரங்களைத் தொடங்குவதற்கும், நிறைவு பெறுத்தவும் விரோதியாயுள்ள பாபங்களைப் போக்கவும் ஜநார்த்தனனையே சரணமடையவேண்டும். ஆக, இவ்வகையில் அனைவருமே ஶரணாகதர்களே என்று கருத்து. இவ்வர்த்தத்தையே "ப்ரபந்நாதந்யேஷாம் ந திஶதி முகுந்தோ நிஜபதம்" [ப்ரபன்னனைத் தவிர வேறு எவனுக்கும் முகுந்தன் தன் பரமபதத்தை அருள மாட்டான] என்றார் வேதாந்ததேசிகரும்.

ஆக, இந்த தக்ஷஸ்ம்ருதியில், முக்தர்கள் அடையவேண்டிய லோகவிஶேஷம் உண்டென்றும், ஸந்யாஸிகளால் தரிக்கத் தக்கது த்ரிதண்டமே என்றும், விஶிஷ்டாத்வைதம்தமே உண்மை யானது என்றும், ஜநார்த்தனனான நாராயணனே அனைவர்க்கும் ப்ராப்ய ப்ராபகமாயிருப்பவன என்றும் உத்கோஷிக்கையாலே, இந்த விசிஷ்டாத்வைத வைஷ்ணவ மதம் தவிர்ந்த மற்ற எல்லா மதங்களும் மஹர்ஷிக்கு அபிமதங்களன்று என்று நிலைநாட்டப்பட்டதாயிற்று.

தக்ஷஸ்ம்ருதி தாத்பர்யம் முற்றிற்று.

http://acharya.org

ஶாதாதபஸ்ம்ருதி நிர்ணயம்

''மந்வத்ரி' என்று தொடங்கும் ஶ்லோகத்தில் தக்ஷஸ்ம்ருதியை அடுத்துப் படிக்கப்படும் கௌதமஸ்ம்ருதியில் பரம்பொருளைப் பற்றிய குறிப்புகள் ஒன்றுமில்லாமையால், அதற்கடுத்தபடி படிக்கப்படும் ஶாதாதபஸ்ம்ருதி ஆராயப்படுகிறது. மூன்று பதிப்பில் லகுஶாதாதபஸ்ம்ருதியும், வ்ருத்தஶாதாதபஸ்ம்ருதியும் காணப்படுகின்றன. எல்லாப் பதிப்பிலுமே ஶாதாதபஸ்ம்ருதியொன்றும் காணப்படுகிறது. 'லகு' என்றோ, 'வ்ருத்த' என்றோ விஶேஷணமிடப்பெற்ற ஸ்ம்ருதிகளைப் பிறகு ஆராயப்போகிறோமாகையாலே, விஶேஷணமற்ற ஶாதாதபஸ்ம்ருதியை முதலில் ஆராய்வோம். இந்த ஸ்ம்ருதியில் முதல் அத்தியாயத்தில் ஸாமாந்யமான பாபங்களுக்குப் பிராயஶ்சித்தங்களை விதிக்கும்போது,

''ருத்ரம ஜபேத லக்ஷபுஷ்பை: பூஜயித்வா ச த்ர்யம்பகம''

[முக்கண்ணனை லக்ஷம் புஷ்பங்களைக் கொண்டு பூஜித்து ருத்ர ஜபம் செய்யவேண்டியது] என்று ஒரு ப்ராயஶ்சித்தம் விதிக்கப்பட்டது. 'பத்ரம் புஷ்பம பலம்' என்று ஓரிலையையோ, ஒரு பூவையோ, ஒரு பழத்தையோ இட்டாலும் மிகவுகந்து அவனுக்கு ஸ்திரமான புருஷார்த்தங்களை அளிக்கும் பரம்பொருளைப் போலல்லாமல உருத்திரனை உகப்பிக்க லக்ஷபுஷ்பங்கள் வேண்டும் என்பது இங்கு உணர்த்தப்படுகிறது அடுத்தபடி வேறொரு ப்ராயஶ்சித்தத்தில,

''தஶபஞ்சாஷ்டசதுர உபவேஶ்ய த்விஜாந் ஶுபாந் |
விதாய வைஷ்ணவீம் பூஜாம் ஸங்கல்ப்ய நிஜகாம்யயா ||
தேநும் தத்யாத த்விஜாதிப்யோ தக்ஷிணாஞ்சாபி ஶக்தித:|
அலங்க்ருதய யதாஶக்தி வஸ்த்ராலங்கரணைர் த்விஜாந் ||''

[பத்து, அல்லது ஐந்து, அல்லது எட்டு, அல்லது நாலு அந்தணர்களை அமரச்செய்து, தன் விருப்பப்படி ஸங்கல்பித்து, விஷ்ணுவின் பூஜையைச் செய்து, அந்தணர்க்குத் தன்னால் இயன்ற வஸ்திரம் முதலிய அலங்காரங்களைச்செய்து, இயன்ற தக்ஷிணையையும், பசுவையும் கொடுக்கக் கடவன.] என்று விஷ்ணு பூஜையை விதிக்கும்போது, இயன்றவரையில் கொடுக்கலாம் என்று கூறியிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது. நிற்க. இரண்டாமத்தியாயத்தில் மஹாபாதகங்களுக்கு ப்ராயஶ்சித்தத்தை விதிக்கும்போது தாய்தந்தையரைக் கொன்றவனுக்குப் பின்வருமாறு பிராயச்சித்தம் விதிக்கப்படுகிறது.

http://acharya.org

''பித்ருஹா சேதநாஹீநோ மாத்ருஹாந்த₄: ப்ரஜாயதே।
நரகாந்தே ப்ரகுர்வீத ப்ராயஶ்சித்தம் யதா₂விதி₄॥
ப்ராஜாபத்யாநி குர்வீத த்ரிம்ஶச்சைவ விதா₄நத:।
வ்ரதாந்தே காரயேந் நாவம் ஸௌவர்ணபலஸம்மிதாம்॥
கும்ப₄ம் ரௌப்யமயஞ்சைவ தாம்ரபாத்ராணி பூர்வவத்।
நிஷ்கஹேம்நா து கர்த்தவ்யோ தே₃வ: ஶ்ரீவத்ஸலாஞ்ச₂ந:॥
பட்டவஸ்தரேண ஸம்வேஷ்ட்ய பூஜயேத தம் விதா₄நத:।
நாவம் த்₃விஜாய தாம் த₃த்₃யாத் ஸர்வோபஸ்கரஸம்யுதாம்॥
வாஸுதே₃வ ஜக₃ந்நாத₂ ஸர்வபூ₄தாஶயஸ்தி₂த।
பாதகார்ணவமக்₃நம் மாம் தாரய ப்ரணதார்த்திஹ்ருத்॥
இத்யுதீ₃ர்ய ப்ரணம்யாத₂ ப்₃ராஹ்மணாய விஸர்ஜயேத்॥''

[தன் தந்தையைக்கொன்றவன் அறிவற்றவனுகிருன்; தாயைக்கொன்ற வன குருடனுகிருன். இவ்விருவர்க்கும நரகாநுபவததிற்குப் பின இப்பலன்கள்கிடைக்கின்றன, ஆகையால் இப்பாவங்களைச் செய்த வன் பினவரும் விதிப்படி பிராயஶ்சித்தம் செய்யவேணடும. முதலில் விதிப்படி முப்பது பிரஜாபத்யயாகங்களை அவன் செய்யவேண்டும். அதுமுடிந்தவுடன ஒரு பலம் நிறையுள்ள பொன படகு ஒன்றைச் செய்யவேண்டும். அதில் வெள்ளியினுல் ஒரு கும்பத்தையும், தாம்ரத்திருல் பாத்ரங்களேயும முனபோல் செய்து வைக்கவேண்டும். ஒரு நிஷ்கம் எடையுள்ள பொன்னுல் ஶ்ரீவத்ஸமென்னும் மறுவை தரித்த விஷ்ணுவின் உருவத்தைச் செய்து, அந்த அர்ச்சாமூர்த்திக்குப் பட்டு வேஷ்டி சாத்தி, விதிப்படி பூஜை செய்யவேண்டும், முற் கூறிய குமபம், பாத்ரங்கள் அர்ச்சாமூர்த்தி ஆகியவற்றுடன் கூடிய அப்படகை அந்தணனுக்குத்தரவேண்டும். தரும்போது, 'வாஸுதே₃வனே! உலகிற்குத் தலைவனே! எல்லா உயிர்களின் நெஞ்சிலிருப்ப வனே! சரணமடைந்தவர்களின் துன்பத்தைப் போக்குகிறவனே! பாபக் கடலில் மூழ்கியிருக்கும் என்னேக் கரையேற்று' என்று கூறி, வாஸுதேவனை வணங்கி, அப்படகை அந்தணனுக்கு தானம் செய்ய வேணடும்.] என்று தாய்தந்தையரைக்கொன்ற பாபத்தைப் போக்கக் கூடியவன் வாஸுதேவனே என்பதையும் காட்டி, அவனுக்குப் பரம்பொருளுக்குரிய எல்லாப்பெருமைகளையும் பேசியிருப்பது பார்க் கத்தக்கது. உருத்திரன் தந்தையான பிரமனின் தலையைக்கிள்ளிப் பீடிக்கப்பட்டபோதும் அப்பாபத்தைத தீர்த்தவன் வாஸுதேவனே என்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

http://acharya.org

இந்த ஶாதாதபஸ்ம்ருதியின் ஐந்தாமத்தியாயத்தில் அக₃ம்யாக₃மநங்களுக்கு (புணரத்தகாதஸ்த்ரீகளுடன் ஏற்பட்ட புணர்ச்சிகளுக்கு) ப்ராயஶ்சித்தம் விதிக்கப்படுகிறது. ஒவ்வொருவிதமான அக₃மயாக₃மநங்களுக்கு (1) குபேரன் (2) வருணன (3) இந்திரன் (4) காமதே₄னு ஆகியவற்றின பிரதிமைகளைச் செய்து ஒவ்வொரு மந்திரத்தைச் சொல்லி அந்தணர்க்கு அளிக்கவேண்டும் என விதிககப்பட்டது.

''த₄நாநாமதி₄போ தே₃வ: ஶங்கரஸ்ய ப்ரிய: ஸகா₂ |
ஸௌம்யாஶாதி₄பதி: ஸ்ரீமாந் மம பாபம வ்யபோஹது ||''

[செல்வங்களுக்கு அதிபதியாய், சங்கரனுககு இனிய துணைவனுய், வடக்கு திககுக்குத தலைவனான குபேரன என பாபததைப் போக்கடிக்கட்டும.] எனபது குபேரனைபபற்றிய மநதிரம்.

''யாத₃ஸாமதி₄போ தே₃வோ விஶ்வேஷாமபி பாவந: |
ஸம்ஸாராப்₃தௌ₄ கர்ணதா₄ர: வருண: பாவநோऽஸ்து மே ||''

[ஜலஜந்துசாரிகளுக்குத் தலைவனுய், அனைவரையும் பரிசுத்தப் படுத்துமவனுய், ஸம்ஸாரக்கடலைக் கடப்பிக்கும் ஓடககாரனுய், தேவனுன வருணன எனனைப் பரிசுத்தப்படுத்தட்டும்] என்பது வருணனைப் பறறிய மந்திரம்.

''தே₃வாநாமதி₄போ தே₃வோ வஜ்ரீ விஷ்ணு நிகேதந: |
ஶதயஜ்ஞ: ஸஹஸ்ராக்ஷ: பாபம் மம நிக்ருந்தது ||''

[தேவர்களுககுத் தலைவனுய், வஜ்ரத்தை தரித்தவனுய், விஷ்ணுவை ஆஶ்ரயமாகக் கொண்டவனுய், நூறுயஜ்ஞங்களைச் செய்தவனுய், நூறு கணகளை உடையவனுன இந்திரன எனும தேவன என பாபத்தைப் போககடிக்கட்டும.] எனபது இந்திரனைப்பற்றிய மநதிரம.

''ஸௌரபீ₄ வைஷ்ணவீ மாதா மம பாபம் வ்யபோஹது''

[விஷ்ணு ஸம்பந்தமுடையவளாய், தாயான காமதேனு என் பாபத்தைப் போக்கடிககட்டும்.] என்பது காமதேனுவைப்பற்றிய மநதிரம். இவற்றில் தனங்களுக்கு அதிபதியான குபேரனை சங்கரனுக்கு இனிய துணைவனென்றும், குபேரன, வருணன்

http://acharya.org

முதலான எல்லா தேவர்களுக்கும் அதிபதியான இந்திரனை விஷ்ணுவை ஆஶ்ரயமாகப் பற்றியவன் என்றும் கூறியிருப்பதைக் காணலாம். இதனால், தேவர்களுள் ஏற்றத்தாழ்வுகள் உண்டு எனபதும், தேவதேவனான இந்திரனுக்கும் ஆஶ்ரயமாயிருப்பவன் விஷ்ணுவே என்பதும் புலபபடும. எல்லாவுலகுக்கும தாயா யிருந்து முலைப்பாலளிக்கும் காமதேநுவும் விஷ்ணுஸம்பந்த முடையது என விளங்குகிறது.

"தபஸ்விநீப்ரஸங்கேந ப்ரமேஹோ ஜாயதே நர:।
மாஸம் ருத்ரஜப: கார்ய: தத்யாச்சக்த்யா ச காஞ்சநம்॥"

[தவம்புரியுமவளோடு புணர்ச்சியுற்றால் ப்ரமேஹவியாதியால் பீடிக்கப்பட்டவனாகப் பிறக்கிறான் மனிதன். இதற்கு ப்ராயஶ்சித்தமாக ஒரு மாதம் ருத்ரனை ஜபித்துப் பொன்னை இயன்ற வரையில் தானம் செய்யவேண்டியது.] என்றும்,

"அஶ்வயோனௌ ச கமநாத்குதஸ்தம்ப: ப்ரஜாயதே।
ஸஹஸ்ர†கலஶை: ஸ்நாநம் மாஸம் குர்யாத் ஶிவஸ்ய ச॥"

[அஶ்வயோனியில் புணர்ச்சியுற்றால் மலச்சிக்கல் வியாதியோடு பிறக்கிறான். அதற்குப் பிராயச்சித்தமாக ஆயிரங்கலசங்களைக் கொண்டு சிவனுக்கு அபிஷேகம் செய்விக்கவேண்டும்.] என்று சில பாபங்களுக்கு ருத்ரனைக்குறித்து ஜபமும், அபிஷேகமும் விதிக்கப்பட்டது. இரண்டாமத்தியாயத்திலும் முப்பதாவது ஶ்லோகத்தில் ஹரிவம்ஶத்தைக் கேட்கவேண்டுமென விதித்தபின், ருத்ரமந்திரங்களின் ஜபம் சில பாபங்களுக்குப் பிராயச்சித்தமாக விதிக்கப்பட்டது. விஷ்ணுவை எல்லா உயிர்களின் இதயத்திலு மிருப்பவன் என்று குறிப்பிட்டதுபோல், இவ்விடங்களில் உருத்திரனுக்குப் பரம்பொருளுக்குரிய எந்தத் தன்மையும் பேசப்படாததிலிருந்து, ஸ்ரீமந்நாராயணனே சிவன் முதலான எல்லா உயிர்களுக்கும் அந்தர்யாமியான பரம்பொருள் என்பதே ஶாதாதபமஹர்ஷியின் ஸித்தாந்தம் என விளங்குகிறது.

ஶாதாதபஸ்ம்ருதி நிர்ணயம் முற்றிற்று.

† (பா) கமல.

http://acharya.org

வஸிஷ்டஸ்ம்ருதி விநிர்ணயம்

"மந்வத்ரி" என்று தொடங்கும் யாஜ்ஞவல்க்ய வாக்யத்தின் கடைசியில் காணபபடும வஸிஷடஸ்ம்ருதியை ஆராய்வோமினி. பம்பாய், கல்கததா பதிப்புகளில் இந்த ஸ்ம்ருதியில் 21-அத்தியாயங் களே காணப்படுகின்றன. பூனா பதிப்பில் 21-ம் அத்தியாயத்தில் முன பதிப்பிலுள்ள வாக்யங்களுக்கு மேலே பல வாக்கியங்களும் முபபது வரையில் அத்தியாயங்களும காணபபடுகினறன. நாலாமத்தியாயத் தில் புருஷஸூக்ததததை விவரிக்கும் சில வாகயஙகள் காணப் படுகினறனவாயினும, புருஷஸூகதத்தில கூறப்படும் தேவன் யார் எனறு காட்டும அடையாளஙகள் ஒனறுமில்லை இருபத்தெட்டாவது அத்தியாயத்தில் பதினூருவது ஶ்லோகம

> அக்₃நேரபத்யம் பரத₂மம் ஸுவர்ணம்
> பூ₄ர்வைஷ்ணவீ ஸூர்யஸுதாஶ்ச கா₃வ: |
> தாஸாமநந்தம் ப₂லமஶ்நுவீத
> ய: காஞ்சநம் கா₃ம் ச மஹீம் ச த₃த்₃யாத் ||

[பொனனுனது அக்னியின் முதல் பிள்ளையாகும். பூமியானவள் விஷ்ணு பததினியாயிருப்பவள். பசுக்கள ஸூர்யனின பிளளைகளாயிருப்பவை. ஆகையால் இமமூனறையும தானம் செய்பவன் அளவற்ற பலனை அடைவான்] எனறு காணகிறது. இதில பூமியானவள் விஷ்ணுவின் பத்தினியாயிருப்பவள் எனறு கூறும பகுதி "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" [உனக்கு ஸ்ரீபூமிதேவிகள் பத்தினிகள] என்னும புருஷ ஸூக்தத்தையும், பூ₄ ஸூக்தத்தையும் விவரிப்பதனமூலம் பூதேவி நாயகன் விஷணுவே என்று காட்டுகிறது. "பூ₄ர் வைஷ்ணவீ" [பூமி விஷணுவினுடையது] எனனும் இந்த வாக்யச்சாயையிலேயே "மண்ணையிருந்து துழாவி வாமனன் மண் இது என்னும்" [திருவாய் 4-4-1] என்று நம்மாழ்வார் அருளியதும் குறிககொள்ளத்தக்கது. ஆக, வஸிஷ்டஸ்மருதியிலிருந்தும் பூமிநாயகனை பரம்பொருள் விஷ்ணுவே என்று நிச்சயிக்கப்பட்டதாயிற்று.

ஆக, இவ்வளவால் "மந்வத்ரி" என்று தொடங்கும் யாஜ்ஞ வல்க்ய வசனத்தில் எடுக்கப்பட்ட ஸ்ம்ருதிகளில் (கலகத்தா, பம்பாய், பூனு பதிப்புகளில்) விஷணு பரதவமே நிலைநாட்டப் பட்டுள்ளது எனறு நிருபிக்கப்பட்டதாயிற்று.

வஸிஷ்டஸ்ம்ருதிவிநிர்ணயம் முற்றிற்று.

http://acharya.org

ஔஶநஸஸ்ம்ருதியில் ஶிவாக₃மாபகர்ஷமும், வைஷ்ணவாக₃மோத்கர்ஷமும்

கல்கத்தா பதிப்பில் உஶநஸ் ஸம்ஹிதை ஒன்பது அத்தியாயங்கள் கொண்டதாக உள்ளது. பூனா பம்பாய் பதிப்புகளில் கல்கத்தா பதிப்பைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டதாய், 51 ஶ்லோகங்கள் கொண்டதாய் அத்தியாயப் பிரிவற்றதாகக் காணப்படுகிறது. அதில் பின்வரும் ஶ்லோகங்கள் காளி முதலானவர்களைப் பூஜிப்பவர்கள், சிவாகமங்கள் ஆகியவற்றின் தாழ்வையும், வைஷ்ணவாகமங்களின் சிறப்பையும் காட்டுகின்றன.

ஶூத்₃ராயாம் விதி₄நா விப்ராஜ்ஜாத: பாரஶவோ மத: |
ப₄த்₃ரகாளீம் ஸமாஶ்ரித்ய ஜீவேயு: பூஜகா: ஸ்ம்ருதா: ||
ஶிவாத்₃யாக₃மவித்₃யாத்₃யை: ததா₂ மர்த₃லவ்ருத்திபி₄: |...
வஸிஷ்ட₂ஶாபாத் த்ரேதாயாம் கேசித் பாரஶவாஸ் ததா₂ ||
வைகா₂நஸேந கேசித் து கேசித்₃ ப₄ாக₃வதேந ச |
வேத₃ஶாஸ்த்ராவலம்ப₃ாஸ்தே ப₄விஷ்யந்தி கலௌ யுகே₃ ||
கடகாராஸ்தத: பஶ்சாத் நாராயணக₃ணா: ஸ்ம்ருதா: |
ஶாகா₂ வைகா₂நஸேநோக்தா: தந்த்ரமார்க₃விதி₄க்ரியா: ||
நிஷேகாத்₃யா: ஶ்மஶாநாந்தா: க்ரியா: பூஜாங்க₃ஸூசிகா: |
பஞ்சராத்ரேண வா ப்ராப்தம் ப்ரோக்தம் த₄ர்மம்
ஸமாசரேத் ||

[ஶூத்ரஸ்த்ரீயிடம் அந்தணனுக்கு அநுலோமவிதியினால் பிறந்தவன் பாரஶவன் எனப்படுகிறான். இவ்வகுப்பைச் சேர்ந்த பூசாரிகள் ப₄த்₃ரகாளியை ஆஶ்ரயித்து, சிவன் முதலான தெய்வங்களைப் பற்றிய ஆகமவித்யை முதலியவற்றைக்கொண்டும், மத்தளமடிக்கும் தொழிலைக்கொண்டும் வாழ்வார்கள்.... த்ரேதாயுகத்தில் வஸிஷ்ட சாபத்தினால சிலர் பாரஶவர்களாக ஆனார்கள். சிலர் வைகாநஸாகமங்களைக்கொண்டும், சிலர் ப₄ாக₃வதஶாஸ்த்ரமான பாஞ்சராத்ர ஶாஸ்திரங்களைக்கொண்டும் கலியுகத்தில் வேதசாஸ்திரங்களைப்பின்பற்றி நடப்பார்கள். கடகாரர்கள் என்றும், நாராயண க₃ணங்கள் என்றும் அழைக்கப்படுவார்கள். வைக₂ாநஸாகமத்தில் சொல்லப்பட்ட பிரிவுகளும், தந்த்ரமார்க்கங்களும், க₃ர்ப்ப₄ாத₄ாநம் தொடங்கி ஶ்மஶாநக்ரியைகள் வரையிலும் விதிக்கப்பட்ட கர்மங்களும் அவர்களுக்குப் பூஜைக்கு அங்கமாகவே இருப்பவை. இவற்றையாவது,

http://acharya.org

பாஞ்சராத்ரஶாஸ்திரத்தில் சொல்லப்பட்ட ஸ்வரூபப்ராப்தமான தர்மத்தையாவது அனுஷ்டிக்கக்கடவன்.] என்பவை அந்த ஶ்லோகங்கள். இவற்றில் சைவாகமம் முதலானவற்றைப் பற்றி நிற்கும் பூசாரிகள் சூத்ரஸ்த்ரீயிடம் அந்தணனுக்கு அநுலோம விதியினால் வஸிஷ்டசாபத்தினால் பிறந்தவர்கள் என்று இகழப்பட்டிருப்பதும், வைகா$_3$நஸ பாஞ்சராத்ரஶாஸ்திரங்கள் வேத சாஸ்திரங்களைப் பின்பற்றியிருப்பவை என்று புகழப்பட்டிருப்பதும் காணத்தக்கது. இதிலிருந்து சைவாகமம் சாக்ததந்த்ரம் முதலானவற்றில் சொல்லப்பட்ட சிவாதி$_3$பரத்வம் வேத$_3$விருத்$_3$த$_4$மென்றும், வைஷ்ணவாகமங்களில் சொல்லப்பட்ட ப$_4$க$_3$வத்பரத்வமே வேதத்தைப் பின்பற்றியிருப்பது என்றும் விளங்குகிறது.

ஔஶநஸஸம்ருதிவிசாரம் முற்றிற்று.

ப்$_3$ருஹஸ்பதிஸ்ம்ருதி நிர்ணயம்

பம்பாய், பூனா, கல்கத்தா ஆகிய மூன்று பதிப்புகளிலும் எண்பது ஶ்லோகங்கள் கொண்ட ப்$_3$ருஹஸ்பதிஸ்ம்ருதி காணப்படுகிறது. ஆனால் அதில் ப்ராசீனர்கள் பலர் ப்$_3$ருஹஸ்பதிஸ்ம்ருதியிலுள்ளதாக எடுத்திருக்கும் பற்பல ஶ்லோகங்கள் காணப்படவில்லை. இதிலிருந்து இப்போது காணப்படும் ப்$_3$ருஹஸ்பதிஸ்ம்ருதி நவீனமென்றும், ப்ராசீனமான ப்$_3$ருஹஸ்பதிஸ்ம்ருதி லுப்தமாகிவிட்டதென்றும் விளங்குகிறது. ப்ராசீனர்களான நிப$_3$ந்த$_4$காரர்கள் ப்$_3$ருஹஸ்பதி ஸ்ம்ருதியிலிருந்து கையாண்டிருக்கும் ஏராளமான ஶ்லோகங்களைத் தொகுத்து கெ$_3$ய்கவாட்$_3$ ஓரியண்டல் ஸீரீஸில் ப்$_3$ருஹஸ்பதி ஸ்ம்ருதியைப் புநருத்$_3$த$_4$ாரணம் செய்து (கி.பி. 1941ல்) பதிப்பித்திருக்கிறார்கள். அதில் பரம்பொருளைக் காட்டும் சில பகுதிகள் உள்ளன. அவற்றைக் காண்போமினி. 20-ம் பக்கத்தில்,

"யஜ்ஞே ஸம்பூஜ்யதே விஷ்ணுர் வ்யவஹாரே மஹீபதி:"

[யஜ்ஞத்தில் விஷ்ணுவானவர் மிகவும் பூஜிக்கப்படுகிறார். லோக வ்யவஹாரத்தில் அரசன் மிகவும் பூஜிக்கப்படுகிறான்.] என்று கூறும் ஶ்லோகம் யஜ்ஞத்தில் ஆராதிக்கப்படும் யஜ்ஞபுருஷன் விஷ்ணுவே என்று காட்டிற்று. 307, 308, பக்கங்களில்,

"ஹ்ருத்பத்$_3$மகோடராவாஸம் சின்மாத்ரஜ்யோதிஷம் ஹரிம்।
த்$_4$யாயேந் நாராயணம் ஹ்யாதெ$_3$ள தநீந் க்ருத்வா ப்ராண ஸம்யமாந்॥

தாவத்₃த்₄யாயேத் புநர் யாவந் நித்₃ராவஶமுபாக₃த: |
ஸுப்தவோத்தி₂த: புநர் த்₄யாயேத் திஷ்ட₂ந் த்₄யாயேஜ் ஜபந் புந: ||
ப்ராக்₃ராத்ரேऽபரராத்ரே ச மத்₄யராத்ரே ஸமாஹித:|
ஸந்த்₄யாஸ்வந்ஹி விஶேஷேண சிந்தயேந் நித்யமீஶ்வரம் ||
க்ருத்வா ஹ்ருதபத்₃மநிலயே விஷ்ணவாக்₃யம் விஶ்வஸம்ப₄வம் |
ஆத்மாநம் ஸர்வபூ₄தாநாம் பரஸ்தாத் தமஸ: ஸ்தி₂தம் ||
ஸர்வஸ்யாதா₄ரமவ்யக்தம் ஆநந்த₃ம் ஜ்யோதிரவ்யயம் |
புராணம் புருஷம் ஶம்பு₄ம் த்₃யாயநமுச்யேத ப₃ந்த₄நாத் ||
மத்வாப்ருத₂க் ஸ்வமாத்மாநம் ஸர்வஸ்மாதே₃வ கேவலம் |
ஆநந்த₃மக்ஷரம் ஜ்ஞாநம் த்₄யாயீத ச புந: புந: ||
தஸ்மாத்₃த்₄யாநரதோ நித்யமாத்மவித்₃யாபராயண: |
ஜ்ஞாநம் ஸமப்₄யஸேத்₃ ப்₃ரஹ்ம யேந முச்யேத ப₃ந்த₄நாத்||"

[ஹ்ருதயகமலமாகிற குஹையில் எழுந்தருளியிருப்பவனும், ஞானவொளியே வடிவெடுத்தவனும் ஹரியென்று அழைக்கப்படுபவனுமான நாராயணனை, முதலில் மூன்று ப்ராணாயாமங்களைச் செய்துவிட்டுப் பிறகு தியானிக்கக்கடவன். தூக்கம் வரும்வரையில் இப்படியே தியானிக்கவேண்டியது. தூங்கியெழுந்தபின்னும், நிற்கும்போதும் ஜபிக்கும்போதும், முன்னிரவிலும், பின்னிரவிலும், நள்ளிரவிலும், ஸந்த்₄யாகாலங்களிலும், விஶேஷமாகப்பகலிலும் ஸமாதியிலிருப்பவனாய், நித்யனான ஈஶ்வரனை நினைத்து மறுபடியும் மறுபடியும் தியானிக்கக்கடவன. விஷ்ணு என்னும் பெயரை உடையவனும், எல்லா உலகிற்கும காரணனும், எல்லாப்பொருள்களுக்கும் ஆத்மாவாயிருப்பவனும், தமஸ்ஸுக்கு மேலே எழுந்தருளியிருப்பவனும், எல்லாப் பொருள்களுக்கும் ஆதாரமாயிருப்பவனும், எவராலும் அறியவொண்ணாதவனுயிருப்பவனும், ஆனந்தமயனும், அழிவற்ற சோதியாயிருப்பவனும், பழையோனுயிருப்பவனும், புருஷனெனப்படுபவனும், அனைவர்கும் நன்மையளிப்பவனுமான பரம்பொருளை தியானிப்பவன் ஸம்ஸாரக்கட்டினின்றும் விடுபடுவான். எல்லாமாயிருக்கும் அப் பரம்பொருளினின்றும தன்னுடைய கேவலாத்மஸ்வருபமானது பிரிந்திராதது என்று அநுஸந்தித்து, ஜ்ஞாநானந்தஸ்வருபமாகவும், அழியாததாகவுமிருக்கும் அபபரம்பொருளை மறுபடியும் மறுபடியும் தியானிக்கவேண்டும். பரமாத்மோபாஸனத்தையே மேலான உபாயமாகக்கொண்டவனாய், தினந்தோறும் தியானம் செய்துகொண்டு ஞானமயமான ப்ரஹ்மத்திடம் ஈடுபடுகிறவன் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுவான்.] என்று பரமாத்மதியானத்தை விதிக்கும்

http://acharya.org

போது இருதயகமலத்திலுள்ள பரமபொருளை ஹரி, நாராயணன் என்னும் பெயர்களால் குறித்ததோடன்றியில், **விஷ்ணு என்னும் பெயரை உடையவன்** என்றே கோஷித்திருப்பது காணத்தக்கது. இவனுக்கு, ஸர்வஜகத்காரணத்வம், ஸர்வாந்தர்யாமித்வம் தமஸ்ஸுக்கு அப்பாற்பட்டிருக்கை முதலான பரமபொருட்கேயுரிய பெருமைகளையும் உரைத்திருப்பது உணரத்தக்கது. வேறெவர்க்கும் பொருந்தமாட்டாத ஹரி, நாராயணன், விஷ்ண்வாக்$_2$யன் என்னும் பதங்களையொட்டிக் கடைசியிலுள்ள ஶம்பு$_4$ஶப்தமும் அனைவர்க்கும் எல்லா நன்மையையும் அளிக்கும் இவனையே குறிக்கிறது என்று கொள்ளவேணும் என்பது நடுநிலையாளர்க்கு நன்கு விளங்கும். "விஶ்வஶம்பு$_4$வம் நாராயணம்" என்று நாராயணஸூக்தத்திலும் நாராயணனே அனைவர்க்கும் நன்மையளிப்பவன் என்று கோஷிக்கப்பட்டானன்றோ. "ஸ்வயம்பூ$_4$: ஶம்பு$_4$ராதி$_3$த்ய:" என்று ஸ்ரீவிஷ்ணுஸஹஸ்ரநாமத்திலும் ஶம்பு$_4$ஶப்$_3$த$_3$ம் விஷ்ணு நாமங்களில் ஒன்றாகப் படிக்கப்பட்டது. பாட்டனை பரமபுருஷனின் நாமங்களில் சிலவற்றையே பிரமன் தன் பிள்ளையான சிவனுக்குப் பாபம் போவதற்காக வைத்தான் என்பது சதபத$_2$ப்$_3$ராஹ்மணத்தில் ப்ரஸித்தமன்றோ. இப்படிக் கொள்ளாவிடில், பரம்பொருளைக் குறித்து ஆகாஶம் முதலான சப்தங்களை சாஸ்திரங்களில் பிரயோகித்திருப்பதைக்கொண்டு ஆகாசம் முதலானவையும் பரம்பொருள் என்று கொள்ளவேண்டிவரும் இவ்வநர்த்தம் வாராமலிருப்பதற்காகவே,

"லோஹிதார்க்கமுபாஸீத ஸந்த்$_4$யாமாதாரகோத$_3$யாத்"

[ஸந்தியாகாலத்தில் நட்சத்திரங்கள் உதிக்கும் வரையில் சிவந்த ஸூர்யனை உபாஸிக்கவேண்டும்.] என்று முன் எடுத்த ஶ்லோகங்களுக்கு முன் ஸூர்யனை உபாஸிக்கச் சொல்லியிருப்பதும்,

"ப்$_3$ரஹ்மாணம் கேஶவம் ஶம்பு$_4$ம் த்$_4$யாயந் முச்யேத ப$_3$ந்த$_4$நாத்|
ரக்தம் பிதாமஹம் த்$_4$யாயேத்$_3$ விஷ்ணும் நீலோத்பலம் ப்ரபு$_4$ம்||
ஶ்வேதமக்ஷயம் ஹரம் சைவ ஸம்ஸாரார்ணவதாரணம்||"

[பிரமவிஷ்ணுருத்திரர்களை தியானிப்பவன் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுவான். சிவப்பு நிறமுள்ள பிரமனையும், நீலோத்பல நிறமுள்ளவனும், அனைவர்க்கும் தலைவனுமான விஷ்ணுவையும், வெளுப்பு நிறமுள்ளவனும், முக்கண்ணனும், ஸம்ஸாரக்கடலைத் தாண்டுவிப்பவனுமான அரனையும் தியானிப்பவன் ஸம்ஸாரபந்தத்தினின்றும் விடுபடுவான்.] என்று அந்த ஶ்லோகங்களுக்குப் பின் பிரமருத்திரர்களை உபாஸிக்கச் சொல்லியிருப்பதும், ஸூர்யனுக்கும், பிரமருத்திரர்களுக்கும் அந்தர்யாமியான நாராயணனை உபாஸிக்கச் சொல்லியிருப்பதாகக் கொள்ளவேண்டும்,

"ஸ்ருஷ்டிஸ்தி₂த்யந்தகரிணீம் ப்₃ரஹ்மவிஷ்ணுஶிவாத்மிகாம் ।
ஸ ஸம்ஜ்ஞாம் யாதி ப₄க₃வாந் ஏக ஏவ ஜநார்த்த₃ந: ॥"
[வி. பு. 1-2-66]

[ஸ்ருஷ்டிஸ்திதி ஸம்ஹாரங்களைச் செய்வதற்காக பிரமன், விஷ்ணு, சிவன் என்னும் சரீரங்களையும் பெயர்களையும் ஜநார்த்தனனை ப₄க₃வான் ஒருவனே அடைகிறான்.] என்று ஸ்ரீவிஷ்ணுபுராணத்திலும் பிரமவிஷ்ணுருத்ரர்களாகிற சரீரங்களையும், பெயர்களையும் அடைபவன் ஜநார்த்தனன் ஒருவனே என்று கூறப்பட்டதன்றோ. பிரமருத்ரர்களுடைய சரீரம் ரஜஸ்தமோமயமானது என்றும், பிரமருத்திரர்களான ஜீவர்களை இடையிட்டுப் பரமபுருஷனாலே அதி₄ஷ்டிக்கப்படுவது என்றும விஷ்ணு சரீரம் பரமஸத்வமயமானது எனறும், நாராயணன் தன்னாலே நேரே அதி₄ஷ்டிக்கப்படுவது என்றும் பல்லாயிரக்கணக்கான சாஸ்திரவசனங்களிலிருந்து அறிகிறோமாகை யாலே இதுகொண்டு த்ரிமூர்த்திகளுக்கு ஸாம்யமோ ஐக்யமோ சொல்ல வழியில்லை. அப்படிச் சொல்லப்பார்த்தால், முன் எடுத்த ஸூர்யனுக்கும அவர்களோடு ஸாம்யமோ ஐக்யமோ சொல்ல வேண்டிவரும். "ஸர்வம க₂ல்வித₃ம் ப்₃ரஹ்ம இத்யுபாஸீத" முதலான வேதவாக்யங்களில் எல்லாச்சேதநாசேதனப்பொருளகளையும ப்ரஹ்மமாக உபாஸிக்கச்சொல்லியிருப்பதிலிருந்து.எல்லாப்பொருள்களுக்கும் ப்ரஹ்மத்தோடு ஸாம்யமோ ஐக்யமோ சொல்லவேண்டி வரும். நிற்க; ப்ரஹ்மவிஷ்ணுருத்₃ரர்களை இங்கு எடுக்கும்போது,

"க இதி ப்₃ரஹ்மணோ நாம ஈஶோঽஹம் ஸர்வதே₃ஹிநாம் ।
ஆவாம் தவாங்கே₃ ஸம்பூ₄தௌ தஸ்மாத் கேஶவநாமவாந் ॥"

['க' என்பது பிரமனின் நாமம், தேஹத்தில் அபிமானமுள்ள அனைவர்க்கும் நான் 'ஈசன்'. நாங்களிருவரும் உன் அங்கத்தினின்றும் பிறந்தவர்கள். ஆக, 'க' எனப்படும் பிரமனுக்கும, 'ஈஶ'னை எனக்கும் காரணனாகையாலே நீ கேசவனென்னும் பெயரையுடையவனாகிறாய்.] என்று ஹரிவம்ஶத்தில் விவரிக்கப்பட்ட பொருளையுடைய கேசவநாமத்தாலே விஷ்ணுவை எடுத்திருப்பதும் இதையே வலியுறுத்துகிறது. 'ஸம்ஸாரார்ணவதாரணம்' என்னும் விஶேஷணம் அரனுக்கு அந்தர்யாமியான அரியிடமே பொருந்துமாகையாலே குறையில்லை; "உபாயோஸ்மி ஹரே: ஸ்ம்ருதௌ" என்று ஹரிவம்ஶத்தில் சொன்ன ரீதியில பரமாத்மஜ்ஞானத்தை விளைப்பதனமூலம் மோக்ஷத்திற்குச் சிவன் பரம்பரயா காரணனாகை யாலே, 'ஸம்ஸாரார்ணவதாரணம்' என்று ஹரனுக்கு விஶேஷணமிட்டதாகவும் கொள்ளலாம். ஆகையால், இவ்விடத்தில் ப₄க₃வத்பரத்வத்திற்கு எவ்விதமான முரண்பாடுமில்லை. நிற்க.

http://acharya.org

''ஹ்ருத்ஸ்தி₂தம் ஸர்வபூ₄தாநாம் ரவிமண்₂டலஸம்ஸ்தி₂தம் ।
நீலஜீமூத ஸங்காஶம் வாஸுதே₃வம் சதுர்ப்பு₄ஜம் ॥
ஶங்க₂சக்ர க₃தா₃பத்₃மத₄ாரிணம வநமாலிநம் ।
தத்பாதோ₃த₃கஜாம் க₃ங்கா₃ம் நிபதந்தீம் ஸ்வமூர்த்த₄நி ॥
சிந்தயேத்₃ ப்₃ரஹ்மரந்த்₄ரேண ப்ரவிஶந்தீம் ஸ்வகாம் தநும்।....
மாநஸம் ப்ரவரம் ப்ரோக்தம் ஸேவிதம் ப₃ரஹ்மவாதி₃பி₄: ।
மந:ஶுத்₃தி₄கரம் பும்ஸாம் நித்யம தத் ஸ்நாநமாசரேத் ॥''

[எல்லா உயிர்களின் இருதயத்திலுமிருப்பவனும், ஸூர்யமண்டலத்தில் எழுந்தருளியிருப்பவனும், நீலமேகம் போன்றவனும், நான்கு திருக்கைகளை உடையவனும், (அவற்றில) சங்கம், சக்கரம, கதை, தாமரை ஆகியவற்றை தரிப்பவனும், வனமாலையை அணிந்தவனுமான வாஸுதேவனையும, அவனுடைய திருவடியிலிருந்து பெருகும நீர்ப்பெருக்கினின்றும உண்டாவதாய், தன் தலையில விழுவதாய், ப்ரஹ்மரந்த்ரத்தின் வழியாகத் தன உடம்பினுள் நுழைவதான கங்கையையும் சிந்திக்கக்கடவன். இதுவே மிகச் சிறந்த மானஸ ஸ்நானமாகக் கூறப்படுகிறது. ப்ரஹ்மஜ்ஞானிகளால் இந்த ஸ்நானம் (எப்போதும்) செய்யப்படுகிறது. மனிதர்களின மனததை இது பரிசுத்தப்படுத்துவது; தினந்தோறும் இந்த ஸ்நானத்தை அனுஷ்டிக்கக்கடவன.] என்று இந்த ப்ருஹஸபதிஸ்ம்ருதிப் பதிப்பின 310, 311 பக்கங்களில் மானஸ ஸ்நானத்தைச் சொலலும்போது ஸ்ரீமந்நாராயணனை வர்ணித்து, அவனுடைய திருவடிகளினின்றும் பெருகும் கங்கையானது தன தலையில் விழுந்து ப்ரஹ்மரந்த்ரத்தின வழியாகத் தன் உடலில நுழைவதாக தியானிப்பதே மானஸ ஸ்நானம் என்று உத்கோஷிக்கப்பட்டது. திரிவிக்கிரமாவதாரகாலத்தில பிரமன எம்பெருமான திருவடியை விளக்க, அந்நீரே கங்கையாகப் பெருகிற்று என்றும், சிவன் தன் பாபம் போவதற்காகத் தன் தலையில் அதைத் தாங்கினன் என்றும புராணங்களில் பேசப்படும் விருத்தாந்தம் இங்கு உணர்த்தப்படுகிறது.

''ஏக: ப்ராஸீஸரத பாத₃ம் ஏக: ப்ராசிக்ஷளந் முதா₃ ।
அபரோப்யத₄ரந் மூர்த்₄நா கோऽதி₄கஸ் தேஷு க₃ம்யதாம் ॥''

[ஒருவன் திருவடியை நீட்டினன்; ஒருவன் அதை உகப்புடன கழுவினன்; மற்றொருவன் அதைத் தலையாலே தரித்தான். இவர்

களில் எவன் பெரியவன் என்பதை நீங்களே ஆராய்ந்து கொள்ளுங்கள்.] என்ற பூர்வாசார்ய ஸ்ரீஸூக்தியின்படி இந்த விருத்தாந்தத்திலிருந்து பகவத்பரத்வம் தெளிவுபடுத்தப்படுகிறது.

ஆக, இந்த ஸ்ம்ருதியிலிருந்தும் ஸ்ரீமந்நாராயணனே பிரமன், உருத்திரன் முதலான அனைவரையும் அனைத்துலகையும் படைத்தவன் என்று விளங்குகிறது.

ப்ருஹஸ்பதிஸ்ம்ருதி நிர்ணயம் முற்றிற்று.

ஶௌநகஸ்ம்ருதி நிர்ணயம்

இதுவரையில், "மந்வத்ரி" என்று தொடங்கி யாஜ்ஞவல்க்ய ஸ்ம்ருதியில் படிக்கப்பட்ட ஸ்ம்ருதிகளின் எல்லாப்பதிப்புகளிலும் பரம்பொருளைப்பற்றிப் பேசப்பட்டிருக்கும் இடங்களை ஒன்று விடாமல் ஆராய்ந்து, அவற்றிலிருந்து ஸ்ரீமந்நாரயணனின் பரத்வமே தேறுகின்றது என நிரூபித்தோம். இவை தவிர மற்றும் பல ஸ்ம்ருதிகளும், உபஸ்ம்ருதிகளும் த₄ர்மஶாஸ்த்ரகாரர்களாலும், நிப₃ந்த₄காரர்களாலும கையாளப்படுகின்றன. அவற்றில் பெரும் பாலானவை இப்போது கிடைப்பதில்லை. கிடைக்கும் சிலவற்றிலும் பரம்பொருளை நிஷ்கர்ஷிக்கவல்ல பகுதிகளில்லை. நிற்க.

வீரமித்ரோதயம் என்னும் நிப₃ந்த₄க்ரந்த₂த்தில் எடுக்கப்பட்ட ப்ரயோகபாரிஜாதம் எனனும் நூல,

"நாரத₃: புலஹோ கா₃ர்க்₃ய: புலஸ்த்ய: ஶௌநக: க்ரது।
போ₃தா₄யநோ ஜாதுகர்ண: விஶ்வாமித்ர: பிதாமஹ:॥
ஜாபா₃லிர் நாசிகேதஶ்ச ஸ்கந்தோ₃ லோகா₃க்ஷிகௌ₃தமௌ।
வ்யாஸ: ஸநத்குமாரஶ்ச ஶந்தநுர் ஜநகஸ் ததா₂॥
வ்யாக்₄ர: காத்யாயநஶ்சைவ ஜாதுகர்ண்ய: கபிஞ்ஜல:।
பௌ₃தா₄யநஶ்ச காணாதோ₃ விஶ்வாமித்ரஸ் ததை₂வ ச॥
பைடீ₂நஸிர் கோ₃பி₄லஶ்சேத்யுபஸ்ம்ருதிவிதா₄யகா:॥"

[1. நாரதர் 2. புலஹர் 3. கார்க்யர் 4. புலஸ்த்யர் 5. ஶௌநகர் 6. க்ரது 7. போதாயனர் 8. ஜாதுகர்ணர் 9. விஶ்வாமித்ரர் 10. பிதாமஹர் 11. ஜாபா₃லி 12. நாசிகேதர் 13. ஸ்கந்தர் 14. லோகா₃க்ஷி 15. கௌ₃தமர் 16. வ்யாஸர் 17. ஸநத்குமாரர் 18. ஶந்தனு 19. ஜநகர் 20. வ்யாக்ரர் 21. காத்யாயனர் 22. ஜாதுகர்ண்யர்

http://acharya.org

23. கபிஞ்ஜலர் 24. பௌதாயனர் 25. காணுதர் 26. விஶ்வாமித்ரர் 27. பைடீ2நஸி 28. கோ3பி4லர் என்னும் இருபத்தெட்டு பேரும் உபஸ்ம்ருதிகளைச் செய்தவர்கள்.] என்று உபஸ்ம்ருதிகளைச் செய்தவர்களில் இருபத்தெட்டுபேரை எடுக்கிறது. [விஶ்வாமித்ரர் இருவர் இருந்திருப்பதாகத் தெரிகிறது.] இவர்கள் செய்த ஸ்ம்ருதிகளில் பல இப்போது காணப்படவில்லை. போதாயனர் முதலான சிலர் செய்த தர்மஸூத்ரங்களும், க்ருஹ்ய ஸூத்ரங்களும் காணப்பட்டாலும், அவற்றில் பரயபொருளைப்பற்றிய நிஷ்கர்ஷமில்லை. அதிருஷ்ட வசமாக உபஸ்ம்ருதிகர்த்தாக்களில் ஐந்தாமவராகப் படிக்கப்பட்ட ஶௌநகருடைய ஸ்ம்ருதி திருவனந்தபுரம் அரசாங்கத்தாரால் (Trivandrum Sanskrit Series No cxx) கி. பி. 1935ல் C. K. சாம்ப சிவ சாஸ்திரி என்பவரைப் பதிப்பாசிரியராகக்கொண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது. முந்நூறு வருடங்களுக்கு முற்பட்ட மூன்று சுவடிகளைத் துணையாகக்கொண்டு தாம் இந்நூலைப் பதிப்பித்திருப்பதாக அவர் அப்பதிப்பின் முகவுரையில் கூறியிருக்கிறார். நிற்க;

சௌநகர் என்பவர் புராணங்களில் மஹர்ஷிகளில் ஒருவராகப் படிக்கப்படுகிறார். 'விஷ்ணுத4ர்மம்' என்னும் அவருடைய நூலைப் பூர்வாசார்யர்கள் பலர் கையாண்டிருக்கிறார்கள். தொண்டரடிப் பொடியாழ்வாரின் திருமாலை என்னும் திவ்யப்ரபந்தம் ஸ்ரீ விஷ்ணு தர்மத்தை அடிப்படையாகக் கொண்டது என்று பெரியவாச்சான் பிள்ளை நிர்வஹிக்கிறார். ஶௌநகர் ருக்3விதா4னமொன்று இயற்றியுள்ளதாக ப்ராசீனர் பலர் கூறுகின்றனர். ருக்வேத3க்3ருஹ்ய ஸூத்ரகாரரான ஆஶ்வலாயனர் தம் க்ருஹ்யஸூத்ரத்தின் முடிவில் ''நம: ஶௌநகாய நம: ஶௌநகாய'' என்று ஶௌனகருக்கு வணக்கம் செலுத்துகிறார். இப்போது அச்சிட்டிருக்கும் ஶௌநகஸ்ம்ருதியிலும் இரண்டாவது பாதத்தின் இருபத்தோராவது கண்டத்தின் தொடக்கத்தில், ''ஶ்ருணு பு3த்3த்4யா ஸமாயுக்த! ஆஶ்வலாயந! ஸுவ்ரத!'' [நல்விரதமுடைய அறிவாளியான ஆஶ்வலாயனனே! கேட்பாயாக.] என்று ஶௌநகர் ஆஶ்வலாயனரைத் தம் சிஷ்யராகவே விளிக்கிறார். இவற்றிலிருந்து ருக்வேதக்ருஹ்ய ஸூத்ரகர்த்தாவான ஆஶ்வலாயனரின் ஆசார்யரே இந்த ஸ்ம்ருதிகர்த்தாவான ஶௌநகர் என விளங்குகிறது. இந்த ஸ்ம்ருதி ப்ராசீனர்கள் எடுத்த ருக்3விதா4னமே என்றும் தெரிகிறது. ஆஶ்வலாயனரின் காலம் கி. மு. ஆறாவது நூற்றாண்டிற்கும் முற்பட்டதாக ஆராய்ச்சியாளர்களால் நிச்சயிக்கப்படுவதால், ஶௌனகரின் காலமும் அதற்கு முற்பட்டதென்பது தெளிவு. இனி, இவர் தம்முடைய ஸ்ம்ருதியில் பரதத்வ

http://acharya.org

நிஷ்கர்ஷம் செய்திருக்கிறபடியைப் பார்ப்போம். இதில் முதல் பாதத்தில் இருபத்தெட்டு கண்டங்களும், இரண்டாம் பாதத்தில் இருபத்தொரு கண்டங்களும் உள்ளன. அவற்றில் முதல் பாதத்தில் இரண்டாவது கண்டத்தில் ப்ரதிஸரபந்தம் (விவாஹம் முதலானவற்றில் ரக்ஷாபந்தனம்) என்னும் கிரியையை விவரித்துவிட்டு கடைசி ச்லோகத்தில்.

ஹரிமேவ ஸ்மரேந்நித்யம் கர்மபூர்வாபரேஷு ச |
வித்வாந் ஸர்வப்ரயத்நேந குர்யாத் ப்ரதிஸரம் ஶுபம் ||

[கர்மங்களின் முன்னும் பின்னும் எப்போதும் ஹரியையே நினைக்கக்கடவன். அறிவாளியாயிருப்பவன் மங்களமான ப்ரதிஸர பந்தத்தை மிகமுயன்று செய்யக்கடவன்.] என்று கர்மத்தின் முன்னும் பின்னும் ஹரியையே நினைக்கவேண்டும் என்று விதிப்பதன் மூலம் கர்மங்களால் ஆராதிக்கப்படுபவன் ஹரியே என்று நிலை நாட்டினார். க்ராமப்ரதிஷ்டாவிதியை விவரிக்கும் ஆறுவது கண்டத்தில், அந்தந்த தேவதைகளுக்கு ஸ்தானத்தை விதிக்கும்போது,

மாநவந்தி க்ருஹாதீநி விப்ராதீநாம் ப்ரகல்பயேத் |
க்ராமாதீநாம் மத்ய ஏவ க்ருஹம் விஷ்ணோர் விஶேஷத: ||
தஸ்மிந்நேவ ஸபாகூடம் ப்ரபாதீநி ப்ரகல்பயேத் |
ஸ்ரீபூஸரஸ்வதீநாம் ச க்ருஹம் கணபதேரபி ||
ப்ராச்யாமிந்த்ரக்ருஹம் கார்யம் தக்ஷிணஸ்யாம் யமாலயம் |
ப்ரதீச்யாம் வாருணம் வேஶ்ம உதீச்யாம் ஸௌம்யமாலயம் ||
ப்ராக்தக்ஷிணஸ்யாம் ஆக்நேயம் நிர்ருதேர் தக்ஷிணபஶ்சிமே
வாயோ: ப்ரத்யகுதக்தேஶே ப்ராகுதீச்யாம் ஶிவாலயம் ||
ஸர்வாஸாம் தேவபத்நீநாம் தைஸ்ஸஹைவாலயம் பவேத் |
ஆர்யமாத்ருபிஶாசாநாம் பஹிர்க்ராமாத் ப்ரகல்பயேத் ||
பரித: பாலநார்த்தாய ப்ராகாரம் காரயேத் ந்ருப: |
த்வாரதேஶே து துர்க்காயா: ஆலயம் ஸம்ப்ரகல்பயேத் ||

[அந்தணர் முதலானோர்க்கு வீடுகள் முதலானவற்றை விசாலமானதாகச் சமைக்கவேண்டும். கிராமம் முதலானவற்றின் மத்தியில் விஷ்ணுவுக்குச் சிறப்புடன் கோயில் கட்டவேண்டும். அக்கோயிலிலே அனைவரும் கூடுமிடமான ஸபாகூடத்தையும், தண்ணீர்ப்பந்தல் முதலானவற்றையும் அமைக்கவேண்டும். (விஷ்ணுவின் பத்தினி

http://acharya.org

களான) ஸ்ரீதேவி, பூதேவி, ஸரஸ்வதீதேவி, விஷ்ணுகணங்களுக்குப் பதியான விஷ்வக்ஸேனர் ஆகியவர்களின் ஆலயத்தையும, அக்கோயிலிலேயே அமைக்கவேண்டும். இந்திரன் கோயிலைக் கிழக்கு திக்கிலும், யமனின் கோயிலைத தெற்கு திக்கிலும், மேற்கில் வருணன் கோயிலையும், வடக்கில் புதனின் கோயிலையும், தென் கிழககில் அக்னிக்கும், தென்மேற்கில் நிர்ருதிக்கும், வடமேற்கில் வாயுவுக்கும வடகிழக்கில் சிவனுக்கும் ஆலயங்களையும் அமைக்க வேண்டியது. அந்தந்த தேவர்களின் பத்னிகளுக்கு அந்தந்த தேவர்களிருக்குமிடத்திலேயே ஆலயம் எழுப்பவேண்டியது. ஆாயை, மாத்ருகணங்கள், பிசாசங்கள ஆகியவற்றுக்கு கிராமத்துக்கு வெளியில் ஆலயம் அமைக்கவேண்டியது. இக் கோவிலகளை ரக்ஷிக்குமபொருட்டு மதில்களை அரசன எழுப்ப வேண்டும். கிராமததின வாயிற்புறத்தில் துர்க்கைக்கு ஆலயம் அமைக்கவேண்டும] என்று கிராமத்தின் மத்தியில் விஷ்ணுவுக்குச் சிறப்புடன் கோயில் கட்டவேண்டும் என்றும, சிவன் முதலான மற்ற தெய்வங்களுக்கு ஒவ்வொரு மூலையிலும், காளிக்கு வாயிற் புறத்திலும், மற்ற துர்தேவதைகளுக்கு கிராமத்தின வெளியிலும் கோயிலகள் அமைக்கவேண்டும என்றும் கூறியிருபபதிலிருந்து சிவன முதலான எல்லா தேவதைகளுக்கும் தலைவன விஷ்ணுவே என விளஙகுகிறது. இஅறளவும் அகரஹாரங்களின் மத்தியில் ஹரிககும, வடகிழக்கு மூலையில் சிவனுக்கும, காளி முதலான துர்தெய்வஙகளுக்கு கிராமத்திற்கு வெளியிலும் கோயில் கள் அமைந்திருப்பது இவ்வனுஷடானத்தை வலியுறுத்துகிறது. இதனுல், சிவனைப் பரதெய்வமாகக் கூறும சைவமதமும். துர்க்கையைப் பரதெய்வமாகக் கூறும ஶாக்தமதமும் ஸௌநகருக்கு அநபிமதம் எனவிளஙகுகிறது.

''அத: ப்ராத: ஸமுத்தா₂ய சிந்தயேதா₃த்மனோ ஹிதம் |
நிர்க்₃குணம் நிரஹங்காரம் நாராயணமநாமயம் ||
ஸகு₃ணம் ச ஶ்ரியா யுக்தம் தே₃வம் தே₃வீம் ஸரஸ்வதீம ||''

[காலையிலெழுந்திருந்து தனக்கு நன்மையைச் சிந்திக்கக்கடவன: ப்ராக்ருத குணங்களற்றவனும், கலயாணகுணங்களுளளவனும், அஹங்காரமற்றவனும, அழிவற்றவனும், ஸ்ரீதேவியுடன கூடியவனுமான நாராயணனையும், ஸரஸ்வதி தேவியையும் சிந்திக்கக் கடவன்.] எனறு ஆஶ்வலாயந ஸ்ம்ருதியில் [7] உள்ளதாகப் பரகாலமடஸ்வாமியின் ஹயஶிர உபாக்₂யானத்தில் (பக்கம் 245ல்)

http://acharya.org

காணப்படுவதிலிருந்து ஶௌநகஶிஷ்யரான ஆஶ்வலாயனரும் விஷ்ணுவையே பரம்பொருளாக நிஷ்கர்ஷித்தார் என்பதும், வேதம புகழ்ந்த வாக்தேவி எனப்படும ஸரஸ்வதீதேவி விஷ்ணு பத்னியாகவே அவர் காலத்தில் கருதப்பட்டு வந்தாள் எனபதும் விளங்குகிறது. பேௗ₃ர்த₄ாயனர் முதலான மற்றும பலரும் ஸரஸ்வதியை விஷ்ணுபத்னியாகவே வழங்கியிருப்பதைக்காட்டி, விஷ்ணுசித்தவிஜயம முதலத்தியாயத்தில் (இரண்டாம்பதிப்பு பக்கம் 1022-1025) விஷ்ணுவின அவதாரமாய், வித்யைக்கு அதிதேவதை யான ஹயக்ரீவரின் பத்னியான வாக்தேவியே ஶ்ருதிஸ்ம்ருதிகளில் பெரும்பாலும் ஸரஸ்வதியென வழங்கப்படுகிறாள் என்பதை நிலை நாட்டினோம். ஆகையால், இங்கும் ஸ்ரீபூ₄மிதேவிகளோடு சேர்த்துப் படிக்கப்படும ஸரஸ்வதி விஷ்ணுபத்னியே என விளங்குகிறது. அந்தந்த தேவர்களின பத்னிகளுக்கு அந்தந்த தேவர்களோடு கூடவே ஆலயம எழுப்பவேண்டும் என்று இவரு விதித்திருப்பதி லிருந்தும் இது வலியுறுத்தப்படுகிறது. விஷ்ணுதேவிகளோடு சேர்த்துப்படிக்கப்பட்டிருபபதிலிருந்தே இங்கு படிக்கப்படும் க₃ணபதி விஷ்ணுகணபதியான விஷ்வக்ஸேநரேயொழிய, சிவ கணபதியல்ல என்பதும் விளங்குகிறது. சிவகணபதி ப்ராசீன மான எந்த நூலிலும் காணப்படவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் அறுதியிட்டுச் சொல்லுவதும அறியத்தக்கது. நிற்க. புத்ர ஸ்வீகாரததை விதிக்கும் எட்டாவது கண்டத்தில், புத்ரஸ்வீகாரத் திற்கு வேண்டியவற்றை விவரிக்கும்போது,

வாஸஸீ குண்ட₃லே ச₂த்ரமுஷ்ணீஷம் சாங்கு₃லீயகௌ ।
ஆசார்யம் த₄ர்மஸம்யுக்தம் வைஷ்ணவம் வேத₃பாரக₃ம் ॥
ப₃ர்ஹி: கு₂மயம் சேத்₄மம் பாலாஶம் சாஜ்யமேவ ச ।

[இருவஸ்திரங்கள், இரு குண்டலங்கள், குடை, தலைப்பாகை, இரு மோதிரங்கள், வேதத்தைக் கரைகண்டவனும், வைஷ்ணவனும், தர்மத்தோடு கூடியவனுன ஆசார்யன் (புரோஹிதன்), குசதர்ப்பம், பலாஶஸமித்து, நெய் ஆகியவற்றை (எடுத்துச் செல்லவேண்டும்)] என்று ஸ்வீகாரம் செய்துவைக்கவேண்டிய புரோஹிதன் தர்ம மறிந்தவனும் வேதத்தைக் கரைகண்ட வைஷ்ணவனுமிருக்கவேண்டும் என விதித்தார். இதிலிருந்து வைஷ்ணவனே வைதிககார்யங்களில் புரோஹிதனுமிருக்கத்தக்கவன் என்னும் ஶௌநகஸித்தாந்தம் விளங்கிநிற்கிறது. பத்தாவது கண்டத்தில் ஶதாபி₄ஷேகவிதியை விவரிக்கும்போது,

http://acharya.org

கலஶாந் தந்துஸம்யுக்தாந் ப்3ரஹ்மஸ்தா2நாதி3தே3ஶத: |
ஸ்தா2ப்ய க3ந்தா4தி3பி4: பூஜ்ய த்4யாத்வா விஷ்ணும்
ஸமாஹித: ||

ஸ்விஷ்டக்ருதா3 … ச ஹுத்வா ஹோமம் ஸமாப்ய ச |
ஹரிம் ப்ரணம்ய கலஶை: தே3வஸ்யத்வாபி4ஷேசயேத் ||....
ஆக்ருஷ்ணேநேத்ய்ருசாऽऽதி3த்யம் விஷ்ணும் த்3ருஷ்ட்வா
க்ருதாஞ்ஜலி .... ||

ஹிரண்யரூப: ஸஹீதி வைஷ்ணவாயாஹிதாக்3நயே ||....
பங்க்திம் புநாதி புதராத்3யை: ஷஷ்டிம் வர்ஷஸஹஸ்ரகம் |
ஸ்வர்க்க3லோகமதிக்ரம்ய விஷ்ணுலோகே மஹீயதே ||

[ப்ரஹ்மஸ்தா3னம் முதலான இடங்களில நூலோடுகூடியவையான கலசங்களை, சாந்தியுடன விஷ்ணுவை தியானித்து கந்தம் முதலான வற்ருல் பூஜித்து ஸ்தாபித்து ... ஸ்விஷ்டக்ருத் முதலானவறறின சேஷத்தை ஹோமம் செய்து முடித்து, ஹரியை வணங்கி, கலசங் களிலை அபிஷேகம் செய்யவேண்டியது.... "ஆகருஷணே ந" என னும் ருக்கிஞல் அதிதியின் பிளளையான விஷ்ணுவை அஞ்ஜலியுடன ஸேவிதது...''ஹிரண்யருப: ஸஹி''என னும மந்திரத்தால, ஆஹிதாக்னி பான வைஷ்ணவனுக்குக கொடுதது...(ஶதாபிஷேகத்தை அநுஷடிபப வன) இருபதடுதாரு தலைமுறைகளைப் பரிசுததப்படுத்துகிருன். அறுபதிஞயிரம வருடங்கள் ஸ்வர்க்கலோகததிலிருந்து, அதைத் தாணடிச்சென்று விஷ்ணுலோகத்தில் சிறப்படைகிருன.] என று ஶதாபி4ஷேககர்மத்தில் தியானிககத்தக்கவன் விஷணுவேயென்றும், தானங்கொடுக்கத்தக்கவன வைஷணவனேயென றும, ஶதாபி3ஷேகம் செய்துகொண்டவனுக்குப் பரமப2லம் விஷ்ணுலோகப்ராப்தியென றும் கூறியிருப்பதிலிருந்தும் விஷ்ணுவே ஸர்வகர்மபோ1க்தாவும் ப்ரபு4வுமான பரமபொருள் என விளஙகுகிறது. அபமருத்யுஜயத்தை விவரிக்கும பதினேராவது கண்டத்தில்,

ஹுத்வாஷ்டோத்தரஸாஹஸ்ரமஷ்டோத்தரஶதம் து வா |
வ்யாஹ்ருத்யா ஸப்ரணவயா விஷ்ணும் த்4யாயந்
ஸமாஹித: ||....
அக்3நே: பூர்வம் ப்ரதிஷ்டா2ப்ய தா3ர்வாஸ்தம்பே4
ஹரிம் ஸ்மரந் |
தஸ்மிந் ஸ்தம்பே4 ஹரிம் பூஜ்ய புருஷஸூக்தேந ப4க்தித: ||

http://acharya.org

காணப்படுவதிலிருந்து ஶௌநகஶிஷ்யரான ஆஶ்வலாயனரும் விஷ்ணுவையே பரம்பொருளாக நிஷ்கர்ஷித்தார் எனபதும், வேதம புகழ்ந்த வாக்தேவி எனப்படும ஸரஸ்வதீதேவி விஷ்ணு பத்னியாகவே அவர் காலத்தில் கருதப்பட்டு வந்தாள் எனபதும் விளங்குகிறது. பௌதாயனர் முதலான மற்றும பலரும் ஸரஸ்வதியை விஷ்ணுபத்னியாகவே வழங்கியிருப்பதைக்காட்டி, விஷ்ணுசித்தவிஜயம் முதல ததியாயத்தில் (இரண்டாம்பதிப்பு பக்கம் 1022-1025) விஷ்ணுவின் அவதாரமாய், வித்யைக்கு அதிதேவதை யான ஹயக்ரீவரின பத்னியான வாக்தேவியே ஶ்ருதிஸ்ம்ருதிகளில் பெரும்பாலும் ஸரஸ்வதியென வழங்கபபடுகிறுள என்பதை நிலை நாட்டினேம். ஆகையால். இங்கும் ஸ்ரீபூமிதேவிகளோடு சேர்ததுப் படிக்கப்படும ஸரஸ்வதி விஷ்ணுபத்னியே என விளங்குகிறது. அந்தந்த தேவர்களின பத்னிகளுக்கு அந்தந்த தேவர்களோடு கூடவே ஆலயம் எழுப்பவேண்டும் என்று இவரு விதித்திருபபதி லிருந்தும் இது வலியுறுத்தப்படுகிறது. விஷ்ணுதேவிகளோடு சேர்த்துப்படிக்கப்பட்டிருபபதிலிருந்தே இங்கு படிக்கப்படும் கணபதி விஷ்ணுகணபதியான விஷவக்ஸேநரேயொழிய, சிவ கணபதியல்ல எனபதும் விளங்குகிறது. சிவகணபதி ப்ராசீன மான எந்த நூலிலும் காணப்படவில்லை என்று ஆராய்ச்சியாளர்கள் அறுதியிட்டுச் சொல்லுவதும் அறியத்தக்கது. நிற்க. புதர ஸ்வீகாரத்தை விதிக்கும் எட்டாவது கண்டத்தில், புத்ரஸ்வீகாரத் திற்கு வேண்டியவற்றை விவரிக்கும்போது,

வாஸஸீ குண்டலே சூத்ரமுஷ்ணீஷம் சாங்குலீயகௌ |
ஆசார்யம் தர்மஸம்யுக்தம் வைஷ்ணவம் வேதபாரகம் ||
பர்ஹி: குஶமயம் சேத்மம் பாலாஶம் சாஜ்யமேவச |

[இருவஸ்திரங்கள், இரு குண்டலங்கள், குடை, தலைப்பாகை, இரு மோதிரங்கள், வேதத்தைக் கரைகண்டவனும், வைஷ்ணவனும், தர்மத்தோடு கூடியவனுன ஆசார்யன் (புரோஹிதன்), குசதர்ப்பம், பலாஶஸமித்து, நெய் ஆகியவற்றை (எடுத்துச் செல்லவேண்டும்)] என்று ஸ்வீகாரம் செய்துவைக்கவேண்டிய புரோஹிதன் தர்ம மறிந்தவனும் வேதத்தைக் கரைகண்ட வைஷ்ணவனுமிருக்கவேண்டும் என விதித்தார். இதிலிருந்து வைஷ்ணவனே வைதிககார்யங்களில் புரோஹிதனுயிருக்கத்தக்கவன் என்னும் ஶௌநகஸித்தாந்தம் விளங்கிநிற்கிறது. பத்தாவது கண்டத்தில் ஶதாபிஷேகவிதியை விவரிக்கும்போது,

http://acharya.org

கலஶாந் தந்துஸம்யுக்தாந் ப்₃ரஹ்மஸ்தா₂நாதி₃தே₃ஶத: ।
ஸ்தா₂ப்ய க₃ந்தா₄தி₃பி₄: பூஜ்ய த்₄யாத்வா விஷ்ணும்
ஸமாஹித: ॥

ஸ்விஷ்டக்ருதா₃தி₃ஶேஷம் ச ஹுத்வா ஹோமம் ஸமாப்ய ச।
ஹரிம் ப்ரணம்ய கலஶை: தே₃வஸ்யத்வாபி₄ஷேசயேத ॥....
ஆக்ருஷ்ணேநேத்ய்ருசாऽऽதி₃த்யம் விஷ்ணும் த்₃ருஷ்ட்வா
க்ருதாஞ்ஜலி:....: ॥

ஹிரண்யரூப: ஸஹீதி வைஷ்ணவாயாஹிதாக்₃நயே ॥...
பங்க்திம் புநாதி புத்ராத்₃யை. ஷஷ்டிம் வர்ஷஸஹஸ்ரகம் ।
ஸ்வர்க்க₃லோகமதிக்ரம்ய விஷ்ணுலோகே மஹீயதே ॥

[ப்ரஹ்மஸ்தானம் முதலான இடங்களில் நூலோடுகூடியவையான கலசங்களை, சாந்தியுடன் விஷ்ணுவை தியானித்து கந்தம் முதலானவற்றால் பூஜித்து ஸ்தாபித்து ... ஸ்விஷ்டக்ருத முதலானவற்றின் சேஷத்தை ஹோமம் செய்து முடித்து, ஹரியை வணங்கி, கலசங்களினால அபிஷேகம செய்யவேண்டியது.... "ஆக்ருஷ்ணேந" என்னும் ருக்கினால் அதிதியின் பிள்ளையான விஷ்ணுவை அஞ்ஜலியுடன ஸேவித்து..."ஹிரண்யரூப: ஸஹி" என்னும மந்திரத்தால, ஆஹிதாக்னியான வைஷ்ணவனுக்குக கொடுத்து...(ம்ருதாபிஷேகத்தை அநுஷ்டிப்பவன) இருபதொரு தலைமுறைகளைப் பரிசுத்தப்படுத்துகிறான். அறுபதினாயிரம வருடங்கள் ஸ்வர்க்கலோகத்திலிருந்து, அதைத் தாண்டிச்சென்று விஷ்ணுலோகத்தில் சிறப்படைகிறான.] என்று ம்ருதாபிஷேககர்மத்தில் தியானிக்கத்தக்கவன் விஷ்ணுவேயென்றும், தானங்கொடுக்கத்தக்கவன வைஷணவனேயென்றும, ம்ருதாபிஷேகம செய்துகொண்டவனுக்குப் பரமபலம் விஷ்ணுலோகப்ராப்தியென்றும் கூறியிருப்பதிலிருந்தும் விஷ்ணுவே ஸர்வகர்மபோக்தாவும் ப்ரபுவுமான பரம்பொருள என விளங்குகிறது. அபமருத்யுஜயத்தை விவரிக்கும பதினேராவது கண்டத்தில்,

ஹுத்வாஷ்டோத்தரஸாஹஸ்ரமஷ்டோத்தரஶதம் து வா ।
வ்யாஹ்ருத்யா ஸப்ரணவயா விஷ்ணும் த்₄யாயந்
ஸமாஹித: ॥....

அக்₃நே: பூர்வம் ப்ரதிஷ்டா₂ப்ய தூ₃ர்வாஸ்தம்பே₄
ஹரிம் ஸ்மரந் ।

தஸ்மிந் ஸ்தம்பே₄ ஹரிம் பூஜ்ய புருஷஸூக்தேந ப₄க்தித: ॥

ஆத்3யயாऽऽவாஹயேத் தே3வம் ருசா து புருஷோத்தமம் ।
த்3விதீயயாஸநம் த3த்3யாத் பாத்3யம் சைவ த்ருதீயயா ॥
அர்க்4யம் சதுர்த்2யா தா3தவ்யம் பஞ்சம்யாசமநீயகம் ।
ஷஷ்ட்2யா ஸ்நாநம் ப்ரகுர்வீத ஸப்தம்யா வஸ்த்ரமேவ ச ॥
யஜ்ஞோபவீதமஷ்டம்யா நவம்யா க3ந்த4மேவ ச ।
புஷ்பம் த3ஶம்யா தா3தவ்யம் ஏகாத3ஶ்யா து தூ4பகம் ॥
த்3வாத3ஶ்யா தீ3பகம் த3த்3யாத் த்ரயோத3ஶ்யா நிவேத்3யகம் ।
சதுர்த3ஶ்யா நமஸ்காரம் பஞ்சத3ஶ்யா ப்ரத3க்ஷிணம் ॥
ஷோட3ஶ்யோத்3வாஸநம் குர்யாத் வாஸுதே3வம்
ஜக3த்3கு3ரும் ॥

[சாந்தியுடையவனாய், விஷ்ணுவை தியானித்துக்கொண்டு, ப்ரணவத்தோடு கூடிய வ்யாஹ்ருதிகளாலே ஆயிரத்தெட்டு தடவை அல்லது நூற்றெட்டுத்தடவை ஹோமம் செய்து...அக்னியின் முன் தர்ப்பையாலான தூணில் ஹரியைப் ப்ரதிஷ்டைசெய்து தியானித்து, அதிலேயே புருஷஸூக்தத்தால் ஹரியைப் பூஜிக்கவேண்டியது. புருஷஸூக்தத்தின முதல் மந்திரத்தால புருஷோத்தமனை ஆவாஹனம் செய்வது; இரண்டாவதால ஆஸனமும், மூன்றுவதால் பாத்யமும, நாலாவதால் அர்க்யமும், ஐந்தாவதால் ஆசமநீயமும் கொடுப்பது; ஆறுவதால் ஸ்நாநம் செய்வது; ஏழாவதால் வஸ்திரம் சார்த்துவது; எட்டாவதால் பூணூலும், ஒன்பதாவதால் கந்தமும். பத்தாவதால் புஷ்பமும் சார்த்துவது; பதினோராவதால் தூ4பமும். பனிரண்டாவதால் தீபமும், பதின்மூன்றுவதால் நைவேத்3யமும் ஸமர்ப்பிப்பது; பதினாலாவதால் நமஸ்காரமும், பதினைந்தாவதால் ப்ரதக்ஷிணமும் செய்வது; பதினாறுவதால் ஜகந்நாதனை வாஸுதேவனை (தர்ப்பையினின்றும்) எழுந்தருளப் பண்ணவேண்டியது.] என்று புருஷஸூக்தத்தால் ஆராதிக்கத் தக்க பரம்பொருள் நாராயணனே என்று காட்டினார். போ3தா4யனர் முதலான மற்றும பல மஹர்ஷிகளும் புருஷஸூக்தப்ரதிபாத்3யன் நாராயணனே என்று காட்டியிருப்பது முதலத்தியாயத்தில் புருஷஸூக்த வ்யாக்யானத்தில் விளக்கப்பட்டது. இவ்வண்ணமாகப் புருஷஸூக்தத்தை எந்த மஹர்ஷியும் மற்ற தேவதைகளின் பூஜையில் விநியோகிக்கவில்லை. இதிலிருந்து புருஷஸூக்தத்தால் காட்டப்படும பரம்பொருள் நாராயணனே என்பதே ஸகலமஹர்ஷி ஸித்தாந்தம் என விளங்குகிறது.

http://acharya.org

இந்த ஶௌநகஸ்ம்ருதியின் இருபத்து மூன்றுவது கண்டத்தில் மரணமடைந்த யதிகளுக்குச் செய்யவேண்டிய ஸம்ஸ்காரம் விவரிக்கப்படுகிறது. அக்கண்டத்தின் கடைசியிலுள்ள

இத$_3$ம் விஷ்ணுரிதி த்$_3$வாப்$_4$யாம் மூர்த்$_4$நி பி$_4$க்$_3$யேத வாக்$_3$யத: |
பரோ மாத்ரேத்ய்ருசைகயா ரஜோபி$_4$: பரிபூர்ய ச ||
க$_3$ர்த்தம் புருஷஸூக்தேந ஶ்ரீஸூக்தேநாபி$_4$மந்த்ர்ய ச |
அதோ தே$_3$வா இ$_3$ஷட்$_3$பி$_4$ஶ்ச ப்ரணம்ய ஹரிமச்யுதம் ||
நாஶௌசம் நோத$_3$கம் குர்யாத ந ஶ்ராத்$_3$த$_4$ாதி$_3$ந் ஸமாசரேத்|
நாராயணப$_3$லிம் குர்யாத் விஷ்ணுலோகே மஹீயதே ||

[வார்த்தையில் நியமம் கொண்டவனாய், 'இத$_3$ம் விஷ்ணு:' என்று தொடங்கும் இரண்டு (விஷ்ணுஸூக்த) ரிக்குகளால் யதியின் தலையில் பிளக்கவேண்டியது. 'பரோ மாத்ரயா' என்னும் ஒரு (விஷ்ணுஸூக்த) ரிக்கால் குழியை மண்ணையிட்டு நிரப்பி, புருஷ ஸூக்தத்தாலும், ஸ்ரீ ஸூக்தத்தாலும் அபி$_4$மந்தரணம் செய்து, 'அதோ தே$_3$வா:' என்று தொடங்கும் ஆறு விஷ்ணுஸூக்த ரிக்கு களால் ஹரியாகிற அச்சுதனை வணங்கி நாராயண ப$_3$லியைச் செய்யவேண்டியது. ஆஶௌசம், (ஜலத்தோடு கலந்த) நீர் வார்ப்பது, ஶ்ராத்தம் முதலானவற்றை யதிகள் விஷயத்தில் அனுஷ்டிக்கக்கூடாது. இப்படிச் செய்பவன் விஷ்ணுலோகத்தில் சிறப்புறுவான்] என்னும் மந்திரங்களிலிருந்து, மோக்ஷத்திற்குரிய யதிகளை ஸம்ஸ்கரிக்கும்போது ஸ்ரீமந்நாராயணனை நேரே சொல்லும் ஸ்ரீஸூக்தம், புருஷஸூக்தம், விஷ்ணுஸூக்தம் முதலானவற்றிலுள்ள மந்திரங்களை ஓதவேண்டுமென்றும், ஹரி யாகிற அச்சுதனை வணங்கவேண்டுமென்றும், நாராயண ப$_3$லியைச் செய்யவேண்டுமென்றும், இப்படிச் செய்பவனும் விஷ்ணுலோகத் தில் சிறப்புறுவான் என்றும் கூறியிருப்பதிலிருந்து, விஷ்ணு லோகத்தில் சிறப்புறுவதே மோக்ஷம் என்றும், அதை அளிக்க வல்லவன் ஸ்ரீ புருஷ விஷ்ணுஸூக்த ப்ரதிபாத்$_3$யனாய், ஹரி, அச்யுதன், விஷ்ணு என்னும் தனிப்பெயர்களால் விளங்குபவனான ஸ்ரீமந்நாராயணனே என்பதே ஶௌநகமஹர்ஷி ஸித்தாந்தம் என்று கையிலங்கு கனியாக விளங்குகிறது. ருக்$_3$வேத$_3$மந்தி ரங்களையே எடுத்துக்காட்டி அவை விஷ்ணுவைப்பற்றியவை என்று நிர்ணயிப்பது மற்ற ஸ்ம்ருதிகளைக் காட்டிலும் இந்த ஸம்ருதிக்குள்ள

வி—16

http://acharya.org

தனிச்சிறப்பு என்பதும் உணரத்தக்கது. அடுத்ததான இருபத்து நாலாவது கண்டத்தில் ஆஹிதாக்₃னியாயிருப்பவன் வெளி தேசத்திற்குச் சென்று மரணமடைந்தால, அவனுக்குச் செய்ய வேண்டிய ஸம்ஸ்காரத்தைச் சொல்லுகிறது. அதில், "**விஷ்ணுர் யோநிம**" என்று தொடங்கும வைஷ்ணவ மந்திரங்களையும் புருஷ ஸூக்தத்தையும கொண்டு ஹோமம செய்யச் சொல்லியிருப்பதி லிருந்தும் மற்றும் பல கண்டங்களிலும் வைஷ்ணவ மந்திரங்களை விநியோகித்திருப்பதிலிருந்தும் இவ்விஷயம வலியுறுத்தப்படுகிறது. இக்கண்டத்தின் கடைசியில் "**விஷ்ணும் ஸதா₃ ஸ்மரேத்**" [விஷ்ணுவை எப்போதும் நினைக்கவேண்டியது] என்று விதித் திருப்பதிலிருநது, கர்மாராத்₄யனாய், அதனாலேயே கர்மங்களில் எப்போதும் நினைக்கத்தக்கவனாயிருப்பவன விஷ்ணுவே என விளங்குகிறது. இருபத்தைந்தாவது கண்டத்தில் அப்₄யுத₃ய ஶ்ராத்₃த₄த்தை விரிவாக விதித்துவிட்டு,

ப்ரஹ்மசர்யமத₄: ஶய்யாமபி கோ₃வர்த₄நோத்₃த₄ரம்।
க்ருஷ்ணமேவ ஸதா₃ த்₄யாயந் தத்கீர்த்தநபராயண: ||

[(இந்த ஶ்ராத்தம் முடியும் வரையில்) ப்ரஹ்மசர்யத்தோடு இருக்கவேண்டும்; தரையில் படுக்கவேண்டும. கோவர்த்தன கிரியைக் குடையாகப் பிடித்தவனை கிருஷ்ணனை எப்போதும் ஸங்கீர்த்தனம் செய்பவனாய், அவனையே தியானித்துக்கொண்டு இருக்கவேண்டும்.] எனனும் கடைசி ஶ்லோகத்தில், க்ருஷ்ண கீர்த்தனத்தையும், தியானத்தையும் அந்த ஶ்ராத்தத்திற்கு அங்க மாகச் சொலலியிருப்பதிலிருந்தும் இவ்விஷயம் வலியுறுத்தப்படு கிறது. கிருஷ்ணன் என்று பொதுவாகச் சொனனால் போதா தென்று, அவனுடைய ஸர்வரக்ஷகத்வப் பெருமையைக் காட்டும் குன்றுகுடையாவெடுத்த விருத்தாந்தத்தையிட்டு விஶேஷித்திருப்ப தும குறிக்கொள்ளத்தக்கது. இனி, முதற்பாதம இருபத்தேழாவது கண்டத்தில் நாராயணப₃லி என்னும் கர்மத்தை விரிவாக விதிக்கு மிடத்திலும், இருபத்தெட்டாவது கண்டத்தில் மஹாஶாந்தியை விதிக்குமிடத்திலும் ப₄க₃வத்பரத்வம் விஶேஷமாக விளங்கா நிறகிறது. அக்கண்டங்களைக் காண்போமினி.

ஶௌநகோஹம் ப்ரவக்ஷ்யாமி நாராயணப₃லிம் பரம்।
சண்டா₃ளாத் உத₃காத் ஸர்ப்பாத் ப்₃ராஹ்மணாத்
வைத்₃யுதாத₃பி ||....

http://acharya.org

யதீநாம் சைவ யோகி₃நாமந்யேஷாம் மோக்ஷகாங்க்ஷிணாம் ||
புண்யம் பாபக்ஷயார்த்த₂ய த்₃வாத₃ஶேऽஹநி காரயேத |
ஸம்வத்ஸராத் பரம் குர்யாத் சண்டா₃ளாத்₃யைர்ஹதஸ்ய ச||
ஸபிண்டீ₃கரணாத் பூர்வம் விஷ்ணுபூஜாம் ஸமாசரேத் |
த்₃வாத₃ஶ்யாம் ஶ்ரவணே வாபி பஞ்சம்யாம் பர்வணேऽபி ||
க்₃ருஹஸ்த₂ந் வா யதீந் வாபி வைஷ்ணவாந்

த்₃வாத₃ஶோத்தமாந் ||

ஸ்நாதாநாஹூய க₃ர்த்தேஷு பாத₃ம் ப்ரக்ஷாள்ய வாரிணா |
க₃ந்த₄புஷ்பாதி₃கம் ஸர்வம் க்ரமாத் த்₃வாத₃ஶநாமபி₄: || ... ...
ஏதைரர்ச்ய த்₃விஜாந் பஶ்சாத் ஸ்ரீபூ₄மிஸஹிதம் ஹரிம் |
ஆத₃யாவாஹ்ய புஷ்பேண விஷ்டரே ஹ்ருத₃யாத் பரபு₄ம் ||
பா₄நுமண்ட₃லதோ வாபி ப₄க்த்யா ஸர்வம் ஸமாஹித |
பாத்₃யாதி₃தீ₃பபர்யந்தம் க்ருத்வா ருக்₃பி₄ஶ்ச பௌருஷை:||
விஶேஷம் ச தத₂ா வக்ஷ்யே கேஶவாத்₃யைஶ்ச நாமபி₄: ||
அதோ தே₃வாதி₃ஷட்₃பி₄ஶ்ச பௌருஷை:

ஷோட₃ஶைஸ்தத₂ா |

த்₃வாத₃ஶாஷ்டாக்ஷராப்₃யாம் ச ஸமித₃ாஜ்யசருணாபி || ...
அந்தேந ப்₃ராஹ்மணாந் போ₄ஜ்ய விஷ்ணுபூஜாம்

ஸமாப்ய ச || ..

புருஷஸூக்தேந தே₃வேஶம் ஸ்துத்வா கர்ம ஸமாப்ய ச || ...
தஸமாத ஸாவப்ரயதநேந கு₃ருபூஜாம் ஸமாசரேத |
ப்ராயஶ்சித்தம் து பாபாநாம் அந்யேஷாம் மோக்ஷஸாத₄நம||
தஸமாத ஸர்வப்ரயத்நேந நாராயணப₃லிம தவிமம் |
குர்யுர்த்₃விஜாத₃யஶ்சாந்யே தந்த்ரம க்ஷத்₃ரா நுலோமஜா:|| ...

[மேலான நாராயணபலி என்னும கர்மத்தை ஶௌநகராகிய நான விவரிககிறேன. சணடாளனிடமிருநதோ, நீரினாலோ, பாமபினாலோ, அநதணனாலோ, மினனலாலோ (மற்றும பல காரணங களாலோ) துர்மரணம் ஏற்பட்டாலும, யதிகள, யோகிகள, மற்றுமுளள மோக்ஷார்த்திகளுக்கும் பாபம் போவதற்காக இப் புண்யகாமததைப் பனிரண்டாம் நாள செய்யவேண்டியது. சண்டாளன முதலானோரால கொலலப்பட்டவாகள் விஷயத்தில் ஒரு வருடம் கழித்து இதைச் செய்யவேண்டியது. ஸபிணடீ

http://acharya.org

கரணத்திற்கு முன்போ, த்வாதசியிலோ, ஶ்ரவண நக்ஷத்திரத்திலோ, பஞ்சமியிலோ, அமாவாஸ்யை, பௌர்ணமி ஆகிய பர்வகாலங்களிலோ விஷ்ணு பூஜையான இக்கர்மத்தைச் செய்யவேண்டியது. கிருஹஸ்தர்கள அல்லது யதிகளாயிருக்கும் சிறந்த பனிரண்டு வைஷ்ணவாகளை அழைத்து, ஸ்நாநம் செய்த அவர்களுக்கு, (சுத்தமான) குழிகளில் நன்னீரால் (கேசவாதிகளான) பன்னிருநாமங்களைச் சொல்லித் திருவடிவிளக்கி, ஸம்ப்₄ாவனைகளைச் செய்து அவர்களைப் பூஜித்து, அதற்குப்பின் ஸ்ரீபூ₄மிகளோடு கூடிய ஹரியை ஆராதிக்கவேண்டியது. ஸர்வேஶ்வரனை அவனை இருதயத்திலிருந்தோ, ஸூர்யமண்டலத்திலிருந்தோ, பக்தியோடு புருஷஸூக்தத்தின் முதல் மந்திரத்தைச் சொல்லி ஆஸனததில் ஆவாஹனம் செய்து, பாத்₃யம் முதலாக தீ₃பமீருக உள்ள எல்லா உபசாரங்களையும் (பதினோராவது கண்டத்தில சொல்லியபடி) புருஷஸூக்தரிக்குகளாலேயே செய்து... அதற்கும்மேல் கேசவன் முதலான பன்னிரு நாமங்களாலும், 'அதோ தே₃வா:' என்று தொடங்கும ஆறு விஷ்ணுஸூக்த ரிக்குகளாலும், புருஷஸூக்தத்தின் பதினாறு ரிக்குகளாலும, த்₃வாத₃ஶாக்ஷரமந்திரத்தாலும், அஷ்டாக்ஷரமந்திரத்தாலும் ஸமித்துக்கள், நெய், சரு ஆகியவற்றை (அக்னியில் ஹோமம் செய்து)... அந்நத்தால் ப்ராஹ்மணர்களுக்கு போஜனம செய்வித்து விஷ்ணுபூஜையை முடித்து... புருஷஸூக்தத்தினால் தேவர் தலைவனை விஷ்ணுவைத் துதித்துக் கர்மத்தை முடித்து... ஆகையால், மிக முயற்சிசெய்து குருபூஜையைச் செய்யவேண்டியது. இந்த நாராயணப₃லியானது எல்லாப்பாபங்கட்கும் ப்ராயஶ்சித்தமாகவும், மோக்ஷஸாத₄னமாகவுமிருப்பது. ஆகையால் முதல் மூன்று வர்ணத்தவரும் இதை மிகமுயன்று செய்யவேண்டியது. சூத்ரர்களும, அநுலோமவிதி₄யினால் பிறநதவர்களும் இக்கர்மத்தை மந்திரமில்லாமல் தந்த்ரமாகவே அநுஷ்டிக்கவேண்டியது.] என்னும இருபத்தேழாவது கண்டத்திலுள்ள நாராயண ப₃லிவிதி₄யில் ஸ்ரீபூ₄மிஸஹிதனை ஹரியே இருதயகமலத்திலும், ஸூர்யமண்டலததிலும வாழும் பரம்பொருள் என்றும், கேசவாதிநாமங்களும், த₃வாத₃ஶாக்ஷரமந்திரமும், அஷ்டாக்ஷரமந்திரமும் எப்படி நேரே அவனைச் சொல்லுகினறவை எனபதில் விவாதமில்லையோ, அப்படியே புருஷஸூக்த விஷ்ணுஸூக்த மந்திரங்களும் அவனையே நேரே சொல்லுகின்றனவென்றும், அவனே தேவர் தலைவனென்றும், அவனுக்குப் பூஜையான நாராயண பலியென்னும் சிறந்த கர்மத்தில் வைஷ்ணவர்களே வரிப்பதற்குரியவர்களென்றும், அக்கர்மம் மோக்ஷஸாத₄னமாகவும் விளங்குகிறதென்றும் கோஷிக்கப்

http://acharya.org

படுவதிலிருந்து ப4க3வத்பரத்வம் வெள்ளிடை மலையாக விளங்குகிறது.

நாராயணப3லிம் சேமம் ஹரே: ப்ரீதிகரம் ஶுப4ம் |
ய: ப்ராஹ தஸ்மை விது3ஷே ஶௌநகாய நமோ நம: ||
அஶுபே4ஷு க்3ரஹேஷ்வேவ க்3ரஹகோபே ச பீடி3தே |
து3ர்நிமித்தே ச து3:ஸ்வப்நே து3ர்பி4க்ஷே வ்யாதி4பீடி3தே ||
க்3ருஹே வல்மீகஸம்பூ4தௌ ரக்தஸ்த்ரீது3ர்ஶநேऽபி ச |
ஶரீரேऽபயக்3நித3க்3தே4 ச க்3ருஹே த3க்3தே4ऽச3நா தத2ா ||
உந்மாத3க்3ரஹபீடா3யாம் ருஷிகேऽப்யர்தத2நாஶகே |
ப4ார்யாவிரோத4நே சாபி ஜநகோபஸமுத்3ப4வே ||
ராஜகோபமநோது3:க்2கே தௌ3ர்ப4ாக்3யே ஸர்வஸங்கடே |
ஜந்மர்க்ஷே க்3ரஹணே து3ஷ்டே தத2ா நிக3ளப3ந்த4நே ||
பிஶாசாதே3ஶ்ச பூ4தாநாம் ஸர்வாபஸ்மாரபீடி3தே |
பரஜாபீ4டௌ ப்ரஜாநாமே த4நதா4ந்யவிநாஶநே ||
முஹூர்தகேப்யஶுபே4 புத்ரே ஜாதே சைவாஶுபே4 தி3நே |
விபரீதே மஹோத்பாதே மஹாப4யஸமுத்3ப4வே ||
ஸர்வோபத்3ரவநாஶார்த்த2ம் ஸர்வகாமஸம்ருத்3தி4த3ம் |
ஸ்நாத்வா ஸ்நாநவிதா4நேந தே3வதே3வம் ப்ரணம்ய ச ||
ஸ்த2லம் ஶுத்3த4ம் ஸமப்4யுக்ஷ்ய கோ3மயேநோபலிப்ய ச |
ஔபாஸநாக்3நிமாதா4ய ஆகா4ரம் ஜுஹுயாத் தத: ||
தத்ப்ராச்யாம் ஶாலித4ாந்யைஸ்து ராஶிம் க்ருத்வா தத: பரம் |
தந்துநா வேஷ்டிதம் கும்ப4ம் ஜலை: ஶுத்3தை4 ப்ரபூர்ய ச ||...
நவரத்நம் ஸுவர்ணம் ச க3ாயத்ரீம வைஷ்ணவீம ஜபேத் |
நிக்ஷிப்ய துலஸீம தத்ர ப்ரக்ஷிப்ய ச தத2ா புந: ||
ரஜதம சந்த3நம் சைவ ரக்தவஸ்த்ரேண வேஷ்டயேத் |
தத்கும்ப4ம் த4ாந்யராஶௌ ச ந்யஸேத3ஷ்டாக்ஷரேண வை ||
தத்ப்ராச்யாம ஶாலித4ாந்யைஶ்ச பீட2ம் க்ருத்வா

தது3ர்த்4வத: |
குஶாந் து3ர்ப4ாம்ஶ்ச ஸம்ஸ்தீர்ய பஶ்சிமாபி4முக2ம் ஹரிம் ||
ஸ்த2ாபயித்வா து தே3வேஶம் த்4யாயந் ஆவாஹ்ய ப4க்தித: |
ஆஸநாத்3யுபசாரைஶ்ச மந்த்ரமஷ்டாக்ஷரம் ஜபேத் ||

http://acharya.org

விதி4னைவார்ச்சயித்வா தம் ஹவி: ஸம்யக் நிவேதயே3த் |
தத்ர பீடே2஽த2வா ருக்மம் ந்யஸ்ய த்4யாயந் ஹரிம் பரம் ||
ஆவாஹ்ய விதி4நா தே3வம் அர்ச்சயித்வா நிவேதயே3த் |
ருக்மக3ர்பே4 ருக்மமயோ ருக்மவர்ணோ ஹரி: ஸ்வயம் ||
ப்3ரஹ்மணா இம் ப்ரலாபேந ருக்மம் விஷ்ணுரிதி ஸ்ம்ருதம் |
தஸ்மாத் ருக்மே஽ர்ச்சநம் குர்யாத் இதி பூர்வம் ஜநார்த்த3நம் ||
விஷ்ணுஸூக்தேந தம் தே3வம் ப்ரணம்யார்ச்யாநுமாந்ய ச |
ஆஸீந: ப்ராங்முகே2ா஽க்3நிம் ச பரிஷிச்ய ப்ரணம்ய ச ||
விஷ்ணோர்நுகம் தத3ஸ்யேதி ஹுத்வா ப4க்திஸமந்வித: |
க3வ்யம் க்4ருதம் ஸமாதா3ய த்4யாயந் விஷ்ணும் ஸநாதநம் ||
லக்ஷம் வாப்யயுதம் வாபி ஸஹஸ்ரம் வா ஶதாஷ்டகம் |
ஜுஹுயாத ஸர்வஶாந்த்யர்த்த2ம் ஸர்வஸித்3த்4யர்த்த2
மேவ வா ||
தத்தத்3தை3வதகம் த்4யாத்வா ஜுஹுயாத் ஸத்3ருஶம் யதா2 |
ஆதௌ3 மத்4யே஽வஸாநே ச தே3வம் பூர்வவத3ர்ச்சயேத் ||
ஏவம் ஹுத்வா஽ர்ச்சயித்வா ச ஸ்நாநகர்ம ஸமாரபே4த் |
ஹுதம் து யாவத் தாவச்ச தத்கும்ப4ஸ்த2ஜலம் ததா2 ||
ஸமாஹிதோ ஹரிம் த்4யாயந் தந்மந்த்ரேணாபி4மந்த்ரயேத் |
ஹரிம் த்4யாத்வா ஸமாஸீந: ஆசார்ய: ப்ராங்முக2ஸ்தத: ||
ப்ரோக்ஷயேத் மூலமந்த்ரேண ததோயைஶ்ச ஸஹஸ்ரகம் |
ஶேஷதோயை: க்ருதஸ்நாநம் ஸர்வது3:க்க2நிவாரணம் ||
ஏதத்ஸ்நாநஸமம் தீர்த்த2ம் ந பூ4தம ந ப4விஷ்யதி |
யமுத்3தி3ஶ்ய க்ருதம் மந்த்ரீ ப்ரோக்ஷயேத் தம் ஜலேநவை ||
தத்ர தோ3ஷ:ப்ரஶாந்த: ஸ்யாத் ப்ரோக்ஷணேநாபி4தேந வை |
ஹுத்வா ஸ்நாநே க்ருதே சைவ ஶ்ரத்3த4ாப4க்திஸமந்வித: ||
யத்3யதி3ச்ச2தி தத்ஸர்வம் லப4தே நாத்ர ஸம்ஶய: |
கந்யார்த்தீ2 லப4தே கந்யாம் ராஜ்யார்த்தீ2 ராஜ்யமாப்நுயாத் ||
வித்3யார்த்தீ2 லப4தே வித்3யாம் மோக்ஷார்த்தீ2
மோக்ஷமாப்நுயாத் |
காமாநவாப்நுயாத் காமீ அர்த்தா2ர்த்தீ2 அர்த்த2வாந் ப4வேத் ||
த4ர்மார்த்தீ2 த4ர்மமாப்நோதி பாபீ பாபாத் ப்ரமுச்யதே |
ஸித்3த்4யர்த்தீ2ஸி3த்4திமாப்நோதி து3:கீ2து3:கா2த்ப்ரமுச்யதே ||

http://acharya.org

மூலமந்த்ரேண ஹோமேந ஸர்வஸித்₃த்₄யர்த்த₂மேவ வா ।
ஓம் நமோ நாராயணாயேதி மந்த்ரமேகம் பரம் ஸ்ம்ருதம் ॥
ஓம் நமோ ப₄க₃வதே வாஸுதே₃வாயேத்யேதகம் பரம்
ஸ்ம்ருதம் ॥
மூலமந்த்ரமிக₃ம் ப்ரோக்தம் ப்₃ரஹ்மணா பரமேஷ்டி₂நா ॥
தயோரேகேந ஹோதவ்யம் ஸர்வஸம்பத்ஸம்ருத்₃த₄யே ।
ஆசார்யத₃க்ஷிணாம் த₃த்₃யாத் ஶ்ரத்₃த₄யா ச முதா₃ந்வித: ॥

[ஹரிக்கு உகப்பை விளைப்பதாய், மங்களமானதான இந்த நாராயண பலியைச் சொன்ன பேரறிவாளரான ஸௌனகருக்கு நமஸ்காரம். நவக்ரஹங்கள் அஶுபஸ்தானத்திலிருக்கும்போதும், அந்த கிரஹங்களின் கோபம் ஏற்பட்டிருக்கும்போதும், பீடைகள், கெட்ட நிமித்தங்கள், கெட்ட ஸ்வப்னங்கள், பஞ்சம, வியாதிபீடை, வீட்டில் புற்றுமுளைத்தல, ரக்தவர்ணமுள்ள ஸ்த்ரீயைக்காணல, ஶரீரம் அல்லது வீடு நெருப்பால சுடப்படல, பைத்தியம் பிடித்தல, எலியினால் பொருட்சேதம, மனைவியின விரோதம, ஜனங்களின விரோதம், ராஜ விரோதம, மனதுன்பம, தௌர்ப்பாக்கியங்கள, ஸர்வஸங்கடங்கள, பிறந்த நட்சத்திரத்தில் க்₄ரஹணமும், மற்ற தோஷங்களும உண்டாவது, விலங்கிடப்படுவது. பிஶாசங்கள, துர்தேவதைகள ஆகியவற்றால பிடிக்கப்படுவது. குழந்தைக்கு பயம, குழந்தையின் நாசம. தனதான்யங்கள அழிவது, கெட்ட தினத்தில, கெட்ட முஹூர்த்தத்தில் புத்திரன உண்டாவது, விபரீதங்கள, பெரிய உற்பாதங்கள், மஹாபயங்கள் முதலானவை உண்டாவது ஆகிய தீங்குகள நேருமபோதும. இந்த எல்லா உபத்ரவங்களும் அழிவதற்காகவும, எல்லா விருப்பங்களும் நிறைவதற்காகவும (மஹாஶாந்தியைப் பின்வருமாறு செய்ய வேண்டியது.) முறைப்படி ஸ்நானம் செய்து, தேவதேவனை விஷ்ணுவை வணங்கி, சுத்தஸ்தலத்தில நீர தெளித்துப பசுஞ் சாணியால மெழுகி, ஔபாஸநாக்னியை எடுத்து ஆக்₄ாரஹோமம் செய்து, கிழக்குதிக்கில நெற்குவியலை வைத்து, நூலால சுற்றப் பட்ட கும்பத்தை சுத்தஜலத்தால் நிறைத்து,... நவரத்னத்தையும, பொன்னையும வைத்து விஷ்ணுவைச் சொல்லுவதான காயத்ரியை ஜபிக்கவேண்டியது. துளஸியைக் கும்பத்திலிட்டு, வெள்ளி, சந்தனம ஆகியவற்றையுமிட்டு, சிவப்பு வஸ்திரத்தால் கும்பத்தைச் சுற்றிக் கட்டவேண்டியது. அஷ்டாக்ஷரத்தினால் அந்தக் கும்பத்தை நெற்

http://acharya.org

குவியலில் வைக்கவேண்டியது. அதற்குக் கிழக்கில் நெல்லாலே பீடம் செய்து, அதனமேல் குசங்களையும, தர்ப்பங்களையும் பரப்பி, மேற்கு நோக்கியபடி தேவா தலைவனை ஹரியை எழுந்தருளச்செய்து, பக்தியோடு ஆவாஹனம் செய்து, ஆஸனம் முதலான உபசாரங்களை யும் அளித்து அஷ்டாக்ஷரமந்திரத்தை ஜபிக்கவேண்டியது. அந்த தேவனை விதிப்படி அர்ச்சனம்செய்து, ஹவிஸ்ஸை நன்கு நிவேதனம் செய்யவேண்டியது. (ஹரியின் மூர்த்தியில்லாவிடில்) அந்தப் பீடத்தில் பொன்னை வைத்து மேலானவனை ஹரியை தியானித்து, விதிப்படி ஆவாஹனம செய்து அர்ச்சனம் செய்து, நிவேதனமளிக்க வேண்டியது. பொன்னிலிருப்பவனும், பொன்மயமானவனும், பொன்போன்ற ஒளி யுள்ளவனுமிருப்பவன் ஹரி: பல சொலலியென்! பொன்னுனது விஷ்ணு ஸ்வரூபமே என்று ஸ்மருதிகளில் சொல்லப்படுகிறது ஆகையால், முற்கூறியபடி பொன்னில் ஜநார்த்தனனை ஆராதிக்கவேண்டியது. அந்த தேவனை விஷ்ணுஸூக்தத்தினுல் வணங்கி, அர்ச்சனம் செய்து, உப சாரங்களைச் செய்து, கிழக்கு முகமாக உட்கார்ந்து, அக்னியைப் பரிஷேசநம செய்து வணங்கி, 'விஷ்ணோர் நுகம்' "ததஸ்ய" என்று தொடங்கும இரு விஷ்ணுஸூக்த மந்திரங்களாலும பக்தியோடு கூடிய வனுய் ஹோமம் செய்து பழையோனை விஷ்ணுவை தியானம் செய்து, பசு நெய்யைக்கொண்டு லக்ஷம அல்லது பதினுயிரம. அல்லது ஆயிரம அல்லது நூற்றெட்டு தடவை முற்கூறிய எல்லா தோஷங் களும அழியும பொருட்டும, எல்லா விருப்பங்களும் நிறைவேறும் பொருட்டும ஹோமம செய்யவேண்டும. அந்தந்த தேவதைகளைக் குறித்துச் செய்யும யாகங்களில் முறைப்படி எப்படி அந்த தேவதை களை தியானித்து ஹோமம் செய்யவேண்டுமோ அப்படியே இக் கர்மத்தின் முதலிலும், நடுவிலும், முடிவிலும தேவனை நாராயணனை முற்கூறியபடி (தியானித்து ஹோமம் செய்து) ஆராதிக்கவேண்டும். இப்படி ஹோமாராதனம் செய்தபின ஸ்நாநகர்மத்தைத் தொடங்க வேண்டும. எவ்வளவு நேரம ஹோமம் செய்யப்பட்டதோ அவ்வளவு நேரம அத்தக் கும்பஜலத்தை ஹரியை தியானம் செய்துகொண்டு, அவருடைய மந்திரத்தினுலை அபிமந்த்ரணம செய்யவேண்டியது. ஹரியை தியானித்துக் கிழக்குமுகமாய் வீற்றிருக்கும் ஆசார்யன் அந்த ஜலத்தைக் கொண்டு மூலமந்திரத்தினுல் ஆயிரம தடவை (சாந்திசெய்துகொள்பவனை) ப்ரோக்ஷணம் செய்யவேண்டியது. எஞ்சியிருக்கும் ஜலத்தால் (வீட்டிலிருக்கும) எல்லாப் பொருள்களை யும ப்ரோக்ஷிக்கவேண்டும். இந்த ஸ்நாநம எல்லாத் துன்பங்களை யும் அழிப்பது. இந்த ஸ்நானத்திற்கு ஸமமானது இருந்ததுமில்லை;

http://acharya.org

வரப்போவதுமில்லை எவனுக்காக இந்த மஹாஶாந்தி செய்யப் படுகிறதோ, அவனை ஆசார்யன் அந்த ஜலத்தினுல் ப்ரோக்ஷணம செய்யவேணடும். அதனுல் ஸர்வதோஷமும் நீங்கும். ஶ்ரத்3தா4பக்திகளோடு இபபடி ஹோமம் செய்து ஸ்நாநம செய்பவனுக்கு விரும்பியதெல்லாம கிடைக்கும என்பதில் ஐயமில்லை. பெண், ராஜ்யம, கல்வி, த4ாமார்த்த2 காமமோக்ஷங்கள் ஆகிய எதை விரும்பினுலும கிடைககும, மஹாபாபியின பாபஙகளும் நீங்கும. மூலமந்திரஹோமத்தால ஸித்திகளை விருமபினவனுக்கு அவையும் கிடைக்கும. பெருநதுனபமுற்றவன் துனபத்திலினறு விடுபடுவான. ''ஓம் நமோ நாராயணுய'' எனனும் அஷ்டாக்ஷரமநதிரமும், ''ஓம நமோ ப4க3வதே வாஸுதே3வாய''எனனும த்3வாத3ஶாக்ஷரமந்திரமும எல்லா ஸித்திகளின பொருட்டுமான மேலான மந்திரஙகள. பரம பதததிலிருககும் ப்ரஹ்மத்தாலேயே இவ்விரு மூலமந்திரங்களும உபதேசிக்கப்பட்டவை. எல்லாச் செலவங்களும் நிறையும்பொருட்டு இவ்விரண்டு மநதிரங்களில் ஒனறினுல் ஹோமம் செய்யவேண்டும. (காமம முடிந்தவுடன்) ஶ்ரத்தையோடும, உகப்போடும் கூடியவனுய் ஆசார்யனுக்கு தக்ஷிணையை அளிககவேண்டும்.] என்று இருபத்தெட்டாவது கண்டத்தில் மஹாஶாந்தியை விதிககும்போதும, விஷ்ணுவை தேவதேவனுகவும, பொனமயமானவனுகவும, அஷ்டாக்ஷரம, தவாதஶாக்ஷரம, விஷ்ணுஸூக்தம, காயத்ரீ முதலான வற்ருல் தியானிககததக்கவனுகவும, ஹோமம் செய்யத்தக்கவனுகவும இப்படி மஹாஶாந்தியை அனுஷ்டிப்பவர்களுக்கு எல்லாப்பாபங்களையும, துன்பங்களையும் போக்குபவனுகவும, மோக்ஷமுளளிட்ட எல்லாப் பயனகளையும அளிப்பவனுகவும் கோஷித்திருப்பதிலிருநது விஷ்ணுவே ஶ்ருதிப்ரஸித்3த4னுன பரம்பொருள எனக்கையிலஙகு கனியாய் விளஙகுகிறது.

இனி, க்ஷதரியனின கர்மங்களை விளக்கும் இரண்டாவது பாததனை ஆராய்வோம். இருபத்தொரு கண்டமுளள இப்பாதத்தின் முதற்கணடத்தில் இப்பாதத்தின் ஒவ்வொருகண்டத்திலும விளக்கப் போகும் விஷயத்தைக் கிரமமாகச் சொல்லும்போது ''நித்யம் விஷ்ணவர்ச்சநம் சைவ வக்ஷ்யேஹம் ஶௌநக: க்ரமாத்'' என்று இருபத்தோராவது கண்டத்தில க்ஷதரியன தினந்தோறும் செய்ய வேண்டிய விஷ்ணுபூஜையைச் சொல்லப்போவதாக ப்ரதிஜ்ஞை செய்யப்பட்டது. ராஜாவுககு மஹாபிஷேகத்தை விதிககும நாலாவது கண்டததில ''அத2 விஷ்ணவாலயே ரம்யே மண்டபம்

http://acharya.org

காரயேத் ஸுபம்'' என்று இவ்வபிஷேகத்திற்குரிய மங்களமான மண்டபத்தை அழகான விஷ்ணுகோயிலில் அமைக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டது. பதினைாவது கண்டத்தில் ஒவ்வொரு திதியிலும் அரசன் தேவதையை அவரவர்க்குரிய மந்திரங்களைச் சொல்லிப் பூஜை செய்தால் ஒவ்வொரு பலன் கிடைக்கும் என்று கூறப்பட்டது. (1) பிரதமையில் பாவகனெனும் அக்னியைக்குறித்து மாதுச்சந்தஸூக்தத்தைகொண்டு ஹோமம் செய்தால் அக்னி லோகம் பலனாகக் கிடைக்கும். (2) த்விதீயையில் ஹிரண்யகர்ப்ப ஸூக்தத்தினால பிரமனைப் பூஜிப்பதால் ப்ரஹ்மவர்ச்சஸத்தையும் எல்லா விருப்பங்களையும் அடைகிறான். (3) திருதீயையில் குபேரனை (குபேர மந்திரத்தால்) பூஜிப்பதால் பணம கிடைக்கும். (4) சதுர்த்தியில் விநாயகனை அவனுககுரிய மந்திரத்தால் பூஜிப்ப தால் இடையூறுகள விலகி ஸுகம் உண்டாகும். (5) பஞ்சமியில் ஸ்ரீதேவியை ஸ்ரீஸூக்தத்தால் பூஜிப்பதால் எல்லா விருப்பங்களும், செல்வமும் எப்போதும நிறைவடையும். (6) ஷஷ்டியில் கந்தனை ''க்ஷேத்ரஸ்ய பதிநா'' என்னும் மந்திரத்தால் பூஜிப்பதால் வெற்றி கிடைக்கும். (7) ஸப்தமியில் ''நமோ மித்ரஸ்ய'' ஸூக்தத்தினல் ஸூர்யனைப் பூஜிப்பதால் எல்லா விருப்பங்களையும் அடையலாம். (8) அஷ்டமியில் ''இமா ருத்ராய'' ஸூக்தத்தினல் மஹேஶ்வரனைப் பூஜிப்பதால் எப்போதும் ஸுகமடையலாம். (9) நவமியில் துர்க்கையை ''ஜாதவேதஸே'' என்னும் ஸூக்தத்தால் பூஜித்தால் எதிரிகள் அழிவர். (10) தசமியில் யமனை ''யத்ர ராஜா'' என்னும் மநதிரத்தால் பூஜித்தால் நீண்ட ஆயுளை அடையலாம். (11) ஏகாதசியில் ''த்ராதாரம்'' என்னும் மந்திரத்தால் இந்திரனைப் பூஜித்தால் இவ்வுலகில் க்ஷேமத்தையடைந்து மறுமையில் இந்திரலோகமடைந்து இன்புறுவான். (12)

த்வாதஶ்யாம் து மஹாவிஷ்ணும் புருஷஸூக்தேந யோऽர்ச்சயேத் ।
ஸ நிர்வாணமவாப்நோதி புக்த்வா காமாநமாநுஷாந் ॥

[த்வாதசியில் புருஷஸூக்தத்தினல் மஹாவிஷ்ணுவைப் பூஜிப்பவன் அமாநுஷமான போகங்களை அநுபவித்து மோக்ஷமடைவான்] (13) த்ரயோதசியில் மன்மதனை (அவன் மந்திரத்தால்) பூஜிப்பதால் காந்தியை அடைவான். (14) சதுர்த்தசியில் அஶ்விநிகளை ''அஶ்விநா'' என்னும் ருக்கால் பூஜிப்பதால் ஆரோக்யத்தை அடைவான. (15) பஞ்சதஶியான பௌர்ணமியில் ஸோமனை (சந்திரனை) ''த்வம் ஸோமாஸி'' என்னும் மந்திரத்தால் பூஜித்

http://acharya.org

தால் அரசன் அழகிய மனத்தை உடையவனாவான். இப்படிப் பதினைந்து திதிகளில் பதினைந்து தேவர்களுக்கு, அவரவர்களுக்குரிய மந்திரங்களால் பூஜையும், அதனால் கிடைக்கும் பலனும் கோஷிக்கப்பட்டது. இதில் சிவன் முதலான மற்ற தேவதைகளின் பூஜையில் ஒவ்வொரு ஸூக்தத்தையோ மந்திரத்தையோ விநியோகித்ததுபோலே மஹாவிஷ்ணு பூஜையில் புருஷஸூக்தத்தை விநியோகித்தபடியால், புருஷஸூக்தம் புருஷனை விஷ்ணுவைச் சொல்லுவதென்று விளங்குகிறது. புருஷஸூக்தம் சிவனைச் சொல்லுகிறது என்னும் அப்பய்யதீக்ஷிதரின் விதண்டாவாதம் மஹர்ஷிஸித்தாந்த விருத்தம் என்றும் விளங்குகிறது. மேலும், மற்ற தெய்வங்களின் பூஜைக்கு இவ்வுலகப் பயன்களைப் பலனாகச் சொல்லிவிட்டு, விஷ்ணுபூஜைக்கு அமாநுஷபோகத்தையும், மோக்ஷத்தையும் பலனாகச் சொல்லியிருப்பதிலிருந்து விஷ்ணுவே மற்ற எல்லா தேவதைகளுக்கும் மேலான பரமபொருள் என்பதே மஹர்ஷிஸித்தாந்தம் என விளங்குகிறது. "மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத" [மோக்ஷத்தை ஜநார்த்தனனிடமிருந்து விரும்பவேண்டும்] என்னும் பிரஸித்தமான மஹர்ஷிவசனமும் இங்கு காணத்தக்கது. வாயஸ பலியை விளக்கும் பத்தொன்பதாவது கண்டத்தில்

தத்வம் ஸத்யமிதி ஜ்ஞாத்வா ஸத்யரூபீ ஜநார்த்தந: |

[ஸத்யமே சிறந்ததென அறிந்து (செய்யவேண்டியது)' ஜநார்த்தனன் ஸத்யமே வடிவெடுத்தவனன்றோ] என்று ஜநார்த்தனனை ஸத்யரூபியாகச் சொல்லியிருப்பதிலிருந்தும் விஷ்ணுவே பரமபொருள் என்பது வலியுறுத்தப்படுகிறது. இனி, இந்த ஸ்ம்ருதியின் கடைசியிலிருக்கும் இருபத்தோராவது கண்டத்திலுள்ள விஷ்ணவர்ச்சனவிதியிலிருந்தும் விஷ்ணுபரத்வம் விசேஷமாக விளங்கிநிற்கிறபடியைக் காண்போம்.

ஶௌநகோऽஹம் ப்ரவக்ஷ்யாமி நித்யம் விஷ்ண்வர்ச்சநம் மஹத் |

(ப்ரவ: பாந்தமந்த4ஸ இத்யருசாऽப்4யர்ச்ய விதா4நத: ?)
ப்ரதிமாலக்ஷணம் சைவ ப்ரதிஷ்டா2ம் சார்ச்சநம் ததா2 |
ஶ்ருணு பு3த்3த்4யா ஸமாயுக்த ஆஶ்வலாயந ஸுவ்ரத ||
த3வாத3ஶாங்கு3லமாநம் வாப்யஷ்டாங்கு3லமதா2பி வா |
ஹைரண்ய முத்தமம் ப்ரோக்தம் ராஜதம் மத்4யமம் ததா2 ||

http://acharya.org

தாம்ரகம் சாத4மம் ப்ரோக்தம் ஶைலஜம் சாத4மோத்தமம் |
தா3ரவம் மத்4யமம் சைவ சித்ராகாரம் படேऽத4மம் ||
ஶங்க2சக்ரக3தா3பத்3மவநமாலாவிபூ4ஷிதம் |
பீதாம்ப3ரமுதா3ராங்க3ம் ப்ரஸந்நேந்து3நிபா4நநம் ||
ஶ்யாமலம் புண்ட3ரீகாக்ஷம் கிரீடேந விராஜிதம் |
ஶ்ரீபூ4மிஸஹிதம் விஷ்ணும் பத்3மஸ்யோபரி ஸம்ஸ்தி2தம் ||
ஸ்தா2நமேவம் ப்ரதா4நம் ஹி ப்ரதிமாயாம் ஹ்யதா2ஸநம் |
ஸவ்யேந கடிமாலம்ப்3ய த3க்ஷிணுக்3ரம் ப்ரஸாரிதம் ||
அப4யம் வா ப்ரயுஞ்ஜீத ஸவ்யஹஸ்தே க3தா3த4ரம் |
ஏவம்லக்ஷணஸம்யுக்தம் பி3ம்ப3ம் ஶில்பை: ஸுஶிக்ஷிதம் ||
க்3ருஹீத்வா ஶில்பிஶாலாயா: க்3ருஹஸ்தோ2 ருத்விபி4: ஸஹ |
நிதா4ய ஸ்தா2பநாத் பூர்வம் நவாஹே ஸப்த பஞ்ச வா ||
த்ர்யஹே வா அஹ்நி வா குர்யாத்
அஶக்தோऽவாங்குரார்ப்பணம் |
அதோ2த்தராயணே புண்யே பூர்வபக்ஷே ஶுபே4 தி3நே ||
ப்ரதிபச்ச த்3விதீயா ச பஞ்சமீ ஸப்தமீ ததா2 ||
த3ஶம்யேகாத3ஶீ சைவ த்3வாத3ஶீ ச த்ரயோத3ஶீ ||
பௌர்ணமாஸீ ததா2 ப்ரோக்தா ஆபஞ்சம்யஸிதஸ்ய து |
பு3த4ஜீவஸிதேந்தூ3நாம் வாரா: பூஜ்யா: ஸுகர்மணி ||
ரோஹிண்யதி3திபுஷ்யம் ச தர்யுத்தரா ஹஸ்தமேவ ச |
வைஷ்ணவீ ரேவதீயோகே3 ஶோப4நா ராஶயஸ்ததா2 ||
ஶுப4த்3ரேக்காணகாலே து ஶுபா4ம்ஶே து ஸுலக்3நகே |
ஶுப4த்3ருஷ்டே ஸ்தி2தே ராஶௌ உப4யே வா
க்3ருஹார்ச்சநே ||
யஜமாநாநுகூலே து ந்ருபக்3ராமாநுகூலத: |
சதுரோ ருத்விஜோ வ்ருத்வா க்ருத்வா பூர்வேऽஹ்நி
பைத்ருகம் ||
பஞ்சக3வ்யேந தோயேந ஸ்நாபயித்வாऽத2 ஶாயயேத் |
ப்ராக்ஶீர்ஷம் ஸ்வர்ணஶஸ்த்ரேண த்3ருஷ்டிமுத்பாடயேத்
க்ரமாத் ||
வஸ்த்ராப4ரணஸம்யுக்த: ஶில்பீ ஶில்பவிசக்ஷண: |
த3த்வா ஸுவர்ணம் ஶில்பாய தே4நும் த3த்வா த்3விஜாதயே ||

http://acharya.org

புண்யாஹம் வாசயேத் விப்ரை: வைஷ்ணவைர்வேத$_3$பாரகை$_3$:|
ஸ்வஸ்யாத்மாநம் ச பி$_3$ம்ப$_3$ம் ச ப்ரணவேநாவலோகயேத் ||
ப்லுதம் ப்ரணவமுச்சார்ய கராப்$_4$யாம் பாத$_3$யோ:ஸ்ப்ருசேத்|
நமஸ்தேऽர்ச்சே ஸுரேசாதி$_3$ப்ரதீகே விச்வகர்மணு ||
ப்ரபா$_4$விதாசேஷஜக$_3$த்த$_4$ாதரி துப்$_4$யம நமோ நம: |
த்வயி ஸம்பூஜயாமீசம் நாராயணமநாமயம் ||
ரஹிதா ஸர்வதோ$_3$ஷைஸ் த்வம் ருக$_3$தி$_4$யுகதா ஸதா$_3$ப$_4$வ|
இத்யுக்த்வாऽஷ்டாக்ஷரேணைவ க்ருத்வா கௌதுகப$_3$ந்த$_4$நம் ||
ஜலாதி$_4$வாஸநம் குர்யாத் பஞ்சபா$_4$ரகபூரிதே |
அத$_2$வா பா$_4$ரமேகம் வா லோஹஜே ம்ருண்மயேபி வா ||
ஆவஹேத் ஜலஸம்பூர்ணே க$_3$ந்த$_4$புஷ்பஸமந்விதே |
ஆதா$_3$ய ப்ரதிமாமத்$_3$ப்$_4$ய: தீரம் நீத்வாऽர்ச்சயேத க்ரமாத் ||
அக்$_3$ரே ஸ்நாநார்த்த$_2$கலசம் பஞ்சக$_3$வ்யேந மத்$_4$யமே|
பூர்வே க$_3$ந்தோ$_4$த$_3$கம் ஸ்தா$_2$ப்ய யாம்யவாருணஸௌம்யகே||
ஆக்$_3$நேயே நைர்ருதே வாயௌ ரௌத்$_3$ரே ச ஜலபூரிதாந்|
க்ருத்வா ந்யாஸம் ச ஸம்ஹாரம் க்$_4$ருதாரோபணமேவ ச ||
ஸுசோப$_4$நம் ப$_4$வத்விதி ஸுகோ$_3$த்ரம் ச ப$_4$வத்விதி|
ஸுமங்க$_3$லம் ப$_4$வத்விதி ஹஸ்தாப்$_4$யாம் பரிக்$_3$ருஹ்ய ச ||
பாதே$_3$ பா$_3$ஹு சிர:ஸ்தா$_2$நே தூ$_3$ர்வா ஆரோப்ய மந்த்ரத:|
அஷ்டாக்ஷரேண ஸம்ஸ்நாப்ய வஸ்த்ராத்$_3$யை: ஷட்$_3$பி$_4$:
அர்ச்ய ச ||
குசகூர்ச்சேந ஸம்வேஷ்ட்ய வஸ்த்ரேணுவேஷ்ட்ய ஸர்வத:|
ஜலமத்$_4$யக$_3$தம் பீடே$_2$ சாயயேத் த$_3$க்ஷிணசீர்ஷகம் ||
நகாராதி$_3$யகாராந்தம் ந்யஸிதவாக்ஷரபஞ்சகம் |
வ்யதீதாயாம் து சர்வர்யாம் ஆசார்யோ ருத்விபி$_4$ஸ்ஸஹ ||
அபராஹ்ணே து ஸம்ப்ராப்தே ஜலாது$_3$த்தா$_2$ப்ய மந்த்ரத: |
ஸ்நாப்ய திந்த்ரிணிவாரிபி$_4$: அலங்க்ருதய யதா$_2$ருசி ||
உத்தா$_2$ப்ய சாயயேத் கே$_3$வலம் ஸ்த$_2$ண்டி$_3$லே
ஐந்த்$_3$ரசீர்ஷகம் |
ஹோமபாத்ரே சராவே வா மது$_4$ வாதேதி மந்த்ரத: ||
ஹிரண்மயேந ஸூச்யா வா குசாக்$_3$ரை: மது$_4$ஸர்ப்பிஷா |
சித்ரம் தே$_3$வேதி மந்த்ரேண குர்யாத் உந்மீலநம் க$_3$ருஹீ ||

http://acharya.org

உந்மீல்யமாநே நேத்ரே து தே4நுர்வை த3க்ஷிணா ப4வேத் ।
உத்தா2ப்ய ஶயநாத் தே3வம் ஸம்ஸ்தா2ப்ய ஸ்நாப்ய பூர்வவத் ॥
ஸுக3ந்த3தோயஸம்பூர்ணை: கலஶை: நவபி4: க்3ருஹீ ।
க்ரமாத் புருஷஸூக்தேந ப்3ரஹ்மாதி3ஶாநம்ருத்விபி4: ॥
குஶாபி4ராஸ்த்ருதே ஸம்யக் ஸ்த2ண்டி3லே ஐந்த்3ரஶீர்ஷகம் ।
ஶாயயித்வா தத: ப்ராச்யாம் க்ருத்வா ஸ்த2ண்டி3லமுத்தமம் ॥
உலலேக2நாதி3 தஸ்மிம்ஸ்து க்ருத்வாஜ்யோத்பவநாந்தகம் ।
ஆஜ்யஸிக்தேத்4மமாதா3ய தத்3விஷ்ணோரிதி மந்த்ரத: ॥
ஹுத்வாऽகா4ராஜ்யபா4கௌ3 ச ஸ்ருவேணாஜ்யேந மந்த்ரத: ।
அதோ தே3வா அவந்த்3வ்ருக்3பி4: ஹுத்வா ஷட்3பி4ர்
யதா2க்ரமம் ॥
ப்ரதிகர்ம ஹுநேத3ஷ்டௌ ஸ்ருவேணாஜ்யேந தே3ஶிக: ।
க3ர்ப்ப4பும்ஸவஸீமந்தஜாதநாமாந்நசௌலகம் ॥
மௌஞ்ஜீப3ந்த4மஹாநாம்நீமஹாவ்ரதோபநிஷத3ம் ததா2 ।
கோ3தா3நம் ச ஸமாவர்த்தம் விவாஹம் ச யதா2க்ரமம் ॥
ஹுத்வா புருஷஸூக்தேந ப்ரத்ய்ருசம் ஷோட3ஶாஹுதீ: ।
ஸமாப்ய ஹோமஶேஷம் ச பூஜார்த்த2ம் ஶயநாத் க்3ருஹீ ॥
உத்திஷ்ட2 ப்ரஹ்மணேத்ய்ருசா விஜ்ஞாப்ய தே3வமாஹரேத் ।
வஷட் தே விஷ்ணவித்ய்ருசா ப்ரதிஷ்டா2ப்ய ஸமாஹித: ॥
விஷ்ணுஸூக்தேந தே3வேஶம் ஸ்துதிம்
க்ருத்வாऽர்ச்சயேத் க்ரமாத் ।
ஆத்3யயாऽऽவாஹயேத்3தே3வம் ருசா து புருஷோத்தமம் ॥
த்3விதீயயாஸநம் த3த்3யாத் பாத்3யம் சைவ த்ருதீயயா ।
அர்க்4யம் சதுர்த்2யா தா3தவ்யம் பஞ்சம்யாசமநீயகம் ॥
ஷஷ்ட்2யா ஸ்நாநம் ப்ரகுர்வீத ஸப்தம்யா வஸ்த்ரமேவ ச ।
யஜ்ஞோபவீதமஷ்டம்யா நவம்யா க3ந்த4மேவ ச ॥
புஷ்பம் த3ஶம்யா தா3தவ்யம் ஏகாத3ஶ்யா து தூ4பகம் ।
த்3வாத3ஶ்யா தீ3பகம் த3த்3யாத் த்ரயோத3ஶ்யா நிவேத்3யகம் ॥
சதுர்த3ஶ்யா நமஸ்காரம் பஞ்சத3ஶ்யா ப்ரத3க்ஷிணம் ॥
ஷோட3ஶ்யோத்3வாஸநம் குர்யாத் வாஸுதே3வம்
ஜக3த்3கு3ரும் ।
குர்யாத3ஷ்டாக்ஷரேணைவ ஸ்த்ரீஶூத்3ரௌ ப்ரணவம் விநா ॥

http://acharya.org

ஆவாஹ்ய ஹ்ருத₃யாத் விஷ்ணும் தே₃வீப்₄யாம்
விஷ்ணுமச்யுதம் ।
அர்ச்சயித்வா யதா₂பூர்வம் ஸம்யகு₃த்₃வாஸயேத் ஹ்ருதி₃ ॥
பரிவாரம் ச ஹோமம் ச க்₃ருஹார்ச்சாயாம் ந சாசரேத் ।
ஸ்ரீஸூக்தேந ஸ்ரியம் சார்ச்ய யஜ்ஞஸூத்ரம் விநா க்ரமாத் ॥
ஸ்யோநாப்ருதி₂வீத்ய்ருசா பூ₄மிமர்ச்ய ஸ்ரியம் யதா₂ ।
சித்ராபூ₄ஸப்ரதிஷ்டா₂யாம் த₃ர்ப்பணே ஸமாசரேத் ॥
ஜலாதி₃வாஸநம் ஸ்நாநம் ப்ரோக்ஷணம் ச யதே₂ாசிதம் ।
ஆவாஹநாத்₃யுபசாராணி புர:பீடே₂ ஸமாசரேத் ॥
வஸ்த்ரபூ₄ஷணகோ₃பூ₄மிமாசார்யாய ப்ரத₃ாபயேத் ।
யாகோ₃பயோக₃த்ரவ்யம் ச தஸ்மை ஸர்வம் நிவேத₃யேத் ॥
ருத்விக்₃ப்யோ த₃க்ஷிணம் த₃த்வா யதா₂சக்தி ஸமாஹித: ।
போ₄ஜயேத் பாயஸாந்நம் சவைஷ்ணவாந் த்₃வாத₃ஶ
த்₃விஜாந் ॥
வைஷ்ணவைஸ்தைரநுஜ்ஞாதோ நித்யார்ச்சநமதா₂ஹரேத் ।
ஏதத் விஷ்ண்வர்ச்சநம் ஸம்யக் ப்ரதிஷ்டா₂விதி₄ஸம்யுதம் ॥
யேந ப்ரோக்தம் ஸதா₃ தஸ்மை ஶௌநகாய நமோ நம: ॥

['ப்ரவ: பாந்த மந்த₁ஸ' என்னும் ரிக்கினால் முறைப்படி பூஜை செய்து, விஷ்ணுவை தினந்தோறும அர்ச்சனம் செய்வதாகிற பெரிய கர்மத்தை ஸௌநகராகிய நான கூறுகிறேன். பரதிமா லக்ஷணத்தையும், ப்ரதிஷ்டையையும், அாச்சனத்தையும சொல்லப் போகிறேன. நல்லறிவோடுகூடிய நல்விரதமுள்ள ஆஶ்வலாயனனே! கேட்பாயாக. பிரதிமையானது பனிரண்டு அங்குலம் அல்லது எட்டு அஙகுலம் அளவிருக்கவேண்டும் பொனனாலானது சிறநதது; வெளளியாலானது நடுத்தரம்; தாமிரத்தாலானது கீழத்தரம; கல்லினாலானது கீழத்தரஙகளில் சிறந்தது; மரததினாலானது நடுத்தரம்; வஸ்திரத்தில சித்திரமாக எழுதியது கீழ்த்தரம. சஙகம், சக்கரம், கதை, பத்மம், வநமாலை ஆகியவற்றால் அலங்கரிக்கப் பட்டதாய், பீதாம்பரமுடையதாய், (பரமபுருஷனுக்குரிய) அள வுடைய அஙகங்களையுடையதாய், தெளிந்த சநதிரன் போனற திருமுகத்தையுடையதாய், கருநிறமுளளதாய், தாமரைக்கண்க ளுளளதாய், கிரீடததினால் விளங்காநிற்பதாய, ஸ்ரீபூமிகளோடு கூடியதாய் பிரதிமை விளங்குவது முககியமானது. இனி, அதன நிலை வாணிக்கபபடுகிறது. இடதுகையினால் இடுப்பைத் தொட்டுக்

http://acharya.org

கொண்டு, வலதுகைவிரல்களை நீட்டிக்கொண்டிருக்கலாம். வலதுகை அபயமுத்ரையோடுமிருக்கலாம். இடதுகை கதையை தரித்துமிருக்கலாம். இத்தகைய லக்ஷணமுடைய நனகு அமைக்கப்பட்ட பிம்பத்தை ரித்விக்குகளோடு கூடிய கிருஹஸ்தன சில்பசாலையிலிருந்து எடுத்து, ப்ரதிஷ்டை செய்வதற்கு முன் (யாகசாலையில்) வைத்து ஒன்பது அல்லது ஏழு அல்லது ஐந்து அல்லது மூன்று அல்லது ஒருநாளாவது அங்குரார்ப்பணம் முதலானவற்றைச் செய்யவேண்டும். புண்ணியமான உத்தராயணத்தில், சுக்லபக்ஷத்தில் சுபதினத்தில் ப்ரதிஷ்டை செய்யவேண்டும. சுக்லபக்ஷ ப்ரதமை, த்விதீயை, பஞ்சமி, ஸப்தமி, தசமி, ஏகாதசி, த்வாதசி, த்ரயோதசி, பௌர்ணமி ஆகியவையும், கருஷ்ணபக்ஷத்தில் பஞ்சமிவரையிலும நல்ல திதிகள். புதன், வியாழன், (சுக்லபக்ஷம்) திங்கள் ஆகிய கிழமைகள் இந்த நற்கருமத்திற்குச் சிறந்தவை. ரோஹிணி, புனர்பூசம், பூசம், உத்தரபல்கு$_3$னி (உத்தரம), உத்தராஷாட$_4$ம் (உததராடம்), உத்தரப்ரோஷ்ட$_2$பதம் (உத்தரட்டாதி), ஹஸ்தம், விஷ்ணுநக்ஷத்திரமான திருவோணம், ரேவதி ஆகிய நக்ஷத்திரங்களோடு கூடிய ராசிகள் சிறந்தவை. சுபமான த்$_3$ரேக்காண காலத்தில், சுபாம்ஸத்தில், நல்ல லக்னத்தில், சுபக்ருஹங்களால் பார்க்கப்பட்ட அல்லது அத்தகைய கிருஹங்கள் இருக்கப்பட்ட அல்லது இரண்டுமுள்ள ராசியில் ப்ரதிஷ்டை செய்வது, யஜமானனுக்கு அநுகூலமானதாய், அரசனுக்கும், கிராமத்துக்கும் அனுகூலமான தினத்தில் ப்ரதிஷ்டை செய்யவேண்டும. முந்தியதினத்தில் பித்ருதர்ப்பணம் செய்து, நாலு ருத்விக்குகளை வரித்து, பஞ்சகவ்யத்தினலும் நீரினலும் திருமஞ்சனம் செய்து (ப்ரதிமையை) கிழக்கே தலையுடன் சயனிக்கச்செய்யவேண்டியது. தங்கத்தாலான ஆயுதத்தால் முறைப்படி திருககண்களைத் திறக்கவேண்டும். சில்பசாஸ்திரமறிந்தவனுய், நல்ல வஸ்திரம் ஆபரணமணிந்தவனை சில்பி சில்பத்திற்கு ஸ்வர்ணத்தை அளித்து, அந்தணர்க்குப்பசுவையளித்து, வேதங்களைகண்ட அந்தணரான வைஷ்ணவர்களைக்கொண்டு புண்யாஹவாசனம் செய்விக்கவேண்டியது. தன்னையும், பிம்பத்தையும் ப்ரணவத்தைச் சொல்லிக்கொண்டு காணவேண்டியது. ப்ரணவத்தை ப்லுதஸ்வரததோடு உச்சரித்துத் தம கரங்களாலே இருதிருவடிகளையும் தொடவேண்டியது. "தேவதேவனுடைய ப்ரதிநிதியாயிருக்கும் * அர்ச்சையே! உனக்கு நமஸ்காரம். விச்வகர்மாவினல் *கௌரவிக்கப்பட்டவளாய், எல்லாவுலகுக்கும் தாயான உனக்குப் பலகால் வணக்கம்.

* அர்ச்சாஸப்தம் ஸத்ரீலிங்கமாகையாலே எல்லாப்பதங்களும் ஸ்த்ரீலிங்கமாயுள்ளன என்று உணரத்தக்கது.

http://acharya.org

அழிவற்றவனான நாராயணனை உன்னிடத்தில் நான் திருவாராதனம் செய்கிறேன். நீ எப்போதும் தோஷம் எதுவுமற்றவளாய் சிறப்புற்றவளாய் ஆவாயாக.'' என்று கூறி, அஷ்டாக்ஷரத்தால் ரக்ஷாபந்தனத்தைச் செய்து, ஐந்து பாரம் தீர்த்தம் நிறைந்த பாத்திரத்தில் ஜலாதி$_4$வாஸனம் (நீரில் எழுந்தருளப்பண்ணுவது) செய்யவேண்டும். அல்லது ஒரு பாரம் தீர்த்தத்திலும் செய்யலாம். உலோஹபாத்திரத்திலாவது, மண்பாண்டத்திலாவது ஜலத்தை நிறைத்து, கந்தம் புஷ்பம் ஆகியவற்றைச் சேர்த்து ஜலாதி$_4$வாஸனம் செய்யவேண்டும். அதற்குப் பின் பிரதிமையை நீரிலிருந்து எடுத்துத் தரையில் வைத்து முறைப்படி அர்ச்சிக்கவேண்டும். முதலில் ஸ்நானத்தின் பொருட்டான கலசத்தையும், நடுவில் பஞ்சக$_3$வ்ய கலசத்தையும், கிழக்கு, தெற்கு, மேற்கு, வடக்கு ஆகிய திக்குகளிலும், தென்கிழக்கு, தென்மேற்கு, வடமேற்கு, வடகிழக்கு ஆகிய விதிக்குகளிலும் கந்தோதககலசத்தையும் வைத்து, அவற்றில் நீரை நிறைத்து ந்யாஸம், ஸம்ஹாரம், க்$_4$ருதாரோபணம் ஆகிய செயல்களைச்செய்து, 'ஸுமோபா$_4$நம் ப$_4$வது' என்றும், 'ஸுகே$_3$த்ரம் ப$_4$வது' என்றும், 'ஸுமங்க$_3$ளம் ப$_4$வது' என்றும் சொல்லி, கைகளாலே (பிரதிமையின்) திருவடிகளையும், திருக்கைகளையும், திருமுடியையும் பிடித்து, மந்திரத்தினால் தருப்பையை வைத்து, அஷ்டாக்ஷரத்தினால் ஸ்நானம் செய்வித்து, வஸ்திரம் முதலான ஆறு உபசாரங்களாலும் அர்ச்சித்து, கூர்ச்சத்தினால் சூழச்செய்து, வஸ்திரத்தால் எல்லாபுறமும் சுற்றி, தெற்கே தலையுள்ளதாக, நீரின் நடுவில் பீடத்தில் சயனிக்கச்செய்ய வேண்டியது. 'ந' முதல் 'ய' (ப$_4$?) முடிய ஐந்து அக்ஷரங்களை ந்யாஸம் செய்து, இரவு கழிந்தபின் பிற்பகலில் ஆசார்யன் ருத்விக்குகளோடுகூட மந்திரத்தைச்சொல்லி நீரிலிருந்து தேவனை எழுந்தருளச் செய்து, புனிநீரால் ஸ்நானம் செய்வித்து, ருசிக்கு (விதிக்கு) அனுகுணமாக அலங்காரம் செய்து எழுந்தருளுவித்து கிழக்கே தலையாம்படி தரையில் சயனிக்கச்செய்யவேண்டியது. க்ருஹஸ்தனான ஆசார்யன் பொற்பாத்திரத்திலோ, வேறு பாத்திரத்திலோ உள்ள தேன் கலந்த நெய்யை 'மது$_4$வாதா' என்னும் மந்திரத்தையும், 'சித்ரம் தே$_3$வாநாம்' என்னும் மந்திரத்தையும் ஓதி, பொன்மயமான ஊசியாலோ தர்ப்பை நுனியாலோ எடுத்து நேத்ரோந்மீலனத்தை (கண் திறப்பதை) செய்யவேண்டும். நேத்ரோன்மீலனத்திற்கு ஒரு பசுவை தக்ஷிணையாகக் கொடுக்கவேண்டும். க்$_3$ருஹஸ்த$_2$னான அர்ச்சகன் ஸ்த$_2$லாதி$_4$வாஸத்தினின்றும் பிரமன் முதலானோர்க்கும் தலைவனான

http://acharya.org

பெற்ற திருமேனியுடையவனும், கஸ்தூரிதிலகமுடையவனும், சங்கம், சக்ரம், வில், அம்பு ஆகிய நாலேயும் நீண்ட நாலு திருக்கைகளால் தரிப்பவனுன ராமனை தியானித்து, அவனுடைய இடது துடையில் நன்கு வீற்றிருப்பவளாய், உருக்கிய பொன்போன்றவளாய், தாமரைக்கண்ணியாய், தாமரைமுகத்தாளாய், சுருண்டிருண்ட திருக்குழல்களை உடையவளாய், (பெருமாளுடைய) சிங்கத்தின முதுகுபோன்ற திருத்தோள்களுக்குத் தகுந்தவளாய், சங்குபோன்ற கழுத்தையுடையவளாய், அழகியகண்களை உடையவளாய், ஹரிசந்தனத்தால் பூசப்பெற்ற திருமேனியை உடையவளாய், கஸ்தூரி திலகமுடையவளாய், இளஞ்சூரியன் போன்றவளாய், காதணிகள் இரண்டால் விளங்காநிற்பவளாய், யௌவனத்தை அப்போதே அடைந்திருப்பவளாய், எப்போதுமிருப்பவளாய், பருத்துயர்ந்த திருமுலைத்தடங்களையுடையவளாய், பட்டாடையுடுத்தவளாய், திருவாபரணங்களால் விளங்காநிற்பவளாய், ஆஸ்ரயிப்பவர்களின் விருப்பத்தை அளிப்பவளாய், தாமரைக்கையினளான ஸீதாதேவியை தியானிக்கக்கடவன். குடையேந்திநிற்கும பெருவலிமையுள்ள லக்ஷ்மணனை மேற்கு (பின்) திசையிலும், (பெருமாளுக்கு) இருபுறங்களிலும் சாமரமேந்திய பரதசத்ருக்னர்களையும், கைகூப்பிய அனுமனை முன்னுலும், ஸுக்ரீவன், ஜாம்பவான், ஸுஷேணன், விபீஷணன், நீலன், நளன், அங்கதன், ருஷபன் ஆகிய எண்மரையும் எட்டுதிக்குகளிலும் பூஜிக்கவேண்டியது. (இது முதல் ஆவரணம்). வஸிஷ்டர், வாமதேவர், ஜாபாலி, காஸ்யபர், மார்க்கண்டேயர், மௌத்கல்யர், பர்வதர், நாரதர் ஆகிய எட்டு ரிஷிகளும் பரமாத்மாவான ராமனுக்கு இரண்டாவது ஆவரணமாக உள்ளனர். த்ருஷ்டி, ஜயந்தன், விஜயன், ஸுராஷ்டிரன, ராஷ்ட்ரவர்த்தனன், அலகன், தர்மபாலன, ஸுமந்து என்னும் எட்டு மந்திரிகளும் ஸ்ரீராமனுக்கு மூன்றுவது ஆவரணமாக (சுற்றியிருக்கும் அரணாக) உள்ளனர். அந்த ஆவரணத்திலேயே சந்திரன் முதலான தேவதைகளும் உள்ளனர். குமுதர் முதலானுர், சண்டர் முதலானுரான நித்யஸூரிகள் விமாநதேவதைகளாக உள்ளனர். இவ்வண்ணமாக ஜகந்நாதனுன ராமனை தியானித்து, மனத்தாலேயே பூஜிக்கவேண்டியது. மந்திரத்தை ஆருயிரம்முறை ஜபித்து ஆயிரம்முறை ஹோமம் செய்யவேண்டியது. ஹவிஸ்ஸினுலேயாவது ஹோமம் செய்யலாம். அல்லது இரு கைநிறைந்த புஷ்பங்களினுலாவது செய்யலாம். சோம்பலில்லாமல் தேவர் தலேவனை இம்மாதிரி பூஜித்தால் அந்த தேஹம்விட்டவுடன் அவனுக்குப் பரமபதத்தில் ராமஸாருப்யம் கிடைக்கிறது.

http://acharya.org

கல்வி, மனைவி, அரசு, தனம் முதலானவற்றில் எதை மனத்தில் விரும்பினாலும் அடையலாம். வேறு எந்ததேவதையை வணங்கினாலும இப்படி எல்லா ஸித்திகளையும் அடையமுடியாது. ராமனையே பூஜிககவேணடியது; அவனுடைய மந்திரத்தையே எபபோதும ஜபிக்கவேண்டியது. இல்லாவிடில் இம்மையிலும் மறுமையிலும் நாசத்தையே அடைவான். தாரகப்₃ரஹ்மம எனபபடும் இம்மந்திரம் ஒப்பற்றதாயிருக்கையாலே, இதை ஜபித்தால் எந்த ஸித்தியையும அடையலாம். ஜபிக்காவிடில் நாசததையே அடைவான. காயத்ரி, மந்திரரத்னமான துவயம, அஷ்டாக்ஷர துவாதசாக்ஷர மந்திரங்கள, விஷ்ணுஷட₃க்ஷரீ முதலான எல்லா மந்திரங்களையும முதலில் ஜபிக்கவேண்டியது; ஸித்திபெறும் பொருட்டு இந்தத்தாரக மந்திரத்தையும் எப்போதும் ஜபிக்கவேண்டியது; இநதமஹா மந்திரங்களை ஜபிக்காமல் ஸித்தியடைய முடியாது. ஆகையால் முற்கூறிய மஹாமந்திரங்களை ஜபித்து விட்டே இத்தாரகமந்திரததை ஜபிக்கவேண்டும். கல்வி, மனைவி, பணம், அரசு முதலியவை, புஷ்பம், ஆரோக்யம் ஜயம ஆகியவற்றை விருமபுகிறவர்கள (முறையே) ரூபம, நெய், பில்வம, செந்தாமரை. ஜாதிப்பூ, இளமத₃ர்ப்பை₄, செவ்வரளி ஆகியவற்றால் ஹோமம செய்து எலலா ஸித்தியையும அடைவார்கள, வைஷ்ணவனாயிருப்பவன புலனடக்கத்துடன காலையிலும் மாலையிலும் ஆறுமாதகாலம ஆயிரதெதட்டு அல்லது நூற்றெட்டுதரம் எளளினால ஹோமம செய்வதால் எல்லா ஸித்தியையும அடைவான. உயிருள்ளவரையில பக்தியுடன ராமனை தியானித்துக் கொணடே எவன ஜபிக்கிறானோ அவன இறநதபின் மனைவி மககளோடும சுற்றத்தாரோடும சுவர்க்கத்தில (பரமபதத்தில்) பூஜிக்கபபடுகிறான். ஷட்(ப₂ட்) காரததோடு கூடியதாய், ஸ்வாஹா ரூபதத்துடன முடிவதான தாரகமந்திரம் ராமாஸ்த்ரம் எனப்படுகிறது. பெருவலிமையுள்ள ராமனை தியானித்து, எல்லா ஆபத்துக்களிலும இநத ராமாஸ்திரததை ஜபிக்கவேண்டியது. திருடர், நெருப்பு, எதிரிகள ஆகியவற்றால், பீடை எற்படும்போதும், வியாதிபயங்களின் போதும, நீர், காற்று, கிரஹஙகள முதலானவற்றால பயங்கள் ஏற்படும்போதும, சஙகம, சக்ரம, வில, அமபு ஆகியவற்றை நான்குகைகளில தரிததவனாய், மிகப்பெரிய பலமுடையவனாய், லக்ஷ்மணனோடு கூடியவனாய, அரக்கர்களை அழித்தவனான ராமனை பக்தியோடு தியானித்து ஆயிரமுறை இநத ராமாஸ்திர மநதிரத்தை ஜபித்தானாகில எலலா ஆபத்துக்களினின்றும் விடுபடுகிறான. ஸூர்யோதயத்தில எப்படி இருள அழிகின்றதோ,

http://acharya.org

அப்படியே ராமனை நினைத்தமாத்திரத்தில் உபத்3ரவங்கள் அனைத்தும் நீங்குகின்றன. அரசனே! இவ்வண்ணம் ஸ்ரீராம மந்திரத்தின் பிரயோகமுறை விளக்கப்பட்டது.]

இவ்வண்ணமாக ஸ்ரீ ராம தாரகமந்திரத்தின் பெருமை முதலானவை விளக்கப்பட்டன. உருத்திரன் முதலான தேவதைகளும், ரிஷிகளும் இந்த மந்திரத்தை ஜபித்தே உயர்பதவிகளை அடைந்தனர் என்று இங்கு கூறியிருப்பதிலிருந்து அவர்கள் ஜீவர்களே என்பதும், ராமனே பரமாத்மா என்றும், அவனுடைய மந்திரமே மோக்ஷமுள்ளிட்ட எல்லாப் பலன்களையும் அளிக்கவல்லது என்றும் விளங்குகிறது. இனி, க்ருஷ்ண மந்திரத்தின் பொருள் முதலானவை விளக்கப்படும் பகுதியைக் காண்போம்.

விதா4நம் க்ருஷ்ணமந்த்ரஸ்ய வக்ஷ்யாமி ஶ்ருணு பார்த்தி2வ |
ஸ்ரீக்ருஷ்ணாய நமோ ஹ்யேஷ மந்த்ர: ஸர்வார்த்த2ஸாத4க: ||
க்ருஷ்ணேதி மங்க3ளம் நாம யஸ்ய வாசி ப்ரவர்த்ததே |
ப4ஸ்மீப4வந்தி ராஜேந்த்3ர மஹாபாதககோடய: ||
ஸக்ருத் க்ருஷ்ணேதி யோ ப்3ரூயாத் ப4க்த்யா வாபி ச
மாநவ: |
பாபகோடிவிநிர்முக்தோ விஷ்ணுலோகமவாப்நுயாத் ||
அஶ்வமேத4ஸஹஸ்ராணி ராஜஸூயஶதாநி ச |
ப4க்த்யா க்ருஷ்ணமநும் ஜப்த்வா ஸமாப்நோதி ந ஸம்ஶய: ||
க3வாம் ச கந்யகாநாம் ச க்3ராமாணாம் சாऽயுதாநி ச |
க3த்வா கோ3தா3வரீ க்ருஷ்ணா யமுநா ச ஸரஸ்வதீ ||
காவேரீ சந்த்3ரபா4கா3தி3ஸ்நாநம் க்ருஷ்ணேதி நோ ஸமம் |
க்ருஷ்ணேதி பஞ்சக்ருத் ஜப்த்வா ஸர்வதீர்த்த2ப2லம் லபே4த் ||
கோடிஜந்மார்ஜிதம் பாபம் ஜ்ஞாநதோऽஜ்ஞாநத: க்ருதம் |
ப4க்த்யா க்ருஷ்ணமநும் ஜப்த்வா த3ஹ்யதே தூலராஶிவத் ||
அக2ம்யாக3மநாத் பாபாத் அப4க்ஷ்யாணாம் ச ப4க்ஷணாத் |
ஸக்ருத் க்ருஷ்ணமநும் ஜப்த்வா முச்யதே நாத்ர ஸம்ஶய: ||
க்ருஷிர்பூ4வாசக: ஶப்3தோ3 ணஶ்ச நிர்வ்ருதிவாசக: |
உப4யோஸ்ஸங்க3திர்யத்ர தத்3ப்3ரஹ்மேத்யபி4தீ4யதே ||
ணகாரஶ்ச ஷகாரஶ்ச ப3லப்ராணௌ ப்ரகீர்த்திதௌ |
ஆத்மந்யேதௌ ஸமாயுக்தௌ ஜக3தோஸ்யாபி க்ருஷ்ணத: ||

http://acharya.org

தஸ்மாத் க்ருஷ்ணேதி மந்த்ரோயம் வாசக: பரமாத்மந: |
க்ருஷ்ணேதி பரமோ மந்த்ர: ஸர்வவேதா3தி4க: ஸ்ம்ருத: ||
ஶ்ரிய ஸஹிதா ப்ராணப3லாத் ஶ்ரீக்ருஷ்ண இதி வை ஸ்ம்ருத: |
ஏவமர்த2ம் விதி3த்வைவ யஶ்சாஷ்டமந்த்ரம் ஜபேத்3பு3த4: ||
ஸர்வகாமப்ரத3த்வாத் து பீ3ஜம் காந்த3ர்ப்பமுச்யதே |
நித்யாநபாயா ஶ்ரீஶக்தி: மநோரஸ்ய ப்ரயுஜ்யதே ||
தே3வர்ஷிர்நாரத3ஸ்தஸ்ய கா3யத்ரீ ச2ந்த3 உச்யதே |
தே3வதா ருக்மிணீப4ர்த்தா க்ருஷ்ண: ஸர்வப2லப்ரத3: ||
பூர்வவத்3விதி4நா மந்த்ரம் க்3ருஹீத்வா வைஷ்ணவாத்3 கு3ரோ: |
ஸ்நாநவஸ்த்ராதி3பி4: ஶுத்3த4: க்ருத்யம் க்ருத்வோர்த்4வ புண்ட்3ரக்4ருத் ||
துளஸீகாநநே ரம்யே தே3வாநாமாலயே ஶுபே4 |
குஹே க்ருஷ்ணாஜிநே வாபி புஷ்யே வா ஶுப4வாஸரே ||
ஸமாஸீநஸ்து குர்வீத ப்ராணாயாமஶ்ச (ம் ச)பூர்வவத் |
ஆதி3பீ3ஜேந குர்வீத ஷட3ங்கேஷு யதா2க்ரமம் ||
அங்கு3லீஷ்வபி தேநைவ ந்யாஸகர்ம ஸமாசரேத் |
முகே2 பா3ஹ்வோஶ்ச ஹ்ருத3யே கரே ஜாங்வோஶ்ச பாத3யோ: ||
விந்யஸ்ய மந்த்ரவர்ணாநி சக்ரந்யாஸம் த(ஸஸ்த)த: ஸ்ருமத: |
பூர்வஜந்மமயா(வந்மந்த்ரபா)தீ3நி ஸ்மரேதா3யு4ராணி ச ||
விசித்ரசுப4பர்யங்கே தி3வ்யகல்பதரோரத4: |
ஸுக3ந்த4புஷ்பஸங்கீர்ணே ஸர்வத: ஸுவிசித்ரிதே ||
தஸ்மிந் தே3வ்யா ஸமாஸீநம் ருக்மிண்யா ருக்மவர்ணயா |
நீலோத்பலாப4ம் கந்த3ர்ப்பலாவண்யம் பத்3மலோசநம் ||
சந்த்3ராநநம் ஜபாபுஷ்பரக்தஹஸ்தபதா3ம்பு3ஜம் |
நீலகுஞ்சிதகேஶம் ச ஸுகபோலம் ஸுநாஸிகம் ||
ஸுப்4ருயுக3ம் ஸுபி3ம்பே3ாஷ்ட2ம் ஸுத3ந்தாவிராஜிதம் |
உந்நதாமஸம் தீ3ர்க்கபா3ஹும் பீநவக்ஷஸமவ்யயம் ||
நிரங்கசந்த்3ரநக2ரம் ஸர்வலக்ஷணலக்ஷிதம் |
ஶ்ரீவத்ஸகௌஸ்துபே4ாத்3பா4ஸிவநமாலாமநோஹரம் ||

http://acharya.org

பீதாம்ப₃ரம் ச பூ₄ஷாட்₄யம் ப₃ாலார்க்காப₄ம் ஸுகுண்ட₃லம்।
ஹாரகேயூரகடகை: அங்கு₃லீயைஶ்ச ஶோபி₄தம் ॥
மௌக்திகாந்விதநாஸாக்₃ரம் கஸ்தூரீதிலகாந்விதம் ।
ஹரிசந்த₃நலிப்தாங்க₃ம் ஸதை₃வாऽऽரூட₄யௌவநம் ॥
மந்தா₃ரபாரிஜாதாதி₃குஸுமை: கப₃ரீக்ருதம் ।
அநர்க்₄யமுக்தாஹாரைஶ்ச துளஸீவநமாலயா ॥
ஶங்க₂சக்ரஸமேதாப்₄யாம் உத்₃பா₃ஹுப்₄யாம் விராஜிதம் ।
இதராப்₄யாம் தத₂ா தே₃வீம் ஸமாஶ்லிஷ்டம் நிரந்தரம் ॥
அலங்க்ருதாபி₄: ஸத்யாதி₃மஹிஷீபி₄: ஸமாவ்ருதம் ।
காளிந்தீ₃ ஸத்யப₄ாமா ச மித்ரவிந்த₃ா ச நாக்₃நிஜித் ॥
ஸுநந்த₃ா ச ஸுஶீலா ச ஜாம்ப₃வதீ ஸுலக்ஷ்மணா ।
ஏதா மஹிஷ்ய: ஸம்ப்ரோக்தா: க்ருஷ்ணஸ்ய பரமாத்மந: ॥
தாபி₄ஶ்ச ராஜகந்யாநாம் ஸஹஸ்ரை: பரிஸேவிதம் ।
தாரகாவ்ருதராஜேவ ஶோபி₄தம் நிதி₄பி₃ர்வ்ருதம் ॥
ஏவம் த்₄யாத்வா ஹரிம் நித்யமர்ச்சயித்வா ஜபேந்மநும் ।
ஸாளக்₃ராமே ச துளஸீவநே வா ஸ்த₃ண்டி₃லே ஹ்ருதி₃ ॥
ஸ்ம்ருத்வா ஜபேத் த்ரிஸந்த்₄யாஸு ஷட்ஸஹஸ்ரம் மநும் த்₃விஜ: ।
விஷ்ணுதுல்யவபு: ஶ்ரீமாந் விஷ்ணுலோகமவாப்நுயாத் ॥
ஸர்வஸித்₃தி₄மவாப்நோதி இஹ லோகே பரத்ர ச ।
வித்₃யார்த்தீ₂ வேணுக₃ாயம் தம் ஜபேத் த்₄யாயந் ருதுத்ரயம் ॥
ஜுஹுயாத் குஸுமை: ஶுப்₄ரை: வித்₃யாஸித்₃தி₄மவாப்நுயாத் ।
ஆயுஷ்காமீ து பூர்வாஹ்ணே வத்ஸரம் ப்ரயுதம் ஜபேத் ॥
த்₄யாயேத் ஶிஶுதநும் க்ருஷ்ணம் திலைர்ஹுத்வாऽऽயுராப்நுயாத் ।
கந்யார்த்தீ₂ து ஜபேத் ஸாயம் ஷோட₃ஶம் த்ர்யயுதம் ஹரிம் ॥
த்₄யாத்வா ஸஹஸ்ரம் ஜுஹுயாத்லாஜைர்மது₄விமிஶ்ரிதை: ॥
ஸ்த்ரியம் லபே₄த் ஸ்வாபி₄மதாம் ரூபௌதா₃ர்யவதீம் ஸதீம் ।
ஸம்பத்காமீ ஜபேத் நித்யம் மத்₄யாஹ்நே து ருதுத்ரயம் ॥
த்₃வாரகாயாம் ஸுத₄ர்மாயாம் ரத்நஸிம்ஹாஸநே ஸ்தி₂தம் ।
ஶங்க₂ாதி₃நிதி₄பீ₄ ராஜகுலைரபி ஸுஸேவிதம் ॥

http://acharya.org

ஹாராதி₃பூ₄ஷணைர்யுக்தம் ஶங்க₂சக்ர க₃தா₃தா₄ரிணம்।
த்₄யாத்வா ஸம்பூஜ்ய ஹோமம் ச ஜபஸ்சாயுதஸங்க்₂யயா ॥
அப்₃ஜபி₃ல்வத₃லைர்வாபி ஹோமோ மது₄விமிஸ்ரித:।
ஶாஸ்வதீம் ஶ்ரியமாப்நோதி குபே₃ரஸத்₃ருஶோ ப₄வேத் ॥
ரூபலாவண்யகாமீ து ராஸமண்ட₃லமத்₄யக₃ம்।
த்₄யாயந் தரிமாஸமயுதம் ஜப்த்வா லாவண்யவாந் ப₄வேத் ॥
ஏவம் க்ருஷ்ணமநோரஸ்ய மாஹாத்மயம் பரிகீர்த்திதம்।

[அரசனே! கிருஷ்ண மந்திரத்தின் விதா₄னத்தைச் சொல்லுகிறேன் கேள். "ஶ்ரீக்ருஷ்ணாய நம:" என்னும் இக்கிருஷ்ண மந்திரம் எல்லாப் பலன்களையும் ஸாதிக்கும். அரசர் தலைவனே! 'க்ருஷ்ண' என்னும் மங்களமான திருநாமம் எவனுடைய வாக்கில் உலவு கின்றதோ, அவனுடைய கோடிக்கணக்கான பெரும்பாவங்கள் சாமபலாகும். அன்புடன் ஒரு தடவை 'க்ருஷ்ண!' என்று கூறு கின்ற மனிதன் கோடிக்கணக்கான பாபங்களினின்றும் நீங்கப் பெற்று விஷ்ணுலோகத்தை அடைவான். ஆயிரக்கணக்கான அஸ்வமேதங்களையும், நூற்றுக்கணக்கான ராஜஸூயங்களையும் செய்த பலனை பக்தியுடன் கிருஷ்ண மந்திரத்தை ஜபிப்பதினால் அடைவான் என்பதில் ஐயமில்லை. பதினாயிரக்கணக்கான பசுக்கள், கன்யகைகள், கிராமங்கள் ஆகியவற்றைக் கொடுப்பதும், கோதாவரி, கிருஷ்ணா யமுனை, ஸரஸ்வதி, காவேரி, சந்த்₃ரப₄ாகா₃ முதலியவற்றில் ஸ்நானம் செய்வதும் 'க்ருஷ்ண' என்று கூறுவதற்கு ஸமமாகாது. 'க்ருஷ்ண!' என்று ஐந்து முறை ஜபித்தால் எல்லாத் தீர்த்தங்களில் குடைந்தாடுவதின் பலனையும் அடையலாம். அறிந்தும், அறியாம லும் கோடிக்கணக்கான பிறப்புகளில் செய்த பாபம் பக்தியுடன் கிருஷ்ண மந்திரத்தை ஜபிப்பதால் (தீயிற்பட்ட) பஞ்சுப் பொதி போல் எரிந்துவிடுகின்றது. ஒருதரம் கிருஷ்ண மந்திரத்தை ஜபிப்ப தால் கூடத்தகாத ஸ்திரீயுடன் கூடியபாபம், புசிக்கத்தகாதவற்றைப் புசித்த பாபம் ஆகியவற்றினின்றும் விடுபடுகிறான் என்பதில் ஐய மில்லை. க்ருஷிஶப்₃த₃ம் கர்ஷணம் (உழவுத்தொழில்) செய்யப்படும் பூமியைக் குறிக்கும்; ணஶப்₃த₃ம் ஆநந்தத்தைக் குறிக்கும்; இரண்டும் சேர்ந்திருக்குமிடமான க்ருஷ்ணனே ப்ரஹ்மமாகிறான். ணகாரமும் ஷகாரமும் ஆகிய இரண்டும் (முறையே) ப₃லமாகவும், ப்ராணனாகவும் கூறப்படுகின்றன. ஆத்மாவில் இவ்விரண்டும் சேர்ந்திருப்பதாலேயே இவ்வுலகை இழுத்துச் செல்லுகின்றன.

ஆகையால், 'க்ருஷ்ணன்' என்னும் இம்மந்திரம் (ப₃லப்ராணன்களையும் அவற்றின்மூலம உலகையும் இயக்குவிக்கும்) பரமாத்மாவுக்கு வாசகமாம். 'க்ருஷ்ணன்' என்னும மேலான மந்திரம் எல்லா வேதங்களைக் காட்டிலும் அதி₄கமானதாகச் சொல்லப்படுகிறது. ஸ்ரீதே₃விக்கு ஸத்தையையும், ப்ராணனையும், ப₃லத்தையும் அளிப்பவனுகையால் பரமாத்மா ஸ்ரீக்ருஷ்ணன என்னப்படுகிருன். இவ்வண்ணமாகப் பொருளை அறிந்து, அதன் பிறகு அறிவாளியாயிருப்பவன் மந்திரத்தை ஜபிக்கக்கடவன. எல்லாக் காமங்களையும் அளிப்பதாகையாலே, மந்மதனையும் வசப்படுத்தும் ஸ்ரீக்ருஷ்ண மந்திரம பீ₃ஜமாகிறது. இந்த மந்திரத்திற்கு என்றும் பிரியாத ஸ்ரீதேவி ஶக்தியாகப் பிரயோகிக்கப்படுகிருள். இமமந்திரத்திற்கு ரிஷி தேவரிஷியான நாரதர்; காயத்ரீ ச₂ந்த₃ஸ்ஸு; எல்லாப் பலனையும் அளிக்கும் ருக்மிணியின் காந்தனை க்ருஷ்ணனே இதன் தேவதை; முன மந்திரங்களைப்போலவே இம்மந்திரத்தையும வைஷ்ணவனை ஆசார்யனிடமிருந்து முறைப்படி உபதேசம் பெற்று, ஸ்நாநம், சுத்தவஸ்திரம் ஆகியவற்ருல் பரிசுத்தியடைந்து, காலைக்கடன்களை முடித்து ஊர்த்₄வபுண்ட்₃ரம் தரித்து, அழகான துளஸிக்காட்டிலாவது, சுபமான தேவாலயத்திலாவது, தர்ப்பைமீதோ, மான் தோலிலோ அமர்ந்து, புஷ்டியுள்ள நக்ஷத்திரத்தில் நல்ல தினத்தில் முனபோல் ப்ராணுயாமங்களைச் செய்யவேண்டியது. ஆதி₃பீ₃ஜமான ஸ்ரீக்ருஷ்ண மந்திரத்தினுல் ஆறு அஙகங்களிலும், விரல்களிலும் முனபோலவே முறைப்படி அங்கந்யாஸ கரந்யாஸங்களைச் செய்யவேண்டியது. முகம், தோள்கள், ஹ்ருத₃யம், கை, முழந்தாள்கள், கால்கள் ஆகியவற்றில் (முன்போல்) மந்திரத்தின் எழுத்துக்களை ந்யாஸம் செய்து, அதற்குப்பின சக்ரந்யாஸத்தையும் செய்யவேண்டியது. (க்ருஷ்ணனுடைய) முன் அவதாரங்கள் சேஷ்டிதங்கள் முதலியவற்றையும், திருவாபரணங்களையும் நினைக்கவேண்டியது. விசித்ரமாய் சுபமானதான படுக்கையில், அப்ராக்ருதமான கற்பகவ்ருக்ஷத்தின் கீழ், நறுமணம்மிக்க பூக்கள் பரப்பபெற்றதாய், எல்லாப்படியாலும் மிக ஆச்சர்யமாயிருக்குமிடததில், பொனனிறமுடைய ருக்மிணியோடுகூட வீற்றிருப்பவனுய், நீலோற்பல புஷ்பமபோல் நிறமுடையவனுய், மனமதனையொத்த அழகுடையவனுய், தாமரைக் கண்ணனுய், சந்திரன்போன்ற திருமுகமுடையவனுய், செம்பருத்திப்பூப்போன்று சிவந்த திருக்கைகளையும், திருவடித்தாமரைகளையும உடையவனுய், சுருண்டிருண்ட திருக்குழற்கற்றையை

http://acharya.org

உடையவனாய், அழகிய கன்னங்களாலும், திருமூக்காலும், இரு புருவங்களாலும், திருப்பவளங்களாலும், பல்வரிசைகளாலும் விளங்கப்பெற்றவனாய், உயர்ந்த திருத்தோள்களை உடையவனாய், நீண்ட திருக்கைகளை உடையவனாய், பருத்த திருமார்பை உடைய வனாய், அழிவற்றவனாய், களங்கமற்ற சந்திரனைப்போன்ற நகங்களையுடையவனாய், ஸர்வலக்ஷணங்களையும் உடையவனாய், ஶ்ரீவத்ஸமென்னும் மறு, கௌஸ்துப₄மணி, விளங்கா நிற்கும் வநமாலை ஆகியவற்றையுடைய பெரிய திருமார்பையுடையவனாய், பீதாம்பரம் தரித்தவனாய், பல திருவாப₄ரணங்களையுடையவனாய், இளஞ்சூரியனைப்போல் ஒளியுடையவனாய், அழகிய குண்டலங்களையுடையவனாய், ஹாரகேயூரகடகங்களாலும், மோதிரங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனாய், முத்தால் அலங்கரிக்கப்பெற்ற திருமூக்கு நுனியை உடையவனாய், கஸ்தூரீ திலகமுடையவனாய், ஹரிசந்தனத்தால் பூசப்பெற்ற திருமேனியை உடையவனாய், எப்போதும் யௌவநநிலையிலேயே இருப்பவனாய், மந்தாரம், பாரிஜாதம் முதலான புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்றவனாய், விலைமதிப்பற்ற முத்துமாலைகளாலும், துளஸீவனமாலையாலும், சங்கசக்கரமேந்தி உயர்ந்து நிற்கும் இருகைகளாலும் விளங்கா நிற்பவனாய், மற்ற இருகைகளாலும் தேவியரை இடைவெளியின்றித் தழுவி நிற்பவனாய், காளிந்தி, ஸத்யபாமா, மித்₃ரவிந்தா, நாக்₃நிஜித், ஸுநந்தா, ஸுஶீலா, ஜாம்பவதி ஸுலக்ஷ்மணை என்னும் பெயருள்ளவர்களாய், நன்கு அலங்கரிக்கப்பெற்றவர்களாய், பரமாத்மாவான தனக்கு அஷ்டமஹிஷிகளான எண்மராலே சூழப்பெற்றவனாய், நக்ஷத்திரங்களால் சூழப்பெற்ற சந்திரனைப்போலே பதினாறுமாயிரம் ராஜகன்யகைகளாகிற பத்னிகளால் சூழ்ந்து நின்று ஸேவிக்கப்பெற்றவனாய், நிதிகளாலே சூழப்பெற்றவனாய், இவ்வண்ணமாகக் கண்ணனை தியானித்து, அர்ச்சித்து தினந்தோறும் மந்திரத்தை ஜபிக்கவேண்டியது. ஸாளக்ராமத்திலோ, துளஸீவனத்திலோ தரையிலோ நெஞ்சிலோ நினைத்து, இருபிறப்பாளன் மூன்று ஸந்த்₄யாகாலங்களிலும் ஜபித்தானாகில், விஷ்ணுவை ஒத்த வடிவினனாகி, கைங்கர்யச்செல்வம் நிறைந்தவனாய், விஷ்ணுலோகத்தை அடைவான். இம்மையிலும் மறுமையிலும் எல்லா ஸித்திகளையும் அடைவான். கல்வியை விரும்புகிறவன், வேணுகானம் செய்யும் கண்ணனை மூன்று ருதுக்களில் (ஆறு மாதம்) தியானித்து, ஜபித்து, நல்ல பூக்களைக்கொண்டு ஹோமம் செய்தானாகில் வித்யா ஸித்தியைப் பெறுவான். நீண்ட ஆயுளை விரும்புகிறவன் ஒரு வருடகாலம் முற்பகலில் பத்துலக்ஷம் முறை மந்திரத்தை ஜபித்து,

http://acharya.org

குழந்தையுருவினனான கண்ணனை தியானித்து எள்ளினாலே ஹோமம் செய்து நீண்ட ஆயுளை அடையலாம். மணம்புரியக் கன்யகையை விரும்புகிறவன் மாலைவேளையில் ஹரியை தியானித்து நாலு லக்ஷத்து எண்பதினாயிரம்முறை மந்திரத்தை ஜபித்து, தேன் கலந்த பொரியாலே ஆயிரம்முறை ஹோமம் செய்தானாகில் தனக்கினியவளாய், தேஹாத்மகுணங்கள் நிறைந்தவளாய், பதிவ்ரதையான மனைவியை அடைவான், செல்வத்தை விரும்புகிறவன், மூன்று ருதுக்கள் தினந்தோறும் நண்பகலில் மந்திரத்தை ஜபிக்கவேண்டும். துவாரகாபுரியில் ஸுதர்மையெனும் ஸபையில், ரத்னஸிம்ஹாஸனத்தில வீற்றிருப்பவனாய், சங்கநிதி, பத்மநிதி முதலான நிதிகளாலும், ராஜகுலங்களாலும் நன்கு ஸேவிக்கப்பெற்றவனாய், ஹாரம் முதலான பூஷணங்களோடு கூடியவனாய், சங்கம் முதலான ஆயுதங்களை தரித்தவனான கண்ணனை தியானித்து, பதினாயிரம் முறை ஜபமும், தேன்கலந்த தாமரையிதழாலோ, பில்வதளத்தாலோ ஹோமமும் செய்து நிலையான செல்வத்தைப்பெற்று குபேரனை ஒத்தவனாவான். சரீரரூபலாவண்யங்களை விரும்புகிறவன், ராஸமண்டலத்தின் நடுவிலிருப்பவனான கண்ணனை மூன்று மாதம் பதினாயிரம்முறை ஜபித்து வடிவழகை அடைவான். இவ்வண்ணமாகக் கிருஷ்ண மந்திரத்தின பெருமை கூறப்பட்டது.]

இவ்வண்ணமாக ஸ்ரீக்ருஷ்ண மந்திரத்தின் பொருள் முதலானவை விளக்கப்பட்டன. இப்பகுதியிலிருந்தும கண்ணனே பரமாத்மாவென விளங்குகிறது. இனி, வராஹமந்திரத்தின் பெருமை முதலானவற்றை விளக்கும் பகுதியைக் காண்போம்.

அநந்தாந் பு₄க₃வந்மந்த்ராந் வக்தும் ஶக்யம் ந தே மயா ||
வாராஹம் நாரஸிம்ஹம் ச வாமநம் துரக₃ாநநம் |
க்ரமேணைவ து வக்ஷ்யாமி யதா₂வத் ஶ்ருணு பார்த்தி₂வ ||
ஹுங்காரம் ப்ரத₂மம் பீ₃ஜம் ஆத்₃யம் வாராஹ முச்யதே ||
பஶ்சாத்து த₄ரணீ பீ₃ஜம் லக்ஷ்மீர் பீ₃ஜம் தத:பரம் ||
த்ரீந் பீ₃ஜாநாதி₃த: க்ருத்வா பஶ்சாந்மந்த்ரப்ரயோஜநம் ||
ஓம் நமோ ப₄க₃வதே பஶ்சாத் வாராஹரூபிணே பூ₄ர்பு₄வஸ்-
ஸ்வ:பதயேதி பூ₄பதித்வம் மே தே₃ஹீதி தத₂ாப்யாயஸ்வேதி||
அங்கு₃லீஷு யதா₂ங்கே₃ஷு பீ₃ஜேநாத்₃யேந வை க்ரமாத் |
யதா₂வந்ந்யாஸக்ருத்₃பூ₄த்வா பஶ்சாத் த்₄யாநம் ஸமாசரேத் ||

http://acharya.org

ப்$_3$ருஹத்தநும் ப்$_3$ருஹத்$_3$க்$_3$ரீவம் ப்$_3$ருஹத்$_3$த$_3$ம்ஷ்ட்ரம் ஸுகோப$_4$நம் |
ஸமஸ்தவேத$_3$வேத$_3$ாங்க$_3$ஸாங்கோ$_3$பாங்க$_3$யுதம் ஹரிம் ||
ரஜதாத்$_3$ரிஸமப்ரக்$_2$யம் சதப$_3$ாஹும் சதேக்ஷணம் |
உத்$_3$த்$_4$ருத்ய த$_3$ம்ஷ்ட்ரயா பூ$_4$மிம் ஸமாலிங்க்$_3$ய ப$_4$ஜைர்முத$_3$ா ||
ப்$_3$ரஹ்மாதி$_3$க்ரித$_3$ைஸ்ஸர்வைஸ்ஸநகாத்$_3$யைர்முநீபவரை:|
ஸ்தூயமாநம் ஸமந்தாச்ச கீ$_3$யமாநம் ச கிந்நரை: ||
ஏவம் த்$_4$யாத்வா ஹரிம் நித்யம் ப்ராதரஷ்டோத்தரம் சதம் |
ஜப்த்வா லபே$_4$ச்ச பூ$_4$பத்வம் ததோ விஷ்ணுபுரம வ்ரஜேத ||
நமோ யஜ்ஞவராஹாய இத்யஷ்டாக்ஷரகோ மநு: |
ஏவம் த்$_4$யாத்வா ஹரிம் நித்யம் ப்ராதரஷ்டோத்தரம் சதம் ||
உக்தபீ$_3$ஜத்ரயம் பூர்வம் க்ருத்வா மந்த்ரம் ஜபேத்$_3$பு$_3$த$_4$ |
மூலமந்த்ரமித$_3$ம் ப்ராஹு: வாராஹம் முநிபுங்க$_3$வா: ||
ஏதமேவ பரம் மந்த்ரம் ஜப்த்வா பூ$_4$மிபதிர்ப$_4$வேத் |
நித்யமஷ்டஸஹஸ்ரம் து ஜபேத்$_3$விஷ்ணும் விசிந்தயந் ||
கமலைர்பி$_3$ல்வபத்ரைர்வா ஜுஹுயாச்ச த$_3$சாம்சகம் |
ஏவம் ஸம்வத்ஸரம் ஜப்த்வா ஸார்வபௌ$_4$மோ ப$_4$வேத் த்$_4$ருவம் ||
ராஜ்யம் க்ருத்வா ச த$_4$ர்மேண பஸ்சாத் விஷ்ணுபத$_3$ம் வ்ரஜேத் |

[அரசனே! கணக்கற்றவையான பகவந்மந்திரங்களை உனக்கு விரிததுரைக்க என்னால் முடியாது. வராஹமந்திரம், நரஸிம்ஹ மந்திரம, வாமநமநதிரம், ஹயக்$_3$ரீவமந்திரம் ஆகியவற்றை வரிசையாக உள்ளபடி சொல்லுகிறேன். வராஹமந்திரத்திற்கு 'ஹும்' என்பது முதல்பீ$_3$ஜமாகும். அடுததபடி 'த$_4$ரணீ' எனப தும, அடுத்தபடி 'லக்ஷ்மீ:' எனபதும் பீஜங்களாகும். மூன்று பீஜங்களையும முதலில் பிரயோகம் செய்து, பிறகு மந்திரத்தைப் பிரயோகிககவேணடும. "ஓம் நமோ ப$_4$க$_3$வதே" எனறு முதலில் சொல்லி, "வராஹரூபிணே பூ$_1$ர்பு$_4$வஸ் ஸுவ: பதயே" என்று அடுத்த படியும, "பூ$_1$பதித்வம் மே தே$_3$ஹி" என்று அடுத்தபடியும் சொல்லி, "தத$_3$ாப்யாயஸ்வ" எனறு முடிககவேண்டும். [ஓம-பகவானும், பூ$_4$ர்பு$_4$வஸ்ஸுவர்லோகபதியான வராஹரூபிக்கு நம: பூமிககுப் பதியாயிருக்கும் பெருமையை எனக்கு அளிப்பாய்; அதை வளாப்

http://acharya.org

பாய் என மந்திரத்தின் பொருள்.] முதல் பீ₃ஜமான ஹுங்காரத் தால் முன் சொன்ன முறைப்படி அங்கந்யாஸகரந்யாஸங்களைச் செய்து, பிறகு தியானம செய்யவேண்டியது; பெரியசரீரத்தை உடையவராய், பெரிய கழுத்தை உடையவராய், பெரிய த₃ந்தங் களை உடையவராய், மிக அழகியவராய், எல்லா வேதங்களையும், வேதாங்கங்களையும ஸாங்கோபாங்கமாகத் தன்னிடம் அடக்கி யிருப்பவராய், ஹரியெனப்படுபவராய், வெள்ளிமலைபோனறவ ராய், நூறு திருக்கைகளையும், நூறு திருக்கண்களையும உடையவ ராய், தநதத்தாலே பூமியைத் தூக்கியெடுத்து, கைகளாலே உகப்புடன அணைத்துக்கொண்டிருப்பவராய், பிரமன் முதலான எல்லா தேவர்களாலும், ஸநகர் முதலான எலலா முனிவர் தலைவர் களாலும் துதிக்கப்படுமவராய், கிந்நரர்களால் சுற்றிலும் பாடப் படுபவராய் இவ்வண்ணமாக வராஹப்பெருமானை தினந்தோறும காலையில் தியானித்து நூற்றெட்டுதரம் மந்திரததை ஜபித்தால், பூமிபாலனுயிருக்கும் பெருமையை அடைந்து விஷ்ணுலோகததை அடைவான. ''நமோ யஜ்ஞவராஹாய'' எனபது வராஹப்பெருமானின் அஷ்டாக்ஷரமந்திரமாகும். முற்கூறியபடி தியானித்து தினந்தோறும காலையில் முற்கூறிய மூன்று பீஜங்களையும் முதலில் சொல்லி, இவ்வஷ்டாக்ஷர மந்திரத்தை நூற்றெட்டுதரம அறிவாளியா யிருப்பவன் ஜபிககவேண்டியது. முனிவர் தலைவர்கள் இதை வராஹமூலமந்திரம் என்று கூறுகிறுர்கள. இப்பரமமந்திரத்தையே ஜபித்தாலும பூமிபதியாவான. விஷ்ணுவைச் சிந்தித்துக்கொண்டு தினந்தோறும எண்ணுயிரம்தடவை ஜபிக்கவேண்டும. தாமரை யாலாவது, பில்வதளத்தாலாவது எண்ணூறுதரம் ஹோமம் செய்யவேணடும். இப்படி ஒரு வருடம் ஜபித்தால் சக்ரவர்த்தி யாவான என்பது நிச்சயம். அறவழிநின்று அரசாண்டு, பின் விஷ்ணுவின் பரமபதத்தை அடைவான்.]

இவ்வாராஹ மந்திரங்கள் இரண்டிலிருந்தும் பூமிநாயகனுன வராஹப்பெருமானின் பரத்துவம் விளங்குகிறது. இனி, நரஸிம்ஹ மந்திரத்தின் பிரயோகம் முதலானவை விளக்கப்பட்டிருக்கும் பகுதியைக் காண்போம.

வித₄ர்நம் நாரஸிம்ஹஸ்ய மநோர்வக்ஷ்யாமி ஸுவ்ரத ||
உ₃க்ரம் வீரம் மஹாவிஷ்ணும் ஜ்வலந்தம் ஸர்வதோமுக₂ம் |
ந்ருஸிம்ஹம் பீ₄ஷணம் ப₄த்₃ரம் ம்ருத்யோர்ம்ருத்யும்
நமாம்யஹம் ||

http://acharya.org

ஆர்ஷம் ப்3ரஹ்மாऽநுஷ்டுப் ச2ந்தே3ா தே3வதா ச ந்ருகேஸரீ |
சதுர்சதுர்ச ஷட்ஷட்ச ஷட்சதுர்ச யதா2க்ரமாத் ||
ஶிரோலலாட நேத்ரேஷு முக2ப3ாஹ்வங்க4ரிஸந்தி4ஷு ;
ஸாக்3ரேஷு குக்ஷௌ ஹ்ருத3யே க3லே பார்ஶ்வத்3வயேபி ச||
அபராங்கே3 ககுதி3 ச ந்யஸேத் வர்ணாநுக்ரமாத் |
வாயோர்த3ஶாக்ஷரம் யத்து ஸஹோங்காரம் ஸரேப2க்ருத் ||
பி3ந்து3நா ஸஹிதம் யத்து ந்ருஸிம்ஹம் பீ3ஜமுச்யதே |
அங்கு3லீஷு தத2ங்கே3ஷு ந்யாஸம் தேநைவ சோதி3தம் ||
தத்3பீ3ஜமாதி3க: க்ருத்வா மந்த்ரம் பஶ்சாத் ப்ரயோஜயேத்||
ஓம் நமோ ப4க3வதே வாஸுதே3வாய நமோ நரஸிம்ஹாய ஜ்வாலாமாலிநே தீ3ர்க்க4த3ம்ஷ்ட்ராயாக்3நிநேத்ராய ஸர்வ-ரக்ஷாக்4நாய ஸர்வபூ4தவிநாஶாய த3ஹத3ஹ பச பச ரக்ஷ-ரக்ஷ ஹூம் ப2ட் ஸ்வாஹா இதிஜ்வாலாமாலிபாதாலந்ருஸிம்-ஹாய நம: || பீ3ஜேநைவ ந்யாஸ: ||
ஆம் ஹ்ரீம் க்ஷௌம் க்ரௌம் ஹூம் ப2ட் ||
அஸ்ய மந்த்ரஸ்ய ப்3ரஹ்மா ருஷி: பங்கதிஶ்ச2ந்தே3ா |
ந்ருஸிம்ஹோ தே3வதா ந்ருஸிம்ஹாஸ்த்ரமித3ம்
பீ3ஜேநைவ ந்யாஸ: ||
ஸ்ரீகாரபூர்வோ ந்ருஸிம்ஹோ த்3விர்ஜயாது5பரி ஸ்தி2த: |
த்ரி.ஸப்தககருத்வோ ஜப்து: ஸ்யாத் மஹாப4யநிவாரணம் ||
அஸ்ய ப்3ரஹ்மா ச ருத்3ரை(த்2ர)ஶ்ச ப்ரஹ்லாத3ஶ்ச
மஹர்ஷய: |
தைத்3வ ஜக3தீ சந்தே3ா தே3வதா ச ந்ருகேஸரீ ||
ந்யாஸம் பீ3ஜேந குர்வீத ததோ த்4யாநம் ந்ருபோத்தம ||
மாணிக்யாத்3ரிஸமப்ரப4ம் நிஜருசா ஸந்த்ரஸ்தரக்ஷாக3ணம்,
ஜாநுந்யஸ்தகராமபு3ஜம் த்ரிநயநம் ரத்நோல்லஸத்3பூ4ஷணம்|
ப3ாஹுப்4யாம் த்4ருதஶங்க2சக்ரமநிஶம் த3ம்ஷ்ட்ரோல்லஸத்
ஸ்வாநநம்.
ஜ்வாலாஜிஹ்வமுத3க்3ரகேஶநிசயம் வந்தே3
ந்ருஸிம்ஹம் ப்ரபு4ம் ||
உத்3யத்கோடிரவிப்ரப4ம் நரஹரிம்
கோடிக்ஷபேஶோஜ்ஜ்வலம்.

http://acharya.org

த₃ம்ஷ்ட்ராபி₄: ஸுமுகோ₂ஜ்ஜ்வலம் நக₂முகை₂ர் தீ₃ர்க்கை₄ரநேகைர்பு₄ஜை: |
நிர்பி₄ந்நாஸுரநாயகம் து ஶஶப்₄ருத்ஸூர்யாக்₃நிநேத்ரத்ரயம்,
வித்₃யுஜ்ஜிஹ்வஸடாகலாபப₄யத₃ம் வஹ்நிம் வஹந்தம் ப₄ஜே ||
கோபாத₃ரலோலஜிஹ்வம் விவ்ருதநிஜமுக₂ம் ஸோமஸூர்யாக்₃நிநேத்ரம்,
பாத₃ாத₃ாநாபி₄ ரக்தம் ப்ரஸப₄முபரி ஸம்பி₄ந்நதை₃த்யேந்த்₃ரகா₃த்ரம் |
சக்ரம் ஶங்க₂ம் ஸபாஶாங்குஶமுஸலக₃த₃ாஶார்ங்க₃பா₃ணாந் வஹந்தம்,
பீ₄மம் தீக்ஷ்ணாக்₂ரத₃ம்ஷ்ட்ரம் மணிமயவிவித₄ர்கல்பமீடே₃ ந்ருஸிம்ஹம் ||
மஹாப₄யேஷ்விதம் த்₄யாநம் ஸௌம்யமப்₄யுத₃யேஷு ச |
ஸௌவர்ணமண்ட₃பாந்தஸ்ஸ்த₂ம பத்₃மம் த்₄யாயேத ஸகேஸரம் ||
பஞ்சாஸ்யவத₃நம் பீ₄மம் ஸோமஸூர்யாக்₃நிலோசநம் |
தருணாதி₃த்யஸங்காஶம் குண்ட₃லாப்₄யாம் விராஜிதம் ||
உபேயந்யாஸம் ஸுமுக₂ம் தீக்ஷ்ணத₃ம்ஷ்ட்ராவிராஜிதம் |
வ்யாத்தாஸ்யமருணோஷ்ட₂ம் ச பீ₄ஷணைர்நயநைர்யுதம் ||
ஸிம்ஹஸ்கந்த₄ாநுரூபாம்ஸம் வ்ருத்தாயதசதுர்பு₄ஜம் |
ஜபாஸமாங்க்₄ரிஹஸ்தாப்₃ஜம் பத்₃மாஸநஸுஸம்ஸ்தி₂தம் ||
ஸ்ரீவத்ஸகௌஸ்துபே₄ாரஸ்கம் வநமாலாவிராஜிதம் |
கேயூராங்க₃த₃ஹாராட்₄யம் நூபுராதி₃விராஜிதம் ||
சக்ரஶங்கா₂ப₄யவரசதுர்ஹஸ்தம் விபு₄ம் ஸ்மரேத் |
வாமாங்கே ஸம்ஸ்தி₂தாம் லக்ஷ்மீம் ஸுந்த₃ரீம் பூ₄ஷணாந்விதாம் ||
தி₃வ்யசந்த₃நலிப்தாங்கீ₃ம் தி₃வ்யபுஷ்போபஶோபி₄தாம் |
க்₃ருஹீதபத்₃மயுக₃ளமாதுலிங்க₃கராந்விதாம் ||
ஏவம் தே₃வீம் ந்ருஸிம்ஹஸ்ய வாமாங்கோபரி ஸம்ஸ்தி₂தாம் |
த்₄யாத்வா ஜபேத் ஜபம் நித்யம் பூஜயேச்ச யதா₂விதி₄ ||

http://acharya.org

க்ஷௌம் ஹ்ரீம் ஸ்ரீம் ந்ருஸிம்ஹாய நம: ||
இமம் லக்ஷ்மீந்ருஸிம்ஹஸ்ய ஜபேத் ஸர்வார்த்த2த3ம் மநும் ;
அஷ்டோத்தரஸஹஸ்ரம் வா ஜபேத் ஸந்த்4யாஸு வாக்3யத: ||
அக2ண்ட3பி3லவபத்ரைஸ்ச ஜுஹுயாத்3 ஆஜ்யமிஸ்ரிதை: |
ஸர்வஸித்3தி4மவாப்நோதி ஷண்மாஸாந் ப்ரயதோ ப4வேத் ||
தே3வத்வமமரேஸத்வம் க3ந்த4ர்வத்வம் ததா2 ந்ருப |
ப்ராப்நுவந்தி நரா ராஜ்யம் ஸ்வர்க்க3ம் மோக்ஷம் ச
து3ர்லப4ம் ||
யம் யம் காமயதே சித்தே தம் தமேவாப்நுயாத் த்4ருவம் |
ப்3ரஹ்மர்ஷிஸ்தத்ர கா3யத்ரீ நரஸிம்ஹஸ்ச தே3வதா ||
ததே3வ பீ3ஜம ஸக்தி: ஸ்ரீ: மநோரஸ்ய விதி4யதே |
ந்யாஸமத்4யேந பீ3ஜேந சார்ச்சநம் துளஸீத3லை: ||
பூர்வோக்தவிதி4நா பீடே2 பூஜயித்வா ஸமாஹித: |
பரித: பூஜயேத்3தி3க்ஷு க3ருட3ம் ஸங்கரம் ததா2 ||
ஸேஷம ச பத்4மயோநிம் ச ஸ்ரியம் மாயாம் த்4ருதிம் ததா2 |
புஷ்டிம் ஸமர்ச்சயேத்3தி3க்ஷு ததோ லோகேஸ்வராந்
யஜேத் ||
மஹாப4ாக3வதம் தை3த்யநாஸகம் தே3வமக்3ரத: |
ஏவம் ஸம்பூஜ்ய தே3வேஸம் நாரஸிம்ஹம் ஸநாதநம் ||
தத்பத3ம் ஸமவாப்நோதி முதி3த: ஸ்வஜநை: ஸஹ ||

முக்கியமான குறிப்பு

இதுவரையில் விளக்கப்பட்டுவந்த பகவந்மந்திரங்கள் ஸௌம்யமானவை; அவற்றையும் உபதேசம் பெற்றே பிரயோகிக்க வேண்டும். இனி விளக்கப்படும் ந்ருஸிம்ஹமந்திரம் முதலானவை ஒவ்வொரு வகையில் உக்ரமானவை. உபதேசம் பெறாமல் படித்தாலே அநர்த்தத்தை விளைக்கக்கூடியவை. ஆகையால் அவற்றைத் தமிழில் ருஷிச்சந்தோதேவதைகளோடும், அங்கந்யாஸகரந்யாஸங்களோடும் விளக்க விரும்புகின்றிலோம். பகவத் பரத்வத்தைக் காட்டுவதற்காக அவற்றின் பெருமையையும், அவற்றில் விளக்கப்பட்டிருக்கும் பகவத்த்யானத்தையும் மாத்திரம் இனிக்கொடுப்போம்.

http://acharya.org

ந்ருஸிம்ஹ மந்திரங்களின் பெருமை

வ்ருத்₃த₄ஹாரீத ஸ்ம்ருதியில் "உக்₃ரம் வீரம்" என்று தொடங்கும் ந்ருஸிம்ஹாநுஷ்டுப் மந்திரம் முதலில் கொடுக்கப்பட்டுள்ளது. ந்ருஸிம்ஹதாபநீயோபநிஷத்தில் விவரிக்கப்பட்டுள்ள மந்திரமே இது. இதன பொருள் விஷ்ணுசித்தவிஜயம் முதல் பாகத்தில் "ந்ருஸிம்ஹநாபிந்யுபநிஷத்தின் நிர்த்தாரணம்" என்னும் தலைப்பின் கீழ் (இரண்டாம் பதிப்பு பக்கம் 196 முதல் 202 முடிய) விளக்கப்பட்டுள்ளது. இம்மந்திரத்தோடு ஜ்வாலாமாலிபாதாள ந்ருஸிம்ஹனைக்கூறும் ந்ருஸிம்ஹாஸ்த்ர மந்திரமும், லக்ஷ்மீந்ருஸிம்ஹ மந்திரமும் விளக்கப்பெற்றுள்ளன. ந்ருஸிம்ஹாஸ்திர மந்திரத்தில் விளக்கப்படும் ந்ருஸிம்ஹத்யானம் மிக அழகாக உள்ளது. அதாவது:— மாணிக்க மலைபோன்ற ஒளியுள்ளவனும், தன் ஒளியால் ராக்ஷஸ ஸமூஹங்களை பயந்தோடச் செய்பவனும், முழந்தாளில் வைக்கப்பெற்ற திருக்கைத் தாமரையை உடையவனும், மூன்று திருக்கண்களை உடையவனும், ரத்தினங்கள் பிரகாசிக்கும் திருவாபரணங்களை உடையவனும், எப்போதும் திருக்கைகளில் சங்க சக்கரங்களை தரித்து நிற்பவனும், கோரப்பற்கள் விளங்கும் திருமுகத்தை உடையவனும், அக்நிஜ்வாலை போன்ற நாவை உடையவனும், உயரத் தூக்கிநிற்கும் திருக்குழற்கற்றையை உடையவனுமிருக்கும் ஸர்வேஶ்வரனான நரசிங்கனை வணங்குகிறேன். உதிக்கும் கோடிஸூர்யர்களைப்போன்று பிரகாசமுடையவனும், கோடிசந்திரர்களைப்போன்ற அழகையுடையவனும், பற்களால் அழகுபெற்று விளங்கும் திருமுகத்தால் பிரகாசிப்பவனும், கூரிய நகங்களைக் கொண்ட நீண்ட பல திருக்கைகளாலே அஸுரர் தலைவனான இரணியனைக் கிழித்தவனும், சந்திரன், ஸூர்யன், அக்னி ஆகிய மூவரையும் மூன்று கண்களாகக் கொண்டவனும், மின்னல் போன்ற நாவாலும், பிடரிமயிர்களாலும் பயத்தை அளிப்பவனும், நெருப்பை ஏந்தியிருப்பவனான நரசிங்கனை பஜனம் செய்கிறேன். கோபத்தாலே சுற்றிலும் துழாவும் நாவையுடையவனும், வாயைப் பிளந்து கொண்டிருப்பவனும், சந்திரஸூர்யாக்னிகளைக் கண்களாக உடையவனும், திருவடியிலிருந்து நாபி வரையில் (இரணியனின் ரத்தத்தாலே) சிவப்பேறிக்கிடப்பவனும், மடியின்மேலே பிளந்து கிடக்கும் அசுரர்தலைவனின் உடம்பையுடையவனும், சக்ரம், ஶங்கம், பாஶம், அங்குஶம், உலக்கை, கதை, ஶார்ங்கமெனும் வில், அம்புகள் ஆகியவற்றைத் திருக்கைகளில் தரித்து நிற்பவனும், பயங்கரனும், கடுமையான கோரப்பற்களையுடையவனும், ரத்தின

http://acharya.org

மயமான பலவிதமான திருவாபரணங்களை உடையவனை நரசிங்கனைத் துதிக்கிறேன். இது பயத்தைப் போக்கடிக்கவேண்டிய காலத்தில நரசிங்கனைப் பற்றிய தியானம். இனி, மங்களமான காலங்களில் நரசிங்கனைப் பற்றிய ஸௌம்யமான தியானம் விவரிக்கப்படுகிறது:— பொன் மயமான மண்டபத்தின் நடுவில் கேஸரங்களோடு கூடிய தாமரையை தியானிக்கவேண்டியது. (அதன நடுவில்) சிங்கமுகத்தையுடையவனாய், பயங்கரனாய், சந்திர ஸூர்யாக்னிகளைத் திருக்கண்களாக உடையவனாய், இளஞ்சூரியன் போல் ஒளியுள்ளவனாய், குண்டலங்களால் விளங்கப்பெற்றவனாய், அனைவரும் அடையலாம்படியான (ஸௌம்யமான) முகக்குறிகளை உடையவனாய், அழகிய முகத்தை உடையவனாய், கடுமையான பற்களால் விளங்கப்பெற்றவனாய், பிளந்த வாயை உடையவனாய், சிவந்த திருப்பவளங்களை உடையவனாய், பயங்கரமான திருக் கண்களோடு கூடியவனாய், சிங்கத்தின முதுகுபோன்ற திருத தோள்களை உடையவனாய், உருண்டு நீண்ட நாலு திருக்கைகளை உடையவனாய், செமபருத்திப்பூப்போனற திருவடித் தாமரைகளை யும், திருக்கைத் தாமரைகளையும உடையவனாய், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவனாய், ஸ்ரீவத்ஸமெனும் மறுவையும், கௌஸ்துப மெனும மணியையும திருமார்பில் தரித்தவனாய், வநமாலையால் விளங்காநிற்பவனாய், முன்னும பினனுமுள்ள தோள்வளைகள், ஹாரங்கள் இவறறால் நிறையப்பெற்றவனாய், சிலமபு முதலான வற்றால் விளங்காநிறபவனாய், சக்ரம, ஶங்கம, அபயமுத₃ரை, வரதமுத்₃ரை ஆகியவறறை உடைய நாலு திருக்கைகளை உடைய வனாக நரசிங்கனை நினைக்கவேணடும். அவனது இடது மடியில வீற்றிருப்பவளாய், அழகியவளாய், திருவாபரணங்களை உடைய வளாய், திவ்யசந்தனததால் பூசப்பெற்ற திருமேனியை உடைய வளாய், திவ்ய புஷ்பங்களால் அலங்கரிக்கப்பெற்றவளாய், இரு தாமரைகளையும், மாதுளம் பழத்தையும திருக்கைகளில் ஏந்திய வளாய் லக்ஷ்மீதேவியை தியானித்து ஜபம்செய்து பூஜிக்க வேண்டியது. லக்ஷ்மீநருஸிம்ஹனுடைய ஸர்வப₂லப்ரத₃மான மந்திரத்தை ஆயிரத்தெட்டுமுறை ஸந்த்₄யாகாலஙகளில் மௌனமாய் ஜபிக்கவேண்டும. நெய்கலந்த முழு பில்வதளஙகளாலே ஹோமம் செய்யவேண்டும. ஆறு மாதஙகள் புலனடக்கத்துடன் இப்படிச் செய்தால் எல்லா ஸிததிகளையும் அடைவான். தேவனாயிருக்கும தன்மை, இந்த்ரபதவி, கந்தர்வபதவி, ராஜ்யம், சுவர்க்கம், அடைய அரிய மோக்ஷம முதலிய எல்லா விருப்பங்களையும அடைவான.

http://acharya.org

நரசிங்கனைப் பூஜிக்கும்போது பரிவார தேவதைகளாக (1) கருடன், (2) சங்கரன், (3) ஆதிசேஷன், (4) பிரமன், (5) ஸ்ரீதேவி, (6) யோக₃மாயாதே₃வி, (7) தை₄ர்யதே₃வி, (8) புஷ்டிதே₃வி ஆகியவர்களை எட்டு திக்குகளிலும பூஜித்துப் பிறகு லோகபாலகர்களையும், அதன் பிறகு மஹாபாகவதனை பிரஹ்லாதனையும் பூஜிக்க வேண்டும். அசுரனை அழித்த தேவர் தலைவனாய் பழையவனான நரசிங்கனை இவ்வாறு பூஜிப்பவன் தன் உறவினரோடு அவனுடைய லோகத்தை அடைவான்.

இந்த தியானத்தில் பிரமன், உருத்திரன் முதலானவர்களைப் பரிவார தேவதைகளாகக் கூறியிருப்பதிலிருந்தும், மற்றுமுள்ள பெருமைகளிலிருந்தும் நரசிங்களின் பரத்துவம் விளங்குகிறது. இனி, வாமந மந்திரங்களின பெருமை முதலானவற்றை விளககும் பகுதியைக் காண்போம்.

கர்ப்பூரத₄வளம் தே₃வம் தி₃வ்யகுண்ட₃லபூ₄ஷிதம் ।
கிரீடகேயூரத₄ரம் பீதாம்ப₃ரத₄ரம் ப்ரபு₄ம் ॥
பத்₃மாஸநஸ்த₂ம் தே₃வேஶம் சந்த்₃ரமண்ட₃லமத்₄யக₃ம் ।
ஸூர்யகோடிப்ரதீகாஶம் பூர்ணசந்த்₃ரநிப₄ாநநம் ॥
மேக₂லாஜிநத₃ண்ட₃ாதி₃த₄ாரிணம் வடுரூபிணம் ।
கலதெ₄ளதமயம் பாத்ரம் த₃த்₄யந்நேந ஸுபூஜிதம் ॥
பீயூஷகலஶம் வாமே த₃த₄ாநம் த்₃விபு₄ஜம் ஹரிம் ।
ஸநகாத்₃யை: ஸ்தூயமாநம் ஸர்வதே₃வைருபாஸிதம் ॥
ஏவம் த்₄யாத்வா ஜபேந்நித்யம் ஸ்வாஸநே ச ஸமாஹித: ॥
விஷ்ணவே வாமநாயேதி ப்ரணவாதி₃நமோந்தக: ।
இந்த்₃ரார்ஷம் ச விராட் ச₂ந்தே₃ா தே₃வதா வாமந: ஸ்வயம் ॥
ஸுத₄ாபீ₃ஜம் ஸுதீ₃ர்க₄ம் து பீ₃ஜமாத்₃யம் து வாமநம் ।
தேநைவ து ஷட₃ங்க₃ாத்₃யம் ந்யாஸம் குர்வீத வைஷ்ணவ: ॥
த₃த்₄யந்நம் பாயஸம் வாபி ஜுஹுயாத் ப்ரத்யஹம் த்₃விஜ: ॥
ஔபாஸநாக்₃நௌ ஜுஹுயாத₃ஷ்டோத்தரஶதம் க்₃ருஹீ ॥
குபே₃ரஸத்₃ருஶ: ஸ்ரீமாந் ப₄வேத் ஸத்₃யோ ந ஸம்ஶய: ॥
ஓம் நமோ விஷ்ணவே மஹாப₃லாய ஸ்வாஹா இதி
வாமநமந்த்ர: ॥

ஸ்ம்ருத்வா த்ரைவிக்ரமம் ரூபம் ஜபேந் மந்த்ரமநந்யதீ₄: ।
முக்தோ ப₃ந்த₄ாத் ப₄வேத் ஸத்₃ய: நாத்ர கார்யா விசாரணா ॥

http://acharya.org

ஹ்ரீம் ஸ்ரீம் ஸ்ரீவாமனாய நம: இதி மூலமந்த்ர: ||
ப்3ரஹ்மர்ஷி ஸ்சைவ கா3யத்ரீ தே3வதா ச த்ரிவிக்ரம: |
ந்யாஸம் பீ3ஜேந ஜபவாநஷ்டோத்தரஸஹஸ்ரகம் ||
இதி வாமநமந்த்ரஸ்ய ஜபாத்3ந்நபதிர்ப4வேத் ||
உத்3கீ3த2 ப்ரணவோத்3கீ3த2 ஸர்வவாகீ3ஸ்வரேஸ்வர! |
ஸர்வதே3வமயாசிந்த்ய ஸர்வம் போ3த4ய மே பித: ||

வாமன மந்திரங்களின் பெருமை

இங்கு மூன்று வாமனமந்திரங்கள் காட்டப்பட்டுள்ளன. முதல் வாமனமந்திரத்தின் தியானம் பின்வருமாறு, கர்ப்பூரம்போல் வெளுத்தவனாய். தேவனாய், திவ்யகுண்டலங்களால் அலங்கரிக்கப் பெற்றவனாய், கிரீடத்தையும், தோளவளைகளையும் உடையவனாய், பீதாம்பரத்தை தரித்தவனாய், ஸர்வேஸ்வரனாய், பத்மாஸனத்தில் வீற்றிருப்பவனாய், தேவர்தலைவனாய். சந்திரமண்டலத்தின் மத்தியி லிருப்பவனாய், கோடிஸூர்யப்ரகாசமுடையவனாய், பூர்ணசந்திரனை ஒத்த திருமுகமண்டலத்தை உடையவனாய், மேகலை, கிருஷ்ணா ஜினம், தண்டம் முதலான ப்ரஹ்மசாரி வேஷங்களை தரித்திருப்ப வனாய், பொன் (அல்லது வெள்ளி) பாத்திரத்தில் தயிரமுதை யிட்டு (கிருஹிணிகளால்) பூஜிக்கப்பெற்றவனாய், இடதுகையால் அமுதகலசத்தை ஏந்தி நிற்பவனாய், இரண்டு திருக்கைகளை உடையவனாய், அவ்வருடைய மனோநயனங்களை இழுக்கையாலே ஹரியெனத்தக்கவனாய், ஸனகாதிருஷிகளாலே துதிக்கப்படுபவனாய், எல்லா தேவர்களாலும் உபாஸிக்கப்படுபவனாயுள்ள வாமனனை நல்ல ஆஸனத்தில் சாந்தியுள்ளவனாயமர்ந்து தியானிக்கவேண்டும். அந்தணனாயிருக்கும் க்ருஹஸ்தன் தயிரமுதையோ, பாயஸத்தை யோ தினந்தோறும் நூற்றெட்டுமுறை ஔபாஸனாக்னியில் ஹோமம் செய்யவேண்டும். இப்படி செய்தால் உடனே குபேரனை ஒத்த செல்வத்தையுடையவனாவன் என்பதில் ஐயமில்லை. இரண்டாவது வாமன மந்திரத்திற்கு வாமனனுடைய திரிவிக்கிரமரூபத்தின் தியானம் விதிக்கப்படுகிறது. வேறு எதிலும் நெஞ்சு செலுத்தாமல் திரிவிக்கிரமரூபத்தைத்தியானித்து இரண்டாவது மந்திரத்தை ஜபித் தால் ஸம்ஸாரபந்தத்தினின்று உடனே விடுபடுவான் என்னும் விஷயத்தை விசாரிக்கவே வேண்டியதில்லை என்று கூறப்படுகிறது. மூன்றாவதான வாமன மூலமந்திரத்தை ஆயிரத்தெட்டு முறை ஜபிப்பதால் அன்னத்திற்குப்பதியாவான் என்று கூறப்படுகிறது.

ஆக, இவ்வாமன மந்திரதியானத்திலும் எல்லா தேவர்களாலும், ரிஷிகளாலும் உபாஸிக்கப்படுபவனுக வாமனனை ஓதுகையாலே வாமனனின் பரத்துவம் விளங்கிநிற்கிறது. இனி, ஹயக்ரீவ மந்திரத்தின் பெருமையை விளக்கும் பகுதியைக் காண்போம்.

ஹௌ(ஹ்ரூ)ம் ஐம் ஹயக்3ரீவாய நம: ||
ப்3ரஹ்மார்ஷம் சைவ கா3யத்ரீ ஹயக்3ரீவோऽஸ்ய தே3வதா |
ந்யாஸம் பீ3ஜேந க்ருத்வாऽத2 பஶ்சாத்3த்4யாநம் ஸமாசரேத் ||
ஶரச்ச2ஶாங்கப்ரப4மஶ்வவக்த்ரம் முக்தாமயைராப4ரணைரு-
பேதம் |
ரதா2ங்க3ஶங்கா2ஞ்சிதபா3ஹுயுக்3மம் ஜாநுத்3வய
ந்யஸ்தகரம் ப4ஜாம: ||
ஶங்க2ாப4: ஶங்க2சக்ரே கரஸரஸிஜயோ: புஸ்தகம் சாந்ய-
ஹஸ்தே. பி3ப்4ரத்3வ்யாக்2யாநமுத்3ராலஸித3கர-
கரோ மண்ட3லஸ்த2: ஸுதா4ம்ஶோ: |
ஆஸீந: புண்ட3ரீகே துரக3வரஶிரா: பூருஷோ மே புராண:,
ஸ்ரீமாநஜ்ஞானஹாரீ மநஸி நிவஸதாம் ருக்3யஜுஸ்ஸாமரூப: ||
ஏவம் த்4யாத்வா ஜபேந்மந்த்ரம் ஸந்த்4யாஸு
விஜிதேந்த்3ரிய: |
ஸர்வவேதா3ர்த்த2தத்வஜ்ஞோ ப4வேதத்3ர ந ஸம்ஶய: ||
அஷ்டோத்தரஸஹஸ்ரம் வா ஶதமஷ்டோத்தரம் து வா |
ஜபேச்ச ஜுஹுயாச்சைவம் ஸாஜ்யை: ஶுப்4ரை:
ஸதண்டு3லை: ||
வித்3யாஸித்3தி4மவாப்நோதி ஷண்மாஸாத் த்3விஜஸத்தம: |
அஷ்டாத3ஶாநாம் வித்3யாநாம் ப்3ருஹஸ்பதிஸமோ ப4வேத் ||

ஹயக்3ரீவ மந்திரப்பெருமை

இதில் விதிக்கப்படும் ஹயக்3ரீவ தியானம் பின்வருமாறு.— ஶரத்காலசந்திரனைப்போல் ஒளியுள்ளவனாய், குதிரைமுகமுடையவனாய், முத்தாலான ஆபரணங்கள் அணிந்தவனாய், ஶங்க2சக்ரம் தரித்த இருதிருக்கைகளை உடையவனாய், இருமுழந்தாள்களிலும் வைக்கப்பெற்ற மற்ற இருகைகளை உடையவனை ஹயக்ரீவனை உபாஸிக்கின்றோம். ஶங்கம்போல் ஒளியுள்ளவனாய், இருகைகளால்

http://acharya.org

சங்கசக்கரங்களை தரித்தவனும் மற்றொரு கையால் புத்தகத்தையும், மற்றொரு கையால் வ்யாக்யான முத்திரையையும் தரித்தவனும், சந்த்ரமண்டலத்திலிருப்பவனும், தாமரையில் வீற்றிருப்பவனும், ருக்யஜுஸ்ஸாமவேதரூபனும், ஹயக்ரீவரூபியாய், ஶ்ரிய:பதியான புராணபுருஷன் அஜ்ஞானவிருளைப் போக்குகின்றவனும் என் நெஞ்சில் வாழட்டும்; இப்படி தியானித்து ஹயக்ரீவ மந்திரத்தைப் புலனடக்கத்துடன் ஸந்த்₄யாகாலங்களில் ஜபிப்பதால் எல்லா வேதாந்தங்களிலும் உண்மைப்பொருளை அறிவான்—என்பதில் ஐயமில்லை. ஆயிரத்தெட்டு தடவையாவது, நூற்றெட்டு தடவையாவது இம்மந்திரத்தை ஜபித்துப் பரிசுத்தமான அரிசியோடுகூடிய நெய்யால் ஹோமம் செய்தால், அந்தணர் தலைவன் ஆறு மாதத்தில் வித்யாஸித்தியைப் பெறுவான். பதினெட்டு வித்யைகளிலும் பிருஹஸ்பதியை ஒத்தவனாவான்.

இங்கு ஹயக்ரீவனைப் புராண புருஷனாகவும் வேதஸ்வரூபனாகவும் கூறியிருப்பதிலிருந்து அவனே பரமபொருள் என விளங்குகிறது. இனி, ஸுதர்சன மந்திரங்களை விதிக்கும் இவ்வத்தியாயத்தின் கடைசிப்பகுதி பினவருமாறு,—

ஸஹஸ்ராரம் ஹும்ப₂டி₂த்யேவம் மூலம்
ஸௌத₃ர்ஶநம் மநும் |
அஹிர்பு₃த்₄நோऽநுஷ்டுப₃ஸ்ய தே₃வதா ச ஸுத₃ர்ஶநம் ||
அசக்ராய விசக்ராய ஸுசக்ராய ததை₂வ ச |
விசக்ராய ஸுசக்ராய ஜ்வாலாசக்ராய வை க்ரமாத் ||
ஷட₃ங்கே₃ஷு ச விந்யஸ்ய பஶ்சாத்₃த்₄யாநம் ஸமாசரேத் |
நமஶ்சக்ராய ஸ்வாஹேதி த₃ஶதி₃க்ஷு யதா₂க்ரமம் ||
சக்ரேண ஸஹ ப₃த்₄நாமீத்யுக்த்யா (த்யுக்த்வா)-
ப்ரதிதி₃ஶேத் தத: |
த்ரைலோக்யம் ரக்ஷரக்ஷ ஹும் ப₂ட் ஸ்வாஹா இதி வை
க்ரமாத் ||
அக்₃நிப்ராகாரமந்த்ரோऽயம் ஸர்வரக்ஷாகர: பர: |
ஓம் மூர்த்₄நி ஸ(ஸம்)ப்₄ருமத்₄யே ஹம் முகே₂
ஸ்த்ராஹமதீ₄த்யத: |
ரம் கு₃ஹ்யே ஹம் து ஜாங்வோஶ்ச ப₂ட் பத₃த்₃வயஸந்தி₄ஷு ||

http://acharya.org

கல்பாந்தார்க்கப்ரகாஶம் த்ரிபு₄வநமகி₂லம் தேஜஸா பூரயந்தம்
ரக்தாக்ஷம் பிங்க₃கேஶம் ரிபுகுலப₄யத₃ம்
பீ₄மத₃ம்ஷ்ட்ராஜ(ட்ட)ஹாஸம் ।
ஶங்க₂ம் சக்ரம் க₃தா₃ப்₃ஜம் ப்ருது₂கரமுஸலம்
சாபபாஶாங்குஶாட்₄யம் பி₃ப்₄ராணம் தோ₃ர்பி₄ராத்₃யம்
மநஸி முராரிபும் பா₄வயேத் சக்ரஸம்ஜ்ஞம் ॥
ஓம் நமோ ப₄க₃வதே மஹாஸுத₃ர்ஶநாய ஹும் ப₂ட்
இதி ஷோட₂ஶாக்ஷரமிதி ஸுத₃ர்ஶநவித₄ாநம் ॥
॥ இதி....ப₄க₃வந்மந்த்ரவித₄ாநம் நாம ஷஷ்டோ₂ऽத்₄யாய: ॥

ஸுதர்₃ஶநவைப₄வம்

பல ஸுத₃ர்ஶந மந்திரங்களை விவரிக்கும் இப்பகுதியில் உள்ள ஸுத₃ர்ஶநத்₄யானம் குறிக்கொள்ளத்தக்கது,— ஊழிகால சூரியன் போல் ஒளிவிடுகின்றவனும், மூவுலகனைத்தையும் தன் ஒளியால் நிறைப்பவனும, சிவந்த கண்களை உடையவனும், செமபட்டை மயிர்களை உடையவனும, எதிரிகளின் ஸமூஹத்திற்கு பயத்தை அளிப்பவனும் பயஙகரமான பற்களையும் சிரிப்பையும் உடையவனும் ஶங்கம், சக்ரம், தாமரை, பெரியஉலக்கை, வில், பாசம், அங்குஶம் ஆகியவற்றை (எட்டு) திருக்கைகளினல் தரிப்பவனுமான சக்ரராஜப் பெயரையுடைய ஆதிபுருஷனை முராரியை தியானிக்கவேண்டும.

இந்த தியானத்திலிருந்து ஸுத₃ர்ஶநஸ்வரூபியாக ஆதிபுருஷனை முராரியே தியானிக்கப்படுகிருன் என்று விளங்குவதால், பகவத்பரத்வமே பொலிகினறது.

ஆக,பகவந்மந்திரங்களை விதிக்கும் இவ்வாருவது அத்தியாயத்திலிருந்தும பரமபுருஷனை நாராயணனே பரமபொருள் என்று நிலைநாட்டப்பட்டதாயிற்று.

இவ்வாருமத்தியாயத்தில மந்த்ரஸம்ஸ்காரத்தின் விவரணமாக மந்திரவைபவம பேசபபட்டது. ஏழாமத்தியாயத்தில் யாகஸம்ஸ்காரத்தின் விவரணமாக ப₄க₃வதா₃ராத₄னம விவரிக்கப்படுவதைக் காண்போம் இனி.

http://acharya.org

ஹாரீத உவாச—

அத₂ வக்ஷ்யாமி ராஜேந்த்₃ர விஷ்ணோராராத₄நம் பரம் ।
ப்ரத்யூஷே ஸஹஸோத்தா₂ய ஸம்யகா₃சம்ய வாரிணா ॥
ஆத்மாநம் தே₃ஹமீஸம் ச சிந்தயேத் ஸம்யதேந்த்₃ரிய: ।
ஜ்ஞாநாநந்த₃மயோ நித்யோ நிர்விகாரோ நிராமய: ॥
தே₃ஹேந்த்₃ரியாத் பர: ஸாக்ஷாத் பஞ்சவிம்ஸாத்மகோ

ஹ்யஹம் ।

அஸ்மிந் தே₃ஹே வஸாம்யத்₃ய ஸேஷபூ₄தோ ஹி

ஸார்ங்கி₃ண: ॥

ஸுக்ரஸோணிதஸம்பூ₄தே ஜராரோகா₃த்₃யுபத்₃ரவே ।
மேதோ₃ரக்தாஸ்தி₂மாம்ஸாதி₃தே₃ஹயத்₃ரவ்யஸமாகுலே ॥
மலமூத்ரவஸாபங்கே நாநாது₃:க்க₂ஸமாகுலே ।
தாபத்ரயமஹாவஹ்நிதீ₃ப்யமாநேऽநிஸம் ப்₄ருஸம் ॥
க்ஷுத்த்ருஷ்ணாஹிபீட்₃யமாநே து₃ரத்யயே ।
க்லிஸ்யாமி பாபபூ₄யிஷ்டே₂ காராக்₃ருஹநிபே₄ऽஸுபே₄ ॥
ப₃ஹுஜந்மப₃ஹுக்லேஸ கூ₃ர்ப்ப₄வாஸாதி₃து₃:க்கி₃தே ।
வஸாமி ஸர்வதே₃ாஷாணாம் ஆலயே து₃:க்க₂ப₄ாஜநே ॥
அஸ்மாத்₃விமோக்ஷணார்த்தா₂ய சிந்தயிஷ்யாமி கேஸவம் ।
வைகுண்டே₂ பரமவ்யோம்நி து₃க்₃த₄ாப்₃தெ₄ள

வைஷ்ணவே பதே₃ ।

அநந்தபோ₄கி₃பர்யங்கே ஸமாஸீநம் ஸ்ரியா ஸஹ ॥
இந்த்₃ரநீலநிப₄ம் ஸ்யாமம் ஸங்க₂சக்ரக₃தா₃த₄ரம் ॥
பீதாம்ப₃ரத₄ரம் தே₃வம் பத்₃மபத்ராயதேக்ஷணம் ॥
ஸ்ரீவத்ஸகௌஸ்துபோ₄ரஸ்கம் ஸர்வாப₄ரணபூ₄ஷிதம் ॥
சிந்தயித்வா நமஸ்க்ருத்வா கீர்த்தயேத்₃தி₃வ்யநாமபி₄: ।
ஸங்கீர்த்ய நாமஸாஹஸ்ரம் நமஸ்க்ருத்வா கு₃ரூநபி ॥

[ஹாரீதர் கூறினார்:— அரசர் தலைவனே! மேலான தான விஷ்ணுவின் திருவாராதனத்தைக் கூறுகிறேன். விடியற்காலையில் சடக்கென எழுந்திருந்து, தீர்த்தத்தினால் ஆசமனம் செய்து, புலன்களை முடையவனாய், தன்னையும், தன உடலையும், ஈசனையும பற்றிச் சிந்திக்கவேண்டும். (தன்னைப்பற்றியசிந்தனமாவது,—) ஜ்ஞாநா நந்தஸ்வரூபனாய், நித்யனாய், விகாரமற்றவனாய், வியாதியற்றவனாய்,

தேஹேந்திரியங்களைக் காட்டிலும் மேலானவனாய், இருபத்தைந்தாவது தத்துவமாய், சார்ங்கமெனனும் வில்லாண்ட தேவனுக்கு நேரே ஸேஷபூ$_4$தனாய் இவ்வுடலில் இப்போது வாழ்கின்றேன். (உடலைப் பற்றியசிந்தனமாவது.-) (தந்தையுடைய) சுக்லத்தினாலும். (தாயுடைய) சோணிதத்தினாலும் பிறந்ததாய், கிழத்தனம் வியாதி முதலான உபத்$_3$ரவங்களை உடையதாய், தசை, ரத்தம், எலும்பு, மாமிசம் முதலான மிகத்தாழ்ந்த பொருள்கள் நிறைந்ததாய், மலம, மூத்ரம, வளை ஆகியவை நிரம்பிய சேறாயிருபபதாய், பலவிதமான துனபங்கள் நிறைந்ததாய். தினந்தோறும் (ஆத்$_4$யாத்மிகம, ஆதி$_4$பௌ$_4$திகம், ஆதி$_4$தை$_3$விகம் எனனும்) மூனறு விதமான தாபங்களாகிற பெருநெருப்புக்களாலே எப்போதும் மிகவும் எரிக்கப்படுவதாய், (மககள் மனைவி செல்வம் ஆகிய மூனறில் பெருவிருப்பமாகிற) புத்ரேஷணா, தா$_3$ரேஷணா. வித்தேஷணா என்னும் மூன்று ஈஷணைகளாகிற கருநாகத்தாலே தீண்டப்பட்டதாய், கடக்க அரிதாய், பாபம் நிறைந்ததாய், காரக்$_3$ருஹமபோன்றதாய், அமங்களமானதாய், பல ஜன்மஙகள், பல துன்பங்கள், கர்ப்ப வாஸங்கள் முதலானவற்றால் துனபுறுத்தப்பெற்றதாய், எல்லாத் தோ$_3$ஷங்களுக்கும் இருப்பிடமானதாய். துனபங்களனைத்திற்கும் இருப்பிடமான இந்த தேஹத்தில் வாழ்ந்து நான் துனபுறுகிறேன். (இனி, ஈசனைப் பற்றிய சிந்தனம்) இந்த சரீரத்தினின்றும் விடுபடுவதற்காகக் கேஸவனைப்பற்றிச் சிந்திக்கக் கடவேன். வைகுண்டத்திலும், பரமபதத்திலும, திருப்பாற் கடலிலும், விஷ்ணுபதத்திலும். திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலும் ஸ்ரீதேவியோடுகூட வீற்றிருப்பவனாய், இந்திரநீலக்கல் போன்ற திருநிறத்தையுடையவனாய், (நீலமேக$_4$) ஸ்யாமளனாய், சங்கசக்ரகதாதரனாய், பீதாம்ப$_3$ரத$_4$ரனாய், தாமரையிதழ்போன்ற பரந்த திருக்கண்களை உடையவனாய், ஸ்ரீவத்ஸகௌஸ்துப$_4$ங்கள் விளங்கும் திருமார்பை உடையவனாய், எல்லா ஆபரணங்களாலும் அலஙகரிக்கப்பெற்றவனான நாராயணனை நமஸ்கரித்து தியானித்து திவ்யநாமங்களைக் கீர்த்திக்கவேண்டியது. ஸ்ரீவிஷ்ணு ஸஹஸ்ரநாமத்தை ஸங்கீர்த்தனம் செய்து ஆசாரியர்களையும் நமஸ்கரித்து...]

முதலிலிருந்து பதினொரு ஸ்லோகம் வரையில் உள்ள இப்பகுதியில், காலையில் எழுந்தவுடன் தன் ஸ்வரூபத்தையும், தன் உடம்பின் தாழ்வையும், ஹரிஸ்வரூபத்தையும் சிந்திக்கவேண்டும்

http://acharya.org

என்று விதிக்கப்படுகிறது. அதில் தன் ஸ்வரூபம் சார்ங்கபாணிக்கு ஶேஷபூ₄தம என்று விதிக்கப்படுவதிலிருந்தும், ஹரிஸ்வரூபசிந்தனம் ஹேயமான தே₃ஹஸம்பந்த₄த்தை விடுவிக்கவல்லது என்று கீர்த்திக்கப்பட்டிருப்பதிலிருந்தும பகவத்பரத்வம கையிலங்கு கனியென விளங்குகிறது. இனி இவ்வத்தியாயத்தில் காலக்கடன்களான மலஜலவிஸர்ஜனம முதலானவற்றை (பகவத்பரதவத்திற்குத் தொடர்பற்ற விஷயங்களை) விவரிக்கும பகுதிகளை விரிவிற்கஞ்சி விடுத்து, பரம்பொருளைப்பற்றிய ப்ரஸ்தாவம வரும பகுதிகளை மாத்திரம காண்போம். அடுத்தபடியாக 35-வது ஶ்லோகம முதல 38-வது ஶ்லோகமிருகவுள்ள பகுதியைக் காண்போம்.

தா₄ரயேதூ₃ர்த்₄வபுண்ட்₃ராணி ம்ருத₃ா ஶுப்₄ராணி வைஷ்ணவ: ।
ஸ்ரீக்ருஷ்ண துளஸீமூலம்ருத₃ா வாபி ப்ரயத்நத: ॥
மந்த்ரேணைவாபி₄மந்த்ர்யாத₂ லலாடாதி₃ஷு தா₄ரயேத் ।
நாஸிகாமூலமாரப்₄ய பி₃ப்₄ருயாத் ஸ்ரீபத₃ாக்ருதி ॥
ஸாந்தராளம் ப₄வேத் புண்ட்₃ரம் த₃ண்டா₃காரம் து வா தத₂ா ।
லலாடே தா₄ரயேத் பஶ்சாத் க₃ரீவாந்தம் கேஶவாதி₃பி₄: ॥
நாம்நாம் த₃்வாத₃ஶபி₄ர் மூர்த்₄நி வாஸுதே₃வம் தலாம்பு₃நா ।

[வைஷ்ணவனாயிருப்பவன் (வெளுப்பான) மண்ணாலோ, ஸ்ரீக்ருஷ்ண துளஸியின் வேரிலிருக்கும் மண்ணாலோ பரிசுத்தமான ஊர்த்₄வ புண்ட்ரங்களை முயன்று தரிக்கக்கடவன, அந்தந்த மந்திரங்களினால் அபி₄மந்திரணம் செய்து நெற்றி முதலான இடங்களில தரிக்க வேண்டும. பகவானுடைய திருவடிகளைப்போன்ற ஆகாரத்தோடோ, அல்லது த₃ண்ட₃ம் போன்ற நேரான ஆகாரததோடோ, நடுவில் இடைவெளிவிட்டு, மூக்கின் கீழ்ப்பகுதியிலிருந்து நெற்றியில் முதலில் தரிக்கவேண்டும். பிறகு கழுத்தின் பின் பகுதி வரையில் தரிக்கவேண்டும். கேசவன முதலான பன்னிரு நாமங்களை உச்சரித்துக்கொண்டு தரித்து, கையில் எஞ்சியிருக்கும், நீர்கலந்த திருமண்ணாலே தலையில் வாஸுதேவனை தரிக்கவேண்டும.]

இப்பகுதியிலிருந்து வெளுப்பான மண்ணால கேசவாதி₃நாமங்களைச் சொல்லித்திருவடிகளின ஆகாரததுடன் ஊர்த்₄வபுண்ட்₃ரம்த₄ரிப்பதே

http://acharya.org

சிறந்ததென விளங்குகிறது. நெற்றியில் மூக்கின் மூலம் எனப்படும் கீழ்ப்பகுதியிலிருந்து தொடங்கி தரிக்கவேண்டும் என்று விதிக்கப் பட்டது. "ஏகாங்கு₃லம் பாத₃தரோரஸ்ய மூலம்" என்று உபநிஷத்தில் மூக்கில் ஓரங்குல ப்ரதே₃ஶம் நாஸிகாமூலப்ரதே₃ஶம் என்றும அதிலிருந்து தொடங்கி ஊர்த்₄வபுண்ட்₃ரமிடவேண்டும் என்றும் விதிக்கப்பட்டிருப்பதை முதல் அத்தியாயத்திலேயே [இரண்டாம் பதிப்பு பக்கம் 110ல்] கண்டோம். இத்தால், மூக்கின் ஸம்பந்தமே யில்லாமல் நெற்றியில் மாத்திரம் ஊர்த்₄வபுண்ட்ரத்தைச் சிலர் தரிப்பது அஶாஸ்த்ரீயம் என விளங்குகிறது. இனி நாற்பத்தேழாவது ஶ்லோகம் முதல் ஐம்பத்து மூன்றுவது ஶ்லோகமீறுகவுள்ள பகுதியைக் காண்போம்.

தஸ்மாத் குஶபவித்ரேண ஸந்த்₄யாம் க்ருத்வா யதா₂விதி₄ ।
ஸ்வக்₃ருஹ்யோக்தவிதா₄நேந ஸந்த்₃யோபாஸ்திம்
ஸமாசரேத் ॥
த்₄யாத்வா நாராயணம் தே₃வம் ரவிமண்ட₃லமத்₄யக₃ம் ।
கா₃யத்ர்யார்க்₄யம் ப்ரதா₃த்₃யாச்ச ஜபம் குர்வீத ப₄க்திமாந் ॥
ஸௌர்யஸ்யாபி₄முகோ₂ ஜப்த்வா ஸாவித்ரீம் நியதாத்மவாந் ॥
உபஸ்தா₂நம் தத: க்ருத்வா நமஸ்குர்யாத் ததோ ஹரிம் ॥
நமோ ப்₃ரஹ்மண இத்யாதி₃ ஜபித்வா தௌ விஸர்ஜயேத் ।
தத: ஸந்தர்ப்பயேத் விஷ்ணும் மந்த்ரரத்நேந மந்த்ரவித் ॥
ஶதவாரம் ஸஹஸ்ரம் வா துளஸீமிஶ்ரிதைர் ஜலை: ।
வைகுண்ட₂பார்ஷதா₃ம் பஶ்சாத் தர்ப்பயேச்ச யதா₂விதி₄ ॥
அநந்தவிஹகே₃ஶாதி₃ தே₃வதாநாமநுக்ரமாத் ।
ஏகைகமஞ்ஜலிம் த₃த்வா பஶ்சாதா₃சமநம் சரேத் ॥
ஸ்ரீஶஸ்யாऽऽராத₄நார்த்தா₂ம் ஹி குர்யாத் புஷ்பஸ்ய
ஸஞ்சயம் ।
துளஸீபி₃ல்வபத்ராணி தூர்₃வாம் கௌஶேயமேவ ச ॥

[குஶமே பரிசுத்தமாகையால் குஶபவித்ரம் த₄ரித்து தன் க்₃ருஹ்ய ஸூத்ரத்தில் விதிக்கப்பட்ட முறைப்படி ஸந்த்₄யாவந்த₃னம் செய்ய வேண்டும். ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருக்கும் நாராயணனை தியானித்து காயத்ரியினாலே அர்க்₄யப்ரதா₃னம் செய்து, ஸூர்யனை நோக்கிநின்று பக்தியுடன் காயத்ரீஜபம் செய்யவேண்டியது; புலனடக்கத்துடன் காயத்ரீஜபம் செய்தபின் உபஸ்தா₂னம் செய்த

http://acharya.org

பின ஹரியை நமஸ்கரிக்கவேண்டியது. "நமோ ப்₃ரஹ்மணே" என்று தொடங்கும மந்திரத்தால் ஜபித்து விஸர்ஜனம் செய்ய வேண்டியது. மந்திரமறிந்தவன அதற்குப்பின் மந்திரரத்னமான துவயத்தை உச்சரித்துக்கொண்டு துளஸிகலந்த ஜலத்தால் நூறு அல்லது ஆயிரம முறை விஷ்ணுவுக்குத்தர்ப்பணம் செய்யவேண்டியது. பிறகு வைகுண்ட₂னுடைய கிங்கரர்களுக்கு முறைப்படி தர்ப்பணம் செய்யவேண்டியது. அநந்தன, கருடன் முதலான நித்யஸூரி களுக்கு வரிசையாக ஒவ்வோரஞ்ஜலிதர்ப்பணம் செய்து அதற்குப் பின ஆசமனம செய்யவேண்டியது. பிறகு ஶ்ரிய:பதியின ஆராத₄னத் தின பொருட்டு பூக்களைச்சேகரிக்கவேண்டியது. துளஸி, வில்வதளம, தர்ப்பம், வஸ்திரம், முதலானவற்றையும் எடுத்துக்கொள்ள வேண்டியது.]

இப்பகுதியில் ஸந்த்யோபாஸனத்தினபோதும், காயத்ரீஜபத் தின்போதும் நாராயணனுக்குதியான நமஸ்கார தர்பபணாதிகளைச் செய்யவேணடும் என்று விதித்திருப்பதிலிருந்து காயத்ரீபரதிபாத்₃ யன் நாராயணனே என விளங்குகிறது.

"நகரமருள் புரிந்து நான்முகற்குப் பூமேல்
பகரமறை பயந்த பண்பன — பெயரினையே
புந்தியால் சிந்தியாது ஓதி உருவெண்ணும்
அந்தியால் ஆம்பயன் அங்(கு) என்?" [முதல் திருவ 33]

என்று பொய்கையாழ்வார் அருளியபடியே நாராயண தியானமில்லா மல ஸந்தியாவந்தனம் செய்வது பயனற்றது என விளங்குகிறது. இனி, அறுபத்து மூன்று முதல் எழுபதிருகவுள்ள ஶ்லோகங்களைக் கொண்ட பகுதியைக் காண்போம்.

ப்ராணயாமத்ரயம் க்ருத்வா பஶ்சாத்₃த்₄யாநம் யதோ₂க்தவத்।
பரவ்யோம்நி ஸ்தி₂தம் தே₃வம் லக்ஷ்மீநாராயணம் விபு₄ம் ॥
ப்ரித: ஶக்திபி₄ர்யுக்தம் பூ₄நீலாவிமலாதி₃பி: ।
அநந்தவிஹகா₃தீ₄ஶைஸ்யாத்₃யை: ஸூரஸத்தமை: ॥
சண்டா₃தா₃யை: குமுதா₃த்₃யைஶ்ச லோகபாலைஶ்ச ஸேவிதம்।
சதுர்பு₄ஜம் ஸுந்த₃ராங்க₃ம் நாநாரத்நவிபூ₄ஷணம் ॥
வாமாங்கஸ்த₂ஶ்ரியா யுக்தம் ஶங்க₂சக்ரக₃தா₃த₄ரம் ।
மந்த்ரரத்நவிதா₄நேந ந்யாஸமுத்₃ராதி₃கர்மக்ருத் ॥

http://acharya.org

பஞ்சோபநிஷத்₃ந்யாஸம் குர்யாத் ஸர்வத்ர கர்மஸு ।
ஓம் ஷாம் நம: பராயேதி பரமேஷ்ட்₂யாத்மநே நம: ॥
ஓம் யாம் நம:பராயேதி தத: புருஷாத்மநே நம: ।
ஓம் ராம் நம: பராயேதி ததோ விஶ்வாத்மநே நம: ।
ஓம் வாம் நம: பராயேதி ஸ்வநிவ்ருத்யாத்மநே நம: ।
ஓம் லாம் நம: பராயேதி தத: ஸர்வாத்மநே நம: ॥
ஶிரோநாஸாக்₃ரஹ்ருத₃ய கு₃ஹ்யபாதே₃ஷு விந்யஸேத் ।
யதா₂க்ரமேண தந்மந்த்ராந் பஞ்சாங்கே₃ஷு க்ரமாத்
ந்யஸேத் ॥

[(புஷ்பம் முதலானவற்றை எடுத்துக்கொண்டு விஷ்ணுவின் ஆலயத்தை அடைந்தபின்பு) மூன்று ப்ராணாயாமம் செய்து முறைப்படி தியானம செய்யவேண்டியது. பரமபதத்திலிருப்பவனாய், தேவனாய், ஸர்வவ்யாபியாய், பூ, நீளை, விமலை முதலான சக்திகளாலே சுற்றிலும் சூழப்பெற்றவனாய், அநந்தன், கருடன், விஷ்வக்ஸேனர் முதலான நித்யஸூரிகள் தலைவர்களாலும, சண்டகுமுத₃ாதி₃ த்₃வாரபாலகர்களாலும் ஸேவிக்கப்பெற்றவனாய், நான்கு திருக்கைகளை உடையவனாய், அழகிய திருமேனியை உடையவனாய, அழகிய ரத்நாபரணங்களை உடையவனாய், இடது தொடையிலிருக்கும் ஸ்ரீதேவியோடு கூடியிருப்பவனாய், சங்கசக்ரகதைகளை தரித்தவனான லக்ஷ்மீநாராயணனை முறைப்படி தியானிக்க வேண்டும. மந்திரரத்னமான துவயத்தைக்கொண்டு ந்யாஸம் முத்₃ரை முதலானவற்றைச் செய்யவேண்டும். எல்லாக்கர்மங்களிலும் பஞ்சோபநிஷந்மந்திரங்களைக்கொண்டு அங்கந்யாஸம் செய்ய வேண்டும். பரமேஷ்டீ₂, புருஷன், விஶ்வன், நிவ்ருத்தி, ஸர்வன் என்னும் பஞ்சோபநிஷத்துக்களுககுமுரிய ஐந்து மந்திரங்கள் மூலத்தில் விவரிக்கப்பட்டிருக்கின்றன. அவற்றைக்கொண்டு தலை, மூக்கின நுனி, ஹ்ருத₃யம், கு₃ஹ்யம (உபஸ்த₂ம்), பாத₃ம் ஆகிய ஐந்து அங்கங்களில் முறையே அங்கந்யாஸம் செய்யவேண்டும்.]

இங்கு பரமபொருளைக் குறிக்கும்போது லக்ஷ்மீநாராயணன் என்று சொல்லியிருப்பதனால் இருவருமசேர்ந்தே பரப்ரஹ்மம் என்று சிலர் கருதிவிடக்கூடும் என்பதற்காகவே 'இடது தொடையிலிருக்கும் ஸ்ரீதேவியோடு கூடியிருப்பவன்' என்று தனியே விசேஷணமிட்டது. இப்படிக்கூடியிருக்கையாலே லக்ஷ்மீநாராயணன் என்று பெயர் பெற்றவன என்றபடி. ஆக, இத்தால் திருவுக்கும் திருவாகியவனே

பரப்ரஹ்மம் என நிலைநாட்டப்பட்டதாயிற்று. இனி எண்பத்தைந்து முதல நூற்றுமூன்றிருகவுள்ள ஶ்லோகங்களைக்கொண்ட பகுதியைக் காண்போம்.

ஸ்நாநபாத்ரோத3கம் பஶ்சாத் ஆதா3ய குஸுமைஸ்ஸஹ।
பௌருஷேண து ஸூக்தேந ஸ்நாபயேத் கமலாபதிம்॥
மார்ஜயேத் ஶுப்4ரவஸ்த்ரேண நீ3பைர்நீராஜயேத் தத2:।
வஸ்த்ரம் சைவோபவீதம் ச த3த்3யாதா3பரணாநி ச॥
கஸ்தூரீதிலகம் க3ந்த4ம் புஷ்பாணி ஸுரபீ4ணி ச।
அங்கே நிவேஶ்ய தே3வஸ்ய லக்ஷ்மீம் ஸம்பூஜயேத் தத2:॥
பார்ஶ்வயோர்த4ரணீநீளே மஹிஷ்ய: பரிதஸ்தத2:।
விமலோத்கர்ஷணீத்3யா: பூர்வமேவ ப்ரகீர்த்திதா:॥
சண்டா3தி3த்3வாரபாலாம்ஶ்ச குமுதா3தீ3ம்ஸ்தத2ார்ச்சயேத்।
ததை2வாऽऽவரணாநீ4ஶா: பூஜநீயாஸ்ஸமந்தத:॥
வாஸுதே3வ: ஸீரபாணி: ப்ரத்3யும்நஶ்ச உஷாபதி:।
தி3க்ஷு கோணேஷு தத்பத்ந்ய: லக்ஷ்மீரேவா ரதீ உஷா॥
த்3விதீயாவரணம் பஶ்சாத் கேஶவாத்3யாஸ்ஸஶக்தய:।
ஸங்கர்ஷணாத்3ய: பஶ்சாத் மத்ஸ்ய கூர்மாத3யஸ்தத2:॥
ஸ்ரீர்லக்ஷ்மீ: கமலா பத்3மா பத்3மிநீ கமலாலயா।
ரமா வ்ருஷாகபேர்த4ந்யா வ்ருததிர்யஜ்ஞாந்த தே3வதா॥
ஶக்தய: கேஶவாதீ3நாம் ஸம்ப்ரோக்தா. பரமே பதே3।
ஹிரண்யா ஹரணீ ஸத்யா நித்யாநந்தா3 த்ரயீ ஸுதா3॥
ஸுக3ந்த4ா ஸுநந்தா3 விதா3யா ஸுஶீலா ச ஸுலக்ஷணா।
ஸங்கர்ஷணாதி3மூர்த்தீநாம் ஶக்தய: ஸமுதா3ஹ்ருதா:॥
வேதா3 வேத3வதீ தா4த்ரீ மஹாலக்ஷ்மீ: ஸுக2ாலயா।
பா4ர்க்க3வீ ச தத2ா ஸீதா ரேவதீ ருக்மிணீ ப்ரபா4॥
மத்ஸ்ய கூர்மாதி3மூர்த்தீநாம் ஶக்தய: ஸம்ப்ரகீர்த்திதா:।
ஏவம் ஸஶக்தய. பூஜ்யா: கேஶவாத்3யாஸ்ஸுரேஶ்வரா:॥
பஶ்சாத் ஸஶக்தய: பூஜ்யா: ஶங்க2சக்ராதி3ஹேதய:।
ஶங்க2ம் சக்ரம் க3தா3ம பத்3மம் ஶார்ங்க2ம ச முஸலம் ஹலம்।
பா3ணம ச க2ட்3க3கேடம் ச சு2ரிகா தி3வ்யஹேதய।
ப4த்3ரா ஸௌம்யா தத2ா மாயா ஜயா ச விஜயா ஶிவா॥

http://acharya.org

ஸுமங்க₃ளா ஸுநந்தா₃ ச ஹிதா ரம்யா ஸுரக்ஷிணீ।
ஶக்தயோ தி₃வ்யதேஹாநாம் பூஜநீயா: ஸநாதநீ:॥
ப₄ஹிர்லோகேஶ்வரா: பூஜ்யா: ஸாத்₄யாஶ்ச ஸமருத்₃க₃ணா:।
ஏவமாவரணம் ஸர்வம் அர்ச்சயேத் பரமாத்மந:॥
புநரர்க₄யாதி₃கம் த₃த்வா தூ₄பதீ₃பைர்நிவேத₃யேத்।
ப்ராகு₃தீ₃ச்யாம் ச ஸேநேஶம் நாக₃ராஜம் தத₂ாபரே॥
புரதோ வைநதேயம் ச பூஜயேத் ஶக்திபி₄: ஸஹ॥
ஸேநாபதேஸ்ஸுத்ரவதிம் நாக₃ராஜஸ்ய வாருணீம்।
ப₄த்₃ராம் ச வைநதேயஸ்ய பூஜயேத்₃ வைஷ்ணவோத்தம:॥

[பிறகு, பூக்களோடுகூட ஸ்நாநபாத்ரஜலத்தை எடுத்துப் புருஷ ஸூக்தத்தால் ஶ்ரிய:பதிக்குத் திருமஞ்சநம் செய்யவேண்டியது. மங்களமான வஸ்திரத்தால திருவொற்றுவாடைசாத்தி, தீபங்களாலே ஹாரத்தி எடுக்கவேண்டியது. வஸ்திரத்தையும், யஜ்ஞோபவீதத்தையும், திருவாபரணங்களையும், கஸ்தூரீதிலகத்தையும், கந்தத்தையும், நறுமணம் மிக்க புஷ்பங்களையும் தேவனுடைய திருமேனியில் சாத்தி அவ்வண்ணமே லக்ஷ்மீதேவிக்குத் திருவாராதனம் செய்யவேண்டியது. பரமபுருஷனுக்கு இருபுறமும் உள்ள பூமிநீளாதேவிகளுக்கும், சுற்றிலுமுள்ள விமலை, உத்கர்ஷிணீ முதலான முன்னமே சொல்லப்பட்ட பரிசாரிகைகளுக்கும், சண்டன் குமுதன் முதலான துவாரபாலகர்களுக்கும் திருவாராத₄னம் செய்யவேண்டியது. அதனபடியே சுற்றிலுமுள்ள ஆவரண பாலகர்களும் பூஜிக்கப்படவேண்டியவர்களாவர். முதல் ஆவரணத்தில் கிருஷ்ணனுகிற வாஸுதேவன், கலப்பையைக் கையிலேந்திய பலராமன் (கண்ணனின் பிள்ளையாகிற) ப்ரத்₃யுமனன், உஷையின் பதியான அநிருத்தன் ஆகியவர்களையும, திசைக்கோணங்களில் முறையே அவர்களுடைய பத்னிகளான லக்ஷ்மீ, ரேவதீ, ரதி, உஷை ஆகியவர்களையும் பூஜிக்கவேண்டியது. அதற்குப்பின் இரண்டாவது ஆவரணத்தில் தேவிகளோடு கூடிய கேசவன்முதலான மூர்த்திகளும ஸங்கர்ஷணன், ப்ரயுமனன், அநிருத்தன், வாஸுதேவன் ஆகிய வ்யூஹங்களும், மத்ஸ்யகூர்மாதி₃ த₃ஶாவதாரமூர்த்திகளும் பூஜிக்கத்தக்கவர்கள். ஶ்ரீ:, லக்ஷ்மீ, கமலா, பத்மா, பத்மினி, கமலாலயா, ரமா, வ்ருஷா, கபே(?), த₄ந்யா, வ்ருத்தி, யஜ்ஞாந்ததேவதா ஆகியவர்கள் பரமபதத்திலுள்ள கேசவன் முதலான மூர்த்திகளின் தேவிகளாவர்.

http://acharya.org

ஹிரண்யை, ஹரணீ, ஸத்யை, நித்யானந்தை, த்ரயீ, ஸுகை₂, ஸுக₃ந்தை₄, ஸுந்த₃ரீ, வித்₃யை, ஸுஶீலை, ஸுலக்ஷணை ஆகியோர் ஸங்கர்ஷணர் முதலான (வ்யூஹவ்யூஹாந்தர) மூர்த்திகளின் தேவிகளாகக் கூறப்படுகின்றனர். வேத₃ா, வேத₃வதீ, த₄ாதரீ (பூமி), மஹாலக்ஷ்மீ, ஸுக₃ாலயா, ப₄ார்கக₃வீ, ஸீதா, ரேவதீ, ருக்மிணி, ப்ரப₄ா ஆகிய பதின்மரும், மத்ஸ்யம், கூர்மம், வராஹம், நரஸிம்ஹன், வாமனன், பரசுராமன், ராமன், பலராமன், கிருஷ்ணன், கல்கி ஆகிய தஶாவதாரமூர்த்திகளுக்கும் முறையே பத்தினிகளாகப் புகழப்படுகிறார்கள். இவ்வண்ணமாகத் தத்தம தேவியரோடு கூடிய கேசவன் முதலான ஸர்வேஶ்வர மூர்த்திகள் பூஜிக்கத்தக்கவர்களாகின்றனர். அதற்குப்பின் தத்தம் தேவியரோடு கூடிய ஶங்கம், சக்ரம் முதலான திவ்யாயுதாழ்வார்களைப் பூஜிக்க வேண்டும். (அந்த திவ்யாயுதாழ்வார்கள் யார் எனில்:) சங்கம், சக்ரம், கதை, பத்மம், ஶார்ங்கம் (வில்), முஸலம் (உலக்கை), ஹலம் (கலப்பை), ப₃ாணம் (அம்பு), க₂ட்₃க₃ம் (கத்தி), கேடம் (கேடயம்), சு₂ரிகை (குத்துவாள்) ஆகிய பதினொன்றும் திவ்யாயுதங்களாகும். ப₄த்₃ரா, ஸௌம்யா, மாயா, ஜயா, விஜயா, ஶிவா, ஸுமங்க₃ளா, ஸுநந்த₃ா, ஹிதா, ரமயா, ஸுரக்ஷிணீ என்னும் கிரமப்படி அவ்வாயுதங்களின் நித்யஸித்₃த₄ாக்களான பத்தினிகளும் பூஜிக்கத் தக்கவர்களாவர். அதற்குப்பின் வெளியுலகிலுள்ள (பகவத்கிங்கரர்களான) நித்யஸூரிகளும், ஸாத்₄யதே₃வர்களும், மருத₃்க₃ணங்களும் பூஜிக்கத்தக்கவர்கள். இவ்வண்ணமாகப் பரமாத்மாவின் எல்லா ஆவரணங்களையும். மறுபடியும் மறுபடியும் அர்க₄்யம் முதலானவற்றையும் தூபதீபங்களையும் அளித்துப் பூஜிக்கவேண்டும். கிழக்குதிக்கில் விஷ்வக்ஸேனராம ஸேனைமுதலியாரையும், வடக்கில் நாக₃ராஜனும ஆதிஶேஷனையும், கருடாழ்வானை பகவானுக்கு முன்னாலும அவரவர் தேவிகளோடுகூடப் பூஜிக்கவேண்டும். ஸேனை முதலியாரின் பத்னி ஸூத்ரவதி; ஆதிஶேஷனின் பத்னி வாருணி; கருடனின் பத்னி ப₄த₃்ரை, இவர்களையும் வைணவர்களிற் சிறந்தவன் பூஜிக்கவேண்டும்]

பகவானுடைய, பர வ்யூஹ, விப₄வாதி₃ மூர்த்திகளையும அவர்களுடைய பத்னிகளையும், நித்யஸூரிகளையும், அவர்களுடைய பத்னிகளையும் பூஜிக்கவேண்டுமென இப்பகுதியில விதிக்கப்பட்டது. இனி, பூஜிக்கவேண்டிய முறையை விவரிக்கும நூற்றிருபத்தொன்பதாவது ஶ்லோகம் முதல் நூற்றுநாற்பத்தேழாவது ஶ்லோகமீறுகவுள்ள பகுதியைக் காண்போம.

http://acharya.org

ஹவிஶ்ஶேஷேண தே3வாநாம் ப3லிம் பு4வி விநிக்ஷிபேத் |
சண்டா3தி3த்3வாரபாலாநாம் ஸர்வேஷாஞ்ச தி3வௌகஸாம் ||
த3த்3யாது3த3கபூர்வேண ஹவிஶ்ஶேஷம் த்3விஜோத்தம: |
அப்4யர்ச்சா பௌருஷஸ்யாஸ்ய ஸூக்தஸ்ய ஸாரஸத்தமாந் ||
விஷ்ண்வர்ப்பிதசதுர்பா4கம் க்ரமாத்ஹவ்யஸ்ய சார்ப்பயேத் |
அநந்ததார்க்ஷ்யஸேநேஶபவித்ராணாம் நிவேத3யேத் ||
தீர்த்தே2ந ஸஹிதம்ஹவ்யம் ப்ருத2க்பாத்ரேஷு நிக்ஷிபேத் |
ஸர்வேஷாம் வாரிபூர்வேண பஶ்சாத் புஷ்பாஞ்ஜலிம் சரேத் ||
நீராஜநம் ததோ த3த்வா தாம்பூ3லம் ச நிவேத3யேத் |
ப்ரணமேச்ச ததோ ப4க்த்யா ரம்யை: ஸ்தோத்ரை: ஶுபா4ஹ்வயை: ||
ப்ரஸார்ய பா3ஹூ பாதௌ3 ச ப3த்3தே4நாஞ்ஜலிநா ஸஹ |
ஸ்துவந் ஸ்துதிபி4ரேவம் ச ப்ரணாமோ தீ3ர்க4 உச்யதே ||
நத்வா தீ3ர்க்க4ப்ரணாமைஶ்ச ஸ்துத்வா ஸ்துதிபி4ரேவ ச |
ஸர்வைஶ்ச வைஷ்ணவைர்மந்த்ரை: குர்யாத் புஷ்பாஞ்ஜலிம் தத: ||
ஸூக்தைஶ்ச விஷ்ணுதை3(தே3)வத்யை: நாமபி4: ஶார்ங்கி3ணஸ்தத2ா |
தத: ஶுபா4ஸநே ஸ்தி2த்வா ஜபேந்மந்த்ரமநுத்தமம் ||
ந்யாஸமுத்3ராதி3பூர்வேண த்4யாயந் வை கமலேக்ஷணம் ||
அஷ்டோத்தரஸஹஸ்ரம் வா ஶதமஷ்டோத்தரம் து வா |
ஜப்த்வா புஷ்பாஞ்ஜலிம் த3த்3யாத் யதா2ஶக்த்யா ச மந்த்ரத: ||
நமேத் யோகே3ந தே3வேஶம் ஹ்ருதி3ஸ்த2ம் கமலேக்ஷணம் |
ம(மா)நஸை(ர்)வார்ச்சயித்வாऽஸ்மிந் ஸமாதௌ4 விரமேத் ஸுதீ4: ||
ப்ராதரௌபாஸநம் க்ருத்வா தத்ர ஹோமம் ஸமாசரேத் |
ஆஜ்யேந சருணா வாபி ஸமித்3பி4ர்வா ச யஜ்ஞியை: ||
தண்டு3லைர்க்4ருதமிஶ்ரைர்வா பி3ல்வபத்ரைரதா2பி வா |
அக்னி குண்டத்தைக் கல்பிக்கவேண்டியது. அஶ்வத்தமரத்திலாவது, வந்ஹிமரத்திலாவது நெருப்பை உண்டாக்கி அக் குண்டத்தில் இடவேண்டியது. அல்லது அந்தணனாயிருப்பவன் வைஷ்ணவனுடைய வீட்டிலிருந்தாவது அக்னியைக் கொண்டுவந்து இடலாம். தன க்₃ருஹ்யஸூத்ரத்தில் சொன்ன விதிப்படி இக் குண்டத்தில். அக்னியை ப்ரதிஷ்டை செய்வித்து இத்₄மங்களை (ஸமித்துக்களை) இடுவது வரையிலான காரியங்களைச் செய்து பாயஸத்தினாலும், பசுநெய்யினாலும், எள்ளுகளினாலும், நெற்களாலும் ஹோமம் செய்யவேண்டியது. (புருஷஸூக்தம் நாராயணஸூக்தம் விஷ்ணுஸூக்தம் 'விஷ்ணும் க₄ர்மம்' என்னும் ஸூக்தம் ஆகிய) நாலு வைஷ்ணவஸூக்தங்களாலும், பாயஸமாகிற ஹவிஸ்ஸை ஹோமம் செய்யவேண்டியது. ஹிரண்யகர்ப்பஸூக்தத்தாலும், ஸ்ரீஸூக்தத்தாலும், "அஹம் ருத்₃ரேபி₄:" [ருக் அஷ்டகம் 8-7-11] என்று தொடங்கும் வாக₃ம்ப₄ருணீ ஸூக்தத்தாலும் பசுநெய்யை அதற்குப்பின் ஹோமம் செய்யவேண்டியது. "த்வமக்₃நே த்₃யுபி₄:" என்று தொடங்கும் ஸூக்தத்தின் ஒவ்வொரு ரிக்கினாலும் எள்ளுகளைக் கொண்டு ஹோமம் செய்யவேண்டியது. "அஸ்ய வாமஸ்ய" என்று தொடங்கும் ஸூக்தத்தின் ஒவ்வொரு ருக்கினாலும் நெற்களினால் ஹோமம் செய்யவேண்டியது. முனிவர் தலைவர்களே! அதற்குப்பின் "அக்₃நிம் நரோ தீ₃தி₄திபி₄:" என்றுதொடங்கும்ஸூக்தத்தின் ஒவ்வொரு ரிக்கினாலும் அரசஸமித்துக்களால் ஹோமம் செய்யவேண்டும். அதற்குப்பின் ஆயிரத்தெட்டுமுறையாவது, நூற்றெட்டு முறையாவது நெய்யால் ஹோமம் செய்யவேண்டியது. அதற்குப்பின் (அஷ்டாக்ஷரம், த்வயம், த்வாதஶாக்ஷரம், விஷ்ணுஷட₃க்ஷரம் என்னும் நாலு மந்திரங்களால் ஹோமம் செய்யவேண்டியது. (அதற்குப்பின்) பாயஸத்தாலாவது நெய்யாலாவது வைகுண்ட₂பார்ஷத₃ர்களுக்கு ஹோமம் செய்து முடித்து ஹவிஸ்ஸில் எஞ்சியிருப்பதை அர்ச்சா மூர்த்திக்கு நிவேதனம் செய்யவேண்டும். அதன்பின் முற்கூறிய நாலு மந்திரங்களையும், நாலு வேதங்களையும் நாலு திக்குகளிலும் ஜபிக்க வேண்டும். அவ்விடத்திலேயே இரவு முழுவதும் பகவானைப்பற்றிய கீதங்கள் வாத்யங்கள் நர்த்தனங்கள் ஆகியவற்றை நடத்துவித்துக் கொண்டு கண்விழித்திருக்கவேண்டும். இரவு கழிந்தபின் நதியில் முறைப்படி ஸ்நானம் செய்து, ருத்விக்குகளோடும், ப்ராஹ்மணர்களோடும் சேர்ந்து வைகுண்டதர்ப்பணம் செய்யவேண்டியது. பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும் தர்ப்பணம் செய்தபின் மௌனத்துடன் வீட்டிற்கு வரவேண்டியது. ஆசமனம் செய்து முன்போல் பூஜை

http://acharya.org

செய்து ஹோமம் செய்யவேண்டியது. ப்₃ரஹ்மணஸ்பதிஸூக்தங்களாலும், புருஷஸூக்தத்தாலும், ஸ்ரீஸூக்தத்தாலும் நெய்ப்பாயஸத்தை ஹோமம் செய்யவேண்டியது. வைகுண்ட₂பார்ஷத₃ர்களுக்கும ஹோமம்செய்து கர்மசேஷத்தை நிறைவடையச் செய்யவேண்டியது. மஹாபா₄க₃வதஸ்ரேஷ்ட₂னான வைஷ்ணவன நுண்ணிய பொன்கம்பியினால் அர்ச்சாமூர்த்திக்கு நயனோன்மீலனத்தை (கண் திறத்தலைச்) செய்ய வேண்டியது. துவயமந்திரத்தைச் சொல்லியே ஹரிக்கு நயனோன்மீலனம் செய்யவேண்டும். ப₄த்₃ரபீடத்தில எம்பெருமானை எழுந்தருளச்செய்து சாந்தியுடையவனாய் எல்லா வைஷ்ணவஸூக்தங்களையும் ஓதிக கலசதீர்த்தங்களால் ருத்விக்குகள் திருமஞ்சனம் செய்விக்கவேண்டியது. அதற்குபபின் நடுக்கும்பத்தை எடுத்து, அந்தணர் தலைவனாயிருப்பவன நூறுமுறை மந்திரரத்னமான துவயத்தை உச்சரித்துக்கொண்டு சாந்தியுடன திருமஞ்சனம செய்யவேண்டியது. வைஷ்ணவனாயிருப்பவன பொற்குட நீரினாலும, செப்புக்குட நீரினாலும, சங்க ஜலத்தாலும, வெள்ளிக்குட நீரினாலும், பஞ்சாமருதங்களாலும, பசுவின்பால முதலானவற்றாலும், நல்ல சந்தனத்தாலும், துளஸிகலந்த நீராலும மந்திரபூர்வகமாக ஸ்நானம செய்வித்து, வஸ்திரங்களாலும திருவாபரணங்களாலும் அலங்காரம் செய்வித்து, (தூபம தீபம் முதலிய) மற்ற உபசாரங்களாலும பூஜித்துப பிறகு ஹாரத்தியெடுக்கவேண்டும. அலங்கரிக்கப்பட்ட நல்ல கோயிலில நல்ல பீடத்தில ஹரியை ஸ்தாபனமசெய்து வைக்கவேண்டும். மஹாபாகவதோத்தமன உத்தானபாத₃ஸூக்தத்தால் ஸுகாஸனத்தில எமபெருமானை உறுதியாக எழுந்தருளச்செய்து, (முற்கூறிய) நாலு சுபமந்திரங்களை நூற்றெட்டுமுறை உச்சரித்து தியானித்துப புஷபாஞ்ஜலியை அளிக்கவேண்டியது. பெரியோனும், பரமபதத்திலிருப்பவனுமான தேவனான ஜநார்த்தனனை வணங்கி தியானித்து இவ்வண்ணமாக மந்திரரத்னமான த்வயத்தால ப்ரதிஷடை செய்யவேண்டியது. உபசாரங்களால் அர்ச்சனம செய்து மங்களமான நிவேதனங்களை ஸமர்ப்பிக்கவேண்டியது. (1) கண்ணாடி (2) கபிலை (காராமபசு) (3) கந்யை (ருதுவாகாத மணமாகாய பெண்) (4) ஶங்க₂ம (5) தாபபை (6) அக்ஷதை (7) பால (8) பொன் (9) நெய் (10) பொரி (11) தேன் (12) தடுகு (13) மை என்னும இந்தப் * பதினமூன்று மங்களபபொருள்களை

* "ஏவம த்ரயோத₃ஶே மாஸி" என்று மூலத்திலிருப்பதை "ஏவம் த்ரயோத₃ஶமாநி" என்று திருத்திக்கொள்ளவும.

நிவேதனம் செய்யவேண்டும். அவ்வண்ணமாக மந்திரபூர்வக மாகப் பத்து முத்திரைகளையும் அர்ச்சாமூர்த்திக்குக் காட்டவேண்டும். அதற்குப்பின் அந்த மூர்த்திக்குரிய மந்திரத்தால் ஆயிரம்முறை பக்தியுடன் புஷ்பங்களால் அர்ச்சிக்கவேண்டியது. சாந்தியுடன் ஜபமும் செய்யவேண்டியது. அந்தணர் தலைவர்களே! எள்ளோடு கூடிய வெளுத்த அரிசியாலும் ஹோமம் செய்யவேண்டும். ஆசீர் வசனங்களைச்சொல்லி தீபங்களால் ஆரத்தியெடுக்கவேண்டியது. அந்தணர்களுக்கு போஜனம் செய்வித்து தக்ஷிணைகளாலும் அவர்களை உகப்பிக்கவேண்டியது. ப்ரதிஷ்டை செய்துவைத்த ஆசார்யனையும், ருத்விக்குகளையும் விசேஷமாக அர்ச்சிக்கவேண்டியது. பரமாத்மாவினுடைய அவ்வக்னியை தினந்தோறும் ஹோமம் செய்வதற்காக எடுத்து வைத்துக்கொள்ளவேண்டியது. மன வடக்கமுடையவனாய், மூன்று நாட்கள் யதாசக்தி எம்பெருமான் உத்ஸவம் கண்டருளச் செய்யவேண்டியது. வைஷ்ணவனான ஆசார்யன் அவ்வுத்ஸவங்களில் பவமானஸூக்தங்களால் புஷ்பாஞ்ஜலிகளை ஸமர்ப்பிக்கவேண்டியது. தினந்தோறும் வைஷ்ணவன நெய்யாலும், ஹவிஸ்ஸாலும் ஹோமம் செய்யவேண்டும். அவ்வர்ச்சாமூர்த்தியின உகப்பினபொருட்டு உத்ஸவம் நடக்கும ஒவ்வொரு தினமும் வைஷ்ணவர்களான அந்தணர்களுக்கு நெய்யோடும், பாயஸத்தோடும் அன்னமிடவேண்டியது; இயன்ற வரையில் அவர்களுக்கு வஸ்திரங்களும், தக்ஷிணைகளும அளிக்க வேண்டும். உத்ஸவ முடிவிலும் மஹாபாகவதர்களோடு கூட விஷ்ணுஸஹஸ்ரநாமத்தையும், விஷ்ணுஸூக்தங்களையும பாராயணம செய்துகொண்டே இவ்வண்ணமாக (போஜந வஸ்த்ர தக்ஷிணாதானங்களைச்) செய்யவேண்டும். நதியில் அவப்ருத ஸ்நானம செய்தபின் பித்ருதேவதைகளை த்ருப்திசெய்விக்கவேண்டியது. "அஸ்யவாம" என்று தொடங்கும ஸூக்தத்தினாலே தேனோடு கலந்த பாயஸத்தை நெய்யோடு கூட மூலமந்திரமான அஷ்டாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு ஆயிரம்முறை ஹோமம் செய்யவேண்டும். ஆசீர்வசனங்களைச் செய்து அந்தணர் தலைவர்களுக்கு போஜனம் செய்விக்கவேண்டியது. இவ்வண்ணமாக அர்ச்சாமூர்த்தியில் எமபெருமானை ப்ரதிஷ்டை செய்வித்து முறைப்படி பூஜிக்கவேண்டும். (இதுவரை விளக்கப்பட்டது ஊருக்குப் பொதுவான கோயில்களில் ப்ரதிஷ்டாவிதி. இனி, தனி மனிதனுடைய க்ருஹார்ச்சாமூர்த்தி ப்ரதிஷ்டை விளக்கப்படுகிறது.)

http://acharya.org

தனி மனிதனுடைய வீட்டில் எம்பெருமானை ப்ரதிஷ்டை செய்யவேண்டுமானால் எளியமுறையில் செய்யலாம். ஜலாதிவாஸம், யாகமேடை, அக்னிகுண்டம் (அதிற்செய்யவேண்டிய) மந்த்ர தந்த்ரங்கள் முதலியவற்றை விட்டுவிடலாம். முதல்நாள் பஞ்சகவ்யங்களில் அர்ச்சாமூர்த்தியை வைத்திருந்து, மறுநாள் பஞ்சாம்ருதங்களாலே திருமஞ்சனம் செய்வித்து, உயர்ந்த த்ரவியங்களை முதலியவற்றை சேகரித்துக்கொண்டு பரிசுத்தமான நீரினால் நிறைக்கப்பட்ட ஸுத்தகலசத்தை வைத்து அதில் பஞ்சரத்னங்களையும், பொன்னையும், துளஸிதளத்தையும், சந்தனம், அக்ஷதை, தர்ப்பை, எள், மண், கடுகு ஆகியவற்றையுமிட்டு, பிறகு குசதர்ப்பங்களால், மந்த்ரரத்னத்தைக்கொண்டு அபிமந்த்ரணம் செய்வித்து வைஷ்ணவனாயிருப்பவன் நூறு அல்லது ஆயிரம் முறை மூலமந்த்ரத்தால் (அர்ச்சாமூர்த்திக்கு) அபிஷேகம் செய்விக்கவேண்டியது. எல்லா வைஷ்ணவ ஸூக்தங்களாலும், விஷ்ணு காயத்ரியாலும், கேசவாதி நாமங்களாலும், மற்றுமுள்ள எல்லா வைஷ்ணவ மந்த்ரங்களாலும் திருமஞ்சனம் செய்வித்து, மந்த்ரங்களைக்கொண்டே திருவாபரணங்களால் அலங்கரிக்கப்பெற்ற அம்மூர்த்தியை மங்களமான ஸ்தானத்தில் எழுந்தருளச் செய்யவேண்டியது. தரையில் அக்னிப்ரதிஷ்டையைச்செய்து இத்மங்களை (ஸமித்துகளை) இடுவது முதலான காரியங்களை (க்ராமார்ச்சாப்ரதிஷ்டையின்போது) முன் சொன்னபடியே செய்வது. பசுநெய்யாலும், பாயஸான்னத்தாலும் வைஷ்ணவன் ஹோமம் செய்யவேண்டும். கர்த்தாவினுடைய ஔபாஸநாக்னியில் ஹோமம் செய்வது சிறந்தது. விஷ்ணுஸூக்தங்களின் ஒவ்வொரு ருக்கினாலும் நெய்ப்பாயஸத்தை ஹோமம் செய்யவேண்டும்; அதற்குப்பின் "அஸ்ய வாம" ஸூக்தத்தால் பசுநெய்யை ஹோமம் செய்யவேண்டும். மந்த்ரரத்னமான த்வயத்தினால் ஆயிரத்தெட்டு முறை ஹோமம் செய்யவேண்டும். அந்த பிம்பத்தின் மூர்த்திக்குரிய மந்த்ரத்தால் எள்ளினால் ஹோமம் செய்யவேண்டும். அந்த மூர்த்தியின் மந்த்ரம் அறியப்படாவிடில் மூலமந்த்ரமான திருவஷ்டாக்ஷரத்தாலே ஹோமம் செய்யலாம். ஸ்ரீஸூக்தங்களாலும், விஷ்ணுகாயத்ரியாலும் ஹோமம் செய்யவேண்டும். வைகுண்ட பார்ஷதர்களைக் குறித்து ஹோமத்தைச்செய்து ஹோமத்தை நிறைவடையச் செய்யவேண்டியது. பொற்கம்பியினாலாவது, குசதர்ப்பத்தினாலாவது நயனோன்மீலனத்தை (அர்ச்சாமூர்த்தியின் கண் திறத்தலைச்) செய்து, பீடத்தில் எழுந்தருளச்செய்து மந்திர

http://acharya.org

ரத்னமான த்3வயத்தால் வைஷ்ணவன் ஆவாஹனம் செய்ய வேண்டும். அமமநதிரத்தாலேயே அர்ச்சனம்செய்து பிறகு புஷ்பாஞ்ஜலியை ஸமாப்பிக்கவேண்டும். அந்த பிம்பத்தில் அந்த மூர்த்தியை தியானித்து மனவடக்கமுடையவனுய் ஆயிரத்தெட்டு முறை புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கவேண்டியது. எல்லா வைஷ்ணவ ஸூக்தங்களேயும ஓதி வைஷ்ணவன் புஷ்பங்களை இடவேண்டும. பிறகு. பாயஸத்தோடும், நெய்யோடும் கூடிய அன்னத்தை அந்தணர்களுக்கு இடவேண்டும். ப்ரதிஷ்ட்டைசெய்வித்த ஆசார்யனுககு யதா2சக்தி தக்ஷிணையை அளித்து விசேஷமாக அர்ச்சனம் செய்யவேண்டும். ஸஹஸ்ரநாமங்களால் எமபெருமானைத் துதித்து ஆசீர்வசனங்களைச் சொல்லி வணங்கவேண்டும. (தன் ஆர்வத்தாலே) ப்ரதக்ஷிண நமஸ்காரங்களைப பலகால் செய்ய வேண்டும். "என் ஸ்வாமியே! உகந்தருளவேண்டும்" என்று பக்தியுடன் ஸர்வேஶ்வரனைப் பிரார்த்திக்க வேண்டும். பிறகு ஸ்ரீஸூக்தத்தைச் சொல்லி சாந்தியுடன் தீபங்களால் ஹாரத்தியெடுத்து. ஹோமத்தில் எஞ்சியிருக்கும் ஹவிஸ்ஸைப்பருகி, ஒப்பற்ற மூலமந்திரத்தை ஜபித்து, தாமரைக்கண்ணனை தியானித்துக்கொண்டு குசம்பரப்பிய பூமியிலே தூங்கவேண்டும வைஷ்ணவன் இவ்வண்ணமாகத் தன வீட்டில் அர்ச்சாமூர்த்தியில விஷ்ணுவை ப்ரதிஷ்டை செய்வித்து. தன சரீரம விழும வரையில் முறைப்படி திருவாராதனம் செய்யவேண்டியது. ஸாளக்3ராமசிலேயில் பரமாத்மாவைப் பூஜிப்பது கோடிகோடி மடங்கு சிறந்தது. இதில் ஐயமில்லே, ஸாளக்ராமர்ச்சனததில் ஜபமோ. அதி4வாஸமோ, பரதிஷ்ட்டாவிதியோ எதுவும் கிடையாது. விஷ்ணுவானவர் அந்த சிலேயில் எப்போதும எழுந்தருளியிருக்கிருர். ஹரியின் எந்த மூர்த்தியில் மேலான பக்தியிருககிறதோ, அந்த மூர்ததியையே அந்த ஸாளக்ராம மூர்ததியில் தியானித்து. அதற்குரிய முறைப்படி பூஜிக்கவேண்டும். அர்ச்சாமூர்ததிகளிலோ வெளில் ஒரு மூர்த்தியில் மற்ருெரு மூர்த்தியை தியானித்துப் பூஜிக்கலாகாது. அம் மூர்த்தியாகவேயனருே எம்பெருமான் அங்கு எழுந்தருளியிருக்கிருன். ஸாளக்ராமசிலேயிலேயே இஷ்டப்பட்ட ஹரிமூர்த்திகளைப் பூஜிக்கலாம். ஸாளக்ராமசிலேயில் அர்ச்சனம செய்வது, அஞ்சலி செய்வது, (அதனருகில்) தானம் செய்வது, வணங்குவது, காண்பது ஆகிய எல்லாமே மனிதர்களுக்குக் கோடி மடங்கு பயனை அளிக்கவல்லது. எவனெருவன் ஸாளக்3ராம சிலேக்குத் திருமஞ்சனம் செய்த தீர்தத்தைத் தலேயில் தரிக்கிருனே, அவன்

http://acharya.org

எல்லாத்தீர்த்தங்களிலும் குளித்தவனும், எல்லா யஜ்ஞங்களையும் செய்தவனும் ஆவான். அந்தஜலத்தைக் குடித்தால் பொய்சொல்லியது, பரஹிம்ஸை செய்தது, புசிக்கத்தகாதவற்றைப் புசித்தது ஆகிய அனைத்துமே அக்கணத்திலேயே அழிகின்றது. ஸாளக்3ராம சிலையில் அர்ச்சனம் செய்வது இருபிறப்பாளர்களுக்கே விதிக்கப் படுகிறது. மற்றவர்களுக்கு இல்லை. (இனி, அந்தந்த வருணங்களால் சிறப்பாகப் பூஜிக்கத்தக்க அர்சாமூர்த்திகளின் வகைகள் விவரிக்கப்படுகின்றன.)

இருபிறப்பாளன் பா3லக்ருஷ்ணரூபத்தையுடைய தேவனை எப்போதும் பூஜிக்கலாம். விசிஷ்டரான பா4கவதஸூத்3ரனும் இம்மூர்த்தியில் விஷ்ணுவைப் பூஜித்து (அம்மூர்த்தியைப் பற்றிய துதிகளைப்) படிக்கலாம். இருபிறப்பாளன் வராஹமூர்த்தி, நரசிம்ஹ மூர்த்தி, ஹயக்ரீவமூர்த்தி, வாமநமூர்த்தி ஆகியவர்களைத் தரையில் எழுந்தருளச்செய்தோ, நெஞ்சில் தரித்தோ பூஜிக்கலாம். ப்ராஹ்மணன் யஜ்ஞ (வராஹ) மூர்த்தியைப் பூஜிப்பதே சிறந்தது. க்ஷத்ரியன் ராமன், கேஶவன், மது4ஸூத3னன், நாராயணன், வாஸுதே3வன், அனந்தன், ஜநார்த்தனன் ஆகிய மூர்த்திகளைப் பூஜிப்பது சிறப்புற்றது. ப்ரத்யும்நன், அநிருத்தன், கோவிந்தன், அச்யுதன், ஹரி, ஸங்கர்ஷணன், க்ருஷ்ணன் ஆகிய மூர்த்திகளைப் பூஜிப்பது வைஶ்யனுக்குச்சிறந்தது. பா3ல கோ3பாலரூபமுடையமூர்த்தியைப் பூஜிப்பதே சூத்ரனுக்குச் சிறப்புற்றது முனிவர் தலைவர்களே! எல்லா மூர்த்திகளுமே அந்தணனால் பூஜிக்கத்தக்கவை. எல்லா ஸித்திகளையும் அளிக்கும் எல்லா மந்திரங்களும் அவனால் ஜபிக்கத் தக்கவை. ஆகையால் உயர்வை விரும்பும் அனைவராலும் அந்தணர் தலைவன் பூஜிக்கத்தக்கவன். பஞ்சஸம்ஸ்காரமுடையவனாய், மந்திர ரத்னமான த்வயத்தின் பொருளை அறிந்தவனான அந்தணன் புருஷோத்தமனை ஸாளக்3ராம சிலையிலேயே பூஜிப்பது சிறந்தது. துளஸியிதழ்களால் பூஜிக்கப்பட்ட ஹரி எல்லாவற்றையும் அளிக்கிறான். ஸாளக்ராமசிலையின் முன்னிலையில் எவன் ஶ்ராத்3த4ம் செய்கிறானோ, அந்த ஶ்ராத்3த4த்தினால் கயாஶ்ராத்தத்தைக்காட்டிலும் அளவற்றதான திருப்தி பித்ருக்களுக்கு விளைகின்றது. ஸாளக்3ராம ஸமீபத்தில் ஜபிப்பது, ஹோமம் செய்வது, தானம் செய்வது, நமஸ்காரம் செய்வது, ஜலதர்ப்பணம் செய்வது ஆகிய அனைத்தும் கோடிமடங்கு பயனளிக்கும். (இனி, ஸாளக்3ராமமூர்த்தி பூஜை விவரிக்கப்படுகிறது.)

http://acharya.org

ஸாளக்ராம சிலையின்மேல் செந்தாமரைக் கண்ணனை தியானித்து, புருஷஸூக்தத்தினால் அப்புருஷோத்தமனைப் பூஜிக்க வேண்டும். இந்த ஸூக்தத்தின் மந்திரங்களுக்கு அநுஷ்டுப்பும், த்ரிஷ்டுப்பும் சந்தஸ்ஸுக்களாயுள்ளன. லோககாரணனாய், பரம புருஷனான நாராயணனே இதற்கு ருஷியாகவும், தேவதையாகவு முள்ளான். (இனி, அங்கந்யாஸம்) முதல் ரிக்கை இடது கையிலும் இரண்டாவதை வலது கையிலும், மூன்றாவதை இடது காலிலும், நாலாவதை வலது காலிலும்*, ஐந்தாவதை இடது முழந்தாளிலும், ஆறாவதை வலது முழந்தாளிலும், ஏழாவதை இடது இடுப்பிலும், எட்டாவதை வலது இடுப்பிலும், ஒன்பதாவதை நாபி (கொப்பூழ்) ப்ரதேசத்திலும், பத்தாவதை இருதயப்ரதேசத்திலும், பதினோராவதைக் கழுத்துப்பிரதேசத்திலும், பனிரண்டாவதை இடது தோளிலும், பதின்மூன்றாவதை வலது தோளிலும், பதினாலாவதைத் தன் முகத்திலும், பதினைந்தாவதை இருகண்களிலும், பதினாறாவதைத் தலையிலும் ந்யாஸம் செய்யவேண்டியது. இவ்வண்ணமாக அங்கந்யாஸத்தைச் செய்தபின் புருஷோத்தமனை தியானம் செய்யவேண்டியது. ஆயிரம் சூரியர்களைப்போல் ஒளியுடையவனும், பதினாயிரம் மன்மதர்களைப்போல் அழகானவனும், யௌவனவயஸ்ஸையுடையவனும், தாமரைக்கண்ணனும், எல்லாத் திருவாபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனும், பூஷணங்களையுடையவையாய், பருத்து உருண்டு நீண்டவையான நாலு திருக்கைகளிலும் சக்ரம், பத்மம், கதை, சங்கம் ஆகியவற்றை தரிப்பவனும், பீதாம்பரத்தையுடையவனும், வெள்ளைப்புஷ்பங்களாலும், பூச்சினாலும் அலங்கரிக்கப்பெற்றவனும், † சிவந்த திருக்கைத் திருவடித்தாமரைகளையுடையவனும், நெய்த்திருண்டு சுருண்ட திருக்குழல்களால் விளங்குபவனும், ஸ்ரீபூமிதேவிகளால் இருமருங்கிலும் § ஆலிங்கனம் செய்யப்பெற்றவனுமாகத் தியானித்து அர்ச்சனம் செய்யவேண்டியது. தன்னிடம் செய்தது போலவே பரமபுருஷனிடமும் அங்கந்யாஸம் செய்யவேண்டியது.

---

* இவ்விடத்தின் மூலத்தில் "தக்ஷிணே கரே" என்றிருப்பதை "தக்ஷிணே பதே" என்று திருத்திக்கொள்ளவும்.

† இவ்விடத்தில் 'ரத்நஹஸ்த' என்பதை 'ரக்தஹஸ்த' எனத் திருத்தவும்.

§ இவ்விடத்தில் 'ஸமாச்லிஷ்டம் பார்ச்வம்' என்பதை 'ஸமாச்லிஷ்டபார்ச்வம்' என்று திருத்தவும்.

http://acharya.org

புருஷஸூக்தத்தின் முதல் ருக்கினால் விஷ்ணுவை ஆவாஹனம் செய்து, இரண்டாவதால் ஆஸனத்தையும் மூன்றாவதால் பாத்யத்தையும், நாலாவதால் அர்க்₄யத்தையும், ஐந்தாவதால் ஆசமநீயத்தையும் முறைப்படி ஸமர்ப்பிக்கவேண்டியது. ஆறாவதால் ஸ்நானத்தையும், ஏழாவதால் வஸ்திரத்தையும், உபவீதத்தையும், எட்டாவதால் சந்தநாதிஸுகந்தத்தையும், ஒன்பதாவதால் நறுமலர்களையும், பத்தாவதால்தூ₄பத்தையும் (அகில் முதலானவற்றின் புகையையும்), பதினோராவதால் தீபத்தையும், பனிரண்டு பதின்மூன்றாவது மந்திரங்களால் ப்ரஸாதநிவேதனத்தையும் அளிக்கவேண்டியது. பதினாலாவதால் நமஸ்கரித்து, பதினைந்தாவதால் ப்ரதக்ஷிணம செய்து, பதினாறாவதால் ஶயனமளித்து எஞ்சியகர்மததைப் பூர்த்திசெய்யவேண்டியது. ஸ்நானம், வஸ்திரம், உபவீதம், ஆகியவற்றை ஸமர்பபிக்குமபோதும் தளிகை ஸமர்ப்பிக்கும்போதும் ஆசமனம செய்யவேண்டும். இப்பதினாறு மந்திரங்களாலும் பதினாறுமுறை முறைபபடி நெய்யால் ஹோமம செய்து மறுபடி ஒருமுறை முன்போலவே நெய்யால் ஹோமம் செய்யவேண்டும. ருக்குகளாலே புஷ்பாஞ்ஜலிகளையும் ஸமர்ப்பிக்கவேண்டும். மறுபடியும உத்தமமான புருஷஸூக்தத்தை ஜபிக்கவேணடும். மாத்₄யாந்ஹிகஸ்நானம் செய்து, ஊர்த்₄வ புண்ட்₃ரம் தரித்து மாத்₄யாந்ஹிகஸந்த்யாவந்தனத்தையும் செய்து ஸூர்யமண்டலததின நடுவிலிருக்கும் ஹரியை தியானித்துக் கொண்டு ''உது₃த்யம்'' ''ஹம்ஸ: ஶுசிஷத்'' முதலான மந்திரங்களை உச்சரித்து, நின்றுகொண்டே முனபோல் ப்ராணாயாமம் செய்து காயத்ரீஜபம செய்யவேண்டியது. ஸூர்யனைப்பற்றிய (''ஆஸத்யேந'' என்னும்) அநுவாகத்தால் உபஸ்த₂ானமந்திர ஜபம் செய்யவேண்டும். பிறகு தனனையே பரிஷேசனம் (சுற்றி நீர் தெளிததல்) செய்து, தாப்பையை உள்ளடககிய அஞ்ஜலியை வலது மடியில் வைத்து ஜபயஜ்ஞஸித்தியின் பொருட்டு அறிவாளியானவன் (ஏழு) வ்யாஹ்ருதிகளோடும் ப்ரணவத்தோடும் கூடிய காயத்ரியை ஜபிக்கவேண்டும். அவ்வண்ணமே நாலு வேதங்களையும, விஷ்ணுபுராணத்தையும், ஸ்ரீராமாயணத்தையும், கண்ணன் அருளிய பகவத்கீதையையும் இயன்றவரையில் ஜபித்துப் புண்டரீகாக்ஷனை தியானித்துக்கொண்டு நீரைத் தொடவேண்டியது. முன்போலவே நித்யஸூரிகளான வைகுண்ட₂பார்ஷத₃ர்களுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டியது. எள்கலந்த நீராலே தேவரிஷிபித்ரு

http://acharya.org

தர்ப்பணம் செய்து, வஸ்த்ர நிஷ்பீட₃நம் செய்து, ஆசமனம் செய்து, முன்போல் வீட்டினுள் நுழைந்து பக்தியோடு புருஷ ஸூக்தத்தாலே முறைப்படி பூஜித்து முறைப்படி தை₃வயஜ்ஞம், பூ₄தயஜ்ஞம், பித்ருயஜ்ஞம், மநுஷ்யயஜ்ஞம் ஆகியவற்றை ஸர்வ யஜ்ஞபோ₄க்தாவான விஷ்ணுவின ப்ரீதிக்காகச் செய்யவேண்டியது. முன்போலவே விஷ்ணுவைக்குறித்து வைகுண்ட₂ஹோமம் செய்ய வேண்டியது. நாலு விதமான பூதங்களுக்கும் ப₃லிஸாதிக்கவேண்டியது. வீட்டு வாசலில் விருந்தினர்கள் வருவதை எதிர்பார்த்து ஒரு பசுவைக்கறக்கும் நேரம் காத்திருக்கவேண்டியது. அக்காலத்தில் வந்தவர்களைப் பழம், கிழங்கு, அந்நம் ஆகியவற்றையளித்துப் பூஜிக்கவேண்டியது. மஹாபாகவதர்களான அந்தணர்கள் வந்தால் ஶ்ரத்₃தை₄யோடு கூட அவர்களை ப்ராஹ்மணார்க்குரிய ஆஸனத்தில் அமர்த்தி அர்க்₄யபாத்₃ய ஆசமநீயங்களும், மது₄பர்க்கமும் க₃ந்த₄ புஷ்பதாம்பூ₃லதூ₄பதீ₃ப நிவேதனங்களும் அளித்து விசேஷமாகப் பூஜிக்கவேண்டியது. ஒரு மஹாபாகவதோத்தமனை அந்தணன் ஒருமுறை பூஜிக்கப்பட்டானாகில் அறுபதினாயிரம் வருடங்கள் பகவான் பூஜிக்கப்பட்டவனாகிறான். மஹாபாகவதோத்தமனைத் தன்னைப்போலே இவனும் ஓர் ப்ராக்ருதன என்னும் மயக்கத்தால் எவனொருவன் பூஜிப்பதில்லையோ, அவன கோடி ஜன்மங்களில் ஸம்பாதித்த புண்ணியத்தினின்றும் நழுவுகிறான். இதில் ஐயமில்லை. அவன் வீட்டில் க்ஷேமவுன் நூறுவருஷம் எதையும் உண்ணமாட்டான். மஹாபாகவதோத்தமன் எல்லா தேவர்களுக்கும் முகமாவான். அர்த்த₂பஞ்சகங்களின் உண்மையை அறிந்தவனாய், பஞ்சஸம்ஸ்காரம் பெற்றவனாய், ஒன்பது விதமான பக்தியோடு கூடியவனே மஹா பாகவதன் எனப்படுகிறான். காலத்தில் வந்தடைந்த அவனைப் பூஜித்தால் மதுஸூதனன் கணத்தில் உகப்படைந்து விரும்பியதையெல்லாம் கொடுக்கிறான். மஹாபாகவதர்களின் ஸ்ரீபாத₃தீர்த்தத்தை எவன் குடிக்கிறானோ, அல்லது பக்தியுடன் தலையில் தரிக்கிறானோ அவன் எல்லாப்பாபங்களினின்றும் விடுதலையடைகிறான். மஹாபாகவதோத்தமன் ஏதேனுமோரிடத்தில் ஒரு நாள் வஸித்தாலும் அந்த தேசம் பரமபரிசுத்தமாகிறது. மஹாபாகவதோத்தமர்களான வைஷ்ணவர்களையும் அதற்குப்பின் விருந்தினரையும், அதற்குப்பின் குழந்தைகள், நண்பர்கள், வயதின் மிக்கவர்கள், வீட்டுக்குவந்த உறவினர்கள் ஆகியவர்களையும் போஜனம் செய்வித்து, தான பசியை அடக்கிக் காலத்தில் ஸந்யாஸிகளுக்கும் ப்ரஹ்மசாரிகளுக்கும் ஐயமும் பிச்சையும் அந்நத்தையும் கைகாட்ட வேண்டியது.]

http://acharya.org

ஆக, ஜலம் அக்னி, இருதயம், ஸூர்யமண்டலம், தரை, அர்ச்சாமூர்த்திகள் ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானைப பூஜிக்கும் முறைகளும, இவையத்தனைக்கும் மேலே மஹாபாகவதோத்தமனைப் பூஜிக்கவேண்டியது அவசியம என்றும் இதுவரையில் விவரிககப்பட்டது. இபபகுதியால் ஆராதிக்கத்தக்கவர் எம்பெருமானும், அவனடியார்களுமே என விளக்கப்பட்டது. இனி, இவ்வண்ணமாக பகவானையும், பாகவதோத்தமர்களையும ஆராதனம் செய்தபின்பு தான புஜிக்கவேண்டிய முறையை விளக்கும பகுதிகளைக் காண்போம்.

ஸம்யங்நிவேதி3தம் விஷ்ணோ: ஸ்வயம் பு4ஞ்ஜீத வாக்3யத: ||
ப்ரக்ஷாள்ய பாதௌ3 ஹஸ்தௌ ச ஸம்யகா3சம்ய வாரிணா |
விஷ்ணோரபி4முக2ம பீடே2 ஹோமதி3க்3தே4 குஶோத்தரே ||
[241-242]

[கைகால்களை அலம்பிக்கொண்டு நீரினால் நனகு ஆசமனம் செய்து, பகவானுக்குமுன் தர்ப்பத்தின்மேல பொனமுலைனததிலமர்ந்து விஷ்ணுவுக்கு நனகு நிவேதனம் செய்யப்பட்ட அன்னத்தை மௌனத்துடன் புசிககவேணடும.]

பத்ந்யாதி3பி4ர்த்3ருதமந்நம் வாஸுதே3வார்ப்பிதம் ஶுப4ம் |
கா3யத்ர்யா மூலமந்த்ரேண ஸம்ப்ரோக்ஷ்ய ஶுப4வாரிணா ||
ருதஸத்யாப்4யாமிதி ச மந்த்ராப்4யாம் பரிஷேசயேத் |
அந்நரூபம் விராட்புருஷம் த்4யாத்வா மந்த்ரம் ஜபேத் பு3த4: ||
த்4யாத்வா ஹ்ருத்பங்கஜே விஷ்ணும் ஸூத்4ராம்ஶுஸத்3ருஶ த்3யுதிம் |
ஶங்க2சக்ரக3தா3பத்3மபாணிம் வை தி3வ்யபூ4ஷணம் ||
மநஸைவார்ச்சயித்வாத2 மூலமந்த்ரேண வைஷ்ணவ: |
பாதோ3த3கம் ஹரே. புண்யம் துளஸீத3ளமிஶ்ரிதம் ||
அம்ருதோபஸ்தரணமஸீதி மந்த்ரேண ப்ராஶயேத் |
உத்3தி3ஶ்யைவ ஹரிம் ப்ராணோ ஜுஹுயாத் ஸக்4ருதம் ஹவி: ||
அந்நாலாபே4 து ஹோதவ்யம் ஶாகமூலப2லாதி3பி4: |
பஞ்சப்ராணத்3யாஹுதயோ மந்த்ரைஸ்ஸ்வைர் ஜுஹுயாத் ஹரே. || [257-262]

'பத்னி முதலானவர்களால் சமைத்தளிக்கப்பெற்றதாய், வாஸுதேவனுககு அர்ப்பணம் செய்யபபெற்றதாய், மஙகளமானதான

அன்னத்தை காயதரியாலும், திருவெட்டெழுத்தாலும் நல்ல நீரால் நனகு ப்ரோக்ஷணம் செய்து, "ருதம் த்வா ஸத்யேந பரிஷிஞ் சாமி" அல்லது "ஸத்யம் த்வா ருதேந பரிஷிஞ்சாமி" என்னும் மந்திரத்தாலே பரிஷேசநம் செய்து, அந்நரூபியாக விராட்புருஷனை தியானித்து அறிவாளியானவன் திருமந்திரத்தை ஜபிக்கவேண்டும். சந்திரனைப்போல் ஒளியுள்ளவனும், ஶங்கசக்ரகதாபத்மங்களை நாலு திருக்கைகளிலும் ஏந்தியவனும், அப்ராக்ருதமான ஆபரணங் களை உடையவனுமான விஷ்ணுவை இருதயகமலத்தில் தியானித்து திருவெட்டெழுத்தைக் கொண்டு நெஞ்சாலேயே அர்ச்சித்து வைஷ்ணவனுயிருப்பவன் ஹரியின் ஸ்ரீபாததீர்த்தத்தை "அம்ரு தோபஸ்தரணமஸி" என்னும் மந்திரத்தைச் சொல்லிப் பருகவேண்டி யது. ஹரியையே உத்தேசித்து நெய்யோடு கூடிய அன்னத்தை ப்ராணாஹுதி செய்யவேணடும. அன்னமில்லாவிடில் காய், கிழங்கு, பழங்கள் முதலானவற்றால் ப்ராணாஹுதி செய்யவேண்டும். "ப்ராணாய ஸ்வாஹா" முதலான மந்திரங்களாலே ஹரியின் பொருட்டே ஐந்து ப்ராணாஹுதிகளையும் செய்யவேண்டும்.]

த்₄யாயேந் நாராயணம் தே₃வம் போ₄ஜநம் து யதா₂க்ரமம் ।
வக்த்ராத்₃பாதயந் க்₃ராஸம் சிந்தயந் மது₄ஸூத₃நம் ॥ [267]

[மதுஸூதனனைச் சிந்தித்துக்கொணடு வாயிலிருந்து சோற்றைக் கீழே விழவிடாமல் முறைப்படி போஜனம் செய்யவேண்டும். (அப்போது) நாராயணனை தியானிக்கவேண்டும்.]

அந்யச்ச ப₂லமூலாதி₃ ப₄க்ஷ்யபாநாதி₃கம் ச யத் ।
ஸ்ரக்சந்த₃நாதி₃ தாம்பூ₃லம் யோ பு₄ங்க்தே ஹர்யநர்ப்பிதம் ॥
கல்பகோடிஸஹஸ்ராணி ரேதோவிண்மூத்ரபு₄க்₃ப₄வேத் ॥
தஸ்மாத்ஸர்வம் ஸுவிமலம் ஹரிபு₄க்தம் யதே₂க்தவத் ।
ஸபவித்ரேண யோ பு₄ங்க்தே ஸர்வயஜ்ஞபலம் லபே₄த் ॥
த்₄யாயந் நாராயணம் தே₃வம் வாக்₃யத: ப்ரயதாத்மவாந் ।
பு₄க்த்வா சாநதித்ருப்த்யைவ ப்ராஶயேத₃ம்பு₃ நிர்மலம் ॥
அம்ருதாபித₄ாநமஸீதி மந்த்ரேண குஶபாணிநா ।....
பீத்வா மந்த்ரஜலம் பஶ்சாத் ஆசம்ய ஹ்ருத₃யாம்பு₃ஜே ।
ராமமிந்தீ₃வரஶ்யாமம் சக்ரஶங்க₂த₄நுர்த₄ரம் ॥
யுவாநம் புண்ட₃ரீகாக்ஷம் த்₄யாத்வா மந்த்ரம் ஜபேத் பு₃த₄: ॥
[283-291]

http://acharya.org

[பழம் கிழங்கு முதலானவற்றையும், பக்ஷணம, பானம் முதலான வற்றையும, மாலை, சந்தனம முதலானவற்றையும், தாம்பூலததையும மற்ற எதையும ஹரிக்கு ஸமர்ப்பிக்காமல் எவனொருவன் புசிக்கிறானோ அவன் ஆயிரங்கோடி கல்பங்கள் ரேதஸ்ஸையும், மலத்தையும், மூத்திரத்தையும் உண்பவனுவான. ஆகையால் முறைப்படி ஹரிககு அமுதுசெய்தபின்பே எல்லாம் மிகப்பரிசுத்தமாகிறது. அப்படிப் பரிசுத்தமானதைப் புசிப்பவனே எல்லா யஜ்ஞபலனையும் அடைவான். நாராயணனை தேவனை தியானித்து மௌனமாய் மனத்தை அடக்கி, மிகவும் திருப்தி ஏற்படாத அளவுக்குப் புசித்து, 'அம்ருதாபித₄ாநமஸி' என்னும் மந்திரத்தால் குஶபாணியாய் பரிசுத்தஜலத்தைப் பருகவேண்டும்....மந்திரஜலத்தைப்பருகி ஆசமனம் செய்து பிறகு இதயக்கமலத்தில் குவளைபோன்று நீலநிறத்தவனாய், சக்ரம, ஶங்கம, வில் ஆகியவற்றை தரித்தவனாய், வாலிபனாய், தாமரைக்கண்ணனை ராமனை தியானித்து, அறிவாளியானவன் ("ஸ்ரீராமாய நம:" எனும் ராம) மந்திரத்தை ஜபிக்க வேண்டும்.]

இப்பகுதிகளால் போஜனம் செய்யவேண்டிய முறை விளக்கப் பட்டது. இனி, மாலை நேரத்தில செய்யவேண்டிய கர்மாநுஷ்டானங்களைவிளக்கும் பகுதியைக் காண்போம்.

ப₃ஹிஸ்ஸந்த்₄யா த₃ஶகு₃ணம் கோ₃ஷ்டே₂ ஶதகு₃ணம் தத₂ா ||
க₃ங்க₃ா ஜலே ஸஹஸ்ரம் ஸ்யாத் அநந்தம் விஷ்ணுஸந்நிதௌ₄ ||
உபாஸ்ய பஶ்சிமாம் ஸந்த்₄யாம் ஜப்த்வா ஜப்யம் ஸமாஹித: |
பூர்வவத் பூஜயேத் விஷ்ணும் க₃ந்த₄புஷ்பாக்ஷதாதி₃பி₄: ||
அஷ்டாக்ஷரவித₄ாநேந நிவேஶ்யைவம் ஸமாஹித: |
ஸாயமௌபாஸநம் ஹுத்வா வைஷ்ணவம் ஹோமமாசரேத் ||
த்₄யாத்வா யஜ்ஞமயம் விஷ்ணும் மந்த்ரேணாஷ்டோத்தரம் ஶதம் |
திலவ்ரீஹ்யாஜ்யசருபி₄: தத்ரைகேநாபி வா யஜேத் ||
வைஶ்வதே₃வம் ப₄லிம் ஹுத்வா த₃த்வா ச ஆசமேத் |
ஶய்யாயாம் விந்யஸேத் தே₃வம் பர்யங்க ஸமலங்க்ருதம் ||
ஸவிதாநே க₃ந்த₄புஷ்பதூ₄பைராமோதி₃தே ஶுபே₄ |
ஶாயயித்வா ச தே₃வேஶம் நாராயணமநாமயம் ||
காலஜீமூதஸங்காஶம் மந்த₃ஸ்மேரமுக₂ாம்பு₃ஜம் |
கோடிகந்த₃ர்ப்பலாவண்யம் தே₃வீப்₄யாம் ஸஹிதம் ஹரிம் ||

http://acharya.org

ஹிரண்யகர்ப்₄ஸூக்தேந நாஸதா₃ஸீத₃நேந ச ।
க்ருத்வா புஷ்பாஞ்ஜலிம பஶ்சாத் உபசாரை: ஸமர்ச்சயேத் ॥
ஶ்ரியே ஜாத இத்ய்ருசைவ த்₄ருவஸூக்தேந ச த்₃விஜ: ।
நீ₃பைர்நீராஜநம் க்ருத்வா பஶ்சாத் அர்க்₄யம் நிவேத₃யேத் ॥
ஸுவாஸஸா யவநிகாம் விந்யஸ்யாऽக₃ ஸமாஹித: ।
த்₃வாத₃ஶார்ணம் மஹாமந்த்ரம் ஜபேத₃ஷ்டோத்தரம் ஶதம் ॥
அஸ்த்ரைஶ்ச ஶங்க₂சக்ராத்₃யை: தி₃க்ஷு ரக்ஷாம்
ஸுவிந்யஸேத் ।
ஸ்தோத்ரை: ஸ்துத்வா நமஸ்க்ருத்வா புந: புநரநந்தரம் ॥
வைஷ்ணவைஶ்ச ஸுஹ்ருத்₃பி₄ஶ்ச பு₄ஞ்ஜீயாத₃ர்ப்பிதம்
ஹரே: ।
ஆசம்யாக்₃நிமுபஸ்ப்ருஶ்ய ஸமாஸீநஸ்து வாக்₃யத: ॥
த்₄யாயந் ஹ்ருதி₃ ஶுப₄ம் மந்த்ரம் ஜபேத₃ஷ்டோத்தரம்
ஶதம் ॥
ஶேஷா ஹி ஶாயிநம தே₃வம் மநஸைவார்ச்சயேத் தத: ।
[293-306]

[வீட்டினுள் ஸந்த்யாவந்தனம் செய்வதைக் காட்டிலும் வெளியில் ஸந்த்யாவந்தனம் செய்வது பத்துமடங்கு சிறந்தது; பசு நிற்கு மிடத்தில் ஸந்த்யாவந்தனம் செய்வது நூறுமடங்கு சிறந்தது; கங்காஜலத்தில் ஸந்த்யாவந்தனம் செய்வது ஆயிரம் மடங்கு சிறந்தது; விஷ்ணுஸந்நிதியில் ஸந்த்யாவந்தனம் செய்வது அளவற்ற மடங்கு சிறப்புற்றது. மாலை ஸந்த்யையை உபாஸித்து ஜபிக்கத்தக்க திருவஷ்டாக்ஷரத்தை மனஶ்ஶாந்தியுடன் ஜபித்து, கந்தம், புஷ்பம், அக்ஷதை முதலானவற்றுடன் விஷ்ணுவை முன்போலவே அஷ்டாக்ஷரவிதிப்படி பூஜிக்கவேண்டியது. இவ்வண்ணமாக சாந்தியுடன் அநுஷ்டித்து மாலைநேர ஔபாஸனஹோமத்தைச்செய்து, வைஷ்ணவஹோமத்தைச் செய்யவேண்டும். யஜ்ஞமயனான விஷ்ணுவை தியானித்து மூலமந்திரத்தாலே எள், நெல், நெய், ஹவிஸ் ஆகியவையனைத்தினாலும், அல்லது அவற்றில் ஒன்றால் நூற்றெட்டுமுறை ஹோமம் செய்யவேண்டும். வைஶ்வதேவஹோமம் செய்து, பூதபலியளித்து ஆசமனம் செய்யவேண்டும். அலங்கரிக்கப்பெற்ற தேவனை மேற்கட்டியோடு கூடி கந்த புஷ்ப தூபங்களாலே மணமூட்டப்பெற்ற மங்களமான மெத்தென்ற பஞ்சசயனத்தில் முறைப்படி சயனிக்கச்செய்து, தேவர்தலைவனாய், வியாதியற்றவனாய், காளமேகநிறத்தனாய், புன்சிரிப்புடைய முகத்

http://acharya.org

தாமரையை உடையவனாய், கோடிமந்மதாகளையொத்த அழகுடைய வனாய், ஸ்ரீபூ4தே3விகளோடு கூடியவனாய்.ஹரியென்றும், நாராயணனென்றும் பிரஸித்திபெற்றவனான தேவனை ஹிரண்யகர்ப்பஸூக்தத்தாலும், "நாஸதா3ஸீத்" என்னும் மந்திரத்தாலும் புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பித்து, பின் உபசாரங்களாலே பூஜிக்கவேண்டியது. "ஶ்ரியேஜாத" என்னும் ருக்கினாலும், த்4ருவஸூக்தத்தாலும் இரு பிறப்பாளன் தீபங்களால் ஹாரத்தி எடுத்து, அதற்குப்பின் அர்க்4யம் ஸமர்ப்பிக்கவேண்டியது. நல்ல வஸ்திரத்தால் முகத்திரையை ஸமர்ப்பித்து சாந்தியுடையவனாய் நூற்றெட்டுமுறை த்3வாத3ஶாக்ஷர மஹாமந்திரத்தை ஜபிக்கவேண்டும். ஶங்க2ம் சக்ரம் முதலான ஆயுதங்களால் திக்குகளில் (உறகல் உறகல் உறகல் ஒணசுடர் ஆழியே! சங்கே! அறவெறி நாந்தகவாளே! அழகிய சார்ங்கமே! தண்டே! இறவுபடாமலிருந்த எண்மர் உலோகபாலீர்காள்! பறவையரையா! உறகல் பள்ளியறை குறிக்கொண்மின் என்றாற்போலே) காவலிடவேண்டும். மறுபடியும் மறுபடியும் துதிகளாலே துதித்து நமஸ்கரித்து அடுத்தபடியாக ஹரிக்கு நிவேதனம் செய்யப்பட்டதை வைஷ்ணவர்களோடும் நண்பர்களோடும் புசிக்கவேண்டும். ஆசமனம் செய்து, அக்னியைத் தொட்டு, மௌனத்துடன் வீற்றிருப்பவனாய் ஶுப4மான திருமந்திரத்தை நூற்றெட்டுமுறை நெஞ்சில் அநுஸந்தித்துக்கொண்டு, ஆதி3 ஶேஷஶாயியான தேவனை மனத்தினாலேயே அர்ச்சிக்கவேண்டியது.]

த்4யாயந் த: ப3த்மநாப4ம் து ஶயீரந் விஜிதேந்த்ரியா: ||
அர்ப்பயேத்3வா(அ)ர்ச்சயேத்3விஷ்ணும் த்ரிகாலம்
ஶ்ரத்3த4யாந்வித: |
ஆசரேயு: பரம் த4ர்மம் யதா2வ்ருத்யநுஸாரத: ||
ப்ராத: க்ருஷ்ணம் ஜக3ந்நாத2ம் கீர்த்தயேத் புண்யநாமபி4: |
ஶௌசாதி3கம் து யத் கர்ம பூர்வோக்தம் ஸர்வமாசரேத் ||

[311-313]

[பத்மநாபனை தியானித்துக்கொண்டு இந்திரிய ஜயமுடையவர்களாய் சயனித்திருக்கவேண்டியது. முக்காலத்திலும் விஷ்ணுவுக்கு ஆத்மஸமர்ப்பணமும் அர்ச்சனமும் ஶ்ரத்தையோடு செய்யவேண்டியது. தத்தம் வர்ணாஶ்ரமதர்மங்களையொட்டிப் பரமதர்மத்தை அநுஷ்டிக்கவேண்டும். (இரவில் தூங்கி விழித்தபின்) காலையில் ஜகந்நாதனான க்ருஷ்ணனை திவ்யநாமங்களால் ஸங்கீர்த்தனம் செய்யவேண்டும். உடலைப் பரிசுத்தப்படுத்திக்கொள்வது முதலான நித்யகர்மங்களனைத்தையும் முன் சொன்னபடியே செய்யவேண்டும்.]

http://acharya.org

ஆக, பகவானுடைய நித்யநைமித்திக ஸமாராத4நவிதி4யைச் சொல்லும் இவ்வெட்டாமத்தியாயத்தில் இதுவரையில் நித்ய ஸமாராத4நவிதி4 விளக்கப்பட்டது. இனி ஒவ்வொருகாலங்களில் பகவானுக்குச் செய்யவேண்டிய டோ3லோத்ஸவம், பவித்ரோத்ஸவம் முதலான நைமித்திகோத்ஸவங்களின் மூலம் அவனை ஆராதிக்கும் முறையை விளக்கும் பிற்பகுதியைக் காண்போம். அவற்றில் டோ3லோத்ஸவம் என்னும் ஊஞ்சல் உத்ஸவத்தை விளக்கும் பகுதி முதலில் உள்ளது. அதாவது:—

நைமித்திகவிஶேஷேண பூஜயேத் பதிமவ்யயம் |
தத்தத்காலே து தந்மூர்த்தே: அர்ச்சநம் முநிபி4: ஸ்ம்ருதம் ||
ப்ரஸுப்தே பத்3மநாபே4 து நித்யம் மாஸசதுஷ்டயம் |
த்3ரோண்யாம் தோ3லாயாமபி வா ப4க்த்யா ஸம்பூஜயேத் விபு4ம் ||
க்ஷீராப்3தௌ4 ஶேஷபர்யங்கே ஶயாநம் ரமயா ஸஹ |
நீலஜீமூதஸங்காஶம் ஸர்வாலங்காரஸுந்த3ரம் ||
கௌஸ்துபோ4த்3பா4ஸிததநும் வைஜயந்த்யா விராஜிதம் |
லக்ஷ்மீக4நகுசஸ்பர்ஶஶுபோ4ரஸ்கம் ஸுவர்ச்சஸம் ||
த்4யாத்வைவம் பத்3மநாப4ம் து த்3வாத3ஶார்ணேந நித்யஶ: |
பூஜயேத் க3ந்த4புஷ்பாத்3யை: த்ரிஸந்த்4யாஸ்வபி வைஷ்ணவ: ||
நிவேத்3ய பாயஸாந்நம் து த3த்3யாத் புஷ்பாஞ்ஜலிம் தத: |
ஸஹஸ்ரம் ஶதவாரம் வா த்3வயம் மந்த்ரம் ஜபேத் ஸுதீ4: ||
த்3வாத3ஶார்ணம் மநும் சைவ ஜப்த்வாऽஜ்யேந திலைஶ்ச வா |
கேவலம் சருணா வாபி ஜுஹுயாத் ப்ரதிவாஸரம் ||
அத4:ஶாயீ ப்3ரஹ்மசாரீ ஸர்வபோ4க3விவர்ஜித: |
வார்ஷிகாம்ஶ்சதுரோ மாஸாந் ஏவமப்4யர்ச்ய கேஶவம் ||
போ3த4யித்வாऽத2 கார்த்திக்யாம் த3த்3யாத் புஷ்பாண்யநேகஶ: |
ஸாஜ்யைஸ்திலை: பாயஸேந மது4நா ச ஸஹஸ்ரஶ: ||
மூலமந்த்ரேண ஜுஹுயாத் ஸூக்தைஶ்சாவப்4ருத2ம் தத: |
ஸஹஸ்ரநாமபி4: க்ருத்வா த3த்3யாத் தர்ப்பணமேவ ச ||
க்3ருஹம் க3த்வாऽத2 தே3வேஶம் பூஜயித்வா யதா2விதி4 |
போ4ஜயேத் வைஷ்ணவாந் விப்ராந் த3க்ஷிணாபி4ஶ்ச தோஷயேத் || [314-324]

http://acharya.org

[ஒவ்வொரு நிமித்தங்கள் (குறிப்பிட்ட காலங்கள்) நேரும்போது அழிவற்றவனான எமபெருமானை (நைமித்திகோத்ஸவங்களால்) ஆராதிக்கவேண்டியது. அவ்வக்காலங்களில் பகவந்மூர்த்தியை ஆராத4னம் செய்யவேண்டிய முறை முனிவர்களால் விதிக்கப் பட்டுள்ளது. மழைகாலமான நாலு மாதங்களில் பத3மநாப4ன் யோகநித்திரை கொள்ளும்போது மரத்தொட்டியிலாவது, ஊஞ்சலிலாவது ஸர்வேஶ்வரனை எழுந்தருளச்செய்து பக்தியுடன் திருவாராதனம் செய்யவேண்டும. திருப்பாற்கடலிலே, திருவனந்தாழ்வானாகிற படுக்கையிலே ஸ்ரீதேவியோடு சயனித்திருப்பவனாய், நீலமேகம்போன்றவனாய், எலலா அலங்காரங்களாலும் அழகுபெற்றிருப்பவனாய், ஸ்ரீகௌஸ்துப4த்தாலே விளங்காநிற்கும் திருமேனியை உடையவனாய், வைஜயந்தியெனும் வனமாலையால் விளங்கா நிற்பவனாய், மலராள் தனத்தின் ஸ்பரிஶத்தாலே பரமமங்களமாய் விளங்கும் திருமார்பையுடையவனாய், பேரொளி பெற்றவனான பத்மநாபனை இவ்வண்ணமாக தியானித்து. (அந்நாலு மாதங்களிலும்) தினந்தோறும மூன்று ஸந்த்4யாகாலங்களிலும் விஷ்ணு பக்தன் திருத்3வாத3ஶாக்ஷரியை அநுஸந்தித்துக்கொண்டு, க3ந்த4ம், புஷ்பம் முதலானவற்றால் ஆராத4னம் செய்யவேண்டும். பாயஸாந்நத்தை நிவேத3னம் செய்தபின், புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கவேண்டியது. அறிவாளியானவன் ஆயிரம முறையாவது, நூறு முறையாவது த்3வயமந்திரததை ஜபிக்கவேணடும. திருத்3வாத3ஶாக்ஷரியை ஜபித்துக்கொண்டு நெய்யினாலோ, எள்ளினாலோ, ஶாத்3த4ஹவிஸ்ஸினாலோ தினந்தோறும் ஹோமம் செய்யவேண்டும். வெறுநதரையில் படுப்பவனாய், ப்3ரஹ்மசர்யவ்ரதத்தை உடையவனாய், எல்லா போகங்களையும விட்டவனாய் மழைகாலமான நாலு மாதஙகளிலும் இவ்வண்ணமாகக் கேஶவனைத் திருவாராதனம் செய்து, கார்த்திகையில் திருப்பள்ளியுணர்த்தி விஶேஷமாகப் புஷ்பஙகளை ஸமர்ப்பிக்கவேண்டியது. மூலமந்திரமான திருவஷ்டாக்ஷரத்தையும், (வைஷ்ணவ) ஸூக்தங்களையும அநுஸநதித்துக்கொண்டு, நெய்யோடு கூடிய எள்ளினாலும், பாயஸத்தினாலும், தேனாலும் ஆயிரம முறை ஹோமம்செய்து ஸஹஸ்ரநாமங்களாலே அவப்4ருத2ஸ்நானம்செய்து கண்ணாடி காட்டவேணடும. பிறகு வீட்டிற்குச்சென்று, தேவர் தலைவனை முறைப்படி (அங்கு) பூஜித்து, வைஷ்ணவர்களான அந்தணர்களுக்குத் ததீ3யாராத4னம செய்வித்து த3க்ஷிணைகளைக் கொடுத்து உகப்பிக்கவேண்டியது.]

http://acharya.org

இவ்வண்ணமாக டோ3லோத்ஸவம் செய்யும் முறையை விளககியபின், அடுத்த பகுதியில் (325–336) பவித்ரோத்ஸவம் விளக்கப்படுகிறது. அதாவது,—

ஶுக்லபக்ஷே நபோ4மாஸி த்3வாத3ஶ்யாம் வைஷ்ணவ: ஶுசி:।
பவித்ராரோபணம் க்ருத்வா நாபி4மாத்ராயதம் ந்யஸேத்॥
தத2ா வக்ஷஸி பர்யந்தம் ஸஹஸ்ரம் தாந்தவம் ஸ்ம்ருதம்।
குஶக்3ரந்தி2ஸஹஸ்ரம் து பாத3ாந்தம் விந்யஸேத் தத:॥
ஸௌவர்ணீம் ராஜதீம் மாலாம் ஶதக்3ரந்தி2யுதாம் ந்யஸேத்।
ம்ருண்மயதாந்தவம் பஶ்சாத் புஷ்பமாலாம் தத:பரம்॥
ஶதமௌக்திகஹாராணி நாநாரத்நமயாந்யபி।
உபோஷ்யைகாத3ஶீம் தத்ர ராத்ரௌ ஜாக3ரணாந்வித:॥
அப்4யர்ச்சயேத் ஜக3ந்நாத2ம் க3ந்த4புஷ்பப2லாதி3பி4:॥
நீத்வா ராத்ரிம் நர்த்தநாத்3யை: ப்ரபா4தே விமலே நதீ3ம்।
க3த்வா ஸ்நாத்வா ச விதி4நா தர்ப்பயித்வேமமர்ச்சயேத்॥
ஸர்வைஶ்ச வைஷ்ணவைர்மந்த்ரை: மது4வாஜ்யதிலபாயஸை:।
ஹுத்வா த3த்வா த3ஶார்ணேந ஸஹஸ்ரம் ஜுஹுயாத் தத:॥
பஶ்சாதா3ரோபயேத் விஷ்ணோ: பவித்ராணி ஶுபா4நி வை।
பவஸ்வ ஸோம இதி ச ஜபந் ஸூக்தம் ஸுபாவநம்॥
நிவேத3யேத் பவித்ராணி தத2ா விஷ்ணோர்யதா2க்ரமம்।
மந்தி3ரம் குஶயோக்த்ரேண வேஷ்டயந் பரமாத்மந:॥
விதாநபுஷ்பமாலாத்3யை: அலங்க்ருத்ய ச ஸர்வத:।
ஸஹஸ்ரம் த்3வாத3ஶார்ணேந ப4க்த்யா புஷ்பாஞ்ஜலிம்
ந்யஸேத்॥
அதே2ாபநிஷது3க்தாநி பஞ்சஸூக்தாந்யநுக்ரமாத்।
த்வயர்ஹந்பீதமிஜ்யாதி3 (?)ஜபந் புஷ்பாஞ்ஜலிம் தத:॥
ப்3ராஹ்மணாந் போ4ஜயேத் பஶ்சாத் ஸ்வயம் குர்வீத பாரணம்।
ஶக்தஶ்சேது3த்ஸவம் குர்யாத் த்ரிராத்ரம்
வைஷ்ணவோத்தம:॥
ப்ரத்யப்3த3மேவம் குர்வீத பவித்ராரோபணம் ஹரே:॥
க்ரதுகோடிஸஹஸ்ரஸ்ய ப2லம் ப்ராப்நோத்யஸம்ஶய:।
தத்ர து3ர்பி4க்ஷரோக3ாதி3ப4யம் நாஸ்தி கதா3சந॥

[ஆவணி மாதம் ஶுக்லபக்ஷம் த்3வாத3ஶியில் பரிசுத்தனை வைஷ்ணவன் (அர்ச்சாதிருமேனியின்) நாபி4 (கொப்பூழ்) வரையில்

http://acharya.org

நீண்ட பவித்ரங்களை ஆரோபணம் செய்து ஸமர்ப்பிக்க வேண்டும். மார்பு வரையில் ஆயிரம நூல்களாலான பவித்ரங்கள் ஸமர்ப்பிக்க வேண்டும். அதற்குப்பின திருவடிகள் வரையில் குஶத₃ர்ப்ப₄ங்களாலான ஆயிரம் பவித்ரங்களை ஸமர்ப்பிக்கவேண்டும். நூறு முடிச்சுகள் உள்ள பொன் வெள்ளி மாலைகளையும் ஸமர்ப்பிக்க வேண்டும். அதற்குப்பின் தாமரைக்கூட்டங்களாலான மாலையையும், நூறு முத்துமாலைகளையும், பல ரத்தின மாலைகளையும் ஸமர்ப்பிக்க வேண்டும். முதல் நாள் ஏகாத₃ஶியில் உபவாஸமிருந்து ராத்ரி விழிப்புடனிருந்து க₃ந்த₄ம், புஷ்பம், பழங்கள் முதலியவற்ருல் ஜகந்நாதனை ஆராத₄னம் செய்யவேண்டும். இரவு முழுவதையும் எம்பெருமானைக்குறித்து ஆடிப்பாடிக் கழித்து மங்களமான விடியற்காலை வேளையில் நதிக்குச் சென்று நீராடிவிட்டு முறைப்படி தர்ப்பணம செய்து எம்பெருமானைத் திருவாராதனம செய்ய வேண்டியது. வைஷ்ணவமான எல்லா மந்திரங்களையும் அநுஸந்தித்துக்கொண்டு, தேன், நெய், எள், பாயஸம் ஆகியவற்ருல் ஹோமம் செய்து, அவற்றை த₃ானமும் செய்து அதற்குப்பின பத்து அக்ஷரமுள்ள மந்திரத்தால் ஆயிரம் முறை ஹோமம் செய்யவேண்டும. 'பவஸ்ய ஸோம' என்னும் மிகப் பரிசுத்தமான ஸூக்தத்தை ஜபித்துக்கொண்டு, எம்பெருமானுக்காக மங்க₃ளமான பவித்ரங்களை ஆரோபணம செய்யவேண்டும். அப்பெருமானுக்கு, அப்பவித்ரங்களை முறைப்படி நிவேத₃னம் செய்யவேண்டும். எம பெருமானின் கோயிலில் தர்ப்பையினுலான கயிற்றை நாற்புறமுழ கட்டிவைத்து, மேற்கட்டி, பூமாலைகள் முதலானவற்ருல் எல்லாப் புறமும் அலங்கரித்து வைத்து, திருத்₃வாத₃ஶாக்ஷர மந்திரத்தைக் கொணடு பக்தியுடன் ஆயிரம புஷ்பாஞ்ஜலிகளை ஸமர்ப்பிகக வேண்டும். அதற்குப்பின் வேத₃ாந்தங்களில சொல்லப்பட்ட பஞ்ச ஸூக்தங்களையும், "த்வயா ஹந்பீதமிஜ்யாதி₃" (?) என்னும் ஸூக்தத்தையும் ஜபித்துககொண்டு புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்க வேண்டியது. அதற்குப்பின் அந்தணர்களுக்கு போஜனம் செய்வித்துப் பிறகு தான் பாரணைசெய்யவேண்டும். வைஷ்ணவோத்தமனுயிருப்பவன் ஶக்தியிருந்தால், மூனறு தினங்கள் எம்பெருமானுக்கு உத்ஸவமும் செய்யவேண்டும். இவ்வண்ணமாக ஒவ்வொரு வருஷமும் ஹரிக்குப் பவிதராரோபண மஹோத்ஸவம் செய்ய வேண்டும். ஆயிரங்கோடி யஜ்ஞங்கள் செய்வதால் உண்டாகும பலனை, இதனுல அடைவான் எனபதில் ஐயமில்லை. இப்படிச் செய்யப்படுமிடத்தில் பஞ்சம, வியாதி முதலானவற்ருல் ஒருபோதும பயம் ஏற்படாது.]

http://acharya.org

இவ்வண்ணமாகப் பவித்ரோத்ஸவம் செய்யும் முறையை விளக்கியபின், அடுத்த பகுதியில் (337—345) திருக்கார்த்திகை யுத்ஸவம் விளக்கப்படுகிறது. அதாவது:—

ஸம்ப்ராப்தே கார்த்திகே மாஸே ஸாயாஹ்நே பூஜயேத்ஹரிம்।
ஹ்ருத்3யை: புஷ்பைஶ்ச ஜாதிபி4: கோமலைஸ் துளஸீத3லை: ॥
அர்ச்சயேத் விஷ்ணுகா3யத்ர்யாऽநுவாகைர் வைஷ்ணவைரபி।
பாவமாநைஶ்ச தந்மாஸம் ப4க்த்யா புஷ்பாஞ்ஜலிம்
ந்யஸேத் ॥
அஷ்டோத்தரஸஹஸ்ரம் வா ஶதமஷ்டோத்தரம் து வா।
அஷ்டாவிம்ஶதிம் வா ஶக்த்யா த3த்3யாத் தீ3பாந்
ஸுபாலிகாந் ॥
ஸுவாஸிதேந தைலேந க3வ்யேநாऽऽஜ்யேந வா ஹரே:।
அஷ்டோத்தரஶதம் நித்யம் திலஹோமம் ஸமாசரேத் ॥
மநுநா வைஷ்ணவேநாபி கா3யத்ர்யா விஷ்ணுஸம்ஜ்ஞயா।
ஹுத்வா புஷ்பாஞ்ஜலிம் த3த்3யாத் தாம்பூ4லமேவ தத2ா
விதே4ய: ॥
ஹவிஷ்யம் மோத3கம் ஶுத்3த4ம் நக்தம் பு4ஞ்ஜீத வாக்3யத:।
தைலம் ஶுக்லம் தத2ா மாம்ஸம் நிஷ்பாவாந் மாக்ஷிகம் தத2ா॥
சணகாநபி மாஷாம்ஶ்ச வர்ஜயேத் கார்த்திகேऽஹநி।
போ4ஜயேத் வைஷ்ணவாந் விப்ராந் நித்யம் த3ாநாநி ஶக்தித:॥
அந்தே ச போ4ஜயேத்3 விப்ராந் த3க்ஷிணாபி4ஶ்ச தோஷயேத்।
ஏவம் ஸம்பூஜ்ய தே3வேஶம் கார்த்திகே க்ருதகோடிபி4: ॥
புண்யம் ப்ராப்யாऽநகே4ா பூ4த்வா விஷ்ணுலோகே மஹீயதே॥

[கார்த்திகை மாதத்தில் மாலைவேளையில் ஹரியைப் பூஜிக்கவேண்டும். மநோஹரமான சாதிப்பூக்களாலும், அழகான துளஸீத3ளங்களாலும் அர்ச்சிக்கவேண்டியது. விஷ்ணுகா3யத்ரியாலும், வைஷ்ணவமான அநுவாகங்களாலும், பவமாந ஸூக்தங்களாலும் பக்தியுடன் அம்மாதம் முழுவதும் புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கவேண்டியது. ஆயிரத்தெட்டு, அல்லது நூற்றெட்டு அல்லது இருபத்தெட்டு, அல்லது இயன்ற வரையில் அழகிய அகல்களில் நறுமணம் மிக்க எண்ணை அல்லது பசுநெய்யில் ஹரியின் பொருட்டு தீ3பங்களை ஏற்றிவைக்கவேண்டியது. தினந்தோறும் நூற்றெட்டு முறை எள்ளினால் ஹோமம் செய்யவேண்டும். விஷ்ணு (ஷடக்ஷரி)

http://acharya.org

மந்திரத்தினாலும், விஷ்ணுகா₃யத்ரியினாலும் ஹோமம் செய்து, அவற்றினாலேயே ஸர்வேஶ்வரனுக்குப் புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்க வேண்டியது. இரவில் மௌனத்துடன் கூடியவனாய் ஹோம ஹவிஸ்ஸையும், சுத்தமான மோத₃கத்தையும் புசிக்கக்கடவன். வெள்ளையான எண்ணெயையும், மாம்ஸத்தையும்(?), புடைத்தலையும், தேனையும், கடலையையும், உளுந்தையும் கார்த்திகை மாதத்தில் விலக்கவேண்டும். வைஷ்ணவர்களான அந்தணர்களை தினந்தோறும் போஜனம் செய்விக்கவேண்டும். இயன்ற வரையில் (அவர்களுக்கு) தா₃னங்களையும் செய்யவேண்டும். கடைசியில் (மற்ற) அந்தணர்களைப் புசிப்பித்து த₃க்ஷிணை முதலானவற்றாலே உகப்பிக்கவேண்டியது. இவ்வண்ணமாகக் கார்த்திகையில் தேவர் தலைவனைப் பூஜித்துக் கோடி மடங்கு புண்ணியப்பயனை எய்தி, பாபமற்றவனாய் விஷ்ணுலோகத்தில் பூஜிக்கப்படுகிறான்.]

இவ்வண்ணமாகத் திருக்கார்த்திகையுத்ஸவத்தை விளக்கியபின், அடுத்த பகுதியில் (346—368) ஏகாத₃ஶிகளில் செய்யவேண்டிய உத்ஸவம் விளக்கப்படுகிறது. அதாவது:—

த₃ஶமீமிஶ்ரிதாம் த்யக்த்வா வேளாயாமருணோத₃யே ।
உபோஷ்யைகாத₃ஶீம் ஶுத்₃தா₄ம் த்₃வாத₃ஶீமபி வைஷ்ணவ: ॥
ஸ்நாத்வாऽऽமலக்யா நத்₃யாம் து வித₄நேந ஹரிம் யஜேத் ।
ஸுக₃ந்த₄குஸுமை: ஶுப்₄ரைருபசாரைஶ்ச ஸர்வஶ: ॥
ராத்ரௌ ஜாக₃ரணம் க்ருத்வா புராணம் ஸம்ஹிதாம் படே₂த் ॥
ஜாக₃ரேऽஸ்மிந்நஶக்தஶ்சேத் த₃ர்ப்ப₄நாஸ்தீர்ய வைஷ்ணவ: ।
புரதோ வாஸுதே₃வஸ்ய பூ₄மௌ ஸ்வப்யாத் ஸமாஹித: ॥
தத: ப்ரபா₄தஸமயே துளஸீமிஶ்ரிதைர் ஜலை: ।
ஸ்நாத்வா ஸந்தர்ப்ய தே₃வேஶம் துளஸ்யா மூலமந்த்ரத: ॥
த்₃வயேந வா விஷ்ணுஸூக்தை: குர்யாத் புஷ்பாஞ்ஜலீந் தத: ।
தைநைவ ஜுஹுயாதா₃ஜ்யம் மந்த்ரேணைவ ஶதம் தத: ॥
பாயஸாந்நம நிவேத்₃யேஶே ப்₃ராஹ்மணாந் போ₄ஜயேத் தத: ।
த்₄யாயந் கமலபத்ராக்ஷம் ஸ்வயம புஞ்ஜீத வாக்₃யத: ॥
அஹ:ஶேஷம் து நயேத் புராணம் வாசயந் பு₃த₄: ।
ஸாயாஹ்நே ஸமநுப்ராப்தே தே₃வாலயாம் பூஜயேத் ஹரிம் ॥

http://acharya.org

அப்4யர்ச்ய க3ந்த4புஷ்பாத்3யை: ப4க்ஷ்யை: நாநாவிதை4ரபி ।
ப்3ராஹ்மணஸ்பத்ய ஸூக்தைஶ்ச ஶனைர் தே3ாலாம்
ப்ரசாலயேத் ॥
இதிஹாஸபுராணாப்4யாம் கீ3தவாத்3யை: ப்ரப3ந்த4கை: ।
ஏவம் ஸம்பூஜயேத் தே3வம் தஸ்யாம் நிஶி ஸமாஹித: ॥
மத்4யாஹ்நே பூஜயேத் தே3வம் வைஷ்ணவர்க்ஷே ஸமாஹித: ।
சம்பகை: ஶதபத்ரைஶ்ச கரவீரை: ஸிதைரபி ॥
வைஷ்ணவேனைவ மந்த்ரேண பூஜயேத் கமலாபதிம் ।
நகிரிந்த்3ரேதி ஸூக்தேந த3த்3யாத் புஷ்பாஞ்ஜலிம் ஹரே: ॥
மந்த்ரேணாஷ்டோத்தரஶதம் த3த்3யாத் புஷ்பாணி ப4க்தித: ।
தைனைவ ஹோமம் குர்வீத திலைர்வ்ரீஹிபி4ரேவ வா ॥
ஸூத3த்4யன்னம் பலயுதம் நைவேத்3யம் விநிவேத3யேத் ।
தீ3பைர்நீராஜனம் க்ருத்வா வைஷ்ணவாந் போ4ஜயேத் தத: ॥
மந்த3வாரே து ஸாயாஹ்நே தாவத்ஸம்யகு3போஷித: ।
திலை: ஸ்நாத்வா விதா4நேந ஸங்கல்ப்ய ச ஸநாதநம ॥
ந்ருஸிம்ஹவபுஷம் தே3வம் பூஜயேத் தக்3வித4ாநத: ।
மந்த்ரராஜேந கா3யத்ர்யா மூலமந்த்ரேண வா யஜேத் ॥
அக2ண்ட3பி3ல்வபத்ரைஶ்ச ஜாதிகுந்தை3ஶ்ச யூதி2கை: ।
பத்ரைஶ்ச பஞ்சஶாந்த்யா ச த்வமக்3கே த்3யுபி4ரிதி ச ॥
த3த்3யாத் புஷ்பாஞ்ஜலிம் ப4க்த்யா மந்த்ரேணைவ ஶதம் தத2ா ।
ஆப்4யாமேவாநுவாகாப்4யாம் ப்ரத்ய்ருசம் ஜுஹுயாத்
க்4ருதம் ॥
மந்த்ரேணாஷ்டோத்தரஶதம் பி3ல்வபத்ரைர் க்4ருதாந்விதை: ।
வைகுண்ட2பார்ஷத3ம் ஹுத்வா ஹோமஶேஷம்ஸமாபயேத் ॥
மது4ஶர்க்கரஸம்யுக்தாநபூபாந் மோத3காம்ஸ்தத2ா ।
மண்ட3காந் விவித4ாந் ப4க்ஷ்யாந் ஸூபாந்நம் மது4மிஶ்ரிதம் ॥
ஸுவாஸிதம் பாநகம் ச ந்ருஸிம்ஹாய ஸமர்ப்பயேத் ।
ந்ருத்யம் கீ3தம் தத2ா வாத்3யம் குர்வீத புரதோ ஹரே: ॥
போ4ஜயேத் ச ததோ விப்ராந் நவ ஸப்தாஷ்ட2 பஞ்ச வா ।
தர்ப்பிதஹவிஷ்யாந்நம் பு4ஞ்ஜீயாத் வாக்3யத: ஸ்வயம் ॥
த்4யாயந் ந்ருஸிம்ஹம் மநஸா பூ4மௌ ஸ்வப்யாத்
ஜிதேந்த்3ரிய: ।
ஏவம் ப்ரதிதி3நே தே3வம் அப்4யர்ச்ய நரகேஸரிம் ॥

http://acharya.org

ஸர்வாந் காமாநவாப்நோதி ஸோऽஸ்வமேத₄ப₂லம் லபே₄த் ||
ஷஷ்டிவர்ஷஸஹஸ்ரம் ஸ பூஜாம் ப்ராப்நோதி கேஶவ: |
குலகோடிம் ஸமுத்₃த்₄ருத்ய வைகுண்ட₂பத₃மாப்நுயாத் ||
ப்ராயஶ்சித்தமித₃ம் கு₃ஹ்யம் பாதகேஷு மஹத்ஸ்வபி |
அபுத்ரோ லப₄தே புத்ரம் அத₄நோ த₄நமாப்நுயாத் ||

[அருணோத₃யவேளையில் த₃ஶமிகலந்த ஏகாத₃ஶியை விலக்கிவிட்டு, (அப்படிக் கலக்காத) ஶுத்₃த₄மான ஏகாத₃ஶியிலோ, த்₃வாத₃ஶியிலோ வைஷ்ணவன் உபவாஸமிருந்து நெல்லிக்காயை உபயோகித்து நதியில் ஸ்நானம் செய்து, நறுமணம் மிக்க அழகிய மலர்களாலும், அனைத்துபசாரங்களாலும் முறைப்படி ஹரியைத் திருவாராத₄னம் செய்யவேண்டியது. ஏகாத₃ஶீவ்ரதமிருக்கும் இரவில் விழித்திருந்து புராணங்களையும், த₄ர்மஶாஸ்திரங்களையும் படிக்கவேண்டும். கண் விழித்திருக்க இயலாதவனாகில் த₃ர்ப்ப₄ங்களை விரித்து வாஸுதே₃வனுக்கு முனனால் வெறுந்தரையில் சாந்தியுடையவனாய்த் தூங்கவேண்டும். அதற்குப்பின் விடியற்காலை வேளையில் துளஸி கலந்த தீர்த்தத்தாலே ஸ்நானம் செய்து, மூல மந்திரத்தாலோ துவயத்தாலோ துளஸியைக்கொண்டு தேவாதிதேவனுக்கு அர்ச்சனை செய்து, அதற்குப்பின விஷ்ணுஸூக்தங்களைக் கொண்டு புஷ்பாஞ்ஜலிகளை ஸமர்ப்பிக்கவேணடியது. அம மூலமந்திரத்தாலேயே நெய்யை நூறு முறை ஹோமம் செய்ய வேண்டும. அதற்குப்பின எம்பெருமானுக்குப் பாயஸாந்நத்தை அமுது செய்விதது. அதற்குப்பின் அந்தணர்களுக்கு அன்னமளிக்கவேண்டும. மௌனத்துடன் கூடித் தாமரைக்கண்ணனை தியானித்துக் கொண்டு தானும புசிக்கவேண்டும. பகலில் எஞ்சிய பகுதியை அறிவாளியாயிருப்பவன் புராணபட₂னத்தினால் கழிக்க வேண்டியது. மாலை வந்தவுடன் ஹரியை ஊஞ்சலில எழுந்தருளச் செய்து பூஜிக்கவேணடும கநதம் புஷ்பம் முதலானவற்றாலும, பல விதமான ப₄க்ஷணங்களாலும பூஜித்து ப்ரஹமணஸ்பதி ஸூக்தங களால் ஊஞ்சலை மெதுவாக ஆட்டவேண்டியது இதிஹாஸ புராணங்களாலும், பாட்டுக்களாலும, வாததியங்களாலும, திவ்ய ப்ரபந்தங்களாலும், சாந்தியுடையவனாய் அன்றிரவு தேவனைப் பூஜிககவேணடும. துவாத₃ஶியில விஷ்ணுவின (ஶ்ரவண) நக்ஷத்திரம சேர்ந்து வநததாகில சாந்தியுடையவனாய் நடுபபகலிலும் தேவனைப் பூஜிக்கவேண்டும, சமபகம், தாமரை, வெளளரளி ஆகிய பூக்களால் விஷ்ணுஷட₃க்ஷரமநதிரததினால கமலைகேள்வனைப் பூஜிக்கவேண்டும். 'நகிரிந்த்₃ர' எனறு தொடஙகும் ஸூகதத்தினால ஹரிக்குப் புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கவேணடும. (மூல) மந்திரத்

தால் பக்தியுடன் நூற்றெட்டு முறை புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்க வேண்டும். அவ்வண்ணமே (மூலமந்திரத்தால் நூற்றெட்டு முறை) எள்ளினாலாவது, நெல்லினாலாவது ஹோமம் செய்யவேண்டும். பழங்களுடன் கூடிய நல்ல தயிரமுதை அமுது செய்விக்கவேண்டும். தீபங்களால் ஹாரத்தியெடுத்து, அதனபின் வைஷ்ணவர்களைப் புசிப்பிக்கவேண்டும். (த்வாதசியினபோது) சனிக்கிழமையும் சேர்ந்து வந்தால், மாலைவரையில் நன்கு உபவாஸமிருந்து, எள் கலந்த நீரில் குளித்து, பழையோனை பரமனைக்குறித்து முறைப்படி தர்ப்பணம் செய்து, நரசிங்கப்பிரானை அவர்க்குரிய விதிப்படி பூஜிக்கவேண்டும். "உக்ரம் வீரம்" என்று தொடங்கும் (ந்ருஸிம்ஹ அனுஷ்டுப்) மந்திரராஜத்தினாலாவது, காயத்ரியினாலாவது, மூல மந்திரத்தினாலாவது ஆராதிக்கவேண்டியது. முழு வில்வத்தழை களாலும், சாதிப்பூக்களாலும், குருந்தப்பூக்களாலும, முல்லைப் பூக்களாலும், தாமரைப்பூக்களாலும், பஞ்சசாந்திமந்திரங்களையும், "த்வமக்நே த்யுபி:" [ருக் அஷ்டகம் 2-5-17] எனனும் மந்திரத் தையும் அநுஸந்தித்துக்கொண்டு பக்தியுடன் புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கவேண்டியது. மூலமந்திரத்தாலும் நூறுமுறை புஷ்பாஞ் ஜலியை ஸமர்ப்பிக்கவேணடியது. (புருஷஸூக்தத்தின்) இரு அநுவாகங்களாலும், ஒவ்வொரு—ரிக்கிற்கும் நெய்யை ஹோமம் செய்யவேண்டும். மூலமந்திரத்தினல் நூற்றெட்டு முறை நெய் கலந்த வில்வ இதழ்களால் வைகுண்டபார்ஷதஹோமம் செய்து ஹோமத்தை நிறைவுபெறச் செய்யவேண்டியது. தேன, சர்க்கரை கலந்த அப்பங்களையும், மோதகங்களையும், பாலாடையையும், பல விதமான பக்ஷணங்களையும், தேனுேடுகூடப் பருப்பு அன்னத்தை யும், நறுமணமுள்ள பானகத்தையும் நரசிங்கனுக்கு ஸமர்ப்பிக்க வேண்டும். ஹரியின் முன்னால் நாட்டியம், பாட்டு, வாத்தியம் ஆகியவற்றை நடத்தவேண்டியது. அதற்குப்பின் ஒன்பது, ஏழு, அல்லது ஐந்து அந்தணர்களுக்கு போஜனம செய்விக்கவேண்டும், அவர்களுக்கு ஸமர்ப்பித்த ஹவிஸ்ஸின் சேஷத்தை மௌனத்துடன் தான் புசிக்கவேண்டும். இந்திரியங்களை அடக்கி மனத்தினாலே நரசிங்கனை தியானித்து பூமியில் தூங்கவேண்டியது. இவ்வண்ண மாக சனிக்கிழமையில் நரசிங்கனை அர்ச்சனம் செய்தால் எல்லா விருப்பங்களையும் அடைவான். அஸ்வமேதயாகம் செய்த பலன் பெறுவான். இப்படி ஆராதிப்பவனிடம் கேசவன் அறுபதினாயிரம் வருஷம் பூஜை செய்வதால் ஏற்படும் திருப்தியை அடைவான். தன் குலத்தில் பிறந்தவர்களையும் கைதூக்கிவிட்டு வைகுண்ட பதவியை அடைவான். மஹாபாதகங்களுக்கும இது மிக ரஹஸ்ய மான ப்ராயச்சித்தம். பிள்ளையற்றவன் பிள்ளையையும், பணமற்ற வன் பணத்தையும் அடைவர்.]

http://acharya.org

இவ்வண்ணமாக, ஏகாத3ஶீஸாமாந்யத்திலும், த்3வாத3ஶியில் ஶ்ரவணம் முதலான வைஷ்ணவ நக்ஷத்திரம் வரும்போதும், சனிக்கிழமை வரும்போதும் அநுஷ்டிக்கவேண்டிய உத்ஸவங்கள் விவரிக்கப்பட்டன. இனி, [370-377] பௌர்ணமாஸியில் அநுஷ்ட்டிக்கவேண்டிய உத்ஸவம் விவரிக்கப்படுகிறது.

பக்ஷே பக்ஷே பௌர்ணமாஸ்யாம் உதி3தேऽஸ்மிந் நிஶாகரே |
ஸ்நாத்வா ஸம்பூஜயேத விஷ்ணும் வாமநம் தே3வமவ்யயம் ||
ஸமாஸீநம் மஹாத்மாநம் தஸ்மிந் பூர்ணேந்து3மண்ட3லே |
ஸந்தர்ப்பயேத் புஷ்பஜலை: குஸுமாக்ஷதமிஶ்ரிதை: ||
தத்ர மூலேந மந்த்ரேண பூஜயேத் பரமேஶ்வரம் |
துளஸீகுந்த3குஸுமைரத2 புஷ்பாஞ்ஜலிம் சரேத் ||
த்வம் ஸோம இதி ஸூக்தேந ப்ரத்ய்ருசம் குஸுமைர்யஜேத் ||
பஶ்சாத் ஹோமம் ப்ரகுர்வீத பாயஸாந்நம் ஸஶர்க்கரம் ||
மந்த்ரேணாஷ்டோத்தரஶதம் ஸூக்தேந ப்ரத்ய்ருசம் ததா2 ||
அக்3நிஸோமாநுவாகேந ஸமித்3பி4: பிப்பலைர்யஜேத் ||
ஸஹஸ்ரநாமபி4: ஸ்துத்வா நமஸ்க்ருத்வா ஜநார்த3நம் |
வைஷ்ணவாந் போ4ஜயேத் பஶ்சாத் பாயஸாந்நேந ஶக்தித: ||
ஸ்வயம் பு4க்த்வா ஹவி:ஶேஷம் ஶயீத நியதேந்த்3ரிய: |
ஏவம் ஸம்பூஜ்ய தே3வேஶம் பௌர்ணமாஸ்யாம் ஜநார்த3நம் ||
ஸர்வபாபவிநிர்முக்தோ விஷ்ணுஸாயுஜ்யமாப்நுயாத் ||

[ஒவ்வொரு பக்ஷத்திலும், பௌர்ணமாஸியில், சந்திரன் உதித்தவுடன் நீராடி, அழிவற்ற வாமன ரூபமெடுத்த மஹாத்மாவாய், தேவனான விஷ்ணுவை அந்தப் பூர்ணசந்திரமண்டலத்தில் எழுந்தருளியிருப்பவனாக தியானித்து, நன்கு பூஜிக்கவேண்டியது. பூக்களும், அக்ஷதைகளும் கலந்த மங்களநீராலே தர்ப்பணம் செய்ய வேண்டும். அதனபின் மூலமந்திரத்தாலே பரமேஶ்வரனைப் பூஜிக்கவேண்டும். பிறகு துளஸியாலும் குருந்தப்பூவாலும் புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கவேண்டியது. 'த்வம் ஸோம' என்று தொடங்கும் ஸூக்தத்தின் ஒவ்வொரு ரிக்கிற்கும் புஷ்பங்களையிட்டுப் பூஜிக்கவேண்டும். சர்க்கரையோடு கூடிய பாயஸாந்நத்தைக் கொண்டு, மூலமந்திரத்தாலே நூற்றெட்டுமுறையும், புருஷ ஸூக்தத்தின் ஒவ்வொரு ரிக்காலும் ஹோமம் செய்யவேண்டும்.

அக்3நிஷோமாநுவாகத்தினால் அரசஸமித்துக்களைக் கொண்டு ஹோமம் செய்யவேண்டும். பிறகு, ஸஹஸ்ரநாமங்களால் துதித்து, ஜநார்த்தனனை நமஸ்கரித்து, சக்தியுள்ளவளவு பாயஸாந்நம் முதலானவற்றையளித்து வைஷ்ணவர்களுக்கு போஜனமளிக்கவேண்டும். ஹோமஹவிஶ்ஶேஷத்தைத் தானும் புசித்து, புலனடக்கத்துடன் சயனிக்கவேண்டும். இவ்வண்ணமாக ஜநார்த்தனனைப் பௌர்ணமாஸியில் பூஜைசெய்து, எல்லாப் பாபங்களும் நீங்கப்பெற்று விஷ்ணுஸாயுஜ்யத்தை அடைகிறான்.]

இவ்வண்ணமாகப் பௌர்ணமாஸியில் அனுஷ்டிக்கவேண்டிய உத்ஸவம் விவரிக்கப்பட்டது. இனி, (378-385) மக4நக்ஷத்திரத்தில் அனுஷ்டிக்கவேண்டிய உத்ஸவம் விவரிக்கப்படுகிறது.

மக4யாமபி பூர்வாஹ்ணே ஸ்நாத்வா க்ருஷ்ணம்ஜலைர்த்3விஜ:।
ஸந்தர்ப்ய மூலமந்த்ரேண திலமிஶ்ரிதவாரிபி4: ॥
தர்ப்பயித்வா பித்ருந் தே3வாந் அர்ச்சயேத3ச்யுதம் தத: ।
க்ருஷ்ணைஶ்ச துளஸீபத்ரை: கேதகை: கமலைரபி ॥
ஶோணிதை: கரவீரைஶ்ச ஜபாகுடஜபாடலை: ।
அஸ்யவாமேதி ஸூக்தேந த3த்3யாத் புஷ்பாஞ்ஜலிம் ஹரே: ॥
மந்த்ரேணாஷ்டோத்தரஶதம் க்ருஷ்ணைஶ்ச துளஸீத3லை: ।
ததை2வ ஜுஹுயாத3க்3நௌ திலை: க்ருஷ்ணை: ஸஶர்க்கரை: ॥
ஆஜ்யேந பௌருஷம் ஸூக்தம் ப்ரத்ய்ருசம்
ஜுஹுயாத் தத: ।
நாராயணாநுவாகேந உபஸ்தா2ய ஜநார்த3நம் ॥
ஸுஸம்யாவை: ஸௌஹ்ருதை3ஶ்ச ஶால்யந்நம்
விநிவேத3யேத் ।
வைஷ்ணவாந் போ4ஜயேத் பஶ்சாத் ஸ்வயம் பு4ஞ்ஜீத
வாக்3யத: ॥
தஸ்யாம் ராத்ரௌ ஜபேந் மந்த்ரம் அயுதம் ஹரி ஸந்நிதௌ4 ।
வைஷ்ணவைரநுவாகைஶ்ச த3த்வா புஷ்பாஞ்ஜலிம் தத: ॥
புரதோ வாஸுதே3வஸ்ய பூ4மௌ ஸ்வப்யாத் குஶோத்தரே ।
ஏவம் ஸம்பூஜ்ய தே3வேஶம் மக4யாம் வைஷ்ணவோத்தம: ॥
உத்3த்4ருத்ய வம்ஶஜாந் ஸர்வாந் வைஷ்ணவம்
பத3மாப்நுயாத் ॥

http://acharya.org

[மக₄ா நக்ஷத்திரத்தில் முற்பகலில் இருபிறப்பாளன் ஸ்நாநம்செய்து, மூலமந்திரத்தினால் நீரைக்கொண்டு கிருஷ்ணனுக்குத் தர்ப்பணம செய்து, எள்கலந்த நீரினால் பித்ருக்களுக்கும் தேவர்களுக்கும தர்ப்பணம்செய்து, அதன்பின் அச்சுதனை அர்ச்சிக்கவேண்டியது, கருந்துளசி, தாழம்பூ, தாமரை, குங்குமப்பூ, அரளி, செம்பருத்தி, வேல்பானை (குடஜம), பாதிரிப்பூ ஆகிய புஷ்பங்களைக்கொண்டு ''அஸ்யவாம'' எனனும் ஸூக்தத்தினால் புஷ்பாஞ்ஜலிகளை ஸமர்ப்பிக்கவேண்டியது. பிறகு கருந்துளசியைக்கொண்டு அஷ்டாக்ஷர மந்திரத்தினால் நூற்றெட்டு முறை பகவானுக்குப் புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கவேணடியது. சர்க்கரையோடு கூடிய கருப்பு எள்ளினால் அதற்குப்பின் ஹோமம் செய்யவேண்டியது. புருஷஸூக்தத்தின் ஒவ்வொரு ருக்கிற்கும நெய்யினால் ஹோமம் செய்யவேண்டும. நாராயணாநுவாகத்தால் உபஸ்தானம்செய்து, ஸாஸம்யாவமந்திரங களாலும் ஸௌஹ்ருத மந்திரங்களாலும் அரிசியினால் ஆன பிரஸாதத்தை ஜனார்த்தனனுக்கு நிவேதனம செய்யவேண்டும். அதன பிறகு வைஷ்ணவர்களுக்கு போஜனம் செய்விக்கவேண்டும். அதற்குப்பினமௌனத்துடன் கூடியவனாய்த் தான்புஜிக்கவேண்டும். அன்றிரவு பகவத்ஸன்னிதியில்பதினாயிரம்முறை திருவெட்டெழுத்தை ஜபிப்பது. வைஷ்ணமான அநுவாகங்களாலே புஷ்பாஞ்ஜலிகளை ஸமர்ப்பித்து, பூமியில் தர்ப்பையைப் பரப்பி, வாஸுதேவனுக்கு முனனால் தூங்கவேண்டியது. வைஷ்ணவோத்தமனாயிருப்பவன தேவர் தலைவனை மக₄ா நக்ஷத்திரத்தில் இவ்வண்ணமாகத் திருவாராதனம் செய்வதால் தன் வம்ஶத்திலுதித்த எல்லோரையும உயரத் தூக்கிவிட்டு, தானும் விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடைவான]

இவ்வண்ணமாக மக₄ா நக்ஷத்திரத்தில் அனுஷ்டிக்கப்பட வேண்டிய உத்ஸவம் விளக்கப்பட்டது. இனி, (386—393) வ்யதீபாதத்தில் செய்யவேண்டிய உத்ஸவம் விளக்கப்படுகிறது.

வ்யதீபாதே து ஸம்ப்ராப்தே ஹயக்₃ரீவம் ஜநார்த₃நம் |
புஷ்பைஶ்ச கரவீரைஶ்ச புண்ட₃ரீகை: ஸமர்ச்சயேத் ||
யோரயீத்யநுவாகேந ப்ரத்ய்ருசம் வை யஜேத் பு₃த₄: |
மந்த்ரேண ச ஶதம் த₃த்வா பஶ்சாத் ஹோமம் ஸமாசரேத் ||
யவைஶ்ச தண்டு₃லைர்வாபி திலை: புஷ்பைரதா₂பி வா |
மந்தரேணாஷ்டோத்தரஶதம் ஜுஹுயாத்
வைஷ்ணவோத்தம: ||

அமூரேகாத்3யஷ்டஸூக்தை: ப்ரத்ய்ருசம் ஜுஹுயாத் சரும் |
ஶேஷம் நிவேத்3ய ஹரயே ஸம்ப்ராஶ்யாऽऽசமநம் சரேத் ||
ஸஹஸ்ரஶீர்ஷஸூக்தேந ஹ்யுபஸ்தா2ய ஜநார்த3நம் |
ஶால்யோத3நம் ஸூபயுதம் விவிதை4ஶ்ச ப2லைரபி ||
க3வாஜ்யேந யுதம் த3த்வா தீ3பைர்நீராஜயேத் தத: |
ப்3ராஹ்மணாந் போ4ஜயேத் பஶ்சாத் த3க்ஷிணாபி4ஶ்ச
தோஷயேத் ||
ஹவிஷ்யம் து ஸ்வயம் பு4க்த்வா பூ4மௌ ஸ்வப்யாத்
ஜிதேந்த்3ரிய: |
ஏவம் ஸம்பூஜ்ய தே3வேஶம் வ்யதீபாதே ஸநாதநம் ||
த3ஶவர்ஷஸஹஸ்ரஸ்ய பூஜாயா: ப2லமாப்நுயாத் |

[வ்யதீபாதம் நேர்ந்ததாகில் ஹயக்ரீவ உருவம் கொண்ட ஜனார்த்தனனை அரளி, தாமரை முதலான புஷ்பங்களால் அர்ச்சிக்க வேண்டியது. யோரயீ என்னும் அநுவாகத்தின் ஒவ்வொரு மந்திரத்தினாலும் அறிவாளியாய் இருப்பவன் அர்ச்சனை செய்ய வேண்டியது. அதற்குப்பின் மூலமந்திரத்தினால் நூறு புஷபாஞ்ஜலிகளை ஸமர்ப்பித்து, பின்பு ஹோமம் செய்யவேண்டியது. மூலமந்திரத்தினால் கோதுமை அல்லது அரிசி அல்லது எள் அல்லது புஷ்பங்களைக்கொண்டு நூற்றெட்டு முறை வைஷ்ணவோத்தமன் ஹோமம் செய்யவேண்டியது. அமூரேகா என்று தொடங்கும் எட்டு ஸூக்தங்களின் ஒவ்வொரு ருக்கினாலும் ஹவிஸ்ஸை ஹோமம் செய்து, எஞ்சியதை ஹரிக்கு நிவேதனம் செய்து, நீரைப்பருகி ஆசமனம் செய்யவேண்டியது. 'ஸஹஸ்ரசீர்ஷா' என்று தொடங்கும் புருஷ ஸூக்தத்தினால் உபஸ்தானம் செய்து விதவிதமான பழங்களோடும் பருப்போடும் பசு நெய்யோடும் கூடிய அரிசி ப்ரஸாதத்தை அளித்து, தீபங்களால் ஹாரத்தி எடுக்கவேண்டியது. பிறகு பிராஹ்மணர்களை புஜிப்பித்து, தக்ஷிணைகளை அளித்து உகப்பிக்கவேண்டியது. எஞ்சிய ஹவிஸ்ஸைத் தான் புஜித்து புலனடக்கத்துடன் பூமியில் தூங்கவேண்டியது. இவ்வண்ணமாகப் பழையோனை தேவர் தலைவனை வ்யதீபாதத்தில் திருவாராதனம் செய்வதால் பதினாயிரம் வருஷம் பூஜைசெய்வதின் பலனை அடைவான்]

இவ்வண்ணமாக வ்யதீபாதத்தில் அனுஷ்டிக்கப்படவேண்டிய உத்ஸவம் விவரிக்கப்பட்டது. இனி (394-398) கிரஹணங்களிலும் ஸௌர்ய ஸங்க்ராந்திகளிலும் அனுஷ்டிக்கவேண்டிய உத்ஸவம் விவரிக்கப்படுகிறது.

http://acharya.org

க்₃ரஹணே ரவிஸங்க்ராந்தௌ வராஹவபுஷம் ஹரிம் ||
குமுதைது₃ருஜ்ஜ்வலை: பத்₃மை: தகூ₂ா தூ₃ர்வாகுரண்ட₃கை |
அர்ச்சயேத் பூ₄க₄ரம் தே₃வம் தந்மந்த்ரேணைவ வைஷ்ணவ:||
தூ₃ராதி₃ஹோதி ஸூக்தேந தத்₃யாத் புஷ்பாஞ்ஜலிம் த்₃விஜ:|
மந்த்ரேண ச ஸஹஸ்ரம் து ஶதம் வாபி யஜேத் ததூ₂ா ||
திலைச்ச ஜுஹுயாத் தத்₃வத் ஸூக்தேந ப்ரத்யக்ருசம்
க்₄ருதம் |
ஸூபாந்நம் க்ருஸராந்நம் ச பூ₄க்ஷ்யாபூபாந் க்₄ருதப்லுதாந் ||
நைவேத்₃யம் விநிவேத்₃யேஶே ப்₃ராஹ்மணாந்
போ₄ஜயேத் தத: |
ஏவம் ஸம்பூஜ்ய தே₃வேஶம் ஸங்க்ராந்தௌ
க்₃ரஹணே ஹரிம் ||
கல்பகோடிஸஹஸ்ராணி விஷ்ணுலோகே மஹீயதே |

[ஸூர்யசந்த்₃ரக்₃ரஹண காலங்களிலும், ஸூர்யன் ஒரு ராசியி லிருந்து, மற்றொரு ராசியில் பிரவேசிக்கும் ஸங்க்ராந்திகளிலும், அழகிய குவளைகளினாலும், தாமரைகளினாலும் அருகம்புல்லினாலும், குறிஞ்சிமலர்களினாலும் பூமியை தரிக்கும வராஹவுருக்கொண்ட தேவனை ஹரியை வராஹமந்திரத்தினாலேயே அர்ச்சனம் செய்ய வேண்டும். இருபிறப்பாளனாயிருப்பவன தூ₃ராதி₃ஹோதி ஸூக்தத்தி னால் புஷபாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கவேண்டும். மூலமந்திரத்தினால் ஆயிரமமுறை அலலது நூறுமுறை எளளினால் ஹோமம செய்ய வேண்டும். புருஷஸூக்தத்தின ஒவ்வொரு ருக்கினாலும நெய்யை ஹோமம் செய்யவேண்டும. பருப்புசாதம், எள்ளுசாதம், நெய்யில் செய்த பக்ஷணங்கள், அபபங்கள் ஆகிய நைவேத்₃யங்களை ஸர்வேஶ்வரனுக்கு நிவேத₃னம் செய்து, அதற்குப்பின் அந்தணர் களுக்கு போஜநம் செய்விக்கவேண்டும். இவ்வண்ணமாக தேவர் தலைவனை ஹரியை ஸங்க்ராந்தியிலும், கிரஹண காலங்களிலும் திருவாராதனம் செய்வதினால் ஆயிரக்கணக்கான கல்பகோடி காலங்கள விஷ்ணுலோகத்தில் பூஜிக்கப்படுகிறான்.]

இவ்வண்ணமாக, க₃ரஹண காலங்களிலும், ஸங்க்ராந்தியிலும் வராஹபபெருமானைத் திருவாராத₄னம் செய்யும்முறை விளககப பட்டது. இனி, (599-406) வைத்₃ருதியில் (வைஶாக₂மாஸத்தில்) ஸீதாராமனைப் பூஜிக்கும முறை விளக்கப்படுகிறது.

http://acharya.org

வைத்4ருதௌ (வைஶாகே2) பூஜயேத் ராமம் காகுத்ஸ்த2ம் புருஷோத்தமம் ||
ஸீதாலக்ஷ்மணஸம்யுக்தம் மத்4யாஹ்நே பூஜயேத் விபு4ம் |
புந்நாக3கேதகீபத்3மை: உத்பலை: கரவீரகை: ||
சாம்பேயை: வகுலை: பூஜாம் ஷட3ர்ணேனைவ காரயேத் |
ஜாதயே வாதிஸூக்தேந குர்யாத் புஷ்பாஞ்ஜலிம் தத: ||
ஸம்க்ஷேபேண ஶதஶ்லோக்யா ப்ரதிஶ்லோகம் யஜேத் ததா2 |
புஷ்பாஞ்ஜலிஸஹஸ்ரம் து மந்த்ரேணைவ யஜேத் தத: ||
த்வமக்3ந இதி ஸூக்தேந பாயஸம் ஜுஹுயாத் ருசா |
பஶ்சாந்மந்த்ரேணாஜ்யஹோமோ நைவேத்3யம் பாயஸம் க்4ருதம் ||
கத3லீப2லம் ஶர்க்கராம் ச பாநகம் ச நிவேத3யேத் |
பஞ்ச ஸப்த த்ரயோ வாபி பூஜநீயா த்3விஜோத்தமா: ||
ஸுஹ்ருத்3யைரந்நபாநாத்3யை:கோ3ஹிரண்யாதி3த3க்ஷிணை. |
ஹவிஷ்யாந்நம் ஸ்வயம் பு4க்த்வா படே2த்3ராமாயணம் ந[illegible] ||
ஏவம் ஸம்பூஜ்ய விதி4வத் ராக4வம் ஜாநகீயுதம் |
பு4க்த்வா போ4கா3ந் மநோரம்யாந் விஷ்ணுலோகே மஹீயதே ||

[வைத்4ருதியில் (வைஶாகமாதத்தில்) புருஷோத்தமனாய், ககுத்தவமிசத்துதித்தவனாய், ஸீதாலக்ஷ்மணர்களோடு கூடியவனான ராமபிரானை நடுப்பகலில் பூஜிக்கவேண்டும். புன்னை, தாழை, தாமரை, குவளை, அரளி, சம்பகம, மகிழ் (வகுளம்), ஆகிய புஷ்பங்களைக் கொண்டு "ஸ்ரீராமாய நம:" என்னும் ஸ்ரீராமஷடக்ஷரியால் அர்ச்சிக்கவேண்டும். அதற்குப்பின் ஜாதயேவாதிஸூக்தத்தினால் புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கவேண்டும். ஸங்க்ஷேபராமாயணஸர்க்கத்தின் ஒவ்வொரு ஶ்லோகத்தாலும் அவ்வண்ணமே புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கவேண்டும். அதற்குப்பின் மூலமந்திரத்தால் ஆயிரம்முறை புஷ்பாஞ்ஜலி ஸமர்ப்பிக்கவேண்டியது. "த்வமக்3நே" என்னும் ஸூக்தத்தின் ருக்குகளாலே பாயஸத்தை ஹோமம் செய்யவேண்டும். அதன்பின் மூலமந்திரத்தினால் நெய்யைக்கொண்டு ஹோமம்செய்து, பாயஸம், நெய், வாழைப்பழம், சர்க்கரை, பானகம் ஆகியவற்றை அமுது செய்விக்கவேண்டியது. நெஞ்சுக்கினிய நல்ல அன்னபானங்களாலும், பசு, பொன் முதலான தக்ஷிணைகளாலும் ஐந்து அல்லது ஏழு அல்லது மூன்று அந்தணர் தலைவர்கள் ஆராதிக்கப்படவேண்டும். ஹவிஸ்ஸின் ஶேஷத்தைத் தான் புசித்து ஸ்ரீராமாயணத்

http://acharya.org

தைப் படிக்கவேண்டும். ஜாநகியோடு கூடிய ராகவனை முறைப்படி இவ்வண்ணமாகப் பூஜிப்பதினால் நெஞ்சுக்கினிய போகங்களை அநுபவித்து விஷ்ணுலோகத்தில் இன்புறுகிறான்.]

அந்நத்தை தேவர்களுக்கு எப்போதும் ஹோமம் செய்யலாம். பித்ருக்களுக்கும் அதை அளிக்கலாம். இப்படிச் செய்பவன் மோக்ஷத்தையே அடைகிருன். மற்ற தெய்வங்கள் உண்ட அந்நம் முதலியவை நிர்மால்யம் எனப்படுகின்றன. அவற்றை உண்பவன் ப்ராஹ்மஹத்தி தோஷத்தை அடைகிருன் என்பதில் ஐயமில்லை. விஷ்ணுவுக்கு அமுதுசெய்ததை உண்பதும், அவனுடைய ஸ்ரீபாத தீர்த்தத்தைப் பருகுவதும், அவன் சூடிய துளஸியைச் சாப்பிடுவதும் பாபிகளான மனிதர்களுக்கும் முக்தியளிக்கவல்லது. ஏகாதசி உபவாஸமும், ஶங்கசக்ராதிகளை தரிப்பதும், துளசியினால் விஷ்ணுவைப் பூஜிப்பதும் மூன்று வைஷ்ணவ தர்மங்களாகக் கூறப்படுகின்றன. பல சாஸ்திரங்களை அறிந்தவனானாலும் வைஷ்ணவனல்லாதவனாயிருக்கும் அந்தணன் உயிரோடிருக்கும் சண்டாளனேயாகிருன். இறந்தபின் நாயாகப் பிறக்கிருன். ஆயிரம் யாகங்கள் செய்தவனாயினும், அவைஷ்ணவனாயிருக்கும் அந்தணனை சண்டாளனைப்போலே கண்ணாலும் காணக்கூடாது. எல்லாக் கர்மங்களிலும் விலக்கவேண்டும். பகவத்பக்தியாகிற கொழுந்துவிட்டெரியும் நெருப்பினாலே தாழ்ந்த ஜாதியாகிற தோஷம் எரிக்கப்பெற்ற சண்டாளன் அறிவாளிகள் அனைவராலும் கொண்டாடத்தக்கவன். அவைஷ்ணவன் (எத்தனை சிறந்தவனானாலும்) பூஜிக்கத்தக்கவனல்லன். ஶங்கசக்ரங்களும், ஊர்த்வபுண்ட்ரமும் மற்ற வைஷ்ணவ லக்ஷணங்களும் இல்லாத ப்ராஹ்மணுதமனை எவன் ஶ்ராத்தத்தில் ஆராதிக்கிருனே, அவனுடைய ஶ்ராத்தம் முழுவதும் பயனற்றதாகிறது. குறுக்குப் புண்ட்ரமணிந்த அந்தணனுக்கு எவனொருவன் ஶ்ராத்தத்தில் அன்னமிடுகிருனே, அவனுடைய பித்ருக்கள் யமனுடைய கொடிய பாசக்கயிற்றுக்கு இலக்காகிருர்கள். ஊர்த்வபுண்ட்ரமணிந்தவனாய், சக்கரத்தால் அடையாளமிடப் பெற்றவனான அந்தணனை ஶ்ராத்தத்தில் ஆராதிப்பவன் பதினாயிரம் கயாஶ்ராத்தத்தின் பலனை அடைகிருன். ஶங்கம், சக்ரம், ஊர்த்வபுண்ட்ரம் முதலியவற்றை தரிக்கும் இருபிறப்பாளனான வைஷ்ணவனை தேவகாரியங்களிலும், பித்ருகாரியங்களிலும் பக்தியுடன் ஆராதிப்பவனுடைய பித்ருக்கள் நூறாயிரக்கணக்கான கல்பகோடி காலங்கள் பரிசுத்தமான விஷ்ணுலோகத்தை அடைகிருர்கள். சக்ராங்கநவிதியாலே தோளில் அடையாளமிடப் பெற்றவன் நாராயணனைப்போலே பாபங்களைப் போக்கடிப்பவனாய், எல்லா லோகத்தையும் பரிஶுத்தப்படுத்துகிருன். கற்றவனாயினும், கல்லாதவனாயினும், ஶங்கம், சக்ரம், ஊர்த்வபுண்ட்ரம் ஆகியவற்றை தரித்த அந்தணன் ஹரியைப்போலே பூஜிக்கப்படுவான். உண்ணத் தகாததை உண்பவனாயினும், தகாத ஒழுக்கமுடையவனாயினும்-ஶங்கம், சக்ரம், ஊர்த்வ

புண்ட்3ரம் ஆகியவற்றை த4ரித்தவனானல், ஸூர்யோத3யத்தில் இருள்போவதுபோலே மனிதர்களுடைய எல்லாப் பாபங்களையும் போக்குகிறான். சக்ராங்கனமுடைய அந்தணனுடைய ஸ்ரீபாத3தீர்த்த2ம் க3ங்கை3யைப்போலே எல்லாவுலகையும் பரிசுத்தப்படுத்தும். சக்ராங்கிதனை அந்தணனுடைய திருவடிகளிலே மூவுலகிலுமுள்ள மூன்றரைக் கோடி தீர்த்த2ங்களும் உள்ளன என்பதில் ஐயமில்லை: சக்ராங்கிதனை அந்தணனுடைய ஸ்ரீபாத3தீர்த்த2த்தைப் பருகினால் ஆயிரக்கணக்கான பாவங்களினின்றும் விடுபடுகிறான் என்பதில் ஐயமில்லை. ஶ்ராத்3த4த்திலும், தா3நத்திலும், வ்ரதத்திலும், யஜ்ஞத்திலும், உபநயனத்திலும், சக்ராங்கிதரான அந்தணர்களையே பூஜிக்கவேண்டும்; மற்றவர்களைப் பூஜிக்கலாகாது. விஷ்ணுவின் சக்ரத்தால் அடையாளமிடப்பெற்ற அந்தணன் கண்ட இடங்களில் சாப்பிடுபவனானாலும், இருளால் ஸூர்யன்போலே பாபங்களால் ஸ்பர்ஶிக்கப்படமாட்டான். தோளில் சக்ராங்கனம் செய்யப்பெற்ற அந்தணனுக்கு பங்க்தியின் நடுவில் உணவிட்டால், வடக்குமுகமாகப் பாயும் கங்கைபோலே பங்க்தி (வரிசை) முழுவதையும் அவன் பரிசுத்3த4ப்படுத்துகிறான். தோளில் சக்ராங்கிதனை அந்தணனை பூமியில் விழுந்து ஸேவிப்பவன் தன் நெற்றியில் ஒட்டும் துகள்களின் எண்ணிக்கையுள்ள கல்பங்கள் விஷ்ணுலோகத்தில் பூஜிக்கப்படுகிறான். ப்3ராஹ்மண, க்ஷத்ரிய, வைஶ்ய, ஶூத்3ரர்களாகிய நாலு வர்ணத்தில் எதில் பிறந்தவனாயினும் வைஷ்ணவனொருவன் மற்ற தெய்வங்களை ஆராதி4த்தானென்றால் நரகத்தை அடைவான் என்பதில் ஐயமில்லை. விஷ்ணுவுக்குப் பரிவார தே3வதையாக நினையாமல் மற்ற தெய்வங்களைப் பூஜிக்கும் வைஷ்ணவன் யமனுடைய பாசக்கயிற்றில் தலைகீழாக விழுகிறான். வைஷ்ணவன் மஹாபாதகங்கள், உபபாதகங்கள் ஆகியவற்றைச் செய்தானாகில், மநு முதலான ஸ்ம்ருதிகளில் சொன்ன ப்ராயஶ்சித்தத்தைச் செய்யவேண்டும், வைஷ்ணவன் ப்ராயஶ்சித்த விஶேஷத்தையும் பிறகு செய்யவேண்டும். வியாஸரும், விஷ்ணுவும் (ஸ்ம்ருதியில்) சொன்ன–பரிசுத்தப்படுத்தும் ப்ராயஶ்சித்தங்களைச் செய்யவேண்டும். பிறகு வைஷ்ணவர்களான அந்தணர்களுடைய ஸ்ரீபாத3தீர்த்த2த்தைப் பருகவேண்டும். பொருள் வசதியில்லாதவனாயிருந்தால், வைதி3ககர்மங்களிலும் அந்வயிக்கலாம். த்3வயத்தினுடைய பொருளை அறிந்தவனாய், ஶாந்தனாய், ஒன்பது வித4மான திருவாராத4னங்களைச் செய்பவனாய், த்3வாத3ஶீவ்ரதத்தை அநுஷ்டி2ப்பவனான அந்தணனே புருஷர்களில் சிறந்தவன். அரசனே! பல சொல்லி என்? உனக்கு ஸாரமானதைக் கூறுகிறேன் கேளாய். ஏகாத3ஶியில் உபவாஸமும், ஶங்க2சக்ராதி3தா4ரணமும் பா4க3வதர்களின் ஆராத4னமும் ஆகிய மூன்றும் வைஷ்ணவ த4ர்மங்களாகச்

http://acharya.org

சொல்லப்படுகின்றன. புண்யமான ஏகாத₃ஶியன்று தவிர மற்ற தினங்களில் வைஷ்ணவன் எப்போதும் உபவாஸமிருக்கக் கூடாது. அப்படியே ப₄ாக₃வதன் தவிர வேருெருவனை எங்கும் பூஜிக்கக்கூடாது. ப₄க₃வானை உத்₃தே₃ஶிக்காமல் த₃ானமோ யாக₃மோ ஒருகாலும் செய்யக் கூடாது. அவைஷ்ணவர்களிடம் சாப்பிடவும் கூடாது. அவர்களுக்கு த₃ானம் கொடுக்கவும் கூடாது. மற்ற தெய்வங்களை ஆராதி₄க்கக் கூடாது. குறுக்குப்புண்ட்₃ரத்தை த₄ரிக்கவும் கூடாது. ஏகாத₃ஶியில் உணவு கொள்ளலாகாது. அவைஷ்ணவர்களோடுகூட வஸிக்கக் கூடாது. அஷ்டாக்ஷரஜபம் செய்பவனும், ஶங்க₂சக்ரங்களை த₄ரிப்பவனுமான வைஷ்ணவனை அவமதிக்கும் மூட₄னை அந்தணன் உடனே சண்டாளனுகிருன்; வைஷ்ணவனையும், அந்தணனையும், பசுவையும், துளஸியையும், த்₃வாத₃ஶியையும் கொண்டாடாத மூட₄ன் தீயக₃தியான நரகத்தை அடைவான். அந்தணர்கள், பசுக்கள், வைஷ்ணவர்கள் ஆகிய மூவகையினரும் விஷ்ணுவின் முக்₂யமான ஶரீரங்கள். அவர்களை இயன்றவரையில் ஆராதி₄ப்பதால் விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைகிருன். ஏகாத₃சியில் உபவாஸமிருப்பதும், த்₃வாத₃ஶியில் அந்தணர்களை ஆராதி₄ப்பதும், தினந்தோறும் நெல்லிக்கனி சேர்த்து நீராடுவதும் பாபிகளுக்கும் முக்தியளிக்கவல்லது.

அரசனே! ஒவ்வொரு பக்ஷத்திலும் ஏகாத₃ஶியில் சக்ராங்கிதனை அந்தணர் தலைவன் ஆராதி₄க்கப்பட்டானுகில், அப்படி ஆராதி₄ப்பவர்களை எம்பெருமான் உகக்கிருன் ஏகாத₃ஶியில் வைஷ்ணவனுன அந்தணன் வரவில்லையானுல் அதுபோலவே ப₄க்தியுடன் பசுவையும், துளஸியையும் ஆராதி₄க்கவேண்டும். அந்தணர் தலைவன் காலையிலும், மாலையிலும் அக்₃நிஹோத்ர ஹோமம் செய்யவேண்டும். பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்யவேண்டும். வைஷ்ணவர்களையும், விஷ்ணுவையும், ஆராதி₄க்கவெண்டும், அவர்கள் உண்டு மிகுந்ததை உண்ணவேண்டும், அவர்களது ஸ்ரீபாத₃தீர்த்த₂த்தைப் பருகவேண்டும். இரு பக்ஷங்களிலும் ஏகாத₃ஶியில் புசிக்கலாகாது வைஷ்ணவன் த்₃வாத₃ஶியில் வைஷ்ணவனுன அந்தணனை ஆராதி₄க்கவேண்டும். விஷ்ணுவின் ப்ரஸாத₃மான துளஸியையும், தீர்த்த₂த்தையும், அந்தணர் தலைவன் ஆராயாமலே பருகலாம். உபவாஸமென்னும் காரணத்தாலே அன்று தீர்த்த₂ப்ரஸாத₃ங்களை எடுத்துக்கொள்ளாதமூ₄டன் ரௌரவ நரகத்தை அடைகிருன். பித்ருஶ்ராத்₃த₄த்தின்போது ஹரிக்கு அளிக்கப்பட்ட அந்நத்தையும் தீர்த்த₂த்தையும், ப₄க்ஷ்யத்தையும் பித்ருக்களுக்கு அளிப்பவன், பதினுயிரம் க₃யாஶ்ராத்₃த₄ ப₂லனைப் பெறுகிருன்.

http://acharya.org

ஹரிப்ரஸாத3த்தை ப4க்தியுடன் ஶ்ராத்3த4த்தின்போது அளிப்பவனுடைய பித்ருக்கள் விஷ்ணுவின் பரமபத3த்தையே அடைகிருர்கள், பித்ருதே3வர்களுக்கு எம்பெருமானுடைய தீர்த்த2துளஸிகளைக் கொடுப்பவனுடைய பித்ருக்கள் கல்பகோடிகாலம் த்ருப்தியடைகிருர்கள் என்பதில் ஐயமில்லை. எந்த மூட4ன் ஶ்ராத்3த4காலத்தில் பித்ருக்களுக்கும், தே3வர்களுக்கும் ஹரிப்ரஸாத3த்தை அளிக்கவில்லையோ அவன் நரகத்தையே அடைவான். ஹரிக்கு அளிக்கப்பட்ட அந்நத்தையோ, ஸ்ரீபாத3தீர்த்த2த்தையோ, துளஸியையோ பித்ருக்களுக்கு அளிப்பதிஞல் பதினுயிரம் ஶ்ராத்3த4ம் செய்த ப2லனைப்பெறுகிருன். தே3வனை ஜநார்த்த3னனை ஸர்வயஜ்ஞ ஸ்வரூபியாக நினைத்து, வைஷ்ணவர்களான அந்தணர்களையே நிமந்த்ரணம் செய்து, ஶ்ராத்3த4த்தைச் சோம்பலில்லாமல் செய்யவேண்டும். மாதாபிதாக்களின் ஶ்ராத்3த4திதி2யில் வருஷந்தோறும் பார்வண ஶ்ராத்3த4ம் செய்யவேண்டும். இல்லாவிடில் வைஷ்ணவன் ப்3ரஹ்மஹத்தி தோ3ஷத்தை அடைவான் என்பதில் ஐயமில்லை. அமாவாஸ்யையிலும், க்ருஷ்ண பக்ஷத்திலும், பித்ருக்களுக்குரிய மங்க3ளகார்யங்கள் வரும்போதும், விஷ்ணுவின் ஆஜ்ஞையை நினைத்துக்கொண்டு ஶ்ராத்3த4த்தை முறைப்படி செய்யவேண்டும் மனிசரிற்கடையனை எவன் பித்ருயஜ்ஞத்தை முறைப்படி செய்யவில்லையோ, அவன் விஷ்ணுவின் ஆணையை மீறினபடியால் பதிதனுகிருன் என்பதில் ஐயமில்லை. ஶங்க2ம், சக்ரம், ஊர்த்4வபுண்ட்3ரம் முதலிய ஹரிக்கு இனிய அடையாளங்களோடு கூடிய அந்தணர்களையே எல்லாக் கர்மங்களிலும் பூஜிக்கவேண்டும். ஶ்ராத்3த4ம் (முதலிய நைமித்திக கர்மங்களைச்) செய்யாதவன், திருவாராத4னம் செய்யாதவன், (நித்ய) கர்மத்தை விட்டவன், வேத3மோதாதவன் ஆகியவர்களுடைய தொடர்பை வெகுதூரத்தில் விலக்கவேண்டும். அந்தணர்தலைவன் பித்ருக்களுக்கு ஶ்ராத்3த4த்தை ஏகாத3ஶியில் செய்யக்கூடாது. அதை த்3வாத3ஶியில் செய்யவேண்டும். உபவாஸதி3னத்தில் ஒருபோதும் செய்யலாகாது. வைஷ்ணவோத்தமனுயிருப்பவன் விஷ்ணுவின் அவதாரதி3னம் ஆசார்யர்களுடைய திருவத்4யயனதினம் ஆகியவற்றில் வைதி3கமான வைஷ்ணவேஷ்டியைச் செய்யவேண்டும். அடையத்தகாத ஸ்த்ரீயை அடைவது, பிறரை ஹிம்ஸிப்பது, புசிக்கத்தகாதவற்றை புசிப்பது, பொய்யுரைப்பது, திருடுவது ஆகியவற்றை மனத்தினுலும் செய்யலாகாது.

(சுருங்கக் கூறிஞல்,) (1) விஷ்ணுவின் தப்த ஶங்க2சக்ரங்களால் அடையாளமிடப்பெறுவது, (2) ஏகாத3ஶியில் உபவாஸமிருப்பது,

http://acharya.org

(3) ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை உடம்பில் த₄ரிப்பது, (4) விஷ்ணுமந்திரங்களை உபதே₃ஶம்பெறுவது, (5) தினந்தோறும் நெல்லிக்காய் நீரில் குளிப்பது, (6) தே₃வதாந்தரங்களை விலக்குவது, (7) எம்பெருமானை தியானிப்பது, (8) விஷ்ணுமந்திரங்களை ஜபிப்பது, (9) அவற்ருல் ஹோமம் செய்வது, (10) ஹரியைத் துளஸியால் திருவாராத₄னம் செய்வது, (11) அவனது ப்ரஸாத₃தீர்த்த₂ங்களைப் புசிப்பது, (12) அவனடியார்களை ஆராதி₄ப்பது, (13) உபாயாந்தரங்களை வாஸனையோடு கைவிடுவது, (14) (மந்த்ரரத்னமான) த்₃வயத்தின் அர்த்த₂த்தை அநுஸந்தி₄ப்பது, (15) அவனது சரிதங்களைக் கேட்பது, (16) அவனது திருநாமங்களை ஸங்கீர்த்தனம் செய்வது, (17) அவனுக்குக் கைங்கர்யம் செய்வது, (18) நற்கருமங்களைச் செய்வது, (19) தீயகருமங்களை விலக்குவது, (20) விஷயாந்தரங்களைக் கைவிடுவது, (21) இயன்றவரையில் தா₃னம் செய்வது, (22) இந்திரியங்களை அடக்குவது, (23) உடலை வருத்துவதாகிற தவம்புரிவது, (24) (தே₃ஹமனங்களில்) ஶுத்₃த₄னயிருப்பது, (25) நேர்மை, (26) பொறுமை, (27) இரக்கம், (28) நல்லோர்களோடு கூடியிருப்பது—ஆகிய இவை பரமைகாந்தித் தன்மைக்குக் காரணமாகின்றன. இத்தகைய பரமைகாந்தியே வைஷ்ணவனுவான். மாறுபட்டிருப்பவன் வைஷ்ணவனுகமாட்டான். பல ஶாஸ்த்ரங்களைக் கேட்டவனுயினும் வைஷ்ணவனல்லாதவன் முக்தியடையமாட்டான். குலந்தாங்கு சாதிகள் நாலிலும் கீழ் இழிந்த சண்டா₃ள ஜாதியில் பிறந்தவனுயினும், வைஷ்ணவன் விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைவான்.

முடிவுரை

அரசனே! பரமைகாந்திநிலையை அளிப்பதாய், வேத₃த்தை விளக்குவதாய், மிகச்சிறந்ததான இந்த வைஷ்ணவ த₄ர்மஶாஸ்த்ரம் உனக்குச் சொல்லப்பட்டது. பரமாத்மாவால் விஷ்வக்ஸேநருக்கும் பிரமனுக்கும் உபதே₃ஶிக்கப்பட்டது இது. விஷ்வக்ஸேநரால் இது முற்காலத்தில் விக₂நஸமஹர்ஷிக்கு உபதே₃ஶிக்கப்பட்டது. விக₂நஸரால் ப்₄ருகு₃வுக்கும், ப்₄ருகு₃மஹர்ஷியால் வைவஸ்வதமனுவுக்கும், மனுவினுல் எனக்கும் உபதே₃ஶிக்கப்பட்டது. மனுவானவர் (பரமரஹஸ்யமான இது உபதே₃ஶக₃ம்யமாகையால்) பொதுப்படையான த₄ர்மஶாஸ்த்ரத்தைத் தான் செய்தார். அவர் உபதே₃ஶித்த விஶிஷ்டத₄ர்மஶாஸ்த்ரமே உனக்கு என்னுல் உபதே₃ஶிக்கப்பட்டது. மிகச்சிறந்ததாய், ஒத்ததும், மிக்கதுமில்லாத இந்த வைஷ்ணவ த₄ர்மஶாஸ்த்ரத்தை ப₄க்தியுடன் கேட்பவனும்,

http://acharya.org

ஶாந்தியுடன் சொல்பவனும் பரமைகாந்திநிலையை அடைவான் என்பதில் ஐயமில்லை. எல்லாப் பாபங்களினின்றும் நீங்கப்பெற்று, விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைவான். எவனொருவன் இதை விஷ்ணுவின் ஸந்நிதி₄யில் தினந்தோறும் ப₄க்தியுடன் கேட்கிறானோ, அவன் ஆயிரம் அஶ்வமேத₄யாக₃ம் செய்த ப₂லனைப் பெறுவான் என்பதில் ஐயமில்லை. ஹாரீதரால் சொல்லப்பட்ட இந்தப் பரமத₄ர்மஶாஸ்த்ரத்தை ஆராய்ந்து, அதன்படி விஷ்ணுவை ஆராதி₄ப்பவன் பரமைகாந்திநிலையை அடைகிறான். ஹாரீதரால் உபதே₃ஶிக்கப்பெற்ற இதைக் கேட்ட வைஷ்ணவோத்தமனான அம்ப₃ரீஷ மஹாராஜா, மேலான ப₄க்தியுடன் அவரை வணங்கினார். ''தேவரீரே மேலான த₄ர்மம்; தேவரீரே மேலான தவம்; தே₃வரீருடைய திருவடியிணையை அடைந்தால் எல்லா ஸித்₃தி₄களையும் அடையலாம்.'' என்று அந்த மஹரிஷியைத் துதித்து, பெருந்தவத்தோனான அந்த ராஜரிஷி, நற்கதியளிக்கும் பரமைகாந்திநிலையை, அவரது அருளாலே அடைந்தான். மிகச்சிறந்ததாய், குறையற்றதான எனது இந்தப் பரமைகாந்தி ஶாஸ்த்ரத்தை — ப₄ரத்₃வாஜர் முதலான மஹர்ஷிகளும், ஜநகர் முதலான அரசர்களும், ஸநகாதி₃யோகி₃களும், நாரத₃ர் முதலான தே₃வரிஷிகளும், வஸிஷ்ட₂ர் முதலான விஷ்ணு ப₄க்தர்களும், விஷ்வக்ஸேநர் முதலான நித்யஸூரிகளும் அறிந்து, இதை அநுஸரித்து ஸர்வேஶ்வரனைத் திருவாராத₄னம் செய்தனர். ஆகையால் வேத₃த்தை விளக்குவதாய், மிகச்சிறந்ததான இந்தப் பரமவைஷ்ணவ த₄ர்மஶாஸ்த்ரத்தை அறிந்தே, பரமைகாந்தியானவன் ஸர்வேஶ்வரனான விஷ்ணுவை ஆராதி₄க்கவேண்டும்.

வ்ருத்₃த₄ஹாரீதஸ்ம்ருதி நிறைவுற்றது.]

ஆக, இவ்வண்ணமாக விஷ்ணுபரத்வத்தை மிகத்தெளிவாகக் காட்டும் விஶிஷ்டபரமத₄ர்ம ஶாஸ்த்ரங்களில் தலைசிறந்ததான வ்ருத்₃த₄ஹாரீதஸ்ம்ருதியிற் சொல்லப்பட்ட பரமவைஷ்ணவ த₄ர்மங்களை விரிவாகக் கண்டோம். இதினுடைய ப₂லஶ்ருதிக்கு முன் உள்ள முடிவுப் பகுதியில் காட்டப்பட்டிருக்கும் இருபத்தெட்டு பரமைகாந்தி கு₃ணங்களையும் அடைய, இந்த ஶாஸ்த்ரத்தை ஶ்ரத்₃தை₄யுடன் படித்துவரும் ஒவ்வொருவரும், இந்த ஸ்ம்ருதியில் சொல்லப்பட்டபடி, ஸாத₄ன பு₃த்₃தி₄யில்லாமல் ஸ்வயமப்ரயோஜந பு₃த்₃தி₄யுடன் இயன்றவரை முயலவேண்டும். இக்குணங்களில் ஒரு சிலவற்றையாவது பெற்ற அதி₄காரி எம்பெருமானுக்கு மிகவும் இனியவனாவான். அவனுக்கே ஸர்வேஶ்வரன் நிர்ஹேதுக க்ருபையாலே மோக்ஷமளிப்பான் என்பதில் ஐய

http://acharya.org

யில்லை. கடல்போன்ற மற்ற ஶாஸ்த்ரங்களின் ஸாரமாயிருக்கும் இந்த ஶாஸ்த்ரத்தில் சொன்ன இருபத்தெட்டு பரமைகாந்தி குணங்களையுமுடைய வைஷ்ணவர்திரள் இவ்வுலகில் பெருகட்டும் என்னும் ப்ரார்த்தனையோடு இந்த வ்ருத்₃த₄ஹாரீத ஸ்ம்ருதி நிர்ணயத்தை நிறைவுபடுத்தி, அடுத்தபடியாக ஸ்ரீஶாண்டி₃ல்ய விஶிஷ்ட பரம த₄ர்மஶாஸ்த்ரத்தில் நாராயண பரத்வமே நிலைநாட்டப்பட்டிருப்பதைக் காண்போம்.

ஶாண்டி₃ல்ய ஸ்ம்ருதி நிர்ணயம்

இந்த ஸ்ம்ருதி 1902-ம் வருஷத்தில் தெலுங்கு லிபியில் கிரந்த முத்₃ராபக ஸபையாரால் அச்சிடப்பட்டுள்ளது. இதில் ஸாரமான பகுதிகளை அச்சிட்டு, அவற்றில் ப₄க₃வத்பரத்வம் நிலைநாட்டப்பட்டிருப்பதைக் காண்போம் இனி. இதன் முதல் அத்தியாயத்தின் தொடக்கத்தில்,

ஸ்ரீமத்தோத₃கி₃ரேர்மூர்த்₄நி ஸ்ரீமத்யாயதநே ஹரே: ।
ஶாண்டி₃ல்யம் ருஷிமாஸீநம ப்ரணமய முநயோऽபூ₃ருவந் ॥
ஸ்ரீமதே₃காயநம் ஶாஸ்த்ரம் ஶ்ருதம் கு₃ஹயம ஸநாதநம ।
ஜ்ஞாதம ச ஸர்வவேதா₃நாம் அநதஸஸாரமித₃ம த்விதி ॥
நிவருத்தம் வைதி₃கம் கர்ம யத் ப்ரோக்தம் ப₄வபே₄ஷஜம் ।
பஞ்சகாலாத்மகம் ஜ்ஞாநம் தச்ச ப்₃ரஹ்மைகதை₃வதம் ॥
குடும்ப₃ாஶ்ரமநிஷ்ட₂ாநாம் பஞ்சகாலநிஷேவிணும் ।
ஆசாரம் த்வந்முக₂ாம்பே₄ாஜாத ஶ்ரோதுமிச்ச₂ாமஹே வயம் ॥
ஶாண்டி₃ல்யோபி நமஸ்க்ருத்ய மங்க₃ளாயதநம் ஹரிம் ।
அப்₃ரவீத் ஸ முநிஶ்ரேஷ்ட₂ாந் ஶ்ரேஷ்ட₂காமா மஹாமுநி: ॥...
மஹாவிஸ்தாரரூபோऽயமாசார: பஞ்சகாலிநாம் ।
ஸங்க்ஷேபாத் ப்ரப்₃ரவீம்யத்₃ய யத₂ாஶாஸ்த்ரம் யத₂ாமதி ॥
ரஹஸ்யமேதத்₃ விஜ்ஞாநம ப₄க்தாநாம் ஹிதமேவ ச ।
அப்ரமாணமப₄க்தாநாம் ஸாரம் ஸர்வாக₃மேஷு ச ॥[1-1...8]

[வானமாமலையின் உச்சியில் ஹரியின் தி₃வ்யாலயத்தில் எழுந்தருளியிருந்த ஶாண்டி₃ல்ய மஹர்ஷியை வணங்கி, முனிவர்கள் ''பரமரஹஸ்யமானதாய், பழமையானதான ஏகாயநவேத₃ம் (உம்மிடமிருந்து) எங்களால் கேட்கப்பட்டது. எல்லா வேத₃ங்களினுடையவும் உட்பொருள் இதுவே என்றும் அறியப்பட்டது. ஸம்ஸார வியாதிக்கு மருந்

http://acharya.org

தென்று உம்மால் கூறப்பட்டதாய், வைதி₄கமாய் ஐந்து காலங்களில் செய்யப்படுவதான நிவ்ருத்தி த₄ர்மத்தையும், ப்₃ரஹ்மம் ஒன்றையே தெய்வமாகக்கொண்ட அவ்வறிவையும். க்₃ருஹஸ்த₂ாஶ்ரமத்திலிருப்பவர்களாய். பஞ்சகால த₄ர்மத்தைச் செய்பவர்களுடைய ஆசாரத்தையும் உமது முகத்தாமரையிலிருந்து கேட்க விரும்புகிறோம் நாங்கள்'' என்று கூறினர். சிறந்த ஆசாரத்தையுடைய மஹர்ஷியான ஶாண்டி₃ல்யரும் மங்க₃ளங்களுக்கு ஓர் இருப்பிடமான ஹரியை வணங்கி அந்த முனிவர் தலைவர்களைக் குறித்துச் சொல்லத் தொடங்கினார்...... பஞ்சகால பராயணர்களுடைய இவ்வாசாரம் மிக விரிவானது. ஶாஸ்த்ரத்திலுள்ளபடி என் அறிவுக்கு எட்டியவரையில், ரஹஸ்ய ஜ்ஞானமாயிருப்பதாய், ப₄க்தர்களுக்கு ஹிதமாய், ப₄க்தியற்றவர்களுக்கு அப்ரமாணமாய், ஸர்வாக₃மங்களிலும் ஸாரமாயிருக்கும் இந்த ஶாஸ்த்ரத்தைச் சுருக்கமாகக்கூறுகிறேன்] என்று கூறியிருப்பதிலிருந்து இந்த ஸ்ம்ருதியும் விஶிஷ்ட த₄ர்மங்களைச் சொல்லுவதென்று விளங்குகிறது.

ப்ரதிஷித்₃தே₄ஷ்வஸக்தம் யத் ஸக்தம் ஶப்₃தே₃ஷு
ஸாது₄ஷு।
ப₄க₃வத்₃விஷயேஷ்வேவ ஶ்ரோத்₃த₄ம் தத்
ஶ்ரோத்ரமுச்யதே ॥...
பாஷண்ட₃பதிதாத்₃யேஷு ந பதந்தீ கதா₃சந।
அருக்ஷா ஸமபதந்தீ த்₃ருக் ஶ்ரோத்₃த₄ா ப₄ாக₃வதாதி₃ஷு ॥
[1-13, 15]

[யாதொரு செவியானது கேட்கத்தகாததைக் கேட்பதில் ஈடுபடாமல், கேட்கத்தக்கதான ப₄க₃வத்₃விஷயமான நல்ல ஶப்₃த₃ங்களிலேயே ஈடுபடுகிறதோ, ஶ்ரோத்₃த₄மான அதுவே செவியெனப்படுகிறது....... ஒருபோதும் பாஷண்ட₃ர். பதிதர் முதலானோரைக் காணாமல், ப₄ாக₃வதர் முதலான நல்லோரையே காண்பதாய், குற்றமற்றதாய், ஶ்ரோத்₃த₄மானதான கண்ணே கண்ணெனத்தக்கது] என்று செவிக்கும். கண்ணுக்கும் லக்ஷணம் ப₄க₃வத்₃ ப₄ாக₃வதர்களை விஷயமாகக் கொள்வதே என்று காட்டப்பட்டது.

''ஸா ஜிஹ்வா யா ஹரிம் ஸ்தௌதி தச்சித்தம் யத் த₃தர்ப்பிதம்।
தாவேவ ச கரௌ ஶ்லாக்₄யௌ யௌ தத்பூஜாகரௌ
கரௌ ॥

[ஹரியைத் துதிப்பதே நாவாகும்; அவனை நினைப்பதே நெஞ்சாகும். அவனைப் பூஜிக்கும் சிறந்த கைகளே கைகளாகும்] முதலான மற்ற

http://acharya.org

ப்ரமாணங்களிலும் இவ்வர்த்தம் சொல்லப்பட்டது. "புள்ளூரும் பொன்மலையைக் காணாதார் கண் என்றும் கண் அல்ல கண்டாமே" [11-7-1] "தொண்டர்க்கினியானைக் கேளாச்செவிகள் செவியல்ல கேட்டாமே" [11-7-2] "மாலை வணங்கி அவன் பெருமை பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே" [11-7-3] "தோடார் நறுந் துழாய் மார்வனை ஆர்வத்தால் பாடாதார் பாட்டென்றும பாட்டல்ல கேட்டாமே" [11-7-4] "சங்கேந்தும் கையானைக் கைதொழாக் கையல்ல கண்டாமே" [11-7-5] "உள்ளாதார் உள்ளத்தை உள்ளமாக் கொள்ளாமே" [11-7-6] "நினையாதார் நெஞ்சு என்றும் நெஞ்சல்ல கண்டாமே" [11-7-7] "அறியாதார் என்றும் அறியாதார் கண்டாமே" [11-7-8] "ஆன்விடையேழன்றடர்த்தார்க்கு ஆளானாரல்லாதார் மானிடவர் அல்லரென்று என் மனத்தே வைத்தேனே" [11-7-9] என்று திருமங்கையாழ்வாரும் இவ்வர்த்தத்தை வ்யதிரேகத்தாலே கூறி உறுதிப்படுத்தினர்.

ப₄க₃வங்மந்தி₃ரே நிதயம் மாரஜநாதி₃கரியாபர:।
அலங்காராதி₃கரணே குஶலஶ்ச ஜக₃த்₃கு₃ரோ:॥
ப₄க₃வதபாத₃பூஜாயாம ஹவநே வந்த₃நே தத₂ா।
ப்ரஸக்த: ஶாத₃த₄ஶாஸ்தராணும் ஸமஸகாராதி₃க்ரியாபர:॥
[1-28, 29]

[பரமபுருஷனின் திருக்கோயிலை சுத்தப்படுத்துவது முதலான தொண்டு களைச் செய்பவனாய், லோகஸ்வாமியான அவனுக்கு அலங்காரம், உத்ஸவம் முதலானவற்றைச் செய்வதில் வல்லவனாய், அவனுக்குத் திருவடிக்குற்றேவல் செய்வதிலும், அவனைக்குறித்து ஹோமம் செய் வதிலும், வணங்குவதிலும் ஈடுபட்டவனாய், ஶாத்₃த₄ஶாஸ்த்ரங்களை ஏட்டில் எழுதிப் பரிஷ்கரிப்பது முதலான கிரியைகளில் ஈடுபட்டவன்] என்று ப₄ாக₃வதர்கள் செய்ய வேண்டிய சில கைங்கர்யங்களும் காட்டப்பட்டன.

ப₄க₃வங்மந்தி₃ரம வருத்₃த₄ாங் பூஜ்யாங் அங்யாம்ஶ்ச
மங்க₃ளாங்।
ப்ரதிப்ரஸாரணம் மோஹாத் பூ₄மிக₃ாதம் பலாயநம॥
ஸர்வோபகரணாநாம் ச ஸாவேஷாம் பராணிநாம் தத₂ா।
ஸ்பர்ஶநம் லங்க₄நம் சைவ தத₂ாங்யா அபி து₃ஷ்க்ரியா:॥
விஸ்ருஜ்ய ப₄க₃வத்கர்மஸித்₃த₄யர் தத₂க₃மநே ரதம்।
தத₂ா ப₄ாக₃வதஸ்யார்த்த₂ஸித்₃த₄யாத்த₂ம் ச விஶேஷத:॥

http://acharya.org

ப்ரத₃க்ஷிணக்ரியாஸக்தம் தீர்த்த₂யாத்ராபரம் ததா₂ ।
த₃ர்ஶநார்த்த₂ம் ஹரேர்நித்யம் உத்ஸவாநுப₄வாய ச ॥
தே₃வாயதநயாத்ராயாம் அபி₄யுக்தம் ம்ருது₃க்ரமம் ।
மஹாபா₄க₃வதாநாம் ச கரஸம்ஸ்பர்ஶவர்ஜிதம் ॥
ஸத்₃ப₄க்தாநாமநந்யாநாம் பூஜார்த்த₂ம த₃ர்ஶநாய ச ।
ஸத்வரம் சைவமாதீ₃நி குர்வத் பாத₃த்₃வயம் ஶுப₄ம் ॥
[1-31...36]

[எந்தக் காலானது—ப₄க₃வானுடைய திருக்கோயிலையும், மூத்தவர் களையும், பூஜிக்கத்தக்கவர்களையும், மற்ற மங்களப் பொருள்களையும் குறித்து நீட்டுவது, மயக்கத்தாலே (கோயில் முதலானவற்றில்) குழிதோண்டுவது, அவற்றைக் கண்டு ஓடுவது, (ப₄க₃வத் ஸம்ப₃ந்த₄முள்ள) எல்லா உபகரணங்களையும், பிராணிகளையும் தொடுவது, அவற்றைத் தாண்டுவது, இதுபோன்ற மற்ற தீய கருமங் கள் ஆகியவற்றை விட்டு, பரமபுருஷனுக்குக் கைங்கர்யம் செய்வதற் காகவே நடப்பதில் ஈடுபடுவது, அதிலும் சிறப்பாக பா₄க₃வதர்களு டைய காரியஸித்₃தி₄யின் பொருட்டு நடப்பதில் ஈடுபடுவது, ப₄க₃வத் பா₄க₃வதர்களை ப்ரத₃க்ஷிணம் செய்வதில் ஈடுபடுவது, (ப₄க₃வத்ஸம் ப₃ந்த₄முள்ள) தீர்த்த₂யாத்திரையில் ஈடுபடுவது, தினந்தோறும் ஹரியை ஸேவிப்பதற்கும், அவனது உத்ஸவங்களை அனுப₄விப்ப தற்கும் அவனது தி₃வ்யதே₃ஶ யாத்ரையில் ஈடுபட்டு மெள்ள நடப்பது, மஹாபா₄க₃வதர்களுடைய கைபடாமலிருப்பது, புறந்தொழாத நல்ல அடியார்களைப் பூஜிப்பதற்கும் காண்பதற்கும் வேகமாக நடப்பது முதலானவற்றில் ஈடுபடுகிறதோ, மங்க₃ளமான அக்கால்களே கால்களாகும்] என்று கால்கள் செய்யக்கூடாதவையும், செய்ய வேண்டியவையும் காட்டப்பட்டன,

ஸாக்ஷாத் ப்₃ரஹ்ம பரம தா₄ம ஸர்வகாரணமவ்யயம் ।
தே₃வகீபுத்ர ஏவாந்யே ஸர்வே தத்கார்யகாரிண: ॥
தே₃வா மநுஷ்யா: பஶவ: பக்ஷிவ்ருக்ஷஸரீஸ்ருபா: ।
*ஸர்வமேவ ஜக₃த₃த₄ாது: வாஸுதே₃வஸ்ய விஸ்த்ருதி: ॥
ப்ரவ்ருத்தைஶ்ச நிவ்ருத்தைஶ்ச ஸ்வர்க்க₃தை₃ர் மோக்ஷதை₃ரபி ।
ஆராத்₄யோ ப₄க₃வாநேகோ வேத₃த₄ர்மைஸ்ஸநாதநை: ॥

*(பா)ஸர்வமேவ ஜக₃த்₃த₄ாதா வாஸுதே₃வ: ஸ ஸைவ ஸ்ம்ருத:

http://acharya.org

ஸ ஏவ ஸர்வதே₃ாபாஸ்ய: நாந்யஸ்ஸமஸாரதாரக: |
உபா₄ப்₄யாம் ஜ்ஞாநகர்மப்₄யாம ஆராத்₄யோ ப₄க₃வாந் ஹரி: ||
தத₃ஜ்ஞாநமேவ விஜஞாநம தத்கர்ம பரமம ஶுப₄ம|
உப₄ாவபி வியுகதௌ து ந தத்ஸமப்ராப்திகாரகௌ ||
யுகதாப்₄யாம் ப₄க₃வதப்ராப்தி: ஸமஸாரப₂லமந்யதா₂ |
தச்ச₂ாஸ்த்ரமேவ ஸச்ச₂ாஸ்தரம் ததீ₃யா ஏவ பண்டி₃தா: ||
ஶோச்யா ஹி ப₄க₃வத்கர்மபரிசர்யாவிதி₄ம் விநா ||
[1-44...50]

[நேரே பரம்பொருளாயிருப்பவனும், தேஜோரூபியானவனும், ஸர்வ காரணமாய், அழிவற்றவனுமுள்ளவன் தே₃வகியின் பிள்ளையாய் அவதரித்த கண்ணனே. மற்ற அனைவரும் அவனுக்கு ஏவல் புரி கின்றவர்களே. தேவர், மனிதர், பஶுக்கள், பறவைகள், மரங்கள், பாம்புகள் ஆகிய அனைத்துமே உலகனைத்தையும் படைத்த வாஸு தே₃வனின் விரிவேயாகும். வேத₃த்தில் சொல்லப்பட்ட பழைமை யான ப்ரவ்ருத்தி த₄ர்மங்களாலும், நிவ்ருத்தித₄ர்மங்களாலும், சுவர்க்கமளிக்கும் காம்யகர்மங்களாலும், மோக்ஷமளிக்கும் நிஷ்காம கர்மங்களாலும். ஆராதி₄கப்படுபவன் ப₄க₃வான் ஒருவனே. அவனே எல்லாப்படியாலும் உபாஸிக்கத்தக்கவன்; மற்ற எவனும் ஸம் ஸாரத்தைத் தாண்டுவிக்க வல்லவனல்லன். ஜ்ஞானம், கர்மம் எனும் இரண்டாலும் ஆராதி₄க்கப்படுபவன் ப₄க₃வானான ஹரியே. அவனைப் பற்றிய அறிவே விஜ்ஞானமாகும். அவன் விஷயமான கர்மமே மேலான மங்க₃ளமாகும. ஜ்ஞாந கர்மங்கள் தனித்தனியாக அவனை அடைய உபாயமாகமாட்டா; அவையிரண்டும் சேர்ந்தால்தான் ப₄க₃வானை அடையலாம்; இல்லாவிடில் ஸம்ஸார ப₂லமே கிடைக் கும். அவனைப்பற்றிய ஶாஸ்த்ரமே நல்ல ஶாஸ்த்ரமாகும். அவனடி யார்களே அறிவாளிகள். ப₄க₃வானுக்குரிய கர்மத்திலும், கைங்கர் யத்திலும் ஈடுபடாதவர்கள் வருந்தத்தக்கவர்களேயன்றோ] என்று ப₄க₃வானின் பரத்வமும், அவனைப்பற்றிய ஜ்ஞாநம், கர்மம், அடி யார்கள், ஶாஸ்த்ரம் முதலானவற்றின் சிறப்பும் மிகத் தெளிவாகப் பேசப்பட்டது.

ப₄க₃வத்கர்மஸித்₃த்₄யர்த்த₂ம் வ்யாவருத்தம் ப₄க₃வத்பரம |
அவிஷண்ணமநாயஸ்தம் அஹங்காரவிவர்ஜிதம் ||
அஸத்₃விஷயஸக்தாநாம இந்த₃ரியாணமஹர்நிஶம ||
த₃மகம் ஸர்வயத்நேந ப₃ாஹ்யாரம்ப₄விநிஸ்ப்ருஹம் ||

http://acharya.org

ஸர்வதா₃ ப₄க₃வத்₃ஜ்ஞாநஸம்ஸர்க்க₃விக₃த ஜ்வரம் |
ப₄க₃வத்₃ப₄க்தஸத்₃வாக்யக₃ங்கா₃ஜலபவித்ரிதம் ||
ஸதா₃ர்த்த₂க்₃ராஹகம ஸூக்ஷ்மஜ்ஞாநரூபவிசாரகம் |
ஸமர்த்த₂மபரத்₄ருஷ்யம ச புஷ்டம் துஷ்டமஸங்கி₃ ச ||
ஏவமாதி₃கு₃ணோபேதம நிர்மலம் மந உச்யதே || [1-55...58]

[ப₄க₃வானுடைய கைங்கர்யம் நிறைவேறும்பொருட்டே செயல்படுவதும், ப₄க₃வானிடம் ஈடுபடுவதும், (தன் காரியம் நிறைவேறுவது குறித்து) வருத்தமடையாததும், களைப்படையாததும், அஹங்கார மற்றதும், ப்ராக்ருத விஷயங்களில் ஈடுபடும் இந்திரியங்களை மிக முயன்று அடக்குவதும், ஶப்₃தா₃தி₃களான வெளிவிஷயங்களில் ஆசையற்றதும், எப்போதும் ப₄க₃வானைப் பற்றிய ஜ்ஞானத்தின் ஸம்ப₃ந்த₄த்தால் தாபத்ரயங்கள் நீங்கப்பெற்றதும், பரமபுருஷனின் அடியார்களுடைய அருள்மொழிகளாகிற க₃ங்கா₃ஜலத்தினால் பரிஶுத்₃தி₄யடைந்ததும், நல்ல விஷயங்களையே அறிவதும், நுண்ணிய தத்வ ஜ்ஞாநம் பற்றிய ஆராய்ச்சிகளைச் செய்வதும், (அவற்றில் நல்ல முடிவுகாண) வல்லதும், (ப்ரதிபக்ஷிகளால்) அசைக்கவொண்ணாததும், நல்லறிவினால் நிறைந்திருப்பதும், (இவ்வுலகப் பலன்களில் கிடைப்பது கொண்டு) திருப்திபெற்றிருப்பதும், கிடைக்காதவற்றில் பற்றில்லாததும், இத்தகைய பெருமைகள் பெற்றுக் குற்றமற்றிருப்பதுமான நெஞ்சே நெஞ்செனத்தக்கது.] என்று நல்ல நெஞ்சின் லக்ஷணம் ப₄க₃வத்₃ ப₄ாக₃வதர்களிடம் ஈடுபடுவதே என்று கூறப்பட்டது.

ஸ்வப₄ாவதோ ऽந்யதோ வாபி கேஷாஞ்சித் ஹேயதா ப₄வேத் |
நிஷித்₃த₄மிதி யத்₃த்₃ரவ்யம் வர்ஜ்யதே ஶாஸ்த்ரவர்த்மநா ||
ராஜஸம் தாமஸம சேதி தத் ஜ்ஞேயம பண்டி₃தைர் நரை: |
த்₃ரவ்யம ரஜஸ்தமோத்₄வஸ்தம வைஷ்ணவே கர்மவர்த்மநி ||
ஸமயோஜயதி யோ மோஹாத் தஸ்ய ஸா விப₂லா க்ரியா |
ஸவயம் யதி₃ தத₂ஶ்நீயாத் நிஷித்₃த₄ம் முக்₂த₄சேதந: ||
அஜாநந் ஹ்ருத₃யாந்தஸ்ஸ்த₂ம் பே₄க்தாரம் ந ஸ ஸாத்விக: ||
[1-65, 66, 67]

[இயல்வாகவோ, சில காரணங்களாலோ சில த்₃ரவ்யங்கள் தாழ்ந்தவையாகும். ஶாஸ்த்ர ரீதியில் யாதொரு த்₃ரவ்யமானது நிஷித்₃த₄மென்று விலக்கப்படுகிறதோ, அது ராஜஸமாகவும், தாமஸமாகவும் உள்ளதென அறிவாளிகளால் அறியத்தக்கது. ரஜஸ்தமோகு₃ணங்களால் கெடுக்கப்பட்ட

http://acharya.org

த்3ரவ்யங்களை வைஷ்ணவ கர்மங்களில் எவனொருவன் மயக்கத்தாலே உபயோகி2க்கிறானோ, அவனுக்கு அக்கர்மங்கள் பயனற்றவையாகின்றன. ஹ்ருத2யகமலத்திலிருக்கும் ஸர்வபோ4க்தாவான பரமபுருஷனைக் கணிசியாமல் அறிவிலியான எவனொருவன் அத்தகைய நிஷித்2த4மான ஆஹாரங்களைப் புசிக்கிறானோ, அவன் ஸாத்விகனாகமாட்டான்.] என்று ராஜஸதாமஸங்களான த்3ரவ்யங்களை எக்கர்மங்களிலும் வைஷ்ணவன் உபயோக3ப்படுத்தக்கூடாதென்றும், அத்தகைய உணவுகளைப் புசிப்பது அந்தர்யாமியாகிய ப4க3வானை அவமதிப்பதாகும் என்றும், அவன் ஸாத்விகனாகான் என்றும் உணர்த்தியது குறிக்கொள்ளத்தக்கது.

அத்ரோக்த லக்ஷணோபேதம் கர்ம பா4க3வதம் பரம்।
ஸப்தஸம்ஶுத்3தி4ஸம்யுததா பரிபூர்ண ப4வேத் க்ரியா ॥
ஸப்தைதே விமலா பா4வா: ஶ்ரத்3த4ாவாநாரபே4த் க்ரியாம்।
ஆதா4நாத்3யைர் விஶுத்3த4ாத்மா ஸமஸ்காரை:
பஞ்சகாலிநாம் ॥
குர்யாத் ப்3ராஹ்மண ஏவைதத் த்ரைவித்3யோ வா
விஶுத்3த4ீ: ।
ஶ்ரத்3த4ாவாந் ப4க3வத்3த4ர்மே ராக3ாதி3ரஹிதேந்த்3ரிய: ॥
ப்3ராஹ்மணாந் பூஜயேந் நித்யம் பஞ்சகாலபராயணாந் ।
வஸ்த்ரகோ3பூ4மிதா3நேந த4நதா4ந்யாதி3பி4ஸ் ததா2 ॥
தோஷயேத் பரயா ப4க்த்யா நித்யம ப4ாக3வதாந் நராந்।
ஸித்3தி4ர்ப4வதி வா நேதி ஸம்ஶயோऽச்யுதஸேவிநாம் ॥
ந ஸம்ஶயோऽஸ்தி தத்3ப4க்தபரிசர்யா ரதாதமநாம் ।
கேவலம் ப4க3வத்பாத3 ஸேவயா விமலம மந: ॥
ந ஜாயதே யதா2 நித்யம தத்3ப4க்தசரணார்ச்சநாத ।
விஶிஷ்டகுலஸஞ்ஜாத: ஸம்ஸ்காரை: ஸம்ஸ்க்ருதோ நிஜை: ॥
தவரிதோ யதி3 ஸத்3த4ர்மே சரேத் க்ருச்ச்2ராணி ஶாந்ததீ4: ।
தபஶ்சர்த்துமஶக்தஶ்சேத் த4நவாந் தா3நமாசரேத் ॥
உப4யோரப்யஶக்தஶ்சேத் நாமஸங்கீர்த்தநம் சரேத் ।
யதா2ஶக்தி தபஶ்சர்த்வா த3த்வா சைவ யதா2ப3லம் ॥
ந்ருஸிம்ஹமூர்த்திம் தம் த்4யாத்வா ஜபேத் ஸாவாக4
ஶாந்தயே ।
உபவாஸாத் ததா2 தா3நாத் ஸத்3ப4க்தாநாம் ச ஸேவநாத் ॥

http://acharya.org

ஸங்கீர்த்தநாத் ஜபாத் தாபாத் ஶ்ரத்₃த₄யா ஶுத்₃தி₄ம்
உபாஸீத நிரஸ்தோ ऽபி பஞ்சகாலபராயணை: ॥ [ருச்ச₂தி।
யதீ₃ச்சே₂த் ப₄க₃வத்கர்மஸேவயா பாபஶாந்தயே ।
பூர்வோகதாசாரஸம்பந்நம் யுவாநம் க்₂ருஹமேதி₄நம் ॥
உத்தமை: க்ருதஸக்₂யம ச நீசஸேவாவிவர்ஜிதம் ।
ப்ரக₂யாதஶுத்₃த₄சரிதம் ஸத்₃ப்₃ரஹ்மைகபராயணம் ॥
ப₄க₃வத்கர்மஸமஸகதம அர்த்த₂ஸந்தே₃ஹநோத₃கம் ।
ப்ரதிபாத₃நஸாமர்த்₂யயுகதம ஸதபுத்ரபதநிகம் ॥
உதா₃ரம ப₄கதிவிவஶம வஶீகருதஜகஃஜ்ஜநம் ।...
ப₄க₃வத்₃ப₄கதியுகதேஷு த்₃ருஷ்டமாத்ரேஷு ஸுப்ரியம் ॥
ஸாதூ₄நாமுபகாராய வயாபருதம் க்லேஶவர்ஜிதம் ।...
ஏவமாதி₃கு₃ணோபேதம ஆசாயம வரயேத த்₃விஜ: ॥
[1-91...105, 107, 110]

[இங்கு சொல்லப்பட்ட லக்ஷணங்கள் அமையப் பெற்றதே மேலான ப₄க₃வத் ஸம்ப₃ந்தி₄யான கர்மமாகும். ஏழுவிதமான பரிஶுத்₃தி₄களோடு கூடியதே நிறைவுள்ள கிரியையாகும். இவ்வேழும் குற்றமற்ற தன்மைகளாம். ஶ்ரத்₃தை₄யுடையவனாக இக்கர்மங்களைத் தொடங்க வேண்டும். பஞ்சகால பராயணர்க்குரிய ஸம்ஸ்காரங்களாலும் ஆத₄ாநம் முதலியவற்ருலும் பரிஶுத்₃தி₄பெற்ற நெஞ்சையும் அறிவையும் உடையவனாய், மூன்று வேத₃ங்களையும் ஓதிய ப்₃ராஹ்மணனும் இக்கர்மங்களைச் செய்யவேண்டும். ப₄க₃வானுக்குரிய இந்த த₄ர்மத்தில் ஊற்றமுடையவனாய், விஷயங்களில் ஆசை முதலியவற்றில் ஈடுபடாத இந்திரியங்களை உடையவனாய், பஞ்சகால பராயணர்களான அந்தணர்களை எப்போதும் ஆராதி₄க்கவேண்டும். வஸ்திரம், பசு, பூ₄மி, த₄னம், தா₄ன்யம் முதலானவற்றை தா₃னம்செய்து, மேலான ப₄க்தியுடன் பா₄க₃வதர்களை எப்போதும் திருப்திசெய்விக்க வேண்டும். அச்யுதனுக்கு ஆட்பட்டிருப்பவர்களுக்கு மோக்ஷஸித்₃தி₄ கிடைக்குமோ கிடைக்காதோ என்ற ஐயம உண்டு. அவனடியார்க்கு ஆட்பட்டிருப்பவர்களுக்கு இவ்வையம் இல்லை. எப்போதும் பா₄க₃வதர்களுக்குத் திருவடிக்குற்றேவல் செய்வதால் மனம் குற்றமற்றதாக ஆவதுபோல், எப்போதும் ப₄க₃வானுக்குமாத்திரம் திருவடிக்குற்றேவல் செய்வதாலே ஆவதில்லை. உயர்ந்தகுலத்தில் உதி₃த்தவனாய், ஸ்வரூபாநுரூபமான ஸம்ஸ்காரங்களால் ஸம்ஸ்கரிக்கப்பெற்றவன் பா₄க₃வத த₄ர்மத்தில் த்வரையுடையவனானால், அடங்கிய அறிவையுடையவனாய், க்ருச்ச்₂ரம் முதலான காயக்லேஶங்களைச் செய்யவேண்டும். அத்தகைய தவங்

http://acharya.org

களைச் செய்ய இயலாதவனாகில், த₄னவானாயிருப்பவன் தா₃னம் செய்யவேண்டும். இரண்டும் இல்லாவிடில், ப₄க₃வந்நாமஸங்கீர்த்தனம் செய்யவேண்டும். இயன்றவரையில் தவம்புரிந்து, ஶக்தியுள்ளவரையில் தா₃னமும்செய்து, எல்லாப் பாபங்களும் நீங்குவதற்காகப் பாபநாஶகனான நரசிங்கப்பெருமானை தியானித்து, (அவனது மந்திரத்தை) ஜபிக்கவேண்டும். உபவாஸத்தினாலும், தா₃னத்தினாலும், நல்லடியார்களை ஆராதி₄ப்பதாலும், நாமஸங்கீர்த்தனத்தாலும், ஜபத்தினாலும், தாபஸம்ஸ்காரத்தாலும், ஶ்ரத்₃தை₄யினாலும் ஶுத்₃தி₄யடைகிறான். பஞ்சகால பராயணர்களான அடியார்கள் தன்னினாலும், அதைப் பொருட்படுத்தாமல் அவர்களை ஆராதி₄க்கவேண்டும். அந்தணனொருவன் ப₄க₃வானுக்குரிய கர்மங்களை அநுஷ்டி₂த்துப் பாபம் நீங்கவேணும் என விரும்பினானாகில்—முற்கூறிய ஒழுக்கங்களை உடையவனாய், யௌவனவயஸ்ஸை உடையவனாய், க்₃ருஹஸ்த₂னாய், உயர்ந்தாரோடு நட்புடையவனாய், தாழ்ந்தவர்களுக்குத் தொண்டு புரியாதவனாய், உலகம் பரவிய நல்லொழுக்கத்தை உடையவனாய், நல்லோர்களையும் நாரணனையுமே புகலாகக்கொண்டவனாய், ப₄க₃வானுக்குரிய கர்மங்களில் ஈடுபட்டவனாய், அர்த்த₂ ஸந்தே₃ஹங்களைப் போக்கடிக்கவல்லவனாய், (நல்ல விஷயங்களைத்) தெளிவாகச் சொல்லுவதில் வல்லவனாய், நல்ல பெண்டுபிள்ளைகளை உடையவனாய், (உபதே₃ஶிப்பதில்) வண்மைமிக்கவனாய், ப₄க்திபரவஶனாய், உலகினரை வசப்படுத்தியவனாய், ப₄க₃வத்₃ப₄க்தியுடையவர்களைக் கண்டவுடனே மிக உகப்பவனாய், நல்லோர்களுக்கு உதவி செய்வதிலேயே ஈடுபட்டவனாய், அதனால் ஆயாஸமடையாதவனாய், இது போன்ற நற்குணங்களையுடையவனை ஆசார்யனை ஆஶ்ரயிக்க வேண்டும்.] என்று ப₄க₃வத் கைங்கர்யம், ப₄ாக₃வத கைங்கர்யம் ஆகியவற்றின் பெருமைகளும், ஆசார்யலக்ஷணமும் விவரிக்கப்பட்டன.

தா₃ந்தம் ஶாந்தம் ம்ருது₃ம் ஸௌம்யம் ப்ரஶாந்தம் ப₄க₃வத்பரம் ।
ஸந்தப்தஹ்ருத₃யம் ப₄க்த்யா ஶக்த்யா ஸர்வார்த்த₂ஸாத₄கம் ॥
ஸம்வத்ஸரம் தத₃ர்த்த₄ம் வா மாஸத்ரயமதா₂பி வா ।
பரீக்ஷ்ய விவிதை₄ருபாயை: க்ருபயா நிஸ்ஸ்ப்ருஹோ வதே₃த் ॥
[1-114, 116]

[மனத்தையும், வெளிப்புலன்களையும் அடக்கியவனாய், மென்மையுடையவனாய், கடுமையற்றவனாய், ஶாந்திபெற்றவனாய், ப₄க₃வானிடம் ஈடுபட்டவனாய், ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்புடைய நெஞ்சினனாய், ஆசார்யனுடைய காரியங்களை இயன்றவரையில் ப₄க்தி

http://acharya.org

யுடன் செய்பவனுக சிஷ்யன் அமைந்திருக்கிருன் என்று ஒருவருஷம் அல்லது ஆறுமாஸம். அல்லது மூன்றுமாஸம் பலவித₄மான உபாயங் களாலே பரீக்ஷித்து, அவனிடமிருந்து எந்தக் கைம்மாறையும் கரு தாமல், கேவலக்ருபையாலே அவனுக்கு உபதே₃ஶிக்கவேண்டும்.] என்று ஶிஷ்யலக்ஷணமும், ஶிஷ்யனை ஆசார்யன் கைக்கொள்ள வேண்டிய முறையும் காட்டப்பட்டது.

ந ப்ரமாத்₃யேத் கு₃ரோ: ஶிஷ்ய: வாங்மந:காயகர்மபி₄: ।
அவிப₄ஜ்யாதமநாऽऽசாாயம வர்தேதேதாஸ்மிங் யதா₂ऽச்யுதே॥
[1-118]

[மநோவாக்காயங்களால் சிஷ்யன் கு₃ருவுக்குத் தவறிழைக்கலாகாது. ப₄க₃வானிடத்திற்போலே, ஆசார்யனைத் தன்னிடமிருந்து வேறு படுத்தாமல் வாத்திக்கக்கடவன்.] என்று சிஷ்யன் இருக்கவேண்டிய நிலையும் காட்டப்பட்டது.

ப₄க₃வத்கர்மநிரதை: ஸ்தோத்ரபூஜாஜபாதி₃பி₄: ।
அப்ரதிக்₃ராஹகை: த்யக்தவிவாதை₃: லோப₄வர்ஜிதை: ॥
ஸுஶீலை: ஜ்ஞாநஶீலைஶ்ச பா₃ஹ்யாந்தை:
துல்யசேஷ்டிதை: ।
ஹ்ருத்₃யவேஷை: விஶுத்₃த₄ாங்கை:
ப₄க₃வத்₃கு₃ணலாலஸை: ॥
ஸத்யவாக்₃பி₄: த₃யாஸாரை: ம்ருது₃சேஷ்டைரமத்ஸரை: ।
ப₄கதிபூதை: ஸதா₃சாரை: ஸதா₃ ஸஹ வஸேத்₃பு₃த₄: ॥
[1-122...124]

[துதி, பூஜை, ஜபம் முதலியவற்றைச் செய்துகொண்டு ப₄க₃வத் கைங்கர்யத்தில் ஈடுபட்டவர்களாய், பிச்சை ஏற்காதவர்களாய், விவாத₃ம் செய்யாதவர்களாய், பேராசையற்றவர்களாய், நல்லொழுக்க முடையவர்களாய், அறிவு பெறுவதிலேயே ஊன்றியிருப்பவர்களாய், உள்ளும் புறமும் ஒருபடிப்பட ஒழுகுகின்றவர்களாய், நெஞ்சுக்கினிய வேஷத்தை உடையவர்களாய், குற்றமற்ற நெஞ்சினராய், ப₄க₃வத்₃ கு₃ணங்களில் போது போக்குகிறவர்களாய், உண்மையுரைப்பவர் களாய், கருணைமிக்கவர்களாய், மென்மையான செயல்களை உடைய வர்களாய், மாத்ஸர்யமற்றவர்களாய், ப₄க்தியினுல் பரிஶுத்₃தி₄பெற்ற வர்களாய், நல்லோர்களின் ஆசாரத்தில் நிலை நிற்பவர்களான பெரி யோர்களோடு, அறிவாளியானவன் எப்போதும் கூடி வாழவேண்டும்.] என்று ஸஹவாஸ யோக்₃யரான பெரியோர்களின் லக்ஷணமும் விவரிக்கப்பட்டது. ஆக, இவ்வளவால் முதல் அத்தியாயத்தின்

http://acharya.org

ஸாரமான பகுதிகள் விளக்கப்பட்டன. இனி, இரண்டாம் அத்தியாயத்தின் தொடக்கத்தில் அபி₄க₃மன காலத்தைப்பற்றியும், ஸ்நாநத்தைப் பற்றியும் சொல்லவேண்டுமென்று முனிவர்களால் வினவப்பெற்று, ஶாண்டி₃ல்யர் உரைத்த விஷயங்களில் ஸாரமானவற்றைக் காண்போம்.

உச்சைஸ்ஸ்வரேண யோக₃ாந்தே ஸ்துத்வா ஸ்தோத்ரை: உத₃ாரதீ₄: ।
வாஸுதே₃வாதி₃தே₃வாநாம் நாமநாம் ஸங்கீர்த்தநம் சரேத் ॥
।ராது₃ாப₄ாவக₃ணம சாபி ஸம்ஸ்மரேத் ஸாவஸித்₃த₄யே ।
கீர்த்தயேத் தத்₃கு₃ணாந ப₄க்த்யா பரமாத்₃பு₄தசேஷ்டிதாந் ॥
அதந்த்₃ரிதஸ்ய ஸ்வாத₄யாயே யோக₃யுக்தாத்மநஸ்ஸதா₃ ।
தத₃ப₄க்த்யா ஸவிந்நதே₃ஹஸ்ய ஹ்யவஶ்யம நாமகீர்த்தநம ॥
[2-3, 4, 5]

[சிறந்த அறிவையுடையவன் 'யோக₃ம்' எனப்படும் தூக்கத்தின் முடிவில், உரத்த குரலில் துதிகளாலே எம்பெருமானைத் துதித்து, வாஸுதே₃வன் முதலான நாமங்களை ஸங்கீர்த்தனம் செய்யவேண்டும். விரும்பியதையெல்லாம் பெறும் பொருட்டு எம்பெருமானுடைய அவதார மூர்த்திகளையும் சிந்திக்கவேண்டும். அவர்களுடைய கு₃ணங்களையும், பரமாஶ்சர்யகரமான செயல்களையும் ப₄க்தியுடன் கீர்த்தனம் செய்யவேண்டும். வேதமோதுதலில் சோம்பலில்லாதவனாய், எப்போதும் பரமாத்மாவோடு தொடர்புள்ள நெஞ்சினனாய், அவனிடம் ப₄க்தியால் விகாரமடையும் தே₃ஹமுடையவனுக்கு, அநுப₄வ பரீவாஹமான (போக்கு வீடான) நாம ஸங்கீர்த்தனம் அவஶ்யமாகும்.] என்று காலையில் எழுந்திருந்தவுடன் நாம ஸங்கீர்த்தனம் செய்ய வேண்டியது அவஶ்யம் என்று காட்டப்பட்டது.

ஸமுத்₃ரக₃ாபக₃ாதே₃வக₂ாதவாபீஹ்ரத₃ாஶ்ரயே ।
ஸ்நாயாத் ஜலேऽந்யதே₃வாநாம ஸம்ஸர்க₃பரிவர்ஜிதே ॥
ஸர்வைஸ்ஸமஸேவிதே ஸத்₃பி₄: த்₃ருஷ்டதே₃ாஷவிவர்ஜிதே।
விஶுத்₃த₄தீரபூ₄ப₄ாகே₃ ஸ்நாயாத லகு₄நி வாரிணி ॥
[2-21, 22]

[வேறு தே₃வர்களுக்கு உரிமைப்படாதவையான, கடலைச் சென்றடையும் நதி₃, தே₃வர்களால் வெட்டப்பட்ட குளங்கள், பொய்கைகள் முதலானவற்றின் நீரில் குளிக்கவேண்டும். நல்லோர்களால் உபயோகிக்கப்படுவதாய், இம்மையில் தோ₃ஷத்தை விளைக்காததாய்,

http://acharya.org

(ப்ரத்யக்ஷதோ₃ஷமற்றதாய்) பரிஶுத்₃த₄மான கரையுடையதான சிறு நீர்நிலையிலும் குளிக்கலாம்] என்று ஸ்நாநம் செய்யத்தக்க நீர்நிலைகளைக் குறிக்குமபோது, அது தே₃வதாந்தர ஸம்ப₃ந்த₄மற்றதாயிருக்க வேண்டும் என்று கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

ஆஸநாத்₃யைர்யதா₂ஶக்தி ஸமப்₄யர்ச்ய ஜக₃த்₃கு₃ரும।
த்₄யாத்வா க₃ங்க₃ாம ஹரே: பாத₃ாத் பதமாநாம் ஸவமூர்த₄நி॥
பவித்ராத்₃யந்தகாப்₃லிங்க₃மந்த்ரைஸஸிஞ்சேத் கராத் கிரந்।
த்₄யாயந்நேவ பரம ப்₃ரஹ்ம யதா₂ஶக்தி நிமஜ்ஜ்ய ச ॥
[2-37, 38]

[லோகநாத₂னை எம்பெருமானை ஆஸநம் முதலானவற்றை ஸமர்ப் பித்து இயன்றவரையில் பூஜித்து, அவனுடைய திருவடியிலிருந்து க₃ங்கை₃ தன் தலையில் விழுவதாக தியானித்து, ''பவித்ரம்'' என்று தொடங்கும மந்திரத்தை முடிவில் கொண்ட ஜலத்தைச் சொல்லும் வேத₃மந்திரங்களைச் சொல்லிக்கொண்டு, கைகளால் நீரை இறைத்துக்கொண்டு, இயன்றவரையில் நீரில் மூழ்கி பரப்₃ரஹ்ம மாகிற அவனை தியானித்துக்கொண்டு ஸ்நாநம் செய்யவேண்டும்.] என்று ஸ்நாநம் செய்யவேண்டிய முறையும் விளக்கப்பட்டது.

புண்யக்ஷேத்ரஸமுத்₃பூ₄தாம ம்ருத்₃மாத₃ாய வைஷ்ணவீம।
ப்ரணவாத்₃யேந மூலேந கர்மாரம்ப₄ம் புநர்ஜபேத்॥
ஆஹ்ருத்யாம்பு₃ பவித்ரேண க்ருத்வா ஸவயகரோத₃ரே।
கர்மாரம்பே₄ண மந்த்ரேண மருத₃மாலோட₃யேத தத:॥
ப்₃ரஹ்மணே ததஸமீக்ருதய த்₄யாயேத் தே₃வம் ஸநாதநம்।
ப்ரதே₃ஶிந்யா ஸமாத₃ாய கிஞ்சித் ஶிரஸி தா₄ரயேத்॥
லலாடபா₃ஹூஹ்ருத₃யேஷவார்ஜவேந ப்ரதீ₃பவத்।
க்ருத்வோர்த்₄வபுண்ட்₃ராந் நாம்நாம ச சதுர்ணும
ந்யாஸமாசரேத்॥
படே₂த் த்₃வாத₃ஶகம நாம்நாம் தத்தத்ஸ்தா₂நேஷு
யோ த்₃விஜ:।
ப₄வேத் ஸ்நாநப₂லம தஸ்ய ம்ருதா₃ தஸ்ய தி₃நே தி₃நே॥
தத ஆசமய விதி₄வத் அபி₄ஜ்ஞாதீ₃மஶ்ச தர்ப்பயேத்।
நமோந்தை: ப்ரணவாத்₃யைஶ்ச பித்ருணும்
கேவலைஸ்ஸ்வகை:॥
சதுர்மந்த்ரேண ஸமப்ரோக்ஷய பீத்வா தேநாபி₄மந்த்ரிதம।
ஜலமாசம்ய மூலேந த₃த₃யாத₃ர்க₄யம் பராத்மநே॥

http://acharya.org

மர்த்யகூாதேऽபி வா ஸ்நாயாத் அத்₃ப்₄ய உத்₃த்₄ருத்ய
தந்ம்ருத₃ம் ।
த்₄யாத்வா க்ஷீரார்ணவம் தச்ச நித்யம் ஶிஷ்டநிஷேவிதம்॥...
ஆரநாளம் ந ஸேவேத கத₃ாசித ப₄க₃வதபர: ।
ஸுராகல்பம ஹி தத ஜ்ஞேயம தஸமாத் யத்நேந வர்ஜயேத॥
[2-42...49, 57]

[புண்யக்ஷேத்ரத்திலிருந்து உண்டான விஷ்ணு ஸம்ப₃ந்த₄முள்ள மண்ணை எடுத்து, ப்ரணவத்தை முதலாகக்கொண்ட மூலமந்திரத்தால், ம்ருத்திகா ஸ்நாநமாகிற கர்மத்தைத் தொடங்குவதற்காக ஜபிக்கவேண்டும். பவித்ரத்தால் நீரை எடுத்து இடதுகையின் நடுவில் வைத்து, முற்கூறிய மூலமந்திரத்தால் மண்ணைக் குழைக்கவேண்டியது. வேதமந்திரத்தால் அதை ஸமமாகச் செய்து, பழையோனை எம்பெருமானை தியானிக்கவேண்டும். ஆள்காட்டி விரலாலே சிறிது மண்ணை எடுத்து, தலையில் த₄ரிக்கவேண்டும். பிறகு, நெற்றியிலும், கைகளிலும், நெஞ்சிலும் நேராக தீ₃பம்போலே மண்ணை த₄ரிக்க வேண்டும். ஊர்த்₄வபுண்ட்₃ரமாக முற்கூறிய நாலு இடங்களிலும் த₄ரித்து, (வாஸுதே₃வன் முதலான) நாலு வ்யூஹமூர்த்திகளுக்கும் அவற்றில் ந்யாஸத்தைச் செய்யவேண்டும். தி₃னந்தோறும் பன்னிரண்டு ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை அவ்வவற்றிற்குரிய இடங்களில் த₄ரித்து, கேஶவன் முதலான பன்னிருநாமங்களை அவற்றில் அநுஸந்தி₄ப்பவனுக்கு, தினந்தோறும் ம்ருத்திகாஸ்நாநம்செய்த ப₂லன் ஏற்படுகிறது. அதன்பிறகு முறைப்படி ஆசமநம்செய்து, தே₃வரிஷி தர்ப்பணம் செய்யவேண்டும். ப்ரணவத்தை முதலிலும், நமஸ்ஸை இறுதியிலும் கொண்ட பித்ருமந்த்ரங்களாலே பித்ருதர்ப்பணத்தையும் செய்ய வேண்டும். வ்யூஹமந்த்ரங்களாலே ப்ரோக்ஷித்துக்கொண்டு, அதனுல் மந்திரிக்கப்பெற்ற நீரைப்பருகி ஆசமநம் செய்து, மூலமந்திரத்தினுல் பரமாத்மாவுக்கு அர்க்₄யமளிக்கவேண்டும். மனிதர்களால் வெட்டப்பட்டதாய், நல்லோர்களால் எப்போதும் உபயோகி₃க்கப்படுவதான நீர்நிலையைத் திருப்பாற்கடலாக தியானித்து, அதன் நீரிலிருந்து மண்ணை எடுத்து முற்கூறியபடி அதிலும் ம்ருத்திகா ஸ்நாநம் செய்யக்கடவன். ப₄க₃வானிடம் ஈடுபட்டவன் – கஞ்சி, அல்லது புளித்த நீரை ஒருபோதும் உபயோகி₃க்கலாகாது. அது கள்ளுக்கு ஸமானமானதன்றே. ஆகையால் அதை முயன்ருகிலும் விலக்கவேண்டும்.] என்று ம்ருத்திகாஸ்நாநம் செய்யும் முறையும் விளக்கப்பட்டது.

http://acharya.org

ந குர்யாத்₃ஆர்த்₃ரவஸ்த்ரேண கர்ம ப₄ாக₃வதம் பு₃த₄:।
ந த₃க்ஷிணாமுகோ₂ஶுத்₃த₄: பைஶாசம் தது₃தா₃ஹ்ருதம்॥
[2-59]

[அறிவாளியானவன் ப₄க₃வத்ஸம்ப₃ந்த₄முள்ள கர்மத்தை ஈரத்துணியுடுத்தவனாய்ச் செய்யலாகாது. தெற்குத்திக்கைப் பார்த்திருப்பவனாகவும், ஶுத்₃தி₄யற்றவனாகவும் அதைச் செய்யக்கூடாது. செய்தால், அது பிஶாசங்களுக்கு உரியதாகச் சொல்லப்படுகிறது.] என்று ப₄க₃வானுக்குரிய கர்மங்களைச் செய்யும்போது, பூ₄தப்ரேதபிஶாசங்களுக்குரிய கர்மங்களைச் செய்யும் முறையில் செய்யலாகாது என்று நிஷேதி₄க்கப்பட்டது.

பூஜாயாம் ஸ்நாநகாலே ச போ₄ஜநே ஜபகர்மணி।
அவைஷ்ணவாநாம் ஜந்தூநாம் த₃ர்ஶநாத்₃யம் விவர்ஜயேத்॥
நித்யம் தீர்த்தோ₂த₃கஸ்நாயீ தர்ப்பயந் தத்ர தஜ்ஜலை:।
ஶ்ரத்₃த₄யா ப₄க₃வந்மந்த்ரை: ஸித்₃த₄: ஸ்யாத₃சிராத் த்₃விஜ:॥
[2-63, 64]

[பூஜையின்போதும், ஸ்நாநகாலத்திலும், உண்ணும்போதும், ஜபிக்கும்போதும், விஷ்ணுஸம்ப₃ந்த₄மற்ற ஜந்துக்களைப் பார்ப்பது முதலியவற்றை விலக்கவேண்டும். இருபிறப்பாளனாயிருப்பவன் தினந்தோறும் (ப₄க₃வத்₃ ப₄ாக₃வதஸம்ப₃ந்த₄ம் பெற்று) புனிதமான நீரில் குளிப்பவனாய், அந்த நீரைக்கொண்டே ப₄க₃வந்மந்திரங்களாலே ஶ்ரத்₃தை₄யுடன் தர்ப்பணம் செய்பவனானால் விரைவிலேயே மோக்ஷஸித்₃தி₄யடைகிறான்.] என்று மோக்ஷத்தை விரும்புகிறவன் விலக்கவேண்டியவையும், செய்யவேண்டியவையும் காட்டப்பட்டன.

அபி₄க₃ச்சே₂ச்ச தே₃வேஶம் ஸுஸ்நாதஸ்ஸோர்த்₄வ
புண்ட்₃ரக:।
ஸுப்ரக்ஷாளிதபாத₃ஶ்ச ஸ்வாசாந்த: ஸம்யதேந்த்₃ரிய:॥
[2-66]

[நன்கு குளித்து ஊர்த்₄வபுண்ட்₃ரமிட்டுக்கொண்டவனாய், கால்களை நன்கு விளக்கிக்கொண்டவனாய், நன்கு ஆசமனம் செய்தபின், புலன்களை அடக்கிக்கொண்டு தே₃வர்தலைவனை அணுகவேண்டும்.] என்று அபி₄க₃மநாராத₄னத்தின் பொருட்டுப் பரமபுருஷனை அணுக வேண்டிய முறை விளக்கப்பட்டது.

http://acharya.org

ந ரக்தக்ருஷ்ணமலிநம் வாஸோऽபி பரித₄ாய ச।
ந ச ஶூந்யகர: ஶஸ்த்ரீ ந யாயாத் ப₄க₃வத்₃க்₃ருஹம ॥
ப்ரணம்ய த₃ண்ட₃வத்₃பூ₄மௌ உத்த₂ாயோத்த₂ாய தந்மநா:।
ஸ்வாத்₄யாயவத₃ந: குர்யாத் அஷ்டாங்கே₃ந நமஸ்க்ரியாம॥
நமஸ்குர்வந் ப்ரதிதி₃ஶம் வாக்₃யதோ த்₄யாநதத்பர:।
அஸமஸ்தகர: கைஶ்சித மந்த₃ம் குர்யாத் ப்ரத₃க்ஷிணம॥
த்₃விசதுஷ்ஷட்₃த₃ஶாஷ்டாத்₃யை: தே₃வம் குர்யாத்
ப்ரத₃க்ஷிணம।
தே₃வஸ்ய நிகடே கார்யம ஸத்₃பி₄ர்ஜாநுப்ரத₃க்ஷிணம்॥
சக்ரவத் ப்₄ராமயேத் நாங்க₃ம பருஷட₂ப₄ாக₃ம ந த₃ர்ஶயேத்।
ஸந்நிதெ₄ள தே₃வதே₃வஸ்ய ந சோச்சை: ப்ரலபேத் தத₂ா॥
நித₄ாய த₃ண்ட₃வத் தே₃ஹம் ப்ரஸார்ய சரணௌ கரௌ।
ப₃த்₃த்₄வா முகுளவத் பாணீ ப்ரணமோ தணட₃ஸமஜ்ஞித:॥
பாதெ₃ள ஶிரஸ் தத₂ா ஹஸ்தௌ நிகுஞ்ச்ய முகுளாகருதீ।
மநோபு₃த்₃த்₄யபி₄மாநைஶ்ச ப்ரணமோऽஷ்டாங்க₃-
ஸம்ஜ்ஞித:॥...
ஸர்வத்ர த்₃ருஷ்ட்வா தே₃வேஶம் ஜிதந்த இதி மந்தரகம।
த்₃வாத₃ஶார்ணம் ஜபேந்மந்த்ரம பீ₄தவத் பூர்வமாநத:॥
மத்க்ருதாநி ச கர்மாணி மதீ₃யமஹமசயுத।
தவைவ ந மமேதீஷ்டம் நமோ ப₄க₃வதேதி ச॥
ப்ரத₃க்ஷிணநமஸ்காரஜபத்₄யாநார்ச்சநஸ்துதீ:।
தத்கர்ம தத்₃கு₃ணேத்₃கே₄ாவைஷ: விநா நாதராந்யத₃ாசரேத்॥
பாத₃ப்ரஸாரணம வ்யாக்₂யாம் விஷ்டரம் சாவகுண்ட₂நம।
ந குர்யாத் ப₄க₃வத்₃கே₃ஹே ஹாஸம கண்ட₂த்₄வநிம் தத₂ா॥
பே₄ாஜநம் ஸ்வாபமுத்₃கே₃ாஷம் தாமபூ₃லம் கேஶமோத₄நம।
சூ₂த்ராத்₃யம் ச தத₂ாந்யாஶ்ச ந குர்யாதுல்பணக்ரியா:॥
ப்ரத₃க்ஷிணே ப்ரணமே ச பூஜாயாம ஹவநே தத₂ா।
ந கண்ட₂க₃தவஸ்த்ரஸ்ஸ்யாத் த₃ர்ஶநே கு₃ருதே₃வயோ:॥
ப₄க₃வந்மந்தி₃ரே வ்ருத்₃த₄ாந் பூஜ்யாநபி விஶேஷத:।
விநா ப₄ாக₃வதஶ்ரேஷ்ட₂ாந்ப்ரணமாத்₃யைர் ந சார்சசயேத்॥
கு₂ரோர்க்₂ருஹே தே₃வக்₂ருஹே புஷ்பவாட்யாம் கூ₂வாம்
குலே।

க்ருபணம சோலபூ₃ணம் கர்ம வர்ஜயேத₃பி ஸம்ஸதி₃ ||
ஜப்த்வா ऽபி₄க₃மநம மந்த்ரம் ஆசமயித்வா யத₂ாவிதி₄ |
ஆஸநார்க₄யாதி₃பி₄ர்பே₄ாகை₃: ப₄க்த்யா பரமபாவநை: ||
அபி₄க₃மய ஜக₃ந்நாத₂ம த்₄யாயந்நேவ ஸநாதநம் |
ஜபேத் யத₂ாப₃லம ப்ராத: ஸஹஸ்ரஶதஸங்க்₂யயா ||

[2-69...75, 77...86]

[சிவந்த, அல்லது கறுத்த அல்லது அழுக்கான துணியை உடுத்தோ, வெறுங்கையனாகவோ, ஆயுத₄மேந்தியவனாகவோ எம்பெருமானுடைய திருக்கோயிலுக்குப் போகக்கூடாது. த₃ண்ட₃ம்போலே பூ₄மியில் விழுந்து எம்பெருமானிடமே நெஞ்சு செலுத்தி, வேத₂மோதியவனாய், பலகால் எழுந்து ஒவ்வொரு திக்கிலும நமஸ்காரம் செய்பவனாய், அஷ்டாங்க₃ நமஸ்காரம் செய்யவேண்டும். பிறகு, மௌனத்தோடு த்₄யானத்தில் ஈடுபட்டு, பிறரோடு கைக்கோர்த்துக் கொள்ளாமல், மெள்ளநடந்து ப்ரத₃க்ஷிணம் செய்யவேண்டும். இரண்டு, நாலு, ஆறு, எட்டு, பத்து முதலான இரட்டைப்படையாக எம் பெருமானை ப்ரத₃க்ஷிணம் செய்யவேண்டும். நல்லோர்கள் எம்பெருமானுக்கு அருகில் முழந்தாளால் ஊர்ந்து ப்ரத₃க்ஷிணம் செய்யவேண்டும். தே₃வதே₃வனுடைய ஸந்நிதி₄யில் தே₃ஹத்தைச் சக்கரம்போலே சுழற்றக்கூடாது. உடலின் பின்பகுதியைக் காண்பிக்கலாகாது. உரக்கக் கூச்சலிடலாகாது. த₃ண்ட₃ம்போலே உடலைக் கீழே விழவிட்டு, கைகால்களை நீட்டி, இருகைகளையும் மொட்டுபோலே கூப்புவது த₃ண்ட₃ ப்ரணாமம் எனப்படுகிறது. இரண்டு கால்களையும், தலையையும், இரு கைகளையும் மொட்டுப் போலே வணக்கி, மனம், பு₃த்₃தி₄, அபி₄மானங்களையும் ஒடுக்குவதே அஷ்டாங்க₃ ப்ரணாமம் எனப்படுகிறது...தே₃வர்தலைவனை எங்கும் கண்டு, ஜிதந்தே என்னும் ருக்₃வேத₃கி₂ல மந்திரத்தையும், த்₃வாத₃ஶாக்ஷர மந்திரத்தையும், ப₄யத்தோடு முன்சொன்ன எண்ணிக்கையில் ஜபிக்கவேண்டும். "அச்யுதனே! என்னால் செய்யப்பட்ட எல்லாச் செயல்களும், என்னுடைமைகளும், நானும் உன் உகப்புக்கே ஆனவையேயொழிய என் ஆநந்த₃த்திற்காக ஏற்பட்டவையல்ல" என்று எண்ணி, "நமோ ப₄க₃வதே" என்று அநுஸந்தி₄த்துக்கொண்டு, ப்ரத₃க்ஷிணம் நமஸ்காரம், ஜபம், த்₄யாநம், அர்ச்சனம், துதிகள் முதலிய ப₄க₃வத் கர்மங்களை — அவனுடைய கு₃ணஸங்கீர்த்தனம் தவிர வேறு எதிலும் ஈடுபடாமல் அநுஷ்டி₂க்கவேண்டும். எம் பெருமானுடைய ஸந்நிதி₄யில் — காலை நீட்டிக்கொண்டிருப்பது,

http://acharya.org

ஊர்வம்பு பேசுவது, ஆஸநமிட்டுக்கொள்வது, முக்காடிடுவது, உரக்கச்சிரிப்பது, கூச்சலிடுவது ஆகியவற்றைச் செய்யலாகாது. உண்பது, உறங்குவது, முழங்குவது, தாம்பூலமிட்டுக்கொள்வது, மயிரைச் சீர்திருத்துவது, குடை பிடித்துக்கொள்வது முதலிய ஸ்வார்த்தமான செயல்களைச் செய்யலாகாது. ப்ரதக்ஷிணம் செய்யும் போதும், வணங்கும்போதும், ஆராதனம் செய்யும்போதும், ஹோமம் செய்யும்போதும், ஆசார்யனையும், எம்பெருமானையும் காணும் போதும் உத்தரீயத்தைக் கழுத்தில் அணிந்திருக்கக்கூடாது. பகவத் பக்தியில் தலைசிறந்தவர்களைத் தவிர மற்றவர்களை, மிகவும் பூஜிக்கத் தக்க முதியவர்களைக்கூட — நமஸ்காரம் முதலியவற்றைச்செய்து பகவத்ஸந்நிதியில் ஆராதிக்கக்கூடாது. ஆசார்ய க்ருஹத்திலும், எம்பெருமானுடைய ஸந்நிதியிலும், பூந்தோட்டத்திலும், பசுக்களின் கூட்டத்தின் நடுவிலும், ஸபை நடுவிலும், கொடிய டாம்பிக கார்யங்களை விலக்கவேண்டும். மந்திரத்தை ஜபித்துவிட்டு, முறைப் படி அபிகமநகாலத்தில் ஆராதனம் செய்துவிட்டு, பரமபாவன மான ஆஸநம், அர்க்யம் முதலான உபசாரங்களைச் செய்து ஜகந் நாதனை ஆராதித்து, பழையோனான அவனை தியானித்துக்கொண்டே, காலைவேளையில் நூறு, அல்லது ஆயிரம் என்னும் கணக்கில் இயன்ற வரையில் பகவந் மந்திரத்தை ஜபிக்கவேண்டும்.] என்று, பகவத் ஸந்நிதியில் செய்யவேண்டிய ப்ரதக்ஷிணம், நமஸ்காரம், ஜபம் முதலானவற்றின் முறைகளும், விலக்கவேண்டிய காரியங்களும் விளக்கப்பட்டன.

ஆபீடாங்மௌலிபர்யந்தம் பஶ்யத: புருஷோத்தமம் ।
ஜபத: பாதகாந்யாஶு நஶ்யந்தி ஸபலா: க்ரியா: ॥ [2-89]

[பீடத்திலிருந்து தொடங்கி, கிரீடம் வரையில் புருஷோத்தமனை ஸேவித்து, அவனது மந்திரத்தை ஜபிப்பவனுடைய பாபங்கள் உடனே அழிகின்றன. அவனுடைய செயல்களெல்லாம் பயனுடையவை யாகின்றன.] என்று, முற்கூறியபடி நடப்பவனுக்குக் கிடைக்கும் பலனும் பேசப்பட்டது. இனி, மூன்றுமத்தியாயத்தில் உள்ள ஸார மான ஶ்லோகங்களைக் காண்போம்.

உபாதாநவிதியைக் கூறவேண்டும் என்று முனிவர்களால் கேட்கப்பெற்ற ஶாண்டில்ய முனிவர், மூன்றும் அத்தியாயத்தில் அதைக் கூறத் தொடங்குகிறார்.

http://acharya.org

மண்டபாநி ஸௌரமயாணி பத்₃மோத்பலவநாநி ச।
க்ரீடா₃ர்த₂ம் தே₃வகீஸூநோ: ஆட்₄யோ ப₄க்த்யா
ப்ரகல்பயேத்॥

துலஸீவாடிகா யத்ர யத்ர வா கமலாலய:।
பஞ்சகாலபரா யத்ர தத்ரஸ்தே₂ ப₄க₃வாந் ஹரி:॥
ஸதூ₃ர்வைரக்ஷதைர்நித்யம அப்₄யர்ச்ய குஸுமத்₃ருமாந்।
துளஸீம் சாஹரேத பத்ரபுஷ்பாத்₃யாந் வாக்₃யத: ஶுசி:॥
ஸ்வயம ஸம்வர்த₄ய துளஸீம் த்₃வாத₃ஶாக்ஷரவித்₃யயா।
யேऽர்ச்சயந்தி ஜக₃ந்நாத₂ம் ஶ்வேதத்₃வீபம் ப்ரயாந்தி தே॥
த₃ணட₃ப்ரணுமமபி வா காரயேத் புஷ்பவாடிகாம்।
அபி வா துளஸீமாத்ரம் க்ருதக்ருத்யஸ்ஸசேதந:॥
அங்கயேத் ஶங்க₂சக்ராப்₄யாம் சூதாத்₃யாம்ஶ்சமப-
காதி₃காந்॥

துளஸீவாடிகாம குர்யாத் ஶங்க₂சக்ராம்பு₃ஜாக்ருதிம்।
வருக்ஷகு₃ல்மலதாதீ₃நாம் அச்யுதாராமஜந்மநாம்॥
குர்யாத் நாமாநி தே₃வஸ்ய தே₃வ்யா லக்ஷ்மயாஸ்தத₂
ஹரே:

ஈஹமாநஶ்சரேந்நித்யம் கத₂ாசிந்காலஸோ ப₄வேத்॥
[3-9...16]

[தே₃வகியின் பிள்ளையான கண்ணன் விளையாடுவதற்கு உறுப்பாக— அழகிய மண்டபங்களையும், தாமரை, நெய்தல் முதலிய சிறந்த பூக்கள் மலரும் தோட்டங்களையும் பணமுள்ளவன் ப₄க்தியுடன் அமைக்கவேண்டும். அருகம்புல், அக்ஷதை முதலியவற்றைக்கொண்டு தினந்தோறும் பூஞ்செடிகளை அர்ச்சித்து, மௌனமுடையவனாய், பரிஶுத்₃த₄னாய் துளஸியைப் பறிக்கவேண்டும். துளஸியைத்தானே வளர்த்து த்₃வாத₃ஶாக்ஷரமந்திரத்தை அநுஸந்தி₄த்து ஜக₃ந்நாத₂னை ஆராதி₄ப்பவர்கள் ஶ்வேதத்₃வீபத்தை அடைகிறார்கள். (துளஸியால் அர்ச்சனம் செய்யமுடியாவிடில்) பூந்தோட்டத்தில் த₃ண்ட₃ப்ரணாம மாவது செய்யவேண்டும். அறிவாளியாயிருப்பவன் துளஸியை மாத்திரமாவது த₃ண்ட₃ப்ரணாமம்செய்து வணங்கினால் கடமையைச் செய்தவனாகிறான். மாமரம் முதலிய பழம்தரும் மரங்களையும், சம்பகம் முதலான பூத்தரும் மரங்களையும் ஶங்க₂ம், சக்ரம் முதலான வற்றால் அடையாளமிடவேண்டும். ஶங்க₂ம், சக்ரம், தாமரை ஆகிய வற்றின் அமைப்பில் துளஸித்தோட்டத்தை அமைக்கவேண்டும்.

http://acharya.org

அச்யுதனுக்குரிய தோட்டத்தில் விளையும் மரம் செடி கொடிகளுக்கு எம்பெருமானுடைய திருநாமங்களையும், பெரியபிராட்டியாருடைய திருநாமங்களையுமே வைக்கவேண்டும். அவற்றைப் போஷிப்பதில் எப்போதும் முயற்சியுடையவனாயிருக்கவேண்டும். ஒருபோதும் சோம்பல் கொள்ளலாகாது.] என்று ப₄க₃வானுக்கு அவரவர் ஶக்திக்குத் தக்கபடி கோயில், நந்த₃வனம் முதலானவற்றை அமைத்து அவற்றைப் பரிபாலிக்கும் முறையும் விளக்கப்பட்டது.

ப₄க₃வந்தப தத₂ா விப்ராந் பஞ்சகாலபராயணாந்।
ப₄க₃வந்மந்தி₃ரம் சைவ புண்யதீர்த்த₂ாநி ஸர்வத₂ா ॥
த்₃விஷதஶ்சைவ நாத₃த்₃யாத் நிக்ஷிபதஸ்யாபஹாரிண:।
பராதிலோமயாச்ச ஜாதேப்₄ய: தத₂ா சாந்ருதஜீவிந:॥
உத்₃யதம் த்வபி நாத₃த்₃யாத அந்யதே₃வாவலம்பி₃ந:।
க்ரமாக₃தைர் த₄நைர்வாபி ஸ்வக்ஷேத்ராராமஸம்ப₄வை:।
ப₄க₃வத்₄ப₄க்திபூதேப்₄யோ விபரேப்₄யோ யாசிதைஸ்து வா॥
[3-32...35]

[ப₄க₃வானையும், பஞ்சகாலபராயணர்களையும், ப₄க₃வானுடைய கோயிலையும், புண்யதீர்த்த₂ங்களையும் துவேஷிப்பவர்களிடமிருந்தும், கொடுத்து வைத்ததை அபஹரிப்பவர்களிடமிருந்தும், ப்ரதிலோம ஜாதியிற் பிறந்தவர்களிடமிருத்தும், பொய்சொல்லிப் பிழைப்பவனிடமிருந்தும் எதையும் வாங்கக்கூடாது. மற்ற தே₃வதைகளிடம் ஈடுபட்டவனிடமிருந்து—தனது வயல், தோட்டம் முதலானவற்றிலிருந்து நல்ல வழியில் ஸம்பாதி₃க்கப்பட்ட பணத்தைக்கொண்டும், ப₄க₃வானிடம் ப₄க்தியினால் பரிஶுத்₃த₄ப்படுத்தப்பட்ட அந்தணர்களிடமிருந்து யாசித்துப் பெறப்பட்ட பணத்தைக்கொண்டுங்கூட, உயர்ந்த பொருளாயிருப்பதையும் வாங்கக்கூடாது.] என்று எவரிடமிருந்து பொருளைப் பெறக்கூடாது என்று காட்டப்பட்டது.

ப₄க₃வத்₃ப₄க்தியுக்தேப்₄யோ யத₂ாऽஸ்வஸ்தநிகோ ப₄வேத்।
உபாத₃ாய யத₂ாலாப₄ம் கர்மாரம்ப₄ம ப்ரயோஜயேத் ॥[3-42]

[ப₄க₃வானிடம் ப₄க்தியுடையவர்களிடமிருந்து அன்றன்றைக்கு வேண்டிய அளவுக்கு மாத்திரம் பெற்று, பெற்றதைக்கொண்டே மேல் கர்மத்தைத் தொடங்கவேண்டியது.] என்று பொருளை ஸம்பாதி₃க்கவேண்டிய முறையும் காட்டப்பட்டது.

http://acharya.org

அலாபே₄ ஸர்வபே₄ாக₃ாநாம் உத₃கேநாபி பூஜித: ।
ப்ரயச்ச₂த்யமலம லோகம் ப₄க்திபூதாக்தராத்மநாம் ॥
ஜாதயா ஶௌத்₃த₄வமஶே து பா₄ர்யயா ஸ்வாநுகூலயா ।
ஸத்₃ப₄க்திபூதயா நித்யம காரயேத் த்₃ரவ்யஸாத₄நம் ॥
ஶாகாமபு₃பி₄ாவா ந்யாயாப்தை: ப₄க்த்யா ஸம்பூஜயேத்
ஹரிம ॥ [3-52,...54]

[எம்பெருமானுக்கு எல்லா வித₄மான பே₄ாக்₃யவஸ்துக்களையும் பெற்று அளிக்கமுடியாவிடில், தீர்த்த₂த்தைக்கொண்டு ஆராதி₄க்கப் பட்டாலும், ப₄க்தியுடைய நெஞ்சினர்க்கு எம்பெருமான் அப்ராக்ருத லோகத்தை அளிக்கிருன். நல்ல குடிப்பிறப்பை உடையவளாய், தனக்கு அநுகூலையாயிருப்பவளாய், நல்லோர்களிடம் ப₄க்தியினுலே பரிஶுத்₃தி₄பெற்றிருப்பவளான மனைவியைக்கொண்டு எம்பெருமானுக் குரிய சமையல் முதலியவற்றைச் செய்யவேண்டும். நியாயமான வழியில் பெற்ற காய்கறிகள், தீர்த்த₂ம் ஆகியவற்றைக் கொண்டாவது ப₄க்தியோடு ஹரியை ஆராதி₄க்க வேண்டும்,] என்று—"பத்ரம் புஷ்பம்" என்று கீ₃தையில் கண்ணன்தானும் "பரிவதில்" திருவாய்மொழி யில் நம்மாழ்வாரும் அருளிய ரீதியில் எம்பெருமான் ஆராத₄னைக்கு எளியன், அன்புக்கே வசப்படுபவன் என்று காட்டப்பட்டது.

ஸதீநாம் யோஷிதாம தே₃ஹோ யதோ₂பகரணம் ப₄வேத் ।
ப₄ர்த்ரூணும், ப₄க₃வத்₃ப₄க்ததே₃ஹ: தத்₃வத் ஜக₃த்₃கு₂ரோ: ॥
[3-62]

[பதிவ்ரதையான மனைவியின் ஶரீரம் கணவனுக்கு எப்படி பே₄ாகோ₂ப கரணமாகிறதோ, அப்படியே, பா₄க₃வதர்களுடைய திருமேனியும் லோகநாத₂னுக்கு பே₄ாகோ₂பகரணமாகிறது.] என்று எம்பெருமா னுக்கும், பா₄க₃வதர்களுக்குமுள்ள ப₄ர்த்ருபா₄ர்யா ஸம்ப₃ந்த₄மும் காட்டப்பட்டது,

மார்த்த₃வம் ஹ்ரீ: த₃யா க்ஷாந்தி: அத்₃ரோஹ:
ஸர்வஜந்துஷு ।
ஏவமாதி₃கு₃ண: பும்ஸாம் யதா₃ ஸ்யு: ஸத்வஸம்ப₄வா: ॥
ஜாநீயாத் யோக₂யமாத்மாநம் ததா₂ ப₄ாக₃வதே விதௌ₄ ।
உத்ஸ்ருஜ்ய ப₄க₃வத்கர்ம பா₃ஹ்யகர்மபராயண: ॥
குடும்ப₂ஸகதோ மூட₄ாத்மா ராஜஸோ நேஹ ஸம்மத: ।
ரஜஸா தமஸா வாபி யோ யதா₂ கலுஷீக்ருத: ॥

http://acharya.org

அமேத்₄யத்₃ரவ்யவந்நார்ஹ: தத₃ா கர்மணி வைஷ்ணவே ||
ஏவம் ஸத்₃கு₃ணஸம்பந்நா மஹாபா₄கா₃வதப்ரியா: ।
குடும்பி₃நோபி கர்த்தவ்யம் கர்ம குர்யுரதந்த்₃ரிதா: ||
உ.த்தா₂ய பூர்வம் க்₃ருஹிணீ ஶௌஸ்நாதா யதமாநஸா: ।
ஸ்நுஷா து₃ஹித்ருபுதராத்₃யாந் யதா₂ர்ஹம
ஶுசிதாம் நயேத் ||
ஊர்த்₄வபுண்ட்₃ரத₄ரா: ஶுத்₃த₄ா: வஸ்த்ராப₄ரணபூ₄ஷிதா: ||
ஸ்வாசாந்தா: ப்ரயதா தே₃வமபி₄க₃ச்சே₂யுராத்₃ருதா: ।
த்ரிஸந்த்₄யம காரயேத் பா₃லாந் ப்ரணமம் தே₃வபாத₃யோ:||
புத்ர: ப்ரேஷ்ய: தத₂ா ஶிஷ்ய: இத்யேவம் ச நிவேத₃யேத ||
க்₃ருஹிணீப்ரமுகா₂ஸ்ஸர்வா: கா₂யந்த்ய: புருஷோத்தமம் ।
பா₃லக்ரீடா₂தி₃சரிதை: கர்ம குாயுர தந்த்₃ரிதா: ||
பஶுபுத்ராதி₃கம் ஸாவம் க்₃ருஹோபகரணநி ச ।
அங்கயேத் ஶங்க₂சக்ராப்₄யாம் நாம குர்யாச்ச வைஷ்ணவம்।
காரயித்வா ஸுவர்ணேந பஞ்சாயுத₄க₃ணம் ஹரே: ।
ப₃த்₄நீயாத் கண்ட₂தே₃ஶே து பா₃லாநாம் ஸூதிகாக்₃ருஹே ||
ந முத்₃ரயேத₃ாஸநாநி ஶயநாநி மஹீதலம் ।
ஸ்தா₂பயேத் க்ஷேத்ரமத்₄யே து ஶிலாம சக்ராதி₃
முத்₃ரிதாம ||
முக்தாமணி ஸுவர்ணத்₃யை: கருத்வா சக்ராதி₃ பூ₄ஷணம் ।
யதா₂ர்ஹம் பி₃ப்₄ருயுஸ்ஸாவே புமாமஸ: ஸ்த்ரீஜநோऽபி வா ||
வ்ருத்₃த₄பா₃லாதுராதீ₃நாம் பூர்வாஹ்ணே பே₄ாஜநம் ப₄வேத்।
யதா₂பா₃லம் ஸமப்₄யர்ச்ய ஸாக்₃நிம் தே₃வம ததோऽஶநம ||
[3-68...81]

[மென்மை, லஜ்ஜை, கருணை, பொறுமை, எந்தப் பிராணிக்கும் துரோகம் செய்யாமை முதலான ஸாத்விகமான நற்குணங்கள் தனக்கு உண்டாகும் பொழுதே பகவத₃ாராத₄னத்திற்குத் தன்னைத் தகுதிபெற்றவனாக அறியக்கடவன். ப₄க₃வானுக்குரிய காரியங்களை விட்டு வேறு காரியங்களில் ஈடுபட்டவனாய், குடும்ப₃த்திலேயே பற்றுடையவனான அறிவிலி ரஜோகு₃ணம் மிக்கவனாகையால் ப₄க₃வதா₃ராத₄னத்திற்குத் தகுதிபெற்றவனல்லன். ரஜோகு₃ணம் அல்லது தமோகு₃ணத்தால் கலங்கிநிற்கும்போது, அஶுத்₃த₄ த்₃ரவ்யம்போலே, அவன் ப₄க₃வதாராத₄னத்திற்குத் தகுதியற்றவன்

http://acharya.org

அவ்வண்ணமே நற்குணம் நிறைந்தவர்களாய், மஹாபு₄ரக₃வதர்களுக்கு இனியவர்களான குடும்பி₃களும் (நித்யம்) செய்யவேண்டிய பு₄க₃வதா₃ராத₄னத்தைச் சோம்பலில்லாமல் செய்யவேண்டும். குடும்பத்தலைவியானவள் (தலைவனுக்கு) முன்னதாகவே எழுந்திருந்து, நன்கு குளித்து, மனத்தை அடக்கியவளாய், மருமகள், பெண், பிள்ளை முதலானோரை அவரவர்க்குரிய முறையில் ஶுத்₃த₄ராகச் செய்யவேண்டும். அனைவரும் ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை த₄ரிப்பவர்களாய், ஶுத்₃த₄ராய், வஸ்திரம் ஆபு₄ரணம் முதலியவற்றால் அலங்கரிக்கப்பெற்றவர்களாய், நன்கு ஆசமனம் செய்தவர்களாய், புலனடக்கமுள்ளவர்களாய், ஆத₃ரவோடு எம்பெருமானை (திருவாராத₄னத்தின் பொருட்டு) அணுகவேண்டும். மூன்று அந்திப்போதுகளிலும் சிறுவர்களை எம்பெருமானுடைய திருவடிகளில் வணங்கச் செய்யவேண்டும். 'இவன் பிள்ளை' 'இவன் வேலைக்காரன்' 'இவன் ஶிஷ்யன்' என்று அவர்களை அறிமுகப்படுத்தி ஸமர்ப்பிக்கவேண்டும். குடும்பத்தலைவி முதலானோர் அனைவரும், (க்ருஷ்ண) பா₃லக்ரீடை₃ முதலான சரிதங்களைக் கூறிப் புருஷோத்தமனைப் பாடிக்கொண்டு, சோம்பலில்லாமல் தத்தம் காரியங்களைச் செய்யவேண்டும். பஶு, புத்ரன் முதலான அனைவரையும், வீட்டிலுள்ள உபகரணங்களையும் ஶங்க₂ சக்ரங்களால் அடையாளம் செய்து, வைஷ்ணவமான திருநாமத்தையும் வைக்கவேண்டும். ஹரியின் பஞ்சாயுத₄ங்களைப் பொன்னால் செய்வித்து, ப்ரஸவ அறையிலேயே குழந்தைகளுக்கு அவற்றைக் கட்டவேண்டும். (கால்படுமாகையால்) ஆஸநங்கள், படுக்கைகள், தரை முதலானவற்றை (ஶங்க₂சக்ரங்களால்) அடையாளம் செய்யக் கூடாது. வயலின் நடுவில் சக்ரம் முதலானவற்றால் அடையாளமிடப் பெற்ற திருவாழிக்கல்லை நடவேண்டும். முத்தாலேயோ, பொன் முதலானவற்றாலேயோ சக்ரம் முதலானவற்றை ஆபு₄ரணங்களாகச் செய்து ஆண்களும், பெண்களுமாகிய அனைவரும் தக்கபடி த₄ரிக்க வேண்டும். கிழவர்கள், சிறுவர்கள், நோயாளிகள் முதலானோர்க்கு முற்பகலில் உணவளிக்கவேண்டும். அக்₃னியையும், எம்பெருமானையும் ஶக்திக்கு அனுகு₃ணமாக ஆராதி₄த்து, அதற்குப் பிறகு உண்ணவேண்டும்.] என்று திருவாராத₄னம் செய்யவேண்டிய அதி₄காரிகள் யாரென்றும், அவர்கள் நடக்கவேண்டிய முறைகளும் காட்டப்பட்டது,

கௌ₃ருஹோபகரணம ஸர்வம் முஸலோலூக₂லாதி₃கம் ।
ப்ரக்ஷாலயேத் ஜக₃ந்நாத₂யாகோ₃பகரணானி ச ॥

http://acharya.org

யாகு₃ரர்த்த₂ம் தே₃வதே₃வஸ்ய பாகார்த்த₂ம் சாம்பு₃ பாவநம்।
ஸ்த₂ாபயேத பாத₃ஹஸ்தாதி₃ஶௌத்₃த்₄யர்த்த₂ம் ச
ப்ருத₂க் ப்ருத₂க்॥ [3-83, 84]

[நல்ல விஷயங்களிலேயே நன்கு நியமிக்கப்பட்டு நிலைநிற்கும் இந்த்3ரியங்களாலே, காலக்ரமத்தில் ப்3ரஹ்மத்திடம் மனம் ஈடுபட்டதாகிறது. எம்பெருமானுடைய திருவடித் தாமரையிணையில் மனமானது அசையாததாய் எப்போது உறுதிபெற்று ஈடுபடுகிறதோ, அப்போதே மனிதன் செய்யவேண்டியதைச்செய்த அறிவாளியாகிறான். இந்திரியங்களை வெல்லாதவனாய், ஸித்3தி4யடையாதவனான ஒருவன் ப4க3வத்3யோக3த்தில் உள்ளவனாயினும் ப4க3வத் கர்மத்தை விட்டானால், ப்4ரஷ்டனாய் ரௌரவநரகத்தை அடைகிறான். முன் சொல்லப்பட்டதே யோக3மாகும். இந்த யோக3ம் தவிர்ந்த மற்றவற்றால் மநோவ்யாதி4யே உண்டாகும். கிருஷ்ணனை நினையாமல் செய்யும் யோக3ங்களுக்கு ஶரீரக்லேஶமொன்றே பலனாகிறது. ப4க3வதா3ராத4னமான கர்மங்களை விட்டு, அப்படிக் கர்மங்களை விட்டதில் (இது தவறோ என்னும்) ஐயமும் அற்றவர்களாய்,

* இந்த ஶ்லோகம் கீ3தை (7-23) தாத்பர்ய சந்த்3ரிகையில் எடுக்கப்பட்டுள்ளது.

http://acharya.org

பயனற்ற பிறவியெடுத்தவர்களுக்கு எம்பெருமான் ஸுலபனாகமாட்டான். கர்மங்களில் எவனுடைய இந்திரியங்கள் ஈடுபடுகின்றனவோ அவனுக்குக் குறையில்லை. நிஷித்₃த₄ங்களில் ஈடுபட்டவன் ஞானியாயினும், பொய்யனைப்போலே குறைவுபடுவான். காம்யகர்மங்களில் ஈடுபடுகிறவர்களாயினும், ப₄க₃வானைக் குறித்து அவனையே அக்காம்யங்களுக்கு உபாயமாகக் கொண்டவர்களாய் அவற்றைச் செய்பவர்கள் ஒருபோதும் குறைவுபடமாட்டார்கள்.] என்று ப₄க₃வத் கர்மத்தில் ஈடுபட்டவர்களுடைய சிறப்பும், மற்றவர்களுடைய தாழ்வும் பேசப்பட்டது.

நித₃ராந்தரே ப்ரபு₃த்₃த₄ஸ்ஸங் கீர்த்தயேத்
ப₄க₃வத்₃கு₃ணாந் ||...
கா₃யதாம் ப₄க₃வத்₃கா₃தா₂ம் குர்வதாம் ஸ்தோத்ரமுச்சகை: |
ஶ்ருண்வந் ஶ்ரோத்ரஸுக₂ம் நாத₃ம் நித்₃ராமநுப₄வேத் பு₃த₄: ||
[5-54...57]

[தூக்கத்தின் நடுவில் எழுந்திருந்தால் ப₄க₃வத்₃கு₃ணங்களை ஸங்கீர்த்தனம் செய்யவேண்டும் ...... ப₄க₃வானைப் பற்றிய பாடல்களைப் பாடுகின்றவர்களும், அவனைப்பற்றிய துதிகளை உரக்க முழங்குகின்றவர்களுமான பா₄க₃வதர்களின் செவிக்கினிய செஞ்சொல்லைக் கேட்டுக் கொண்டே அறிவாளியாயிருப்பவன் துயிலக்கடவன்.] என்று தூக்கத்தின் நடுவில் எழுந்தால், ப₄க₃வந்நாம ஶ்ரவணம், கீர்த்தனம், அனுஸந்தா₄னம் ஆகியவற்றையே செய்யவேண்டும் எனக் கூறப்பட்டது.

சதுர்த்த₂யாம உத்தா₂ய யோகீ₃ யோக₃ம் ஸமாசரேத் |
ஸாக்ஷாத் பரமயோக₃ஸ்து த்₃வாத₃ஶாக்ஷரவித்₃யயா ||
ப₄க₃வத்₃வாஸுதே₃வஸ்ய பாத₃ாம்பு₃ருஹசிந்தநம் |
ஓமித்யேகாக்ஷரம் ஸாக்ஷாத்₃வாஸுதே₃வஸ்ய வாசகம் ||
ஓமித்யுச்சாரணேநைவ வாச்யமாநீயதே பரம் |
ஓமித்யாநீய தத்₃ப்₃ரஹ்ம நமஸ்காரபதே₃ந து ||
மதீ₃யம மத்கமங்க₃ம் ச தவைவேதி நிவேத்₃ய ச |
அவ்யக்தார்த்த₂தயா தஸ்ய ப்ரணவஸ்ய விஶேஷத: ||
தத₃ர்த்த₂த்₃யோதநாயேத₃ம் ப₄க₃வத்பத₃மீரிதம் |
அந்யத்ராபி ச தத்₃த்₃ருஷ்டமித்யநந்யபரம வச: ||
வாஸுதே₃வேதி யதி₃த₃முதி₃தம் தஸ்ய சோபரி |
நம:பதா₃த் பரம் யத் ஸ்யாத் உபரிஸ்த₂ம் பத₃த்₃வயம் ||

http://acharya.org

சதுர்த்₂யந்தமபூ₄ந்நித்யம் யோகி₃நாம் யோக₃ஸித்₃த₄யே।
ஓங்காரபத₃மப்யேகம் யோகி₃நாம் யோக₃ஸித்₃த₄யே ॥
த்₃வாத₃ஶாக்ஷரரூபேண பரிணமமுபாக₃தம் ।
மந்த்ராந்தரேஷ்வபி பூ₃த₄ா: தே₃வதாந்தரப₄ாவிஷு ॥
ப்ரயுஞ்ஜதே தமோங்காரம மந்தராணும் ப்ராணஸித்₃த₄யே।
மந்த்ராந்தரே ப்ரயுக்தத்வாத் தே₃வதாந்தரகோ₃சரே ॥
அவயக்தார்த்த₂தயோங்கார: கேவலேனைவ ஸாத₄க: ।
பகவயோக₃ஶரீராணம ஏவம ஜஞாநவதாமபி ॥
ஸமாபந்நேபி தஜ்ஜஞாநே தந்மாத்ரம னைவ ஸாத₄நம் ।
அபக்வயோக₃ஜ்ஞாநாநாமபி வேத₃வித₃ாம் ந்ருணம ॥
த்₃வாத₃ஶாக்ஷரயோகே₃ந தூ₃ரஸத₂ம் ததி₃ஹாந்திகே।
ஸமருதமாத்ரே மஹாமந்த்ரே ஸூஸூக்ஷ்மே

த்₃வாதஶாக்ஷரே ॥

சித்ததர்₂ப்பணஸங்கராந்த: ஸூஸூக₂ம் லக்ஷ்யதே ஹரி: ॥
அதஶ்ச த்₃வாத₃ஶார்ணேந ஸ்வாத்₄யாயேந ஜநார்த₃ந:।
ஆஸந்நதாம ப்ரயாத்யாஶு ப₃ரஹ்மண்யர்ப்பிதசேதஸாம் ॥
* ஸ்வாத்₄யாயாத் யோக₃மாஸீத யோக₃ாத் ஸ்வாத்₄யாயமா

மநேத் ।

ஸ்வாத்₄யாயயோக₃ஸம்பத்த்யா பரமாத்மா ப்ரகாஶதே ॥

[5-62...76]

[(இரவில்) நான்காவது யாமத்தில் எழுந்திருந்து யோகி₃யானவன் யோக₃த்தை (த்₄யானத்தைச்) செய்யவேண்டும். த்₃வாத₃ஶாக்ஷர மந்திரத்தினலே, ப₄க₃வானுன வாஸுதே₃வனுடைய திருவடித் தாமரையைச் சிந்திப்பதே நேரே மேலான யோக₃மாகும். (இனி த்₃வாத₃ஶாக்ஷர மந்த்ரார்த்த₂ம் விவரிக்கப்படுகிறது:—) 'ஓம்' என்னும் ஓர் எழுத்து நேரே வாஸுதே₃வனைச் சொல்லுவது. 'ஓம்' என்று சொல்லுவதாலேயே வாச்யனுன எம்பெருமான் அழைத்து வரப்படுகிருன். 'ஓம்' என்று ப்₃ரஹ்மமாகிற அவனை அழைத்து, 'நம:' என்னும் பத₃த்தாலே "என்னுடைமைகளும் எனது அங்க₃ங் களும் உன்னுடையவையே" என்று ஸமர்ப்பித்து, ப்ரணவமான ஓங்காரமானது பொருளைத் தெளிவாக விளக்காமையால் சிறப்பாக அதன் பொருளை விளக்குவதற்காக ப₄க₃வத்பத₃ம் உச்சரிக்கப்படுகிறது.

* இந்த ஶ்லோகம் விஷ்ணுபுராணத்திலும் (6-6-2) உள்ளது.

http://acharya.org

ற்ற பல ப₄க₃வந்மந்த்ரங்களிலும் இந்த ப₄க₃வத்பத₃மிருப்பதால் இது வாஸுதே₃வனையே குறிப்பதென்று தெளிவாகிறது. இந்த ப₄க₃வத்பத₃த்திற்கு மேல் 'வாஸுதே₃வ' என்னும் பத₃ம் சொல்லப்பட்டிருக்கிறது. நம:பத₃த்திற்கு மேல் உள்ள ப₄க₃வத்பத₃மும் வாஸுதே₃வபத₃மும் எப்போதும் நான்காவது வேற்றுமையுருபுடனேயே இருக்கவேண்டும். அப்போதுதான் யோகி₃களுக்கு யோக₃ம் ஸித்₃தி₄க்கும். யோகி₃களின் யோக₃ம் ஸித்₃தி₄ப்பதற்காக ஓங்காரமாகிற ஒரே பத₃ம் த்₃வாத₃ஶாக்ஷரமந்திரமாகப் பரிணமித்துள்ளது. அறிவாளிகளே! தே₃வதாந்தர விஷயமான மந்திரங்களில் ஓங்காரமில்லாவிடினும், மந்திரங்களுக்கு உயிர் ஏற்படுவதற்காக ஓங்காரத்தை சேர்த்தே அந்தந்த மந்திரத்தைப் பிரயோகி₃க்கிறார்கள். சிவபஞ்சாக்ஷரம் முதலானவற்றில் இது ப்ரஸித்₃த₄ம்.] தே₃வதாந்தர விஷயமான மற்ற மந்திரங்களில் பிரயோகி₃க்கப்படும்போது பொருள் தெளிவுபடாமலிருக்கையால், ஓங்காரஶப்₃த₃மாத்ரமே அவர்களுக்குப் ப₂லனளிக்கிறது. ஓங்காரத்தின் பொருளையறிந்தவர்களாய், அதனாலேயே யோக₃ம் நிறைவுபெற்றவர்களுக்கு, நிறைவு பெற்ற அந்தப் பரமாத்மஜ்ஞாநவிஷயத்தில், ஓங்காரஶப்₃த₃மாத்ரம் ஸாத₄னமாகாது; (அர்த்த₂த்தோடு கூடிய ஓங்காரமே ஸாத₄னமாகும்) வேத₃மறிந்து நிறைவுபெறாத யோக₃ஜ்ஞாநமுடையவர்களுக்கும் எட்டாத அந்த ஜ்ஞாநம் த்₃வாத₃ஶாக்ஷரச்சேர்த்தியாலே எட்டிவிடும். மிக நுண்ணிய பொருளையுடைய த்₃வாத₃ஶாக்ஷரமஹாமந்திரம் நினைக்கப்பட்ட மாத்திரத்தில் மனமாகிற கண்ணாடியில் பிரதிப₂லிப்பவனாய், ஹரியானவன் எளிதில் காணப்படுகிறான். ஆகையால், ப்₃ரஹ்மத்திடம் நெஞ்சு செலுத்தியவர்களுக்கு, ஸ்வாத்₄யாயமாகிற (பரமாத்மாவைத் தெரிவிக்கும் வேத₃மந்திரமாகிற) த்₃வாத₃ஶாக்ஷரமந்திரத்தாலே ஜநார்த்த₃னன் விரைவில் கிட்டிவிடுகிறான். ஸ்வாத்₄யாயம் எனப்படும் த்₃வாத₃ஶாக்ஷரம் முதலானவற்றைச் சிந்தித்த பிறகு, பரமாத்மத்₄யானமாகிற யோக₃த்தைச் செய்ய வேண்டும். த்₄யானம் செய்த பின்பு, ஸ்வாத்₄யாயமான அவற்றைச் சிந்திக்கவேண்டும். இப்படி ஸ்வாத்₄யாயம் யோக₃ம் ஆகிய இரண்டும் நிறைவடைவதால் பரமாத்மா ப்ரகாஶிக்கிறான்.] என்று த்₃வாத₃ஶாக்ஷரமந்திரத்தின் ஶப்₃தா₃ர்த்த₂ப் பெருமைகளும், பஞ்சகாலபராயணர்க்குரிய ஐவகையான ஆராத₄னங்களில் கடைசி இரண்டான ஸ்வாத்₄யாய யோக₃ங்களின் சிறப்பும் பேசப்பட்டது.

தே₃வாநாமபி ஸர்வேஷாம யதா₂ நாதோ₂ ஜநார்த₃ந:।
த்₃வாத₃ஶாக்ஷரமந்த்ரோऽயம மந்த்ராணாம் நாத₂ உச்யதே॥

http://acharya.org

யதௌஷதீ₄நாமம்ருதம் மணீநாம் கௌஸ்துபோ₄ யதா₂ ।
ஸர்வேஷாமபி த₄ர்மாணம ஶ்ரேஷ்டோ₂ ப₄ாக₃வதோ விதி₄:॥
ஸர்வத₄ர்மாங் ஸமுத்ஸ்ருஜய பாஞ்சகால்யமநுவ்ரதா: ।
வ்யாமிஶ்ரயாக₃நிர்முகதா: க₃ச்ச₂ந்தி புருஷோத்தமம் ॥
வ்யாமிஶ்ரயாஜிநாம ப்₃ரஹ்மபாத₃ார்ப்பிதஸுவ்ருத்திநாம் ।
யததாமபி வா நித்யம பத₃மேஷாம பரம ஸ்தி₂தம் ॥.........
இதி ஸங்க்ஷேபத: ப்ரோகத: ஸதா₃சாரோ யதா₂க₃மம் ।
ததா₂ ஶாஸ்தரஸய மாஹாத்ம்யம
விஶேஷஶ்சைகயாஜிநாம் ॥
இத₃ம் ஶாஸ்த்ரமதீ₄யாநோ ப்₃ராஹ்மணோ ப₄க₃வத்பர: ।
ஶ்ரியம் யஶஶ்ச விபுலம பரமாயுரவாப்நுயாத் ॥
[5-78...81, 85, 86]

॥ ஶாண்டி₃ல்ய விஶிஷ்டபரம த₄ர்மஶாஸ்த்ரம் ஸமபூர்ணம் ॥

[எல்லா தே₃வர்களுக்கும் ஜநார்த்த₃னன் எப்படித் தலைவனுயிருக்கி ருனே, அப்படியே, இந்த த்₃வாத₃ஶாக்ஷரமந்த்ரமும் மந்திரங்களுள் தலைமைபெற்றிருக்கிறது. ஓஷதி₄களுக்குள் அம்ருதம் சிறந்ததா யிருப்பதுபோலவும், மணிகளுக்குள் ஸ்ரீகௌஸ்துப₄ரத்னம் சிறந்ததா யிருப்பதுபோலவும், எல்லா த₄ர்மங்களுக்குள்ளும் ப₄ாக₃வதத₄ர்மம் மிகச்சிறந்ததாகும். மற்ற எல்லா த₄ர்மங்களையும் அடியோடுவிட்டு, பஞ்சகாலநிஷ்டை₂யாகிற த₄ர்மத்தைப் பின்பற்றியிருப்பவர்கள், முக்குணமயமானவர்களுக்குரிய தே₃வதாந்தர யாக₃ங்களினின்றும் நீங்கியவர்களாய், புருஷோத்தமனை அடைகிருர்கள். அந்த தே₃வ தாந்த்ரங்களைக் குறித்த யாக₃ங்களையே, ப்₃ரஹ்மத்தின் திருவடி களிலே ஸமர்ப்பணம் செய்து எப்போதும் நன்கு அநுஷ்டி₂ப்பவர் களுக்குப் பரமபத₃ம் உரியதாகிறது...இவ்வண்ணமாக, வேத₃ங்களை யொட்டி, நல்லவர்களுக்குரிய ஆசாரமும், ஶாஸ்த்ரங்களின் பெருமை யும், பரமபுருஷனையே ஆராதி₄ப்பவர்களுடைய பெருமையும் சுருக்க மாகச் சொல்லப்பட்டது. இந்த ஶாஸ்த்ரத்தைக் கற்கும் ப₄க₃வத்₃ ப₄க்தனுன அந்தணன், மிக்க செல்வம், பெருங்கீர்த்தி, நீண்ட ஆயுள் ஆகியவற்றை அடைவான்.] என்பது இந்த த₄ர்மஶாஸ்த்ரத் தின் முடிவுரை.

ஶாண்டி₃ல்ய விஶிஷ்ட பரம த₄ர்மஶாஸ்த்ரம் முற்றிற்று.

ஆக,: இதுவரையில் பஞ்சகாலபராயணர்களுக்குரிய த₄ர்மங்களை விதி₄க்கும் ஶாண்டி₃ல்ய விஶிஷ்டபரமத₄ர்ம ஶாஸ்த்ரத்தில் ப₄க₃வா னுடைய பரத்வத்தைக் காட்டும் முக்கியமான பகுதிகள் காட்டப்

http://acharya.org

பட்டன. இனி, இவற்றைச் சுருக்கமாகக் காண்போம்:—(1) செவிக்கும் கண்ணுக்கும் லக்ஷணம்—மற்ற விஷயங்களைவிட்டு ப₄க₃வத்₃ ப₄ாக₃வதர்களை விஷயமாகக் கொள்வதே (477). (2) ப₄ாக₃வதர்கள் செய்யவேண்டிய கைங்கர்யங்கள் (478). (3) கால்களைக்கொண்டு ப₄க₃வத்₃ப₄ாக₃வதவிஷயத்தில் செய்யவேண்டியவையும், செய்யக்கூடாதவையும் (479). (4) ப₄க₃வத்பரத்வம்; அவனைப்பற்றிய ஜ்ஞாநம், கர்மம், அடியார்கள், ஶாஸ்த்ரம் முதலானவற்றின் சிறப்பு (480). (5) நல்ல நெஞ்சின் லக்ஷணம் ப₄க₃வத்₃ப₄ாக₃வதர்களிடம் ஈடுபடுவதே (481). (6) ஸாத்விகனுயிருப்பவன் ராஜஸதாமஸப்பொருள்களை உபயோக₃ப்படுத்தக் கூடாது; ராஜஸதாமஸாஹாரங்களைப் புசிக்கவே கூடாது (482). (7) ப₄க₃வத்₃ப₄ாக₃வத கைங்கர்யங்களின் பெருமையும், ஆசார்யலக்ஷணமும் (484). (8) ஶிஷ்யலக்ஷணம். ஶிஷ்யனை ஆசார்யன் கைக்கொள்ளவேண்டியமுறை. சிஷ்யன் இருக்கவேண்டிய முறை, ஸஹவாஸயோக்₃யரான பெரியோர்களின் லக்ஷணம் (485). (9) 1. அபி₄க₃மநாராத₄னம். காலையில் எழுந்தவுடன் ப₄க₃வந்நாம ஸங்கீர்த்தனம் செய்யவேண்டும் (486). (10) தே₃வதாந்தர ஸம்ப₃ந்த₄மற்ற தீர்த்த₂ங்களில் குளிக்கவேண்டும் (487). (11) பரமாத்ம த்₄யானத்துடன் ஸ்நாநம் செய்யவேண்டும் (487). (12) ம்ருத்திகா ஸ்நாநம் செய்யும் முறை (488). (13) ப₄க₃வத்கர்மங்களைச் செய்வதற்கும், பூ₄தப்ரேதபிஶாசங்களுக்குரிய கர்மங்களைச் செய்வதற்கும் நெடுவாசியுண்டு (489). (14) விஷ்ணு ஸம்ப₃ந்த₄முள்ளவைகளைக் கொள்ளவேண்டும்; விஷ்ணு ஸம்ப₃ந்த₄மற்றவைகளை விலக்கவேண்டும் (489). (15) அபி₄க₃மநாராத₄னத்தின் பொருட்டுப் பரமபுருஷனை அணுகவேண்டியமுறை (489). (16) ப₄க₃வத்ஸந்நிதி₄யில் செய்யவேண்டிய ப்ரத₃க்ஷிணம், நமஸ்காரம், ஜபம் முதலானவற்றின் முறைகளும், விலக்கவேண்டிய கார்யங்களும், அபி₄க₃மநாராத₄ந ப₂லஶ்ருதியும் (492). (17) 2. உபாத₃ாநவிதி₄. அவரவர் ஶக்திக்குத்தக்கபடி கோயில், நந்த₃வனம் முதலானவற்றை அமைத்து அவற்றைப் பரிபாலிக்கவேண்டும் (494). (18) ப₄க₃வத்₃ப₄ாக₃வதத்₃வேஷிகள், தே₃வதாந்தரபரர்கள் ஆகியவர்களுடைய பொருளைப் பெறலாகாது; ப₄க₃வத்₃ப₄க்தியுள்ளவர்களிடமிருந்து பெற்ற பொருளே ப₄க₃வத₃ாராத₄னத்திற்கு உரியது (494). (19) எம்பெருமான் ஆராத₄னைக்கு எளியவன், அன்புக்கே வசப்படுபவன்; எம்பெருமானுக்கும் ப₄க்தர்களுக்குமுள்ள ப₄ர்த்ருப₄ார்யா ஸம்ப₃ந்த₄ம் (495). (20) திருவாராத்₄னம் செய்ய அதி₄காரி எவர்கள்? அவர்கள் நடக்கவேண்டியமுறைகள் (497). (21) உபகரண ஶுத்₃தி₄; தே₃வதாந்தரஸம்ப₃ந்த₄முள்ள பசுக்களிடமிருந்து கறந்த பால்

http://acharya.org

ஆராத₄னத்துக்கு உதவாது. விஶேஷ திருவாராத₄னகாலம் (498). (22) குடும்பத்தலைவி திருவாராத₄னத்தின்பொருட்டுச் செய்யவேண்டியவை. குடும்பத்தலைவனின் கடமை (499). (23) 3. இஜ்யாவிதி₄. உபாஸகர்களுக்குத் திருவாராத₄னத்தில் அதி₄காரமில்லை (500). (24) ஸாக்ஷாத₃வதாரங்களே ஆராதி₄க்கத்தக்கவை. ஆராதி₄ப்பவனின் மனநிலை (502). (25) ப₄க₃வத்₃ப₄ாக₃வதாராத₄ந மஹிமை, ஆராத₄னமில்லாமையால் ஏற்படும் அநர்த்த₂ம் (502 – 512). (26) அவைஷ்ணவர்களின் தாழ்வும், உண்ணும் விஷயத்தில் நிஷித்₃த₄ங்களும் (512). (27) எம்பெருமானுக்கு அமுதுசெய்ததையே உண்ணவேண்டும் உண்ணும்முறை (514). (28) ப₄க்தலக்ஷணம். 4. ஸ்வாத்₄யாயம். ஸ்வாத்₄யாய காலத்திலேயே வெளியில் செல்லவேண்டும் (514 – 519). (29) யாத்திரையில் பு₃த்₃த₄ர், உருத்திரன் முதலானோரின் ஆலயங்களை அணுகலாகாது. யாத்திரையில் விலக்கவேண்டியவையும், செய்யவேண்டியவையும் (520). (30) மறந்தும் புறந்தொழாத பஞ்சகாலபராயணர்களுடைய பெருமை (520). (31) கர்ம ஜ்ஞாநப₄க்திகள் வைஷ்ணவர்கள் அனைவர்க்குமே இருக்கவேண்டியவை (521) (32) ஶாஸ்த்ர விஶ்வாஸத்தின் பெருமையும், அது உள்ளவன் இருக்கும் நிலையும் (522). (33) 5. யோகலக்ஷணம். யோகி₃யின் பெருமை, த்₃வாத₃ஶாக்ஷரப் பெருமை, ஏகாத₃ஶீவ்ரத மஹிமை (523-525). (34) யோக₃காலம். ப₄க₃வத்கர்மத்தில் ஈடுபட்டவர்களுடைய சிறப்பும், மற்றவர்களுடைய தாழ்வும் (526, 527). (35) தூக்கத்தின் நடுவில் எழுந்தால், ப₄க₃வந்நாமஶ்ரவணம், கீர்த்தனம், அநுஸந்த₄ானம் ஆகியவற்றையே செய்யவேண்டும். (527). (36) த்₃வாத₃ஶாக்ஷர ஶப்₃தா₃ர்த்த₂வைப₄வம்; ஸ்வாத்₄யாய யோக₃ங்களின் பெருமை, பஞ்சகால பராயணர்களின் பெருமை (527-530).

ஆக, இவ்வண்ணம் விளக்கப்பட்ட (1) அபி₄க₃மனம் (2) உபாதா₃நம் (3) இஜ்யை (4) ஸ்வாத்₄யாயம் (5) யோக₃ம் என்னும் ஐந்து காலங்களில் செய்யப்படும் ப₄க₃வதா₃ராத₄னத்தை ஸ்ரீவைஷ்ணவனாகப் பிறந்த ஒவ்வொருவனும் இயன்ற வரையில் செய்யவேண்டும்; இந்த நிஷ்டை₂யுடைய ஓர் ப₄ாக₃வதோத்தமனுடைய அபி₄மானத்திலாவது ஒதுங்கி வாழவேண்டும் என்பது இந்த த₄ர்ம ஶாஸ்த்ரத்திலிருந்து நாம் அறியும் ஸாரமாகும்.

இனி, ப₄க₃வத்பரத்வத்தையும், ப₄ாக₃வதர்களுக்குரிய விஶிஷ்ட த₄ர்மங்களையும் காட்டும் பராஶரவிஶிஷ்ட பரம த₄ர்மஶாஸ்த்ரத்தைக் காண்போம்.

http://acharya.org

பராசரவிசிஷ்ட பரமதர்ம சாஸ்த்ரம்

முன்னுரை

"ஸ ஹோவாச வ்யாஸ: பாராஶர்ய:" [தைத்திரீய ஆரண்யகம ப்ரஶ்நம்-1, அனுவாகம்-9] [பராஶரரின் புதத்திரரான அப்படிப்பட்ட வியாஸரன்ரே சொன்னர்.] என்று வேதம வேதவ்யாஸரைப் புகழும்போது அவரைப் பராஶரரின் புதத்திரர் என்று புகழ்ந்தது. இவர் செய்தருளியவையாகப் பிரஸித்திபெற்றவை வேதபூர்வபாகவிவரணமான பராஶர ஸ்மருதியும், வேதத்தின் உத்தரபாக விவரணமான ஸ்ரீ விஷ்ணுபுராணமும ஆகும். அத்தகைய ஸ்ரீ விஷ்ணுபுராணத்தின முதல் அம்ஶம் முதல் அத்தியாயத்தில்,

"புராணஸம்ஹிதாகர்த்தா பவாந் வத்ஸ பவிஷ்யதி।
தேவதாபாரமார்த்யம் ச யதாவத்வேத்ஸ்யதே பவாந் ॥"
[1-1-26]

[குழந்தாய்! நீ புராண ஸம்ஹிதையைச செய்பவனாகக கடவாய். தேவதைகளில் எது பரம்பொருள் என்னும் உண்மையையும் நீ உள்ளபடி உணர்வாய்.] என்று புலஸ்த்யராலும, பாட்டனரான வஸிஷ்டராலும் வரமளிக்கபபட்ட பெருமையை உடையவராக இம்மஹர்ஷி காட்டப்படுகிருர். இங்கு 'புராண ஸமஹிதா' என்னும் பதத்தைக் கர்மதாரயஸமாஸமாகக கொளளாமல், த்வந் த்வமாகக்கொண்டால் புராணம், ஸம்ஹிதை எனும் இரண்டுக்கும இவர் ஆசிரியராகக் கூறப்படுகிருர் என விளங்கும. பராஶரஸ்ம்ருதி என்றும், பராஶரஸம்ஹிதை என்றும வழங்கும் ஸ்ம்ருதியே இங்கு ஸம்ஹிதா ஶப்தத்தால் சொலலப்படுவதாகக் கொள்வதில் குறையிலலை. "**மந்வத்ரி விஷ்ணு**" [1-4] என்று யாஜ்ஞவல்கயரால் எடுக்கப்படும் ஸ்ம்ருதிகளில் பராஶர ஸ்ம்ருதியும காணப்

வி—68

http://acharya.org

படுகிறது; பாத்₃மபுராண உத்தரக₂ண்டம் 263ம் அத்தியாயத்தில எடுக்கப்பட்ட **"வாஸிஷ்ட₂ஞ் சைவ ஹாரீதம் வ்யாஸம் பாராஶரம் தத₂ா! ப₄ாரத்₃வாஜம் காஶ்யபம் ச ஸாத்விகா முக்திதா₃: ஶுப₄ா: ||"** என்னும் வசனத்தில பராஶரஸ்ம்ருதியும் ஸாத்விகஸ்ம்ருதிகளில் ஒன்ருக எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் பராஶர ஸம்ருதியின் கல்கத்தா, பமபாய், பூனு பதிப்புகளில பரம்பொருளைபபற்றிய குறிப்புகள இல்லாவிடினும், இபபராஶர ஸ்மருதியின் உத்தரப₄ாக₃மாக எண்ணப்படும் பராஶரவிஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸத்ரத்தில் ஸ்ரீ விஷ்ணுபுராணததிற்போலே பரதே₃வதாநிஷ்கர்ஷமும், விஷ்ணு ப₄கதர்கள கைககொள்ளவேணடிய பஞ்சஸம ஸ்காரம் முதலான விஶிஷ்டமான சிறநத த₄ர்மங்களும், ப₄க₃வதா₃ராத₄ன ப்ரகாரங்களும், உதஸவபரகாரங்களும விரிவாக வர்ணிக்கப்படுவதைக காண்கிருேம. பூர்வாசார்யர்கள் பலரால இதில் உள்ள ஶ்லோகங்கள் ப்ரமாணமாக எடுக்கப்பட்டிருபபதையும காணகிருேம். துருஷ்கர்களின் படையெடுப்பால் விஶிஷ்டத₄ர்மங்களை அநுஷ்டி₂பபாரில்லாமற்போனபடியால வடநாட்டில மற்ற பரமத₄ாம ஶாஸ்த்ரங்களுககுப்போலே இந்தப பரமத₄ர்ம ஶாஸ்த்ரத்திற்கும விஶேஷ ப்ரசாரமில்லாமற்போய்விட்டது என்று கருத இடமுள்ளது. தென்னுட்டில இந்த விஶிஷ்ட பரமத₄ர்மஶாஸ்த்ரத்திற்சொன்ன பஞ்சஸமஸ்காரம் முதலானவற்றை ஸ்ரீ வைஷ்ணவர்கள ஆயிரக்கணககான வருஷங்களாகக் கடைப்பிடித்து வருவதைக காணகிருேம். ஆகையால், இந்த ஶாஸ்த்ரத்தின் ப்ராமாண்யத்தில் ஐயமுற இடமில்லை. இந்த த₄ர்மஶாஸ்த்ரத்தை க₃ரந்த₂முத்₃ராபக ஸபை₄யார் கி. பி. 1901-ம் ஸு தமிழில் அர்த்த₂த்துடன் வெளியிட்டிருக்கிருர்கள்.

இதன் கர்த்தாவான பராஶருககு அப்பெயர் வந்ததின் காரணத்தை — **"பராந் - ப₂ாஹ்யகுத்₃ருஷ்டீந் ஸம்யக் ப்ரமாண தர்க்கை: ஆஶ்ருணுதி இதி பராஶர:"** [வேத₂த்துக்

http://acharya.org

குப் புறமபான பா₂ஹ்யர்களும, வேத₃த்திற்கு அபார்த்த₂ம் சொலலும் குத்₃ருஷ்டிகளுமாகிற **பரர்களை** ப்ரமாண தர்க்கஙகளாலே **நன்கு ஹிம்ஸிக்கிருராகையாலே** (**ஶ்ரு-ஹிம்ஸா** யாம் என்று த₄ாது) **பராஶரராகிருர்.**] என்னும் வ்யுத்பத்தியின்மூலம ஸ்ரீ விஷ்ணுபுராண வ்யாக்₂யாதாவான ஸ்ரீ விஷ்ணுசிததர் எனும எஙகளாழ்வானும, " (**பராஶரம்**) வைதி₃க பக்ஷததுக்கு *ஶ*த்ருக்களான பா₂ஹ்யகுத்₃ருஷ்டிகளை ப்ரமாண தாககங்களாகிற *ஶ*ரங்களாலே ஹிமஸியானினறுன என்றுகவுமாம; அத₂வா; ஆந்தர*ஶ*த்ருக்களான ராக₃த₃வேஷாதி₃களை *ஶ*மத₂மாதி₂களாலே ஹிம்ஸியானினறுன் என்றுகவுமாம" என்று பா₄ரதாதி₃ தனி*ஶ்*லோகத்தில் பெரியவாச்சான்பிள்ளையும் காட்டினுர்கள்.

இப்படிப் புராண ஸமஹிதைகளைச் செய்து வைதி₃க த₃ர்*ஶ*னத்துக்குப் பரமோபகாரம் செயததாலேயே **"தஸ்மை நமோ முநிவராய பராஶராய"** என்று ஆளவந்தாரால் இவர் மிக மதிக்கப்பட்டார். அவர் திருவுள்ளமறிந்த எம்பெருமானுரது நியமனத்தாலே, கூரத்தாழ்வான் திருக்குமாரருககுப *பராஶரப₄ட்டர்* என்று இப்பரா*ஶ*ரரின் திருநாமம வைக்கப்பட்டது. இத்தகைய *பராஶர* மஹர்ஷி அருளிய பரமத₄ாம *ஶா*ஸ்த்ரத்தைத் தமிழில் பொருளோடு அளிக்கிறேம் இங்கு.

मुनय ऊचुः—

विस्तरेण समाख्याहि हरिसंश्रयणं परम्।
कथमाश्रयणं नृणां कथमाराधनं विभोः॥ १॥

முநய ஊசு:—

விஸ்தரேண ஸமாக்₂யாஹி ஹரிஸம்*ஶ்*ரயணம் பரம் ।
கத₂மா*ஶ்*ரயணம் ந்ருணும் கத₂மாராத₄நம் விபே₄ா: ॥ 1.

மைத்ரேயர் முதலான முனிவர்கள் ஸ்ரீபரா*ஶ*ரமஹர்ஷியிடம் ஸாமாந்யத₄ர்மங்களைப் பரா*ஶ*ரஸ்ம்ருதியின் பூாவ ப₄ாக₃த்திலிருந்து கேட்டறிந்தபின், அவை நேரே மோக்ஷ

http://acharya.org

ஸாத₄நமல்லாமையாலே, நேரே மோக்ஷஸாத₄நமான ப₄க₃வத்ஸமாஶ்ரயணத்தையும், ப₄க₃வதா₃ராத₄னத்தையும பற்றி அறியவிரும்பியவர்களாய்,பின்வருமாறு கேட்டார்கள்:-

நம் விரோதி₄களைப் போக்கி இஷ்டத்தை அளிக்கவல்ல ஹரியாகிற எம்பெருமானைச் சிறப்பாக ஆஶ்ரயிக்கும விதமும், அதற்கு உறுப்பாகச் செய்யவேண்டியவையும், ஆஶ்ரயித்தபின் அவனை ஆராதி₄க்கும வகைகளுமாகிற சிறந்த த₄ர்மங்களை விரிவாகச் சொல்லுவீர்.

श्रीपराशर उवाच —

वक्ष्यामि मुनयः सर्वे विष्णोराश्रयणक्रियाम् ।
मन्त्रदीक्षाविधिञ्चैव तस्य पूजाविधिं तथा ॥ २ ॥

ஸ்ரீபராசர உவாச—

வக்ஷ்யாமி முநயஸ் ஸர்வே விஷ்ணோராஶ்ரயணக்ரியாம் ।
மந்த்ரதீ₃க்ஷாவிதி₄ஞ்சைவ தஸ்ய பூஜாவிதி₄ம் தத₂ா ॥ 2.

ஸ்ரீபராஶர ப₄க₃வான் கூறலுற்றார்,—

முனிவர்களே! ஸர்வவ்யாபகனான விஷ்ணுவை ஆஶ்ரயிக்கும் வழியையும, அதற்கு உறுப்பான மந்த்ரம், தீ₃க்ஷா விதி₄ ஆகியவற்றையும், அவனை ஆராதி₄க்கும் முறையையும் கூறப்போகிறேன; கேட்பீர்களாக.

आद्यं तु शङ्खचक्रादिधारणं वैष्णवं स्मृतम् ।
पुण्ड्रं नामक्रिया चैव मन्त्रश्चैवार्चनं हरेः ॥ ३ ॥
संस्काराः पञ्च कर्तव्या ब्राह्मणस्य विधानतः ।

ஆத்₃யம் து ஶங்க₂சக்ராதி₃த₄ாரணம் வைஷ்ணவம் ஸ்ம்ருதம் ।
புண்ட்₃ரம் நாமக்ரியா சைவ மந்த்ரஶ்சைவார்ச்சநம் ஹரே: ॥ 3.
ஸம்ஸ்காரா: பஞ்ச கர்த்தவ்யா ப்₃ராஹ்மணஸ்ய விதா₄நத: ॥

ப₄க₃வானை ஆஶ்ரயிப்பது பின்வரும் ஐந்து ஸம்ஸ்காரங்களடங்கியது:—(1) ஸ்வாமியான விஷ்ணுவின் அடையாளங்களாகிற ஶங்க₂சக்ரங்கள் முதலானவற்றை த₄ரிப்

http://acharya.org

பது (தாபஸம்ஸ்காரம்). (2) ஶேஷியான அவன் திருவடிகளின் ஆகாரமாயிருக்கும் ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை த₄ரிப்பது (புண்ட்₃ரஸம்ஸ்காரம்). (3) ஸ்வாமியான அவனது திருநாமத்தை அவனுககு அடியான் என விளங்கும்படி த₃ாஸபத₃த்தைச் சோதது த₄ரிததல் (நாமஸம்ஸகாரம்). (4) அவனுக்கும் நமககும உண்டான உறவையும் உபாயோபேயங்களையும உணர்த்தும மந்தரத்தை அநுஸந்தி₄த்தல் (மந்த்ரஸம்ஸ்காரம). (5) தனது ஶேஷத்வம ஸித்₃தி₄ப்பதறகாக ஸ்ரீமந்நாராயணனை ஆராதி₄த்தல் (யாக₃ஸமஸ்காரம). இவை ஐந்தும (வேத₃ம் முதலான) ஶாஸ்த்ரங்களில் சொன்னபடி ப்₃ராஹ்மணன் முதலான அனைவர்க்கும் அவஶ்யம் அனுஷ்டி₂க்கவேண்டிய பஞ்சஸமஸ்காரங்களாகும்.

विना यज्ञोपवीतेन विना चक्रस्य धारणात् ॥ ४ ॥
विना द्वयेनैव विप्रः चण्डालत्वमवाप्नुयात् ।

விநா யஜ்ஞோபவீதேந விநா சக்ரஸ்ய த₄ாரணாத் ॥ 4.
விநா த்₃வயேந வை விப்ரஶ் சண்டா₃ளத்வமவாப்நுயாத் ।

சக்ரத₄ாரணமாகிற தாபஸமஸ்காரமும், த்₃வயாநுஸந்த₄ாநமாகிற மந்த்ரஸமஸ்காரமும இல்லாதவன், பூணூல் இல்லாத அந்தணன் போலே உடனே நீசனாவான்.

विधिना शङ्खचक्रादिधारणं चोर्ध्वपुण्ड्रकम् ॥ ५ ॥
उपवीतं शिखाबन्धं विप्रस्य सततं स्मृतम् ।
चक्रलाञ्छनहीनस्य विप्रत्वं निष्फलं भवेत् ॥ ६ ॥

விதி₄நா ஶங்க₂சக்ராதி₃த₄ாரணம் சோர்த்₄வபுண்ட்₃ரகம் ॥ 5.
உபவீதம் ஶிகா₂ப₃ந்த₄ம் விப்ரஸ்ய ஸததம் ஸ்ம்ருதம் ।
சக்ரலாஞ்ச₂நஹீநஸ்ய விப்ரத்வம் நிஷ்ப₂லம் ப₄வேத் ॥ 6.

சாஸ்திரங்களில் சொல்லிய கிரமப்படி ஶங்க₂ம், சக்ரம் முதலிய ஆயுத₄ங்களை த₄ரிக்கும் தாபஸம்ஸ்காரம், ஊர்த்₄வபுண்ட்₃ரத₄ாரணமாகிற புண்ட்₃ரஸம்ஸ்காரம, பூணூலை த₄ரிப்பது, ஶிகை₂யை வைத்துக்கொள்வது ஆகியவை

http://acharya.org

எக்காலத்திலும் அந்தணனுக்கு அவஶ்யமானவை என்று த₄ர்மஶாஸ்த்ரங்களில் சொல்லப்பட்டது. திருவாழியின் சின்னமில்லாதவனுடைய ப்₃ராஹ்மணதவம பயனற்றது.

अचक्रधारिणं विप्रं यः श्राद्धे भोजयेन्नरः।
रेतोमूत्रपुरीषादीन् स पितृभ्यः प्रयच्छति॥७॥

அசக்ரத₄ாரிணம் விப்ரம் யஶ்ஶ்ராத்₃தே₄ போ₄ஜயேந்நர:।
ரேதோமூத்ரபுரீஷாதீ₃ந் ஸ பித்ருப்₄ய: ப்ரயச்ச₂தி॥ 7.

சக்ராங்கனமிலலாத அந்தணனை ஶ்ராத்₃த₄த்தில் நிமந்த்ரணம்செய்து போ₄ஜனம் செய்விப்பவன், ஶுக்லம், மூத்ரம, மலம முதலானவற்றைத் தன் பிதருககளுககுக கொடுத்தவனுகிருன.

शङ्खचक्रोर्ध्वपुण्ड्रादिरहितो ब्राह्मणाधमः।
स जीवन्नेव चण्डालः सर्वकर्मबहिष्कृतः॥८॥

ஶங்க₂சக்ரோர்த்₄வபுண்ட்₃ராதி₃ரஹிதோ ப்₃ராஹ்மணாத₄ம:।
ஸ ஜீவந்நேவ சண்ட₃ாளஸ் ஸர்வ கர்ம ப₃ஹிஷ்க்ருத:॥ 8.

ஶங்க₂சக்ரத₄ாரணம் ஊர்த்₄வபுண்ட்₃ரத₄ாரணம் முதலான பஞ்சஸம்ஸ்காரமில்லாதவன் அந்தணரிற்கடையோனுய், உயிரோடிருக்கும்போதே நீசனேயானவனுய், எல்லா வைதி₂ககர்மங்களுக்கும் புறம்பானவனுகிருன்.

तस्मात् चक्रादिसंस्काराः कर्तव्या मुनिसत्तमाः।
चक्रलाञ्छनहीनेन कृतं कर्म च निष्फलम्॥९॥

தஸ்மாத் சக்ராதி₃ஸம்ஸ்காரா: கர்த்தவ்யா முநிஸத்தமா:।
சக்ர லாஞ்ச₂ந ஹீநேந க்ருதம் கர்ம ச நிஷ்ப₂லம்॥ 9.

முனிவர் தலைவர்களே! சக்ரம முதலான சின்னமற்றவன் செய்யும் காரியங்கள் பயனற்றவையாகையாலே, சக்ராதி₃த₄ாரணம் முதலான ஐந்து ஸம்ஸ்காரங்களையும் அவஶ்யம் செய்துகொள்ளவேண்டும்.

http://acharya.org

தாபஸம்ஸ்காரத்தின் க்ரமம்

स्नात्वा शुभेऽह्नि पूर्वाह्णे सम्यगभ्यर्च्य केशवम्।
स्नातं शिष्यं समाहूय कृतकौतुकमङ्गलम्॥ १०॥
आचार्यो विधिवत्कुर्यात् चक्रपुण्ड्रादिसत्क्रियाम्।

ஸ்நாத்வா ஶுபே₄ऽஹ்நி பூர்வாஹ்ணே ஸம்யக₃ப்₄யர்ச்ய கேஶவம்।
ஸ்நாதம் ஶிஷ்யம் ஸமாஹூய க்ருதகௌதுக மங்க₃ளம்॥ 10.
ஆசார்யோ விதி₄வத் குர்யாத் சக்ரபுண்ட்₃ராதி₃ஸத்க்ரியாம்।

மங்க₃ளமான திதி₂ வாரம முதலானவற்ருேடு கூடிய தி₃னத்தில், ஆசார்யன் முற்பகலில ஸ்நாநம் முதலான நிதயகர்மங்களை அநுஷ்டி₂த்து, ப₄க₃வானுக்குத் திருவாராத₄னம ஸமர்ப்பிதது, ஸ்நாநம் செய்தவனுய் பரிஶுத்₃த₄னுயிருக்கிற சிஷ்யனை அழைத்து, அவனுக்குக் கங்கணம் கட்டி, ஶாஸ்த்ரமுறைப்படி பஞ்சஸமஸ்காரங் களைச் செய்யககடவன.

कारयेत् शङ्खचक्रादिहेतिप्रतिकृतीः शुभाः॥ ११॥
स्वर्णराजतताम्रादिद्रव्यैः कुर्याद्यथोचितम्।

காரயேத் ஶங்க₂ சக்ராதி₃ ஹேதிப்ரதிக்ருதீஶ் ஶுப₄ா: ॥ 11.
ஸ்வர்ணராஜத தாம்ராதி₃த்₃ரவ்யை: குர்யாத் யதோ₂சிதம்।

சக்ராங்கனத்திற்காக, பொனனுலாவது, வெள்ளியினு லாவது, தாம்ரத்தினுலாவது, தன் ஶக்திக்குத் தக்கபடி ஆசார்யன் ஶங்க₂ம, சக்ரம் முதலான ஆயுத₄ங்களின் ப்ரதிமைகளை அழகியவையாகச் செய்துவைக்கவேண்டும்.

शङ्खं चक्रं गदां खड्गं शार्ङ्गं पञ्चायुधं क्रमात्॥ १२॥
स्नाप्य पञ्चामृतैः शुद्धैः पूजयेत्पुरतो हरेः।
तत्तत्प्रकाशकैर्मन्त्रैः पूजयेत्कुसुमादिभिः॥ १३॥

ஶங்க₂ம் சக்ரம் க₃தா₃ம் க₂ட்₃க₃ம் ஶார்ங்க₃ம் பஞ்சாயுத₄ம்
க்ரமாத்॥ 12.
ஸ்நாப்ய பஞ்சாம்ருதைஶ் ஶுத்₃தை₄: பூஜயேத் புரதோ ஹரே:।
தத்தத்ப்ரகாஶகைர் மந்த்ரை: பூஜயேத் குஸுமாதி₃பி₄: ॥ 13.

http://acharya.org

(1) சங்கு (2) சக்ரம் (3) க₃தை₃ (4) வாள் (5) வில என்கிற ப₄க₃வானுடைய ஐந்து ஆயுத₄ங்களுக்கும, பரிமளத்₃த₄மான பஞ்சாம்ருததததைககொண்டு முறைப்படி திருமஞ்சனம் செயது, அந்தந்த ஆயுத₄ங்களின பெருமைகளைச் சொல்லும மந்திரங்களை அநுஸந்தி₄த்துக்கொண்டு, புஷ்பம், தூ₄பம், தீ₃பம முதலியவற்றுல் எமபெருமான் முன்னிலையிலே அவற்றுக்குத் திருவாராத₄னம் செய்ய வேண்டும்.

पुरतोऽग्निं प्रतिष्ठाप्य स्वगृह्योक्तविधानतः।
इध्माधानादिपर्यन्तं ताम्बूलञ्च निवेदयेत् ॥ १४ ॥

புரதோऽக்₃நிம் ப்ரதிஷ்டா₂ப்ய ஸ்வக்₃ருஹ்யோக்த வித₄ாநத:।
இத்₄மாத₄ாநாதி₃ பர்யந்தம் தாம்பூ₃லஞ்ச நிவேத₃யேத் ॥ 14.

அதன்பின், தனக்கு முன்னே அக்₃னிப்ரதிஷ்டை₂யைச் செய்து, அந்த அக்னியில தததம் க்₃ருஹ்ய ஸூத்ரததில் சொனனமுறையில் ஸமித்துககளால் இத்₄மாத₄ாநஹோமம் வரையில செயது, தாம்பூ₃லத்தையும் நிவேத₃னம் செய்ய வேண்டும்.

पश्चात् पञ्चायुधान्यग्नौ प्रक्षिप्य च यथाविधि।
जुहुयात् हेतिमन्त्रैश्च शिष्येण सहितो गुरुः ॥ १५ ॥
नमस्कुर्यात् ततो भक्त्या देवदेवं जनार्दनम्।

பஶ்சாத் பஞ்சாயுத₄ாந்யக்₃நௌ ப்ரக்ஷிப்ய ச யத₂ாவிதி₄।
ஜுஹுயாத் ஹேதி மந்த்ரைஶ்ச ஶிஷ்யேண ஸஹிதோ கு₃ரு: ॥ 15.
நமஸ்குர்யாத் ததோ ப₄க்த்யா தே₃வதே₃வம் ஜநார்த்த₃நம்।

பின்பு, அந்த அக்₃னியில் அந்த ஐந்து ஆயுத₄ங்களையும் கிரமமாக இட்டு, அந்த ஆயுத₄ங்களின் பெருமையைச் சொல்லும் மந்திரங்களினுல ஆசார்யன் முறைப்படி ஹோமம் செய்யவேண்டும். அதன்பின் ஶிஷ்யனோடு கூடியவனுய், தே₃வதே₃வனை ஸ்ரீமந் நாராயணனை ப₄க்தியோடு நமஸ்கரிக்கக்கடவன.

http://acharya.org

प्राङ्मुखं तु समासीनं शिष्यं मन्त्रजलाप्लुतम् ॥ १६ ॥
प्रतपेच्छङ्खचक्रादिहेतिभिः प्रयतो गुरुः ।
पवित्रेणाङ्कयेत् पूर्वं बाहुमूलं तु दक्षिणम् ॥ १७ ॥
शङ्खेन प्रतपेत् सव्यं गदया फालमध्यमम् ।
तथा खड्गेन हृदयं शार्ङ्गेणैव तु मस्तकम् ॥ १८ ॥
प्रतप्य विमलाकारैः स्नाप्य पञ्चामृतैर्गुरुः ।
संपूज्य पूर्ववत् पश्चात् होमशेषं समापयेत् ॥ १९ ॥

ப்ராங்முக₂ந்து ஸமாஸீநம் ஶிஷ்யம் மந்த்ரஜலாப்லுதம் ॥ 16.
ப்ரதபேச்ச₂ங்க₂ சக்ராதி₃ ஹேதிபி₄: ப்ரயதோ கு₃ரு: ।
பவித்ரேணாங்கயேத் பூர்வம் பா₃ஹுமூலந்து த₃க்ஷிணம் ॥ 17.
ஶங்கே₂ந ப்ரதபேத் ஸவ்யம் க₃த₃யா பா₂லமத்₄யமம் ।
தத₂ா க₂ட்₃கே₃ந ஹ்ருத₃யம் ஶார்ங்கே₃ணைவ து மஸ்தகம் ॥ 18.
ப்ரதப்ய விமலாகாரைஸ் ஸ்நாப்ய பஞ்சாம்ருதைர் கு₃ரு: ।
ஸம்பூஜ்ய பூர்வவத் பஶ்சாத்₃தோ₄மஶேஷம் ஸமாபயேத் ॥ 19.

குடம் முதலிய பாத்திரத்தில் நீரை நிறைத்து, அதை மந்திரங்களைக்கொண்டு பரிசுத்தமாக்கி, அந்நீரினுல் சிஷ்யனை ஸ்நாநம செய்வித்து, கிழக்கு நோக்கி உட்காரச் செய்து, ஆசாரயன் நியமமுடையவனுய், அக்₃னியில் காய்ச்சப்பட்ட பஞ்சாயுத₄ங்களைக்கொணடு சிஷ்யனுக்கு அடையாளமிடவேண்டும. முதலில் சககரத்திஞல் வலது தோளிலும், ஶங்க₂த்திஞல் இடது தோளிலும், க₃தை₃யினுல நெற்றியிலும், கததியினுல் மார்பிலும, வில்லினுல் தலையிலும் அடையாளமிடவேண்டும். அஜ்ஞாநத்தை அழிககும் பரமபவித்ரமான இவ்வாயுத₄ங்களாலே இவ் வண்ணம் அடையாளம் செய்தபின், அவைகளுககு ஆசாரயன் பஞ்சாம்ருதத்திஞல் முனபோல் திருமஞ்சன மும், திருவாராத₄னமும் செய்து, ஹோமத்தை முடிக்க வேணும்.

http://acharya.org

एवं तापक्रियां कुर्यात् शङ्खचक्रादिहेतिभिः।
प्रथमं तापसंस्कारस्तापसैर्मुनिभिः स्मृतः॥ २०॥
सर्वाश्रमेषु वसतां स्त्रीणां च द्विजसत्तमाः।

ஏவம் தாபக்ரியாம் குர்யாத் ஶங்க₂சக்ராதி₃ஹேதிபி₄:।
ப்ரத₂மம் தாபஸம்ஸ்காரஸ்தாபஸைர் முநிபி₄ஸ்ஸ்ம்ருத:॥ 20.
ஸர்வாஶ்ரமேஷு வஸதாம் ஸ்த்ரீணாஞ்ச த்₃விஜஸத்தமா:।

இவ்வண்ணமாக ஶங்க₂ம் சக்ரம் முதலான பஞ்சாயுத₄ங்களாலே தாபம் என்னும் ஸம்ஸ்காரத்தைச் செய்ய வேண்டும். அந்தணர் தலைவர்களே! தபஸ்விகளான முனிவர்கள் இத்தாப ஸம்ஸ்காரத்தைப் பஞ்சஸம்ஸ்காரங்களில் முதலாவதாக எண்ணுகிறார்கள். இதை எந்த ஆஶ்ரமத்திலுள்ளவர்களும், ஸ்த்ரீகளுங்கூடச் செய்து கொள்ளவேண்டும்.

कर्मसंस्कारसिद्ध्यर्थं जातकर्मादि कारयेत्॥ २१॥
मन्त्रसंस्कारसिद्ध्यर्थं मन्त्रदीक्षाविधिं तथा।

கர்மஸம்ஸ்காரஸித்₃த்₄யர்த்த₂ம் ஜாதகர்மாதி₃ காரயேத்॥ 21.
மந்த்ரஸம்ஸ்காரஸித்₃த்₄யர்த்த₂ம் மந்த்ரதீ₃க்ஷாவிதி₄ம் தத₂ா।

ஜாதகர்மம் முதலான ஸம்ஸ்காரங்களில்லாதவன் செய்யும் யாக₃ம் முதலானவை பலனளிக்கமாட்டாவாகையால், முதலில் அந்த ஸம்ஸ்காரங்கள செய்யப்பெற்றவனுக்கே யாக₃ம் முதலான கர்மங்களைச்செய்ய அதி₄காரமுண்டு. அதுபோலவே, இந்தப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பெருதவனுக்கு, திருவஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்கள மோக்ஷத்தை அளிக்கமாட்டாவாகையால், இந்த ஸம்ஸ்காரங்களைப் பெற்றவனுக்கே அம்மந்திரங்களைப் பெற்று அநுஸந்தி₄க்க அதி₄காரமுண்டு.

उद्वाहसमये स्त्रीणां पुंसां चैवोपनायने॥ २२॥
चक्रादिधारणं प्रोक्तं मन्त्रैः पञ्चायुधस्य च।

http://acharya.org

உத்₃வாஹஸமயே ஸ்த்ரீணும் பும்ஸாஞ்சைவோபநாயநே ॥ 22.
சக்ராதி₃த₄ாரணம் ப்ரோக்தம் மந்த்ரை: பஞ்சாயுத₄ஸ்ய ச ।

இதி ஸ்ரீ பராஶர ஸ்ம்ருதௌ உத்தரகா₃ண்டே₃ விஶிஷ்ட
பரமத₄ர்ம ஶாஸ்த்ரே, தாபஸம்ஸ்கார வர்ணநம் நாம ப்ரத₂மாத்₄யாய: ॥

பெண்களுக்கு விவாஹமானவுடனும், ஆண்களுக்கு உபநயனமானவுடனும, அந்தந்த மந்த்ரங்களை முன்னிட்டுக் கொண்டு பஞ்சாயுத₄ங்களை த₄ரிப்பது விதிக்கப்படுகிறது.

ஸ்ரீ பராஶரஸ்ம்ருதியின் உத்தரகா₂ண்ட₃மான
விஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரதில் தாபஸம்ஸ்கார வர்ணனம் என்கிற
முதல் அத்தியாயம் முற்றிற்று.

2-வது அத்தியாயம்

1. புண்ட்₃ரஸம்ஸ்காரத்தின் க்ரமம்

श्रीपराशर उवाच—

अतः परं प्रवक्ष्यामि पुण्ड्रधारणमुत्तमम् ।
यस्य धारणमात्रेण सर्वतीर्थफलं लभेत् ॥ १ ॥

ஸ்ரீபராஶர உவாச—

அத:பரம் ப்ரவக்ஷ்யாமி புண்ட்₃ரத₄ாரணமுத்தமம் ।
யஸ்ய த₄ாரணமாத்ரேண ஸர்வதீர்த்த₂ப₂லம் லபே₄த் ॥ 1.

தாபஸம்ஸ்காரத்தை நிரூபித்தபின்பு, மிகச்சிறந்த புண்ட்₃ரத₄ாரணமாகிற ஸம்ஸ்காரம் பற்றிக் கூறுகிறேன். இந்த ஸம்ஸ்காரம் பெற்றவன், க₃ங்கை₃முதலான எல்லாத் தீர்த்தங்களிலும நீராடியதாலுண்டாகும ப₂லனைப்பெறுவான்.

पूर्वाह्णे पूर्ववत् स्नात्वा संपूज्य मधुसूदनम् ।
शिष्यं स्नातमलङ्कृत्य पुण्ड्रधारणमादिशेत् ॥ २ ॥

பூர்வாஹ்ணே பூர்வவத் ஸ்நாத்வா ஸம்பூஜ்ய மது₄ஸூத₃நம் ।
ஶிஷ்யம் ஸ்நாதமலங்க்ருத்ய புண்ட்₃ரத₄ாரணமாதி₃ஶேத் ॥ 2.

http://acharya.org

முதல் அத்தியாயத்தில் சொல்லியதுபோல் காலையில் நீராடி எம்பெருமானை ஆராதித்து, நீராடியவனுய், நல்ல வஸ்த்ரம் ஆபரணங்கள் முதலானவற்ருல் அலங்கரிக்கப் பெற்றவனுயுள்ள சிஷ்யனைப் புண்ட்ரஸம்ஸ்காரம் பெற்றுக் கொள்ளும்படி நியமிக்கவேண்டியது.

स्थण्डिले सैकते वाऽपि ह्युपलिप्य ततो गुरुः ।
द्वादशैतानि पुण्ड्राणि लिखेत् तस्मिन् यथाक्रमम् ॥ ३ ॥

ஸ்தண்டிலே ஸைகதே வாபி ஹ்யுபலிப்ய ததோ குரு: ।
த்வாதஶைதாநி புண்ட்ராணி லிகேத் தஸ்மிந் யதாக்ரமம் ॥3.

புல் பூண்டுகளில்லாத தரையிலாவது, மணற்பிரதேசத்திலாவது, கோமயத்தினுல் (பசுஞ்சாணியினுல்) மெழுகிய இடத்தில், கிழக்கு முதலான திக்குகளில் முறையே கேசவன் முதலான பனிரண்டு ஊர்த்வபுண்ட்ரங்களையும் எழுதவேண்டியது.

अष्टपुण्ड्राण्यष्टदिक्षु मध्ये चत्वारि विन्यसेत् ।
व्याहरन् सर्वपुण्ड्रेषु केशवादीन् यथाक्रमम् ॥ ४ ॥
आवाहनार्घ्यपाद्यैश्च धूपदीपनिवेदनैः ।
संपूज्याग्निं प्रतिष्ठाप्य होमं पूर्ववदाचरेत् ॥ ५ ॥
पौरुषेण च सूक्तेन केशवाद्यैश्च नामभिः ।
मूलमन्त्रेण वै हुत्वा होमशेषं समापयेत् ॥ ६ ॥

அஷ்டபுண்ட்ராண்யஷ்டதிக்ஷு மத்யே சத்வாரி விந்யஸேத் ।
வ்யாஹரந் ஸர்வபுண்ட்ரேஷு கேஶவாதீந் யதாக்ரமம் ॥ 4.
ஆவாஹநார்க்யபாத்யைஶ்ச தூபதீபநிவேதநை: ।
ஸம்பூஜ்யாக்நிம் ப்ரதிஷ்டாப்ய ஹோமம் பூர்வவதாசரேத் ॥ 5.
பௌருஷேண து ஸூக்தேந கேஶவாத்யைஶ்ச நாமபி: ।
மூலமந்த்ரேண வை ஹுத்வா ஹோமஶேஷம் ஸமாபயேத் ॥ 6.

அதில், கிழக்கு தென்கிழக்கு முதலான எட்டு திக்குகளில் எட்டு புண்ட்ரங்களையும், நடுவில் (விதிக்குக்களை

விட்டு) கிழக்கு முதலான நாலு தி₃க்குகளில் நாலு புண்ட்₃ரங்களையும ஆகப் பனிரண்டு ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை எழுதி, அவற்றில் எழுதிய முறையிலேயே கேசவன் முதலாக தா₃மோத₃ரனீருகப் பனிரண்டு திருநாமங்களை ஆவாஹநம்பண்ணி, அவர்கள திருநாமங்களைக்கொண்டே அர்க்₄யம், பாத₃யம், ஆசமநீயம, தூ₁பம, தீ₃பம் முதலியவைகளால் ஆராதி₄த்து, பழம முதலாகத் தாமபூ₃லமீருகக் கண்டருளபபணணி, அதன் பின் முன் அத்₄யாயத்தில் சொன்னபடி அவரவர் க்₃ருஹ்ய ஸூத்ரததின்படி அக₃நிப்ரதிஷ்டை₂பண்ணி, புருஷஸூக்த மந்திரங்களாலும், கேஶவன் முதலான பன்னிருநாமங்களாலும், திருமந்திரத்திஞலும் ஹோமததை ஸமபூர்ணமாகச் செய்துமுடிக்க வேண்டும்.

प्रदक्षिणं ततः कुर्यात् नमस्कुर्याच्च भक्तितः।
पुण्ड्राणि धारयेच्छिष्यमासीनं विनयान्वितम्॥ ७॥
नमस्कृत्य ततः शिष्यो गुरुं सर्वगुणान्वितम्।
तदाप्रभृति पुण्ड्राणि मृदा धार्याणि नित्यशः॥ ८॥

ப்ரத₃க்ஷிணம் தத: குர்யாந் நமஸ்குர்யாச்ச ப₄க்தித:।
புண்ட்₃ராணி த₄ாரயேச்சி₁ஷ்யமாஸீநம் விநயாந்விதம் ॥ 7.
நமஸ்க்ருத்ய ததஶ்ஶிஷ்யோ கு₃ரும் ஸர்வகு₃ணாந்விதம்।
தத₃ாப்ரப்₄ருதி புண்ட்₃ராணி ம்ருத₃ா த₄ார்யாணி நித்யஶ: ॥ 8.

அதற்குப்பின், ஆசார்யன் ப₄கதியுடன் அக்₃னிககு ப்ரத₃க்ஷிண நமஸகாரங்களைபபண்ணி, வணக்கத்துடன் தன் அருகில உட்கார்ந்திருக்கும் சிஷ்யனுககு, மேலே சொல்லப்போகிற முறையில் ஊர்த்₄வபுண்ட்₃ரத₄ாரணம் செய்விக்கவேண்டியது. சிஷ்யனும், தனககு அறிவளித்தவனை, ஆசார்யகு₃ணங்களனைத்தும நிறைந்தவனை கு₃ருவுக்கு தண்டன் ஸமர்பபித்து, அன்றுமுதல வெள்ளை மண்ணல் ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை த₄ரிக்கக்கடவன்.

http://acharya.org

आदाय वैष्णवे क्षेत्रे मृत्तिकां विमलां शुभाम्।
मूलमन्त्रेणाभिमन्त्र्य चोर्ध्वपुण्ड्राणि धारयेत्॥९॥
ललाटादिषु चाङ्गेषु केशवादीन् यथाक्रमम्।

ஆதா₃ய வைஷ்ணவே க்ஷேத்ரே ம்ருத்திகாம் விமலாம் ஶுபா₄ம்।
மூலமந்த்ரேணாபி₄மந்த்ர்ய சோர்த்₄வபுண்ட்₃ராணி தா₄ரயேத்॥ 9.
லலாடாதி₃ஷு சாங்கே₃ஷு கேஶவாதீ₃ந்ய தா₂க்ரமம்।

அந்த மண்ணை எம்பெருமான் உகந்த தி₃வ்யதே₃ஶங்களிலிருந்து எடுதது, வெண்மையாய், ம்ருது₃வாய், மணமுடையதாம்படி பக்குவம்செய்து, திருமந்திரத்தினுல் அபி₄மந்த்ரணம்செய்து, நெற்றி முதலான அவயவங்களில அதைககொண்டு ஊர்த்₄வபுண்ட்₃ரமாக தா₄ரித்து, அவைகளில் கேஶவன் முதலான பன்னிருமூர்த்திகளை முறையே ஆவாஹனம செய்யவேண்டும்.

ஊர்த்₄வபுண்ட்₃ரலக்ஷணம்

द्व्यङ्गुलं त्र्यङ्गुलं वापि ह्यन्तरालं प्रकल्पयेत्॥१०॥
पार्श्वमङ्गुलमात्रं स्यादूर्ध्वपुण्ड्रस्य लक्षणम्।

த்₄வ்யங்கு₃லம் த்ர்யங்கு₃லம் வாபி ஹ்யந்தராளம் ப்ரகல்பயேத்॥10.
பார்ஶ்வமங்கு₃லமாத்ரம் ஸ்யாதூ₃ர்த்₄வபுண்ட்₃ரஸ்ய லக்ஷணம்।

இடையில் இரணடு அங்கு₃லமாவது, மூன்ருங்குலமாவது இடைவெளிவிட்டு, இரு பக்கங்களிலும் ஒவ்வோரங்கு₃லம் அகலமுடையதாய் தா₄ரிக்கப்பட்டது ஊர்த்₄வபுணட்₃ரம் எனப்படும்.

हरेः पादाकृतिं रम्यं सुपार्श्वं सुमनोहरम्॥११॥
नासिकामूलमारभ्य ललाटान्तञ्च विन्यसेत्।
एवं सर्वाणि पुण्ड्राणि सच्छिद्राण्येव धारयेत्॥१२॥

ஹரே: பாதா₃க்ருதிம் ரம்யம் ஸுபார்ஶ்வம் ஸுமநோஹரம்॥ 11.
நாஸிகாமூலமாரப்₄ய லலாடாந்தஞ்ச விந்யஸேத்।
ஏவம் ஸர்வாணி புண்ட்₃ராணி ஸச்சி₂த்₃ராண்யேவ தா₄ரயேத்॥ 12.

http://acharya.org

ஹரிபாத₃ாக்ருதியாய், அழகியதாய், ஒழுங்கான பக்கங்களை உடையதாய், நெஞ்சுக்கு மிகவினியதான ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை, நாஸிகாமூலம் என்று ஸாஸ்த்ர ஸித்₃த₄மான மூக்கின் மூன்றுவது ப₄ாக₃த்தில் தொடங்கி, நெற்றிக்கட்டு வரையில் அழகாக த₄ரிக்கவேண்டும். இப்படியே மற்ற ஊர்த்₄வபுண்ட்₃ரங்களையும் இடைவெளியுடையதாகவே த₄ரிக்கவேண்டும்.

இடைவெளியில்லாத ஊர்த்₄வபுண்ட்₃ரத்துக்கு நிஷேத₄ம்

प्रमाणहीनं बद्धाग्रमच्छिद्रं च विवर्जयेत्।
अच्छिद्रमूर्ध्वपुण्ड्रं तु यः करोति विमूढधीः॥ १३॥
तेनैव हि धृतः संयक् शुनः पादो न संशयः।
तस्मात् छिद्रान्वितं पुण्ड्रं ब्राह्मणः सततं धरेत्॥ १४॥

ப்ரமாணஹீநம் ப₃த்₃தா₄க்₃ரமச்சி₂த்₃ரஞ்ச விவர்ஜயேத்।
அச்சி₂த்₃ரமூர்த்₄வபுண்ட்₃ரந்து ய: கரோதி விமூட₄தீ₄:॥ 13.
தேநைவ ஹி த்₄ருதஸ் ஸம்யக் ஶுந: பாதோ₃ ந ஸம்ஶய:।
தஸ்மாச்சி₂த்₃ராந்விதம் புண்ட்₃ரம் ப்₃ராஹ்மணஸ் ஸததம் த₄ரேத்॥ 14.

கீழ்ச்சொன்ன அளவுகளில் மாறுபட்டதாகவோ, நுனி சேர்ந்ததாகவோ, இடைவெளியில்லாததாகவோ ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை த₄ரிக்கக்கூடாது. இந்த லக்ஷண மறியாத அறிவிலி, இப்படித் தவருன முறையில் அதை த₄ரித்தானுகில், அவன் நாயின் காலையே நன்கு த₄ரித்துக் கொண்டவனுவான் என்பதில் ஐயமில்லை. ஆகையால், அந்தணன் எப்போதும் ஊர்த₄வபுண்ட்₃ரத்தை முற்கூறிய படி இடைவெளி முதலான லக்ஷணங்கள உடையதாகவே த₄ரிக்கவேண்டும்.

வைதி₃ககர்மங்களில் ஊர்த்₄வபுண்ட்₃ரத₄ாரணவிதி₄

सन्ध्याकाले जपे होमे स्वाध्याये पितृतर्पणे।
श्राद्धे दाने च यज्ञे च धारयेदूर्ध्वपुण्ड्रकम्॥ १५॥

http://acharya.org

ஸந்த்₄யாகாலே ஜபே-ஹோமே ஸ்வாத்₄யாயே பித்ருதர்ப்பணே।
ஶ்ராத்₃தே₄ தா₃நே ச யஜ்ஞே ச தா₄ரயேதூ₃ர்த்₄வ-
புண்ட்₃ரகம் || 15.

தினந்தோறும் முக்காலங்களிலும் அனுஷ்டி₂க்க வேண்டிய ஸந்த்₄யாவந்த₃னத்தின்போதும், ஜபம், ஹோமம், வேதா₃த்₄யயநம் பாவகாலங்களில் செய்யவேண்டிய பித்ருதர்ப்பணம், ஶ்ராத்₃த₄ம், தா₃நம், ப₂லனை உத்₃தே₃ஶித்துச்செய்யும் யாக₃ம் முதலான நித்ய நைமித்திக காம்ய கர்மங்களை, ஊர்த்₄வபுண்ட்₃ரமணிந்தபின்பே அநுஷ்டி₂க்கவேண்டும்.

ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லாமல் செய்யும் கர்மம் ப₂லமின்றியொழிகை

ऊर्ध्वपुण्ड्रं तु विप्राणां सन्ध्यानुष्ठानकर्मवत्।
श्राद्धकाले विशेषेण कर्ता भोक्ता च न त्यजेत्॥ १६॥
ऊर्ध्वपुण्ड्रविहीनस्तु कर्म यत्किञ्चिदाचरेत्।
तत्सर्वं विफलं यायादिष्टापूर्तमपि द्विजाः॥ १७॥

ஊர்த்₄வபுண்ட்₃ரந்து விப்ராணும் ஸந்த்₄யாநுஷ்ட₂ாந கர்மவத்।
ஶ்ராத்₃த₄காலே விஶேஷேண கர்த்தா போ₄க்தா ச ந
த்யஜேத் || 16.
ஊர்த்₄வபுண்ட்₃ரவிஹீநஸ்து கர்ம யத்கிஞ்சிதா₃சரேத்।
தத் ஸர்வம் விப₂லம் யாயாதி₃ஷ்டாபூ₃ர்த்தமபி த்₃விஜா: || 17.

அந்தணனுக்கு, ஸந்த்₄யாவந்த₃னம்போலே ஊர்த்₄வபுண்ட்₃ரதா₄ரணமும் மிகவும் அவஶ்யமானது. அதிலும், ஶ்ராத்₃த₄காலத்தில், ஶ்ராத்₃த₄த்தைச் செய்பவனும், அதில் பு₄ஜிக்கிறவனும், ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை விடாமல் தா₄ரிக்கவேண்டும். ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லாதவன் செய்த நித்யநைமித்திகாதி₃ கர்மங்களும், யாகம் முதலான காம்ய கர்மங்களும், குளம்வெட்டுதல் முதலான புண்யகர்மங்களும் ப₂லமில்லாமற்போய்விடும்.

http://acharya.org

ஊர்த்₄வபுண்ட்₃ரமற்ற ஶரீரத்தைக் காணலாகாது

यच्छरीरं मनुष्याणां ऊर्ध्वपुण्ड्रविवर्जितम् ।
द्रष्टव्यं नैव तत् गात्रं श्मशानसदृशं हि तत् ॥ १८॥

யச்ச₂ரீரம் மநுஷ்யாணும் ஊர்த்₄வபுண்ட்₃ரவிவர்ஜிதம்।
த்₃ரஷ்டவ்யம் நைவ தத் கா₃த்ரம் ஶ்மஶாநஸத்₃ருஶம் ஹி தத் ॥ 18.

ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லாத ஶரீரம் சுடுகாட்டை ஒத்த தாகையாலே அதைப் பார்க்கவே கூடாது.

ஊர்த்₄வபுண்ட்₃ரத₄ாரண ப₂லம்

मृदमादाय कृष्णायास्तुलस्या मूलसंभवाम् ।
धारयेदूर्ध्वपुण्ड्राणि तस्याः फलमनन्तकम् ॥ १९ ॥
यत्तु दिव्यं हरेः क्षेत्रं मृदमादाय तत्र वै ।
धारयेदूर्ध्वपुण्ड्राणि त्रिसन्ध्यासु द्विजोत्तमाः ॥ २० ॥

ம்ருத₃மாத₃ாய க்ருஷ்ணுயாஸ் துலஸ்யா மூலஸம்ப₄வாம் ।
த₄ாரயேதூ₃ர்த்₄வபுண்ட்₃ராணி தஸ்யா: ப₂லமநந்தகம் ॥ 19.
யத்து தி₃வ்யம் ஹரே: க்ஷேத்ரம் ம்ருத₃மாத₃ாய தத்ர வை ।
த₄ாரயேதூ₃ர்த்₄வபுண்ட்₃ராணி த்ரிஸந்த்₄யாஸு த்₃விஜோத்தமா: ॥ 20.

அந்தணர் தலைவர்களே! க்ருஷ்ணதுளஸியின் வேர்ப் பற்றிலிருக்கும மண்ணையாவது, கோயில, திருமலை, பெருமாள கோயில, திருநாராயணபுரம முதலான தி₃வ்ய தே₃ஶங்களிலுள்ள மண்ணையாவது கொண்டு காலை, நண் பகல், மாலை ஆகிய மூன்று ஸந்த்₄யாகாலங்களிலும் ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை த₄ரிப்பவன் அநந்தமான ப₂லனை அடைவான்.

மற்ற புண்ட்₃ரங்களை த₄ரிப்பதின் ப₂லன்

अच्छिद्रमूर्ध्वपुण्ड्रं वा त्रिपुण्ड्रं यस्तु धारयेत् ।
स जीवन्नेव शूद्रत्वमाशु गच्छत्यसंशयम् ॥ २१ ॥

வி—70

http://acharya.org

அச்சி₂த்₃ரமூர்த்₄வபுண்ட்₃ரம் வா த்ரிபுண்ட்₃ரம் யஸ்து
தா₄ரயேத் ।
ஸ ஜீவந்நேவ ஶூத்₃ரத்வமாஶு க₃ச்ச₂த்யஸம்ஶயம் ॥ 21.

இடைவெளியில்லாத ஊர்த்₄வபுண்ட்₃ரத்தையோ, திரி (திர்யக்) புண்ட்₃ரத்தையோ தா₄ரிப்பவன் (அந்தணப்பிறப்புடையவனாயினும்) இந்த ஜன்மத்திலேயே வைதி₃க கர்மங்களுக்குத் தகுதியற்ற ஶூத்₃ரனாகிவிடுவான் என்பது உறுதி.

த்ரிபுண்ட்₃ரதா₄ரியோடு ஸஹவாஸம் கூடாது

कपालदेहभस्मास्थिशुक्तिपाषाणधारिणम् ।
त्रिपुण्ड्रधारिणं विप्रं चण्डालमिव संत्यजेत् ॥ २२ ॥

கபாலதே₃ஹப₄ஸ்மாஸ்தி₂ ஶுக்திபாஷாணதா₄ரிணம் ।
த்ரிபுண்ட்₃ரதா₄ரிணம் விப்ரம் சண்டா₃ளமிவ ஸந்த்யஜேத் ॥ 22.

மண்டையோடு, பிணச்சாம்பல், எலும்பு, சங்கு, சிவலிங்க₃க்கல் இவைகளையோ, த்ரிபுண்ட்₃ரத்தையோ தா₄ரிப்பவனை, சண்டாளனைப்போலே விலக்கவேண்டும்.

த்ரிபுண்ட்₃ரதா₄ரியான அந்தணன் தே₃ஶப்₄ரஷ்டம் செய்யத்தக்கவன்

अग्निदं गरदं चैव लिङ्गपाषाणधारिणम् ।
तिर्यक्पुण्ड्रधरं विप्रं राजा राष्ट्रात् प्रवासयेत् ॥ २३ ॥

அக்₃நித₃ம் க₃ரத₃ஞ்சைவ லிங்க₃பாஷாணதா₄ரிணம் ।
திர்யக்புண்ட்₃ரத₄ரம் விப்ரம் ராஜா ராஷ்ட்ராத்
ப்ரவாஸயேத் ॥ 23.

வீட்டில் நெருப்பு வைப்பவன், உணவிலும் நீரிலும் விஷத்தைக் கலப்பவன், சிவலிங்க₃த்தை தா₄ரிப்பவன், திரிபுண்ட்₃ரத்தை தா₄ரிப்பவன் ஆகிய இத்தகைய அந்தணர்களை அரசன் தன் ராஜ்யத்திலிருந்து வெளியேற்ற வேண்டும்.

http://acharya.org

த்ரிபுண்ட்₃ரத₄ாரிக்கு கோ₃ஷ்டி₂யில் நிஷேத₄ம்

तिर्यक्पुण्ड्रधरो विप्रः पङ्क्तिमध्ये स्थितो यदि।
सा पङ्क्तिर्ब्रह्महत्यायां युज्यते नात्र संशयः॥ २४॥

तिर्यक्पुण्ड्रधरो विप्रो यत्र तिष्ठति दुर्मतिः।
स देशः पापसंभूतिः श्मशानसदृशो भवेत्॥ २५॥

திர்யக்புண்ட்₃ரத₄ரோ விப்ர: பங்க்திமத்₄யே ஸ்தி₂தோ யதி₃।
ஸா பங்க்திர் ப்₃ரஹ்மஹத்யாயாம் யுஜ்யதே நாத்ர ஸம்ஶய: ॥ 24.

திர்யக்புண்ட்₃ரத₄ரோ விப்ரோ யத்ர திஷ்டதி₂ துர்₃மதி:।
ஸ தே₃ஶ: பாபஸம்பூ₄திஶ் ஶ்மஶாநஸத்₃ருஶோ ப₄வேத் ॥ 25.

திரிபுண்ட்₃ரத₄ாரியான அந்தணனோடே ஒரு வரிசையில நின்றவர்கள் அனைவரும் ப்₃ரஹ்மஹத்தி தோ₃ஷத்தை அடைவார்கள் என்பதில் ஐயமில்லை. தன் த₄ர்மதததை விட்டுத தீயறிவுடையவனாய் த்ரிபுண்ட்₃ரத்தை த₄ரித்த அந்தணன் வாழும் தேஶம பாபமுடையதாய், சுடு காட்டை ஒத்ததாகும்.

த்ரிபுண்ட்₃ரத₄ாரித்₃விஜனுக்கு த₃ண்ட₃னை

ब्राह्मणः कुलजो विद्वान् तिर्यक्पुण्ड्रधरो यदि।
तं गर्दभं समारोप्य राजा राष्ट्रात् प्रवासयेत्॥ २६॥

ப்₃ராஹ்மண: குலஜோ வித்₃வாந் திர்யக்புண்ட்₃ரத₄ரோ யதி₃।
தம் க₃ர்த்த₃ப₄ம் ஸமாரோப்ய ராஜா ராஷ்ட்ராத் ப்ரவாஸயேத் ॥ 26.

நற்குலத்தில், கல்வியுடையவனாகப் பிறந்த அந்தணனும் திர்யக்புண்ட்₃ரத்தை த₄ரித்தானாகில், அரசன், அவனைக் கழுதையின்மேல் ஏற்றி தே₃ஶப்₄ரஷ்டம செய்யவேண்டும்.

तस्मात्तु ब्राह्मणो नित्यमूर्ध्वपुण्ड्रं हि धारयेत्।
ऊर्ध्वपुण्ड्रेण संसिद्धिं लभते नात्र संशयः॥ २७॥

http://acharya.org

தஸ்மாத்து ப்₃ராஹ்மணோ நித்யமூர்த்₄வபுண்ட்₃ரம் ஹி
த₄ாரயேத் ।
ஊர்த்₄வபுண்ட்₃ரேண ஸம்ஸித்₃தி₄ம் லப₄தே நாத்ர
ஸம்ஶய: ॥ 27.

ஆகையால், ப்₃ராஹ்மணன் ஊர்த்₄வபுண்ட்₃ரத்தையே த₄ரிக்கவேண்டும். அதனாலே எல்லா ஸித்₃தி₄யையும அடைவான் என்பதில் ஐயமில்லை.

ஊர்த்₄வபுண்ட்₃ரங்களின் ஸ்த₂ாநமும், அளவும், தே₃வதைகளும் (28-41)

ऊर्ध्वपुण्ड्रप्रमाणानि स्थानानि मुनिसत्तमाः।
व्यूहभेदेन नामानि वक्ष्यामि च पृथक् पृथक्॥ २८॥

ஊர்த்₄வபுண்ட்₃ரப்ரமாணாநி ஸ்த₂ாநாநி முநிஸத்தமா: ।
வ்யூஹபே₄தே₃ந நாமாநி வக்ஷ்யாமி ச ப்ருத₂க் ப்ருத₂க் ॥ 28

முனிவர்களே! இனி, ஊர்த்₄வபுண்ட்₃ரங்களின் அளவுகளையும், இடங்களையும், அவைகளின் நாமங்களையும் தனித்தனியாகச் சொல்லுகிறேன்.

चतुस्त्रिद्व्यङ्गुलं वापि विस्तारं परिकल्पयेत्।

சதுஸ்த்ரித்₃வ்யங்கு₃லம் வாபி விஸ்தாரம் பரிகல்பயேத் ।

நாலு அங்கு₃லமாவது, மூன்று அங்கு₃லமாவது, இரண்டு அங்கு₃லமாவது, அவரவர் ஶரீரம், அந்தந்த இடங்களுக்குத் தக்கபடி உயரமுள்ளவையாக ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை த₄ரிக்கவேண்டும்.

ललाटे केशवायेति चतुरङ्गुलमायतम्॥ २९॥
चतुश्चक्रधरं देवं शुद्धजाम्बूनदप्रभम्।

லலாடே கேஶவாயேதி சதுரங்கு₃லமாயதம் ॥ 29.
சதுஶ்சக்ரத₄ரம் தே₃வம் ஶுத்₃த₄ஜாம்பூ₃நத₂ப்ரப₄ம் ।

http://acharya.org

நெற்றியில் நாலு அங்கு₃லம் உயரமுள்ளதாக ஊர்த்₄வ புண்ட்₃ரத்தை த₄ரித்து, அதில்—(நாலு கைகளில்) நாலு சக்கரங்களையுடையவனாய், அழுக்கற்ற தங்கம்போல் ஒளியுள்ளவனான கேஶவனை "கேஶவாய நம:" என்னும் மந்திரத்தினால் ஆவாஹநம் செய்யவேண்டும். (இத்திருமண் காப்பிற்குக் கேஶவன் என்றே பெயர். மற்ற திருமண் காப்புகளும் அவ்வவ்விடங்களில் ஆவாஹநம் செய்யப்படும் நாராயணன் முதலானோரின் பெயரையே உடையவை.)

नाभौ नारायणायेति धारयेत्तु दशाङ्गुलम्॥ ३०॥
चतुःशङ्खधरं देवं इन्दीवरदलप्रभम्।

நாபௌ₄ நாராயணாயேதி த₄ாரயேத் து த₃ஶாங்கு₃லம்॥ 30.
சதுஶ்ஶங்க₂த₄ரம் தே₃வம் நீலஜீமூதஸந்நிப₄ம்।

கொப்பூழின் மேலே, நடு வயிற்றில், (நாலு கைகளில்,) நாலு ஶங்கு₂ங்களையும், நீலமேக₄ம்போன்ற காந்தியையும் உடைய நாராயணனை "நாராயணாய நம:" என்னும் மந்திரத்தினால் பத்து அங்கு₃லம் உயரமுள்ளதாக த₄ரிக்க வேண்டும்.

हृदये माधवायेति न्यसेदष्टाङ्गुलं तथा॥ ३१॥
चतुर्गदाधरं देवमिन्दीवरदलप्रभम्।

ஹ்ருத₃யே மாத₄வாயேதி ந்யஸேத₃ஷ்டாங்கு₃லம் தத₂ா॥ 31.
சதுர்க்க₃த₃ாத₄ரம் தே₃வமிந்தீ₃வரத₃ளப்ரப₄ம்।

மார்பில்—கருநெய்தல் போன்ற ஒளியையும்,(கைகளில்) நாலு க₃தை₃களையும் உடைய மாத₄வனை "மாத₄வாய நம:" என்னும் மந்திரத்தைச் சொல்லி, எட்டு அங்கு₃லம் உயரமுள்ளதாக த₄ரிக்கவேண்டும்.

गोविन्दायेति कण्ठे च धारयेत् चतुरङ्गुलम्॥ ३२॥
चतुर्धनुर्धरं देवं कोटिचन्द्रसमप्रभम्।

http://acharya.org

கோ₃விந்த₃ாயேதி கண்டே₂ ச த₄ாரயேச்சதுரங்கு₃லம் ॥ 32.
சதுர்த்த₄நுர்த்த₄ரம் தே₃வம் கோடிசந்த்₃ரஸமப்ரப₄ம் ।

கோடிசந்திரர்களை ஒத்த ஒளியையும, கைகளில் நாலு வில்களையும உடைய கோ₃விந்த₃னை "கோ₃விந்த₃ாய நம:" என்னும மந்திரததினல் நாலு அங்கு₃லம் உயரமுள்ள தாகக் கழுத்தில் த₄ரிக்கவேண்டும்.

विष्णुं च दक्षिणे कुक्षौ धारयेत्तु दशाङ्गुलम् ॥ ३३ ॥
चतुर्हलधरं देवं पद्मकिञ्जल्कसन्निभम् ।

விஷ்ணுஞ்ச த₃க்ஷிணே குக்ஷெள த₄ாரயேத்து த₃ஶாங்கு₃லம் ॥ 33.
சதுர்ஹலத₄ரம் தே₃வம் பத்₃மகிஞ்சல்கஸந்நிப₄ம் ।

தாமரைப்பூவின் தாதுவைப்போன்ற நிறத்தையும், கைகளில் நாலு கலப்பைகளையும் உடைய ஸ்ரீவிஷ்ணுவை "ஸ்ரீவிஷ்ணவே நம:" என்னும மந்திரத்தைச்சொல்லி, பத்து அங்கு₃லம உயரமுளளதாக வயிற்றின் வலது பக்கத்தில் த₄ரிக்கவேண்டும்.

मधुसूदनं बाहुमध्ये न्यसेदष्टाङ्गुलं तथा ॥ ३४ ॥
चतुर्मुसलभृद्देवं अरविन्दाभमेव च ।

மது₄ஸூத₃நம் பா₃ஹுமத்₄யே ந்யஸேத₃ஷ்டாங்கு₃லம் தத₂ா ॥ 34.
சதுர்முஸலப்₄ருத்₃தே₃வம் அரவிந்த₃ாப₄மேவ ச ।

தாமரைப்பூவைப்போன்ற ஒளியையும், கைகளில் நாலு உலக்கைகளையும உடைய மது₄ஸூத₃னனை, "மது₄ஸூத₃நாய நம:" என்னும் மந்திரத்தை அநுஸந்தி₄த்து, எட்டு அங்கு₃லம் உயரமுள்ளதாக வலது பு₄ஜத்தில் த₄ரிக்க வேண்டும்.

त्रिविक्रमायेति चांसे धारयेच्चतुरङ्गुलं ॥ ३५ ॥
चतुःखड्गधरं देवं ज्वलदग्निसमप्रभम् ।

http://acharya.org

த்ரிவிக்ரமாயேதி சாம்ஸே த₄ாரயேச்சதுரங்கு₃லம் || 35.
சது:க₂ட்₃க₃த₄ரம் தே₃வம் ஜ்வலத₃க்₃நிஸமப்ரப₄ம் |

ஒளிவீசும் அக்₃னியை ஒத்த தேஜஸ்ஸையும், கைகளில் நாலு கததிகளையும உடைய திரிவிக்கிரமனை "தரிவிகரமாய நம:" என்னும் மந்திரத்தால் வலது தோளில் நாலு அங்கு₃லம் உயரமுளளதாக த₄ரிக்கவேண்டும்.

वामनं वामकुक्षौ तु धारयेत्तु दशाङ्गुलम् ॥ ३६ ॥
चतुर्वज्रधरं देवं तरुणादित्यसन्निभम् ।

வாமநம் வாமகுக்ஷௌ து த₄ாரயேத் து த₃ஶாங்கு₃லம் || 36.
சதுர்வஜ்ரத₄ரம் தே₃வம் தருணாதி₃த்யஸந்நிப₄ம் |

இளஞ்சூரியன் போனற ஒளியையும், கைகளில் நாலு வஜ்ரங்களையும உடைய வாமநனை "வாமநாய நம:" என்னும மந்திரத்திஞல் வயிற்றின் இடது புறத்தில் பத்து அங்கு₃லம் உயரமுளளதாக த₄ரிக்கவேணடும.

श्रीधरं बाहुमध्ये तु न्यसेदष्टाङ्गुलं तथा ॥ ३७ ॥
पट्टसायसभृद्देवं पुण्डरीकाभमेव च ।

ஸ்ரீத₄ரம் ப₃ாஹுமத்₄யே து ந்யஸேத₃ஷ்டாங்கு₃லம் தத₂ா || 37.
பட்டஸாயுத₄ப்₄ருத்₃தே₃வம் புண்ட₃ரீகாப₄மேவ ச |

வெண தாமரையை ஒத்த ஒளியையும், கைகளில் நாலு பட்டஸம் என்னும் ஆயுத₄ங்களையும் உடைய ஸ்ரீத₄ரனை "ஸ்ரீத₄ராய நம:" என்னும மநதிரத்தைச் சொல்லி எட்டு அங்கு₃லம் உயரமுள்ளதாக இடது பு₄ஜத்தில் த₄ரிக்க வேண்டும்.

हृषीकेशं तु वामांसे धारयेत् चतुरङ्गुलम् ॥ ३८ ॥
चतुर्मुद्गरभृद्देवं विद्युद्गणसमप्रभम् ।

ஹ்ருஷீகேஶம் து வாமாம்ஸே த₄ாரயேச்சதுரங்கு₃லம் || 38.
சதுர்முத்₃க₃ரப்₄ருத்₃தே₃வம் வித்₃யுத்₃க₃ணஸமப்ரப₄ம் |

http://acharya.org

மின்னற்கூட்டம் போன்ற ஒளியையும், கைகளில் நாலு உழல்தடிகளையும் உடைய ஹ்ருஷீகேஶனை "ஹ்ருஷீகேஶாய நம:" என்னும மந்திரத்தைக்கொண்டு வலது தோளில் நாலு அங்கு₃லம் உயரமுள்ளதாக த₄ரிக்க வேண்டும.

पृष्ठे तु पद्मनाभेति धारयेच्चतुरङ्गुलम् ॥ ३९ ॥
सर्वायुधधरं देवं कोटिसूर्यसमप्रभम् ।

ப்ருஷ்டே₂ து பத்₃மநாபே₄தி த₄ாரயேச்சதுரங்கு₃லம் ॥ 39.
ஸர்வாயுத₄த₄ரம் தே₃வம் கோடி ஸூர்யஸமப்ரப₄ம் ।

கோடி ஸூர்யர்களை ஒதத ஒளியையும், கைகளில் எல்லா ஆயுத₄ங்களையும் உடைய பத்₃மநாப₄னை "பத்₃மநாப₄ாய நம:" என்னும் மந்திரத்தைச் சொல்லி, முதுகின் கீழே நடுவில் நாலு அங்கு₃லம உயரமுளளதாக த₄ரிக்க வேண்டும்.

ककुदे दामोदरेति धारयेत् चतुरङ्गुलम् ॥ ४० ॥
चतुष्पाशधरं देवं इन्द्रगोपसमप्रभम् ।

ககுதே₃ தா₃மோத₃ரேதி த₄ாரயேச்சதுரங்கு₃லம் ॥ 40.
சதுஷ்பாஶத₄ரம் தே₃வமிந்த்₃ரகோ₃பஸமப்ரப₄ம் ।

பட்டுப்பூச்சியை ஒத்த நிறத்தையும், கைகளில் நாலு பாஶாயுத₄ங்களையும் உடைய தா₃மோத₃ரனை "தா₃மோத₃ராய நம:" என்னும் மந்திரத்தை அநுஸந்தி₄த்து, கழுத்துப் பிடரியில் நாலு அங்கு₃லம் உயரமுள்ளதாக த₄ரிக்க வேண்டும்.

नमोऽस्तु वासुदेवाय मूर्ध्नि चैवं त्रयोदशम् ॥ ४१ ॥

நமோऽஸ்து வாஸுதே₃வாய மூர்த்₄நி சைவம் த்ரயோத₃ஶம் ॥41.

இப்படி த₄ரித்து மிகுந்த திருமண் காப்பை "வாஸுதே₃வாய நம:" என்று அநுஸந்தி₄த்து சிரஸ்ஸில் த₄ரிக்க வேண்டும்.

http://acharya.org

ஊர்த்₄வபுண்ட்₃ரம் அணிந்த சரீரத்தின் பெருமை

धारणादूर्ध्वपुण्ड्रस्य शरीरं मन्दिरं हरेः।
तस्मात्तु सततं धार्यं ऊर्ध्वपुण्ड्रं द्विजोत्तमैः॥४२॥

த₄ாரணாதூ₃ர்த்₄வபுண்ட்₃ரஸ்ய ஶரீரம் மந்தி₃ரம் ஹரே: ।
தஸ்மாத்து ஸததம் தா₄ர்யமூர்த்₄வபுண்ட்₃ரம்
த்₃விஜோத்தமை: ॥ 42.

(கேஶவன் முதலான பன்னிரண்டு திருநாமங்களை யுடைய) இந்த ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை அணிந்துள்ள ஶரீரம், அக்காரணத்தாலேயே ஸர்வேஶ்வரனுக்குக் கோயிலாயுள்ளது. ஆகையால் சிறப்புற்ற அந்தணர் முதலானோர் ஊர்த்₄வபுண்ட்₃ரங்களையே அணியக்கடவர்கள்.

ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லாவிடில் தோ₃ஷம்

ऊर्ध्वपुण्ड्रं विना यस्तु सन्ध्याकर्मादिकं चरेत्।
तत् सर्वं राक्षसैर्नीतं जपहोमादिकं तथा॥४३॥

ஊர்த்₄வபுண்ட்₃ரம் விநா யஸ்து ஸந்த்₄யாகர்மாதி₃கம் சரேத்।
தத் ஸர்வம் ராக்ஷஸைர் நீதம் ஜபஹோமாதி₃கம் தத₂ா ॥ 43.

ஊர்த்₄வபுண்ட்₃ரம த₄ரிக்காமல, ஸந்த்₄யாவந்த₃னம், மந்த்ர ஜபம, ஹோமம் முதலான நித்ய நைமித்திக கர்மங்களை அநுஷ்டி₂த்தாலும், அவற்றை ராக்ஷஸர்கள் கொண்டு போவார்கள். (அவை ராக்ஷஸர்களையே சேருமாகை யால, தே₃வர்கள் அவற்றால் திருப்தியடையமாட்டார்கள் என்றபடி.)

ते शवाः पुरुषा लोके येषां हृदि न केशवः।
केशवार्पितचित्ता ये न शवा न पुनर्भवाः॥४४॥

தே ஶவா: புருஷா லோகே யேஷாம் ஹ்ருதி₃ ந கேஶவ: ।
கேஶவார்ப்பிதசித்தா யே ந ஶவா ந புநர்ப்ப₄வா: ॥ 44.

http://acharya.org

கேஶவனை நெஞ்சிற்கொள்ளாத மனிதர்கள் (பரமாத்மாவாகிற உயிர் இலலாத) ஶவங்களே (பிணங்களே) யாவர்கள். கேஶவனை நெஞ்சிற்கொண்டவர்களோவெனில் (பரமாத்மாவாகிற உயிரை உடையவர்களாகையால்) ஶவங்களல்லர். மோக்ஷமடைபவர்களாகையாலே, இவவுலகில் மறுபடியும் பிறப்பை அடையார்கள்.

2. நாமஸம்ஸ்காரத்தின் க்ரமம்

नामकर्म प्रवक्ष्यामि पापनाशनमुत्तमम्।
जातकर्मणि वा क्षौरे तथा मौञ्जीनिबन्धने ॥ ४५ ॥
मन्त्राध्ययनकाले वा नाम कुर्याद्विधानतः।

நாமகர்ம ப்ரவக்ஷ்யாமி பாபநாஶநமுத்தமம்।
ஜாதகர்மணி வா க்ஷௌரே தத₂ா மௌஞ்ஜீநிப₃ந்த₄நே ॥ 45.
மந்த்ராத்₄யயநகாலே வா நாம குர்யாத்₃ விதா₄நத: ।

பஞ்சஸம்ஸ்காரங்களில மூன்றுவதான நாமஸம்ஸகாரத்தைப்பற்றி இனிக் கூறுகிறேன். அது எல்லாப்பாபங்களையும் போக்கக்கூடியது. எல்லாவற்றிலும சிறந்தது. இந்த ஸம்ஸகாரத்தை, ஜாதகர்மம் செயயும்போதாவது, சௌளம் (குடுமிவைத்தல்) செய்யுமபோதாவது, உபநயந காலத்திலாவது, இககாலங்கள் தபபினுல் மந்தரோபதே₃ஶ காலத்திலாவது, மேலே சொல்லப்போகிற முறைப்படி செய்யவேண்டும.

वासुदेवादयो ये च मूर्तयः केशवादयः ॥ ४६ ॥
मत्स्यकूर्मादयो व्यूहाः विभवाश्च तथाऽपरे।
तेषामन्यतमं नाम दद्याद्वाऽन्यं शुभाह्वयम् ॥ ४७ ॥

வாஸுதே₃வாத₃யோ யே ச மூர்த்தய: கேஶவாத₃ய: ॥ 46.
மத்ஸ்யகூர்மாத₃யோ வ்யூஹா விப₄வாஶ்ச தத₂ாऽபரே ।
தேஷாமந்யதமம் நாம த₃த்₃யாத்₃வாऽந்யம் ஶுப₄ாஹ்வயம் ॥ 47.

http://acharya.org

நாமஸம்ஸ்காரமாவது பெயரிடுதல். அப்படிப்பெய ரிடும்போது, வாஸுதே₃வன் முதலான வ்யூஹமூர்த்திக ளென்ன, கேஶவன் நாராயணன் முதலான வ்யூஹாந்தர மூர்த்திகளென்ன. மத்ஸ்யம, கூர்மம், வராஹம முதலான விப₄வாவதாரமூர்த்திகளென்ன, ஸ்ரீ ரங்க₃நாத₂ன், ஸ்ரீநிவா ஸன், வரத₃ராஜன் முதலான அர்ச்சாவதாரமூர்த்திக ளென்ன இவர்களில் தான் விரும்பிய ஒரு மூர்த்தியின் திருநாமத்தையாவது, வேறு மங்க₃ளமான (ஶட₂கோபன் ராமாநுஜன் முதலான ஆழ்வார்கள் ஆசார்யர்களுடைய) திருநாமத்தையாவது இடவேண்டும.

अभ्यर्च्य विधिवद्विष्णुं नाममूर्तिमनुस्मरन् ।
आवाहनार्घ्यपाद्यैश्च धूपदीपादिभिस्तथा ॥ ४८ ॥
गन्धपुष्पादिनाभ्यर्च्य जुहुयाच्च विधानतः ।

அப்₄யர்ச்ய விதி₄வத்₃ விஷ்ணும் நாமமூர்த்திமநுஸ்மரந் ।
ஆவாஹநார்க்₄யபாத்₃யைஶ்ச தூ₄பதீ₃பாதி₃பி₄ஸ்தத₂ா ॥ 48.
க₃ந்த₄புஷ்பாதி₃நாப்₄யர்ச்ய ஜுஹுயாச்ச விதா₄நத: ।

ஆசார்யன முதலில் எம்பெருமானுக்குத் திருவாரா த₄னம ஸமாப்பித்து, அடுத்தபடியாக சிஷ்யனுக்கு இடப் போகிற திருநாமத்தை உடைய மூர்த்தியை தியானித்து, அந்த மூர்த்தியைக் கலஶத்திலாவது கூர்ச்சத்திலாவது ஆவாஹநம் செய்து, அர்க்₄யம், பாத்₃யம், ஆசமநீயம் ஆகியவற்றை ஸமர்ப்பித்து, தூ₄பம, தீ₃பம், ச₂த்ரம் (குடை), சாமரம ஆகியவற்றை ஸமர்ப்பித்து, திருமாலை, சந்த₃னம், திருவாப₄ரணம் முதலானவைகளால் அலங் கரித்து, இவ்வண்ணம் ஷோட₃ஶோபசாரங்களைக்கொண்டு ஆராதி₄த்து, நாமகரணத்திற்சொல்லிய முறைப்படி அக்₃னியில் ஹோமம் செய்யவேண்டும.

http://acharya.org

चक्रादिधारणं यत्र यत्र वा नामकर्म च ॥ ४९ ॥
तन्मासाधिपतेर्नाम मासपेषु प्रशस्यते ।
मूर्तयः केशवाद्याश्च मार्गशीर्षादिमासपाः ॥ ५० ॥

சக்ராதி₃த₄ாரணம் யத்ர யத்ர வா நாமகர்ம ச ॥ 49.
தந்மாஸாதி₄பதேர் நாம மாஸபேஷு ப்ரஶஸ்யதே ।
மூர்த்தய: கேஶவாத்₃யாஶ்ச மார்க்க₃ஶீர்ஷாதி₃மாஸபா: ॥ 50.

கேஶவன் முதலாக தா₃மோத₃ரனீருகவுள்ள பன்னிரு மூர்த்திகளும், மார்கழி முதல் கார்த்திகை ஈருகவுள்ள பன்னிரு மாதங்களுக்கும் தே₃வதைகள். ஆகையால் அந்த மூர்த்திகளின் திருநாமங்களை இடும்போது, எந்த மாஸத்தில் தாபஸமஸ்காரம் அல்லது நாமகரணம் செய்யப் படுகிறதோ, அந்த மாஸத்திறகு தே₃வதையான மூர்த்தி யின் திருநாமத்தை இடுவது மிகச்சிறந்தது.

या तन्मासपतेर्मूर्तिः तत्र तां देशिकः स्वयम् ।
परिक्रम्य नमस्कृत्य ह्यावाह्य पुरतो हरेः ॥ ५१ ॥
तन्मूर्तिं मनसा ध्यात्वा नाम तस्याः प्रचोदयेत् ।

யா தந்மாஸபதேர் மூர்த்திஸ் தத்ர தாம் தே₃ஶிகஸ் ஸ்வயம் ।
பரிக்ரம்ய நமஸ்க்ருத்ய ஹ்யாவாஹ்ய புரதோ ஹரே: ॥ 51.
தந்மூர்த்திம் மநஸா த்₄யாத்வா நாம தஸ்யா: ப்ரசோத₃யேத் ।

கேஶவன் முதலான திருநாமங்களை இடும்போதும், அந்த மாஸத்திற்கு அதி₄பதியின் மூர்த்தியை ப₄க₃வத் ஸந்நிதி₄க்கு எதிரில் ஆவாஹநம் செய்து, முன் சொன்ன எல்லா உபசாரங்களையும், ப்ரத₃க்ஷிண நமஸ்காரங்களையும் செய்து, அந்த மூர்த்தியை நெஞ்சில் தியானித்து, ஆசாரி யன் அத்திருநாமத்தை சிஷ்யனுக்கு இடவேண்டும்.

नाम वैष्णवताहेतुः मुख्य इत्युच्यते बुधैः ॥ ५२ ॥
योजयेन्नाम दासान्तं भगवन्नामपूर्वकम् ।
तथा भागवतानां च नाम स्यात् नामपूर्वकम् ॥ ५३ ॥

http://acharya.org

நாம வைஷ்ணவதாஹேதுர் முக்₂ய இத்யுச்யதே பு₃தை₄: || 52.
யோஜயேந்நாம தா₃ஸாந்தம் ப₄க₃வந்நாமபூர்வகம் |
ததா₂ ப₄ாக₃வதாநாஞ்ச நாம ஸ்யாந்நாமபூர்வகம் || 53.

இதி ஸ்ரீபராஶர ஸ்ம்ருதௌ உத்தரகா₂ண்டே₃
விஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரே.
புண்ட்₃ர நாம ஸம்ஸ்காரவர்ணநம் நாம த்₃விதீயோऽத்₄யாய: ||

நாமமிடும்போது, முதலில் ப₄க₃வந்நாமத்தையும் கடைசியில தா₃ஸபத₃த்தையும் (ஸ்ரீக்ருஷ்ணதா₃ஸன் என்பதுபோலே) சேர்க்கவேண்டும். ப₄ாக₃வதர்களுடைய நாமத்தை இடும்போதும், முதலில் அவர்களுடைய திரு நாமத்தையும், கடைசியில் தா₃ஸபத₃த்தையும் (ஸ்ரீராமா நுஜதா₃ஸன் என்பதுபோலே) சேர்க்கவேண்டும. ப₄க₃ வத்ஸம்ப₃ந்த₄ம் பெற்று வைஷ்ணவனுவதற்கு இந்த நாமஸம்ஸ்காரம் முக்கியமான காரணமாகும். (இது இல்லா விடில் வைஷ்ணவத்வம் கிடையாது). இவ்விஷயத்தை ஸ்வரூபஜ்ஞானமுள்ள அறிவாளிகள் கூறுகிருர்கள்.

ஸ்ரீ பராஶரஸ்ம்ருதியின் உத்தரகா₂ண்ட₃மான
விஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரத்தில் புண்ட்₃ர நாம ஸம்ஸ்காரவர்ணநம்
என்கிற இரண்டாம் அத்தியாயம் முற்றிற்று.

3-வது அத்தியாயம்

மந்த்ரஸம்ஸ்காரத்தின் க்ரமம்

श्रीपराशर उवाच—

अथातः संप्रवक्ष्यामि मन्त्रदीक्षाविधिं परम् ।

ஸ்ரீபராஶர உவாச—

அதா₂தஸ் ஸம்ப்ரவக்ஷ்யாமி மந்த்ரதீ₃க்ஷாவிதி₄ம் பரம் |

ஸ்ரீபராஶரப₄க₃வான் ரிஷிகளைப் பார்த்துச் சொல்லு கிருர்,—நாமஸம்ஸ்காரத்தைச் சொன்னபிறகு, அதற்குப் பின் செய்யவேண்டிய மந்த்ரஸம்ஸ்காரம் செய்யும் முறை யைச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

http://acharya.org

पूर्वाह्णे विधिवत् स्नात्वा अर्चयेत् पुरुषोत्तमम् ॥ १ ॥
स्नातं शिष्यं समाहूय होमं कुर्याद्विधानतः ।
मन्त्रद्वयेन जुहुयात् आज्यमष्टोत्तरं शतम् ॥ २ ॥
वैष्णव्या चैव गायत्र्या मूलमन्त्रेण देशिकः ।
तथा पुरुषसूक्तेन विष्णुमन्त्रेण देशिकः ॥ ३ ॥
हुत्वा प्रदक्षिणं कृत्वा सशिष्यः प्रणमेद्गुरुः ।

பூர்வாஹ்ணே விதி₄வத் ஸ்நாத்வா அர்ச்சயேத்
புருஷோத்தமம் ॥ 1.
ஸ்நாதம் ஶிஷ்யம் ஸமாஹூய ஹோமம் குர்யாத் விதா₄நத: ।
வருஷந்தோறுமோ, மாதந்தோறுமோ, பக்ஷந்தோறுமோ முறைப்படி எமபெருமானுக்கு உதஸவம் செய்வதால் நாடும் நகரமும் செழிப்படையும்.

ஸ்ரீ பராஶரஸ்ம்ருதியின் உத்தரகா₂ண்ட₃மான விஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரத்தில் நைமித்திகோத்ஸவ வர்ணநம் என்கிற எட்டாவது அத்தியாயம் நிறைவுபெற்றது.

9-வது அத்தியாயம்

மஹோத்ஸவ வர்ணநம்

श्रीपराशर उवाच—

महोत्सवविधिं वक्ष्ये वासुदेवस्य शार्ङ्गिणः ।
नवरात्रं सप्तरात्रं पञ्चरात्रमथापि वा ॥ १ ॥
त्रिरात्रं वा प्रकुर्वीत यथाशक्ति द्विजोत्तमाः ।

ஸ்ரீ பராஶர உவாச—

மஹோத்ஸவவிதி₄ம் வக்ஷ்யே வாஸுதே₃வஸ்ய ஶார்ங்கி₃ண: ।
நவராத்ரம் ஸப்தராத்ரம் பஞ்சராத்ரமத₂ாபி வா ॥ 1.
த்ரிராத்ரம் வா ப்ரகுர்வீத யத₂ாஶக்தி த்₃விஜோத்தமா: ।

ஸ்ரீபராஶரமஹர்ஷி கூறினர்:—அந்தணர் தலைவர்களே! ஸ்ரீமந்நாராயணனுக்கு மஹோத்ஸவம் செய்யவேண்டிய முறையைக் கூறுகிறேன் கேளுங்கள். ஒன்பது, அல்லது ஏழு, அல்லது ஐந்து, அல்லது மூன்று நாளாவது தன் ஶக்திககுத் தக்கபடி மஹோத்ஸவம் செய்யவேண்டும்.

http://acharya.org

आदौ शुभेऽह्नि कर्तव्यमङ्कुरार्पणमादरात् ॥ २ ॥
स्वर्णराजतताम्रादिपालिकासु प्रकल्पयेत् ।
स्वस्तिवाचनपूर्वं तु शरावेष्वव्रणेषु वा ॥ ३ ॥

ஆதௌ₃ ஶுபே₄ऽஹ்நி கர்த்தவ்யமங்குரார்ப்பணமாத₃ராத் || 2.
ஸ்வர்ணராஜததாம்ராதி₃பாலிகாஸு ப்ரகல்பயேத் ।
ஸ்வஸ்திவாசநபூர்வம் து ஶராவேஷ்வவ்ரணேஷு வா || 3.

உத்ஸவத்திற்கு முதல்நாள் நல்ல லக்₃னத்தில், (ஶக்திக்குத் தக்கபடி) பொன் அல்லது வெள்ளி அல்லது செம்பு அல்லது மண்ணாலான பாலிகையிலாவது, பிளவில்லாத மடக்கிலாவது மண் நிறைத்து, ஸ்வஸ்திவாசந மந்திரத்தைச் சொல்லி, அதில் அங்குரார்ப்பணம் (நவதா₄ன்யங்களைக் கலந்து தெளித்தல) எனப்படும் திருமுளையுத்ஸவத்தைச் செய்யவேண்டும்.

प्रातः स्नात्वा विधानेन पूजयेदच्युतं बुधः ।
गन्धैः पुष्पैश्च धूपाद्यैः नैवेद्यैर्विविधैरपि ॥ ४ ॥
प्रत्यृचं वैष्णवैः सूक्तैः पुष्पाणि सुरभीणि च ।
प्रदद्यात् केशवाद्यैश्च नामभिः प्रणवान्वितैः ॥ ५ ॥
मन्त्रद्वयेन पुष्पाणि दद्यादष्टोत्तरं शतम् ।
ऋत्विजो वरयेत् पश्चात् पञ्चकालपरायणान् ॥ ६ ॥
विप्रान् द्वादशसंख्याकान् व्यापकार्थविदः सुधीः ।
चत्वारश्चतुरो वेदान् तथा सूक्तचतुष्टयम् ॥ ७ ॥
चतुर्मन्त्रांश्च चत्वारो जपेयुः क्रमशो द्विजाः ।

ப்ராதஸ் ஸ்நாத்வா வித₄ாநேந பூஜயேத₃ச்யுதம் பு₃த₄: ।
க₃ந்தை₄: புஷ்பைஶ்ச தூ₄பாத்₃யைர் நைவேத்₃யைர் விவிதை₄ரபி || 4.
ப்ரத்ய்ருசம் வைஷ்ணவைஸ் ஸூக்தை: புஷ்பாணி ஸுரபீ₄ணி ச ।
ப்ரத₃த்₃யாத கேஶவாத்₃யைஶ்ச நாமபி₄: ப்ரணவாந்விதை: || 5.
மந்த்ரத்₃வயேந புஷ்பாணி த₃த்₃யாத₃ஷ்டோத்தரம் ஶதம் ।
ருத்விஜோ வரயேத் பஶ்சாத் பஞ்சகாலபராயணாந் || 6.

http://acharya.org

விப்ராந் த்₃வாத₃ஶஸங்க்₂யாகாந் வ்யாபகார்த்த₂வித₃ஸ்ஸுதீ₄: ।
சத்வாரஶ் சதுரோ வேத₃ாந் தத₂ா ஸூக்தசதுஷ்டயம் ॥ 7.
சதுர்மந்த்ராம்ஶ்ச சத்வாரோ ஜபேயு: க்ரமஶோ த்₃விஜா: ।

முதல்நாள் உத்ஸவத்தன்று விடியற்காலையில் முறைப்படி ஸ்நானம் செயது, எம்பெருமான் திருமுன்பே சென்று சந்த₃னம், புஷ்பம், தூ₁பம் (புகை), தீ₃பம் முதலான உபசாரங்களை ஸமர்ப்பித்து, பலவித₄மான ப்ரஸாத₃ங்களையும் அமுதுசெய்வித்து, புருஷஸூக்தம முதலான விஷ்ணுவைப் பற்றிய ஸூக்தங்களில் ஒவ்வொரு மந்திரத்தோடும், கேஶவன் முதலான பன்னிரு நாமங்களோடும் ப்ரணவத்தைச் சேர்த்து ஓதி, நறுமணம் மிகக பூக்களால் அர்ச்சனை செய்யவேண்டும். பிறகு த்₃வயமந்திரததினுல் நூற்றெட்டு முறை அர்ச்சனை செய்யவேண்டும. பிறகு, (திருவஷ்டாக்ஷரம், திருத்₃வாத₃ஶாக்ஷரி, விஷ்ணுஷட₃க்ஷரி என்னும்) வ்யாபகமந்திரஙகளின பொருளையறிந்தவர்களான பஞ்சகாலபராயணர் (இருமுப்பொழுதேத்தும் தொண்டர்) பனனிருவரை வரிக்கவேண்டும். அவர்களில் நால்வர் நான்கு வேத₃ங்களையும், நால்வர் புருஷ நாராயண விஷ்ணு ஸ்ரீஸூக்தங்கள் நாலையும, எஞ்சிய நாலவர் (முற்கூறிய மூன்று வ்யாபகமந்திரங்கள் த்₃வயம ஆகிய) நாலு மந்திரங்களையும ஜபிக்கவேண்டும.

होममण्टपमासाद्य जुहुयात् पायसं ततः ॥८॥
मध्वाज्यगुडसंयुक्तमग्नौ लक्षणसंयुते ।
प्रत्यृचं वैष्णवैः सूक्तैः प्रणवाद्यैरतन्द्रितः ॥९॥
तथा श्रीभूप्रकाशाभ्यां मन्त्राभ्यां च पृथक् पृथक् ।
चतुर्भिर्वैष्णवैर्मन्त्रैः अष्टोत्तरशतं पृथक् ॥ १० ॥
वैष्णव्या चैव गायत्र्या हुत्वा शेषं समाचरेत् ।

ஹோமமண்டபமாஸாத்₃ய ஜுஹுயாத் பாயஸம் தத: ॥ 8.
மத்₄வாஜ்யகு₃ட₃ஸம்யுக்தமக்₃நௌ லக்ஷணஸம்யுதே ।

http://acharya.org

ப்ரத்யருசம் வைஷ்ணவைஸ் ஸூக்தை:
ப்ரணவாத்3யைரதந்த்3ரித: || 9.
ததா2 ஸ்ரீபூ4ப்ரகாஶாப்4யாம் மந்த்ராப்4யாம் ச
ப்ருத2க் ப்ருத2க் |
சதுர்ப்பி4ர் வைஷ்ணவைர் மந்த்ரைரஷ்டோத்தரஶதம்
ப்ருத2க் || 10.
வைஷ்ணவ்யா சைவ கா3யத்ர்யா ஹுத்வா ஶேஷம் ஸமாசரேத் |

பிறகு யாகஶாலைக்கு வந்து, தேன், நெய், வெல்லம் கலந்த பாலினுற்செய்த பாயஸத்தை—முறைப்படி ப்ரதிஷ்டை செய்யப்பட்ட ஹோமாக்3னியில், புருஷ நாராயண விஷ்ணு ஸ்ரீ பூ4மி ஸூக்தங்களில் ஒவ்வொரு மந்திரங்களோடும் ப்ரணவத்தைச் சேர்த்து ஒவ்வொரு முறையும், முற்கூறிய வ்யாபகமந்திரங்கள், த்3வயம் ஆகிய நாலுமந்திரங்களால் தனித்தனியே நூற்றெட்டு முறையும், விஷ்ணு கா3யத்ரியாலும் (ப்ரணவம் முன்னாக) ஹோமம் செய்து, அதன்பின் பாலிகையைப் பூஜிப்பது முதலிய கார்யங்களைச் செய்யவேண்டும்.

ततः स्यन्दनमासाद्य चतुर्भिस्तोरणैर्युतम् ॥ ११ ॥
छत्रध्वजपताकाद्यैः सर्वतः समलङ्कृतम् ।
हयैर्लक्षणसंयुक्तैः सर्वदामविभूषितैः ॥ १२ ॥
स्वलङ्कृतैः समायुक्तं नानारत्नविभूषितम् ।
तस्मिन् शुभासने रम्ये मृदुश्लक्ष्णपरिच्छदे ॥ १३ ॥
निवेश्य देवमर्घ्याद्यैरुपचारैः समर्चयेत् ।

ததஸ் ஸ்யந்த3நமாஸாத்3ய சதுர்பி4ஸ் தோரணைர்யுதம் || 11.
ச2த்ரத்4வஜபதாகாத்3யைஸ் ஸர்வதஸ்ஸமலங்க்ருதம் |
ஹயைர் லக்ஷணஸம்யுக்தைஸ் ஸர்வதா3மவிபூ4ஷிதை: || 12.
ஸ்வலங்க்ருதைஸ் ஸமாயுக்தம் நாநாரத்நவிபூ4ஷிதம் |
தஸ்மிந் ஶுபா4ஸநே ரம்யே ம்ருது3ஶ்லக்ஷ்ணபரிச்ச2தே3 || 13.
நிவேஶ்ய தே3வமர்க்4யாத்3யைருபசாரைஸ் ஸமர்ச்சயேத் |

http://acharya.org

பிறகு, நான்கு தோரணவாசல்களிட்டும், குடை கொடி, கொடித்துணி முதலியவைகளைக கட்டியும், புஷ்பம் முதலானவற்ருலும எல்லா இடத்திலும் அலங்க ரிககப்பெற்றதும், கடிவாளம், சேணம, மாலை முதலிய வற்ருல அலங்கரிக்கபபெற்றவையும், உயர்ந்த ஜாதி லக்ஷணங்கள் உடையவையும, நனகு அலங்கரிக்கப் பெற்றவையுமான குதிரைகளோடு கூடியதும, பலவித₄ மான ரத்னங்களால இழைக்கப்பெற்றதுமான திருததேரின் மேல், அழகிய மங்க₃ளமான ஆஸனத்தில், மென்மையும் வழவழப்புமுடைய விரிப்பை விரித்து அதில் ஸ்ரீமந் நாராயணனை எழுந்தருளப்பண்ணி, அர்க₄யம், பாத்₃யம் முதலான உபசாரங்களினுல ஆராதி₄க்கவேணடும.

अङ्के देवीं समभ्यर्च्य पुरतः पतगेश्वरम् ॥ १४ ॥
पृष्ठतो नागराजानं पूजयेच्छक्तिसंयुतम् ।
परितः शङ्खचक्रादिहेतीरभ्यर्चयेत् ततः ॥ १५ ॥

அங்கே தே₃வீம் ஸமப்₄யர்ச்ய புரத: பதகே₃ஶ்வரம் ॥ 14.
ப்ருஷ்டடதோ நாக₃ராஜாநம் பூஜயேச்ச₂க்திஸம்யுதம் ।
பரிதஶ் ஶங்க₂சக்ராதி₃ ஹேதீரப்₄யர்ச்சயேத் தத: ॥ 15.

பினபு, அந்த எம்பெருமானுடைய மடியில் பெரிய பிராட்டியாரையும, முன்புறம் க₃ருட₃னையும், பின்புறம் ஶகதியுடைய திருவனந்தாழ்வானையும், சுற்றிலும ஶங்க₂ம் சகரம முதலிய தி₃வயாயுத₄ங்களையும ஆராதி₄க்கவேண்டும்.

चण्डादिकांस्तोरणेषु ध्वजेषु कुमुदादिकान् ।
रथचक्रेषु वेदांश्च तदङ्गानि च कूबरे ॥ १६ ॥
सेतिहासपुराणानि सर्वतः परिपूजयेत् ।
चामरेषु च छन्दांसि विमलाद्यष्टशक्तिभिः ॥ १७ ॥
हयेषु चतुरो मन्त्रान् दारुकं चैव यन्तरि ।
विमले चातपत्रे च चन्द्रसूर्यौ समर्चयेत् ॥ १८ ॥

http://acharya.org

सर्वेयोक्त्रेषु वेदांश्च सावित्रीं दर्पणे तथा।
एवं स्यन्दनमभ्यर्च्य तस्मिन् देवं समर्चयेत्॥१९॥

சண்டா₃தி₃காம்ஸ்தோரணேஷு த்₄வஜேஷு குமுத₃ாதி₃காந்।
ரத₂சக்ரேஷு வேதா₃ம்ஶ்ச தத₃ங்க₃ாநி ச கூப₃ரே॥ 16.
ஸேதிஹாஸபுராணாநி ஸர்வத: பரிபூஜயேத்।
சாமரேஷு ச சந்த₃ாம்ஸி விமலாத்₃யஷ்டஶக்திபி₄:॥ 17.
ஹயேஷு சதுரோ மந்த்ராந் தா₃ருகம் சைவ யந்தரி।
விமலே சாதபத்ரே ச சந்த்₃ரஸூர்யௌ ஸமர்ச்சயேத்॥ 18.
ஸர்வயோக்த்ரேஷு வேதா₃ம்ஶ்ச ஸாவித்ரீம் த₃ர்ப்பணே தத₂ா।
ஏவம் ஸ்யந்த₃நமப்₄யர்ச்ய தஸ்மிந் தே₃வம் ஸமர்ச்சயேத்॥ 19.

அத்திருத்தேரில், நான்கு தோரணவாசல்களிலும் சண்டன் முதலிய எட்டு த்₃வாரபாலகர்களையும், கொடிகளில் குமுத₃ன் முதலிய க₃ணாதி₄பர்களையும், நானகு சக்ரங்களில் நாலு வேதங்களையும, ஏர்க்காலில் ஶீக்ஷை முதலிய வேதா₃ங்க₃ங்களையும, சுற்றிலும் இதிஹாஸ புராணங்களையும, சாமரங்களில் கா₃யத்ரீ முதலிய சந்த₃ஸ்ஸுக்களையும், விமலை முதலான சாமரமேந்திய எட்டு ஸ்த்ரீரூபங்கொண்ட சக்திகளையும, குதிரைகளில் திருவஷ்டாக்ஷரம், த்₃வாத₃ஶாக்ஷரி, ஷட₃க்ஷரி, த்₃வயம் எனும நாலு மந்திரங்களையும், ஸாரதி₂யிடம (க்ருஷ்ணஸாரதி₂யான) தா₃ருகனையும, பரிஶுத்₃த₄மான குடையில் சந்த்₃ரஸூர்யர்களையும, கடிவாளங்களில வேத₃ங்களையும, கண்ணுடியில் கா₃யத்ரீமந்திரத்தையும் ஆவாஹநம்செய்து, அவைகளுக்கு ஆராத₄னம் ஸமர்ப்பித்து, அதற்குப்பின் எம்பெருமானைத் தேரில் எழுந்தருளப்பண்ணித் திருவாராத₄னம் ஸமர்ப்பிகக வேண்டும.

ऋत्विग्गणश्चतुर्वेदान् प्रपठन् परितो व्रजेत्।
वाद्यघोषं नृत्तगीते पुरतः कारयेत्तथा॥२०॥
पुण्यस्तोत्रैर्मनोरम्यैः वन्दिभिः परिकीर्तये ।

सर्वतः पुरमार्गेषु शोधनं सेचनं जलैः ॥ २१ ॥
तोरणैश्च पताकाद्यैरलङ्कारं शुभावहैः ।

ருத்விக்₃க₃ணஶ்ச சதுர்வேதா₃ந் ப்ரபட₂ந் பரிதோ வ்ரஜேத் ।
வாத்₃யகே₄ஷம் ந்ருத்தகீ₃தே புரத: காரயேத் தத₃ா ॥ 20.
புண்யஸ்தோத்ரைர் மநோரம்யைர் வந்தி₃பி₄: பரிகீர்த்தயேத் ।
ஸர்வத: புரமார்க்கே₃ஷு ஶோத₄நம் ஸேசநம் ஜலை: ॥ 21.
தோரணைஶ்ச பதாகாத்₃யைரலங்காரம் ஶுபா₄வஹை: ।

திருத்தேரைச் சுற்றிலும் ருத்விக்குகள நாலுவேதங்களையும் பாராயணம செய்துகொண்டு கூடப்போக வேண்டும. முன்புறம் வாத்யமுழககங்களும், நாட்டியம், பாட்டு முதலியவையும் நடக்கவேண்டும். ஸ்துதிபாடகர்களைகொண்டு நெஞ்சையீர்க்கும புண்யஸ்தோத்ரங்களை இசைக்கச் செய்யவேணடும். எல்லா வீதிகளையும் ஶுத்தப்படுததி ஜலம தெளித்து, அழகிய தோரணங்களாலும், கொடிகள முதலானவறறுலும் அலங்காரம் செய்யவேண்டும.

उत्सवे वासुदेवस्य वीथ्याः संमार्जने कृते ॥ २२ ॥
उच्छिष्टकेशभस्मास्थि स्पृष्ट्वा न स्नानमाचरेत् ।
उत्सवे वासुदेवस्य स्पृष्टास्पृष्टि न विद्यते ॥ २३ ॥
उत्सवे वासुदेवस्य यः स्नाति स्पर्शशङ्कया ।
स्वर्गस्थाः पितरस्तस्य पतन्ति नरके क्षणात् ॥ २४ ॥

உத்ஸவே வாஸுதே₃வஸ்ய வீத்₂யாஸ் ஸம்மார்ஜநே க்ருதே ॥ 22.
உச்சி₂ஷ்டகேஶப₄ஸ்மாஸ்தி₂ ஸ்ப்ருஷ்ட்வா ந ஸ்நாநமாசரேத் ।
உத்ஸவே வாஸுதே₃வஸ்ய ஸ்ப்ருஷ்டாஸ்ப்ருஷ்டி ந வித்₃யதே ॥ 23.
உத்ஸவே வாஸுதே₃வஸ்ய ய: ஸ்நாதி ஸ்பர்ஶஶங்கயா ।
ஸ்வர்க்க₃ஸ்தா₂: பிதரஸ் தஸ்ய பதந்தி நரகே க்ஷணாத் ॥ 24.

ஸ்ரீமந் நாராயணனுடைய உதஸவத்தில வீதியை ஶுத்தம செயதபினபு—எச்சில், மயிர், சாம்பல், எலுமபு

http://acharya.org

முதலிய அஶுத்₃த₄ப்பொருள்களைத் தீண்டினாலும் ஸ்நாநம செய்யக்கூடாது. எம்பெருமானுடைய உத்ஸவத்தில தீண்டத்தகாதவைகளைத் தீண்டினால் ஏற்படும் தீட்டு கிடையாது. அவற்றைத தீண்டியதால் தீட்டு உண்டென நினைத்து எவனொருவன் ஸ்நாநம் செய்கிறானோ, அவனுடைய பித்ருககள் ஸவர்க்க₃த்திலிருந்தாலும உடனே நரகத்தில் வீழ்வர்.

उत्सवं वासुदेवस्य यो न सेवेत दुर्मतिः।
युगकोटिसहस्रं स पच्यते नरकाग्निना ॥ २५ ॥
तस्मात्सर्वप्रयत्नेन भक्त्या सेवेत वैष्णवः।

உத்ஸவம் வாஸுதே₃வஸ்ய யோ ந ஸேவேத து₃ர்மதி: ।
யுக₃கோடிஸஹஸ்ரம் ஸ ப்ச்யதே நரகாக்₃நிநா ॥ 25.
தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந ப₄க்த்யா ஸேவேத வைஷ்ணவ: ।

எமபெருமான் திருவீதியில் எழுந்தருளும்போது எவனொருவன அறிவுகேட்டினால் ஸேவிக்காமலிருக்கிறானோ, அவன் ஆயிரங்கோடி யுக₃ங்கள் நரகநெருப்பில் வெந்து கொண்டிருப்பான். ஆகையால் ஸ்ரீ வைஷ்ணவன் மிக முயன்று ப₄க்தியுடன் எம்பெருமானை உத்ஸவத்தில் ஸேவிக்கக்கடவன.

हरिद्रादीन् सुगन्धांश्च प्रकिरन् कुसुमाक्षतान् ॥ २६ ॥
अलङ्कृतासु रम्यासु रथ्यासु विमलासु च।
वादित्रनर्तनैर्गानैः परिणीय जनार्दनम् ॥ २७ ॥
बहुभिर्गीतवादित्रैर्देवं रम्ये निवेशयेत्।
दीपैर्नीराजनं कृत्वा दद्यादर्घ्यादिपूजनम् ॥ २८ ॥

ஹரித்₃ராதீ₃ந் ஸுக₃ந்த₄ாம்ஶ்ச ப்ரகிரந் குஸுமாக்ஷதாந் ॥ 26.
அலங்க்ருதாஸு ரம்யாஸு ரத்₂யாஸு விமலாஸு ச ।
வாதி₃த்ரநர்த்தநைர் க₃ாநை: பரிணீய ஜநார்த்த₃நம் ॥ 27.
ப₃ஹுபி₄ர் கீ₃தவாதி₃த்ரைர் தே₃வம் ரம்யே நிவேஶயேத் ।
தீ₃பைர் நீராஜநம் க்ருத்வா த₃த்₃யாத₃ர்க்₄யாதி₃பூஜநம் ॥ 28.

http://acharya.org

மஞ்சள்பொடி, புஷ்பம் முதலிய நறுமணம மிக்க பொருள்களேயும, அக்ஷதை முதலிய மங்க₃ளகரமான பொருள்களேயும, ஶுத்₃த₄மாகப பெருக்கி நீர்தெளித் திருக்கிற வீதிகளில அலங்காரமாக இறைத்து, அவ்வீதி களில் மங்க₃ளவாத₃யம் அடித்து, நலல பாடல்களேப்பாடி, நாட்டியங்களே ஆடிக்கொண்டு வருபவர்கள் சூழ எம் பெருமானுக்குப் புறப்பாடு செய்விதது, பிறகு ஓர் மண்ட பத்தில் எழுந்தருளச்செய்து, மங்க₃ளவாத₃யங்கள் முழக்கிப பாடல்கள் பாடி, மஙக₃ளஹாரத்தி ஸமர்பபித்துத் திருவந்திக காபபெடுத்து, அர்க₄யம் முதலானவை ஸமர்ப்பித்துத் திருவாராத₄னம் செய்யவேண்டும.

अभिषेकं ततः कुर्यात् गन्धतोयैश्च वासितैः।
संवेष्टय शुक्लवसनैः मधुपर्कं निवेदयेत् ॥ २९ ॥
शुभासने निवेश्याथ पूजयेदुपचारकैः।
नैवेद्यैर्विविधैर्भक्ष्यैः पानकैश्च सुशीतलैः ॥ ३० ॥
कर्पूरेण च ताम्बूलं दत्वाऽऽचामं निवेदयेत्।
आशिषो वाचनं कुर्यात् कुसुमाक्षतसञ्चयैः ॥ ३१ ॥
ऋत्विजां वेदपाठेन सामगानैः शुभाह्वयैः।
पश्चात्तु पुष्पपर्यङ्के शाययित्वा रमाजुषम् ॥ ३२ ॥
मङ्गलाशासनं कुर्यात् पुण्यस्तोत्रैर्मनोहरैः।
ततः प्रदक्षिणं कृत्वा नमस्कृत्य जनार्दनम् ॥ ३३ ॥
वैष्णवान् भोजयेत् पश्चात् पायसान्नं सशर्करम्।

அபி₄ஷேகம் தத: குர்யாத் க₃ந்த₄தோயைஶ்ச வாஸிதை: ।
ஸம்வேஷ்ட்ய ஶுக்லவஸநைர் மது₄பர்க்கம் நிவேத₃யேத் ॥ 29.
ஶுப₄ாஸநே நிவேஶ்யாத₂ பூஜயேது₃பசாரகை: ।
நைவேத்₃யைர் விவிதை₄ர் ப₄க்ஷ்யை: பாநகைஶ்ச
ஸுஶீதலை: ॥ 30.

http://acharya.org

கர்ப்பூரேண ச தாம்பூ3லம் த3த்வாऽऽசாமம் நிவேத3யேத்|
ஆஶிஷோ வாசநம் குர்யாத் குஸுமாக்ஷதஸஞ்சயை: || 31.
ருத்விஜாம் வேத3பாடே2ந ஸாமகா3நைஶ் ஶுபா4ஹ்வயை: |
பஶ்சாத்து புஷ்பபர்யங்கே ஶாயயித்வா ரமாஜுஷம் || 32.
மங்க3ளாஶாஸநம் குர்யாத் புண்யஸ்தோத்ரைர் மநோஹரை: |
தத: ப்ரத3க்ஷிணம் க்ருத்வா நமஸ்க்ருத்ய ஜநார்த்த3நம் || 33.
வைஷ்ணவாந் போ4ஜயேத் பஶ்சாத் பாயஸாந்நம் ஸஶர்க்கரம் |

பிறகு பரிமளம் சேர்த்த சந்த3நதீர்த்த2த்தினால் திருமஞ்ஜனம் செய்து, வெண்பட்டுச்சாத்தி, மது4பர்க்கம் கண்டருளப்பண்ணி, பிறகு வேறு ஸிம்ஹாஸனத்தில் எழுந்தருளப்பண்ணி, அர்க்4யம் முதலானவை ஸமர்ப்பித்து, பலவித4மான ப்ரஸாத3ங்களும், திருப்பணியாரங்களும், குளிர்ந்த பானகங்களும் அமுதுசெய்யப்பண்ணி, பச்சைக் கர்ப்பூரம் முதலிய வாஸனை திரவியங்களுடன் கலந்த தாம்பூ3லம் ஸமர்ப்பித்து, ஆசமனம் ஸமர்ப்பிக்கவேண்டும். பின்பு ருத்விக்குகள், புஷ்பம் துளஸீ அக்ஷதைகளைக் கைகளிற்கொண்டு வேத3பாராயணத்தாலும், ஸாமகா3னங்களாலும், 'பல்லாண்டு' 'போற்றி' 'மங்க3ளம்' முதலான மங்க3ளச் சொற்களைக்கொண்டும் மங்க3ளாஶாஸனம் செய்ய வேண்டும். அதற்குப்பின் ஸ்ரீமந்நாராயணனைப் பூம்பள்ளியில் பள்ளிகொள்ளச்செய்து, நெஞ்சைக் கவரும் பரம பாவனமான துதிகளைச்சொல்லி மங்க3ளாஶாஸனம் செய்ய வேண்டும். அதற்குப்பின் எம்பெருமானை ப்ரத3க்ஷிணம் செய்து, த3ண்டன் ஸமர்ப்பித்து, அதற்குப்பின் பாலும் சர்க்கரையும் சேர்ந்த ப்ரஸாத3த்தினால் ஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்யப் பண்ணிவைக்கவேண்டும்.

भक्तोत्सवं तथा रात्रौ कुर्वीत सुशुभावहम् ॥ ३४ ॥
एवं प्रतिदिनं कुर्यात् यावद्दीक्षासमापनम् ।
अन्ते चावभृथं कुर्यात् पुण्यतोये मनोहरे ॥ ३५ ॥

http://acharya.org

प्रपठेत् विष्णुसूक्तानि पावमानीर्विशेषतः।
विशिष्टैर्वैष्णवैः सार्धं स्नातव्यं तत्र भक्तितः॥ ३६॥
तर्पयित्वा पितॄन् देवान् सर्वान् कामान् समश्नुते।
कोटिजन्मार्जितात् पापात् ज्ञानतोऽज्ञानतोऽपि वा॥ ३७॥
तत्र स्नात्वा विधानेन मुच्यते नात्र संशयः।

பக்தோத்ஸவம் ததா ராத்ரௌ குர்வீத
ஸமாபாவஹம் ॥ 34.
ஏவம் ப்ரதிதினம் குர்யாத் யாவத்தீக்ஷாஸமாபநம் ।
அந்தே சாவப்ருதம் குர்யாத் புண்யதோயே மனோஹரே ॥ 35.
ப்ரபடேத் விஷ்ணுஸூக்தானி பாவமானீர் விசேஷத: ।
விஶிஷ்டைர் வைஷ்ணவைஸ் ஸார்த்தம் ஸ்நாதவ்யம்
தத்ர பக்தித: ॥ 36
தர்ப்பயித்வா பித்ருந் தேவாந் ஸர்வாந் காமாந் ஸமஶ்நுதே ।
கோடிஜந்மார்ஜிதாத் பாபாத் ஜ்ஞாநதோऽஜ்ஞாநதோபி வா ||37.
தத்ர ஸ்நாத்வா விதாநேந முச்யதே நாத்ர ஸம்ஶய: ।

இவவண்ணமாகவே (ஆழ்வார்கள் ஆசார்யர்கள் முதலான) பக்தர்களுக்கும் இரவில் மஹோத்ஸவம் செய்யவேண்டும். இவவண்ணமாக (முதலில் ஸங்கல்பித்த படி 3, 5, 7, 9 அல்லது 10 நாள்கள் வரையில்) தினந் தோறும் உத்ஸவம்செய்து, கடைசி நாளில் அழகியதாய பாவனமான நதி அல்லது குளத்தில் வைஷ்ணவ ஸூக்தங்களை, பவமானஸூக்தம் ஆகியவற்றை ஓதி அவப்ருதஸ்நானம் (தீர்த்தவாரி) செய்விதது, பக்தியோடு அத்தீர்த்தத்தில் சிறந்த ஸ்ரீ வைஷ்ணவர்களோடுகூடித் தான் ஸ்நானம செய்யவேணடியது. அத்தீர்த்தததில தேவர்களுக்கும பித்ருக்களுக்கும் தர்பபணம்செய்தால எல்லா விருப்பங்களையும் அடைவான். அதில ஸ்நானம் செய்வதால், கோடி ஜன்மங்களில் அறிந்தும் அறியாமலும் செய்த பாபங்கள் நீங்கிவிடும் என்பதில ஐயமில்லை.

http://acharya.org

ततः प्रवेश्यायतनं देवं तुलसिकासुमैः ॥ ३८ ॥
पूजयित्वा विधानेन वेदोपनिषदं पठेत् ।
वैष्णवान् भोजयेत् भक्त्या चाशिषो वाचनं चरेत् ॥ ३९ ॥

தத: ப்ரவேஶ்யாயதநம் தே₃வம் துளஸிகாஸுமை: ॥ 38.
பூஜயித்வா விதா₄நேந வேதோ₃பநிஷத₃ம் படே₂த் ।
வைஷ்ணவாந் போ₄ஜயேத் ப₄க்த்யா சாஶிஷோ வாசநம்
சரேத் ॥ 39.

தீர்த்த₂வாரியானபின்பு ஸ்ரீமந்நாராயணனை கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணி, துளஸி, புஷ்பங்கள ஆகியவற்றால், அர்ச்சனைசெய்து வேத₃ங்களின் அந்தமான உபனிஷத்துக்களைப் பாராயணம் செய்யவேண்டும். பிறகு ஸ்ரீவைஷ்ணவர்களுக்குத் ததீ₃யாராத₄னம செயவித்து, அன்புடன் ஆசீர்வாத₃ம செய்விக்கவேண்டும.

एवं महोत्सवं कुर्यात् प्रतिमासं यथाविधि ।
प्रतिसंवत्सरं वापि निजशक्त्यनुसारतः ॥ ४० ॥

ஏவம் மஹோத்ஸவம் குர்யாத் ப்ரதிமாஸம் யதா₂விதி₄ ।
ப்ரதிஸம்வத்ஸரம் வாபி நிஜஶக்த்யநுஸாரத: ॥ 40.

இத்தகைய மஹோத்ஸவத்தை மாதந்தோறும் முறைப்படி செய்யவேண்டும். (இயலாவிடில்) ஶக்திககுத் தக்கபடி வருஷத்திற்கு ஒரு முறையாவது செயயவேண்டும்.

शयने बोधने विष्णोः वसन्तादौ विशेषतः ।
प्रत्यब्दमुत्सवं कुर्यात् शास्त्रमार्गेण वैष्णवः ॥ ४१ ॥

ஶயநே போ₃த₄நே விஷ்ணோர் வஸந்தாதௌ₃ விஶேஷத: ।
ப்ரத்யப்₃த₃முத்ஸவம் குர்யாச்சா₂ஸ்த்ரமார்க்கே₃ண
வைஷ்ணவ: ॥ 41.

http://acharya.org

पञ्चरात्रविधानेन तथा वैखानसेन वा।
स्मृत्युक्तेनाथवा कुर्यात् क्रियालोपं न कारयेत्॥ ४२॥

பஞ்சராத்ரவித₄ாநேந தத₂ா வைக₂ாநஸேந வா।
ஸ்ம்ருத்யுக்தேநாத₂வா குர்யாத் க்ரியாலோபம் ந காரயேத்॥ 42.

பாஞ்சராத்ரம, அல்லது வைக₂ாநஸம் என்னும் ஸ்ரீவைஷ்ணவாக₃மங்களின் படியோ, (வ்ருத்₃த₄ஹாரீதம், பராஶரவிஶிஷ்ட பரமத₄ர்மஶாஸ்த்ரம முதலான) ஸ்ம்ருதிகளின்படியோ கீழ்சசொன்ன நித்யநைமித்திக மஹோத்ஸவங்களைச் செய்யவேண்டும. (எககாரணத்தாலும) விட்டு விடக்கூடாது.

एवं संपूजयेत् देवं यावज्जीवं द्विजोत्तमाः!।
नित्यनैमित्तिकोत्तेन यथाविध्युक्तमार्गतः॥ ४३॥

ஏவம் ஸம்பூஜயேத் தே₃வம் யாவஜ்ஜீவம் த்₃விஜோத்தமா: !।
நித்யநைமித்திகோக்தேந யத₂ாவித்₄யுக்தமார்க்க₃த:॥ 43.

அந்தணர் தலைவர்களே! (இந்த ஸ்மருதியில) நித்யநைமித்திகோத்ஸவவிதி₄களில் சொன்ன முறைப்படி ஆயுளுள்ளவரையில ஸ்ரீமந்நாராயணனுக்கு உத்ஸவம் செய்து ஆராதி₄க்கவேணடும்.

श्रौतस्मार्तागमोक्तानां कुर्यादत्युत्तमाः क्रियाः।
उपदिष्टं यथाज्ञानं तन्त्रं कुर्वीत शास्त्रतः॥ ४४॥

ஶ்ரௌதஸ்மார்த்தாக₃மோக்தாநாம் குர்யாத₃த்யுத்தமா: [க்ரியா:।
உபதி₃ஷ்டம் யத₂ாஜ்ஞாநம் தந்த்ரம் குர்வீத ஶாஸ்த்ரத:॥ 44.

இதி ஸ்ரீபராஶர ஸ்ம்ருதௌ உத்தரக₂ண்டே₂
விஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரே
விஷ்ணுமஹோத்ஸவவிதி₄ வர்ணநம் நாம நவமோऽத்₄யாய:॥

வேத₃ங்களிலும், மநு முதலான ஸ்ம்ருதிகளிலும ஸ்ரீவைஷ்ணவாக₃மங்களிலும் சொல்லப்பட்ட மிகச்சிறந்த கர்மங்களைச்செய்து, அவைகளிற்சொன்ன ஜீவாத்மபரமாதமஸ்வரூபங்களை அறிந்து, பரமாத்மாவிடம் அன்பு வைககவேணடும்.

ஸ்ரீ பராஶரஸ்ம்ருதியின் உத்தரக₂ண்ட₂மான விஶிஷ்ட பரமத₄ர்ம
ஶாஸ்தரத்தில் விஷ்ணுமஹோத்ஸவவித₄ வர்ணகம் என்கிற
ஒன்பதாவது அத்தியாயம் நிறைவுபெற்றது.

http://acharya.org

10-வது அத்தியாயம்

பா₄க₃வதாராத₄நவிதி₄

பா₄க₃வதாராத₄ந வைப₄வம்

श्रीपराशर उवाच—

तदीयाराधनं पुण्यं वक्ष्यामि मुनिसत्तमाः! ।
यदन्वेषणमात्रेण सर्वबन्धाद्विमुच्यते ॥ १ ॥
नातः परतरं पुण्यं त्रिषु लोकेषु विद्यते ।
सर्वकामप्रदं नृणामत्यन्तप्रीतिदं हरेः ॥ २ ॥
तस्मात् परतरं श्रेयो नास्ति सत्यं ब्रवीमि वः ।

ஸ்ரீபராஶர உவாச—

ததீ₃யாராத₄நம் புண்யம் வக்ஷ்யாமி முநிஸத்தமா: ।
யத₃ந்வேஷணமாத்ரேண ஸர்வப₃ந்த₄ாத் விமுச்யதே ॥ 1.
நாத: பரதரம் புண்யம் த்ரிஷு லோகேஷு வித்₃யதே ।
ஸர்வகாமப்ரத₃ம் ந்ருணாமத்யந்தப்ரீதித₃ம் ஹரே: ॥ 2.
தஸ்மாத் பரதரம் ஶ்ரேயோ நாஸ்தி ஸத்யம் ப்₃ரவீமி வ: ।

ஸ்ரீபராஶரமஹர்ஷி கூறினார்:—முனிவர் தலைவர்களே! இனி, அச்சுதனடியார்களை ஆராதிப்பதான பரமஹிதத்தைக் கூறுகிறேன். இத்ததீ₃யாராத₄னத்தைச் செய்ய வேண்டும் என்று ஆசைப்படுவதாலேயே எல்லா ஸம்ஸாரப₃ந்த₄ங்களினின்றும் விடுதலையடைவான். மூவுலகிலும் இதைககாட்டிலும் பாவனமான செயல் வேறொன்று இல்லை. இது மனிதர்களின் எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றிக்கொடுக்கும். எம்பெருமானுக்கும் இது மிகவும் உகப்பை விளைக்கும். ஆகையால் இத்ததீ₃யாராத₄னத்தைக் காட்டிலும் சேதனர்க்கு ஹிதமானது வேறொன்று இல்லையென்று உங்களுக்கு ஶபத₂மிட்டுச் சொல்லுகிறேன்.

http://acharya.org

भक्तपूजनमाहात्म्यं शृणुध्वं मुनिसत्तमाः ॥ ३ ॥
साहस्रवार्षिकी पूजा विष्णोर्भगवतो द्विजाः ।
सकृद्भागवतार्चायाः कलां नार्हति षोडशीम् ॥ ४ ॥
सकृत्संपूजनं तेषां मुक्तिदं पापिनामपि ।

ப₄க்தபூஜநமாஹாத்ம்யம் ஶ்ருணுத்₄வம் முநிஸத்தமா: ॥ 3.
ஸாஹஸ்ரவார்ஷிகீ பூஜா விஷ்ணோர் ப₄க₃வதோ த்₃விஜா: ।
ஸக்ருத்₃ப₄ாக₃வதார்ச்சாயா: கலாம் நார்ஹதி ஷோட₃ஶீம் ॥ 4
ஸக்ருத் ஸம்பூஜநம் தேஷாம் முக்திதூ₃ம் பாபிநாமபி ।

மஹர்ஷிகளே! அநந்தனின் அடியார்களை ஆராதி₄ப்பதின் பெருமையைக் கேளுங்கள். அகிலஹேயப்ரத்யநீக கல்யாணைகதானனான எம்பெருமானை ஆயிரம வருடம் ஆராதி₄ப்பதும, ஒருமுறை அவனடியார்களை ஆராதி₄ப்பதில பதினாறில் ஒரு பஙகுககு ஈடாகாது. (ப₄ாக₃வதாராத₄னம் ப₄க₃வதா₃ராத₄னததைக் காட்டிலும் மிகச் சிறந்தது என்றபடி.) ஒருமுறை ப₄ாக₃வதர்களை ஆராதி₄ப்பது பாபிகளுக்கும் முக்தியளிததுவிடும்.

एवं भगवता विप्रा हरिणोक्तं श्रियै पुरा ॥ ५ ॥
तदीयपूजाहृष्टेन तद्वो वक्ष्यामि निश्चितम् ।

ஏவம் ப₄க₃வதா விப்ரா ஹரிணோக்தம் ஶ்ரியை புரா ॥ 5.
ததீ₃யபூஜாஹ்ருஷ்டேந தத்₃வோ வக்ஷ்யாமி நிஶ்சிதம் ।

ததீ₃யாராத₄னத்தினால் உகந்த எம்பெருமானாலேயே பெரியபிராட்டியார்ககு முன்னொருகால் பின்வருமாறு சொலலபபட்டது. இவ்வுறுதியான விஷயத்தை உங்களுக்குச் சொலலுகிறேன்.

मत्प्रणामाच्छतगुणं मद्भक्तस्य तु वन्दनम् ॥ ६ ॥
मन्नैवेद्याच्छतगुणं मद्भक्तस्य तु भोजनम् ।

மத்ப்ரணாமாச்ச₂தகு₃ணம் மத்₃ப₄க்தஸ்ய து வந்த₃நம் ॥ 6.
மந்நைவேத்₃யாச்ச₂தகு₃ணம் மத்₃ப₄க்தஸ்ய து போ₄ஜநம் ।

http://acharya.org

"என்னை வணங்குவதைக் காட்டிலும் என் அன்பனை வணங்குவது நூறு மடங்கு சிறந்தது. என்னை அமுது செய்விப்பதைக்காட்டிலும் என் அன்பனுக்கு உணவிடுவது நூறு மடங்கு சிறந்தது" (என்பது எம்பெருமான் பிராட்டிக்குச் சொன்ன வாக்யம்.)

यथा तुष्यति देवेशो महाभागवतार्चनात् ॥ ७ ॥
तथा न तुष्यति श्रीशो विधिवत्स्वार्चनादपि ।

யதா₂ துஷ்யதி தே₃வேஶோ மஹாபா₄க₃வதார்ச்சநாத் ॥ 7.
தத₂ா ந துஷ்யதி ஶ்ரீஶோ விதி₄வத் ஸ்வார்ச்சநாத₃பி ।

மஹாபா₄க₃வதனை ஆராதி₄ப்பதில் உகப்பதுபோல், தன்னை முறைப்படி ஆராதி₄ப்பதனுலும் ஸ்ரீமந்நாராயணன் உகப்பதில்லை.

மஹாபா₄க₃வத வைப₄வம்

यान् पश्यन्ति महाभागाः कृपया पापिनोऽपि च ॥ ८ ॥
ते विशुद्धाः प्रयान्त्येव शाश्वतं भगवत्पदम् ।

யாந் பஶ்யந்தி மஹாபா₄க₃ா: க்ருபயா பாபிநோऽபி ச ॥ 8.
தே விஶுத்₃த₄ா: ப்ரயாந்த்யேவ ஶாஶ்வதம் ப₄க₃வத்பத₃ம் ।

மஹாபா₄க₃வதர்கள் எவர்களைக கடாக்ஷிக்கிருர்களோ, அவர்கள் பாபிகளாயினும், இவர்களுடைய கடாக்ஷத்தாலேயே பரிஶுத்₃தி₄யடைந்து, அழிவற்ற ஸ்ரீ வைகுண்ட₂ லோகத்தை அடைவார்கள்.

மஹாபா₄க₃வத லக்ஷணம்

अर्थपञ्चकतत्त्वज्ञाः पञ्चसंस्कारसंस्कृताः ॥ ९ ॥
आकारत्रयसंपन्ना महाभागवताः स्मृताः ।

http://acharya.org

(1) ப்ராப்யமான (அடையத்தக்க) ப்₃ரஹ்மத்தின் ஸ்வரூபம், (2) அடைபவனான ஜீவனின் ஸ்வரூபம், (3) அடைவதற்கான உபாயத்தின் ஸ்வரூபம், (4) அடைந்து பெறும் ப₂லனின் ஸ்வரூபம், (5) அடைவதற்குத் தடைகளின் ஸ்வரூபம் என்னும் ஐந்து அர்த்த₂ங்களின் உண்மையை அறிந்தவர்களாய், (1) தாபம் (சக்ராங்கனம்), (2) ஊர்த்₄வபுண்ட்₃ரத₄ாரணம், (3) தா₃ஸ்யநாமம் ஏற்றல், (4) ரஹஸ்யத்ரயமந்த்ரோபதே₃ஶம், (5) திருவாராத₄னம் என்னும் ஐந்து ஸம்ஸ்காரங்களால் ஸமஸ்கரிக்கப்பெற்றவர்களாய், (1) அநந்யார்ஹஶேஷத்வம் (எம்பெருமான் தவிர வேறு எவர்க்கும் உரியவரல்லாதிருக்கை), (2) (அநந்ய ஶரணத்வம் (அவனைத் தவிர வேறு எதையும் உபாயமாகக் கொள்ளாதிருக்கை), (3) அநந்யபோ₄க்₃யத்வம் (அவனைத் தவிர வேறு எதையும் இனிதாகக் கொள்ளாதிருக்கை) என்னும் மூன்று தன்மைகளும் நிரம்பப்பெற்றவர்கள் மஹாப₄ாக₃வதர்கள் எனப்படுகின்றனர்.

மஹாப₄ாக₃வதர்களின் சிறப்பு

महाभागवता यत्र वसन्ति विमलाः शुभाः ॥ १० ॥
तत्स्थलं मङ्गलं प्रोक्तं यथा विष्णुपदं शुभम् ।

மஹாப₄ாக₃வதா யத்ர வஸந்தி விமலாஶ் ஶுப₄ா: ॥ 10.
தத் ஸ்த₂லம் மங்க₃ளம் ப்ரோக்தம் யதா₂ விஷ்ணுபத₃ம் ஶுப₄ம் ।

(காமம், கோபம் முதலிய) குற்றங்களில்லாதவராய், (ஶமம், த₃மம் முதலிய) நற்குணங்கள் நிரம்பப்பெற்றவர்களான மஹாப₄ாக₃வதர்கள் எங்கு வாழ்கிறார்களோ, அந்த இடம் மங்க₃ளமான ஸ்ரீவைகுண்ட₂ம் (அல்லது எம்பெருமானின் திருவடிகள்) போலே மங்க₃ளமானதாகச் சொல்லப்படுகிறது.

http://acharya.org

தொண்டர் அடிப்பொடி மகிமை

यस्य मूर्ध्नि स्थितं यावत् वैष्णवाङ्घ्रिरजः शुभम् ॥ ११ ॥
गङ्गादिसर्वतीर्थानि तावत् तिष्ठन्त्यसंशयम् ।

யஸ்ய மூர்த்₄நி ஸ்தி₂தம் யாவத் வைஷ்ணவாங்க்₄ரிரஜஶ்
ஶுப₄ம் ॥ 11.
க₃ங்கா₃தி₃ஸர்வதீர்த்தா₂நி தாவத் திஷ்ட₂ந்த்யஸம்ஶயம் ।

எவனுடைய தலையில் எங்நாள்வரையில மங்க₃ளமான தொண்டரடிபபொடிகள் உள்ளனவோ, அங்நாள்வரையில் க₃ங்கை₃ முதலான எல்லாத்தீர்த்த₂ங்களும் அவனுடைய தலையில் உள்ளன என்பதில் ஐயமில்லை.

ஶ்ரீபாத₃தீர்த்த₂மகிமை

प्रायश्चित्तमिदं गुह्यं महापातकिनामपि ॥ १२ ॥
वैष्णवाङ्घ्रिजलं पुण्यं भक्त्या संप्राश्यते यदि ।

ப்ராயஶ்சித்தமித₃ம் கு₃ஹ்யம் மஹாபாதகிநாமபி ॥ 12.
வைஷ்ணவாங்க்₄ரிஜலம் புண்யம் ப₄க்த்யா ஸம்ப்ராஶ்யதே யதி₃ ।

(ப்₃ரஹ்மஹத்தி முதலான) மஹாபாபங்களைச் செய்தவர்களுக்கும், ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய பரமபாவனமான ஸ்ரீபாத₃தீர்த்த₂த்தை ப₄க்தியுடன் பருகுவது ப்ராயஶ்சித்தமாகும. இது பரமரஹஸ்யம (எவர்க்கும வெளியிடத்தகாதது.)

ஶேஷப்ரஸாத₃வைப₄வம்

कोटिजन्मार्जितं पापं ज्ञानतोऽज्ञानतोऽपि वा ॥ १३ ॥
सद्यः प्रणश्यते नृणां वैष्णवोच्छिष्टभोजनात् ।

கோடிஜந்மார்ஜிதம் பாபம் ஜ்ஞாநதோऽஜ்ஞாநதோऽபி வா ॥ 13.
ஸத்₃ய: ப்ரணஶ்யதே ந்ருணும் வைஷ்ணவோச்சி₂ஷ்ட
போ₄ஜநாத் ।

அறிந்தோ, அறியாமலோ கோடி ஜன்மங்களில் செய்யப்பட்ட பாபம், (அறிந்தோ, அறியாமலோ) ஸ்ரீவைஷ்ணவர் உண்டு மிகுந்ததை உண்பதால் உடனே அழிகிறது.

http://acharya.org

வைஷ்ணவர்களும் அவைஷ்ணவர்களும்

महाभागवता ये ते वैष्णवा द्विजसत्तमाः ! ॥ १४ ॥
अन्ये त्ववैष्णवाः प्रोक्ताः रजसा तमसाऽऽवृताः ।

மஹாபா₄க₃வதா யே தே வைஷ்ணவா த்₃விஜஸத்தமா: ! ॥ 14.
அந்யே த்வவைஷ்ணவா: ப்ரோக்தா ரஜஸா தமஸாऽऽவ்ருதா: ।

அந்தணர் தலைவாகளே! கீழ்ச்சொன்ன மஹாபா₄க₃வத லக்ஷணம் எவரிடமுள்ளதோ, அவரே ஸ்ரீவைஷ்ணவரா வார். ரஜஸ்தமோகு₃ணம் மிகுந்த மற்றவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களாகார்.

ஸ்ரீபாத₃தீர்த்த₂மகிமை

नातः परतरं तीर्थं वैष्णवाङ्घ्रिजलाच्छुभात् ॥ १५ ॥
तेषां पादजलं शुद्धं गङ्गामपि पुनाति हि ।

நாத: பரதரம் தீர்த்த₂ம் வைஷ்ணவாங்க்₄ரிஜலாச்சு₂பா₄த் ॥ 15.
தேஷாம் பாத₃ஜலம் ஶுத்₃த₄ம் க₃ங்கா₃மபி புநாதி ஹி ।

ஸ்ரீவைஷ்ணவர்களின் மங்க₃ளமான ஸ்ரீபாத₃தீர்த்த₂த்தைக் காட்டிலும் மேலான தீர்த்த₂ம் உலகிலில்லை. (ஏனெனில்) ஸ்ரீவைஷ்ணவர்களின் பரிஶுத்₃த₄மான ஸ்ரீபாத₃தீர்த்த₂ம் க₃ங்கை₃, கோ₃தா₃வரி முதலான நதி₃களையும் புனிதப்படுத்துகின்றனவன்றோ.

கோ₃தா₃வரீ ஶாபவிமோசனம்

शापात्तु रघुनाथस्य विमुक्ता गौतमी नदी ॥ १६ ॥
वैष्णवीस्नानतीर्थेन सङ्गता शुद्धवारिणा ।

ஶாபாத்து ரகு₄நாத₂ஸ்ய விமுக்தா கௌ₃தமீ நதீ₃ ॥ 16.
வைஷ்ணவீஸ்நாநதீர்த்தே₂ந ஸங்க₃தா ஶுத்₃த₄வாரிணா ।

கௌ₃தமி என்னும கோ₃தா₃வரி நதி₃யை ஸ்ரீராமன் 'நீ ஸ்நாநததிற்குத் தகுதியற்றுப்போவாய்' என்று ஶபிக்க, பின்பு அந்த நதியானது விஷ்ணுப₄க்தியையுடைய மஹா

http://acharya.org

ப4ாக3வதையான ஒரு ஸ்தரீயின் பரிசுத்தமான ஸ்நாந ஜலத்தோடு சேர்ந்து, அந்த ஶாபததைப் போக்கிக்கொண்டு; எல்லாரும் தன்னிடம ஸநானம செய்யத் தகுதிபெற்றது.

रक्षसापहृता वेति पृष्टा सीता महात्मना ॥ १७ ॥
न शशाक तदा वक्तुं गौतमी तमसाऽऽवृता ।
तेन शप्ता तदा गङ्गा राघवेण महात्मना ॥ १८ ॥
न शंससि च दुर्बुद्धे ज्ञात्वापि मम जानकीम् ।
अद्य प्रभृति सर्वैस्त्वं न स्नातव्या भविष्यसि ॥ १९ ॥
एवं शप्ताऽभवत् गङ्गा राघवेण महात्मना ।
पुरस्कृत्य मुनीन् सर्वान् राघवं शरणं गता ॥ २० ॥
कृताञ्जलिपुटा दीना तुष्टाव रघुनन्दनम् ।
कृपया प्राह देवेशो गौतमीं शरणङ्गताम् ॥ २१ ॥
शबरीस्नानपुण्येन सङ्गता शुद्धवारिणा ।
मुक्ता गोदावरीगङ्गे मम शापात् भविष्यसि ॥ २२ ॥
इत्युक्त्वा धनुषाऽऽकृष्य शबर्या सेवितं जलम् ।
गौतम्या सङ्गतं चक्रे लोकानां हितकाम्यया ॥ २३ ॥
ततः प्रभृति लोकेऽस्मिन् गौतमी शुद्धतां गता ।
तीर्थानामग्र्यतां लोके वैष्णव्यास्तीर्थसङ्गमात् ॥ २४ ॥
तस्मात्तु वैष्णवाः पूज्याः पावयन्ति जगत्त्रयम् ।
तेषां पादोदकं श्रेष्ठतीर्थभूतं न संशयः ॥ २५ ॥

ரக்ஷஸாபஹ்ருதா வேதி ப்ருஷ்டா ஸீதா மஹாத்மநா ॥ 17.
ந ஶஶாக தத3ா வக்தும் கௌ3தமீ தமஸாऽऽவ்ருதா ।
தேந ஶப்தா தத3ா க3ங்க3ா ராக4வேண மஹாத்மநா ॥ 18.
ந ஶம்ஸஸி ச து3ர்பு3த்3தே4 ஜ்ஞாத்வாபி மம ஜாநகீம் ।
அத்3ய ப்ரப்4ருதி ஸர்வைஸ்த்வம் ந ஸ்நாதவ்யா ப4விஷ்யஸி ॥ 19.
ஏவம் ஶப்தாऽப4வத் க3ங்க3ா ராக4வேண மஹாத்மநா ।
புரஸ்க்ருத்ய முநீந் ஸர்வாந் ராக4வம் ஶரணம் க3தா ॥ 20.

http://acharya.org

க்ருதாஞ்ஜலிபுடா தீ₃நா துஷ்டாவ ரகு₄நந்த₃நம் ।
க்ருபயா ப்ராஹ தே₃வேஶோ கௌ₃தமீம் ஶரணம் க₃தாம் ॥ 21
ஶப₃ரீஸ்நாநபுண்யேந ஸங்க₃தா ஶுத்₃த₄வாரிணா ।
முக்தா கோ₃தா₃வரீக₃ங்கே₃ மம ஶாபாத் ப₄விஷ்யஸி ॥ 22.
இத்யுக்த்வா த₄நுஷாऽऽக்ருஷ்ய ஶப₃ர்யா ஸேவிதம் ஜலம் ।
கௌ₃தம்யா ஸங்க₃தம் சக்ரே லோகாநாம் ஹிதகாம்யயா ॥ 23.
தத:ப்ரப்₄ருதி லோகேऽஸ்மிந் கௌ₃தமீ ஶுத்₃த₄தாம் க₃தா ।
தீர்த்த₂நாமக்₃ர்யதாம் லோகே வைஷ்ணவ்யாஸ்தீர்த்த₂
ஸங்க₃மாத் ॥ 24.
தஸ்மாத்து வைஷ்ணவா: பூஜ்யா: பாவயந்தி ஜக₃த்த்ரயம் ।
தேஷாம் பாதோ₃த₃கம் ஶ்ரேஷ்ட₂ தீர்த்த₂பூ₄தம் ந
ஸம்ஶய: ॥ 25.

மஹாத்மாவான ராக₄வனால், 'ஸீதை ராக்ஷஸனால் அபஹரிககபபட்டாளோ ?" என்று கேட்கப்பட்டபோது, கோ₃தா₃வரி தமோகு₃ணத்தால சூழப்பட்டு (ராவணனுககு பயந்து) பதிலசொலல இயலாதவளானாள். அபபோது (த₃க்ஷிணக₃ங்கை₃யான) அந்த கோ₃தா₃வரி "அறிவுகெட்டவளே! அறிநதும ஜானகியைபபற்றி நீ பதிலுரைக்காமலிருககிறாய. இனறிலிருநது நீ எவராலும் ஸநானம செயயததகாதவளாவாய" என்று மஹாபுருஷனான ராமனால ஶபிககபபட்டாள. இபபடி ஶபிககபபட்ட அவள முனிவர்களை முனனிட்டுககொண்டு ராக₄வனை ஶரணமடைந்து, கைககூபபிநினறு ரகு₄நந்த₃னனைத துதிததாள். தே₃வநாயகனான ராமன ஶரணமடைந்த கோ₃தா₃வரியைப்பார்தது, "கோ₃தா₃வரீக₃ங்கை₃யே! ஶப₃ரி ஸநானமசெய்ததால் பவிததிரமான ஜலததோடு சேர்ந்து, நீ எனது ஶாபத்திலிருந்து விடுபட்டவளாவாய" என்று கருணையோடு கூறினான். இபபடிசசொலலி ஶப₃ரியினால ஸநானம் செயயபபெறற நீரை வில்லால் இழுதது, உலகின நன்மையின்பொருட்டு கோ₃தா₃வரியோடு சேர்த்தருளினான். அது தொடங்கி, பரமபா₄க₃வதையின் ஸ்நாநதீர்த்த₂த்தோடு சேர்ந்ததால, இவவுலகில் கோ₃தா₃வரி ஶுத்₃தி₄யடைந்

http://acharya.org

தாள். இவ்வுலகில் தீர்த்தங்களில் தலைமைபெற்ருள். ஆகையால் வைஷ்ணவர்கள பூஜிக்கத்தக்கவர்களாய், மூவுலகையும பரிசுத்தப்படுத்துகிருர்கள். அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தம தலைசிறந்த தீர்த்தமாகிறது என்பதில் ஐயமில்லை.

तिस्रः कोट्योऽर्धकोटी च तीर्थानां भुवनत्रये।
वैष्णवाङ्घ्रिजले पुण्ये कोटिभागेन नो समाः॥ २६॥

திஸ்ர: கோட்யோऽர்த்தகோடீ ச தீர்த்தாநாம் புவநத்ரயே।
வைஷ்ணவாங்க்ரிஜலே புண்யே கோடிபாகேந நோ ஸமா: ॥ 26.

மூவுலகிலுமுள்ள மூன்றரைக்கோடி தீர்த்தங்களும் ஸ்ரீவைஷ்ணவனுடைய ஸ்ரீபாததீர்த்தத்தின் கோடியில் ஒரு பங்குககும் ஸமமாகமாட்டா.

பாகவதாராதன மஹிமை

सकृत् संपूजिते पुण्ये महाभागवते गृहे।
आकल्पकोटि पितरः परितृप्ता न संशयः॥ २७॥

ஸக்ருத் ஸம்பூஜிதே புண்யே மஹாபாகவதே க்ருஹே।
ஆகல்பகோடி பிதர: பரித்ருப்தா ந ஸம்ஶய: ॥ 27.

பரமபாவனனான ஸ்ரீவைஷ்ணவனைத் தன் வீட்டில் ஒருவன் ஒருமுறை ஆராதித்தால், கல்பகோடிகாலம் அவனுடைய பித்ருக்கள் த்ருப்தியடைகிருர்கள. இதில் ஐயமில்லை.

षष्टिवर्षसहस्राणि विष्णोराराधने फलम्।
सकृद्वैष्णवपूजायां लभते नात्र संशयः॥ २८॥

ஷஷ்டிவர்ஷஸஹஸ்ராணி விஷ்ணோராராதநே பலம்।
ஸக்ருத் வைஷ்ணவபூஜாயாம் லபதே நாத்ர ஸம்ஶய: ॥ 28.

அறுபதினுயிரம் வருஷம் ஸ்ரீமந்நாராயணனுக்குத் திருவாராதனம் செய்வதால் ஏற்படும் பலனை ஒருகால் வைஷ்ணவனை ஆராதிப்பவன் அடைகிருன் என்பதில் ஐயமில்லை.

http://acharya.org

तस्मात् सर्वप्रयत्नेन वैष्णवानर्चयेत् बुधः।
தஸ்மாத் ஸர்வப்ரயத்நேந வைஷ்ணவாநர்ச்சயேத் புதஃ।
ஆகையால், அறிவாளியானவன் மிக முயன்று ஸ்ரீவைஷ்ணவர்களை ஆராதிக்கக்கடவன்.

ஸ்ரீவைஷ்ணவாராதந வர்ணநம்

वैष्णवानागतान् श्रुत्वा भुञ्जानोऽपि हि वैष्णवः॥ २९॥
द्रुतमुत्थाय हर्षेण प्रत्युद्गच्छेत् त्वरान्वितः।
शिरस्यञ्जलिमाधाय गच्छेद्यावत्तु दर्शनम्॥ ३०॥
दृष्ट्वा सद्यो महाभागान् प्रणमेत् दण्डवत् भुवि।
निक्षिप्य चरणौ मूर्ध्नि प्रणमेच्च पुनः पुनः॥ ३१॥
प्रवेशयित्वा स्वगृहं पादौ प्रक्षालयेत् स्वयम्।
आचान्तानासने श्लक्ष्णे रम्ये संयङ्निवेशयेत्॥ ३२॥
कौशेयं विष्टरं दत्वा पाद्यार्घ्यादीन् समर्पयेत्।
गद्गदस्वरयुक्ताभिः प्रियवाग्भिः समर्चयेत्॥ ३३॥
पादौ प्रक्षालयेत् पात्रे पवित्रे गन्धवारिणा।
अर्घ्यमाचमनं दत्वा गन्धपुष्पैः समर्चयेत्॥ ३४॥
मधुपर्कं ततो दत्वा शास्त्रमार्गेण वैष्णवः।
आचान्तान पूजयेत् भक्त्या स्वर्णवस्त्रादिभूषणैः॥ ३५॥
फलैश्च विविधैर्भक्ष्यैः ताम्बूलेन समाहितः।
तत्तीर्थं प्राशयेद्विद्वान् पुत्रदारसुहृज्जनैः॥ ३६॥
भोजयेदन्नपानाद्यैः शक्त्या भक्तिसमन्वितः।
शाययित्वा सुशय्यायां पादौ संवाहयेच्छनैः॥ ३७॥
प्रस्थितेषु गृहात् तेषु चासीमान्तमनुव्रजेत्।
प्रणम्याथ विसृष्टस्तैः तिष्ठेत् तत्र क्षणं शुचा॥ ३८॥
अदर्शनं भवेत् यावत् तावदेवं निरीक्षयेत्।
भूय एव नमस्कृत्य निवृत्य स्वगृहं विशेत्॥ ३९॥

http://acharya.org

नाश्नीयात् वैष्णवस्तस्मिन् अनुव्रज्य च वैष्णवान् ।
मनस्सन्तापसंयुक्तः चिन्तयित्वा पुनः पुनः ॥ ४० ॥
एवं संपूजयेन्नित्यं यावज्जीवं न संशयः ।
महाभागवतान् भक्त्या तुष्ट्यर्थं शार्ङ्गपाणिनः ॥ ४१ ॥

வைஷ்ணவாநாக3தாந் ஶ்ருத்வா பு4ஞ்ஜாநோऽபி ஹி
வைஷ்ணவ: ॥ 29.
த்3ருதமுத்தா2ய ஹர்ஷேண ப்ரத்யுத்3க3ச்சே2த் த்வராந்வித: ।
ஶிரஸ்யஞ்ஜலிமாதா4ய க3ச்சே2த் யாவத்து த3ர்ஶநம் ॥ 30.
த்3ருஷ்ட்வா ஸத்3யோ மஹாபா4க3ாந் ப்ரணமேத்
த3ண்ட3வத் பு4வி ।
நிக்ஷிப்ய சரணௌ மூர்த்4நி ப்ரணமேச்ச புந:புந: ॥ 31.
ப்ரவேஶயித்வா ஸ்வக்3ருஹம் பாதௌ3 ப்ரக்ஷாளயேத் ஸ்வயம் ।
ஆசாந்தாநாஸநே ஶ்லக்ஷ்ணே ரம்யே ஸம்யங்நிவேஶயேத் ॥ 32.
கௌஶேயம் விஷ்டரம் த3த்வா பாத்3யார்க்4யாதீ3ந் ஸமர்ப்பயேத் ।
க3த்3க3த3ஸ்வரயுக்தாபி4: ப்ரியவாக்3பி4ஸ் ஸமர்ச்சயேத் ॥ 33.
பாதௌ3 ப்ரக்ஷாளயேத் பாத்ரே பவித்ரே க3ந்த4வாரிணா ।
அர்க்4யமாசமநம் த3த்வா க3ந்த4புஷ்பைஸ் ஸமர்ச்சயேத் ॥ 34.
மது4பர்க்கம் ததோ த3த்வா ஶாஸ்த்ரமார்கே3ண வைஷ்ணவ: ।
ஆசாந்தாந் பூஜயேத் ப4க்த்யா ஸ்வர்ணவஸ்த்ராதி3-
பூ4ஷணை: ॥ 35.
ப2லைஶ்ச விவிதை4ர் ப4க்ஷ்யைஸ் தாம்பூ3லேந ஸமாஹித: ।
தத்தீர்த்த2ம் ப்ராஶயேத் வித்3வாந்
புத்ரதா3ரஸுஹ்ருஜ்ஜநை: ॥ 36.
போ4ஜயேத3ந்நபாநாத்3யைஶ் ஶக்த்யா ப4க்திஸமந்வித: ।
ஶாயயித்வா ஸுஶய்யாயாம் பாதௌ3 ஸம்வாஹயேச்ச2நை: ॥ 37
ப்ரஸ்தி2தேஷு க்3ருஹாத் தேஷு சாஸீமாந்தமநுவ்ரஜேத் ।
ப்ரணம்யாத2 விஸ்ருஷ்டஸ்தைஸ் திஷ்டே2த் தத்ர
க்ஷணம் ஶுசா ॥ 38
அத3ர்ஶநம் ப4வேத் யாவத் தாவதே3வம் நிரீக்ஷயேத் ।
பூ4ய ஏவ நமஸ்க்ருத்ய நிவ்ருத்ய ஸ்வக்3ருஹம் விஶேத் ॥ 39.
நாஶ்நீயாத் வைஷ்ணவஸ் தஸ்மிந் அநுவ்ரஜ்ய ச வைஷ்ணவாந் ।
மநஸ்ஸந்தாபஸம்யுக்தஶ் சிந்தயித்வா புந:புந: ॥ 40.
ஏவம் ஸம்பூஜயேந்நித்யம் யாவஜ்ஜீவம் ந ஸம்ஶய: ।
மஹாபா4கா3வதாந் ப4க்த்யா துஷ்ட்யர்த்த2ம்
ஶார்ங்க3பாணிந: ॥ 41.

http://acharya.org

வைஷ்ணவர்கள் (தன்னைத்தேடி) வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்பட்டவுடன், வைஷ்ணவனாயிருப்பவன் தான் சாப்பிட்டுககொண்டிருந்தாலும் விரைவில் எழுந்திருந்து மிகவுகப்புடன் வேகமாக அவர்களை எதிர்கொள்ள வேண்டும. அவர்களைக்காணும் வரையில் தலையில் கையைக் கூப்பிக்கொண்டு செல்லவேணடும. அந்த மஹாபுருஷர் களைக் கண்டவுடன் தண்டம்போல் உடனே பூமியில் விழுந்து வணங்கவேண்டும். (அன்புமிகுதியாலே)மறுபடியும், மறுபடியும் அவர்களுடைய திருவடிகளைத் தலையிலே வைத்துக்கொண்டு வணங்கவேண்டும். தன் வீட்டினுள் அவர்களை எழுந்தருளப்பண்ணி, தானே அவர்களுடைய திருவடியை விளககவேண்டும. ஆசமனம் செய்தபின், மென்மைமிக்க அழகிய ஆஸனத்தில் அவர்களை ஸ்திரமாக எழுந்தருளப்பண்ணவேண்டும். அர்க்ய பாத்ய ஆசமநீயங்களை அளிதது, தழுதழுதத குரலோடு இனிய வார்த்தைகளாலே அவர்களை உபசரிக்கவேண்டும். நறுமணம்மிகக நீரால், அவர்கள் திருவடியைப் பரிசுத்தமான பாத்ரத்தில் விளககவேண்டும். அர்க்யத்தையும், ஆசமனத்தையும் அளித்து, சந்தனம் புஷ்பம் ஆகியவற்றால் (அவர்களை) அர்ச்சிக்கவேண்டும். அதற்குப்பின் அறிவாளியான வைஷ்ணவன் ஶாஸத்ரத்தில் சொல்லிய முறையில் மதுபர்க்கம் அளித்து, மறுபடியும் ஆசமனம் செய்த அவர்களுக்குத் திருப்பரியட்டம, பொன், திருவாபரணம, பலவிதமான பழங்கள, பக்ஷ்யங்கள் ஆகியவற்றை அளிதது, தாம்பூலமும் அளிதது, பின்பு அவர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை மனைவி, மககள், சுற்றத்தார், நண்பர்களோடு சேர்ந்து பருகவேண்டும். பிறகு, அந்த ஸ்ரீவைஷ்ணவர்களுககு பக்தியோடு அன்னம், பானம் முத லானவற்றை அமுதுசெய்வித்து, மெத்தென்ற பஞ்ச சயனத்தில் அவர்களை ஶயனிக்கச்செய்து, அவர்களுடைய திருவடிகளை மெல்லப் பிடிக்கக்கடவன். அந்த ஸ்ரீவைஷ்ண

http://acharya.org

வர்கள் திரும்பி எழுந்தருளும்போது, அவரூரெல்லைவரையில் தான் கூடச்சென்று, அவர்களை வணங்கி, அவர்களால் விடைகொடுக்கப்பெற்று 'இவர்கள் நம்மைப் பிரிகிறுர்களே' என்று வருத்தத்தோடு அங்கே சற்று நேரம் நின்று, அவர்கள கண்ணுக்கு மறையும் வரையில் பார்த்துக்கொண்டிருந்து, மறைந்தபின் அவர்கள் சென்ற திஶைநோக்கி தண்டன் ஸமர்ப்பித்து, அதற்குப் பின்பே தன வீட்டிற்கு வர வேண்டும். வந்தபின்பும், அவர்களையே மறுபடியும் மறுபடியும நினைத்து, அவர்களைப் பிரிந்ததிஞல் மனம் வருந்தி அன்று உணவு கொள்ளாமலிருக்கவேண்டும. உயிருள்ள வரையில் தினந்தோறும் மஹாபாகவதர்களை பக்தியுடன் இவ்வண்ணமாகப் பூஜிக்கவேண்டும். இப்படிச் செய்பவர்களிடம் ஶார்ங்கபாணியான எமபெருமான உகப்படைவான் என்பதில் ஐயமில்லை.

முடிவுரை—பலஶ்ருதி

इदं रहस्यं परमं नैवाख्येयं महर्षिभिः।
भवतां वै मया प्रोक्तमेतद्वैष्णवमुत्तमम्॥ ४२॥

இதம் ரஹஸ்யம் பரமம் நைவாக்யேயம் மஹர்ஷிபி: ।
பவதாம் வை மயா ப்ரோக்தமேதத் வைஷ்ணவமுத்தமம் ॥ 42.

இது—மஹர்ஷிகளுங்கூட அநதிகாரிகளுக்குச் சொல்லாமல் பேணிப் பாதுகாக்கவேண்டிய பரமரஹஸ்யமாகும். இந்தப் பரம வைஷ்ணவ தர்மம் உங்களுக்கு என்ஞல் சொல்லப்பட்டது.

नान्यन्मुनिवरश्रेष्ठा हरिसंश्रयणान्नृणाम्।
नान्यन्मुनिवरश्रेष्ठा हरिसंश्रयणं विना॥ ४३॥

நாந்யந்முநிவரஶ்ரேஷ்டா ஹரிஸம்ஶ்ரயணாந்ந்ருணாம் ।
நாந்யந்முநிவரஶ்ரேஷ்டா ஹரிஸம்ஶ்ரயணம் விநா ॥ 43.

http://acharya.org

முனிவர் தலைவர்களே! ஹரியை இவ்வண்ணம் ஆஶ்ரயிப்பதைக் காட்டிலும் மனிதர்களுக்குச் சிறந்தது வேறு ஒன்றுமில்லை என்பதைப் பலகால் சொல்லுகிறேன்.

एवं पराशरेणोक्तं शास्त्रं श्रुत्वा महर्षयः।
सर्वे एवाभवन् संयक् प्रपन्नास्ते जनार्दनम् ॥ ४४ ॥

ஏவம் பராஶரேணோக்தம் ஶாஸ்த்ரம் ஶ்ருத்வா மஹர்ஷய: ।
ஸர்வ ஏவாப₄வந் ஸம்யக் ப்ரபந்நாஸ் தே ஜநார்த்த₃நம் ॥ 44.

இவ்வண்ணம் பராஶரரால் சொல்லப்பட்ட ஶாஸ்த்ரத்தைச் செவியுற்ற அந்த முனிவர்கள் அனைவரும் ஜநார்த்தனனை நன்கு ஶரணமடைந்தவர்களானார்கள்.

भगवंस्त्वत्प्रसादेन सनाथाः सुखिनो वयम्।
कृतार्थाश्च मुनिश्रेष्ठ! साक्षाद्धर्मस्त्वमेव नः॥ ४५ ॥

ப₄க₃வம்ஸ்த்வத்ப்ரஸாதே₃ந ஸநாத₂ஸ் ஸுகி₂நோ வயம் ।
க்ருதார்த்தா₂ஶ்ச முநிஶ்ரேஷ்ட₂! ஸாக்ஷாத் த₄ர்மஸ்
த்வமேவ ந: ॥ 45.

அந்த ருஷிகள் ஸ்ரீபராஶரரைப் பின்வருமாறு கொண்டாடினார்கள்:— முனிவர் தலைவரான ஸ்வாமியே! (அநாதைகளாயிருந்த) நாங்கள் உமது அருளால் நாதனுடையவர்களாய் இன்புற்றுப் பெரும்பேறு பெற்றோம். எங்களுக்கு தேவரீரே நேரான தர்மமாவீர்.

एतद्धि परमं शास्त्रं श्राव्यं मोक्षमभीप्सुभिः।
सत्यं सत्यं पुनः सत्यं संसारोत्तारणं नृणाम् ॥ ४६ ॥
तीर्थमेतन्मुनिश्रेष्ठ! हरिरूपं त्वयोद्धृतम्।

ஏதத்₃தி₄ பரமம் ஶாஸ்த்ரம் ஶ்ராவ்யம் மோக்ஷமபீ₄ப்ஸுபி₄: ।
ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம் ஸம்ஸாரோத்தாரணம்
ந்ருணாம் ॥ 46.

தீர்த்த₂மேதந்முநிஶ்ரேஷ்ட₂! ஹரிரூபம் த்வயோத்₃த்₄ருதம் ।

http://acharya.org

முனிவர் தலைவரே! இந்த அழகிய பரமதா₄ர்மஶாஸ்த்ரம் மோக்ஷமடைய விரும்புகிறவர்களை ஸம்ஸாரத்தைத தாண்டுவிக்கும் என்பதை மூன்றுமுறை ஸத்யம் செய்து கூறுகிறோம். ஹரிஸ்வரூபமான இந்த ஶாஸ்த்ரம உமமால் (வேத₃ஶாஸ்த்ரங்களிலிருந்து) கடைந்தெடுக்கப்பட்டது.

त्वमेव भगवान् ब्रह्मन् साक्षात् भागवतोत्तमः ॥ ४७ ॥
नास्त्यन्यत् भवरोगघ्नं त्वत्समाश्रयणात् परम् ।

த்வமேவ ப₄க₃வாந் ப்₃ரஹ்மந் ஸாக்ஷாத் பா₄க₃வதோத்தம: ॥ 47.
நாஸ்த்யந்யத் ப₄வரோக்₃க்₄நம் த்வத்ஸமாஶ்ரயணாத் பரம் ।

எம்பெருமானே! தேவரீரே எங்களுக்கு ஆராதி₄க்கத் தகக பரமபா₄க₃வதராவீர். உம்மை ஆஶ்ரயிப்பதைக் காட்டிலும், ஸம்ஸார வ்யாதி₄நாஶனமான மருந்து வேறு இல்லை.

शक्तिसूनुमिति स्तुत्वा नमस्कृत्य महर्षयः ॥ ४८ ॥
स्वगृहाणि पुनर्गत्वा यथोक्तं हरिमर्चयन् ।

ஶக்திஸூநுமிதி ஸ்துத்வா நமஸ்க்ருத்ய மஹர்ஷய: ॥ 48.
ஸ்வக்₃ருஹாணி புநர் க₃த்வா யதோ₂க்தம் ஹரிமர்ச்சயந் ।

ஶக்தி மஹர்ஷியின் பிள்ளையான பராஶரமஹர்ஷியை இவ்வண்ணமாக அந்த மஹர்ஷிகள் துதித்து வணங்கித் தங்களிருப்பிடம் சேர்ந்து, அவர் சொன்னபடி எமபெருமானை ஆராதி₄த்தனர்.

अनन्यशरणा भूत्वा कलौ संपूज्य केशवम् ॥ ४९ ॥
भवबन्धविनिर्मुक्ताः सर्वे हरिपदं ययुः ।

அநந்யஶரணா பூ₄த்வா கலௌ ஸம்பூஜ்ய கேஶவம் ॥ 49.
ப₄வப₃ந்த₄விநிர்முக்தாஸ் ஸர்வே ஹரிபத₃ம் யயு: ।

அந்த ரிஷிகள் அனைவரும் ஸ்ரீமந்நாராயணனையே தஞ்சமாகக்கொண்டு ஆராதி₄த்து, இக்கலிகாலத்திலும்

http://acharya.org

ஸம்ஸாரத்தைவிட்டு விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைந்தனர்.

एतत् पराशरं श्रुत्वा शुद्धसत्त्वं सुनिर्मलम् ॥ ५० ॥
विशिष्टं परमं धर्मं शास्त्रं परमवैदिकम् ।
श्रुत्वा तु परमैकान्ती भूत्वा सिद्धिं परां व्रजेत् ॥ ५१ ॥

ஏதத் பராஶரம் ஶ்ருத்வா ஶுத்₃த₄ஸத்த்வம் ஸுநிர்மலம் ॥ 50.
விஶிஷ்டம் பரமம் த₄ர்மம் ஶாஸ்த்ரம் பரமவைதி₃கம் ।
ஶ்ருத்வா து பரமைகாந்தீ பூ₄த்வா ஸித்₃தி₄ம்
பராம் வ்ரஜேத் ॥ 51.

இதி ஸ்ரீபராஶர ஸ்ம்ருதௌ உத்தரகாண்டே₃
விஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரே
வைஷ்ணவாராத₄ந தன்மாஹாத்ம்யவர்ணநம் நாம த₃ஶமோऽத்₄யாய:॥

ஶுத்₃த₄ஸத்வமயமாய், குற்றமற்றதாய், பரமவைதி₃கமான இந்தப் பராஶரவிஶிஷ்டபரமத₄ர்மஶாஸ்த்ரத்தைப் பலமுறை கேட்டுப் பரமைகாந்தியாகி, மேலான மோக்ஷஸித்₃தி₄யடையக்கடவன்.

ஸ்ரீபராஶரஸ்ம்ருதியின் உத்தரகாண்ட₃மான பராஶரவிஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரத்தில்—வைஷ்ணவர்களை ஆராதி₄ப்பதையும், அவர்களுடைய பெருமையையும் வர்ணிக்கும் பத்தாம் அத்தியாயம் நிறைவுற்றது.

பராஶர விஶிஷ்ட பரமத₄ர்ம ஶாஸ்த்ரம் நிறைவடைந்தது.

முடிவுரை

பத்து அத்தியாயங்கள் கொண்ட இந்தப் பரமத₄ர்ம ஶாஸ்த்ரத்தில் — I நாமஸம்ஸ்காரத்தின் பெருமையும், க்ரமமும் (536-543). II (1) புண்ட்₃ரஸம்ஸ்காரத்தின் க்ரமம் (543-546), (2) ஊர்த்₄வபுண்ட்₃ரலக்ஷணம் (546-547), (3) இடைவெளியில்லாத ஊர்த்₄வபுண்ட்₃ரத்துக்கு நிஷேத₄ம் (547), (4) வைதி₃ககர்மங்களில் ஊர்த்₄வபுண்ட்₃ரதா₄ரண விதி₄ (547-548), (5) ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லாமல செய்யும கர்மம் ப₂லமின்றியொழிகை (548), (6) ஊர்த்₄வபுண்ட்₃ர

http://acharya.org

மற்ற ஶரீரத்தைக் காணலாகாது (549), (7) ஊர்த்₄வ புண்ட்₃ரதா₄ரண ப₂லம (549), (8) மற்ற புண்ட்₃ரங்களை தா₄ரிப்பதின் ப₂லன் (549-550), (9) த்ரிபுண்ட்₃ரதா₄ரியோடு ஸஹவாஸம கூடாது (550), (10) த்ரிபுண்ட்₃ரதா₄ரியான அந்தணன் தே₃ஶப்₄ரஷ்டம செய்யததக்கவன் (550), (11) த்ரிபுண்ட்₃ரதா₄ரிக்கு கோ₃ஷ்டி₂யில நிஷேத₄ம (551), (12) த்ரிபுண்ட்₃ரதா₄ரித்₃விஜனுககு த₃ண்ட₃னை (551-552), (13) ஊர்த்₄வபுண்ட்₃ரங்களின் ஸ்தா₂நமும, அளவும, தே₃வதைகளும் (552-556), (14) ஊர்த்₄வபுணட்₃ரம அணிந்த சரீரததின் பெருமை (557), (15) ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லா விடில் தோ₃ஷம் (557-558), (16)நாமஸம்ஸகாரத்தின் க்ரமம (558-561), III (1) மந்த்ரஸம்ஸ்காரததின க்ரமம் (561-564), (2) த்₃வய மந்த்ரோபதே₃ஶம (565), (3) த்₃வய மாஹாத்ம்யம் (565-566), (4) த்₃வயம் ஓதாதவன வைதி₃கனுகான் (566), (5) த்₃வயமும் திருமந்திரமும உபதேசிக்கவேணடும் (567), (6) தாபஸம்ஸ்காரமில்லாமல் மந்தரோபதே₃ஶம் கூடாது (567), (7) ஒரே நாளில் பஞ்சஸம்ஸகாரங்கள் (568), (8) சிஷ்யனிருககவேண்டிய முறை (568-569), IV யாக₃ஸம்ஸ்கர்ரத்தின் க்ரமம் (569-572), V (1) ப₄க₃வததா₂ராத₄னமும், ஆஶ்ரமத₄ர்மமும் (572-574), (2) விலக்கப்படவேண்டியவர் கள் (574), (3) அந்தணனின் லக்ஷணம் (575), (4) நாலு ஆஶ்ரமங்களின் லக்ஷணம (575-576), (5) விலககப்பட வேண்டியவை(576-577), (6) வர்ணாஶ்ரமத₄ர்மங்களை அநுஷ்டி₂ததே தீரவேணடும (577), (7) பாஷண்டி₃லக்ஷணம் (577-578), (8)ப்₃ரஹ்மசாரி தினந்தோறும செய்யவேண்டிய கர்மம் (578), (9) க்₃ருஹஸ்த₂ன் தினந்தோறும் செயய வேண்டிய கர்மம (578-579), (10) ஸந்யாஸி தினந்தோறும் செய்யவேணடிய கர்மம் (579-580), VI (1) விரிவான திருவாராத₄ன க்ரமம (580), (2) ஶரீரத்தைச் சிந்திககும் வித₄ம் (581-582), (3) ஆத்மாவைச் சிந்திக்கும் வித₄ம (582-584), (4) ஈஶ்வர சிந்தனத் தொடககம் (584-585), (5) லீலாவிபூ₄தி சிநதநம் (585-586), (6) நித்யவிபூ₄தி சிந்தநம்

http://acharya.org

(586-587), (7) ஸ்ரீவைகுண்ட₂ நக₃ர சிந்தநம் (587-589), (8) வைகுண்ட₂ மந்தி₃ர (கோயில்) வர்ணநம் (589-590), (9) திருமாமணி மண்டப வர்ணநம் (590), (10) தி₃வ்ய ஸிம்ஹாஸந வர்ணநம (590-591), (11) பரவாஸுதே₃வ வர்ணநம (591-596), (12) மற்ற மூர்த்திகள் (596), (13) தி₃வ்யாயுத₄ங்கள (596), (14) வ்யூஹஸ்தா₂னங்கள் (596-598), (15) இரண்டாவது ப்ராகார தே₃வர்கள் (598), (16) மூன்றாவது ப்ராகார மூாததிகள் (598), (17) நாலாவது ப்ராகார மூர்த்திகள் (598), (18) ஐந்தாவது ப்ராகார மூர்த்திகள் (599-600), (19) லீலாவிபூ₄தியிலுள்ள மூர்த்திகளின் தியானம் (600-601), (20) வ்யூஹமூர்த்தி த்₄யானம் (601), (21) விப₄வாவதாரத்₄யானமும், பயனும (601-602), (22) அந்தர்யாமி ஸ்தா₂நமும, த்₄யானமும் (602), (23) அர்ச்சாவதார த₄யானமும், பயனும(602), (24) உப₄யவிபூ₄தியோக₃த்₄யான நிக₃மனம (602), (25) வ்யூஹகு₃ணங்கள் (603), (26) வ்யூஹங்களின் தொழில்கள் (603), (27) வ்யூஹகு₃ண விவரணம (603-604), (28) ஹரிஶப்₃த₃ாாத்த₂ம் (604), (29) ப₄க₃வந் நாமங்கள் (605-608), (30)ஸவபரயாதா₂த்ம்யஜ்ஞாநம் அவஶ்யம (608-609), (31) திருவஷ்டாக்ஷரததின் அர்த்தா₂நுஸந்தா₄னம (609), (32)த்₃வயார்ததா₂நுஸந்த₄ாநம் (610-611), (33) நிதயாநுஷ்டா₂னங்கள் (611-613), (34) திருவாராத₄னம் (613-620), (35) த்₃வயமந்திரத்தின் பெருமை (621), VII டோ₃ாலோத்ஸவ வாணநம் (621-628), VIII (1) ஸநமித்திகோத்ஸவ வர்ணநம (628), (2) த்₃வாத₃ஶியில் ஆராத₄னம் (629-630), (3) நரஸிம்ஹாராத₄னம்(630-631), (4) த₄னுர்மாஸ திருவாராத₄னம் (631), (5) மாசிபங்குனி திருவாராத₄னங்கள் (631-632), (6) ஸ்ரீராமநவமியுத்ஸவம் (632-633), (7) ஸ்ரீஜயந்தியுத்ஸவம (633-634), (8) வாமந ஜயநதியுத்ஸவம (634-635), (9) வராஹஜயந்தியுத்ஸவம் (635), (10) வைஶாக₂பௌர்ணமியுத்ஸவம் (636), (11) ஶயநோத்தா₂ன ஏகாத₃ஶீ உத்ஸவங்கள் (636-637), IX மஹோத்ஸவ வாணநம (637-649), X (1) ப₄ாக₃வதாராத₄ந

http://acharya.org

விதி₄—ப₄ாக₃வதாராத₄ந வைப₄வம் (650-652), (2) மஹாப₄ாக₃வத வைப₄வம் (652), (3) மஹாப₄ாக₃வத லக்ஷணம் (652-653), (4) மஹாப₄ாக₃வதர்களின் சிறப்பு (653), (5) தொண்டர் அடிப்பொடி மகிமை (654), (6) ஸ்ரீபாத₃ தீர்த்த₂மகிமை (654), (7) ஶேஷப்ரஸாத₃வைப₄வம் (654), (8) வைஷ்ணவர்களும் அவைஷ்ணவர்களும் (655), (9) ஸ்ரீபாத₃தீர்த்த₂மகிமை (655), (10) கே₃ாத₃ாவரீ ஶாப விமோசனம் (655-658), (11) ப₄ாக₃வதாராத₄ன மஹிமை (658-659), (12) ஸ்ரீவைஷ்ணவாராத₄ந வர்ணநம் (659-662) ஆகிய விஷயங்கள் விரிவாக விளக்கப்பட்டன. இவற்றிலிருந்து, விஶிஷ்டாத்₃வைத ஸ்ரீவைஷ்ணவ ஸித்₃த₄ாந்தமும், பரமைகாந்தி த₄ர்மங்களுமே மோக்ஷமடைய விரும்புகிறவர்களால் கைக்கொள்ளத்தக்கவை என்பதே மஹர்ஷிகளின் ஸித்₃த₄ாந்தம் என்று தெளிவாக விளங்குகிறது. வடமொழியிலுள்ள இதிஹாஸ புராணங்களும், சங்ககாலம் தொடக்கமாக உள்ள தமிழிலக்கியங்களும் — இந்த த₄ர்மங்கள் ஆதி₃காலம் முதலே முமுக்ஷுக்களால் அநுஷ்டி₂க்கப்பட்டு வந்ததை வலியுறுத்துவதை விஷ்ணுசித்த விஜயத்தின் மேல்பகுதிகளில் நிலைநாட்டுவோம்.

“ராமாநுஜார்ய தி₃வ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா।
தி₃க₃ந்தவ்யாபிநீ பூ₄யாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ॥”

[ராமாநுஜாசார்யரின் தி₃வ்யாஜ்ஞை தினந்தோறும் வெற்றி பெற்று விளங்கி திக்கெங்கும் பரவட்டும்; அதுவன்றோ உலகத்திற்கு நன்மையைத் திருவுள்ளத்திற்கொண்டது.] என்கிறபடியே எம்பெருமானார் அவதரித்த பின்பு “பொலிக பொலிக” என்னும்படி பரவிய இப்பரமைகாந்தி த₄ர்மத்தை விரிவாகக் காட்டும் இந்த ஸ்ம்ருதியைப் படித்து, இயன்ற வரையில் அதன்படி ஒழுக உறுதிகொள்வது ஸ்ரீவைஷ்ணவர் ஒவ்வொருவருக்கும் கடமையாகும்.

http://acharya.org

லகு4 வ்யாஸ ஸம்ஹிதா நிர்ணயம்

''ருவியாராம் குப்தா, தி பெங்கால் பிரிண்டிங் ஒர்க்ஸ், 1, ஸீரு காக்தெரு, கல்கத்தா-1'' என்னும் விலாஸத்தில் கி. பி. 1950 முதல் 1955க்குள் இப்போது கிடைக்கும் ஸ்ம்ருதிகள் எல்லாமே ''ஸ்ம்ருதி ஸந்த3ர்ப்ப4:'' எனும் தலைப்பில் அச்சிட்டு வெளியிடப்பெற்றுள்ளன. 65 ஸ்ம்ருதிகள் இப்போது கிடைக்கின்றன என்று கணக்கிடப்பட்டும் உள்ளது. அவற்றில் பரம்பொருளைப்பற்றியோ, ஸிவன் முதலான தே3வர்களைப் பற்றியோ ப்ரஸ்தாவம் வரும் ஸ்ம்ருதிகளில் இது வரை நம்மால் ஆராயப்படாத ஸ்ம்ருதிகள் சிலவும் இருக்கின்றன. இனி அவற்றில் வரும் அப்பகுதிகளை ஆராய்ந்து, அவற்றிலும் 'விஷ்ணுவே பரமாத்மா' என்று முழங்கப்படுவதை நிலைநாட்டுவோம். முற்கூறிய கல்கத்தா பதிப்பில் 1618-ம் பக்கம் முதல் 1630-ம் பக்கம் வரையில் அச்சிடப்பெற்றுள்ள 'லகு4வ்யாஸ ஸம்ஹிதை'யை முதலில் ஆராய்வோம்.

ப்3ராஹ்மமாக்3நேயமுத்3தி3ஷ்டம் வாயவ்யம் தி3வ்யமேவ ச।
வாருணம் யௌகி3கம் சைவ ஸத்3ா ஸ்நாநம் ப்ரகீர்த்திதம்॥
ப்3ராஹ்மம் து மார்ஜநம் மந்த்ரை: குஶை: ஸோத3க பி3ந்து3பி4:।
ஆக்3நேயம் ப4ஸ்மநா ஸ்நாநம் வாயவ்யம் கோ3ரஜ: ஸ்ம்ருதம்॥
யத்து ஸாதபவர்ஷேண தத் ஸ்நாநம் தி3வ்யமுச்யதே।
வாருணஞ்சாவகா3ஹஶ்ச மாநஸஞ்சாத்ம வேத3நம்॥
யௌகி3கம் ஸ்நாநம் ஆக்2யாதம் யோகே3ாऽயம்
விஷ்ணுசிந்தநம்।
ஆத்மதீர்த்த2மித3ம் க்2யாதம் ஸேவிதம் ப்3ரஹ்மவாதி3பி4:॥
மந:ஶுத்3தி4கரம் பும்ஸாம் நித்யம் தத் ஸ்நாநம் ஆசரேத்॥
[அத். 1-10, 11, 12, 13, 14]

[ஸ்நானமானது (1) ப்3ராஹ்மம, (2) ஆக்3நேயம், (3) வாயவ்யம், (4) தி3வ்யம், (5) வாருணம், (6) யௌகி3கம் என்று ஆறு வகையாக எப்போதும் சொல்லப்படுகிறது. (1) வேத3 மந்த்ரங்களைச் சொல்லி உடம்பை நீர்த்துளிகளோடு கூடிய குஶத்தாலே துடைத்துக் கொள்வது ப்3ராஹ்ம ஸ்நானமாகும். (2) நெருப்பினால் நீருக்கப் பட்ட சாம்பலால் குளிப்பது ஆக்3நேய ஸ்நானமாகும். (3) பசுக்களினுடைய அடிப்பொடியைக் காற்று அடித்துக்கொண்டு வரும்போது அதில் குளிப்பது வாயவ்ய ஸ்நானமாகும். (4) ஸூர்யன் ப்ரகா

http://acharya.org

ஶிக்கும்போது வானத்திலிருந்து பெய்யும் மழையில் குளிப்பது திவ்ய ஸ்நானமாகும். (5) நீர்நிலைகளில் உடம்பு முழுகக் குளிப்பது வாருண ஸ்நானமாகும். (6) பரமாத்மாவை நெஞ்சிலே நினைப்பது யௌகிக ஸ்நானம் எனப்படும். விஷ்ணுவைப் பற்றிய சிந்தனமே இந்த யோகமாகும். ப்ரஹ்மவாதிகளால் எப்போதும் அநுஷ்டிக்கப்படும் இந்த ஸ்நானம் ஆத்ம தீர்த்தம் என்று சொல்லப்படுகிறது. இது மனிதர்களின் நெஞ்சைப் பரிஶுத்தப்படுத்துகிறது. இந்த ஸ்நானத்தை எப்போதும் அநுஷ்டிக்கவேண்டும்] என்று இந்த ஸம்ஹிதையின் முதல் அத்தியாயத்தில் [10-14] சொல்லப்பட்டதிலிருந்து, பரம்பொருளாகிய விஷ்ணுவைச் சிந்திப்பதே ஸ்நானங்களில் தலைசிறந்தது என்றும், அதை ப்ரஹ்மவாதிகள் எப்போதும் அநுஷ்டிக்கிறார்கள் என்றும் விளங்குகிறது.

ஆபோ நாராயணோத்பூதா: தா ஏவாஸ்யாயநம் புந: ।
தஸ்மாத் நாராயணம் தேவம் ஸ்நாநகாலே ஸ்மரேத்புத: ॥
[அத். 2-15, 16]

[நீர் நாராயணனிடமிருந்து உண்டாயிற்று. அதுவே அவனுக்கு மறுபடியும் இருப்பிடமாயிற்று. இப்படி நாரமாகிற நீரை உண்டாக்கினவனாகையாலும், அதை இருப்பிடமாகக் கொண்டவனாகையாலும் 'நாராயணன்' என்று பெயர்பெற்ற தேவனை அறிவாளியாயிருப்பவன் ஸ்நானகாலத்தில் நினைக்கவேண்டும்] என்னும் ஶ்லோகத்திலிருந்து, நாராயணனே நீர் முதலான உலகனைத்தையும் படைத்த ஜகத்காரணன் என்று விளங்குகிறது.

அந்தர்க்கதோ ஜலே மக்நோ ஜபேத் த்ரிரகமர்ஷணம் ।
த்விபதாம் வா ஜதத கூயத்ரீம் தத்விஷ்ணோ: பரமம் பதம் ॥
ஆவர்த்தயேத்வா ப்ரணவம் தேவம் வா ஸம்ஸ்மரேத்தரிம் ।
[2-20, 21]

[நீரினுள் முழுகியிருந்து மூன்றுமுறை அகமர்ஷண மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும். அல்லது த்விபதாகாயத்ரியையாவது ஜபிக்கவேண்டும். இதைச் செய்பவன் விஷ்ணுவினுடைய பரமபதத்தை அடைகிறான். ப்ரணவத்தையாவது ஜபிக்கவேண்டும். அல்லது (ப்ரணவத்தின் பொருளான) ஹரியையாவது நினைக்கவேண்டும்.] என்று தலைசிறந்த பரமபதம் விஷ்ணுவினுடையதே என்றும், ப்ரணவத்தின் பொருள் ஹரியே என்றும் சொல்லியிருப்பதிலிருந்தும் ஹரியாகிற விஷ்ணுவே பரம்பொருள் என்று மிகத்தெளிவாக விளங்குகிறது. இவ்வத்தியாயத்தில் மேலே,

http://acharya.org

ந விஷ்ண்வாராத₄நாத் புண்யம் வித்₃யதே கர்ம வைதி₃கம் ||
தஸ்மாத் அநாதி₃மத்₄யாந்தம் நித்யமாராத₄யேத்₃த₄ரிம் |
தத்₃விஷ்ணோரிதி மந்த்ரேண ஸூக்தேந பௌருஷேண ச ||
நைதாப்₄யாம் ஸத்₃ருஶோ மந்த்ரோ வேதே₃ஷூக்தஶ்-
சதுர்ஷ்வபி
நிவேத₃யித்வா சாத்மாநம் விமலம் தத்ர தேஜஸி ||
தத₃ாத்மா தந்மந: ஶாந்த: தத்₃விஷ்ணோரிதி மந்த்ரத: |
[2-41, 42, 43, 44]

[விஷ்ணுவை ஆராதி₄ப்பதைக் காட்டிலும் புண்யமான வைதி₃க கர்மம் வேறு இல்லை. ஆகையால், முதல், நடுவு, முடிவில்லாத ஹரியை தினந்தோறும் 'தத்₃ விஷ்ணோ:' என்று தொடங்கும் மந்திரத்திலும், புருஷஸூக்தத்திலும் ஆராதி₄க்கவேண்டும். இவ்விரு மந்திரங்களுக்கும் ஒப்பான மந்திரம் நாலு வேத₃ங்களிலும் சொல்லப்படவில்லை. குற்றமற்றதான தன் ஆத்மாவைச் சோதியுருவான பரமாத்மாவிடம் 'தத்₃விஷ்ணோ:' என்று தொடங்கும் மந்திரத்தாலே ஸமர்ப்பித்து, அந்தப் பரமாத்மாவிடமே பு₃த்₃தி₄யையும், மனத்தையும் செலுத்தியவனாய், மற்ற விஷயங்களில் பற்று அற்றவனாயிருக்கவேண்டும்.] என்று விஷ்ணுவை ஆராதி₄ப்பதைக் காட்டிலும் மேலான வைதி₃க கர்மம் கிடையாதென்று கூறுகையாலும், புருஷஸூக்தத்துக்கும், விஷ்ணுஸூக்தத்திலுள்ள 'தத்₃ விஷ்ணோ:' என்று தொடங்கும் மந்திரத்துக்கும் ஒப்பான மந்திரம் கிடையாதென்று கூறுகையாலும், விஷ்ணுவை முதல், நடுவு, முடிவில்லாதவன் என்று கூறுகையாலும் விஷ்ணுவே பரம்பொருள் என்று வலியுறுத்தப்படுகிறது. இப்படி தலைசிறந்த புருஷார்த்த₂மாகிற விஷ்ணுவின் பரமபத₃மாகிற மோக்ஷ லோகத்தை விரும்புகிறவர்கள் பரமாத்மாவான விஷ்ணுவையே ஆராதி₄க்கவேண்டும் என்றும், அவனைக் குறித்தே ஆத்மஸமர்ப்பணம் செய்யவேண்டும் என்றும் விதி₄த்தபோதிலும், மோக்ஷத்தை விரும்பாமல் இவ்வுலகப் பலன்களையே எளிதில் பெறவிரும்புமவர்களுக்காக மற்ற தே₃வர்களை ஆராதி₄ப்பதையும் இந்த ஸ்ம்ருதியானது விதி₄க்கிறது.

ப்₃ரஹ்மாணம் ஶங்கரம் ஸூர்யம் ததை₂வ மது₄ஸூத₃நம் |
அந்யாம்ஶ்சாபி₄மதாந் தே₃வாந் பூஜயேத்₃ ப₄க்திதோ த்₃விஜ: ||
ப்ரத₃த்₄யாத்₃வா ऽத₂ புஷ்பாணி விந்யஸேச்ச ப்ருத₂க் ப்ருத₂க் ||
[2-40, 41]

http://acharya.org

[பிரமனையோ, சங்கரனையோ, ஸூர்யனையோ, மது₄ஸூத₃னனையோ அல்லது மற்றுமுள்ள தனது இஷ்டதெய்வங்களையோ இருபிறப்பாளன் ப₄க்தியோடு ஆராதி₄க்கவேண்டும். அல்லது அவர்களைக் குறித்துப் புஷ்பங்களை ஸமர்ப்பிக்கவேண்டும். அவர்களைத் தனிதனி ஸ்தா₂னங்களிலேயே அமைக்கவேண்டும்.] என்றும்.

அத₂வா தே₃வமீஶாநம் ப₄க₃வந்தம் ஸநாதநம் ||
ஆராத₄யேந்மஹேஶாநம் மஹாதே₃வம் மஹேஶ்வரம் |
மந்த்ரேண ருத்₃ரகா₃யத்ர்யா ப்ரணவேநாத₂வா புந: ||
ஈஶாநேநாத₂வா ருத்₃ரை: த்ர்யம்ப₃கேந ஸமாஹித: |
புஷ்பை: பத்ரைரதா₂த்₃பி₄ர்வா சந்த₃நாத்₃யைர் மஹேஶ்வரம் ||
அதோ₂ நம: ஶிவாயேதி மந்த்ரேண அநேந வாசயேத் |
நமஸ்குர்யாந் மஹாதே₃வம் அம்ருதம் பரமேஶ்வரம் ||
நிவேத₃யித்வா ஸ்வாத்மாநம் யோ ப்₃ரஹ்மாண மத: பரம் |
ப்ரத₃க்ஷிணம் தத: குர்யாத் ததோ ப்₃ரஹ்மாணி வை ஜபேத் ||
த்₄யாயேத தே₃வமீஶாநம் வ்யோமமத்₄யக₃தம் ஶிவம் |
அத₂வாऽऽலோகயேதா₂ர்க்கம் ஹம்ஸ: ஶுசிஷதி₃த்ய்ருசா ||
[2-44, 45, 46, 47, 48, 49]

[அல்லது ஜ்ஞாநாதி₃ பூர்ணனாய், பழையவனாய், ஈஶாநன், மஹேஶாநன், மஹாதே₃வன், மஹேஶ்வரன் என்னும் பெயர்களால் சொல்லப்படும் தே₃வனை ருத்₃ர கா₃யத்ரி அல்லது ப்ரணவம், ருத்₃ரம், நமகம், சமகம் முதலான ருத்₃ர மந்த்ரங்கள் ஆகியவற்றைக்கொண்டு, புஷ்பங்களாலும், இலைகளாலும், நீர், சந்தனம் முதலானவற்றாலும் ஆராதி₄க்க வேண்டும். 'நம: ஶிவாய' என்னும் ஶிவ பஞ்சாக்ஷர மந்திரத்தையும் ஜபித்து, அழிவற்றவனாய், பரமேஶ்வரன் எனப்படும் மஹாதே₃வனை நமஸ்கரிக்கவேண்டும். 'யோ ப்₃ரஹ்மாணம்' எனும் மந்திரத்தைச் சொல்லித் தன் ஆத்மாவை ஸமர்ப்பித்துப் பிரத₃க்ஷிணம் செய்ய வேண்டும். அதற்குப்பின் மற்ற வேத₃மந்திரங்களையும் ஜபித்து, ஈஶாநனான தே₃வனை த்₄யானிக்கவேண்டும். அல்லது ஆகாஶத்தின் நடுவில் இருப்பவனாய் மங்க₃ளமானவனான ஸூர்யனை 'ஹம்ஸ: ஶுசிஷத்' எனும் ருக்கைச் சொல்லிக்கொண்டு காணவேண்டும்.] என்றும் மற்ற தெய்வங்களின் ஆராத₄னத்தை விதி₄த்திருப்பதைக் காண்பது. இப்படி மற்ற தெய்வங்களின் ஆராத₄னத்தை விதி₄க்கும்போது பரம பத₃ ப்ராப்தியைச் சொல்லாததிலிருந்தும், அவர்களுக்குப் பரமாத்மாவுக்கே உரிய பெருமைகளைச் சொல்லாததிலிருந்தும் அந்தந்த தெய்

http://acharya.org

வங்களை ஆராதி₄ப்பவர்களுக்கு அந்தந்த தெய்வங்களின் உலகங்களாகிற அல்பாஸ்தி₂ர ப₂லன்களே கிடைக்கும் என்று உணர்த்தப்படுகிறது. ருத்₃ரன் மற்றவர்களை ஸம்ஹரிப்பவனாகையாலும், 'ந ப்₃ரஹ்மா நேசாந:' [நாராயணோபநிஷத்] [பிரமனுமில்லை; சிவனுமில்லை] என்று ஓதப்படும் மஹாப்ரளயகாலம்வரை வாழ்பவனாகையாலும், 'அழிவற்றவன்' எனும் பொருளுள்ள 'அச்யுத' ஶப்₃த₃த்தாலே அவனைக் குறித்ததில் விரோத₄மில்லை. மஹாதே₃வன், பரமேஶ்வரன் முதலான பெயர்களும் ஸர்வேஶ்வரனை நாராயணனுடையவையாயிருந்தபோதிலும், பிரமனுடைய தன் பிள்ளையான உருத்திரனுக்கு இடப்பட்ட நாமங்களாகும். என்று ஶதபத₂ ப்₃ராஹ்மண வாக்யங்களைக்கொண்டு இந்த க்₃ரந்த₂த்தின் வேத₃வேதா₃ந்த நிர்ணய ப₄ாக₃த்திலேயே நிலைநாட்டியிருக்கிறோம். ஆகையால் இந்த ஸ்ம்ருதியைக்கொண்டு ருத்₃ர பரத்வம் சொல்லுவதற்குச் சிறிதும் இடமில்லை. விஷ்ணுபரத்வமே இதில் மிகத் தெளிவாக நிலைநாட்டப்பட்டுள்ளது.

வ்ருத்₃த₄ கௌ₃தம ஸ்ம்ருதி நிர்ணயம்

கல்கத்தா பதிப்பில 1919-ம் பக்கம் முதல் 2082-ம் பக்கம் வரையுள்ள இந்த ஸ்ம்ருதியிலும், ஆங்காங்கு மற்ற தெய்வங்களின் ஆராத₄னம் சொல்லப்பட்டபோதிலும், விஷ்ணுவுக்கே பரத்வமும், விஷ்ணுவை ஆராதி₄ப்பவர்களுக்கே மோக்ஷப்ராப்தியும் மிகத்தெளிவாக முழங்கப்பட்டுளளது. யுதி₄ஷ்டி₂ரனுக்குக் கிருஷ்ணன் உபதே₃ஶிப்பதாக அமைந்துள்ள இந்த ஸ்ம்ருதியில் 22-ம் அத்தியாயத்தில்,

அநாஶ்ரிதாஶ்ரயந்நாஸ்தி முக்₂யமாஶ்ரயமாஶ்ரயேத் ।
ருத்₃ரம் ஸமாஶ்ரிதா தே₃வா ருத்₃ரோ ப்₃ரஹ்மாணமாஶ்ரித: ॥
ப்₃ரஹ்மா மாமாஶ்ரிதோ ராஜந்நாஹம் கஞ்சிது₃பாஶ்ரித: ।
மமாஶ்ரயோ ந கிஞ்சித்து ஸர்வேஷா மாஶ்ரயோऽஸ்ம்யஹம் ॥
ஏவமேதந்மயா ப்ரோக்தம் ரஹஸ்ய மித₃ முத்தமம் ॥
[2-28, 29, 30]

[எவராலும் ஆஶ்ரயிக்கப்படாதவர்களை ஆஶ்ரயிப்பதால் பயனில்லை. அதனால் பலரால் ஆஶ்ரயிக்கப்பட்டவர்களையே ஆஶ்ரயிக்கவேண்டும். தே₃வர்கள் ருத்₃ரனை ஆஶ்ரயித்திருக்கிறார்கள். ருத்₃ரன் பிரமனை ஆஶ்ரயித்திருக்கிறான். அரசனே! பிரமன் என்னை ஆஶ்ரயித்திருக்கிறான். நான் எவனையும் ஆஶ்ரயித்திருப்பவன் அல்லன். எனக்குப் புகலிடமாயிருப்பது எதுவுமேயில்லை. எல்லாருக்கும் நானே புகலிடமாயிருப்பவன். இந்த உத்தமமான

http://acharya.org

ரஹஸ்யம் இவ்வண்ணமாக உனக்கு என்னால் உபதே₃சிக்கப்பட்டது.] என்று நம்முடைய ஆசார்யர்களால் பலகால் எடுக்கப்பட்ட ப₄க₃வத்₃ வாக்யம் காணப்படுகிறது. இதையொட்டிப் பார்க்கும்போது, மோக்ஷம் தவிர்ந்த மற்ற ப₂லன்களை விரும்புகிறவர்களுக்குப் பரமாத்மாவை விடத் தாழ்ந்த மற்ற தெய்வங்களின் ஆராத₄னம் விதி₄க்கப்படுகிறது என விளங்குகிறது. இந்த ஸ்ம்ருதியில் பிரமன், சிவன் முதலான மற்ற தெய்வங்களின் ஆராத₄னங்கள் விதி₄க்கப்படும் பின்வரும் இடங்கள் இதற்குச் சான்றாகும். (1) 3-16,17,29 (2) 5-119 to 121 (3) 10-24,25.

ப₄க₃வந்! வைஷ்ணவா த₄ர்மா: கிம்ப₂லா: கிம்பராயணா: |...
தாநாசக்ஷ்வ ஸுரஶ்ரேஷ்ட₂! த்வத்₃ப₄க்தோऽஸ்ம்யஹமச்யுத! ||
[1-3...10]

[ப₄க₃வசனே! வைஷ்ணவ த₄ர்மங்களுக்கு என்ன ப₂லன்? எதை மேலான ப்ராப்யமாகக் கொண்டவை அவை? தேவர்தலைவனே! அதை எனக்குக் கூறுவாய், அச்யுதனே! உனது ப₄க்தனன்றோ நான்] என்று தொடங்குகிறது இந்த ஸ்ம்ருதி. இதிலிருந்து வைஷ்ணவ த₄ர்மங்களை விளக்குவதையே குறிக்கோளாகக் கொண்டது இது என விளங்குகிறது. இந்த முதல் அத்தியாயத்தில் உள்ள பின்வரும் ப₄க₃வத்₃வாக்யங்கள் கீ₃தையிற்போலே தன்னுடைய பரத்வத்தை முழங்கும் மொழிகளாகும்.

இத₃ம் மே மாநுஷம் ஜந்ம க்ருதமாத்மநி மாயயா |
த₄ர்மஸம்ஸ்த₂ாபநாயைவ து₃ஷ்டாநாம் ஶாஸநாய ச ||
மாநுஷ்யம் ப₄ாவமாபந்நம் யே மாம் க₃ருஹ்ணந்த்யவஜ்ஞயா |
ஸம்ஸரந்தீஹ தே மூர்க்க₂ா: திர்யக்₃யோநிஷ்வநேகஶ: ||
யே ச மாம் ஸர்வஶக்தத்வே பஶ்யந்தி ஜ்ஞாநசக்ஷுஷா |
மத்₃ப₄க்தாம்ஸ்தாந் ஸதா₃ யுக்தாந் மத்ஸமீபம் நயாம்யஹம் ||
மத்₃ப₄க்தாநாம் து மாநுஷ்யே ஸர்வஜந்ம ச பாண்ட₃வ! |
அபி வா யே அபி₄ரதா: மத்₃ப₄க்தா: பாண்டு₃நந்த₃ந! ||
முச்யந்தே பாதகை: ஸர்வை: பத்₃மபத்ரமிவாம்ப₄ஸா |
ஜந்மாந்தர ஸஹஸ்ரேஷு தபஸா ப₄ாவிதாத்மநாம் ||
மத்₃ப₄க்தி: க்ரியதே தாத! மநுஷ்யாணாம் ந ஸம்ஶய: |
யச்ச ரூப்யபரம் புண்யம் தைஸ்தத₃சலவத் த்₄ருவம் ||

http://acharya.org

ந த்₃ருஶ்யதே ததா₂ தே₃வை: மத்₃ப₄க்தை: த்₃ருஶ்யதே யதா₂ ।
அபரம் யச்ச மே ரூபம் ப்ராணபூ₄ரவேஷு நாஶ்யதே ॥
தத₃த்₃யதே ஹ ஸர்வார்த்தை₂: ஸர்வபூ₄தைஶ்ச பாண்ட₃வ! ।
கல்பகோடிஸஹஸ்ரேஷு வ்யதீதேஷ்வாக₃தேஷு ச ॥
து₃ர்லபயாமீதி யத்₃ரூபம் தத் ப்ரபஶ்யந்தி மே ஸுரா: ।
ஸ்தி₂த்யுத்பத்தி லய கர்த்தாரம் யோ மாம் ஜ்ஞாத்வா ப்ரபத்₃யதே ॥
அநுக்₃ருஹ்ணாம்யஹம் தஸ்ய ஸம்ஸாராந் மோசயாமி ச ।
அஹமாதி₃ர்ஹி பூ₄தாநாம் ஸ்ருஷ்டா ப்₃ரஹ்மாத₃யோ மயா ॥
ப்ரக்ருதிம் ஸ்வாமவஷ்டப்₄ய ஜக₃த்ஸர்வம் ஸ்ருஜாம்யஹம் ।
தமோமூலோ ऽஹமவ்யக்த: ரஜோ மத்₄யே ப்ரதிஷ்டி₂தம் ॥
ஊர்த்₄வம் ஸத்வவிஶாலோ ऽஹம் ப்₃ரஹ்மாதி₃ஸ்தம்ப₃ஸம் ஸ்தி₂தம் ।
மூர்த்த₄ாநம் மே தி₃வம் வித்₃தி₄ சந்த்₃ராதி₃த்யௌ ச லோசநே ॥
தே₃வாதி₃ப்₃ராஹ்மணா வக்த்ரம் மருத: ஶ்வஸநம் ச மே ।
தி₃ஶோ மே பா₃ஹவஶ்சாஷ்டௌ நக்ஷத்ராணி விபூ₄ஷணம் ॥
அந்தரிக்ஷம் கரம் வித்₃தி₄ ஸர்வபூ₄தாவகாஶகம் ।
மார்க்₃கோ₃ மேக₄ாநிலாப்₄யாம் து யமம் ஶ்ரோத்₃ரமவ்யயம் ।
ப்ருதி₂வீம் ச பா₃லம் யத்₃வை த்₃வீபாநாஞ்ச நகை₃ர் யுதம் ।
ஸர்வஸந்த₄ாரணோபேதம் பாதௌ₃ மம யுதி₄ஷ்டி₂ர ! ॥
ஸ்தி₃தோ ஹ்யேககு₃ண: கே₃ ஹ த்₃விகு₃ணஶ்சாஸ்மி மாருதே ।
அகு₃ணஸ் தை: ஸ்தி₂தோ ऽஹம் வை ஸலிலே து சதுர்கு₃ண: ॥
மஹாந்தோ மே கு₃ணா: பஞ்ச மஹாபூ₄தேஷு பஞ்சஸு ।
தந்மாத்ரே ஸம்ஸ்தி₂த: ஸோ ऽஹம் ப்ருதி₂வ்யாம் பஞ்சதா₄ ஸ்ம்ருத: ॥
அஹம் ஸஹஸ்ரஶீர்ஷஸ்து ஸஹஸ்ரசரணேக்ஷண: ।
ஸஹஸ்ரபா₃ஹுரித₃ரத்₃ருக் ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் ॥
ஸ்தி₂தோ ऽஸ்மி ஸர்வத: ஸத்₃யோ ஹ்யத்யதிஷ்டே₂ த₃ஶாங்கு₃லம் ॥
ஸர்வபூ₄தாத்மபூ₄த: ஸந் ஸர்வவ்யாபீ ததோ ஹ்யஹம் ।
அசிந்த்யோ ऽஹமநந்தோ ऽஹம் அசலோ ऽஹமஜோ ஹ்யஹம் ॥
அநாதி₃ஶ் சாப்ரமேயோ ऽஹம் அவ்யயோ ऽவேத்₃ய ஏவ ச ।
நிர்கு₃ணோ ऽஹம் நிர்க₃ந்த₄ாத்மா நித்யோ ऽஹம் நிர்மமோ ऽபி ச ॥

http://acharya.org

நிர்த்3வந்த்3வோ நிர்விகாரோऽஹம் நித4நஞ்சாம்ருதஸ்ய ச ।
ம்ருதஸ்ய தஸ்ய சாஹஞ்ச ஸ்வாஹாகாரோ நராதி4ப! ॥
தேஜஸா தபஸா சாஹம் பூ4தக்3ராமேஷ்வநவ்யய: ।
ஸ்நேஹபாஶகு3ணைர் ப3த்3த்4வா த4ாரயாம்யாத்மமாயயா ॥
சதுராஶ்ரமவர்ஞோऽஹம் சாதுர்ஹோத்ரபு2லாஶந: ।
சதுர்மூர்த்திஶ் சதுர்வ்யூஹ: சதுராஶ்ரமப4ாஜநம் ॥
ஸம்ஹ்ருத்யாஹம் ஜக3த்ஸர்வம் க்ருத்வாऽஹம் கு3ர்ப4 ஆத்மந:
ஶயாமி தி3வ்யயோகே3ந ப்ரளயேஷு யுதி4ஷ்டி2ர! ॥
ஸஹஸ்ரயுக3பர்யந்தா ப்3ராஹ்மீ ராத்ரிர் மஹார்ணவே ।
ஸ்தி2த்வா ஸ்ருஜாமி பூ4தாநி ஜங்க3மாநி ஸ்தி2ராணி ச ॥
கல்பே கல்பே ச பூ4தாநி ஸம்ஹராமி ஸ்ருஜாமி ச ।
ந ச மாம் தாநி ஜாநந்தி மாயயா மோஹிதாநி ஹி ॥
மம சைவாந்த4காரஸ்ய மாஶ்ரிதஸ்ய ச நித்யஶ: ।
ப்ரஶாந்தஸ்யேவ தீ3பஸ்ய க3திர் நைவோபலப்4யதே ॥
ந தத3ஸ்தி க்வசித்3ராஜந்! யத்ர நாஹம் ப்ரதிஷ்டி2த: ।
ந ச தத்3வித்3யதே பூ4தம் மயி ஸர்வம் ப்ரதிஷ்டி2தம் ॥
யாவந்மாத்ரம் ஶரீரம் ஹி ஸ்தூ2ல ஸூக்ஷ்மமித3ம் க்வசித் ।
ஜீவபூ4தோ ஹ்யஹம் தஸ்மிந் ஹிதாயேமம் ப்ரதிஷ்டி2த: ॥
கிமத்ர ப3ஹுநோக்தேந ஸத்யமேதத் ப்3ரவீமி தே ।
யத்3பூ4தம் யத்3ப4விஷ்யச்ச தத்ஸர்வமஹமேவ து ॥
மச்ச2ரத்3த4ாத4நாநி யாநி பூ4தாநி தாநி பாண்ட3வ! ॥
மாமேவ ந ச ஜாநந்தி மாயயா மோஹிதாநி மே ।
ஏவம் ஸர்வம் ஜக3தி3த3ம் ஸதே3வாஸுரமாநுஷம் ।
மந்த்ர: ப்ரப4வதே ராஜந்! மம விப்ராவிநாஶிந: ॥

[1-48...71]

{என்னுடைய ஸங்கல்பத்தாலே இந்த மனிதப்பிறப்பு த4ர்மத்தை நிலை நிறுத்துவதற்காகவும், து3ஷ்டர்களை த3ண்டி3ப்பதற்காகவும் என்னால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. மனிதவுருவை எடுத்திருக்கும் என்னை அவமதிக்கும் அறிவிலிகள் விலங்குகளாகப் பலமுறை பிறக்கிறார்கள். எவர்கள் ஞானக்கண்ணால் என்னை ஸர்வஶக்திகளையும் உடையவனாகக் காண்கிறார்களோ, என்னொருவனிடமே எப்போதும் ஈடுபடும் என் பக்தர்களான அவர்களை நானே எனதருகில் அழைத்துக்கொள்கிறேன்.

http://acharya.org

பாண்டு₃புத்ரனே ! என் ப₄க்தர்கள் மனிதர்களில் எல்லா ஜாதிகளி லும் பிறக்கிறார்கள். எந்த ஜாதியில் பிறந்தாலும், என்னிடம் ஈடு பட்ட என் ப₄க்தர்கள் தாமரை இலையிலிருந்து தண்ணீர்போலே எல்லாப் பாபங்களிலிருந்தும் விடுபடுகிறார்கள். ஆயிரக்கணக்கான ஜன்மங்களில் என்னைச் சிந்தித்த மனிதர்களுக்கே என்னிடம் ப₄க்தி உண்டாகிறது என்பதில் ஐயமில்லை. மனிதர்களை உயர்க₃திக்கு அழைத்துச் செல்லும் என்னுடைய உருவமுள்ள தி₃வ்ய மங்க₃ள விக்₃ரஹம் என்னுடைய ஸ்வரூபத்தைக் காட்டிலும் வேறுபட்டதாய், அழியாததாய், நிலையானதாய உள்ளது. அது என்னுடைய ப₄க்தர்க ளால் காணப்படுவதுபோலே தே₃வர்களாலும் காணப்படுவதில்லை. உயிர்வாழும் பிராணிகளுக்கு உருவமாயிருந்துகொண்டு அழியும் ஶரீர மும் என்னுடைய ஶரீரமேயாகும். சென்றதும், வரப்போவதுமான ஆயிரக்கணக்கான காலங்களிலும் அது எல்லா ஜீவராஶிகளாலும் எல்லாப்படியாலும் அநுப₄விக்கப்படுகிறது. இப்போது நான் காண் பிக்கும் இந்த அப்ராக்ருத ரூபத்தை நான் காட்டுவதாலேயே தே₃வர்க ளும் காண்கிறார்கள். உலகத்தை உண்டாக்கி, ரக்ஷித்து அழிப்பவ னாக என்னை உணர்ந்து, எவனொருவன் (என்னை) ஶரணமடைகிறானோ நான் அவனை அநுக்₃ரஹித்து ஸம்ஸாரத்திலிருந்து விடுவிக்கிறேன். நான் எல்லாப் பொருள்களுக்கும் ஆதி₃யாய் இருப்பவன். பிரமன் முதலான தே₃வர்கள் என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்டவர்கள். என்னு டையதான மூலப்ரக்ருதியை அதி₄ஷ்டி₂த்து நின்று, உலகனைத்தையும் நான் படைக்கிறேன். (தாழநிற்கும்) தமோகு₃ணத்தினால் நான் மறைக்கப்படுகிறேன், ரஜோகு₃ணம் (தாழ்வுக்கும் உயர்வுக்கும்) நடு வில் நிலைநிற்கிறது. உயரநிற்கும் ஸத்வகு₃ணத்தினால் நான் விரிவாக அறியப்படுகிறேன். இந்த மூன்று கு₃ணங்களும் பிரமன் முதல் புல் ஈறாகவுள்ள எல்லா ஜீவராஶிகளிடமும் உள்ளன. தே₃வ லோகத்தை என் தலையாக அறிவாய். சந்த்₃ரஸூர்யர்கள் என் இரு கண்கள். தே₃வர்கள், அந்தணர்கள் முதலான உயர்ந்தவர்கள் என்னுடைய முகம். காற்று என்னுடைய மூச்சு. எட்டு தி₃க்குகள் என்னுடைய தோள்களாகும். நக்ஷத்ரங்கள் என் ஆப₄ரணங்கள். எல்லா பூ₄தங்களுக்கும் இடங்கொடுக்கும் அந்தரிக்ஷம் எனக்குக் கை என்று அறிவாய். மேக₄ம், காற்று இவற்றைக்கொண்டு நான் ஸஞ்சரிக்கிறேன். (எல்லாவற்றையும் விழுங்கும்) யமன் எல்லா வற்றையும் விழுங்கித் தான் அழியாதிருக்கும் என் வயிறாகும். த்₃வீபங்களோடும், மலைகளோடும் கூடிய அனைத்தையும் தாங்கும் ப₃ல முடையதான பூ₄மி என்னுடைய பாத₃ங்கள். ஆகாஶத்தில் ஶப்₃த₃

http://acharya.org

மாகிற ஒரு கு3ணத்தை உடையவனாயிருக்கிறேன் நான். காற்றில் ஶப்3த3ஸ்பர்ஶங்களாகிற இரண்டு கு3ணங்களோடு இருக்கிறேன் நான். கு3ணமற்றவனான நான் நெருப்பில் ஶப்3த3 ஸ்பர்ஶ ரூபங்களாகிற முக்கு3ணங்கள் உடையவனாயிருக்கிறேன். நீரில் ஶப்3த3ஸ்பர்ஶரூப ரஸங்களாகிற நாலு கு3ணங்களை உடையவனாயிருக்கிறேன். பூ4மியில் ஶப்3த3 ஸ்பர்ஶ ரூப ரஸ க3ந்த4ங்களாகிற ஐந்து கு3ணங்களை உடையவனாகச் சொல்லப்படுகிறேன். இவ்வண்ணமாக ஐம்பெரும் பூ4தங்களிலும் உள்ள இந்த ஐந்து பெருங்குணங்களும் என்னுடையவையேயாகும். (பூ4தங்களுக்குக் காரணமான) தன்மாத்ரத்தில் இருப்பவனும் நானே. நான் ஆயிரக்கணக்கான தலைகளை உடையவன். ஆயிரக்கணக்கான பாத3ங்களையும், கண்களையும் உடையவன். ஆயிரக்கணக்கான தோள்களையும், உத3ரம் முதலானவற்றையும் உடையவன். இந்த லீலாவிபூ4தி முழுவதிலும் வியாபித்திருப்பவன். அதற்கு மேலும் பத்து அங்குலம் (நித்யவிபூ4தியில்) ஒரே காலத்தில் வியாபித்திருக்கிறேன். அதனால் எல்லா ஜீவராஶிகளுக்கும் நான் ஆத்மாவாயிருக்கிறேன். எல்லாவற்றிலும் வியாபித்திருக்கிறேன். நான் அறியமுடியாதவன். அளவற்றவன்; அசையாதவன். நான் பிறப்பற்றவனாயும் இருக்கிறேனன்றோ. நான் ஆதி3யற்றவனாகவும், அளவிட்டு அறியமுடியாதவனாகவும், அழிவற்றவனாகவும் இருக்கிறேன். தாழ்ந்த கு3ணங்கள் என்னிடம் இல்லை. க3ந்த4ம் முதலான ப்ராக்ருத கு3ணங்களும் என் ஸ்வரூபத்தில் இல்லை. எப்போதும் இருப்பவன் நான். ஆனால் மமகாரமற்றவன். ப்ராக்ருதமான ஸுக2 து3:க்க2ங்கள், லாப4ாலாப4ங்கள், ஜயாபஜயங்கள், ஶோகமோஹங்கள் முதலான இரட்டைகள் அற்றவன். விகாரம் அற்றவன். அழிவுள்ள லீலாவிபூ4திக்கும், அழிவற்ற நித்யவிபூ4திக்கும் ஆஶ்ரயமாயிருப்பவன். யஜ்ஞங்களில் ஸ்வாஹாகாரமாயிருப்பவன். என் தேஜஸ்ஸாலும், ஸங்கல்பத்தாலும் அழிவுள்ள பூ4தங்களிலும் நான் அழிவற்றவனாய் விளங்குகிறேன். ஜீவராஶிகளை ஆஶாபாஶ கு3ணங்களால் கட்டி, என் ஸங்கல்பத்தால் த4ரித்து நிற்கிறேன். நாலு வர்ணமாகவும், ஆஶ்ரமமாகவும் இருப்பவன் நானே. சதுர்ஹோதாக்கள் செய்யும் யஜ்ஞங்களின் ப2லனை அநுப4விப்பவனும் நானே. நானே நாலு மூர்த்திகளை உடையவனாய், நாலு வ்யூஹங்களாகப் பிரிந்திருக்கிறேன். நாலு ஆஶ்ரமங்களுக்கும் இருப்பிடமாயிருக்கிறேன். இவ்வுலகனைத்தையும் அழித்து, எனது வயிற்றினுள் அடக்கி, ப்ரளய ஜலத்திலே யோக3 நித்3ரையோடு ஶயனித்திருக்கிறேன். ஆயிரம் சதுர்யுக3ம் கொண்ட ப்3ரஹ்மாவின் ராத்திரி காலம் முழுவதும் ப்ரளய ஜலத்திலே இருந்து, ஸ்ருஷ்டி காலத்தில் ஸ்தா2வர

http://acharya.org

ஜங்க₃மங்களை ஸ்ருஷ்டிக்கிறேன். கல்பந்தோறும் ஜீவராஶிகளைப் படைக்கவும், அழிக்கவும் செய்கிறேன். என்னுடைய மாயையினாலே மயக்கப்படும் அந்த ஜீவராஶிகள் என்னை அறிவதில்லையன்றோ. மகாரவாச்யனான ஜீவனிடம் எப்போதும் இருக்கும் என் விஷயமான அஜ்ஞானம் அணைந்த விளக்குப்போல உள்ளது. அதை உடைய வர்களுக்கு எப்போதும் நற்கதி இல்லை. நான் இல்லாத இடம் எங்குமே கிடையாது. நான் இல்லாத ஜீவராஶியும் கிடையாது. என்னிடம் சேதநாசேதநங்கள் எல்லாம் நிலைநிற்கின்றன எத்தனை சிறிதாயிருக்கும் ஸ்தூ₂ல ஸூக்ஷ்ம ஶரீரத்திலும் ஜீவனாயிருப்பவன் நானே. அவனுக்கு நன்மை செய்வதன் பொருட்டு அந்தர்யாமியா யிருப்பவனும் நானே. பல சொல்லி என்? உண்மையான இதை உனக்குச் சொல்லுகிறேன். ஏற்கனவே இருந்ததும், இப்போது இருப்பதும், இனி வரப்போவதுமான எல்லாப் பொருள்களும் நானே. என்னிடத்தில் ஶ்ரத்₃தை₄யாகிற செல்வத்தைக்கொண்டு என்னைத்தேடும் எல்லா ஜீவராஶிகளும் என் மாயையாலே மயக்கப் பட்டிருப்பதாலே என்னை அறிவதில்லை. வேத₃ம் அறிந்த அந்தணர்க ளிடம் அழியாமல் வாழும் என்னிடமிருந்தே தே₃வர், அசுரர், மனிதர் முதலானவர்களோடு கூடிய இவ்வுலகனைத்தும் இவ்வண்ணமாக ஏற்படுகிறது. (மூலத்தில் கடைசி வரியில் 'மந்த்ர:' என்பதை 'மத்த:' என்று திருத்திக்கொள்ளவும்.)] என்னும் ஶ்லோகங்கள் கீ₃தையிற்போலே எம்பெருமான் தன் பரத்வத்தைத் தெளிவாக முழங்குவனவாய் அமைந்திருப்பதுகண்டு இன்புறத்தக்கது. இவ் வண்ணமே மூன்றுமத்தியாயத்திலும்,

மத்₃ப₄க்தா யே நரஶ்ரேஷ்ட₂! மத்₃க₃தா மத்பராயணா: |
மத்₃யாஜிநோ மந்நியமாஸ்தாந் ப்ரயத்நேந பூஜயேத்||............
தஸ்மாத₃ஷ்டாக்ஷரம் மந்த்ரம் மத்₃ப₄க்தை: வீதகல்மஷை: |
ஸந்த்₄யாகாலேஷ்வகாலேஷு ஜப்தவ்யஞ்சாத்ம ஶுத்₃த₄யே ||
[3-55,57]

[மனிதர்தலைவனே! என்னிடமே நெஞ்சு செலுத்தியவர்களும், என்னையே மேலான ப்ராப்ய ப்ராபகங்களாகக் கொண்டவர்களும், என்னையே ஆராத₄னம் செய்பவர்களும், என்னால் சொல்லப்பட்ட நியமங்களையே கடைப்பிடிப்பவர்களுமான எனது ப₄க்தர்களை முயன்று பூஜிக்கவேண்டும்.......ஆகையால் குற்றமற்றவர்களான என் ப₄க்தர்க ளால் தமது ஶுத்₃தி₄யின்பொருட்டு ஸந்த்₄யாகாலங்களிலும், அகாலங்களிலுங்கூட திருவஷ்டாக்ஷரமந்திரம் ஜபிக்கப்படவேண்டும்.]

http://acharya.org

என்று பகவத் பக்தர்களை ஆராதிக்கவேண்டுமென்றும், எல்லாக் காலங்களிலும் திருவஷ்டாக்ஷரத்தை ஆத்மாநாத்ஸித்தியின் பொருட்டு (அர்த்தாநுஸந்தானத்தோடு) ஜபிக்கவேண்டும் என்றும் விதித்தான் எம்பெருமான். அவ்வத்தியாயத்திலேயே மேலே,

தஸ்மாத்தே நாவமந்தவ்யா மத்பக்தாஶ்ச த்விஜா: ஸதா ।
ஆரண்யகோபநிஷதி யே து பஶ்யந்தி மாம் த்விஜா: ॥
கலாவஸ்தாந் த்விஜாந் ஸர்வாந் ப்ரயத்நேந ப்ரபூஜயேத் ।
ஸ்வக்ருஹே வா ப்ரவாஸே வா திவா ராத்ரௌ ததைவ ச ॥
வ்ருத்தாஶ்ச ப்ராஹ்மணா: பூஜ்யா மத்பக்தா யே ச பாண்டவ!
நாஸ்தி விப்ரஸமோ தேவோ நாஸ்தி விப்ரஸமோ குரு: ॥
நாஸ்தி விப்ராத் பரோ பந்துர் நாஸ்தி விப்ராத் பரோ நிதி: ।
நாஸ்தி விப்ராத் பரம் தீர்த்தம் ந புண்யம் ப்ராஹ்மணாத் பரம் ॥
நாஸ்தி விப்ராத் பரோ தர்மோ நாஸ்தி விப்ராத் பரா கதி: ।
[3-75...79]

[அந்தணர்களே! வேதத்தின் ஆரண்யகங்களிலும், உபநிஷத்துக்களிலும் என்னைக் காணும் என் பக்தர்களான இருபிறப்பாளர்களை எப்போதும் அவமதிக்கலாகாது. பாண்டுபுத்திரனே! ஒவ்வொரு சிறுகாலத்திலும் என்னிடமே நிலைபெற்றிருக்கும் இருபிறப்பாளர் அனைவரையும் தம் வீட்டில் இருக்கும்போதும், யாத்திரையிலிருக்கும் போதும் பகலிலும் இரவிலும் முயன்று ஆராதிக்கவேண்டும். எனது பக்தர்களாய், (அறிவு, ஒழுக்கம், வயஸ்ஸு ஆகியவற்றில்) முதிர்ந்தவர்களான அந்தணர்கள் பூஜிக்கத்தக்கவர்கள். அத்தகைய அந்தணனுக்கு ஸமமான தேவனோ, ஆசார்யனோ, அவனைக்காட்டிலும் மேலான உறவினனோ, பொக்கிஷமோ, தீர்த்தமோ, புண்யமோ, மோக்ஷ ஸாதனமோ, ஸாத்யமோ கிடையாது] என்று பகவத்பக்தர்களான அந்தணர்களின் பெருமை அழகாகப் பேசப்பட்டது.

மாமர்ச்சயந்தி ஸத்பக்தா: தேப்யோ தத்தம் மஹாபலம் ।
ப்ரதாநை: பூஜிதோ விப்ரோ வந்திதோ வாபி க்ருத்ஸ்நஶ: ॥
ஸம்பாவிதோ வா விப்ரோ வை மத்பக்தோ திவமுந்நயேத் ।
யே படந்தி நமஸ்யந்தி த்யாயந்தி புருஷாஸ்து தம் ॥
தம் ஶ்ருத்வா வாதவா த்ருஷ்ட்வா நர: பாபாத் ப்ரமுச்யதே ।
மத்பக்தா மத்கதப்ராணா மத்பக்த்யா மத்பராயணா: ॥

http://acharya.org

பீ₃ஜயோநி விஶுத்₃த₄ா யே ஶ்ரோத்ரியா: ஸம்யதேந்த்₃ரியா: |
ஶ்ருத்வாந்நவிரளா நித்யம் தே புநந்திஹ து₃ர்ஶநாத் ||........
ஏவம் ஸர்வாஸ்வவஸ்த₂ாஸு ஸர்வத₃ாநாநி பாண்ட₃வ !|
மத்₃ப₄க்தேப்₄ய: ப்ரத₃த்தாநி தாநி ஸ்வர்க்க₃ப்ரத₃ாநி வை ||
[3-81...84,88]

[நல்லவர்களாய், என் ப₄க்தர்களான அந்தணர்கள் என்னையே ஆராதி₄க்கிறார்கள். அவர்களுக்குக் கொடுத்த த₃ானம் பெரும்பயனை யளிப்பது. அத்தகைய அந்தணன் த₃ானங்களால் ஆராதி₄க்கப் பட்டாலும், வணங்கப்பட்டாலும், எல்லாவித₄மான உபசாரங்களா லும் கௌ₃ரவிக்கப்பட்டாலும், அப்படிச் செய்தவனைப் பரமபத₃த் திற்கு அழைத்துச் செல்லுவான், எவர்கள் அத்தகைய ப₄க்தர் களின் புகழைச் சொல்லுகிறார்களோ, அவர்களை நமஸ்கரிக்கிறார் களோ, அல்லது தியானிக்கிறார்களோ. அவர்களும் முற்கூறிய பெருமையை உடையவர்கள். அத்தகையவனைப்பற்றிக் கேள்விப்பட் டாலும், பார்த்தாலும் மனிதன் பாபத்திலிருந்து விடுபடுகிறான். என்னிடம் உயிரையே வைத்திருப்பவர்களாய், என்னிடம் அன்பாலே என்னையே மேலான ப்ராப்யப்ராபகங்களாகக்கொண்டவர்களாய், தாய் தந்தையரின் இரு வம்ஶங்களிலும் பரிஶுத்₃த₄மானவர்களாய், வேத₃ மோதியவர்களாய், எப்போதும் புலனடக்கமுள்ளவர்களாய், வேத₃ம் ஓதியபடி அல்பாஹாரமுண்பவர்களான என் ப₄க்தர்கள் தங்கள் பார்வை யாலேயே அனைத்தையும் பரிஶுத்₃த₄ப்படுத்துவார்கள்......பாண்டு₃ புத்திரனே! ஆகையால் எல்லா நிலைகளிலும் எல்லா த₃ானங்களும் எனது ப₄க்தர்களுக்கு அளிக்கப்பட்டனவாகில், அவை பரமபத₃த் தையே அளிப்பவையாகும்.] என்று ப₄க்தர்களுக்கு அளிக்கப்பட்ட த₃ானம் பரமபத₃த்தையே அளிக்கும் என்றும் முழங்கப்பட்டது. நாலாம் அத்தியாயத்தில்.

த்ரிலோகநாத₂! ப₄ோ க்ருஷ்ண! ஸர்வபூ₄தாத்மகோ ஹ்யஸி |
நாநாயோக₃பரஶ்ரேஷ்ட₂! துஷ்யஸே கேந கர்மணா ||
[மூவுலகிற்கும் நாத₂னான கிருஷ்ணனே! நீ எல்லா பூ₄தங்களுக்கும் அந்தர்யாமியாயிருக்கிறாய். பலவகையான யோக₃ங்களுக்கு விஷயமா யிருப்பவர்களில் தலைசிறந்தவனே! நீ எந்தச் செயலால் உகக்கிறாய்] என்று த₄ர்மபுத்திரன் கேட்க,

யதி₃ ப₄ாரஸஹஸ்ரந்து கு₃க்₃கு₃ல்யாதி₃ ப்ரதூ₄பயேத் |
கரோஷி ச நமஸ்காரம் உபஹாரஞ்ச காரயேத் ||

http://acharya.org

பூஜயேத் ஸ்துதிபி₄ர்மாஞ்ச ருக்₃யஜு: ஸாமதஸ்ததா₂ |
ந ச துஷ்யந்தி தே விப்ரா நாஹம் துஷ்யாமி பா₄ரத ! ||
ப்₃ராஹ்மணே பூஜிதே நித்யம் பூஜிதோऽஸ்மி ந ஸம்ஶய: |
அதுஷ்டேசாஹமாக்ருஷ்யோ ப₄வாமி ப₄ரதர்ஷப₄! ||
ஶமாதி₄க₃திஸ்தேஷாம் பூஜயந்தி ச மாம் ஹி தே |
யதா₂ஹம் த்₃விஜரூபேண வஸாமி வஸுதா₄தலே ||
யஸ்தாந் பூஜயதி ப்ராஜ்ஞோ மத்₃க₃தேநாந்தராத்மநா |
தமஹம் ஸ்வேந ரூபேண பஶ்யாமி நரபுங்க₃வ! ||
காணா: குப்₃ஜா வாமநாஶ்ச த₃ரித்₃ரா வ்யாதி₄தாஸ்ததா₂ |
நாவமாந்யா த்₃விஜா: ப்ராஜ்ஞை: மம ரூபா ஹி தே த்₃விஜா: ||
யே தேऽபி ஸாக₃ராந்தாயாம் ப்ருதி₂வ்யாம் த்₃விஜஸத்தமா: |
மம ரூபேஷு தேஷ்வேவமர்ச்சிதேஷ்வர்ச்சிதோ ப₄வே ||
ப₃ஹவஸ்து ந ஜாநந்தி நரா ஜ்ஞாநப₃ஹிஷ்க்ருதா: |
யதா₂ஹம் த்₃விஜரூபேண வஸாமி வஸுதா₄தலே || [4-33...41]

[ப₄ரதகுலத்துதித்தவனே ! ஆயிரம் பா₄ரம் குங்கிலியம் முதலானவற்றை எரித்து என் கோயிலில் சுடர் ஏற்றினாலும், நமஸ்கரித்து, மிக அதி₄கமான பொருள்களை எனக்கு ஸமர்ப்பித்தாலும், ருக்₃ யஜுஸ்ஸாம வேத₃ங்களாலும் துதிகளாலும் ஆராதி₄த்தாலும், அந்தணர்களும் நானும் உகந்துவிடமாட்டோம். எனது ப₄க்தனை அந்தணனைப் பூஜித்தால் நானும் எப்போதும் பூஜிக்கப்பட்டவனாவேன். இதில் ஐயமில்லை. ப₄ரதகுலத் தலைவனே ! அந்தணன் கோபமடைந்தானாகில் நான் கோபம் அடைகிறேன். நான் ப்₃ராஹ்மண ரூபத்திலேயே இந்நிலவுலகில் வாழ்கிறேனாகையாலே, ப்₃ராஹ்மணனை ஆராதி₄ப்பவர்கள் என்னையே ஆராதி₄க்கிறார்கள். அவர்களுக்கு மேலான ப்ராப்யம் கிடைக்கிறது. எந்த அறிவாளி என்னிடம் நெஞ்சு செலுத்தி அந்தணர்களைப் பூஜிக்கிறானோ, அவனை என் ஸ்வரூபமாகவே காண்கிறேன் நான். ஒருகண் பொட்டையர்கள், கூனர்கள், குட்டையர்கள், ஏழைகள், நோயுற்றவர்கள் முதலான குறைபாடுள்ள அந்தணர்களை அறிவாளிகள் அவமதிக்கக் கூடாது. அவ்வந்தணர்கள் என் உருவமாகவே இருப்பவர்களன்றோ. கடல்சூழ்ந்த இவ்வுலகில் என் உருவமாயிருக்கும் இவ்வந்தணர்கள் அர்ச்சிக்கப்பட்டார்களென்றால் நானும் அர்ச்சிக்கப்பட்டவனாகிறேன். அறிவற்றவர்களான பலர் நான் இவ்வுலகில் ப்₃ராஹ்மண ரூபமாகவே வாழ்கிறேன் என்பதை அறிவதில்லை.]

http://acharya.org

என்று எம்பெருமான் அடியார்களான அந்தணர் பெருமை பேசப் பட்டது. இவ்வத்தியாயத்தின் முடிவில்,

விப்ரப்ரஸாத₃ாத்₃த₄ரணீத₄ரோऽஹம்
விப்ரப்ரஸாத₃ாத₃ஸுராந் ஜயாமி ।
விப்ரப்ரஸாத₃ாச்ச ஸத₃க்ஷிணோऽஹம்
விப்ரப்ரஸாத₃ாத₃ஜிதோऽஹமஸ்மி ॥ [4-57]

[அந்தணர்களின் அருளாலேயே நான் இவ்வுலகைத் தாங்குகிறேன். அந்தணர்களின் அருளாலேயே நான் இவ்வுலகை ஜயிக்கிறேன். அந்தணர்களின் அருளாலேயே நான் (யாகஙங்களில்) தக்ஷிணை உடைய வனாகிறேன். அந்தணர்களின் அருளாலேயே நான் வெல்லப்படாத வனாயிருக்கிறேன்.] என்று தன் பெருமைகளெல்லாமே தன் ப₄க்தர்க ளான அந்தணர்களால் ஏற்பட்டது என்று எம்பெருமான் அருளி யிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. ஆறும் அத்தியாயத்தின் தொடக்கத்தில்,

தே₃வ! தே₃வேஶ! தைத்₃யக்₄ந! ஸதா₃ தே₃வைரபி₄ஷ்டுத! ।
ப₄வாந் ப₄வகர: ஶ்ரீமாந் ஸஹஸ்ராதி₃த்ய தேஜஸ: ॥
ஸர்வ ஸம்ஹார! ஸர்வஜ்ஞ! ஸர்வத₄ர்ம ப்ரவர்த்தக! । [6-1, 2]

[தே₃வர் தலைவனான தே₃வனே! அஸுரர்களை அழிப்பவனே! எப்போதும் தே₃வர்களால் துதிக்கப்படுகிறவனே! நீயே ஸம்ஸாரத்தை உண்டு பண்ணுகிறவன். ஶ்ரிய:பதியான நீ ஆயிரம் ஸூர்யர்களுடைய ஒளியை உடையவன். அனைத்தையும் ஸம்ஹரிப்பவனே! எல்லாம் அறிந்தவனே! எல்லா த₄ர்மங்களையும் நிலைநிறுத்துமவனே!] எனும் யுதி₄ஷ்டி₂ர வாக்யத்தில் எம்பெருமான் ஸர்வஜக₃த்காரணன் என்று முழங்கப்பட்டது. அதன் இறுதியில்,

ப்₃ராஹ்மணோ யஸ்து மத்₃ப₄க்தோ மத்₃யாஜீ மத்பராயண: ।
மயி ஸந்ந்யஸ்தகர்மா ச ஸ விப்ரஸ்தாரயிஷ்யதி ॥
த்₃வாத₃ஶாக்ஷரதத்த்வஜ்ஞ: சாதுர்வர்ண்யவிபா₄க₃வித் ।
அச்சி₂த்₃ர: பஞ்சகாலஜ்ஞ: ஸவிப்ரஸ்தாரயிஷ்யதி ॥ [6-181,182]

[எந்த அந்தணன் என் ப₄க்தனாய், என்னையே ஆராதி₄ப்பவனாய், என்னையே பரமப்ராப்யமாகக் கொண்டவனாய், என்னிடம் எல்லாக் கர்மங்களையும் ஸமர்ப்பித்தவனாயிருக்கிறானோ, அந்த அந்தணனே அனைவரையும் கடைத்தேற்றுவான். த்₃வாத₃ஶாக்ஷர மந்த்ரமான வாஸுதே₃வ மந்த்ரத்தின் பொருளை அறிந்தவனும், நாலு வர்ணங்க

http://acharya.org

ளுடைய வேறுபாடுகளை உணர்ந்தவனும், தாழ்வுகளற்றவனும், பஞ்சகால ப்ரக்ரியையை அறிந்தவனுமான அந்தணன் அனைவரையும் கடைத்தேற்றுவான்.] என்று ப₄க₃வத்₃ ப₄க்தர்களின் பெருமை பேசப் பட்டுள்ளதும் குறிக்கொள்ளத்தக்கது.

ப்ராயோபவேஶம் ய: குர்யாத் மத்₃க₃தேநாந்தராத்மநா।
நமோ ப்₃ரஹ்மண்ய தே₃வாயேத்யுக்த்வா மந்த்ரம் ஸமாஹித: ॥
புந: ஸ்வஸ்தே₂ா ஜிதக்ரோத₄: தஸ்ய புண்யப₂லம் ஶ்ருணு।
காமக₃: காமரூபீ ச ப₃ாலஸூர்யஸமப்ரப₄:।
ஸ விமாநேந தி₃வ்யேந யாதி லோகாம்ஸ்து மாமகாந் ॥...
மம லோகேஷு ரமதே யாவதா₃ பூ₄தஸம்ப்லவம் ॥
அக்₃நிப்ரவேஶம் யஶ்சாபி குருதே மத்₃க₃தாத்மநா।
ஸோऽபி யாநேந தி₃வ்யேந மம லோகம் ப்ரபத்₃யதே ॥
தத்ர ஸர்வகு₃ணோபேத: பஶ்யத்யேவ ச மாம் ஸதா₃।
த்ரிம்ஶத்கோடிஸமா ராஜந்! மோத₃தே மம ஸந்நிதௌ₄ ॥
ததோऽவதீர்ண: காலேந வேத₃வித் ப்₃ராஹ்மணோ ப₄வேத்।
காரீஷம் ஸாத₄யேத்₃யஸ்து மாம் ப்ரபந்ந: ஶுசிவ்ரத: ॥
நமோ ப்₃ரஹ்மண்ய தே₃வாயேத்யேதந்மந்த்ர முதீ₃ரயேத்।
ப₃ாலஸூர்ய ப்ரகாஶேந விமாநேந விராஜதா ॥
மம லோகம் ஸமாஸாத்₃ய பஞ்சகோடீ: ப்ரமோத₃தே।
மம லோகாவதீர்ணஶ்ச லோகேऽஸ்மிந் க்ஷத்ரியோ ப₄வேத் ॥

[6-113...121]

[எவனொருவன் என்னிடம் நெஞ்சு செலுத்தி, 'ப்₃ராஹ்மணர்களின் தே₃வனுக்கு வணக்கம்' என்னும் மந்திரத்தைச் சொல்லி, ஶமத₃மங் களையுடையவனாய், கோபத்தை வென்றவனாய் ப்ராயோபவேஶம் (உண்ணாநோன்பு) அநுஷ்டிக்கிறானோ, அவனுடைய புண்யப₂லத்தைக் கேட்பாய். எங்கும் செல்பவனாய், விரும்பிய உருவை எடுப்பவனாய், இளஞ்சூரியன்போல் ஒளியுள்ளவனாய், அவன் தி₃வ்யவிமானத்தின் மூலம் எனது உலகங்களை அடைகிறான்....ப்ரளயகாலம் வரையில் எனது உலகங்களில் ரமிக்கிறான். என்னிடம் நெஞ்சுசெலுத்தி எவனொருவன் அக்₃நி ப்ரவேஶம் செய்கிறானோ, அவனும் தி₃வ்யவிமானத்தில் ஏறி என் உலகை அடைகிறான். அங்கு எல்லா நற்குணங்களையும் உடைய வனாய் என்னை எப்போதும் காண்கிறான். முப்பதுகோடி வருஷம் என் னோடு இன்புற்று, மறுபடியும் வேத₃மறிந்த அந்தணனாகப் பிறக்கிறான்.

http://acharya.org

பரிஶுத்₃த₄மான வ்ரதத்தையுடையவனும்,என்னை ஶரணமடைந்தவனும் எவனொருவன் 'காரீஷம்' எனும் கர்மத்தை அநுஷ்டி₂க்கிறானோ அவன் 'ப்₃ராஹ்மணர்களின் தே₃வனுக்கு வணக்கம்' என்னும் மந்திரத்தைச் சொல்லவேண்டும். அவன் ப₃ாலஸூர்யன்போல் ஒளிவீசும் விமானத்தில் ஏறி, இவ்வுலகிலுள்ள என்னுடைய கார்ய வைகுண்ட₂த்தை அடைந்து, ஐந்துகோடி வருஷங்கள் ஆனந்த₂மடைகிறான். அதற்குப் பின் என்னுலகத்தில் இருந்து கீழிறங்கி இந்த பூ₄மண்ட₃லத்தில் க்ஷத்ரியனாக ஆகிறான்.] என்று ஏழாம் அத்தியாயத்தில் காணப்படும் ஶ்லோகங்களிலிருந்து அந்தணர்க்குரிய தெய்வம் எம்பெருமானே என்று விளங்குகிறது. தாழ்ந்த ப₃லன்களை விரும்பித் தாழ்ந்த கர்மங்களைச் செய்பவர்களும் 'நமோ ப்₃ரஹ்மண்ய தே₃வாய'' என்று அந்தணர்க்குரிய தெய்வம் எம்பெருமானே என்று உறுதிப்படுத்தும் மந்திரத்தை அநுஸந்தி₄த்தால், அவர்கள் நீண்டகாலம் ப்ரக்ருதி மண்ட₃லத்துக்குள் இருக்கும் விஷ்ணுலோகங்களில் ஆனந்தா₂நு பூ₄வத்தைப் பெறுகிறார்கள். அதற்குப்பின் அவர்களை இவ்வுலகத்தில் தன்னையே விரும்பும் பிறவிகளை எடுக்கச்செய்கிறான் எம்பெருமான்— என்பது இந்த ஶ்லோகங்களின் ஸாரம்.

எட்டாம் அத்தியாயத்தில்,

ஸவ்யாஹ்ருதிகாம் ஸப்ரணவாம் ஸாவித்ரீம் வா ததோ ஜபேத் ।
ஆஶ்வாஸமோக்ஷாத் ப்ரணவம் ஜபேத்₃வா மாமநுஸ்மரந் ॥
ருக்பாத₃ம் வா ஜபேந்மந்த்ரம் அஷ்டாக்ஷரமதா₂பி வா ।
[8-38,39]

[அந்த அக₄மர்ஷண ஜபத்துக்குப்பின் மூச்சை வெளிவிடுவதற்குமுன் ப்ரணவத்தோடும், வ்யாஹ்ருதிகளோடுங்கூடிய கா₃யத்ரீ மந்த்ரத்தை ஜபிக்கவேண்டும். என்னை நினைத்துக்கொண்டு ப்ரணவத்தையாவது ஒரு ருக்கின் பாத₃த்தையாவது அஷ்டாக்ஷர மந்த்ரத்தையாவது ஜபிக்கவேண்டும்.] என்று ப்ரணவத்துக்கும் அதன் விவரணமான திருவஷ்டாக்ஷரத்துக்கும் பொருளாயிருப்பவன் தானே என்று காட்டினான் கண்ணன்.

ததஸ்த்வஷ்டாக்ஷராதி₃நி த்ரிः க்ருத்வா பரிவர்த்தயேத் ॥
ப்ரத₃க்ஷிணம் பராம்ருஜ்ய முத்₃ராயாः ஸ்வமுக₂ம் தத₂ா ।
ஊர்த்₄வபா₃ஹுஸ்ததோ பூ₄த்வா ஸூர்யமீக்ஷந் ஸமாஹிதः
தந்மண்ட₃லஸ்த₂ம் மாம் த்₄யாயேத் ததோ மூர்த்திஞ்சதுர்பு₄ஜம்।
[8-48,49,50]

http://acharya.org

[அதற்குப்பின் அஷ்டாக்ஷரம் முதலானவற்றை மூன்று முறை ஜபிக்க வேண்டும். அஞ்ஜலிமுத்₃ரையோடு தன்னைத்தானே ப்ரத₃க்ஷிணம் செய்து, கைதூக்கிநின்றவனாய், மன:ஶாந்தியுடன் ஸூர்யனைப் பார்த்துக்கொண்டு, நான்கு கரங்களையுடையவனாய், ஸூர்யமண்ட₃லத்தில் இருக்கும் என்னை த்₄யானிக்கவேண்டியது] என்று அஷ்டாக்ஷரத்தின் பொருளான் தானே ஸூர்யமண்ட₃லத்தின் நடுவிலிருக்கும் பரமாத்மா என்றும் காட்டினான்.

கத₂ம் த்வமர்ச்சநீயோऽஸி மூர்த்தய: கீத்₃ருஶாஸ்து தே ।
வைகா₂நஸா: கத₂ம் ப்₃ரூயு: கத₂ம் வா பாஞ்சராத்ரிகா: ॥ [8-85]

[உன்னை அர்ச்சிக்கவேண்டிய முறை என்ன? உன்னுடைய மூர்த்திகள் யாவர்? இவ்விஷயங்களைப்பற்றி வைகா₂நஸர்களும், பாஞ்சராத்ரிகளும் என்ன கூறுகிறார்கள் ?] என்று யுதி₄ஷ்டி₂ரர் கேட்க,

ஶ்ருணு பாண்ட₃வ! தத்ஸர்வம் அர்ச்சநாக்ரமம் உத்தமம் ।
ஸ்த₂ண்டி₃லே பத்₃மகம் க்ருத்வா சாஷ்டபத்ரம் ஸ்வகம் ஹிதம் ॥
அஷ்டாக்ஷரவிதா₄நேநாப்யத₂வா த்₃வாத₃ஶாக்ஷரை: ।
வைதி₃கைரத₂வா மந்த்ரை: மம ஸூக்தேந வா புந: ॥
ஸ்தா₂பிதம் மாம் தத: தஸ்மிந்நுத்₃த₄ரீத விசக்ஷண: ।
பூருஷஞ்ச தத: ஸூக்தமச்யுதஞ்ச யுதி₄ஷ்டி₂ர! ॥
அநிருத்₃த₄ஞ்ச மாம் ப்ராஹு: வைகா₂நஸவிதோ₃ ஜநா: ।
அந்யே த்வேவம் விஜாநந்தி மாம் ராஜந்! பாஞ்சராத்ரிகா: ॥
வாஸுதே₃வஞ்ச ராஜேந்த்₃ர! ஸங்கர்ஷணம் அதா₂பி வா ।
ப்ரத்₃யும்நஞ்சாऽநிருத்₃த₄ஞ்ச சதுர்மூர்த்திம் ப்ரசக்ஷதே ॥
ஏதாந்யந்யாநி ராஜேந்த்₃ர! ஸம்ஜ்ஞாபே₄தே₃ந மூர்த்தய: ।
வித்₃த்₄யநர்த்தா₂ந்தராயைவ மாமேவஞ்சார்ச்சயேத்₃பு₃த₄: ॥ [8-86...91]

[பாண்டு₃புத்ரனே! மிகச் சிறந்த என்னுடைய அர்ச்சனைமுறையைக் கேட்பாயாக. எட்டு இதழ்களையுடைய தாமரையை, தன் ஹிதத்தின் பொருட்டுத் தரையில் எழுதி, அஷ்டாக்ஷர விதி₄ப்படியோ, த்₃வாத₃ஶாக்ஷர விதி₄ப்படியோ, வைதி₃க மந்த்ரங்களைக்கொண்டோ, புருஷ ஸூக்தத்தைக் கொண்டோ அத்தாமரையில் ப்ரதிஷ்டை₂ செய்யப் பட்ட என்னை அறிவாளியாயிருப்பவன் அர்ச்சனை செய்யவேண்டும். பூருஷஸூக்தத்தையும் ஓதவேண்டும். யுதி₄ஷ்டி₂ரனே! வைகா₂நஸா க₃மம் அறிந்தவர்கள் என்னை அச்யுதன் என்றும் அநிருத்₃த₄ன்

http://acharya.org

என்றும் திருநாமங்களையிட்டு ஆராதி₄க்கிறார்கள். பாஞ்சராத்ரமாகிற மற்றொரு ஆக₃மத்தைச் சேர்ந்தவர்கள் வாஸுதே₃வன், ஸங்கர்ஷணன், ப்ரத்₃யும்நன், அநிருத்₃த₄ன் என்னும் நாலு வ்யூஹமூர்த்திகளையுடைய என்னை ஆராதி₄க்கிறார்கள். இவர்கள் அனைவரும் ஆராதி₄க்கும் மூர்த்திகளும், மற்றும் பல திருநாமங்களையுடைய மூர்த்திகளும் பல திருநாம வேறுபாடுகளிருந்தபோதிலும் ஸ்வயம் ப்ரயோஜனமாக ஆராதி₄க்கத்தக்கவை என அறிவாய். அறிவாளியாயிருப்பவன் என்னை இப்படி அர்ச்சனை செய்யவேண்டும்.] என்று எம்பெருமான் பாஞ்சராத்ர வைகா₂நஸ ரீதியில் அர்ச்சனை முறைகளைச் சுருக்கமாகக் கூறினான். அதற்குமேல்,

த்வத்₃ப₄க்தா: கீத்₃ருஶா தே₃வ! காநி வ்ருத்தாநி தந்ந்ருணாம் ।
ஏதத் கத₂ய தே₃வேஶ! த்வத்₃ப₄க்தஸ்ய மமாச்யுத! ॥ [8-92]

[அச்யுதனே! உனது ப₄க்தர்கள் எத்தகையவர்கள்? அவர்களுடைய ஒழுக்கங்கள் எவை? தே₃வர்தலைவனே! இதை உன் ப₄க்தனான எனக்குச் சொல்லவேண்டும்.] என்று மறுபடியும் த₄ர்மபுத்ரன் கேட்க,

அநந்யதே₃வதாப₄க்த்யா யே மத்₃ப₄க்தஜநப்ரியா: ।
மாமேவ ஶரணம் ப்ராப்தா மத்₃ப₄க்தாஸ்தே ப்ரகீர்த்திதா: ॥
[8-93]

[எவர்கள் மற்ற தெய்வங்களிடம் ப₄க்தியற்றவர்களோ, என்னையே ப்ராப்ய ப்ராபகங்களாகக் கொண்டவர்களோ, என் அடியார்களுக்கு இனியவர்களோ அவர்களே என் ப₄க்தர்களாகச் சொல்லப்படுகிறார்கள்.] என்று தொடங்கி, மறந்தும் புறந்தொழாதவர்களாய், தன்னடியார்க்கு இனியவர்களாய், தன்னையே எல்லாமாகக்கொண்டவர்களாயிருப்பவர்களே தன் ப₄க்தர்கள் என்று நிர்ணயித்து, அவர்களுடைய ஒழுக்கங்களை விரிவாகக் காட்டுகிறான்.

ஸாத்விகா ராஜஸாஶ்சாபி தாமஸாஶ்சாபி பாண்ட₃வ! ॥
மாமர்ச்சயந்தி மத்₃ப₄க்தா: தேஷாமீத்₃ருக்₃வித₄ா க₃தி: ।
திர்யங்மாநுஷ தே₃ஹேஷு தாமஸா பு₄ஞ்ஜதே ப₂லம் ॥
நாகயஜ்ஞக்₃ருஹஸ்த₂ாநே ராஜஸா பு₄ஞ்ஜதே ப₂லம் ।
ஸாத்விகா: ஸத்வஸம்பந்நா மத்பத₃ம் யாந்தி மாநவா: ॥
[8-100...102]

[பாண்டு₃புத்ரனே! ஸாத்விகர்கள், ராஜஸர்கள், தாமஸர்கள் என்று மூன்றுவகைப்பட்ட ப₄க்தர்கள் என்னை ஆராதி₄க்கிறார்கள். அவர்க

http://acharya.org

ளடையும் ப₄லன்கள் பின்வருமாறு:- தாமஸ ப₄க்தர்கள் திர்யக்காக வும், மனிதர்களாகவும் பிறப்பெடுத்துப் ப₄லனை அநுப₄விக்கிறார்கள்; யாக₃ங்களைச் செய்து அடையும் ஸ்வர்க்க₃த்தில் ராஜஸ ப₄க்தர்கள் ப₄லனை அநுப₄விக்கிறார்கள். ஸத்வகு₃ணம் நிறைந்த ஸாத்விக ப₄க்தர்களே என்னுடைய பரமபத₃த்தை அடைகிறார்கள்] என்று முற்கூறிய மறந்தும் புறந்தொழாமையுடைய ஸாத்விக ப₄க்தர்களே பரமபத₃மாகிற மோக்ஷத்தையடைகிறார்கள்; ராஜஸப₄க்தர்கள் தாழ்ந்த ப₄லன்களையும், தாமஸப₄க்தர்கள் மிகத் தாழ்ந்த ப₄லன்க ளையும் அடைகிறார்கள் என்று காட்டினான்.

ப்ராணாயாமம் து யத்காலே யேந மாஞ்சாபி சிந்தயேத் ।
தத்காலம் வை த்₃விஜோ ஜ்ஞேய: ஶேஷகாலமதோ₂ரித: ॥
தஸ்மாத்து ஸாத்விகோ பூ₄த்வா ஶுசி: க்ரோத₄விவர்ஜித: ।
மாமர்ச்சயேத்₃ய: ஸததம் மத்ப்ரியத்வம் ய இச்ச₂தி ॥ [8-114, 115]

[எவ்வளவு காலம் வரையில் ப்ராணயாமம் செய்கிறானோ, அதைச் செய்யும்போது என்னையும் நினைக்கிறானோ அவ்வளவு காலம் வரை யிலேயே இருபிறப்பாளன் அந்தணனாக எண்ணப்படுகிறான். இவை யில்லாத காலத்தில் முற்கூறியபடி அவன் அந்தணன் அல்லன். ஆகையால் எவனொருவன் எனக்கு இனியவனாக விரும்புகிறானோ, அவன் ஸாத்விகனாயிருந்து, பரிஶுத்₃த₄னாய். கோபமற்றவனாய் என்னை எப்போதும் ஆராதி₄க்கக்கடவன்.] என்று தன்னை ஆரா தி₄க்கும் த்₃விஜனுக்கே ப்₃ராஹ்மணத்வம் ஸித்₃தி₄க்கும் என்று அந்வய வ்யதிரேகங்களாலே காட்டினான். இனி, கபிலாத₃ாநத்தைப் புகழும் ஒன்பதாம் அத்தியாயத்திலும், கபிலை எனப்படும் தாராம் பசுவைப் புகழும் பத்தாம் அத்தியாயத்திலும், ப்₃ரஹ்மஹத்தி செய்தவனை விளக்கும் பதினோராம் அத்தியாயத்திலும், த₄ர்ம ஶௌசவிதி₄யை விளக்கும் பனிரண்டாம் அத்தியாயத்திலும், போ₄ஜன விதி₄யை விளக்கும் பதின்மூன்றும் அத்தியாயத்திலும் பரம்பொருளைப் பற்றிய பேச்சில்லையாகையால் அவற்றைவிட்டு ஆபத்₃த₄ர்மத்தை விவரிக்கும் பதினாலாம் அத்தியாயத்திற்குச் செல்வோம். இப்பதி னாலாம் அத்தியாயத்தில்,

மத்₃ப₄க்தா யே த்₃விஜஶ்ரேஷ்டா₂ மத்₃க₃தா மத்பராயணா: ।
தாந் பங்க்திபாவநாந் வித்₃தி₄ பூஜ்யாஶ்சைவ விஶேஷத: ॥
[14-14]

http://acharya.org

[எந்த அந்தணர்தலைவர்கள் எனக்கு ப₄க்தர்களாய், என்னிடம் ஈடுபட்டவர்களாய், என்னையே மேலான ப்ராப்ய ப்ராபகங்களாகக் கொண்டவர்களாயிருக்கிறார்களோ. அவர்கள் தாங்கள் உண்ணும் பங்க்தியையே (வரிசையையே) பரிஶுத்₃த₄ப்படுத்தும் பங்க்திபாவநர்கள் என்று அறிவாய். அவர்கள் விஶேஷமாக ஆராதி₄க்கத்தக்கவர்கள்.] என்று தன்னுடைய ப₄க்தர்களைப் பங்க்தி பாவநர்களாகக் கூறுவதன் மூலம் தானே பரமபொருள் என்று காட்டினான். அடுத்தபடி த₄ர்ம ஸாரஸமுச்சயத்தைப்பற்றி,

நாராயண! புராணேஶ! யோகா₃வாஸ! நமோऽஸ்து தே।
ஶ்ரோதுமிச்சா₂மி கார்த்ஸ்ந்யேந த₄ர்மஸாரஸமுச்சயம்॥ [14-35]

[நாராயணனே! பழம்பெரும் தலைவனே! யோக₃ங்களில் காட்சியளிப்பவனே! உனக்கு வணக்கம். உன்னிடமிருந்து த₄ர்மஸார ஸமுச்சயத்தை முழுவதும் கேட்க விரும்புகிறேன்.] என்று த₄ர்ம புத்ரன் வினவும்போது பயன்படுத்தியிருக்கும் விளிச்சொற்கள் நாராயணனே பரம்பொருள் என்று காட்டுகின்றன. த₄ர்மமஹிமையை வர்ணிக்கும் பதினைந்தாம் அத்தியாயத்தில்,

ப்₃ரஹ்மா ஏவ கா₃ர்ஹபத்யோऽக்₃நி: தஸ்மாத்₃தே₃வோ ஹரி வா ப₄வேத்।
த₃க்ஷிணாக்₃நி: ஸ்வயம் ருத்₃ர: க்ரோத₄ாத்மா சண்ட₃ ஏவ ஸ:॥
அஹமாஹவநீயோऽக்₃நி: அந்தரிக்ஷஞ்ச த₃க்ஷிண:। [15-32, 33]

என்று ப்₃ரஹ்மாவை கா₃ர்ஹபத்யாக்₃நியாகவும், தன்னை ஆஹவநீயாக்₃நியாகவும், ருத்₃ரனை த₃க்ஷிணாக்₃நியாகவும் சொல்லுமிடத்தில், "க்ரோத₄ாத்மா சண்ட₃ ஏவ ஸ:" [கோபமே வடிவெடுத்தவனாய் க்ரூரமாயிருப்பவன் அவன்] என்று ருத்₃ரனின் தனித்தன்மையைக் காட்டியிருக்கையால் அவன் உயிரையெல்லாம் தாயாகத் தண்ணளி செய்து கடாக்ஷித்துக் காக்கின்ற பரம்பொருளாயிருக்க முடியாதென்று விளங்குகிறது. அடுத்ததான சாந்த்₃ராயணவிதி₄யை வர்ணிக்கும் பதினாறும் அத்தியாயத்தின் தொடக்கத்தில்,

சக்ராயுத₄! நமஸ்தேऽஸ்து தே₃வேஶ! க₃ருட₃த்₄வஜ!।
சாந்த்₃ராயணவிதி₄ம் புண்யமாக்₂யாஹி ப₄க₃வந் மம॥ [16-1]

[சக்கரக்கையனே! தே₃வர்தலைவனே! க₃ருட₃க் கொடியானே! ப₄க₃வானே! உனக்கு வணக்கம். எனக்குப் புண்ணியமான சாந்த்₃ராயண விதி₄யைச் சொல்லுவாய்.] என்று யுதி₄ஷ்டி₂ரன் கேட்கும்

http://acharya.org

போது சக்கரமேந்திய க₃ருட₃க்கொடியானே தேவர் தலைவன் என்று நிலைநாட்டினன். கண்ணன் பதிலுரைக்குமிடத்திலும்,

ஸத்யாய விஷ்ணவே சேதி ப்₃ரஹ்மர்ஷிப்₄யோऽத₂ ப்₃ரஹ்மணே |
[16-8]

என்று விஷ்ணுவுக்கும், ப்₃ராஹ்மரிஷிகளுக்கும், ப்₃ரஹ்ம எனப்படும் வேத₃த்திற்கும், மற்றும் சிலருக்கும் ஹோமத்தை விதி₄க்குமிடத்தில் விஷ்ணுவை 'ஸத்ய' ஶப்₃த₃த்தால் விஶேஷித்திருப்பதால், உபநிஷத்துக்களில் 'ஸத்யம் ஜ்ஞாநம் அநந்தம் ப்₃ரஹ்ம' [தை-ஆந 1] என்று ஸத்ய ஶப்₃த₃த்தால் ஓதப்படும் பரம்பொருள் விஷ்ணுவே என்று காட்டப்பட்டது. அடுத்து ஒவ்வொரு மாஸத்திலும் த₄ர்ம க்ருத்யங்களை வர்ணிக்கும் பதினேழாம் அத்தியாயத்தில்,

ஸர்வபூ₄தஹிதே ஶ்ரீமந்! ஸர்வபூ₄தநமஸ்க்ருத! |
ஸர்வபூ₄தஹிதம் த₄ர்மம் ஸர்வஜ்ஞ! கத₂யஸ்வ மே || [17-2]

[எல்லா ஜீவராஶிகளுக்கும் நன்மையை விரும்பும் ஶ்ரீமந்நாராயண! எல்லா ஜீவராஶிகளாலும் நமஸ்கரிக்கப்படுபவனே! எல்லாமறிந்தவனே! எல்லா உயிர்களுக்கும் நன்மையான த₄ர்மங்களை எனக்குக் கூறுவாய்] என்று யுதி₄ஷ்டி₂ரன் அனைத்துயிர்களாலும் வணங்கப்படுபவனாகவும், அனைத்துயிர்களுக்கும் நன்மையைச் செய்பவனாகவும் அழைக்கையாலே கண்ணனே பரம்பொருள் என்று விளங்குகிறது. அடுத்தபடி கார்த்திகை மாஸத்தில் ஒரேவேளை உண்ணும் ஏகபு₄க்த வ்ரதத்தை விவரிக்கும்போது,

ஜலபாநம் பிபே₃ந் மாஸோ நாந்தரா பே₄ாஜநாத் பரம் |
ஆதி₃த்யரூபம் மாம் வாபி நித்யமத்₄யே ஸமாஹித: || [17-6]

[மாதம் முழுவதும் பே₄ாஜனங்களின் இடையில் நீர் பருகக்கூடாது. உணவுண்ட பிறகு ஆதி₃த்யரூபனாய், எப்போதும் ஸூர்யனின் நடுவில் எழுந்தருளியிருக்கும் என்னை ஶாந்தியுடன் சிந்திக்கவேண்டும்] என்று கூறியிருப்பதிலிருந்து ஆதி₃த்யனுக்கு நடுவிலிருக்கும் பரம்பொருள் கண்ணனே என்று விளங்குகிறது. இனி, ஏகபு₄க்த வ்ரதத்தின் புண்ய ப₂லத்தை விவரிக்கும் பதினெட்டாம் அத்தியாயத்தில்,

அர்ச்சத்யேவ து மாம் நித்யம் மத்₃க₃தேநாந்தராத்மநா ||
ஸந்த்₄யயோஸ்து ஜபேந்நித்யம் மத்₃கா₃யத்ரீம் ஸமாஹித: |
நமோ ப்₃ரஹ்மண்ய தே₃வாயேத்யஸக்ருந்மாம் ப்ரணம்ய ச ||

http://acharya.org

விப்ரமக்₃ராஸநே க்ருத்வா பாகஜம் பை₄க்ஷமேவ வா ।
பூ₄த்வா து வாக்₃யதோ பு₄க்த்வா வாசம்யாஸ்ய த்₃விஜந்மந: ॥
நமோऽஸ்து வாஸுதே₃வாயேத்யுக்த்வா து சரணம் ஸ்ப்ருஶேத்॥
[18-4...7]

[எப்போதும் என்னை நினைத்துக்கொண்டு ஏகபு₄க்த வ்ரதத்தை அநுஷ்டி₂ப்பவன் என்னை ஆராதி₄ப்பவனேயாவான். அவன் காலை மாலை வேளைகளில் ஶாந்தியுடன் தினமும் எனது கா₃யத்ரியை ஜபிக்க வேண்டும். என்னை வணங்கி, 'ப்₃ராஹ்மண்ய தே₃வனுக்கு வணக்கம்' என்று பலமுறை அநுஸந்தி₄த்து அந்தணனை அக்₃ராஸனத்தில் இருத்தி. சமைத்த அல்லது பி₄க்ஷையெடுத்த உணவை மௌனத்தோடு உண்டு, ஆசமனம் செய்து, 'வாஸுதே₃வனுக்கு வணக்கம்' என்று கூறி அந்த அந்தணனின் திருவடிகளில் வணங்க வேண்டும்] என்று கூறியிருப்பதிலிருந்து, ப்₃ராஹ்மண ஸ்வரூபியாய் இருப்பவன் வாஸுதே₃வனே என்றும், ப்₃ரஹ்மண்ய தே₃வன் அவனே என்றும் விளங்குகிறது. இப்போதும் ஸ்மார்த்த ப்₃ராஹ்மணர்கள் ஒருவரையொருவர் விளிக்கும்போது 'ஹரன்' முதலான தே₃வதாந்தர ஶப்₃த₃ங்களாலே விளிக்காமல் 'ஹரி' ஶப்₃த₃த்தாலேயே விளிப்பதும் இத்தகைய த₄ர்ம ஶாஸ்த்ர வசனங்களை ஆதா₄ரமாகக் கொண்டதேயாகும். ஆக, ப்₃ராஹ்மண ஸ்வரூபியாய், அந்தணர் மாட்டு அருந்தெய்வமாயிருப்பவன் ஹரியைத் தவிர வேறு எவரும் இல்லை என்றதாயிற்று. இவ்வத்தியாயத்தின் இடையில்,

யஜ்ஞாத்மந்! யஜ்ஞஸம்பூ₄த! யஜ்ஞநாத₂! நமோ நம: ।
சதுர்மூர்த்தே! சதுர்பா₃ஹோ! சதுர்வ்யூஹ! நமோ நம: ॥
லோகாத்மந்! லோகநாதே₂ஶ! லோகவாஸ! நமோ நம: ।
ஸர்வஜ்ஞ! ஸர்வலோகேஶ! ஹ்ருஷீகேஶ! நமோ நம: ॥
ஸஹஸ்ரஶிரஸே துப்₄யம் ஸஹஸ்ராக்ஷ! நமோ நம: ।
பஞ்சயஜ்ஞ! நமஸ்தேऽஸ்து ஸர்வயஜ்ஞ! நமோ நம: ॥
த்ரயீமய! த்ரயீநாத₂! த்ரயீலப்₄ய! நமோ நம: ।
ஸ்ருஷ்டிஸம்ஹாரகர்த்தேதி நாரஸிம்ஹ! நமோ நம: ॥
ப₄க்தப்ரிய! நமஸ்தேऽஸ்து ஸோமநாத₂! நமோ நம: ।
ஹயவக்த்ர! நமஸ்தேऽஸ்து சக்ரபாணே! நமோ நம: ॥
பஞ்சபூ₄த! நமஸ்தேऽஸ்து பஞ்சாயுத₄! நமோ நம: ॥[18-36...41]

[யஜ்ஞஸ்வரூபியே! யஜ்ஞத்தின் பயனே! யஜ்ஞநாத₂னே! உனக்கு வணக்கம். ப்₃ரஹ்மவிஷ்ணுருத்₃ரேந்த்₃ரர்களாகிற நாலு மூர்த்தி

http://acharya.org

களிலுள்ளும் இருப்பவனே! நான்கு திருக்கைகளை உடையவனே! நான்கு வ்யூஹங்களை உடையவனே! உனக்கு வணக்கம். உலகனைத்துக்கும் ஆத்மாவே! லோகநாதர்களுக்கெல்லாம் ஈசனே! உலகனைத்தும் தன்னிடம் வஸிக்கப்பெற்றவனே! உனக்கு வணக்கம். எல்லாமறிந்தவனே! எல்லா உலகுக்கும் ஈசனே! இந்த்ரியங்களுக்கு ஈசனே! உனக்கு வணக்கம். ஆயிரம் தலைகளையும், ஆயிரம் கண்களையுமுடைய உனக்கு வணக்கம். பஞ்சமஹாயஜ்ஞஸ்வரூபியாய், ஸர்வயஜ்ஞஸ்வரூபியாய் இருக்கும் உனக்கு வணக்கம். வேதமயனாய், வேதநாதனாய், வேதத்தில் காணப்படும் உனக்கு வணக்கம். ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களைச் செய்யும் நரஸிம்ஹனை உனக்கு வணக்கம். அடியார்க்கு இனியவனே! உமையோடு கூடிய சிவனுக்கு (அல்லது ஸோமனாகிற சந்த்ரனுக்கு) நாதனே! உனக்கு வணக்கம். ஹயக்ரீவனே! சக்ரபாணியே! உனக்கு வணக்கம். பஞ்சபூதஸ்வரூபியாய், பஞ்சாயுதத்தை உடைய உனக்கு வணக்கம்.] என்று யுதிஷ்டிரன் பரம்பொருளுக்கேயுரிய பல பல பெருமைகளைச் சொல்லிக் கண்ணனை அழைக்கிறான்.

ஏகாதஶ்யாம் உபோஷ்யாத த்வாதஶ்யாமர்ச்சயேத்து மாம்।
விப்ராநபி யதாலாபம் போஜயேத்பக்திமாந்நர: ॥
ஸ கச்சேத் தக்ஷிணாமூர்த்திர்மாஞ்ச நாத்ர விசாரணா।
[18-48, 49]

[ஏகாதஶியில் உபவாஸமிருந்து, த்வாதஶியன்று என்னை ஆராதித்துக் கிடைத்தவரையில் அந்தணர்களுக்கு பக்தியோடு கூடியவனாய் அமுது செய்விக்கவேண்டும். தக்ஷிணையும் அளிக்கவேண்டும். தக்ஷிணையை வடிவாகக் கொண்ட அவன் என்னையே அடைவான் என்பதில் ஐயமில்லை.] என்று ஏகாதஶீவ்ரதாநுஷ்டானத்தினால் எம்பெருமானை அடையலாம் என்றும் காட்டப்பட்டது. அடுத்து, தானபலத்தை வர்ணிக்கும் பத்தொன்பதாம் அத்தியாயத்தில்,

பகவம்ஸ்தவ காயத்ரீ ஜப்யதே து கதம் ந்ருபி:।
கிம் வா தஸ்யா: பலம் தேவ! மமாசக்ஷ்வ ஶிதாம்பர! ॥[19-24]

[பகவானே! பீதாம்பரம் தரித்த தேவனே! உனது காயத்ரியை எப்படி ஜபிக்கவேண்டும். அதன் பலம் என்ன என்பதைக் கூறுவாய்] என்று கேட்டான் யுதிஷ்டிரன்.

http://acharya.org

த்₃வாத₃ஶ்யாம் விஷுவே சைவ சந்த்₃ரஸூர்ய க்₃ரஹே ததா₂ ।
அயநே ஶ்ரவணே சைவ வ்யதீபாதே ததை₂வ ச ।
அஶ்வத்த₂ த₃ர்ஶநே சைவ ததா₂ மத்₃த₃ர்ஶநேऽபி ச ॥
ஜபேத் து மம கா₃யத்ரீமதா₂வாஷ்டாக்ஷரம் ந்ருப! ।
ஆஜந்ம து₃ஷ்க்ருதம் தஸ்ய நாஶயேந்நாத்ர ஸம்ஶய: ॥
[19-25,26]

[த்₃வாத₃ஶியிலும், சித்திரை, ஐப்பசி மாதப்பிறப்புகளாகிற விஷு புண்யகாலத்திலும், சந்த்₃ரஸூர்ய க்₃ரஹணங்களிலும், த₃க்ஷிணாயன உத்தராயணங்களிலும், ஶ்ராவணத்திலும், வ்யதீபாதத்திலும், அரசமரத்தைப் பார்க்கும்போதும், என்னைப் பார்க்கும்போதும், என்னுடைய (விஷ்ணு) கா₃யத்ரியையாவது, அஷ்டாக்ஷரத்தையாவது ஜபிக்கவேண்டும். அரசனே! இப்படி ஜபிப்பது — பிறந்தது முதல் இவன் செய்த பாபங்களை அழித்துவிடும் என்பதில் ஐயமில்லை.] என்று கண்ணன் பதிலுரைத்தான். இதைச் செவியுற்ற யுதி₄ஷ்டி₂ரன்,

அஶ்வத்த₂த₃ர்ஶநம் தே₃வ! கிம் த்வத்₃த₃ர்ஶநஸந்நிப₄ம் ।
ஏதத் கத₂ய தே₃வேஶ! பரம் கௌதூஹலம் ஹி மே ॥ [19-27]

[தே₃வனே! அரசமரத்தைப் பார்ப்பது உன்னைக் காண்பதையொக்கும் என்பது எப்படி? தே₃வர்தலைவனே! எனக்கு மிகவும் ஆர்வமாயிருப்பதால் இதை எனக்குச் சொல்லவேணும்] என்று கேட்க,

அஹமஶ்வத்த₂ரூபேண பாலயாமி ஜக₃த்த்ரயம் ।
அஶ்வத்தோ₂ ந ஸ்தி₂தோ யத்ர நாஹம் தத்ர ப்ரதிஷ்டி₂த: ॥
யத்ராஹம் ந ஸ்தி₂தோ ராஜந்! அஶ்வத்த₂ஶ்சாபி தத்ர ந ।
யஸ்த்வேநம் அர்ச்சயேத் ப₄க்த்யா மாம் ஸ ஸாக்ஷாத்
ஸமர்ச்சதி ॥
யஸ்த்வேநம் ப்ரஹரேத் கோபாந்மாமேவ ப்ரஹரேத்து ஸ: ।
தஸ்மாத் ப்ரத₃க்ஷிணம் குர்யாத் அபி₄வாதே₃ந ப்ரத்யஹம் ॥
கா₃வோ விப்ரா: ததா₂ஶ்வத்தோ₂ மம ரூபம் யுதி₄ஷ்டி₂ர! ।
ஏதத்த்ரயம் ஹி மத்₃ப₄க்தோ நாவமந்யேத கர்ஹிசித் ॥
அவமாநிதம் சேத்து ஹந்யாத்₃த₃ஹத்யாஸப்தமம் குலம் ।
அஶ்வத்தோ₂ ப்₃ராஹ்மணோ கா₃வோ மந்மயாஸ்தாரயந்தி ஹி ।
தஸ்மாதே₃தத் ப்ரயத்நேந ராஜந்! பூஜிதும் அர்ஹஸி ॥
[19-28...32]

http://acharya.org

[நான் அரசமரத்தின் உருவத்திலிருந்துகொண்டு மூவுலகத்தையும் ரக்ஷிக்கிறேன். அரசமரம் எங்கு இல்லையோ அங்கு நானும் இருக்க மாட்டேன். நான் எங்கு இல்லையோ அங்கு அரசமரமும் இராது. எவன் ப₄க்தியோடு அரசமரத்தை ஆராதி₄க்கிருனே அவன் என்னையே ஆராதி₄க்கிருன். எவன் கோபத்தோடு அதை ஹிம்ஸிக்கிருனே அவன் என்னையே ஹிம்ஸிக்கிருன். ஆகையால் அரசமரத்தைத் தினமும் ப்ரத₃க்ஷிணமும் நமஸ்காரமும் செய்யவேண்டும். யுதி₄ஷ்டி₂ரனே! பசுக்களும், அந்தணர்களும், அரசமரமும் என்னுடைய உருவங்களாகும். இம்மூன்றையும் என் ப₄க்தன் ஒருபோதும் அவமதிக்கக் கூடாது. அவமதித்தானுகில், அது அவன் குலத்தை ஏழு தலைமுறை எரித்து அழித்துவிடும். அரசமரம், அந்தணன், பசுக்கள் என்னும் மூன்றும் என் அம்சம் உடையவையாகையாலே ஸம்ஸாரத்திலிருந்து சேதனனைக் கரையேற்றும். அரசனே! இம்மூன்றையும் நீ ஆராதி₄க்க வேண்டும்] என்று பதிலுரைத்தான் கண்ணன். இவற்றிலிருந்து விஷ்ணுகா₃யத்ரியின் பெருமையும், பரமாத்மாவின் அம்ஸமுள்ள அந்தணன், அரசமரம், பசுக்கள் ஆகியவற்றின் பெருமையும் விளங்கும். இனி அடுத்த இருபதாம் அத்தியாயத்தில்,

ப₄க₃வந்! ஸர்வபாபக்₄நம் ப்ராயஶ்சித்தம் அநுத்தமம் ।
த்வத்₃ப₄க்தஸ்ய நரஶ்ரேஷ்ட₂! மம வக்தும் த்வமர்ஹஸி ॥
[20-25]

[ப₄க₃வானே! சேதனர் தலைவனே! எல்லாப் பாபங்களையும் அழிப்பதும், ஒப்பற்ற பிராயச்சித்தமாயிருப்பதும் யாதென்பதை உனது அடியானை எனக்குச் சொல்லவேண்டும்] என்று யுதி₄ஷ்டி₂ரன் கேட்க,

ரஹஸ்யமித₃மத்யர்த்த₂ம் ந ஶ்ராவ்யம் பாபகர்மணும் ।
அவைஷ்ணவாநாம் அஶ்ராவ்யம் ப்ராயஶ்சித்தம் ப்₃ரவீமி தே ॥
வாமநம் ப்₃ராஹ்மணம் த்₃ருஷ்ட்வா மத்₃க₃தேநாந்தராத்மநா ।
நமோ ப்₃ரஹ்மண்யதே₃வாயேத்யபி₄வாத₃நமாசரேத் ॥
ப்ரத₃க்ஷிணம் து த்ரி꞉ குர்யாத் புநரஷ்டாக்ஷரேண து ।
தேந துஷ்டோ நரஶ்ரேஷ்ட₂! தத்பாபம் க்ஷபயாம்யஹம் ॥
[20-26...28]

[இப்போது நான் சொல்லப்போகும் விஷயம் மிகவும் ரஹஸ்யமானது. பாபிகள் இதைக் கேட்கலாகாது. வைஷ்ணவரல்லாதவர்கள் இதைக் கேட்கக்கூடாது. நீ கேட்ட பிராயச்சித்தத்தைச் சொல்லுகிறேன்

http://acharya.org

குட்டையான ப்₃ராஹ்மணனைக் கண்டால் (அத்தகைய ப்₃ராஹ்மணனாய் அவதரித்த) என்னிடம் நெஞ்சு செலுத்தியவனாய் 'ப்₃ரஹ்மண்ய தே₃வனுக்கு வணக்கம்' என்று கூறி அவனை வணங்க வேண்டும். மூன்று முறை அவனை அஷ்டாக்ஷரத்தைச் சொல்லிக் கொண்டு வலம்வரவேண்டும். மனிதர்களில் சிறந்தவனே! இதனால் நான் உகப்படைகிறேன். இப்படிச் செய்பவனுடைய பாபத்தை நான் மன்னிக்கிறேன்.] என்று பதில் கூறினான், கண்ணன். இதிலிருந்தும் அஷ்டாக்ஷர ப்ரதிபாத்₃யனாகவும், ப்₃ராஹ்மண ஸ்வரூபியாகவும், அந்தணர் மாட்டு அருந்தெய்வமாகவும் இருப்பவன் ஸ்ரீமந் நாராயணனே என விளங்குகிறது. இவ்வத்தியாயத்தின் கடைசியில்,

மம ஸூக்தம் ஜபேத்₃யஸ்து நித்யம் மத்₃க₃தமாநஸ: ।
ந ஸ பாபேந லிப்யேத பத்₃மபத்ரமிவாம்ப₄ஸா ॥ [20-46]

[என்னிடம் நெஞ்சு செலுத்தியவனாய், எவன் என்னுடையதான புருஷஸூக்தத்தை ஜபிக்கிறானோ தாமரையிலையில் தண்ணீர் ஒட்டாததுபோல் அவன்மேல் பாபம் ஒட்டாது] என்று புருஷஸூக்தம் தன்னைச் சொல்லுகிறது என்பதையும், அதை ஜபிப்பவனுக்குப் பாபம் ஒட்டாது என்பதையும் காட்டினான் கண்ணன். அடுத்து ப₄க்தார்ச்சநவிதி₄யை வர்ணிக்கும் இருபத்தோராம் அத்தியாயத்தில்,

மத்₃ப₄க்தாந் ஶூத்₃ரஸாமாந்யாத₃வமந்யந்தி யே நரா: ।
நரகேஷ்வேவ திஷ்ட₂ந்தி வர்ஷகோடிம் நராத₄மா: ॥
சண்டா₃ளமபி மத்₃ப₄க்தம் நாவமந்யேத பு₃த்₃தி₄மாந் ।
அவமந்ய பதத்யேவ நரகே ரௌரவே நர: ॥
மம மத்₃ப₄க்தப₄க்தேஷு ஸம்மதிர்ஹ்யதி₄கா ப₄வேத் ।
தஸ்மாத் மத்₃ப₄க்தப₄க்தாஶ்ச பூஜநீயா விஶேஷத: ॥
கீடபக்ஷிம்ருகா₃ணாஞ்ச மயி ஸந்ந்யஸ்தசேதஸாம் ।
ஊர்த்₄வாமேவ க₃திம் வித்₃தி₄ கிம் புநர்ஜ்ஞாநிநாம் ந்ருப! ।
பத்ரம் வாப்யத₂வா புஷ்பம் ப₂லம் வா தோயமேவ வா ।
த₃தா₃தி மம ஶூத்₃ரோऽபி ஶிரஸா த₄ாரயாமி தம் ॥
விப்ராநேவார்ச்சயேத் ப₄க்த்யா ஶூத்₃ர: ப்ராணேஶ்ச மத்ப்ரிய: ।
தேஷாம் தேநைவ ரூபேண பூஜாம் க்₃ருஹ்ணாமி பா₄ரத! ॥
வேதே₃ாக்தேநைவ மார்க்கே₃ண ஸர்வபூ₄தஹ்ருதி₃ ஸ்தி₂தம் ।
மாமர்ச்சயந்தி யே விப்ரா: ஸாயுஜ்யம் யாந்தி தே மம ॥

http://acharya.org

பரித்ராணாய ப4க்தாநாம் ப்ராது3ர்ப4ாவ: க்ருதோ மயா ।
ப்ராது3ர்ப4ாவாக்ருதி: காசித3ர்ச்சயேத்தாம் யுதி4ஷ்டி2ர! ।
ஆஸாமந்யதமம் மூர்த்திம் யோ ப4க்த்யா ச ஸமர்ச்சதி ॥
தேநைவ பரிதுஷ்டோऽஹம் ப4விஷ்யாமி ந ஸம்ஶய: ।
ம்ருத3ா ச மணிரத்நைஶ்ச தாம்ரேண ரஜதேந வா ॥
க்ருத்வா ப்ரதிக்ருதிம் குர்யாத் அர்ச்சநாம் காஞ்சநேந வா ।

[21-21...38]

[எந்த ஜனங்கள் என்னுடைய ப4க்தர்களை ஶூத்3ரஜாதியில் பிறந்ததையிட்டு அவமதிக்கிறார்களோ, மனிசரில் கடையரான அவர்கள் கோடிவருஷம் நரகத்தில் விழ்கிறார்கள். சண்டா3ளனாயிருந்தாலும் என் அடியாரை அறிவாளியாயிருப்பவன் அவமதிக்கக்கூடாது. அவமதிக்கும் மனிதன் ரௌரவ நரகத்தில் விழ்வான் என்பது உறுதி. என்னுடைய அடியார்களுக்கு அடியார்களாயிருப்பவர்களிடத்தில் எனக்கு என் அடியார்களிடமிருப்பதைவிட ப்ரீதி மிகுந்திருக்கும். ஆகையால் என் அடியார்க்கு அடியார்களும் சிறப்பாகப் பூஜிக்கத்தக்கவர்கள். என்னிடம் நெஞ்சு செலுத்திய புழு, பறவை, விலங்குகள் ஆகியவையும் மேலான க3தியையே அடைகிறார்கள். ஜ்ஞானிகளைக் குறித்துச் சொல்லவும் வேண்டுமோ? ஓர் இலையையாவது, பூவையாவது, பழத்தையாவது, (ஒன்றும் கிடைக்காவிடில்) நீரையாவது எனக்கு அளிக்கும் ஶூத்3ரனையும் நான் தலையாலே தாங்குகிறேன். ப4ரதகுலத்துதித்தவனே! (என் ப4க்தர்களான) அந்தணர்களையே ஶூத்3ரன் அன்புடன் ஆராதி4க்கவேண்டும். அவன் எனக்கு உயிரினும் இனியவன். அந்த அந்தணர்கள் உருவில் இருந்துகொண்டே அவர்களை ஆராதி4ப்பவர்களின் ஆராத4னத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். எந்த அந்தணர்கள் எல்லா ஜீவராசிகளின் ஹ்ருத3யத்திலும் இருக்கும் என்னை வேத3த்தில் சொன்ன முறையில் ஆராதி4க்கிறார்களோ அவர்கள் என்னோடு ஸாயுஜ்யத்தை (ஒத்த கு3ணத்தை உடையவர்களாயிருக்கும் பரமமோக்ஷநிலையை) அடைகிறார்கள். யுதி4ஷ்டி2ரனே! அடியார்களை ரக்ஷிப்பதற்காகவே என்னால் அவதாரம் எடுக்கப்பட்டுள்ளது. என் அவதாரங்களில் ஏதாவது ஒன்றை அர்ச்சிக்க வேண்டும். இவற்றில் ஒன்றை எவனொருவன் அன்போடு ஆராதி4க்கிறானோ, அவ்வாராத4னத்தினாலேயே நான் மிகவும் உகப்பேன் என்பதில் ஐயமில்லை. (அவரவர் ஶக்திக்குத் தக்கபடி) மண்ணாலேயோ, மணிகள், ரத்னங்களாலேயோ, தாம்ரத்தாலேயோ, வெள்ளியாலேயோ, பொன்னாலேயோ என் அர்ச்சாமூர்த்தியைச்செய்து

http://acharya.org

ஆராத₄னம் செய்யவேண்டும்.] என்று ப₄க்தர்களது பெருமையும், தன்னை ஆராதி₄க்கும் முறைகளும் சிறப்பாக விவரிக்கப்பட்டன. இதிலும் ப₄க₃வானுடைய ஸௌலப்₄யத்தோடு கூடிய பரத்வம் தெளிவாக விளங்குகிறது. இனி ஶைத்₃ரத₄ர்மத்தை வர்ணிக்கும் கடைசி (22ம்) அத்தியாயத்தில்,

நஶ்யந்தி தாமஸா பா₄வா: ஶைத்₃ரஸ்ய மயி ப₄க்தித: ।
பத்ரம் புஷ்பம் ப₂லம் தோயம் யோ மே ப₄க்த்யா ப்ரயச்ச₂தி ॥
தத₃ஹம் ப₄க்தித₃த்தம் யந்மூர்த்₄நா க்₃ருஹ்ணாமி ஶைத்₃ரத: ।
சண்டா₃ளோ வா ப்ரிய: கஶ்சித் ஸர்வபாபஸமந்வித: ॥
யதி₃ மாம் ஸததம் த்₄யாயேத் ஸ பாபேப்₄ய: ப்ரமுச்யதே ।
வித்₃யாவிநயஸம்பந்நா ப்₃ராஹ்மணா வேத₃பாரகா₃: ॥
மயி ப₄க்திம் ந குர்வந்தி சண்டா₃ளஸத்₃ருஶா ஹி தே ।
வ்ருதா₂ த₃த்தம் வ்ருதா₂ ஜப்தம் வ்ருதா₂ சேஷ்டம் வ்ருதா₂ ஹுதம் ॥
வ்ருதா₂ தீர்த்தே₂ து த₃த்தம் ஸ்யாத் யோ ந ப₄க்தோ மயி த்₃விஜ: ।
யத்க்ருதஞ்ச ஹுதஞ்சாபி யதி₃ஷ்டம் த₃த்தமேவ வா ॥
அவைஷ்ணவோக்தம் தத்ஸர்வம் ராக்ஷஸா ஏவ பு₄ஞ்ஜதே ।
ஸ்தா₂வரோ ஜங்க₃மோ வாऽபி ஸர்வபூ₄தேஷு பாண்ட₃வ! ॥
ஸமத்வேந த₃யாம் குர்யாத் மத்₃ப₄க்தோ மித்ரஶத்ருஷு ।
ஆந்ருஶம்ஸ்யமஹிம்ஸா ச த₃யா ஸத்யம் ததா₂ர்ஜவம் ॥
அத்₃ரோஹம் மம ப₄க்தாநாம் பூ₄தாநாமப₄யம் ந்ருப! ।
இத்யேவமாத₃யோ ப்₃ரூயாத் மத்₃ப₄க்த்யா ஶ்ரத்₃த₄யாந்வித: ॥
தஸ்யாக்ஷயோ ப₄வேல்லோக: ஶ்வபாகஸ்யாபி பார்த்தி₂வ! ।
கிம் புநர்யே ஸமர்ச்சந்தி மத்₃ப₄க்தா விதி₄பூர்வகம் ॥
மத்₃ப₄க்தா மத்₃க₃தப்ராணா: ஸ்துவந்தி யே து மாம் ஸதா₃ ।
ப₃ஹுவர்ஷ ஸஹஸ்ராணி தபஸ்தப்யதி யோ நர: ॥
நாஶௌ தத்பத₃மாப்நோதி மத்₃ப₄க்தை: யத₃வாப்யதே ।
மாமேவ தஸ்மாத் ராஜர்ஷே! த்₄யாஹி நித்யமதந்த்₃ரித: ॥
அவாப்ஸ்யஸி தத: ஸித்₃தி₄ம் நிஶ்சயம் ஹி அநுத்தமாம் ।
அபார்த்த₂கம் ப்ரபா₄ஷந்தே ஶைத்₃ரா பா₄க₃வதா இதி ॥

http://acharya.org

ந ஶூத்3ரா ப4க3வத்3ப4க்தா விப்ரா பா4க3வதா: ஸ்ம்ருதா: |
த்3வாத3ஶாக்ஷர தத்வஜ்ஞ: சதுர்வ்யூஹவிதா4நவித் ||
அச்சி2த்3ர: பஞ்சகாலஜ்ஞ: ஸர்வே பா4க3வதா: ஸ்ம்ருதா: |
ருக்3வேத3யஜுஷா ஹோதா யஜுஷாத்4வர்யுரேவ ச |
ஸாமவேதே3ந சோத்3கா3தா புண்யேநாபி4ஸ்துவந்தி மாம் |
அத2ர்வஶிரஸா சைவ நித்ய மாத2ர்வணா த்3விஜா: ||
ஸ்துவந்தி ஸததம் யே ச தே ஹி பா4க3வதா: ஸ்ம்ருதா: |
வேதா3தீ4நா: ஸதா3 யஜ்ஞா யஜ்ஞாதீ4நாஶ்ச தே3வதா: ||
தே3வதா ப்3ராஹ்மணாதீ4நா: தஸ்மாத்3விப்ராஸ்து தே3வதா: |
[22-12...28]

[என்னிடம் அன்பு கொண்டானாகில் ஶூத்3ரனுக்குத் தமோகு3ணமும், அதனால் ஏற்படும் தன்மைகளும் நீங்கிவிடும். இலை, பூ, பழம் அல்லது நீர் என்னும் இவற்றில் எதையாவது அன்போடு ஶூத்3ரன் ஸமர்ப்பித்தானாயினும் அவன் அன்பினால் ஸமர்ப்பித்த பொருளை நான் தலையாலே ஏற்றுக்கொள்ளுகிறேன். எல்லாப் பாபங்களோடும் கூடிய சண்டா3ளனாயிருந்தாலும் என்னிடம் ப4க்தியுள்ளவனாய், என்னை எப்போதும் தியானித்தானாகில் அவன் எல்லாப் பாபங்களிலின்றும் விடுபடுகிறான். கல்வியும், அடக்கமும் நிறைந்தவர்களாய், வேத3ம் கரைகண்டவர்களான அந்தணர்களும் என்னிடம் ப4க்தி செய்யாவிடில் அவர்கள் சண்டா3ளர்களை ஒத்தவர்களாவர். என்னிடம் ப4க்தியில்லாத இருபிறப்பாளன் தியானம், ஜபம், நற்செயல்கள், ஹோமம், தர்ப்பணம் ஆகிய எதைச் செய்தாலும் அது வீணேயாகும். நற்செயல்கள், ஹோமம், யாக3ம், தா4னம், ஜபம் முதலானவற்றை அவைஷ்ணவர்கள் செய்தால் அவையனைத்தையும் ராக்ஷஸர்களே அநுப4விக்கிறார்கள். பாண்டு3புத்ரனே! அசைவதும் அசையாததுமான எல்லா ஜீவராசிகளிடத்தும், நண்பர்களிடத்தும், எதிரிகளிடத்தும் என் ப4க்தன் ஒருபடிப்படக் கருணைபுரியவேண்டும். அரசனே! இரக்கம், அஹிம்ஸை, கருணை, உண்மை, நேர்மை என் அடியார்களுக்குத் துரோஹம் செய்யாமலிருப்பது, எல்லா ஜீவராசிகளுக்கும் அப4யமளிப்பது முதலான நற்குணங்களை என்னிடம் ப4க்திஶ்ரத்3தை4யுள்ளவன் பிறர்க்கு உபதே3ஶிக்கவேண்டும். இத்தகையவன் சண்டா3ளனாகிலும் அவனுக்கு அழிவற்ற மோக்ஷலோகம் கிடைக்கும். என்னை முறைப்படி ஆராதி4க்கும் மற்ற ப4க்தர்களைப் பற்றிச் சொல்லவும் வேண்டுமோ? எவர்கள் என்னை எப்போதும் துதிப்பவர்களாய், என்னிடம் உயிரையே வைத்திருக்கிறார்களோ

http://acharya.org

அவர்களே என் ப₄க்தர்கள். எந்த மனிதன் பல்லாயிரம் வருடம் தவம் புரிகிருனே, அவனும் என் ப₄க்தர்களுடையும் மோக்ஷஸ்தா₂னத்தை அடைவதில்லை. ராஜரிஷியே! ஆகையால் சோம்பலில்லாமல் என்னையே தினமும் தியானிப்பாயாக. இப்படி தியானிப்பதால் ஒப்பற்ற மோக்ஷஸித்₃தி₄யை உறுதியாக அடைவாய். என் அடியார்களான ஶூத்₃ரர்களைப் பார்த்துச் சிலர் ஶூத்₃ரப₄ாக₃வதர்கள் என்று தவருகச் சொல்லுகிருர்கள். என் அடியார்கள் ஶூத்₃ரர்களாக மாட்டார்கள். அவர்கள் அந்தணர்களேயாவார்கள். த்₃வாத₃ஶா க்ஷரத்தின் பொருளை உணர்ந்தவனும், நாலு வ்யூஹங்களின் முறையை அறிந்தவனும், இடைவெளியில்லாமல் உபாத₃ானம் முதலான ஐந்து காலங்களில் என்னைப் பூஜிப்பவனும் ஆகிய அனைவரும் ப₄ாக₃வதர்களே. யாக₃த்தில் ஹோதாவானவன் ருக்₃யஜுர் வேத₃ங்களாலும், அத்₄வர்யு யஜுர்வேத₃த்தாலும், உத்₃கா₃தா பவித்ரமான ஸாமவேத₃த்தாலும் என்னையே துதிக்கிருர்கள். அத₂ர்வணவேத₃மறிந்த ப்₃ராஹ்மணர்கள் தினந்தோறும் அத₂ர்வ ஶிரஸ்ஸால் என்னையே துதிக்கிருர்கள். எப்போதும் என்னையே துதிக்கும் அனைவரும் ப₄ாக₃வதர்கள் என்று அறுதியிடப்படுகிருர்கள். யஜ்ஞங்கள் எப்போதும் வேத₃த்திற்கு வசப்பட்டவை. தே₃வதைகள் அந்த யஜ்ஞத்திற்கு வசப்பட்டவர்கள். தே₃வதைகள் ப்₃ராஹ்மணர்களுக்கும் வசப்பட்டவர்கள். ஆகையால் ப்₃ராஹ்மணனே ஸகல தே₃வதா ஸ்வரூபியாவான்,] என்று ப₄க₃வத்₃ப₄க்தர்களானுல் ஶூத்₃ரர்கள் அந்தணர்களேயாவர் என்றும், இந்த ப₄க்தியில்லாவிடில் ப்₃ராஹ்மணர்களும் சண்டா₃ள ஸமர் ஆவர் என்றும் இங்கு சொல்லப்பட்டதையொட்டியே தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலையில் மேம்பொருளுக்கு மேலேயுள்ள பாசுரங்களில் அருளியிருக்கிருர் என்பது குறிக்கொள்ளத்தக்கது. இந்த வசனங்களைப் பூர்வாசார்யர்களும் கையாண்டிருக்கிருர்கள். வர்ணுஶ்ரம த₄ர்மங்களை நிலைநிறுத்தும் த₄ர்மஶாஸ்த்ரங்கள் எம்பெருமானிடம் ப₄க்தி இருந்தால் தாழ்ந்தவனும் உத்தம வர்ணுஶ்ரமியைவிடச் சிறந்தவன் என்றும், எம்பெருமானிடம் ப₄க்தியில்லையானுல் உயர்ந்தவனும் சண்டா₃ளனைவிடத் தாழ்ந்தவன் என்றும் முழங்கியிருப்பதை அனைவரும் காணவேண்டும்.

இவ்வண்ணமாகத் தொடக்கத்திலிருந்து பலவிடங்களில் எம்பெருமானே பரமாத்மா என்றும், மற்ற தே₃வர்கள் அவனுக்குக் கீழ்ப்பட்டவர்களே என்றும் முழங்கியிருக்கும் இந்த ஸ்ம்ருதியில் ப₂லஶ்ருதியைப் பேசும் கடைசிப்பகுதியும் விஷ்ணுபரத்வத்தையே நிலைநாட்டுகிறது என்பதைக் காண்போம் இனி.

http://acharya.org

ஏதத்புண்யம் பவித்ரஞ்ச பாபநாஶநமுத்தமம் ।
ஶ்ரோதவ்யம் ஶ்ரத்₃த₄யா யுக்தை: மத்₃ப₄க்தைஶ்ச விஶேஷத:॥
ஶ்ராவயேத்₃யஸ்த்விதₒம் ப₄க்த்யா ப்ரயதோऽத₂ ஶ்ருணோதி வா।
ஸ க₃ச்சே₂ந்மம ஸாயுஜ்யம் நாத்ர கார்யா விசாரணா ॥
யஶ்சேத₃ம் ஶ்ராவயேச்ச்₂ராத்₃தே₄ மத்₃ப₄க்தோ மத்பராயண: ।
பிதரஸ்தஸ்ய த்ருப்யந்தி யாவதா₃பூ₄த ஸம்ப்லவம் ॥
ப்ரஹ்ருஷ்ட: ஸுமநா பூ₄த்வா சிந்தயேதாத்₃பு₄தாம் கதா₂ம் ॥
பூஜயாமாஸ கோ₃விந்த₃ம் த₄ர்மபுத்ர: புந: புந: ।
தே₃வா ப்₃ரஹ்மர்ஷய: ஸித்₃தா₄ க₃ந்த₄ர்வாப்ஸரஸஸ்ததா₂ ॥
பூ₄தா யக்ஷா க்₃ரஹாஶ்சைவ கு₃ஹ்யகா பு₄ஜகா₃ஸ்ததா₂ ।
வாலகி₂ல்யா மஹாத்மாநோ முநய: தத்வத₃ர்ஶிந: ॥
ததா₂ ப₄க₃வதாஶ்சைவ பஞ்சகாலரதாஸ்: ததா₂ ।
கௌதூஹலஸமாயுக்தா ப₄க₃வத்₃ப₄க்திமாக₃தா: ॥
ஶ்ருத்வா து பரமம் புண்யம் வைஷ்ணவம் த₄ர்மஶாஸநம் ।
விமுக்தபாபா: பூதாஸ்தே ஸம்பூ₄தா: தத்க்ஷணேந து ॥
ப்ரணம்ய ஶிரஸா விஷ்ணும் ப்ரஸாத₃ஸுமுகே₂க்ஷண: ।
யதா₂க₃தம் யயுர்தே₃வா: ஸித்₃த₄ாஶ்சர்ஷிக₃ணை: ஸஹ ॥
க₃தேஷு தேஷு ஸர்வேஷு கேஶவ: கேஶிஹா ததா₃ ।
விஸ்ருஜ்ய பாண்ட₃வாந் ஸர்வாந் ப்ரணதாந் த்₃வாரகாம் யயௌ ॥
தத: ப்ரணம்ய கோ₃விந்த₃ம் தத₃ாப்ரப்₄ருதி பாண்ட₃வா: ।
கபிலாத்₃யாநி தா₃நாநி த₃ஶ விஷ்ணுபராயணா: ॥
மது₄ஸூத₃நவாக்யாநி ஸ்ம்ருத்வா சைவ புந: புந: ।
மநஸா பூஜயாமாஸு: ஹ்ருதி₃ஸ்த₂ம் பஞ்ச பாண்ட₃வா: ॥
யுதி₄ஷ்டி₂ரோऽபி த₄ர்மாத்மா ஹ்ருதி₃ க்ருத்வா ஜநார்த்த₃நம் ।
தத்₃ப₄க்த: தந்மநா யுக்த: தத்₃யாஜீ தத்பரோऽப₄வத் ॥
ஏவமேதத் புராவ்ருத்தம் வைஷ்ணவம் த₄ர்மஶாஸநம் ।
மயா தே கதி₂தம் ராஜந்! பவித்ரம் பாபநாஶநம் ॥
சிந்தயஸ்வ ஸதா₂ விஷ்ணும் அப்ரமத்த: குருத்₃வஹ! ।
லோகா க₃ச்ச₂ந்தி நாந்யேந தத்₃விஷ்ணோ: பரமம் பத₃ம் ॥
[22-33......47]

http://acharya.org

[மனிதர்களை நற்கதிக்கு அழைத்துச்செல்வதும், பரிஶுத்3த4மானதும், பாபங்களை அழிக்கக்கூடியதும், மிகச் சிறந்ததுமான இந்த ஸ்ம்ருதி ஶ்ரத்3தை4யுடையவர்களாலும், குறிப்பாக என்னுடைய ப4க்தர்களா லும் கேட்கத்தக்கது. எவனொருவன் இந்த ஸ்ம்ருதியை ப4க்தியோடும், புலனடக்கத்தோடும் பிறருக்குச் சொல்லுகிறானோ, அல்லது தான் கேட்கிறானோ அவன் என்னுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறான். இதில் ஸந்தே3ஹமில்லை. எனக்கு ப4க்தனாய், என்னையே மேலான ப்ராப்ய ப்ராபகங்களாகக்கொண்ட எவனொருவன் இந்த ஸ்ம்ருதியை ஶ்ராத்3த4த்தில் போ4க்தாக்களைக் கேட்பிக்கிறானோ அவனுடைய பித்ருக்கள் ப்ரளயகாலம் வரையில் த்ருப்தியடைகிறார்கள். இந்த ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட அத்3பு4தமான வ்ருத்தாந்தத்தை நன்னெஞ்சை உடையவனாய், உகப்புடன் சிந்திக்கவேண்டும். த4ர்மபுத்ரன் இந்த ஸ்ம்ருதியைக் கேட்டபின்பு கோ3விந்த3னைப் பலகால் பூஜித்தான். தே3வர்கள், ப்3ரஹ்மரிஷிகள், ஸித்3த4ர்கள், க3ந்த4ர்வர்கள், அப்ஸரஸ்ஸுக்கள், பூ4தங்கள், யக்ஷர்கள், க்3ரஹங்கள், கு3ஹ்யர்கள், நாக3ர்கள். வாலகி2ல்யர்கள், மஹாத்மாக்களாய், உண்மையை அறிந்த மற்ற முனிவர்கள், அபி4க3மனம் முதலான ஐந்து காலங்களில் திருவாராத4னம் பண்ணும் பாஞ்சராத்ரிகள் ஆகிய இவர்களனைவரும் ப4க3வத்3ப4க்தியை உடையவர்களாய், உத்ஸாஹத்தோடு கூடியவர்களாய், மிகப்புண்ணியமான இந்த வைஷ்ணவ த4ர்ம ஶாஸ்த்ரத்தைக் கேட்டு, அந்தக்கணத்திலேயே பாபங்கள் நீங்கப் பெற்றவர்களாய், பரிஶுத்3த4ரானார்கள். அருளாலே மலர்ந்த திருக் கண்களை உடைய கிருஷ்ணனாகிற விஷ்ணுவைத் தலையால் வணங்கி, தே3வர்களும், ஸித்3த4ர்களும் ரிஷிக3ணங்களோடுகூடத் தத்தம் இருப்பிடத்திற்குச் சென்றார்கள். அவர்களனைவரும் சென்றபின்பு, கேஶியைக் கொன்றவனான கேஶவன் தன்னை வணங்கிய பாண்ட3வர்கள் அனைவருக்கும் விடைகொடுத்து த்3வாரகைக்குச் சென்றான். அது முதற்கொண்டு பாண்ட3வர்கள் கோ3விந்த3னை வணங்கி (இந்த ஸ்ம்ருதியில் சொல்லப்பட்ட) கபிலாதா3னம் முதலான பத்துவித4மான தா3னங்களையும் செய்துகொண்டு விஷ்ணுவையே மேலான க3தியாகக் கொண்டவர்களாய் இருந்தார்கள். மது4ஸூத3னனுடைய வாக்யங்களை மறுபடியும் மறுபடியும் நினைத்துப் பஞ்சபாண்ட3வர்களும் தம் ஹ்ருத3யத்திலிருக்கும் அவனை மனஸ்ஸாலே ஆராதி4த்தார்கள். த4ர்மாத்மாவான யுதி4ஷ்டி2ரரும் ஜநார்த்த3னனை நெஞ்சில் இருத்தி, அவனுக்கு ப4க்தராய், அவனிடம் நெஞ்சைச் செலுத்தியவராய், அவனையே ஆராதி4ப்பவராய், அவனிடமே ஈடுபட்டவரான

வி—89

http://acharya.org

ஜ்ஞாநியாக ஆனார். அரசனே! பரிஶுத்₃த₄மானதாய், பாபங்களைப் போக்குவதான இந்தச் சரித்திரம் என்னால் உனக்குச் சொல்லப் பட்டது. குருகுலத் தலைவனே! சோம்பல் இல்லாதவனாய், எப் போதும் விஷ்ணுவைச் சிந்திப்பாயாக. வேறு எந்த வழியாலும் உலகினர் விஷ்ணுவின் ஸுப்ரஸித்₃த₄மான பரமபத₃த்தை அடைய முடியாது.

இந்தப் ப₂லஶ்ருதியிலிருந்தும் கண்ணனாய் அவதரித்த விஷ்ணுவே ஸர்வாந்தர்யாமி என்றும், தே₃வதைகள் முதலான அனைவரும் அவனை ஆராதி₄ப்பவர்கள் என்றும், அவனுடைய ஸ்தா₂னமே மிகவுயர்ந்த மோக்ஷலோகமென்றும், அவனைச் சிந்திப் பதாலேயே அதனை அடையமுடியுமென்றும் தெளிவாக விளங்குகிற தாகையால், இந்த வ்ருத்₃த₄கௌ₃தம ஸ்ம்ருதியானது ப₄க₃வத் பரத்வத்தையே நிலைநாட்டுகிறது என்பது அசைக்கமுடியாதபடி திருபிக்கப்பட்டதாயிற்று.

வ்ருத்₃த₄கௌ₃தம ஸ்ம்ருதி நிர்ணயம் முற்றிற்று.

அருணஸ்ம்ருதி நிர்ணயம்

இந்த ஸ்ம்ருதியில் தெய்வங்களைப்பற்றிச் சில இடங்களிலேயே வருகிறது. 148 ஶ்லோகங்கள்கொண்ட இந்த ஸ்ம்ருதியில் 61-வது ஶ்லோகத்தில்,

"விஷ்ணுஜிஷ்ணுஹ்ருஷீகேஶப்ரதிமாம் ஸ்தா₂பயேத்து வா।
ருணார்த்த₂ம் ப்ரதிக்₃ருஹ்ணநோ முச்யதே து₃ஷ்ப்ரதி
க்₃ரஹாத் ॥"

[ஸர்வவ்யாபியாய், அனைத்துலகையும் வென்றிருப்பவனாய், இந்த்₃ரி யங்களுக்கு ஈஶனான பரமாத்மாவின் அர்ச்சாமூர்த்தியை ப்ரதிஷ்டை₂ செய்யவேண்டும். இப்படிச் செய்பவன், தீயவர்களிடமிருந்து தன் கடனை அடைப்பதற்காக வாங்கின த₃ானத்தினால் ஏற்படும் பாபத்தி னின்றும் நீங்கப்பெறுகிறான்.] என்று ஸர்வலோகவ்யாபியான விஷ்ணுவை அனைத்துலகையும் வென்றிருப்பவனென்றும், இந்த்₃ரி யங்களுக்கு ஸ்வாமி என்றும் குறிப்பிடுவது காணத்தக்கது. 120-வது ஶ்லோகத்தில் தீயவர்களிடமிருந்து வாங்கிய த₃ானத்திற்கு ப்ராயச் சித்தத்தை விதி₄க்கும்போது,

"ருக்ஸாமவேதெ₃ள நியதம் ஜபேத்₂வா ஶிவஸந்நிதெ₄ள।
நாராயணாநுஸ்மரணாந் முச்யதே து₃ஷ்ப்ரதிக்₃ரஹாத் ॥"

http://acharya.org

[ருக்ஸாம வேதங்களை நியமத்தோடு சிவன் கோவிலிலே ஜபிப்பதும் ப்ராயச்சித்தமாகும். நாராயணனை நினைப்பதாலேயே தீவ த்யானத்தினுல் ஏற்படும் பாபத்தினின்றும் நீங்குகிருன்] என்று சிவன் கோவிலில் வேதபாராயணம் செய்வதும், நாராயணனை நினைப்பதும் ஸமமாகக் கூறப்பட்டதிலிருந்து சிவனைக் காட்டிலும் நாராயணனுடைய பெருமை விளங்குகிறது. இந்த ஸ்ம்ருதியின் கடைசியில்,

''ப்ராயஶ்சித்தம் து தஸ்யைவ ஹரே: ஸம்ஸ்மரணம் பரம்' ।
ப்ராதர்நிஶி ததா² ஸந்த்⁴யாமத்⁴யாஹ்நாதி³ஷு ஸம்ஸ்துவந் ॥
நாராயணமவாப்நோதி ஸத்³ய: பாபக்ஷயம் நர: ॥
முக்த்வா ப்ரயாதி ஸ ஸ்வர்க்க³ம் தஸ்ய விஷ்ணோருமீலநே(?) ।
வாஸுதே³வஸ்ய ப⁴க்தஸ்ய ஜபஹோமார்ச்சநாதி³ஷு ॥
தஸ்யாந்தே ப⁴வதே தஸ்ய தே³வேந்த்³ராத³தி⁴கம் ப²லம் ॥
[145-148]

[முற்கூறிய பாபங்களுக்கு ஹரியை நினைப்பதே மேலான ப்ராயஶ்சித்தமாகும். காலையிலும், நடுப்பகலிலும், மாலையிலும், இரவிலும், எல்லாக் காலங்களிலும் நாராயணனைத் துதிப்பதன்மூலம் மனிதன் உடனே பாபங்களிலிருந்து நீங்கப்பெறுகிருன். இறந்த பின்பு விஷ்ணுவினுடையதான ஸ்தானத்தையும் அடைகிருன். வாஸுதேவனிடம் ப⁴க்தி பூண்டிருப்பவன் ஜபம், ஹோமம், அர்ச்சனை முதலான எதைச்செய்தாலும் அதன் பயனுக தே³வேந்த்³ரப் பதவியைக் காட்டிலும் சிறந்த ப²லனை அடைகிருன்.] என்று படிக்கப்படும் ப²லஶ்ருதியிலிருந்தும், விஷ்ணுவை நினைப்பதொன்றே எல்லாப் பாபங்களையும் அழிப்பது என்றும், மோக்ஷமுள்ளிட்ட எல்லா உயர் பதவிகளையும் அளிப்பது என்றும் விளங்குகிறதாகையால் இந்த ஸ்ம்ருதியிலிருந்தும் ப⁴க³வத் பரத்வமே நிலைநாட்டப்பட்டதாயிற்று.

அருணஸ்ம்ருதி நிர்ணயம் முற்றிற்று.

வஸிஷ்ட ஸ்ம்ருதி நிர்ணயம்

இந்த வஸிஷ்ட²ஸ்ம்ருதி கல்கத்தாவில் வெளியிடப்பட்ட ஸ்ம்ருதி ஸந்தர்ப்ப⁴த்தின் நாலாம் பா⁴க³த்தில் 2139-வது பக்கம் முதல் 2246-வது பக்கம் வரையில் அச்சிடப்பட்டுள்ளது. நம்முடைய பூர்வாசார்யர்களால் ஆயிரம் வருஷங்களாகக் கையாளப்படும் பல ஶ்லோகங்கள் இந்த ஸ்ம்ருதியில் உள்ளன. இது ப⁴க³வத்பரத்வத்தை

http://acharya.org

அசைக்கமுடியாதபடி நிலைநாட்டித்தருவது என்பது இதன் முதல் அத்தியாயத்திலிருந்தே விளங்குகிறதாகையால் அவ்வத்தியாயம் முழுவதையும் அடுத்தபடி பொழிப்புரையோடு கொடுக்கிறோம்.

கு₃ருமிக்ஷ்வாகுவம்ஶஸ்ய வஸிஷ்ட₂ம் ப்₃ரஹ்மஸம்ப₄வம் ।
பப்ரச்சு₂ர்முநய: ஸர்வே பாராஶர்யபுரோக₃மா: ॥

முநய ஊசு:—

ப₄க₃வந்! ப₄வதா ப்ரோக்தா யஜ்ஞுத₃ாநவ்ரதாத₃ய: ।
வர்ணாஶ்ரமாணாம் கர்த்தவ்யா நித்ய நைமித்திகா: க்ரியா: ॥
க ஆசார: க: ஆஹார: கீத்₃ருக்₃வ்ருத்தி: க ஆஶ்ரய: ।
வைஷ்ணவாநாம் முநிஶ்ரேஷ்ட₂! ப்₃ருஹி ஸர்வமஶேஷத: ॥

வஸிஷ்ட₂ உவாச—

ஶ்ருணுத்₄வம் முநய: ஸர்வே ஸர்வத₄ர்ம ஸநாதநம் ।
வைஷ்ணவாநாஞ்ச விப்ராணாம் யத்₃யத₃ாசரணம் ஶுப₄ம் ॥
ஸர்க்க₃ாதௌ₃ ப்₃ராஹ்மணா: ஶ்ரேஷ்ட₂ா:
வைஷ்ணவாம்ஶேந சோதி₃தா: ।
இதரே ச த்ரயோ வர்ணா: ப்₃ரஹ்மணா விஷ்ணுஸூநுநா ॥
தஸ்மாச்ச வைஷ்ணவா விப்ரா: ப்ரக்ருத்யாதி₃ஷு ஸத்தமா: ।
அவைஷ்ணவத்வம் விப்ராணாம் மஹாபாதகஸம்மிதம் ॥
அவைஷ்ணவஸ்து யோ விப்ர: ஸர்வகர்மஸு க₃ர்ஹித: ।
ரௌரவம் நரகம் ப்ராப்ய சாண்ட₃ாலீம் யோநிமாப்நுயாத் ॥
நித்யம் நைமித்திகம் காம்யம் த்ரிவித₄ம் ஶ்ருதிசோதி₃தம் ।
அவைஷ்ணவாநாம் விப்ராணாம் கர்ம தந்நிஷ்பலம் ப₄வேத் ॥
ஸ்ரீமஹாவிஷ்ணுமந்யேந ஹீநதே₃வேந துர்மதி: ।
ஸாத₄ாரணம் ஸக்ருத்₃ப்₃ருதே ஸோ஽ந்த்யஜோ
நாந்த்யஜோ஽ந்த்யஜ: ॥
யோ விஷ்ணுஶேஷமாத்மாநமந்யஶேஷம் ப்ரபத்₃யதே ।
ஸ சாண்ட₃ாலோ மஹாபாபீ ரௌரவம் நரகம் வ்ரஜேத் ॥
அவைஷ்ணவத்வம் விப்ராணாம் ஆத்மநாஶநகாரணம் ॥
தஸ்மாத்து வைஷ்ணவத்வம் வை விப்ராணாம்
ஶ்ருதிசோதி₃தம் ॥

http://acharya.org

அவைஷ்ணவோ ஹதோ விப்ரோ ஹதம்
ஶ்ராத்₃த₄மத₃க்ஷிணம் ।
அப்₃ரஹ்மண்யம் ஹதம் க்ஷாத்ரமநாசாரம் ஹதம் குலம் ॥
யே வாஸுதே₃வம் நார்ச்சந்தி ஸர்வலோகேஶ்வரம் ஹரிம் ।
தேஷாம் ஹி நரகே வாஸ: கல்பாயுதஶதைரபி ॥
சதுர்வேதீ₃ ச யோ விப்ரோ வாஸுதே₃வம் ந விந்த₃தி ।
வேத₃ப₄ாரப₄ராக்ராந்த: ஸ வை ப்₃ராஹ்மணக₃ர்த்த₃ப₄: ॥
தஸ்மாத₃வைஷ்ணவத்வேந ப்₃ராஹ்மணத்வம் விஹந்யதே ।
வைஷ்ணவத்வேந ஸம்ஸித்₃தி₄ம் லப₄தே நாத்ர ஸம்ஶய: ॥
நாராயணம் பரம் ப்₃ரஹ்ம ப்₃ராஹ்மணாநாம் ஹி தை₃வதம் ।
ஸோமஸூர்யாத₃யோ தே₃வா க்ஷத்ரியாணாம் விஶாம் ததா₂ ॥
ஶூத்₃ராதீ₃நாம் து ருத்₃ராத்₃யா அர்ச்சநீயா: ப்ரகீர்த்திதா: ।
யத்து ருத்₃ரார்ச்சநம் ப்ரோக்தம் புராணேஷு ஸ்ம்ருதிஷ்வபி ॥
தத₃ப்₃ரஹ்மண்யவிஷயமேவமாஹ ப்ரஜாபதி: ।
ருத்₃ரார்ச்சநம் த்ரிபுண்ட்₃ரம் ச யத்புராணேஷு கீ₃யதே ।
க்ஷத்ரவிட் ஶூத்₃ரஜாதீநாம் நேதரேஷாம் தது₃ச்யதே ॥
தஸ்மாத்த்ரிபுண்ட்₃ரம் விப்ராணாம் (விப்ரைஸ்து) ந தா₄ர்யம்
முநிஸத்தமா:! ॥
யத₃ஜ்ஞாநாச்ச பி₃ப்₄ருயு: பதிதாஸ்தே ந ஸம்ஶய: ॥
ஊர்த்₄வபுண்ட்₃ரம் து விப்ராணாம் ஸததம் ஶ்ருதிசோதி₃தம் ।
ஊர்த்₄வபுண்ட்₃ரோ ம்ருதா₃ ஶுப்₄ரோ லலாடே யஸ்ய
த்₃ருஶ்யதே ॥
ஸர்வபாபவிஶுத்₃தா₄த்மா ஸ யாதி ஹரிமந்தி₃ரம் ।
ஸ்நாநம் தா₃நம் தபோ ஹோம: ஸ்வாத்₄யாய: பித்ருதர்ப்பணம் ॥
ப₄ஸ்மீப₄வந்தி தத்ஸர்வமூர்த்₄வபுண்ட்₃ரம் விநா க்ருதம் ॥
முமுக்ஷுபி₄ர்வீதராகை₃: அப்ரமத்தை: ஸமாஹிதை: ।
ஊர்த்₄வபுண்ட்₃ரம் ஹரே: பூஜாக்ஷச்ச₂த்ரா த்₃யைரலங்க்ருதம் ॥
ப்₃ராஹ்மணைர்நைவ ம்ருத்₃தா₄ர்யா ந ப₄ஸ்ம ந ச சந்த₃நம் ।
யத்₃யபு₃த்₃த்₄யா து பி₃ப்₄ருயாத் ப்ராயஶ்சித்தீ ப₄வேத்து ஸ: ॥
ந த்ரிபுண்ட்₃ரம் த்₃விஜைர்தா₄ர்யம் ந மட்டாகாரமேவ ச ।
ந சாந்யதே₃வதாப₄க்திராபத்₃யபி கதா₃சந ॥

http://acharya.org

யஸ்து நாராயணுதந்யம் ஸ்வதந்த்ரேண ப்ரபூஜயேத் ।
பவேயுர்நிஷ்பலாஸ்தஸ்ய யஜ்ஞதாநாதி ஸத்க்ரியா: ॥
அங்கபாவேந தேவாநாம் அர்ச்சநம் ந நிஷித்யதே ।
ஸ்வதந்த்ர புத்த்யா ய: குர்யாத் ப்ராஹ்மணோ நரகம் வ்ரஜேத் ॥
தஸ்மாத்து ப்ராஹ்மணோ நித்யம் ப்ரயத்நேநார்ச்சயேத்தரிம் ।
ததாதாரணபாவேந தேவதா: பரிதோऽர்ச்சயேத் ॥
அவைஷ்ணவஸ்து யோ விப்ரஶ்சாண்டாலாதத்ம: ஸ்ம்ருத: ।
ந தேந ஸஹ போக்தவ்யமாபத்யபி கதாசந ॥
ஸுதர்ஶநோர்த்வபுண்ட்ராணும் தாரணம் ப்ரதமம் ஸ்ம்ருதம் ।
தந்மந்த்ராத்யயநம் சைவ ததீயாராதநம் ததா ॥
நித்யமாராதநம் விஷ்ணோர்த்யாநம் ஹோமோ ஜபஸ் ததா ।
தத்கதாஶ்ரவணம் சைவ தந்நாம்நஶ்சைவ கீர்த்தநம் ॥
தத்பாததீர்த்தஸேவா ச தந்நிவேதிதபோஜநம் ।
ப்ரணுமஸ்தஸ்ய புரதோ நர்த்தநம் கீதவாதநம் ॥
தத் ஸ்தோத்ரபடநம் சைவ ததந்யேஷாமஸேவ்யதா ।
ஏவம் ஸம்பூஜயந்நித்யம் நாராயணமநாமயம் ॥
ஸ வைஷ்ணவோ பவேத்விப்ர: ஸர்வலோகேஷு பூஜித: ।
லலாடே சோர்த்வபுண்ட்ரஸ் து பாஹுமூலே ஸுதர்ஶநம் ॥
கண்டே யத்வாக்ஷமாலா து பவித்ரம் தக்ஷிணே கரே ।
வைஷ்ணவேந ஸதா தார்யா ஹரிஸம்பந்தவேதநாத் ॥
ஶங்கசக்ராங்கநம் குர்யாதாத்மநோ பாஹுமூலயோ: ।
கலத்ராபத்யப்ருத்யேஷு பஶ்வாதிஷு விமுக்தயே ॥
ஸ புத்ர பஶுதாராணும் ப்ராஹ்மணுநாம் விஶேஷத: ।
குர்யாத்து சிந்ஹநம் சைவ வைஷ்ணவம் நாம லக்ஷ்ம ச ॥
ஶங்கசக்ரே ஸ்புடம் குர்யாத் ப்ரதப்தே பாஹுமூலயோ: ।
ஸர்வாஶ்ரமேஷு வஸதாம் ஸ்த்ரீணும் ச ஶ்ருதிவேதநாத் ॥
ஹோமாதிநைவ ஸந்தப்தசக்ரமாதாய வைஷ்ணவம் ।
தக்ஷிணே பாஹுமூலே து தக்த்வா கர்ம ஸமாசரேத் ॥
விதிநா தாரயித்வைவ பவித்ரம் சக்ரமுத்தமம் ।
ததஸ்ஸ வைஷ்ணவம் யாதி நாந்யதா த்விஜஸத்தமா:! ॥

http://acharya.org

தஸ்மாத்து விதி₄வச்சக்ரம் தா₄ரயித்வா ஸுதா₃ர்ஶநம் ।
பஶ்சாத் ஸர்வாணி கர்மாணி குர்வீத த்₃விஜஸத்தமா:॥
சக்ரஸ்ய தா₄ரணே காலே ப்₃ராஹ்மணத்வம் விது₃ர்பு₃தா₄: ।
ஜாதிகர்மாணி வை குர்யாச்சௌளோபநயநேऽபி வா ॥
மந்த்ராத்₄யயநகாலே வா சக்ரம் தா₄ர்யம் விதா₄நத: ।
அத்₄ருத்வா விதி₄வச்சக்ரம் யதி₃ கர்ம ஸமாசரேத் ॥
நிஷ்ப₂லம் து ப₄வேத் ஸர்வமிஷ்டாபூர்த்தம் த்₃விஜோத்தமா:! ।
[1-42]

இதி ஸ்ரீவஸிஷ்ட₂ஸ்ம்ருதௌ ப்₃ராஹ்மணஸ்வரூப கத₂நம் நாம ப்ரத₂மோऽத்₄யாய: ॥

[பிரமனுடைய பிள்ளையாய், இக்ஷ்வாகு வம்ஶத்தின் ஆசார்யரான வஸிஷ்ட₂ரை வியாஸர் முதலான எல்லா முனிவர்களும் பின்வருமாறு கேட்டார்கள்—''ப₄க₃வானே! அந்தந்த வர்ணாஶ்ரமங்களில் இருப்பவர்கள் செய்யவேண்டிய நித்ய நைமித்திக கர்மங்களான யஜ்ஞம், தா₃னம், வ்ரதம் முதலானவை உம்மால் சொல்லப்பட்டன. முனிவர் தலைவரே! வைஷ்ணவர்களுக்கு ஆசாரம் எது? ஆஹாரம் எது? தொழில் என்ன? ஆஶ்ரயணீயம் எது? இவையனைத்தையும் எங்களுக்குச் சொல்லவேண்டும்.'' இவ்வண்ணம் முனிவர்களால் கேட்கப்பட்ட வஸிஷ்ட₂ர் கூறலுற்றார்.— முனிவர்களே! எல்லா த₄ர்மங்களுக்கும் பழமையானதாய் வைஷ்ணவர்களான அந்தணர்களுக்குரியதாய், மங்க₃ளமான ஆசாரங்களைக் கூறுகிறேன், கேளுங்கள். விஷ்ணுவின் அம்ஶமுடைய விஷ்ணு புத்ரனை பிரமனால் ஸ்ருஷ்டியின் ஆதி₃யில் சிறந்தவர்களான ப்₃ராஹ்மணர்கள் படைக்கப்பட்டார்கள். மற்ற மூன்று வர்ணத்தவர்களும் அவ்வம்ஶமற்ற பிரமனால் படைக்கப்பட்டனர். ஆகையால் விஷ்ணுவால் படைக்கப்பட்ட அந்தணர்கள் ஸ்வப₄ாவம் முதலியவற்றால் சிறந்து விளங்குகிறார்கள். அந்தணர்கள் வைஷ்ணவர்களாயிராமலிருப்பது மஹாபாதகத்தோடு ஒத்தது. எந்த அந்தணன் வைஷ்ணவனாயிராமலிருக்கிறானோ அவன் எந்த வைதி₃ககர்மத்தையும் செய்யத்தகாதவன் என்று இகழப்படுகிறான். இறந்தபின்பு ரௌரவ நரகத்தை அடைந்து, சண்டா₂ளனாகப் பிறக்கிறான். வேத₃த்தில் விதி₄க்கப்பட்ட நித்யம், நைமித்திகம், காம்யம் என்னும் மூன்றுவகைக் கர்மங்களும் விஷ்ணுப₄க்தராயிராத அந்தணர் அனுஷ்டி₂க்கும்போது பயனற்றவையாகின்றன. அறிவு கெட்டவனான எவனொருவன ஸ்ரீமஹாவிஷ்ணுவை மற்றொரு தாழ்ந்த தே₃வனோடு ஸமானமானவனாக ஒருமுறை சொல்லுகிறானோ, அவனே

http://acharya.org

உண்மையன்ன சண்டா3ளன் சண்டா3ளனுகப் பிறந்தவன்கூட (அவனைப் போல்) சண்டா3ளனல்லன். எவன் விஷ்ணுவுக்கு அடிமைப்பட்ட தன் ஆத்மாவை மற்றொரு தெய்வத்துக்கு அடிமைப்பட்டதாக நினைக்கிருனே, மஹாபாபியாய், சண்டா3ளனுன அவன் ரௌரவ நரகத்தை அடைகிருன். அந்தணர்களுக்கு அவைஷ்ணவத்வமானது ஆத்மாவையே அழிக்கக்கூடியது. அதனுல் அந்தணர்களுக்கு வைஷ்ணவத்வம் வேத3த்திலேயே விதி4க்கப்பட்டுள்ளது. அவைஷ்ணவனுன அந்தணன் அழிந்தவனே. த3க்ஷிணையில்லாத ஶ்ராத்3த4ம் அழிந்ததே. ப்3ராஹ்மணனைத் துணைகொள்ளாத க்ஷத்ரியன் அழிந்தவனே. ஆசாரமில்லாத குலமும் அழிந்ததே. எவர்கள் எவ்லாவுலகுக்கும் ஈஶ்வரனுன ஹரியை ஆராதி4ப்பதில்லையோ அவர்கள் லக்ஷக்கணக்கான வருஷங்கள் நரகில் வீழ்கிருர்கள். நாலு வேத3மும் படித்தவனுயினும் வாஸுதே3வனைச் சரணமடையவில்லையானுல் வேத3மாகிற பெருஞ்சுமையால் அழுத்தப்படும் ப்ரா3ஹ்மணக் கழுதையே அவன். ஆகையால் அவைஷ்ணவத்தன்மையால் ப்3ராஹ்மணத் தன்மை அழிக்கப்பட்டுவிடுகிறது. வைஷ்ணவத்வத்தை உடையவன் எல்லா ஸித்3தி4களையும் பெறுவான் என்பதில் ஐயமில்லை. பரப்3ரஹ்மமான நாராயணன் அந்தணர்க்குரிய தெய்வமாவான். சந்த்3ரன், ஸூர்யன் முதலான தே3வர்கள் க்ஷத்ரியர்களுக்கும், வைஶ்யர்களுக்கும் தெய்வங்களாவர். ஶூத்3ரர் முதலானவர்களுக்கு ருத்3ரன் முதலான தாமஸ தே3வர்கள் ஆராதி4க்கத் தக்கவர்களாக ஶாஸ்த்ரங்களில் சொல்லப்படுகிருர்கள். புராணங்களிலும் ஸ்ம்ருதிகளிலும் 'ருத்3ரனை ஆராதி4க்கவேண்டும்' என்று சொல்லுமிடங்கள் ப்3ராஹ்மணரல்லாதார் விஷயம் என்று ப்ரஜாபதி கூறினுர். ருத்3ரனை ஆராதி4க்கவேண்டும் என்றும், த்ரிபுண்ட்3ரம் த4ரிக்கவேண்டும் என்றும் புராணங்களில் சொல்லப்படுவது க்ஷத்ரியவைஶ்யஶூத்3ரர்களுக்கேயொழிய அந்தணர்களுக்கல்ல. முனிவர் தலைவர்களே! ஆகையால் (குறுக்கேயிடும்) த்ரிபுண்ட்3ரத்தை அந்தணர்கள் த4ரிக்கலாகாது. அறியாமையால் த4ரித்தால், அவர்கள் பதிதர்களாவார்கள் என்பதில் ஐயமில்லை. அந்தணர்கள் ஊர்த்4வபுண்ட்3ரமே எப்போதும் த4ரிக்கவேண்டும் என்று வேத3த்தில் விதி4க்கப்பட்டுள்ளது. எவனுடைய நெற்றியில் வெள்ளைமண்ணுலான ஊர்த்4வபுண்ட்3ரம் காணப்படுகிறதோ, அவன் எல்லாப்பாபங்களினின்றும் நீங்கப்பெற்றவனுய் ஹரியின் உலகத்திற்குச் செல்கிருன். ஊர்த்4வபுண்ட்3ரமில்லாமல் செய்யப்படும் ஸ்நானம், தா3னம், தவம், ஹோமம், வேத3ாத்4யயனம், பித்ருதர்ப்பணம் ஆகிய அனைத்தும் சாம்பலாகி அழியும்.

http://acharya.org

ஶப்₃த₃ஶாதி₃ விஷயங்களில் பற்றற்றவர்களாய், ப₄க₃வத்₃விஷயத்தில் சோம்பலில்லாமல் நன்கு ஈடுபட்டவர்களான முமுக்ஷுக்களால் (தம் வீடு முதலானவற்றில் எழுதப்படும்) மாலை, குடை முதலானவற்றால் அலங்கரிக்கப்பட்ட ஊர்த்₄வபுண்ட்₃ரமே ஹரியின் திருவாராத₄ன மாகும். அந்தணர்களால் (வெள்ளை நிறமல்லாத) மண்ணோ, சாம்பலோ, சந்த₃னமோ (புண்ட்₃ரமாக) த₄ரிக்கத்தக்கதன்று. அறியாமல் த₄ரித்தானாகில் அவன் ப்ராயஶ்சித்தம் செய்யவேண்டியவனாகிறான். இரு பிறப்பாளர்கள் முப்பட்டையாகவோ, ஒரே பட்டையாகவோ குறுக்குப் புண்ட்₃ரத்தை த₄ரிக்கக்கூடாது. ஆபத்துக்காலத்தில்கூட ஒருபோதும் வேறு தெய்வத்திடம் ப₄க்தி செலுத்தக்கூடாது. எவனொருவன் நாராயணனைக் காட்டிலும் வேறொரு தெய்வத்தை ப்ரத₄ானமாக வைத்துப் பூஜிக்கிறானோ அவன் செய்யும் யஜ்ஞம், தா₃னம் முதலான நற்செயல்களும் பயனற்றவையாகின்றன. (கோயில்களில்) மற்ற தெய் வங்களை நாராயணனுக்குப் பரிவாரங்களாக வைத்துப் பூஜிப்பது தவ றல்ல. மற்றொரு தெய்வத்தை ப்ரத₄ானமாக வைத்து ஆராதி₄க்கும் அந்தணன் நரகம் புகுவான் ஆகையால் அந்தணன் தினந்தோறும் ஹரியை முயன்று பூஜிக்கவேண்டும். அவனால் த₄ரிக்கப்படுமவர்கள் என்னும் நினைவோடு மற்ற தெய்வங்களை ஆராதி₄க்கவேண்டும். வைஷ்ணவனாயிராத அந்தணன் சண்டா₃ளனைக் காட்டிலும் தாழ்ந்த வன் என்று ஸ்ம்ருதிகளில் கூறப்படுகிறான். ஆபத்துக்காலத்திலும் ஒருபோதும் அவனோடு சேர்ந்து உட்கார்ந்து உண்ணலாகாது. (எம்பெருமானை ஆராதி₄ப்பதில் அடங்கும் விஷயங்களாவன)— 1. ஸமாஶ்ரயணத்தையும், ஊர்த்₄வபுண்ட்₃ரங்களையும் த₄ரிப்பது முதல் ஆராத₄னமாகும். 2 எம்பெருமானுடைய மந்த்ரங்களை (ஆசார்யன் மூலம்) கற்பது. 3. அவனுடைய அடியார்களை ஆராதி₄ப்பது. 4. எம்பெருமானுக்கு தினந்தோறும் திருவாராத₄னம்செய்வது. 5. அவனை த்₄யானிப்பது. 6. அவனுடைய மந்த்ரங்களைக்கொண்டு ஹோமம் செய்வது. 7. அவனுடைய மந்த்ரங்களைக்கொண்டு ஜபம் செய்வது. 8. அவனுடைய கதைகளைக் கேட்பது. 9. அவனுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தனம் செய்வது. 10. அவனுடைய ஸ்ரீபாத₃ தீர்த்த₂த்தைப் பருகுவது. 11. அவன் அமுதுசெய்ததை உண்பது. 12. அவனுக்கு முன்னால் வணங்குவது. 13. அவனுக்கு முன்னால் நாட்டியமாடுவது. 14. அவனுக்கு முன்னால் பாட்டுப் பாடுவது. 15. அவனைப்பற்றிய துதிகளைப் படிப்பது. 16. அவனைத் தவிர வேறு எவரையும் தொழாமலிருப்பது. இப்படிப் பதினாறு வகைகளில் தினந்தோறும் குறையற்ற நாராயணனை ஆராதி₄ப்பவன் எவனோ,

http://acharya.org

வைஷ்ணவனுன அவனே அந்தணனுவான். எல்லாவுலகிலும் பூஜிக்கப் படுவான். நெற்றியில் ஊர்த்₄வபுண்ட்₃ரமும், வலதுதோளில் ஸுத₃ர் ஶனமும், கழுத்தில் துளஸி, தாமரை மணிமாலேகளும், வலது கையில் பவித்ரமும், எம்பெருமானேடு ஸம்ப₃ந்த₄த்தைக் காட்டுவ தற்காக வைஷ்ணவனுல் த₄ரிக்கப்படவேண்டும். தனது இருதோள் களிலும் ஶங்க₂சக்ரங்களால் அடையாளம் செய்துகொள்ளவேண்டும். மனேவி, பிள்ளேகள், வேலேக்காரர்கள், பசுக்கள் முதலான எல்லாச் சேதனர்க்கும் அவர்கள் முக்தியடைவதற்காக ஶங்க₂சக்ராங்கனம் செய்யவேண்டும். குறிப்பாக அந்தணர்கள் மனேவி, மக்கள், பசுக்க ளோடு சக்ராங்கனம் செய்துகொள்ளவேண்டும். விஷ்ணு ஸம்ப₃ந்த₄ முள்ள திருநாமங்களேயும், அடையாளங்களேயும் சிந்திக்கவேண்டும். தோள்களில் ஶங்க₂சக்ரங்களேத் தெளிவாகத் தெரியும்படி அடை யாளம் செய்துகொள்ளவேண்டும். வேத₃ம் விதி₄க்கிறபடியால் எல்லா ஆஶ்ரமங்களிலிருப்பவர்களுக்கும், ஸ்த்ரீகளுக்கும் ஹோமம் முதலான வற்றைச் செய்து அதில் காய்ச்சப்பட்ட விஷ்ணுசக்ரத்தைக்கொண்டு வலதுதோளில் அடையாளம் செய்தபின்பே வைதி₃க கர்மங்களேச் செய்விக்கவேண்டும். அந்தணர் தலேவர்களே! பரிஶுத்₃த₄மானதாய் (வேத₃ங்களில் பவித்ரம் எனப்படுவதாய்), மிகச் சிறந்ததான சக்ரத்தை முறைப்படி த₄ரிப்பதிஞல் விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைவான். அதை அடைய வேறு வழியில்லே. ஆகையால் ஸுத₃ர்ஶன சக்ரத்தை விதி₄ப்படி த₄ரித்தபின்பே எல்லாக் கர்மங்களேயும் செய்யவேண்டும். அந்தணர் தலேவர்களே! சக்ரத₄ாரணம் செய்யும்போதே அந்தணத் தன்மை ஏற்படுகிறது என்று அறிவாளிகள் அறுதியிடுகிருர்கள். ஆகையால் அதற்குப் பின்பே ஜாதகர்மம், நாமகரணம், சௌளம், உபநயனம் முதலான அந்தணர்க்குரிய கர்மங்களேச் செய்யவேண்டும். அல்லது திருவஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்களே உபதே₃ஶம் பெறும்போதாவது முறைப்படி சக்ரத்தை த₄ரிக்கவேண்டும். த்₃விஜ ஶ்ரேஷ்டர்களே! முறைப்படி சக்ரத்தை த₄ரிக்காமல் யாக₃ம் செய்தல், குளம் வெட்டுதல் முதலான இஷ்டாபூர்த்தகர்மங்களேச் செய்தால் அவையனேத்தும் பயனற்றதாகும்.] என்று இந்த வஸிஷ்ட₂ஸ்ம்ருதியின் முதல் அத்தியாயமே ப₄க₃வத்பரத்வத்தைக் கல்வெட்டாகக் காட்டித் தருகிறது. பரமத₄ர்மஶாஸ்த்ரங்களின் ஸாரமாகவும் இருக்கிறது இனி, வைஷ்ணவர்களுக்கு நாமஸம்ஸ்காரத்தை வர்ணிக்கும் இரண்டாம் அத்தியாயத்திலுள்ள ஸாரமான சில ஶ்லோகங்களேக் காண்போம்.

தஸ்ய த₃க்ஷிணகர்ணே து ஜபேத₃ஷ்டாக்ஷரம் ஸ்வயம் |
மூர்த்₄நி ஹஸ்தம் விநிக்ஷிப்ய ஜபேச்ச த்₃வாத₃ஶாக்ஷரம் ||

http://acharya.org

ஷட3க்ஷரேண மந்த்ரேண குஶை: ஸம்மார்ஜயேத் தநும் |
நாம குர்யாத் தத: பஶ்சாத்3வைஷ்ணவம் பாபநாஶநம் ||
மாஸைஶ்ச வத்ஸரைஶ்சைவ மூர்த்திபி4ர்த்3வாத3ஶைர்யுதம் |
ஆரப்4ய மார்க்க3ஶீர்ஷே து கேஶவாத்3யைரதி4ஷ்டி2தம் ||
மாஸே யஸ்மிம்ஸ்து யோ ஜாதஸ்தஸ்ய தந்நாம கீர்த்திதம் |
தஸ்ய நைஸர்க்கி3கம் நாம வைஷ்ணவம் து விதீ4யதே ||
அந்யாநி சைவ நாமாநி கு3ணயோகே3 ப4வந்தி ஹி |
ப்ரத2மம் வைஷ்ணவம் நாம ஸர்வவர்ணேஷு கீர்த்திதம் ||
ந சேத்து வைஷ்ணவோ நாம யஸ்ய வை த்3விஜஸத்தமா:! |
அநாமகஸ்ஸ விஜ்ஞேய: ஸர்வகர்மவிக3ர்ஹித: ||
ஏவம் ஹி நாமகரணம் கர்த்தவ்யம் த்3விஜஸத்தமா:! |
ஜாதகர்மண்யலாபே4 து விஷ்ணோஶ்சக்ராதி3 தா4ரணே ||
சௌளோபநயநே வாபி தந்மந்த்ராத்4யயநேऽபி வா |
விதி4நா வைஷ்ணவம் சக்ரம் தா4ரயித்வா த்3விஜோத்தமா:! ||
கர்ம குர்யாத் தத: பஶ்சாத் ஶ்ரௌதஸ்மார்த்த விதா4நத: ||
[2-24...32]

[அந்தக் குழந்தையின் வலது காதில் தந்தையானவன் தானே திருவஷ்டாக்ஷரத்தை ஜபிக்கவேண்டும். கையைக் குழந்தையின் தலையிலே வைத்து த்3வாத3ஶாக்ஷரத்தை ஜபிக்கவேண்டும். ஷட3க்ஷர மந்த்ரத்தினால் குஶங்களைக்கொண்டு குழந்தையின் உடம்பைத் தடவ வேண்டும். அதற்குப்பின் பாபங்களை அழிக்கும் விஷ்ணு ஸம்ப3ந்த4 முள்ள திருநாமங்களைக் குழந்தைக்கு வைக்கவேண்டும். அந்தந்த மாஸங்களுக்கும் வருஷங்களுக்கும் உரிய கேஶவன் முதலான பன்னிரண்டு மூர்த்திகளை உடைய எம்பெருமானுடைய திருநாமத்தை வைக்கவேண்டும். மார்கழி மாதம் கேஶவனால் அதி4ஷ்டி2க்கப்பட்டது. தை முதலாகக் கார்த்திகை ஈறாகவுடைய மற்ற மாதங்கள் நாராயணன் முதலாக தா3மோத3ரன் ஈறாகவுள்ள மூர்த்திகளால் அதி4ஷ்டி2க்கப் பட்டவை. எந்தக் குழந்தை எந்த மாதம் பிறந்திருக்கிறதோ அக் குழந்தைக்கு அந்த மாதத்திற்கான மூர்த்தியின் திருநாமத்தை வைக்கவேண்டும். குழந்தைக்கு அந்த வைஷ்ணவ நாமமே இயல் வானதாகக் கூறப்படுகிறது. மற்ற நாமங்களும் கு3ணங்களையிட்டு வைக்கப்படுகின்றன. எல்லா வர்ணங்களுக்கும் வைஷ்ணவ நாமமே முக்கியமானது என்று சொல்லப்படுகிறது. அந்தணர் தலைவர்களே! எவனுக்கு வைஷ்ணவமான திருநாமம் இல்லையோ, அவன் பெய

http://acharya.org

ரில்லாதவன் என்றே அறியத்தக்கவன். அவன் எல்லாக்கர்மங்களுக்கும் தகுதியில்லாதவன். நாமகரணம் இவ்வண்ணமே செய்யப்பட வேண்டும். நாமகரணத்தை ஜாதகர்மத்தின்போதோ, இல்லாவிடில் சக்ராங்கனத்தின்போதோ, சௌளத்தின்போதோ, உபநயனத்தின் போதோ, பகவந்மந்த்ரங்களை உபதேசம் பெறும்போதோ செய்ய லாம். அந்தணர் தலைவர்களே! விதிப்படி விஷ்ணுவின் சக்ரத்தை தரிக்கச் செய்தபின்பு ஶ்ருதிஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்ட மற்ற கர்மங்களைச் செய்யவேண்டும்.]

இதிலிருந்து பரம்பொருளான விஷ்ணுவின் திருநாமங்களையே குழந்தைகளுக்கு வைக்கவேண்டும் என்பது விளங்குகிறது. பிள்ளைக்கு வைக்கப்பட்ட இந்நாமங்களைப் பெற்றோர்களும், உறவினர்களும் அடிக்கடி சொல்லுவதால், அவர்களது பாபங்கள் அழிந்து பரமபதமும் கூடக் கிடைக்கிறது என்பதை ஸ்ரீபாகவதத்தில் அஜாமிளோபாக்யானத்தில் காணலாம். இவ்விஷயத்தைப் பெரியாழ்வாரும் 'காசும் கறையுடை' [பெரியாழ்-திரு 4-6] என்னும் திருமொழியில் அருளிச்செய்தார்.

இனி, குழந்தைகளுக்கு உபநிஷ்க்ராமணம், அன்னப்ராஶனம் முதலான கர்மங்களை விவரிக்கும் மூன்றும் அத்தியாயத்தில் பகவத் பரத்வம் முழங்கப்பட்டிருப்பதைக் காண்போம்.

அத₂ மாஸே சதுர்த்தே₂ து க்₃ருஹாந்நிஷ்க்ராமயேச்சி₂ஶும் ।
ஸுஸ்நாப்ய ஸமலங்க்ருத்ய ஸ்வஸ்திவாசநமாசரேத் ॥
அர்ச்சயேத் ப்ரயதோ விஷ்ணும் கர்மபி₄ஶ்ச ஸுஶோப₄நை: ।
கத₃லீப₂லஸம்யுக்தம் த₃த்₄யந்நம் ச நிவேத₃யேத் ॥
ஸஹஸ்ரநாமபி₄: ஸ்துத்வா நம:க்ருத்வா து விஷ்ணவே ।
புரதோ வாஸுதே₃வஸ்ய ஹோமம் குர்யாத்₃வித₄ாநத: ॥
ஆயம் கௌ₃ரிதி மந்த்ரேண ஹம்ஸ: ஶுசிஷதி₃த்₃யருசா ।
பரோமாத்ரேண ஸூக்தேந த₃த்₄யந்நம் ஜுஹுயாத்₃த்₃விஜ: ॥
ததோ'ர்க்கமண்ட₃லே விஷ்ணும் த்₄யாத்வா ஸம்பூஜயேத்₃-
ஹிரண்மயவபுர்தே₃வம் ஶங்க₂சக்ரக₃தா₃த₄ரம் ॥ [கு₃ரும்
பத்₃மாஸநஸ்த₂ம் தே₃வேஶம் ஸர்வாப₄ரணபூ₄ஷிதம் ।
குமாரமீக்ஷயேத்₃பா₄நும் ஜபந் வை ஸௌர்யதை₃வதம் ॥ [3-1...6]

[நாலாவது மாதத்தில் குழந்தையை வீட்டை விட்டு வெளியில் அழைத்துவரவேண்டும். நன்றாக நீராட்டி, அலங்கரித்து, ஸ்வஸ்தி

http://acharya.org

வாசனத்தைச் செய்யவேண்டும். புலனடக்கமுடையவனாய், அழகிய (தூ₄ப தீ₃பாதி₃) கர்மங்களால் விஷ்ணுவுக்குத் திருவாராத₄னம் செய்யவேண்டும். வாழைப்பழத்தோடு கூடிய தயிரமுதை எம்பெருமா னுக்கு அமுதுசெய்யப்பண்ணவேண்டும். விஷ்ணுஸஹஸ்ரநாமத்தால் துதித்து, எம்பெருமானை வணங்கி, வாஸுதே₃வனை அவனுக்கு முன்னால் முறைப்படி ஹோமம் செய்யவேண்டும். "ஆயம் கௌ₃ள:" என்னும் மந்த்ரத்தாலும், "ஹம்ஸ: ஶுசிஷத்" என்னும் ருக்கினா லும், "பரோ மாத்ரயா" என்று தொடங்கும் விஷ்ணுஸூக்தத்தினா லும் அந்தணன் தயிரமுதை ஹோமம் செய்யவேண்டும். அதற்குப்பின் ஸூர்யமண்ட₃லத்தில் பெரியவனாய், பொன்மயமான திருமேனியை யுடையவனாய், ஶங்க₂ சக்ர க₃தை₃களை த₄ரித்தவனாய், பத்₃மா ஸனத்தில் வீற்றிருப்பவனாய், தே₃வர் தலைவனாய், எல்லா ஆப₄ரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனாய், தே₃வனான விஷ்ணுவை த்₄யானித்து ஆராத₄னம் செய்யவேண்டும். ஸூர்யனை தே₃வதையாகக் கொண்ட மந்திரத்தை ஜபித்துக்கொண்டு, குழந்தைக்கு ஸூர்யத₃ர்ஶனம் செய்விக்கவேண்டும்.] என்னும் இவ்வத்தியாயத்தின் தொடக்கத்திலுள்ள உபநிஷ்க்ராமணவிதி₄யி லிருந்து ஸூர்யனுக்கு நடுவிலிருப்பவனாக சா₂ந்தோ₃க்₃யம் முதலான உபநிஷத்துக்களில் ஓதப்பட்ட பரமாத்மா ஶங்க₂சக்ரக₃தா₃த₄ரனான நாராயணனே என்று விளங்குகிறது. அடுத்தபடியாக அன்னப்ரா ஶனத்தை விவரிக்கும்போது,

ஜப்த்வா ச பௌருஷம் ஸூக்தம் நமஸ்க்ருத்ய ஜநார்த்த₃நம் ।
ஹரேர்நிவேதி₃தம் பஶ்சாத் ஶுபே₄ பாத்ரே விநிக்ஷிபேத் ॥
த₃த்₄யாஜ்யமாக்ஷிகைர்யுக்தம் ப்ராங்முக₂ம் புரதோ ஹரே: ।
ஹோம்நாசாந்நபதேந்நஸ்வ இதி மந்த்ரேண ப்ராஶயேத் ॥
விப்ராம்ஶ்ச போ₄ஜயேத்₃வித்₃வாநாஶீர்பி₄ரபி₄நந்த₃யேத் ।
அத₂ாஷ்டமே மாஸி குர்யாத்₃விஷ்ணு பூஜா வித₄ாநத: ॥
ஸேவநை: குஸுமைர்தி₃வ்யை: பூஜயேத் புருஷோத்தமம் ॥
[3-13...16]

[புருஷஸூக்தத்தை ஜபித்து, ஜநார்த்த₃னனை நமஸ்கரித்து, அந்த எம்பெருமானுக்கு அமுதுசெய்யப்பண்ணிய உணவை நல்ல பாத்தி ரத்தில் சேர்க்கவேண்டியது. தயிர், நெய், தேன் ஆகியவற்றோடு சேர்க்கப்பெற்ற உணவை எம்பெருமானுக்கு முன்னால் கிழக்கு முக₂ மாக இருக்கும் குழந்தைக்கு "ஹோம்நாசாந்நபதேந்நஸ்வ(?)" என்னும் மந்திரத்தைச் சொல்லி ஊட்டவேண்டியது. அறிவாளியா

http://acharya.org

யிருப்பவன் அந்தணர்களுக்கு உணவளித்து, அவர்களைக்கொண்டு குழந்தைகளுக்கு ஆசீர்வாதமும் செய்விக்கவேண்டும். அதற்குப்பின் எட்டாவது மாஸத்தில் விஷ்ணுவைப் பூஜை செய்யவேண்டிய முறைப் படி—வணங்குவதன் மூலமும், நல்ல பூக்களை இடுவதன் மூலமும் புருஷோத்தமனுக்குத் திருவாராத₄னம் செய்யவேண்டும்.] என்று எம்பெருமானுடைய திருவாராத₄னத்தையும், புருஷஸூக்த ஜபத் தையும் செய்து, எம்பெருமான் அமுதுசெய்த உணவையே குழந்தைக்கு ஊட்டவேண்டும் என்று கூறியிருப்பது காணத்தக்கது. அதற்குப்பின் மூன்றுவது வயஸ்ஸில் செய்யவேண்டிய சௌளம் (குடுமிவைத்தல்) என்னும் கர்மத்தை விவரிக்கும்போது,

ஸ்நாத்வாऽபரேஹ்நி குர்வீத ஸ்வஸ்திவாசந பூர்வகம் ।
அர்ச்சயேந்மாத₄வீபுஷ்பை: கேஶவம் க₃ருட₃த்₄வஜம் ॥ [3-1-20]

[ஸ்வஸ்திவாசனத்தை முன்னிட்டுக் கொண்டு பிற்பகலில் ஸ்நானம் செய்து க₃ருட₃க்கொடியோனை கேஶவனை மாத₄வீ (குருக்கத்தி) புஷ்பங்களாலே அர்ச்சிக்கவேண்டும்] என்று எம்பெருமானுடைய அர்ச்சனை விதி₄க்கப்பட்டுள்ளது. எட்டாவது வயதில் செய்யவேண்டிய உபநயனத்தின்போது,

ஸ்நாத்வாபரேऽஹ்நி பூர்வாண்ஹே க்ருதஸ்வஸ்த்யயநோ பு₃த₄:।
விஷ்ணும் ஸம்பூஜயேத்₃தே₃வம் கரவீரை: ஸுக₃ந்தி₄பி₄: ॥
[3-38, 39]

[முற்பகலில் ஸ்வஸ்திவாசனம்செய்து, பிற்பகலில் ஸ்நானம்செய்து மணம்மிக்க கரவீர(அலரிப்)புஷ்பங்களாலே தே₃வனை விஷ்ணுவைப் பூஜிக்கவேண்டும்] என்று விஷ்ணுபூஜை விதி₄க்கப்பட்டுள்ளது. அடுத்த படியாகப் புண்ட்₃ரதா₄ரண விதி₄யை விளக்கும்போது,

ம்ருதா₃ ஶுப்₄ரேண ச ததா₂ ஊர்த்₄வபுண்ட்₃ரஞ்ச தா₄ரயேத் ।
நாமபி₄: கேஶவாத்₃யைஶ்ச யதா₂ஸங்க்₂யம் த்₃விஜோத்தமா: ॥
ஊர்த்₄வபுண்ட்₃ரம் ருஜும் ஸௌம்யம் ஸுபார்ஶ்வம்
ஸுமநோஹரம் ।
மத்₄யே சி₂த்₃ரேண ஸம்யுக்தம் ஸ்ரீபதா₃க்ருதிகம் ஹரே: ॥
லலாடே கேஶவம் த்₄யாயேந்நாராயணமதோ₂த₃ரே ।
வக்ஷ:ஸ்த₂லே மாத₄வஞ்ச கோ₃விந்த₃ம் கண்ட₂கே ததா₂ ॥
விஷ்ணுஞ்ச த₃க்ஷிணே குக்ஷௌ பா₃ஹுகே மது₄ஸூத₃நம் ॥
த்ரிவிக்ரமம் கந்த₄ரே து வாமகுக்ஷௌ து வாமநம் ॥

http://acharya.org

ஶ்ரீத₄ரம் ப₃ாஹு"கே வாமே ஹ்ருஷீகேஶம் து வை பு₄ஜே ।
க்₃ரீவாயாம் பத்₃மநாப₄ஞ்ச ப்ருஷ்டே₂ தா₃மோத₃ரம் தத₂ா ॥
தத்ப்ரக்ஷாளநதோயேந வாஸு"தே₃வேதி மூர்த்த₄நி ।
ஸாந்தராலோர்த்₄வபுண்ட்₃ரஸ்ய மத்₄யே ஶ்ரீவிஷ்ணுத₄ாமநி ॥
ஹரித்₃ராஸார ஸம்பூ₄தாம் தாம் நர: த₄ாரயேச்ச்₂ரியம் ।
[3-49...55]

[அந்தணர் தலைவர்களே! வெள்ளை மண்ணாலே கேஶவன் முதலான பன்னிரு நாமங்களாலே பன்னிரண்டு ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை த₄ரிக்கச் செய்யவேண்டும். (வளைவில்லாமல்)நேரானதாய், அழகியதாய், அழகிய பக்கங்களை உடையதாய், நெஞ்சை மிகவும் ஈர்ப்பதாய், நடுவில் இடைவெளியுள்ளதாய், எம்பெருமானுடைய திருவடிகள் போன்ற அமைப்புள்ளதாய் ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை அணியவேண்டும். நெற்றியில் கேஶவனையும், வயிற்றில் நாராயணனையும், மார்பில் மாத₄வனையும், கழுத்தில் கோ₃விந்த₃னையும், வயிற்றின் வலதுபுறம் விஷ்ணுவையும், வலது பு₄ஜத்தில் மது₄ஸூத₃னனையும், வலது (தோளும் கழுத்தும் சேரும் இடமான) கந்த₄ரத்தில் திரிவிக்ரமனையும், வயிற்றின் இடது புறம் வாமனனையும், இடது பு₄ஜத்தில் ஶ்ரீத₄ரனையும், இடது தோளும் கழுத்தும் சேருமிடத்தில் ஹ்ருஷீகேஶனையும், பத்₃மநாப₄னை முதுகின் கீழ்ப்புறமும், தா₃மோத₃ரனை முதுகின் மேற்புறமும் தியானித்து,பன்னிரண்டு ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை அணியவேண்டும். எஞ்சிய திருமண்ணை அலம்பி, அந்நீரை வாஸு"தே₃வனைத் தியானித்துத் தலையில் சேர்த்துக்கொள்ளவேண்டும். இடைவெளியோடு கூடிய ஊர்த்₄வபுண்ட்₃ரத்தின் நடுவே விஷ்ணுபாத₃ஸ்த₂ானத்தின் இடையில் ஹரித்₃ரா(மஞ்சள்)ஸாரத்தால் செய்யப்பட்ட ஶ்ரீசூர்ணத்தால் ஶ்ரீதே₃வியைச் சேதனன் த₄ரிக்கவேண்டும்.] என்று கேஶவன் முதலான பன்னிரு மூர்த்திகளின் திருநாமத்தில் அமைந்த பன்னிரு திருமண்காப்புக்களையும அணியும் முறை தெளிவாக விளக்கப்பட்டது. அடுத்தபடியாக,

ஸாவித்ரீம் வித்புத்ரௌ(?) மூலமந்த்ரேண ஸம்ஸ்மரேத் ।
நாராயணம் ஜக₃ந்நாத₂ம் ஸ்வகு₃ரும் மநஸா ஸ்மரந் ॥
ஆதி₃த்ய மண்ட₃லாந்தஸ்த₂ம் த்₄யாத்வா விஷ்ணும் ஸநாதநம் ।
ஜபேத்₃வா ப்ரணமேச்சைவ ஹம்ஸ: ஶு"சிஷதி₃த்ய்ருசா ॥
ப்₂ருயாந்மந்த்ராதி₃கம் பஶ்சாத் ஶேஷம் கர்ம ஸமாசரேத் ॥
[3-60...62]

[தனது ஆசார்யனை மனத்தால் நினைத்துக்கொண்டு, லோகநாத₂னாய், பழையோனாய், விஷ்ணுவெனப்படும் நாராயணனை ஆதி₃த்யமண்ட₃

http://acharya.org

லத்தின் உள்ளிருப்பவனாகத் தியானித்து, காயத்ரியைத் திருவஷ்டாக்ஷரத்தோடு நினைத்துக்கொண்டு "ஹம்ஸ: ஶுசிஷத்" என்னும் மந்திரத்தால் ஜபித்து வணங்கவேண்டும். அதற்குப்பின் திருமந்திரம் முதலானவற்றை உபதேஶித்து, எஞ்சிய ஹோமகர்மத்தைச் செய்ய வேண்டும்.] என்று ஸூர்யமண்டலத்திலிருக்கும் நாராயணனை நினைத்துக்கொண்டு மூலமந்த்ரமான திருவஷ்டாக்ஷரத்தோடு காயத்ரியை நினைக்கவேண்டும் என்று விதிக்கப்பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது. அடுத்து ஸ்நானத்தை வர்ணிக்கும்போது,

மந்த்ரத்₃வயேநாபி₄மந்த்ர்ய தஸ்மிந் த்₄யாயேத் ஸநாதநம் |
அநந்தபோ₄க₃பர்யங்கே ஶயாநம் ரமயா ஸஹ ||
த்₄யாத்வா நிமஜ்ஜ்ய தே₃வேஶம் த்ரி:படே₂த₃க₄மர்ஷணம் |
ததை₂வ மந்த்ரரத்நேந தர்ப்பயேத₃ப்ஸு நிமஜ்ஜ்ய ச||[3-103,104]

[த்₃வயமந்திரத்தினால் நீரை அபி₄மந்த்ரணம் செய்து, அதில் திருவநந்தாழ்வானை படுக்கையில் ஸ்ரீதே₃வியோடு பள்ளிகொண்டிருப்பவனைப், பழையோனான தே₃வர் தலைவனைத் தியானித்து, நீரில் மூழ்கி அக₄மர்ஷண மந்திரங்களை மூன்றுமுறை படி₂க்கவேண்டும். நீராடியபின் த்₃வயமந்திரத்தினால் தர்ப்பணம் செய்யவேண்டும்.] என்று க்ஷீராப்₃தி₄நாத₂னைத் தியானித்து, த்₃வயமந்திரத்தினால் தர்ப்பணம் செய்யவேண்டும் என்று விதி₄த்திருப்பதிலிருந்து அந்தணன் எல்லாக்கர்மங்களையும் ப₄க₃வத்ஸ்மரணத்தோடே செய்யவேண்டும் என விளங்குகிறது. அடுத்தபடி ஸந்த்₄யாவந்த₃னத்தை விளக்கும்போது,

"ஆபோஹிஷ்டே₂தி மந்த்ரேண மார்ஜயேத்து த்₃வயேந ச"[112]
"ஸூர்யஶ்ச மேதி மந்த்ரேண...மந்த்ரரத்நேந ஸம்ப்ராஶ்ய"
[113]

என்று "ஆபோஹிஷ்டா₂" என்னும் மந்திரத்தினாலும் த்₃வயத்தினாலும் மார்ஜனத்தையும், "ஸூர்யஶ்ச மா" என்னும் மந்திரத்தினாலும் த்₃வயத்தினாலும் ஜலப்ராஶனத்தையும் விதி₄த்து, ஆதி₃த்ய மண்ட₃லத்தின் நடுவிலிருக்கும் நாராயணனைத் தியானிக்கும்படி மூன்று ஶ்லோகங்களால் விதி₄க்கப்படுகிறது.

ஆதி₃த்யமண்ட₃லாந்தஸ்ஸ்த₂ம் த்₄யாத்வா விஷ்ணும் ஸநாதநம்|
ஶுத்₃த₄ஸ்ப₂டிகவர்ணாப₄ம் கோமளாங்க₃யுதை₄ர்யுதம் ||
ஸுஸ்நிக்₃த₄ நீலகேஶாந்தம் ரத்நகுண்ட₃லஶோபி₄தம் |
பத்₃மாஸநஸ்த₂ம் தே₃வேஶம் முக்தாதா₃ம விபூ₄ஷிதம் ||
ஶுக்லமால்யாம்ப₃ரத₄ரம் ஶுக்லக₃ந்தா₄நுலேபநம் |
வாமாங்கே ச ஶ்ரியா யுக்தம் த்₄யாத்வா மந்த்ரம் ஜபேத் பு₃த₄: ||
[3-115...117]

http://acharya.org

[ஆதி₃த்யமண்ட₃லத்தின் நடுவிலிருப்பவனும், பழையோனும், வேறு நிறம் கலக்காத ஸ்ப₂டிகவர்ணத்தையுடையவனும், அழகிய அவய வங்களோடும், ஆயுத₄ங்களோடும் கூடியவனும், மிகவும் மழுமழுப் போடு இருக்கும் கறுத்த திருக்குழற்கற்றையுடையவனும், ரத்ன குண்ட₃லங்களோடு விளங்காநிற்பவனும், பத்₃மாஸனத்தில் எழுந் தருளியிருப்பவனும், தே₃வர் தலைவனும், முத்துமாலைகளால் அலங் கரிக்கப்பெற்றவனும், வெள்ளைமாலையையும் வஸ்த்ரத்தையும் அணிந் திருப்பவனும், வெளுத்த சந்தனத்தைப் பூசிக்கொண்டிருப்பவனும், இடதுமடியில் ஸ்ரீதே₃வியோடு கூடியவனுன விஷ்ணுவைத் தியானித்து, அறிவாளியாயிருப்பவன் மந்த்ரத்தை ஜபம் செய்யவேண்டியது.]

ப்₃ரஹ்மசாரி பி₄க்ஷை எடுப்பதைப்பற்றி அடுத்தபடியாகப் பேசும்போது,

"வைஷ்ணவேஷு ச மந்த்ரேஷு பி₄க்ஷாசரணமாசரேத் |
ந பை₄க்ஷம் ம்லேச்ச₂ லப்₃தே₄ து தண்டு₃லாநிதரேஷு வா ||
ஆபத்₃யபி ந க்₃ருஹ்ணீத பாஷண்ட₃பதிதாதி₃ஷு ||"
[3-119, 120]

[ப்₃ரஹ்மசாரியானவன் வைஷ்ணவ மந்த்ரங்களை உச்சரித்துக் கொண்டு பி₄க்ஷை எடுக்கவேண்டும். மிலேச்ச₂னிடமிருந்து கிடைத்த பொருளையும், பாஷண்ட₃ர், பதிதர் முதலானவர்களிடமிருந்து கிடைத்த அரிசியையும் ஆபத்துக்காலமாகிலும் பி₄க்ஷையெடுக்கக் கூடாது] என்று வைஷ்ணவ மந்திரங்களைக்கொண்டு பி₄க்ஷை யெடுக்கவேண்டுமென்றும், பாஷண்டி₃களின் பொருளை பி₄க்ஷை யெடுக்கக்கூடாது என்றும் விதி₄த்திருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

ஸத்யம் த்வர்த்தேந பரிஷிஞ்சாமீதிஹ ப்ரத₃க்ஷிணம் |
பரிஷிச்ய த்வநேநைவ ஹ்யர்ப்பிதம் வைஷ்ணவேஷு ச ||
பஞ்சப்ராணும்ஶ்ச ஜுஹுயாத் பஞ்சைவா஽஽ஹுதய: க்ரமாத் ||
த்₄யாயந்நாராயணம் தே₃வம் ததோ பு₄ஞ்ஜீத வாக்₃யத: |
[3-122, 123]

['ஸத்யம் த்வர்த்தேந பரிஷிஞ்சாமி' என்னும் மந்திரத்தைக்கொண்டு வைஷ்ணவர்களுக்கு அளித்து மிகுந்திருக்கும் அன்னத்தை வலமாகப் பரிஷேசனம்செய்து, ஐந்து ப்ராணுஹுதிகளையும் முறைப்படி செய்ய வேண்டும். நாராயணனுகிற தே₃வனைத் தியானித்துக்கொண்டு

வி—91

http://acharya.org

மௌனத்தோடு போ₄ஜனம் செய்யவேண்டும்.] என்று வைஷ்ணவ வேஷமே உண்ணத்தக்கது என்றும். அதுவும் நாராயணனைத் தியானித்துக்கொண்டே உண்ணத்தக்கது என்றும் கூறியிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

அடுத்தபடி 130-வது ஶ்லோகத்தில் ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை த₄ரித்துகொண்டு ஸந்த்₄யாவந்த₃னம் செய்யவேண்டும் என்று விதி₄க்கப்பட்டது. பிறகு அர்க்₄யப்ரதா₃னத்தை விதி₄க்கும்போது,

உத்தா₂ய மண்ட₃லே த்₄யாத்வா வாஸுதே₃வம் ஸநாதநம் ||
நீலோத்பலத₃ளஶ்யாமம் ரக்தாம்போ₄ருஹலோசநம் |
ஶங்க₂ாஸி ஶார்ங்க₃ாப்₃ஜத₄ரம் பீதவஸ்த்ரம் சதுர்பு₄ஜம் ||
பத்₃மநாப₄ம் ஶ்ரியா யுக்தம் த்₄யாயேத் ஸவித்ருமண்ட₃லே |
த₃த்₃யாத₃ர்க்₄யத்ரயம் தஸ்மை க₃ாயத்ர்யா விநயாந்வித: ||
ஆஸீநஶ்ச ஜபம் குர்யாத் ஸ்வல்பமஷ்டோத்தரம் ஶதம் |
ததா₂ மந்த்ரத்₃வயம் ஜப்த்வா.................... [3-132...135]

[எழுந்துநின்று பழையோனாய், நீலோத்பல இதழ்போல் கருநிற முடையவனாய், செந்தாமரை போன்ற கண்ணையுடையவனாய், ஶங்க₂ம், வாள், வில், தாமரை ஆகியவற்றை த₄ரித்திருப்பவனாய், பீதாம்ப₃ரம் அணிந்தவனாய், நான்கு திருக்கைகளோடு கூடியவனாய், தாமரை உந்தியையுடையவனாய், ஸ்ரீதே₃வியோடு கூடினவனான வாஸுதே₃வனை ஸூர்யமண்ட₃லத்தில் தியானிக்கவேண்டும். கா₃யத்ரியை உச்சரித்துக்கொண்டு அடக்கத்தோடு கூடினவனாய், அந்த எம்பெருமானுக்கு மூன்று அர்க்₄யங்களை ஸமர்ப்பிக்கவேண்டும். வீற்றிருந்து குறைந்த பக்ஷம் 108முறை கா₃யத்ரியை ஜபிக்கவேண்டும். அப்படியே த்₃வயமந்த்ரத்தையும் ஜபித்து......] என்று ஸூர்யமண்ட₃லத்தில் வாஸுதே₃வனைத் தியானிக்கவேண்டுமென்றும், த்₃வயத்தை ஜபிக்கவேண்டுமென்றும் விதி₄த்திருப்பது காணத்தக்கது.

மேலே இவ்வத்தியாயத்தில் அடிக்கடி நாராயண தியானமும், அவனுடைய மந்த்ர ஜபங்களும விதி₄க்கப்பட்டிருப்பதைப் பின்வரும் ஶ்லோகங்களில் காணலாம்.

அர்ச்சயித்வா ஶுசௌ தே₃ஶே ஹரிம் ஸர்வக₃தம் ததா₂ ||
பரித: பூஜயேத்₃தே₃வாந் ருஷீம்ஶ்ச குஸுமாக்ஷதை: |......
அஷ்டோத்தரஸஹஸ்ரம் து ஜபேத₃ஷ்டாக்ஷரம் மநும் ||......

http://acharya.org

மண்ட₃லாப்₄யாம் ச ருக்₃ப்₄யாம் ச ஸூக்தைர் விஷ்ணு
ப்ரகாஶகை: ।
தத: ஸ்விஷ்டக்ருதம் ஹுத்வா ஹோமஶேஷம் ஸமாபயேத் ॥...
ப்ராக₃க்₃ரேஷு குஶேஷ்வேவமாஸீந: புரதோ ஹரே: ॥
வேதா₃நத்₄யாபயேத் தத்ர ஸாங்கோ₃பாங்க₃ஸமந்விதாந் ॥...
ஸ்நாத்வா விஷ்ணும் ஸமப்₄யர்ச்ய தர்ப்பயேத் பித்ருதே₃வதா:।...
அத்₄யாபயேத் தத: ஶிஷ்யாந் வித்₃யாமாரண்யகீம் கு₃ரு: ।
புரதோ வாஸுதே₃வஸ்ய நிர்ஜநே விஜநே ஸ்தி₂த: ॥

[எங்கும் நிறைந்தவனை ஹரியை ஶுத்₃த₄மான தே₃ஶத்தில் அர்ச்சனம் செய்து, அவனைச் சுற்றிலும் தே₃வர்களையும், முனிவர்களையும், பூக்களாலும் அக்ஷதையாலும் அர்ச்சிக்கவேண்டியது......அஷ்டாக்ஷர மந்திரத்தை 1008 தடவை ஜபிக்கவேண்டும்...ருக்₃வேத₃ மந்த்ரங்களாலும், மண்ட₃லங்களாலும், விஷ்ணுவைச் சொல்லும் ஸூக்தங்களாலும் ஹோமம் செய்து, ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்து, ஹோமத்தை நிறைவடைவிக்கவேண்டியது. இவ்வண்ணமாக ஹரியின் முன்னால் கிழக்கு நுனியான குஶங்களிலே வீற்றிருந்து அங்க₃ங்களோடும், உபாங்க₃ங்களோடும் கூடிய வேத₃ங்களை அத்₄யயனம் செய்விக்கவேண்டும்.... ஸ்நானம் செய்து, விஷ்ணுவை அர்ச்சனம்செய்து, பித்ருதே₃வதைகளுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும்......வாஸுதே₃வனுக்கு முன்னால் மனிதர்களில்லாத காடுகளில் இருந்துகொண்டு ஆரண்யகங்களை ஆசார்யனானவன் ஶிஷ்யர்களுக்கு அத்₄யயனம் செய்விக்கவேண்டும்.]
இவ்வத்தியாயத்தின் கடைசியில்,

"பூர்வேஷு ஸர்வதீர்த்தே₂ஷு ஸம்யக்₃விஷ்ணும் ஸமர்ச்சயேத்" என்று தீர்த்த₂ங்களில் விஷ்ணுவின் அர்ச்சனத்தை விதி₄த்து,

"விஷ்ண்வாலயே வஸேத்₃வாபி ஶயீத நியதேந்த்₃ரிய: ।
நாலபேத்₃விஷ்ண்வப₄க்தைர் ந க்வாபி தைஸ்ஸஹ
ஸஞ்சரேத் ॥" [3-198]

[விஷ்ணுவின் ஆலயத்திலாவது வஸிக்கவேண்டும். புலனடக்கத்தோடு அங்கேயே படுக்கவேண்டும். விஷ்ணு ப₄க்தர்களல்லாதவர்களோடு பேசவும் கூடாது. அவர்களோடு எங்கும் ஸஞ்சரிக்கவும் கூடாது.] என்று எம்பெருமான் கோவிலிலேயே வாழவேண்டுமென்றும், அவன் அடியார்களல்லாதவர்களோடு ஸஹவாஸம் கூடாது என்றும் கூறியிருப்பதும் காணத்தக்கது.

இனி அடுத்ததான க்₃ருஹஸ்த₂ த₄ர்மத்தை விவரிக்கும் நாலாவது அத்தியாயத்தில், ப₄க₃வத் பரமான ஶ்லோகங்களைக் காண்போம்.

http://acharya.org

நைஷ்டிகேந வ்ரதேநாபி யாவஜ்ஜீவம் ஸமாசரேத் ।
வஸேதாசார்யஸங்காஶே விஷ்ணோர்வா வைஷ்ணவேஷு வா ॥
அதவா பரிசர்யாயாம் விஷ்ணோர்தேவஸ்ய ஶார்ங்கிண: ।
வைஷ்ணவாசார வ்ருத்தயர்த்தமுத்வஹேதுத்தமாம்
ஸ்த்ரியம் ।
பூஜயேத் தேவதேவேஶம் பங்கஜை: குஸுமை: ஶுபை: ॥
அர்ச்சயேத்ரமயா ஸார்த்தம் திவ்யகந்தைர் மநோஹரை: ।
பாயஸம் ஶர்க்கராஜ்யாதி ப்ரபூதபலஸம்யுதம் ॥
ஸுஶீதலம் பாநகம் ச கர்ப்பூரேண ஸுவாஸிதம் ।
ஸபூகநாகபத்ராதி தாம்பூலஞ்ச ஸமர்ப்பயேத் ॥
பஶ்சாந்நீராஜநம் க்ருத்வா ஸர்வம் வஸ்து நிவேதயேத் ।
பஶ்சாத்புஷ்பாஞ்ஜலிம் தத்யாந்நமஸ்க்ருத்ய ச ஶார்ங்கிணம் ॥
ஸ்ரீகேஶவ ஜகந்நாத உபயோ: பாதபாக்ரயோ: ।
அநயா ஸஹ ஸர்வத்ர பரிசர்யா ஸதாऽஸ்து மே ॥
ஏவம் ஸம்ப்ரார்த்ய தேவேஶம் பஶ்சாத் கர்ம ஸமாசரேத் ॥...
கந்யாமுதகபூர்வாம் ச தத்யாத் கந்யாப்ரதாயக: ॥
வரம் லக்ஷணஸம்யுக்தம் விஷ்ணுரூபமநுஸ்மரந் ।...
அர்ச்சயேத்தம் ஶ்ரியா யுக்தம் புராணம் புருஷோத்தமம் ॥...
ப்ரவிஶ்ய ஸ்வக்ருஹே ரம்யே தஸ்மிந் ஸம்பூஜயேத்தரிம் ॥
விதாநாதி ஸுஶோபாட்யம் மண்டபே ஸுமநோஹரே ।
பூஜயேத் புஷ்பஶய்யாயாம் ஶ்ரியா ஸார்த்தம் ஸநாதநம் ॥...
ஹரிம் ஸம்பூஜயேத் தத்ர பக்த்யா ஸம்யக்விதாநத: ।...
சதுர்த்தே மாஸி கர்ப்பஸ்தம் ஸீமந்தோந்நயநம் சரேத் ।
ஷஷ்டேऽஷ்டமே வா குர்வீத ஶுக்லபக்ஷே ஶுபே திநே ॥
நாந்தீஶ்ராத்தம் து பூர்வாண்ஹே குர்வீத பித்ருதேவதா: ।
ஸ்நாத்வாऽபராண்ஹே குர்வீத ஸ்வஸ்திவாசநபூர்வகம் ॥
ஸுபுஷ்ப மண்டபே ரம்யே விதாநத்வஜ ஶோபிதே ।
பூஜயேத்விதிவத்விஷ்ணும் ஸுகந்தகுஸுமை: ஶுபை: ॥
வஸ்த்ராலங்காரபூஷாத்யை: தூபதீபநிவேதநை: ।
பலைஶ்ச பக்ஷ்யபேயாஜ்யைஶ்ச விவிதைஸ்த்விஷ்டகாரிதை: ॥
நாநாபக்ஷை: ஸுஹ்ருத்யைஶ்ச பூஜயேத்திதபூர்வகம் ।
தௌ தம்பதீ நமஸ்க்ருத்ய லக்ஷ்ம்யா யுக்தம் ஸநாதநம் ॥...
நாமபி: கீர்த்தநைர் திவ்யை: தேவதேவம் ஜநார்த்தநம் ।

http://acharya.org

[நைஷ்டிக ப்ரஹ்மசர்ய வ்ரதத்தையாவது ஆயுள் உள்ளவரையில் அநுஷ்டிக்கலாம். அப்போது ஆசார்யனுடைய ஸந்நிதியிலோ, விஷ்ணுவின் ஆலயத்திலோ, வைஷ்ணவர்களின் திருமாளிகைகளிலோ வஸிக்கவேண்டும். இப்படியிருக்க இயலாவிடில், சார்ங்கமென்னும் வில்லாண்ட தேவனாகிற விஷ்ணுவுக்குத் திருவாராதனம் செய்வதற்காகவும், வைஷ்ணவாசாரம் வளர்வதற்காகவும் நற்குடிப் பிறப்பு, ஒழுக்கம் முதலானவற்றோடு கூடிய சிறந்த ஸ்த்ரீயை விவாஹம் செய்து கொள்ளலாம்.......தேவதேவர்களுக்கும் தலைவனை எம்பெருமானைப் பெரியபிராட்டியாரோடு கூட நறுமணம்மிக்க அழகிய மங்களமான தாமரைப் புஷ்பங்களாலே அர்ச்சிக்கவேண்டும். ஏராளமான பழங்களோடு கூடிய சர்க்கரை, நெய், பாயஸம் முதலானவற்றையும், குளிர்ந்த பானகத்தையும், பச்சைக் கற்பூரத்தால் மணமூட்டப்பட்ட பாக்கு முதலானவற்றோடு கூடிய வெற்றிலையாகிற தாம்பூலத்தையும் ஸமர்ப்பிக்கவேண்டும். பிறகு ஆரத்தி எடுத்து அனைத்தையும் ஸமர்ப்பிக்கவேண்டும். அதற்குப்பிறகு சார்ங்கத்தையுடைய தேவனை வணங்கி, புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கவேண்டும். ''ஸ்ரீகேசவனே! ஜகந்நாதனே! உன் இரு திருவடி நிலைகளில் இத்தப் பத்னியோடு கூட எல்லா தேசங்களிலும், எல்லாக் காலங்களிலும் எனக்குக் கைங்கர்யங்கள் ஏற்படட்டும்'' என்று தேவர் தலைவனைப் ப்ரார்த்தித்து அதற்குப்பின் கர்மத்தைத் தொடங்கவேண்டும்....... தன் பெண்ணை விவாஹம் செய்துகொடுப்பவன் லக்ஷணங்களோடு கூடிய மாப்பிள்ளையை விஷ்ணுரூபமாகத் தியானித்துக்கொண்டு, பெண்ணை நீராலே தாரைவார்த்துக் கொடுக்கவேண்டும்....ஸ்ரீதேவியோடு கூடிய புராணபுருஷனை புருஷோத்தமனை அர்ச்சிக்கவேண்டும். அழகான தன் வீட்டில் நுழைந்து, அதில் ஹரிக்குத் திருவாராதனம் செய்யவேண்டும். மேற்கட்டி முதலான மங்களத் திரவியங்கள் நிறைந்த அழகிய ஸ்தானத்தில், பூம்படுக்கையில் ஸ்ரீ தேவியோடு கூடிய புராணபுருஷனை எம்பெருமானை ஆராதிக்கவேண்டும்... முறைப்படி ஹரியை பக்தியோடு அங்கு நன்கு ஆராதிக்கவேண்டும்.......கர்ப்பத்திலுள்ள குழந்தைக்கு நாலாவது மாதத்தில் ஸீமந்தோந்நயனம் என்னும் கர்மத்தைச் செய்யவேண்டும். ஆறாவது அல்லது எட்டாவது மாதத்திலும் சுக்லபக்ஷத்தில் நல்ல தினத்தில் செய்யலாம். முந்தின தினம் முற்பகலில் பித்ருதேவதைகளைக்குறித்து நாந்தீச்ராத்தம் செய்யவேண்டும். பிற்பகலில் ஸ்நானம் செய்து, ஸ்வஸ்திவாசனத்தை முன்னிட்டுக்கொண்டு (திருவாராதனம்) செய்யவேண்டும். மேற்கட்டி, கொடி முதலானவற்றால் அலங்கரிக்கப்பட்ட அழகிய புஷ்பமண்டபத்தில் நறுமணம்மிக்க மங்களமான புஷ்பங்க

http://acharya.org

ளாலே வஸ்த்ரம், அலங்காரம், ஆபரணங்கள், தூபம், தீபம், நிவே தனம் முதலானவற்றை ஸமர்ப்பித்து முறைப்படி விஷ்ணுவைப்பூஜிக்க வேண்டும். பழங்களாலும், வேண்டியவர்களால் செய்விக்கப்பட்ட வித விதமான பக்ஷணங்களாலும், அன்னங்களாலும், பலவிதமான அழகிய பொருள்களாலும் ஹிதத்தின் பொருட்டு எம்பெருமானுக்கு ஆராதனம் செய்யவேண்டும். லக்ஷ்மியோடு கூடிய புராணபுருஷனை அந்த திவ்ய தம்பதிகளை நமஸ்கரித்து......நாமங்களாலும், திவ்யமான கீர்த்த னங்களாலும் தேவதேவனை ஜநார்த்தனனைத் துதிக்கவேண்டும்.]

இவற்றிலிருந்து க்ருஹஸ்த தர்மங்களைத்திலும் எம்பெருமா னுடைய திருவாராதனம் சேர்ந்திருக்கவேண்டும் என்று விளங்கு கிறது. அடுத்து ஸ்த்ரீதர்மத்தை விளக்கும் ஐந்தாம் அத்தியாயத்தி லும் முக்கியமான ஶ்லோகங்களைக் காட்டி இதை விளக்குவோம்.

ஶ்ரீஶம் நத்வா குரூந்நத்வா பஶ்சாத் கர்ம ஸமாசரேத் ||...
விஷ்ணோர் நிவேதநார்த்தாய பாசயேத்தோதநாதிதத: ||
ஸ்நிக்தம் பத்யம் ததா ஶுத்தம் ஶுப்ரம் ருச்யம் மநோஹரம் |...
த்ரிகாலமர்ச்சயேந்நித்யம் வாஸுதேவம் ஸநாதநம் |
த்யாயந் ஜபந் நமஸ்குர்வந் கீர்த்தயந் நாமபி: ஶுபை: ||
ஏவம் வ்ரதஸமாசாரா நாராயண பராயணா |
ஸாபி பர்த்தாரமுத்த்ருத்ய ப்ரயாதி பரமாம் கதிம் ||

[ஶ்ரிய:பதியை வணங்கி, ஆசார்யர்களை வணங்கி, அதற்குப்பின் கர்மத்தை நடத்தவேண்டும்....விஷ்ணுவுக்குக் கண்டருளப் பண்ணுவ தற்காகவே — அழகியதும், ஆரோக்யத்தையளிக்கக் கூடியதும், ஶுத்தமானதும், வெளுத்ததும், ருசியுடையதும், நெஞ்சை ஈர்ப்பது மான அன்னம் முதலானவற்றைச் சமைக்கவேண்டும்.......ஸநாதன புருஷனை வாஸுதேவனை தினமும் முக்காலமும் அர்ச்சிக்க வேண்டும். அவனையே தியானித்துக்கொண்டும், ஜபித்துக்கொண்டும், நமஸ்கரித்துக்கொண்டும், மங்களமான திருநாமங்களாலே ஸங் கீர்த்தனம் செய்துகொண்டும் இருக்கும் இத்தகைய ஒழுக்கமுடைய வளாய், நாராயணனையே ப்ராப்யப்ராபகமாகக்கொண்டவளான மனைவி தன் கணவனையும் அழைத்துக்கொண்டு மேலான கதிக்குச் செல்கின்றாள்.]

இதிலிருந்து நாராயணனையே எல்லாமாகக் கொண்ட மனைவி யகல் புருஷனுக்கும் பரமபதம் கிடைக்குமென்று விளங்குகிறது.

http://acharya.org

இனி நித்ய நைமித்திகவிதி₄களை விளக்கும் ஆருமத்தியாயத்தில் ப₄க₃வத்பரத்வம் பொலிகின்றதைக் காண்போம்.

ருஷய ஊசு:—

ப₄க₃வந் ப்₃ருஹி தத்த்வேந விஷ்ணோராராத₄நம் பரம் ।
நித்யம் நைமித்திகம் யத்தந்மந்த்ராணாம் ச விதி₄ம் தத₂ா ॥
[6-1]

[ருஷிகள் கேட்டார்கள் — ப₄க₃வானே! விஷ்ணுவுக்கு மேலான ஆராத₄னமாயிருக்கும் நித்யநைமித்திக கர்மங்களையும், மந்த்ரங்களின் விதி₄யையும் உள்ளபடி உரைப்பீர்] என்று ருஷிகளால் கேட்கப்பட்ட வஸிஷ்டஓர்

ஸ்ரீவஸிஷ்ட₂ உவாச—

ஶ்ருணுத்₄வம் ருஷய: ஸர்வே ஹரிபூஜாவிதி₄ம் பரம் ।
நித்யமாராத₄நம் ஆதௌ₃ வக்ஷ்யாமி முநிஸத்தமா: ! ॥
ப்₃ராஹ்மே முஹூர்த்தே சோத்த₂ாய முக₂ம் ப்ரக்ஷாள்ய வாக்₃யத: ।
ஆசம்ய ப்ரயதோ பூ₄த்வா ஜபேத்₃கு₃ருபரம்பராம் ॥
விஷ்ணுஞ்ச மநஸா த்₄யாத்வா ப்ரணம்ய ச புந: புந: ।
யோக₃த்₄யாநவித₄ாநேந த்₄யாயேத்₃விஷ்ணுமதந்த்₃ரித: ॥
[6-2...4]

[வஸிஷ்டஓர் கூறினார் — ருஷிகளே! மேலான ஹரிபூஜையைக் கூறுகிறேன் கேளுங்கள். முனிவர் தலைவர்களே! முதலில் நித்யாராத₄னத்தைச் சொல்லுகிறேன். ப்₃ராஹ்ம முஹூர்த்தத்தில் (விடியற் காலையில்) படுக்கையிலிருந்து எழுந்திருந்து, முகத்தைக் கழுவிக் கொண்டு, மௌனத்தோடு ஆசமனம் செய்து, புலனடக்கம் உடைய வனாய் கு₃ருபரம்பரையை அநுஸந்தி₄க்கவேண்டும். மனத்தினால் விஷ்ணுவைத் தியானித்து, மறுபடியும் மறுபடியும் வணங்கி, யோக₃த்₄யானமுறைப்படி சோம்பலில்லாமல் விஷ்ணுவைத் தியானிக்க வேண்டும்.] என்று விழித்தெழுந்தவுடனேயே எம்பெருமானைத் தியானிக்கவேண்டுமென்று விதி₄த்தார். அதற்குப்பின் எம்பெருமானுடைய திருவாராத₄னத்தைப் பின்வருமாறு விதி₄த்தார்,

தஸ்மிந்நாஸ்தீர்ய பர்யங்கம் ரம்யம் ஶ்லக்ஷ்ணந்தரே ஶுபே₄ ।
விகீர்ய தத்ர புஷ்பாணி ரம்யாணி ஸுரபீ₄ணி ச ॥

http://acharya.org

தஸ்மிந் ஶுபாஸநே தேவமர்ச்சயேத்ரமயா ஸஹ ।
ஸ்வர்ணேந ரஜதேநாபி தாம்ரகாம்ஸ்யாஶ்மதாருபி: ॥
தேவஸ்ய ப்ரதிமாம் குர்யாத் ஸர்வலக்ஷணஸம்யுதாம் ।
பத்மாஸநஸ்தம் தேவேஶம் ஸர்வலக்ஷணஶோபிதம் ॥
சதுர்புஜமுதாராங்கம் ஶங்கசக்ரகதாதரம் ।
சாமீகரஶ்ரியா யுக்தம் ஸர்வாபரணபூஷிதம் ॥
நீலயா ச தரண்யா ச பார்ஶ்வயோருபஶோபிதம் ।
ஏவஞ்ச ப்ரதிமாம் க்ருத்வா தேவம் ஸம்பூஜயேத்தரிம் ॥
ப்ரதிமாயா அபாவே து ஶிலாம் வா ஸம்ப்ரகல்பயேத் ।
ஸாளக்ராமஶிலாயாந்து ஸ்ம்ருத்வா பூர்வோக்தவிக்ரஹம் ॥
க்ருஷ்ணாஜிநே குஶே வாபி கம்பளே வாபி பீடகே ।
உபவிஶ்ய குரும் நத்வா பூஜயேத் ஸுஸமாஹித: ॥
பூஜயித்வா குரும் பூர்வம் பஶ்சாத்தேவம் ஸமர்ச்சயேத் ।
[6-37......44]

[அந்த மங்களமான பீடத்தில் அழகிய விரிப்பை விரித்து, இடை வெளிவிட்டு, அழகிய மணம்மிக்க புஷ்பங்களையிட்டு அழகாக அலங் கரித்து, அந்த மங்களமான ஆஸனத்தில் பிராட்டியோடுகூட எம் பெருமானை அர்ச்சிக்கவேண்டும். எம்பெருமானுடைய அர்ச்சாதிரு மேனியை—பொன் அல்லது வெள்ளி அல்லது தாமிரம் அல்லது பித்தளை அல்லது கல் அல்லது மரம் ஆகிய ஏதாவது ஒன்றைக் கொண்டு, எல்லா லக்ஷணங்களும் பொருந்தியதாக அமைக்க வேண்டும். பத்மாஸனத்திலிருப்பவனும், எல்லா லக்ஷணங்களும் விளங்காநிற்பவனும், நாலு திருக்கரங்களும் உடையவனும், விஶால மான அவயவங்களையுடையவனும், ஶங்கசக்ரகதைகளை தரிப்பவ னும், பொன்னுலான ஸ்ரீதேவியை (திருமார்பில்) உடையவனும், எல்லா ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனும், இருபுறத்தி லும் பூமி நீளாதேவிகளால் விளங்காநிற்பவனுமான தேவர்தலைவனான ஹரியை அர்ச்சாரூபியாகச் செய்து திருவாராதனம் செய்யவேண்டும். அப்படி அர்ச்சைத் திருமேனியில்லாவிடில் ஸாளக்ராமசிலையை வைத்துக் கொள்ளலாம். ஸாளக்ராமசிலையில் முற்கூறிய திருமேனி யுடையவனாக எம்பெருமானைத் தியானித்து, மான்தோல் அல்லது குஶம் அல்லது கம்பளம் அல்லது பீடம் ஆகியவற்றிலொன்றில் உட்கார்ந்துகொண்டு, ஆசார்யனை வணங்கி, ஶாந்தியோடு பூஜை செய்யவேண்டும். முதலில் ஆசார்யனைப் பூஜித்துப் பிறகு எம்பெருமா னுக்குத் திருவாராதனம் செய்யவேண்டும்.]

http://acharya.org

இப்படி எம்பெருமானின் திருவாராத₄னத்தை வர்ணித்தபின்பு ஊர்த்₄வபுண்ட்₃ரவிதி₄ பின்வருமாறு விவரிக்கப்படுகிறது.

ஆசம்ய தா₄ரயேதூ₃ர்த்₄வபுண்ட்₃ரம் ஶாஸ்த்ரவிதா₄நத: ।
நாஸிகாமூலமாரப்₄ய கேஶாந்தம் ஸுப்ரகல்பயேத் ।
த்ர்யங்கு₃லம் தஸ்ய விஸ்தாரஶ்சதுரங்கு₃லமாயத: ॥
ஸாந்தராளம் த்₃விஜ: குர்யாத் பார்ஶ்வாவங்கு₃லமாத்ரகம் ।
தா₄ரயேதூ₃ர்த்₄வபுண்ட்₃ராணி லலாடே சோக்த பூர்வகம் ॥
ஊர்த்₄வபுண்ட்₃ரஸ்ய மத்₄யே து லக்ஷ்மீஸ்தா₂நம் ப்ரகல்பயேத் ।
ஹாரித்₃ரேண ச சூர்ணேந குங்குமேந ஸுக₃ந்தி₄நா ॥
த்₄ருதோர்த்₄வபுண்ட்₃ரதே₃ஹஸ்து ஸபவித்ரகரஸ்ததா₂ ।
ஸோபவீதோ ப₃த்₃த₄ஶிக₂: ஸந்த்₄யாம் பூர்வோக்தவச்சரேத் ॥
ஸ்நாநகர்மண்யஶக்தஸ்து தௌ₄ளதே த்₄ருத்வா ஶுத₂ வாஸஸீ ।
மந்த்ரை: ஸம்மார்ஜயேத₃த்₃பி₄: ஶுசிரப்₃தை₃வதைர்த்₃விஜ: ॥
த்₄யாயந்நாராயணம் தே₃வம் மந்த்ரரத்நேந மார்ஜயேத் ।
அபி₄மந்த்ர்ய ஜலம் ப்ராஶ்ய பஶ்சாதா₃சமநம் சரேத் ॥...
தர்ப்பயேந்மந்த்ரரத்நேந ஶக்த்யா தே₃வம் ஜநார்த்த₃நம் ॥
[6-48...55]

[ஆசமனம்செய்து, ஶாஸ்த்ரவிதி₄ப்படி ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை தா₄ரிக்க வேண்டும். மூக்கில் மூலப்ரதே₃ஶத்திலிருந்து தொடங்கி, நெற்றியில் மயிர் தொடங்குமிடம்வரை அழகாக இடவேண்டும். மூன்று விரற்கடை அகலமும், நான்கு விரற்கடை உயரமும் இருக்கவேண்டும். ஒவ்வொரு பக்கத்திலும் ஒரு விரற்கடையளவுள்ளதாய், (ஓரங்குலம்) இடைவெளியுள்ளதாய் இருபிறப்பாளன் ஊர்த்₄வபுண்ட்₃ரம் இடவேண்டும். இது போல் பன்னிரண்டு ஊர்த்₄வபுண்ட்₃ரங்களை தா₄ரிக்கவேண்டும். நெற்றியில் முன் சொன்ன அளவுள்ளதாக அமைக்கவேண்டும். ஊர்த்₄வபுண்ட்₃ரத்தின் நடுவில் ஹரித்₃ரா எனப்படும் மஞ்சள், நறுமணம் மிக்க குங்குமம் ஆகியவற்றின் பொடியாலே பெரிய பிராட்டியாருக்கு இடமளிக்கவேண்டும். ஊர்த்₄வபுண்ட்₃ரங்களணிந்த தே₃ஹத்தையுடையவனாய், பவித்ரத்தைக் கையில் தா₄ரித்தவனாய், பூணூல் அணிந்தவனாய், ஶிகையை முடித்தவனாய் முற்கூறியபடி ஸந்த்₄யா வந்த₃னம் செய்யவேண்டும். ஸ்நானம் செய்ய ஶக்தியில்லாவிடில் இரு வெள்ளை வஸ்த்ரங்களை தா₄ரித்துக்கொண்டு, ஜலத்தை தே₃வதை

http://acharya.org

யாகக்கொண்ட மந்த்ரங்களாலே ஶுத்₃த₄மான இருபிறப்பாளன் ஜலத்தைக்கொண்டு துடைத்துக்கொள்ளவேண்டும். மந்த்ரஸ்நான மான இதில் ஜலத்தை அபி₄மந்த்ரணம்செய்து பருகி, மந்த்ரரத்னமான த்₃வயத்தால் தே₃வனை நாராயணனைத் தியானித்துக்கொண்டு துடைத்துக்கொள்ளவேண்டும். பிறகு ஆசமனம் செய்யவேண்டும்.... தே₃வனை ஜநார்த்த₃னனுக்கு மந்த்ரரத்னமான த்₃வயத்தைக் கொண்டு இயன்றவரையில் தர்ப்பணம் செய்யவேண்டும்.]

இதிலிருந்து எல்லாக் கர்மங்களிலும் த்₃வயாநுஸந்த₄ானம் விதி₄க்கப்பட்டிருப்பதைக் காண்கிறோம். அடுத்தபடி த்₃வயத்துக்கு ரிஷி ச₂ந்தே₃ா தே₃வதைகளைச் சொல்லி, த்₃வயப்ரதிபாத்₃யனை எம் பெருமானை வர்ணிக்கிறார் வஸிஷ்ட₂ர்.

பஞ்சவிம்ஶாக்ஷரோ மந்த்ர: ப்ரணவேந ஸமந்வித: |
பதை₃ஶ்சைவ ஸமாயுக்தோ மந்த்ரரத்நமிஹோச்யதே ||...
ஶ்ரீமந்நாராயண: ப்ரோக்தோ தே₃வதா ஜக₃தீ₃ஶ்வர: ||
ச₂ந்த₃ஸ்து தே₃வீ கா₃யத்ரீ ப்ரணவோ பீ₃ஜமுச்யதே |
ஶக்தி: ஶ்ரீஶ்சாத்ர விஜ்ஞேயா மந்த்ரரத்நஸ்ய ஸர்வதா₃ ||...
அநந்தே போ₄க₃பர்யங்கே பூ₄ரத்நவிசித்ரிதே ||
தத்ராஸீநம் ஶ்ரியா ஸார்த்த₄ம் நீலதே₃ஹஸமந்விதம் |
ஸூர்யகோடிப்ரதீகாஶம் பீதாம்ப₃ரத₄ரம் ஹரிம் ||
ஸர்வலக்ஷணஸம்பந்நம் ஸர்வாப₄ரணபூ₄ஷிதம் |
பத்₃மாஸநஸ்தி₂தம் தே₃வம் காமலாவண்ய ஶோபி₄தம் ||
ப்ரபு₂ல்லபத்₃மபத்ராப₄லோசநத்₃வயஶோபி₄தம் |
ஶ்லக்ஷ்ணவாஸம் லஸத்₃வக்த்ரம் ஸுப்₄ருயுக₃லதாஞ்சிதம் ||
உத்₃யத்₃தி₃நகராராமகுண்ட₃லாஸ்யவிராஜிதம் |
ஸம்பூர்ணசந்த்₃ரப்ரதிமம் ஸிதவக்த்ரம் ஶுப₄ாநநம் ||
முக்தாத₃ாமலஸஜ்ஜ்யோத்ஸ்நத₃ந்தாவளிவிராஜிதம் |
ஸிம்ஹஸ்கந்த₄ம் ஸுரூபாம்ஸம் வ்ருத்தாயதசதுர்ப்பு₄ஜம் ||
கேயூராங்க₃த₃ஹாராதி₃பூ₄ஷணைருபஶோபி₄தம் |
க்₃ருஹீதஶங்க₂சக்ராப்₄யாமுத்₃ப₃ாஹுப்₄யாம் விராஜிதம் ||
வரத₃ாப₄யயுக்தாப்₄யாமிதராப்₄யாம் விராஜிதம் |
ரத்நநூபுரஶோப₄ாட்₄யம் பத்₃மயுக்₃மவிராஜிதம் ||
வாமாங்கே ஸம்ஸ்தி₂தாம் தே₃வீம் ஸ்மரேத் காஞ்சநஸந்நிப₄ாம்|
ஸர்வலக்ஷணஸம்பந்நாம் ஸர்வாப₄ரணபூ₄ஷிதாம் ||

http://acharya.org

து₃கூலவஸ்த்ரஸம்வீதாம் நீலகுஞ்சிதஶீர்ஷஜாம் ।
ரக்தகுண்டலஸம்யுக்தாம் ஸர்வாவயவஶோபி₄தாம் ॥
தி₃வ்யசந்த₃நலிப்தாங்கா₃ம் தி₃வ்யாயுத₄விராஜிதாம் ।
ஹஸ்தைஶ்சதுர்ப்பி₄: ஸம்யுக்தாம் கேயூராங்க₃த₃பூ₄ஷிதாம் ॥
க்₃ருஹீதபத்₃மயுக₃ளஹஸ்தாப்₄யாம் ஸுவிராஜிதாம் ।
க்₃ருஹீதமாதுலிங்க₃ஞ்ச தாம் ஜாம்பூ₃நத₃கராம் தத₂ா ॥
ஏவம் தே₃வீம் ஸ்மரேந்நித்யம் வாமாங்கே ஸததம் ஹரே: ॥
[6-67...69,72...82]

[இருபத்தைந்து அக்ஷரங்களோடு கூடியதாய் (ஆறு) பத₃ங்கள் கொண்டதாய், ப்ரணவத்தோடு சேர்ந்ததான த்₃வயமந்த்ரமே 'மந்த்ரரத்னம்' என்று கூறப்படுகிறது. லோகநாத₂னான ஸ்ரீமந்நாராயணனே இதற்கு தே₃வதையாகக் கூறப்படுகிறான். கா₃யத்ரீ தே₃வி ச₂ந்த₃ஸ்ஸாகவும், ப்ரணவம் பீ₃ஜமாகவும் சொல்லப்படுகிறது. இந்த மந்த்ரரத்னத்திற்கு எப்போதும் ஸ்ரீதே₃வியே ஶக்தியாக அறியத்தக்கவள்.......படத்திலுள்ள ரத்னங்களால் விசித்திரமாய் விளங்கும் திருவனந்தாழ்வான் மடியில் ஸ்ரீதே₃வியோடு கூட எழுந்தருளியிருப்பவனாய், நீலமான திருமேனியோடு கூடியவனாய், கோடிஸூர்யப்ரகாஶத்தை உடையவனாய், பீதாம்ப₃ரத்தை த₄ரித்தவனாய், ஸர்வலக்ஷணங்களும் நிறைந்தவனாய், எல்லாத் திருவாப₄ரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவனாய், தாமரையாகிற ஆஸனத்தில் எழுந்தருளியிருப்பவனாய், மன்மத₂ன் போன்ற அழகுடையவனாய், மலர்ந்த தாமரையிதழ்போன்ற இரண்டு திருக்கண்களாலே விளங்கப்பெற்றவனாய், அழகிய மேல் வஸ்த்ரத்தோடு கூடியவனாய், விளங்காநிற்கும் திருமுகத்தையுடையவனாய், இரண்டு கொடிபோன்ற புருவங்களாலே அலங்கரிக்கப்பெற்றவனாய், உதயசூரியன்போல் விளங்கும் அழகிய குண்ட₃லங்களோடு கூடியதான திருமுகமண்ட₃லத்தோடு விளங்காநிற்பவனாய், பூர்ணசந்த்₃ரனையொத்தவனாய், ஒளியுள்ள திருப்பவளங்களையும், மங்க₃ளமான திருமுகத்தையும் உடையவனாய், முத்துவடம்போல் ஒளிவீசும் திருப்பற்களாலே பிரகாசிப்பவனாய், சிங்கத்தினுடையதுபோன்ற கழுத்துடையவனாய், அழகிய தோளுடையவனாய், உருண்டு நீண்ட நான்கு திருக்கைகளையுடையவனாய், தோள்வளை, கைவளை, ஹாரம் முதலான ஆப₄ரணங்களால் அலங்கரிக்கப்பெற்றவனாய், ஶங்க₂சக்ரங்களை ஏந்திநிற்கும் இரு திருக்கைகளாலே விளங்காநிற்பவனாய், மற்ற இரு திருக்கைகளாலும் வரத₃முத்₃ரையும், அப₄யமுத்₃ரையும் காட்டி

நிற்பவனாய், ரத்னத்தாலான காற்சிலம்புகளாலே அழகு நிறைந்தவனாய். (திருவடிகளைத் தாங்கும்) இரு தாமரைகளாலே விளங்கா நிற்பவனாய், தே₃வனான ஹரியைத் தியானிக்கவேண்டும். அவனது இடதுமடியில் எழுந்தருளியிருப்பவளாய், பொன்னையொத்தவளாய், பெண்களுக்குள்ள எல்லா லக்ஷணங்களும் கூடியவளாய், எல்லா ஆப₄ரணங்களாலும் அலங்கரிக்கப்பெற்றவளாய், பட்டாடையணிந்தவளாய், கறுத்துச் சுருண்ட திருக்குழற்கற்றைகளையுடையவளாய், சிவந்த குண்ட₃லங்களோடு கூடியவளாய், எல்லா அவயவங்களிலும் அழகு நிறைந்தவளாய், தி₃வ்யசந்த₃னத்தால் பூசப்பெற்றவளாய், தி₃வ்யாயுத₄ங்களால் விளங்காநிற்பவளாய், நாலு திருக்கைகளோடு கூடியவளாய், தோள்வளை கைவளைகளால் அலங்கரிக்கப்பெற்றவளாய், இரு தாமரைகளை ஏந்தியிருக்கும் இரு கைகளாலே விளங்காநிற்பவளாய், மற்ற கைகளால் மாதுளம்பழத்தையும், பொன்னையும் ஏந்தியிருப்பவளான ஸ்ரீதே₃வியை எப்போதும் நினைக்கவேண்டியது)

எம்பெருமானின் திருவாராத₄னவிதி₄யை வர்ணிக்கும் இந்த ஆறும் அத்தியாயத்தில் மேலேயுள்ள ஸாரமானவையாய், ப₄க₃வத் பரத்வத்தை விளக்குவதாயுள்ள சில ஶ்லோகங்களை இனிக் காண்போம்.

நைவேத்₃யம் ஶேஷவிப்ரேப்₄யோ வைஷ்ணவேப்₄ய: ஸமர்ப்ப
ஏவம் ப்ராத: ஸமாராத்₄ய தே₃வம் நாராயணம் ஹரிம்॥ [யேத்।
ப்ராதரௌபாஸநம் குர்யாத் பூர்வோக்த விதி₄நா தத:।
[6-122,123]

[எம்பெருமானுக்கு அமுதுசெய்த ப்ரஸாத₃த்தை அவனடியார்களான வைஷ்ணவ ப்₃ராஹ்மணர்களுக்கு அளிக்கவேண்டியது. இம்மாதிரியாக காலையில் தே₃வனாய் ஹரியான நாராயணனுக்குத் திருவாராத₄னம் செய்து அதற்குப் பின் முற்கூறியபடி காலை ஔபாஸனத்தைச் செய்யவேண்டும்.]

த்₄யாத்வா ஜக₃த்₃கு₃ரும் தத்ர தே₃வேஶம் ஜலஶாயிநம்।
மூலமந்த்ரேணாபி₄மந்த்ர்ய ஶிர:ஸம்மார்ஜநம் சரேத்॥
[6-136,137]

[(ஸ்நானம் செய்வதற்குமுன்) பாற்கடலில் பள்ளிகொண்டவனாய், லோகநாத₂னாய், தே₃வர்தலைவனான எம்பெருமானை அந்த நீரில் தியானித்து மூலமந்த்ரமான திருவஷ்டாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு தலையைத் துவட்டிக்கொள்ளவேண்டும்.]

http://acharya.org

ஆநுஷ்டுப₄ஸ்ய ஸூக்தஸ்ய த்ரிஷ்டுப₄ஸ்ய ச தே₃வதா ।
புருஷோ யோ ஜக₃த்₃பீ₃ஜம் ருஷிர்நாராயண: ஸ்ம்ருத: ॥
[6-151,152]

[அநுஷ்டுப் மந்த்ரங்களும், த்ரிஷ்டுப் மந்த்ரங்களும் நிறைந்த புருஷ ஸூக்தத்திற்கு ஜக₃த்காரணபுருஷனான நாராயணனே ரிஷியாவான்.]

ஏவம் நிவேத்₃ய தே₃வாய த₃த்₃யாத₃ாசமநம் தத: ।
ஸகர்ப்பூரம் ச தாம்பூ₃லம் புஷ்பமால்யம் ஸமர்ப்பயேத் ॥
தீ₃பைர்நீராஜநம் க்ருத்வா ஸ்துத்வா ஸ்துதிபி₄ரேவ ச ।
பூ₄ய ஏவ நம: க்ருத்வா ஶய்யாஞ்ச விநிவேத₃யேத் ॥
மங்க₃ளாஶாஸநம் க்ருத்வா கர்மஶேஷம் ஸமாபயேத் ।
ஹரேர்நைவேத்₃யஶேஷேண பஞ்சயஜ்ஞாந் ஸமர்ப்பயேத் ॥
[6-181...184]

[இவ்வண்ணம் எம்பெருமானுக்கு நிவேத₃னம் செய்து, அதற்குப்பின் ஆசமனத்தை அளிக்கவேண்டும். கர்ப்பூரத்தோடுகூடிய தாம்பூ₃லத்தை யும், புஷ்பமாலையையும் ஸமர்ப்பிக்கவேண்டும். தீ₃பங்களாலே ஆரத்தியெடுத்து, துதிகளாலே துதித்து மறுபடியும் வணங்கி, எம்பெருமானுக்குப் படுக்கையும் ஸமர்ப்பிக்கவேண்டும். அவனுக்கு மங்க₃ளாஶாஸனம் செய்து திருவாராத₄னத்தை நிறைவுபடுத்த வேண்டும். எம்பெருமானுக்கு அமுதுசெய்த ஶேஷப்ரஸாத₃த்தைக் கொண்டு பஞ்சமஹாயஜ்ஞங்களைச் செய்யவேண்டும.]

வஸுப்₄யஶ்சைவ ருத்₃ரேப்₄ய: ஆதி₃த்யேப்₄யஸ்ததை₂வ ச ॥
ஏதாநுத்₃தி₃ஶ்ய ஹோதவ்யமந்நம் விஷ்ணுநிவேதி₃தம் ।
ஸ ஏஷ தே₃வயஜ்ஞஸ்து முநிபி₄: ஸம்ப்ரகீர்த்தித: ॥
[6-187,188]

[விஷ்ணுவுக்கு அமுதுசெய்விக்கப்பெற்ற அன்னத்தை வஸுக்கள், ருத்₃ரர்கள், ஆதி₃த்யர்கள் ஆகிய தே₃வர்களைக் குறித்தும் ஹோமம் செய்யவேண்டும். இதுவே பஞ்சமஹாயஜ்ஞங்களுள் ஒன்றான தே₃வ யஜ்ஞம என்று முனிவர்களால் சொல்லப்படுகிறது]

அதிதி₂ர்யஸ்ய ப₄க்₃நாஶோ க்₃ருஹாத் ப்ரதிநிவர்த்ததே ॥
ஸ தஸ்மை து₃ஷ்க்ருதம் த₃த்வா புண்யமாதா₃ய க₃ச்ச₂தி ।
தஸ்மாத்தத்ராக₃தாந் விப்ராந் பூஜயேத₃விசாரயந் ॥...
தத்ர ஸுஸ்த₂ம் ஹரிம் ஜ்ஞாத்வா பூஜயேத₃விசாரயந் ॥

http://acharya.org

விஶிஷ்டோ வைஷ்ணவோ விப்ரோ க்₃ருஹம் ப்ரத்யாக₃தோ
ப்ரத்யுத்₃க₃ம்ய ப்ரணம்யாஶு பூஜயேத் தம் விதா₄நத: ॥ [யதி₃ ।
[6-192 ...195]

[எவனுடைய வீட்டிலிருந்து அதிதி₂யானவன் விருப்பம் நிறைவேறப் பெருதவனுய், (உண்ணுமல்) திரும்புகிருனே அந்த அதிதி₂ அந்த வீட்டுச் சொந்தக்காரனுக்குத் தன்னுடைய பாபத்தைக்கொடுத்து விட்டு, அவனுடைய புண்யத்தைத் தான் எடுத்துச்செல்கிருன். ஆகையால் வீடு தேடிவந்த அந்தணர்களே, அவர்களைப் பற்றி ஆராய்ச்சி செய்யாமலே ஆராதி₄க்கவேண்டும்.... அவர்களிடத்தில் எம்பெருமானே எழுந்தருளியிருக்கிருன் என்று அறிந்து அவர்களுடைய கோ₃த்ரம், சரணம் முதலானவற்றை ஆராயாமல் ஆராதி₄க்க வேண்டும். சிறந்தவனை வைஷ்ணவ ப்₃ராஹ்மணன் வீடுதேடி வந்தானுகில் அவனை எதிர்கொண்டழைத்து, வணங்கி முறைப்படி பூஜிக்கவேண்டும்.]

பி₄க்ஷாம் த₃த்₃யாத் ப்ரயத்நேந யதயே ப்₃ரஹ்மசாரிணே ।
விஷ்ணவர்ப்பிதம் து பு₄ஞ்ஜீயாத் தீர்த்த₂ப்ராஶநபூர்வகம் ॥
[6-203]

[ஸந்யாஸிக்கும், ப்₃ரஹ்மசாரிக்கும் முயன்று பி₄க்ஷையளிக்க வேண்டும். எம்பெருமானுடைய ஸ்ரீபாத₃தீர்த்த₂த்தைப் பருகி, அவன் அமுதுசெய்த அன்னத்தை உண்ணவேண்டும்.]

த்₃விராசம்ய விதா₄நேந ஸுக₂ாஸீந: ஸ்மரேத்₃த₄ரிம் ॥
இதிஹாஸபுராணுநி ஸ்வாத்₄யாயம் ச படே₂த் தத: ।
அஸ்தம் க₃தே தி₃நகரே ஸந்த்₄யாம் குர்வீத பூர்வவத் ॥
தத: ஸம்பூஜயேத்₃தே₃வம் பூர்வவத் ஸுஸமாஹித: ।
அஷ்டாக்ஷரவிதா₄நேந பூஜயேத்₃த்₃விஜஸத்தம: ॥
அகாரேணேச்யதே விஷ்ணு: ஸ்ரீருகாரேண சோச்யதே ।
மகாரேணேச்யதே ஜீவஸ்தயோர்தா₃ஸ உதா₃ஹ்ருத: ॥
[6-218...221]

[விதி₄ப்படி இரண்டுமுறை ஆசமனம்செய்து ஸுக₂மாக வீற்றிருப்பவனுய் ஹரியை நினைக்கவேண்டும். இதிஹாஸ புராணங்களையும், வேத₃ங்களையும் அதற்குப்பின் படிக்கவேண்டும். ஸூர்யன் அஸ்தமிக்கும்போது முன்போலே ஸந்த்₄யாவந்த₃னம் செய்யவேண்டும். அதற்குப்பின் முன்போல் மனஶ்ஶாந்தியுடனிருந்து எம்பெருமானுக்குத் திருவாராத₄னம் செய்யவேண்டும். அந்தணர் தலைவனுயிருப்பவன்

http://acharya.org

அஷ்டாக்ஷரவிதி₄ப்படி எம்பெருமானுக்குத் திருவாராத₄னம் செய்ய வேண்டும். அகாரத்தினால் விஷ்ணு சொல்லப்படுகிறார். உகாரத்தினால் ஸ்ரீதே₃வி சொல்லப்படுகிறாள். மகாரத்தினால் ஜீவன் சொல்லப்படுகிறான். இவ்வண்ணமாகப் பெருமாளுக்கும் பிராட்டிக்கும் ஜீவன் தா₃ஸனாயிருப்பவன் என்று ப்ரணவத்தில் சொல்லப்படுகிறது]

அத₂ நைமித்திகம் வக்ஷ்யே ஹரேராராத₄நம் த்₃விஜா: ।
மந்த₃வாரே து ஸாயாஹ்நே (ஸாயாஹ்நம்) விதி₄வத் பூஜயேத் [ஹரிம் ॥
க₃ந்த₄புஷ்பாதி₃பி₄ர்தே₃வம் தூ₄பதீ₃பநிவேத₃நை:।
ப₃லிபி₄ஶ்ச ப₄க்ஷ்யபே₄ஜ்யைஶ்ச கீ₃தவாதி₃த்ரநர்த்தநை: ॥
அர்ச்சயேத₃ச்யுதம் ப₄க்த்யா யதா₂வித்தாநுஸாரத: ।
ஏகாத₃ஶ்யாமுபவஸேத் பக்ஷயோருப₄யோரபி ॥
அர்ச்சயேஜ்ஜக₃தாமீஶம் பூஜாஜாக₃ரணாதி₃பி₄: ।
ப்ரபா₄தே விமலே ஸ்நாத்வா த்₃வாத₃ஶ்யாம் புருஷோத்தமம்॥
அர்ச்சயேந்மாலதீபுஷ்பை: பய:ஸ்நாநம் ஸமர்ப்பயேத் ।
ப்₃ராஹ்மணாந் போ₄ஜயேத்₃ப₄க்த்யா ஸ்வயம் குர்வீத பாரணம்॥
வைஷ்ணவர்க்ஷே து பூர்வாஹ்ணே பூஜயேத் ஸர்வதா₃ த்₃விஜ:।
ஸேவந்திகுஸுமைர்தி₃வ்யைர் தூ₄பதீ₃பைர் மநோஹரை: ॥
நிவேத₃யேச்ச த₃த்₄யந்நம் பாநம் ச ஶர்க்கராயுதம் ।
மத்₄யாந்ஹே பௌர்ணமாஸ்யாம் வா புந்நாகை₃ஶ் சம்பகைரபி ॥
பூஜயேத₃ச்யுதம் ப₄க்த்யா ஶுத்₃த₄ந்நம் விநிவேத₃யேத் ।
ராத்ரௌ ஸம்பூஜயேத் தஸ்யாம் மல்லிகா குஸுமை: ஶுபை₄:॥
நிவேத₃யேத்₃ரௌப்யபாத்ரே பாயஸம் ஶர்க்கராந்விதம் ।
அமாயாந்து விஶேஷேண மாஸி மாஸி ப்ரபூஜயேத் ॥
பூஜயேத் குஸுமை: குந்தை₃: கரவீரை: ஸபாடலை: ।
பிண்ட₃யஜ்ஞவிதா₄நேந அர்க்₄யாவாஹநபூர்வகம் ॥
போ₄ஜயேத்₃ப்₃ராஹ்மணாந் ப₄க்த்யா பித்ருநுத்₃தி₃ஶ்ய ஶக்தித: ।
பித்ருரூபம் ஹரிம் தத்ர ப்ரீணாத்விதி ஹ வை ப்₃ருவந் ॥
குர்யாச்ச்₂ராத்₃த₄விதா₄நேந விஷ்ணோராஜ்ஞாமநுஸ்மரந் ।
ப்ரஸாத₃தீர்த்தே₂ த₃த்₃யாத்₃வை பித்ருப்₄யஶ்ச விஶேஷத:॥
க்₃ரஹணே ரவிஸங்க்ராந்தௌ ஶக்த்யா தே₃வம் ப்ரபூஜயேத் ।
தத்காலஸம்ப₄வை: புஷ்பை: தூ₄பதீ₃பைர் நிவேத₃நை: ॥

http://acharya.org

தபோமாஸி ஸிதே பக்ஷே த்₃வாத₃ஶ்யாம் ச விஶேஷத: ।
வாராஹரூபிணம் தே₃வம் ஸம்யக் தத்ர ப்ரபூஜயேத் ॥...
ப்ராஜாபத்யர்க்ஷஸம்யுக்தம் க்ருஷ்ண ஸா து ஶிவாஷ்டமீ ॥
ஸா ஜயந்தீதி விக்₂யாதா த்ரிஷு லோகேஷு விஶ்ருதா ।
தஸ்யாமுபோஷ்ய விதி₄வச்ச₂க்த்யா ஸம்பூஜயேத்₃த₄ரிம் ॥
ஜயந்த்யாமுபவாஸஶ்ச மஹாபாதகநாஶந: ।
ஸ கார்யஶ்ச யதா₂ ஶக்த்யா பூஜநீயஶ்ச கேஶவ: ॥
பா₃லக்ருஷ்ணம் விதா₄நேந பா₄நுருத்துங்க₃ஸம்ஸ்தி₂தம் ।
பூஜயேத் விவிதை₄: புஷ்பை: க₃ந்த₄தூ₄பாதி₃பி₄ஸ்தத₂ா ॥
நைவேத்₃யைர் விவிதை₄: ஶலக்ஷ்ணை: கு₃டா₃த்₃யை: க்ருஸரை
ராத்ரௌ ஜாக₃ரணம் குர்யாத் கீ₃தவாதி₃த்ரநிஸ்வநை: ॥ [ரபி ।
இதிஹாஸபுராணநாம் படா₂நை: ஶ்ரவணைரபி ।
ப்ரபா₄தே விமலே ஸ்நாத்வா விஶிஷ்டை: வைஷ்ணவை: ஸஹ ॥
பூர்வவத் பூஜயேத்₃தே₃வம் ப்₃ராஹ்மணம்ஶ்சைவ போ₄ஜயேத் ।
ஸ்வயம் ச பாரணம் க்ருத்வா விஷ்ணுமேவம் ப்ரபூஜயேத் ॥
ஸாமகா₃நைர்ந்ருத்தகீ₃தை: தூர்யகோ₄ஷை: ஸமாஹித: ।
நிவேஶ்ய க்ருஷ்ணம் தோ₃லாயாம் தோ₃லயேத்₃ ப₄க₃வத்பர: ॥
அபூபாந் ஶர்க்கரோபேதாந் நிவேத்₃ய விநிவேஶயேத் ।
ஏவம் ஸம்பூஜயேத்₃தே₃வம் வர்ஷே வர்ஷே ச வைஷ்ணவ: ॥
மாஸி சைத்ரே ஶுக்லபக்ஷே நவம்யாம் ச புநர்வஸௌ ।
கௌஸல்யாயாம் ஸமுத்பந்நோ விஷ்ணு: காகுத்ஸ்த₂ ஈரித: ॥
தஸ்யாம் ஸ்நாநோபவாஸாத்₃யை: பூஜாஜாக₃ரணாதி₃பி₄: ।
அர்ச்சயேத் க₃ந்த₄புஷ்பாத்₃யை: கீ₃தவாதி₃த்ரநர்த்தநை: ॥
மஹோத்ஸவம் ப்ரகுர்வீத க்ருஷ்ணஜந்மநிவந்நர: ।
ஶ்ரவணேந ஸமாயுக்தா மாஸே பா₄த்₃ரபதே₃ ஸிதா ॥
த்₃வாத₃ஶீ ஸா மஹாபுண்யா நாம்நா து விஜயாதிதி₂: ।
தஸ்யாம் ஸ்நாதோ விதா₄நேந ஸர்வம் தீர்த்த₂ப₂லம் லபே₄த் ॥...
வாமநம் பூஜயேத்₃விஷ்ணும் காஶ்யபேயம் ஸநாதநம் ॥
குந்தை₃ஶ்ச குடஜைர்ஹோமஸ்துலஸ்யா: கோமலைர்த₃லை: ।
த₃த்₄யந்நம் ப₂லஸம்யுக்தம் ததை₂வ ச கு₃டோ₃த₃நம் ॥
ப₄க்த்யா ஸம்பூஜயேத்₃தே₃வம் விப்ராந் ஸம்போ₄ஜயேத் தத₂ா ।
கார்த்திகே மாஸி நியமாத்ஸாயம் ஸந்த்₄யாஸமாக₃மே ॥

http://acharya.org

அர்ச்சயேந்மாலதிபுஷ்பை: ததா₂ ரக்தோத்பலைரபி |
தீ₃பாநாரோபயேத் தத்ர திலதைலஸமந்விதாந் ||
ஸுஹ்ருத்₃யம் பாயஸாந்நம் ச நைவேத்₃யம் விநிவேத₃யேத் |
நிரந்தரம் த₄நுர்மாஸே பூஜயேத₃ருணோத₃யே ||
தூர்யகே₄ரகோஷைர்ந்ருத்யகீ₃தை: ச₂த்ரசாமரஸம்யுதை: |
அபூபாந் க்₄ருதபக்வாம்ஶ்ச ஶர்க்கராம்ஶ்ச ஸமர்ப்பயேத் ||
ஶால்யந்நம் த₃தி₄ஸம்யுக்தம் கத₃லீப₂லஸம்யுதம் |
ப₄க்த்யா நிவேத₃யேச்சைவ மாஸமேகம் து வைஷ்ணவ: ||
பூஜயேத்₃த₄ரிபத்ரைஶ்ச சம்பகைர்ப₃குலைரபி |......
ப₂லைஶ்ச விவிதை₄ர்ப₄க்த்யா ஶக்த்யா தே₃வம் ச பூஜயேத் ||...
வைஷ்ணவேஷு யதா₂காலே ஆக₃தேஷு மஹாத்மஸு ||
தத்ராப்யேவம் விதா₄நேந குர்வீதோத்ஸவமுத்தமம் |
தத்காலஸம்ப₄வைர் த்₃ரவ்யைர் யதா₂ஶக்த்யநுஸாரத: ||
உத்ஸவம் வாஸுதே₃வஸ்ய குர்வீத ஶ்ரத்₃த₄யாந்வித: |
புஷ்பை: ப₂லோபஹாரைர்வா குர்யாத₃ாஸ்திக்ய பா₄வத: ||
உத்ஸவே வாஸுதே₃வஸ்ய ஸ்ப்ருஷ்டாஸ்ப்ருஷ்டிர்ந வித்₃யதே |
உத்ஸவே வாஸுதே₃வஸ்ய ய: ஸ்நாதி ஸ்பர்ஶஶங்கயா ||
ஸ்வர்க்க₃ஸ்தா₂: பிதரஸ்தஸ்ய பதந்தி நரகேஷு ச |...
நித்யநைமித்திகேஷ்வேவம் விஷ்ணோராராத₄நக்ரம: ||
புரா யதோ₂க்தவிதி₄நா யா வை ப்ரோக்தா த்₃விஜோத்தமா: ||
[6-232...280]

[அந்தணர்களே! இனிமேல் எம்பெருமானுடைய நைமித்திகமான (ஒரு காரணத்தையொட்டி வரும்) ஆராத₄னத்தைக் கூறுகிறேன். சனிக்கிழமையில் மாலை வேளையில் சந்தனம், புஷ்பம், தூ₄பம், தீ₃பம் முதலானவற்றை ஸமர்ப்பித்து எம்பெருமானை முறைப்படி ஆராதி₄க்கவேண்டும். பழங்கள், ப₄க்ஷணங்கள், உண்ண இனிய பிரஸாத₃ங்கள் முதலானவற்றாலும், பாட்டு, வாத்தியம், நாட்டியம் ஆகியவற்றாலும் த₄னஸௌகர்யத்துக்குத் தகுந்தபடி ப₄க்தியோடு அச்யுதனை ஆராதி₄க்கவேண்டும். இரண்டு பக்ஷங்களிலும் ஏகாத₃ஶியில் உபவாஸம் இருக்கவேண்டும். திருவாராத₄னம், கண் விழித்திருத்தல் முதலானவற்றால் லோகநாத₄னை எம்பெருமானை உகப்பிக்கவேண்டும். விடியற்காலையில் ஸாத்விகமான ப்₃ராஹ்ம

http://acharya.org

முஹூர்த்தத்தில் நீராடி, த்3வாத3ஶியில் புருஷோத்தமனுக்கு மாலதீபுஷ்பங்களால் அர்ச்சனம் செய்து, பாலால் திருமஞ்சனம் செய்யவேண்டும். அந்தணர்களை அன்புடன் அமுது செய்வித்துத் தானும் பாரணை செய்யவேண்டும். விஷ்ணுவினுடையதான திருவோண நக்ஷத்திரத்தில் இருபிறப்பாளன் எப்போதும் விடியற்காலையில் அழகான செவ்வந்திப் புஷ்பங்களால் நெஞ்சை ஈர்க்கும் தூ4ப தீ3பங்களை ஸமர்ப்பித்து ஆராதி4க்கவேண்டும். தயிரமுதையும், சர்க்கரை கலந்த பானகத்தையும் நிவேத3னம் செய்யவேண்டும். பௌர்ணமியில் நண்பகலில் புன்னைப் பூக்களாலும், செண்பகப்பூக்களாலும் ப4க்தியோடு அச்யுதனை ஆராதி4த்து, ஶாத்3த்4யன்னத்தை நிவேத3னம் செய்ய வேண்டும். அன்றிரவு மங்க3ளமான மல்லிகை மலர்களால் அர்ச்சனம் செய்து, வெள்ளிப்பாத்திரத்தில் சர்க்கரை கலந்த பாயஸத்தை நிவேத3னம் செய்யவேண்டும். அமாவாஸ்யையன்று ஒவ்வொரு மாஸத்திலும் சிறப்பாகத் திருவாராத4னம் செய்யவேண்டும். குருந்த புஷ்பங்களாலும், அரளிப்பூவாலும், பாதிரிப்பூவாலும அர்ச்சிககவேண்டும். அர்க்4யமளித்து ஆவாஹனம்செய்து, பிண்ட4யஜ்ஞ விதி4ப்படி பித்ருககளை உத்3தே3ஶித்து இயன்றவரை அந்தணர்களுக்கு உணவளிக்கவேண்டும். ‘ஹரி உகப்படையட்டும்’ எனறு சொல்லிக்கொண்டு, பித்ருரூபனான ஹரியை உத்3தே3ஶிதது, அவ்வெம்பெருமானின் ஆணையை நினைத்துக்கொண்டு விதி4ப்படி ஶ்ராத்3த4ம் செய்யவேண்டும. பித்ருக்களுக்கு எம்பெருமான் அமுதுசெய்த பிரஸாத3 தீர்த்த3ங்களைச் சிறப்பாக அமுது செய்விககவேண்டும். க்3ரஹணத்திலும, கடக ஸங்க்ராந்தியிலும, மகர ஸங்க்ராந்தியிலும் இயன்ற வரையில் எம்பெருமானுக்கு அந்தந்தக் காலங்களில் கிடைக்கக்கூடிய புஷ்பங்களையும், தூ4பதீ3பங்களையும் அளித்துத் திருவாராத4னம் செய்யவேண்டும். மாசி மாஸத்தில் சுக்ல பக்ஷ த்3வாத3ஶியில் வராஹ ரூபியான எம்பெருமானுக்குச் சிறப்பாகத் திருவாராத4னம் செய்யவேண்டும், ரோஹிணி நக்ஷத்திரத்தோடு கூடிய மங்க3ளமான கிருஷ்ணபக்ஷ அஷ்டமி ‘ஜயந்தி’ என்று பெயர் பெற்றதாய், மூவுலகங்களிலும் புகழ் பெற்றதாயுள்ளது. அன்று உபவாஸமிருந்து முறைப்படி இயன்ற வரையில் திருவாராத4னம் செய்யவேண்டும். ஜயந்தியில் உபவாஸமிருப்பது பெரும் பாபங்களைப் போக்கக்கூடியது. இயன்ற வரையில் அன்று உபவாஸமிருந்து கேஶவனை ஆராதி4க்கவேண்டும். உச்சியிலிருக்கும் ஸூர்யன் போன்ற பா3லகிருஷ்ணனை முறைப்படி வித4வித4மான புஷ்பங்களையும், சந்தனம், தூ4பம் முதலானவற்றையும் ஸமர்ப்பித்து, பல வித4மான நிவேத3னங்கள், ஶாத்3த4மான வெல்லம் முதலானவை,

http://acharya.org

எள்ளோரை ஆகியவற்றை அமுதுசெய்வித்து, ஆராதநம் செய்யவேண்டும். பாட்டு, வாத்யம் முதலானவற்றின் இனிய ஒலிகளோடு இதிஹாஸ புராணங்களைப் படிக்கச் செய்து, கேட்கச் செய்து, இரவு முழுவதும் கண் விழிக்கவேண்டும். ஸாத்விகமான விடியற்காலை வேளையில் நீராடி, சிறந்தவர்களான வைஷ்ணவர்களோடுகூட முன்போல் எம்பெருமானை ஆராதிக்க வேண்டும். அந்தணர்களையும் அமுது செய்விக்கவேண்டும். தானும் பாரணம் செய்து எம்பெருமானுக்குப் பின்வருமாறு திருவாராதநம் செய்யவேண்டும். ஸாமகானம், நாட்டியம், ஸங்கீதம், வாத்ய கோஷங்கள் ஆகியவற்றோடு மிகவும் ஈடுபட்டவனாய், எம்பெருமானிடம் பரிவுடையவனாய், கண்ணனை ஊஞ்சலில் வைத்து ஆட்ட வேண்டும். சர்க்கரையோடு கூடிய அப்பங்களை நிவேதனம் செய்து (கோயிலாழ்வாரில்) எழுந்தருளப்பண்ண வேண்டியது. இவ்வண்ணமாக வைஷ்ணவனாயிருப்பவன் ஒவ்வொரு வருஷத்திலும் ஜயந்தியில் கண்ணனுக்குத் திருவாராதநம் செய்யவேண்டும். சித்திரை மாஸத்தில் சுக்லபக்ஷ நவமியோடு கூடிய புனர்வஸுவில் கௌஸல்யா தேவியிடம் அவதரித்த விஷ்ணு, ககுத்ஸ்த வம்சத்தில் பிறந்தவனாகையால் காகுத்தன் எனப்படுகிறான். அன்று நீராடி, உபவாஸமிருந்து, கண்விழித்திருந்து, திருவாராதநம் முதலானவற்றைச் செய்து, சந்தனம், மலர்கள் முதலானவற்றையிட்டு எம்பெருமானுக்கு அர்ச்சனம் செய்யவேண்டும். பாட்டு, வாத்தியம், நாட்டியம் முதலானவற்றோடுகூட ஸ்ரீகிருஷ்ண ஜயந்தியிற்போலே மஹோத்ஸவத்தைச் செய்யவேண்டும். புரட்டாசி மாதத்தில் திருவோண நக்ஷத்திரத்தோடு கூடிய சுக்லபக்ஷ த்வாதசி திதி மிகவும் புண்யமுடைய விஜயாதிதி என்று அழைக்கப்படுகிறது. அன்று முறைப்படி ஸ்நானம் செய்பவர் எல்லாத் தீர்த்தங்களிலும் நீராடிய பலனை அடைவர்......அந்தத் திதியில் காஶ்யபருக்குப் பிள்ளையாய்ப் பிறந்த ஸநாதனனாய் வாமனனான விஷ்ணுவை ஆராதிக்கவேண்டும். குருந்த மலர்களாலும், குடஜப் பூக்களாலும், துளசிக்கொழுந்திதழ்களாலும் ஹோமம் செய்யவேண்டும். பழங்களோடு கூடிய தயிரமுதையும், சர்க்கரைப் பொங்கலையும் அமுது செய்வித்து, பக்தியோடு எம்பெருமானுக்குத் திருவாராதநம் செய்யவேண்டும். அவ்வண்ணமே அந்தணர்களை அமுது செய்விக்கவேண்டும். கார்த்திகை மாஸத்தில் தினமும் மாலை வேளையில் மாலதிப்புஷ்பங்களையும், செவ்வல்லி மலர்களையுங்கொண்டு எம்பெருமானை ஆராதிக்கவேண்டும். நல்லெண்ணெயைக் கொண்டு திருவிளக்கு ஏற்றவேண்டும். மிகவும் நெஞ்சுக்கினிய திருக்கண்ணமுதை எம்பெருமானுக்கு அமுது செய்விக்க

http://acharya.org

வேண்டும். மார்கழி மாதத்தில் அருணோதயத்தில் தினந்தோறும் வாத்தியம், நாட்டியம், சங்கீதம் ஆகியவற்றோடு ச2த்ர சாமரங்களை யும் ஸமர்ப்பித்து, நெய்யில் சமைக்கப் பெற்ற அப்பங்களையும், சர்க்கரையையும் அமுதுசெய்விக்கவேண்டும். தயிரோடும் வாழைப்பழத் தோடும் கூடிய செந்நெல் பிரஸாத3த்தை அந்த மாதம் முழுவதும் ப4க்தியோடு வைஷ்ணவன் எம்பெருமானுக்கு அமுது செய்விக்க வேண்டும். துளசி, செண்பகம், மகிழம்பூ ஆகிய மலர்களைக்கொண்டு அர்ச்சிக்கவேண்டும்......பலவித4மான பழங்களை ஸமர்ப்பித்து அன் போடு இயன்றவரையில் திருவாராத4னம் செய்யவேண்டும்............ மஹாத்மாக்களான வைஷ்ணவர்கள் எந்தக் காலத்தில் எழுந்தருளு கிறார்களோ அந்தக் காலத்திலும் விதி4ப்படி எம்பெருமானுக்குச் சிறந்த உத்ஸவத்தைச் செய்யவேண்டும். அந்தக் காலத்தில் கிடைக்கும் திரவியங்களைக் கொண்டு இயன்றவரையில் ச்ரத்3தை4யோடு கூடியவ னாய், மலர்களையும், பழங்கள் முதலான உபஹாரங்களையும் ஸமர்ப் பித்து, ஆஸ்திக்யத்தோடு கூடியவனாய், வாஸுதே3வனுக்கு உத் ஸவத்தைச் செய்யவேண்டும். வாஸுதே3வனுடைய உத்ஸவத்தில் இன்னாரைத் தொடலாம், இன்னாரைத் தொடலாகாது என்னும் சாஸ்த்ர வரம்பு கிடையாது. வாஸுதே3வனுடைய உத்ஸவத்தில் எவனொருவன் தீண்டத்தகாதவனைக் தீண்டிவிட்டோம் என்று நீராடு கிறானோ அவனுடைய பித்ருக்கள் ஸ்வர்க்க3த்திலிருந்து நரகத்தில் விழுவார்கள். அந்தணர் தலைவர்களே! நித்யநைமித்திக காலங்க ளில் விதி4ப்படி எம்பெருமானை நீண்டகாலமாக ஆராதி4க்கும் முறை இதுவரை சொல்லப்பட்டது] அடுத்தபடி விவரிக்கப்படும் அமா வாஸ்யா ஶ்ராத்3த4த்தில்—

ஹரேர்நிவேதி3தம் த3த்3யாத் ஸர்வமாநந்த்யமஶ்நுதே ॥[6-301]

[எம்பெருமான் அமுது செய்ததைப் பித்ருக்களுக்கு அளிக்கவேண்டும். அதனால் நிலையான மோக்ஷப2லத்தைப் பெறுகிறான்.] என்று கூறப் பட்டது காணத்தக்கது. அதற்குப்பின் அபரகாரியங்களை வர்ணிக் கும்போது,

ஏகாத3ஶேऽஹ்நி ஸம்ப்ராப்தே ஸ்வஸ்திவாசநமாசரேத் ।
ஸம்பூஜ்ய விதி4வத்3விஷ்ணும் க3ந்த4புஷ்பாதி3பி4ர்த்3விஜ: ॥
பாயஸாபூப ஹ்ருத்3யாந்நபாநகாதி3 நிவேத3யேத் ।
ஆஹூய ப்3ராஹ்மணாந் பஶ்சாத் ஶ்ராத்3த4ாய விநிமந்த்ரயேத் ॥

[6-353, 354]

http://acharya.org

[பதினோராவது நாளன்று ஸ்வஸ்திவாசனம் செய்யவேண்டும். அந்தணன் க₃ந்த₄ம், புஷ்பம் முதலானவற்றால் விஷ்ணுவை முறைப்படி ஆராதி₄த்து, பாயஸம், அப்பம், இனிய அன்ன பானங்கள் ஆகியவற்றை அமுதுசெய்யப் பண்ணவேண்டும். அதற்குப் பிறகு ப்₃ராஹ்மணர்களை அழைத்து. ஶ்ராத்₃த₄த்துக்கு நிமந்த்ரணம் செய்ய வேண்டும்.] என்று ஏகாஹத்தன்றே ப₄க₃வதா₃ராத₄னம் விதி₄க்கப் பட்டது. ஸபிண்டீ₃கரணத்தின்போதும்

ஆமந்த்ர்ய ப்₃ராஹ்மணாந் ஸ்நாத்வா ஹரிம் விதி₄வத₃ர்ச்சயேத் ।
க₃ந்த₄புஷ்பைர்தூ₄பதீ₃பை: நைவேத்₃யைர் விவிதை₄ஸ்தத₂ா ॥
ஸம்பூஜ்ய ஜக₃தாமீஶம் வாஸுதே₃வம் ஸநாதநம் ।
பார்வணோக்த விதா₄நேந ப்₃ராஹ்மணாநுபவேஶயேத் ॥
[6-364,365]

[ப்₃ராஹ்மணர்களை நிமந்த்ரணம் செய்து, நீராடி, எம்பெருமானை முறைப்படி க₃ந்த₄ம், புஷ்பம், தூ₄பம், தீ₃பம், பலவித₄மான நைவேத்₃யம் ஆகியவற்றையளித்து ஆராதி₄க்கவேண்டும். ஜக₃ந்நாத₂னை, பழையோனை வாஸுதே₃வனை இப்படி ஆராதி₄த்த பின்பு பார்வண ஶ்ராத்₃த₄ முறைப்படி (ஶ்ராத்₃த₄த்துக்காக) உட்கார வைக்கவேண்டும்.] என்று ப₄க₃வதா₃ராத₄னம் விதி₄க்கப்பட்டது.

அமாயாந்து விஶேஷேண ஶௌளோபநயநாதி₃ஷு ॥
த்ரயோத₃ஶே ऽஹ்நி ஸம்ப்ராப்தே ப₃லிம் குர்யாத்து வைஷ்ணவ:।
ஸ்நாத்வா நத்₃யாம் தடாகே வா விஶிஷ்டைர்.ப்₃ராஹ்மணை:
ஜபித்வா வைஷ்ணவாந் ஸூக்தாந் ஸ்நாத்வா [ஸஹ ॥
ஸந்தர்ப்பயேத் தத: ।
நாமபி₄: கேஶவாத்₃யைஶ்ச மந்த்ரை: ஸந்தர்ப்பயேத்₃த₄ரிம் ॥
தர்ப்பயேந்நாமபி₄: ஸ்வை: ஸ்வை: நித்யமுக்தாம்ஶ்ச
வைஷ்ணவாந் ।
தத: ஸ்வமாலயம் க₃த்வா விதி₄வத் பூஜயேத்₃த₄ரிம் ॥
தே₃வஸ்ய புரதோ வஹ்நிம் ப்ரதிஷ்டா₂ப்ய யதோ₂க்தவத் ।
இத்₄மாதா₄நநாதி₃கம் க்ருத்வா பஶ்சாத்₃தே₄ாமம் ஸமாசரேத் ॥
பௌருஷேண து ஸூக்தேந பாயஸம் மது₄ஸம்யுதம் ।
ஆஜ்யம் ச ஜுஹுயாத் ஸம்யக் ப்ரத்யுசம் ப்ரணவாந்விதம் ॥
ததை₂வ மந்த்ரரத்நேந ஜுஹுயாத் ஶதஸங்க்₂யயா ।
அந்யைஶ்ச வைஷ்ணவைர் மந்த்ரை: ஶக்த்யா ச
ஜுஹுயாத்தத: ॥

http://acharya.org

நாமபி₄: கேஶவாத்₃யைஶ்ச ஜுஹுயாத் ஸுஸமாஹித: |
ஸ்வை: ஸ்வைஶ்ச நாமபி₄ர்ஹுத்வா நித்யமுக்தாம்ஸ்ததை₂வ ச ||
தத: ஸ்விஷ்டக்ருதம் ஹுத்வா ஹோமஶேஷம் ஸமாபயேத் |
பஶ்சாத் ஸம்பூஜயேத்₃விப்ராந் கேஶவாத்₃யைஶ்ச நாமபி₄: ||
நித்யமுக்தாந் ஸமுத்₃தி₃ஶ்ய பூஜயேத்₃ ப்₃ராஹ்மணாந் ஶுப₄ாந் |
க₃ந்த₄புஷ்பைர் தூ₄பதீ₃பை: வஸ்த்ரைராப₄ரணை: ஶுபை₄: ||
போ₄ஜயேத் பாயஸாந்நேந ஶர்க்கராஜ்யயுதேந வை |
விவிதை₄ரந்நபாநாத்₃யை: வாஸோऽலங்கரணை: ஶுபை₄: ||
போ₄ஜயித்வா தத: பிண்டா₃ந் யதா₂ஶக்தி விநிக்ஷிபேத் |
ப்ராகூ₃க்₃ரேஷு ச த₃ர்பே₄ஷு உபவீத: ஸமாஹித: ||
யவைஶ்ச மது₄ஸம்யுக்தை: த₃த்₃யாத் பிண்டா₃ந் ப்ருத₂க்
நாமபி₄: கேஶவாத்₃யைஶ்ச த₃த்₃யாத் [ப்ருத₂க் |
பிண்டா₃ந் குஶோத்தரே ||...
பிண்டா₃நக்₃நௌ விநிக்ஷிப்ய விப்ராநாசாமயேத் தத: ||
ஆசாந்த: பூஜயேத் பஶ்சாத் ஸ்வஶக்த்யா த₃க்ஷிணாம் தத₂ா |
ஏவம் நாராயணப₃லிம் ய: குர்யாத்₃ வைஷ்ணவோத்தம: ||
பிதரஶ்ச ஸமாயாந்தி தத்₃விஷ்ணோ: பரமம் பத₃ம் |
ப்ராயஶ்சித்தமித₃ம் கு₃ஹ்யம் பாபேஷு ச மஹத்ஸ்வபி ||...
ஏவம் நாராயணப₃லிம் க்ருத்வா ஸம்ஸ்காரமாசரேத் |
பித்ராத₃யோ ம்ருதா யஸ்ய ப₄வேயுர் யத்₃யவைஷ்ணவா: ||
இஷ்டிம் ச வைஷ்ணவ: குர்யாத் தேஷாம் பாபவிஶுத்₃த₄யே |
ய: குர்யாத்₃ வைஷ்ணவீமிஷ்டிம் விதி₄நா வைஷ்ணவோத்தம: ||
வைஷ்ணவத்வம் ப்ரயாத்யத்ர குலமேகோத்தரம் ஶதம் ||
[6-378...398]

[அமாவாஸ்யையிலும், சிறப்பாக சௌளம், உபநயனம் முதலான வற்றிலும், (அபரகார்யத்தில்) பதின்மூன்றுவது நாளன்றும் வைஷ்ணவன் நாராயண ப₃லியைச் செய்யவேண்டும். நதி₂யிலோ, குளத்திலோ சிறந்தவர்களான அந்தணர்களோடு கூட நீராடி, விஷ்ணுவைப் பற்றின ஸூக்தங்களை ஜபித்து, கேஶவன் முதலான நாமங்களாலும், விஷ்ணு மந்த்ரங்களாலும் ஹரிக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும். விஷ்ணுவின் அடியார்களான நித்யமுக்தர்களுக்கும் அவரவர் நாமங்களைச் சொல்லித் தர்ப்பணம் செய்யவேண்டும். அதற்குப்பின் தன் வீட்டிற்குச் சென்று முறைப்படி எம்பெருமானுக்

http://acharya.org

குத் திருவாராதநம் செய்யவேண்டும். அவனுக்கு முன்னால் அக்நியை முறைப்படி ப்ரதிஷ்டை செய்து, இத்மாதாநம் முதலான கர்மங்களைச் செய்து, அதற்குப்பின் ஹோமம் செய்யவேண்டும். புருஷஸூக்தத்தின் ஒவ்வொரு ரிக்கோடும் ப்ரணவத்தைச் சேர்த்துத் தேனும் நெய்யும் கலந்த பாயஸத்தை ஹோமம் செய்யவேண்டும். அவ்வண்ணமே மந்த்ரரத்நமாகிற த்வயத்தைக் கொண்டு நூறு முறை ஹோமம் செய்யவேண்டும். அதற்குப்பின் மற்ற வைஷ்ணவ மந்த்ரங்களைக் கொண்டு இயன்றவரை ஹோமம் செய்யவேண்டும். ஶாந்தியுடையவனாய், கேஶவாதி நாமங்களைக் கொண்டு ஹோமம் செய்யவேண்டும். அவ்வண்ணமே நித்யமுக்தர்களுக்கும் அவரவர் திருநாமங்களைச் சொல்லி ஹோமம் செய்து, அதற்குப்பின் ஸ்விஷ்டக்ருத் ஹோமம் செய்து. ஹோமஶேஷத்தை நிறைவடையச் செய்யவேண்டும். அதற்குப்பின் கேஶவாதி நாமங்களைச் சொல்லி அந்தணர்களுக்கு ஆராதநம் செய்யவேண்டும். நித்யமுக்தர்களை உத்தேஶித்து நல்ல அந்தணர்களை மங்களமான சந்தனம், புஷ்பம், தூபம், தீபம், வஸ்த்ரம், ஆபரணங்கள் ஆகியவற்றை யளித்து ஆராதிக்கவேண்டும். சர்க்கரையும், தேனும் கலந்த பாயஸான்னத்தை அவர்களுக்கு அமுதுசெய்விக்கவேண்டும். பலவிதமான அன்னபானங்களாலும், மங்களமான வஸ்த்ரங்களாலும் அலங்காரங்களாலும் அவர்களை த்ருப்தி செய்வித்தபின்பு ஶக்தியுள்ளவரை பிண்டங்களை வைக்கவேண்டும், கிழக்கு நுனியான தர்ப்பங்களில் உபவீதத்தையுடையவனாய் ஶாந்தியோடு தேன் கலந்த கோதுமையாலே தனித்தனியாகப் பிண்டங்களை அளிக்கவேண்டும். கேஶவாதிநாமங்களைக்கொண்டும் தர்ப்பத்தின்மேல் பிண்டங்களை ஸமர்ப்பிக்கவேண்டும். பிண்டங்களை அக்நியில் இட்டு அந்தணர்களை ஆசமனம் செய்விக்கவேண்டும், தானும் ஆசமனம்செய்து, அதற்குப் பின் ஶக்திக்குத்தக்கபடி தக்ஷிணையளித்து அந்தணர்களை ஆராதிக்க வேண்டும். இவ்வண்ணமாக எந்த வைஷ்ணவர்தலைவன் நாராயண பலியைச் செய்கிறானோ அவனுடைய பித்ருக்கள் விஷ்ணுவின் பரம பதத்தையடைகிறார்கள். இது பெரும்பாவங்கள் விஷயத்திலும் பரம ரஹஸ்யமான பிராயஶ்சித்தமாகும். இவ்வண்ணமாக நாராயண பலியைச் செய்து, ஸம்ஸ்காரத்தை நடத்தவேண்டும். இறந்த தகப்பன் முதலானோர் அவைஷ்ணவர்களாயிருந்தால், ஸம்ஸ்காரம் செய்யும் வைஷ்ணவன் அவர்களுடைய பாபம் நீங்குவதற்காக வைஷ்ணவேஷ்டியைச் செய்யக்கடவன். எந்த வைஷ்ணவோத்தமன் விஷ்ணுவைக்குறித்து இந்த இஷ்டியை விதிப்படி செய்கிறானோ அவனுடைய நூற்றொரு தலைமுறைகள் வைஷ்ணவத்வத்தை அடைகின்றன.]

http://acharya.org

என்று பதின்மூன்ருவது நாள் செய்யவேண்டிய நாராயணபூஜையை விளக்கி, வைஷ்ணவேஷ்டியைப்பற்றிக் கூறப்பட்டது.

ஏகாத₃ஶ்யாம் ஶுக்லபக்ஷே ஸமுபோஷ்ய த்₃விஜோத்தம: ||
த்₄ராத்ரீசூர்ணேந லிப்தாங்கோ₃ நத்₃யா த்₃யாநாம்ஶுபை₄ர்ஜலை:
நித்யமுக்தஸமேதஞ்ச தே₃வேஶம் தர்ப்பயேத்₃த₄ரிம் ||
க்₃ருஹம் க₃த்வா வித₄ாநேந பூஜயேத்₃விஷ்ணுமச்யுதம் |
க₃ந்த₄புஷ்பைர்தூ₄பதீ₃பை: நைவேத்₃யைர் விவிதை₄ரபி ||
அஷ்டோத்தரஸஹஸ்ரந்து மாலதீகுஸுமாநி ச |
ஆத₃ாய மந்த்ரரத்நேந ஏகைகம் பூஜயேத் க்ரமாத் ||
அப₄ாவே ஜாதிபுஷ்பைர்வா கோமலைஸ்துலஸீத₃லை: |
பத்₃மைர்வா ஶதபத்ரைர்வா மந்த்ரேணைவம் ப்ரபூஜயேத் ||
ஜபேச்ச த₃ஶஸாஹஸ்ரம் மந்த்ரரத்நம் ஸமாஹித: |
ராத்ரௌ ஜாக₃ரணம் குர்யாத் பூஜயேந்மது₄ஸூத₃நம் ||
ஸதி ப்ரப₄ாதே த்₃வாத₃ஶ்யாம் ஸ்நாத்வா நத்₃யாம் யதா₂விதி₄ |
ஏகைகமஞ்ஜலிம் த₃த்₃யாந்நித்யமுக்தாம்ஶ்ச வைஷ்ணவாந் ||
க்₃ருஹம் க₃த்வா ஹரே: பூஜாம் ப்ரகுர்வீத யதோ₂க்தவத் |
ஸுஹ்ருத்₃யைர் விவிதை₄ர்ப₄க்ஷ்யை: நைவேத்₃யம் விநிவேத₃யேத் ||
ததோऽக்₃நிஸ்தா₂பநம் க்ருத்வா ஹோமம் குர்யாத்₃யதோ₂க்தவத் |
இத்₄மாத₄ாநாதி₃பூர்வேண ஜுஹுயாத்₃வை ஸமாஹித: ||
திலைஶ்ச வ்ரீஹிபி₄: ஶுத்₃தை₄: ஸமித்₃பி₄: பிப்பலோத்₃ப₄வை: |
ததை₂வாஜ்யேந சருணா ஜுஹுயாத்கமலைரபி ||
ப்ரத்யேகமஷ்டஸாஹஸ்ரம் ஹோதவ்யம் து த்₃வயேந வை |
பஶ்சாத்₃வைஷ்ணவஸூக்தம் து ஹோதவ்யம் பாயஸேந து ||
ஆஜ்யேநைவ து ஹோதவ்யம் ததா₂பி ச த்₃வயேந வை ||...
வைஷ்ணவ்யா சைவ கா₃யத்ர்யா ததா₂ மந்த்ரத்₃வயேந ச |
நாமபி₄: கேஶவாத்₃யைஶ்ச ததா₂ ஸங்கர்ஷணாதி₃பி₄: ||
தத: ஸ்விஷ்டக்ருதாதீ₃நி ஹோமஶேஷம் ஸமாசரேத் |
ஸுபுஷ்பாணி ததோ த₃த்₃யாத்₃தே₃வாய ஸுரபீ₄ணி வை ||
ப்ரத்ய்ருசம் வைஷ்ணவை: ஸூக்தைர்நாமபி₄: கேஶவாதி₃பி₄: |
ததோ விப்ராந் ஸமாஹூய க₃ந்த₄மால்யாதி₃பூ₄ஷணை: ||

http://acharya.org

பூஜயேத் பூர்வவத்₃தே₃வம் கேஶவாத்₃யைஶ்ச நாமபி₄: |
போ₄ஜயித்வா ததோ விப்ராந் த₃க்ஷிணாபி₄: ப்ரதோஷயேத் ||
ஏவமிஷ்டிம் ப்ரகுர்வீத வைஷ்ணவீம் வைஷ்ணவோத்தம: |
பிது: பூர்வோக்தவிதி₄நா ஸம்ஸ்காரம் ஸம்யக₃ாசரேத் ||
வைஷ்ணவேஷ்டிம் வித₄ாநேந க்ருத்வா வை த்₃விஜஸத்தம: |
குலமேகோத்தரஶதம் புநாத்யேவ ந ஸம்ஶய: ||
அக்ருத்வா வைஷ்ணவீமிஷ்டிம் பைத்ருமேதி₄க கர்மணி |
அவைஷ்ணவாந் ய: ஸம்ஸ்குர்யாத் ஸ நரோ ரௌரவம் வ்ரஜேத் ||
தஸ்மாதி₃ஷ்டிம் வித₄ாநேந க்ருத்வா வை வைஷ்ணவோ த்₃விஜ: |
அவைஷ்ணவாநாம் குர்வீத ஸர்வமப்யௌர்த்₄வ தை₃ஹிகம் ||
[6-398...418]

[ஏகாத₃ஶியில் சுக்லபக்ஷத்தில் அந்தணர்தலைவனாயிருப்பவன் உபவாஸமிருந்து, நெல்லிப்பொடியினால் அவயவங்களில் பூசிக்கொண்டு, நதி முதலானவற்றின் மங்க₃ளமான தீர்த்த₂ங்களில் குளித்து நித்யமுக்தர்களோடு கூடிய தே₃வர்பிரானுக்குத் தர்ப்பணம் செய்யவேண்டும். மறுபடியும் வீட்டுக்குச் சென்று, முறைப்படி அங்கு க₃ந்த₄ம், புஷ்பங்கள், தூ₄பம், தீ₃பம், பலவித₄மான நைவேத்₃யங்கள் ஆகியவற்றையளித்து அச்யுதனை விஷ்ணுவுக்குத் திருவாராத₄னம் செய்யவேண்டும். ஆயிரத்தெட்டு மாலதீ புஷ்பங்களை எடுத்து, ஒவ்வொரு புஷ்பமாக த்₃வயத்தைச் சொல்லி முறைப்படி அர்ச்சிக்கவேண்டும். மாலதீபுஷ்பங்கள் கிடைக்காவிடில், சாதிப்பூக்கள், கொழுந்தான துளசி இதழ்கள், தாமரைகள், அல்லிமலர்கள் ஆகியவற்றைக் கொண்டு முற்கூறியபடி அர்ச்சிக்கவேண்டும். ஶாந்தியுடையவனாய் த்₃வயத்தைக் கொண்டு பதினாயிரம் முறை ஜபிக்கவேண்டும். இரவில் விழித்திருந்து மது₄ஸூத₃னனை ஆராதி₄க்கவேண்டும். விடியும்பொழுது த்₃வாத₃ஶியில் நதியில் முறைப்படி நீராடி, எம்பெருமானடியார்களான நித்யமுக்தர்களைக் குறித்து ஒவ்வொரு தர்ப்பணம் செய்யவேண்டியது. வீட்டிற்குச்சென்று முன் சொன்னபடி எம்பெருமானுக்குத் திருவாராத₄னம் செய்யவேண்டும். நெஞ்சை ஈர்க்கும் பலவித₄மான ப₄க்ஷணங்களையும் அமுதுசெய்விக்கவேண்டும். அதற்குப்பின் அக்₃நிப்ரதிஷ்டை₂செய்து, முறைப்படி ஹோமம் செய்யவேண்டும். இத்₄மாத₄ாநம் முதலானவற்றை முன்னிட்டுக் கொண்டு ஶாந்தியுடையவனாய் ஹோமம் செய்யவேண்டும். எள், நெல், ஶுத்₃த₄மான அரசசமித்து, நெய், ஹவிஸ்ஸு, தாமரைகள்

http://acharya.org

ஆகியவற்றைக்கொண்டு ஒவ்வொன்ருலும் எண்ணுயிரம் முறை த்₃வயத்தைச் சொல்லிக்கொண்டு ஹோமம் செய்யவேண்டும். அதற்குப் பின் பாயஸத்திஞல் வைஷ்ணவ ஸூக்த மந்த்ரங்களைக்கொண்டு ஹோமம் செய்யவேண்டும். நெய்யிஞல் த்₃வயமந்த்ரத்தைக்கொண்டு ஹோமம் செய்யவேண்டும்......விஷ்ணுகா₃யத்ரியினுலும், த்₃வயமந்த்ரத்தாலும், கேஶவாதி₃நாமங்களாலும், ஸங்கர்ஷணுதி₃ நாமங்களாலும் ஹோமம் செய்யவேண்டும். அதற்குப்பின் ஸ்விஷ்டக்ருத் முதலான ஹோமஶேஷத்தை நிறைவுபடுத்தவேண்டும். எம்பெருமானுக்கு நறுமணம்மிக்க நல்ல புஷ்பங்களை விஷ்ணுஸூக்தத்தின் ஒவ்வொரு ரிக்குகளையும், கேஶவாதி₃நாமங்களையும் சொல்லி ஸமர்ப்பிக்கவேண்டும். அதற்குப்பின் அந்தணர்களையழைத்து, சந்த₃னம், மாலை, பூ₄ஷணம் முதலானவற்றையளித்து, கேஶவாதி₃நாமங்களைக் கொண்டு முன்போல் எம்பெருமானுக்குப் புஷ்பங்களை ஸமர்ப்பிக்கவேண்டும். பிறகு அந்தணர்களை அமுதுசெய்வித்து, த₃க்ஷிணைகளையளித்து த்ருப்தி செய்விக்கவேண்டும். இவ்வண்ணமாக வைஷ்ணவர் தலைவன் வைஷ்ணவேஷ்டியைச் செய்யவேண்டும். முற்கூறிய முறைப்படி பிதாவுக்குச் சரமகைங்கர்யங்களை நன்கு நடத்தவேண்டும். அந்தணர்தலைவன் வைஷ்ணவேஷ்டியை முறைப்படி செய்வதன் மூலம் நூற்றொரு தலைமுறைகளைக் கரையேற்றுவான் என்பதில் ஐயமில்லை. வைஷ்ணவேஷ்டியைச் செய்யாமல் பைத்ருமேதி₄க கர்மத்தாலே அவைஷ்ணவர்களுக்கு ஸம்ஸ்காரம் செய்யும் வைஷ்ணவன் ரௌரவநரகத்தையடைவான். ஆகையால் வைஷ்ணவஞன அந்தணன் வைஷ்ணவேஷ்டியை முறைப்படி செய்தே அவைஷ்ணவர்களுக்கும் சரமகைங்கர்யங்களைச் செய்யவேண்டும்.] என்று வைஷ்ணவேஷ்டி விரிவாக விளக்கப்பட்டது.

ஸூதகே ம்ருதகே சைவ ஸந்த்₄யாகர்ம ந ஸந்த்யஜேத் ।
வ்யோம்நி வா ஹ்ருத₃யே வாபி மநஸா ஸம்ஸ்மரேத்₃த₄ரிம் ॥
[6-466]

[பிறப்பினுலேயோ அல்லது இறப்பினுலேயோ ஏற்படும் தீட்டின்போதும் ஸந்த்₄யாவந்த₃னத்தை விடக்கூடாது. ஆகாஶத்திலோ அல்லது ஹ்ருத₃யத்திலோ மனத்தால் ஹரியை நினைக்கவேண்டும்.] என்று ஸந்த்₄யாவந்த₃னத்தில் ஹரிஸ்மரணம் விதி₄க்கப்பட்டது.

ப்ராக₃ண்டி₃நம் ச பதிதமுந்மத்தம் ஶட₂ஹாரிணம் ॥
அவைஷ்ணவம் த்₃விஜம் ஸ்ப்ருஷ்ட்வா ஸவாஸா ஜலமாவிஶேத் ।
[6-486]

http://acharya.org

[பாஷண்டி₃ அல்லது பதிதன் அல்லது பைத்தியம் பிடித்தவன் அல்லது வஞ்சனையுள்ளவன் அல்லது வைஷ்ணவனல்லாத அந்தணனைத்தொட்டால் வஸ்த்ரத்தோடு ஜலத்தில் மூழ்கி ஸ்நானம் செய்ய வேண்டும்.] என்று அவைஷ்ணவ ப்₃ராஹ்மணனைத் தொட்டால் பிராயச்சித்தம் விதி₄க்கப்பட்டது.

இனி விஷ்ணுஸ்த₂ாபனவிதி₄யை வர்ணிக்கும் ஏழாவதான கடைசி அத்தியாயத்தில் ஸாரமான சில ஶ்லோகங்களைக் காண்போம்.

ரித்விஜோ வரயேத்தத்ர வைஷ்ணவாந் ப்₃ராஹ்மணாந் ஶுப₄ாந்।
வேத₃வேத₃ாங்க₃ தத்த்வஜ்ஞாந் ஸர்வஶாஸ்த்ர விஶாரத₃ாந் ॥
ஜிதேந்த்₃ரியாந் ஶுப₄ாசாராந் ஸத்த்வஸ்த₂ாந் ஸர்வலக்ஷணாந் ।
மந்த்ரதத்த்வார்த்த₂விது₃ஷோ ப்₃ராஹ்மணாந் வரயேச்சு₂ப₄ாந் ॥
தாத்₃ருக்₃கு₃ணஸமாயுக்தம் ஆசார்யம் வரயேத் தத: ।
மந்த்ரஜ்ஞம் மந்த்ரப₄க்தம் ச ஸர்வாசாரம் கு₃ணாந்விதம் ॥
ஶ்ருதி ஸ்ம்ருதி புராணார்த்த₂விது₃ஷம் த₃ம்ப₄வர்ஜிதம் ।
அர்த்த₂பஞ்சகதத்த்வஜ்ஞம் அக்₃நிஹோத்ரயுதம் ஶுசிம் ॥
த்₃வயநிஷ்ட₂ம் த்₃வயார்த்த₂ஜ்ஞம் ப்ரதிஷ்ட₂ாகர்மநிஷ்டி₂தம் ।
மஹாப₄ாக₃வதம் சைவமாசார்யம் வரயேத் ஸுதீ₄: ॥ [7-10...14]

[எம்பெருமானை ப்ரதிஷ்டை₂ பண்ணுவதற்கு மங்க₃ளமான ஸ்ரீவைஷ்ணவ அந்தணர்களை ரித்விக்குகளாக வரிக்கவேண்டும். வைஷ்ணவர்களாகவும், மங்க₃ளமான ப்₃ராஹ்மணர்களாகவும், வேத₃ வேத₃ாங்க₃ங்களின் உண்மையை அறிந்தவர்களாகவும், எல்லா ஶாஸ்த்ரங்களிலும் வல்லவர்களாகவும், புலனடக்கம் உடையவர்களாகவும், நல்லொழுக்கம் உள்ளவர்களாகவும், ஸத்வகு₃ணமுடையவர்களாகவும், நல்ல லக்ஷணங்களை உடையவர்களாகவும், திருவஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்களின் உண்மைப்பொருளை அறிந்தவர்களாகவும் உள்ள மங்க₃ளமான அந்தணர்களை வரிக்கவேண்டும். அதற்குப்பின் அத்தகைய கு₃ணங்களுடைய ஒருவரை ஆசார்யராக வரிக்கவேண்டும். ப₄க₃வந்மந்த்ரங்களை அறிந்தவராகவும், மந்த்ரங்களில் ப₄க்தியுள்ளவராகவும், எல்லா நல்லொழுக்கங்களுடையவராகவும், நற்குணங்கள் பொருந்தியவராகவும், ஶ்ருதி, ஸ்ம்ருதி, புராணங்களின் பொருளை அறிந்தவராகவும், ட₃ம்ப₄மில்லாதவராகவும், அர்த்த₂பஞ்சகம் பற்றிய உண்மையை அறிந்தவராகவும், அக்₃நிஹோத்ரத்தோடு கூடியவராகவும், பரிஶுத்₃த₄மானவராகவும், த்₃வயாநுஸந்த₄ானத்தில் ஊன்றியவராகவும், த்₃வயத்தின் பொருளை

http://acharya.org

அறிந்தவராகவும், விஷ்ணுப்ரதிஷ்டா₂கார்யங்களில் ஊன்றியிருப்பவ ராகவும்,, மஹாபா₄க₃வதராகவும் இருப்பவரை அறிவாளியாயிருப்ப வன் ஆசார்யனாக வரிக்கவேண்டும்.] என்று ரித்விக்குகளுக்கும், ஆசார்யருக்கும் லக்ஷணம் உரைக்கப்பட்டது.

தாபாதி₃பஞ்சஸம்ஸ்காரா மஹாபா₄க₃வதா: ஸ்ம்ருதா: ।
சக்ராதி₃ஹேதிபி₄ஸ்தப்தம் தாப இத்யபி₄தீ₄யதே ॥
ஸம்ஸ்கார: ப்ரத₂ம: ப்ரோக்தோ த்₃விதீய: புண்ட்₃ரத₄ாரணம் ।
[7-15, 16]

[தாபம் முதலான ஐந்து ஸம்ஸ்காரங்களையுடையவர்கள் மஹாபா₄க₃ வதர்களாக எண்ணப்படுகிறார்கள். சக்ரம் முதலான விஷ்ணுவின் ஆயுத₄ங்களால் முத்திரைபெறுவது தாபஸம்ஸ்காரம் எனப்படுகிறது. இதுவே முதல் ஸம்ஸ்காரம். புண்ட்₃ரத₄ாரணம் இரண்டாவது ஸம்ஸ்காரமாகும்.] என்று தொடங்கி,

ஸார்த்த₂ஜ்ஞாநம்து ஸந்யாஸம் மந்த்ராத்₄யயநமுச்யதே ।
பஞ்சமஸ்து ஹரே: பூஜா பஞ்சராத்ரோக்தமார்க்க₃த: ॥
ததீ₃யார்ச்சநபர்யந்தம் ஹரேராராத₄நம் ஸ்ம்ருதம் ।
இத்யேவமாதி₃ஸம்ஸ்காரோ மஹாபா₄க₃வத: ஸ்ம்ருத: ॥
அந்யே த்வவைஷ்ணவா: ப்ரோக்தா ஹீநாஸ்தாபாதி₃பி₄ர் த்₃விஜா: ।
தத₂ா ஹ்யவைஷ்ணவா ஜ்ஞேயா: ப்ராக்ருதா: பாபகாரிண: ॥
வேத₃ஶாஸ்த்ரேஷ்வநிபுணாஸ்தே வை நிரயகா₃மிந: ।
தஸ்மாத₃வைஷ்ணவாந் விப்ராந் ந கர்மஸு நியோஜயேத் ॥
மஹாபா₄க₃வதம் விப்ரம் ஆசார்யம் வரயேத் ஸுதீ₄: ।
மஹாபா₄க₃வதா ஏவ நியோஜ்யா ரித்விஜஸ்தத₂ா ॥
ஶங்க₂சக்ரோர்த்₄வ புண்ட்₃ராதி₃ சிஹ்நைஶ்ச ஸஹிதைர்த்₃விஜை: ।
தத்ர யத் கர்ம குர்வீத தந்மஹாவிதி₄வத்₃ப₄வேத் ॥
சக்ராதி₃சிஹ்நைர்ஹீநேந ஸ்த₂ாபிதோ யத்ர கர்மணி ।
ந ஸாந்நித்₄யம் ஹரிர்யாதி க்ரியாகோடிஶதைரபி ॥
அவைஷ்ணவ ஸ்த₂ாபிதாநாம் ப்ரதிமாநாம் ச வந்த₃நம் ।
ய: கரோதி ஸ மூட₄ாத்மா ரௌரவம் நரகம் வ்ரஜேத் ॥
தஸ்மாத்து வைஷ்ணவாஸ்த்வேவ நியோஜ்யா யஜ்ஞகர்மஸு ॥
[7-18...26]

http://acharya.org

[ந்யாஸத்தோடும், அர்த்த₂ஜ்ஞானத்தோடும் கூடிய திருவஷ்டாக்ஷரம் முதலான மந்த்ரங்களை உபதே₃ஶம்பெறுவது மந்த்ரஸம்ஸ்காரம் எனப் படுகிறது. பஞ்சராத்ரத்தில் சொன்ன வழியில் எம்பெருமானுக்குத் திருவாராத₄னம் செய்வது ஐந்தாவதான (யாக₃) ஸம்ஸ்காரமாகும். எம்பெருமானுடைய திருவாராத₄னம் அவனுடைய அடியார்களுக்குச் செய்யும் ஆராத₄னத்தையும் உட்கொண்டதாகும். இத்தகைய ஸம்ஸ்காரங்களையுடையவனே மஹாபா₄க₃வதன் எனப்படுகிறான். தாபம முதலிய முற்கூறிய ஸம்ஸ்காரமற்ற மற்ற அந்தணர்கள் அவைஷ்ணவர்கள் எனப்படுகின்றனர். அந்த அவைஷ்ணவர்கள் ப்ராக்ருதர்கள் என்றும், பாபம் புரிபவர்கள் என்றும் அறியத்தக்க வர்கள். வேத₃ஶாஸ்த்ரங்களின் பொருளையறியாத அவர்கள் நரகத்தை யடைவார்கள். ஆகையால் அவைஷ்ணவர்களான அந்தணர்களைப் ப்ரதிஷ்டா₂கர்மத்தில் வரிக்கக்கூடாது. மஹாபா₄க₃வதனை அந்தண னையே அறிவாளியாயிருப்பவன் ஆசார்யனாக வரிக்கவேண்டும். அவ் வண்ணமே மஹாபா₄க₃வதர்களே ரித்விக்குகளாகவும் நியமிக்கப்பட வேண்டும். ஶங்க₂ம், சக்ரம், ஊர்த்₄வபுண்ட்₃ரம் முதலான அடை யாளங்களோடு கூடிய அந்தணர்களாலே எந்தக் காரியம் செய்யப் படுகிறதோ, அது மிகவும் முறைப்படி செய்யப்பட்ட காரியமாகும். சக்ராதி₃சின்னங்கள் இல்லாதவர்களால் எந்த ப்ரதிஷ்டை₂யில் பி₃ம்ப₃ம் ஸ்தா₂பிக்கப்படுகிறதோ அதில் நூறுகோடி கிரியைகளிருந் தாலும் எம்பெருமான் ஸாந்நித்₄யமடையமாட்டான். அவைஷ்ண வர்களால் ப்ரதிஷ்டை₂ செய்யப்பட்ட பி₃ம்ப₃ங்களை வணங்குபவன் ரௌரவநரகத்தை அடைவான். ஆகையால் ப்ரதிஷ்டா₂கர்மங்களில் வைஷ்ணவர்களையே நியமிக்கவேண்டும்.] என்பதீறாக மஹாபா₄க₃வத லக்ஷணமும், மஹாபா₄க₃வதர்களைக்கொண்டே ப்ரதிஷ்டை₂ செய் விக்கவேண்டுமென்றும், மற்றவர்களைக்கொண்டு செய்விக்கலாகாது என்றும் முழங்கப்பட்டது. பிறகு விஸ்தாரமாக ப்ரதிஷ்டை₂யை வர்ணித்து, அத்தியாயத்தின் கடைசியில்

ஏவம் ப்ரதிஷ்டா₂ம் குர்வீத விஷ்ணோஶ்சைவ விதா₄நத: ।
தத்ர தே₃வ: ஸதா₃ஸாந்நித்₄யம் யாதி நாராயணோ ஹரி: ॥
ப்ரதிஷ்டா₂யாஸ்து ச கர்த்தவ்யோ விதி₄ரேஷ உதா₃ஹ்ருத: ।
க்₃ருஹார்ச்சநே ச கர்த்தவ்யம் விதி₄ம் வக்ஷ்யாமி ஸத்தமா: ॥
ஸ்நாபயேத் பஞ்சக₃வ்யேந மந்த்ரபூதஜலேந ச ।
மந்த்ரேணாவாஹயேத்₃தே₃வம் பரே வ்யோம்நி ஸ்தி₂தம் விபு₄ம் ॥
மஹாபா₄க₃வத: ஸ்ப்ருஷ்ட்வா மந்த்ரரத்நம் ஜபேத் ஸுதீ₄: ।

http://acharya.org

த₃த்₃யாத் புஷ்பாஞ்ஜலிம் பஶ்சாத் தேநைவ ஶதஸங்க்₂யயா ||
ஆஜ்யம் தேநைவ ஹோதவ்யம் அஷ்டோத்தரஶதம் தத: |
உபசாரை: ஸமப்₄யர்ச்ய நமஸ்கார்யா ச ப₄க்தித: ||
வைஷ்ணவாந் பே₄ாஜயேத் பஶ்சாத் த₃க்ஷிணாபி₄: ப்ரதோஷயேத் ||
[7-106...110]

[இவ்வண்ணமாக விஷ்ணுவுக்கு முறைப்படி பிரதிஷ்டை₂ செய்ய வேண்டும். இப்படிச் செய்தால் நாராயணனுகிற ஹரி இந்த பி₃ம்ப₃த்தில் ஸாந்நித்₄யத்தையடைகிருர். ஆலயபி₃ம்ப₃ ப்ரதிஷ்ட₂ா முறை இதுவரை விவரிக்கப்பட்டது. நல்லோர்களே! க்₃ருஹார்ச்சந ப்ரதிஷ்ட₂ாவிதி₄யையும் இனி கூறுகிறேன். பி₃ம்ப₃த்தைப் பஞ்சக₃வ்யத்தாலும், வேத₃மந்த்ரங்களால் பரிஶுத்₃த₄ப்படுத்தப்பட்ட ஜலத்தினுலும் திருமஞ்சனம் செய்யவேண்டும். பரமபத₃த்திலிருக்கும் ஸர்வ வ்யாபியான எம்பெருமானை மந்த்ரங்களைக்கொண்டு அந்த பி₃ம்ப₃த்தில் ஆவாஹனம் செய்யவேண்டும். பி₃ம்ப₃த்தை ஸ்பர்ஶித்து மஹாப₄ாக₃வதனுயிருக்கும் அறிவாளி மந்த்ரரத்னமான த்₃வயத்தை ஜபிக்கவேண்டும். அந்த த்₃வயத்தை நூறுமுறை அநுஸந்தி₄த்து, புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கவேண்டும். அதற்குப்பின் நூற்றெட்டு முறை அந்த த்₃வயத்தைக்கொண்டே நெய் ஹோமம் செய்யப்பட வேண்டும். அதற்குப்பின் அந்த அர்ச்சாவிக்₃ரஹத்தை உபசாரங்களோடு ஆராதி₄த்து, ப₄க்தியோடு நமஸ்கரிக்கவேண்டும். பிறகு வைஷ்ணவர்களுக்கு அமுதளித்து, த₃க்ஷிணைகளாலே உகப்பிக்க வேண்டும்.] என்று வீடுகளில் அர்ச்சாவிக்₃ரஹத்தை ப்ரதிஷ்டை₂ செய்யும் முறையை வர்ணித்து இந்த வஸிஷ்ட₂ஸ்ம்ருதி நிறைவடைகிறது.

''வைஷ்ணவர்களுக்கு ஆசாரம் எது? ஆஹாரம் எது? ஆஶ்ரயணீயம் எது?'' என்று கேள்வி கேட்டுக்கொண்டு இவ்விஷயங்களை விரிவாகச் சொல்லுகிறது இந்த ஸ்ம்ருதி. பஞ்ச ஸம்ஸ்காரம் முதலான வைஷ்ணவ த₄ர்மங்களைச் சொல்லுவதோடல்லாமல், உபநிஷ்க்ராமணம், அந்நப்ராஶநம் தொடக்கமாகச் சரம கைங்கர்யங்கள் ஈருக எல்லா ஸம்ஸ்காரங்களிலும் விஷ்ணு ஸம்ப₃ந்த₄ம் தொடர்ந்து வரவேண்டும் என்று இந்த ஸ்ம்ருதி முழங்குகிறது. இந்த வஸிஷ்ட₂ ஸ்ம்ருதியின் ஏழு அத்தியாயங்களிலும் விஷ்ணு பரத்வமும், மற்ற தெய்வங்களின் சிறுமையும், வைஷ்ணவர்களின் பெருமையும், மற்றவர்களின் தாழ்வும் குன்றிலிட்ட விளக்காகக் காட்டப்பட்டிருப்பது மிகத்தெளிவாக விளங்குகிறது.

http://acharya.org

இனி, கல்கத்தா பதிப்பில் அடுத்து அச்சிடப்பட்டிருக்கும் ப்₃ருஹத்₃யோக₃யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதியில் ப₄க₃வத்பரத்வம் நிலைநாட்டப்பட்டிருப்பதைக் காண்போம்.

ஸ்ரீப்₃ருஹத்₃யோக₃ யாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி நிர்ணயம்

பனிரண்டு அத்தியாயங்கள் கொண்ட இந்த ஸ்ம்ருதியானது நமது பூர்வாசார்யர்களால், குறிப்பாகத் தாத்பர்யசந்த்₃ரிகை முதலானவற்றில் ஸ்ரீவேதா₃ந்த தே₃ஶிகரால், பலவிடங்களில் கையாளப் பட்டுள்ளது. இதில் முதல் அத்தியாயத்தில், மிதி₂லையில் இருக்கும் யாஜ்ஞவல்க்ய மஹரிஷியை மற்ற முனிவர்கள் வேத₃வேதா₃ந்தங்கள், ஸித்₃தா₄ந்தங்கள், ஸ்ம்ருதிகள் முதலான ப்ரமாணங்களின் ஸாரத்தையும், மோக்ஷஸாத₄னமான மேலான ஆத்மஜ்ஞானத்தையும், அதுக்கு அங்க₃மான கர்மாநுஷ்டா₂னம் முதலானவற்றையும் உபதே₃ஶிக்கும்படி பிரார்த்தி₂க்கிறார்கள்.

கிம் த்₄யாநம் கிம் ச வை த்₄யேயம் கிம் லக்ஷ்யம் கிம்ஸ்வரூபகம்।
யச்சோபாஸ்ய விமுச்யேத தத் பரம் ப்₃ரூஹி நோ விபோ₄! ॥
ஹோமகாலே தத₃க்₃நௌ து மத்₄யே கிம் பரிசிந்தயேத்।
யஸ்ய சைவாஹுதிம் த₃த்₃யாத் கிம் தத் ப்₃ரஹ்ம கிமாத்மகம்॥
[1-16...18]

[த்₄யானம் எத்தகையது? தியானிக்கத்தக்கது எது? தியானத்தால் அடையப்படும் இலக்கு எது? (தியானிப்பவன்) எந்த ஸ்வரூபமாயிருக்கிறான்? எல்லாமறிந்தவரே! எதை உபாஸித்து அவன் முக்தியடைகிறானோ அப்பரம்பொருளை எங்களுக்குச் சொல்லும். ஹோமம் செய்யும் போது அக்₃னியின் நடுவில் எதைச் சிந்திக்கவேண்டும்? எதற்கு ஆஹுதியளிக்கவேண்டும்? அந்த ப்₃ரஹ்மம் எது? எத்தகைய ஸ்வரூபத்தையுடையது?] என்பவை இவ்வத்தியாயத்திலுள்ள முக்கியமான கேள்விகள். "கிம் தத் த்₄யாநம் கோ வா த்₄யாதா கஶ்ச த்₄யேய:" [எந்த மந்திரத்தால் தியானம் செய்யவேண்டும்? தியானிப்பவனை எந்த தே₃வதாரூபமாக தியானிக்கவேண்டும்? தியானிக்கப்படுபவன் எந்த தே₃வதை?] என்று அத₂ர்வஶிகோ₂பநிஷத்தின் முதல் க₂ண்ட₃த்தில் கேட்கப்பட்ட கேள்விகளை இவை ஒத்திருப்பதிலிருந்து இந்த ஸ்ம்ருதி அந்த உபநிஷத்திற்கு உபப்₃ரும்ஹணம் என்று விளங்குகிறது. மேல் அத்தியாயங்களில் யாஜ்ஞவல்க்யர் இக்கேள்விகளுக்கு பதிலுரைக்கிறார். இரண்டாமத்தியாயத்தில் ஓங்காரத்தின் சொற்பொருட் பெருமைகள் சிறப்பாக வர்ணிக்கப்படுகின்றன. அதில் ஸாரமான சில பகுதிகளைக் காண்போம்.

http://acharya.org

ஓங்கார: ப்ரணவஸ்தார: த்ர்யக்ஷரஸ்த்ரிகு₃ண: ஸ்ம்ருத: ।
உத்₃கீ₃த₂ஶ்ச தத₂ாதி₃த்யோ ஹம்ஸோ நாராயணோ விபு₄: ॥
ஸௌர்யஶ்யாந்தர்க₃தம் ஸூக்ஷ்மம் விஷ்ணும் தி₃வ்யம் நிரஞ்ஜநம்।
பர்யாயைஶ்ச தத₂ா சாந்யை: ஶாஸ்த்ரேப்₄ய: ஸம்ப்ரகீ₃யதே ॥
ஓங்காரஸம்ஜ்ஞம் த்ரிகு₃ணம் த்ர்யக்ஷரம் ச த்ரிதை₃வதம் ।
த்ரிப்₃ரஹ்ம த்ரிரவஸ்த₂ாநம் த்ரைகால்யம் த்ரிப்ரதிஷ்டி₂தம் ॥
த்ரிப்ரஜ்ஞம் ச த்ரித₄ாமம் ச த்ரிரவஸ்த₂ம் த்ரிலிங்க₃கம் ।
த்ரித₄ாதுகம் ஸமுத்₃தி₃ஷ்டம் ஸர்வக₃ம் பரமேஶ்வரம் ॥
ஸத்த்வம் ரஜஸ்தமஶ்சைவ த்ரிகு₃ணாஸ்தேந ஸ ஸ்ம்ருத:।
அகாரஶ்சாப்யுகாரஶ்ச மகாரஶ்சாக்ஷரத்ரயம் ॥
ப்₃ரஹ்மா விஷ்ணுஶ்ச ருத்₃ரஶ்ச த்ரிதை₃வத்ய உத₃ாஹ்ருத: ।
அக்₃நிவாயுரவிப்₄யஶ்ச த்ரிமாத்ர இதி ஸம்ஜ்ஞித: ॥ (?)
ருக்₃யஜுஶ்ச தத₂ா ஸாம த்ரிப்₃ரஹ்ம இதி ஸம்ஜ்ஞித: ।
பூ₄ர்பு₄வ: ஸ்வஸ்த்ர்யவஸ்த₂ாநம் ஹ்ருத் கண்ட₂ம் தாலுகேதி ச॥
துர்யே ப்ராணே தத₂ாऽऽதி₃த்யே த்ரிஷு சைவ ப்ரதிஷ்டி₂தம் ।
பூ₄தம் ப₄வ்யம் ப₄விஷ்யம் ச த்ரைகால்யம் தேந சோச்யதே ॥
அந்த:ப்ரஜ்ஞோ ப₃ஹி:ப்ரஜ்ஞோ க₄நப்ரஜ்ஞ உத₃ாஹ்ருத: ।
கா₃ர்ஹபத்யோ த₃க்ஷிணாக்₃நி: ஆஹவநீயஸ்த்ரித₄ாமகம் ॥
ஶாந்தோ கோ₄ரஸ்தத₂ா மூட₄ஸ்த்ரிரவஸ்த₂ இதி ஸ்ம்ருத: ।
ஸ்த்ரீ பும் நபும்ஸகம் சேதி த்ரிலிங்க₃ இதி ஸ ஸ்ம்ருத: ॥
வாத: பித்தம் தத₂ா ஶ்லேஷ்மா த்ரித₄ாது: ஸமுத₃ாஹ்ருத: ।
த்ரிப்ரகாரம் விதி₃த்வா து ஓங்காரமுச்யதே த்₃விஜை:! ॥
ஏகைகா து ப₄வேந்மாத்ரா த்ரிகு₃ணா ஸா து வை புந: ।
தாஸாம் ஸர்வம் வாங்மயம் யதே₂ாதம் ப்ரோதம் வ்யவஸ்தி₂தம்॥
ப்ரத₂மா தஸ்ய அகாரோ வாக் ஸத்த்வம் பூ₄ர்ஹுதாஶநோ
விஷ்ணு: ।
ஸ்தூ₂லா ஜாக்₃ரத்₃வ்ருத்திர் விஜ்ஞேயா யோக₃தத்த்வஜ்ஞை: ॥
ப்₃ரஹ்மாந்தரிக்ஷ ஸம்ஜ்ஞோ மநோரஜ: ஸோமஸம்ஜ்ஞக உகார:।
மாத்ரா ஸ்வப்நவிகல்பா விஸ்ருஷ்டிஸம்ஜ்ஞா த்₃விதீயா து ॥
ரௌத்₃ரீ மகாரஸம்ஜ்ஞா ப்ராஜ்ஞாக்₃யா தாமஸீ த்ருதீயா து ।
ஸம்ஹரதி ஜக₃த் ஸமஸ்தம் (ஸர்வம்) ஸௌஷும்நாக்₂யா
மஹாநித்₃ரா ॥ [2-15...29]

http://acharya.org

[ஓங்காரமானது ப்ரணவம் என்றும், தாரம் என்றும் பெயர் பெற்றது. அ, உ, ம் என்னும் மூன்று அக்ஷரங்களை உடையது. முக்குணங்களையுடையது. உத்கீத மந்த்ரமும் அதுவே. அதிதிக்குப் பிள்ளையான உபேந்த்ரனாய் அவதரித்தவனாய், ஹம்ஸாவதாரம் செய்தவனாய், ஸர்வேச்வரனான நாராயணன் அதன் பொருளாவான். ஸூர்யனுக்கு அந்தர்யாமியாயிருப்பவனாய், துணையுவனாய், பரமபதத்தில் எழுந்தருளியிருப்பவனாய், குற்றமற்றவனான விஷ்ணுவே அவன். சாஸ்த்ரங்களில் இந்த விஷ்ணு மற்றும் பல் பெயர்களால் வழங்கப்படுகிறான். ஓங்காரம் என்னும் பொருளுடைய இந்த மந்த்ரம் (1) மூன்று குணங்களையுடையதாகவும், (2) மூன்று அக்ஷரங்களையுடையதாகவும், (3) (அந்த மூன்று அக்ஷரங்களுக்கும் முறையே) மூன்று தெய்வங்களை உடையதாகவும், (4) மூன்று வேதங்களின் ஸாரமாகவும், (5) மூன்று இருப்பிடங்களையுடையதாகவும், (6) மூன்று காலங்களையுடையதாகவும், (7) மூன்று பொருள்களில் நிலைநிற்பதாகவும், (8) மூன்று விதமான அறிவுகளை உடையதாகவும், (9) மூன்று தேஜஸ்ஸுக்களை உடையதாகவும், (10) மூன்று நிலைகளையுடையதாகவும், (11) மூன்று லிங்கங்களை (அடையாளங்களை) உடையதாகவும், (12) மூன்று தாதுக்களையுடையதாகவும் வர்ணிக்கப்படுகிறது. ஸர்வ வ்யாபியான ஸர்வேச்வரனைச் சொல்லுவது. (1) ஸத்வம், ரஜஸ், தமஸ் என்பவை மூன்று குணங்கள். (2) அகாரம், உகாரம், மகாரம் என்பவை மூன்று அக்ஷரங்கள். (3) ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் ஆகியவர் மூன்று தெய்வங்கள். (4) ருக், யஜுஸ், ஸாமம் என்பவை மூன்று வேதங்கள். (5) பூர் புவஸ் ஸுவர்லோகம் அல்லது ஹ்ருதயம், கண்டம், நாக்கு ஆகியவை மூன்று இருப்பிடங்கள். (6) சென்ற காலம், வருங்காலம், நிகழ்காலம் ஆகியவை மூன்று காலங்கள். (7) மும்மூர்த்திகளுக்கும் மூலமான நாராயணனிடத்திலும், பிராணனிலும், ஆதித்யனிடமும் நிலைநிற்பது. (8) உள்ளறிவு, வெளியறிவு, செறிந்த அறிவு ஆகியவை மூன்று அறிவுகள். (9) கார்ஹபத்யம், தக்ஷிணாக்நி, ஆஹவநீயம் ஆகியவை மூன்று தேஜஸ்ஸுக்கள். (10) சாந்தநிலை, கோரநிலை, மூடநிலை ஆகியவை மூன்று நிலைகள். (11) ஆண், பெண், அலி ஆகியவை மூன்று லிங்கங்கள் (அடையாளங்கள்.) (12) வாதம், பித்தம், ஶ்லேஷ்மம் ஆகியவை மூன்று தாதுக்கள். இந்த ஓங்காரத்தை இருபிறப்பாளர்கள் மூன்று மாத்திரை உள்ளதாக அறிந்து கூறுகிறார்கள். ஒவ்வொரு மாத்திரையும் மூன்று குணங்களையுடையது. அவற்றில் எல்லா வாக்கும் குறுக்கும் நெடுக்கு

http://acharya.org

மாகக் கோக்கப்பட்டு நிலைநிறகிறது. ஓங்காரததின் முதலெழுத்து அகாரம் வாக்கு, ஸத்வகுணம். பூமி, அக்3நி, விஷ்ணு ஆகியவர்கள அதன் பொருள் ஸ்தூலமான விழிபபு நிலை அகாரத்தின் பொருள் என்று யோகதத்வ ஜ்ஞானிகளால அறியததககது. இரணடாம எழுததான உகாரததிற்கு பிரமன், அந்தரிக்ஷம், மனஸ, ரஜோகுணம், சந்த்ரன் ஆகியவர்கள பொருள ஸ்ருஷ்டி நிலை எனபபடும் ஸ்வப்நநிலை அதன் பொருள மூன்றுவது அக்ஷரமான மகாரததிற்கு ருத்ரன் பிராணன, தமோகுணம, பெருந் தூககநிலை, ஸாக்ஷாத்கார்டி, ஸர்வஜகத்ஸம்ஹாரம் ஆகியவை பொருள்]

இதிலிருந்து பகவான் விஷ்ணுவே எல்லா எழுத்துக்களுக்கும் முதலான் அகாரத்திறகுப் பொருள் என்றும், ஸத்வகுணத்தை வளரச் செய்பவனென்றும், ப்3ரஹ்ம ருத்ரர்கள், முறையே உகார மகாரங்களுக்குப் பொருளென்றும, ரஜஸ்தமோகுணங்களை வளரச செய்பவர்களென்றும. இந்த மும்மூர்த்திகளுக்கும் மூலமானவன் நாராயணன் எனப்படும் விஷ்ணுவே என்றும தெளிவாக விளங்குகிறது.

ஸர்வே வேதா3 யத்பத3மாமநந்தி தபாமஸி ஸர்வாணி ச
யத்3வத3ந்தி।
யதி3ச்ச2ந்தோ ப்3ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பத3ம்
ஸங்க்3ரஹேண ப்3ரவீம்யோமித்யேதத ॥
ஏததே3வாக்ஷரம் ப்3ரஹ்ம ஏததே3வாக்ஷரம பரம।
ஏததே3வாக்ஷரம் ஜ்ஞாத்வா யோ யதி3ச்ச2தி தஸ்ய தத் ॥
ஸர்வத்3வாராணி ஸம்யம்ய மநோ ஹ்ருதி3 நிருத்4ய ச।
மூர்த்4ந்யாதா4யாத்மந: ப்ராணமாஸ்தி2தோ யோகதா4ரணம் ॥
ஓமித்யேகாக்ஷரம் ப்3ரஹ்ம வ்யாஹரந் மாமநுஸ்மரந்।
ய: ப்ரயாதி த்யஜந் தே3ஹம ஸ யாதி பரமாம் க3திம் ॥
ஆத்3யம் யதத்3க்ஷரம ப்3ரஹ்ம த்ரயீ யஸ்மிந ப்ரதிஷ்டி2தா।
ஸ குஹ்யோऽந்யஸ்த்ரிவ்ருத்3வேதோ3 யோ வேதை3நம் ஸ
வேத3வித் ॥
யதா2 வை ஸங்குநா யாணும் ஸம்வ்ருதம் சைவ ஸர்வத:।
ஏவம் ஸரவாஸ்து வை வாச: ஸந்திர்ணை ப்ரணவேந து ॥
க்லேஶகர்மவிபாகைஶ்ச வாஸநாபி4ஸ்ததை2வ ச।
அபராம்ருஷ்டமேவாஹு புருஷம் ஹ்யீஶ்வரம் ஶ்ருதி: ॥
ஸர்வேர் யஸ்தேஶ்வர: ப்ரோக்தோ வாசக: ப்ரணவ: ஸ்ம்ருத:।
வாசகேந து விஜ்ஞாதோ வாச்ய ஏவ ப்ரஸீத3தி ॥

http://acharya.org

ததர்த்த₂ம் ப்ரணவம் ஜப்யம் த்₄யாதவ்யம் ஸததம் பு₃தை₄: ।
ஈஶ்வர: புருஷாக்₂யஸ்து தேநோபாஸ்து: ப்ரஸீத₃தி ॥
யதா₂ ஹி கௌ₃ளர்வத்ஸக்ருதம் நிஶம்ய
ஹாங்க்ருத்ய வத்ஸாபி₄முகீ₂ ப்ரயாதி ।
ப்₃ரஹ்மாபி தத்₃வத் ப்ரணவோபஹூதம் வக்தாரமாக₃ச்ச₂தி
சாஶு வக்த்ரே ॥
த்₃வே ப்₃ரஹ்மணீ வேதி₃தவ்யே ஶப்₃த₃ப்₃ரஹ்ம பரம் ச யத் ।
ஶப்₃த₃ப்₃ரஹ்மணி நிஷ்ணாத: பரம் ப்₃ரஹ்மாதி₄க₃ச்ச₂தி ॥
அந்த:ஶரீரப்ரபு₄வமுதா₃நப்ரேரிதம் ச யத் ।
வாகு₃ச்சார்யம் ஶ்ரோத்ரவ்ருத்தி ஶப்₃த₃ப்₃ரஹ்ம தது₃ச்யதே ॥
ஶப்₃த₃ப்₃ரஹ்மாத் பரம் ப்₃ரஹ்ம தஸ்மிந் க்ஷீணே யத₃க்ஷரம் ।
தத₃க்ஷரம் ஸதா₃ த்₄யாயேத்₃யதீ₃ச்சே₂த்₃யோக₃மாத்மந: ॥
அகாரஶ்சாப்யுகாரஶ்ச மகாரோ பி₃ந்து₃ரேவ ச ।
மாத்ராஸ்தத்₃விநியோக₃ஶ்ச ப்ரணவ: பஞ்சலக்ஷண: ॥
ஓங்கார: ப்ரணவே யோஜ்யோ ப்₃ரஹ்மணி ப்ரணவஸ்ததா₂ ।
ஆநந்த₃ம் தத் பரம் ப்₃ரஹ்ம தத் ப்ரவிஶ்யாம்ருதீ ப₄வேத் ॥
வேதா₃தௌ₃ ய: ஸ்வர: ப்ரோக்தோ வேதா₃ந்தே ய: ப்ரதிஷ்டி₂த: ।
தஸ்ய ப்ரக்ருதிலீநஸ்ய ய: பர: ஸ மஹேஶ்வர: ॥
யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மநஸா ஸஹ ।
ஆநந்த₃ம் ப்₃ரஹ்மணோ வித்₃வாந் ந பி₃பே₄தி குதஶ்சந ॥
ப்ரணவோ த₄நு: ஶரோ ஹ்யாத்மா ப்₃ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே ।
அப்ரமத்தேந வேத்₃த₄வ்யம் ஶரவத் தந்மயோ ப₄வேத் ॥
ஸ்வதே₃ஹமரணிம் க்ருத்வா ப்ரணவம் சோத்தராரணிம் ।
த்₄யாநநிர்மத₂நாப்₄யாஸாத்₃தே₃வம் பஶ்யேந்நிகூ₃ட₄வத் ॥
ஶப்₃த₃ஸ்பர்ஶாதி₃பி₄ஶ்சைவ ரஸரூபைரலக்ஷித: ।
தே₃வதாயா: பராயாஸ்து ஆலம்ப₃: ப்ரணவ: ஸ்ம்ருத: ॥
கஶ்சித₃ராத₄நாகாமோ விஷ்ணோர்ப₄க்த்யா கரோதி வை ।
தத₃ராத₄நஸித்₃த்₄யர்த்த₂ம் ப்ரதிமாம் வ்யஞ்ஜிகாம் யதா₂ ॥
தா₄துதா₃ர்வாதி₃பாஷாணை: க்ருத்வா ப₄ாவம் நிவேஶயேத் ।
ப₄க்த்யா ஶ்ரத்₃தா₄த₃ராப்₄யாம் ச தஸ்ய விஷ்ணு: ப்ரஸீத₃தி ॥
ஆர்ய: ப்ரபூஜிதோ யத்ர ப்ரத்யக்ஷே ச ப₂லப்ரத₃: ।
ஓங்காரேண ததா₂ ஹ்யாத்மா உபாஸ்த: ஸ ப்ரஸீத₃தி ॥

http://acharya.org

ஏதத்₃ஆலம்ப₃நம் ஶ்ரேஷ்ட₂ம் ஏதத்₃ஆலம்ப₃நம் பரம் ।
ஏதத்₃ஆலம்ப₃நம் ஜ்ஞாத்வா ப்₃ரஹ்மலோகே மஹீயதே ॥
அத்₃ருஷ்டவிக்₃ரஹோ தே₃வோ பா₄வக்₃ராஹ்யோ மநோமய: ।
தஸ்யோங்கார: ஸ்ம்ருதோ நாம தேநாஹூத: ப்ரஸீத₃தி ।
தஸ்மாதே₃ாமிதி பூர்வம் து க்ருத்வா யுஞ்ஜீத தத்பர: ॥
[2-37...61]

[எல்லா வேத₃ங்களும் எந்த ப்ராப்யத்தைச் சொல்லுகின்றனவோ, தவம் முதலான கர்மங்களை விதி₂க்கும் ஸ்ம்ருதிகளும் எதைக் கூறுகின்றனவோ, எதை விரும்பும் உபாஸகர்கள் ப்₃ரஹ்மசர்யத்தை அநுஷ்டி₂க்கின்றனரோ, உபாஸிக்கத்தக்கதான அந்த ப₄க₃வத் ஸ்வரூபத்தைச் சுருக்கமாகச் சொல்லுகிறேன். ஓங்காரத்தால் சொல்லப்படுவதே அது. இந்த ஓங்காரமே வேத₃ ஸாரமானது. இவ்வக்ஷரமே மேலானது. இவ்வெழுத்தையறிந்தவன் எதை விரும்பினாலும் அது அவனுக்குக் கிடைக்கும். (அறிவு வெளிப்படும்) த்₃வாரங்களாயிருக்கும் எல்லா ஜ்ஞானேந்த்₃ரியங்களையும் (தமது தொழிலைச் செய்யாதபடி) அடக்கி மனத்தை ஹ்ருத₃யகமலத்திலிருக்கும் அக்ஷர புருஷனை ப₄க₃வானிடத்தில் ஈடுபடுத்தி, அவனிடத்தில் அசையாத நிலையை அடைந்தவனாய், ப்₃ரஹ்மமாகிற அவனுக்கு வாசகமான ப்ரணவமாகிற முக்₂யாக்ஷரத்தைச் சொல்லாநிற்பவனாய், அதற்குப் பொருளாய், எனக்கு அந்தர்யாமியான எம்பெருமானை அநுஸந்தி₄யாநிற்பவனாய், தன்னுடைய ப்ராணவாயுவை (தனது) தலையில் (தலையிலிருக்கும் ஸுஷும்நா நாடி வழியாகப்) பிரவேசிக்கச் செய்து, ஶரீரத்தை விடுகின்றவன் எவனோ, அவன் (ஸம்ஸாரத்திற்குத்) திரும்பி வருதலில்லாத ப்ராப்யமான ப்ரக்ருதிவியுக்தமான தன் ஆத்மஸ்வரூபத்தை அடைகிறான். வேத₃ம் முழுவதற்கும் மூலமாயிருப்பது ஓங்காரமாகிற இவ்வோரெழுத்து. வேத₃ம் முழுவதும் இதில் நிலைநிற்கிறது. மூன்று வேத₃ங்களிலும் அர்த்த₂த்தை மறைத்து இது ரஹஸ்யமாகச் சொல்லப்பட்டுள்ளது. இதன் பொருளையறிபவன் வேத₃த்தின் பொருளையறிந்தவனாவான். ஓலைச்சுவடி ஶங்குவினால் (மேலும் கீழும் உள்ள கட்டையினால்) முழுவதும் மூடப்பட்டிருப்பதுபோல், எல்லா வேத₃வாக்குகளும் ஓங்காரத்தினால் முழுவதும் மூடப்பட்டுள்ளன. (அஜ்ஞானம், அஹங்காரம், விஷயகாமம்,

http://acharya.org

தால் சொல்லப்படுபவனே, ஸர்வேச்வரன். யஜ்ஞத்துக்கு ஈச்வரனை அவனே ஓங்காரத்துக்குப் பொருளாவான். அவனைச் சொல்லுவது ஓங்காரமாகிற ப்ரணவம். அவனைச் சொல்லும் வாசகமான ப்ரணவத்தால் அவனையறிந்தால், அதனால் சொல்லப்படும் வாச்யனை அவன் அருள்புரிவான். அவனது அருளைப்பெறுவதற்குக் ப்ரணவமானது அறிவாளிகளால் ஜபிக்கவும், தியானிக்கவும் தக்கது. புருஷன் எனப்படும் அந்த ஸர்வேச்வரன் ப்ரணவத்தைக்கொண்டு உபாஸிப்பவனுக்கு அருள்புரிகிறான். கன்றின் குரலைக்கேட்ட பசு அதை நோக்கி ஓடிவருவதுபோலே, ப்ரணவத்தாலே அழைக்கப்பட்ட பரம்பொருளும் அழைப்பவனின் வாயில் வந்து நிற்கிறது. இரண்டு ப்3ரஹ்மங்கள் அறியத்தக்கவை— (1) ஶப்3த3ப்3ரஹ்மமாகிற ப்ரணவம். (2) அதனால் அறியப்படும் பரப்3ரஹ்மம். ஶப்3த3ப்3ரஹ்மமாகிற ப்ரணவத்தில் ஊன்றியவன் பரப்3ரஹ்மத்தையடைகிறான். ஶரீரத்திலிருந்து உண்டாகி உதா3னவாயுவால் தூண்டப்பட்டு, ஏதொரு ஓங்கார வாக்கானது உச்சரிக்கப்பட்டு, கேட்பவர்களுடைய காதையடைகிறதோ அதுவே ஶப்3த3ப்3ரஹ்மம் எனப்படுகிறது. அந்த ஶப்3த3ப்3ரஹ்மத்தின் மூலம் பரப்3ரஹ்மம் அடையப்படுகிறது. அந்தப் பரப்3ரஹ்மம் (பொருளாக)வளிக்கும்படியான ஓங்காரமாகிற அக்ஷரத்தை அந்தப் பரமாத்மாவோடு சேர்த்தியை விரும்புகிறவன் தியானிக்கவேண்டும். அகாரம், உகாரம், மகாரம், பி3ந்து3 என்னும் நான்கும் அந்த ப்ரணவத்தின் மாத்திரைகள். அதன் விநியோக3த்தையும் சேர்த்து ப்ரணவம் ஐந்து பகுதிகளை உடையதாகிறது. அகார உகார மகாரங்கள் சேர்ந்த ஓங்காரம் (முற்கூறியபடி ஐந்து பகுதிகளையுடைய) ப்ரணவத்தில் சேர்ந்தது. (வாசகமான) ப்ரணவம் (வாச்யமான) ப்3ரஹ்மத்தில் அவ்வண்ணமே அடங்கியது. அந்தப் பரப்3ரஹ்மமானது ஆனந்த3 ஸ்வரூபமாயுள்ளது. அதையடைந்தவன் முக்தி பெறுகிறான். வேத3த்தின் ஆதி3யிலே யாதொரு ஸ்வரம் ஓதப்படுகிறதோ, வேத3த்தின் முடிவிலும் யாதொரு ஸ்வரம் நிலைநிறுத்தப்பட்டுள்ளதோ, தனக்குக் காரணமான அகாரத்திலடங்கிய அந்த ப்ரணவமான ஸ்வரத்திற்கு எவன் பொருளாயிருக்கிறானோ, அவனே அனைவர்க்கும் ஈச்வரனாவான். எந்தப் பரம்பொருளிடமிருந்து மனத்துடன் கூடிய வாக்குகள் அதை அடையமுடியாமல் திரும்புகின்றனவோ, அந்தப் பரம்பொருளுடைய ஆனந்த3 கு3ணத்தை அறிந்தவன் எதைக் கண்டும் ப4யப்படமாட்டான். ப்ரணவம் வில்லாகிறது. அதில் பூட்டப்படும் அம்பாயிருப்பது ஆத்மா. அந்த அம்பு அடையவேண்டிய இலக்கு பரம்பொருளாகும். கவனத்தோடு அம்பாகிற ஆத்மாவை, ப்ரணவமாகிற வில்லில் பூட்டி, ப்3ரஹ்மமாகிற இலக்கில் எய்தால்

http://acharya.org

அம்பு இலக்கில் நுழைவதுபோல் ஆத்மாவும் ப்₃ரஹ்மத்தில நுழைந்து அது போன்றதாகின்றது. தன் தே₃ஹத்தைக் கீழ் அரணிக்கட்டையாக்கி, ப்ரணவத்தை மேல அரணிககட்டையாக்கி, தியானத்தால் இடைவிடாமல் கடைந்தால அரணிககட்டையில் மறைந்திருக்கும நெருப்பு வெளிப்படுவதைக காணபதுபோல், நம தே₃ஹததிலும ப்ரணவததிலும் மறைந்திருக்கும் பரம்பொருளை காணலாம. ஶப்₃த₃ஸ்பா்ஶ ரூப ரஸ க₃ந்த₄ங்களாகிற ப்ராக்ருத கு₃ணங்களைக்கொண்டு காண முடியாதது பரம்பொருள். அந்தப் பரதே₃வதையைச் சேதநன் பற்றுவதற்குப் பறறுககோடாயிருப்பது ப்ரணவம. விஷ்ணுவை ஆராதி₄ப்பதற்கு விருமபுகிறவன் அந்த ஆராத₄னம் நிறைவேறுவதற்காக விஷ்ணுவின் அடையாளங்களையுடைய அர்ச்சைத் திருமேனியை ப₄க்தியோடு ப்ரதிஷ்டை₂ செய்கிறான். உலோகம், மரம், கல் முதலானவற்றால் அத்திருமேனியைச் சமைதது அதில ப₄க்தியோடும் ஶ்ரத்₃தை₄யோடும், ஆத₃ரத்தோடும் நினைவைச் செலுத்தவேண்டும். அவனுக்கு விஷ்ணு அருள்புரிகிறான் இவ்வணணமாக அர்ச்சையில் ஆராத₄னம் செய்யப்பட்ட எமபெருமான் ப்ரத்யக்ஷமாகப ப₄லனளிப்பதுபோலே, ஓங்காரத்தினாலே உபாஸிக்கப்பட்டாலும் பரமாத்மா அருள்புரிகிறான். இந்த ஓங்காரத்தைப்பற்றி நிற்பது மிகச்சிறந்தது. இதைப் பற்றிநிறபது மிக மேலானது. பற்றுக்கோடான இதை அறிந்தவன் முகதிபெற்று எங்கும் பரந்த ஜ்ஞானத்தை உடையவனாகிறான். கண்ணால காணமுடியாத திருமேனியை உடைய எம்பெருமான் மனத்தால் உபாஸிக்கப்பட்டு நினைவினால் அறியப்படுகிறான். அவனுக்கு ஓங்காரம் திருநாமமாகிறது. அதனால அழைக்கப்பட்டு அவன் அருள்புரிகிறான். ஆகையால் எமபெருமானை உபாஸிப்பவன் ஓங்காரத்தை முன்னிட்டுக் கொண்டே உபாஸிககக்கடவன்.] என்னும் இப்பகுதியிலிருந்தும் அகாரத்தினாலும் ஓங்காரத்தினாலும் சொல்லப்படும் விஷ்ணுவே பரம்பொருள் என்றும், அவனையடைவதே மோக்ஷம் என்றும தெளிவாக விளங்குகிறது. இனி இவ்வத்தியாயத்தின் இறுதியில் ஓங்காரத்தின் பத்து நாமங்களையும், அவற்றின் நிர்வசனங்களையும், ஓங்காரத்தின் வைப₄வத்தையும் விரிவாக வர்ணிக்கும் பகுதியைக் காண்போம்.

ஓங்காரம் விபுலமசிந்த்யமப்ரமேயம் ஸூக்ஷ்மாகாரம்
த்₄ருவமசலம் ஶிவம் புராணம் |
தத்₃விஷ்ணோ: பத₃முக₂பங்கஜப்ரஸூதம் தே₃ஹாந்த:ஸ்த₂ம்
மநஸி ச யத் ஸ்தி₂திம் கரோதி ||

http://acharya.org

த3ஶ நாமாநி நைருக்தா ஓங்காரஸ்ய ப்ரசக்ஷதே |
அந்வர்த்த2ம் தாநி தாநீஹ வேதி3தவ்யாநி தீ4மதா ||
ஓங்காரம் ப்ரணவம் சைவ ஸர்வவ்யாபிநமேவ ச |
அநந்தம் ச தத2ா தாரம் ஶுக்லம் வைத்3யுதமேவ ச ||
ஹம்ஸம் துர்யம் பரம் ப்3ரஹ்ம இதி நாமாநி ஜாநத |
நிஷ்கலஸ்ய து ஸர்வஜ்ஞ: பர்யாயேண ஹி கீர்த்தித: ||
உச்சார்யமாண: ஸர்வத்ர ஆபாத3தலமஸ்தகம் |
உந்நாமயேச்ச2ரீரம் து ஓங்காரஸ்தேந சோச்யதே ||
ருக்3யஜு:ஸாமாத2ர்வாணி தே3வதாஶ்சாக்ஷரத்ரயம் |
ஶரீரம் வாங்மநஶ்சைவ ப்ராணநாத் ப்ரணவ: ஸ்ம்ருத: ||
ஶரீரம் சைவ விஶ்வம் ச வித்3யாஸ்த2ாநாநி ஸர்வஶ: |
வ்யாப்ய ஸந்திஷ்ட2தே யஸ்மாத் ஸர்வவ்யாபீ தத: ஸ்ம்ருத: ||
அநந்தம் நயதே ஸ்த2ாநம் தஸ்ய சாந்தோ ந லப்4யதே |
ரிஷிதே3வமநுஷ்யேஷு அநந்தஸ்தேந கீர்த்தித: ||
ஸர்வது3:க்க2ஸமுத்த2ாநாத்3ப4வக்3ராஹார்ணவாகுலாத் |
சிந்திதஸ்தாரயேத்3யஸ்மாத்தேந தாரோ நிக3த்3யதே ||
வர்ணேந ச ப4வேச்சு2க்ல: ஶுத்3த4ம் ச நயதே பத3ம் |
த்ரிவித4ம் ஶோஷயேத் பாபம் தேந ஶுக்ல இதி ஸ்ம்ருத: ||
ஆவிஷ்கரோதி ஸ யதோர்ஜ்யோதிரூபம் ப்4ருவோந்தரே |
வித்3யோததே தமோ பி4த்வா வைத்3யுதஸ்தேந கீர்த்தித: ||
ஹ்ருதி3 த்4யாநம் ஸத3ா யஸ்மாத2ாதி3த்யோத்3கீ3த2மேவ ச |
பி4த்வா ஶரீரம் நயதி தஸ்மாத்3த4ம்ஸ இதி ஸ்ம்ருத: ||
ஜாக்3ரத் ஸ்வப்நம் ச ஸுப்தம் ச துர்யம் சைவ சதுர்த்த2கம் |
ஜ்ஞாதஸ்து த்ராயதே யஸ்மாத் துர்யஸ்தேந நிக3த்3யதே ||
வாங்மயஸ்ய து ஸர்வஸ்ய ப்3ரஹ்மணஸ்த்ரிவித்4ஸ்ய ச |
முக2மேதத் ஸமுத்3தி3ஷ்டம் ஶப்3த3ப்3ரஹ்மமயம் விபு4: ||
பரம் ப்3ரஹ்ம நயேத்யேவ பரப்3ரஹ்ம இதி ஸ்ம்ருத: |
ஏவம் நைருக்தகைர்த்3ருஷ்டம்ருஷிபி4ஶ்ச தத2ா பரை: ||
ப3ாஷ்கலைரேகமாத்ரஸ்து ஓங்கார: ஸமுத3ாஹ்ருத: |
ருசகாயந ஆசார்யோ த்3விமாத்ரம் சேச்ச2தே ஸத3ா ||
த்3விமாத்ரஶ்சார்த்த4மாத்ரஸ்து நாரத3ஸ்ய மதேந து |
மௌத்3க3லஸ்ய த்ரிமாத்ரஸ்து ஓங்காரோ நாத்ர ஸம்ஶய: ||

http://acharya.org

வஸிஷ்டஸ்ய மதேநைவ மாத்ரா சாத்ர சதஸ்ரிகா।
த்ரிமாத்ரோ மநுநா சோக்தஸ்ததாந்யை ரிஷிஸத்தமை:॥
பாராஶரைஶ்சதுர்மாத்ரஸ்ததா ஸ்வத்யாத்மசிந்தகை:।
ஹ்ரஸ்வம் தீர்க்கம் ப்லுதம் ஶாந்தம் சதுர்த்தா ஸம்ப்ர-
பேவேத் கர்மவஶாதேவமந்யதா து த்ரிரக்ஷரம்। [கீர்த்திதம்॥
ப்ருகுவாந் யாஜ்ஞவல்க்யஸ்து அமாத்ரம் சேச்சதே ஸதா॥
ய: ஶப்ததமய ஓங்கார உச்சார்ய: ஸ்தூல ஏவ ஸ:।
அமாத்ரஶ்சாப்யநுச்சார்ய: பரோங்கார: ஸ உச்யதே॥
திஸ்ர: ஸார்த்தாஸ்ததா மாத்ரா: ஸ க்ருஹ்ணதி யதாக்ரமம்।
பரம் ப்ரஹ்ம தமேவாஹுஶ்சாத்மாநம் ப்ரஹ்மசிந்தகா:॥
யத் பூர்வம் து ஸமுத்திஷ்டமோங்காரரக்ரே வ்யவஸ்திதம்।
அக்ஷரைஶ்ச பதைஶ்சைவ அதீதம் பஞ்சமம் பதம்॥
யம் (யத்) ப்ராப்ய விநிவர்த்தந்தே ஓங்காரஸ்ய பதி ஸ்திதா:।
மநஸாத்ர ஸமாதாய ஶரீரம் லிங்கமாநவம்॥
ஸங்கல்பம் வ்யவஸாயம் ச அபிமாநாக்ய ஸம்ஜ்ஞகம்।
சேதநாதிஷ்டிதம் ஸூக்ஷ்மம் ததா ஸூக்ஷ்மை: ஸஹைவ து॥
ஓங்காரபத்மநாலேந ஹ்ருத உத்த்ருத்ய யோஜயேத்।
பரமே வ்யோம்நயநந்தாக்யே ஸர்வஸங்கல்பவர்ஜிதே॥
தஸ்மிம்ஸ்தாவந்நிரோத்தவ்யம் மநஶ்சோங்காரமேவ ச।
யாவந்நிர்மலதாம் யாதி ஏஷ யோக உதாஹ்ருத:॥
மநோ யுஞ்ஜ்யாத்ததோங்காரே ஓங்காரம் ப்ரணவே ததா।
ப்ரணவம் ப்ரஹ்மணி ஸ்தாப்ய ந கிஞ்சிதபி சிந்தயேத்॥
ப்ரணவோ விமல: ஶுத்தோ நி:ஶப்தோ வ்யோமஸம்ஜ்ஞக:।
தஸ்மாதுத்பத்யதே ப்ராண: புநஸ்தத்ரைவ லீயதே॥
ப்ரணவே நித்யயுக்தஸ்ய ந பயம் வித்யதே க்வசித்।
து:க்கே பயாபிகாதார்த்தே ஸர்வதா ப்ரணவம் ஸ்மரேத்॥
ப்ரணவோ ஹ்யபரம் ப்ரஹ்ம ப்ரணவஶ்ச பர: ஸ்ம்ருத:।
ப்ரணவோ ஹ்யாதிஸர்க்கஸ்ய அந்தோ மத்யஸ்ததைவ ச॥
ஏவம் ஹி ப்ரணவம் ஜ்ஞாத்வா விஶந்தி ப்ரஹ்ம நிஷ்கலம்।
அபூர்வோऽநந்தரோऽபாஹ்யோऽநபர: ப்ரணவோऽவ்யய:॥
ப்ரணவோ ஹீஶ்வரோ தேவோ ஹ்ருதி ஸர்வஸ்ய திஷ்டித:।
ஸர்வவ்யாபிநமோங்காரம் மத்வா தீரோ ந ஶோசதி॥

http://acharya.org

அமாத்ரம் ச த்ரிமாத்ரம் ச அத்₃வைதம் ப்₃ரஹ்ம தத் பரம்।
ஸ்தூ₂லம் சாப்யதிஸூக்ஷ்மம் ச ஸர்வத: கிமபி ஸ்தி₂தம் ॥
ஓங்காரம் விந்த₃தே யஸ்து ஸ ப₄வேத்₃வேத₃வித்₃ த்₃விஜ: ।
யதா₂ பத்ரம் ப₂லம் புஷ்பம் ஶங்குநைகேந தா₄ர்யதே ॥
ததா₂ ஜக₃தி₃த₃ம் ஸர்வமோங்காரேணைவ தா₄ர்யதே ।
ஜப்யேந த₃ஹதே பாபம் ப்ராணாயாமைஸ்ததா₂ மலம் ॥
த்₄யாநேந ஜந்மநிர்க்க₄ாதம் தா₄ரணாபி₄ஶ்ச முச்யதே ।
ப்₃ரஹ்மண: ப்ரணவம் குர்யாதா₃தா₃வந்தே ச ஸர்வதா₃ ॥
ஸ்ரவத்யநோங்க்ருதம் பூர்வம் பரஸ்தாச்ச விஶீர்யதே ।
ப்ரோக்ஷணே போஷணே சைவ ப்ரதிஷ்டா₂நே ப்ரதிக்₃ரஹே ॥
ஆஶ்ராவணே வஷட்காரே ப்ரத்யாஶ்ராவே ஜபேऽபி ச ।
ஸாமஸு ப்₃ரஹ்மமுக்₂யேஷு ருக்₃யஜுஸ்ஸ்தோத்ரஶஸ்த்ரயோ:॥
ஸர்வமந்த்ரப்ரயோகே₃ஷு ஓமித்யாதௌ₃ ப்ரயுஜ்யதே ।
தேந ஸம்பரிபூர்ணாநி யதோ₂க்தாநி ப₄வந்தி ச ॥
ஸர்வமந்த்ராதி₄ராஜேந ஓங்காரேண ந ஸம்ஶய: ।
யதூ₂நம் சாதிரிக்தம் ச யச்சி₂த்₃ரம் யத₃யாஜ்ஞிகம் ॥
யத₃மேத்₄யமஶுத்₃த₄ம் வா யாதயாமம் ச யத்₃ப₄வேத் ।
ஓங்காரேண ப்ரயுக்தேந ஸர்வம் சாவிகலம் ப₄வேத் ॥
அநூநம் நாதிரிக்தம் ச அச்சி₂த்₃ரம் யாஜ்ஞிகம் ததா₂ ।
மேத்₄யம் ஶுத்₃த₄மயாதயாமம் பவித்ரம் மங்க₃ளம் ததா₂ ॥
ஸர்வமங்க₃ளமாங்க₃ள்யம் ஸர்வப்₃ரஹ்மமயம் விபு₄ம் ।
பாவநம் மோக்ஷத₃ம் புண்யம் ஸர்வதே₃வமயம் விபு₄ம் ॥
விதி₃த்வா முச்யதே க்ஷிப்ரம் ஜந்மஸம்ஸாரப₃ந்த₄நாத் ।
முக்தோ ந ஜாயதே பூ₄யோ ப்₃ரஹ்மபூ₄த: ஸநாதந: ॥
ஏதத் ஸம்க்ஷேபத: ப்ரோக்தம் ஓங்காரகு₃ணவர்ணநம் ।
விஸ்தரேண ந ஶக்யந்தே வக்தும் வர்ஷஶதைரபி ।
யோக₃ாசார்யேண ஸஞ்சிந்த்ய யாஜ்ஞவல்க்யேந தீ₄மதா ।
ஓங்காரநிர்ணயோ ஹ்யேஷ ப்ரோக்த: ஶிஷ்யஹிதைஷிணா ॥
[2-112....158]

[விரிவான பொருளையுடையதும், நினைத்தற்கரியதும், அளவற்றதும், ஸூக்ஷ்மமாயிருப்பதும், நிலையானதும், அசையாததும், மங்களமானதும், பழையதாயிருந்தும் புதியதாயிருப்பதுமானது ஓங்காரம். அது

வி—96

எம்பெருமானைச் சொல்லும் பத₃மாகவும், அவனுடைய திருமுக₂த் தாமரையிலிருந்து உண்டானதாகவும், திருமேனியில் இருப்பதாகவும் இருந்துகொண்டு சேதனர்களுடைய மனத்தை நிலையானதாகப் பண்ணுகிறது. நிருக்தி ஶாஸ்த்ரத்தில் வல்லவர்கள் ஓங்காரத்திற்குப் பத்து நாமங்களிருப்பதாகக் கூறுகிறார்கள், அந்த நாமங்கள் ஓங்காரத்திற்குப் பொருத்தமான பொருளுடையவை என்று அறிவாளியால் அறியத்தக்கது. (1) ஓங்காரம் (2) ப்ரணவம் (3) ஸர்வவ்யாபி (4) அநந்தம் (5) தாரம் (6) ஶுக்லம் (7) வைத்₃யுதம் (8) ஹம்ஸம் (9) துர்யம் (10) பரம்ப்₃ரஹ்ம என்னுமிவற்றை ஓங்காரத்தின் நாமங்களாக அறிவீர்களாக. அவயவமற்றவனாகவும், எல்லாமறிந்தவனாகவும் இருக்கும் பரப்₃ரஹ்மம் அந்த ஓங்காரத்திற்கு வாச்யனாயிருக்கையாலே, அதற்குப் பர்யாயமாகக் கூறப்படுகிறான். [மூலத்தில் 'நிஷ்கலஸ்ய' என்றிருப்பதை 'நிஷ்கலஶ்ச' என்று திருத்தவும்] (1) அந்த ஓங்காரமானது எங்கும் உச்சரிக்கப்படும்போது காலிலிருந்து தலைவரையில் ஶரீரத்தை உயர்த்துகிறதாகையால் ஓங்காரம் எனப்படுகிறது. (2) ருக்₃யஜுஸ்ஸாமாத₂ர்வணவேத₃ங்களையும், அவற்றிற்குரிய தே₃வதைகளையும், அகார உகார மகாரங்களாகிற மூன்று அக்ஷரங்களையும், ஶரீரத்தையும், வாக்கையும், மனஸ்ஸையும் ப்ராண (ப்ரணம?)னம் செய்கிறதாகையாலே (அந்தணர்களுக்கு வளைத்துக் கொடுக்கிறது. அதாவது வசப்படுத்துகிறது; ஆகையாலே) ப்ரணவம் எனப்படுகிறது. (3) ஶரீரத்தையும், உலகனைத்தையும், வித்₃யாஸ்த₂ானங்களையும் எல்லாப்படியாலும் வியாபித்திருக்கையாலே ஸர்வவ்யாபி என்று சொல்லப்படுகிறது. (4) அந்த ஓங்காரம் அநந்தமான மோக்ஷ லோகத்தை அடைவிக்கிறதாகையாலும், அதற்கு அழிவில்லையாகையாலும் ரிஷிகள், தே₃வர்கள், மனிதர்களிடையே அது அநந்தம் என்று பெயர்பெற்றிருக்கிறது. (5) பல முதலைகள் நிறைந்த ஸம்ஸாரக் கடலில் மூழ்கி வருந்துகிறவர்களை, தன்னைச் சிந்தித்த மாத்திரத்தில் எல்லாத் துன்பங்களிலிருந்தும் தாண்டுவிக்கிறதாகையாலே தாரம் எனப்படுகிறது. [மூலத்தில் 'ஸமுத்த₂ நாத்₃ப₄வக்₃ராஹார்ணவாகுலாத்' என்பதை 'ஸமுத்தாராத்₃ப₄வக்₃ராஹார்ணவாகுலாந்' என்று திருத்தவும்.] (6) இந்த ஓங்காரத்திற்குரிய வர்ணம் ஶுக்லமாகையாலும், ஶுத்₃த₄மான அப்ராக்ருதலோகத்தை இது அடைவிக்கிறதாகையாலும், (ஸஞ்சிதம், ப்ராரப்₃த₄ம், உத்தராக₄ம்) என்னும் மூன்றுவித₄மான பாபங்களை ஶோஷணம் (வற்றச்) செய்கிறதாகையாலும் இது ஶுக்லம் எனப்படுகிறது. (7) யோகி₃களுடைய புருவங்களின் நடுவில் பரஞ்சோதியான எம்பெருமானை ஆவிர்ப்பவிக்கச் செய்கிறதாகையாலும், அஜ்ஞானமாகிற இருளைப்பிளந்து,

http://acharya.org

விஶேஷமாக ப்ரகாஶிக்கிறதாகையாலும் ஓங்காரம் வைத்₃யுதம் எனப் படுகிறது. (8) இந்த ஓங்காரம் எப்போதும் நெஞ்சில் தியானிக்கப் படுகிறதாகையாலும் ஆதி₃த்யன் என்றும் உத்₃கீ₃த₂ன் என்றும் சொல்லப்படும் பரமபுருஷனை சேதன ஶரீரத்தைப் பிளந்து அழைத்து வருகிறதாகையாலும் இது ஹம்ஸம் எனப்படுகிறது. (9) விழிப்பு நிலை, ஸ்வப்நநிலை, தூக்கநிலை, நாலாவதான மூர்ச்சை₂நிலை என்னும் இந்நாலு நிலைகளிலிருந்தும் தன் பொருளை உணர்ந்தவனைக் காப் பாற்றுகிறதாகையால் ஓங்காரம் துர்யம் எனப்படுகிறது. (10) வாக்₃ ரூபமாயிருப்பதாய், ருக்₃யஜுஸ்ஸாமம் என்று மூன்று வகைப்பட்ட ப்₃ரஹ்மம் (வேத₃ம்) அனைத்துக்கும் இவ்வோங்காரமானது முக₂மாகக் கருதப்படுகிறது. எல்லா வேத₃த்திலும் வியாபித்திருக்கும் இது ஶப்₃த₃ப்₃ரஹ்மமாகையாலும். பரப்₃ரஹ்மஶப்₃த₃த்தால் சொல்லப்படும் பரமபுருஷனிடம் அழைத்துச் செல்லுகிறதாகையாலும் இவ்வோங் காரம் பரப்₃ரஹ்மம் எனப்படுகிறது. இவ்வண்ணமாக நிருக்திகாரர் களாலும், மற்ற ரிஷிகளாலும் ஓங்காரத்தின் பத்து நாமங்களுக்கும் பொருள் கூறப்படுகிறது. ப₃ஷ்கலஶாகை₂யைச் சேர்ந்தவர்கள் ஓங் காரத்தை ஒரு மாத்திரையுடையதாகக் கூறுகிறார்கள். 'ருசகாயநர்' என்னும் ஆசார்யர் ஓங்காரம் எப்போதும் இரு மாத்திரை யுடையதென்று கருதுகிறார். நாரத₃ரின் கருத்தோவெனில், இரண்டரை மாத்திரை உள்ளது என்பது. 'மௌத்₃க₃லர்' மூன்று மாத்திரையுள்ளதாக ஓங்காரத்தை நிஷ்கர்ஷித்திருக்கிறார். இதில் ஐயமில்லை. வஸிஷ்ட₂ருடைய கருத்துப்படி ஓங்காரத்திற்கு நாலு மாத்திரை உள்ளது. மநு மூன்று மாத்திரை உள்ளதாகச் சொன் னார். மற்ற பல ரிஷிஶ்ரேஷ்ட₂ர்களும் இப்படியே கூறுகிறார்கள். பராஶரரின் வம்ஶத்தில் வந்தவர்களும், ஆத்மஜ்ஞானிகளும் நாலு மாத்திரை உள்ளதாகக் கூறுகிறார்கள். ஓங்காரமானது ஹ்ரஸ்வம், தீ₃ர்க₄ம், ப்லுதம், ஶாந்தம் என்று நான்குவகையாகக் கூறப்படு கிறது. காரியவஶத்தால் அது இப்படி நாலுவகையாகிறது. மற்றபடி அது [அ, உ, ம் என்று] மூன்று அக்ஷரங்களையுடையதே. ப₄க₃வான் யாஜ்ஞவல்க்யரோவெனில், ஓங்காரத்திற்கு எப்போதும் மாத்திரையே கிடையாது என்று கருதுகிறார். ஸ்தூ₂லமாய், ஸூக்ஷ்மமயமான ஓங்காரமே உச்சரிக்கத்தக்கது. மாத்திரையில்லாத ஓங்காரம் உச்ச ரிக்கத் தகாதது. அது பரோங்காரம் என்று கூறப்படுகிறது. அந்தப் பரோங்காரமானது படிப்படியாக மூன்றரை மாத்திரைகளை ஏற்றுக் கொள்கிறது. அந்த மூன்றரைமாத்திரையுள்ள ஓங்காரத்தையே ப்₃ரஹ்மஜ்ஞாநிகள் பரப்₃ரஹ்மத்தையும், ஜீவாத்மாவையும் சொல்லு வதாகக் கூறுகிறார்கள். (இதற்குப்பின் இரண்டு ஶ்லோகங்கள் யோக₃

http://acharya.org

முறையை விளக்குவதால் யோகஶாஸ்த்ரங்களைக்கொண்டு பொருளறியத்தக்கவை.) சேதனனால் செய்யப்படும் (ப்ராக்ருதவிஷயமான) ஸூக்ஷ்மமான ஸங்கல்பத்தையும், உறுதியையும், அபிமானத்தையும், மற்றும் ஸூக்ஷ்மமான எண்ணங்களையும் ஓங்காரமாகிற தாமரைத் தண்டினாலே தன் ஹ்ருதயத்திலிருந்து எடுத்து. தன் மனத்தையும் ஓங்காரத்தையும் பரமாகாஶம் எனப்படுபவனாய், (முற்கூறிய தாழ்ந்த) ஸங்கல்பம் எதுவுமில்லாதவனாய். அநந்தன் என்று பெயர்பெற்றவனான பரமாத்மாவிடம் தான் அழுக்கற்றவனாகும் வரையில் சேர்த்திருக்கவேண்டும். இதுவே யோகம் எனப்படுகிறது. மனத்தை ஓங்காரத்திலும், ஓங்காரத்தை ப்ரணவத்திலும் சேர்க்கவேண்டும். ப்ரணவத்தை ப்ரஹ்மத்திடம் நிலைநிறுத்தி. வேறெதையும் சிந்திக்கக்கூடாது. ப்ரணவமானது அழுக்கற்றதாய், ஶாந்தமானதாய், ஒலியற்றதாய், ஆகாஶம் எனப்படுவதாயுள்ளது. அதிலிருந்தே ப்ராணன் உண்டாகி, மறுபடியும் அதிலேயே ஒடுங்குகிறது. ப்ரணவத்தில் எப்போதும் சேர்ந்திருப்பவனுக்கு எதனிடமும் பயமில்லை. து:க்கம் ஏற்படும்போதும், பயத்தினாலும் தாபத்ரயங்களாலும் வருந்தும்போதும் எப்போதும் ப்ரணவத்தை நினைக்கவேண்டும். ப்ரணவம் ப்ரஹ்மத்தின் மற்றொருருவமாகும். ப்ரணவமே மேலான மந்த்ரமாகக் கூறப்படுகிறது. ப்ரணவம் படைப்புக்கு முதலும் நடுவும் முடிவுமாகிறது. இவ்வண்ணமாக ப்ரணவத்தையறிந்து, (ப்ராக்ருதமான) அவயவங்களற்ற ப்ரஹ்மத்தையடைகிறார்கள். முன்னும்பின்னுமற்றதாய், உள்ளும் வெளியுமற்றதாய், அழிவற்றதாயிருப்பது ப்ரணவம். அனைவருடைய ஹ்ருதயத்திலும் எழுந்தருளியிக்கும் தேவனான ஈஶ்வரன் ப்ரணவத்தின் பொருளாவான், ஸர்வவ்யாபியான ஓங்காரத்தை நினைக்கும் அறிவாளி எப்போதும் வருந்தமாட்டான். மாத்திரைகளற்றதும், மூன்று மாத்திரைகள் உள்ளதுமான ஓங்காரம் முறையே ஸூக்ஷ்மமான உலகையும், ஸ்தூலமான உலகையும் எங்கும் வியாபித்திருக்கும் ஒப்பற்ற பரப்ரஹ்மத்தைக் கூறுகிறது. எவனொருவன் ஓங்காரத்தின் பொருளையறிகிறானோ அவ்வந்தணன் வேதமனைத்தின் பொருளையும் அறிந்தவனாகிறான். இலை, பழம், புஷ்பம் முதலானவை ஒரு முளையாலே தரிக்கப்படுவதுபோலே, ஓங்காரத்தினால் இவ்வுலகனைத்தும் தரிக்கப்படுகிறது. (ஓங்காரத்தைக்கொண்டு) ஜபிப்பதால் பாபம் எரிக்கப்படுகிறது; ப்ராணாயாமம் செய்வதால் மனத்திலுள்ள அழுக்கு எரிக்கப்படுகிறது; தியானம் செய்வதால் பிறப்பு நீங்குகிறது: தாரணைகளினால் முக்தியடைகிறான். வேதத்திற்கு முன்னும் பின்னும் எப்போதும் ஓங்காரத்தை ஓதவேண்டும். (பெட்டியிலுள்ள ரத்னம் பெட்டியின் அடிப்பாகம் இல்லாவிடில் நழுவி

http://acharya.org

விடுவதுபோலேயும், பெட்டியின் மேல்மூடியில்லாவிடில் சிதறிவிடுவது போலேயும்) வேத₃த்திற்கு முன் ஓங்காரத்தை ஓதாவிடில் வேத₃ம் நழுவிவிடும். பின்னால் ஓங்காரத்தை ஓதாவிடில் வேத₃ம் சிதறிவிடும். ப்ரோக்ஷணம், பே(ர)ஷணம், ப்ரதிஷ்டா₂நம், த₃ாநம் வாங்குதல், ஆஶ்ராவணம், வஷட்காரம், ப்ரத்யாஶ்ராவம், ஜபம், வேத₃த்தில் ப்ரதா₄நமான ஸாமமந்த்ரங்கள், ருக்₃யஜுர்வேத₃ங்களிலுள்ள ஸ்தோத்ரம், ஶஸ்த்ரம் எனும் வேத₃ப்பகுதிகள், மற்ற எல்லா மந்த்ர ப்ரயோக₃ங்கள் ஆகிய அனைத்திலும் ஆதி₃யில் 'ஓம்' என்று ப்ரயோக₃ம் செய்யவேண்டும். எல்லா மந்த்ரங்களிலும் தலைமைபெற்ற அந்த ஓங்காரத்தினாலேயே அவையவை பரிபூர்ணமானவையாகவும், விதி₄ப்படி அநுஷ்டி₂க்கப்பட்டவையாகவும் ஆகும். இதில் ஐயமில்லை. (எல்லாக்கர்மங்களிலும்) குறைவாகவோ, மிகுதியாகவோ, இடையூறு உள்ளதாகவோ, யஜ்ஞத்திற்கு முரணானதாகவோ, யாக₃த்திற்குத் தகாததாகவோ, அஶுத்₃த₄மாகவோ, யாதயாமமாகவோ எது இருக்கிறதோ அது அனைத்தும் ஓங்காரம் ப்ரயோகி₃க்கப்பட்டால் குறைநீங்கியதாகிறது. குறைந்தது நிறைவடைகிறது. மிகுதியானது சரியாகிறது. இடையூறு உள்ளது இடையூறு அற்றதாகிறது. யஜ்ஞத்திற்கு முரணானது யஜ்ஞத்தை ஒட்டியதாகிறது. யாக₃த்திற்குத் தகாதது தகுந்ததாகிறது. அஶுத்₃த₄ம் ஶுத்₃த₄மாகிறது. யாதயாமம் அயாதயாமமாகிறது. அனைத்தும் பரிஶுத்₃த₄மாகவும், மங்க₃ளமாகவும் ஆகிறது. எல்லா மங்க₃ளங்களுடைய மங்க₃ளத்தையும் உடையதாய், ஸர்வவேத₃மயமாயிருப்பதாய், எங்கும் பரவியதாய், பரிஶுத்₃த₄ப்படுத்துவதாய், மோக்ஷத்தையளிப்பதாய், புண்யமாயிருப்பதாய், ஸர்வதே₃வமயமானதான இவ்வோங்காரத்தையறிந்தவன் ஜந்மஸம்ஸாரக்கட்டிலிருந்து விடுபடுகிறான். எங்கும் ப்₃ரஹ்மத்தைப்போலான அந்த முக்தன் மறுபடியும் இவ்வுலகில் பிறப்பதில்லை. ஓங்காரத்தின் பெருமைகள் இதுவரையில் சுருக்கமாக வர்ணிக்கப்பட்டன. நூறுவருஷங்களாலும் இவற்றை விரிவாகச் சொல்லமுடியாது. அறிவாளியாய், யோகா₃சார்யராய், ஶிஷ்யர்களுக்கு நன்மையை விரும்புகிறவரான யாஜ்ஞவல்க்யரால் ஓங்காரத்தைப் பற்றிய இந்த நிர்ணயம் உபதே₃ஶிக்கப்பட்டது]

இந்த ஸ்ம்ருதிபா₄க₃ம் முழுவதும் அத₂ர்வஶிரஸ்ஸிலுள்ள பின் வரும் பகுதிகளுக்கு உபப்₃ரும்ஹணமாய் (விளக்கமாய்) உள்ளது கீழே காணத்தக்கது.

''ஸ ஓங்காரோ ய ஓங்கார: ஸ ப்ரணவோ ய: ப்ரணவ: ஸ ஸர்வவ்யாபீ யஸ்ஸர்வவ்யாபீ ஸோநந்தோ யோநந்த: தத்தாரம் யத்தாரம்

http://acharya.org

தத்ஸூக்ஷ்மம் யத்ஸூக்ஷ்மம் தச்சு3க்லம் யச்சு3க்லம் தத்3வைத்3யுதம் யத்3வைத்3யுதம் தத் பரம்ப்3ரஹ்மேதி।..........அத2 கஸ்மாது3ச்யத ஓங்காரோ யஸ்மாது3ச்சார்யமாண ஏவ ஸர்வம் ஶரீரமூர்த்4வம் உந்நாமயதி தஸ்மாது3ச்யத ஓங்கார:। அத2 கஸ்மாது3ச்யதே ப்ரணவ:? யஸ்மாது3ச்சார்யமாண ஏவ ருசோ யஜூம்ஷி ஸாமாந்யதர்வாங்கி3ரஸம்ச.........ப்3ராஹ்மணேப்4ய: ப்ரணமயதி தஸ்மாது3ச்யதே ப்ரணவ:। அத2 கஸ்மாது3ச்யதே ஸர்வவ்யாபீ? யஸ்மாது3ச்சார்யமாண ஏவ ஸர்வாந் லோகாந் வ்யாப்நோதி........தஸ்மாது3ச்யதே ஸர்வவ்யாபீ। அத2 கஸ்மாது3ச்யதே அநந்த:? யஸ்மாது3ச்சார்யமாண ஏவ ஆத்3யந்தம் நோபலப்4யதே — திர்யகூ3ர்த்4வமத4ஸ்தா2த் தஸ்மாது3ச்யதே அநந்த:। அத2 கஸ்மாது3ச்யதே தாரம்? யஸ்மாது3ச்சார்யமாண ஏவ க3ர்ப்ப4ஜந்ம ஜராமரண ஸம்ஸார மஹத்3ப4யாத் ஸந்தாரயதி தஸ்மாது3ச்யதே தாரம்।........அத2 கஸ்மாது3ச்யதே ஶுக்லம்? யஸ்மாது3ச்சார்யமாண ஏவ க்லந்த3தே க்லாமயதே தஸ்மாது3ச்யதே ஶுக்லம்। அத2 கஸ்மாது3ச்யதே வைத்3யுதம்? யஸ்மாது3ச்சார்யமாண ஏவ மஹதி தமஸி ஸர்வம் ஶரீரம் வித்3யோதயதி தஸ்மாது3ச்யதே வைத்3யுதம்। அத2 கஸ்மாது3ச்யதே பரம்ப்3ரஹ்ம? யஸ்மாது3ச்சார்யமாண ஏவ ப்3ருஹதி ப்3ரும்ஹயதி தஸ்மாது3ச்யதே பரம்ப்3ரஹ்ம।''

[ஓங்காரமே ப்ரணவம், ஸர்வவ்யாபீ, அநந்தன், தாரம், (ஸூக்ஷ்மம்), ஶுக்லம், வைத்3யுதம், பரப்3ரஹ்மம் என்று சொல்லப்படுகிறது...... அது ஏன் ஓங்காரம் என்று சொல்லப்படுகிறது? அது உச்சரிக்கப் படும்போதே ஶரீரம் முழுவதையும் மேலே உயர்த்துகிறதாகையால் ஓங்காரம் எனப்படுகிறது. அது ஏன் ப்ரணவம் என்று கூறப்படு கிறது? அது உச்சரிக்கப்படும்போதே ருக்3யஜுஸ்ஸாமாதர்வாங்கி3ரஸ்ஸுக்களையும்......ப்3ராஹ்மணர்களுக்கு வளைத்துக் கொடுக்கிறது. அதாவது வஶப்படுத்துகிறது அதனால் ப்ரணவம் எனப்படுகிறது. அது ஏன் ஸர்வவ்யாபி என்று வழங்கப்படுகிறது? அது உச்சரிக்கப் படும்போதே எல்லா உலகங்களையும் வியாபிக்கிறதாகையால் ஸர்வ வ்யாபி எனப்படுகிறது. அது ஏன் அநந்தன் என்று படிக்கப்படு கிறது? அது உச்சரிக்கப்படும்போதே அதற்கு முதலும் முடிவும் காணப்படுவதில்லை, பக்கங்களும், மேலும், கீழும் காணப்படுவதில்லை. அதனால் அநந்தன் எனப்படுகிறது. அது ஏன் தாரம் என்று முழங் கப்படுகிறது? அது உச்சரிக்கப்படும்போதே க3ர்ப்ப4வாஸம், பிறப்பு, கிழத்தனம், மரணம் முதலான ஸம்ஸாரத்திலுள்ள பெரும்ப4யங்களி லிருந்து தாண்டுவிக்கிறதாகையாலே தாரம் எனப்படுகிறது......அது ஏன் ஶுக்லம் என்று உரைக்கப்படுகிறது? அது (ஶுத்3த4லோகத்தை)

http://acharya.org

அடைவிக்கிறதாகையாலும், (பாபங்களை) வற்றச்செய்கிறதாகையாலும் ஶுக்லம் எனப்படுகிறது. அது ஏன் வைத்₃யுதம் என்று வ்யவ ஹரிக்கப்படுகிறது? அது உச்சரிக்கப்படும்போதே பேரிருளான இந்த ஸம்ஸாரத்திலும், தன் உருவம் முழுவதையும் பிரகாஶிக்கச் செய் கிறது. அதனால் வைத்₃யுதம் எனப்படுகிறது. அது ஏன் பரப்₃ரஹ் மம் என்று கோ₄ஷிக்கப்படுகிறது? அது உச்சரிக்கப்படும்போதே எல்லா வேத₃த்திலும் வியாபித்திருக்கையாலும், ஜீவனை (மோக்ஷ மடையச் செய்வதன்மூலம்) பெரியவனாக்குகிறதாகையாலும் பர ப்₃ரஹ்மம் எனப்படுகிறது.]

இவ்வண்ணமாக, இவ்வுபநிஷத்₃வாக்யம் ஓங்காரநிர்வசனபரமாக யோக₃யாஜ்ஞவல்க்யரால் விளக்கப்பட்டுவிட்டபடியால் இந்த அத₂ர்வ ஶிரஸ் வாக்யத்தையொட்டி, ருத்₃ரன், ஈஶாநன், ப₄க₃வான், மஹேஶ் வரன், மஹாதே₃வன் என்று படி₂க்கப்பட்டிருக்கும் நாமங்களும், அதன் நிர்வசனங்களும் ஓங்காரத்தின் நாம நிர்வசனங்களே என்று விளங்குகிறது. ஆகையால், இவற்றைக்கொண்டு ருத்₃ரபரத்வம் ஸ்தா₂பிக்க இயலாது என்றும் தெளிவாகிறது. அநந்தன் ப₄க₃வான் என்னும் ப₄க₃வந்நாமங்களையும் இங்கு ஓங்காரத்தைக் குறித்துப் பிரயோகி₃த்திருப்பதை நோக்கவேணும். இவ்விஷயங்கள் விஷ்ணு சித்தவிஜயத்தின் முதல் அத்தியாயத்தின் இரண்டாம் பாத₃த்தின் கடைசியில் (பக்கம் 436-439) விளக்கப்பட்டுள்ளது காணத்தக்கது.

இனி, வ்யாஹ்ருதிநிர்ணயபரமான மூன்றாம் அத்தியாயத்தில் பரமாத்ம ப்ரஸ்தாவமுள்ள பகுதிகளைக் காண்போம்.

ஏதாஸ்து வ்யாஹ்ருதீ: ஸப்த ய: ஸ்மரேத் ப்ராணஸம்யமே |
உபாஸிதம் ப₄வேத் தஸ்ய விஶ்வம் பு₄வநஸப்தகம் ||
ஸர்வேஷு சைவ லோகேஷு காமசாரஶ்ச ஜாயதே |
ஏஷா லோகவதீ ஜ்ஞேயா தநுராத்₃யே ப்ரஜாபதே: ||
ஸப்தாந்தா தே₃வதே₃வஸ்ய விஷ்ணோரமிததேஜஸ: ||
[3-10....12]

[ப்ராணாயாமத்தில் (பூ₄:, பு₄வ:, ஸுவ:, மஹ:, ஜந:, தப:, ஸத்யம் என்னும்) இந்த ஏழு வ்யாஹ்ருதிகளையும் எவனொருவன் நினைக்கிறானோ, அவனால் ஏழு உலகங்களும் உபாஸிக்கப்பட்டவையாகும். அவன் எல்லாவுலகங்களிலும் இஷ்டப்படி ஸஞ்சரிக்கும் (மோக்ஷமாகிற) பேற்றை அடைகிறான். உலகங்களைக்குறிக்கும் ஏழுடன்முடியும் இந்த வ்யாஹ்ருதிஸப்தகம் ஜீவர்களுக்குப் பதியாய், தே₃வதே₃வனும், அளவற்ற தேஜஸ்ஸை உடையவனை விஷ்ணுவுக்குப் பழையதான

http://acharya.org

ஶரீரமாகும்.] என்னும் பகுதியில், விஷ்ணுவே தே₃வதே₃வனும் விஸ்வபதியாயிருப்பவன் என்றும், வ்யாஹ்ருதிகளை ஶரீரமாகக் கொண்டிருப்பவன் என்றும் விஷ்ணுபரத்வம் முழங்கப்பட்டுள்ளது காணத்தக்கது. அடுத்தபடியாக,

"அஜஸ்ய நாப₄ாவத்₃ரூ₄தம் யஸ்மிந் விஶ்வம் ப்ரதிஷ்டி₂தம்।
மஹதா₃தி₃விஶேஷாந்தம் அவ்யக்தே க₃ச்ச₂தே லயம் ॥"[3-27]

[பிறப்பற்றவனான பரமாத்மாவின் லோகாத₄ாரமான நாபி₄யில் (உந்தியில்) அண்டம் உண்டாயிற்று. மஹான் தொடக்கமாகப் பஞ்ச பூ₄தங்களீருகவுள்ள அனைத்தும் அவ்யக்தமாகிற மூலப்ரக்ருதியில் லயமடைகிறது.] என்னும் ஶ்லோகத்திலிருந்து பரமாத்மாவின் உந்தியிலிருந்து உலகம் உண்டாவதாகக் கூறுவது, நாரணனின் உந்தித் தாமரையிலிருந்து உலகம் உண்டாவதாகக்கூறும் மற்ற பல ஶ்ருதி ஸ்ம்ருதிகளை நினைவுபடுத்துவதன்மூலம் விஷ்ணுபரத்வத்தைக் காட்டுகிறது. அடுத்தபடியாக,

அபுநர்மரணாயைவ ப்₃ரஹ்மண: ஸத₃நே ஸ்தி₂தா:।
அதி₄காரம் விநா சைவ ப்₃ரஹ்மண: ஸத்₃ருஶாஶ்ச தே ॥
அவ்யக்தே வை தி₃நஸ்யாந்தே முச்யந்தே ப்₃ரஹ்மணா ஸஹ।
விஶந்தி பரமம் தா₄ம புருஷம் பா₄ஸ்கரப்ரப₄ம் ॥
வ்யாஹ்ருதிர் வ்யாஹரம்ஶ்சைவ ப்ராணேர்யதி₃ விமுச்யதே।
விலயம் யாதி ச வ்யக்தம் அவ்யக்தே புருஷே க்ஷணாத் ॥
[3-28...30]

[ஸ்ருஷ்டி முதலானவற்றில் அதி₄காரமில்லாமல் மோக்ஷத்தின் பொருட்டு உபாயாநுஷ்டா₂னம் செய்துகொண்டு ப்₃ரஹ்மாவின் உலகத்திலிருப்பவர்கள் அங்கிருக்கும் வரையில் நான்முகனை ஒத்தவர்களாயிருக்கிறார்கள். பிரமனின் ஆயுட்காலமுடிவில் பிரமனோடு கூட அறிவரிய பரமாத்மாவையடைந்து முக்தியடைகிறார்கள். பரமப்ராப்யமாய், ஸூர்யன்போல் ஒளியுள்ள புருஷனை அடைகிறார்கள். ஏழு வ்யாஹ்ருதிகளையும் சொல்லிக்கொண்டு ப்ராணனைவிடுபவன் அறிவரிய புருஷனிடம் கணப்பொழுதில ஒடுங்கி முக்தியடைகிறான்.] என்று பிரமனும், அவனுடைய உலகத்திலிருப்பவர்களும் புருஷனிடம் ஒடுங்கி முக்தியடைகிறார்கள் என்று கூறியிருப்பதும் விஷ்ணுபரத்வத்தை வெளிப்படுத்துகிறது.

இனி, கா₃யத்ரீ நிர்ணயபரமான நாலாம் அத்தியாயத்தில் ஸாரமான பகுதிகளைக் காண்போம்.

http://acharya.org

தபஸா ஸுஸமுத்₃த்₄ருத்ய ஆதி₃ஸர்க்கே₃ ஸ்வயம்பு₄வ: |
ஓங்காரபூர்வா கா₃யத்ரீ நிர்ஜகா₃ம ததோ முகா₂த் ||
அகாரம் சாப்யுகாரம் ச மகாரம் ச ப்ரஜாபதி: |
வேத₃த்ரயாந்நிரது₃ஹத்₃பூ₄ர்பு₄வ: ஸ்வரிதீதி ச ||
த்ரிப்₄ய ஏவ து வேதே₃ப்₄ய: பாத₃ம் பாத₃மதூ₃து₃ஹத் |
ததி₃த்₃ய்ருசோऽஸ்யா: ஸாவித்ர்யா: பரமேஷ்டீ₂ ப்ரஜாபதி: |
யதா₂க்₃நிர்வை தே₃வதாநாம்ருதூநாம் குஸுமாகர: ||
ப்₃ராஹ்மணோ த்₃விபதா₃நாம் ச கா₃வஶ்சைவ சதுஷ்பதா₃ம் ||
தேஜஸ்விநாம் ஸஹஸ்ராம்ஶு: இந்த்₃ரியாணாம் யதா₂ மந: |
மேரு: ஶிக₂ரிணாம் ஶ்ரேஷ்டோ₂ கா₃யத்ரீ ச₂ந்த₃ஸாம் ததா₂ ||
யதா₂ மது₄ ச புஷ்பேப்₄யோ க்₄ருதாந்மண்டு₃ம் ரஸாத் பய: |
ஏவம் ஹி ஸர்வவேதா₃நாம் கா₃யத்ரீ ஸாரமுச்யதே ||
கா₃யத்ரீ ப்ரக்ருதிர் ஜ்ஞேயா ஓங்கார: புருஷ: ஸ்ம்ருத: |
தாப்₄யாமுப₄ாப்₄யாம் ஸம்யோகா₃த் ஜக₃த் ஸர்வம் ப்ரவர்த்ததே ||
[4-11...17]

[பிரமனின் ஆதி₃ஸ்ருஷ்டியில் ஓங்காரத்தை முன்னிட்டுக்கொண்ட கா₃யத்ரியானது தபஸ்ஸினாலே எடுக்கப்பட்டு முக₂த்திலிருந்து வெளி வந்தது. பிரமன்—அகாரம், உகாரம், மகாரம் என்னும் (ஓங்காரத்தில் அடங்கிய) மூன்று அக்ஷரங்களையும், பூ₄:,பு₄வ:,ஸுவ: என்னும் மூன்று வ்யாஹ்ருதிகளையும், ருக்₃ யஜுஸ் ஸாமம் என்னும் மூன்று வேத₃ங்க ளாகிற பசுக்களிடமிருந்து ஸாரமாகக் கறந்தெடுத்தார். அவற்றிலி ருந்தே 'தத்ஸவிது:' என்று தொடங்கும் கா₃யத்ரியின் மூன்று பாத₃ங் களையும் ஸத்ய லோகத்திலிருக்கும் நான்முகன் கறந்தார். தே₃வதை களுக்குள் அக்₃நி போலவும், ருதுக்களுக்குள் வஸந்தம் போலவும், இரண்டு கால்கள் உள்ள மனிதர்களுக்குள் ப்₃ராஹ்மணன் போல வும், நாலு காலுள்ள பிராணிகளுள் பசுக்கள் போலவும், ஒளியை யுடைய பொருள்களுள் ஸூர்யன் போலவும், இந்த்₃ரியங்களுள் மனம் போலவும், மலைகளுக்குள் மேரு மலை போலவும் வேத₃மந்தி ரங்களுள் கா₃யத்ரி சிறந்தது. புஷ்பங்களுக்குத் தேன் ஸாரமாயி ருப்பது போலவும், நெய்யில் விழுது ஸாரமாயிருப்பது போலவும், பால் — பசு பருகும் ரஸங்களின் ஸாரமாயிருப்பது போலவும், எல்லா வேத₃ங்களுக்குள்ளும் கா₃யத்ரி ஸாரமாகக் கூறப்படுகிறது. கா₃யத்ரியை மூலப்ரக்ருதிக்கு வாசகமாகவும், ஓங்காரத்தைப் புருஷ

http://acharya.org

தத்துவத்துக்கு வாசகமாகவும் அறியவேண்டும். அவ்விரண்டின் சேர்த்தியாலே ப்ரக்ருதி புருஷர்களாகிற உலகனைத்தும் செயல்படுகிறது.] என்று காயத்ரியின் பெருமை காட்டப்பட்டது.

அக்ஷராணி ச தை₃வத்யம் ஸம்ப்ரவக்ஷ்யாம்யத: பரம் ।
ஆக்₃நேயம் ப்ரத₂மம் ஜ்ஞேயம் வாயவ்யம் ச த்₃விதீயகம் ॥
த்ருதீயம் ஸௌர்யதை₃வத்யம் சதுர்த்த₂ம் வைத்₃யுதம் ஸ்ம்ருதம் ।
பஞ்சமம் யமதை₃வத்யம் வாருணம் ஷஷ்ட₂முச்யதே ॥
பா₃ர்ஹஸ்பத்யம் ஸப்தமம் ச பார்ஜந்யமஷ்டமம் விது₃: ।
ஐந்த்₃ரம் து நவமம் ஜ்ஞேயம் கா₃ந்த₄ர்வம் த₃ஶமம் ஸ்ம்ருதம் ॥
பௌஷ்ணமேகாத₃ஶம் ஜ்ஞேயம் த்₃வாத₃ஶம் மைத்ரவாருணம் ।
த்வாஷ்ட்ரம் த்ரயோத₃ஶம் ஜ்ஞேயம் வாஸவம் ச சதுர்த்த₃ஶம் ॥
மாருதம் பஞ்சத₃ஶகம் ஸௌம்யம் ஷோட₃ஶகம் ஸ்ம்ருதம் ।
ஸப்தத₃ஶம் த்வாங்கி₃ரஸம் வைஶ்வதே₃வமத: பரம் ॥
ஆஶ்விநம் சைகோநவிம்ஶம் ப்ராஜாபத்யம் து விம்ஶகம் ।
ஸர்வதே₃வமயம் ஜ்ஞேயம் ஏகவிம்ஶகமக்ஷரம் ॥
ரௌத்₃ரம் த்₃வாவிம்ஶகம் ப்ரோக்தம் த்ரயோவிம்ஶம் து ப்₃ராஹ்மணம் ।
வைஷ்ணவம் து சதுர்விம்ஶம் ஏதா அக்ஷரதே₃வதா: ॥
ஜப்யகாலேஷு ஸஞ்சிந்த்ய விஷ்ணுஸாயுஜ்யதாம் வ்ரஜேத் ।
ஏதஸ்யாம் ஜ்ஞாதமாத்ராயாம் வாங்மயம் விதி₃தம் ப₄வேத் ॥
உபாஸிதம் ப₄வேத் ஸர்வம் விஶ்வம் பு₄வநஸப்தகம் ।
அஜ்ஞாத்வா சைவ கா₃யத்ரீம் ப்₃ராஹ்மண்யாத் பரிஹீயதே ॥
அபவாதே₃ந ஸம்யுக்தோ ப₄வேச்ச்₂ருதி நித₃ர்ஶநாத் ।
யேஷாம் த்₃விஜாநாம் ஸாவித்ரீ நாநூச்யேத யதா₂விதி₄ ॥
தாம்ஶ்சாரயித்வா த்ரீந் க்ருச்ச்₂ராந் யதா₂வித்₄யுபநாயயேத் । ...
ஓங்காரோ வ்யாஹ்ருதி: ஸப்த ஸாவித்ரீ ப்ராணஸம்யம: ।
ஸந்த்₄யா ந வந்தி₃தா யேந ப்₃ராஹ்மண்யம் தஸ்ய வை குத: ॥
ஸாவித்ரீம் யோ ந ஜாநாதி வ்ருதா₂ தஸ்ய பரிஶ்ரம: ।
கா₃யத்ரீமாத்ரஸந்துஷ்டோ வரம் விப்ர: ஸுயந்த்ரித: ॥
நாயந்த்ரிதஶ்சதுர்வேத₃: ஸர்வாஶீ ஸர்வவிக்ரயீ ।
ஸாரபூ₄தாஸ்து வேதா₃நாம் கு₃ஹ்யோபநிஷத₃: ஸ்ம்ருதா: ॥

http://acharya.org

தாப்₄ய: ஸாரம் து கா₃யத்ரீ கா₃யத்ர்யா வ்யாஹ்ருதித்ரயம் ।
வ்யாஹ்ருதிப்₄யஸ்ததே₃ாங்கார: த்ரிவ்ருத்₃ப்₃ரஹ்ம ஸ உச்யதே ॥
த்ரிவ்ருத்₃ப்₃ரஹ்மணி நிஷ்ணாத: பரம் ப்₃ரஹ்மாதி₄க₃ச்ச₂தி ।
மது₄வத் ஸம்ப்₄ருதம் ஹ்யேதத்₃விப்ராஸோ விஷ்ணுநா ஸ்வயம்॥
கா₃யத்ரீம் சைவ வேதா₃ம்ஶ்ச துலயா ஸமதோலயத் ।
ஏகதஶ்சதுரோ வேதா₃ந் கா₃யத்ரீமேகத: ஸமாம் ॥
ஏஷா ஹி த்ரிபதா₃ தே₃வீ ஸர்வப்₃ரஹ்மமயீ ஶுப₄ா ।
தபஸா மஹதா த்₃ருஷ்டா விஶ்வாமித்ரேண தீ₄மதா ॥
ஸம்வத்ஸரம் வா ஷண்மாஸாந் யோ ஜபேத்₃விதி₄வத்₃த்₃விஜ: ।
ஸோऽசிராத் ஸர்வகாமாம்ஶ்ச ப்ராப்நுயாந்நாத்ர ஸம்ஶய: ॥
[4-63...82]

[கா₃யத்ரியின் இருபத்து நான்கு அக்ஷரங்களுக்கு தே₃வதைகளை வரிசையாகச் சொல்லுகிறேன். முதல் அக்ஷரத்துக்கு அக்₃நி தே₃வதை. இரண்டாவதற்கு வாயு. மூன்றாவதற்கு ஸூர்யன், நாலாவதற்கு மின்னல், ஐந்தாவதற்கு யமன், ஆறாவதற்கு வருணன், ஏழாவதற்கு ப்₃ருஹஸ்பதி, எட்டாவதற்குப் பர்ஜந்யன், ஒன்பதாவதற்கு இந்த்₃ரன், பத்தாவதற்கு க₃ந்த₄ர்வன், பதினொன்றாவதற்கு பூஷா, பன்னிரண்டாவதற்கு மித்ராவருணர்கள், பதின்மூன்றாவதற்கு த்வஷ்டா, பதினாலாவதற்கு வாஸவன், பதினைந்தாவதற்கு மருத், பதினாறாவதற்கு ஸோமன், பதினேழாவதற்கு அங்கி₃ரஸ், பதினெட்டாவதற்கு விஶ்வேதே₃வர்கள், பத்தொன்பதாவதற்கு அஶ்விநிகள். இருபதாவதற்கு ப்ரஜாபதி, இருபத்தோராவதற்கு ஸர்வதே₃வர்களும், இருபத்திரண்டாவதற்கு ருத்₃ரன், இருபத்து மூன்றாவதற்கு ப்₃ரஹ்மா, இருபத்து நான்காவதற்கு விஷ்ணு. இப்படி அக்ஷர தே₃வதைகள் அமைந்திருக்கின்றனர். இந்த கா₃யத்ரியை அதன் பொருளை ஆராய்ந்து ஜபிக்கும்போது விஷ்ணுவினுடைய ஸாயுஜ்யத்தை அடைகிறான். அந்த கா₃யத்ரியை அறிந்தவளவில் எல்லா வாக்குகளும் அறியப்பட்டனவாகின்றன. ஏழு உலகங்களும் ப்₃ரஹ்மாண்ட₃ம் முழுவதுமே உபாஸிக்கப்பட்டதாகிறது. கா₃யத்ரியை அறியாதவன் ப்₃ராஹ்மண்யத்திலிருந்து நழுவுகிறான். அபவாத₃த்தையும் அடைகிறான். ஶ்ருதியில் சொல்லப்பட்ட முறைப்படி எந்த அந்தணர்களுக்கு ஸாவித்ரியானது உபதே₃ஶிக்கப்படவில்லையோ அவர்களுக்கு மூன்று க்ருச்ச்₂ரங்கள் செய்வித்து ஶாஸ்த்ர விதி₄ப்படி உபநயனம் செய்விக்கவேண்டும்......ஓங்காரம், பூ₄: முதலான ஏழு வ்யாஹ்ருதிகள், கா₃யத்ரி, ப்ராணாயாமம், ஸந்த்₄யாவந்த₃னம்

ஆகியவை இல்லாதவனுக்கு ப்₃ராஹ்மண்யம் எப்படி ஏற்படும்? க₃ாயத்ரியை அறியாதவன் செய்யும் கர்மங்களெல்லாம் வீணானவை. க₃ாயத்ரியை மாத்திரம் அறிந்து திருப்தி பெற்றவனாய், நல்ல நியம முடையவனான அந்தணன், நான்கு வேத₃ங்களையுமறிந்தும் நியமங்க ளில்லாமல் எல்லாவற்றையும் உண்பவனாகவும், எதையும் விற்பவ னாகவும் இருக்கும் அந்தணனைக் காட்டிலும் சிறந்தவன். ரஹஸ்யங் களான உபநிஷத்துக்கள் மூன்று வேத₃ங்களின் ஸாரமாயுள்ளவை. அவற்றின் ஸாரமாயிருப்பது மூன்று பாத₃முள்ள க₃ாயத்ரி. க₃ாயத்ரி யின் ஸாரமாயிருப்பது பூ₄:, பு₄வ:, ஸுவ: என்னும் மூன்று வ்யாஹ்ருதி கள். வ்யாஹ்ருதிகளின் ஸாரமாயிருப்பது ஓங்காரம். இப்படி படிப்படி யாக மும்மூன்று பொருள்களின் ஸாரமாயிருக்கையாலே, அது 'த்ரிவ்ருத்₃ ப்₃ரஹ்மம்' என்று சொல்லப்படுகிறது. த்ரிவ்ருத்₃ப்₃ரஹ்மத்தில் ஊன்றி நிற்பவன் பரப்₃ரஹ்மத்தையடைகிறான். அந்தணர்களே! இந்த ஓங்கா ரம் தேன் நிறைந்த புஷ்பம் போலே விஷ்ணுவினால் நிறைந்தி ருக்கிறது. க₃ாயத்ரியையும், வேத₃ங்களையும் தராசில் வைத்து நிறுத்தவளவில், நாலு வேத₃ங்களும் க₃ாயத்ரியும் ஸமமாயிருந்தன. மூன்று பாத₃ங்களையுடைய இந்த க₃ாயத்ரி ஸர்வ வேத₃மயமாய், மங்க₃ளமாயிருப்பது. அறிவாளியான விஶ்வாமித்ரரால் பெருந்தவத் தால் ஸாக்ஷாத்கரிக்கப் பெற்றது. எந்த அந்தணன் ஒரு வருஷமோ அல்லது ஆறு மாஸமோ முறைப்படி க₃ாயத்ரியை ஜபிக்கிறானோ அவன் விரைவிலேயே எல்லா விருப்பங்களையும் அடைவான். இதில் ஐயமில்லை.] என்னும் பகுதியில், க₃ாயத்ரியின் கடைசி எழுத்தான இருபத்து நாலாம் அக்ஷரத்துக்கு தே₃வர் தலைவனான விஷ்ணுவை தே₃வதையாகச் சொல்லியிருப்பதும், ஜபம் புரியும்போது விஷ்ணு வோடு ஒன்றியிருக்கவேண்டும் (அல்லது ஜபிப்பதால் விஷ்ணுவின் ஸாயுஜ்யத்தை அடையலாம்) என்று முழங்கியிருப்பதும், ஓங்காரம் விஷ்ணுவினால் நிறைந்திருப்பது என்று உத்₃கோ₄ஷித்திருப்பதும் விஷ்ணுவே க₃ாயத்ரியினால் அறிவிக்கப்படும் பரமாத்மா என்று தெளிவாகக் காட்டுகிறது.

இனி, ஓங்கார க₃ாயத்ரிகளின் ந்யாஸங்களை வர்ணிக்கும் ஐந்தாம் அத்தியாயத்தில்

ந்யாஸம் து ஸம்ப்ரவக்ஷ்யாமி ஓங்காராதி₃ யதா₂யத₂ம் ।
யேந விந்யஸ்தமாத்ரேண ப்₃ரஹ்மீப₄வதி ப்₃ராஹ்மண: ॥
அகாரம் விந்யஸேந்நாப்₄யாம் ஸத்த்வரூபம் நிரஞ்ஜநம் ।
உகாரம் ஹ்ருத₃யே தத்₃வத்₃ராஜஸம் தத்₃கு₃ண: ஸ்ம்ருத: ॥
மகாரம் மூர்த்₄நி விந்யஸ்ய தமோமாத்ரம் த்ருதீயகம் ।
ப்₃ரஹ்மரூபம் தத₂ாத்மாநம் த்₄யாயேத்₃விக₃தகல்மஷம் ॥
[5-1...3]

http://acharya.org

[ஓங்காரம் முதலானவற்றின் ந்யாஸத்தை உள்ளபடி கூறுகிறேன். இந்த ந்யாஸங்களை உரிய இடத்தில் வைத்துக் கொள்வதால் ப்3ராஹ்மணனுக்கு ப்3ராஹ்மண்யம் உண்டாகிறது. ஸத்வஸ்வரூபமாய், குறையற்றதான அகாரத்தை நாபி4யில் ந்யாஸம் செய்ய வேண்டும். அவ்வண்ணமே உகாரத்தை ஹ்ருத3யத்தில் ந்யாஸம் செய்யவேண்டும். அதற்கு ரஜோகு3ணமாகும். மூன்றும் அக்ஷரமான தமோகு3ணமுடைய மகாரத்தைத் தலையில் ந்யாஸம் செய்யவேண்டும். அப்போது தன்னை, குற்றமற்ற ப்3ரஹ்மத்துக்கு ஶரீரமாயிருப்பவனாக தியானிக்க வேண்டும்.] என்னும் பகுதியில் விஷ்ணுவைச் சொல்லும் அகாரம் ஸத்வகு3ணமுடையது என்றும், சிவனைச் சொல்லும் மகாரம் தமோகு3ணமுடையது என்றும் சொல்லுவதன் மூலம் இரண்டாம் அத்தியாயத்தில் 27,29-வது ஶ்லோகங்களில் சொல்லப்பட்ட அர்த்த2ம் வலியுறுத்தப்படுகிறது. இதிலிருந்தும் விஷ்ணு ஸாத்விகதே3வதை என்பதும், சிவன் தாமஸதே3வதை என்பதும் தெளிவாகிறது.

இனி, ஸந்த்4யோபாஸன நிர்ணயத்தை வர்ணிக்கும் ஆறும் அத்தியாயத்தில்

யாவந்தோऽஸ்யாம் ப்ருதி2வ்யாம் து விகர்மஸ்தா2 த்3விஜாத3ய: |
தேஷாம் து பாவநார்த்தா2ய ஸந்த்4யா ஸ்ருஷ்டா ஸ்வயம்பு4வா ||
யா ஸந்த்4யா ஸா து கா3யத்ரீ த்ரித4ா பூ4த்வா ப்ரதிஷ்டி2தா |
ஸந்த்4யா ஹ்யுபாஸிதா யேந தேந விஷ்ணுருபாஸித:|| [6-9,10]

[இவ்வுலகில் கர்மத்தினின்றும் நழுவிய அந்தணர் முதலானோரைப் பரிஶுத்3த4ப்படுத்துவதற்காகவே நான்முகனால் ஸந்த்4யாவந்த3னம் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. கா3யத்ரீ மந்த்ரமே மூன்று காலங்களில் ஸந்த்4யாவந்த3னங்களாகி நிலைநிற்கிறது. ஸந்த்4யாவந்த3னம் எவனால் உபாஸிக்கப்படுகிறதோ அவனால் விஷ்ணு உபாஸிக்கப் பட்டவனாகிறான்.] என்னும் பகுதியில் ஸந்த்4யாவந்த3னம் விஷ்ணுவின் உபாஸனமே என்று உத்3கோ4ஷிக்கப்பட்டது காணத்தக்கது.

இனி ஸ்நாநவிதி4யை வர்ணிக்கும் ஏழாம் அத்தியாயத்தில்

ஜலமத்4யஸ்தி2தோ விப்ர: ஶுத்3த4பா4வோ ஹரிம் ஸ்மரேத் |
ஓங்காரேண வ்யாஹ்ருதிபி4: கா3யத்ர்யா ச ஸமாஹித: || [7-25]

[ஜலத்தின் நடுவிலிருப்பவனான அந்தணன் ஓங்காரத்தினாலும், வ்யாஹ்ருதிகளாலும், கா3யத்ரியினாலும் ஶாந்தியுடையவனாய், பரிஶுத்3த4மான நினைவையுடையவனாய் ஹரியைச் சிந்திக்கவேண்டும்.] என்று ஸ்நானத்தின்போதும் ஹரிசிந்தனமே விதி4க்கப்பட்டது காணத்தக்கது.

http://acharya.org

ஆவர்த்தயேத்₃வா ப்ரணவம் ஸ்மரேத்₃வா விஷ்ணுமவ்யயம் ||
விஷ்ணோராயதநம் ஹ்யாப: ஸ ஏவாப்யோ நிருச்யதே |
தஸ்யைவ ஸூநவஸ்த்வேதாஸ்தஸ்மாத்தம் ஹ்யப்ஸு
ஸம்ஸ்மரேத் ||
நராத₃ப: ப்ரஸூதா வை தேந நாரா இதி ஸ்ம்ருதா: |
தா ஏவாஸ்யாயநம் ஹ்யாபஸ் தஸ்மாந்நாராயண: ஸ்ம்ருத: ||
யோ ஹி வ்ரதாநாம் வேதா₃நாம் யமஸ்ய நியமஸ்ய ச |
போ₄க்தாரம் யஜ்ஞதபஸாம் த்₄யாயிநாம் த்₄யேயமேவ ச ||
த்₄யாயேந்நாராயணம் தே₃வம் நித்யம் ஸ்நாநாதி₃கர்மஸு |
ப்ராயஸ்சித்த்யபி ஸர்வஸ்மாத்₃து₃ஷ்க்ருதாந்முச்யதே புமாந் ||
ப்ரமாதா₃த் குர்வதாம் கர்ம ப்ரச்யவேதாத்₄வரேஷு யத் |
ஸ்மரணாதே₃வ தத்₃விஷ்ணோ: ஸம்பூர்ணம் ஸ்யாதி₃தி ஸ்ருதி: ||
தத்₃விஷ்ணோரிதி மந்த்ரேண மஜ்ஜேத₃ப்ஸு புந: புந: |
கா₃யத்ரீ வைஷ்ணவீ ஹ்யேஷா விஷ்ணோ: ஸம்ஸ்மரணாய வை ||
[7-29...35]

[ப்ரணவத்தையாவது திருப்பித்திருப்பிச் சொல்லவேண்டியது. அழிவற்ற விஷ்ணுவையாவது நினைக்கவேண்டியது. நீர் விஷ்ணுவுக்கு இருப்பிடமாகும். அவனே நீரில் இருப்பவனாகக் கூறப்படுகிறான். அந்த நீர் அவனிடமிருந்து பிறந்ததுமாகும். ஆகையால் நீரில் அவனையே சிந்திக்கவேண்டும். அழிவற்றவனாகையாலே நரன் எனப்படும் அவனிடமிருந்து நீர் உண்டானது. அதனால் நீர் நார ஶப்₃த₃த்தால் சொல்லப்படுகிறது. அந்த நாரமாகிற நீர் இவனுக்கு இருப்பிடமாகையாலே இவன் நாராயணன் எனப்படுகிறான். எவனொருவன் வ்ரதங்களையும், வேத₃ங்களையும், யமநியமங்களையும், யஜ்ஞங்களையும், தபஸ்ஸுக்களையும் அநுப₄விக்கிறானோ, தியானிப்பவர்களுக்கு தியானிக்கத்தக்கவனாகவுமிருக்கிறானோ நாராயணனாகிற அந்த தே₃வனை ஸ்நானம் முதலான எல்லாக் கர்மங்களிலும் எப்போதும் தியானிக்கவேண்டும். பல பாபங்களைச் செய்தவனாயினும் இப்படி நினைப்பதன் மூலம் எல்லாப் பாபங்களிலிருந்தும் நீங்கப் பெறுகிறான். யாக₃ங்களில் கவனமின்மையால் எக்கர்மங்கள் நழுவி விடுகின்றனவோ, அவை விஷ்ணுவை நினைப்பதாலேயே நிறைவடைகின்றன என்று வேத₃ம் கூறுகிறது. 'தத்₃விஷ்ணோ:' என்னும் மந்திரத்தைச் சொல்லி நீரில் மறுபடியும் மறுபடியும் மூழ்கவேண்டும். இது விஷ்ணுவை நினைப்பதற்காக ஏற்பட்ட விஷ்ணு கா₃யத்ரியாகும்.] என்னும் பகுதியில் நாராயண ஶப்₃த₃த்தையும் நிர்வசனம்

http://acharya.org

செய்து, அவனே வ்ரதங்கள், வேத₃ங்கள், யஜ்ஞங்கள், தபஸ்ஸுக்கள் ஆகிய அனைத்தையும் அநுப₄விப்பவன் என்றும், தியானிக்கத்தக்கவன் என்றும் முழங்கி, தியானம் முதலான எல்லாக் கர்மங்களிலும் அவனை நினைக்கவேண்டும் என்று விதி₃த்து, அவனை நினைப்பதால் குறைகளெல்லாம் நீங்கி நிறைவடைந்துவிடும் என்று உத்₃கோ₄ஷிப்பதிலிருந்து ப₄க₃வத் பரத்வம் குன்றிலிட்ட விளக்காகிறது.

ஆவாஹநாதி₃கம் கர்ம யந்ந ப்ரோக்தம் மயா த்விஹ ||
தத் ஸர்வம் ப்ரணவேநைவ கர்த்தவ்யம் சக்ரபாணிந: ||
த₃த்₃யாத் புருஷஸூக்தேந ய: புஷ்பாண்யப ஏவ வா |
அர்ச்சிதம் ஸ்யாஜ்ஜக₃தி₃த₃ம் தேந ஸர்வம் சராசரம் ||
விஷ்ணுர்ப்₃ரஹ்மா ச ருத்₃ரஶ்ச விஷ்ணுர்தே₃வோ தி₃வாகர: |
தஸ்மாத் பூஜ்யதமம் நாந்யமஹம் மந்யே ஜநார்த்த₃நாத் ||
[7-65...68]

[என்றால் இங்கு சொல்லப்படாத ஆவாஹனம் முதலான எல்லாக் கர்மங்களையும் சக்ரபாணிக்கு ப்ரணவத்தினாலேயே செய்யவேண்டும். எவனொருவன் புருஷஸூக்தத்தினால் புஷ்பங்களையோ, நீரையோ எம்பெருமானுக்கு ஸமர்ப்பிக்கிறானோ, அவனால் சராசரமான உலகனைத்தும் ஆராதி₄க்கப்பட்டதாகிறது. விஷ்ணுவே ப்₃ரஹ்மாவுக்கும், சிவனுக்கும் அந்தர்யாமி, தே₃வனான விஷ்ணுவே ஸூர்யனுக்கும் அந்தர்யாமி. ஆகையால் ஜனார்த்த₃னனைக் காட்டிலும் பூஜிக்கத் தக்கவன் எவனுமில்லை என்பதே என் ஸித்₃த₄ாந்தம்.] என்று பிரமன், சிவன் முதலான அனைவர்க்கும் அந்தர்யாமியான விஷ்ணுவைக் காட்டிலும் ஆராதி₄க்கத்தக்கவன் வேறு எவனுமில்லை என்று யாஜ்ஞவல்க்யரால் உத்₃கோ₄ஷிக்கப்பட்டிருப்பது காணத்தக்கது.

வாசே ச வாசஸ்பதயே விஷ்ணவே மஹதே தத₂ா | [7-103]

[வாக்குக்கும், வாசஸ்பதிக்கும், பெரியவனான விஷ்ணுவுக்கும் நமஸ்கரிக்கவேண்டும்] என்று விஷ்ணுவைக் குறிக்கும்போது 'மஹதே' என்று விஶேஷிப்பதன் மூலம் 'நமோ விஷ்ணவே ப்₃ருஹதே கரோமி' என்னும் வேத₃வாக்யத்தை விவரித்திருப்பது காணத்தக்கது.

ஸித்₃த₄க்ஷேத்ரேஷு தீர்த்தே₂ஷு தே₃வதாயாஶ்ச ஸந்நிதௌ₄|
ஸஹஸ்ரம் ஶதகோடீநாமநந்தம் விஷ்ணுஸந்நிதௌ₄ ||
[7-143]

http://acharya.org

[ஸித்₃த₄க்ஷேத்ரங்களிலும், தீர்த்த₂ங்களிலும், தே₃வதாஸந்நிதி₄களிலும் ஜபம் முதலான கர்மங்களைச் செய்வது ஆயிரம் மடங்கு ப₂லனளிக்கும். விஷ்ணு ஸந்நிதி₄யில் அவற்றைச் செய்வது கணக்கற்ற நூறுகோடி மடங்கு ப₂லனளிக்கும்.] என்று விஷ்ணு ஸந்நிதி₄யின் பெருமை முழங்கப்பட்டது.

யதி₃ வாக்₃யமலோப: ஸ்யாஜ்ஜபாதி₃ஷு கத₂ஞ்சந ।
வ்யாஹரேத்₃வைஷ்ணவம் மந்த்ரம் ஸ்மரேத்₃வா
விஷ்ணுமவ்யயம் ॥ [7-148]

[ஜபம் முதலான கர்மங்களைச் செய்யும்போது மௌனம் முதலான நியமங்களுக்கு ஏதேனும் குறைவு ஏற்பட்டால் விஷ்ணுவின் மந்த்ரங்களை ஜபிக்கவேண்டும், அல்லது அழிவற்ற விஷ்ணுவை நினைக்க வேண்டும்] என்று விஷ்ணு மந்த்ரத்துக்கும், விஷ்ணு ஸ்மரணத்துக்கும் உள்ள பெருமை காட்டப்பட்டது.

ரௌத்₃ரபித்ர்யாஸுராந் மந்த்ராந் ராக்ஷஸாநாபி₄சாரிகாந் ।
வ்யாஹ்ருத்யாலப்₄ய சாத்மாநமப: ஸ்ப்ருஷ்ட்வாந்யத₃ாசரேத் ॥
ஏதாந் வ்யாஹ்ருத்ய ரௌத்₃ராதீ₃ந் அஸ்ப்ருஷ்ட்வாபோ
ஜலம் த்₃விஜ: ।
ஊர்த்₄வம் யத் குருதே கர்ம தத்₃ப₄வத்யயதா₂யத₂ம் ॥
[7-151, 152]

[ருத்₃ரனுடையவும், பித்ருக்களுடையவும், அஸுர ராக்ஷஸர்களுடையவும் மந்த்ரங்களையும், அபி₄சாரமந்த்ரங்களையும் சொன்னால் ஜலத்தைத் தொட்டுத் தன்னைப் பரிஶுத்₃த₄ப் படுத்திக்கொண்ட பின்பே மேற்காரியங்களைத் தொடரவேண்டும். ருத்₃ரன் முதலானவர்களுடைய இந்த மந்த்ரங்களைச் சொன்ன பின்பு ஜலத்தைத் தொடாமல் மேல் கர்மங்களைச் செய்வது வீணனதாகும்.] என்று ருத்₃ரமந்த்ரத்தினுடைய அபரிஶுத்₃தி₄ சொல்லப்பட்டிருப்பதும், இதன்படியே இன்றளவும் ருத்₃ரமந்த்ரத்தைச் சொன்னவுடன் எல்லா வைதி₃கர்களும் நீரைத்தொட்டுத் தம்மைப் பரிஶுத்₃த₄ப் படுத்திக்கொள்ளும் அநுஷ்ட₂ானத்தைக் கடைப்பிடிப்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

யத்து ஸாதபவர்ஷேண ஸ்நாநம் தத்₃தி₃வ்யமுச்யதே ।
வாருணம் சாவக₃ாஹஸ்து மாநஸம் விஷ்ணுசிந்தநம் ॥
[7-165]

http://acharya.org

[வெய்யிலோடு மழைபெய்யும்போது அதில் குளிப்பது தி₃வ்யஸ்நானம் எனப்படும். நீர் நிலேகளில் முழுகிக்குளிப்பது வாருணஸ்நானம் எனப்படும். விஷ்ணுவைச் சிந்திப்பது மாநஸஸ்நானம் எனப்படும்.] என்று விஷ்ணுவைச் சிந்திப்பதே ஒரு ஸ்நானமாகும் என்று விதிக் கப்பட்டிருப்பதும் காணத்தக்கது. இனி ப்ராணயாமத்தை வர்ணிக்கும் எட்டாவது அத்தியாயத்தின் ஸாரமான பகுதிகளைக் காண்போம்.

நீலோத்பலத₃லஶ்யாமம் நாபி₄மத்₄யே ப்ரதிஷ்டி₂தம் ।
சதுர்ப்பு₄ஜம் மஹாத்மாநம் பூரகேணைவ சிந்தயேத் ॥
கும்ப₄கேந ஹ்ருதி₃ ஸ்தா₂நே த்₄யாயேச்ச கமலாஸநம் ।
ப்₃ரஹ்மாணம் ரக்தகௌ₃ராங்க₃ம் சதுர்வக்த்ரம் பிதாமஹம் ॥
ரேசகேநேஶ்வரம் த்₄யாயேல்லலாடஸ்த₂ம் த்ரிலோசநம் ।
ஶுத்₃த₄ஸ்ப₂டிகஸங்காஶம் நிர்மலம் பாபநாஶநம் ॥
ஸதா₃ நிரோத₄ஸம்யோகா₃த்₃தே₃வதாத்ரயசிந்தநாத் ।
அக்₃நேர் வாயோரபாம் யோகா₃த₃ாத்மா ஶுத்₃த்₄யேத வை
[த்ரிபி₄: ॥

நிரோத₄ாஜ் ஜாயதே வாயுர் வாயோரக்₃நிஶ்ச ஜாயதே ।
அக்₃நேராபோபி₄ ஜாயந்தே ததோऽந்த: ஶுத்₃த்₄யதே த்ரிபி₄: ॥
[8-23......27]

[நீலோத்பல இதழ்போல் கறுத்தவனும், நாபி₄யின் நடுவில் எழுந் தருளியிருப்பவனும், நான்கு திருக்கைகளேயுடையவனும், பரமாத் மாவுமான விஷ்ணுவைப் பூரகத்தின்போது (ப்ராணயாமத்தில் காற்றை உள்ளிழுக்கும்போது) தியானிக்கவேண்டும். உந்தித்தாமரையை இருப்பிடமாகக் கொண்டவனும், சிவப்பும், வெளுப்பும் கலந்த உடம்பையுடையவனும், பிதாமஹனுமான நான்முகனைக் கும்ப₄கத் தின்போது (ப்ராணயாமத்தில் காற்றை உள்ளே அடக்கும்போது) ஹ்ருத₃யத்தில் தியானிக்கவேண்டும். ஶுத்₃த₄ஸ்ப₂டிகம்போல் வெளுத்தவனும், குற்றமற்றவனும், பாபங்களை அழிக்கக் கூடியவனு மான முக்கண்ணனை ரேசகத்தின்போது (ப்ராணயாமத்தில் காற்றை வெளிவிடும்போது) நெற்றியில் தியானிக்கவேண்டும். காற்றை உள்ளிழுத்து அடக்குவது, மும்மூர்த்திகளை தியானிப்பது, அக்₃னி, வாயு, நீர் இவற்றோடு தொடர்பு ஏற்படுவது ஆகிய இம்மூன்று காரணங்களாலும் (ப்ராணயாமத்தின்போது) ஆத்மா பரிஶுத்₃த₄ப் படுத்தப்படுகிறது. காற்றை உள்ளடக்குவதால் வாயு உண்டாகிறது.

http://acharya.org

வாயுவிலிருந்து அக்₃னி உண்டாகிறது. அக்₃னியிலிருந்து நீர் உண்டாகிறது. ஆகையால் மனிதன் தே₃ஹத்தினுள் ஶாத்₃தி₄யடைகிறுன்] என்னுமிடத்தில் மும்மூர்த்திகளை வர்ணிக்கும்போது 'மஹாத்மாதம்' என்று விஶேஷிப்பதன்மூலம் மற்ற இருவரைக் காட்டிலும் பெரியவனுய், அவர்களுக்கும் அந்தர்யாமியாய் இருக்கும் பரமாத்மா விஷ்ணுவே என்று காட்டப்பட்டது.

இனி தியான விதி₄யை வர்ணிக்கும் ஒன்பதாவது அத்தியாயத்தின் ஸாரமான பகுதிகளைக் காண்போம்.

மாநஸே விமலே ஶாந்தே ஸ்தி₂தம் விஷ்ணும் ஹ்ருதி₃ க்ஷிபேத்।
தத்₃த்₄யாநம் தத்து வை யோகோ₃ மோக்ஷமார்க்க₃ ப்ரஸாத₄கம்॥
[9-3]

[குற்றமற்றதாய், ஶாந்தியையுடையதான நெஞ்சிலேயிருக்கும் விஷ்ணுவை ஹ்ருத₃யத்தில் வைத்து தியானிக்கவேண்டும். மோக்ஷமார்க்க₃த்துக்கு வழிகாட்டும் அதுவே தியானம் என்றும், யோக₃ம் என்றும் சொல்லப்படுகிறது] என்னும் ஶ்லோகத்திலிருந்து விஷ்ணுவை ஹ்ருத₃யத்தில் தியானிப்பதே மோக்ஷஸாத₄னம் என்று விளங்குகிறது.

யதா₃தி₃த்யக₃தம் தேஜோ ஜக₃த்₃ப₄ாஸயதே ऽகி₂லம்।
யச்சந்த்₃ரமஸி யச்சாக்₃நௌ தத்தேஜோ வித்₃தி₄ மாமகம்॥
அந்தரே ऽஸ்மிந்நிமே லோகா அந்தர்விஶ்வமித₃ம் ஜக₃த்।
அக்₃ரம் ச மூலகம் ப்₃ரஹ்ம ஸர்வேஷாம் சாந்தராஸ்தி₂தம்॥
ந தத்₃ப₄ாஸயதே ஸூர்யோ ந ஶஶாங்கோ ந பாவக:।
யத்₃க₃த்வா ந நிவர்த்தந்தே தத்₃தா₄ம பரமம் மம॥
தஸ்மாத₃ம்ஶம் விநிஷ்க்ராந்தம் ஜீவபூ₄தம் ஸநாதநம்।
ப்₃ரஹ்மண: பரமம் ப்₃ரஹ்ம ஜ்யோதிஷாம் ஜ்யோதிருத்தமம்॥
ஹ்ருத₃யே ஸர்வபூ₄தாநாம் ஜீவபூ₄த: ஸ திஷ்ட₂தி।
ஸ ஏவ ப₄க₃வாந் விஷ்ணுர் வேதா₃ந்தைருபகீ₃யதே॥
ஈஶ்வரம் புருஷாக்₂யம் து ஸத்யத₄ர்மாணமவ்யயம்।
ப₄ர்க₃ாக்₂யம் விஷ்ணுஸம்ஜ்ஞம் து யம் ஜ்ஞாத்வா ऽம்ருதமஶ்நுதே॥
[9-18 .....23]

[உலகையெல்லாம் ஒளிவிடச் செய்கின்ற ஸூர்யனுடைய ஒளியும், சந்த்₃ரனிடமும், அக்₃னியிடமும் உள்ள ஒளிகளும் பரமாத்மாவான எனது ஒளிகளே. இந்தப் பரமாத்மாவினுள்ளேயே இந்த உலகங்

http://acharya.org

களனைத்தும் ப்ரக்ருதி மண்டூலம் முழுவதும் அடங்கியுள்ளன, எல்லாவற்றினுள்ளும் இருக்கும் ப்₃ரஹ்மம் எல்லாவற்றிற்கும் ஆதி₃ மூலமாயுள்ளது. எனது மேலான ஸ்தா₂னத்தை ஸூர்யனோ, சந்த்₃ரனோ, அக்₃னியோ ஒளிவிடச் செய்வதில்லை. அங்கு சென்றவர்கள் திரும்பி வருவதில்லை. அனாதி₃யாயிருக்கும் ஜீவனும் அந்த ப்₃ரஹ்மத்திடமிருந்து வெளிப்பட்ட ஓர் அம்சமே. ப்₃ரஹ்ம ஶப்₃த₃த்தால் சொல்லப்படும் மூல ப்ரக்ருதியைக் காட்டிலும் மேலானவனாய், தானும் ப்₃ரஹ்ம ஶப்₃த₃த்தால் சொல்லப்படுமவனாய், சோதிகளுக்கெல்லாம் மேலான சோதியான அந்த ஜீவன் எல்லா பூ₄தங்களின் (தே₃ஹங்களின்) ஹ்ருத₃யத்திலுமுள்ளது. அந்த ஜீவனே (ஜீவனுக்கு அந்தர்யாமியே) ப₄க₃வான் விஷ்ணு என்று வேதா₃ந்தங்களில் ஓதப்படுகிறது. ஈஶ்வரனாய், புருஷன் என்னும் பெயருடையவனாய், உண்மையான கல்யாண கு₃ணங்களுடையவனாய், குறைவற்றவனாய், கா₃யத்ரியில் ப₄ர்க₃: என்று சொல்லப்படுபவனாய் விஷ்ணு என்னும் பெயரையுடையவனை அந்தப் பரமாத்மாவை அறிந்தவன் மோக்ஷத்தையடைகிறான்.] என்னும் பகுதியில் கீ₃தா ஶ்லோகங்களைப் படிப்பதன் மூலமும், கா₃யத்ரியில் ப₄ர்க₃ஶ் ஶப்₃த₃த்தால் சொல்லப்படுபவன் விஷ்ணுவே என்று முழங்குவதன்மூலமும், அவனையறிவதே மோக்ஷஸாத₄னம் என்று பறைசாற்றுவதன்மூலமும், விஷ்ணுபரத்வம் நிலைநாட்டப்பட்டது.

தே₃வஸ்ய ஸவிதுர்யச்ச ப₄ர்க்க₃மந்தர்க₃தம் விபு₄ம் ।
ப்₃ரஹ்மவாதி₃ந ஏவாஹுர்வரேண்யம் தச்ச தீ₄மஹி ॥
சிந்தயாமோ வயம் ப₄ர்க₃ம் தி₄யோ யோ நः ப்ரசோத₃யாத் ।
த₄ர்மார்த்த₂காமமோக்ஷேஷு பு₃த்₃தி₄வ்ருத்தீ: புந: புந: ॥
பு₃த்₃தே₄ர்போ₃த₄யிதா யஸ்து சிதா₃த்மா புருஷோ விராட் ।
ஸவிதுஸ்தத்₃வரேண்யம் து ஸத்யத₄ர்மாணமீஶ்வரம் ॥
ஹிரண்யவர்ணம் புருஷம் த்₄யாயேம விஷ்ணுஸம்ஜ்ஞகம் ।
பே₄தி ப₄ாஸயதே லோகாந் ரேதி ரஞ்ஜயதே ப்ரஜா: ॥
க₃ இத்யாக₃ச்ச₂தேऽஜஸ்ரம் ப₄ரக₃ாத்₃ப₄ர்க்க₃ உச்யதே ।
அக்₃நீஷோமாத்மகம் பி₃ப்₄ரத்₃வைஶ்வரூபேண கர்மணா ॥
ஜக₃த₃ாத₄ாநவஹித்₃த்₄யர்த்த₂ம் ஸூர்யாத்மா ஜக₃தோऽபி ச ।
ஶஶ்வத் ப்ரஸூயனாத் ஸூர்ய: பாவநாத் பவந: ஸ்ம்ருத: ॥
ஆப்யாயநாத்து வருண: ஶ்ரேஷ்ட₂த்வாதி₃ந்த்₃ர ஏவ ஸ: ।...
ஏதை: பர்யாய ஶப்₃தை₃ஸ்து ஏக ஏவ ஸதே₃ாச்யதே ॥

http://acharya.org

ப்4ராஜதே ச ஸதா2 ப4ர்க்க3: புருஷத்வாச்ச பூருஷ: ।
ஸர்வாத்மா ஸர்வபா4வஸ்து ஆத்மா தேந நிக3த்3யதே ॥
தத்ஸவிதுர்வரேண்யம் ச சேதநாத்மா மஹேஶ்வர: ।...
ப்4ரஸ்ஜ பாகே ப4வேத்3த4ாதுர்யஸ்மாத் பாசயதே ஹ்யஸௌ ॥
ப்4ராஜதே தீ3ப்யதே யஸ்மாத் ஜக3த3ந்தே ஹரத்யபி ।
காலாக்3நிரூபமாஸ்தா2ய ஸப்தார்ச்சி: ஸப்தரஶ்மிபி4: ॥
ப்4ராஜதே ஸ்வேந ரூபேண தஸ்மாத் ப4ர்க்க3 இதி ஸ்ம்ருத: ।
தீ3வ்யதே க்ரீட3தே யஸ்மாத்3த்3யோததே ரோசதே தி3வி ॥
தஸ்மாத்3தே3வ இதி ப்ரோக்த: ஸ்தூயதே ஸர்வதை3வதை: ।
ஸவிதா ஸர்வபூ4தாநாம் ஸர்வபா4வாந் ப்ரஸூயதே ॥
ஸவநாத் பாவநாச்சைவ ஸவிதா தேந சோச்யதே ।
வரேண்யம் வரணீயம் ச ஜன்ம ஸம்ஸார பீ4ருபி4: ॥
ஆதி3த்யாந்தர்க3தம் ப4ர்க்க3: ஸேவ்யதே வை முமுக்ஷுபி4: ।
ஜந்மம்ருத்யுவிநாஶாய து3:க்க2ஸ்ய த்ரிவித4ஸ்ய ச ॥
த்4யாநேந புருஷோ யஸ்து த்3ரஷ்டவ்ய: ஸூர்யமண்ட3லே ।
மந்த்ரார்த்த2மபி வேதா3தௌ3 ஸ்தா2பயத்யேவமேவ ஹி ॥
ஹிரண்மயேந பாத்ரேண ஸத்யஸ்யாऽபிஹிதம் முக2ம் ।
தத் த்வம் பூஷந்நபாவ்ருணு ஸத்யத4ர்மாய த்3ருஷ்டயே ॥
யோऽஸாவாதி3த்யே புருஷ: ஸோऽஸாவஹமஸ்மி ।
கவிம் புராணமநுஶாஸிதாரமணோரணீயாம்ஸம்
அநுஸ்மரேத்3ய: ॥
ஸர்வஸ்ய தா4தாரமசிந்த்யரூபமாதி3த்யவர்ணம் தமஸ:
பரஸ்தாத் ।
ப4ர்க்க3ஸ்து புருஷோ ஹ்யாத்மா ஈஶ்வராக்2ய: ஶுசிஸ்தத2ா ॥
ஹிரண்யக3ர்ப்பே4ா விஷ்ணுஶ்ச ஶுக்லஶ்சைவ ஹ்யலிங்க3க: ।
ஈஶிதா ஸர்வ பூ4தாநாம் கர்மதோ3ஷாஶயைரபி ॥
ந பராம்ருஶ்யதே யஸ்மாத்3விஶேஷாதீ3ஶ்வர: ஸ்ம்ருத: ।
ஶோத4நாச்சு2த்3த4நாச்சைவ அக்லிந்நத்வாச்சு2சி: ஸ்ம்ருத: ॥
ஹிரண்மயஸ்ய க3ர்ப்பே4ாऽபூ4த் ஹிரண்யஸ்ய ச க3ர்ப்ப4ஜ: ।
தஸ்மாத்3தி4ரண்யக3ர்ப்பே4தி புராணே விநிக3த்3யதே ॥
ஹைரண்யமண்ட3ம் ஸந்தீ3ப்தம் தபோஜ்ஞாநாத்து வை புரா ।
ஏகம் த்3வாத3ஶதா4 க3ர்ப்ப4மதி3திர்விஷ்ணுமஜீஜநத் ॥

http://acharya.org

தஸ்யோல்ப₃ா(ல்வ)ஹ்ருத்ஸ்தி₂தோ மேரு: உத₃ராத் ஸப்த
ஸிந்த₄வ: ।
பர்வதாஶ்ச ஜராயூத்த₂ா நத்₃யோ த₄மநிஸம்ஜ்ஞிகா: ॥
தி₃வஶ்ச ப்ருதி₂வீ சைவ கபாலே த்₃வே வ்யவஸ்தி₂தே ।
மத்₄யேऽந்தரிக்ஷமப₄வத் த்ரைலோக்யஸ்யைஷ ஸம்ப₄வ: ॥
ஏதே ஹ்யண்ட₃கபாலே த்₃வே அபாம் மத்₄யே நிவேஶிதே ।
ஏகோऽத₄ஸ்தாத் ஸமப₄வத் த்₃விதீயம் நந்த₃நம் வநம் ॥
தந்மத்₄யாத்₃ய: ஶிஶுர்ஜாதோ மாதண்ட₃: ஸவிதேதி ஸ: ।
ஸர்வாணி சாஸ்ய பூ₄தாநி ஹ்யுபாஸந்தே ஸமந்தத: ॥
ஏதஸ்ய ப்₃ரஹ்மணோ ந்யஸ்தம் ஸ்தூயதே ஸார்வலௌகிகம் ।
ரௌத்₃ர (த்₃ரம்) தேஜ: ஸ்வகீயம் ச அக்₃நீஷோமௌ
ததை₂வ ச ॥
த்₃வாத₃ஶாநாம் து யத்தேஜஸ்ததே₃கஸ்ய நிவேஶிதம் ।
பௌருஷம் சைவ யத்₃த₄ாம பரமம் ஹ்யத்ர திஷ்ட₂தி ॥
[9-42......71]

[தே₃வனுன ஸவிதாவினுடைய உள்ளேயிருக்கும் ஸர்வவ்யாபியான யாதொரு ப₄ர்க்க₃ம் உண்டோ அதை ப்₃ரஹ்ம ஜ்ஞானிகள் வரிக்கத் தகுந்ததாகக் கூறுகிருர்கள். அதை தியானிக்கக் கடவோம். நம்முடைய பு₃த்₃தி₄யைத் தூண்டுகிற அந்த ப₄ர்க்க₃த்தை நாம் சிந்திக்கக் கடவோம். த₄ர்மார்த்த₂ காம மோக்ஷங்களில் மறுபடியும் மறுபடியும் அறிவைத் தூண்டுவதன் மூலம் சிந்தனு ப்ரகாரங்களை எவன் செயல்படுத்துகிருனே அவனே ஜ்ஞான ஸ்வரூபியான விராட் புருஷன். ஸூர்யனுள்ளிருப்பவனுய், வரிக்கத் தக்கவனுய், உண்மையான கு₃ணங்களையுடையவனுய், அனைவரையும் நியமிப்பவனுய், பொன்மயமான திருமேனியையுடைய புருஷனுய், விஷ்ணு எனப்படுபவனுன அப்பரமபுருஷனை தியானிக்கக் கடவோம். ப₄ர்க்க₃ஶப்₃த₃த்தில் 'ப₄'காரம் உலகை ஒளிவிடச் செய்பவன் என்று காட்டுகிறது. 'ர' எனும் எழுத்து சேதனர்களை ஆகர்ஷிப்பவன் என்று காட்டுகிறது. 'க₃'காரம் இடைவிடாமல் இந்த லீலாவிபூ₄திக்கு அவதாரங்களின் மூலம் வருகின்றவன் என்று காட்டுகிறது. இப்படி மூன்று எழுத்துக்களும் சேர்ந்த ப₄ர்க்க₃ஶப்₃த₃த்தால் பரமாத்மா கூறப்படுகிருன். எல்லாவற்றையும் வியாபிக்கும் செயலால் அக்₃னிஷோமம் முதலான யாக₃ங்களையும் த₄ரிப்பவனுய், உலகம் வாழ்வதற்காக உலகத்தில் ஸூர்யரூபியாகப் பிரகாஶிப்பவனுமிருக்கிருன். எப்போ

http://acharya.org

தும் ஸ்ருஷ்டி செய்துகொண்டேயிருப்பதால் ஸூர்யன் எனப்படுகிறான். பரிஶுத்₃த₄ப்படுத்துவதால் பவனன் எனப்படுகிறான். போஷிப்பதால் வருணன் என்றும், சிறந்தவனாயிருப்பதால் இந்த்₃ரனென்றும் கூறப்படுபவன் அந்தப் பரமாத்மாவே........ ஒரே பொருளைக் கூறும் இந்த ஶப்₃த₃ங்களால் எப்போதும் சொல்லப்படுபவன் அவன் ஒருவனே. ஒளிவிடுகையால் ப₄ர்க்க₃: எனப்படுகிறான். உலகில் ஒரே புருஷனாயிருக்கையால் புருஷன் எனப்படுகிறான். அனைத்துக்கும் ஆத்மாவாய், அனைத்துமாயிருப்பதாலே ஆத்மா என்று கூறப்படுகிறான். ஆகையால் ஸூர்யனுக்குள்ளிருக்கும் வரிக்கத்தக்கவன் அவனே. சேதனனுக்கும் ஆத்மாவாயிருக்கும் மஹேஶ்வரன். 'ப்₄ரஸ்ஜ-பாகே' என்னும் த₄ாதுவிலிருந்து தோன்றிய ப₄ர்க்க₃ஶப்₃த₃ம் 'அனைத்தையும் பாகமடையச் செய்பவன்' என்று பொருள் படும். இவனிடமிருந்து இவ்வுலகம் ஒளிவிடுகிறது. இவன் இதைக் கடைசியில் ஊழிகாலத் தீயுருவாய் இருந்து ஸம்ஹாரம் செய்கிறான். 'ஸப்தார்ச்சி:' எனப்படும் இவன் ஏழு கிரணங்களாலே தன் உருவோடு ஒளிவிடுகிறான். இக்காரணங்களால் ப₄ர்க்க₃: (ஒளி) எனப்படுகிறான். 'தி₃வு-க்ரீட₃ா' என்று த₄ாதுவாகையாலே ஜக₃த்ஸ்ருஷ்டி முதலானவற்றால் விளையாடுகிறவன் தே₃வனாகிறான். 'தி₃வு-த்₃யுதி' என்று த₄ாதுவாகையால் பரமாகாஶத்தில் பிரகாஶிக்கிறவன் தே₃வனாகிறான். ஆகையால் எல்லா தே₃வர்களாலும் இவன் தே₃வன் என்று துதிக்கப்படுகிறான். எல்லா பூ₄தங்களையும், எல்லாப் பொருள்களையும் படைக்கிறானாகையால் 'ஸவிதா' எனப்படுகிறான். (ஷூஞ்—ப்ராணிப்ரஸவே என்று த₄ாது) அனைத்தையும் படைக்கையாலும், பரிஶுத்₃த₄ப் படுத்துகையாலும் ஸவிதா எனப்படுகிறான். பிறப்பு, இறப்பு முதலானவைகூடிய ஸம்ஸாரத்தைக் கண்டு ப₄யந்தவர்களால் வரிக்கத்தக்கவர்களுள் சிறந்தவனாகையாலே ஆதி₃த்யனுக்குள்ளிருக்கும் 'ப₄ர்க்க₃:' எனப்படும் இவன் மோக்ஷமடைய விரும்புகிறவர்களால் ஸேவிக்கப்படுகிறான். பிறப்பிறப்புக்களைப் போக்குவதற்காகவும், ஆத்₄யாத்மிகம், ஆதி₄பௌ₄திகம், ஆதி₄தை₃விகம் என்னும் மூவகைத் துன்பங்களையும் போக்கிக்கொள்ளவும் ஸூர்ய மண்ட₃லத்தில் தியானத்தின்மூலம் யோகி₃களால் காணப்படும் புருஷன் இவனே. வேத₃த்தின் ஆதி₃யில் படிக்கப்படும் ஓங்கார மந்த்ரமும் இந்தப் பொருளையே நிலைநிறுத்துகிறதன்றோ. ஸத்யம் எனப்படும் பரமாத்மாவின் முக₂ம் பொன்மயமான பாத்திரத்தினால் மறைக்கப்பட்டுள்ளது. 'பூஷா' எனப்படும் பரமாத்மாவே! ஸத்யத்தை த₄ர்மமாகக்கொண்ட நான் காண்பதற்காக நீயே அந்த மறைவைப் போக்கவேண்டும். எவன் ஆதி₃த்யனுக்கு அந்தர்யாமியாயிருக்கிறானோ அவனே எனக்கும்

http://acharya.org

அந்தர்யாமியாயிருப்பவன். ஸர்வஜ்ஞனுகையாலே கவி எனப்படுபவனாய், பழையவனுயினும் புதியவனாய், அனைவரையும் நியமிப்பவனாய். அணுவைக் காட்டிலும் அணுவாயிருப்பவனாய். அனைத்தையும் த₄ரிப்பவனாய். நினைத்தற்கரிய ஸ்வரூப ரூபங்களை உடையவனாய் இருக்கும் பரமாத்மாவை தியானிப்பவன் தமஸ்ஸுக்கு அப்பால் ஸூர்யன் போல் பிரகாசிக்கும் அவனையடைகிருன். ப₄ர்க்க₃: எனப்படும் புருஷனே அனைவர்க்கும் ஆத்மா. ஈச்வரன் எனப்படுபவனும் அவனே. பரிசுத்₃த₄மானவனும் அவனே. ப்ராக்ருதமான அடையாளங்கள் எதுவுமில்லாத அவன் ஹிரண்யக₃ர்ப்ப₄ன் என்றும், விஷ்ணு என்றும், சுக்லன் என்றும் சொல்லப்படுகிருன், எல்லா பூ₄தங்களையும் நியமிப்பவன் அவனே. க்லேசம், கர்மம், விபாகம், ஆசயம் முதலான தாழ்வுகளால் தொடப்படாதவனுயிருக்கையால் இவனே ஈச்வரன் என்று கூறப்படுகிருன். அனைத்தையும் சோதி₄க்கையாலும், சுத்₃த₄ம் செய்கையாலும், தாழ்வுகள் இல்லாமலிருக்கையாலும் 'சுசி' எனப்படுகிருன். பொன்மயமான (அழகிய) அண்ட₃த்திற்குப் பிறப்பிடமாயிருக்கிருன். அழகிய இவ்வண்ட₃த்தினுள் அவதரிக்கிருன். ஆகையால், ஹிரண்யக₃ர்ப்ப₄ன் என்று புராணங்களில் சொல்லப்படுகிருன். ஒளிவிடும் அண்ட₃ம் 'ஹிரண்யம்' எனப்படுகிறது. ஜ்ஞானமயமான தவத்தினுல் அதி₃தியானவள் முன்ஞெரு காலத்தில் விஷ்ணுவை கேசவன் தொடக்கமாக த₃ாமோத₃ரன் ஈருக பன்னிரண்டு க₃ர்ப்ப₄ங்களாக த₄ரித்தாள். அதி₃தி க₃ர்ப்ப₄மாகிற விஷ்ணுவின் க₃ர்ப்ப₄ நடுவிலிருப்பது மேரு. அவனிடமிருந்து ஏழு கடல்கள் தோன்றின. அவனது க₃ர்ப்ப₄த்திலிருந்து பர்வதங்களும், த₄மநியிலிருந்து நதி₃களும் உண்டாயின. தே₃வலோகமும் பூ₄மியும் அவனது இரண்டு கபால ஸ்த₂ானத்திலுள்ளன. நடுவில் அந்தரிக்ஷம் உண்டாயிற்று. மூவுலகத்தின் உற்பத்தி இப்படி ஏற்பட்டது. இந்த இரண்டு அண்ட₃ கபாலங்களும் நீருக்கு நடுவில் வைக்கப்பட்டுள்ளன. ஒன்று அடியில் இருப்பதாயிற்று. இரண்டாவது தே₃வலோகத்திலுள்ள நந்தனவனமாயிற்று. அந்த இரண்டின் நடுவிலிருந்தும் பிறந்த குழந்தை மாதண்ட₃ன் என்றும், ஸவிதா என்றும் சொல்லப்படுகிருன். இவனிடமிருக்கும் தேஜஸ்ஸையே எல்லா ஜீவராசிகளும் எப்போதும் உபாஸிக்கின்றன. இவனிடத்தில் பரப்₃ரஹ்மத்தால் வைக்கப்பட்ட ரூபமே எல்லா உலகினராலும் துதிக்கப்படுகிறது. உருத்திரனின் ஒளியும், பரமாத்மாவான தனது ஒளியும், அக்₃னி ஷோமம் முதலான யாக₃ங்களின் ஒளியும், பன்னிரு ஆதி₃த்யர்களின் தேஜஸ்ஸும் இந்த ஸூர்யன் ஒருவனிடத்திலேயே வைக்கப்பட்டுள்ளது. பரமபுருஷனுடைய மேலான தேஜஸ்ஸும் இங்கேயே நிலைநிற்கிறது] என்னும்

http://acharya.org

பகுதியிலும் பரமாத்மா எல்லா ஶப்₃த₃ங்களாலும் சொல்லப்படுபவன் என நிரூபித்து, கா₃யத்ரியினால் சொல்லப்படுபவன் விஷ்ணுவே என்று பலகால் வலியுறுத்தி, கா₃யத்ரிக்குப் பொருள் கூறுவதன்மூலம் அதை நிலைநிறுத்தி, ஸூர்யனுக்குள்ளிருக்கும் பல தேஜஸ்ஸுக்களிலும் மேலானது இந்தப் பரமபுருஷனின் தேஜஸ்ஸே என்று நிலை நிறுத்துவதன்மூலம் ப₄க₃வத்பரத்வம் நிலைநாட்டப்படுகிறது.

ஏஷ தா₄தா விதா₄தா ச ப்₃ரஹ்மா விஷ்ணுர்மஹேஶ்வர: ।
த₄நத₃: பாவக₃: காலோ வருணேந்த்₃ராநிலா: ஶஶீ ॥
மித்ரோ தா₄தா ப₄க₃ஸ்த்வஷ்டா பூஷார்யமாம்ஶுரேவ ச ।
பர்யாயநாமபி₄ஶ்சைஷ ஏக ஏவ நிக₃த்₃யதே ॥
விஶநாத் ஸர்வபூ₄தாநாம் விஷ்ணுரித்யபி₄தீ₄யதே ।
பஶ்யதே ஸர்வபூ₄தாநாம் கர்ம ஏஷ ஶுபா₄ஶுப₄ம் ॥
சி₂ந்த₃தே பூர்வதே₃ஹஸ்த₂ம் விபாகம் வை ஶுபா₄ஶுப₄ம் ।
தஸ்மாத்₃தா₄தா விதா₄தா ச கீர்த்யதே வேத₃சிந்தகை: ॥
ப்₃ருஹத்த்வாத் ப்₃ரும்ஹணத்வாச்ச ஸாமருக்₃யஜுஷாம் தத₂ா ।
த்ரயாணாம் தா₄ரணாச்சைவ ப்₃ரஹ்மா தேந நிக₃த்₃யதே ॥
ரோத₃நாத்₃ராவணாத்₃ராக₃ாத் ரம்ஹணாத் ருத்₃ர உச்யதே ।
மஹாநீஶஶ்ச பூ₄தாநாம் மஹேஶ்வர இதி ஸ்ம்ருத: ॥
ஸஹஸ்ரகரவந்மூர்த்தி: த்₃ருஶ்யதே ஸர்வதோ யத: ।
ஸர்வஸ்யைவோபரிஷ்டாச்ச பூரணாத் புருஷ: ஸ்ம்ருத: ॥
அக்₃நௌ ப்ராஸ்தாஹுதி: ஸம்யகா₃தி₃த்யமுபதிஷ்ட₂தே ।
ஆதி₃த்யாஜ்ஜாயதே வ்ருஷ்டி: வ்ருஷ்டேரந்நம் தத: ப்ரஜா: ॥
ஸவிதா ஶ்ரிய: ப்ரஸவிதா த₄நத₃ஸ்தேந சோச்யதே ।
வாயு: கர்ம ச காலௌ ச ஶுத்₃தே₄: கர்த்ருணி தே₃ஹிநாம் ॥
பாவயேத்₃ரஶ்மிபி₄: ஸர்வம் பாவகஸ்தேந சோச்யதே ।
ஸூர்ய ஆத்மா து ஜக₃த: ப்ராணக்₂யோ ஹ்ருதி₃ ஸம்ஸ்தி₂த: ॥
ஸர்வாத்மா கத்₂யதே தஜ்ஜ்ஞை: ஜீவபூ₄த: ஸநாதந: ।
த்₃விதீயேந து ரூபேண ஸாக்ஷிவத்திஷ்ட₂தே து ஸ: ॥
ஆத₃ாநாத் ஸர்வபூ₄தாநாம் ஆதி₃த்ய இதி கீர்த்தித: ।
ஆர்ய: ஸ்வாம்யாச்ச ஜக₃தோ ஹ்யர்யமா தேந சோச்யதே ॥
ஸம்ரக்ஷிதா ச பூ₄தாநாம் ஸவிதா தேந ஸ ஸ்ம்ருத: ।
ப₄க₃ஸம்ஜ்ஞா த₄நஸ்யோக்தா ஸ த₃த₂ாதி ததோ ப₄க₃: ॥

http://acharya.org

விஶ்வேஷாம் கர்மணாம் கர்த்தா விஶ்வகர்மா தத: ஸ்ம்ருத: |
கரைர் ப₄ாஸயதே விஶ்வம் ப₄ாஸ்கரஸ்தேந சோச்யதே ||
புஷ்ணாதி ஹி ஜக₃த் ஸர்வம் பூஷா தேந நிக₃த்₃யதே |
அம்ஶுபி₄ர் வ்யாப்யதே விஶ்வம்அம்ஶுஸ்தேநஹ்யுதா₃ஹ்ருத:||
நிமேஷாதி₃ க்ஷண: கால: தஸ்மாது₃த்பத்₃யதே யத: |
காலகர்த்தா ததோ ஜ்ஞேய: காலாக்₂யோ விஷ்ணுரவ்யய: ||
ஸஹஸ்ரச்சி₂த்₃ரஸங்கீர்ண ஆபோ ரேதோமயா க₄டே |
ஹிரண்மயேந்தரே திஷ்ட₂ந் ரவிஸ்தேந நிக₃த்₃யதே ||
இட₃ாஸுஷும்நே த்₃வே நாட்₃யௌ ரஶ்மிஸஂஜ்ஞே
வ்யவஸ்தி₂தே |
பாசிகாப்யாயிகே ஹ்யேதே அக்₂நீஷோமாத்மகே ஸ்ம்ருதே ||
ஏதௌ து பார்ஶ்வகௌ₃ ஜ்ஞேயௌ பந்தா₂நௌ
ஹ்யக்₃நிஹோத்ரிணாம் |
தே₃வபித்ராத்மகௌ ஹ்யேதௌ ஶாஶ்வதௌ ஜக₃த:ஸமௌ||
தயோர்மத்₄யே அமா ஹ்யேஷா யத்ர ஸந்திஷ்ட₂தே ஶஶீ |
கலாவஶிஷ்டோ பூ₄யோऽபி வ்ருத்₃தி₄ம் க₃ச்ச₂தி ப₄ாஸ்கராத் ||
தத்ர தத் பரமம் த₄ாம உத₃தே₄ரிவ நி:ஸ்ருதம் |
யஸ்மிந் லவணவத்₃யோகீ₃ விஶத்யேவைகதாம் க₃த: ||
ஸா ஸௌர்யே சைவ ஹ்ருத₃யே பரே ப்₃ரஹ்மணி ஸம்ஸ்தி₂தா |
தயா க₃ச்ச₂ந்தி வித்₃வாம்ஸோ ப்₃ரஹ்ம ப்₃ரஹ்மவிதோ₃ ஜநா: ||
ஶ்ரத்₃த₄ாயுக்தா யே ஹ்யுபாஸந்தே அரண்யே
ஶாந்தா வித்₃வாம்ஸோ ப்₃ரஹ்மசர்யம் சரந்தி |
தே ஸௌர்யஸ்ய த்₃வாரேண விரஜா: ப்ரயாந்தி
யத்ராஸௌ திஷ்ட₂தி புருஷோ அவ்யயாத்மா ||
ஹந்த்யஜ்ஞாநம் ததோ ஹம்ஸ அஶ்ராந்த பரிவர்த்தநாத் |
ஏவம் பர்யாய ஶப்₃தை₃ஸ்து ஏக ஏவ நிக₃த்₃யதே ||......
ஶுக்லம் தத்புருஷம் ஜ்ஞேயமலிங்க₃ம் ஜ்யோதிரூபகம் |
ஸத்யத₄ர்மாண(ணம்)ப₄ர்க்க₃ம் து ஈஶ்வரம் விஷ்ணுஸம்ஜ்ஞகம்||
தஸ்மிந் ப்ரதிஷ்டி₂தம் ஸர்வம் த்ரயஸ்த்ரிம்ஶத்₃கு₃ணம்
ஹி தத் |......
ஏதத்₃தி₄ ஸோமமத்₄யஸ்த₂ம் அம்ருதம் ஜ்யோதிரூபகம் |
ஹ்ருதி₃ஸ்த₂: ஸர்வபூ₄தாநாம் சேதந: ஶ்ரூயதே ஹ்யஸௌ ||

http://acharya.org

பஞ்சமண்ட₃லமத்₄யஸ்தே₂ா த்₃ரஷ்டவ்யோ யோக₃சக்ஷுஷா ।
ரவிமத்₄யே ஸ்தி₂த: ஸோம: ஸோமமத்₄யே ஹுதாஶந: ||
தேஜோமத்₄யே ஸ்தி₂த: ஸத்வம் ஸத்வமத்₄யே ஸ்தி₂தோऽச்யுத: |
[9-79...129]

[(வேத₃ஶாஸ்த்ரங்களில்) தா₄தா, வித₄ாதா, ப்₃ரஹ்மா, விஷ்ணு, மஹேஶ்வரன், த₄நத₃ன், பாவகன், காலன், வருணன், இந்த்₃ரன், அநிலன், ஶஶி, மித்ரன், தா₄தா, ப₄க₃ன், த்வஷ்டா, பூஷா, அர்யமா, அம்ஶு முதலான பல பெயர்களால் இவன் ஒருவனே குறிப்பிடப்படுகிருன். எல்லாப் பொருள்களிலும் பிரவேசித்திருப்பதால் விஷ்ணு என்று கூறப்படுகிருன். எல்லா ஜீவராசிகளுடைய புண்ய பாப கர்மங்களைக் காண்கிருனுகையாலும், முன் தே₃ஹாநுப₄வத்தால் புண்ய பாபங்களை அழிக்கிருனுகையாலும், வேத₃ம் வல்லவர்களால் இவன் தா₄தா என்றும், வித₄ாதா என்றும் கூறப்படுகிருன். பெரியவனுயிருக்கையாலும், பிறரைப் பெரியவர்களாக ஆக்குகையாலும், ப்₃ரஹ்ம எனப்படும் ருக்₃ யஜுஸ் ஸாம வேத₃ங்களை த₄ரிக்கிருனுகையாலும் ப்₃ரஹ்மா என்று கூறப்படுகிருன். துன்புறுபவர்களைக் கண்டு துன்புற்று அழுகிருனுகையாலும், து₃ஷ்டர்களை அழச்செய்கிருனுகையாலும், அடியார்களிடம் அன்புடையவனுயிருக்கையாலும், எப்போதும் எங்கும் ஸஞ்சரித்துக்கொண்டிருக்கிருனுகையாலும ருத்₃ரன் என்று சொல்லப்படுகிருன். பெரியவனுகவும், பூ₄தங்களுக்கு ஈஶனுகவும் இருக்கையால் மஹேஶ்வரன் என்று முழங்கப்படுகிருன். எல்லா இடத்திலும் கைகளாயிரம், கால்களாயிரம் உடைய திருமேனியோடு (ஞானிகளால்) காணப்படுகிருனுகையாலும், எல்லாவற்றுக்கும் மேலாயிருக்கையாலும், அனைத்தையும் பூரித்து நிற்கையாலும் புருஷன் எனப்படுகிருன். அக்₃னியில் நன்கு ஹோமம் செய்யப்பட்ட ஆஹுதியானது ஆதி₃த்யனை அடைகிறது. ஆதி₃த்யனிடமிருந்து மழை உண்டாகிறது. மழையிலிருந்து அன்னமும், அதிலிருந்து ஜீவராஶிகளும் ஏற்படுகின்றன. இதனுலேயே செல்வங்களை உண்டாக்கும் ஸவிதாவாகவும், த₄னத₃னுகவும் அப்பரமாத்மா முழங்கப்படுகிருன். வாயு, கர்மம், காலம் ஆகியவை ஜீவர்களுக்கு ஶுத்₃தி₄யைச் செய்கின்றன. தன் கிரணங்களால் (கு₃ணங்களால்) அவை அனைத்தையும் பரிஶுத்₃த₄ப்படுத்துகையால் பாவகன் என்று சொல்லப்படுகிருன். உலகிற்கு ஆத்மாவாயிருக்கையால் ஸூர்யன் என்றும், ஹ்ருத₃யத்தில் இருக்கையால் ப்ராணன் என்றும் கூறப்படுகிருன், ஜீவனுக்கு அந்தர்யாமியாயிருக்கும் பழையோனுகையால் ஸர்வாத்மா எனப்படுகிருன். ரூபம் என்பதற்கு முதற்பொருள் ஸ்வ

http://acharya.org

ரூயம். இரண்டாவது பொருள் விக்₃ரஹம். விக்₃ரஹமான திரு மேனியுடன் (ஹ்ருத₃யத்தில்) ஸாக்ஷியைப்போலே பரமாத்மா நிற்கிறான். எல்லாப் பொருள்களையும் தன்னிடம் இழுத்துக்கொள்கையால் ஆதி₃த்யன் என்று கீர்த்திக்கப்படுகிறான். இவ்வுலகத்திற்கு ஆரியனாக (நன்மை விளைக்கும்) ஸ்வாமியாயிருக்கையால் அர்யமா என்று அழைக்கப்படுகிறான். எல்லாப் பொருள்களையும் ஸம்ரக்ஷிக்கிறானாகையால் ஸவிதா எனப்படுகிறான். ப₄க₃ம் என்னும் பெயர் பணத்திற்கு உண்டு. அதைக் கொடுக்கிறானாகையால் ப₄க₃ன் எனப்படுகிறான். எல்லாக் கர்மங்களையும் செய்கிறானாகையால் விஶ்வகர்மா என்று உரைக்கப்படுகிறான். தன் கிரணங்களால் உலகை ஒளிவிடச் செய்கையால் பா₄ஸ்கரன் எனப்படுகிறான். உலகனைத்தையும் போஷிக்கையால் பூஷா என்று போற்றப்படுகிறான். இவனுடைய அம்ஶுக்களாகிற கிரணங்களாலே உலகம் வியாபிக்கப்படுகையால் அம்ஶு என்று சொல்லப்படுகிறான். நிமிஷம், க்ஷணம் முதலான காலம் அவனிடமிருந்தே உண்டாகிறதாகையாலே, காலத்தை உண்டாக்கும் அழிவற்ற விஷ்ணு காலன் என்னும் பெயரையுடையவனாகக் கூறப்படுகிறான். ஆயிரம் ஓட்டைகளையுடைய பொன்மயமான குடம் போன்ற அண்ட₃த்தில் உள்ளேயிருந்துகொண்டு தன்னுடைய வீர்யமாகிற ஜலத்தை நிரப்புகிறானாகையால் ரவி எனப்படுகிறான். இடை₃, ஸுஷும்நை என்னும் இரு நாடிகளும் கிரணங்கள் என்னும் பெயரை உடையவைகளாய் ஶரீரத்தில் இருக்கின்றன. ஶரீரத்தைப் பக்குவமடையச் செய்வதாகவும், போஷிப்பதாகவுமிருக்கும் இவ்விரண்டும் அக்₃நியையும், ஸோமனையும் அதி₄தே₃வதையாகக் கொண்டவை. அக்₃நிஹோத்ரிகளுக்கு இவ்விரண்டும் அருகிலிருக்கும் இரு வழிகளாகும். ஸுஷும்நா நாடி பரமபத₃த்திற்குச் செல்லும் வழியாகையாலே தே₃வயாநம் என்றும், இட₃ா நாடி பித்ருலோகத்திற்குச் செல்லும் வழியாகையாலே பித்ருயாநம் என்றும் சொல்லப்படும் தனித்தனியான நிலையான வழியாயிருப்பவை இவை. இவையிரண்டிற்கும் நடுவில் அமா என்னும் நாடி இருக்கிறது. அதில் ஶஶி என்னும் சந்த்₃ரன் நிலைநிற்கிறான். 16 கலைகளில் ஒவ்வொன்றாகக் குறைந்து ஒரு கலையோடு இருக்கும் அவன் ஸூர்யனாலே மறுபடியும் வளருகிறான். அங்கு கடலிலிருந்து வெளிவந்த அம்ருதம் போன்ற மேலான பரமாத்மஸ்த₂ானம் உள்ளது. அந்த ஸ்த₂ானத்தில் உப்பு நீரில் கரைவதுபோலே ஒன்றியவனாய் யோகி₃ நுழைகிறான். அந்த ஸுஷும்நா நாடி ஹ்ருத₃யத்திலும் ஸூர்யனிடமும் பரம் பொருளிடமும் பரவியிருக்கிறது. ப்₃ரஹ்மஜ்ஞானிகள் அதன்மூலம்

http://acharya.org

ப்₃ரஹ்மத்தை அடைகிறுர்கள். ஶ்ரத்₃தை₄யுடையவர்களாய், ஶாந்தர்களாய், அறிவாளிகளாய் காட்டில் எவர்கள் ப்₃ரஹ்மசர்யத்தை அநுஷ்டி₂த்துப் பரம்பொருளை உபாஸிக்கிறுர்களோ, அவர்கள் எல்லா அழுக்கும் நீங்கப்பெற்றவர்களாய், ஸூர்யனுக்கு நடுவிலிருக்கும் துவாரத்தின்மூலம் அழிவற்ற புருஷனிருக்கும் பரமபத₃த்திற்தச் செல்கிறுர்கள். அஜ்ஞானத்தை அழிக்கின்றபடியாலும், களைப்பில்லாமல் ஸஞ்சரிக்கிறபடியாலும் ஹம்ஸம் என்றும் கூறப்படுகிறுன். இவ்வண்ணமாக தன்னையே குறிக்கும் பல ஶப்₃த₃ங்களாலே இவன் முழங்கப்படுகிறுன்......வெளுத்ததான சோதி உருவாய். ப்ராக்ருதமான அடையாளங்களற்றதான அதுவே புருஷன் எனப்படுவதாய். ஸத்யமான கு₃ணங்களையுடையதாய், ப₄ர்க₃ம் எனப்படுவதாய், விஷ்ணு என்னும பெயரையுடையதான ஈஶ்வரன். அதனிடத்தில் அனைத்தும் நிலைநிற்கிறது. அது முப்பத்துமுக்கோடி தே₃வதைகளையும் கு₃ணமாக (அவயவமாக) உடையதன்றே...இதுவேயன்றே ஸோமனுக்கு நடுவேயிருக்கும் அழியாத சோதியுருவானது. எல்லா ஜீவராஶிகளின் ஹ்ருத₃யத்திலும் இருக்கும் பேரறிவாளனுக இவன் சொல்லப்படுகிறுன். ஐந்து மண்ட₃லங்களுக்கு நடுவிலிருப்பவனுக யோக₃மாகிற கண்ணுல் இவன் காணப்படுகிறுன். ரவி மண்ட₃லத்தின் நடுவில் ஸோமமண்ட₃லமும், ஸோமமண்ட₃லத்தின் நடுவில் அக்₃நிமண்ட₃லமும், அந்தத் தேஜோ மண்ட₃லத்தின் நடுவில் ஸத்வமண்ட₃லமும் உள்ளன. அந்த ஸத்வ மண்ட₃லத்தின் நடுவில் பரமாத்மாவான அச்யுதன் உள்ளான்.] என்னும் பகுதியில் பரமாத்மா உலகிலுள்ள எல்லா ஶப்₃த₃ங்களாலும் சொல்லப்படுகிறவனுக இருந்தபோதிலும், புருஷன், விஷ்ணு, அச்யுதன் முதலான தனக்கேயுரிய திருநாமங்களையுடையவனுகவும் காட்டப்படுகையால் விஷ்ணுவே வேத₃முதல்வன் என்று வெளிப்படையாக விளங்குகிறது.

“அத்ர ஹி ஸௌம்யாக்₃நேய ஸாத்விகமண்ட₃லாநி பி₄த்வா தத:
ஶு₂த்₃த₄ஸத்வாந்தராவஸ்தி₂தம் அசலம் அமரம் அச்யுதம் த்₄ருவம்
விஷ்ணுஸம்ஜ்ஞம் ஸர்வாத₄ரம் த₄ாம ஸத்யகாமஸர்வஜ்ஞத்வ
ஸம்யுக்தம் ஸ்வதந்த்ர சைதந்யம் ஸ்வே மஹிம்நி திஷ்ட₂மாநம் பஶ்யதி”

[இந்த ஸூர்யமண்ட₃லத்திலுள்ளிருக்கும் ஸோமனுடையவும், அக்₃னியினுடையவும், ஸாத்விகமானதுமான மண்ட₃லங்களை பே₄தி₃த்து, அதனுள்ளிருக்கும் சுத்₃த₄ஸத்வத்தினுள் எழுந்தருளியிருப்பதாய், அசையாததாய், மரணமற்றதாய், (அடியார்களை) நழுவவிடாததாய், நிலையானதாய், விஷ்ணுவென்னும் பெயரையுடையதாய், ஸர்வர்க்கும்

http://acharya.org

ஆதா₄ரமாயுள்ளதாய், ஸத்யகாமத்வம், ஸர்வஜ்ஞத்வம் முதலான கு₃ணங்களுடன் கூடியதாய், ஸ்வதந்த்ரமானதாய், ஞானஸ்வரூப மானதாய், தன் மஹிமையிலேயே நிலைநிற்பதான தேஜஸ்ஸைப் பார்க்கிருன்] என்று மைத்ராயணீய உபனிஷத்தின் ஆருவது ப்ர பாட₂கத்தில் படிக்கப்பட்ட வாக்யத்தை இந்த ஸ்ம்ருதி வசனங்கள் உபப்₃ரும்ஹணம் செய்கின்றன என்றும் விளங்குகிறது.

ஸ ஈஶ: ஸர்வஜக₃த: ப்ராண: ப்ரீணாதி விஶ்வப்₄ருத் ||
விஶ்வோஹி வைஶ்வாநர விஶ்வரூப த்வம்
விஶ்வமாதா₄ரயஸி யாஜமாந: |
விஶ்வம் ச பீத்வாऽऽஹுதயஶ்ச யத்ர ப்ராதே₃ஶமாத்ர: புருஷ: ஸ்ம்ருதஸ்து ஸ: ||
ஏஷா விஶ்வப்₄ருதிநாம் வை தநுர்விஷ்ணோ: ஸநாதநீ |
அந்நரூபேண விஜ்ஞேயா யயேத₃ம் தா₄ர்யதே ஜக₃த் ||
அந்நகாமேந ஸம்ஸ்ருஷ்டம் ப்₃ரஹ்மணா சாகி₂லம் ஜக₃த் |
தஸ்மாத₃ந்நாத் பரம் தத்த்வம் ந பூ₄தம் ந ப₄விஷ்யதி ||
அந்நார்தீ₂ சாப்யயம் ஸூர்யோ ரஸாந் க்₃ருஹ்ணாதி ரஶ்மிபி₄: ||
யதா₂ ஹி க்ஷுதி₄தா பா₃லா மாதரம் பர்யுபாஸதே |
ஏவம் ஸர்வாணி பூ₄தாநி அந்நயஜ்ஞமுபாஸதே ||
யோ ஹ்யவித்₃வாந் ஸமஶ்நாதி அந்நம் மோஹஸமந்வித: |
ப₄ஸ்மநீவ ஹுதம் ஹவ்யம் தத்₃வத₃ந்நமமந்த்ரகம் ||
ஏவம் ஜ்ஞாத்வா து யோ விப்ரோ விதி₄நாந்நம் ஸமஶ்நுதே |
ஆத்மாநம் ச தத₃ந்நம் ச தா₃தாரம் சைவ தாரயேத் ||
தர்ப்பிதம் ச ப₄வேத்தேந விஶ்வம் பு₄வநஸப்தகம் |
தை₃வ்யே பித்ர்யே ச யத்₃த₃த்தம் தத₃க்ஷய்யம் ப₄வத்யபி ||
ஏவம் ஹி ஸர்வபா₄வஸ்த₂ம் விதி₃த்வா பரமேஶ்வரம் |
காஷ்டா₂தௌ₃ ஹி த்ருணாந்தே ச பாஷாணாந்தர்க₃தேऽபி ச ||
ப்₃ரஹ்மாதி₃ஸ்தம்ப₃பர்யந்த மவம் வ்யாப்ய ஸ திஷ்ட₂தி |
பாஷாண மணி தா₄தூநாம் தேஜோரூபேண ஸம்ஸ்தி₂த: ||
வ்ருக்ஷௌஷதி₄த்ருணாநாம் ச ரஸரூபேண திஷ்ட₂தி |
தந்மாத்ரபூ₄தோ பூ₄தாநாம் விஶ்வரூபேண ஸம்ஸ்தி₂த: ||
ஏவம் வேத்தி ய ஆத்மாநமேகதா₄ ஸம்ப்ரதிஷ்டி₂தம் |
ஜ்ஞாத்வா சோபாஸதே ஸம்யக் ஸோऽம்ருதத்வாய கல்பதே ||
[9-143 ..155]

http://acharya.org

[எல்லாவுலகிற்கும் அவன் ஈசன். உயிராயிருப்பவன். உலகனைத்தையும் தாங்கி உகக்கிறான். வைச்வாநரனே! உலகனைத்தையும் உருவாகக் கொண்டவனே! நீயே உலகமாயிருக்கிறாய். நீயே ஸ்வாமியாயிருந்து உலகம் முழுவதையும் தரிக்கிறாய். ப்ரளயகாலத்தில் உலகனைத்தையும் விழுங்குகிறாய். யஜ்ஞங்களில் ஆஹுதிகளையும் விழுங்குகிறாய். ஹ்ருதயத்தில் அடங்கும் அந்தர்யாமி புருஷனாகவும் நீயே முழங்கப்படுகிறாய். அன்னம் என்று சொல்லப்படுவதாய், உலகைப் போஷிக்கும் இதுவே விஷ்ணுவின் பழமையான சரீரமாகும். உலகனைத்தும் இதனாலேயே தரிக்கப்படுகிறது. அன்னத்தை விரும்பிய பிரமனாலே இவ்வுலகனைத்தும் ஸ்ருஷ்டிக்கப்பட்டது. ஆகையால் அன்னத்தைக் காட்டிலும் மேலான பொருள் இருந்ததுமில்லை; இருக்கப்போவதுமில்லை. அன்னத்தை வேண்டியே காற்று வீசுகிறது. அன்னத்தை விரும்பியே நெருப்பு எரிகிறது. அன்னத்தை ஆசைப்பட்டே இந்த ஸூர்யன் தன் கிரணங்களாலே ரஸத்தை இழுத்துக்கொள்கிறான். பசியுள்ள குழந்தை தாயை எதிர்பார்த்திருப்பதுபோலே, எல்லா ஜீவராசிகளும் அன்னமாகிற யஜ்ஞத்தை எதிர்பார்த்திருக்கின்றன. (பரம்பொருளுக்குப் படைத்த அன்னத்தை உண்ணவேண்டும் என்று) அறியாதவனாய் எவனொருவன் அன்னத்தை மயக்கத்தோடு தானே உண்கிறானோ, பரமனுக்குப் படைக்கும் மந்திரங்களால் பரிசுத்தப்படுத்தப்படாத அவனுடைய அன்னம் சாம்பலில் ஹோமம் செய்யப்பட்ட ஹவிஸ்ஸை ஒக்கும். இவ்வண்ணமாக அறிந்து எந்த அந்தணன் முறைப்படி அன்னத்தை அடைகிறானோ அவன் தன்னையும், அந்த அன்னத்தையும், அதை அளித்தவனையும் நற்கதியை அடைவிக்கிறான். அவனால் ஏழு லோகமும் திருப்தி செய்விக்கப்பட்டதாகிறது. தேவர்களுக்கும், பித்ருக்களுக்கும் அவன் எதையளிக்கிறானோ அது அழிவற்றதாகிறது. இவ்வண்ணமாக, ஸர்வேச்வரனை எல்லாப் பொருள்களிலும் இருப்பவனாக அறிய வேண்டும். குச்சியிலும், புல்லின் நுனியிலும், கல்லினுள்ளும், பிரமன் முதல் புல் ஈறாகவுள்ள எல்லாப் பொருள்களிலும் இவ்வண்ணமாக அவன் வியாபித்து விளங்குகிறான். கல், மணி, பொன் முதலான தாதுக்கள் ஆகியவற்றில் ஒளியுருவாயிருப்பவன் அவனே. மரம், செடி, கொடிகள், புல் முதலானவற்றில் அவன் ரஸரூபமாக நிற்கிறான். பூதங்களுக்குக் காரணமான தந்மாத்ரமாயிருப்பவனும் அவனே. உலகனைத்தையும் உருவாகக் கொண்டிருப்பவன் அவனே. இப்படிப் பரமாத்மாவை ஒருபடிப்பட்டவனாய் நிலைநிற்பவனாக எவன் அறிகிறானோ, அறிந்து நன்கு உபாஸிக்கிறானோ, அவன் மோக்ஷத்தை அடைகிறான்.] என்னும் பகுதியில் அன்னத்தை விஷ்ணுவின் உருவ

http://acharya.org

மாக எடுத்து, அவனுக்குப் படைத்த பின்பே அன்னத்தை உண்ண வேண்டுமென்று விதி₄த்து. இப்படி அன்னத்தை உண்பவனாய், எல்லாப் பொருள்களிலும் இருப்பவனாக அந்தப் பரமாத்மாவை அறிபவன் மோக்ஷமடைகிறான் என்று கூறியிருப்பதிலிருந்தும் விஷ்ணு பரத்வம் விளங்கா நிற்கிறது.

ந ச பஶ்யந்தி புருஷம் ஹ்யந்தஸ்த₂ம் பரமம் விபு₄ம் |
தம் சிந்தயேத் ஸமாதி₄ஸ்தே₂ா யம் ஜ்ஞாத்வா விப்ரமுச்யதே ||
முக்தோ ந ஜாயதே பூ₄ய: ப்ராப்ய விஷ்ணோ: பரம் பத₃ம் |
[9-177, 178]

[அறிவிலிகள் தங்களுக்குள்ளேயே இருப்பவனாய், ஸர்வவ்யாபியான பரமபுருஷனைக் காண்பதில்லை. ஸமாதி₄நிலையில் அவனையே நினைக்க வேண்டும். அவனையறிந்தவன் முக்தியடைகிறான். முக்திபெற்று விஷ்ணுவின் பரமபத₃த்தையடைந்தவன் இவ்வுலகில் மறுபடியும் பிறப்பதில்லை.] என்னும் பகுதியில் விஷ்ணுவின் பரமபத₃த்தை அடைவதே மோக்ஷம் என்று முழங்கப்பட்டிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

ஸர்வபாபப்ரஸக்தோऽபி த்₄யாயேந்நிமிஷமச்யுதம் ||
புநஸ்தபஸ்வீ ப₄வதி பங்க்திபாவநபாவந: | [9-180]

[எல்லாப் பாபங்களையும் புரிந்தவனானாலும் ஒரு நிமிஷமாகிலும் (தனக்கு ப்ராப்யம், ப்ராபகம், த₄ாரகம், போஷகம், போ₄க்₃யம் முதலான எல்லாமாயிருப்பவன் என்று) தியானிப்பானாகில் மறுபடியும் பெரும்புண்ணியசாலியாகிறான், பங்க்திபாவனர்களையும் பரிஶுத்₃த₄ப் படுத்துபவனாகிறான்] என்னும் ஶ்லோகத்தில் அச்யுதஶப்₃த₃த்தாலே பரமாத்மாவைக் குறித்திருப்பதும் காணத்தக்கது.

இந்த்₃ரியேப்₄ய: பரே ஹ்யர்த்த₂ா அர்த்தே₂ப்₄ய: பரமம் மந: ||
மநஸஶ்ச பரா பு₃த்₃தி₄: பு₃த்₃தே₄ராத்மா மஹாந் பர: |
மஹத: பரமவ்யக்தம் அவ்யக்தாத் புருஷ: பர: ||
புருஷாந்ந பரம் கிஞ்சித் ஸா காஷ்ட₂ா ஸா பரா க₃தி: |
[9-184...186]

[இந்த்₃ரியங்களை வஶப்படுத்துவதைக் காட்டிலும் விஷயங்களை வஶப் படுத்துவது சிறந்தது. விஷயங்களை (அநுப₄வியாமலிருப்பதன்மூலம்) அடக்குவதைக்காட்டிலும் மனத்தை அடக்குவது சிறந்தது. மனத்தை அடக்குவதைக்காட்டிலும் அறிவை அடக்குவது சிறந்தது. அறிவை அடக்குவதைக்காட்டிலும் பெரியவனான ஆத்மாவை (தன்னை) அடக்குவது சிறந்தது. தன்னை அடக்குவதைக்காட்டிலும் ப்ரக்ருதி கார்யமான

http://acharya.org

ஶரீரத்தை அடக்குவது சிறந்தது. ஶரீரத்தை அடக்குவதைக்காட்டிலும் பரமாத்மாவாகிற பரமபுருஷனை (ஶரணமடைவதன்மூலம்) வஶப் படுத்துவது சிறந்தது. பரமபுருஷனைக்காட்டிலும் (வஶப்படுத்தத்தக்கவை களில்) மேலானது வேறொன்றும் இல்லை. அப்பரமபுருஷனே மேலான உபாயமும் மேலான ப்ராப்யமும் ஆவான்] என்னும் பகுதியில் கடோபநிஷத்தை ஒட்டி, பரமபுருஷனே வஶீகரிக்கத்தக்கவைகளுள் சிறந்தவன் என்றும், மேலான உபாயமாகவும், உபேயமாகவும் இருப்பவன் என்றும் உத்₃கோ₄ஷித்திருப்பது உய்த்துணரத்தக்கது.

த்₃விகு₃ணம் த்ரிகு₃ணம் வாபி ப்ராணாயாமமுபக்ரமேத் |
ததோ த்₄யேய: ஸ்தி₂தோ யோऽஸௌ ஹ்ருத₃யே தீ₃பவத் ப்ரபு₄:||
தா₄ரயேத்தத்ர சாத்மாநம் தா₄ரணம் தா₄ரயேத்₃பு₃த₄: |
மோஹஜாலமபாஸ்யாத₂ புருஷோ த்₃ருஶ்யதே ஹி ய: ||
ஸஹஸ்ரகரபந்நேத்ர: ஸூர்யவர்ச்சா: ஸஹஸ்ரதா₄ |
[9-191...193]

[இரண்டு முறை அல்லது மூன்றுமுறை ப்ராணாயாமத்தைச் செய்ய வேண்டும். ஹ்ருத₃யத்தில் விளக்குப்போல் ஒளிவிடும் ஸர்வேஶ்வரனை அதற்குப்பின் தியானிக்கவேண்டும். அந்த நிலையிலேயே அறிவாளி யாயிருப்பவன் தன்னை தா₄ரிக்கச்செய்யவேண்டும். இதுவே தா₄ரணம் எனப்படுகிறது. மோஹக்கூட்டத்தையெல்லாம் போக்கடித்தபின்பு கைகளாயிரம், கால்களாயிரம், கண்களாயிரம் உடையவனாய், ஆயிரம் திருமேனிகளை உடையவனாய், ஸூர்யன்போல் ஒளிவிடுபவனான யாதொரு புருஷன் காட்சியளிக்கிறானோ அவனை இந்நிலையில் நெஞ்சில் தா₄ரிக்கவேண்டும்.] என்னும் பகுதியில் அஷ்டாங்க₃யோக₃த்தில் நெஞ்சில் தா₄ரிக்கத்தக்கவனான பரமாத்மாவை விஷ்ணுவுக்கே உரிய தான புருஷஶப்₃த₃த்தால் காட்டியதும் குறிக்கொள்ளத்தக்கது.

இனி ஸூர்யோபஸ்தா₂னத்தை வர்ணிக்கும் பத்தாவது அத்தியாயத்திலும்,

நாஸ்தி க₃ங்கா₃ஸமம் தீர்த்த₂ம் ந தே₃வ: கேஶவாத் பர: |
கா₃யத்ர்யாஸ்து பரம் ஜப்யம் ந பூ₄தம் ந ப₄விஷ்யதி || [10-10]

[கங்கைக்கு ஸமமான தீர்த்த₂மில்லை. கேஶவனைக்காட்டிலும் மேலான தெய்வமில்லை. (ப்₃ராஹ்மணர்களால்) ஜபிக்கத்தக்க மந்த்ரங்களில் கா₃யத்ரியைக்காட்டிலும் சிறந்தது இருந்ததுமில்லை; இருக்கப்போவது மில்லை] என்னு கேஶவனைக்காட்டிலும் மேலான தெய்வமில்லை என்று உறுதியளித்திருப்பது நடுநிலையாளர்களால் நாடத்தக்கது.

http://acharya.org

இனி பதினோராம் அத்தியாயத்தில்,

யத: ப்ரவ்ருத்திர்பூ₄தாநாம் யேந ஸர்வமிதம் ததம்।
ஸ்வகர்மணா தமேவார்ச்ய ஸித்₃தி₄ம் ப்ராப்நோதி மாநவ:॥
[11-46]

[எந்தப் பரமாத்மாவிடமிருந்து ஜீவராஶிகளின் ப்ரவ்ருத்தி ஏற்படுகிறதோ, எவனால் உலகனைத்தும் வியாபிக்கப்பட்டு விளங்குகிறதோ அந்தப் பரமாத்மாவை, தனது வர்ணாஶ்ரமங்களுக்குரிய கர்மங்களாலே ஆராத₄னம் செய்து மனிதன் தலைசிறந்த பேற்றைப் பெறுகிறான்] என்று ப₄க₃வதா₃ராத₄னமாக ஸ்வத₄ர்மங்களை அநுஷ்டி₂ப்பவனுக்கு மோக்ஷஸித்₃தி₄ உண்டு என்று காட்டி,

ப்ரஶாஸிதாரம் ஸர்வேஷாம் அணீயாம்ஸமணோரபி।
ருக்மாப₄ம் ஸ்வப்நதீ₄க₃ம்யம் வித்₃யாத்தம் புருஷம் பரம்॥
ஏதமேகே வத₃ந்த்யக்₃நிம் மநுமந்யே ப்ரஜாபதிம்।
இந்த்₃ரமேகே பரே ப்ராணமபரே ப்₃ரஹ்ம ஶாஶ்வதம்॥
[11-55, 56]

[அனைவரையும் நியமிப்பவனும், அணுவைக்காட்டிலும் அணுவாயிருப்பவனும், பொன்போல் ஒளிவிடுபவனும், கனவில் காண்பது போலே நெஞ்சிலே காணத்தக்கவனுமான பரமபுருஷனை அறிய வேண்டும். இவனை வேத₃ஶாகை₂களில் சில அக்₃னி என்று கூறுகின்றன. சில மநு என்றும், சில இந்த்₃ரன் என்றும், சில பிராணன் என்றும், மற்றும் சில ஶாஶ்வதமான ப்₃ரஹ்மம் என்றும் கூறுகின்றன.] என்னும் மநுஸ்ம்ருதியை ஒட்டிய ஶ்லோகங்களாலே அந்தப் பரமாத்மா புருஷ ஶப்₃த₃த்தினால் சொல்லப்படும் நாராயணனே என்று காட்டி, வேத₃த்தில் பரம்பொருளைக் குறிக்கும் பல ஶப்₃த₃ங்களும் இவனையே குறிக்கின்றன என்று முடிவு கட்டியதும் அறியத்தக்கது.

வித்₃யை, அவித்₃யை ஆகியவை பற்றிய நிர்ணயத்தை வர்ணிக்கும் பனிரண்டாம் அத்தியாயத்தில்,

ஸாங்க்₂யஸ்ய கர்த்தா கபில: பரமார்த்த₂: ஸ உச்யதே।
ஹிரண்யக₃ர்ப்போ₄ யோக₃ஸ்ய வக்தா நாந்ய: புராதந:॥
பஞ்சராத்ரஸ்ய ஸர்வஸ்ய வக்தா நாராயண: ஸ்வயம்।
அபாந்தரதமஶ்சைவ வேத₃ாசார்ய: ஸ உச்யதே॥
ப்ராசீநக₃ர்ப்ப₄ம் தம்ருஷிம் ப்ரவத₃ந்தி ஹி கேசந।
உமாபதி: பஶுபதி: ஶ்ரீகண்டோ₂ ப்₃ரஹ்மண: ஸுத:॥

http://acharya.org

ப்ரோக்தவாநிதே₃மத்யுக்₃ரம் ஜ்ஞாநம் பாஶுபதம் ஹர: ।
அத ஊர்த்₄வம் து யே கேசித் வேத₃ஶாஸ்த்ராண்யநேகஶ: ॥
பௌ₃த்₃த₄: காபிலகுஹகௌ லோகாயதிகபீ₄ந்நகா: ।
வேத₃பா₃ஹ்யாஸ்தத₂ாந்யே து தாமஸா அஶிவாஸ்து தே ॥
[12-5...9]

[ஸாங்க்₂ய ஶாஸ்த்ரத்தைச் செய்தவர் கபிலர். அவர் பரமார்த்த₂ கு₃ருவாக ஸாங்க்₂யர்களால் கூறப்படுகிறார். ஹிரண்ய க₃ர்ப்ப₄னுகிற பிரமன் யோக₃ஶாஸ்த்ரத்தைச் சொன்னவன். (படைக்கப்பட்டவர் களில்) பிரமனைக்காட்டிலும் பழையவன் ஒருவனுமில்லை. (அவனை வரையும் படைத்தவனான) நாராயணன் தானே பாஞ்சராத்ரம் முழுவதையும் அருளினான். அவன் அஜ்ஞான இருளைப் போக்கடிப் பவனாகையாலே 'அபாந்தரதமஸ்' என்றும், வேத₃த்தைப் பிரம னுக்கு முதலில் உபதே₃ஶித்தவனாகையாலே வேத₃ாசார்யன் என்றும் கூறப்படுகிறான். சிலர் அவனைப் பண்டைக்காலத்தில் பிறந்த நாரா யணரிஷியாகவும் கூறுகிறார்கள். உமையின் கணவனாய், பஶுபதி யாய், (விஷம் தங்கியிருக்கையால்) அழகிய கழுத்தையுடையவனாய், பிரமனின் பிள்ளையான அரன் மிகவும் உக்₃ரமான ஸாத₄னங்களைக் கூறும் பாஶுபதம் எனப்படும் சைவாக₃மங்களைக் கூறினான். இதற்குமேல் உள்ளவையான வேத₃த்தை ஒட்டியிருக்கும் ஶாஸ்த்ரங் கள் பல உள்ளன. பௌ₃த்₃த₄ர், காபிலர், குஹகர், லோகா யதர், பீ₄ந்நகர் ஆகிய இவர்களும். மற்றும் சிலரும் வேத₃த்துக் குப் புறம்பானவர்களாகவும், தமோகு₃ணம் நிறைந்தவர்களாகவும், அமங்க₃ளமானவர்களாகவும் உள்ளனர்.] என்னும் பகுதியில் பாஞ்ச ராத்ரத்தைக் கூறிய நாராயணனைப் பற்றிக் கூறும்போது 'ஸ்வயம்' என்று விஶேஷிக்கையாலே அவன் ஜக₃த்காரணன் என்று உணர்த்தி, அடுத்தபடி சிவனைப் பிரமனின் பிள்ளையாகக் கூறி, அவன் கூறிய பாஶுபத ஶாஸ்த்ரம் காபாலிகம் முதலான மிகவும் உக்₃ரமான ஸாத₄னங்களைக் கூறுவது என்று முழங்கியிருப்பதிலிருந்து நாராயண பரத்வமும், சிவனுடைய தாழ்வும் தெளிவாக விளங்குகிறது.

ப்ரத்யக்ஷம் சாநுமாநம் ச ஶாஸ்த்ரம் ச விவித₄ாக₃மம் ।
த்ரயம் ஸுவிதி₃தம் கார்யம் த₄ர்மஶுத்₃தி₄மபீ₄ப்ஸதா ॥
ய: கஶ்சித் கஸ்யசித்₃த₄ர்மோ மநுநா பரிகீர்த்தித: ।
ஸ ஸர்வோऽபி₄ஹிதோ வேதே₃ ஸர்வஜ்ஞாநமயோ ஹி ஸ: ॥
தஸ்மாத் வேத₃ாத்₃ருதே நாந்யத₃த்₄யேதவ்யம் த்₃விஜந்மநா ।
வேத₃பா₃ஹ்யம் து யத் கிஞ்சிந்நாத்₄யேதவ்யம் கத₃ாசந ॥

http://acharya.org

யா வேத₃பா₃ஹ்யா: ஸ்ம்ருதயோ யா: காஶ்சந குத்₃ருஷ்டய: |
ஸர்வாஸ்தா நிஷ்ப₂லா: ப்ரேத்ய தமோநிஷ்டா₂ ஹி தா:
ஸ்ம்ருதா: ||
உத்பாத்₃யந்தே வ்யயந்தே ச யாநி தாநி து காநிசித் |
ஏதாந்யர்வாக்காலிகாநி நிஷ்ப₂லாந்யந்ருதாநி ச ||
யோऽநதீ₄த்ய த்₃விஜோ வேத₃மந்யத்ர குருதே ஶ்ரமம் |
ஸ ஜீவந்நேவ ஶூத்₃ரத்வமாஶு க₃ச்ச₂தி ஸாந்வய: ||
மூலஸ்தம்பே₄ா ப₄வேத்₃வேத₃: ஶாகா₂ஶ்சாந்யாநி யாநி து |
மூலே ஹ்யுபாஸிதே ஸம்யக் ப₂லம் ப₄வதி நாந்யதா₂ ||
உச்சி₂ந்நஶாகா₂ யா: காஶ்சித் ததா₂ வேதா₃ந்தராணி ச |
அந்தர்தா₄நக₃தாநீஹ ஸ்ம்ருத்வா து ஸ்ம்ருதய: க்ருதா: ||
ஏகமேவ ஹி விஜ்ஞேயம் ஶ்ருதிஸ்ம்ருதிவிசக்ஷணை: |
தஸ்மாத் துல்ய ப₂லத்வாத்து விகல்பஶ்ச க்வசித் ஸ்ம்ருத: ||
ஶ்ருதிஸ்து வேதோ₃ விஜ்ஞேயோ த₄ர்மஶாஸ்த்ரம் து வை
ஸ்ம்ருதி: |
தே ஸர்வார்த்தே₂ஷ்வமீமாம்ஸ்யே தாப்₄யாம் த₄ர்மோ ஹி
நிர்ப₃பெ₄ள ||
யோऽவமந்யேத தே தூபே₄ ஹேதுஶாஸ்த்ராஶ்ரயோ த்₃விஜ: |
ஸ வித்₃வத்₃பி₄ர்ப₃ஹி: கார்யோ நாஸ்திகோ வேத₃நிந்த₃க: ||
ஹேதுஶாஸ்த்ராணி யோऽதீ₄தே வேத₃பா₃ஹ்யோ ப₄வேத் த்₃விஜ:|
தேந நாஸ்திக்யபா₄வேந ஸர்வம் மந்யேத ஸோऽந்யதா₂ ||
[12-19...30]

[ஶுத்₃த₄மான த₄ர்மங்கள் பரவவேண்டுமென்று விரும்புகிறவன் ப்ரத்யக்ஷம், அநுமாநம், பல பிரிவுகளையுடைய ஶாஸ்த்ரம் என்னும் மூன்று ப்ரமாணங்களும் நன்கு அறியப்பட்டதாம்படி செய்ய வேண்டும். மனுவினால் ஒவ்வொருவனுக்கும் சொல்லப்பட்ட த₄ர்மம் முழுவதும் வேத₃த்தில் சொல்லப்பட்டதாகும். எல்லா ஜ்ஞானங்களும் நிறைந்ததன்றோ வேத₃ம். ஆகையால் இருபிறப்பாளன் வேத₃த்தைத் தவிர, வேறு எதையும் ஓதலாகாது. வேத₃த்துக்குப் புறம்பானது எதுவானாலும் அதை ஒருபோதும் கற்கலாகாது. வேத₃த்துக்குப் புறம்பான அர்த்த₂ங்களைக் கூறும் பா₃ஹ்ய ஸ்ம்ருதிகளும், வேத₃த்துக்கு அவப்பொருள் கூறும் குத்₃ருஷ்டி ஸ்ம்ருதிகளும் ஆகிய இவையெல்லாம் மறுமையில் பயனற்றவையாகும். அவை தமோகு₃ணத்தில் ஊன்றி நிற்பவையாகச் சொல்லப்படுகிற

http://acharya.org

தன்றே. மற்றும் சில ஶாஸ்த்ரங்கள் அவ்வப்போது தோன்றி அழிகின்றன. இவை பிற்காலத்தில் எழுந்தவை. பயனற்றவை. (நல்லோர்களால்) ஏற்கப்படாதவை. எந்த அந்தணன் வேதத்தை ஓதாமல் புறம்பான ஶாஸ்த்ரங்களைக் கற்பதில் ஈடுபடுகிறுனே, அவன் தன் பரம்பரையோடுகூட உயிருடன் இருக்கும்போதே விரைவில் ஶூத்ரனாகிறுன். வேதமானது ப்ரமாணங்களனைத்துக்கும் வேர் போன்றதாகும். மற்ற ப்ரமாணங்கள் அதன் கிளைகளாகும். வேருக்குத் தண்ணீர் வார்ப்பதினாலே பழம் ஏற்படுவதுபோலே, வேதத்தை உபாஸிப்பதனாலேயே நற்பயன் விளையும். மற்றொன்றை உபாஸிப்பதினால் நற்பயன் விளையாது. இவ்விபூதியில் மறைந்து போன சில ஶாகைகளையும், ஸ்வர்க்கம் முதலான வேறு உலகங்களில் நடையாடுமவையாய், இங்கு மறைந்தவையான வேதங்களையும் நினைவு கூர்ந்து மநு முதலான ஸ்ம்ருதிகள் இயற்றப்பட்டன. ஶ்ருதி ஸ்ம்ருதிகளை அறிந்தவர்கள் இரண்டையும் ஒன்றாகவே அறுதியிடுகிறார்கள். இப்படி இரண்டும் ஸமமான பலத்தை உடையவையாயிருக்கையால் சிலவிடங்களில் ஶ்ருதியாவது, ஸ்ம்ருதியாவது இரண்டில் ஒன்று ஆதரிக்கத்தக்கதாயிருக்கின்றது. கேள்வியின் மூலம் பரவுவதால் வேதமானது ஶ்ருதி எனப்படுகிறது. ஶ்ருதியை நினைவு கூர்ந்து செய்யப்பட்டதாகையால் தர்மஶாஸ்த்ரம் ஸ்ம்ருதி எனப்படுகிறது. இவையிரண்டும் சொல்லும் அர்த்தங்கள் அனைத்தும் ஆராயாமல் ஏற்கத்தக்கவை. இவை இரண்டிலிருந்தும் தர்மமானது வெளிப்பட்டது. எந்த அந்தணன் விதண்டாவாத ஶாஸ்த்ரங்களைக் கொண்டு இந்த ஶ்ருதிஸ்ம்ருதிகளை அவமதிக்கிறுனே, நாஸ்திகனாய், வேதநிந்தகனான அவன் அறிவாளிகளால் பஹிஷ்கரிக்கத்தக்கவன். வெறும் தர்க்கத்தை அடிப்படையாகக் கொண்ட ஶாஸ்த்ரங்களை எந்த அந்தணன் கற்கிறுனே, அவன் வேதத்துக்குப் புறம்பானவனாவான். இந்த நாஸ்திக புத்தியினாலே அவன் எல்லாவற்றையும் விபரீதமாகவே அறிவான்.] என்று தொடங்கி, விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டபடி ப்ரத்யக்ஷம், அநுமானம், ஶாஸ்த்ரம என்று ப்ரமாணங்களை மூன்றாகவும், ஶாஸ்த்ரத்தை ஶ்ருதி, ஸ்ம்ருதி என இருவகைப்பட்டதாகவும் முழங்கியிருப்பதும், ஶ்ருதிஸ்ம்ருதிகளின் பெருமையைக் கூறியிருப்பதும் குறிக்கொள்ளத்தக்கது.

அநந்தம் சாப்ரமேயம் ச வேதஶாஸ்த்ரம் ஸநாதநம் |
வேதிதவ்யம் ப்ரயத்நேந ஸர்வவர்க்கபலப்ரதம் ||
வேதமேவ ஸமப்யஸ்யேத் வேதஶ்சக்ஷு: ஸநாதநம் |

http://acharya.org

பூ₄தம் ப₄வ்யம் ப₄விஷ்யம் ச ஸர்வம் வேத₃ப்ரதிஷ்டி₂தம் ||
அநந்தம் சாப்ரமாணம் ச ஸர்வம் வேதா₃த் ப்ரஸித்₄யதி |
இதி ஸஞ்சிந்த்ய முநிநா வேதா₃சார்யேண தீ₄மதா ||
யாஜ்ஞவல்க்யேந விப்ராணாம் த்ரயீமார்க்க₃: ப்ரத₃ர்ஸித: ||
யேந க₃ச்ச₂ந்தி வித்₃வாம்ஸ: ஸத்பதா₂ ப்₃ரஹ்மணோऽந்திகம் ||
[12-40...43]

[அளவிடவொண்ணாததாகவும், ஆழ்ந்த பொருளுடையதாகவும், பழைமையானதாகவும். த₄ர்மார்த்த₂காமமோக்ஷங்களாகிற நாலு புருஷார்த்த₂ங்களையும் அளிப்பதாகவுமிருக்கிற வேத₃ஶாஸ்த்ரம் முயன்று அறியத்தக்கது. வேத₃த்தையே கற்கக்கடவன். வேத₃மே பழமையானதான கண்ணாகும். சென்றது, நடப்பது, நடக்கப்போவது ஆகிய அனைத்துமே வேத₃த்தில் நிலைநிற்கிறது. அளவற்றதும், ஓர் ப்ரமாணங்கொண்டு அறியவொண்ணாததுமான எல்லாம் வேத₃த்தினால் அறியப்படுகிறது. இவ்வண்ணம் அறுதியிட்ட அறிவாளியாய், வேதா₃சார்யரான யாஜ்ஞவல்க்ய முனிவரால் வேத₃மார்க்க₃ம் (இந்த ஸ்ம்ருதியின் மூலம்) காட்டப்பட்டது. இந்த ஸ்ம்ருதியைக் கொண்டு அறிவாளிகள் நல்வழியின் மூலம் பரம்பொருளுக்கு அருகில் செல்கிறார்கள்.] என்னும் கடைசிப் பகுதியில் இந்த ஸ்ம்ருதியைக்கொண்டு பரம்பொருளுக்கு அருகில் செல்லலாம் என்று கூறியதிலிருந்து இந்த ஸ்ம்ருதியில் பல இடங்களில் முழங்கப்பட்ட விஷ்ணுபரத்வஜ்ஞானமே பரப்₃ரஹ்மப்ராப்திக்கு நல்வழி என்று தெளிவாக விளங்குகிறது. அத₂ர்வஶிகை₂, அத₂ர்வஶிரஸ், மைத்ராயணீயம் முதலான பல உபநிஷத்துக்களை இந்த ஸ்ம்ருதி விஷ்ணுபரமாக உபப்₃ருப்₃ஹணம் செய்கையால், அந்த உபநிஷத்துக்களும் விஷ்ணுபரமானவையே என்பதே யோக₃யாஜ்ஞவல்க்யரின் ஸித்₃தா₄ந்தம் என்று விளங்குகிறது. இதனாலேயே,

"ஹே லோகா:! ஶ்ருணுத ப்ரஸூதிமரணவ்யாதே₄ஶ்சிகித்ஸாமிமாம்,
யோக₃ஜ்ஞாஸ்ஸமுதா₃ஹரந்தி முநயோ யாம் யாஜ்ஞவல்க்யாத₃ய: |
அந்தர்ஜ்யோதிரமேயமேகமம்ருதம் க்ருஷ்ணாக்₂யமாபீயதாம்,
தத்பீதம் பரமௌஷத₄ம் விதநுதே நிர்வாணமாத்யந்திகம் ||"
[முகுந்த₃மாலை 17]

[உலகினரே! பிறந்தும் செத்தும் நின்று இடறும் நோய்க்கு மருந்தொன்று சொல்லுகிறேன், கேளுங்கள். யோக₃மறிந்தவர்களான யாஜ்ஞவல்க்யர் முதலான முனிவர்களும் இம்மருந்தையே கூறுகின்றார்கள். உள்ளேயிருக்கும் சோதியுருவானதாய், அளத்தற்கரியதாய், ஒப்பற்றதாய், கிருஷ்ணன் என்று பெயர்பெற்ற அமு

http://acharya.org

தத்தை அருந்துங்கள். மேலான மருந்தான இம்மருந்து குடிக்கப் பட்டதாகில் நித்யமான மோக்ஷத்தையே அளித்துவிடும்.] என்று முகுந்தமாலையில் குலசேகராரும் விஷ்ணுவே மோக்ஷமளிக்கவல்லவன் என்று யோகயாஜ்ஞவல்க்யர் முதலானோர் அறுதியிட்டதாக அருளினார்.

இனி, கல்கத்தா பதிப்பில் அடுத்து அச்சிடப்பட்டிருக்கும் ப்ரஹ்மோக்த யாஜ்ஞவல்க்ய ஸம்ஹிதையில் பகவத்பரத்வம் நிலைநாட்டப் பட்டிருப்பதைக் காண்போம்.

ப்ரஹ்மோக்தயாஜ்ஞவல்க்யஸம்ஹிதாநிர்ணயம்

பதின்மூன்று அத்தியாயங்கள்கொண்ட இந்த ஸ்ம்ருதியில் நித்ய நைமித்திக கர்மங்களை வர்ணிக்கும் இரண்டாமத்தியாயத்தில் பலவகையான ஊர்த்வபுண்ட்ரங்களை வர்ணித்து, மற்ற புண்ட்ரங்க ளின் தாழ்வுகளும் சொல்லப்பட்டன.

வேணுபத்ர தலாகாரம் வைஷ்ணவம் திலகம் ஸ்ம்ருதம் ।
அர்த்தசந்த்ரம் ததா ஶைவம் ஶாக்தேயம் திர்யகுச்யதே ॥
பைஶாசம் பிந்துஸம்யுக்தம் திலகம் தர்மநாஶநம் ॥
லலாடாதி கபாலாந்தம் கேஶவாதீந் ந்யஸேத்தரிம் ॥[2-31, 32]

[மூங்கில் இலை போன்ற வடிவை உடையதும், அர்த்தசந்த்ர வடிவை உடையதும் வைஷ்ணவ திலகமாகக் கூறப்படுகிறது. குறுக்கே இடும் புண்ட்ரம் சைவதிலகம் என்றும், ஶாக்ததிலகம் என்றும் கூறப்படுகிறது.......புள்ளியோடு கூடிய திலகம் அறத்தை அழிப்பதாய் பைஶாசதிலகம் என்று கூறப்படுகிறது. நெற்றியின் அடியில் தொடங்கி கபாலம் வரையில் ஹரிஸ்வரூபமான கேசவன் முதலான பன்னிரு திருமண்காப்புக்களை இடவேண்டும்.] என்று மற்ற ஊர்த்வபுண்ட்ரங்களையும், ஶைவ ஶாக்த பைஶாச திலகங்களையும் இடவேண்டும் என்று விதிக்காமல் கேஶவாதிகளாகிற பன்னிரு திருநாமங்களையே இடவேண்டும் என்று இங்கு விதித்திருப்பது குறிக் கொள்ளத்தக்கது.

நீலோத்பலதலஶ்யாமம் நாபிமத்யே ப்ரதிஷ்டிதம் ।
சதுர்ப்புஜம் மஹாத்மாநம் பூரகேநைவ சிந்தயேத் ॥
கும்பகேந ஹ்ருதிஸ்தாநம் த்யாயேச்ச கமலாஸநம் ।
ப்ரஹ்மாணம் ரக்த கௌராங்கம் சதுர்வக்த்ரம் பிதாமஹம் ॥
ரேசகேநேஶ்வரம் வித்யாத் லலாடஸ்தம் மஹேஶ்வரம் ।
ஶுத்தஸ்படிகஸங்காஶம் நிர்மலம் பாபநாஶநம் ॥[2-60...62]

http://acharya.org

[கருநெய்தல் பூவின் இதழ்போல் கறுத்தவனாய், நான்கு திருக்கைகளை உடையவனாய், பரமாத்மாவான விஷ்ணுவைப் பூரகத்திலேயே (காற்றை உள்ளிழுக்கும்போது) நாபி₄யின் நடுவில் நிலைநிற்பவனாகச் சிந்திக்கவேண்டும். தாமரையை ஆஸனமாகக் கொண்டவனாய், சிவப்பும் வெளுப்பும் கலந்த மேனியை உடையவனாய், நாலு முக₂ங்கள் கொண்டவனாய், பிதாமஹனான பிரமனைக் கும்ப₄கத்திலே (காற்றை உள்ளே நிறுத்தும்போது) ஹ்ருத₃யத்திலிருப்பவனாகச் சிந்திக்கவேண்டும். ஶுத்₃த₄ஸ்ப₂டிகம் போல் மேனியை உடையவனாய், குற்றமற்றவனாய், பாபங்களை அழிப்பவனாய், ஈஶ்வரன் என்றும் மஹேஶ்வரன் என்றும் சொல்லப்படுபவனான ஶிவனை ரேசகத்தில் (காற்றை வெளிவிடும்போது) நெற்றியிலிருப்பவனாகச் சிந்திக்க வேண்டும்] என்னும் பகுதியில், ப்ராணாயாமத்தில் பூரக கும்ப₄க ரேசகங்களில் மும்மூர்த்திகளைச் சிந்திக்க வேண்டுமென்று விதி₄க்கும் போது விஷ்ணுவை 'மஹாத்மா' என்று குறிப்பதன் மூலம் அவன் மூவரில் முதல்வன் என்று உணர்த்தப்பட்டது.

அந்தஶ்சரதி பூ₄தேஷு கு₃ஹாயாம் விஶ்வதோமுக₂: |
த்வம் யஜ்ஞஸ்த்வம் வஷட்கார: த்வம் விஷ்ணு: பரமம் பத₃ம் ||
[2-73]

[எல்லா ஜீவராஶிகளினுள்ளும் ஹ்ருத₃யத்திலே எங்கும் பரந்தவனாய் நீ ஸஞ்சரிக்கிறாய். நீயே யஜ்ஞபுருஷன். நீயே வஷட்காரன். நீயே பரமப்ராப்யமான விஷ்ணு] என்னும் ஶ்லோகம் தைத்திரீய நாராயணவல்லியில் 31-வது அநுவாகத்தின் சா₂யையிலே அமைந்திருப்பதாய், விஷ்ணுவே பரமப்ராப்யமாகவும், ஸர்வாந்தர்யாமியாகவும் இருப்பவன் என்று அறுதியிடுகிறது.

ஆக₃மோக்தேந மந்த்ரேண வித₄நே பூஜயேத்₃த₄ரிம் |
புஷ்பதூ₄பாதி₃நைவேத்₃யை: புஷ்பாஞ்ஜலிவித₄ாநத: ||
விஷ்ணும் ஸமர்ச்சயேத்₃யஸ்து ஸோऽபி விஷ்ணும் ஸமாவிஶேத் |
த₃த்₃யாத் புருஷஸூக்தேந ய: புஷ்பாஞ்ஜலி(ம்) நித்யஶ: |
அர்ச்சிதம் ஸ்யாஜ்ஜக₃தி₃த₃ம் தேந ஸர்வம் சராசரம் ||
[2-115, 116]

[ஆக₃மத்தில் சொல்லப்பட்ட அஷ்டாக்ஷரம், த்₃வாத₃ஶாக்ஷரம், ஷட₃க்ஷரம் முதலான மந்த்ரங்களினால் ஆக₃ம முறைப்படி ஹரியைப் பூஜிக்கவேண்டும். புஷ்பம், தூ₄பம், நைவேத்₃யம் முதலானவைகளை அளித்து, புஷ்பாஞ்ஜலிகளை ஸமர்ப்பித்து விஷ்ணுவை ஆராதி₄ப்பவனும் விஷ்ணுவை அடைவான். புருஷஸூக்தத்தைக்

http://acharya.org

கொண்டு எவனொருவன் தினமும் புஷ்பாஞ்ஜலியை ஸமர்ப்பிக்கிருனே அவனால் ஜங்க₃மாஜங்க₃மங்களடங்கிய இவ்வுலகனைத்தும் ஆராதி₄க்கப்பட்டதாகிறது.] என்னும் பகுதியிலிருந்து புருஷஸூக்தத்தால் சொல்லப்பட்ட பரம்பொருள் விஷ்ணுவே என்றும், அவனை ஆராதி₄ப்பதாலேயே அவனை அடையலாம் என்றும் விளங்குகிறது.

த்₄யேய: ஸதா₃ ஸவித்ருமண்ட₃லமத்₄யவர்த்தி
நாராயண: ஸரஸிஜாஸந ஸந்நிவிஷ்ட: ।
கேயூரவாந் கநககுண்ட₃லவாந் கிரீடீ
ஹாரீ ஹிரண்மயவபு: த்₄ருதஶங்க₂சக்ர: ॥
ஏவம் க்ரமேண ஸம்பூஜ்ய தே₃வதே₃வம் ஜநார்த்த₃நம் ।
ஆக₃மோக்தவிதா₄நேந ய: பூஜயதி கேஶவம் ॥
சதுர்வர்க்க₃ப₂லம் ப்ராப்ய விஷ்ணுலோகம் ஸ க₃ச்ச₂தி ।
[2-124, 125]

[ஸூர்யமண்ட₃லத்தின் நடுவிலிருப்பவனாய், தாமரையாகிற ஆஸனத்தில் வீற்றிருப்பவனாய், தோள்வளை, பொற்குண்ட₃லம், கிரீடம், ஹாரம் ஆகியவற்றை உடையவனாய், பொன்மயமான திருமேனியையுடையவனாய், ஶங்க₂சக்ரங்களை த₄ரித்தவனான நாராயணன் தியானிக்கத்தக்கவன், ப்₃ரஹ்ம ருத்₃ர காரணனாகையாலே கேஶவன் எனப்படுபவனாய், தே₃வதே₃வனான ஜநார்த்த₃னனை இவ்வண்ணமாக ஆக₃மத்தில் சொன்ன முறைப்படி எவன் ஆராதி₄க்கிருனே அவன் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாலு புருஷார்த்த₂ங்களையும் க்ரமேண அடைந்து விஷ்ணுலோகம் செல்கின்றான்.] என்னும் பகுதியில் ஸூர்யமண்ட₃லத்தின் நடுவிலிருப்பவன் நாராயணன் என்று உத்₃கோ₄ஷித்து, தே₃வதே₃வனான அவனை ஆராதி₄ப்பதால் மோக்ஷமுள்ளிட்ட எல்லாப் ப₂லன்களையும் அடைகிருன் என்று முழங்கியிருப்பது ப₄க₃வத்பரத்வத்தை நிலைநாட்டித்தருகிறது.

யதா₂காலம் மநுஷ்யாத்₃யை: போ₄க்ஷ்யமாணம் ஶரீரிபி₄: ।
தத்ஸர்வம் விஷ்ணுபூஜாயாம் ப்ரீயந்தாம் பித்ருதே₃வதா: ॥
ஆராத்ஸமீபே ஶயநாஸநே க்₃ருஹே தி₃வா ச ராத்ரௌ ச
கதா₂வபி₃ப்₄ரதா ।
யதீ₃ஸ்தி கிஞ்சித் ஸுக்ருதம் மயா க்ருதம் ஜநார்த்த₃நஸ்தேந
க்ருதேந துஷ்யது ॥ [2-153...155]

[காலம் வழுவாமல் மனிதர்கள் முதலான ஶரீரம் எடுத்தவர்கள் ப₄க்ஷ்ய போ₄ஜ்யாதி₃களை அளிப்பதில் ஏற்படும் ப்ரீதியை விஷ்ணு வைப் பூஜிப்பதாலேயே பித்ருதே₃வதைகள் அடைகின்றனர். ஸமீ பத்திலோ, தூரத்திலோ, க்₃ருஹத்தில் படுத்திருக்கும்போதோ வீற்றிருக்கும்போதோ, பகலிலோ இரவிலோ, பேசிக்கொண்டிருக்கும் போதோ நான் ஏதாவது நற்செயல் செய்திருந்தேனாகில் அந்தச் செயலால் ஜநார்த்த₃னன் உகக்கட்டும்.] என்னும் பகுதியில் விஷ்ணுபூஜையினால் பித்ருக்கள் உகக்கிறார்கள் என்றும், நாம் செய்யும் நற்செயல்களெல்லாம் ஜநார்த்த₃னனுக்கு உகப்பை விளை விப்பதன் மூலமே புண்யம் என்று பெயர் பெறுகின்றன என்றும் கூறுவதன் மூலம் விஷ்ணுபரத்வம் விளங்கவைக்கப்பட்டது. மூன்றாமத்தியாயத்தில்,

துலஸீக₃ந்த₄மாக்₄ராய பிதரஸ்துஷ்டமாநஸா: |
ப்ரயாந்தி க₃ருடா₃ரூடா₄: தத்₃விஷ்ணோ: பரமம் பத₃ம் || [3-62]

[துளஸியின் மணத்தை முகர்ந்து மிகவுகக்கும் பித்ருக்கள் க₃ருட₃ன் மேலேறி விஷ்ணுவின் பரமபத₃த்தையடைகிறார்கள்.] என்று துளஸியால் பித்ருக்களை அர்ச்சித்தால் அவர்களுக்கு விஷ்ணுவின் பரமபத₃ம் கிடைக் கும் என்று கூறுவதன் மூலம் பரமபத₃நாத₃ன் க₃ருட₃வாஹனனான விஷ்ணுவே என்று காட்டப்பட்டது. நாலாமத்தியாயத்தில்,

ப்₃ரஹ்மார்ப்பணம் ப்₃ரஹ்மஹவி: ப்₃ரஹ்மாக்₃நௌ
ப்₃ரஹ்மணா ஹுதம் |
தேந தே ப₄க₃வாநீஶ: நித்யம் ப்ரீணாதி கேஶவ: || [4-42]

[ப்₃ரஹ்மமாயிருக்கும் ஸ்ருக் முதலான ஹோமஸாத₄னங்களால் ஸமர்ப்பிக்கப்படுவதான ப்₃ரஹ்ம ரூபமான ஹவிஸ்ஸு ப்₃ரஹ்மமா யிருக்கும் ஹோமம் செய்பவனால் ப்₃ரஹ்மமான அக்₃னியில் ஹோமம் செய்யப்பட்டது. அதனாலே அந்தப் பித்ருக்களும், அவர்களுக்கு அந்தர்யாமியாய், ஜ்ஞானாதி₃கு₃ண பரிபூர்ணனாய், ஸர்வேஶ்வர னான கேஶவனும் தினந்தோறும் உகப்படைகிறார்கள்.] என்னும் ஶ்லோகத்தில் கீ₃தையில் [4-24] சொன்னபடி பித்ருக்களைக் குறித்து ஹோமம் செய்வதால் பித்ருக்களும், அவர்களுக்கு அந்தர்யாமியான கேஶவனும் திருப்தியடைகின்றனர் என்று கூறப்பட்டது குறிக் கொள்ளத்தக்கது.

ஶ்ராத்₃த₄மந்நம் ஹவிஷ்யாந்நம் விஷ்ணுஸாந்நித்₄யபோ₄ஜநம் |
அந்நாபா₄வே து கர்த்தவ்யம் ஶாகமூலப₂லேந வா || [4-54]

http://acharya.org

[ஶ்ராத்₃த₄த்திற்கு உபயோகப்படும் அன்னம் ஶுத்₃த₄மானதாகவும், ஹவிஸ்ஸாயிருப்பதாகவும், விஷ்ணு ஸந்நிதி₄யில் அமுது செய்விக்கப்பட்ட அன்னமாகவும் இருக்கவேண்டும். அன்னமில்லாவிடில் காய்கறி, கிழங்கு, பழம் ஆகியவற்றைக் கொண்டும் பித்ருக்களை ஆராதி₄க்கலாம்.] என்று ஶ்ராத்₃த₄த்தில் பித்ருக்களுக்குரிய அன்னம் எம்பெருமான் அமுது செய்ததாயிருக்கவேண்டும் என்று விதி₄க்கப்பட்டிருப்பது உணரத்தக்கது. நமது ஸாத்விகவிஜயத்தில் எடுத்துக்காட்டப்பட்ட பாத்₃மபுராண வசனங்களும் இதையே வலியுறுத்துகின்றன. எட்டாமத்தியாயத்தில்,

ந கா₃யேத் காமகீ₃தாநி வைஷ்ணவம் கீ₃தமாசரேத் । [8-126]

[காமத்தைத் தூண்டும் பாட்டுக்களைப் பாடலாகாது; விஷ்ணுவைப் பற்றின பாட்டுக்களையே பாடவேண்டும்.] என்று விஷ்ணுவைப் பற்றியே பாடவேண்டும் என்று விதி₄க்கப்பட்டதும் காணத்தக்கது. ஒன்பதாமத்தியாயத்தில்,

ஏகாத₃ஶீதி₃நம் யத்ர நிராஹாரம் ப₄வேத்ஸதா₃ ॥
யாநி காநீஹ பாபாநி அந்நமாஶ்ரித்ய திஷ்ட₂தி ।
த்₃வாத₃ஶ்யாமுபவாஸம் து யே ப்ரகுர்வந்தி மாநவா: ॥
தே விஷ்ணும் நைவ ஜாநந்தி வ்ருதா₂ விஷ்ணுபராயணா: ॥
[9-11...13]

[ஏகாத₃ஶியன்று எப்போதும் உணவு உண்ணாமலிருக்க வேண்டும். அன்று உணவு உண்டால் எல்லாப் பாபங்களும் உண்டாகும். த்₃வாத₃ஶியில் எந்த மனிதர்கள் உபவாஸமிருக்கிறார்களோ அவர்கள் விஷ்ணுவை அறியாதவர்களே. அவர்களுடைய விஷ்ணு ப₄க்தியும் வீணானதே] என்று ஏகாத₃ஶீவ்ரதமும், த்₃வாத₃ஶி பாரணையும் வைஷ்ணவர்கள் அவசியம் கைக்கொள்ளவேண்டியவை என்று காட்டப்பட்டது. பதினோராவது அத்தியாயத்தில்,

தா₃னவிதி₄யை வர்ணிக்கும்போது, தா₃னத்தை ஸாத்விகம், ராஜஸம், தாமஸம் என்று மூவகையாகப் பிரித்து,

ஶ்ரத்₃த₄யா ஸ்ருவலிதா(?)ப₄ாவம் க்ருத்வா ஹ்ருதி₃ ஜநார்த்த₃நம் ।
காலபாத்ரம் ச ஸத்₃ப₄ாவம் கு₃ப்தம் ஸாத்விகமுச்யதே ॥ [11-6]

[ஶ்ரத்₃தை₄யோடும், கைம்மாறு கருதாத நினைவோடும் காலத்தையும் பாத்திரத்தையும் உணர்ந்து, நல்ல எண்ணத்துடன் ஜநார்த்₃தனனை நெஞ்சில் தியானித்து ரஹஸ்யமாகக் கொடுப்பது ஸாத்

http://acharya.org

விகத₃ரனம் எனப்படும்.] என்று ஸாத்விகத₃ானத்தை வர்ணித்திருப்பதும் விஷ்ணுபரத்வத்தை விளங்கவைக்கிறது. அடுத்தபடியாக,

அநேந கோ₃ப்ரத₃ாநேந கோ₃விந்த₃: ப்ரீயதாம் மம । [11-20]
[இந்த கோ₃த₃ானத்தாலே கோ₃விந்த₃ன் என்னிடம் உகப்படையட்டும்] என்னுமிடத்திலும்.

ருணதே₄நும் ப்ரயச்சா₂மி (ப்ரத₃ாஸ்யாமி) ப்ரீயதாம்
மே ஜநார்த்த₃ந: । [11-28]
[ருணதே₄நுவை(?) நான் த₃ானம் அளிக்கிறேன். ஜநார்த்த₃னன் என்னிடம் உகப்படையட்டும்] என்னுமிடத்திலும் இது வலியுறுத்தப்படுகிறது.

ஸ்வர்ணரௌப்யம் ச கௌ₃ர்பூ₄மிரந்நம் வஸ்த்ரம் தத₂ா திலா: ।
த₃த்தைஸ்தைர்விஷ்ணுஸத₃நம் யாதி பூ₄த்வா ச விஷ்ணுவத் ॥
[11-41]

[தங்கம், வெள்ளி, பசு, பூ₄மி, அன்னம், வஸ்த்ரம், எள் முதலானவற்றை த₃ானமளிப்பதால் விஷ்ணுவைப் போலாகி, விஷ்ணு லோகத்தையடைகிருன்.] என்றும்,

ஶிவநேத்ரஸமுத்பந்நம் ரௌப்யம் பித்ருக₃ணப்ரியம் ।
தஸ்மாத் ரௌப்யப்ரத₃ாநேந ப்ரீயதாம் ருக்மிணீபதி: ॥ [11-44]
[சிவனுடைய நேத்ரத்திலிருந்து உண்டானதாகவும், பித்ருக்களுக்கு இனியதாகவுமிருப்பது வெள்ளி. ஆகையால், வெள்ளியை த₃ான மளிப்பதால் (பித்ருக்களுக்கு அந்தர்யாமியான) ருக்மிணீபதி உகப்படையட்டும்.] என்றும் த₃ானங்களால் பிரீதியடைந்து தன் லோகத்தையும் அளிப்பவன் விஷ்ணு என்று காட்டப்படுகிறது.

ஆசௌசத்தை வர்ணிக்கும் பதின்மூன்ருவது அத்தியாயத்தில்,

ஸத்ரயாகீ₃ ச யோ நித்யம் க₃ருட₃த்₄வஜபூஜக: ।
ப்₃ரஹ்மசாரீ யதிஶ்சைவ ஸர்வே தே த்யக்தஸூதகா: ॥ [13-18]
[எவனொருவன் ஸத்ரயாக₃ம் செய்பவனும், க₃ருட₃க் கொடியோனை விஷ்ணுவை தினந்தோறும் பூஜிக்கிருனோ அவனும், அப்படி விஷ்ணுவைப் பூஜிக்கும் ப்₃ரஹ்மசாரியும், ஸந்யாஸியும் தீட்டு இல்லாதவர்கள்.] என்று விஷ்ணு பூஜகர்களுக்கே தீட்டு இல்லை என்றும்,

யோ ந பூஜயதே நித்யம் விஷ்ணுவைஶ்வாநராதிதி₂ம் ।
ஸ்நாநஸந்த்₄யாவிஹீநாஶ்ச ஸத₂ா தே ஸூதகாந்விதா: ॥ [13-26]

http://acharya.org

[எவனொருவன் தினமும் விஷ்ணுவையும், அக்₃னியையும், அதிதி₂யையும் ஆராதி₄ப்பதில்லையோ, எவர்கள் ஸ்நான ஸந்த்₄யாவந்த₃னங்களைச் செய்வதில்லையோ அவர்களனைவரும் எப்போதும் தீட்டுடையவர்கள்'] என்று விஷ்ணு பூஜை இல்லாதவர்களுக்கு எப்போதும் தீட்டு உண்டு என்றும் கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

இதுவரையில் இந்த ஸ்ம்ருதியிலுள்ள ப₄க₃வத்பரத்வத்தைத் தெளிவாகக் காட்டும் பல வசனங்கள் விவரிக்கப்பட்டன. விநாயகர் முதலான தே₃வதைகளைப் பற்றிய ஶாந்திகளும், சில குறிப்புக்களும் இந்த ஸ்ம்ருதியில் ஆங்காங்கு காணப்பட்டபோதிலும் அவற்றில் அந்த தே₃வதைகளுக்குப் பரத்வம் எங்கும் கூறப்படவில்லை.

வ்யாக்ரபாதஸ்ம்ருதி நிர்ணயம்

கல்கத்தா பதிப்பில் நாலாவது ப₄ாக₃த்தின் கடைசியில் அச்சிடப்பட்டுள்ள இந்த ஸ்ம்ருதியில் தே₃வதா விஷயமாகவும், புண்ட்₃ர விஷயமாகவுமுள்ள சில வசனங்களைக் காண்போம்.

த₄ாரயேதூ₃ர்த்₄வபுண்ட்₃ரம் து ஸ்நாநாந்தே ச விஶேஷத: ।
தர்ப்பணே ஹோமகாலே ச ஸாயம் ப்ராத: ஸமாஹித: ॥
திர்யக்புண்ட்₃ரம் ந குர்வீத ய :வத் ஹோமம் ஸமாசரேத்॥[35,36]

[குளித்தபின்பு ஊர்த்₄வபுண்ட்₃ரம் த₄ரிக்கவேண்டும். சிறப்பாக, தர்ப்பணம் செய்யும்போதும், காலையிலும், மாலையிலும் ஹோமம் செய்யும்போதும் ஶாந்தியுடையவனாய் அதை த₄ரிக்கவேண்டும். திர்யக்புண்ட்₃ரத்தை த₄ரிப்பவர்களும் ஹோமம் முடியும் வரையில் அதை த₄ரிக்கக்கூடாது.] என்றும்,

ஊர்த்₄வபுண்ட்₃ரம் ஸதா₃ கார்யம் ஶ்ரௌதே ஸ்மார்த்தே ச கர்மணி। [40]

[ஶ்ருதியிலும், ஸ்ம்ருதியிலும் விதி₄க்கப்பட்ட கர்மங்களைச் செய்யும்போது ஊர்த்₄வபுண்ட்₃ரம எப்போதும் த₄ரிக்கததக்கது.] என்றும ஊர்த்₄வபுண்ட்₃ரத்தின் பெருமையும், திர்யக்புண்ட்₃ரத்தின் சிறுமையும் பறைசாற்றப்பட்டது.

ஶ்ராத்₃தே₄ யஜ்ஞே ஜபே ஹோமே வைஶ்வதே₃வே ஶிவார்ச்சநே।
த்ரிபுண்ட்₃ரம் த₄ாரயேத்₃யஸ்து நிராஶா: பிதரோ க₃தா: ॥ [62]

[ஶ்ராத்₃த₄ம், யஜ்ஞம், ஜபம், ஹோமம், வைஶ்வதே₃வம் ஆகியவற்றைச் செய்யும்போது ஶிவபூஜையில் த₄ரித்த த்ரிபுண்ட்₃ரத்தை

http://acharya.org

அணிந்து கொண்டிருப்பவனுடைய பித்ருக்கள் ஶ்ராத்₃த₄த்தில் விருப்ப மில்லாதவர்களாய் திரும்பி விடுகிறார்கள்.] என்றும் இவ்விஷயம் வலி யுறுத்தப்பட்டது. இனறும் த்ரிபுண்ட்₃ரம் இட்டுக்கொள்ளும் ஸ்மார்த் தர்கள் அந்தப் புண்ட்₃ரமில்லாமலே ஶ்ராத்₃த₄ம் முதலானவற்றைச் செய்கிறார்கள் என்னும் அநுஷ்டா₂னமும் இதையே காட்டுகிறது.

திலகேந விநா விப்ரோ புண்யஸ்த்ரீ குங்குமம் விநா।
த்₃வாவேதௌ கர்ஹிதௌ லோகே தை₃வே பித்ர்யே ச கர்மணி॥
யாக₃ம் தா₃நம் ச யோக₃ம ச ஸ்வாத்₄யாயம பித்ருதர்ப்பணம்।
ப₄ஸ்மீப₄வதி தத்ஸர்வம் ஊர்த்₄வபுண்ட்₃ரம் விநா க்ருதம்॥
[197, 198]

[தே₃வ பித்ரு கார்யங்களைச் செய்யும்போது நெற்றிக்குறியில்லாத அந்தணனும், குங்குமமில்லாத குலஸ்திரீயும் உலகில் இகழப்படு வார்கள். ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லாமல் செய்யப்படும் யாக₃ம், தா₃னம், யோக₃ம், அத்₄யயனம, பிதரு தர்ப்பணம் ஆகிய அனைத்தும் சாம்பலாகின்றது (வீணாகின்றது)] என்று மறுபடியும் ஊர்த்₄வபுண் ட்₃ரத்தின் பெருமை பேசப்பட்டது.

ந வ்யாஹ்ருதிஸமோ ஹோமோ ந கா₃யத்ரீஸமோ ஜப:।
நாக்₃நிஹோத்ராத் பரோ யஜ்ஞோ ந தே₃வ: கேஶவாத்பர:॥[369]

[பூ₄ர் பு₄வஸ் ஸுவ: என்னும் வ்யாஹ்ருதிஹோமத்தையொத்த ஹோமமில்லை. கா₃யத்ரீஜபத்தையொத்த ஜபமில்லை. அக்₃னி ஹோத்ரத்தைக் காட்டிலும் மேலான யாக₃மில்லை. கேசவனைக் காட்டிலும் மேலான தெய்வமில்லை.] என்றும்,

அஸந்துஷ்டே ஸுக₂ம் நாஸ்தி ந த₄ர்ம: க்ஷுத்₃ரமாநஸே।
பா₄க்₃யஹீநே த₄நம் நாஸ்தி நாஸ்த்யபுண்யேऽச்யுதார்ச்சநம்॥
[371]

[திருப்தியில்லாதவனிடம் ஸுக₂மில்லை. தாழ்ந்த நெஞ்சையுடைய வனிடம அறமில்லை. பா₄க்₃யமில்லாதவனிடம் செல்வமில்லை, புண் ணியம் செய்யாதவனிடம் அச்யுதாராத₄னம் இல்லை] என்றும் ப₄க₃ வத்பரத்வமும் இந்த ஸ்ம்ருதியில் பறைசாற்றப்பட்டது.

கபிலஸ்ம்ருதி நிர்ணயம்

கல்கத்தா பதிப்பில் கடைசியான ஐந்தாவது பா₄க₃த்தில் முதல் ஸ்ம்ருதியான கபிலஸ்ம்ருதியில் பரதத்துவத்தை நிர்ணயித்திருக்கிற படியைக் காட்டுவோம் இனி. இந்த ஸ்ம்ருதியானது விஷ்ணுவினு டைய அம்ஶாவதாரமான கபிலருக்கும் ஶௌநகமுனிவருக்கும் ஸம் வாத₃மாயமைந்துள்ளது. இதன் முதலத்தியாயத்தில்,

http://acharya.org

ஸாக்ஷாந் நாராயண: ஸோऽயம் பே₄த₃க்ருந்நாயமாப₄வேத்(?)।
வேதே₃ா நாராயண: ஸாக்ஷாத் தத₃ர்த்த₂ஜ்ஞ: ஸ ஏவ ஹி ॥ [37]
[நாராயணனுகிற இந்த தே₃வன் தன்னிலும் வேறுபட்ட உலகைப் படைத்தவனுய்த் தோன்றினுன். ஸாக்ஷாத் நாராயணனே வேத₃மாவான். (வேத₃த்தின் பொருளாவான்.) அதன் பொருளை அறிந்தவன் அவனேயன்ரே.] என்று நாராயணனே உலகைப் படைத்தவன் என்றும், வேத₃த்தை அறிந்தவன் என்றும், வேத₃த்தின் பொருளாயிருப்பவனென்றும் முழங்கப்பட்டது.

ஶதஜந்மஸ॰ தம் வித்₃யாத் ஸாக்ஷாத் தை₃வதமாக₃தம்।
வேத₃நாராயணத்₃ரோஹீ நிர்ப்ப₄யேந ஶ்ருதிம் ஸதாம் ॥
வாசா ஸம்ஸ்க்ருதயா வக்தி...வேதே₃ऽஸ்மிந்
ப்₃ரஹ்மஹா ப₄வேத் ॥ [40,41]

[எத்தனை பிறப்பெடுத்தாலும், நேரே பரம்பொருளாய் இவ்வுலகிலும் அவதரிக்கும் அந்த நாராயணனையே அறியக்கடவன். எவனெருவன் வேத₃த்துக்கும், நாராயணனுக்கும் த்₃ரோஹம் செய்பவனுய், நல்ல ஸம்ஸ்க்ருதவாக்கினுல் ப₄யமில்லாமல் வேத₃த்தைச் சொல்லுகிருனே. அவன் வேத₃த்தை ஓதியபோதிலும் ப்₃ரஹ்ம(வேத₃)ஹத்தி செய்தவனுவான்.] என்று நாராயணனுக்கு த்₃ரோஹம் செய்பவன் வேத₃த்₃ரோஹம் செய்பவனே என்று வலியுறுத்தப்பட்டது.

அநதீ₄த்ய புரா வேத₃ம் அந்யஶாஸ்த்ர ஶ்ரமம் வ்ருதா₂ ॥
கரோதி ப்₃ராஹ்மணோ மூடோ₄ நரோ க₃ர்த்த₃ப₄ உச்யதே।
நரக₂ார்த்த₃ப₄ஸம்ஸர்க்கே₃ ஸ்நாநம் பஞ்சாங்க₃ஸம்யுதம் ॥
க்ருத்வா ஸங்கல்ப்ய தத்பஶ்சாத் ப்ராணாயாமஶதம் சரேத்।...
பூ₄தலே கலிநா ஸ்ருஷ்ட: ந குர்யாத் தேந ப₄ாஷணம்।
அஶ்ரோத்ரியைர் ப்₃ரஹ்மவித்₃யாவிஷயே கலஹம் வ்ருதா₂ ॥
ந குர்யாதே₃வ ஸோऽயம் வை மஹாவ்யாமோஹகாரணம்।
ஜுலாதி₃ந: குதர்க்காஶ்ச குத்ஸிதா: கலிரூபிண: ॥
குபு₃த்₃த₄ய: குபோ₃த்₃த₄ார: குத்ஸிதாசாரகாரகா:।
நாவலோக்யா ந ஸம்ப₄ாஷ்யா விப்ரநாமகத₄ாரகா: ॥
விஶேஷேண ஶ்ராத்₃த₄தி₃நே யதி₃ த்₃ருஷ்டா ஹட₂ாத் தத₂ா।
இத₃ம் விஷ்ணுவ்யாஹ்ருதிஶ்ச ஜபித்வா ப்ரணவம் பரம் ॥
ஸமுச்சார்யாऽத₂ ச ஶ்ரோத்ரம் த₃க்ஷிணம் ஸம்ஸ்ப்ருஶேத₃பி।
ஸர்வேஷாமேவ த₄ர்மாணாம் முக்₂யத₄ர்மோऽயமேவ வை ॥
[45...53]

http://acharya.org

[அநாதி₃யான வேத₃த்தை ஓதாமல் எவனொருவன் வீணாக மற்ற ஶாஸ்த்ரங்களைக் கற்கிறானோ, முட்டாளான அந்த அந்தணன் கழுதைமனிதன் என்று சொல்லப்படுகிறான். கழுதை மனிதனோடு தொடர்பு ஏற்பட்டால் பஞ்சாங்க₃ ஸ்நானம் செய்து, அதற்குப்பின் ஸங்கல்பித்து, நூறு ப்ராணாயாமம் செய்யவேண்டியது........ இந்த மனிதன் இவ்வுலகில் கலியினால் படைக்கப்பட்டவன். அவனோடு பேசக்கூடாது. வேத₃ம் ஓதாதவர்களோடு ப்₃ரஹ்மவித்₃யாவிஷயத்தில் வாத₃ம் செய்வது வீணானது. பெரிய மயக்கத்திற்குக் காரணமான இத்தகைய வாத₃த்தை வேத₃மோதினவன் செய்யக்கூடாது. குலத்தை அழிப்பவர்களாய், குதர்க்கம் செய்பவர்களாய், தாழ்ந்தவர்களாய், கலியே உருவெடுத்தவர்களாய், தீய அறிவுடையவர்களாய், தீய அறிவை உபதே₃ஶிப்பவர்களாய், தாழ்ந்த ஒழுக்கத்தைப் பரப்புகிறவர்களாய், அந்தணன் என்னும் பெயரைத் தாங்குகிறவர்களான இவர்கள் காணவும் தகாதவர்கள்; பேசவும் தகாதவர்கள். குறிப்பாக, ஶ்ராத்₃த₄தி₃னத்தில் இவர்களைக் காணவோ, பேசவோ கூடாது. நிர்ப₃ந்த₄மாகக் காணப்பட்டுவிட்டார்களாகில் 'இத₃ம் விஷ்ணு:' என்னும் விஷ்ணுஸூக்த மந்த்ரத்தையும், 'பூ₄:' முதலான வ்யாஹ்ருதிகளையும் ஜபித்து, மேலான மந்த்ரமான ப்ரணவத்தை உச்சரித்து, வலது காதையும் தொடவேண்டும். எல்லா த₄ர்மங்களைக் காட்டிலும் இதுவே முக்கிய த₄ர்மமாகும்.] என்று கழுதை மனிதன் முதலான தாழ்ந்தவர்களின் தொடர்பு ஏற்பட்டால் விஷ்ணுஸூக்த மந்திரத்தைப் பிராயஶ்சித்தமாக விதி₄த்திருப்பது காணத்தக்கது.

விஶேஷேண து வித்₃வாந் ஸ: த்யக்தவைரோ ஹரிம் ஸ்மரந்
குர்யாதே₃வ ததோ யாதி தத்₃விஷ்ணோ: பரமம் பத₃ம் ॥ [511]

[சிறந்த அறிவாளியான அவன் விரோத₄மற்றவனாய், ஹரியை நினைத்துக்கொண்டு பூ₄மிதா₃னத்தைச் செய்யவேண்டும். அதனால் விஷ்ணுவின் பரமபத₃த்தையடைகிறான்.] என்று ஹரிஸ்மரணத்துடன் பூ₄மிதா₃னம் செய்பவன் விஷ்ணுவின் பரமபத₃த்தையே அடைகிறான் என்று கூறியிருப்பது குறிக்கொள்ளத்தக்கது.

ஏகமேவாஞ்ஜலிம் நோ வை ப்₄ராத்ருதஜ்ஜாதயோ த₃து₃: ॥
அத்₃யாஸ்மஜ்ஜலதே₃ா ஜாத: வயமேதேந பூ₄ஷிதா: ।
க்ருதார்த்த₂ா நிதராம் ஜாதா: யுஷ்மத்துல்யா அபூ₄மஹி ॥
தஸ்மாத் தத்₃த₃த்தமுத₃கம் அஸ்மாகம் பரமாம்ருதம் ।
த₃தி₄ ஸோம க்₄ருத க்ஷீர மேதே₃ா மாது₄க ஸிந்த₄வ: ॥

நாராயணபத₃ப்ராப்திகாரகாஶ்சாதிபாவநா: |
கும்பீ₄பாகமஹாகோ₄ரரௌரவாதி₃ நிவாரகா:|| [716...719]
[பித்ருக்களான எங்களுக்கு எங்களுடைய சகோதரர்களும், அவர்களுடைய வம்ஶத்தைச் சேர்ந்தவர்களும் ஒரு கை ஜலமாவது கொடுக்கிறார்கள். இன்று எங்களுக்கு ஜலாஞ்ஜலி கொடுப்பவன் பிறந்திருக்கிறான். இவனால் நாங்கள் விளங்கச்செய்யப்பட்டோம்; பெரும்பேறு பெற்றோம். எங்களுடைய பித்ருக்களான உங்களுக்குச் சமமாக ஆனோம், ஆகையால் அவர்களால் கொடுக்கப்பட்ட ஜல தர்ப்பணம் எங்களுக்கு மேலான அமிர்தமாகிறது. தயிர், ஸோம ரஸம், நெய், பால், மேத₃ஸ், தேன் ஆகியவைகளாலான கடலாகவும் ஆகிறது. மிகவும் பரிஶுத்₃த₄மானவையாய், நாராயணனுடைய திருவடியை அடைவிக்கின்றவையாய், கும்பீ₄பாகம் முதலான நரகங்களுக்குச் செல்லாமல் தடுப்பவையாகவும் ஆகின்றன.] என்று பித்ருக்களுக்கு அளிக்கப்படும் ஜலதர்ப்பணம் நாராயணனின் திருவடியை அடைவிக்கிறது என்று கூறியதும் காணத்தக்கது.

யோ வா தா₃நாநி ஸர்வாணி மஹாந்தி சரமே வய: ||
கரோதி ப₄க்த்யா ஶூத்₃ரோऽபி தத்க்ஷணாத் தேந காயத: |
விஷ்ணுலோகம் ப்ரயாத்யேவ மஹிம்நா தஸ்ய கேவலம் ||
[894, 895]

[ஶூத்₃ரனாயினும் எவனொருவன் தன் கடைசிக் காலத்தில் பெரியதான எல்லா தா₃னங்களையும் தன் உடலை வருத்திச் செய்கிறானோ அவன் மிக விரைவில் அந்த தா₃னத்தின் மஹிமையினாலேயே விஷ்ணுலோகத்தை அடைகிறான்] என்று கூறியிருப்பதும் குறிக் கொள்ளத்தக்கது.

ஸர்வயஜ்ஞௌக₄விநுதம் அபரம் தா₃நமேககம் ||
கல்பவ்ருக்ஷாக்₂யகம் தே₃வதே₃வஸ்ய பரமாத்மந: |
அதிஸம்ப்ரீதிஜநகம் தை₃ய: கைவல்யதா₃யகம் ||
ஏவம் மஹாத₄ராதா₃நம் கோ₃மேத₄ஶதஸந்நிப₄ம் || [923, 924]
[யாக₃ம் செய்பவர்களனைவராலும் புகழப்பட்டதாய், கற்பகவ்ருக்ஷம் என்று பெயர்பெற்ற மற்றொரு தா₃னம் தே₃வதே₃வனான பரமாத்மாவுக்கு மிகவும் உகப்பை அளிப்பது. மஹாத₄ராதா₃னமாகிய இந்த தா₃னம் நூறு பசுமேத₄யாக₃த்தை ஒத்ததாய், உடனே மோக்ஷத்தையே அளிப்பது.] என்று கல்பகவ்ருக்ஷதா₃னத்தின் ப₂லனைப் பரமாத்மா உகப்படைந்து மோக்ஷத்தையே அளிக்கிறான் என்று கூறப்பட்டது.

http://acharya.org

பித்ருணாமபி ஸர்வேஷாம் நரகோத்தாரபூர்வகம் ||
தச்சாஸ்வதப்ப்ரஹ்மலோகாவாப்திகாரகமுச்யதே |
தாதுஸ்து ஸத்யோ விஜ்ஞாநத்வாரைவ புநரேவ வை ||
தத்ப்ரஹ்மஸாயுஜ்யநாம முக்திகாரகமேவ வை |
தஸ்மாந்நைதத்ஸமம் தாநம் தர்மோ வை தத்பர: குத: ||
..............................லக்ஷ்மீநாராயணப்ரியம் |
மஹாஸந்ததிஸம்வ்ருத்திகாரகம் கதிதம் மஹத் ||[931...934]

[(கன்யாதானமானது) பித்ருக்கள் அனைவரையும் நரகத்திலிருந்து தூக்கி எடுத்து, நிலையான ப்ரஹ்மலோகத்தை அளிப்பதாகக் கூறப்படுகிறது. இந்த தானமளிப்பவனுக்கு விரைவில் ஜ்ஞானத்தை உண்டாக்கி, ப்ரஹ்மத்தோடு ஸாயுஜ்யம் எனப்படும் தலைசிறந்த மோக்ஷத்தை விளைக்கக்கூடியது. ஆகையால் இதற்கு ஸமானமான தானம் கிடையாது. இதற்கு மேலானது எப்படியிருக்கமுடியும்? ....இது லக்ஷ்மீநாராயணர்களுக்கு இனியது. பெரிய ஸந்ததிகளை வளரச்செய்யும் பெரிய தானம் இது.] என்று கன்யாதானத்தின் பலனை மோக்ஷபர்யந்தமாகச் சொல்லி, அது லக்ஷ்மீநாராயணர்களுக்கு இனியது என்றும் சொல்லியிருப்பதிலிருந்து, லக்ஷ்மீநாராயணர்களின் ப்ரீதியினாலேயே மோக்ஷம் ஏற்படுகிறது என்று விளங்குகிறது.

யாசந்தம் தண்டுலாந் ப்ரஹ்மசாரிணம் யதிமேவ வா |
த்ருஷ்ட்வா விலோக்ய மார்த்தாண்டம்
புண்டரீகாக்ஷமுச்சரேத் || [950]

[அரிசியைப் பிச்சை எடுக்கும் ப்ரஹ்மசாரியையோ, சந்நியாஸியையோ பார்த்தால் (அதற்குப் பிராயச்சித்தமாக) ஸூர்யனைப் பார்த்து, (ஸூர்யனின் நடுவிலிருக்கும்) புண்டரீகாக்ஷநாம ஸங்கீர்த்தனத்தைச் செய்ய வேண்டியது] என்னுமிடத்தில் ஸூர்யனுக்கு நடுவிலிருக்கும் பரம்பொருள் புண்டரீகாக்ஷனே என்னும் சாந்தோக்ய உபநிஷத்வாக்யத்தை விவரித்திருப்பது காணத்தக்கது.

இவ்வண்ணமாக, நாராயணனே உலகைப் படைத்தவன், நாராயணத்ரோஹி வேதத்ரோஹியே, தானம், தர்ப்பணம் முதலான கர்மங்களை ஹரிஸ்மரணத்தோடு செய்பவன் மோக்ஷமடைவான், ஸூர்யமண்டலத்தின் நடுவிலிருப்பவன் தாமரைக்கண்ணனான அவனே என்று முழங்குவதன்மூலம் விஷ்ணுபரத்வத்தை இந்த ஸ்ம்ருதி விளங்க வைக்கிறது.

கபிலஸ்ம்ருதி நிர்ணயம் முற்றிற்று.

http://acharya.org

வாதூ4லஸ்ம்ருதிவிநிர்ணயம்

கல்கத்தா பதிப்பில் கபிலஸ்ம்ருதிக்கு அடுத்தபடி அச்சிடப்பட்டிருக்கும் வாதூ4லஸ்ம்ருதியிலும் ப4க3வத்பரத்வமே பொலிகின்ற படியைக் காண்போம் இனி.

ப்3ராஹ்மே முஹூர்த்தே ஸம்ப்ராப்தே த்யக்தநித்3ர: ப்ரஸந்நதீ4:|
ப்ரக்ஷாள்ய பாத3ாவாசம்ய ஹரிஸங்கீர்த்தநம் சரேத் || [4]

[ப்3ராஹ்ம முஹூர்த்தத்தில் (விடியற்காலையில்) தூக்கத்தை விட்டு, தெளிந்த அறிவை உடையவனாய், கால்களை அலம்பி, ஆசமனம் செய்து, ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யவேண்டும்.] என்று விழித்தவுடன் ஹரிநாம ஸங்கீர்த்தனம் செய்யவேண்டும் என்று விதி4த்திருப்பதும், இதற்கு மாறாக ஹரநாமஸங்கீர்த்தனம் செய்யவேண்டும் என்று எந்த ஸ்ம்ருதியிலும் விதி4க்காமலிருப்பதும் காணத்தக்கது.

விஷ்ணவங்க்4ரிதோயபாநே ச நாத்3யந்தாசமநம் ப4வேத் ||
விஷ்ணுபாதோ3த்3ப4வம் தீர்த்த2ம் பீத்வா ந க்ஷாலயேத்கரம் |
க்ஷாலயேத்3யதி3 மோஹேந பஞ்சபாதகமாப்நுயாத் || [31, 32]

[எம்பெருமானுடைய ஸ்ரீபாத3 தீர்த்த2த்தைப் பருகுவதற்கு முன்பும் பின்பும் ஆசமனம் செய்யக்கூடாது. அத்தீர்த்த2த்தைப் பருகியபின் கையை அலம்பக்கூடாது. மயக்கத்தினால் அலம்பினானால் பஞ்சமஹாபாதகங்களையும் செய்தவனாவான்.] என்று எம்பெருமானுடைய ஸ்ரீபாத3தீர்த்த2த்தின் மஹிமை விளக்கப்பட்டது.

உத்ஸவே வாஸுதே3வஸ்ய ய: ஸ்நாதி ஸ்பர்ஶஶங்கயா |
ஸ்வர்க்க3ஸ்தா2: பிதரஸ்தஸ்ய பதந்தி நரகே க்ஷணாத் || [49]

[வாஸுதே3வனுடைய உத்ஸவத்தில் தீண்டத் தகாதவர்களைத் தீண்டியிருப்போமோ என்று ஐயமுற்று எவனொருவன் குளிக்கிறானோ ஸ்வர்க்க3த்திலிருக்கும் அவனுடைய பித்ருக்கள் கணநேரத்தில் நரகில் விழுவார்கள்.] என்று எம்பெருமானுடைய உத்ஸவத்தில் ஸ்பர்ஶதோ3ஷம் இல்லை என்று காட்டப்பட்டது.

ஆவாஹயாமி த்வாம் தே3வி ஸ்நாநார்த்த2மிஹ ஸுந்த3ரி |
ஏஹி க3ங்கே3 நமஸ்துப்4யம் ஸர்வதீர்த்த2ஸமந்விதே ||
இமம் மே க3ங்கே3 இத்யுக்த்வா புண்யதீர்த்தா2நி ச ஸ்மரேத்|......
ததோ நாராயணம் ஸ்ம்ருத்வா ப்ரஜபேத3க4மர்ஷணம்||[83...85]

["அழகிய தே3வியான க3ங்கை3யே! ஸ்நானத்தின் பொருட்டு உன்னை இங்கே அழைக்கிறேன் வா. எல்லாத் தீர்த்த2ங்களையும் தன்

http://acharya.org

னுள் அடக்கியவனே! உனக்கு வணக்கம்'' என்று கூறி, 'இமம் மே க₃ங்கே₃' என்னும் மந்திரத்தையும் அநுஸந்தி₄த்து, புண்ய தீர்த்த₂ங்களையும் (ஸ்நானம் செய்யும்போது) நினைக்கவேண்டும்...... அதற்குப்பின் நாராயணனை நினைத்து, அக₄மர்ஷண ஜபம் செய்ய வேண்டும்.] என்றும்,

தத்₃விஷ்ணோரிதி மந்த்ரேண மஜ்ஜேத₃ப்ஸு புந: புந: ।
கா₃யத்ரீ வைஷ்ணவீ ஹ்யேஷா விஷ்ணோ: ஸம்ஸ்மரணாய வை ॥
ப்ரதிக்₃ருஹ்யாப்ரதிக்₃ராஹ்யம் பு₄க்த்வா சாப₄க்ஷ்யப₄க்ஷணம் ।
தத்₃விஷ்ணோரித்யபாம் மத்₄யே ஸக்ருஜ்ஜப்த்வா
விஶுத்₃த்₄யதி ॥ [89, 90]

['தத்₃விஷ்ணோ: பரமம் பத₃ம்' என்னும் மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு நீரில் மறுபடியும் மறுபடியும் மூழ்கவேண்டும். இது விஷ்ணுவை நினைப்பதற்காக ஏற்பட்ட வைஷ்ணவ கா₃யத்ரியாகும். ஏற்கத்தகாததை ஏற்றாலும், புசிக்கத் தகாததைப் புசித்தாலும், 'தத்₃விஷ்ணோ:' என்னும் மந்திரத்தை நீரின் நடுவிலிருந்து கொண்டு ஒரு முறை ஜபிப்பதினால் ஶுத்₃தி₄ அடைகிறான்] என்றும் ஸ்நானத்தின்போது நாராயணனை நினைக்கவேண்டும் என்றும், அது பாபங்களைப் போக்கடிப்பது என்றும் கூறப்பட்டிருப்பது குறிக்கொள் ளத்தக்கது.

முக₂ஜாநாமூர்த்₄வபுண்ட்₃ரம் திலகம் ப₃ாஹுஜந்மநாம் ।
பத₃ாகாரமூருஜாநாம் த்ரிபுண்ட்₃ரம் பாத₃ஜந்மநாம்
த்₄ருதோர்த்₄வபுண்ட்₃ர: பரமேஶிதாரம் விஷ்ணும் பரம்
த்₄யாயதி யோ மஹாத்மா ।
ஸ்வரேண மந்த்ரேண ஸதா₃ ஹ்ருதி₃ஸ்தி₂தம் பராத்பரம்
யந்மஹதோ மஹாந்தம் ॥
மஹோபநிஷதி₃ ப்ரோக்தமூர்த்₄வபுண்ட்₃ரம் பரம் ஶுப₄ம் ।
த்₄ருதோர்த்₄வபுண்ட்₃ர: க்ருதசக்ரதா₄ரீ நாராயணம்
ஸாங்க்₂யயோகா₃தி₄க₃ம்யம் ।
ஜ்ஞாத்வா விமுச்யேத நர: ஸமஸ்தை: ஸம்ஸாரபாஶைரிஹ
சைதி விஷ்ணும் ॥
அத₂ர்வஶிரஸி ப்ரோக்தமூர்த்₄வ புண்ட்₃ரவிதி₄ம் த்₃விஜா: ।
ப்ரவக்ஷ்யாமி ஹிதார்த்த₂ம் வோ ப₄வபாப ப்ரணாஶநம் ॥
ஹரே: பாத₃ாக்ருதிம் ரம்யமாத்மநஶ்ச ஹிதாய வை ।
மத்₄யே சி₂ந்த₃ந் ஊர்த்₄வபுண்ட்₃ரம் யோ தா₄ரயதி ஸர்வதா₃ ॥

http://acharya.org

ஸ பரஸ்ய ப்ரியோ நித்யம் புண்யபா4க் முக்திபா4க் ப4வேத் ।
சதுரங்கு3லமூர்த்4வாக்3ரம் த்3வ்யங்கு3லம் விஸ்த்ருதம் ம்ருதா3 ॥
த்3விஜ: புண்ட்3ரம் ருஜு(ம்) ஸௌம்யம் ஸாந்தராலம் து தா4ர- [யேத் ।
ஊர்த்4வக3த்யாம் து யஸ்யேச்சா2 தஸ்யோர்த்4வம் புண்ட்3ரமுச்யதே ॥
ஊர்த்4வக3த்யாம் து தே3வத்வம் ஸ ப்ராப்நோதி ந ஸம்ஶய: ।
பர்வதாக்3ரே நதீ3தீரே விஷ்ணுக்ஷேத்ரே விஶேஷத: ॥
ஸிந்து4தீரேऽத2 வல்மீகே துலஸீமூலமாஶ்ரிதே ।
ம்ருத3 ஏதாஸ்து ஸங்க்3ராஹ்யா வர்ஜ்யாஶ்சாந்யாஶ்ச ம்ருத்திகா: ॥
ஶ்யாமம் ஶாந்திகரம் ப்ரோக்தம் ரக்தம் வஶ்யகரம் ப4வேத் ।
ஸ்ரீகரம் பீதமித்யாஹுர் மோக்ஷத3ம் ஶ்வேதமுச்யதே ॥
அங்கு3ஷ்ட2: புஷ்டித3: ப்ரோக்தோ மத்4யமா புஷ்கரீ ப4வேத் ।
அநாமிகாந்நதா3 நித்யம் தர்ஜநீ முக்திபு4க்திதா3 ॥
அபி4ஷிக்தம் து யச்சூர்ணம் விஷ்ணுபி3ம்பே3 து யோ நர: ।
ஹாரித்3ரம் தா4ரயேந்நித்யம் ஸோऽஶ்வமேத4ப2லம் லபே4த் ॥
[100, 111]

[பரமபுருஷனின் முக2த்திலிருந்து பிறந்த அந்தணர்கள் ஊர்த்4வ புண்ட்3ரத்தையும், தோள்களிலிருந்து பிறந்த க்ஷத்ரியர்கள் திலகத்தையும், துடையிலிருந்து பிறந்த வைஶ்யர்கள் ஒரு திருவடியின் ஆகாரத்தை உடைய புண்ட்3ரத்தையும், கால்களிலிருந்து பிறந்த ஶூத்3ரர்கள் த்ரிபுண்ட்3ரத்தையும் த4ரிக்கவேண்டும். ''ஊர்த்4வ புண்ட்3ரத்தை த4ரித்தவனாய் யாவனொரு மஹாத்மா மேலான ஈஶ்வரனாய் பரமாத்மாவான விஷ்ணுவை ஸ்வரத்தோடு கூடின மந்த்ரத்தினால் தியானிக்கிறானோ அவனுடைய நெஞ்சில் மேலானவற்றைக் காட்டிலும் மேலானதும், பெரியவற்றைக் காட்டிலும் பெரியதுமான பரம்பொருள் எப்போதும் நிலைநிற்கிறது'' என்று மேலானதும் மங்க3ளமானதுமான ஊர்த்4வபுண்ட்3ரம் மஹோபநிஷத்தில் விதி4க்கப்பட்டது. ''அந்தணர்களே! ஊர்த்4வபுண்ட்3ரத்தை த4ரித்தவனாய், சக்ராங்கனம் பெற்றவனான மனிதன் கர்ம ஜ்ஞான ப4க்தியோக3ங்களால் அறியப்படும் நாராயணனை அறிந்து, எல்லா ஸம்ஸார பாசங்களிலிருந்தும் விடுபடுகிறான்; விஷ்ணுவையும் அடைகிறான்'' என்று அத2ர்வஶிரஸ்ஸில் கூறப்பட்டதாய், ஸம்ஸாரபாபங்களைப் போக்கடிப்பதான ஊர்த்4வபுண்ட்3ர விதி4யை உங்கள் நன்மையின் பொருட்டுக் கூறுகிறேன். எம்பெருமானுடைய இரு திருவடிகளின்

http://acharya.org

ஆகாரத்தில் அமைந்ததாய், அழகியதாய், நடுவில் இடைவெளி உடையதான ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை எவனொருவன் எப்போதும் த₄ரிக்கிருனே அவன் என்றும் பரமாத்மாவுக்கு இனியவனுய், புண்ணியம் புரிந்தவனுய் மோக்ஷமடைபவனுகிருன். நாலு அங்கு₃லம் உயரம் உடையதாய், இரண்டு அங்கு₃லம் அகலமுடையதாய், நேரானதாய், அழகியதாய், இடைவெளி உள்ளதான ஊர்த்₄வ புண்ட்₃ரத்தை இரு பிறப்பாளன (வெள்ளை) மண்ணுல் த₄ரிக்க வேண்டும். எவன் உயர்க₃திக்குச் செல்லவேண்டும் என்று எண்ணு கிருனே அவனுக்கு ஊர்த்₄வபுண்ட்₃ரம் விதி₄க்கப்படுகிறது. உயர் க₃தியாகிய பரமபத₃த்தில் அவன் அயர்வறும் அமரர்களோடு ஒருவனுக ஆவான் என்பதில் ஐயமில்லை. மலை உச்சியிலும், நதிக்கரையிலும், விசேஷமாக விஷ்ணு க்ஷேத்ரங்களிலும், கடற்கரையிலும் புற்றிலும், துளசிச்செடியின வேரோடும இடத்திலும் உள்ள மண்ணைத் திருமண்காப்பிற்கு எடுத்துக்கொள்ளவேண்டும். மற்ற மண்கள் விலக்கத்தக்கவை. கறுப்பு நிறமுள்ள மண் ஶாந்தியை அளிப்பதென்றும், சிவப்பு நிறமுள்ளது வஶ்யஶக்தியை அளிப்பது என்றும், மஞ்சள் நிறமுள்ளது செல்வத்தையளிப்பதென்றும், வெள்ளை நிறமுள்ளது மோக்ஷத்தை அளிப்பதென்றும் கூறப்படுகிறது. கட்டை விரலால் இடுவது புஷ்டியை அளிக்கிறது என்றும், நடு விரலால் இடுவது நிறைவை அளிக்கிறது என்றும், மோதிரவிரலால் இடுவது அன்னத்தை அளிப்பது என்றும், சுட்டு விரலால் இடுவது எப்போதும் போ₄க₃மோக்ஷங்களிரண்டையும் அளிப்பதென்றும் கூறப்படுகிறது. (திருமண்காப்பின் நடுவில்) விஷ்ணு பி₃ம்ப₃த்தில் அபி₄ஷேகம் செய்விக்கப்பெற்ற ஹரித்₃ரா சூர்ணத்தை எவனொருவன் எப்போதும் த₄ரிக்கிருனே அவன் அஶ்வமேத₄ம் செய்த ப₂லனை அடைகிருன்] என்று ஊர்த்₄வபுண்ட்₃ரலக்ஷணம் விரிவாக விளக்கப் பட்டதும் ஸ்ரீவைஷ்ணவர்களிடும் திருமண்காப்பின் சிறப்பை உணர்த்துகிறது.

ப்₃ரஹ்மயஜ்ஞே ஜபேத் ஸூக்தம் பௌருஷம் சிந்தயந் ஹரிம் |
ஸ ஸர்வாந் ஜபதே வேதா₃ந் ஸாங்கோ₃பாங்கா₃(ந்) விதா₄நத: || [156]

[ப்₃ரஹ்மயஜ்ஞத்தின்போது ஹரியை நினைத்துக்கொண்டு புருஷ ஸூக்தத்தை ஜபிக்கவேண்டும். அப்படி ஜபிப்பவன் அங்கோ₃பாங்க₃ங்களோடு கூடிய எல்லா வேத₃ங்களையும் முறைப்படி ஜபித்தவனுகிருன்.] என்னுமிடத்தில் புருஷஸூக்தத்தினுல் சொல்லப்படுபவன் எம்பெருமானே என்பது தோற்ற 'புருஷஸூக்த ஜபத்தின்போது ஹரியை நினைக்கவேண்டும்' என்று விதி₄த்திருப்பது காணத்தக்கது.

http://acharya.org

ஶ்ருதிஸ்ம்ருதீ மமைவாஜ்ஞா யஸ்தாமுல்லங்க்₄ய வர்த்ததே ।
ஆஜ்ஞாச்சே₂தீ₃ மம த்₃ரோஹீ மத்₃ப₄க்தோऽபி ந வைஷ்ணவ: ॥
விஷ்ணுநா து புரா கீ₃தமேவம் தத்து மயேரிதம் ।
ஶ்ருதிஸ்ம்ருதீ து விப்ராணாம் சக்ஷுஷீ த்₃வே விநிர்மிதே ॥
காணஸ்தத்ரைகயா ஹீநோ த்₃வாப்₄யாமந்த₄: ப்ரகீர்த்தித: ॥
[189...191]

["ஶ்ருதியும், ஸ்ம்ருதியும் என்னுடைய ஆணையேயாகும். எவனொருவன் இவற்றை மீறி நடக்கிறானோ அவன் என் ஆணையை மீறுகிறவனாய், எனக்கு த்₃ரோஹியாகிறானாகையாலே எனது ப₄க்தனாயினும் வைஷ்ணவனாகமாட்டான்" என்று ஆதி₃காலத்தில் விஷ்ணுவினால் சொல்லப்பட்ட இவ்வசனம் இங்கு என்னால் எடுக்கப்பட்டது. அந்தணர்களுக்கு ஶ்ருதியும், ஸ்ம்ருதியும் இரு கண்களைப்போலே படைக்கப் பட்டன. அவற்றில் ஒன்றை அறியாதவன் ஒருகண் குருடனாவான். இரண்டும் அறியாதவன் முழுக்குருடனாகச் சொல்லப்படுகிறான்] என்று ஶ்ருதி ஸ்ம்ருதிகள் விஷ்ணுவின் ஆணைகளே என்று கூறப்பட்டது குறிக்கொள்ளத்தக்கது.

மாஸிகே ச ஸபிண்டே₃ ச ப்ரதிஸம்வத்ஸரே ததா₂ ।
வ்யர்த்த₂ம் ப₄வதி தச்ச்₂ராத்₃த₄ம் வாஸுதே₃வம் விநா க்ருதம் ॥
ஜபஸ்தப: ஶ்ராத்₃த₄கர்ம ஸ்வாத்₄யாயாதி₃கமேவ ச ।
வ்யர்த்த₂ம் ப₄வதி தத் ஸர்வம் ஊர்த்₄வபுண்ட்₃ரம் விநா க்ருதம் ॥ [199, 200]

[மாஸந்தோறும் செய்யும் மாஸ்யத்திலும், ஸபிண்டீ₃கரணத்திலும், ஒவ்வொரு வருஷமும் செய்யப்படும் ஶ்ராத்₃த₄த்திலும் செய்யப்படும் ஶ்ராத்₃த₄ம் வாஸுதே₃வஸம்ப₃ந்த₄ம் இல்லாமல் செய்யப்பட்டதாகில் அது வீணானதாகும். ஜபம், தபம், ஶ்ராத்₃த₄கர்மம், அத்₄யயனம் முதலானவையெல்லாம் ஊர்த்₄வபுண்ட்₃ரமில்லாமல் செய்யப்பட்டதாகில் அது வீணானதாகும்.] என்று கூறியிருக்கையால் ஊர்த்₄வ புண்ட்₃ரத்தின் சிறப்பும், வாஸுதே₃வனின் பரத்வமும் விளங்கா நிற்கிறது.

யோ மோஹாத₃த₂வாऽऽலஸ்யாத₃க்ருத்வா கேஶவார்ச்சநம் ।
பு₄ங்க்தே ஸ யாதி நரகம் ஶ்வாநயோநிஷு ஜாயதே ॥ [222]

[எவனொருவன் மயக்கத்தினாலோ, சோம்பலினாலோ கேஶவனை ஆராதி₄க்காமல் உண்கிறானோ அவன் நரகத்தையடைவான். அதற்குப் பின்பு நாய் ஜன்மத்தை அடைகிறான்.] என்று கேஶவனை தினமும் ஆராதி₄க்கவேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது.

http://acharya.org

இவ்வண்ணமாக, (1) விழித்தவுடன் ஹரிநாமஸங்கீர்த்தனம் செய்யவேண்டும். (2) எம்பெருமானுடைய ஸ்ரீபாத₃தீர்த்த₂மஹிமை. (3) உத்ஸவ ஸேவா மஹிமை. (4) ஸ்நானத்தின்போதும் நினைக்கத்தக்கவன் விஷ்ணுவே. (5) ஊர்த்₄வபுண்ட்₃ரப்ரப₄ாவம். (6) புருஷஸூக்தஜபத்தின்போது நினைக்கத்தக்கவன் ஹரியே. (7)ஶ்ருதிஸ்ம்ருதிகள் விஷ்ணுவின் ஆஜ்ஞைகளே. (8)ஊர்த்₄வபுண்ட்₃ரமும்,வாஸுதே₃வஸம்ப₃ந்த₄முமில்லாமல் செய்யப்படும் ஶ்ராத்₃த₄ம் பயனற்றது. (9) கேஶவனை தினந்தோறும் ஆராதி₄க்காதவன் மிகத் தாழ்ந்தவன் என்னும் விஷயங்களை முழங்குகையால் இந்த வாதூ₄லஸ்ம்ருதியிலிருந்தும் விஷ்ணுபரத்வம் கல்வெட்டாகத் தேறிநிற்கிறது என்பது தெளிவாகிறது.

வாதூ₄லஸ்ம்ருதிநிர்ணயம் முற்றிற்று.

விஶ்வாமித்ரஸ்ம்ருதி நிர்ணயம்

கல்கத்தா பதிப்பில் வாதூ₄லஸ்ம்ருதிக்கு அடுத்தபடி அச்சிடப்பட்டுள்ள விஶ்வாமித்ர ஸ்ம்ருதியில் ஏழு அத்தியாயங்கள் உள்ளன. அதில் நித்யநைமித்திக கர்மங்களை வர்ணிக்கும் முதல் அத்தியாயத்தில்

ஸமுத்₃ரவஸநே தே₃வி பர்வதஸ்தந மண்ட₃லே।
விஷ்ணுபத்னி நமஸ்துப்₄யம் பாத₃ஸ்பர்ஶம் க்ஷமஸ்வ மே॥[1-45]

[கடலை வஸ்த்ரமாகக் கொண்டவளாய், மலைகளை ஸ்தனங்களாகக் கொண்டவளாய், விஷ்ணு பத்னியான பூ₄தே₃வியே! உனக்கு வணக்கம். என்னுடைய கால்கள் உன்மேல் படுவதைப் பொறுத்துக் கொள்வாயாக.] என்று பூ₄தே₃வியை விஷ்ணுபத்னி என்று குறிப்பதன்மூலம் விஷ்ணுவின் பரத்வம் விளங்கவைக்கப்படுகிறது. ஆசமனவிதி₄யை வர்ணிக்கும் இரண்டாமத்தியாயத்தில்

விந்யஸேத் கேஶவாதீ₃நி பௌராணுசமநம் ப₄வேத்। [2-3]

[கேஶவன் முதலான நாமங்களைக்கொண்டு அந்தந்த அங்க₃ங்களைத் தொடுவது புராணங்களில் சொல்லப்பட்ட ஆசமனமாகும்.] என்று முதலில் ஆசமனம் சுருக்கமாகக் கூறப்பட்டது.

கேஶவாதி₃த்ரயேணுபோ மாஷத₃க்₄நம் பிபே₃த் க்ரமாத்॥
கோ₃விந்த₃மக்₂ரதோ ந்யஸ்ய ஸௌஷும்நே விஷ்ணுமேவ ச।

http://acharya.org

மது4ஸூத3நமாதி3த்யே ஸுத4ாம்ஸௌ ச த்ரிவிக்ரமம் ||
அக்3ரதோ வாமநம் சைவ ஶ்ரீத4ரம் ஹஸ்தயோஸ் ததா2 |
ஹ்ருஷீகேஶம் பத்3மநாப4ம் உப4யோ: பாத3யோர்ந்யஸேத் ||
தா3மோத3ரம் ப்3ரஹ்மரந்த்4ரே நாம ஸங்கர்ஷணஸ்ய ச |
ந்யஸேத்3வா நாஸிகாமத்4யே சாஸ்யாந்தே வா விநிர்தி3ஶேத் ||
விந்யஸேத்3த3க்ஷநாஸாயாம் வாஸுதே3வம் ததை2வ ச |
ப்ரத்3யும்நம் விந்யஸேத்3வாமே அநிருத்3த4ம் து த3க்ஷிணே ||
புருஷோத்தமம் வாமநேத்ரே த3க்ஷகர்ணே ஹ்யதோ4க்ஷஜம் |
நாரஸிம்ஹம் வாமகர்ணே நாப4ாவச்யுதமேவ வா ||
ஜநார்த்த3நம் ஹ்ருதி3 ந்யஸ்ய ப்3ரஹ்மரந்த்4ரே ஹ்யுபேந்த்3ரகம் |
விந்யஸேச்ச ஹரிம் க்ருஷ்ணம் பு4ஜே த3க்ஷே ச வாமகே ||
பௌராணம் ஸ்மார்த்தமித்யேதத் க்ஷத்ரியாணாம் விதீ4யதே ||
[2-12...19]

[கேஶவன், நாராயணன், மாத4வன் என்னும் மூன்று நாமங்களைக் கொண்டு மாஷரேகை2 முழுகுமளவுள்ள தீர்த்த2த்தைக் கையிலெடுத்து முறையே பருகவேண்டும். கோ3விந்த3னைத் தனக்கு முன்னாலும், விஷ்ணுவை ஸுஷும்நா நாடியிலும், மது4ஸூத3னனை ஆதி3த்ய னிலும், த்ரிவிக்ரமனைச் சந்த்3ரனிலும், வாமனனை முன்புறத்திலும், ஶ்ரீத4ரனை இரு கைகளிலும், ஹ்ருஷீகேஶனையும் பத்மநாப4னையும் இரு கால்களிலும், தா3மோத3ரனை ப்3ரஹ்மரந்த்4ரத்திலும் ந்யாஸம் செய்யவேண்டும். ஸங்கர்ஷண நாமத்தை மூக்கின் நடுவிலோ முடி விலேயோ ந்யாஸம் செய்யவேண்டும். வலது மூக்கில் வாஸு தே3வனையும், இடது மூக்கில் ப்ரத்3யும்னனையும், வலது கண்ணில் அநிருத்3த4னையும், இடது கண்ணில் புருஷோத்தமனையும், வலது காதில் அதோ4க்ஷஜனையும், இடது காதில் நரசிம்மனையும், நாபி4 யில் அச்யுதனையும், ஜநார்த்த3னனை ஹ்ருத3யத்திலும், ப்3ரஹ்ம ரந்த்4ரத்தில் உபேந்த்3ரனையும், ஹரியையும், கிருஷ்ணனையும் முறையே வலது இடது பு4ஜங்களிலும் நியாஸம் செய்யவேண்டும். புராணங்களிலும், ஸ்ம்ருதிகளிலும் இந்த ஆசமனம் க்ஷத்ரியர்களுக்கு விதி4க்கப்பட்டது.] என்று முற்கூறிய புராண ஆசமனம் விளக்கப் பட்டது. க்ஷத்ரியர்களுக்குரிய இந்த ஆசமனத்திலும் விஷ்ணுநாமங் களே நியாஸம் செய்யப்படுவது காணத்தக்கது. சிவாதி3நாமங்களைக் கொண்டு ஸ்ம்ருதிகளில் எங்குமே ஆசமனம் விதி4க்கப்படாததும் குறிக்கொள்ளத்தக்கது.

http://acharya.org

ஶா^த்₃த₄ாசமாநாம் த்ரிவித₄ம் ப்ரகாரம் குர்யாத்த்ரி-
ஸந்த்₄யாஸு ஸமஸ்தகர்மஸு।
ஆரம்ப₄ணம் கேஶவநாமயுக்தம் ஶ்ருதிஸ்ம்ருதிப்₄யாம்
த்₃விவித₄ம் தத₃ேₒச்யதே ॥ [2-21]

[எல்லா வைதி₃ககர்மங்களிலும், மூன்று ஸந்த்₄யாகாலங்களிலும் [(1) நீர் பருகுவது, (2) அங்க₃ந்யாஸம் செய்வது, (3) நாமங்களை உச்சரிப்பது என்று] மூன்று வகைப்பட்ட ஶா^த்₃த₄மான ஆசமனத்-தைச் செய்யவேண்டும். ஆசமனத்தின் தொடக்கம் கேஶவ நாமத்தோடு கூடியது. ஶ்ருத்யாசமனம் என்றும், ஸ்ம்ருத்யாசமனம் என்றும் ஆசமனம் இரண்டு வகையாகக் கூறப்படுகிறது.] என்றும்,

புண்யஸ்த்ரீணும் நமோऽந்தம் ஸ்யாத் விஶேஷாத்
கேஶவாதி₃ஷு। [2-26]

[ப₄க₃வந்நாமங்களை, குறிப்பாகக் கேஶவாதி₃ நாமங்களைப் புண்ய ஸ்த்ரீகள் உச்சரிக்கும்போது கடைசியில் நம:பத₃த்தையும் சேர்த்து உச்சரிக்கவேண்டும்.] என்றும்,

கராக்₃ரபஞ்சாங்கு₃லி பூர்ணமுத்₃ரா ஸகேஶவாத்₃யை-
ரநுவர்த்தநீயா। [2-29]

[கையிலுள்ள ஐந்து விரல்களாலும் அங்க₃ந்யாஸம் செய்துகொண்டு கேஶவாதி₃ நாமங்களோடு ஆசமனம் செய்யவேண்டும்.] என்றும் ஆசமனத்தின்போது கேஶவாதி₃ நாமங்கள் விதி₄க்கப்பட்டன.

ஶ்ருத்யாசமநமேபி₄ர்யோ ஹரே: குர்யாத் த்₃விஜோத்தம:।
ஸ ஸர்வபாபமுக்த: ஸ்யாத் ஸ்ப்ருஷ்டாஸ்ப்ருஷ்டிர் ந
வித்₃யதே ॥ [2-38]

[இந்த வேத₃மந்த்ரோச்சாரணங்களையும், அங்க₃ந்யாஸ கரந்யாஸங்களையும் செய்து, எந்த அந்தணர் தலைவன் ஹரியைக்குறித்து ஶ்ருத்யாசமனத்தைச் செய்கிறானோ, அவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் நீங்கியவனாகிறான். அவனுக்கு ஸ்பர்ஶதோ₃ஷம் கிடையாது.] என்று ஶ்ருத்யாசமனமும் ஹரியைக்குறித்ததே என்று காட்டப்பட்டது. கா₃யத்ரியின் பெருமையைப் பேசும் ஐந்தாம் அத்தியாயத்தில்,

நாராயணம் மூலமந்த்ரம் ஸம்ஜ்ஞாமந்த்ரம் ப₄வேத் ஸதா₃।
ஓமாபோ ஜ்யோதிரித்யேதத் பத₃மந்த்ரமிதீரிதம் ॥ [5-11]

http://acharya.org

[நாராயண நாமத்தைக் கொண்ட மூலமந்த்ரமாகிற திருவஷ்டாக்ஷர மந்த்ரம் ஸம்ஜ்ஞா மந்த்ரம் எனப்படுவதாய் எப்போதும் சொல்லத்தக்கது. 'ஓமாபோ ஜ்யோதி:' என்பது பத₃மந்த்ரம் என்று கூறப்படுகிறது.] என்று திருமந்த்ரத்தின் பெருமை பேசப்பட்டது.

ஶ்ரீஸூர்யநாராயணப்ரீத்யர்த்த₂ம் அர்க்₄யப்ரதா₃நம் கரிஷ்யே இதி ஸங்கல்ப்ய அர்க்₄யப்ரதா₃நமந்த்ரஸ்ய ஸவித்ரு ப₄க₃வாந் ருஷி: அநுஷ்டுப்ச₂ந்த₃:, ஶ்ரீஸூர்யநாராயணோ தே₃வதா । [5-41]
['ஶ்ரீஸூர்ய நாராயணனின் ப்ரீதியின் பொருட்டு அர்க்₄யப்ரதா₃னம் செய்கிறேன்' என்று ஸங்கல்பித்து, அர்க்₄யப்ரதா₃ன மந்த்ரத்துக்கு ஸூர்யப₄க₃வான் ரிஷி, அநுஷ்டுப் ச₂ந்த₃ஸ், ஶ்ரீஸூர்யநாராயணன் தே₃வதை என்று அநுஸந்தி₄க்கவேண்டும்.] என்று ஸூர்யனுக்கு அந்தர்யாமியான ஸூர்யநாராயணனே அர்க்₄யப்ரதா₃னத்தால் உகப்பவன் என்று காட்டப்பட்டது. இருவித₄மான ஜபத்தைக் கூறும் ஆறும் அத்தியாயத்தில்,

ப்ருதி₂வி(த்₃வி)! த்வயா த்₄ருதா லோகா தே₃வி! த்வம்
விஷ்ணுநா த்₄ருதா ।
த்வம் ச தா₄ரய மாம் தே₃வி! பவித்ரம் குரு சாஸநம் ॥ [6-5]
[பூ₄மிதே₃வியே! உன்னால் உலகங்கள் த₄ரிக்கப்படுகின்றன. நீ விஷ்ணுவால் த₄ரிக்கப்படுகின்றாய். நீ என்னை த₄ரிப்பாயாக. என்னுடைய ஆஸனத்தைப் பரிஶுத்₃த₄ப்படுத்துவாயாக.] என்று எல்லாவுலகங்களையும் த₄ரிக்கும் பூ₄மிதே₃வி விஷ்ணுவினால் த₄ரிக்கப்படுபவள் என்று முழங்கப்பட்டது. இப்படி விஷ்ணுபரத்வம் செய்திருக்கும் விஶ்வாமித்ர ஸ்ம்ருதியிலும் வேறு எந்த தெய்வத்துக்கும் பரத்வம் கூறப்படவில்லை. அடுத்ததான லோஹிதஸ்ம்ருதியில் எந்த தெய்வத்துக்கும் பரத்வம் கூறும் வசனங்கள் எதுவுமில்லை. ஆகையால் அதற்கடுத்த நாராயணஸ்ம்ருதியைக் காண்போம்.

விஶ்வாமித்ரஸ்ம்ருதிநிர்ணயம் முற்றிற்று.

நாராயணஸ்ம்ருதிநிர்ணயம்

இந்த நாராயணஸ்ம்ருதியிலும் முதல் எட்டு அத்தியாயங்களில் எந்த தேவதைக்கும் பரத்வத்தைக் காட்டும் எதுவுமில்லை. கடைசியான ஒன்பதாவது அத்தியாயத்தின் கடைசியில் கலியில் விலக்கப்பட்ட காரியத்தைச் செய்து த₄ரித்₃ரனும் வாழும் மனிதனுக்குப் பிராயஶ்சித்தத்தை வர்ணிக்கும்போது,

http://acharya.org

பலாஷ்டகப்ரமாணேந தண்டு₃லேந ஹவி: பசேத்।
கோ₃மூத்ரே விநிவேத்₃யைவ ஹரயே பரமாத்மநே ॥
ததே₃வ பு₄க்த்வா ஸாயாஹ்நே ஸ்வபேத்₃வை த₃க்ஷிணாஶிரா: ।
ஏவம் ஷண்மாஸக்ருத் விப்ர: பூர்வவத் ஶுத்₃தி₄மாப்நுயாத் ॥
ததோ க₃ங்கா₃ஜலே ஸ்நாத்வா ஸேதுத₃ர்ஶநமேவ வா ।
க்ருத்வா தத: புந: கர்ம க்ருத்வா ஶுத்₃தி₄மவாப்நுயாத் ॥
ஸ்வகர்மபரகர்மார்ஹ: ப₄வேதே₃வ ந ஸம்ஶய: ॥ [9-9...12]

[எட்டு பலம் அளவுள்ள அரிசியைக்கொண்டு ஹவிஸ்ஸை கோ₃மூத்ரத்தில் சமைக்கவேண்டும். அதைப் பரமாத்மாவான ஹரிக்கு நிவேத₃நம் செய்து, அதையே மாலையில் பு₄ஜித்து, (இரவில்) தெற்கே தலையை வைத்துத் தூங்கவேண்டும். இப்படி ஆறுமாதம் பிராயஶ்சித்தத்தை அநுஷ்டி₂க்கும் அந்தணன் முன்போலே பரிஶுத்₃த₄னுவான். அதற்குப்பின் க₃ங்கா₃ ஜலத்தில் நீராடியோ, சேதுவைக் கண்டோ அங்கு செய்யவேண்டிய கிரியைகளைச் செய்து, அதற்குப்பின் பரிஶுத்₃தி₄ அடைவான். தன் கர்மங்களைச் செய்வதற்கும், பிறர்க்குக் கர்மங்களைச் செய்விப்பதற்கும் தகுதியுடையவனுவான். இதில் ஐயமில்லை.] என்று ஹரியைப் பரமாத்மா என்று குறித்திருப்பதிலிருந்து, இந்த ஸ்ம்ருதியும் விஷ்ணு பரத்வத்தையே நிலைநாட்டுகிறது என்று விளங்குகிறது.

நாராயணஸ்ம்ருதிநிர்ணயம் முற்றிற்று.

இனி, கல்கத்தாபதிப்பில் அடுத்தபடி அச்சிடப்பட்டிருக்கும் ஶாண்டி₃ல்யஸ்ம்ருதி ஏற்கனவே ஆராயப்பட்டுவிட்டதாகையால், அதற்கடுத்தபடியுள்ள கண்வஸ்ம்ருதியைக் காண்போம்.

கண்வஸ்ம்ருதிநிர்ணயம்

இந்த ஸ்ம்ருதியில் த₄ர்மஸாரத்தை வர்ணிக்கும் முதலத்தியாயத்தில்,

யத்கிஞ்சித்₃வா க்ருதம் தேந பரமேஶ்வரதுஷ்டயே ।
தத₃க்ஷயமமோக₄ம் ஸ்யாத் ப்₃ரஹ்மஜ்ஞாநைகஸாத₄கம் ॥
யத₃ஶாஸ்த்ரக்ருதம் ச ஸ்யாத் அஶாஸ்த்ரக்ருதமப்யலம் ।
பரமேஶ்வரதுஷ்ட்யர்த்த₂க்ருதம் தஸ்மாத் தத₃ சரேத் ॥......
பரமேஶ்வர ஶப்₃த₃ம் ய: கர்மாதி₃ஷு ஸமாஹிதை: ।
ப்ரவதே₃த்₃வைதி₃கை: ஸித்₃தி₄: ப்₃ரஹ்மஶப்₃தே₃ாऽத₂வா ஸதா₃॥
ஶ்ரீஶப்₃த₃பூர்வகோ நித்யம் தாவந்மாத்ரேண ஸா க்ரியா ॥
[11...16]

http://acharya.org

[அவனுல் பரமேஶ்வரனின் உகப்பின் பொருட்டு எந்தக் காரியமானது செய்யப்பட்டதோ அது அழியாததாகவும், பெரும்பயனை விளைப்பதாகவும ப்3ரஹ்ம ஜ்ஞானத்திற்கு முக்கிய உபாயமாகவும் ஆகிறது. ஶாஸ்த்ரமுறைப்படி செய்யப்படாவிட்டாலும், பரமேஶ்வரனுடைய உகப்பிற்காகச் செய்யப்பட்டது ஶாஸ்த்ர முறைப்படி செய்யப்பட்டதாகவே ஆகிறது. ஆகையால் கர்மங்களை அவ்வண்ணமே அநுஷ்டி2க்கவேண்டும்................எவன் பரமேஶ்வர ஶப்3த3த்தைக் கர்மம் முதலானவற்றில் பழக்கமுடைய வைதி3கர்களைக் கொண்டு உச்சரிக்கச் செய்கிருனே அவனுக்கு ஸித்3தி4 ஏற்படுகிறது. ஸ்ரீஶப்3த3த்தை முன்னிட்ட ப்3ரஹ்ம ஶப்3த3த்தையாவது பரமேஶ்வர ஶப்3த3 ஸ்த2ானத்தில் எப்போதும் பிரயோகி3க்கலாம். இப்படிச் செய்தாலும் அக்கர்மம் பயனுடையதாகிறது.] என்று பரமாத்மாவைப் பரமேஶ்வர ஶப்3த3த்தாலும், ப்3ரஹ்ம ஶப்3த3த்தாலும் குறித்தார்கண்வர். இந்தப் பரமேஶ்வரன் யாரென்பதைப் பிற்பகுதிகளில் எப்படி நிர்ணயித்திருக்கிருர் என்பதைக் காண்போம்.

ப்3ரஹ்ம வை சதுர்ஹோதார: தேப்4யோ யஜ்ஞோऽதி4 நிர்மித: |
ஸ ஹி நாராயணோ ப்3ரஹ்ம புருஷரூபேண தத்ர ச ||
வர்த்ததே ச :நுயாகேந சோத்தரேண ஜக3ந்மய: |
ஸ்ருஷ்டிஸ்தி2தி-விநாஶாநாம் கர்த்தா காரணகாரணம் ||
கரணஸ்யாபி கரணம் ஜக3ஜ்ஜந்மாதி3காரணம் |
ஸத்யஜ்ஞாநாநந்த3மயம் ஸத3ஸச்சிந்மயாத்மகம் ||
தத்3ரூபேணைவதீர்ணம் தத் தஸ்யாத்4யேதா தத3ாத்மக: |
ப்3ரஹ்மவாத்3யுச்யதே ஸத்3பி4: ஸ ஹி யைர்ந நிஷித்4யதே ||
ஸ ஸர்வவேத3யஜ்ஞௌக4ஸத்கர்மவ்ரதக்ருந்மத: |
ஸ உ வை வைதி3க ஶ்ரேஷ்ட2: கர்மிஷ்ட2: கர்மடே2ாऽஶட2: ||
ஸர்வாசார்ய: ஸர்வப3ந்து4: ஸம்ப்ரத3ாய ப்ரவர்த்தக: |
ஸர்வாசாரஸ்த2ாபகஶ்ச ஸர்வலோகவிலக்ஷண: ||
ஸூக்ஷ்மத4ர்மார்த்த2தத்த்வஜ்ஞ: ஸோऽயம் கில விஶேஷவித் |
வேத3மார்க்க3ாநுஸாரீ ச பரம் வேதே3ாக்தமேவ ஹி ||
கரோதி கர்ம நாந்யத்து கௌ3ணமுக்2யே தத2ா ப2லம் |
தே3ஶகாலமஹாபாத்ரத்3ரவ்யயோக3ாதி3கேக்ஷணே ||
முக்2யம் தத்ஸமநுஷ்ட2ாநம் குருதே கில ஸந்ததம் |
ஸத்கர்மபி4: ஸத2ா பூஜாம் கரோதி குலஸம்ப4வ: ||

http://acharya.org

ஸபத்ரபுஷ்பாதி₃க்ருதா தே₃வஸ்ய பரமாத்மந: ।
ப₄வேந்ந து ஸதா₃ பூஜா கிந்து ஸா கர்மபி₄: க்ருதை: ॥
யதா₂ஶாஸ்த்ராதி₃விஹிதை: அலப்₄யைர் மஹதீதி ஸா ।
ப்ரோச்யதே தத்₃விஶேஷஜ்ஞை: ஸா ஹி ஸர்வோத்தமோத்-
ஸா ஸர்வஸாத₄ாரணதோ ந கர்த்தும் ஶக்யதே கில । [தமா ॥
ஸாத₄ாரணஶ்ச புருஷா: தாத்₃ருஶம் தூ₃ஷயந்த்யபி ॥
தாம் க்ரியாம் தத்ஸ்வரூபம் ச தந்மந்த்ராந் வேத₃வர்ஜிதாந் ।
மோசயந்த: ஸ்வகாம் பூஜாம் அதி₄கத்வேந கேவலம் ॥
வர்ணயந்த: பரம் ப₄ாவம் அஜாநந்த: ஶ்ருதே: பத₃ம் ।
வ்யத்யாஸயந்தி ஸந்மார்க்க₃ாந் அமார்க்க₃ாந் வர்ணயந்த்யபி ॥
தத்₃யமார்க்க₃ப₄ாக் யோ வை வைதி₃கோऽபி ந வைதி₃க: ।
அக₂ண்ட₃வைதி₃கோ மார்க்க₃: ஸர்வேஷாமேவ கர்மணாம் ॥
ஆரம்ப₄காலே ஸங்கல்பே பரமேஶ்வரதுஷ்டயே ।
கரிஷ்யாமீதி ஸங்கல்ப்ய தத்தத்கர்ம யதா₂விதி₄ ॥
ஸமநுஷ்ட₂ாய தத்பஶ்சாத் தத்தத் கர்மாந்த ஏவ ஹி ।
ப்ரீணாது ப₄க₃வாந் தே₃வ: பரமாத்மா ஸதா₃ ஹரி: ॥
அநேந கர்மணா சேதி த்யாக₃ம் குர்யாத் ஜலேந வை ।
ஏதச்சக்ரத₄ரஸ்யாஸ்ய பூஜநம் மஹதே₃ககம் ॥
ஸத்₃பி₄ருக்தம் வித₄ாநேந பரமைர் வைதி₃கோத்தமை: ।
பூஜநம் தே₃வதே₃வஸ்ய பரம் கர்மபி₄ரேவ வை ॥
கதி₂தம் தத் ஸமாஸேந தாநி கர்மாணி ஸாம்ப்ரதம் ।
ப்ரவக்ஷ்யாமி க்ரமேணைவ ப்₃ரஹ்மஜ்ஞாநைகஸாத₄கம் ॥
ஔபாஸநம் வைஶ்வதே₃வம் பார்வணம் ச ததா₂ஷ்டகா: ।
மாஸிஶ்ராத்₃த₄ம் ஸர்ப்பப₃லி: ஈஶாநப₃லிரேவ ச ॥
அக்₃நிஷ்டோமோऽதிபூர்வஶ்ச உக்த்₂ய: ஷோட₃ஶஸஞ்ஜ்ஞிகா: ।
அதிராத்ராப்தோர்யாமஶ்ச வாஜபேயஶ்ச ஸப்த வை ॥......

[394-415]

[''ப்₃ரஹ்ம வை சதுர்ஹோதார: । சதுர்ஹோத்ருப்₄யோதி₄ யஜ்ஞோ நிர்மித: ॥'' [காட₂கம் 3-5-22] [வேத₃மந்த்ரங்கள் சதுர்ஹோதாக்கள் என்று சொல்லப்படுகின்றன. அவற்றுக்காகவே யஜ்ஞம் ஏற்படுத்தப் பட்டிருக்கிறது] என்று வேத₃ம் ஓதுகிறது. அந்த யஜ்ஞமே புருஷ ரூபமாக வடிவெடுத்திருப்பவன் நாராயணனாகிற ப்₃ரஹ்மம். புருஷ

http://acharya.org

ஸூக்தத்தின் உத்தராநுவாகத்தில்—உலகுக்கு அந்தர்யாமியாகவும் படைத்தளித்தழிக்கும் கர்த்தாவாகவும், பிரமன் முதலான காரண பூதர்களுக்கெல்லாம் காரணமாகவும், உபாயங்களுக்கெல்லாம் உபாயமாகவும், உலகிற்கு உபாதாநம் முதலான எல்லாக் காரண மாகவும், ஸத்யஜ்ஞாநாநந்தமயமாகவும், ஸத் எனப்படும் ஸ்தூல வுலகிற்கும், அஸத் எனப்படும் ஸூக்ஷ்மவுலகிற்கும், சேதநர்களுக்கும் அந்தர்யாமியாகவும், வேதரூபமாக அவதரித்திருப்பவனாக வுமுள்ள பரம்பொருள் அவனே. வேதத்தை ஓதுகின்ற ப்ரஹ்மவாதி ப்ரஹ்மத்தை இல்லைசெய்யாத நல்லோர்களால் அந்தப் பரம்பொருளாகவே கூறப்படுகிறான். அவனே எல்லா வேதங்களிலும் காணப்படும் யஜ்ஞங்கள், நற்கருமங்கள், விரதங்கள் ஆகியவற்றைச் செய்தவனாக எண்ணப்படுகிறான். அவனே வைதிகர் தலைவன். கர்மம் செய்பவர்களில் சிறந்தவன். கர்மங்களை அறிந்த வர்களில் தலையானவன். தீமையில்லாதவன். அனைவர்க்கும் ஆசாரி யன். அனைவர்க்கும் உறவினன். வைதிக ஸம்ப்ரதாயத்தை நடத்துமவன். எல்லா ஒழுக்கங்களையும் நிலைநிறுத்துபவன். உயர்ந் தோர் அனைவரிலும் உயர்ந்தவன். அறங்களைப் பற்றிய நுண் ணறிவுடையவன். இவனே சிறந்ததையெல்லாம் அறிபவன். வேதமார்க்கத்தின்படி நடப்பவன். வேதத்தில் சொல்லப்பட்ட மேலான கர்மத்தையே செய்வான். மற்றதைச் செய்யமாட்டான். அமுக்யத்வம், முக்யத்வம், பலம், தேசம், காலம், நல்ல பாத்ரம், த்ரவ்யம் இவற்றின் சேர்த்தி ஆகியவற்றைக் கவனித்து, எது முக்கிய மானதோ அதை அவன் எப்போதும் அநுஷ்டிக்கிறான். நற்குடிப் பிறந்த இவன் நற்கருமங்களால் பரமாத்மாவை எப்போதும் ஆராதிக்கி றான். இலை, புஷ்பம் முதலானவற்றைக்கொண்டு தேவனான பரமாத் மாவுக்குச் செய்யும் பூஜையே எப்போதும் அவனுக்கு ஆராதனமாகி விடாது. நல்ல சாஸ்த்ரம் முதலானவற்றால் விதிக்கப்படுபவையாய், அரியவையான கர்மங்களால் செய்யப்படும் பூஜையே பூஜையாகும். அந்தப் பூஜையன்றோ சிறந்ததாகக் கர்மங்களின் சிறப்பறிந்தவர் களால் கூறப்படுகின்றது. அந்தப் பூஜையே உத்தமங்களனைத்துக் கும் உத்தமமானது. அது அனைவராலும் செய்வதற்கு அரிதன்றோ. ஸாமான்ய மனிதர்கள் அந்தக் கிரியையையும், அதன் ஸ்வரூபத்தை யும், அதைச் செய்பவனையும், அதன் மந்திரங்களையும் தூஷிக்க வும் செய்வார்கள். வேதத்தில் சொல்லப்படாத தங்களுடைய பூஜையைச் சிறந்ததாக வர்ணித்துக்கொண்டு, வேதத்தில் சொல் லப்பட்ட இப்பூஜையின் சிறப்பை அறியாதவர்களாய், நன்னெறியை வேறுபடுத்தித் தீநெறியை வர்ணிக்கிறார்கள் அவர்கள். அவர்களு

http://acharya.org

டைய நெறியைப் பின்பற்றும் வைதிகன் அவைதிகனேயாவான். மாறுபடுத்தப்படாத வைதிக நெறியே எல்லாக் கர்மங்களுக்கும் நன்னெறியாகும். ஸங்கல்பத்தின் தொடக்கத்தில் 'பரமேஶ்வரனின் உகப்பின் பொருட்டுச் செய்கிறேன்' என்று ஸங்கல்பித்து, அவ்வக்கர்மங்களை முறைப்படி அநுஷ்டித்து, அக்கர்மங்கள் முடிந்தபின் 'பகவானாய், தேவனாய், பரமாத்மாவான ஹரி இக்கர்மத்தால் எப்போதும் உகப்படையட்டும்' என்று ஜலத்தினால் தர்ப்பணம் செய்யவேண்டும். இதுவே சக்ரதாரியான எம்பெருமானுக்கு ஒப்பற்ற பெரிய ஆராதனமாக, தலைசிறந்த வைதிகோத்தமர்களான நல்லோர்களால் முறைப்படி சொல்லப்பட்டது. கர்மங்களால் தேவதேவனை ஆராதிப்பதே ஆராதனமாகச் சொல்லப்படுகிறது. ப்ரஹ்மஜ்ஞானத்திற்கு முக்ய ஸாதனமான அந்தக் கர்மங்களைச் சுருக்கமாக வரிசைக்கிரமப்படி சொல்லுகிறேன்.—(1) ஔபாஸநம், (2) வைஶ்வதேவம், (3) பார்வணஶ்ராத்தம், (4) அஷ்டகா ஶ்ராத்தம், (5) மாதப்பிறப்பின் போது செய்யப்படும் ஶ்ராத்தம், (6) ஸர்ப்பபலி, (7) ஈஶாநபலி, (8) அத்யக்நிஷ்டோமம், (9) உக்த்யம், (10) ஷோடஶக்கிரியைகள், (11) அதிராத்ரம், (12) அப்தோர்யாமம், (13) ஏழு வாஜபேயங்கள்.........] என்று ஸர்வ கர்ம ஸமாராத்யனான பரமேஶ்வரன் நாராயணன் என்றும், ஹரி என்றும் சொல்லப்படுபவன் என்றும், அவனே பரமாத்மாவும் ப்ரஹ்மமும் ஆவான் என்றும் முழங்கப்பட்டது. இவ்வண்ணமாகக் கர்மாநுஷ்டானத்தின்மூலம் ஹரியை ஆராதிப்பதை விளக்கி,

நைமிஶா(ஷா)தி மஹாக்ஷேத்ரே வித்யமாநேஶ்வரார்ச்சநாத்||
முக்திர்நாத்ர விரோதோ ஹி தஸ்மாத் குர்யாத் ஹரே: ஸதா |
ப்ரதிமாஸு புராணேஷு ம்ருத்தாருப்ரஸ்தராத்மஸு ||
பத்ரை: புஷ்பை: பலைரர்ச்சாம் ஷோடஶைருபசாரகை: |
நித்யபூஜாம் விஶேஷேண ததா நைமித்திகா அபி || [446-448]

[நைமிஶாரண்யம் முதலான திவ்யதேஶங்களில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை ஆராதிப்பதால் மோக்ஷம் ஏற்படும்; இதில் விரோதமில்லை; ஆகையால்—பழையனவான திவ்யாலயங்களில் மண், மரம் முதலானவற்றால் அமைந்த பிம்பங்களில், இலைகள், மலர்கள், பழங்கள் முதலானவற்றைக்கொண்டு பதினாறு உபசாரங்களையும் செய்து, ஹரிக்கு எப்போதும் திருவாராதனம் செய்யவேண்டும்; நித்யபூஜையையும், நைமித்திக பூஜைகளையும் விஶேஷமாகச் செய்யவேண்டும்] என்று எம்பெருமானுடைய அர்ச்சைத் திருமேனியை ஆராதனம் செய்வதாலும் மோக்ஷம் கிட்டும் என முழங்கப்பட்டது.

http://acharya.org

ஸாத்வதம் விதி₄மாஸ்தா₂ய கீ₃தந்ருத்தார்ப்பணேந ச ।
ஹரேர்கா₃நம் ச ந்ருத்தம் ச நடநம் ச விஶேஷத: ॥
ஸதா₃ ப்ராஹ்மணஜாதீநாம் விஹிதம் நித்யகர்மவத் ।
அர்த்த₄ாஸ்தமித ஆதி₃த்யே புநரர்த்தோ₄தி₃தே₃யேऽநிஶம் ॥
தி₃வைவாராத₄நம் தஸ்ய தே₃வஸ்ய பரமாத்மந: ।
கைவல்யத₃ம் ஸத்₃ய ஏவ ததா₂ தத₃வலோகநம் ॥
யத்கிஞ்சித் க்ரியதே கர்ம லௌகிகம் வைதி₃கம் ததா₂ ।
போ₄ஜநம் க₃மநம் தா₃நம் அலங்காரோऽத₂ பூ₄ஷணம் ॥
ஸர்வம் தத்ப்ரீதயே குர்யாத் தந்நிர்மால்யபரோ ப₄வேத் ॥
[452-455]

[பாஞ்சராத்ர விதி₄யைப் பின்பற்றித் திருவாராத₄னம் செய்யும்போது பாடல், நாட்டியம் முதலானவற்றை ஸமர்ப்பிப்பதன் மூலமும் எம்பெருமானை ஆராதி₄க்கவேண்டும். ப்₃ராஹ்மண ஜாதியைச் சேர்ந்தவர்கள் எப்போதும் நித்யகர்மம் செய்வதுபோல் ஹரியைக் குறித்துச் சிறப்பாகப் பாடுவதும், நாட்டியமாடுவதும், நாடகமாடுவதும் செய்யவேண்டும் என்று ஶாஸ்த்ரங்களில் விதி₄க்கப்பட்டுள்ளது. ஸூர்யன் பாதி அஸ்தமித்துக் கொண்டிருக்கும்போதும், பாதி உதித்துக்கொண்டிருக்கும்போதும் எப்போதும் பரமாத்மாவான அந்த தே₃வனுக்குப் பகலிலேயே திருவாராத₄னம் செய்வதும், அவ்வண்ணமே அவனை ஸேவிப்பதும் அந்தப் பிறப்பிலேயே மோக்ஷமளிக்கும், உணவளிப்பது, எழுந்தருளப்பண்ணுவது, தா₃னம் செய்வது, (மலர் முதலானவற்றால்) அலங்கரிப்பது, திருவாப₄ரணங்களால் அழகுபடுத்துவது ஆகிய எந்த லௌகிக வைதி₃க கர்மங்களைச் செய்தாலும், அவையனைத்தையும் அவனுடைய உகப்பிற்காகவே செய்யவேண்டும். அவன் அமுதுசெய்த ப்ரஸாத₃ங்களையே உண்ணவேண்டும்.] என்று அவனது திருவாராத₄னத்தைச் சிறப்பாக விளக்கி அதையே அவனுகப்புக்காக அந்தணர்கள் செய்யவேண்டும் என்று விதி₄த்து, அவனுடைய ப்ரஸாத₃ங்களையே உண்ணவேண்டும் என நியமித்ததும் குறிக்கொள்ளத்தக்கது.

ஸாயுஜ்யநாமிகாம் முக்திம் லப₄ந்தே ஸத்₃கு₃ரோஸ்தராம் ।
ப்ரஸாதே₃நைவ க்ருபயா பித்ருணமர்ச்சயா ததா₂ ॥
அயமேவ மஹாமார்க்கோ₃ வேதோ₃க்தாத்யந்தஸௌலப₄: ।
அந்ய: பந்தா₂ நாயநாய ஶ்ருதிரேவமுவாச ஸா ॥ [467, 468]

http://acharya.org

[‘ஸாயுஜ்யம்’ எனப்படும் மேலான மோக்ஷத்தை ஸத₃ாசார்யனுடைய அருளாலும், பித்ருக்களை ஆராதி₄ப்பதாலும் அடைகிருன். இதுவே வேத₃த்தில் சொல்லப்பட்ட மிகவெளிய பெருநெறியாகும். மோக்ஷத்திற்கு வேறு வழியில்லை; புருஷஸூக்த மந்திரம் இவ் வண்ணமே கூறிற்று.] என்று முற்கூறிய விஷயங்களைப் புருஷ ஸூக்தத்தில் “நாந்ய: பந்தா₂ அயநாய வித்₃யதே” என்று வேத₃ம் சொன்னதாகக் கூறுகையால் புருஷஸூக்தத்தால் சொல்லப்படுபவனும் முற்கூறிய நாராயணனே என விளங்குகிறது.

வேத₃மந்த்ரம் விநா சாந்யத்தாரகம் ந ஹி வித்₃யதே ।
து₃ர்ாலாபாதி₃காலேஷு நாமாந்யாஹுர்விபஶ்சித: ॥
பாவநாநி ஹரேரந்யந்நாஸ்தீதி பரமம் ஸ்ம்ருதம் ।
தஸ்மாத் வைதி₃கக்ருத்யேஷு நிஷ்ணாத: ஸர்வதா₃ ப₄வேத்
நித்யம் யஜேத நிக₂லை: நித்யைர்நைமித்திகைரபி ।
ஶக்தஸ்த்வஹீநக்ரதுபி₄: ஶதஸம்வத்ஸராதி₃பி₄: ॥
யஜேதைவ ஸதா₃ விஷ்ணோ: அர்ச்சநாய த்₃விஜாக்₃ரணீ: ।
அவேத₃வாதி₃நோ து₃ஷ்ட த₄ார்மிகாந் த₄ர்மதூ₃ஷகாந் ॥
தத₃ாக₃தாம்ஸ்த்யக்தயஜ்ஞாந் குசித்தாந் யஜ்ஞதூ₃ஷகாந் ।
பரித்யஜேத் தூ₃ரதோ வை.................... [477...481]

[வேத₃ மந்திரத்தைத் தவிர மனிதனைக் கடைத்தேற்றக் கூடியது வேறொன்றுமில்லை. தீய பேச்சுக்களைப் பேசுதல் முதலான பாபங்களைப் புரிந்த காலங்களில் ஹரியினுடைய நாமங்களே அவற்ருல் ஏற்படும் தோ₃ஷத்தைப் போக்கடிப்பவை என்று அறிவாளிகள் கூறுகிருர்கள். இதைக் காட்டிலும் மேலான பாவனமில்லை என்று ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஆகையால் வேத₃த்தில் சொன்ன கிரியைகளிலே எப்போதும் தேர்ச்சிபெறவேண்டும். நித்ய நைமித்திக கர்மங்களனைத்தையும் தினந்தோறும் அநுஷ்டி₂க்கவேண்டும். ஶக்தியுள்ள அந்தணர் தலைவன் அஹீனக்ரதுக்கள், ஶதஸம்வத்ஸரம் முதலான நீண்டநாள் செய்யும் யாக₃ங்களையும் விஷ்ணுவை ஆராதி₄ப்பதற்காக எப்போதும் செய்யவேண்டும். வேத₃த்துக்கு முரண் படப் பேசுகின்றவர்களாய், தீய த₄ர்மங்களை அநுஷ்டி₂ப்பவர்களாய், நல்லறங்களை தூ₃ஷிப்பவர்களாய், யஜ்ஞங்களைக் கைவிட்டவர்களாய், தீயநெஞ்சினராய், யஜ்ஞங்களை தூ₃ஷிப்பவர்களான பௌ₃த்₃த₄ர்களை வெகுதூரத்தில் விலக்கவேண்டும்.] என்று ஹரி

http://acharya.org

வின் நாமங்களே பரமபாவனங்களென்றும், நித்யம் நைமித்திகம் முதலான கர்மங்கள் விஷ்ணுவுக்கு ஆராத₄னமாயிருப்பவை என்றும் முழங்கப்பட்டது.

லக்ஷ்மீநாராயணத்₄யாநபரத்வேந ஸதா₃ ப₄வேத் । [573]

[லக்ஷ்மீநாராயணர்களை எப்போதும் தியானித்துக்கொண்டே இருக்க வேண்டும்.] என்றும்,

விப்ரஸ்ய கரணம் லக்ஷ்மீநாராயணக₃தம் ப₄வேத் । [584]

[அந்தணனுடைய மனம் எப்போதும் லக்ஷ்மீநாராயணரையே சிந்திக்க வேண்டும்.] என்றும் ஸர்வகார்யங்களிலும் அந்தணன் லக்ஷ்மீநாராயணர்களையே சிந்திக்கவேண்டும் என்று விதி₄க்கப்பட்டது. ஆக, இந்தக் கண்வஸ்ம்ருதியும் ஸ்ரீமந்நாராயணனையே பரமாத்மாவாக நிலைநாட்டிற்று என்று தேறிற்று.

கண்வஸ்ம்ருதிநிர்ணயம் நிறைவுற்றது.

தா₃ல்ப்₄யஸ்ம்ருதியில் த்ரித₃ண்ட₃ம்

அடுத்ததான தா₃ல்ப்₄யஸ்ம்ருதியில்,

த்ரித₃ண்ட₃க்₃ரஹணாதே₃வ ப்ரேதத்வம் நைவ ஜாயதே । [31]

[த்ரித₃ண்ட₃த்தை ஏற்றுக்கொள்வதினால் ஸந்யாஸி மரணமடையும் போது அவனுக்கு ப்ரேதநிலை கிடையாது.] என்று ஸந்யாஸிக்கு த்ரித₃ண்ட₃தா₄ரணமாகிற வைஷ்ணவாசாரமே காட்டப்பட்டது. இது தவிர, எந்த தே₃வதைக்கும் பரத்வம் கூறும் வசனங்கள் அதில் இல்லை.

தா₃ல்ப்₄யஸ்ம்ருதியில் த்ரித₃ண்ட₃ம் நிறைவுற்றது

ஆங்கீ₃ரஸஸ்ம்ருதி நிர்ணயம்

அடுத்ததான ஆங்கீ₃ரஸ ஸ்ம்ருதியில் வேத₃ மஹிமையைச் சொல்லும்போது,

வேதா₃க்ஷரோச்சாரணத: ஸர்வநாமப₂லம் லபே₄த் ।
ஹரிநாமானி யாவந்தி படி₂தாநி த்₃விஜாதிபி₄: ॥
அஸங்க்₂யாகாந்யநந்தாநி ஸர்வாணிஸஹஸ்ராண்யபி ।
தாந்யேகவேத₃வர்ண: ஸ்யாத் தாத்₃ருஸை ர் தி₃வ்யவர்ணகை: ॥
அமேயை: ஸம்வ்ருதோ வேத₃: ஸாக்ஷாந்நாராயணாத்மக: ।
தாத்₃ருஸஸ்யாஸ்ய வேத₃ஸ்ய படனாத் ஸர்வகில்பி₃ஷை: ॥
ஸத்₃ய ஏவ விமுக்த: ஸ்யாத் பாதகீ நாத்ர ஸம்ஸய: ॥ [157...159]

http://acharya.org

[வேதா₃க்ஷரங்களை உச்சரிப்பதினால் (எம்பெருமானுடைய) எல்லா நாமங்களையும் உச்சரித்த ப₂லனை அடையலாம். கணக்கற்றவையாய், அநந்த ப₂லனையளிப்பவையாய், எல்லாப் பாபங்களையும் போக்கடிப்பவையான ஹரியின் நாமங்கள் அந்தணர்களாலே எத்தனை படிக்கப்படுகின்றனவோ, அவையனைத்துக்கும் ஒரு வேதா₃க்ஷரம் ஸமமாகும். அப்படிப்பட்ட அளவிடமுடியாத பெருமையுடைய வேதா₃க்ஷரங்கள் நிறைந்த வேத₃ம் நேரே நாராயண ஸ்வரூபமாயிருப்பது. பெரும்பாவம் புரிந்தவனாயினும் அத்தகைய வேத₃த்தை ஓதுவதால் எல்லாப் பாபங்களினின்றும் நீங்கப்பெறுகிறான் என்பதில் ஐயமில்லை.] என்று வேத₃ம் நேரே நாராயணஸ்வரூபம் என்றும், வேதா₃க்ஷரங்கள் ஹரி நாமங்களே என்றும், அவை எல்லாப் பாபங்களையும் போக்கி அளவற்ற ப₂லனையளிப்பவை என்றும் முழங்கப்பட்டது காணத்தக்கது. பாபப்ராயச்சித்தத்தை விதி₄க்கும்போது

தத: ஸ்வயம் ச நித்யம் வை யாவத்காசீ₂ சரேத்₃பு₄வம் |
பாபப்ரக்₂யாபநம் குர்வந் யாவஜ்ஜீவம் ஹரிம் பூ₄ஜந் || [209]

[அதற்குப்பின் தன்னுடைய பாபத்தை ப்ரகடனம் செய்துகொண்டு, உயிரோடு இருக்கும் வரையில் ஹரியை பூ₄ஜனம் செய்துகொண்டு காசீக்ஷேத்ரம் வரையில் தினமும் தானே நடந்து செல்லவேண்டும்.] என்று ஹரிபூ₄ஜனம் விதி₄க்கப்பட்டது.

ஜலௌக₄ம் ஜாஹ்நவீதீரம் ஜநார்த்த₃ந மஹாஸ்ம்ருதி: |
ஜ்வலநோ ஜநநோத்பந்நஸூதஸாந்நித்₄யமேவ ச ||
ஜகாரபஞ்சகம் ப்ரோக்தம் கதி₂தம் ஜந்மமோசகம் || [484, 485]

[(1) பெருக்காறு, (2) கங்கைக்கரை, (3) ஜநார்த்த₃னனை இடைவிடாமல் நினைப்பது, (4) நெருப்பு, (5) தன் வயிற்றில் பிறந்த பிள்ளை அருகிலிருப்பது என்னும் 'ஜ' என்னும் எழுத்தில் தொடங்கும் இவ்வைந்தும் பிறப்பையறுக்கும்.] என்று பிறப்பையறுக்கும் ஜகாரபஞ்சகத்தில் ஜநார்த்த₃ன தியானத்தையும் குறித்திருப்பது காணத்தக்கது.

ததே₃தத் கில தே₃வேஶோ ப₄க₃வாந் பூ₄தபா₄வந: |
ஷோட₃ஶஶ்ராத்₃த₄ துலிதம் மஹாதா₃ந ஶதாதி₄கம் ||
ப்ரோவாச கில ஸர்வேஶோ க₃யஸ்ய ஸுமஹாத்மந: || [488]

[தே₃வர் தலைவனாய், ப₄க₃வான் என்னும் சொல்லுக்கு முக்₂யார்த்த₂மாயிருப்பவனாய், உயிர்களனைத்தையும் படைத்தவனாய், ஸர்வேஶ்வரனான ஜநார்த்த₃னன் மிகப் பெரியவனான க₃யனுக்கு இந்த

http://acharya.org

க்₃ராஹணஶ்ராத்₃த₄த்தைச் சொல்லும்போது ஷோட₃ஶஶ்ராத்₃த₄த்தை ஒத்திருப்பது என்றும், நூறு மஹாதா₃னங்களைக் காட்டிலும் விஞ்சியிருப்பது என்றும் சொன்னானன்றோ] என்று க₃யையில் க₃யனுக்கு உபதே₃ஶித்த ப₄க₃வானான விஷ்ணுவைப் பற்றிக் குறிப்பிடும்போது தே₃வர் தலைவன் என்றும், ஸர்வேஶ்வரன் என்றும், உயிர்களைப் படைத்தவன் என்றும கூறியிருப்பது விஷ்ணுபரத்வத்தை நிலைநாட்டுகிறது.

ப₄ாகீ₃ரதீ₂ ப₂ல்கு₃நீ ச யமுநா ச ஸரஸ்வதீ ।
பித்ருஸௌக்₂யாநி ஸர்வாணி வைஷ்ணவாநி விஶேஷத: ॥
ரக்ஷோக்₄நாநி பவித்ராணி புநரந்யே தத₂ாவித₄ா: ।
ஶ்ராத்₃த₄த்₃ரவ்யவிஶேஷா: ஸ்யு: பித்ருணமதிவல்லப₄ா: ॥
[539, 540]

[க₃ங்கை, (க₃யையில் ஓடும்) ப₂ல்கு₃நீ நதி, யமுனை, ஸரஸ்வதி, பித்ருஸௌக்யங்கள் இவையனைத்தும் சிறப்பாக விஷ்ணு ஸம்ப₃ந்த₄ம் உள்ளவை, ராக்ஷஸர்களை அழிக்கக் கூடியவை. பாவனமானவை, இவையும் ஶ்ராத்₃த₄த்துக்குரிய திரவியங்களும் இத்தகையவையாய் பித்ருக்களுக்கு மிகவும் இனியவையாயிருக்கின்றன.] என்று க₃ங்கை₃ முதலான பாவனநதிகளும், பித்ருக்கள் ஸம்ப₃ந்த₄ப்பட்டவைகளும் விஷ்ணு ஸம்ப₃ந்த₄ம் உள்ளவையாயிருக்கையாலே அதி பாவனமாயிருக்கின்றன என்று கூறியதும் குறிக்கொள்ளத்தக்கது. மாண்டூவ்யர் என்னும் பரமவைதி₃கர் செய்த தா₃னம ஒன்றைச் சொல்லி, அந்த தா₃னத்தினால் பித்ருக்கள் மிகவும் திருப்தியடைந்து, அவருக்கு ஆசீர்வாத₃ம் செய்து மோக்ஷமடைந்தார்கள் என்று கூறும்போது,

பரம் த்ருப்தா: ஸ்மேதி சோக்த்வா த்வம் க்ருதார்த்தோ₂ஸி மஹாநவி ।
ஶாஸ்த்ரார்த்த₂ த₄ர்மதத்த்வஜ்ஞஸ்த்வமஸ்மத்பரித்ருப்திக்ருத் ।
இத்யுக்த்வா஽ப₄ாஷ்ய தே தேந தத்பத₃ம் சக்ரபாணிந: ॥
பஶ்யதஸ்தஸ்ய புரதோ ஜக்₃மு: கில ஸுரோத்தமை: ॥ [565,566]

['நாங்கள் மிகவும் திருப்தியடைந்தோம்' என்று சொல்லி, 'நீ செய்ய வேண்டியதைச் செய்த பெரியவனாயிருக்கிறாய். ஶாஸ்த்ரார்த்த₂ங்களையும், த₄ர்மத்தின் உண்மையையும் அறிந்தவனாயிருக்கிறாய். எங்களைத் திருப்தி செய்வித்தவனாகவும் ஆகிறாய்' என்று கூறி, அந்த பித்ருக்கள் அவர் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அயர்வறும்

http://acharya.org

அமரர்களான நித்யஸூரிகளோடுகூட சக்ரபாணியின் ஸாந்நித்₃த₄மான பரமபத₃த்தை அடைந்தார்களென்றே.] என்று மோக்ஷலோகமான பரமபத₃ம் சக்ரபாணியான விஷ்ணுவினுடையதே என்று காட்டப்பட்டது. ஆக, ஆங்கீ₃ரஸஸ்ம்ருதியிலும் விஷ்ணுபரத்வமே நிலைநாட்டப்பட்டது என்று தேறிற்று.

ஆங்கீ₃ரஸஸ்ம்ருதிநிர்ணயம் நிறைவுற்றது.

ப₄ாரத்₃வாஜஸ்ம்ருதி நிர்ணயம்

கல்கத்தா பதிப்பில் அடுத்து அச்சிடப்பட்டுள்ள ப₄ாரத்₃வாஜஸ்ம்ருதியில் ப₄க₃வத்பரத்வம் பொலிகின்றபடியைக் காண்போம் இனி. ஐந்தாமத்தியாயத்தில் பலவகை ஸ்நானங்களை வர்ணித்துவரும்போது

க்₃ராமாத்₃ப₃ஹி: ஶுசௌ தே₃ஶே க₃வாக₃மநபத்₃த₄தௌ ।
ஸ்மரந்நாராயணம் திஷ்ட₂ந் யாவத்₃தூ₄ள்யாவ்ருதம் புந: ॥
வாயவ்யம் ஸ்நாநமித்யுக்தம் ஏதத₃ாம்நாயவாதி₃பி₄: ॥[5-28,29]

[கிராமத்துக்கு வெளியில் பரிஶுத்₃த₄மான இடத்தில், பசுக்கள் வரும் வழியில் தேவனுன நாராயணனை நினைத்துக்கொண்டு பசுக்களின் குளம்புத் தூசி உடம்பு முழுவதும் படியும்படி நிற்பது—ஸ்நானவிதி₄யை அறிந்தவர்களால் வாயவ்யஸ்நானம் என்று சொல்லப்படுகிறது] என்று வாயவ்யஸ்நானத்தை விவரிக்கும்போது நாராயணனை நினைக்கவேண்டும் என்று விதி₄த்திருப்பது நோக்கத்தக்கது.

ஊர்த்₄வபுண்ட்₃ரம் ச விதி₄நா லலாடே ஹ்ருத₃யே க₃ளே ।
ஸ்நாத்வாக்₃நிஹோத்ரஜேநைவ ப₄ஸ்மநா ச ப்ரஸந்நதீ₄: ॥...
வாமபா₄கே₃ ஸ்மரேத் விஷ்ணும் கமலாரூட₄வக்ஷஸம் ।
பீதாம்ப₃ரத₄ரம் ஶ்யாமம் சதுர்பா₃ஹும் கிரீடிநம் ॥
நாநாரத்நப்ரபா₄ஜாலஸ்பு₂ரந்மகரகுண்ட₃லம் ।
ஸர்வாப₄ரணஸம்யுக்தம் ஹேமயஜ்ஞோபவீதிநம் ॥
பவித்ரஹஸ்தோ த்₄யாயீத கிஞ்சித் ப்ரஹஸிதாநநம் ।
அம்பு₃ஜம் பாஞ்சஜந்யம் ச பி₃ப்₄ராணம் ஹஸ்தத₃க்ஷயோ: ॥
கௌமோத₃கீம் ரதா₂ங்க₃ம் ச பி₃ப்₄ராணம் வாமஹஸ்தயோ: ।
திஷ்ட₂ந்தம் வா ஸமாஸீநம் தத₂ா த்₄யாயேத்₃யதா₂ருசி ॥...
ஸர்வபாபவிநிர்முக்த: ஸ யாதி பரமாம் க₃திம் ॥
இத₃ம் ஸ்நாநம் து ஸர்வேஷாம் ஸ்நாநாநாமாசரேத்₃யதா₂ ।
த்₃விஜ: ஶக்தஸ்த்வஶக்தஶ்சேதி₃மமேவ ஸமாசரேத் ॥

http://acharya.org

இத₃ம் ஹி மாநஸம் ஸ்நாநம் பு₄க்திமுக்திப₂லப்ரத₃ம் ।
தே₃வைர்மஹர்ஷிபி₄: ஸேவ்யம் ப₄க்த்யாபி பரயா ஸதா₃ ॥
ஏவம் ஸப்தவித₄ம் ஸ்நாநம் ப்₃ரஹ்மணோத₃ம் புரோதி₃தம் ।
ஜ்ஞாத்வா த்₃விஜோத்தம: ஸம்யக் யதா₂யோக்₃யம் ஸமாசரேத் ॥
[5-32...41]

[அக்₃னிஹோத்ரம் செய்து உண்டான ப₄ஸ்மத்தில் குளித்து, நெற்றியிலும், ஹ்ருத₄யத்திலும், கழுத்திலும் ஊர்த்₄வபுண்ட்₃ரத்தை முறைப்படி த₄ரிக்கவேண்டும். ஸ்ரீதே₃வி ஏறியிருக்கப்பெற்ற திருமார்பையுடையவனாய், பீதாம்ப₃ரத்தை த₄ரித்திருப்பவனாய், நீலநிறத்தனாய், நான்கு தோள்களையுடையவனாய், கிரீடத்தையுடையவனாய், மலவகைப்பட்ட ரத்னங்களின் ஒளியால் விளங்கும் மகரகுண்டலத்தையுடையவனாய், எல்லாத் திருவாப₄ரணங்களையும் உடையவனாய், பொன்னாலான பூணூலை உடையவனாய், இளமுறுவலோடு கூடிய திருமுகமண்ட₃லத்தை உடையவனான விஷ்ணுவைப் பவித்ரத்தைக் கையிலேந்தியவனாய் தியானிக்கவேண்டும். வலதுபுறமுள்ள இரு திருக்கைகளால் தாமரையையும், பாஞ்சஜந்யமாகிற ஶங்க₂த்தையும் ஏந்தியிருப்பவனாய், இடதுபுறமுள்ள இருதிருக்கைகளால் கௌமோத₃கீ என்னும் க₂தையையும் சக்ரத்தையும் த₄ரித்திருப்பவனாய், நின்ற திருக்கோலத்திலோ, வீற்றிருந்த திருக்கோலத்திலே எழுந்தருளியிருப்பவனான விஷ்ணுவை அப்போது விருப்பத்துடன் தியானிக்கவேண்டும். இப்படி தியானிப்பவன் எல்லாப் பாபங்களிலிருந்தும் நீங்கி, பரமபத₃த்தையடைகிறான். ஶக்தியுடையவனாயிருந்தால் மற்ற ஸ்நானங்களோடு இந்த ஸ்நானத்தையும் அநுஷ்டி₂க்கவேண்டும். ஶக்தியற்றவனாயிருந்தால் இந்த ஸ்நானம் ஒன்றையாவது அநுஷ்டி₂க்கவேண்டும். மாநஸஸ்நானமான இது போ₄க₃மோக்ஷப₂லன்களனைத்தையும் அளிப்பது. மேலான ப₄க்தியுடன் தே₃வர்களாலும் மஹரிஷிகளாலும் எப்போதும் இது கைக்கொள்ளத்தக்கது. இவ்வண்ணமாக, ப்₃ராஹ்மணனால் முற்காலத்தில் சொல்லப்பட்ட ஏழுவித₄ஸ்நானங்களையும் நன்கு அறிந்து, அந்தணர் தலைவனாயிருப்பவன் தன்னால் இயன்றவரையில் அநுஷ்டி₂க்கவேண்டும்] என்று தலைசிறந்ததான மாநஸஸ்நானத்தை விதி₄க்கும்போது, பரமாத்மாவான விஷ்ணுவை விரிவாக வர்ணித்து, அவனை எப்போதும் தியானிப்பதே மாநஸஸ்நானம் என்று காட்டி, இதை அநுஷ்டி₂ப்பவன் பரமபத₃த்தையடைவான் என்று கூறியிருப்பது விஷ்ணுபரத்வத்தை ஐயந்திரிபற நிலைநாட்டுகிறது.

ப₄ரத்₃வாஜஸ்ம்ருதி நிர்ணயம் நிறைவுற்றது.

http://acharya.org

முடிவுரை

ஆக, இதுவரையில் பாரததேசத்தில் பல அச்சகங்களில் அச்சிடப்பெற்ற கீழ்க்கண்ட ஸ்ம்ருதிகள் அனைத்தும் ஆராயப்பட்டு, அவற்றுள் விஷ்ணுபரத்வமே நிலைநாட்டப்பட்டிருப்பது நிரூபிக்கப் பெற்றது:—(1) மநுஸ்ம்ருதி, (2) அத்ரிஸ்ம்ருதி, (3) விஷ்ணுஸ்ம்ருதி, (4) ஹாரீதஸ்ம்ருதி, (5) ஶங்கஸ்ம்ருதி, (6) ஶங்கலிகிதஸ்ம்ருதி, (7) தக்ஷஸ்ம்ருதி, (8) ஶாதாதபஸ்ம்ருதி, (9) வஸிஷ்டஸ்ம்ருதி, (10) ஔஶநஸஸ்ம்ருதி, (11) ப்ருஹஸ்பதிஸ்ம்ருதி, (12) ஶௌநகஸ்ம்ருதி, (13) யோகயாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி, (14) வ்ருத்தஹாரீதஸ்ம்ருதி, (15) ஶாண்டில்யஸ்ம்ருதி, (16) பராசரவிஶிஷ்ட பரமதர்மஶாஸ்த்ரம், (17) லகுவ்யாஸஸம்ஹிதை, (18) வ்ருத்தகௌதமஸ்ம்ருதி, (19) அருணஸ்ம்ருதி, (20) வஸிஷ்டஸ்ம்ருதி, (21) ஸ்ரீப்ருஹத்யோகயாஜ்ஞவல்க்யஸ்ம்ருதி, (22) ப்ரஹ்மோக்தயாஜ்ஞவல்க்யஸம்ஹிதை, (23) வ்யாக்ரபாதஸ்ம்ருதி, (24) கபிலஸ்ம்ருதி, (25) வாதூலஸ்ம்ருதி, (26) விஶ்வாமித்ரஸ்ம்ருதி, (27) நாராயணஸ்ம்ருதி, (28) கண்வஸ்ம்ருதி, (29) தால்ப்யஸ்ம்ருதி, (30) ஆங்கீரஸஸ்ம்ருதி.

பரம்பொருளுக்கேயுரிய தனித்தன்மைகளான (1) ஜகத்காரணத்வம் (2) ஸர்வஜ்ஞத்வம் (எல்லாம் அறிபவனாயிருக்கை) (3) ஸர்வவ்யாபகத்வம் (அனைத்தையும் வியாபித்திருக்கை) (4) ஸர்வநியந்த்ருத்வம் (அனைவரையும் நியமிப்பவனாயிருக்கை) (5) ஸர்வஶக்தத்வம் (எல்லாம்வல்லவனாயிருக்கை) (6) மோக்ஷப்ரதத்வம் (மோக்ஷமளிக்க வல்லவனாயிருக்கை) (7)ஸமஸ்தகல்யாணகுணாத்மகத்வம் (எல்லா நற்குணங்களையும் உடையவனாயிருக்கை) (8) அகிலஹேயப்ரத்யநீகத்வம் (தாழ்வுகளுக்கு எதிர்த்தட்டாயிருக்கை) (9) நிருபாதிகபந்துத்வம் (இயற்கையுறவினனாயிருக்கை) (10)வேதப்ரதிபாத்யத்வம் (வேதங்களால் பரம்பொருளாக ஓதப்படுகை) (11) அவாப்தஸமஸ்தகாமத்வம் (எல்லா விருப்பங்களையும் பெற்றிருக்கை) (12) ஸத்யஸங்கல்பத்வம் (தடையற்ற ஸங்கல்பத்தை உடையவனாயிருக்கை) முதலான பெருமைகள் இவற்றில் ஆயிரக்கணக்கான இடங்களில் ஸ்ரீமந் நாராயணனுக்கே முழங்கப்பட்டிருப்பதைக்கண்டோம். சக்ராங்கனம், ஊர்த்வபுண்ட்ரதாரணம் முதலான பஞ்சஸம்ஸ்காரங்கள்—எம்பெருமானுக்கே ஆட்பட்டு மோக்ஷமடையவிரும்பும் பரமைகாந்திகளுக்குப் பல ஸ்ம்ருதிகளில் விதிக்கப்பட்டிருப்பதையும், த்ரிதண்டதாரணமே மோக்ஷத்தை விரும்பும் ஸந்யாஸிகளுக்குப் பலவிடங்களில் விதிக்கப் பட்டிருப்பதையும், பஸ்மதாரணம் முதலான மற்ற மதாசாரங்கள்

http://acharya.org

13428

மோக்ஷமடைய விரும்புவார்க்கு விலக்கப்பட்டிருப்பதையும் கண்டோம். எந்த ஸ்ம்ருதியிலும், அத்₃வைதிகளைப்போல் ஶிகை₂யையும், பூணூலையும் அறுத்தெறிந்து ஏகத₃ண்ட₃த்தை ஏந்தியிருக்கவேண்டும் என்று ஸந்யாஸி லக்ஷணம் சொல்லப்படவில்லையென்பதையும், ஶைவத்திற்போல் ஶூத்₃ரஸந்யாஸிகள் ஆத₃ரிக்கப்படவில்லையென்பதையும், ஶைவஶாக்தாக₃மங்களிற்போல் மது, மாம்ஸம், மைது₂னம் முதலான மகாரபஞ்சகங்கள் விதி₄க்கப்படவில்லையென்பதையும், காண்கிறோம். இவற்றிலிருந்து விஶிஷ்டாத்₃வைத ஸ்ரீவைஷ்ணவமதமே ஸ்ம்ருதிகாரர்களால் ஆத₃ரிக்கப்பட்டுள்ளது என்றும், ஶைவம், ஶாக்தம், அத்₃வைதம் முதலான மதங்கள் அவர்களால் ஆத₃ரிக்கப்படவில்லை என்றும் தெளிவாக விளங்குகிறது. [இவ்விஷயம் மநுஸ்ம்ருதி வ்யாக்₂யானத்தில் பு₄ரஸ்கரமதத்தைச் சேர்ந்த குல்லூகப₄ட்டராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதை 30-ம் பக்கத்தில் காட்டியிருக்கிறோம்.] இப்படி ப்ரப₃லஸ்ம்ருதிகளுக்கு விரோத₄மாக, அச்சிடப்படாத சிற்சில ஸ்ம்ருதிகளில், சிற்சில இடங்களில் காணப்பட்டாலும், அவை ஸ்ம்ருத்யதி₄கரணந்யாயத்தால் ஶ்ருதிவிருத்₃த₄மாகையாலும், ராஜஸதாமஸங்களாகையாலும், தள்ளத்தக்கவை என்பதையும் அவதாரிகையில் [பக்கம் 2, 3] காட்டியுள்ளோம். ஆக, ஶ்ருதிகளிற்போலே ஸ்ம்ருதிகளிலும் ஸ்ரீமந்நாராயணனே பரப்₃ரஹ்மமாக முழங்கப்பட்டுள்ளான் என்று கையிலங்கு நெல்லிக்கனியாகவும், வெள்ளிடைமலையாகவும் ஐயந்திரிபற நிலைநாட்டப்பெற்றது.

"ஆலோட்₃ய ஸர்வஶாஸ்த்ராணி விசார்ய ச புந: புந: ।
இத₃மேகம் ஸுநிஷ்பந்நம் த்₄யேயோ நாராயண: ஸதா₃ ॥"

[எல்லா ஶாஸ்த்ரங்களையும் ஆராய்ந்து பலமுறை விசாரித்தாலும், "நாராயணன் ஒருவனே எப்போதும் தியானிக்கத்தக்கவன்" என்னும் இவ்வர்த்த₂மே நன்கு தேறிநிற்கும்] என்னும் ஸுப்ரஸித்₃த₄ மஹர்ஷிவசநம் ஸ்ம்ருதிகள் விஷயத்திலும் உண்மையானதே என நிரூபிக்கப்பட்டதாயிற்று.

ஸ்ரீவிஷ்ணுசித்தவிஜயத்தில் இரண்டாம் அத்தியாயத்தில்,
முதற்பாத₃மான ஸ்ம்ருதிநிர்ணயம் நிறைவுபெற்றது.

http://acharya.org